INDEX TO
TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

21st to 23rd, 27th and 28th March 1978.

VOLUME No. CXLVIII (Nos. 1 to 5).

©
GOVERNMENT OF TAMIL NADU
1978

Legislative Council Department
Fort St. George, Madras-600 009,

PRICE : 1 *Rupee*]

D
V211,32 N78
N78-1/18
121947

Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CXLVIII (Nos. 1 to 5)

21st to 23rd, 27th and 28th March 1978.

TABLE OF CONTENTS

Tuesday, 21st *March* 1978.

	PAGES.
Personnel of the Government of Tamil Nadu ...	i–iv
Principal Officers of the Tamil Nadu Legislative Council	v
List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies	vii–x
1. Questions and Answers	1–5
2. Government Motion *re* discussion on Policy Notes on Nationalised Transport, Shipping, Highways and Rural Works	5–87
3. Papers laid on the table of the House	87–88

Wednesday, 22nd *March* 1978.

1. Questions and Answers	135–148
2. Information *re*—	
(1) Adjournment motion given notice of regarding the strike by Village Officers	148

Wednesday, 22nd March 1978—cont.

PAGES.

2. Information *re*—cont.
   (2) Questions to be answered by the Chief Minister ... 150–151
3. Announcement *re* decision of the Business Advisory Committee ... 149–150
4. Statement under rule 82 of the Council Rules *re* decision of Government on demands of University and College Teachers ... 152–154
5. Calling attention to the fire accident in V.V.R. Colony of Palmgur Production and Co-operative Society in Sayalkudi Panchayat of Mudukulathur taluk ... 154–155
6. Government Motion *re* discussion on the Policy Notes on Jails and Administration of Justice ... 156–218
7. Papers laid on the table of the House ... 218–219

Thursday, 23rd March 1978.

1. Obituary reference *re* death of Thiru M. V. Sudarsanam Naidu, former Member of the Council ... 259
2. Questions and Answers ... 260–266
3. Announcement *re* election of one Member to the Land Improvement Board ... 266
4. Calling attention to distraint action against agriculturists by Multipurpose Co-operative Society in Namakkal taluk ... 266–268
5. Presentation of the Final Statement of Supplementary Expenditure for the year 1977–78 ... 268–270
6. Presentation of the Statement of Excess Expenditure for the year 1970–71 ... 270–271
7. Papers laid on the table of the House ... 271–27

PAGES.

Monday, 27th March 1978.

1. Information *re* answering of questions by the Leader of the House on behalf of the Chief Minister ... 273–275
2. Questions and Answers ... 275–279
3. Calling attention to non-regularisation of service of Secondary Grade Teachers and Specialist Teachers in Government 'B' Wing High Schools ... 279–280
4. Government Motion *re* discussion on the Policy Note on Industrial Development ... 280–396
5. Discussion on the Final Statement of Supplementary Expenditure for 1977–78 and the Statement of Excess Expenditure for the year 1970–71 ... 396–410

Tuesday, 28th March 1978.

1. Questions and Answers ... 587–594
2. Information *re* relief to the victims in the Fire Accident in Sayalkudi village, Mudukulathur Taluk ... 594–596
3. Calling attention to the hartal by the traders protesting against the collection of rent by Madurai Meenakshi Amman Temple authorities ... 596–599
4. Government Motion *re* discussion on the Policy Notes on Medical and Public Health ... 599–658
5. Statement under rule 82 of the Council Rules *re* the appointment of Kavi Arasu Kannadasan as Poet Laureate of the State ... 651
6. Papers laid on the table of the House ... 659–660
Index ... 733

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU *PRABHUDAS PATWARI*

Members of the Council of Ministers.

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN, Minister in charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR, Minister in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND, Minister in charge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister in charge of Information and Tourism, Publicity, Film Technology, Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister in charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU, Minister in charge of Local Administration, Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Union and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM, Minister in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN, Minister in charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI, Minister in charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU, Minister in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED, Minister in charge of Handlooms and Textiles, Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Yarn, Khadi and Village Industries.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவை உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்—கிராம தானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற
உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட)
பட்டியல்.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அப்துல் வகாப், கே.எஸ்.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
2 அறிவழகன், க. எம்.ஏ. ..	சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
3 வீராசாமி, ஆற்காடு நா.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
4 இளம்பரிதி, ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
5 இராகவானந்தம், எஸ். .. (தொழிலாளர் நல அமைச்சர்)	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
6 இராஜகோபால், சி. வி. ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
7 இராமகிருஷ்ணத் தேவர், எஸ். ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி
8 இராம சுப்பையா, காரைக்குடி. ..	நியமனம்
9 இராமசாமி படையாச்சி, எஸ். எஸ். ..	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
10 இராஜா முகமது, கே. .. (கைத்தறி—ஆலைத்துணிகள் துறை அமைச்சர்)	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
11 எல்லமந்தா, பி. ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
12 கணபதி, கே. எஸ். ..	தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதி
13 சக்திமோகன், ஆர். ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
14 சங்கரலிங்கம், எம். ..	திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
15 சத்தியவாணி முத்து,	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
16 சந்தோஷம், டி. எம். ஏ., பி. எல்., ...	சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி.
17 சாம்பசிவம், இரா. ..	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
18 சிவஞானம், ம. பொ, (துணைத் தலைவர்) ..	நியமனம்
19 சுந்தரேசத் தேவர், என். ..	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி
20 சுவாமிநாதன், ஜி., பி.பார்மஸி.	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
21 தங்கப்பாண்டியன், வே. பி. ஏ, பி. டி. ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
22 தங்கவேல், ஏ.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
23 தமிழரசி, சி.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
24 தாமஸ், பி. ஆர். ..	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி
25 தாமோதரன், ஏ. ஆர், பி. எஸ்ஸி., (ஆனர்ஸ்) ..	சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
26 தாமோதரன், ஜி. ஆர். ..	சென்னை மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
27 திராவிடமணி, ஆ. ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
28 டிமாண்டி டென்சில் வின்சென்ட் ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
29 தேவராஜ், வி. எம். ..	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
30 நடராசன், எம். கே. டி. ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
31 நாராயணசுவாமி முதலியார், கே. (சட்ட அமைச்சர்) ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
32 நீல நாராயணன், ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
33 பக்கர், எம். எம்.	நியமனம்
34 பலராமன், எல்.	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
*35 பாலகுருசாமி ஆர். ..	நியமனம்
36 பாலசுப்ரமணியம், ஆ, ..	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
37 பாலசுப்பிரமணியம், கு. மா. ..	நியமனம்
*38 புலமைபித்தன் ..	நியமனம்.
39 பெரியண்ணன், வீ.ஆர். ..	சேலம்—தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
40 மணி, கோ சி.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
*41 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி ..	நியமனம்
42 மாசிலாமணி, மு. ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
43 மாணிக்கம், பி.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
44 முத்து, எஸ்.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
45 முத்துகிருஷ்ணன், டி. வி.	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
46 முருகேசன், எச். எல், ..	நியமனம்
47 வில்வம், ஏ. கே.	நியமனம்
48 வில்சன் அப்பலோஸ், என். ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
*49 வீரப்பன், ஆர். எம். (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) ..	மாநிலச் சட்ட மன்றப் பேரவை

* 31—12—1977 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள்.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
50 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய்.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 ஜார்ஜ் கோமகன்,	மாநிலச் சட்ட மன்றப் பேரவை
52 வெற்றிடம்	சென்னை உள்ளாட்சிமன்றத் தொகுதி.
53 வெற்றிடம்	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
54 வெற்றிடம்	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
55 வெற்றிடம்	வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி.
56 வெற்றிடம்	சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி.
57 வெற்றிடம்	கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெற்றிடம்	கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெற்றிடம்	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
63 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 21

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள் 195, 196 ஒத்திவைக்கப்படுகின்றன.

Selection Grade Scale of Pay.

*197 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be Pleased to state—

(a) whether it is a fact that Selection Grade Scale of Pay had been sanctioned to all the categories of Teachers from 1st January 1971 on the basis of percentage; and

(b) if so, the reasons for not extending this benefit to the Higher Physical Education Teachers?

தேர்வுத்தர சம்பள வீதம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எல்லா வகைப்பட்ட ஆசிரியர்களுக்கும், 1-1-1971 முதற்கொண்டு, சதவீத அடிப்படையில் தேர்வுத்தர சம்பள வீதம் வழங்கப்பட்டிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், இச் சலுகையை உயர் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்காததற்குக் காரணங்கள் யாவை?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> (அ) பி. டி. ஆசிரியர்களுக்கும் இடைநிலை மற்றும் இளநிலை ஆசிரியர்களுக்கும் பி. டி. ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதங்களில் பணி புரியும் பொதுவகையைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் மொத்த பணியிடங்களில் சதவிகிதம் என்ற அடிப்படையில் 1-1-1971 முதல் தேர்வு நிலை அளிக்கப்பட்டது. பின்னர் அவ்வாசிரியர்களுக்கு மொத்த பணியிடங்களில் சதவிகிதம் என்ற அடிப்படை மாற்றப்பட்டு, 10 ஆண்டு காலப் பணி என்ற அடிப்படையில் தேர்வு நிலை அளிக்கப்பட்டது.

(இ) பி. டி. ஆசிரியர் சம்பள விகிதமோ அல்லது இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதமோ பெறாமல் வெவ்வேறு சம்பள விகிதங்களில் பணிபுரியும் முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர் மற்றும் இதர வகை ஆசிரியர்களுக்கு 1-4-75 முதல் புதிய தேர்வு நிலை ஊதிய விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டு 10 ஆண்டு பணிக் காலம் என்ற அடிப்படையில் தேர்வு நிலை அளிக்கப்பட்டது.

<u>திரு. பி. ஆர். தாமஸ் :</u> சதவீத அடிப்படையிலே இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு 1-1-1971-லிருந்து வழங்கப் பட்டது. பத்தாண்டுக் காலப் பணி என்ற அடிப்படையில் இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, வழங்கப்பட்டது. ஆனால் முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதங்கள் வழங்கப்படவில்லை என்ற காரணத்திற்காக, 1-4-1975 முதல் புதிய ஊதிய விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டு, பத்தாண்டுக் காலப் பணி என்ற அடிப்படையில் தேர்வு நிலை வழங்கப்பட்டது. இதனால் முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும் 1-1-1971 முதல் சதவீத அடிப்படையிலே வழங்க மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அப்படி ஒரு யோசனை இல்லை.

* 198 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation requesting to sanction Selection Grade to the Commercial Instructors working in Schools; and

(*b*) if so the action taken thereon?

<u>திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிகளில் பணிபுரிகின்ற வணிகவியல் ஆசிரியர்களுக்குத் தேர்வுத் தரம் வழங்கக் கோரி அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> (அ) ஆம்.

(இ) அரசாணை எண் 1009, கல்வி, நாள் 20-6-74லும், அரசாணை எண் 333, கல்வி, நாள் 14-2-1977லும் வணிகவியல் ஆசிரியர்களுக்கு 10 வருட பணிக்காலம் என்ற அடிப்படையில் தேர்வு நிலை வழங்க ஆணையிடப்பட்டது.

<u>திரு. க. அறிவழகன் :</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, சில அரசாணை எண்களைக் குறிப்பிடு கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உடனடியாக அதைக் குறித்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து எதிர்காலத்திலே விடை யளிக்கும்போது அந்தப் பதில்களோடு அதன் தொடர்பாக உள்ள ஜி. ஓக்களையும் இணைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> விதிகளில் அப்படி இடமிருக்குமானால், அதுபற்றி யோசனை செய்யலாம்.

* 199 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Selection Grade Scale of Pay has been awarded to all bifurcated courses Teachers, except Engineering Instructors as per G.O. Ms. No. 333, Education, dated 14th February 1977; and

(b) if so, the reasons therefor?

<u>திரு. பி. ஆர். தாமஸ் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 14-2-1977 ஆம் நாளிட்ட 333 ஆம் எண் அரசாணையின்படி பொறியியல் ஆசிரியர்கள் நீங்கலாக, இருகூறுக்கப்பட்ட பாடமுறை ஆசிரியர்கள் அனைவருக்கும் தேர்வுத்தர சம்பள வீதம் அளிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

[1978 மார்ச் 21

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) சாதாரண ஊதிய விகிதத்தில் அதிக பட்சம் ரூ. 650 நிர்ணயிக்கப் பட்டுள்ள கீழ்க்கண்ட ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை அளிக்கப் படவில்லை:—

(1) பொறியியல் ஆசிரியர் : ரூ. 325-15-475-20-575-25-650.

(2) உழவியல் ஆசிரியர்களின் ஒரு பிரிவினர் : ரூ. 375-15-495-20-575-35-650.

(3) கேரியர் மாஸ்டர் : ரூ. 400-15-475-20-575-25-650.

(இ) பள்ளிகளில் பணிபுரியும் பி. டி. ஆசிரியர் உள்பட எல்லாப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கையில் அதிக பட்சம் ரூ. 650 என நிர்ணயிக்கப் பட்டது. தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் அதிக பட்சமாக நிர்ணயிக்கப்பட்ட ரூ 650 சம்பளத்தைச் சாதாரண ஊதிய விகிதங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதிய விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டு தேர்வு நிலை அளிக்கப் படவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் பிரிவைச் சேர்ந்த பொறியியல் ஆசிரியர்களுக்கு, 2-10-1970க்கு முன்னதாக சிறப்புத் தகுதியைப் பெற்றவர்களுக்குச் சிறப்புப் படியாக 30 ரூபாய் வழங்கப்பட்டது. அதே முறையிலே இவர்களுக்கும் வழங்க அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படியொரு யோசனை இல்லை. மேலும் மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப் பட்டிருப்பதால், இந்தக் கோரிக்கைகளை அங்கேயே தரலாம்.

திரு. க. அறிவழகன் : இங்கே கேட்கப்பட்டுள்ள மூன்று கேள்விகளும் தேர்வுத் தரம் வழங்குவது பற்றியதாகும். சம்பளக் குழு அமைக்கப்பட்டிருப்பதால் அதை அங்கே கூறலாம் என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்னால் தேர்வுத்தரம் வழங்கப்படாத காரணத் தால், இப்போது இந்தக் கோரிக்கைகளைச் சம்பளக் குழுவின் முன் வைத்தாலும், சரியான முறையில் ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட முடியாது என்று பொறியியல் ஆசிரியர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஆகியவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே தேர்வுத் தரத்தை நிர்ணயிப்பதில் இதற்கு முன் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று அரசுத் தரப்பிலே, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் சம்பளக் குழுவிற்குப் பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மூன்றாவது சம்பளக் குழுவின் அறிக்கை வந்த பிறகு, இதுபற்றி யோசிக்கலாம்.

1978 மார்ச் 21]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசின் தீர்மானம்

நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து—கப்பல் வாணிகம் மற்றும் நெடுஞ்சாலை—கிராமப் பணித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சார்பில்) : துணைத் தலைவர் அவர்களே!

"சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து—கப்பல் வாணிகம் மற்றும் நெடுஞ்சாலை—கிராமப் பணித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்' @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப் பட்ட தீர்மானம் :

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து—கப்பல் வாணிகம் மற்றும் நெடுஞ்சாலை—கிராமப் பணித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்."

* திரு. இராம சுப்பையா : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று போக்குவரத்துத் துறையின் கொள்கை குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அதற்காகத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன்.

நகர மக்கள் போக்குவரத்துப் பேருந்துகளில் உள்ள நெருக்கடியைத் தாங்க முடியாமல் பலவித தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், "தேனைத் தொட்டால் இனிக்கும், தேளைத் தொட்டால் கடிக்கும்" என்று. அதைப் போல், தேனினும் இனியது திருக்குறள். முன்பு பல பேருந்துகளில் திருக்குறள் எழுதப் பட்டிருந்தது. இப்போது அது பல பேருந்துகளில் இல்லை. சில

@ 89-133 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பேருந்துகளில் வள்ளுவருடைய படம் கூட இல்லை. இதைக் கவனித்து மீண்டும் அதை வைக்க வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரிலே கூட நான் கூறினேன். இன்னும் பல பேருந்துகளில் பெயர் பலகைகள் சரிவர இல்லை. குறிப்பாகக் கூறுகிறேன். அண்ணா நகர்ப் பகுதியிலே சென்று கொண்டிருக்கும் எம். எஸ். க்யூ. 584, எம். எஸ். க்யூ. 608 என்ற இரண்டு பேருந்துகளும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், நான் பல பேருந்துகளில் பயணம் செய்துகொண்டிருக்கிற காரணத்தால், சொல்லுகிறேன். பேருந்துகளில் பெண்கள் ஏறிப் போய் வருகின்றபோது, பலவிதத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்.

(முற்பகல் 10-40)

இந்த ஆட்சியில் இப்படி தொல்லைகள் இருக்கின்றனவே என்று வருந்தி பொதுமக்கள் பேசுவதைக் கேட்டு என்னால் சகிக்க முடியவில்லை. ஏனென்றால் சென்னையில் ஆண்களும் பெண்களும் அவசர அவசரமாக காலை வேளைகளில் அலுவலகங்களுக்குச் செல்வதற்கு பேருந்துகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. அப்போது அவர்கள் பேருந்துகளில் உள்ள நெருக்கடியால் கஷ்டப்படும்போது, அரசைத்தான் தாக்குகிறார்கள். அப்படி அரசைத் திட்டும்போது எனக்கு மனவேதனையாக இருக்கிறது. ஆகையால் நெருக்கடியில்லாமல், அதிகமான பேருந்துகளை....

திரு. வே. தங்கப்பாண்டியன் ; அரசைத் தாக்கிப் பேசும் போது, எதனால் இந்த உறுப்பினருக்கு வேதனை வருகிறது என்பது தெரியவில்லை. உறுப்பினர் அரசாங்கத்தினுடைய செயல் சரி என்று சொல்கிறாரா? உண்மையிலேயே இந்த நிலைமை அரசுக்கு ஏற்படக் கூடாது என்று சொல்கிறாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும்.

திரு. இராம சுப்பையா : அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதே எண்ணத்தில்தான் கூறுகிறேன். தலைவர் கருணாநிதி நகர் என்ற அவர்கள் பெயரில் பேருந்து நிலையம் ஒன்று இருந்தது. கருணாநிதி நகர் என்ற மதுரைப் பகுதியில் ஒரு பேருந்து போய்க்கொண்டிருந்தது. அந்தப் பேருந்து பெயர்ப் பலகையை எடுத்து விட்டதாகத் தெரிகிறது என்று முன்னைய கூட்டத் தொடரிலேயே சொன்னேன். அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். அது மாற்றப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. அமைச்சர்

கவனித்து ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன். உயிரோடு இருக்கிறவர்கள் பெயரில் எதுவும் இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இப்போதும் உயிரோடு இருக்கிற ராஜரத்தினம் என்பவர் பெயரால் ஒரு ஸ்டேடியம் இன்றைக்கும் எக்மோர் பகுதியில் இருக்கிறது. இப்படி உயிரோடு இருக்கிறவர்கள் பெயரில் பல இருக்கின்றன. வேண்டுமென்றே ஒரு கட்சியின் தலைவர் பெயர் இருக்கக் கூடாது என்று செய்கிறார்களே தவிர, வேறில்லை என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அந்த மாதிரி இல்லாமல் இந்த அரசு பாரபட்சமின்றி செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்குறள் போன்ற வாக்கியங்கள் உடனடியாக எல்லாப் பேருந்துகளிலும் இருக்கும்படி அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன், அமைச்சர் அவர்கள் மாறுவேடத்தில் பேருந்துகளில் சென்று பார்த்தால்தான், மக்கள் படுகிற துன்பங்கள் தெரியும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மீசையை எடுத்துவிட்டுப் போகச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. இராம சுப்பையா : பெண் வேடம் போட்டுக் கொண்டு போய்ப் பார்க்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் நினைத்ததை நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அமைச்சருக்கு அந்த வேடம் பொருத்தமாக இருக்கும். மீசையை எடுத்துவிட்டால், பெண் வேடம் அவருக்குப் பொருத்தமாக இருக்கும்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களை இது பாதிக்கும் என்பதால் ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : என்னைப் பொறுத்த வரையில் பரவாயில்லை. இளம் வயதினர் பாதிக்கப் படக் கூடாது என்பதுதான் என் கவலை.

திரு. க. அறிவழகன் : கல்வி அமைச்சருக்கு ஏதோ சந்தேகம் வந்திருக்கிறது. அதை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வயதான காலத்தில் இப்படிப்பட்ட யோசனை வந்ததற்காக அச்சப் படுகிறேன்.

திரு. க. அறிவழகன் : யாருக்கு? திரு. இராம சுப்பையா அவர்களுக்கா?

திரு. இராம சுப்பையா : பேருந்துகளில் வள்ளுவர் பெயர் இருப்பதைக்கூட சரிவர கவனிக்கவில்லை. நான் முன்பு சொன்னேன். இராவண காவியம் போன்ற உயர்ந்த காவியங்களை, பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் பாடமாக வைக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ள நான் விரும்பினேன். வள்ளுவர் வாக்கியத்தைக் கூட அவர்கள் பேருந்துகளில் வைக்காத போது, இராவண காவியத்தை எங்கே கவனிக்கப் போகிறார்கள் என்று விட்டு விட்டேன். அண்ணா நகர், கருணாநிதி நகர் போன்ற இடங்களிலிருந்து துரித பேருந்துகளை அதிகமாக விடவேண்டும். பஸ் போக்குவரத்துத் தான் சென்னை நகருக்கு தலையாய வசதியாக இருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனித்து ஆவன செய்து மக்களுக்கு நல்ல உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமருகிறேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை தற்போதுள்ள அமைச்சர் கையில் வந்த பிறகு, சிறப்பான காரியங்களைச் செய்திருப்பது பாராட்டுக் குரியதாகும். நேற்றைய தினம் அந்தத் துறையிலே உள்ள ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யாத வண்ணம் நல்ல அறிவிப்புகளை எல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக ஊழியர்களுக்கு மட்டு மல்லாமல் தொலை தூரப் பேருந்துகளுக்கும் இருந்த கட்டணத்தை ஐந்து காசாகக் குறைத்திருப்பது பாராட்டுக்குரியது. இன்னும் நல்ல விதமான பல சீர்திருத்தங் களைச் செய்வார்கள், செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஒருசில விஷயங்களைப்பற்றி மட்டும் என்னுடைய பேச்சில் குறிப்பிட விரும்புகிறேன். அரசுத் துறை தனியார் துறையைப் பொறுத்த வரையில், அரசுத் துறையில் 52 சதவிகிதமும், தனியார் துறையில் 48 சதவிகிதமும் இருப்பதாக அமைச்சர் சொல்லியிருக்கிறார். தனியார் துறை தொடர்ந்து நடந்து வருவது நல்லது என்ற அபிப்ராயம் எனக்குண்டு. தனியார் துறையும் அரசுத் துறையும் இருப்பதால், இரண்டு துறைகளும் எப்படி இயங்குகின்றன என்பதைப் பார்த்து, ஒன்றுக்கொன்று நல்ல முறையில் இயங்குவதற்கு ஏதுவாக இருக்கும். தனியார் துறை என்று ஒன்று இருப்பதால், அரசுத் துறையில் சிக்கல்கள், பிரச்சினைகள், வேலை நிறுத்தங்கள் வரும் போது, சில சமயங்களில் அவர்களையும் உபயோகித்துக் கொள்கிற முறையில் அரசுக்கும் பயன்படும். சென்ற முறை சென்னையில் வேலை நிறுத்தம் நடந்த போது, தனியார்

துறையில் பலர் வந்து பேருந்துகளை ஓட்டியதால்தான், ஓரளவுக்கு நிலைமையைச் சமாளிக்க முடிந்தது என்பதை அரசு உணர வேண்டும். தனியார் துறை முழுவதையும் எடுத்துவிட்டால், நாளைய தினம் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் அதனால் மாநிலம் பூராவும் பாதிக்கக் கூடிய நிலைமைகள் உருவாகும். தனியார் துறையைப் பொறுத்த வரையில், மூன்று பேருந்துகளை அவர்கள் வைத்துக்கொள்ளலாம் என்பதாக நம்முடைய ஆளுனர் ஆட்சிக்காலத்தில் ஒரு முறையை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால் தனியாரைப் பொறுத்த வரையில், தங்களுக்கு ஐந்து பேருந்துகள் இருந்தால்தான், நல்ல முறையில் பராமரிக்க முடியும், தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஐந்து பேருந்துகள் தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்காவது இருக்கும் என்ற நிர்ணயம் இருந்தால் தான் நிச்சயமாகத் தொழிலை நடத்த முடியும். மூன்றாண்டு களுக்கு ஒரு முறை அந்த வழித்தடங்களை எடுத்துக்கொண்டோம் அல்லது வெகுதூர பேருந்துகளை எடுத்துவிட்டோம் என்ற நிலைமை இருந்தால், நித்திய கண்டம் பூர்ண ஆயுசு என்ற நிலைமை நிலவினால், சரியான முறையில் தனியார் நடத்த முடியாது. ஒரு பல ஆண்டுகளுக்காவது அவை மாற்றப் படாமல் இருக்குமென்ற கொள்கையை அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1972-வது வருடச் சட்டத்தின்படி பத்திலிருந்து அதற்கு மேலாக உள்ள பேருந்துகளைப் பொறுத்த வரையில், நாம் எடுத்து விடலாம் என்று சட்டம் போட்டோம். ஆனால் அது இன்று வரையில் நடைமுறைக்கு வந்ததா என்று பார்க்க வேண்டும். பல இடங்களில் 45 பேருந்துகள் வரையில் கூட பலர் வைத்திருக் கிறார்கள் என்பதை நான் அறிவேன். அதற்குக் காரணம் அவர்களிடம் சென்றால், இங்குள்ள உயர்நீதி மன்றத்திற்குச் செல்கிறார்கள், உச்ச நீதி மன்றத்திற்குச் செல்கிறார்கள், அதனால் எடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. பத்து பேருந்துகளுக்கு மேலுள்ளவர்களைப் பொறுத்தவரை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வழித் தடங்களை அரசு எடுக்கும்போது, வேறு வகையில் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். 45 அல்லது 25 பஸ்கள் வைத்திருப்பவர்களிட மிருந்து அந்தச் சட்டத்தின்படி பஸ்களை எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும், பாக்கி பேர்களுக்கு எந்த முறையைக் கையாளுகிறோமோ அந்த முறையைக் கையாண்டு எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. யாரும் பத்து வண்டி களுக்கு மேல் வைத்துக்கொள்ளாமல் பிரித்து, தனியார் வைத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியே விட்டுவிட்டால், இரண்டு மூன்று ஆண்டுகள் இருந்தால், பத்துப் பேருந்துகளுக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் தொடர்ந்து வைத்துக்கொள்ளும்

அசாதாரணமான சூழ்நிலை வரும். பட்டாபிராமன் கமிட்டி அறிக்கையைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். 1985 வரையில் என்ன செய்வது என்பதை ஆராய்வதற்காக ஆளுநர் ஆட்சியில் பட்டாபிராமன் கமிட்டியைப் போட்டார்கள். ஜூன் மாதத்தில் அறிக்கை கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அந்த அறிக்கை இன்றுவரையில் அரசின் ஆய்வில் இருப்பதாகவும் சொல்கிறார்கள். இவ்வளவு காலம் அரசு அதை ஆய்வு செய்ய வேண்டியதன் காரணம் என்ன? ஒரு கமிட்டியைப் போட்டு, அதன் அறிக்கை வந்து, ஒன்பது மாதங்கள், இன்னும் ஆண்டுக் கணக்கில் அதைப்பற்றி அறிவிக்காமல் இருப்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் பேரில் விரைவில் அரசு முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டாபிராமன் கமிட்டி அறிக்கையை அவையில் வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசும் போது, அந்த அறிக்கையில் பல முக்கியஸ்தர்கள் ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவித்திருப்பதால், அவற்றை அறிந்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து அரசிற்குச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50.)

அதைப் போலவே 1975-76-ஆம் ஆண்டில் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி பேருந்துகள் நிர்வாகத்தைப் பொறுத்து ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, எல்லாப் பேருந்து நிறுவனங்களுக்கும் சென்று முழுமையாக ஆய்வு செய்து, ஒரு அறிக்கையை அளித்தது. அந்த பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி அளித்த அறிக்கை இதுவரையில் நம்முடைய அவையிலே வைக்கப்படவில்லை. இத்தகைய அறிக்கைகள் அளிக்கப்பட்டால்தான், உறுப்பினர்கள் இந்தத் துறையில் உள்ள விஷயங்களைச் சரியாகத் தெரிந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையையும் இந்த அவையிலே அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னைப் பொறுத்த வரையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த அதிருஷ்டக் காரர் என்று நினைக்கிறேன். காரணம் இங்கே அவையில் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த வரையில், அவைகளின் நிதி நிலை ஆதாயமாக உள்ளதா இழப்பாக உள்ளதா என்பதைப் பற்றி ஒரு இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். மொத்தப் போக்குவரத்துக் கழகங்களிலுமாகச் சேர்த்து 1976-77-ஆம் ஆண்டில் 46.53 லட்சம் ரூபாய் ஆதாயம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 31-3-1977 கணக்குப்படி இந்தப் போக்கு

[Thirumathi Mandakini Krishnamurthi] [1978 மார்ச் 2

It is a very healthy sign that the Transport Department is put in charge of roadways also. It is a constant complaint, especially from motorists, that our roads are not fit enough for small vehicular traffic. The people who own small cars find that they have to pay a lot for repair of their cars. As there is a separate cell called the Road Traffic Engineering Cell and as this Cell is given the charge of making an assessment of the traffic in different regions and areas of heavy traffic, if a kind of cess is levied on buses and other heavy traffic and cars, I think there will be enough money to maintain the roads that are not very satisfactory.

Now, since roads have come under 'traffic', I would also like to bring to the notice of the Hon. Minister that most of our roads are used as open latrines. They are not at all fit to be used by people who walk on those footpaths and roads and they are in a very, very insanitary condition. I do not know how this problem is going to be solved. But, if some kind of deterrent punishment is given, things may improve. When children do it, the parents have to be punished and if the adults do it, they have to be punished with heavy fines. If that is done, the Department also will have some income and the people of the locality will appreciate this and they will also co-operate with the Department. I am reminded of an article which I read two or three years back, written by the famous journalist Mr. Abu Abraham. He described our sanitary conditions as the greatest handicap in attracting enough tourists in this country.

I am also happy to see that inter-State luxury buses are now available. If this kind of inter-State travel is encouraged, I think people will know more of this country and even people from other countries will have the benefit. I have also had occasion to travel by bus and I have found that in the bus stops the food facilities and the sanitary conveniences are horrible. I hope no exception will be taken if we have to call a spade a spade. If the sanitary conveniences at bus stops are improved and if proper food facilities are available, our Transport will have a good name not only in our country but among the people from other countries when they visit our State. Thank you.

1978 மார்ச் 21]

*திரு. இரத்தின பாலகுருசாமி: மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நெடுஞ்சாலை,
கிராமப் பணித் துறை பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது ஒரு
சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில் நடந்து முடிந்த
புயல் வெள்ளத்தின் காரணமாக, தமிழக அரசு சுறுசுறுப்பாகவும்
விரைவாகவும் எடுத்துக் கொண்டுள்ள சீரமைப்புப் பணிகளைப்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல ஆங்
காங்கே ஏற்பட்ட உடைப்புகள், மற்றும் ஏரி போன்றவைகளுக்கு
ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றையும் சீரமைக்க மேற்
கொண்டுள்ள முயற்சிகளுக்கும், பழுதடைந்த பாதைகளைச்
சீர்படுத்த பல்வேறு இடங்களில் நடந்து வரும் நிறைய
பணிகளுக்காகவும் நான் இந்த அரசை முழு மனதோடு
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப் புறங்களைப் பொறுத்த வரையில், கிராம
இணைப்புச் சாலைகள், கிராம மேம்பாட்டுத் திட்டங்கள்
என்றெல்லாம் இந்த கிராம, நெடுஞ்சாலை பணித்துறைக்
கொள்கைக் குறிப்பில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்
கிறது. அவ்வாறு எடுத்துச் சொல்லப்பட்ட விஷயங்களில்
ஏற்கெனவே காவேரி திட்டத்தின்கீழ் போடப்பட்ட தார்ச்
சாலைகள் இப்போது காணமல் போய்விட்டன என்பதை
அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையைக்
கருங்கல் சாலையாக மாற்றி அமைத்து விட்டால், அதன்
காரணமாக கொஞ்சம் செலவு அதிகமானாலும் பரவாயில்லை
என்று கருங்கல் சாலை போட மேற்கொண்டுள்ள முயற்சிக்காகவும்
நான் பாராட்டு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கொள்ளிடக் கரையைப் பொறுத்தவரையில்,
இடது கரைப் பகுதியில் இறஞ்சிமேடு, ராதாநல்லூர் பகுதியில்
உடைப்புகள் ஏற்பட்டு அவைகள் அடைக்கப்பட்டுள்ளன.
வலதுகரையில் ஒரு சில இடங்களில் பொதுப்பணித் துறை
யினரால் அடைக்கப்பட்டிருந்தாலும், பிச்சாவரம் முதல்
மேற்கே அணைக்கரை முடிய உள்ள சாலையில் 52 கிலோ
மீட்டர் நீளமுள்ள பகுதிகள் சீரமைக்கப்பட வேண்டும்.
அதைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் கிழக்கே மகேந்திர
பள்ளி முதல் மேற்கே அணைக்கரை வரை 24 அடி அகலத்திற்கு
அதை உயரப்படுத்தி கருங்கல் சாலையாக அமைத்துத் தர
வேண்டுமென்று பல விண்ணப்பங்கள் கொடுத்தோம். இன்று
வரை அது சாதாரணமாகவே அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு
புறத்திலும் உள்ள சாலைகளைக் கருங்கல் சாலைகளாக மாற்றி
யமைத்தால், அதன்மூலம் அதிகமான வருவாய் வருவதற்கு
வழியுண்டு என்பதையும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன். அதை இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்ளா

விட்டாலும், இந்தத் திட்டத்திலாவது எடுத்துக்கொண்டு அடுத்த ஆண்டு முதல் படிப்படியாக, சிறுகச் சிறுகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு இரண்டு கோடிரூபாய் அளவு செலவாகும் என்றால், ஆண்டுதோறும் 10 லட்சம் ரூபாய், 20 லட்சம் ரூபாய் என்ற அளவில் பகிர்ந்து கொண்டு சிறுகச் சிறுகச் செய்து கொடுத்தால், நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதைப் போலவே ஆலப்பாக்கத்தை அடுத்துள்ள ஆண்டியம் பாக்கத்தில் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் 15 கிராம மக்கள் வாழ்கிறார்கள். 19 ஆயிரம் வாக்காளர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அங்கு ஊராட்சி மன்றங்கள் 4 இருக்கின்றன. அந்த மன்றங்களுக்கு 1963ஆம் ஆண்டிலே பாலம் அமைக்க திட்டமிட்டு, எஸ்டிமேட் போட்டாகி விட்டது. ஆனால் அது இப்போது எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியவில்லை. அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பாலத்தைப் பொது மக்களுக்குக் கட்டித் தருவதற்கு இதிலே இடமளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே பாதைகள் சீரமைப்புக்கு, சாலைப் பராமரிப்புக்கு என்று எவ்வளவோ ரூபாய்களை அரசாங்கம் ஒதுக்கியிருந்தும் அங்கே வேலைகள் துரிதமாக நடக்க முடியாத நிலைகள் இருக்கின்றன. அதை ஒரு மூன்று மாத காலம் தள்ளிப் போட வேண்டும். செப்டம்பர் மாதம் இறுதி வரையிலே நீடிக்க வேண்டும். அப்போதுதான் ஒதுக்கப்பட்ட பணத்தை முறையாகச் செலவழிக்க முடியும். இல்லையென்றால், அதைத் திருப்பி அனுப்பி விடுகின்ற நிலைமைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஒரு 3 மாத காலத்திற்கு நீடித்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொள்கிறேன்.

அது போலவே, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், உலக வங்கித் திட்டத்தின்கீழ் 100, 150 பஸ்கள் புதிதாக வந்திருக்கின்றன. மந்தவெளி டெப்போவில்தான் அவைகள் இருக்கின்றனவே தவிர, இன்னும் மற்ற இடங்களுக்கு அனுப்பப்படவில்லை. அவைகளை பக்கத்து டெப்போக்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பு செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாதை சீரமைப்புக்காக இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்க்கும்போது, இவைகளை எப்போது, எந்தக் காலத்தில் நிறைவேற்றப் போகிறது என்று தெரியவில்லை. அந்தத் திட்டங்களை இந்த அரசு சீக்கிரமாக நிறைவேற்றித்தர வேண்டும்

என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் பல காலமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற கிராம மக்களுக்கு இது பயன் அளிக்கும். கிராம மக்களுக்கு இணைப்புச் சாலைகள் போட்டுத் தர வேண்டும். மணற்சாலைகளிலே போகின்ற மக்களுக்குக் கருங்கல் சாலை போட்டுத்தர வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே அந்தச் சாலைகளைக் கருங்கல் சாலைகளாக மாற்றியமைக்க ஒதுக்கீடுகள் செய்திருக்கிறார்கள். 6,100 கிலோ மீட்டர் தொலைவுக்குப் போட்டுத்தர முடியும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே அதற்கு ஒதுக்கீடு செய்திருப்பதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இணைப்புச் சாலைகள் பற்றி 2 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியிருக்கிறார்கள். கிராம மக்கள் மேம்பாடு என்று பார்க்கும்போது, அவர்களுக்கு இந்த இணைப்புச் சாலைகளைப் போட்டுக் கொடுப்பது முக்கியமாகும். அதிகாரிகள் இதைப்பற்றி உடனடியாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 12 ஆயிரம் ஊராட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இடையே உள்ள இணைப்புச் சாலைகள் துண்டிக்கப்படாமல், எல்லா கிராமங்களுக்கும் இணைப்பு இருப்பது போல, பரவலாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு இவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகக் கவனம் எடுத்துக் கொண்டுள்ளது. இன்னும் மேலும் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறச் சாலைகளைச் சீர்திருத்தித் தந்தால்தான், விவசாயப் பொருள்களை மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்ல கிராமப்புற மக்களுக்குச் சுலபமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். இந்த கிராமப் புறச் சாலைகளைப்பற்றிப் பேச வாய்ப்புத் தந்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இந்த விளக்கங்களை எல்லாம் சொல்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டுமன்னார்குடி-சிதம்பரம் சாலையை திட்டத்திலே எடுத்துக்கொண்டு 1977-78-ல் செயல்படுத்துவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் மன்னார்குடி பகுதியைப் பொறுத்த வரையில், 30 கிராமங்களுக்குப் பயன் ஏற்படும். சர்வராயன் பேட்டையில் பாலம் அமைக்கும் வேலையையும் நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் இணைப்புச் சாலைகளை அமைப்பதால், 30 கிராமங்கள் நலம் பெறும் என்று சொல்லிக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சாலைப் போக்குவரத்து—நெடுஞ்சாலைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்

துக்களைக் கூற எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்த மட்டில், சில ஆண்டுகளாகவே நான் பார்த்த வரைக்கும் விபத்துக்கள் சென்ற ஆண்டை விட மிகக் குறைவாக இருக்கின்றதைக் காண்கிறோம். எனக்குப் புள்ளிவிவரம் தெரியவில்லை. ஆனால் நடைமுறையில் பார்க்கிறேன். நிச்சயமாக விபத்துக்கள் இதற்கு முன்பு இருந்ததை விட பெருவாரியாகக் குறைந்திருக்கின்றன. அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நான் உளமாறப் பாராட்டுகிறேன்.

போக்குவரத்தைத் தேசிய மயமாக்க வேண்டுமென்பது அரசாங்கத்தால் வெளிப்படையாகவே பிரகடனம் செய்யப்பட்ட கொள்கை. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சி வருவதற்கு முன்பு, அவர்கள் மந்திரிசபை அமைக்கக்கூடிய கட்டத்திலே அவரைச் சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர், நாங்கள் மந்திரிசபை அமைத்த உடனே பஸ்களை தேசிய மயமாக்கப் போகிறோம் என்று சொல்லி சில கருத்துக்களையும் சொன்னார்கள். அதன்படி மந்திரிசபை அமைத்த பின்பு, தொடர்ந்து சில பஸ் ரூட்டுகளைத் தேசிய மயமாக்கினார்கள். அதற்குப் பிறகு அவரைத் தொடர்ந்து முதலமைச்சராக வந்த மாண்புமிகு டாக்டர் கருணாநிதி அவர்கள் மேலும் சில ரூட்டுகளைத் தேசிய மயமாக்கினார்கள். அந்தக் கொள்கையை இன்னும் விரிவாக்கி, மேலும் பல பஸ் ரூட்டுகளை தேசிய மயமாக்கினார்கள். சுமார் நான்கு வருடங்களாக நான் பார்க்கிறேன். இந்தத் துறையிலே அபிவிருத்தி இல்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்தக் கொள்கையிலே மாற்றம் வந்துவிட்டதா அல்லது அந்தக் கொள்கை அப்படியே இருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால், அந்தத் துறையிலே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நான் ஒரு குறையைச் சொல்ல விரும்புகிறேன். எக்ஸ்பிரஸ் பஸ்கள் மற்ற பஸ்கள் அடிக்கடி ரிப்பேர் ஆவது கூடுதலாக இருக்கின்றது. அந்த பஸ்களை நன்றாகச் செப்பனிட்டு ரோடுகளில் அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சமீபத்திலே இரண்டு சம்பவங்களைப் பார்த்தேன். நான் மதுரையிலிருந்து சென்னைக்குப் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். சென்னைக்கு வரும் போது, சமீபத்திலே பஞ்சர் ஆகிவிட்டது. ஸ்டெப்பினி இருந்தால் மாற்றலாம் என்று சொன்னார்கள். அந்த டயர் ஓட்டை, அது தாங்காது என்று சொல்லிவிட்டார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஸ்டெப்பினி என்றால் என்ன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : ஸ்டெப்பினி இல்லை; ஆகவே அவர்கள் அங்கு அப்போது மாற்றுவதற்கு இல்லை. 3 மணி நேரம் அங்கேயே காத்துக் கொண்டிருந்தோம். பிறகு அடுத்த பஸ்ஸிலே ஏறி வந்தோம். எல்லாப் பிரயாணிகளையும் அதிலே ஏற்றி அனுப்பினார்கள். மற்றொரு சமயத்திலே, ஸ்டெப்பினி இருந்தது, அதை மாட்டச் சொன்னேன். ஆனால் அன்று ஸ்பானர்கள் இல்லை என்றார்கள். இருந்தால் 10 அல்லது 15 நிமிடங்களில் சீக்கிரமாக மாட்டிக் கொண்டு செல்லலாம்.

திரு ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகின்ற நேரத்திலே எல்லாம் பஸ் பஞ்சர் ஆகின்றதே, அதற்குக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதனை விட நான் கொஞ்சம் அதிக கனமாக இருப்பதன் காரணமாக இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதிரியான சிறிய கோளாறுகளுக்குக்கூட நேரம் வீணாகிறது. பெட்ரோல் இல்லாமல் கார் எடுப்பதில்லை. கார் எடுக்கும் முன்பு பெட்ரோல் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டுதான் காரை எடுப்பார்கள். அதைப் போல ஸ்டெப்பினி இருக்கிறதா, மற்ற சாமான்கள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் பார்த்துக் கொண்ட பின்புதான், காரை எடுக்க வேண்டும், பஸ்ஸை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த மாதிரியெல்லாம் சரிபார்த்துக் கொண்டு பஸ்ஸை எடுத்திருந்தால், 3 மணி நேரம், 4 மணி நேரம் என்று வீணாகக் காலதாமதம் ஆகாமல் செய்யலாம். அப்படிக் காலதாமதம் ஏற்படுவதை நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டி. வி. எஸ். பஸ் ஸ்தாபனத்தினரிடம் பஸ்கள் இருந்த போது, அவர்கள் காலத்திலே பஸ்ஸிலே, லாரியிலே எல்லாம் ஒரு மாக்னடைஸ்ட் கருவி ஒன்று வைத்து ரோடிலே ஓட விடுவார்கள். அது சாலையிலுள்ள லாடம் போன்ற இரும்பு சாமான்களை நீக்கி விடும். அதனால் அவர்கள் பஸ்களில் அடிக்கடி பஞ்சர் ஆகாது. இப்போது டி. வி: எஸ். நிறுவனம் இல்லை. அவர்கள் கையாண்ட அந்த முறையை நாமும்

(முற்பகல் 11—10)

கையாள வேண்டும். நமது அரசுப் அந்த முறையைக் கையாண்டு நல்ல முறையில் பஸ்களை ஓட்ட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டி. வி. எஸ். காலத்திலே எந்த பஸ் வந்தாலும் சரியான நேரத்தில் வரும். அந்த அளவுக்கு டைம் ஷெட்யூலை மெயின்டெயின் பண்ணி வந்தார்கள். பஸ் ரோடில் வருவதைப் பார்த்து, கடிகாரத்தைத் திருப்பி வைத்துக் கொள்ளலாம். டி. வி. எஸ். பஸ் 12 மணிக்கு வருமென்றால், சரியாக 12 மணிக்கு வரும். நாம் கடிகாரத்தை அந்த மணிக்கு மாற்றிக் கொள்ளலாம். அந்த அளவுக்கு டி. வி. எஸ். பஸ்கள் ஓடின. அந்த நிலையில் நாம் இப்போது இல்லாமல் போனாலும், அந்த நிலைக்கு வர முயற்சி எடுக்க வேண்டும்.

இந்த அவையிலே ஒரு டிரைவரைப் பற்றிச் சிபாரிசு செய்ய விரும்புகிறேன். அவருக்குச் சிறு வெகுமதி கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதம் 16 ஆம் தேதி நான் திருச்சியிலேயிருந்து சென்னைக்கு வர இருந்தேன். $4\frac{1}{2}$ மணிக்கு பஸ் ஸ்டாண்டில் இருந்தேன். நாகர்கோவிலிலிருந்து பஸ் வந்தது. பஞ்சராகியும் அப்படியே கொண்டு வந்துவிட்டார்கள். டயர் $4\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட வேண்டும். வண்டியை பழுதுபார்த்துக் கொண்டுதான் போகவேண்டும் : வழியில் காற்று இறங்கி விட்டால், மாற்றுவதற்கு ஸ்பேனர் போன்ற கருவிகள் இல்லை ; ஸ்டெப்னி ஒழுங்காக இருக்கிறதா என்பது தெரியவில்லை ; டெப்போவிற்கு போய் மாட்டிக் கொண்டு தான் செல்ல வேண்டுமென்று டிரைவர் கூறி, டெப்போ விற்கு வண்டியை எடுத்துச்சென்றார். அதனால் ஒரு மணி நேரம் தாமதமாகியது. ஒரு மணி நேரம் திருச்சியை விட்டு வண்டி புறப்படத் தாமதமானாலும், விழுப்புரம் வருவதற் குள் அந்த ஒரு மணி நேர தாமதத்தைச் சரி செய்துவிட்டார் அந்த டிரைவர். அவரைப் பெரிய சாமர்த்தியசாலி என்று நான் பாராட்டினேன். 100 மைல் தூரத்திற்குள் ஒரு மணி நேரத்தை 'மேக்—அப்' பண்ணுவது என்பது சாதாரண மானதல்ல. நான் டிரைவர் இல்லாமல் சொந்தக் காரை 30 வருஷங்கள் ஓட்டியவன். டிரைவர் இல்லாமல் கார் வைத்திருந்தேன். அன்றைய தினம் டிரைவரை ஒரு குற்றம் சொல்ல முடியாது. அவ்வளவு திறமையாக ஓட்டிக்கொண்டு வந்தார். அவருடைய பெயர்தான் எனக்குத் தெரியும். காளியப்பன் என்பது அவருடைய பெயர். அவருக்கு 100 ரூபாயாவது, அவருடைய திறமைக்காக வெகுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி ஒருவருக்குக் கொடுத்தால், மற்றவர்கள் தங்களுடைய கடமையை முறை யாகச் செய்வதற்கு அது ஊக்குவிக்குமென்பதால் சொல்கிறேன்.

இந்த நேரத்தில் மற்றொன்றைக் கூற விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலே டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது. பெரியார் அவர்கள் பெயரிலே டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இருக்கிறது. திராவிடர் இயக்கத்தில் எந்த அளவுக்குப் பெரியாருக்கு மரியாதை இருக்கிறதோ, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மரியாதை இருக்கிறதோ அந்த அளவுக்கு இஸ்லாமிய சமுதா யத்தினர் காயிதே மில்லத் அவர்களை நேசிக்கிறார்கள். எனவே அவர் பெயரிலே ஒரு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனை திருநெல்வேலி பகுதியில் அமைக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ள மேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களிலே 2 சீட்டுக்கு ஒரு ஜன்னல்தான் இருக்கிறது. பின்பக்கம் இருப்பவர்கள் ஜன்னலைத் தள்ளினால், முன்பக்கம் இருக்கிறவர்கள் தங்களுக்குக் காற்று வேண்டுமென்று தள்ளு கிறார்கள். இதனால் தகராறு ஏற்பட்டு, அடிக்கடி சண்டை கள் உருவாவதற்குக் காரணமாக அமைகிறது. ஒவ்வொரு சீட்டுக்கு ஒரு ஜன்னல் என்று வைத்துவிட்டால் இந்தத் தகராறு இராது. இதைத் திடீரென்று மாற்ற முடியாது. வரக்கூடிய புதிய பஸ்களிலே இப்படி ஜன்னல்களை அமைத் தால், நலமாக இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எழும்பூரில் டாக்சி அல்லது ஆட்டோ பிடித்து, வர வேண்டிய இடத்திற்கு வந்தால், அவர்கள் ஒழுங்கான கட்டணத்திற்கு வருவதில்லை. அங்கே போலீஸ்காரர்கள் இருந்துகொண்டு, ஏற்றிவிடுகிறார்கள். வந்து இறங்கியவுடன், 3 ரூபாய் ஆனால் 4 ரூபாய் கொடுங்களென்று சொல்கிறார்கள். எழும்பூர் ரயில் நிலையத்திலும், சென்ட்ரல் ரயில் நிலையத் திலும் இருந்து வரும்போது, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இந்த நிலையைப் பரிசீலனை செய்து, அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, ஒழுங்குபடுத்த வேண்டும். திருச்சியிலேயும் இந்த நிலை இருக்கிறது. டாக்சியில் மீட்டர் இருக்கிறது. ஆனால் எந்த டாக்சிக்காரர்களும் மீட்டர்படி கட்டணம் வாங்குவதில்லை. கூடுதலாக வாங்குகிறார்கள். ஆட்டோவிற்கு 2 மடங்கு, 3 மடங்குக்குக் குறைவாக வாங்குவதில்லை. போலீஸ் இருக்கிறது. பக்கத்திலே ஸ்டேஷன் இருக்கிறது. எல்லாருக்கும் தெரிந்து அவர்கள் அப்படி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஏன் அவர்களை விடு கிறார்களென்பது புரியவில்லை. இதையும் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களைப் போன்று சென்னையும் பெரிய நகரமாக இருக்கிறது. அங்கே டாக்சி ஸ்டான்டிலே டெலிபோன் வைத்திருக்கிறார்கள்,

வீட்டிலிருந்து டாக்சி ஸ்டான்டிற்கு டெலிபோன் செய்தால், டாக்சி வீட்டிற்கு வருகிறது. அந்த மாதிரி வசதி சென்னையிலே இல்லை. அமைச்சர்கள் டெல்லிக்குப் போயிருப்பார்கள். அவர்களுக்குத் தனிக் கார்கள் இருக்கும். இருந்தாலும் அமைச்சர்களாக ஆவதற்கு முன்பு டெல்லி சென்றபோது அவர்கள் இதைப்பற்றி அறிந்திருப்பார்கள். எங்கிருந்து போன் செய்தாலும் டாக்சி வருகிறது. வீடாக இருந்தாலும், கடையாக இருந்தாலும், ஹோட்டலாக இருந்தாலும், அந்த இடத்திற்கு டாக்சி வருகிறது. பம்பாய், டெல்லி, கல்கத்தா ஆகிய நகரங்களில் அந்த வசதி இருக்கிறது. அந்த மாதிரி வசதிகளைச் சென்னை நகரிலும் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

கப்பலோட்டி வாணிபம் செய்வதற்காக நம்முடைய மாநில அரசு ஒரு துறையைத் துவக்கி, ஓரளவுக்கு அந்தப் பணியில் ஈடுபாடு கொண்டுள்ளது. அதுமாதிரி மாவட்டத்திற்கு மாவட்டம் செல்கின்ற அளவுக்கு விமானங்களை மாநில அரசு விடவேண்டும் மாநில அரசு பஸ் போக்குவரத்து போன்று விமானங்களை விட வேண்டும். வேறு மாநிலங்களுக்குப் போவதாக இருந்தால், அந்த விமான சர்வீசை மத்திய அரசு நடத்தட்டும். நம் மாநிலத்திலேயே, மாவட்டத்திற்கு மாவட்டம் — மதுரையிலிருந்து திருச்சி, திருச்சியிலிருந்து மதுரை, திருச்சியிலிருந்து கோவை என்று செல்வதற்கு, நாம் நடத்தும் பஸ் சர்வீஸ் போன்று விமான சர்வீஸ் நடத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே புதிதாக ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்திற்கு ஆன செலவில் ஒரு பகுதியை முனிசிபாலிடி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் செலவில் பாலம் கட்டியிருப்பார்கள். அதில் 50 லட்சம் அல்லது 25 லட்சம் ரூபாயை முனிசிபாலிடி கொடுக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. திருச்சி முனிசிபாலிடியைப் பொருத்தமட்டில், அது ஏற்கனவே கடனாளியாக இருக்கிறது. திருச்சியிலுள்ள ரோடிலே நடக்கவே முடியாது, அவ்வளவு பழுதுபட்டிருக்கிறது. இந்த நிலையிலே அவர்களுக்கு அந்தப் பணத்தை உதவியாகக் கொடுத்தால் ரோடுகளைச் செப்பனிடலாம். மற்ற அபிவிருத்தி வேலைகளைச் செய்யலாம். இவ்வளவு பெரிய தொகையை அந்த முனிசிபாலிடியின் மேல் போடுவது, அவர்களுக்குத் தாங்க முடியாத பளுவாக இருக்கிறது. திருச்சியையும் ஸ்ரீரங்கத்தையும் இணைக்கின்ற பாலம் அது. திருச்சி முனிசிபாலிடியிலிருந்து பணம் கொடுக்க வேண்டும். ஸ்ரீரங்கம் முனிசிபாலிடியிடமிருந்து பணம் வாங்கப்படவில்லை,

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ஸ்ரீரங்கம் நகராட்சியைப் பலமுறை கேட்டார்கள். பல வருஷங்களானாலும், அந்தப் பணத்தைப் பெற முடியாது. அந்த அளவுக்கு ஸ்ரீரங்கம் நகராட்சி பற்றாக்குறையில் இருக்கிறது. அதனால் தர முடியாது. குடியிருக்கிற மக்களிடம் வரி வாங்கி, அதன் மூலம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : திருச்சி நகரைப் போன்று ஸ்ரீரங்கம் நகரமும் என்னுடைய நகரம்தான்,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இரண்டு பேரும் அங்கேதான் இருக்கிறீர்களா ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நாங்கள் பக்கத்துப் பக்கத்து ஊர்க்காரர்கள். அவர்கள் ஸ்ரீரங்கத்துக்காரர், நான் திருச்சி நகர்க்காரன். ஒன்று வஜா செய்ய வேண்டும். அல்லது சிதம்பரத்திலே செய்தது போல் செய்யவேண்டும். சிதம்பரத்திலே 'டோல்' வாங்குகிறார்கள் — சுங்கவரி வாங்குகிறார்கள். அதுமாதிரி வாங்கினால் பாதகமில்லை. முனிசிபாலிடி தாங்கக்கூடிய நிலையில் இல்லை. அதனால் பல அபிவிருத்தித் திட்டங்கள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. இதைப்பற்றி அரசு நல்ல முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அரசுப் போக்குவரத்து பற்றி பல அங்கத்தினர்கள் விரிவான கருத்துரைகளை வழங்கினார்கள். கடைசியாகப் பேசிய திரு. அப்துல் வகாப் அவர்கள் பாலம்கட்டிய செலவிற்கான தொகையை சுங்கவரி மூலம் வசூலிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முன்னால் அப்படி நடந்துகொண்டிருந்தது. இத்தனை வருஷங்கள் வசூலிப்போம் நடைவண்டிக்கு இவ்வளவு, சைக்கிளுக்கு இவ்வளவு, காருக்கு இவ்வளவு, பேருந்துக்கு இவ்வளவு என்று முன்னாலேயே சொல்லிவிட்டு, வசூல் பண்ணுவது வழக்கம். ஆனால் ஜனநாயகம் வளர வளர மக்கள் அதை நடைமுறையில் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இரண்டு முனிசிபாலிடிகளும் பற்றாக்குறை முனிசிபாலிடிகளாக இருக்கின்றன. அதற்காக அந்தப் பணத்தை வசூல்பண்ணி, பற்றாக்குறையைத் தீர்த்துக் கொள்ளலாமென்பது சரியானதல்ல. ஏராளமான கிரான்ட் கொடுக்கிறார்கள். மத்திய அரசு சாலைப் போக்குவரத்திற்காக பல கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். அதற்குமேலே ஆகிற செலவு சொற்பம்தான். நெடுஞ்சாலையைப் பொறுத்தவரைக்கும், அதைப் பராமரிக்க கொஞ்சம்தான் செலவாகிறது. மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்டின்கீழ் வசூலிக்கிற தொகை

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1978 மார்ச் 21

ஏராளம். இப்போதுகூட Seat க்கு இவ்வளவு என்று ஏற்றியிருக்கிறார்கள். நாளுக்குநாள் ஏராளமான பணம் வசூலாகிறது.

(முற்பகல் 11-20)

ஏற்கெனவே பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தபொழுது பஸ்கள் எண்ணிக்கை தெரியும். நாட்டின் வளர்ச்சி எப்படித் தெரியும்? மக்களுடைய வாழ்க்கைத்தரம், போக்குவரத்து அலங்காரங்கள் எல்லாம் அதிகமாகியிருக்கின்றன. இந்த ஊருக்குப் போனோம், இந்த க்ஷேத்திரத்திற்குப் போனோம், சுற்றுலாவிற்குப் போனோம் என்று பள்ளிக் குழந்தைகளிலிருந்து வயோதிகர்கள் வரை சுற்றுலா யாத்திரை போகாமல் இருப்பதில்லை. முன்பெல்லாம் காலத்தை எப்படியோ கழித்தார்கள். இப்போது சுற்றுலா தான். இதற்கெல்லாம் போக்குவரத்துதான் முக்கியம். ரயிலில் போவது என்றால், முதலில் ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கு வாகனம் தேடவேண்டும். பின்பு ரயிலிலிருந்து இறங்கிப் போக இன்னொரு வாகனத்தைத் தேட வேண்டும். இது மாதிரி மூன்று முறை ஏறி இறங்கிச் சென்று ஒரு இடத்தைப் பார்ப்பது என்பதைவிட பஸ்களில் போவதுதான் எளிதாக இருக்கிறது. பஸ்ஸில் சென்றால், போகிற இடங்களில் இறங்கலாம். ஆகவே மக்கள் அதிகமாக விரும்புவது பஸ்தான். இப்படி ரயிலில் போகும் பொழுது, அதற்குக் கார் வேண்டியிருக்கிறது. ஊரில் சொந்தக் கார் இருக்கிறது. சென்னையில் இறங்கியவுடன் முதலில் எங்கே போகிறோம்? நான் எம். எல். ஏ. ஹாஸ்டலுக்குப் போகவேண்டுமென்று சொன்னால், டிரைவரின் முகத்தைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. என்னைப் போன்றவர்களைப் பார்த்தால், இவர் எம். எல். ஏ. ஆக இருப்பாரா என்ற சந்தேகம் வேறு வருகிறது. அப்படிப் போகும்போது, முடியாது என்று சொல்லி, ஏறி உட்கார்ந்துகொண்டு வாதாட வேண்டும். கேட்டால் பெட்ரோல் விலை ஏறிப்போய்விட்டது என்கிறார்கள். அதுவும் நியாயம்தான். கார் மெயின்டெயின் பண்ணுகிறவர்களுக்குத்தான் அது தெரியும். காசு கூடுதலாகக் கேட்டால், பரவாயில்லை. எம். எல். ஏ. ஹாஸ்டலுக்கு என்றால் வர மறுக்கிறார்கள். ஒன்றுக்கு இரண்டாகக் கொடுத்து, கெஞ்சிக் கூத்தாடி வரவேண்டும். எனவே எம். எல். ஏ. ஹாஸ்டலுக்குச் செல்வதற்கு இவ்வளவுதான் என்று அரசு நிர்ணயம் செய்தால் நல்லது. அண்ணா சாலையிலிருந்து ஹாஸ்டலுக்கு உள்ளே வர முக்கால் மைல், திரும்பிப்போக முக்கால் மைல், ஆக ஒன்றரை மைல் ஆகிறது. பெட்ரோல் சார்ஜ், மற்றும் wear and tear ஆவதால் அதிகமாகக் கேட்கிறார்கள். அதன் காரணமாக நாம் அதிகமாக வருத்தப்படுவதற்கு இல்லை. சந்தோஷமாகக் கொடுத்துவிட்டுத்தான் வரவேண்டும்.

போக்குவரத்துபற்றிப் பல கருத்துக்களைச் சொன்னார்கள். டி. .வி எஸ். ஸ்தாபனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அது

1978 மார்ச் 21] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

மாதிரி 'மெயின்டெனன்ஸ்' -ஐ எதிர்பார்க்கவே முடியாது. டைம் என்றால், சூரியன் கதி மாறினாலும், டி. வி. எஸ். பஸ் கரெக்டாக வரும். ரிப்பேர் ஆயிரத்திற்கு ஒன்றுதான் ஏற்படும். அதுவும் தெய்வாதீனமாக ஏற்படுவதுதான். அப்படித்தான் டி. வி. எஸ். பஸ் ஓடியது. தனியார் நிறுவனங்களை எடுத்துக் கொண்டோம். அது அரசாங்கத்தின் பாலிசிமேட்டர். நாட்டில் போகப்போக தனியார் துறையை விரும்ப மாட்டார்கள். எதையாவது சொல்லி ஓட்டு வாங்கவேண்டியிருக்கிறது என்று சமாதானம் சொன்னார்கள். எல்லா பஸ்களையும் எடுத்திருப் போமேயானால், அரசுப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஸ்டிரைக்கை ஒன்றும் செய்திருக்க முடியாது. வேலை நிறுத்தத்தின்போது, 1200 பஸ்கள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. அதனால்தான் ஜனங்களுக்கு சௌகரியம் பண்ண முடிந்தது. எல்லாமே அரசாங்க பஸ்களாக இருந்தால், எப்படி கொண்டு வரமுடியும்? நம் பஸ்கள் அந்த அளவுக்குத் திறமையாக ஓடுமா என்பதும் தெரியவில்லை. அந்த அளவுக்கு டி.வி.எஸ்., ஏ.பி.டி. பஸ்கள் நல்ல தரமாக வேலை செய்தன.

ஆம்னிபஸ்கள் எல்லா ஊர்களிலிருந்தும், கன்னியாகுமரி, கோயம்புத்தூர், பெங்களூர் போன்ற இடங்களிலிருந்து சென்னைக்கு நிறைய வருகின்றன, ஆறுமணி நேரத்தில் வருகிறார்கள். எந்த இடத்திலும் நடுவழியில் நிற்பதில்லை, திருச்சியிலிருந்து சென்னைக்கு ரூ. 15 வாங்கிக்கொண்டு ஆட்களை ஏற்றுகிறார்கள். எப்படியோ அவர்களுக்குக் கட்டுப்படி ஆகிறது. சில நேரங்களில் குறைத்து வாங்கிக்கொண்டும் ஏற்றுகிறார்கள். ரிப்பேர் ஆகி வண்டி நிற்பதாகத் தெரியவில்லை. ஐந்து மணி நேரத்தில் கொண்டுவந்து இறக்கிவிடுகிறார்கள். நாம், லைட்னிங் சூப்பர் எக்ஸ்பிரஸ் என்று பஸ்கள் விடுகிறோம். ஆனால் எட்டு மணி நேரம் ஆகிறது. பல இடங்களில் ரிப்பேர் ஆகி விடுகிறது. மழை நேரங்களில் 'வைப்பர்' ஓர்க் பண்ணுவது இல்லை. வெய்யில் காலத்தில் வேலை செய்யும். அதே மாதிரி குடிநீர் வைக்கப்பட்டு அது கீழே கொட்டிக்கொண்டேயிருக்கிறது. வேஷ்டியைத் தூக்கிக் கொண்டிருக்கவேண்டும், இல்லாவிட்டால் நனைந்துவிடும். இதையும் நல்லமுறையில் சீர் திருத்தலாம். எக்ஸ்பிரஸ் பஸ் சர்வீஸை ரொம்ப தூரம் முன்னேற்றம் செய்ய வேண்டும். தனியார் துறையில் டி.வி.எஸ்.—ஐ நான்கு பஸ்கள் விடச்சொல்லி, அது எப்படி நடக்கிறது என்று அனுபவத்தைப் பார்க்கவேண்டும். எல்லாவற்றையும் அரசு எடுத்துக்கொண்ட பிறகு, அவர்கள் எப்படி நடத்தினார்கள் என்பதெல்லாம் மறந்து போய்விடும். அந்த அளவில் இருப்பதால், எக்ஸ்பிரஸ் பஸ்களை எப்படிச் சீர்திருத்தம் பண்ண முடியும் என்று அரசு யோசிக்கவேண்டும்.

அரசு அண்டர்டேக்கிங், சோழன் டிரான்ஸ்போர்ட் பஸ்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. மூன்று இடங்களில் மூன்று பஸ்கள் நிற்கின்றன. அதற்கு சீக்கு வந்துவிட்டது. டாக்டர் வருவதற்குக் காலதாமதம். பழுது பார்க்க வேண்டுமென்றால், அதற்குப் பல விதமான சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அங்கே எழுதிக் கொடுத்து, பில் வாங்கி வருவதற்கு நேரமாகிறது. தனியார் பஸ் இல்லையென்றால், எவ்வளவு கஷ்டம்? தனியார் பஸ் சொந்தக்காரர்கள் எப்படியோ 'மெயின்டெய்ன்' பண்ணிக்கொண்டு வருகிறார்கள். ஐம்பது பஸ்கள் என்றால், ஏதாவது ஒன்று ஏற்படும். காரணம் என்ன? நெரிசல். நாட்டிற்கு நெருக்கடி நிலைமை போய்விடுகிறது. பஸ் நெருக்கடி தீரவில்லை. சமீபத்தில் பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் பஸ் ஆக்சிடெண்டு திருவெறும்பூரில் நடந்தது. அந்த பஸ்கள் போகும்போது பார்த்தால், இப்படி ஒரு பக்கமாகச் சாய்ந்து கொண்டே போகும். என்டிரன்சில், 5 பேர் 10 பேர் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இதை நிவர்த்தி பண்ணுவது? சட்டத்தில் இடம் இல்லையா? ஓவர்லோடு ஏற்றக் கூடாது, ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும் என்ற சட்டமிருக்கிறது. அதை அமல் நடத்துவது சரியாக இல்லை. அந்த பஸ்ஸில் 85 பேர் போயிருக்கிறார்கள். ஆக்சிடெண்டு ஆகி, இன்னும் நான்கு பேர் படுக்கையில் இருக்கிறார்கள். ஜெனரல் ஹாஸ்பிட்டலில் ஒருவர் இருக்கிறார். அதில் நசுங்கிய ஒருவர் பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். காரணம் ஓவர்லோடு. இரவில் போய்க்கொண்டிருக்கும்போது, எதிரே உள்ள என்ஜின் மீது இடித்துப் புரண்டிருக்கிறது. இப்படி ஒரு தடவை மட்டும் ஏற்படவில்லை. இது மாதிரி இரண்டு அல்லது மூன்று தடவை அதே இடத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதைக் கவனிக்கவேண்டும். இது மாதிரி நகரங்களில் பார்த்தாலும், தொத்திக்கொண்டு போகிற நிலை இருக்கிறது. திருச்சி போன்ற இடங்களில் standingல் நிறைய ஆட்கள் ஏறி பஸ் ஒரே பக்கமாகச் சாய்கிறது. கொஞ்சம் slip ஆகிவிட்டால் எல்லோரும் விழ வேண்டும். இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். பலவிதமான ஆக்சிடெண்டுகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. சிலர் காயம் அடைகிறார்கள், உயிர்ச் சேதம் வேறு ஏற்படுகிறது. ஆகையால் இதுமாதிரி ஓவர்லோடு ஏற்றுவதைக் கண்காணித்து சட்டத்தை நல்முறையில் அமல்நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இந்த தூரப் போக்குவரத்து எக்ஸ்பிரஸ் பஸ்களை ரிப்பேர் பார்க்கும் பொழுது, 'பிராக்டிகல் எக்ஸ்பீரியன்சை' கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் பஸ்களில் டயரை அவர்களே மாற்றிவிடுகிறார்கள். மெக்கானிக், டிரைவர், அல்லது கண்டக்டர், இவர்கள் எப்படியாவது மாற்றுகிறார்கள்.

பக்கத்திலுள்ள நமது அரசுப் போக்குவரத்தில் முடிவதில்லை. இருக்கிறார்கள். லாரி சர்வீசைத் தேடக்கூடிய நிலையில் இவர்களுக்கு சர்க்கார் பஸ் தனியாரிடம் வேலைக்குச் சென்றால், நினைக்கிறார்கள். வேலை தெரியவில்லை என்று கேலியாக வேறு முறையில் ஸ்டெப்னி இருப்பதில்லை. அவைகள் சரியான இல்லாத நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகையால் இந்தப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, குறித்த நேரத்தில், காலதாமதம் இல்லாமல் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஓவர்லோடைக் கண்காணிப்பு செய்ய வேண்டும். அது டவுன் பஸ்ஸில்தான் இருக்கிறது. வெகுதூர பஸ்ஸில் இல்லை. டவுன் பஸ்களில்தான் கணக்கில்லாமல் ஏற்றுகிறார்கள். இது தனியார் பஸ்ஸில் மட்டுமல்ல, அண்டர்டேக்கிங் பஸ்களிலும் நடைபெறுகிறது. எனவே இதுமாதிரி அதிகமாக ஏற்றுவதைத் தடுத்து ஆக்சிடெண்டுகளைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசியமயமாக்கும் பாலிசி வெகுநாட்களாக இருக்கிறது. ஏன் இன்னும் ஆக்கப்படவில்லை என்பதற்கு கொள்கை விளக்கத்தில் உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. இன்னும் ரூட் கொடுக்கக் கூடிய அளவில் பஸ் போகாத இடங்கள் இருக்கின்றன. போகிற இடங்களுக்கு நம் சர்க்கார் துறையில் mini-bus, jeep-bus இருக்கிறது. அரசு அண்டர்டேக்கிங் எடுத்து நடத்தக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்தில், நெடுஞ்சாலையைப் பொறுத்தவரை, இன்னும் பல இடங்களில் overbridge போடவேண்டியிருக்கிறது. பணம் கடன் வாங்கியாவது போட வேண்டும். கிட்டத்தட்ட பல வருஷங்களாக சென்னையிலிருந்து கன்னியாகுமரி சாலையில் ரிப்பேர் நடந்துகொண்டு வருகிறது. திண்டுக்கல்—திருச்சி சாலையில் இந்த வேலை நடப்பதால், ஒரு மணி நேரத்தில் போக வேண்டிய இடத்திற்கு நான்கு மணி நேரத்தில் போக வேண்டியிருக்கிறது.

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை)

(முற்பகல் 11-30)

அந்த அளவிலே நெடுஞ்சாலைகளில் நிறைய டைவர்ஷன்கள் இருக்கின்றன. இந்த டைவர்ஷன்களைக் கொஞ்சம் தவிர்க்க வேண்டும்.

அடுத்து, நெடுஞ்சாலைப் பணியானாலும், தேசிய சாலைப் பணியானாலும் அதைச் சீர் செய்ய வேண்டுமென்ற அவசர அவசியம் காரணமாக, டெண்டர் விடாமல் நாமினேஷன் மூலமாகக் கொடுத்து விடுவதில், பலவிதமான தவறுகள்

ஏற்படுகின்றன. வெள்ள நிவாரணப் பணியில் ஏற்பட்ட பல தவறுகளை ரெவியூ செய்ய வேண்டுமென்று நான் முன்னமேயே சொன்னேன். இதிலே யார் தவறு செய்திருந்தாலும் சரி, அவர்களைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். சில இடங்களில் ஆளும் கட்சியினர் என்ஜினியர்களை மிரட்டுகிறார்கள். இந்த கான்ட்ராக்டை இன்னாருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஒரு லட்சம் ரூபாய்க்குக் கான்ட்ராக்ட் என்றால், ஒரு ஐம்பது ஆயிரம் ரூபாயாவது இலாபம் இருக்கும். அதற்காக அவர்கள் யாரையாவது பிடித்து கான்ட்ராக்ட் வாங்கிவிடுகிறார்கள். எல்லோருக்கும் பண ஆசை இருக்கும். அது இயற்கைதான். ஆகவேதான் இப்படி ஒப்பந்த முறையில் விடாமல், நாமினேஷன் முறையில் இல்லாமல் Short term tender ஆக், ஒரு 15 நாள் அவகாசம் கொடுத்து விட வேண்டும். அப்படிச் செய்தால், நம்முடைய பணம் வீண்விரயம் ஆகாமல் இருக்கும். வெள்ள நிவாரணப் பணியில் கான்ட்ராக்ட் விட்டிருக்கிறார்கள். அதை ஒரு சிலர் எடுத்து மறுபடியும் அதற்கு மேல் 25 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு விற்றிருக்கிறார்கள். அவர்களைப் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்றால், எப்படி முடியும்? இதில் இலாபம் இருப்பதால்தான், அப்படி சிபாரிசுக்குப் போகிறார்கள். ஆகவே நாமினேஷன் மூலம் ஒப்பந்தம் அளிப்பதைக் குறைத்துக் கொண்டு, குறைந்த கால டெண்டர்களாகக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஊராட்சி ஒன்றியம், முனிசிபாலிட்டி ஆகியவைகளிடம் உள்ள சாலைகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களால் அந்தச் சாலைகளைப் பேணிப்பாதுகாக்க முடியவில்லை. அதனால் ரோடுகள் எல்லாம் ரிப்பேர் செய்யப்படாமலே இருக்கின்றன. ரோடுகள் ரிப்பேர் செய்யப்படாமல் இருப்பதால், பலவிதமான முறையில் வண்டிகள் ரிப்பேருக்குள்ளாகின்றன. ரோடு சரியாக இல்லாததால், வண்டிகளில் கிளட்ச் பிளேட் பழுதாகிறது. ரோடுகளைச் சரி செய்ய ரொம்பவும் செலவாகிறது. அதற்குக் காரணம் சரளைக் கற்கள் கிடைப்பதில்லை. கூலி வேறு அதிகமாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு மோட்டார் வாகன வரிச் சட்டத்தின் மூலமாக வருமானம் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு எல்லா ரோடுகளையும் அரசாங்கமே சீர் செய்யலாம். ஆகவே இதைச் சர்க்காரே சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் நகராட்சியைப் பொறுத்தவரை இன்னும் எடுத்தபாடில்லை, இந்த நான்காண்டுகளில் எடுக்கப் போகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இன்னும் நாற்பது வருடங்கள் ஆனாலும் எடுக்கமாட்டார்கள் போலும். அங்கேத அடுஜ

ரோடுகளில் நிறைய டவுன் பஸ்கள் போகின்றன. 15 நிமிடத்திற்கு ஒரு முறை நான்கைந்து பஸ்கள் போகின்றன. நிமிடத்திற்கு ஒரு பஸ் போகக் கூடிய ரோடுகள்கூட இருக்கின்றன. ஆகவே ரோடுகள் கெட்டுப் போனால், வண்டிகள் கெட்டுப் போகின்றன என்ற காரணத்தால், அந்த ரோடுகளையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அவற்றை நல்லபடியாக சீர்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச சந்தர்ப்பமளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u> : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சட்ட மன்றப் பேரவையிலே இதே மானியத்தைப் பற்றி விவாதிக்கும்போது, பல அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக ஒன்று, மத்திய அரசாங்கம் டீசல் போன்றவைகளுக்கு எல்லாம் வரியைப் போட்டிருந்தாலும், இந்த நாட்டிலுள்ள ஏழையெளியவர்களைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு பஸ் கட்டணம் உயருமே என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில், உயரவில்லை என்பது மட்டுமில்லை. கட்டணத்தைக் குறைக்கிறோம் என்று சொல்லி ஒரு கிலோ மீட்டருக்கு 5.5. காசு என்று இருந்ததை 5 காசாகக் குறைக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், இந்த அரசாங்கத்தையும் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் பேசும்போது, இப்படிப் பாராட்டவும் செய்கிறோம் என்பதைக் கண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளபடியே வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

அதைப் போலவே, ஓராண்டுக் காலம் விபத்தில்லாமல் ஓட்டுகிற பஸ் டிரைவர்களுக்கு 100 ரூபாய் பரிசு வழங்கப்படும் என்ற அருமையான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே டிரைவர்கள் டீசல் செலவாவதைச் சிக்கனப்படுத்தினால், அதிலே மிச்சமாகிற பணத்திலே மூன்றில் ஒரு பங்கை ஊழியர்களுக்குக் கொடுப்போம் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி தொழிலாளர்களுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் அறிவிக்கப் பட்டிருக்கிற திட்டங்கள் எதுவாக இருந்தாலும், கொள்கை வேறுபாடு இல்லாமல், கருத்து வேறுபாடு இல்லாமல், இந்த நல்ல காரியங்களைச் செய்தவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உள்ள

வர்களாயிற்றே என்று எண்ணாமல், மனமாரப் பாராட்டுகிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி இந்த அரசாங்கம் செய்கிற நல்ல திட்டங்களைப் பாராட்டுகிற நேரத்தில், சொல்லுகின்ற சில குறைபாடுகளையும் தாங்கிக்கொள்ளக் கூடிய அளவுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பக்குவப்பட்டிருப்பார்கள் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையிலே பேசும்போது தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்து, அதற்கான வாக்கெடுப்பு நடத்தி, அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தம் முறைதானா? அதைச் செய்ய வேண்டுமா என்ற பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் ஒரு தொழிற் சங்கம் கூட்டாகக் கூடி வேலை நிறுத்தம் செய்வது என்று 14-ந் தேதி இரவு முடிவு எடுத்து 15-ந் தேதி மாநாட்டிலே கருத்து வெளியிடப்படுகிறது. இதற்கு முன்னால் பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனில் வேலை நிறுத்தம் செய்தபோது, நம்முடைய அரசாங்கம் ஏதோ ஒரு விதமான கடுமையான நடவடிக்கைகளை ஆரம்பத்திலே எடுப்பதாக அறிவித்திருந்தாலும், அதற்குப் பின்னால் இடைக்கால நிவாரணமாக 27 ரூபாயை அளிப்பதாக அறிவித்து, வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டு, அதற்குப் பின்னால் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அறிவித்தது. அதற்குப் பின்னால் இருவர் குழு ஒன்றை நியமித்து அந்த இருவர் குழுவில் அரசாங்கத் தரப்பிலேயும், தொழிலாளர் தரப்பிலேயும் பேச்சுவார்த்தை நடத்துவது என்று முடிவு எடுத்து ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறது அரசாங்கம் செப்டம்பர் 3ஆம் தேதியன்று.

"The Government will specify the matters in consultation with the signatories to the settlement for bi-partite discussions in the joint sitting and finalise it on or before 31-8-1978"

என்று தெளிவாக உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால் அந்த இருதரப்பு குழுவில் தொழிலாளர்கள் தரப்பிலே சொல்லப்பட்ட கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டனவா என்றால், இல்லை. அதிலே பேசப்பட்டதெல்லாம்,

> increasing the Festival Advance from Rs. 200 to Rs. 250, night-halt allowance paid for halts at out-stations, supply of footwear,

எந்தக் காரணத்திற்காக வேலை நிறுத்தம் என்று நோட்டீஸ் கொடுத்தார்களோ, அதைப்பற்றிப் பேசமாட்டோம் என்று சொல்லி, முன்னால் கூறிய ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும் பேச்சுவார்த்தை என்று சொல்லி வற்புறுத்தப்பட்டது. அந்த நேரத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தங்களுடைய கோரிக்கைகளைப்பற்றிப் பேசமாட்டோம் என்று அரசாங்கத்தரப்பில் சொன்னால், அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள மாட்டோம் என்று அறிவித்து விட்டு வந்துவிட்டார்கள். அதற்குப் பின்னாலேதான் அவர்கள் வேலை நிறுத்தம் என்று முடிவை எடுத்து அதை அரசாங்கத்திற்கு 14-ஆம் தேதியன்று தெரிவித்தார்கள். வேலை நிறுத்தம் செய்ய வாக்கெடுப்பு நடைபெறுகிறது என்ற செய்தி கிடைத்ததும், நம்முடைய போக்குவரத்துச் செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு உத்தரவு போகிறது. "17ஆம் தேதி நடைபெறுகிற கூட்டத்தில் நீங்கள் விரிவாக எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் விவாதிக்கலாம்" என்று உத்தரவு போகிறது. அப்படியொரு உத்தரவை இந்த அரசாங்கம் போட்டதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் சட்டமன்றப் பேரவையிலே பதில் சொல்லும்போது, 'ஜனவரி மாதத்தில்தான் தொழிலாளர்களுடைய கோரிக்கை அரசுக்குக் கிடைத்தது. எனவே நடவடிக்கை எடுக்க முடியவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-40)

எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் 20-12-77 முதல் 25-12-77-க்குள் ஐக்கியக் குழுவினால் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னாலே 25-8-77-ல் அந்தக் கோரிக்கைகளை அமைச்சரின் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை இங்கே படிக்கிறேன். "எல்லாப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் அடிப்படைச் சம்பள விகிதங்கள், பஞ்சப்படி இதர படிகள், லீவ் வசதி, பதவி உயர்வு, தினப்படி-பாட்டா, ஊக்க போனஸ், சர்வீஸ் கண்டிஷன்கள், இதர கோரிக்கைகளைப் பற்றி உடனடியாகப் பேச்சு வார்த்தை தொடங்க வேண்டும்" இது 25-8-77 அன்று அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. 20-12-77 லிருந்து 25-12-77 வரையில் கூடிய அந்தக் குழுவினுடைய கோரிக்கைகள்—33 அம்சக் கோரிக்கைகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு டிசம்பர் மாதமே அனுப்பப்பட்டிருக்கின்றன. டிசம்பர் மாதத்தில் அனுப்பியது ஜனவரியில் தான் தங்களுக்குக் கிடைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னால், அதை ஏற்றுக் கொள்கிறேன். ஜனவரியில் அந்தக் கோரிக்கைகள் அரசிற்கு வந்ததாக வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும், அதற்குப் பின்னால் தொழிலாளர்களை அழைத்துப் பேசி இதில்

[திரு, ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 21

சுமுகமான முடிவிற்கு வருவதில் ஏன் இந்தக் கால தாமதம் என்பது புரியவில்லை. இப்படி ஒரு பக்கத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களை அழைத்துப் பேசி சமாதானப் படுத்த வேண்டிய நம்முடைய அனுபவம் உள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று சொல்கிறவர்களை ஊக்கப் படுத்தும் வகையில், உற்சாகப் படுத்தும் முறையில் பேசியிருக்கிறார்கள், நேற்று ஒரு விழாவில் வேறு அமைச்சர் அப்படிப் பேசியிருந்தால் பரவாயில்லை. தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளர் மீது அக்கறை காட்ட வேண்டிய அமைச்சர், அவர்கள் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டிய அமைச்சர் அவர்கள் ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிற தொழிலாளர்கள் பற்றி இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பதுதான் வருத்தமாயிருக்கிறது. பல்லவன் பஸ் வேலை நிறுத்தம் நடந்தால், பஸ்களை ஓட்ட அரசு தயாராயிருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். இப்படிப் பேசியது நல்லதுதானா என்பதை சிந்திக்க வேண்டும்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் எந்த விழாவிலும் கலந்து கொள்ளவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். போக்குவரத்துத் தொழிலாளர் அமைத்துள்ள அண்ணா தொழிற் சங்கப் பேரவையில் நான் பங்கு கொண்டேன். கட்சியின் தொழிலாளர் பிரிவு செயலாளராக இன்னும் இருப்பதால், அதில் பங்கு கொள்ள வேண்டி வந்தது. நாங்கள் பேசியது எந்த இதழிலும் வர வாய்ப்பில்லை. அப்படி வந்திருந்தால், அது தவறு. வேறு எந்த விழாவும் நடைபெற வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அமைச்சர் இப்படிச் சொன்னதினால் அதைப் பற்றி என்னைவிட மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது. இப்படி ஒரு பத்திரிகையில் வந்ததால், அதைச் சொன்னேன். அதை கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்படிப் பல செய்திகள் வரும். வருகின்ற பத்திரிகைச் செய்திகளுக்கெல்லாம் மறுப்புச் சொல்லிக் கொண்டிருந்தால், அரசை நடத்த முடியாது. இப்போது தெளிவாகச் சொல்கிறேன். எந்த விழாவும் நடக்கவில்லை. விழாவுக்கும் போகவில்லை. போக்குவரத்துத் தொழிலாளர் பற்றியும் எங்கேயும் பேசவில்லை. அண்ணா தொழிற் சங்கப் போக்குவரத்துத் தொழிலாளர் பேரவைக் கூட்டம் நடந்தது. அதில் பேசினேன். அது பத்திரிகையில் வருவதற்கு நியாயமில்லை.

1978 மார்ச் 21]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த விழாவில் அப்படிப் பேசவில்லை என்று சொல்லி விட்டார்கள். பரவாயில்லை. ஆனால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொல்கிற அந்தத் தொழிலாளர்களை மாண்புமிகு அமைச்சர் அழைத்துப் பேச வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஏற்கெனவே 27-8-1977 முதல் பல்லவன் போக்குவரத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்றபொழுது அந்த வேலைநிறுத்த சமயத்தில் பொதுமக்களுக்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் சில பஸ்களை ஓட்டுவது என்று முடிவெடுத்தது. தனியார் பஸ்கள் வரவழைக்கப்பட்டன. அந்தப் பிரச்சினையில் உள்ளே போக நான் விரும்பவில்லை. அந்தப் பஸ்களை ஓட்டுவதற்கு யாரை நியமிப்பது என்ற பிரச்சினை வந்த போது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் மூலமாக ஆட்களை எடுத்து நியமிக்கலாம் என்று அரசாங்கம் உத்தரவு போடுகிறது. அதற்குப் பின்னால் அவசரம் அவசரமாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைச் சேர்த்தார்கள் என்றால், அவர்கள் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு அது தெரிந்த காரணத்தால் ஆதாரம் கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் மூலமாக இல்லாமல் அந்த நேரத்தில் ஆட்களை அவசரத்திற்காக நியமித்தார்கள். அதற்கிடையிலே பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து ஒரு லிஸ்ட் வந்தது. அந்த லிஸ்ட்படி அவர்கள் வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னால் அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. ஏற்கெனவே வேலை நிறுத்தம் நடைபெற்ற அந்தக் காலத்தில் யார் யார் வேலைக்கு வந்தார்களோ அவர்களையும் வேலைக்கு நியமித்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே ஒரு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு என்பதை வைத்துக் கொண்டு அவசர காலத்திலே உதவி செய்தார்கள், அதற்காக அவர்களுக்கு வேண்டுமானால் முன்னுரிமை கொடுப்பதை விட்டு அந்த எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு அனுப்பிய லிஸ்ட்டைப் பற்றிக் கவலைப்படாமல், அவசர காலத்தில் வந்தவர்களை நிரந்தரமாக்குவது எதிர் காலத்திற்கு உகந்ததா என்பதைச் சிந்திக்க வேண்டும். அதைப் போலவே போக்குவரத்தில் இன்னும் எவ்வளவோ பிரச்சினைகள். லாப நஷ்டங்கள் இருந்தால் கூட, குறிப்பிட்ட சிலவற்றை இப்போது சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னையில் அண்ணா நகர் இருக்கிறது. நீங்கள் அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள். அமைச்சர் அவர்களும் அண்ணா நகரில் இருக்கிறார். அமைச்சர் அவர்கள் ஒரு பத்து நிமிஷம் செலவிட்டு அந்த அண்ணா நகர் டெப்போவைப் போய்ப் பார்வையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 21

தமிழ் நாட்டில் எங்கெங்கே Condemned buses இருக்கின்றனவோ அத்தனையும் சேர்த்து அண்ணா நகர் டெப்போவில் வைத்திருக்கிறார்கள். மற்ற ரூட்டுக்களில் புது பஸ்கள் ஓடுகின்றன. எனக்கு ஏற்படுகிற சந்தேகம், எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர் அந்தத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால், அந்தப் பகுதிக்கு இந்த பஸ்களை ஒதுக்கியிருச்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அப்படி இல்லை என்று அமைச்சர் அவர்சள் தலையாட்டுகிறார்கள். அந்த நல்ல எண்ணத்திற்காக பாராட்டுகிறேன். அந்தப் பகுதியில் புதிய பஸ்களை விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு சில பஸ்களை வாங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். சில வழித்தடங்களுக்கு 278 பஸ்களும், பிறகு 863 பஸ்களும் வாங்கப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். பஸ்களை வாங்குவதிலோ புதுப்பிப்பதிலோ புது பஸ்கள் ஓடவேண்டுமென்பதிலோ கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பை அறிவித்திருக்கிறார்கள். அப்படி வாங்கப்பட்ட அல்லது வாங்கப் போகிற பஸ்களின் சேஸிஸ்ஸைக் கல்கத்தாவிலுள்ள டாடா கம்பெனியிலிருந்து வாங்கப் போகிறார்கள். 278 பஸ்கள் ஏற்கனவே வாங்கப்பட்டிருக்கின்றன. இந்த 278 பஸ்களுக்கான சேஸிஸ்களையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு சமயம் ஆட்சியிலிருந்து வாங்கியிருந்தால், என்னென்ன பேசுவார்கள்? தமிழ் நாட்டில் பெரிய அசோக் லேலண்ட் இருக்கிறது.. மிக உயர்ந்த ரக பஸ்களை தயாரிக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் பாராட்டுகிற அளவிற்கு தென் மாநிலங்கள் விரும்பி வாங்கக் கூடிய அளவிற்கு பெயர் பெற்ற அசோக் லேலண்ட் இருக்கும் போது, கல்கத்தாவிலிருந்து டாடா கம்பெனி உற்பத்தி செய்யும் பஸ்களை வாங்க வேண்டுமா ? ஊழலோ ஊழல் என்று பேசுவார்கள் திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கியிருந்தால். ஆனால் இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுவதால், இதை அவர்கள் வாங்கியதற்குக் காரணம் சொல்வார்கள். உலக வங்கி பணம் கொடுக்கிறது. அதனால் குறைந்த விலை வித்தியாசம் இருப்பதால், வாங்கினோம் என்று சொல்லலாம். நம்முடைய நாட்டிலே முதலமைச்சராக உள்ள புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் கடந்த ஆண்டு தொழில் மானியத்தில் விவாதம் நடந்தபோது, ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். இந்த நாட்டின் தொழில்களை உற்சாகப் படுத்துவதற்காக இந்த நாட்டிலே உற்பத்தியாகிற பொருள்களை, கொஞ்சம் அதிக விலையாக இருந்தாலும், இந்த மாநில சர்க்கார் உற்சாகப் படுத்தும், வரவேற்கும்; மாநிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களைத்தான் வாங்கும் என்று கடந்த ஆண்டு சொன்னார்கள். இந்த ஆண்டு தமிழகத்தில் உள்ள அசோக் லேலண்ட் உற்பத்தி செய்கிற சேஸிஸ் பற்றி டெக்னிகல் ஒப்பினியன் கேட்டால், இதைவிடச் சிறந்த சேஸிஸ் வேறு

1978 மார்ச் 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இல்லை என்பது பற்றிச் செயலாளர் மதிப்பிற்குரிய திரு. பாங்கோ அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட அசோக் லேலண்ட் சேஸிஸ் வாங்காமல், பென்ஸ் சேஸிஸ் வாங்குவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைத் தெளிவாக்க வேண்டியதில்லை. இதில் எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் போகிறது. அரசாங்கத்திற்கு அதிக நஷ்டம் அதனால் ஏற்படும், இந்த மாநிலத்திற்கு வர வேண்டிய சேல்ஸ் டாக்ஸ் மேற்கு வங்காளத்திற்குப் போகிறது. இந்த அரசு பாதிக்கப் படுகிறது. நம் நாட்டில் உற்பத்தியாகிற இந்த அசோக் லேலண்ட் சேஸிஸ் வாங்கப்படாமல், எதற்காக அங்கே போய் வாங்க வேண்டுமென்று கேட்கிற நேரத்தில்,—ஆட்சிக்கு புதியவர்களாக இருக்கலாம். உங்கள் மீது கெட்ட நோக்கத்தோடு இதைக் குறிப்பிடவில்லை. இனிமேலாவது இப்படி வாங்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

(முற்பகல் 11-50)

இந்த நாட்டில் உள்ளவர்களுக்குத் தொழில் கிடைக்க வேண்டும், இந்த நாட்டில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் இங்கே உள்ள அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும், என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இனிமேலாவது, இந்த நாட்டிலேயே உற்பத்தியாகிற 'அசோக் லேலண்ட் சேஸிஸ்'களை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒருநாள் திடீரென்று பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன், போக்குவரத்துத் துறையின் செயலாளராக இருந்த திரு. பசுபதி, ஐ.ஏ. எஸ்., அவர்கள் அந்தத் துறையிலிருந்து திடீரென்று மாற்றப் பட்டார். அவசர அவசரமாக அவருடைய அறைகள் பூட்டப்பட்டன. அவர் வேறு ஒரு துறைக்கு மாற்றப் பட்டார் என்ற செய்தியைப் பார்த்தபோது ஒன்றுமே புரியவில்லை. இதைக் கேட்டால், இது அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த விஷயம் என்று நீங்கள் சொல்லக்கூடும். அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்தைச் சேர்ந்த விஷயத்தைப் பற்றி, அரசு செய்யும் காரியங்களைப் பற்றி நான் கேட்கத் தயாராக இல்லை. ஆனால் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசும் போது, அந்த அதிகாரி அதிகமான அளவில் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைக்கக் காரணமாக இருந்தார் என்றோ; வேறு ஏதோ காரணத்திற்காகவோ மாற்றப் பட்டிருக்கிறார் என்றால், ஐ. ஏ. எஸ். படித்த ஒருவர் எதற்காக அவசர அவசரமாக அதுவும் 24 மணிநேரத்துக்குள்ளாக உத்தரவு போடப்பட்டு மாற்றப் படுகிறார், அவருக்கு பதிலாக வேறு ஒரு அதிகாரி உடனடியாக அங்கே கொண்டு வந்து வைக்கப் படுகிறார் என்பது புரியவில்லை. இதைச் சொல்லும் போது, அப்படிப்பட்ட அதிகாரிகள்

தவறு செய்திருந்தால், அவர்களுக்குச் சிபாரிசு செய்ய நாங்கள் வரவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். எங்கே தவறுகள் நடந்தாலும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிற அரசாங்கம் உங்கள் அரசாங்கம். எனவே அவர் என்ன தவறு செய்தார் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், நாட்டுடமைக் கொள்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் அதிகமாகப் பேசப்பட்டு அமுலாக்கப்பட்டது. முதற்கட்டமாக 75 மைல்களுக்கு மேல் இருக்கிற எல்லா வழித் தடங்களிலும் அரசுப் போக்குவரத்து அல்லது இப்படிப்பட்ட அரசின் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக பஸ்களை விடுவது என்பது முன்னால் இருந்த அரசாங்கத்தின் கொள்கை. இப்போது நீங்கள் அதைச் செய்யவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். சொன்னால் உடனே அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். 48 சதவீதமாக இருந்தது 52 சதவீதமாக பொதுத் துறையில் பேருந்துகளின் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறுவார்கள். புள்ளி விவரங்களைப் பார்க்கவில்லையா என்று கூடக் கேட்பார்கள். புள்ளி விவரங்களை நானும் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தபோது, படிப்படியாக, ஒவ்வொரு மாவட்டத்தில் தேசியமயமாக்குவது என்று ஒரு கொள்கையை அறிவித்து, அதனையொட்டி சில தனிப்பட்ட முதலாளிகள் அந்தக் கொள்கையை எதிர்த்து உயர் நீதி மன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்து, அந்த வழக்கின் மீது உயர்நீதி மன்றம் ஒரு முடிவை வெளியிட்டு அதற்குப் பிறகு அவர்கள் உச்ச நீதி மன்றத்திற்கும் சென்றார்கள். இப்போது இந்த அரசாங்கம் தேசியமயமாக்கும் கொள்கையில் கொஞ்சம் காலதாமதம் செய்ய அல்லது தயக்கம் காட்ட காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில், தனியார் பஸ் முதலாளிகள் தங்கள் பஸ்களை தேசியமயமாக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக பல பேர்களை நாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாடுகிறவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வருகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலியாகாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் நாட்டுடமைக் கொள்கை இந்த நாட்டுக்கு உருப்படாது என்று பேசியவர்கள் உண்டு. ஆனால் இன்றைக்கு புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, மகிழ்ச்சி அளிக்கின்ற வகையிலே நாட்டுடமை ஆக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் மகிழ்ச்சியளிக்கக் கூடிய வகையில் லாபத்தில் நடைபெறுகின்றன என்பதைப் பார்க்கிறோம். சில போக்குவரத்துக் கழகங்கள் மட்டும்தான் நட்டத்தில் நடக்கின்றன. இவற்றில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று

கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு தனிக் கவனம் செலுத்தினால் அவைகள் கூட லாபத்தில் நடக்கும். சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பல லட்சம் ரூபாய் லாபம் வருகிற போது ஏன் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே லாபம் வரக் கூடாது? மற்ற போக்கு வரத்துக் கழகங்களில் ஏன் லாபம் வரக் கூடாது என்று இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். திறமையானவர்கள், விவரம் தெரிந்தவர்கள் இந்தத் துறையிலே அக்கறை உள்ளவர்கள், இந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று அக்கறையுள்ளவர்கள் ஆகியவர்களைத் தெரிந்தெடுத்து, இந்தப் போக்கு வரத்துக் கழகங்களுக்கு அதிகாரிகளாகப் போட்டால், நிச்சயமாக இவைகள் லாபத்தில் நடக்கும். இந்த வகையில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது, அப்போதிருந்த அதிகாரிகள் ஒரு கொள்கையை அறிவித்தார்கள். அதாவது தனியார் எத்தனை பஸ்களை வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றியது அது. ஒரு தனிப்பட்ட முதலாளி 3 பஸ்களுக்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு கொள்கையை அறிவித்தார்கள். அது நடைமுறைக்கு வரப்போகிறதா? 3 பஸ்களைத்தான் ஒரு தனிப்பட்ட முதலாளி வைத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் முடிவெடுத்து விட்டதா? அப்படியானால் எப்போதிருந்து அது அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதிகளை மனதில் கொண்டு சிறு நகரங்களை இணைக்கக் கூடிய பஸ் வழித் தடங்களை இந்த அரசாங்கம் அறிவித்து அதை நடை முறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. மகிழ்ச்சிகரமான கொள்கைதான். எல்லா கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதிகள் கிடைக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கொண்டவன் அல்ல நான். வட ஆற்காடு மாவட்டத்தில் 11 வழித் தடங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன. இது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் வந்திருக்கும். 100-க்கும் மேற்பட்டவர்கள் அந்த வழித் தடங்களில் பஸ்களை ஓட்ட விண்ணப்பம் போட்டிருந்தார்கள். இதை நான் ஒரு குற்றச் சாட்டாகச் சொல்லவில்லை. தனிப்பட்ட கட்சியில் இருப்பவர்கள் சில வழித் தடங்களைப் பெற்று விடுவதாலேயே அய்யோ ஊழலோ ஊழல் என்று சொல்லிவிட மாட்டேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அப்படி ஏதாவது நடந்துவிட்டால், 'பார்த்தீர்களா பார்த்தீர்களா ஊழலோ ஊழல்' என்று பேசினார்கள், இப்போது 11 வழித் தடங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டன. அதில் 9 வழித்தடங்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையை அசைத்து இல்லை என்பார்களானால், ஆதாரங்களோடு சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வட ஆற்காடு மாவட்டத்தில் கிராமப்புற சாலைகளில் ஓட்டுவதற்காக மினி பஸ்கள் விடும் திட்டம் அறிவிக்கப் பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உரிமம் வழங்கியிருக்கிறார்கள். அதில் எந்தெந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது என்பதை இங்கே ஆதாரத்தோடு கூற வேண்டும். அப்படி ஆதாரத்தோடு கூறவில்லை என்றால், அவருடைய குற்றச் சாட்டு குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களின் சகோதரர் ஒருவருக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். 11 பேரும் அண்ணா தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; ஒன்பது பேர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒரு பெயரைமட்டும் வேண்டுமானால் இப்போது தெரிவிக்கிறேன். மற்ற எட்டு பெயர்கள் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; அந்த ஒன்றும் ஒரு வேளை உண்மையாகவே இருக்குமானால், அதுவும் தகுதியின் அடிப்படையில்கூட கொடுக்கப் பட்டிருக்கலாம். அதை முறைகேடாகக் கொடுக்கப்பட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்? மற்ற எட்டு பேர்களுடைய பெயர் விவரங்களையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அதைத்தான் நானும் சொல்லுகிறேன். முறைகேடாகச் செய்யப்பட்டது என்று நான் சொல்லவில்லை. காரணம் நீதி மன்றம் வரை போனால்கூட கொடுக்கப்பட்டபிறகு காரணத்தைச் சொல்லுவார்கள். நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், எங்கள் கட்சி ஆட்சி நடைபெற்றபோது, நிருவாகத்தில் தலையீடு என்று கோஷம் போட்டார்கள். இப்போது எப்படி நடக்கிறது என்பதற்காகத் தான் நான் குறிப்பிட்டேன். எட்டு பேரைப் பற்றி நான் வற்புறுத்தவில்லை. என்னிடத்தில் அவர்கள் பெயர் பட்டியல் இல்லை. இந்த ஒன்றைப் பொறுத்த வரையில், நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன். தகுதி அடிப்படையில் கொடுக்கப்பட்டதா என்று விசாரியுங்கள். என்ன தகுதி?

தகுதி படைத்தவர்கள், டிரைவர்களாகப் பணியாற்றக் கூடியவர்கள், இவர்கள் விதிக்கிற மார்க்கு பெற்றவர்கள் எல்லாம் போட்டார்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை,

அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் ஒன்றைச் சொல்லலாம், இப்போது கொடுக்கப் பட்டிருப்பது ரெகுலர் பெர்மிட் அல்ல. டெம்பரரி பெர்மிட்தான் கொடுத்திருக்கிறோம் என்று. இப்போது கொடுக்கப்பட்டிருப்பது டெம்பரரி பெர்மிட் என்று சொல்லப்பட்டிருக்கிறது. டெம்பரரி பெர்மிட் கொடுக்கிற நேரத்தில் உங்கள் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிற நிலை இருந்தாலும், நிரந்தரமாகக் கொடுக்கும்போது சரியாகப் பார்த்துக் கொடுங்கள். அரசியல் கட்சியைச் சார்ந்த ஏதோ ஒரு சிலர் பெர்மிட் வாங்கி விடுவதாலேயே பெரிய ஊழல் என்று வாதிடக்கூடிய கட்சியைச் சார்ந்தவன் அல்ல நான். எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், எங்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது, இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இதைத் தான் உங்கள் ஆட்சிக் காலத்திலும் செய்கிறீர்கள். இது தவிர்க்க முடியாதது என்பதைத்தான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் நிருவாகத்தில் தலையீடு இல்லை என்கிறார்கள். நேஷனல் பெர்மிட் என்று லாரிகளுக்கு வழங்கப்படுகிறது. அந்தப் பெர்மிட் வழங்குவதற்குச் சில தகுதிகள் வைக்கப்பட்டுள்ளன. சில விதிமுறைகளின் கீழ் அந்தப் பெர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. நேஷனல் பெர்மிட், இன்டர் ஸ்டேட் பெர்மிட், செவன் ஸ்டேட் பெர்மிட் என்று வழங்கப்படுகிற உரிமங்கள்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், அப்படிப்பட்ட உரிமங்களைப் பெற்றவர்கள் எந்தக் காரணத்தாலோ அவைகளை நடத்த முடியவில்லை என்கிற நிலை ஏற்படும்போது, அந்த உரிமங்களை அரசாங்கத்திற்கே திருப்பி அளித்திட வேண்டும்—சரண்டர் செய்திடவேண்டும்—என்று சொல்லப்பட்டிருக்கிறது,

(நண்பகல் 12-00)

அரசாங்கமாகப் பார்த்துதான் யாருக்காவது, X, Y, Z. என்று யாருக்காவது கொடுக்கலாமே தவிர, மாற்றுவது என்பது இந்த அகில இந்திய அடிப்படையிலே இல்லை. இந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எந்த மாநிலத்திலும் அப்படி வழங்கப்படுவதில்லை. தமிழகத்திலே மட்டும் புரட்சிகரமானதாக நடந்திருக்கிறது. ஒரு சம்பவம் சொல்ல விரும்புகிறேன். சிலோன் அகதி ஒருவர், திரு. பெருமாள் என்பவர், நாமக்கல் பகுதியைச் சேர்ந்தவர் இருக்கிறார். அவர் $1\frac{1}{2}$ ஆண்டுக்கு முன்னாலே இந்த நாட்டிற்கு வந்து ஒரு பெர்மிட் வாங்கியிருக்கிறார். இன்று அந்த பெர்மிட்டை மாற்றிவிட்டார்கள். யாருக்கு மாற்றிவிட்டார்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 21

கள்? ட்ரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு அந்த நேஷனல் பெர்மிட் மாற்றப்பட்டிருக்கிறது. இது முறைதானா? எந்த மாநிலத்திலாவது இது நடந்திருக்கிறதா? நம் மாநிலத்திலேதான் இது நடந்திருக்கிறது. நம் மாநிலத்திலே மட்டும் ஏன் இது நடக்க வேண்டும்? இது அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படாமல் நடந்து விட்டதா? அப்படியானால், இனியாவது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பல பெர்மிட்டுகளை வழங்குவதற்கு விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. செவன் ஸ்டேட் பெர்மிட் 250 வழங்கப்படும், ஆல் இந்தியா டூரிஸ்ட் பஸ்களுக்கு 75 பெர்மிட்டுகள் வழங்கப்படும், டூரிஸ்ட் டாக்ஸிகளுக்கும் வழங்கப்படும் என்று 31-1-78-ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் அதற்காகப் போட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இதுவரைக்கும் 1-4-78 முதல் பெர்மிட் வழங்கப்பட்டு, அந்த பர்மிட் பெற்றவர்கள் போக்குவரத்திலே ஈடுபட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை என்று நினைக்கிறேன். ஆனால் மார்ச் 22ஆம் தேதியிலே நாம் இன்று இருந்துகொண்டிருக்கிறோம். இதுவரையில் அதைப்பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா என்றால், இல்லை என்றுதான் நான் சொல்கிறேன். ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன. விண்ணப்பம் போட்டவர்கள் எல்லாம் சுற்றிக்கொண்டிருக்கின்றார்கள், அதிலே சில பேருக்காவது கொடுக்க வேண்டும். யாருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதுபற்றிக் கவலையில்லை. அவசர அவசரமாக விண்ணப்பங்கள் வரவழைத்தீர்கள். அந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து பெர்மிட் வழங்குவதிலே ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என்றுதான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசாங்கம் கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்று நடத்திக்கொண்டிருக்கிறது. அதனுடைய நோக்கமே இந்த மாநிலத்தில் போக்குவரத்துத் துறையின் மூலம் சரக்குகளை விநியோகிப்பது என்றுதான் இருக்கிறது. இந்த சர்வீஸை செய்வதிலேகூட அரசாங்கம் என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது? 1973ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட இந்தப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தான் சரக்குகளை விநியோகிக்க வேண்டும் என்று கொண்டு வந்தது. அதிலே எக்ஸ்சர்வீஸ்மென்களை வைத்து இந்தப் போக்குவரத்துக் கழகத்தை நடத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயும் உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட நேரத்தில் அரசாங்கம் ஒரு உத்தரவைப் போட்டது.

1978 மார்ச் 21] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

"Tamil Nadu Goods Transport Corporation—Utilisation of services by the various Departments of the Government for movement of goods—Instructions issued" என்று தலைப்பிட்டு,

G.O. Ms. No. 712, dated 16th December 1975–ல்4–வது பாராவில்

"All the Departments of the Secretariat are requested to issue suitable instructions immediately to the production units under their administrative control, either non-departmentally or under the State-owned undertakings, to first prefer the services of the Tamil Nadu Goods Transport Corporation for the movement of their goods if the rates are same or lower than the open-market rates" என்று தெளிவாகச் சொல்லப்பட்டுருக்கிறது. தெளிவாக 1975 ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பிக்கின்றது. அந்த ஆணையினுடைய அடிப்படையில் Director of Handlooms and Textiles அவர்கள் Managing Director/Special Officers of the Co-operative Spinning Mills-க்கு 19-1-78—ல் ஒரு கடிதம் எழுதுகிறார். கடிதத்தின் எண் 307/78-M2. அதில் "Now, all the Co-operative Spinning Mills are transporting their goods through the private transport agencies. As the Tamil Nadu Goods Transport Corporation (Government of Tamil Nadu undertaking) has commenced parcel service operations with effect from 19th August 1977, covering all the district headquarters, taluk headquarters and important commercial centres in Tamil Nadu and the freight rates charged by them are comparatively cheaper than those charged by the private agencies. all the Managing Directors/Special Officers of the Co-operative Spinning Mills are advised to transport their goods only through the Tamil Nadu Goods Transport Corporation, No. 10, Sterling Road, Madras-34, with immediate effect." என்று சொல்லப்படுகிறது.

இப்படி ஒரு உத்தரவு வருகின்றது. இப்படிப்பட்ட உத்தரவுகளை அரசில் போடுகிறார்கள். நான் கேட்கிறேன். எங்காவது இந்த உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மதிக்கின்றார்களா? அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? இப்படி ஒரு கார்ப்ப ரேஷன், இதன் மூலம் குறைந்தபட்சம் நமது இலாக்காக்களில் அவரவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை அனுப்பவேண்டும் என்பதற்காகதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களுக்கும், தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ்க்கும் அனுப்பவேண்டும் என்று இருக்கிறது. அப்படி ஒரு உத்தரவு போட்ட பிறகும்

அதை அதிகாரிகள் மதிப்பதில்லை. இன்னும் தனியார் லாரிகளின் மூலமாகத்தான் பொருள்களை அனுப்புகின்ற நிலைமைகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது விஷயத்தில் தீவிரமாக இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதிகாரிகள் இதை ஏன் நடைமுறைப்படுத்துவதில்லை என்று அரசு கேட்க வேண்டும், ஒரு அவசர உத்தரவு உடனடியாகப் போட வேண்டும். இன்று முதல் இந்தப் பொருள்களையெல்லாம் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகத்தான் அனுப்ப வேண்டும். அனுப்பவில்லை என்றால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு உத்தரவைப் போடுவார்களானால், அதை நடைமுறைப்படுத்துவதற்கும், அதைப் பின்பற்றுவதற்கும் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்வார்கள். இதை அரசு கவனித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் போக்குவரத்துத் துறையினைப்பற்றி மட்டும் சொல்கின்ற நேரத்தில், நெடுஞ்சாலைத் துறையைப்பற்றியும் ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தப் புயல் வெள்ளம் ஏற்பட்ட பிறகு, இந்த நாட்டிலே பல இடங்களிலே சேதங்கள் ஏற்பட்டன. அந்தச் சேதங்களையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதற்காக நிதி ஆதாரங்களை மத்திய அரசிடம் கேட்டோம். கேட்ட அளவுக்கு நிதி உதவி கிடைக்கவில்லை. எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். கிடைத்ததையாவது உரிய முறையில் செலவு செய்கின்றோமா என்று பார்த்தால், அதுவும் இல்லை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு சொல்வது அல்ல என் கருத்து, எந்த அரசாங்கம் வந்தாலும், எதிர்க்கட்சி என்ற முறையில் அப்படித்தான் சொல்வார்கள் என்ற அளவில் நான் சொல்வதாகக் கருத வேண்டாம். யாருக்கு வேலை கொடுக்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. எப்படியாவது வேலை நடந்தால் சரி. எங்கு சேதங்கள் புயலால், வெள்ளத்தால் ஏற்பட்டனவோ, அந்த இடங்களில்தான் பணத்தைச் செலவழிக்க வேண்டும். ஆனால் சம்பந்தம் இல்லாத இடங்களில் எல்லாம் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனே எங்கே அப்படிச் செலவழிக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள பொதுப் பணித்துறை நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை 1977-78ஆம் ஆண்டுக்கான ஆய்வுரை

யில் 27ஆம் பக்கத்திலே கொடுத்திருக்கிறார்கள். ''அண்மையில் (1977 நவம்பரில்) ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகள், கட்டுமானங்கள் ஆகியவற்றின் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு போதுமான தனி பணியாளர்களுடன், தலைமைப் பொறியாளர் தனிப் பதவி ஒன்றினை அரசு ஏற்படுத்தியுள்ளது'' என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்த பக்கத்தில் சாலை வேலைப் பட்டியல் (புது அமைப்பு) என்று கொடுத்திருக்கிறார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சில வேலைகளை அதிகாரிகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமலே செய்வார்கள். அந்த அளவுக்குச் சில அதிகாரிகள் செல்வாக்கு பெற்றவர்கள். அவர்கள் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய முடியும். நான் இங்கு அந்த விவரங்களை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் இந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்பதுதான். தென் ஆற்காடு மாவட்டம், வரிசை எண் 3-ல், குறிஞ்சிப்பாடி ஒன்றியம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சம்மிட்டிக்குப்பம் காட்டுச்சாகை கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் என்றும், அதற்கு 4 லட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இதைப்பற்றி அங்கே சென்று விசாரித்தேன். அங்கே ஏதாவது புயல் வீசியதா அல்லது வெள்ளம் வந்ததா என்று கேட்டேன். அங்கே அப்படி எதுவுமே இல்லை, புயல் வீசவும் இல்லை, வெள்ளச் சேதமும் ஏற்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசு கொடுத்துள்ள பணத்தை பாதிக்கப்பட்ட இடங்களில் செலவழியுங்கள். இப்படி பாதிக்கப்படாத இடங்களில் அந்தப் பணத்தைச் செலவழிப்பார்கள் என்றால், பாதிக்கப்பட்ட இடங்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையிலேதான் கேட்கிறேன். குறைகளை மட்டும் எடுத்துச் சொல்வதற்காக அல்ல, அவைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதற்காகத் தான் நான் சொல்கிறேன். நான் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து, இன்னும் இந்த இலாக்காக்கள் செம்மையாக இயங்கச் செய்ய வேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-10)

திரு என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு மாற்றுத் தலைரவர்களே, அமைச்சரவர்கள், போக்குவரத்துத் துறை சம்பந்தமாக ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதன்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக

பல வருஷங்களாக நாட்டிலே நடந்துகொண்டிருந்த பஸ் போக்குவரத்திலே 1976-77-லே ரூ 46.53 லட்ச லாபமும் வரக்கூடிய ஆண்டில் ரூ. 279.88 லட்சமும் லாபம் வரலாமென்ற மதிப்பீட்டையும் அறிக்கையிலே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். பொதுவாக போக்குவரத்துத் துறை என்பது அதிகமான லாபமுள்ள துறையாக இருந்தாலும், இதுவரை நம்முடைய மாநிலத்திலே அதிகமான லாபத்தை ஈட்டாத துறையாகத்தான் அது இருந்தது; அந்த நிலைமை மாற்றப்பட்டு, இப்போது லாபம் தரக்கூடிய துறையாக மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதன் காரணமாக தமிழ் நாடு அரசாங்கம் போக்குவரத்துத் துறையின் மூலமாகக் கணிசமான லாபத்தைப் பெறும் வாய்ப்பு பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கிய திறமையான போக்குவரத்து அமைச்சரவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில கார்ப்பரேஷன்களில் பஸ்கள் லாபகரமாக ஓடவில்லை என்பதை இங்கே காண்கிறோம், எந்தக் காரணத்தால் அந்தக் கார்ப்பரேஷன்கள் லாபகரமாக இயங்கவில்லை என்பதை அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோழன் பஸ் போக்குவரத்தைப் பொறுத்தவரையிலும், இந்த ஆண்டு லாபம் வரக்கூடிய நிலை இருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அங்கே லாபம் இல்லாததற்குக் காரணம் நல்ல பஸ்கள் ஓடவில்லை; ரோடுகள் நல்ல விதமாக அமையவில்லை என்பதுதான். அங்கே தனியார் கம்பெனி பஸ்கள், சொகுசான பஸ்கள் ஓடுகின்றன. சோழன் போக்குவரத்து பஸ்கள் மோசமான நிலையில் இருப்பதால், அந்தக் கழகத்தில் நல்ல லாபம் காண முடியாத நிலைமை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதிகமான பஸ்கள் ஓடுகின்றன. போக்குவரத்துப் பயணிகளும் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தனியார் பஸ்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஓடும் பஸ்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன, இந்த ஆண்டு ஓரளவுக்கு லாபம் வரக்கூடிய நிலை இருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷன் நஷ்டத்தில் இயங்குவதற்கு பஸ்களின் நிலைமைதான் காரணம் என்பதைக் கூறி, அந்த பஸ்களின் தரத்தை உயர்த்தினால், அந்தக் கார்ப்பரேஷன் நல்ல லாபம் பெறுமென்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மூன்று போக்குவரத்துக் கார்ப்பரேஷன்கள் லாபத்திலும், மூன்று போக்குவரத்துக் கார்ப்பரேஷன்கள் நஷ்டத்திலும் இயங்குவதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நஷ்டத்திலே இயங்குகின்ற கார்ப்பரேஷன்கள் குறித்து சற்று கவனமாக இருக்கவேண்டும். பஸ் போக்குவரத்துத் துறையை ஒரு லாபகரமான துறையாக்கவேண்டும். ஊக்கத்தோடு அந்தக் கார்ப்பரேஷன்களைப் பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். அந்த கார்ப்பரேஷன்களையும் லாபகரமானதாகச் செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மோசமான நிலையில் இருக்கக்கூடிய மூன்று கார்ப்பரேஷன்களும் முதன்மையான இடத்திற்கு வரும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 2136 பஸ்கள் ஓடுகின்றன. அந்தக் கார்ப்பரேஷனிடம் நல்ல பஸ்கள், லாபகரமாக ஓடக்கூடிய பஸ் தடங்கள் இருக்கின்றன. 256 விரைவு வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. நகர்புறத்தில் 1469 பஸ்கள் ஓடுகின்றன. மாவட்ட அளவில் 411 வண்டிகள் ஓடுகின்றன. தடங்கள் முன்னேற்றகரமானவையாக இருந்தாலும், என்ன காரணத்தாலோ பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு நிர்வாகக் கோளாறு காரணமா? அல்லது போக்குவரத்துத் துறையில் உள்ளவர்கள் ஊக்கம் இல்லாதவர்களா? இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். மற்ற கார்ப்பரேஷன்களைவிட அதிகமான வண்டிகளை உடைய பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷன் நல்ல லாபகரமான வகையில் இயங்குவதற்கான வழிகளைக் காண வேண்டும். எப்போதும் தாங்க முடியாத கூட்டம் இங்கே இருக்கிறது, பஸ்கள் ஃபுல்லாக ஓடுகின்றன. அதிகமான கூட்டம் இருப்பதால். ஒரு பக்கம் சாய்ந்து கொண்டே போகிறது. அப்படி இருந்தும் நஷ்டம் ஏற்படுகிறதென்பதைப் பார்க்கும்போது, அந்தத் துறையில் ஏதோ குறைபாடு இருக்கிறதென்று தோன்றுகிறது. அதைப் போக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களைப் பொறுத்தவரையில், நல்ல சொகுசான முறையில் வண்டிகளை விட ஆயத்தங்களை மேற்கொண்டிருக்கிறது. அதற்கு முன்னோடியாக சில நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. அது பாராட்டக்கூடிய அம்சமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறையைப் பார்க்கும்போது, தனியாரிடம் நல்ல பஸ்கள், சொகுசான பஸ்கள் இருக்கின்றன. அரசாங்க பஸ்கள் நல்ல முறையில் இல்லை என்ற குறைபாடு எல்லா உறுப்பினர்களும் இந்த மன்றத்தில் தெரிவித்த ஒன்று. இப்போது நல்ல நல்ல பஸ்களை விடுவதற்கு ஆயத்தமாக நீண்டதூர வழித் தடங்களில் குளிர்சாதன வசதிகளைக் கொண்ட பஸ்களை விடப் போகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதைப்போல எல்லா பஸ்களும் நல்லவிதமாக இருக்க வேண்டும், சொகுசாக இருக்க வேண்டும். அரசாங்கம் லாபகரமான தடங்களைத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். நஷ்டமான தடங்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஒன்றிரண்டு இடங்களில் சிலரது கோரிக்கைகளுக்காக, வேண்டுகோளுக்காக அப்படிப்பட்ட தடங்களை எடுத்து நடத்துகிறார்கள். லாபகரமான தடங்களையும், நீண்ட தூரத் தடங்களையும் எடுத்து நடத்துகிறார்கள். எனவே அந்தத் தடங்களில் சொகுசான பஸ்களை விட வேண்டும்.

[திரு. என். சுந்தரேசத்தேவர்] [1978 மார்ச் 21

குறிப்பாக கார்ப்பரேஷன்களில் உள்ள பஸ்களை 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்றில்லாமல், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ, ஓராண்டுக்கு ஒரு முறையோ மாற்றம் செய்தால் நல்லது. ஒரு ஆண்டுக்கு ஒரு முறை மாற்ற முடியாது. எனவே இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டுவதில்லை என்று முடிவெடுத்து, அவற்றை விற்று விடலாம். அப்படி விற்று விட்டு புதிய வண்டிகளை அந்தத் தடங்களில் விட வேண்டும். பழைய வண்டிகளை விடுவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வண்டிகளை தன்னுடைய வாரியங்களில் வைத்துக் கொள்வதில்லை என்று அரசு முடிவெடுத்து அந்த வண்டிகளையே மேலும் ஓட்டினால், நஷ்டம் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பழைய பஸ்களை வைத்து நடத்தினால், நஷ்டம்தான் ஏற்படும். புதிய பஸ்களை வைத்து நடத்தினால், லாபம் ஏற்படும். அதனால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வண்டியை மாற்றவேண்டும், போக்குவரத்தின் மூலம் வரும் லாபத்தைப்பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். மத்திய அரசுக்கு ரயில்வே துறை லாபகரமான துறையாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திற்குக் கப்பல் போக்குவரத்துத் துறை, பஸ் போக்குவரத்துத் துறை, லாரி போக்கு வரத்துத் துறை மூலம் கிடைக்கும் லாபங்களையெல்லாம் அரசாங்கம் தன்னுடைய பணிகளுக்குச் செலவு செய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டும். லாபம் வருகிறது என்பதாலேயே செலவு செய்யலாம் என்று திட்டம் போடக்கூடாது. முறையாக அந்த லாபத்தைச் செலவு செய்ய அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். எல்லோரும் தேசீய மயம் என்று பேசுகிறோம். எதற்காகப் பேசுகிறோம்? நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் வளர தேசீய மயம் ஆக்க வேண்டுமென்று கேட்கிறோம். யாரோ சிலர் லாபம் அடைய வேண்டுமென்று நாட்டு மக்கள் விரும்பவில்லை. தேசீய மயமாக்கிய தொழில் மூலமாகக் கிடைக்கும் லாபத்தைச் சரியான முறையில் கணக்கிட்டு அதை நல்ல முறையில் செலவழிக்கும் வாய்ப்பை அரசு ஏற்படுத்த வேண்டும். கண்காணிப்போடு எப்படி தொழிலில் ஈடுபடுகிறார்களோ அப்படி லாபத்தைக் கண்காணிப்போடு செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு என்னென்ன கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டும். பணி செய்கிறவர்களுக்கு வீட்டு வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு இத்தனை சதவிகிதம் என்று நிர்ணயித்து, செலவு செய்ய வேண்டும். அதற்குப் பிறகு கிடைக்கும் லாபத்தை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கி, நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 21] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் கடமையை வலியுறுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களின் நலன்களைப் பேண வேண்டியது நம்முடைய கடமை. அவர்களுடைய கோரிக்கைகளைத் தீர்ப்பது நம்முடைய கடமை. அவர்களுக்கு எல்லாச் சுதந்திரமும் கொடுத்திருக்கிறோம். அவர்களுடைய குறைபாடுகளைக் கேட்டறிந்து தீர்க்க வேண்டும். அதற்காக தொழிலாளர்கள் யூனியன் வைத்திருக்கிறோம். அதைப்போல அவர்கள் கடமையையும் வலியுறுத்த வேண்டும் அவர்கள் அடிக்கடி ஸ்டிரைக்கில் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் அரசாங்கத்தின் சார்பாகவோ, தொழிலாளர்களின் சார்பாகவோ பேசவில்லை. பொது மக்கள் சார்பில் பேசுகிறேன். தொழிலாளர்களே கோரிக்கைகள் வைத்து ஸ்டிரைக் செய்தாலும், அல்லது அரசாங்கம் அவர்கள் பிரச்சினையில் அசிரத்தை காட்டி அதனால் அவர்கள் ஸ்டிரைக் செய்தாலும், அதனால் பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலைமை ஏற்படாத வண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் என். ஜி. ஓ. வினர் ஸ்டிரைக் நடைபெற்றது. அரசாங்க அலுவல்களைக் கவனிக்க முடியாத வண்ணம் ஸ்டிரைக் நடைபெற்றது. கஜானக்கள் மூடப்பட்டிருந்தன. பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளானார்கள். இருந்தபோதிலும் அரசாங்கம் அந்தப் பிரச்சினையை நல்ல முறையில் சமாளித்ததற்காக பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்.

(பிற்பகல் 12-20)

ஸ்டிரைக்கின் நிலைமை என்னவென்றால், ரூ. 10, ரூ. 15 சம்பள உயர்வுக்காக ஏற்படுத்தப்பட்ட மாபெரும் ஸ்டிரைக் இந்த நாட்டு வரலாற்றில் மக்களுக்கு எவ்வளவோ கஷ்டங்களைக் கொடுத்துவிட்டது. இப்படி அற்பசொற்பமான காரியங்களைப் பார்க்கும்போது, அந்த நிலைகளை அரசாங்கம் கவனித்து, செய்யக்கூடிய காலத்தில் காரியங்களைச் செய்து, செய்ய முடியவில்லை என்றால், ஸ்டிரைக் ஏற்படாமல் இருக்க ஸ்திரமான நடவடிக்கைகளைத் தயங்காமல் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையில் அடிக்கடி ஸ்டிரைக் ஏற்படுவதாக பயமுறுத்தல்கள் இருக்கின்றன. போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து, அவர்களுடைய கோரிக்கைகள் அனுவசியமானவை என்று தெரிந்தால், வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து, ஸ்டிரைக் இல்லாமல் போக்குவரத்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்தில் பயணிகளிடத்தில் கண்டக்டர்,

டிரைவர் போன்றவர்கள் மிகவும் அன்போடும் மரியாதையோடும் நடந்துகொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்க வேண்டும். அதற்கான காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும். போக்குவரத்துத் துறையில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை பயணிகளின் சௌகரியங்களுக்காக உபயோகிக்க வேண்டும். சென்னையில் பயணிகள் நிற்பதற்கு ஓரங்களில் பஸ் ஸ்டாப்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வெய்யில், மழை நேரங்களில் நிற்பதற்காகக் கட்டப்பட்டிருக்கின்றன. கிராமப் புறங்களில் மூன்று, நான்கு மைல்கள் நடந்து வந்து மரத்தடியில் ஒண்டுகிறார்கள். மழை, காற்று வருகிறது. தங்குவதற்கு இடமில்லை மக்கள் அவதிப்படுகிறார்கள். இதைப் போக்குவதற்கு போக்குவரத்துக் கழகம் ஈட்டக்கூடிய லாபத்தில் ஒரு பகுதியை, அந்த வட்டாரத்தில் ஊராட்சி மன்றங்களுக்கு பயணிகள் தங்குவதற்கு கட்டிடம் கட்டுவதற்குக் கொடுக்கலாம். 50% மானியம் தருகிறோம் என்று அரசு கூறி, அரசாங்க பஸ் போக்குவரத்துத் தடங்களில் ஒவ்வொரு ஊரிலும் தங்கும் வசதி செய்து கொடுத்தால், பயணிகள் அவதிப்படுகிற நிலைமையைத் தவிர்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட இடங்களில் இரவு நேரங்களில் பஸ்களிலிருந்து இறங்குகிறார்கள். அங்கே விளக்கு இருப்பதில்லை. இந்த நிலையைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

ரோடுகளைப் பொறுத்தவரையில், ஒரு பெரிய மாறுதலைச் செய்திருக்கிறார்கள். பி. டபிள்யு. டி-க்குத் தனியாகவும், ஹைவேஸ்க்குத் தனியாகவும், இரண்டிற்கும் இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையை 'ஹைவேஸ்' இடம் ஒப்படைத்திருப்பது பாராட்டுக்குரிய விஷயமாகும். பஸ்ஸில் ஏற்படுகிற நஷ்டத்திற்கு மூலகாரணம் ரோடுதான். அவ்வளவு மோசமான நிலையில் ரோடுகள் இருக்கின்றன. அரசாங்கம் ரோடு மேம்பாட்டிற்கு ஒதுக்கியிருக்கிற தொகை போதாது. அதை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வரக்கூடிய லாபத்தில் ரோடு மேம்பாட்டிற்காக, அரசாங்கம் கார்ப்பரேஷன்களுக்குக் கணிசமான தொகைகளை ஒதுக்குவது நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

டாக்சியில் உள்ள குறைகளைப்பற்றிக் கூறினார்கள். குறிப்பாக நான் ஒரு சில வார்த்தைகளில் என் அபிப்பிராயத்தைக் கூற ஆசைப்படுகிறேன். சென்னையில் ஓடக்கூடிய டாக்சிகளால் பலவிதமான கஷ்டங்கள் பயணிகளுக்கு ஏற்படுகின்றன. மீட்டர் இல்லாமல் காசு வாங்குகிறார்கள். மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இடைக்காலத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இப்போது நீடித்துக்கொண்டிருக்கிறது. ஒரு தொழிலாளி கூடுதல் காசு கேட்பது பெரிதல்ல. கேட்கக்கூடிய முறை முறைகேடாக இருக்கிறது. எட்டு அணா, ஒரு ரூபாய் கொடுப்பது

பெரிதல்ல. கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்யும்பொழுது, மனச்சாட்சிக்குப் புறம்பாகக் கேட்கிறார்கள். கேட்கக்கூடிய தன்மையைப் பார்த்தால், மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. சட்டவிரோதமான முறையில் மீட்டர் இல்லாமல் காசு கேட்டால், பெர்மிட்டை 'சஸ்பெண்டு' செய்யவேண்டும். ஓட்டுநர் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். டாக்சி டிரைவர் மரியாதையாக நடந்து கொள்ளக்கூடிய தன்மையை ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் கிராமப்புறங்களில் டாக்சிக்காரர்கள் நினைத்தபடியெல்லாம் பணம் கேட்கிறார்கள். ஒரு கிராமம் பத்து அல்லது இருபது மைல் தூரம் என்றால், ஒரு டாக்சிக்காரர் ரூ. 25 கேட்கிறார். இன்னொரு டாக்சிக்காரர் ரூ. 40 கேட்கிறார். எல்லோரும் ரூ. 40 கேட்பதில்லை. ஒரு நேரத்தில் ரூ. 80 கூட கேட்கிறார்கள். ரூ. 30-க்கும் வருகிறார்கள். பலதரப்பட்ட வழிகளில் மக்களை ஏமாற்றுகிற முறையில் கேட்கின்றனர். குறிப்பாக மைலுக்கு இவ்வளவுதான் கிராமப் புறங்களில் டாக்சிக்காரர்கள் வாங்க வேண்டுமென்று ஒரு விளம்பரப் பலகையை டாக்சி ஸ்டாண்டில் அரசாங்கம் போட வேண்டும். பல நகரங்களில், கிராமங்களில் டாக்சி ஸ்டாண்டு இல்லாத நிலையைப் போக்க வேண்டும். டாக்சி ஸ்டாண்டில் கட்டண விளம்பரப் பலகை போட்டிருக்க வேண்டும்.

போக்குவரத்தில் ஏற்படக்கூடிய விபத்துகளுக்குக் காரணம் லாரி. லாரி டிரைவர்கள் வரக்கூடிய வேகத்தைப் பார்த்தால், தாங்க முடியாது. ரோடில் எதிரே வருகிற பஸ்ஸுக்கு, டாக்சிக்கு, பிளஷர் கார்களுக்கு வழிவிடுவதில்லை. நேராக ஸ்டிரெயிட்டாக நடு ரோட்டில் வருகிறார்கள். கொஞ்சம் கூட ஒதுங்குவதில்லை. பயங்கரமான வேகமாக இருப்பதால், எதிரே போகிற சிறிய வாகனங்கள் நசுங்கிவிடும் என்று பயப்பட வேண்டியிருக்கிறது. லாரி டிரைவர்கள்தான் ஆக்சிடெண்டுகளுக்குக் காரணம் என்று எச்சரிக்கை விடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறான முறையில் ஆக்சிடெண்டு ஏற்பட்டு மரணம் நேர்ந்தால், விசாரணை செய்து லாரி டிரைவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். லாரி டிரைவரோ, பஸ் டிரைவரோ தவறான முறையில் சென்று பல உயிர்களை அழிக்கும்பொழுது, கொலை செய்யக்கூடிய காரணமாக இருப்பதால், இந்த விபத்து தவறாக ஏற்பட்டால், ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனையை வழங்கும்படி அரசாங்கம் தன் கொள்கையை மாற்ற வேண்டும். விபத்துகள் பற்றி நல்ல முறையில் விசாரணை செய்து, டிரைவர் மீது தவறு என்று இருந்தால், அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1978 மார்ச் 21

விபத்துக்கள் பஸ்களாலும் லாரிகளாலும்தான் அதிகம் ஏற்படுகின்றன. பஸ்ஸும் பஸ்ஸும் மோதிக் கொள்ளுகிற செய்தி தினந்தோறும் பத்திரிகையில் வருகிறது. இன்று காலை கூட இரண்டு பஸ்கள் மோதிக்கொண்டன என்று செய்தி வந்திருக்கிறது. எப்படி அஜாக்கிரதையாக இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த நிலையை அரசாங்கம் உணர வேண்டும். டிரைவர் லைசென்சை அரசாங்கம் சஸ்பெண்டு செய்ய வேண்டும். பயங்கர நிலை ஏற்படுகிறது. பல விதமான இடையூறுகள் ஏற்படுகின்றன. கை, கால்கள் போகின்றன. அவயவங்களுக்கு ஆபத்து ஏற்படுகிறது. உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. என்ன காரணமாக இருந்தாலும், பஸ்ஸும் பஸ்ஸும் மோதிக்கொண்டால், டிரைவர் லைசென்சை முதலில் ரத்து செய்துவிட்டு, பிறகு விசாரணை செய்து, மீண்டும் லைசென்ஸ் வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரோடுகளில் விபத்துக்குக் காரணமாக இருப்பது, ரோடுகளில் வைக்கோல் போர் போடுவது. நெல் களங்களாகவும் ரோடுகளைப் பயன்படுத்துகிறார்கள். எந்தப் பொருளைக் காய வைக்க வேண்டுமென்றாலும், சிமெண்டு ரோடிலும், தார் ரோடிலும் போடுகிறார்கள். என்னுடைய கார் மதுரைக்குச் சென்றுகொண்டிருக்கும்போது, ஆக்சிடெண்டு ஏற்பட்டது. எனக்கு முன்பாக ஒரு பஸ் போய்க்கொண்டிருந்தது. பஸ் போன வேகத்தில் நானும் போனேன். ஒரு முண்டுக்கல் ரோட்டில் இருந்தது. பஸ் உயரம் அதிகமாக இருந்தபடியால், கல்லை இடிக்காமல் சென்று விட்டது. என்னுடைய கார் உயரம் குறைவாக உள்ளபடியால், கல்லில் டமார் என்று இடித்து, கிராங்க் ஷாப்ட் போய், ஆயில் கேஸ் போய், நான் அங்கே கிடந்து, பிறகு டாக்சியில் வந்தேன். இந்த மாதிரி நடு ரோட்டில் முண்டுக்கல்லை வைத்து விடுகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் ரோடுகளில் வைக்கோல் போர்தான் அதிகம். களம் என்பது இல்லை. ரோடுதான் களம். தர்மசங்கடமான விஷயம். முன்பு இருந்த ஆட்சியில், காங்கிரஸ் ஆனாலும் சரி, தி.மு.க. ஆனாலும் சரி, சிறு விவசாயிகள், பாவம், களம் வைத்துக்கொள்ள, களத்தைக் கட்டுவதற்கு, அரசாங்கம் மானியமாக எதையும் கொடுக்கவில்லை. 10 ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிகள் களம் வைத்துக்கொண்டால் மட்டும் போதுமா? விவசாயிகளுக்குக் களத்திற்காக அதிக இடம் கொடுக்க வேண்டியதில்லை. ரோடுகளில் வைக்கோல் போர் போடுகின்றனர். பியட் காரின் உயரம் ஒரு அடி தான். வைக்கோல் போரில் எப்படி ஏறிச் செல்வது? அந்த விவசாயி காரில் போகிற லட்சணம், வைக்கோல் போரில் ஏறிக்கொண்டு போ என்று சொல்கிறார். திடீரென்று ஒரு பிரசவ கேசுக்காக ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருந்தால் போக முடியாமல் வைக்கோல் போர்

1978 மார்ச் 21] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

போடப்பட்டு, பல இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆகவே அரசாங்கம் மாவட்ட கலெக்டர்களுக்குத் தெரிவித்து ரோடுகளில் போக்குவரத்திற்கு இடையூறானவைகளை, அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால், ரோடு ஓரங்களில் புறம்போக்கு நிலம் இருந்தால், அதைச் செப்பனிட்டு களத்திற்காக எடுத்துக்கொள்ளச் சொல்லலாம். போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளவைகளை அகற்ற வேண்டும்.

அடுத்து, நான்கு சாலைகள் கூடும் இடங்களை கிராம மக்கள் ஆக்கிரமித்து பிசினஸ் சென்டராக மாற்றிவிடுகிறார்கள். டீக்கடை போன்றவைகளை வைத்து விடுகிறார்கள். அந்தமாதிரி இடங்களில் பஸ்கள் முட்டிக்கொண்டு, ஆக்சிடெண்டுகள் ஏற்படுகின்றன. நான்கு சாலைகள் கூடுகிற இடங்களில் புறம்போக்கில் கட்டக்கூடிய ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு சாலையிலிருந்து இன்னொரு சாலையை உணரக்கூடிய தெளிவான தன்மை பாழ்பட்டு, மூன்று அல்லது நான்கு சாலைகள் கூடுகிற இடத்தில் பெரிய கடைகளை அமைத்து, ஆம்பிளிபையரைப் போட்டு சத்தம் செய்து, எந்த சாலையில் என்ன வருகிறது என்ற நிலையே புரியாத அளவுக்கு ஏற்பட்டிருக்கும் தன்மையை அரசாங்கம் உணரவேண்டும்.

(பிற்பகல் 12–30)

அவைகளைப் போக்குவதற்கான முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டவுன்களில் உள்ள ரோடுகளில் மணிக் கூண்டு மற்றும் சிலவற்றையும் கட்டிவிடுகிறார்கள். நான்கு ரோடுகள் சந்திக்கிற இடத்தில் டிராபிக் போலீஸ்காரரைச் சந்திப்பது கூட கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அந்தப் போலீஸ்காரர் இங்கேயும் அங்கேயும் ஓடிக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட இடையூறுகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் பஸ்களின் வேகத்தை 100 கிலோமீட்டர் அளவுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். முன்பெல்லாம், தஞ்சாவூருக்கும், பட்டுக்கோட்டைக்கும் இடையில் உள்ள 30 மைல் தூரத்தைக் கடக்க 2 மணி நேரம் பிடிக்கும். இப்போது பஸ்ஸின் வேகத்தை அதிகப் படுத்தி, முதலில் ஒன்றரை மணி என்று ஆக்கி, பிறகு ஒரு மணியென்று ஆக்கி, இப்போது முக்கால் மணி நேரத்திலே கூடபோய் வந்துவிடுகிறார்கள். இதைத் தடை செய்ய வேண்டும். பஸ் என்றால், 30 கிலோ மீட்டர் வேகம் தான் போக

வேண்டும். லாரி என்றால், 60 கிலோமீட்டர் வேகம் தான்
போக வேண்டுமென்று வைக்க வேண்டும். லாரிகளில்
பளுவான சாமான்களை ஏற்றிக்கொண்டு நூறு, நூற்றிருபது
கிலோமீட்டர் வேகத்தில் போனால். பயங்கரமாக இருக்கிறது.
பக்கத்திலே போகிற கார்கள் எல்லாம் தூக்கி எறியப்படுகிற
மாதிரி பயங்கரமாக இருக்கிறது. ஆகவே அதற்கு ஒரு
வேகக் கட்டுப்பாட்டை வைக்க வேண்டும்.

வண்டிகளின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று
ஒரு பக்கத்திலே சொல்லுகிறார்கள். ஒரு பக்கத்திலே ரோடு
கள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அதனால் பலவிதமான
கஷ்டங்கள் இருக்கின்றன. வண்டிகளின் வேகத்தை அதிகப்
படுத்த வேண்டுமென்று அரசாங்க உத்தரவுகளில் போடுகிறார்
கள். ஆனால் அதற்கேற்ற நிலையில் ரோடுகள் நம்முடைய
நாட்டிலே இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. போக்கு
வரத்திற்கேற்றவாறு ரோடுகள் நல்ல முறையில் இருந்தால்,
வேகமாக ஓடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் மோசமான
ரோடுகளை வைத்துக்கொண்டு நூறு கிலோ மீட்டர், நூற்றுப்
பத்து கிலோ மீட்டர் என்று வண்டிகளை ஓட்டச் செய்வ
தென்பது ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கிறது. இது
அபாயகரமான நிலை என்பதை இந்த அரசாங்கத்திற்குத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சாலைகள் விஷயத்தில் சில ஆலோசனை
களைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ள
அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாலை
கள் மேம்பாடு அடைய வேண்டும். சாலைகளை அரசாங்கமே
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பல முறை கூறியிருக்
கிறோம். வருஷத்திற்கு வருஷம் சாலைகளின் எண்ணிக்கை
அதிகமாகிக்கொண்டே போகிறது. ஆனால் சாலைகளைப்
பராமரிக்கக் கூடிய அளவுக்கு நிதி வசதி வேகமான
முறையில் முன்னேறுகிறதா என்றால், இல்லை. சாலைகள்
மிகவும் சீரழிந்து கிடக்கின்றன. சில பகுதிகளில்
சாலைகளின் மேம்பாட்டைக் கவனிக்கிறார்கள். சில பகுதி
களில் சாலைகளைக் கவனிக்காத நிலை இருக்கிறது. ஆகவே
சாலைப் பராமரிப்பிலே கவனம் செலுத்த வேண்டுமென்று
தெரிவித்துக்கொள்ளுகிறேன். குற்றம் சாட்ட வேண்டு
மென்பதற்காக நான் சொல்லவில்லை. அரசாங்கத்திலே உள்ள
சில டிவிஷனல் இன்ஜினியர்கள் சரியான முறையில் நடந்து
கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.
இப்போது எங்கே பார்த்தாலும், ஆளும் கட்சியினர்
சொல்லும் இடங்களிலே சாலைகளைப் போடும் பழக்கவழக்கம்
இருக்கிறது. காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டாலும்,
திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஏற்பட்டாலும்.
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை

ஏற்பட்டாலும், எந்தக் கட்சிக்காரர்கள் வருகிறார்களோ
அவர்களுடைய இடத்தில் சாலைகள் அதிகமாகப் போடு
கிறார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி
அவர்கள் கூட சொன்னார்கள். இதில் அமைச்சர்கள் தலை
யிடுகிறார்கள் என்று சொல்லவில்லை. இது இன்றைக்கு நடை
முறையில் இருக்கிற நிலைமை. எங்கள் மாவட்டத்திலே
டிவிஷனல் என்ஜினியராக இருந்தவர் இப்போது மாற்றலாகி
சூப்பரிண்டெண்டிங் இன்ஜினியராக சென்னைக்கு வந்திருக்கிறார்
கள். அவர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலே பேராவூரணியிலே அடிக்கடி முகாம் போட்டுக்
கொண்டு, அங்குள்ள எம்.எல்.ஏ-வின் வீட்டு வாசலில்
இருப்பார். அந்த எம்.எல்.ஏ. செல்லுகிற ரோடுகளை
மேம்பாடு செய்வதற்கான திட்டங்களைத்தான் போடுவார்.
இப்போது கட்சி மாறிவிட்டதால், கும்பகோணத்திலே,
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ. வந்த
வுடனே, தி.மு.க. எம்.எல்.ஏ. வீட்டுக்குப் போவதை
நிறுத்திவிட்டு, அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. அவர்கள்
சொல்லுகிற ரோடுகளை மேம்பாடு செய்கிறார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர்
ஆளும் கட்சியினராக இருந்தாரே, அந்த நேரத்தில்
அவருடைய வீட்டிலும் இப்படி அதிகாரிகள் இருந்தார்களா?

திரு. என். சுந்தரேசத் தேவர் : காங்கிரஸ் கட்சியாக
இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்,
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்,
எல்லோருடைய காலத்திலும் இந்த அதிகாரி இப்படி
நடந்துகொண்டார் என்று முதலிலேயே சொல்லிவிட்டேன்.
நான் இதிலே ஒரு பாகுபாடு செய்யவில்லை. எந்தக் கட்சி
ஆட்சிக்கு வருகிறதோ அந்தக் கட்சியினருடைய வீட்டு
வாசலில் நிற்கக்கூடிய நிலைதான் இருக்கிறதே தவிர,
தேவைக்கேற்பத் திட்டமிடுவதாகத் தெரியவில்லை. மாண்புமிகு
உறுப்பினர் கட்சி ஆட்சிக் காலத்திலே அதிகமாக நடந்தது.
இப்போதும் நடக்கவில்லை என்று சொல்லவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எங்கள் காலத்திலே
நடந்தது என்றுதான் சொல்லுகிறார்கள். அது வேறு
விஷயம். உங்கள் காலத்திலே நடக்கலாமா என்று கேட்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : கவர்னர் ஆட்சி
யிலே கூட இப்படி நடந்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : அப்போது ஜனநாயகம்
இல்லை. திரு. வீராசாமி அவர்களுக்கு எப்போதும் அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டவேண்டும் என்பதைப் போலவே, திரு. தீக்ஷிதருக்கும் காங்கிரசைத் திட்டிக்கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணம் போலும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டுவதில்லை. செய்த நல்லதைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் அதிலுள்ள குறைகளையும் சுட்டிக் காட்டுகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்ட வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் : இந்த நிலையைப் போக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் 3 பேர் பேச இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்ல வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகம் செய்ததைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்த நிலையைப் போக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நியாய புத்தியோடு சில அறிவுரைகளை வழங்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக, அதிகாரிகள் சாலை மேம்பாட்டிற்கு நான்கு இலட்சம், பத்து இலட்சம், இருபது இலட்சம் என்று பெரிய திட்டங்களைப் போட்டு பணத்தை விரயமாக்கி விடாமல், எதற்கு முதலிடம் அளிக்க வேண்டுமென்பதை ஆய்ந்து பார்த்து, அதன்படி திட்டமிட வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

காங்கிரஸ் கட்சியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டார்கள். அந்தக் காலத்திலே எந்தத் திட்டமாக இருந்தாலும் முதலில் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பாஸ் பண்ணினால்தான் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இருந்தது. ஆனால் அந்த வழக்கம் பின்னால் தூக்கி எறியப்பட்டது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலே நானே உறுப்பினராக இருந்தேன். 1966ஆம் ஆண்டில் அந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் முடிவுற்ற திட்டங்கள் எத்தனையென்று நான் கேட்டபோது, எதுவுமே இல்லையென்று அப்போது மாவட்ட

ஆட்சித் தலைவர் பதில் அளித்திருக்கிறார்கள், அது இன்னும் ரிக்கார்டிலே இருக்கும், வேண்டுமானால் பார்க்கலாம். எனவே அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலே எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே. இது குறித்த விவாதத்திலே செல்ல விரும்பவில்லை நான். திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இந்தியப் பிரதமராக வந்த பிறகு அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பித்தது. எந்த மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களாக இருந்தாலும், அதை முதலில் டி.டி.சி.யில் பாஸ் செய்தால்தான் அரசாங்கத்தில் அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது அப்போது. காங்கிரஸ் எம்.எல்.ஏ. சொல்லிச் செயல்பட முடியாமல் டி.டி.சி.யில் பாஸ் பண்ணினால்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற வாய்ப்பு அப்போது இருந்தது. ஆகவே மேலும் திரு. மணி அவர்கள் இதிலே தலையிட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். மற்றவர்களை இணைத்துப் பேச வேண்டாம். இன்னும் மூன்று பேர்கள் பேச இருக்கிறார்கள். அமைச்சரும் பேச வேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : வேண்டுமானால் 1965-66ஆம் ஆண்டு பைலை எடுத்துப் பார்க்கலாம். அப்படியொரு ஆலோசனை வந்ததா என்று பார்க்கலாம். ஆகவே அந்த மாதிரி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-40)

ரோடுகளை மேம்படுத்தும் திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளலாம். சில திட்டங்களை அரசாங்கமே எடுத்துச் செய்யும் வாய்ப்புகள் இருக்கலாம். எல்லாமே டி.டி.சி.யில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் கூற வரவில்லை. இ.இ, போன்றவர்கள் தன்னிச்சையாகச் செயல்படும் முறையைத் தடுக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையில், அது சதுப்பு நிலம் உள்ள பகுதி. வருஷத்திற்கு இரண்டு மூன்று மாதங்கள் தவிர மற்ற நாட்களில் தண்ணீர் இருக்கக் கூடிய ஜில்லா அது. கடற்கரை ஓரமாகவும் அமைந்துள்ளது. ரோடுகளை அடிக்கடி பராமரிக்காவிட்டால், அவை சீர்கேடடையும் நிலைமை அங்கே உள்ளது. அவைகளைப் பராமரிப்பதில் மற்ற மாவட்டங்களுக்கும் தஞ்சை மாவட்டத்திற்கும் அதிக வேறுபாடு இருக்கிறது என்பதை அரசு

கவனிக்க வேண்டும். சரளைக் கற்களுக்கான மலைகளைப் பார்க்க வேண்டுமென்றால், திருச்சிக்கு அப்பால் செல்ல வேண்டும். 50, 100 கிலோ மீட்டர் தாண்டித்தான் கல்லுக்குப் போக வேண்டும். அங்கிருந்துதான் கற்களைக் கொண்டுவர வேண்டும். கப்பிக்கல் வேண்டுமென்றால், புதுக்கோட்டைப் பகுதிக்குச் செல்ல வேண்டும். அவற்றை வெகு தொலைவிலிருந்து கொண்டுவர வேண்டியிருப்பதால், மற்ற மாவட்டங்களுக்கும் தஞ்சைக்கும் ஒரே ரேட்டில் போடுவது சரியாக வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் போக்குவரத்திற்கான சாலைகள் சீரழிந்த நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிழக் கடற்கரை மேம்பாட்டுத் திட்டம்பற்றிச் சொல்லப்பட்டது. மத்திய அரசாங்கம் ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டைக் கொண்டு வருவார்கள் என்று சொன்னார்கள். பல திட்டங்களைப் போட்டுவிட்டார்கள். பல பாலங்களை லட்சக்கணக்கான ரூபாய் செலவில் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த கிழக்கடற்கரைச் சாலைகள் மேம்பாட்டைப்பற்றி இந்தக் குறிப்பில் எதையும் காணவில்லை. தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி பெற்றுச் செய்யப்போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அது மிகவும் அத்தியாவசியமான சாலையாக, இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சை போன்ற மாவட்டங்களிலிருந்து சென்னையை நோக்கி வருகின்ற முக்கியமான சாலையாக இருப்பதால், அதையும் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்து அதற்கும் தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் மூன்று பேர்கள் பேசி அமைச்சர் பதில் வேறு சொல்ல வேண்டும். சீக்கிரம் முடித்துக்கொண்டால் நல்லது.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மேம்பாலங்கள் 14 க்குக் கொடுத்திருக்கிறார்கள். பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் சாலையில் ரயில் பாலம் வருகிறது. அறந்தாங்கி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய ஊர்களில் உள்ளவர்கள் அந்த வழியாக வரக்கூடிய நிலையில், அந்த ரயில் கேட்டு மூடப்பட்டு விடுவதால், சிரமம் ஏற்படுகிறது. ஆகையால் பட்டுக்கோட்டை ரயில் பாலத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* THIRU D. V. D'MONTE: Mr. Deputy Chairman, Sir, one distressing feature of the 'Review on the Road Transport in Tamil Nadu' is the incidence and continuing incidence of fatal road accidents. 2,150 persons were killed in 1977 as against 1,706

in 1976. Sir, 90 per cent of the fatal road accidents which take place are due to faulty driving and the fault of drivers. There is no denying the fact that there is a great deal of pressure on the transport system with each vehicle having to do more work than could be done with reasonable efficiency. But, since human lives are concerned in this, there is a need for better planning and more reliable ways of ensuring that road traffic does not become a virtual death-trap.

The poor maintenance of the public transport system and the vehicles adds to the seriousness of the problem. Several accidents have been caused by faulty brakes. Faulty vehicles should be grounded. The Police should also take strong steps to ensure that discipline is observed among drivers. This morning I personally saw an incident. A bus of the Pallavan Transport Corporation was making an unscheduled stop, away from the bus-stop, and one or two passengers were allowed to alight from the bus. I saw the Traffic Policeman walking up to the Conductor and remonstrating to him for the incident. The Conductor just shrugged his shoulders contemptuously and moved on. This is an incident which I witnessed this morning.

Sir, another cause for the large number of accidents is the buses overtaking each other. I do not say that the pedestrian is never at fault but then he pays dearly for his folly.

I find that drivers are being taken to task and penalised for rash driving, etc. But one does not know what really happens after a case is launched in the Court. Where the drivers are responsible for the accident, fatal or otherwise, stringent measures should be taken like cancellation of licence, apart from other penalties imposed under the law, in the same manner as rewards are given for accident-free record. One very important aspect is work-shop maintenance which makes sure that vehicles are on the road and are kept off the sick-list. Very often cheap and spurious parts are used for maintenance of the vehicles and the result is break-downs and repeated break-downs. I do not see any mention in the report given about the number of sick vehicles that are off the road. Compared to the Western countries where the number

[Thiru D. V. D'Monte] [*1978 மார்ச் 21*

of vehicles is ten times more than ours, the incidence of road accidents is very much more. Evidently something must be seriously wrong here. It must be due to recklessness in driving, defective traffic laws, poor maintenance of roads and vehicles and all-round indifference to prevention of accidents and rendering immediate medical aid to victims. Another relevant point is that niggardly compensation is paid to the victims. Most of the people who are killed or injured in accidents come from the poor sections of society. They are seldom able to get redress or reasonable compensation. Heavy compensation will be a deterrent to those who are negligent in driving and will also be helpful to the victims and their families. Even the simplest safety measure is not adopted here. In Haryana, even bullock carts are being provided with cat's eye tail reflectors. I do not see any reason why this should not be done in our State. Another step to avoid accidents is that the drivers must be subjected to fitness test and breath analyser tests to find out whether they have consumed alcohol and are under the influence of alcohol when driving. Even in a dry State like Tamil Nadu it was found some time ago that about 28 per cent of the drivers at night were under the influence of alcohol, compared to Haryana where it is only about 32 per cent, though it is not a dry State.

In modern life, speeding in motor vehicles and overtaking tend to be a substitute for duelling and other adventurous sports of olden times with which extroverts sought to prove their virility. For people with such atavistic urges a driving licence becomes a licence to kill. Their homicidal capacity increases with the power and tonnage of the vehicles they drive.

There are exacting standards prescribed for the pilots of aeroplanes. I cannot see any reason why such standards should not be observed in the case of drivers also. When we speak of items like discipline on the road, we need not only discipline, and road manners but also should have concern for human life.

One more point and I have done. I suggest that the Government should encourage trailerisation to have much more load for the same motive input. Such trailers should be given exemption

1978 மார்ச் 21] [Thiru D. V. D'Monte]

from permits and taxes. In the United States, operator loaded trailers can be passed on from one to another much the same way as railway wagons are inter-changed.

<u>திரு. க. அறிவழகன் :</u> துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் பல்வேறு விதமான நன்மைகள் செய்யப்பட்டு அதைப் பாராட்டும் வகையில் அதிர்ஷ்டத்திற்குரிய அமைச்சர் என்று உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையிலே பயணிகளுக்குப் பல நன்மைகளைச் செய்திருப்பதாலும், தொழிலாளர்கள் பல நன்மைகளைப் பெற இருப்பதாலும், அவர் சொல்லியதைப் போல பயணிகளும், நடத்துனர், ஓட்டுனரும் அதிர்ஷ்டக்காரர்கள் என்று சொல்வது பொருத்தமானதாகும். உண்மையிலே இந்தத் துறை மிக வேகமாக முன்னேறி வருகிறது. இன்னும் வேகமாகக்கூடச் செல்கிறது என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். அண்ணா நகரில் புதிய ஆட்சியினர் வந்ததும், விடுகின்ற பஸ்கள் சரியாக இல்லை என்று உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை அவை பழைய ஆட்சிக்காரர்கள் வாங்கிய வண்டிகள் என்பதால் அப்படி ஓடிக்கொண்டிருக்கலாம். புதியவர்கள் வாங்கும் வண்டிகள் இனிமேல்தான் ஓடும். மக்கள் அதில் மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன். இந்தத் துறையில் செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அதில் முதன்மையாக பஸ்களில் பிரயாணம் செய்யும் பொது மக்கள் வசதிக்காக பலவற்றை இன்னும் செய்ய வேண்டியிருக்கிறது.

(*பிற்பகல் 12-50*)

வேகமாக ஓடுகிற பஸ்கள் சில நேரங்களில் வழியில் நின்றுவிட்டால், அதை ரிப்பேர் செய்வதற்குரிய ஸ்குரு டிரைவர்கள்கூட இல்லை, மாற்றுச் சக்கரம்கூட இல்லை. குடிப்பதற்குத் தண்ணீர்கூட இல்லை. மற்றும் சில நேரங்களில் குழந்தைகள், பெண்கள் பயணம் செய்யும்போது, குழந்தைகள் சிறிது வாயிலெடுத்துவிட்டாலும் அவர்களுக்குத் தேவைப்படும் தண்ணீர் வசதிகூட இல்லை என்ற நிலை இருக்கிறது. இவைகளையெல்லாம் மாற்றத்தக்க வகையில் புதிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொலைதூர பஸ்களில் பயணம் செய்யும்போது, எம் எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்களைக் கூட அடையாளம் கண்டு கொள்ளும் பஸ் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மிகக் குறைவாகவே இருப்பதால், பல நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிருந்த சிரமம் ஏற்படுகிறது. சென்னை

போன்ற நகரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இடம் இருக்கிற காரணத்தால் சிரமமில்லை. ஆனால் விழுப்புரம், கடலூர் மற்றும் அரசாங்கக் கொறடா இருக்கிற ஊர்களிலெல்லாம் போய் பஸ்ஸில் இடம் கேட்கும்போது, பஸ் ஓட்டுநர்களும் நடத்துனர்களும் நீங்கள் யார் என்று மிரட்டுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அரசாங்கக் கொறடா இருப்பதற்கும் அவர்கள் மிரட்டுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ?

திரு. இரா. சாம்பசிவம் : நான் இருக்கிற ஊர் மிகவும் சாதுவான ஊர் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : அரசாங்கக் கொறடா இருக்கிற ஊர் மிரட்டுகிற ஊராக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனாலும் நம்முடைய அரசாங்கக் கொறடா மிரண்டு போனவர் என்பதும் எனக்குத் தெரியும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் எல்லாம் குறைந்த பட்சம் 8-வது வகுப்பு வரையிலாவது படித்திருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் கல்வித் துறையைச் சார்ந்தவன் என்பது தலைவர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகையால் நான் கல்வித் துறையின்மீது மட்டும் பேச வேண்டும் என்றுகூட வற்புறுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். 8—வது வகுப்புவரை படித்திருக்க வேண்டுமென்று சொல்வது மட்டும் போதாது. அந்தக் கருத்து இந்தப் புதிய காலத்திற்குப் பொருந்தாது. 20 லட்சம் மாணவர்கள் 1-வது வகுப்பில் சேர்ந்தால், 8 லட்சம் பேர்கள் தான் 8-வது வகுப்பிற்கு வருகிறார்கள். மற்ற 12 லட்சம் பேர் எங்கே போகிறார்கள் என்று தெரியவில்லை. 8-வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டுமென்றால், இனிமேல் அவர்கள் ஆசிரியர்களிடம் போய் 8-வது வகுப்பு வரை படித்தேன் என்று சர்டிபிகேட் கொடுங்கள் என்று கேட்க அவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்படுத்த வேண்டுமென்று எத்தனை நாளாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தாரோ எனக்குத் தெரியவில்லை. புதிய கல்வி முறையைப்பற்றி மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்கு தெரியும். அந்தக் கல்விதான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்குப் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது. 8-வது வகுப்பு வரை படித்திருக்கிறார்களா என்று பார்த்தால் மட்டும் போதாது. அவர்களுக்கு ஒரு தேர்வு வையுங்கள். எழுத்து

மூலமாகத் தேர்வு வேண்டும் என்றுகூடச் சொல்லவில்லை. நாமெல்லாம் பேச்சிலே வல்லவர்கள். பேச்சுத் தேர்வே கூட வைக்கலாம். 8-வது வகுப்பிற்கான அளவுக்கு அறிவிருக்கிறதா, பண்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விபத்து இல்லாமல் ஓட்டினால், 100 ரூபாய் தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கூட பாராட்டுத் தெரிவித்தார்கள். விபத்து இல்லாமல் ஓட்டுகிற ஓட்டுநர், நடத்துனர்களுக்குப் பரிசளிப்பதைவிட எந்தவிதமான விபத்துமில்லாமல், மாணவர்களோடு விபத்து ஏதுமில்லாமல் நடந்து கொள்கிறவர்களுக்கு, பொதுமக்களோடு எந்தவிதமான விபத்துமில்லாமல் நடந்துகொள்கிறவர்களுக்குப் பரிசாக ஆயிரம் ரூபாய் கொடுங்கள், நான் வரவேற்கிறேன்.

செல்லுகின்ற பஸ்ஸை திடீரென்று வழியிலே நிறுத்தி விடுகிறார்கள். என்ன காரணம் என்றால், நான் போலீஸ் காரரோடு மோதிவிட்டேன், அதனாலே நிறுத்திவிட்டோம் என்கிறார்கள். எங்காவது மோதி, பஸ் நின்றால்கூட, பரவாயில்லை. இவர்கள் இப்படியெல்லாம் மோதி பஸ்களை நிறுத்தி விடுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள், ''பசு கன்றோடு மோதியது, ஆகவே நின்று விட்டது'' என்று. பஸ் என்பதை பசு என்று எழுதப்போய் வந்த விளைவு இது. அதைப்போல் பெற்றவர்களாக இருக்கிற நடத்துநர்களும் ஓட்டுனர்களும் தங்கள் பிள்ளைகளோடு—மாணவர்களோடு - மோதிக்கொண்டு பஸ்ஸை நிறுத்தி விடுகிறார்கள். அப்படி நிறுத்துவார்களானால், நம்முடைய கொறடா சாட்டையடி கொடுப்பதுபோல் அமைச்சர் அவர்களும் சாட்டை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்து, நம் நாட்டில் பாலங்கள் கட்ட வேண்டிய இடங்களிலெல்லாம் ஃபிளை-ஓவர்கள் கட்டியிருக்கிறார்கள். தமிழக காங்கிரஸ் கட்சியின் செயலாளர்களில் ஒருவர் கொஞ்ச காலத்திற்கு முன்பு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் செல்லும் வழியில் மோதி, 6 மாதம் வரை ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகாய விமான நிலையம் போன்ற இடங்களில்தான் ஃபிளை-ஓவர்கள் கட்டப்பட வேண்டும். அரசியல்வாதிகளைப் போல் ஆகாய விமான நிலையங்களுக்கும் ரயில் நிலையங்களுக்கும் போகிறவர்கள் தான் வேகமாகப் போக விரும்புகிறார்கள். ரெயில் புறப்படுவதற்கு 2 நிமிஷம்தான் இருக்கிறது, வேகமாக ஓட்டுங்கள் என்பார்கள். எனவே அங்கேதான் ஃபிளை-ஓவர்கள் இருக்க வேண்டும்.

[திரு. க. அறிவழகன்] [1978 மார்ச் 2

அடுத்து, போக்குவரத்துத் துறையைச் சார்ந்த காவலாளர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் மாண்புமிகு தலைவர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்

''வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு''

இந்தக் குறள் இவர்களுக்காகவே அமைந்திருக்கிறது. சென்னையில் தாமஸ் மன்ரோ சிலை பக்கத்திலே இவர்கள் காலை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருப்பார்கள். 6 மணி அல்லது 7 மணி, மாலை மயங்குகிற நேரத்தில் அந்தப் பகுதியில் யாராவது வேகமாகக் காரில் போனால், மறைந்து நிற்கிற இவர்கள் அவர்களைப் பிடித்து நீங்கள் காரை வேகமாக ஓட்டினீர்கள், கோர்ட்டுக்கு வாருங்கள் என்பார்கள். அந்த இடத்திலேதான் கார்கள் வேகமாக ஓடும். அங்கே தான் கார்களை வேகமாக ஓட்ட முடியும். மற்ற இடங்களில் ஓட்ட முடியாது. வேகமாக ஓட்டக்கூடிய இடத்தில் பிடிக்கிற இவர்கள், ஓட்டக்கூடாத இடத்தில் வேகமாக ஓட்டுபவர்களைப் போய்ப் பிடிக்க மாட்டார்கள். அண்ணா சாலைக்கு அருகில், பாரீஸ் கார்னருக்கு அருகில் போய் பார்த்தால், மணல் ஏற்றும் லாரிகள், பஸ்கள் எல்லாம் மிகுந்த வேகத்தில் போய்க்கொண்டிருக்கும். கேட்பதற்கு அங்கே ஆளே இருக்காது. ஆனால் ஆள் நடமாட்டமில்லாத இந்த மன்ரோ சிலைக்கு அருகில் வேகமாகக் காரை ஓட்டினால், உடனே வந்து பிடித்துக்கொள்வார்கள். இது ''வேலொடு நின்றான் இடு என்றது போலும்; கோலொடு நின்றான் இரவு'' என்ற குறளைத்தான் எனக்கு நினைவூட்டுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறைக் காவலர்களை இந்த விஷயத்தில் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரசைவாக்கம் பகுதியில் 10 பள்ளிகள் இருக்கின்றன. 10,000 மாணவர்கள் படிக்கிறார்கள். லாடர்ஸ் கேட் என்று ஒரு பகுதி இருக்கிறது. அங்கே ஒரு போலீஸ்காரர் கூட இருப்பதில்லை. அங்கே ஓடுகிற பஸ்கள் மிகுந்த வேகத்தோடு சென்றுகொண்டிருக்கின்றன. அங்கே ஒரு 'ஒன்-வே-டிராபிக்' வைத்திருக்கிறார்கள். எங்கே வைக்கக் கூடாதோ அங்கேதான் ஒருவழிப் பாதை வைத்திருக்கிறார்கள். அதைத் திருத்த வேண்டும். பள்ளிகள் இருக்கிற இடங்களிலெல்லாம் நிச்சயமாக போக்குவரத்துத் துறை காவலர்கள் அமர்த்தப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, பஸ்களை ஓட்டுபவர்களும் எப்படி நிறுத்தி ஓட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட வேண்டும்.

1978 மார்ச் 21] [திரு. க. அறிவழகன்]

நீண்ட காலமாக ஆட்சி நடத்தியவர்கள் என்ற உணர்வில், எண்ணத்தில் பல உறுப்பினர்கள் பேசினார்கள். அதில் திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் ஒருவர். திரு. வீராசாமி அவர்கள்கூடப் பேசினார்கள். நீண்ட காலமாக ஆட்சியை நடத்தியவர்களிடம் அதிகாரிகளுக்கு மிகுந்த அக்கறை உண்டு. புதிதாக ஆட்சியில் வந்துள்ளவர்களிடம் அக்கறை ஏற்பட காலதாமதமாகும்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் போல் இருக்கிறதே.

<u>திரு. க. அறிவழகன்</u> : மேலவைத் துணைத் தலைவர் அவர்களை சிலம்புச் செல்வர் என்றழைப்பதை விட, அதிகாரிகளைக் காப்பவர் என்றே சொல்லலாம்.

<u>திரு. கோ. சி. மணி</u> : நீண்டகாலம் ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீண்ட நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கத்தினராக இருந்தது உண்மைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. க. அறிவழகன்</u> : திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் உறுப்பினராக இருந்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் உறுப்பினராக இருந்தபோது, எப்படிப்பட்ட பதவிகளில் இருந்தார் என்பது இந்த அவைக்கு நன்றாகத் தெரியும்.

<u>திரு. கோ. சி. மணி</u> : அப்படிப்பட்ட பதவிகளை மாண்புமிகு உறுப்பினருக்கு அந்தக் கட்சி ஆட்சியின்போது வழங்கவில்லை என்பதற்காகத்தான் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறினாரா?

<u>திரு. க. அறிவழகன்</u> : பதவிகளையும், பொறுப்புகளையும் பெற்றவர்கள் எப்படிப் பெற்றார்கள் என்பதையெல்லாம் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்பவில்லை,

எனவே, குழந்தைகள் படிக்கிற இடங்களில் மிகுந்த பொறுப்புகளை மேற்கொண்டு காரியம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. பேருந்துகளில் ஏறிச் செலலும் மக்களுக்குத் தேவையான பல்வேறு வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கரும்புகளை ஏற்றிச் செல்லுகிற சாலைகளை மேம்படுத்த திட்டமிட்டுச் செயல்படுத்துவதைப்போல், வடபாதிமங்கலத்தில் இருக்கிற ஆலைக்குச் செல்லும் பாதை

யைச் சரியாகச் சீரமைத்து மேம்படுத்த வேண்டும் என்றும், அதை இந்த ஆண்டே சேர்த்துச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

நாட்டுடைமையாக்கும் கொள்கையிலே நம்முடைய அரசு மிகத் தீவிரமாக இருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன். நாட்டுடைமை என்ற பெயரால் காரியங்களைச் செய்யும்போது, 10 பஸ்கள் அளவில் தனியார் வைத்துக்கொள்ளலாம் என்று அறிவித்தால், அந்தப் புதிய பஸ்களைத் தனியார்கள் நல்ல முறையில் ஓட்டுவார்கள். அவர்களுக்கு எண்ணிக்கையை, தரத்தினை நிர்ணயிக்காமல் இருப்பதால், அவர்கள் ஓட்டலாமா ஓட்டக்கூடாதா என்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் பஸ்களைப் புதுப்பிக்காமல் இருக்கின்றார்கள். அதனால் ஏற்படக்கூடிய சேதாரங்கள் அதிகமாக இருக்கின்றன. சத்தங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆக அவர்கள் நல்ல பஸ்களை, நல்ல பேருந்துகளை ஓட்ட வேண்டுமென்றால், அவர்கள் 10 பஸ்கள் வைத்துக்கொள்ளலாம், 5 பஸ்கள் வைத்துக்கொள்ளலாம், என்று நிர்ணயித்து விட்டால், அவர்கள் அதற்கேற்ற அளவிலே, அதனை வகைப் படுத்தி, ஓட்டிக்கொள்வார்கள். அவர்கள் நீண்ட கால மாக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பஸ் நிலையங் களில் எந்த விதமான வசதிகளையும் செய்து வைக்கவில்லை, நாட்டுடைமை ஆக்கப்பட்ட பஸ்கள் வந்த பிறகுதான், அங்குள்ள நிலையங்களில் வசதிகள் வந்தன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பஸ்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நிலையங்களை எல்லாம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வேலை இல்லாதவர்கள் பல லட்சக்கணக்கானவர்கள் இருக்கின்ற இந்த நாட்டில் மிகக் குறைந்த கூலியில், டெம்பரரியாகக்கூட பல ஆட்களை வைத்து வேலை வாங்கலாம். சிக்கனமாகச் செலவு செய்து, பஸ் நிலையங்களை சுத்தமாக வைத்திருக்கலாம். அங்கு இருக்கின்ற பொது மக்களுக்கான குடிநீர் இடங்களை சுத்தமாக வைத்திருக்கலாம். சிக்கனத்தைக் கையாண்டு நல்ல சுகாதார நிலைமைகளை அந்த பஸ் ஸ்டாண்டு களில் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளம் வயதினர். பிரச்சினைகளை நன்கு சந்திக்கிறவர்கள். திறமை மிக்கவர். நல்ல இளைஞர். அவருடைய முயற்சிகள் வெல்க என்று கூறிக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே. நம் முன்னிலையில் பேரவையிலே நிறை வேற்றப்பெற்ற இரண்டு மான்யக் கோரிக்கையின் பேரில்

மிக முக்கியமான கொள்கை விவாதம் பற்றி வாதித்துக் கொண்டிருக்கிறோம். நான் இன்றைய தினம் எந்த ஒரு பாதையில் ஓடுவது என்ற நிலையில் இருக்கிறேன். ரொம்ப வேகமாகப் போவதும் ஆபத்து. ரொம்ப மெதுவாகப் போனாலும் ஆபத்து, மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் 10 நிமிடங்கள்தான் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைய தினம் அவைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற நிலையில்தான் இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்தனை நாட் களும் நான் விட்டுவிட்டேன் என்று மற்ற அங்கத்தினர்கள் நினைத்துக் கொள்ளக்கூடாது.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலைத் துறை, கிராமப் பணித் துறை இவைகளைப் பற்றிப் பேச வேண்டுமானால், இந்த நாள் பூராவும் பேச வேண்டும் என்பது போல் இருக்கிறது. குறையை மட்டும் தானா சொல்லத் தேவைப்படுகிறது? நிறைகளைச் சொல்லவும் நேரம் மிகத் தேவைப்படுகிறது. ஜனநாயக ஆட்சி நடைபெற்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிகின்ற தருவாயில் போட்ட திட்டங்கள் இருக்கின்றன. அவைகள் செயலாக்கப்பட வேண்டும். அது சிறிய சாலையாக இருந்தாலும் சரி, பெரிய சாலையாக இருந்தாலும் சரி, அது இணைப்புச் சாலையாக இருந்தாலும் சரி, அது கிராமப்புற சாலையாக இருந்தாலும் சரி, உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு திட்டத்திற்கு ஏறக்குறைய 13 லட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டது. அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்டது. சாங்க்சன்கூட செய்யப்பட்டு விட்டது. தார் வரையில் போடப்பட வேண்டும். கருங்கல் கப்பி போடப்பட்டு, தார் போடப்படவேண்டிய நிலையில் இருக்கின்றது. இன்று வரை போடவில்லை, 2, 2½ ஆண்டு காலம்கூட கடந்துவிட்டது. அப்படிப்பட்ட வேலைகளை எந்தக் காரணத்தினாலோ தாமதப்படுத்துகிறார்கள். இதில் தயவுசெய்து அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்கக்கூடாது. அந்த வேலைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நமது மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், அந்த ஆண்டு கும்பகோணத்தில் மகாமகம் திருவிழா வந்தது, 1967-ல், தஞ்சை மாவட்டத்தில் திருவிழாவிற்கு வரும்போது போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் ஒரு ரிங் ரோடு இருக்க வேண்டும் என்றும் கருதப்பட்டது, அந்த ரிங் ரோடு போட வேண்டும் என்று எஸ்டிமேட் போட்டார்கள். அதை இங்கே நிறைவேற்றாமல்

தொகையில்லை என்று சொல்லி திருப்பி அனுப்பி விட்டார்கள்,
அப்போது இருந்த அமைச்சர் அவர்களிடத்திலேயே அனுமதி
பெற்று தலைமை இன்ஜினியர் அவர்கள் மூலமாக நிறைவேற்ற
நடவடிக்கை எடுக்கப்பட்டது, அன்று விடப்பட்டுவிட்டது
இன்று வரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது.
இன்றைய ஆட்சியில், 12 ஆண்டுகளுக்கு ஒரு
முறை வருகின்ற மகாமகத்திற்குள்ளாவது, நிறைவேற்ற
வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மூலதனச்
செலவைச் செய்துவிட்டது. இன்னும் செப்பனிட வேண்டிய
நிலைமைகள்தான் இருக்கின்றன. இதை இப்போது சொல்
வதற்குக் காரணம், இப்போது ஆரம்பித்தால்தான், அடுத்து
வருகின்ற மகாமகத்திற்குள்ளேயாவது செப்பனிட முடியும்.
அதை மிகத் தீவிரமாகக் கவனிக்க வேண்டும் என்று இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். வேகத்தைத்
தடை செய்வதற்கு ஒவ்வொரு சாலையிலும் தடுப்புப் போட்
டிருக்கிறார்கள். அது சில இடங்களில் மேலாகத் தெரிகிறது. சில
இடங்களில் அணைபோலத் தெரிகிறது. புதிய காரோட்டிகள்
வேகமாக அங்கு வரும்போது, வேகத்தை முழுமையாகக்
கட்டுப்படுத்த முடியவில்லை. அங்கு ஏதாவது அடையாளம்
இருக்க வேண்டும். சிவப்பு அடையாளம் போல் அங்கு
இருந்தால், அவர்கள் நிறுத்தி விடுவார்கள். அங்கு நல்ல
அடையாளத் தடுப்புகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்கள் சில லாபத்தில் இயங்குகின்றன.
சில நஷ்டத்தில் இயங்குகின்றன. மாண்புமிகு அங்கத்தினர்
திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள்கூட தெளிவாகச்
சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக்
கழகத்தில் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். காரணம்
பழைய பஸ்களை விடுகிறார்கள், அதனாலேதான் செலவுகள்
அதிகமாக ஆகின்றன என்று சொன்னார்கள். அதுதான்
உண்மையான காரணம் என்று சொன்னார்கள். இன்னொன்றுகூட
சொன்னார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏலம்
விடுகின்ற பஸ்களை முந்திக்கொண்டு எடுப்பார்கள் என்று
சொன்னார்கள். சோழன் கார்ப்பரேஷனில் ஏலம் எடுத்திருக்
கிறார்கள்.

அடுத்து, எக்ஸ்பிரஸ் பஸ்களிலே ஏறக்குறைய 60, 70 பஸ்கள்
பணி மனைகளிலே பழுதடைந்து இருக்கின்றன. அவைகளைப்
பழுது பார்க்க வேண்டும். அவைகளுக்கு வர்ணம் பூசி, புதிய
உறுப்புகளைப் போட்டுவிட வேண்டும். ஒரு இலாகா தனக்குப்
பிடிக்கவில்லை என்று அந்த பஸ்களை ஏலம் விடுகிறது. அவைகளை
ஓட்ட முடியாது என்று ஏலம் விடுகிறது. இன்னொரு இலாக்கா

அந்த பஸ்களை ஏலத்தில் எடுத்துக் கொள்கிறது. அந்த
பஸ்களை பல்லவன் போக்குவரத்துக் கழகம் சிறு நடங்களிலே
விட்டு பயன்படுத்திக் கொள்ளலாம். சோழன் போக்குவரத்துக்
கழக ரூட்டுகளில் 180 மைல்கள் வரைகூட பிரயாணம் போகின்ற
ரூட்டுகள் இருக்கின்றன. அவர்களிடம் உள்ள இருப்புத்
தொகை, கடன் தொகை இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம்
பார்த்து, பஸ்களை வாங்குகிறார்கள். இப்போது அதிகமான
பஸ்களை ஏலத்தில் எடுத்தவர் யார் என்று பார்த்தால், தஞ்சை
மாவட்டத்தில் சோழன் போக்குவரத்துக் கழகம்தான் என்பது
தெரிகிறது. அவர்கள் பஸ்களை ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள்.
இந்த முறையை விட்டுவிட வேண்டும். ஏற்கனவே டி.வி.எஸ்.
நிறுவனத்தில் நல்ல முறைகள் இருந்தன. அங்கே பஸ்ஸை
எடுத்தவுடன் அந்த கண்டக்டரும் டிரைவரும் இன்வாய்ஸை
ஒத்து எழுதிக்கொண்டு வரவேண்டும். அந்த டி.வி.எஸ்.
கண்டக்டரும், டிரைவரும்தான் இந்தப் பணியிலே இப்போது
இருக்கின்றார்கள். டி.வி.எஸ். நிறுவனத்தில் இருந்த முறைகள்
நல்ல முறைகள் என்று கருதினால், நாமும் அதே முறைகளை
எல்லாக் கார்ப்பரேஷன்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.
காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்க, 10, 15 நிமிடங்கள்
என்று இருந்தாலும்கூட, அதைத் தவிர்ப்பதற்கு, டி. வி. எஸ்.
நிறுவனத்தில் இருந்த முறைகளை நாம் கையாள வேண்டும்.
ஒரு சிறப்பான திட்டத்தை அந்தக் கம்பெனி வைத்திருந்தது
என்றால், அதை நாம் விடத் தேவையில்லை. அப்படிப்பட்ட
சிறப்பான திட்டத்தை மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கும்
விஸ்தரித்து அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லிக்
கொள்கிறேன். 1972ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஆறு
ஆண்டுக் காலம் ஓடி இருக்கிறது. நமக்கு நல்ல அனுபவம்
வந்திருக்கிறது. அந்த அனுபவங்களை நாம் பயன்படுத்திக்
கொள்ளவேண்டும்.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் தற்காலிகமாக நின்றுவிடுவதைத்
தடுக்க முடியாது. சில நேரங்களில் பஞ்சர் ஆகிவிடுகின்றது.
காராக இருந்தால், கொஞ்ச தூரமாவது பஞ்சராக
இருந்தாலும், நகர்த்திக் கொண்டு வரலாம். பஸ்களில்
அப்படி ஏற்பட்டால், கொஞ்ச தூரம்கூட நகர்த்த முடியாது.
டவுன்களில் ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களில் பஞ்சர் ஏற்பட்டால்,
அங்கேயே சரிபார்த்துக் கொள்ளலாம். ஆகவே அதிக
தூரம் போய்க் கொண்டிருக்கின்ற எக்ஸ்பிரஸ் பஸ்களில் ஒரு
குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, டயர்கள் நன்றாக
இருந்தாலும், மாற்றிவிட வேண்டும். ரிட்ரீட் பண்ணி
மறுபடியும் சுத்தம் செய்து டயர்களை மாற்றக்கூடாது.
அப்படிப்பட்ட டயர்களை எக்ஸ்பிரஸ் பஸ்களிலே உபயோகிக்கக்
கூடாது என்று ஒரு இலாக்கா பூர்வமான உத்தரவைப் போட
வேண்டும். அதை இந்த அரசு உடனடியாகப் போட

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புது டயர்கள் குறிப்பிட்ட காலம் ஓடிவிட்ட பிறகு, அதைச் சரி செய்து மறுபடியும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்கு மாட்டாமல், அதை டவுன் பஸ்களிலே மாற்றிவிட்டு, அந்த பஸ்களுக்கு புது டயர்களைப் போட வேண்டுமென்று இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். நாமே போராட்டத்தை வரவழைப்பது போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. அது தேவைதானா? அவர் அதைப்பற்றி மேலே பேசாமல் விட்டுவிட்டார்கள். நான் இப்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சொன்னார்கள். அது பத்திரிகைச் செய்தியாகவும் இருக்கிறது. அவர்கள், ''நான் ஒரு விழாவில் கலந்துக் கொண்டேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கப் பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன்'' என்று சொன்னார்கள். நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்ற முறையில் கூட கலந்து கொள்ளவில்லை, நான் அந்தப் பேரவையின் செயலாளர் பொறுப்பில் இருந்த காரணத்தினால், கலந்துக் கொண்டேன் என்று சொன்னார்கள். அமைச்சராக இருக்கின்ற அவர் ஒரு தொழிற் சங்கப் பேரவையின் பொறுப்பிலே இருப்பதாகச் சொல்கின்றார்கள்.

(பிற்பகல் 1-10)

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிற் சங்கப் பேரவைப் பொறுப்பில் நான் இல்லை. தொழிற் சங்கத்தில் நான் எந்தப் பொறுப்பிலும் இல்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கப் பிரிவுச் செயலாளராக இருக்கிறேன். 10 செயலாளர்களுள் நானும் ஒருவன்.

திரு. கோ. சி. மணி: சந்தேகத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறீர்கள். நன்றி. அங்கே அவர் பேசியிருக்கிறார். அப்படிப் பேசிய பேச்சு பத்திரிகையில் வர நியாயமில்லையே என்றுதான் சொன்னார்கள், அந்தக் கூட்டத்தில்கூட நான் அப்படிப் பேசவில்லை என்று அவர் சொல்லவில்லை. ஆக அவர் பேசியிருப்பது உண்மை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் எங்கும் அப்படிப் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: ரொம்ப நன்றி. அவர் இதைச் சொல்வார் என்று தெரிந்துதான் கேட்டேன். அந்த விவகாரத்தை முடித்துக்கொள்ளக் கேட்டேன். அப்படிப் பேசவில்லை. பேசியிருந்தால் தவறு.

திரு. க. அறிவழகன்: திரு கோ. சி. மணி அவர்கள் தீர்ப்பு அளிக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி: அது நியாயம் என்று கருதுகிற நான் அநியாயம் என்று தீர்ப்பு அளிப்பதில் என்ன தப்பு? இன்னும் சொல்லக் காரணங்கள் இருக்கின்றன. நேரமில்லை. சொல்லி முடிக்க முடியாது.

டிரான்ஸ்போர்ட்டைப் பொறுத்தவரைக்கும், போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரைக்கும், லாப நஷ்டம் ஏற்படக் காரணமாகிய மற்றொரு விஷயத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்வது சரியோ, தப்போ, எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். ஸ்பேர் பார்ட்களை அவரவர்கள் இஷ்டத்திற்கு வாங்கி ஸ்டாக் பண்ணிவிடுகிறார்கள். வரவு செலவில் செலவாகக் கணக்கு எழுதிவிடுகிறார்கள். அதனால் லாபம் குறைகிறது. தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் போனஸ் குறைகிறது. இது தவறானதென்று பொதுமக்கள் பேசுகிறார்கள், தொழிலாளர்கள் பேசுகிறார்கள். இது உண்மையாக இருந்தால், இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். இதை மாற்ற வேண்டும். அதற்காக ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டாமென்று சொல்லவில்லை. 1980ஆம் ஆண்டுக்கு 1978ஆம் ஆண்டே வாங்கி வைக்க வேண்டுமென்பதில்லை. இப்போது மலிவாகக் கிடைக்கிறதென்று காரணம் சொல்லலாம். அதற்காக ஒரு சிறப்பு நிதியைத் தேடிக்கொண்டு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்க வேண்டுமே தவிர, வருகின்ற லாபத்திலிருந்து இதைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நான் ஒரு கேள்வி மூலம் அமைச்சரவர்களைக் கேட்டு, அவரும் இந்த அவையிலே பதிலளித்திருக்கிறார்கள். சோழன் போக்குவரத்துக் கழகத்தில் ஏறத்தாழ 129 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அது இந்த அரசு வந்த பிறகல்ல. எமர்ஜென்சி காலத்தில் செய்திருக்கிறார்கள். அதை ஒத்துக்கொள்கிறேன். அப்போது ஏற்பட்ட தவறுகளை, அப்போது ஏற்பட்ட சங்கடங்களை, அப்போது ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், களையவும்தான் நாம் கூடியிருக்கிறோம். ஏற்கெனவே அமைச்சரவர்கள், வேலையில்லாத காரணத்தால் வேலை நீக்கம் செய்திருக்கிறார்களென்று சொன்னார்கள். மேலும் அதைத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறோமென்றும் சொன்னார்கள். 'அங்கே வேலை

யில்லை என்று அறிவித்துவிட்டீர்கள், பிறகு தொழில் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள், இந்தக் காரணத்தை வைத்து மீண்டும் வேலையில்லை என்றுதானே அவர்கள் சொல்வார்கள்; நீங்கள் தொழில் கோர்ட்டின் முடிவிற்குக் காத்திராமல் அவர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் அளிக்க வேண்டும்' என்று நான் சொன்னேன். அதே அடிப்படையிலே அவர்களும் சொன்னார்கள். அரசிடத்தில் மனு கொடுக்கக்கூட ஊர் ஊராக நடந்து, பிச்சை எடுப்பதுபோல் வந்தார்கள். அவர்கள் போராடவில்லை, மொட்டை அடித்துக் கொள்ள வில்லை, சாதாரணமாகத்தானே இருக்கிறார்களென்று விட்டு விடாதீர்கள். அவர்கள் அதிகச் சத்தம் போடவில்லையே, ஊர்வலம் நடத்தவில்லையே, மொட்டை அடித்துக் கொள்ள வில்லையே என்று விட்டு விடாதீர்கள். நீங்கள் செய்வீர் களென்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள், எங்களைப் போன்றவர்கள், நீங்கள் செய்வீர்களென்று சொல்லியிருக் கிறோம். இதற்குப் பிறகாவது அதைப்பற்றிப் பரிசீலித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு வேலை அளிக்கும் வாய்ப்பு இருக்கிறது. பொறியியல் கழகம் அமைத்திருக்கிறீர்கள். அதனால் வேலைகள் செய்ய இடமிருக் கிறது. நான் வேண்டிக் கேட்டுக்கொள்வேன், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று. இந்தப் பிரச்சினை பற்றி இவ்வளவு நெருக்கடியில் பேச வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டேன். நண்பர் திரு. வீராசாமி அவர்கள்கூட பேச ஏராளமான விவரம் வைத்திருக்கிறேன், பேசுகிறேன் என்று சொன்னார்கள். இதைச் சொல்வதற்காக, 'பேசுகிறேன்' என்று கடிதம் மூலம் எழுதித் தெரிவித்தேன். எந்த அரசியல் கட்சியும் அதில் இல்லை. இருக்கிறவர்கள் தொழிலாளர்கள். அவர்கள் எந்தச் சங்கத்தில் இருக்கிறார் களென்று பார்க்காதீர்கள். வேலை கொடுத்தால், அவர்கள் உங்கள்கீழ்தான் வருவார்கள். அவர்கள் அந்தக் காலத்திலே நீக்கப்பட்டு, உங்கள் காலத்திலே வேலைக்கு மீண்டும் வருவதால் உங்களைத்தான் நம்புவார்கள், உங்களைத்தான் பெருமையாகக் கருதுவார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துக் கழகங்கள் நடத்தும் துரித பேருந்துகளை கும்பகோணம் பஸ் நிலையத்திலும், மதுரை பஸ் நிலையத்திலும் பார்க்கும்போது. ஒவ்வொரு பேருந்திலும் இடம் இல்லை என்று சொல்லும் நிலையைக் காண்கிறோம். பஸ்களில் இடம் கிடைக்கவில்லை என்று போகிறார்களே தவிர, பஸ்களுக்கு ஆள் கிடைக்கவில்லை என்ற நிலை இல்லை. இந்த பஸ்கள் போன பிறகு, அதே இடத்தில் சத்தம் போட்டுக் கூப்பிடு கிறார்கள். சென்னைக்கு, நாகர்கோவிலுக்கு பஸ் இருக்கிற தென்று கூப்பிடுகிறார்கள். 'ஆம்னிபஸ்' விடுகிறார்கள். ஒரு மணி நேரம் கழித்து அந்த பஸ்கள் புறப்படுகின்றன. அதே

போன்று எந்தெந்த ரூட்டுகளில் போக்குவரத்துக் கழகங்களின் பஸ்கள் ஓடுகின்றனவோ, அந்தந்த ரூட்டுகளில் மேலும் இன்னொரு பஸ் போட்டால் என்ன? இருக்கைகளை அதிகரிக்க முடியாது. 35, 40 இருக்கைகளுக்கு மேல் அதிகரிக்க முடியாது. இன்னொரு எக்ஸ்பிரஸ் பஸ் விடலாம். குறிப்பாக பாண்டிச்சேரியிலிருந்து ஆடுதுறை வழியாக பழனிக்கு ஒரு பஸ் போயிற்று. அதை நிறுத்திவிட்டார்கள். காரணம் நஷ்டத்தில் ஓடுகிறதென்று சொல்கிறார்கள். அவ்வளவு பெரிய ஸ்தலத்திற்குப் போகும் பேருந்தை நிறுத்த வேண்டிய தில்லை. இதையெல்லாம் நீங்கள் விடவேண்டும். எமர்ஜென்சி காலத்தில் எந்த பஸ்களையெல்லாம் நிறுத்தியிருக்கிறார்கள், என்ன காரணமாக நிறுத்தினார்கள், அது சரிதானா, அது நியாயம்தானா என்பதைப் பரிசீலித்து எல்லாத் தடங்களின் புள்ளி விவரத்தையும் எடுத்து, நிறுத்தப்பட்டுள்ள எக்ஸ்பிரஸ் பஸ்கள் குறித்து மறுபரிசீலனை செய்து, பஸ்களைவிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறியிருக்கிறார்கள். நிர்வாகத்திலே இன்னும் கடைப்பிடிக்க வேண்டிய சில முறைகளையும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசுகின்றபோது, சோழன் போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான பேருந்துகளையெல்லாம் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து வாங்கிக் கொள்கிறார் களென்று குறிப்பிட்டார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் அந்த வழித்தடங்களில் விடப் பட்டவை நெடுந்தூரப் பயணத்திற்குப் பயன்படுத்தப் படுவதில்லை. அவை மீண்டும் மாவட்டப் பேருந்துத் தடங்களில் அனுப்பப்படுகிற காரணத்தால், சோழன் போக்குவரத்து மட்டுமல்லாமல் ஏனைய போக்குவரத்துக் கழகங்களிலும் அந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. அந்தப் பேருந்துகள் குறைந்தது 8, 10 ஆண்டுகள் ஓடத் தகுதியுடையன என்ற முறையில் அவை விடப்படுகின்றன. மேலும் சோழன் போக்கு வரத்துக் கழகத்திலுள்ள பேருந்துகள் செம்மையான முறையில் இயங்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, சென்னையிலே உள்ள பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தினர் 250 சேஸிகளை வாங்கும்போது, அவைகளை அசோக் லேலண்டிலிருந்து வாங்காமல், ஏன் கல்கத்தாவைச்

சேர்ந்த டெல்கோவிலிருந்து வாங்கினார்களென்று கேட்டார்கள்.
அதில் ஏதேனும் முறைகேடுகள் நடந்திருக்குமோ என்று
ஐயப்பட்டார்கள். அதுபற்றித் தெளிவுபடுத்தக் கடமைப்
பட்டிருக்கிறேன். இந்தப் பேருந்துகளை உலக வங்கியிட
மிருந்து கடன் பெற்று வாங்கினார்கள். தனிப்பட்ட அதிகாரி
வாங்கவில்லை. அறுவர் கொண்ட குழுதான் அதைப்பற்றிப்
பரிசீலித்தது. டெக்னிக்கல் கமிட்டியின் முடிவுப் பிரகாரம்
டெல்கோவைச் சேர்ந்த பேருந்துகளுக்கு நிர்வகிக்கின்ற செலவு
குறைவாக இருக்கிறதென்றும் ஹை ஸ்பீட் டீசல் ஆயிலின்
தேவையும் மிகக் குறைந்த அளவுக்கு இருக்கிறதென்றும்
தெரிகிறது. மேலும் முக்கியமாக டயரைப் பொறுத்த
வரைக்கும், டெல்கோ டயர் தேய்மானம் குறைவாக
இருக்கிறது. அசோக் லேலண்ட் டயரின் தேய்மானம் மிகையாக
இருக்கிறது. டெக்னிகல் கமிட்டி எடுத்த முடிவை உலக
வங்கியும் ஏற்று, அதன் அடிப்படையில் வாங்கப்பட்ட
தென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அத்தோடு டெல்கோ சேசிஸ் வாங்கிய காரணத்தால், 250
சேசிஸ்க்கும் ரூ. 1 கோடி மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. அசோக்
லேலண்டு வாங்கியிருந்தால், ரூ. 1 கோடி எக்சைஸ் ரிலீப்
கிட்டியிருக்காது. ரூ. 15.8 லட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கும்.
டயர் தேய்மானம் மிகையாக இருப்பதால், அசோக் லேலண்டு
வாங்கவில்லை. அதை டெக்னிகல் கமிட்டி முடிவு செய்திருக்
கிறது, ஓர்ல்டு பேங் போர்டு அப்ரூவ் செய்திருக்கிறது
என்று கூறிக்கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி:</u> அதையும் ஒரு டெக்னிகல்
கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. இந்தியாவில் தயாரிக்கப்
படுகிற அசோக் லேலண்டு சேசிஸ் நல்லவை என்று மற்ற
மாநிலங்கள், ஆந்திர மாநில அரசாங்கம் இங்கே வாங்குகிறது,
கர்நாடக அரசு இங்கே வாங்குகிறது. அப்படியிருந்தாலும்,
அதனால் அரசுக்கு இழப்பு இருந்தாலும்கூட, நம்முடைய
இன்றைய முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் தொழில்
மானியத்தின் மீது பேசும்பொழுது, இந்த நாட்டில் இருக்கும்
தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற பொருள்களை உற்சாகப்
படுத்துவதற்காக கூடுதல் விலையானாலும் அதைத்தான்
அரசாங்கம் வாங்கும் என்று சொன்னார்களே, ஏன் அது
பின்பற்றப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> விலை கூடுதலாக
இருந்ததால் மட்டுமல்ல, குறைபாடுகளும் இருந்ததால்தான்
பேருந்துகளை வாங்கவில்லை என்று, தெளிவுபடுத்துகிறேன்.
மாண்புமிகு உறுப்பினர் அசோக் லேலண்டு நிறுவனம் தயாரிக்கும்

சேசிஸில் டயர் தேய்மானம் அதிகமாக இருப்பதை விளக்கிக் கூறி, அந்தக் குறையை நிவர்த்தி செய்தால், தமிழகத்தைச் சேர்ந்த பேருந்துகள் வாங்குவதுபற்றி பரிசீலிக்கப்படும்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி:</u> நான் தெளிவாகக் கூறுகிறேன். மற்ற மாநில அரசாங்கங்கள் ஏராளமாக லேலண்டு பஸ்களை வாங்கியிருக்கிறார்கள். மொத்தமாக வாங்குவதில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறதா? ஒரு சில பஸ்கள்தான் வாங்கப்பட்டிருக்கின்றனவா? இந்த யோசனையை அரசாங்கமே கம்பெனிக்குச் சொல்லக்கூடாதா? தமிழ்நாட்டில் உள்ள உங்கள் கம்பெனியை உற்சாகப்படுத்த விரும்புகிறோம், தரத்தை உயர்த்துங்கள் என்று, அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாதா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> அரசாங்கம் இந்த யோசனையைக் கூறி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குறையை நிவர்த்தி செய்வதாகவும் கூறியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி கூறுகிற போது, பெருமாள் என்ற சிலோன் அகதி, ஐந்து ஸ்டேட் லாரிக்குரிய நேஷனல் பெர்மிட் ஒன்றை வேறு ஒருவருக்கு மாற்றிவிட்டார், சட்டத்தில் அவ்வாறு மாற்றுவதற்கு இடம்இல்லை என்று கூறினார். சட்டப்படி மாற்றுவதற்கு இடம் இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். மாற்றியிருப்பதுபற்றித் தகவலும் வரவில்லை. அப்படி மாற்றப்பட்டிருக்குமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், அரசின் நாட்டுடமையாக்கும் கொள்கையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கூறினார்கள். அரசின் நாட்டுடமையாக்கும் கொள்கை ஏனோ தானோ என்று இருப்பதாகப் பொருள்படும்படி, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கூறினார்கள். மற்றும் சிலர், நாட்டுடமையான பேருந்துகள் மக்களின் நலன்களை மனதிற்கொண்டு செயல்பட வேண்டுமென்றும், தனியார் பேருந்துகள் நல்லநிலையில் இயங்குகிற நேரத்தில் அதனைப் பொறுத்துத்தான் முடிவினை எடுக்க வேண்டுமென்றும் கூறினார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில், ஆட்சிப் பொறுப்பேற்று ஒன்பது மாத காலத்தில் அதற்கு முன்பு இருந்த 48%யை 52% ஆக ஆக்கி பேருந்துகள் நாட்டுடமையாக்கப் பட்டிருக்கின்றன. இதோடு, நாட்டுடமையாக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் சாப்டர் 4, 4 (ஏ) விதிகளின் கீழ் திரும்பவும் நிதிநிலைக்கேற்ப திட்டம் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்தமாக

திடீரென்று நாட்டுடைமையாக்குவதற்கு இடைஞ்சலாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல், உச்ச நீதி மன்றத்தில் வழக்கு இருந்து வருவதால், வழக்கு முடிவு தெரிந்தவுடன் நாட்டுடைமைக் கொள்கை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி எண்ணுவதைவிட அதிவேகமாக கடைப்பிடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் மற்றொரு நிலையினைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், நாட்டுடைமையாக்கப்படும் தத்துவம் செல்வம் ஓரிடத்தில் குவிந்து விடக்கூடாது, அதே நேரத்தில் பொது மக்களுக்கு நல்ல பலன் கிடைக்க வேண்டும், தொழிலாளர்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும் என்பதாகும். இவற்றின் அடிப்படையில் செல்வம் ஒரே இடத்தில் குவிவது தவிர்க்கப்படும் வண்ணம் பல பேருந்துகள் உரிமையாளர்களிடமிருந்து எடுக்கப்படும் நிலையில் இருக்கின்றன. தொழிலாளர்களின் நலன்களுக்காக போக்குவரத்துக் கழகங்கள் சில காரியங்களைச் செய்து வருகின்றன. மக்களின் நலன்களை மனதில் கொண்டு செயல்படவேண்டுமென்று இந்த அரசு இருப்பதால், ஏற்கனவே இயங்கி வருகிற ஏழு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நட்ட நிலையில் ஓடி வருகின்றன. அந்த நிலையை மீட்டு நல்லதொரு பொருளாதார நிலையை போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்துவதன் மூலம், புதிய வழித் தடங்களில் மக்களின் நியாயமான தேவைகளுக்கேற்ப பேருந்துகள் விட வாய்ப்பு ஏற்படும். அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அவர்கள் நல்வாழ்வுக்காக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். பேருந்துகளைச் செம்மையான முறையில் ஓட்டி லாப நிலைக்குக் கொண்டுவரும் பணியில் போக்குவரத்துக் கழகங்கள் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன, ஏழு போக்குவரத்துக் கழகங்களும் ஒட்டு மொத்தமாக ஏறத்தாழ 12 கோடி நட்டத்தில் இயங்கி வருகின்றன. ஆனாலும் தனிப்பட்ட முறையில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகங்கள் வருவாய் நிலையில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்,

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்பற்றிக் கூறுகிறபொழுது, அரசு ஏனோ தானோ என்று கடந்த ஐந்து மாத காலமாக இருந்துவிட்ட காரணத்தால்தான், பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்களிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இதில் அரசின் நிலையைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகஸ்டு மாதம் நடந்த பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்திற்குப் பிறகு செப்டம்பர் 3-ஆம் தேதி ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் அரசுக்கு, நிர்வாகத்தினரும் தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்களும்

தங்களுடைய கோரிக்கைகளை அனுப்புகிறபொழுது, அரசு அவர்களைக் கலந்து விரைவில் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்ற உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் செப்டம்பர் 3-ஆம் தேதி ஏற்பட்ட உடன்பாட்டிற்குப் பிறகு, அந்த உடன்பாட்டிலே கையெழுத்திட்ட திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் உள்ளிட்டு, ஐக்கிய சங்கத்தைச் சேர்ந்த பல சங்கங்கள் டிசம்பர் 12-ஆம் தேதி வரை எந்தவிதக் கோரிக்கையும் கொடுக்கவில்லை.

In consultation with the signatories to the settlement the Government will specify matters for bi-partite discussions.— என்று பொருள்பட உடன்பாடு செயல்பட்டது. பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கும்போது, கொடுக்கப்பட்ட கோரிக்கைகளைப் பேச்சு வார்த்தைக்கு அனுப்பலாமா என்று கேட்கப்பட்டது. கோரிக்கைகளை, உண்மையிலேயே வேலை நிறுத்தம் நடந்தபொழுது, அன்று தி.மு.க.வைச் சேர்ந்த தொழிற் சங்கம் கொடுக்கவில்லை என்று தெளிவுபடக் கூறிக்கொள்கிறேன். ஐக்கிய சங்கத்தைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள், அதுவும் தேசிய காங்கிரசைச் சேர்ந்த தொழிற் சங்கமும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சி.ஐ.டி.யு. தொழிற் சங்கமும் கோரிக்கைகள் கொடுத்திருந்தன.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, தவறான கருத்தை உண்டாக்கிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். தி.மு.க. தனித்து அல்ல. மொத்தமாக ஐக்கியக் குழு ஒன்று அமைத்து, அதன் மூலமாக 33 அம்சக் கோரிக்கைகள் அச்சிட்டு, தலைவர் திரு. எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை, பொதுச் செயலாளர் திரு. காட்டூர் கோபால் என்ற தி.மு.க.வைச் சேர்ந்தவர், அனுப்பியிருக்கிறது, தி.மு.க. தனியாகக் கோரிக்கை அனுப்ப வேண்டுமென்பது இல்லை. எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஐக்கியக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அக் குழுவின் சார்பில் திரு. காட்டூர் கோபால் இருக்கிறார். 24-10-77 அன்று அரசாங்கத்திற்கு கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> துணைத் தலைவர் அவர்களே, அந்த ஐக்கிய சங்கத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் ....

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> அமைச்சரின் பேச்சு முடியும் வரை அவைக் கூட்டம் நீடிக்கப்படும்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: அந்த உடன்பாட்டுக்குப் பிறகு, பேச்சுவார்த்தைக்கு வேண்டிய கோரிக்கைகளையெல்லாம் உடனடியாக அனுப்புவதாகச் சொல்லிச் சென்ற உறுப்பினர்கள் உடனடியாக அனுப்பவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் விரைவுபடுத்தி கோரிக்கைகளை அனுப்புவதாகக் கூறினார்கள். திரு. அந்தோணிப் பிள்ளை, திரு. காட்டூர் கோபால் ஆகியவர்கள் உள்ளிட்ட அந்த ஐக்கியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அனுப்பிய கோரிக்கைகள் 25-12-77 அன்றுதான் வந்து சேர்ந்தன என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு 12-1-1978 அன்றுதான் பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக ஊழியர்கள் சங்கமும், 18-1-1978 அன்றுதான் தமிழ் நாடு அரசு போக்குவரத்து மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பொறியியல் மேற்பார்வையாளர் சங்கமும் கோரிக்கைகளை அனுப்பின. உடன்பாட்டில் கையெழுத்திட்ட சங்கங்களுடைய ஆலோசனையின் பேரில் அவர்களோடு கலந்து தான் இருதரப்பு பேச்சு வார்த்தையை நடத்த கோரிக்கைகளை அனுப்ப வேண்டுமென்று உடன்பாடு இருந்த காரணத்தால், அவர்கள் இறுதியாக அனுப்பிய தேதியான 18-1-1978 அன்றைக்குப் பிறகுதான் அரசு நடவடிக்கையை எடுத்தது என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

19-1-1978 அன்று, அரசுக்கு அனுப்பிய கோரிக்கைகளிலே, அதிலே உள்ள மற்றச் சங்கங்களுடைய பல கோரிக்கைள் இல்லாத காரணத்தால் மீண்டும் 10-2-1978 அன்று எல்லாவித கோரிக்கைகளையும் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று அரசு அந்தச் சங்கங்களுக்குக் கடிதம் அனுப்பியது. அப்படி அனுப்பிய போதிலும், திராவிட முன்னேற்றக் கழகச் சங்கமும், மற்ற தேசியக் காங்கிரசைச் சேர்ந்த சங்கங்களும் உள்ளிட்ட ஐக்கியச் சங்கக் குழு 13-2-78, 16-2-78, 24-2-78 ஆகிய தேதிகளில் நடந்த பேச்சுவார்த்தைகளைப் புறக்கணித்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வரவில்லை. அதிலே இந்திய தேசியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சி. பி. ஐ., சி. பி. எம்., அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சங்கங்கள் பங்கேற்றன. இறுதியாக இப்போதுதான் ஐக்கியச் சங்கத்தைச் சேர்ந்த மற்றச் சங்கங்களும் இதிலே பங்கேற்று பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை உள்ளபடியே சுமுகமான முறையில் நடந்து வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்பதுதான் எங்களுடைய உண்மையான கொள்கை. நாங்கள் சொல்லுவது, அன்றைய தினம் தொழிலாளர்கள் சார்பிலே எடுத்து வைத்த பிரச்சினைகளைப் பற்றி அதிகாரிகள் இருதரப்பு பேச்சுவார்த்தையிலே பேசி

யிருந்தால், அந்தப் பிரச்சினைகள் அப்போதே முடிந்திருக்கும். இந்த இக்கட்டான நிலை அரசாங்கத்திற்கு வந்திருக்காது. அன்றைய தினம், பெஸ்டிவல் அட்வான்ஸ், ஷூ அலவன்ஸ், யூனி பாரம் அலவன்ஸ் ஆகியவற்றை மட்டும் பேசுவோம் என்று சொன்ன காரணத்தால்தான், இந்தப் பேச்சுவார்த்தை முறிந்தது. இருந்தாலும் இந்த மாதம் 31-ஆம் தேதிக்குள் பிரச்சினைகள் முடிந்துவிட்டால், வேலை நிறுத்தத்திற்கு வாய்ப்பில்லை. எனவே அதைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு.சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனைக்கு நன்றி கூறுகிறேன். ஆரம்பத்திலிருந்தே ஐக்கியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவில்லை என்றாலும், இடது கம் யூனிஸ்ட் இயக்கம், வலது கம்யூனிஸ்ட் கட்சியின் இயக்கம் ஆகிய வைகள் கலந்து கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கோரிக்கைகளில் உள்ள உடை அலவன்ஸ் பிரச்சினை, மருத்துவ அலவன்ஸ் பிரச்சினை ஆகியவற்றையும் அரசு பரிசீலிக்க வேண்டு மென்று கோரிய காரணத்தால், அவையும் பரிசீலிக்கப்பட்டன. மற்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்று சொல்ல வில்லை. எல்லாக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு, தொழிலா ளர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையே ஒரு நல்லுறவு ஏற்படும் வண்ணம் அரசாங்கம் செயல்படுகிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவில் இந்தப் பேச்சுவார்த்தைகள் முடிந்துவிடும். இந்த ஐந்து மாத காலத்திற்கு அரசாங்கம் பொறுப்பு இல்லையென்றாலும், ஏதோ ஒரு காரணத்தால் அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாமல் போனது என்றாலும், தொழிலாளர் நலன் காக்கும் எண்ணத்தோடு இதை விரைவிலே இந்த அரசு தீர்த்து வைக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சாலைகள், பாலங்கள் மேம்பாடுகளைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களும் பேசினார்கள். சாலைகளையும், பாலங்களையும் செம்மையான முறையில் அமைப்பதற்கும், இருக்கிற சாலைகளைச் செப்பனிடவும், கடந்த முப்பது ஆண்டு களாக அரசினுடைய நிதி நிலைமை போதிய அளவு இல்லாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர் கள் தெளிவாக உணர்வார்கள் என்று கருதுகிறேன். தமிழக அரசைப் பொறுத்த வரைக்கும், சாலைகளும், பாலங்களும் நல்ல முறையில் செப்பனிடப்பட வேண்டும், போதியசாலைகள் அமைக்கப் படவேண்டும், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்று நோக்கத்தோடுதான், சாலைகளுக்கும், பாலங்களுக்கும் ஒதுக்கு கின்ற நிதியை 'கோர் செக்டார்' பிரிவுக்கு உட்படுத்தி அதிக நிதியை நிரந்தரமாகக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை அணுகியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு கோ. சி. மணி தலைமை)

தமிழகத்திலுள்ள 86,840 கிலோமீட்டர் சாலைகளில் பேருந்துகள் செல்ல வசதியாக உள்ளவை 38, 815 கி. மீ. தான். இதற்குக் காரணம் நிதி நெருக்கடிதான். பல பகுதிகளில் சாலைகள், சிறு சிறு பாலங்கள் இன்னும் முடிக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் உள்ள 53,468 கி. மீ. சாலைகளில் 6,334 கி. மீ. சாலைகள் தான் பேருந்துகள் செல்லுகின்ற அளவுக்கு நல்ல தகுதியில் இருக்கின்றன. தமிழக அரசைப் பொறுத்த வரையில், நிதி நிலைத் தட்டுப்பாடு இருந்தபோதிலும், கிராமங்களின் நலனைக் கருதி இதை மூன்று முக்கியக் கட்டங்களில் அமுலாக்க முடிவு செய்திருக்கிறது. இதுகாறும் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த பகுதிகளில், வழித்தடங்கள் சரியில்லாத நிலையில் உள்ள பகுதிகளை முதற்கண் மேற்கொள்ள முடிவு செய்து, அதன்படியே நடவடிக்கை எடுத்து வருகிறோம். அத்தகைய சாலைகளைப் பழுதுபார்ப்பதற்காக ஏறத்தாழ 9 கோடி ரூபாய் தேவையென்ற நிலை இருந்தாலும், படிப்படியாக அந்தத் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. அத்தோடு சிறுசிறு குறைபாடுகளை அகற்றுவதன் மூலம் பல பகுதிகளில் புதிதாக சில பேருந்துகளை விடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்ற காரணத்தால், கிராமப் பகுதிகளில் சிறுசிறு கல்வர்ட் போன்றவைகளைப் புதிதாக அமைத்து சில வழித்தடங்களை ஏற்படுத்துவது இரண்டாவது கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. மூன்றாவது கட்டமாக, மத்திய அரசினுடைய உதவியைக் கொண்டு, மாநில அரசினுடைய நிதியைப் பொறுத்து, ஐந்து கிலோமீட்டருக்கு உள்ளிட்ட இணைப்புச் சாலைகளை கிராமங்களிலே ஏற்படுத்துவதன் மூலம் பல பகுதிகளில் பேருந்துகளை விடும் வாய்ப்பு ஏற்படும் என்ற முறையில், இந்த மூன்று திட்டங்களையும் இந்த அரசு தன்னுடைய நிதிநிலைமைக்கேற்ப அமுலாக்க இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகத்திலே பல மேம்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், குறிப்பாக சாலைகள்-பாலங்கள் பகுதியிலே நிர்வாகத் தூய்மையை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு எடுத்த நடவடிக்கைகளின் பலனாக இதுவரை 3 கோட்டப் பொறியாளர்கள், 2 உதவிக் கோட்டப் பொறியாளர்கள், 2 உதவியாளர்கள், 2 இளநிலைப் பொறியாளர்கள் தாற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன்.

Administrative purity இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாலைகள், பாலங்கள் அமைப்பதிலே தரமான சாலைகள் அமைக்க வேண்டுமானால், துரித காலத்திலே சிக்கனமான முறையில் அமைக்க வேண்டும். இது குறித்து இருந்த கான்ட்ராக்ட் முறையை மாற்றி, 'கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் பொறுப்பிலே சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை அமைக்கிற திட்டத்தை அரசு மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். அத்தோடு, பல பகுதிகளில் இரயில்வே லைன் உள்ள பல பகுதிகளில் மேம்பாலங்கள் இல்லையென்று கூறினார்கள். வருகிற ஆண்டிலே சேலம்—உளுந்தூர்பேட்டை சாலையில் தேவியாகுறிச்சியில் ஒரு இரயில்வே மேம்பாலமும், கடலூர்—சித்தூர் சாலையில் பண்ருட்டியின் அருகில் ஒரு மேம்பாலமும், சென்னை—தஞ்சை சாலையில் கும்பகோணம் அருகில் பெருமாள் கோயில் என்ற இடத்தில் ஒரு மேம்பாலமும், மத்திய அரசின் உதவியோடு அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு கோ. சி. மணி): பெருமாள் கோயிலா? சுந்தரப் பெருமாள் கோயிலா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: சுந்தரப் பெருமாள் கோயில்தான்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு கோ. சி. மணி அவர்கள் பேசும்போது, சோழன் போக்குவரத்தைச் சேர்ந்த 150 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பை மீண்டும் தர வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களில் பெரும்பாலோர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மீதம் உள்ளவர்களுக்குப் புதிய பேருந்துகள் விடும்போது வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1.40)

பல்லவன் போக்குவரத்துக் கழகம் உள்ளிட்டு ஏழு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள தொழிலாளர்கள் நலன் கருதி சில திட்டங்களை ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். சென்ற ஆண்டு 49 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் லாபம் ஈட்டி 20 சதவீதம்போனஸ் வழங்கிய சேரன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 75 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் அளவில் லாப நிலையில் முன்னேற்றம் கண்டிருப்பதால், சேரன் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு க்ஷேமநலத் திட்டத்தின் அடிப்படையில் 20% போனஸ் வழங்கப்படும். சென்ற ஆண்டு 85 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் லாபம் ஈட்டி 13.3% போனஸ் வழங்கிய பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 1 கோடியே 30 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் அளவுக்கு முன்னேற்றம் கண்டிருப்பதால், பாண்டியன் போக்குவரத்துக் கழகத் தொழி

லாளர்களுக்கு 20% போனஸ் வழங்கப்படும். சென்ற ஆண்டு 17 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் மட்டுமே லாபம் இருந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச போனஸ் 8.33% வழங்கப்பட்டது. இப்போது 85 லட்சம் ரூபாய் என்ற அளவில் லாப நிலை இருப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்கு 15% போனஸ் வழங்க இருக்கிறது. சென்ற ஆண்டு 3.83 லட்சம் ரூபாய் லாபம் பெற்று 8.33% போனஸ் வழங்கிய அண்ணா போக்குவரத்துக் கழகம் இவ்வாண்டு 23.32 லட்சம் லாப நிலையில் முன்னேற்றம் கண்டிருப்பதால், இவ்வாண்டு அந்தத் தொழிலாளர்களுக்கு 12%போனஸ் வழங்க முடிவு செய்துள்ளது. சென்ற ஆண்டு 13 லட்சத்து 39 ஆயிரம் நஷ்டத்தில் இருந்து 8.33 %போனஸ் வழங்கிய சோழன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 15 லட்ச ரூபாய் லாபம் பெற்றிருப்பதால், 8.33%போனஸ் வழங்கப்படுகிறது.

Thiru G. SWAMINATHAN : Sir, I want to know how the Transport Corporations could make a profit of Rs. 2.79 lakhs in 1977–78, when the total loss as on 31st March 1977 was Rs. 11,25 lakhs. What is the main reason for such a change?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்கள் க்யூமுலேட்டிவ் லாஸ் என்பதற்கும் இந்த ஆண்டு லாஸ் என்பதற்கும் கணக்கிட்டுக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். 11 கோடி ரூபாய் 'க்யூமுலேட்டிவ் லாஸ்' என்று கூற வேண்டும்.

ரூ. 48 லட்சத்து 56 ஆயிரம் நஷ்டத்தில் இயங்கி 8.33% குறைந்த பட்ச போனஸ் வழங்கிய தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் அந்த நஷ்டத்தை சரிக்கட்டி 18 ஆயிரம் ரூபாய் லாபத்தில் இருப்பதால், குறைந்தபட்ச போனஸ் 8.33% வழங்கப்படுகிறது.

சென்ற ஆண்டு நஷ்டத்தில் இருந்து 8.33% போனஸ் வழங்கிய பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டும் தொடர்ந்து நஷ்ட நிலையில் இருப்பதால்,8.33% குறைந்த பட்ச போனஸ் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு வட சென்னை தென் சென்னை இரண்டு பகுதிகளிலும் இரண்டு ஆம்புலன்ஸ் வண்டிகள் விடப்படும். போக்குவரத்துக் கழகங்களில் டீசல் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்காக இதைக் கடைப்பிடிப்பதன் காரணமாக ஏற்படும் மீதத்தில் மூன்றில் ஒரு பங்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அடுத்த நிதி ஆண்டிலிருந்து வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்

பிரதிநிதியும், நிர்வாகப் பிரதிநிதியும் தொழிலாளர்கள் பிரதிநிதியும் கொண்ட ஆலோசனைக் குழு ஏழு போக்குவரத்துக் கழகங்களிலும் அமைக்கப்படும், போக்குவரத்துக் கழகங்களின் முன்னேற்றம் கருதி, ஒவ்வொரு பணி மனையிலும் நல்ல திட்டங்களையும் ஆலோசனைகளையும் பரிந்துரைக்கக்கூடிய தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்கப்படும்,

Thiru G. SWAMINATHAN: For the year 1976–77, it is plus 46 lakhs. If there is cumulative loss, how could the profit for 1977–78 be estimated at Rs. 297 lakhs? I would like to know how this achievement was made by the Government. Another curious fact is that the total capital invested is Rs. 447 lakhs. The cumulative loss is Rs. 1125 lakhs. Have the Corporations lost the entire capital?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: க்யூமுலேட்டிவ் லாஸ் என்று 12 கோடி ரூபாய் இருப்பதை நான் கூறும்போது ஆரம்பத்தில் இடுகிற முதலீட்டை மட்டும் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால், முதலீடே போய்விடும். அவ்வப்போது வருகிற லாபமும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். லாபத்திலிருந்து நஷ்டத்தைக் கழித்துத்தான் கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டு பாலன்ஸ் ஷீட்டை எடுத்துப் பார்த்தால் தான் விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN: My point is this: The capital invested is Rs. 447 lakhs. Cumulative loss would have been arrived at only after taking into account the profit or loss every year. Otherwise, the amount of cumulative loss could not have been so much. It would mean that the Transport Undertakings have completely lost the capital invested.

The Hon. Thiru C. PONNAIYAN: The profit or loss is for the particular year. Cumulative loss mentioned is for all the years since the formation of the Corporations.

Thiru G. SWAMINATHAN: That is the point of my concern. Because of the cumulative loss, the entire capital investment would already have been lost.

The Hon. Thiru C. PONNAIYAN: That goes without saying.

அடுத்து, பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகளையுப்
......

<u>திரு ஆற்காடு நா. வீராசாமி</u>- அமைச்சர் சொல்லும்போது சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கடந்த ஆண்டு 43.39 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டது என்றும் அதற்கு 8.33 சதவீதம் போனஸ் கொடுத்தோம் என்றும் சொன்னார்கள். இந்த ஆண்டு 35 லஷசம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது. இந்த ஆண்டும் 8.33 % போனஸ் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்கலாமே என்று சொல்லிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்</u>. உறுப்பினர் தார்மீகமாக கூறுகிற உணர்வை ஏற்றுக் கொள்கிறேன். நியாயமில்லைதான். அதற்காகத்தான் மத்திய அரசாங்கம் போனஸ் திருத்தம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும் கோரியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன் சட்டப்படி அந்த நடவடிக்கை எடுககப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

<u>திரு. பி. மாணிக்கம் :</u> நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கிளப்பிய பிரச்சினை நஷ்டம் அடைந்து வந்திருக்கிற துறை யில் இரண்டு கோடி சொச்சம் லாபம் கிடைத்திருக்கிறது. அது எவ்வாறு கிடைத்தது? அதற்கான முயற்சிகள் என்ன? எந்தக் காரணங்களால் அப்படிக் கிடைத்தது என்று தெரிந்து கொண்டால், இந்த முறையில் மற்ற துறைகளிலும் நடத்தலாமே என்று யோசனை சொல்வதற்குக் கூட முடியும். லாப நஷ்டம் சம்பந்தமாக கம்பெனிகள் கணக்கு முறையில் விவாதிப்போமானால், இப்படிப்பட்ட லாபம் எப்படி அரசுக்குக் கிடைத்தது என்று சொன்னால் விளக்கமாக இருக்கும்.

THIRU G. SWAMINATHAN : My only query is this. There is a lot of difference in preparing the Balance Sheets and there are various methods of showing the depreciations and other items. I do not want to call it manipulation of the balance sheet. I want to know whether the profit has been arrived at in view of any such differences in accounting procedure or whether the profit has been actually derived by the Transport Undertakings.

THE HON. THIRU C. PONNAIYAN : Profit is really made That is all my submission now.

உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் எப்படி இந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இவ்வளவு லாபம் வந்தது என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே சொன்னேன். சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், பல குறைபாடுகள் களையப்பட்டன. நல்ல லாபத்தில் இப்போது ஓடுகின்றன. நஷ்டத்தில் ஓடுகிற போக்குவரத்துக் கழகங்களில் உள்ள குறைபாடுகளைக் களைந்து போக்குவரத்தில் பணிபுரிகிற ஊழியர்களையும் ஊக்குவிக்கிற வகையில் பல திட்டங்களை அறிவித்திருப்பதால், லாபம் கிடைக்கிறது. இன்னும் லாபம் பெற முடியும் என்றும் நம்புகிறேன்.

பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளைச் சேர்ந்த ஓட்டுனர், நடத்துனர் தங்கி ஓய்வெடுக்கும் வகையில் மதுரை, சென்னை, சேலம், திருச்சி ஆகிய நகரங்களில் எல்லா வசதிகளுடன் கூடிய ஓய்விடங்கள் வரும் ஆண்டில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் ஆட்சியில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளிலிருந்து அகற்றப்பட்ட வள்ளுவர் படங்களும் திருக்குறளும் மீண்டும் அவற்றில் இடம் பெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் நலன் கருதி நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதிலிருந்து 576 கிராமங்கள் பயன்பெறும் வண்ணம் 221 புதிய வழித் தடங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் வரும் ஆண்டில் 746 கிராமங்களுக்குப் பயன் தரும் வகையில் 232 புதிய வழித் தடங்கள் தொடங்கவும் 893 புதிய பேருந்துகள் விடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பயணிகளின் நலன் கருதி வருகிற ஆண்டில் பல்லவன் போக்குவரத்துப் பெருநகர்ப் பிரிவில் 200 பயணிகளுக்கான பஸ் ஸ்டாப் ஷெல்டர்களையும் மற்ற பகுதிகளில் 150 பஸ் ஸ்டாப் ஷெல்டர்களையும் ஆக மொத்தம் 350 பஸ் ஸ்டாப் ஷெல்டர்களை அமைக்க இருக்கிறோம்.

மத்திய அரசு, மாநில அரசு இவற்றின் தற்போதைய பட்ஜெட்டின்படி டீசல், பெட்ரோல் போன்ற எரி பொருள்களின் மீதான வரிகளினாலும், மோட்டார் வாகன வரியாலும் வரிகள் உயர்த்தப்பட்ட போதிலும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்துகளிலும் தனியார் பேருந்துகளிலும் பயணக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. அத்துடன் பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகளில் பட்ஜெட்டில் ஒரு கிலோ மீட்டருக்கு 6 பைசாவாக இருந்ததை 5.5 பைசாவாகக் கட்டணத்தைக் குறைத்திருந்தோம். இப்போது அதை 5,5-லிருந்து 5 பைசாவாக பொதுமக்கள் நலன் கருதிக் குறைக்கப்படும்.

உறுப்பினர்கள் பேசும்போது, பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள் செல்லும்போது, அங்கங்கே நின்று விடுவதாகவும் அதனால் தொல்லைகள் ஏற்படுவதாகவும் கூறினார்கள். அவற்றை உடனடியாகச் செப்பனிடுவதற்கு வழிவகை செய்யும் வகையில் அப்பேருந்துகளில் ஏற்படும் சிறு கோளாறுகளைக் கவனிப்பதற்காக 50 அல்லது 80 கிலோ மீட்டருக்கு மேல் செல்லுகிற பேருந்துகள் அனைத்திலும் ஜாக்கி, கூடுதல் டயர், தேவையான பழுதுபார்க்கும் கருவிகள் வைத்து அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

நெடுந்தூர வழித்தடங்களில் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் பழுதடைந்து நின்றுவிட்டால், பயணம் செய்யும் பொதுமக்களின் நேரம் வீணாக ஆவதைத் தடுக்கவும், சிரமங்களைக் குறைக்கவும், மாற்றுப் பேருந்து வசதி செய்து தருவதோடு அவர்களில் விரும்பும் பயணிகளுக்கு பேருந்துகள் நின்றுவிட்ட இடத்திலிருந்து மீதமுள்ள தூரத்திற்கான பயணக்கட்டணத்தை உடனே திருப்பிக் கொடுக்கவும் வேண்டும் என்ற திட்டம் 1-4-1978 முதல் அமுல்படுத்தப்படும்.

அடுத்து, 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய 'டிரை டாக்' என்று சொல்லப்படுகிற கப்பல்களைப் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றைத் தமிழகத்தில் நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே மேற்கொள்வதற்கான முயற்சியைச் செய்வதாக உறுதி கூறியிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'ஷிப் யார்டு' ஒன்றையும் தமிழகத்திலே அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மோட்டார் வாகனச் சட்டப் பராமரிப்பின் கீழ் தமிழகத்தைப் பொறுத்தவரையில், பயணப் பேருந்துகள், சுற்றுலா ஆம்னி பஸ்கள் ஆகியவைகளை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக தவறு செய்த மண்டலப் போக்குவரத்து அதிகாரி, அலுவலர்கள், கண்காணிப்பாளர், மோட்டார் வாகன ஆய்வாளர், மேல்நிலை எழுத்தர்கள், இளநிலை எழுத்தர்கள் ஆகிய 44 பேர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திறமை மிக்க அதிகாரிகளின் கடுமையான நடவடிக்கைகளின் பயனாக மோட்டார் வாகனச் சட்ட விதிகளைச் சரியாகப் பயன்படுத்தாமல் சாலைப் போக்குவரத்து விதிகளை மீறியது ஆகிய

குற்றங்களுக்காக 6749 வாகனங்களின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு, 127 உரிமங்கள் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டன. மேலும் 1998 வாகனங்களின் உரிமையாளர்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

அடுத்து, ஸ்கூட்டர், கார், ஜீப், மோட்டார் சைக்கிள்கள், மோப்பெட் போன்ற சொந்தமான வாகன உரிமையாளர்கள் மோட்டார் வாகன வரியினை மண்டலப் போக்குவரத்து அலுவலகம், காவல் நிலையம், துணைக் கருவூலம் போன்ற இடங்களில் 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஒரு வருஷத்திற்கு ஒரு முறை செலுத்துவதில் உள்ள சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் வாகன வரியினை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக செலுத்துகிற முறையினை வருகிற ஏப்ரல் 1978 லிருந்து இந்த அரசு செயல்படுத்த உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் ஆர். டி. ஓ. ஆபீஸ் ஒரே ஒரு இடத்தில் மட்டும் இருப்பதால், டிரான்ஸ்போர்ட் மற்றும் நான்-டிரான்ஸ்போர்ட் வண்டிகள் அனைத்தும் அங்கே செல்வதில் சிரமம் இருப்பதால், 3 ஆர். டி. ஓ. அலுவலகங்களைத் தனித் தனியாக அமைக்க இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஆண்டு முழுதும் எந்தவிதமான விபத்தும் இல்லாமல் ஓட்டுகிற நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளை ஓட்டுகிற ஓட்டுநர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் வெகுமதி அளிக்கப்படும்.

சுற்றுலா பயணிகளுக்கு என்று உரிமம் பெற்று ஓடுகிற ஆம்னி பஸ்கள் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் சுற்றுலா செல்ல விரும்பும் மக்களுக்குச் சிறிதும் பயன் படாமல் சுற்றுலா வளர்ச்சிக்கு ஒரு சிறிதும் உதவாமல் பயணப் பேருந்துகளைப் போன்று சட்டத்தை மீறி செயல்பட்டு தவறு இழைத்து வருகின்றன. நமது மாநிலத்தைச் சேர்ந்த ஆம்னி பஸ்களும் அண்டை மாநிலத்தைச் சேர்ந்த ஆம்னி பஸ் பேருந்துகளும் சட்டத்தை மீறும் செயல்களைச் செய்து தவறு இழைத்து வருகின்றன. இதனால் இந்த அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைவதோடு நாட்டுடைமையாக்கப்பட்ட விரைவுப் பேருந்துகளும் பாதிக்கப் படுகின்றன. இதன் காரணமாக ஏற்கெனவே உள்ள இது சம்பந்தப்பட்ட ஆம்னி பஸ்கள் சட்டத்தை மாற்றி, புதிய சட்டத்தைக் கொண்டுவந்து இவை கட்டுப்படுத்தப்படும். இந்தப் புதிய சட்டம் விரைவில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலை விதிமுறைகளை ஒழுங்காகப் புரிந்து அனுசரிப்பதற்கும் விபத்துகளை தடுக்கப் பெரிதும் உதவும் என்பதால் இனிமேல் புதிதாக வழங்கப்படும் ஓட்டுநர் உரிமம் பெற குறைந்தது 8-வது வகுப்புவரை படித்துள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையை நடப்பு ஆண்டிலிருந்து அரசு அமுல்படுத்த இருக்கிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு அறிவழகன் இதைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது 8—வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டுமென்றால் மட்டும் போதாது என்றார்கள். சாலை விதிமுறைகளைச் சரியான முறையில் தெரிந்துகொள்ள ஓரளவு படிப்பு இருந்தால்தான் படித்துத் தெரிந்துகொள்ள முடியும். எனவே இந்தக் கருத்தில்தான் புதிதாக ஓட்டுநர் உரிமம் பெற வேண்டுவோர் இனி 8—வது வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்று கொண்டுவந்திருக்கிறோம்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> 8-வது வகுப்புவரை படித்திருக்க வேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது. இன்றையதினம் கிராமப் பகுதிகளில் உள்ளவர்கள் 5—வது வகுப்புக்கு மேல் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே 8—வது என்பதற்குப் பதில் 5-வது வகுப்பு என்று மாற்றி வைக்கலாம். 8-வது வகுப்புவரை படித்திருந்தால்தான் அடிப்படை சாலை விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்று சொல்வது சரியல்ல. படிக்காதவர்கள் எல்லாம் இன்றையதினம் டிரைவர்களாக இருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் 8-வது வகுப்பு வரை படித்தவர்கள் தான் லைசென்ஸ் பெறலாம் என்றால், 5-வது வகுப்புக்கு மேல் படிக்க வாய்ப்பில்லாத பல கிராமப்புறத்து மக்கள் லைசென்ஸ் பெறவே வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். 5 வது வகுப்புவரை படித்திருந்தாலே டிரைவிங் லைசென்ஸ் பெறலாம் என்று மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> இதுவரை உரிமம் பெற்றவர்களுக்கு இந்த விதி பொருந்தாது. இனிமேல் உரிமம் பெறுகிறவர்களுக்குத்தான் இந்த விதி பொருந்தும். கிராமப்புறங்களில் பலர் 11-வது வகுப்புவரை படித்துவிட்டு பல இடங்களில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே 8-வது வகுப்புவரை படித்திருக்க வேண்டும் என்று வைப்பது தவறாக இருக்காது. குறைந்தது ஆங்கில எழுத்துக்களைப் படிக்கிற வரை ஆங்கிலத் தகுதி இருக்க வேண்டும் என்றுதான் 8-வது வகுப்புவரை படித்திருக்க வேண்டும் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

<u>திரு. க. அறிவழகன்:</u> 8-வது வகுப்புவரை படித்திருக்கிற அறிவு இருக்கிறதா, ஆற்றல் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு உரிய முறையில் ஏதாவது ஒரு [illegible] வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணமாகும் படித்தவர்கள் தான் இருக்க வேண்டும்.

என்பது மட்டும் சரியான கருத்து அல்ல. 8-வது வகுப்பு வரை படித்த பல லட்சக் கணக்கான வேலை இல்லாத இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 8—வது வகுப்புக்கான அறிவு படைத்திருக்கிறார்களா என்று பார்த்தறிய ஒரு தேர்வு மூலம் பரீட்சிக்க வேண்டும் என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி:</u> எஸ். எஸ். எல். சி. படித்துவிட்டு லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் எல்லாம் டிரைவர் வேலைக்கு வரத் தயாராக இல்லை. எங்காவது கிளார்க் வேலை கிடைக்குமா என்றுதான் இருக்கிறார்கள். இன்றையதினம் 8-வது வகுப்பு படித்தால்தான், இனிமேல் டிரைவிங் லைசென்ஸ் தரப்படும் என்றால், 5-வது வகுப்புக்குமேல் படிக்க வசதி இல்லாமல் இருக்கிற கிராமாந்திரத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதை இன்றைக்கே அறிவிக்கவேண்டும் என்பதுகூட இல்லை. பிறகுகூட அறிவிக்கலாம். 5-வது படித்தால் போதும், லைசென்ஸ் எடுக்கலாம் என்று அரசாங்கம் அறிவித்தால்போதும். இதனால் தனியாரிடம் வேலை செய்வதற்குக்கூட வாய்ப்புக்கள் ஏற்படும்.

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> 11-வது வகுப்பு படித்து பல லட்சக்கணக்கானவர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருந்து வருகிறார்கள். 11-வதுக்குக் கீழ் படித்தவர்கள் பல லட்சக்கணக்கில் கிராமங்களில் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

அடுத்து, கிராமப்புற மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அண்மையில் இருக்கிற நகர்ப்புறங்களோடு கிராமங்களை பேருந்து வசதியோடு இணைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மினி பஸ் விட அரசு முடிவெடுத்துள்ளது. அதோடு மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டாரத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆற்காடு வட்டங்களிலும், நீலகிரி மாவட்டத்திலும், ராமேஸ்வரத்திலும் மினி பஸ்கள் என்று சொல்லக்கூடிய சில பேருந்துகளை விட்டதில் பொதுமக்கள் பெரிதும் பயன் அடைந்திருப்பதால். மற்ற மாவட்டங்களிலும் நடப்பு ஆண்டிலிருந்து படிப்படியாக கிராமப்புற மக்களின் நலனைக் கருதி மினி பஸ்கள் விடப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வாடகைக்காரர்களின் டிக்கி அல்லது மேல் பகுதியில் வைக்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் 30 காசு வீதம் வசூலிக்கப்படலாம் என்று அரசு அனுமதி அளித்திருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 21

சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து புதிதாக 10 டாக்சி ஸ்டாண்டுகள் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசும்போது, டெல்லி, கல்கத்தா போன்ற இடங்களில் டாக்சி ஸ்டாண்டுகளில் உள்ள வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே இந்த டாக்சிகள் நிறுத்தப்படுகிற இடங்களில் தொலைபேசி, சிறுநீர் கழிக்கும் இடங்கள், குடிநீர் வசதிகள் ஆகியவை செய்து தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாத் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு அரசு கைகொடுத்திட வேண்டும் என்ற எண்ணத்துடன் சில விதிகளுக்கு உட்பட்டு ரிக்ஷா ஓட்டுகிறவர்களுக்கு மட்டுமே ரிக்ஷா லைசென்ஸ் கொடுக்கப்பட வேண்டும் அல்லது புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஹாக்னி காரேஜ் ஆக்ட் என்ற சட்டத் திருத்தம் இந்த அவையில் விரைவில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிறவர்கள் கையிலே வில்லைகளைக் கட்டிக் கொள்ளும் கட்டாய நிலை இருந்து வருகிறது. அந்த நிலை மாற்றப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள் அவர்களுடைய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு என்ஜின் பொருத்தப்பட்டு மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாவாக மாற்றிக்கொள்ள முன் வந்தால், அவர்களுக்கு உரிமம் வழங்க அரசு முடிவெடுத்திருக்கிறது.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு குறைபாடுகளை எப்படியாவது களைய வேண்டும் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்கள் கூறிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறாமல், இந்த நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்த இந்த அரசு எல்லா முறைகளையும் மேற்கொள்ளும் என்பதோடு, மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவு ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றிப் பல்வேறு விதமாகப் பேசப்படுகிறது. அதை மூடிவிடப் போகிறார்கள் என்றுகூட பேசிக்கொள்கிறார்கள். எனவே இந்த அரசு அதைத் தொடர்ந்து நடத்தப் போகிறதா இல்லையா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு அரசைச் சேர்ந்த பொருள்களை எல்லாம் ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற நடைமுறையை உருவாக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: நான் குறிப்பிட்ட பஸ் டிரைவருக்கு வெகுமதி அளிப்பது பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 100 மைல்களுக்கு மேல் வேகமாக ஒரு டிரைவர் ஓட்டி வந்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு வேகமாக வந்ததற்கு வெகுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். வேகமாக வந்தார் என்பதற்காக வெகுமதி அளிப்பது சரியாக இருக்காது. காரணம் அது சிறந்த சேவை செய்ததாகத்தான் அமையும். வழித்தடத்தில் பேருந்துவண்டி நின்றுவிட்டால் பிறகு பயணம் தடைபடக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு அந்த ஓட்டுநர் செயல்பட்டார். அந்த நல்ல சேவையைச் செய்ததற்காக அவருக்கு வெகுமதி அளிப்பதற்கு உரிய போக்குவரத்துக் கழகத்திற்கு பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. கோ. சி. மணி): இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 2-00)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and Other Papers.

* 101. Policy Note on Motor Vehicles Acts, Administration, 1978–79 (English and Tamil).

* 102. A Review on the Road Transport in Tamil Nadu, 1977–78 (English and Tamil).

* 103. Note on Policy and Performance of Nationalise Transport and Shipping, 1978–79. (Tamil).

* 104. Performance Budget on the Tamil Nadu Port Department for the year 1978–79 (Tamil).

* 105. Policy Note on Highways and Rural Works (English and Tamil).

Circulated to all M.L.Cs. on 20th March 1978.

இணைப்பு

(....5ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 54, கோரிக்கை எண் 39, சாலைகளும் பாலங்களும் சாலைகள் மற்றும் பாலங்களும் மீதான மூலதன செலவு குறித்த கொள்கை விளக்க குறிப்பு.

1. மாநில அரசின் கீழுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவை நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணித் துறையின் நேரடிப் பொறுப்பாகும். மத்திய தேசிய நெடுஞ்சாலைகளின் பணிகளை நிறைவேற்றும் முகவராகவும் இத்துறை செயல்படுகிறது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் சாலைத் திட்டங்களின் தொழில் நுணுக்க மேற்பார்வைப் பணியினையும் ஆற்றுகிறது.

நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை ஆற்றும் பல்வேறு பணிகள் வறுமாறு:—

மாநிலச் சாலைத்திட்டங்கள்:

2. இத்திட்டத்தின்கீழ் பலம் குறைவான சாலைகளுக்கு பதிலாக புதிய சாலைகள் போடுதல், விரைவான வாகனப்போக்கு வரத்துக்கு ஏதுவாக முன்னேற்றங்கள் செய்தல், சாலை அமைப்பு களின் முன்னேற்றங்கள் செய்தல் முதலிய பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.—

1978–79-ல் பின்வரும் மூன்று சாலைப் பணிகளை எடுத்து கொள்ள கருதப்படுகிறது.

(i) திருநெல்வேலி மாவட்டம் நாரணம்மாள்புரம் அருகே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல்— மதிப்பீடு ரூபாய் 20 இலட்சம்.

(ii) தஞ்சாவூர்— பட்டுக்கோட்டை சாலையில் (பிரதான மாவட்ட சாலை) கி.மீ. 3-4-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல்— ரூபாய் 2.11 இலட்சம்.

(iii) சேலம் மாவட்டம் முள்ளக்குறிச்சி கிராமத்தில் வச்சுக்கல் ஆற்றின் குறுக்கே கி. மீ. 9—80-ல் பாலம் அமைத்தல்—ரூ. 5 இலட்சம்.

தூத்துக்குடியில் உள்ள 'ஸ்பிக்' உரத்தொழிற்சாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ரூபாய் 26.50 இலட்சம் பெறுமான பணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்கும். சேலம் எஃகுத் தொழிற்சாலைக்கு (இரண்டாம் கட்டம்) செல்லும் சூரமங்கலம் — தாரமங்கலம் சாலையை மேம்படுத்த ரூபாய் 142.07 இலட்சம் மதிப்பீடுள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதர சாலைகள் திட்டம்:

3. இத்திட்டம் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ரூபாய் 40,000-க்கு மேற்பட்ட மதிப்பீடு உடைய சாலைகள், பாலங்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், மேம்படுத்தல் போன்ற மூலப் பணிகளை உள்ளடக்கிய திட்டமாகும். பணிகள் முடிவடைந்த பின்னர் இச்சாலைகள் மற்றும் பாலங்கள் பேணிக்காக்கப் படுவதற்காகச் சம்மந்தப்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்படுகின்றன. பிரதான வேலைகளை எடுத்துச்செய்ய போதிய நிதி வசதி இல்லாத ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரதானமாக உதவி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அண்மையில் ரூ. 58.13 இலட்சம் மதிப்பீடு உடைய 10 வேலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் விரைவில் எடுத்துச் செயலாற்றப்படும். 1978—79 ஆம் ஆண்டில் ரூபாய் 19.60 இலட்சம் மதிப்பீடு உடைய ஐந்து வேலைகளை எடுத்துச் செயல்பட இருக்கிறது.

கிராமச் சாலைகளுக்குச் சல்லிக்கல் போடும் திட்டம்;

4. கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் எல்லாப் பருவத்திற்கும் ஒத்த தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டு அதன்பின்னர் அவை எதிர்காலப் பராமரிப்புக்காக நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய 2,685 கிராமங்கள் பயன்பெறும் வண்ணம் ரூபாய் 15,47.72 இலட்சம் செலவில் 3,183.5 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. சீர்பருவச்சாலைத் திட்டமானது மக்கள் தொகை வரம்பின்றி எல்லாக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி அளிக்கும் பொருட்டு மண்சாலைகள் அமைக்கும் வேலைகளை உள்ளடக்கிய திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சாலைகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எதிர்காலப் பராமரிப்புக்கென்று ஒப்படைக்கப்படுகின்றன. இத்திட்டம் 1974 ஆம் ஆண்டு தொடங்கி செயல்பட்டு வருகிறது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய இத்திட்டத்தின்கீழ் 3,225 கிராமங்கள் பயன்பெறும் பொருட்டு ரூபாய் 4,43.13 இலட்சம் செலவில் 4,119.03 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள நிலைமையில் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் தார்ச்சாலைகளுக்கு அதிகச் செலவாகிறது. ஆகவே, சல்லிக்கல்சாலைகள் மாத்திரம் அமைக்கப்பட்டால் இத்தலைப்பின்கீழ் உள்ள ஒதுக்கீட்டை அதிக கிராமங்கள் பயன்பெறும் வகையில் செலவழிக்கலாம். சீர்பருவக்காலச் சாலை திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகள் மழையினால் எளிதாக அரிப்பு ஏற்படுவதால் இத்திட்டத்தின்கீழ் நிரந்தர

978 மார்ச் 21] அத்தியாவசியமான
மான வேலைகள் எடுத்துச் செயலாற்ற நிறுவனங்களின்
தேவை இருக்கிறது. மேலும் உள்ளாட்சி அவைகளிடம்
குறைவான நிதி வசதியின் காரணமாக பராமரிக்கப்படவில்லை.
ஒப்படைக்கப்படும் சாலைகள் சரியாக ஒருங்கிணைத்து, சல்லிக்
ஆகவே மேற்படி இரு திட்டங்களை ஒன்றைச் செயலாற்ற
கல் சாலைகளை அமைக்கும் புதிய திட்டம் இந்தப் புதிய திட்டத்தின்
அரசு ஒரு முடிவு எடுத்துள்ளது. நிலைக்கு அமைக்கப்
கீழ் எல்லாச் சாலைகளும் சல்லிக்கல் அரசுக்கு நிரந்தர
படும் அல்லது மேம்படுத்தப்படும். இதனால் பெருமளவான
சொத்துக்கள் ஏற்பட ஏதுவாகும். மேலும், கிராமங்களின்
கிராமங்கள் பயனடையும். ஆகவே, அதிக சீர்பருவகாலச்
தேவையை இத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும். வேலைகள் எடுத்துக்
சாலைகளை சல்லிக்கல் சாலையாக மாற்றும் வருகின்றன.
கொள்ளப்பட்டு தற்போது செயலாற்றப்பட்டு இதற்கென
நடப்பு நிதியாண்டில் ரூபாய் 300 இலட்சம்
ஒதுக்கப் பட்டுள்ளது.

பேருந்துகள் செல்லும் சாலைகளை மேற்கொள்ளும் திட்டம்:

5. ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த ஆண்டுகளில் பல்வேறு
திட்டங்கள் மூலம் அமைக்கப்பட்ட சாலைகள் போதுமான நிதி
வசதியின்மையால் ஊராட்சி ஒன்றியங்களால் சரியாக பரா
மரிக்கப்படவில்லை. அதனால், பேருந்துகள் செல்லும் சாலைகள்
பழுதாவதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்படுகிறது. ஆகையால்
பேருந்துகள் செல்லும் சாலைகளை நெடுஞ்சாலைத்துறை மேற்
கொள்ளும் திட்டம் 1960–61 முதல் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. இதுகாறும் 12,637 கி. மீ. நீளமுள்ள சாலைகள்
எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் 6,100 கி. மீ. நீளமுள்ள
சாலைகளை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. 1977-78 ஆம்
ஆண்டு 1,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை எடுத்துக்
கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

வேளாண்மை-கரும்புச்சாலை வளர்ச்சித் திட்டம்:

6. கரும்பு உற்பத்தியாகும் பகுதிகளில் சாலைகள் அமைக்
கும் இத் திட்டம் பல ஆண்டுகளாகச் செயலில் இருந்து
வருகிறது. இச்சாலைகளை மேம்படுத்தவும், வரும் ஆண்டுகளில்
இச் சாலைகளைப் பராமரிக்க நிதி ஒதுக்கவும் கரும்புத் தீர்வை
நிதியிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடுபெறவும் நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சாலைகளை மேம்
படுத்தவும், பராமரிக்கவும் 1977—78 ஆம் ஆண்டு ரூபாய்
105 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1978—79 ஆம் ஆண்
டிற்கு ரூபாய் 110 இலட்சம் ஒதுக்கப்படும்.

தற்போதுள்ள இரும்புப்பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்கள் சுரங்கப்பாதைகள் அமைத்தல்.

7. இருப்புப்பாதைக் கடவுகள் போக்குவரத்தைப் தடைப்
படுத்துவதால் இவைகளுக்குப் பதிலாக மேம்பாலம் மற்றும்
சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் படிப்படியான திட்ட
மாக எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. இப் பணிகளுக்கா
கும் செலவு பங்கீட்டு முறையின் அடிப்படையில் மாநில
அரசாலும், இரயில்வே துறையாலும் நகராட்சி எல்லைகளுக்குள்
அமைந்திருப்பின் சம்பந்தப்பட்ட நகராட்சிகளாலும் ஏற்கப்படு
கின்றன. மாநில அரசின் பங்கு 'ரெயில்வே பாதுகாப்பு நிதி'
யிலிருந்து ஈடு செய்யப்படுகின்றது. இத் திட்டம் நான்காவது
ஐந்தாண்டு திட்ட காலத்தில் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் 14 பணிகள் பல்வேறு நிலை
களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சாலைப்புற மரங்கள்:

8. மாநிலம் முழுவதும் சாலையோரங்களில் மரங்களை
வளர்க்க இலக்குகளை நிர்ணயித்து, தொடர்ந்து கவனம்
செலுத்தப்பெற்று வருகிறது. நெடுஞ்சாலை மற்றும் தேசீய
நெடுஞ்சாலைகளில் மரங்களின் தேவையை நிறைவுசெய்ய பொது
நாற்றுப்பண்ணைகள் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
1978-79 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் இதற்காக நிதி
ஒதுக்கப்படும்

பராமரிப்பு:

9 வேலைநிதி ஊழியப்பணியாளருக்கான செலவுத்தொகை
யை உள்ளடக்கி ஒவ்வொரு ஆண்டிற்கும் பராமரிப்புக்
கென்று ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு ரூ. 9.00 கோடியாகும்.
அரசு தன் பராமரிப்பிற்கென்று எடுத்துக்கொண்டுள்ள சாலை
களின் அளவை முன்னிட்டு இம் மாநிலத்திலுள்ள பிரதான
மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளைச்
சரியான முறையில் பராமரிக்கத் தேவையான நிதி அளிக்
கும் பொருட்டு தேவையை முன்னிட்டு 1977-78 ஆம் ஆண்டு
ரூ 1·50 கோடி அதிகப்படுத்தப்பட்டது, அவ்வாறே 1978—79
ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 1.65 கோடி அதிக நிதி ஒதுக்
கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஏற்று நடத்தும் பணிகள்.

இணைப்புச் சாலைகள்:

10, 1977—78-ல் கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகள்
அமைக்கும் பொருட்டு மத்திய அரசு ரூபாய் 71 இலட்சம்
தமிழ் நாட்டிற்காக ஒதுக்கீடு செய்தது. இந்த மத்திய
அரசு உதவியின்கீழ் இம்மாநில அரசு 7 மாவட்டங்களில்
உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 84,784 இலட்சம்

மதிப்பீடு உள்ள 60 வேலைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகளின் மொத்த
நீளம் 137.10 கிலோ மீட்டர் ஆகும்.

இத்திட்டம் கடலோரம் மற்றும் பின் தங்கிய இடங்களுக்காக
ஏற்படுத்தப்பட்டது. வரும் ஆண்டுகளில் மத்திய அரசின் உதவி
இத்திட்டத்திற்கு தொடர்ந்து கிடைக்கும் என்று மத்திய
அரசு குறிப்பிட்டிருக்கிறது.

மலைவாழ் பகுதி சாலை மேம்பாட்டுத்திட்டம்.

11. இத்திட்டமானது மத்திய அரசின் நிதி உதவியுடன் நீல
கிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகளின் சமூகப்பொருளா
தார முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. ரூபாய் 100
இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி
மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள்
முடியும் தறுவாயில் இருக்கின்றன. மேலும் ரூபாய் 21.11
இலட்சம் மதிப்பீடுள்ள வேலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்
பட்டுள்ளது. இவ்வேலைகள் 1978—79 ஆம் ஆண்டில் எடுத்துக்
கொள்ளப்படும்.

மலைவாழ் மக்கள் நலனுக்கான துணைத்திட்டம்.

12. மலைவாழ் பகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக முக்கியச்
சாலைகளோடு அப்பகுதிகளை இணைக்கும் சாலைகள் எடுத்துக்
கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தினால் மலைவாழ்பகுதி மக்கள்
மருத்துவம், கல்வி மற்றும் சமூகநலம் போன்ற பயன்களைப்
பெறுவார்கள். தென்னாற்காடு மாவட்டம் மற்றும் சேலம்
மாவட்டத்தில் கல்ராயன் மலைப்பகுதியில் ரூபாய் 88 இலட்சம்
செலவில் எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு மேம்படுத்தும்
பணிகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. 1978—79 ஆம்
ஆண்டு பச்சைமலைப் பகுதியில் ஓடைக்காட்டுப்புதூரிலிருந்து
வெங்கமுடி வழியாக மேல் செங்காட்டுப்பட்டிக்குச் செல்லும்
10·2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை அமைக்கும் மற்றும்
மேம்படுத்தும் பணி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில்
எடுத்துக்கொள்ளப்படும்.

மேற்குத் தொடர்ச்சிமலை வளர்ச்சித்திட்டம்:

13. இத்திட்டத்தில் ஏற்கெனவே ரூபாய் 15 இலட்சம் மதிப்
பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட மதுரை மாவட்டம் சிறுமலைச்
சாலையை மேம்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது மேலும்
அதிக வேலைகளை எடுத்துக்கொள்ளும் செயற் குறிப்பு
அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெருநகர் வளர்சித்திட்டம் (உலக வங்கித்திட்டம்)

14. 1977—80 ஆண்டுகளில் ரூபாய் 400·8 இலட்சம் மற்றும் தோராயமாக ரூபாய் 317.883 இலட்சம் மதிப்பீடுடைய திட்டங்கள் முறையே நெடுஞ்சாலைத் துறையினருக்கும் சென்னை மாநகராட்சிக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (1) இந்து நாளிதழ் அலுவலகம் எதிரில் (2) சபையர் திரையரங்கு அருகில் (3) சென்ட்ரல் ரயில்வே நிலையத்திற்குப் பக்கத்தில் வால்டாக்ஸ் சாலையில் மற்றும் (4) கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரே வடக்குக் கடற்கரைச் சாலையில் போன்ற இடங்களில் பாதசாரிகளுக்கென்று சுரங்கப்பாதை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர தெற்குப் பெருவழிச் சாலை (Grand Southern Trunk Road) யையும் பூவிலிருந்த வல்லிச் சாலையையும் இணைக்கும் வகையில் ஒரு உள்வளைவுச்சாலை (Inner Ring Road) அமைக்கும் வேலையும், நடைபெற்று வருகின்றன. மன்ரோ சிலையிலிருந்து கட்டிப்பாரா வரையிலுள்ள அண்ணா சாலையை அகலப்படுத்தும் வேலையும், சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள செவிலியர் விடுதியிலிருந்து பூவிருந்தவல்லி சாலையை மேம்படுத்தும் வேலையும் விரைவில் எடுத்துச் செயல்படவிருக்கிறது, மாநகராட்சியை பொறுத்தவரை, கான்ட்ஸ் சாலையில் நல்லாவின் குறுக்கே ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பெரிய பாலம் அமைக்கும் வேலை எடுத்துச் செயல்படவிருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலை

15. 1,865 கி.மீ. நீளமுள்ள, 8 தேசிய நெடுஞ்சாலைகள் தமிழ் நாட்டில் அடங்கியுள்ளன. கீழ்கண்ட பணிகள் தேசிய நெடுஞ்சாலைகளை மேம்பாடு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) தேசிய நெடுஞ்சாலை 47-ல் குமாரபாளையம்-பவானி புறச் சாலையில் காவிரி நதியின் குறுக்கே ஒரு பிரதான பாலம் 1975—77-ல் ரூபாய் 80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது.

(ii) தேசிய நெடுஞ்சாலையில் கொள்ளிடம் நதியின் குறுக்கே ரூ. 118.50 இலட்சம் செலவில் பெரும் பாலம் ஒன்று கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாநில அரசு 1977—78-ல் பாம்பன் பாலத் திட்டத்திற்காக ரூ. 100 இலட்சம் உட்பட மொத்தம் ரூ. 509.03 இலட்சம் தேசிய நெடுஞ்சாலை வேலைகளுக்காக மத்திய அரசிடமிருந்து பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தொகையில் ரூபாய் 470 இலட்சம் ஏற்கெனவே மத்திய

அரசு வழங்கிவிட்டது. 1978—79 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தொகை ரூபாய் 672.51 இலட்சம் ஆகும் (தேசிய நெடுஞ்சாலைகள் ரூ. 535.51 இலட்சம் பாம்பன் பால திட்டம் ரூ. 137 இலட்சம்).

மைய சாலை நிதி வேலைகள்

16. காலகெடுவற்ற நிதியான மைய சாலை நிதி மத்திய அரசால் வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையில் ஒரு லிட்டர் மோட்டார் எண்ணெய்க்கு 3.5 காசு வீதம் வசூலிக்கப்படும் தொகையிலிருந்து வருவாயாகக் கிடைக்கிறது. மொத்த வருவாயில் 80 சதவிகிதம் இந்திட்டத்தின்கீழ் உள்ள வேலைகளுக்கென்று மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. 20 சதவீதத்தை மத்திய அரசு 'சேம நிதியாக' நிறுத்தி வைத்துக் கொள்கிறது.

அண்மையில் மத்திய அரசால் திருத்தி அமைக்கப்பட்ட மைய சாலை நிதியின் குறிக்கோள் ஆராய்ச்சி, பயிற்சி, பரிசோதனைகள் போக்குவரத்து ஆய்வுகள் ஆகியவைகளுக்கு அதிக முக்கியத்துவமும், சாலைகள் மேம்பாலங்கள் போடும் பணிகளுக்குக் குறைந்த முக்கியத்துவமும் அளிப்பதாக உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கீழ்கண்ட மலைச் சாலைகள் ரூ. 217 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன;

(1) கோடை-பழனி சாலை இணைப்பு.

(2) தடியன் குடிசை-ஆடலூர் சாலை இணைப்பு:

(3) ஒட்டன் சத்திரம்-வடக்காடு பாச்சலூர் சாலை.

முதல் இரண்டுசாலைகள் ஏற்கனவே போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டன. மூன்ருவது சாலை போக்குவரத்திற்காகத் திறப்பதற்கு தயாராக உள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1976—77, 1977—78 ஆண்டுகளில் மத்திய அரசு ரூ 319·76 இலட்சம் செலவில் 14 வேலைகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாளில் முடிவடையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதற்கும் உத்தேச நிலுவை தொகை ரூபாய் 252.80 இலட்சம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

பெட்ரோல் மீது விதிக்கப்படும் சுங்கம் மற்றும் ஆயத் தீர்வையின் வாயிலாக கிடைக்கும் தொகையிலிருந்து ஒதுக்கப்பட்டு வரும் ஒதுக்கீட்டுத்தொகையின் வீதத்தை அதிகரித்தும்

மற்றும் அதிவேக டீசல் எண்ணெயின் மீதும் தீர்வை விதித்து அத்
தொகையையும் இந்த நிதியின் கீழே கொண்டுவந்து மைய
சாலை நிதியை பெருக்குவது குறித்தும் இம்மாநில அரசு
மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது.

பாம்பன் பாலத் திட்டம்.

17. பாம்பன் பாலத் திட்டம், அலைகடலில் அமைக்கப்பட
விருக்கும் தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும். இவ்வேலை
தேசிய நெடுஞ்சாலை 49-ல் அமைந்திருப்பதால் இதன் மொத்தச்
செலவும் மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மத்திய
அரசுக்காக மாநில அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது
இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை ரூபாய் 532.87
இலட்சங்களாகும். இதில் ரூபாய் 60 இலட்சம் இருபக்கமும்
அணுகுசாலைகள் அமைப்பதற்கான மதிப்பீடு ஆகும், இத்
திட்டத்திற்கு மத்திய அரசு 1972-ம் ஆண்டு மார்ச்சு
மாதம் ஒப்புதல் வழங்கியது. இப்பாலத்தில் 76 பாலக்கண்
கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 89 அடி அகலம்
உள்ளவை. மத்தியில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 378
அடி அகலம் உள்ள ஒரு பாலக்கண்ணும், 225 அடி உள்ள
இரு பாலக்கண்களும் அமைந்திருக்கும். தங்கு தடையற்ற
கப்பல் போக்குவரத்திற்காக பாலத்தளத்தின்கீழ் மட்டம்
உயர்ந்த அலை மட்டத்திலிருந்து சுமார் 55
அடி உயரத்தில் உள்ளது. ரூபாய் 100 இலட்சம் இத்
திட்டத்திற்காக 1977—78 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
இவ் வேலை டிசம்பர் 1979-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாநில தொடர்பு மற்றும் பொருளாதார முக்கியத்துவம்
வாய்ந்த திட்டப்பணிகள்.

முன்னுரிமை.—

18. பொருளாதார மாநிலத் தொடர்பு முதன்மைப்பணி
களுக்காக சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்கும்,
அவற்றை மேம்படுத்துவதற்கும் மத்திய அரசு பொறுப்பேற்
கும் திட்டம் இது. இது ஒரு கடன் திட்டமாகும். இத்
திட்டத்தின்கீழ் பொருளாதார மாநிலத்தொடர்பு முக்கியம்
வாய்ந்த தேர்வு செய்யப்பட்ட குறிப்பிட்ட பணிகளுக்கு அரசு
ஒவ்வோராண்டும் தேவையான உதவி செய்கிறது. கீழ்க்காணும்
வகையைச் சார்ந்த சாலைகள் மற்றும் பால வேலைகள் இத்
திட்டத்தின்கீழ் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கருதப்படுகின்றன.

(அ) மாநிலங்களை இணைக்கக்கூடிய நேரடிப்போக்கு
வரத்துச்சாலைகள்.

(ஆ) கூடிய விரைவில் இருப்புப் பாதைகள் அமைக்க
முடியாத புதிய இடங்களில் புறப்பகுதிகளை இணைக்கும் சாலை
கள் மற்றும் பாலங்கள்.

(இ) உயர்ரக தாதுவளங்களை இயற்கை வளங்கள்
கொண்ட மலைப்பாங்கான மற்ற பகுதிகளை இணைத்து பொரு
ளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படும் சாலைகள் மற்றும்
பாலங்கள் போன்றவை.

நான்காவது திட்டக் காலத்தில் ரூபாய் 261.00 இலட்சம்
மதிப்பீட்டுச் செலவில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி
வரையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் 38 பாலங்கள்
கட்ட மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. மேற்கொண்டு
[illegible] ஆகும் செலவை மாநில அரசு ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று நிபந்தனை விடப்பட்டது. மேற்கூறிய 88
பால வேலைகளில் 32 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன.
எஞ்சியுள்ளவைகளில் வேலைகள் நடந்து வருகின்றன.

31-1-1978 வரை இதற்காக செலவிடப்பட்ட தொகை
ரூபாய் 370.31 இலட்சமாகும். இதில் மத்திய அரசு கட
னுதவி ரூபாய் 261.00 இலட்சமாகும். முழுவேலைகளையும்
எல்லாவகையிலும் 1978—79-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்
ளது.

இத்திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்தில் காவிரி ஆற்றின்
குறுக்கே மணப்பாறை-துறையூர் சாலையில் முசிரியையும்-குளித்
தலையையும் இணைக்க ரூபாய் 139 இலட்சம் செலவில் ஒரு
பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி நான்காவது மற்றும்
ஐந்தாவது திட்டத்தில் மாநிலத் தொடர்பு மற்றும் பொரு
ளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ள
மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆயினும்
மத்திய அரசு நான்காவது அல்லது ஐந்தாவது ஐந்தாண்டு
திட்டத்தில் இதனைச் சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொள்ளாத
தால் இத்திட்டம் மாநில அரசு நிதியிலிருந்து நிறைவேற்
றப்பட்டு வருகிறது. மேலும் ரூபாய் 60 லட்சம் செலவில்
ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்
பளிப்பு பெற்றுள்ள கீழ்க்கண்ட இரண்டு திட்டங்கள் மேற்
கொள்ளப்பட்டு அவற்றின் பெரும்பகுதி 1978—79-ல் நிறை
வேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(1) சென்னை-திருத்தணி சாலையை கி.மீ. 47/0 முதல் கி.மீ
85/6 வரை செப்பனிடவும், அரக்கோணம்—ரேணிகுண்டா
சாலையில் கி.மீ. 13/8 முதல் கி.மீ. 23/2 வரை உள்ள
பகுதியை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்குக் கொண்டு வருதல்
(செங்கல்பட்டு மாவட்டம்) ரூ. 40 இலட்சம்.

(2) மார்த்தாண்டம்-பனிச்சமோடு ரோட்டில் மைல் 0/8
(கி.மீ. 1/6-ல்) குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம்
கட்டுதல் (குமரி மாவட்டம்) ரூ. 20 இலட்சம்.

வெள்ள நிவாரணப் பணிகள்.

19. 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் முன் நிகழ்ந்திராத வகையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால் சேதமான சாலைகள் மற்றும் பாலங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

	(மதிப்பீடு ரூபாய் கோடியில்.)
தேசிய நெடுஞ்சாலைகள்	3.50
மாநில அரசுச் சாலைகள்	13.31
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள்.	13.15
மொத்தம் ..	29.96

1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய அரசுச் சாலைகளை பழுது பார்க்கும் பணிகளுக்கென்று ரூபாய் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி மற்றும் ஒன்றியங்களில் உள்ள சாலைகளுக்கென்று ரூபாய் 5 கோடியும், சிறு பாசன ஏரிகளுக்கென்று ரூபாய் 0.75 கோடியும், கட்டிடங்களுக்கு ரூபாய் 0.45 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் நடைபெற்று வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கென்று மத்திய அரசு ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மையநிதி சாலை வேலைகளுக்கென்று இந்த அரசு ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கியுள்ளது. வெள்ள நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செயல்படுத்தும் பொருட்டு, அரசு வேலைகளுக்கென்று நிர்வாக ஒப்புதல், தொழில்நுட்ப ஒப்புதல், வேலைகளை பிரித்தல், ஒப்பந்தம் கோருதலை தவிர்த்தல். உள்ளூர் மக்களுக்கு ஒப்பந்தமின்றி நேரடியாக வேலைகளை ஒப்படைத்தல் போன்ற காரியங்களுக்கு சம்பந்தப்பட்ட விதி முறைகளை தளர்த்தி நெடுஞ்சாலைத் துறையிலுள்ள பல்வேறு வகையான அதிகாரிகளுக்கு அனைத்து நிலைகளிலும் அதிகாரம் வழங்கியுள்ளது.

பணி ஆலோசனைக் குழுக்கள்:

20. அரசுத் துறைகளில் ஏற்படும் செலவு குறித்து துறை அளவில் மட்டுமே ஆய்வு செய்வதைவிட பொதுமக்களின் தொடர்ந்த கண்காணிப்புக்கும் உட்பட்டிருக்க வேண்டுமென்பதே இவ்வரசின் கொள்கையாகும். சாலை மற்றும் பால வேலைகள் உள்ளிட்ட பொதுப்பணிகளின் தரம், முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதில் உள்ளூர் மக்களும் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் முறைகேடுகள்

ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, அரசு செலவிடும் பணத்திற்கு நல்ல பலன் கிட்டும். இந்த நோக்கங்களை எய்துவதற்காக, கோட்டாட்சியரின் தலைமையில் வட்ட அளவில் பணி ஆலோசனைக் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவில், தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆகியோர் இருப்பர். இந்த ஆலோசனைக் குழு துறை கட்டிவரும் பணிகள் அனைத்தையும் பார்வையிட்டு அவற்றின் முன்னேற்றத்தையும் தரத்தையும் ஆய்வு செய்யும். முறைகேடுகளும், ஊழல்களும் நடந்திருப்பதாகத் தெரிய வருமாயின் அவை அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படும். பணி நடைபெறும் இடம் ஒவ்வொன்றிலும் பணியின் விவரங்கள், ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட நாள், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி முடிக்கப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட நாள், ஆகியவை குறித்த விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் வைக்கப்பட வேண்டும். அதனால், பொதுமக்கள் பணியின் முன்னேற்றம், தரம் குறித்துத் தெரிந்து மனநிறைவு கொள்வர்.

வேலையில்லாப் பொறியாளர்களுக்கு உதவுவதற்கான திட்டம்.

21. வேலையில்லாப் பொறியாளர்களுக்கு பெரும் அளவில் உதவுவதற்கு இவ்வரசு, வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கும் முறையில் ஏற்கெனவே உள்ள சலுகைகளை மேலும் தளர்த்தி விட்டுள்ளது. இச்சலுகைகளை வேலையில்லாப் பட்டதாரிகளும் சான்றிதழ் பெற்றவர்களும் அனுபவிக்கலாம்.

பணிகளின் முன்னேற்ற ஆய்வுக்குழு அமைப்பு (Pert cell).

22. பல்வேறு காரணங்களை முன்னிட்டு திட்ட வேலைகள் தாம் திட்டமிட்ட வகையில் செயல்படுத்தப்பட முடியாமற் போயின என்பது நம்முடைய அனுபவமாகும். ரூபாய் 3 இலட்சமும் அதற்கு மேல் மதிப்பீடு உள்ள சென்னை நகருக்காக அனுமதிக்கப் பெற்றுள்ள அனைத்து சாலை பால வேலை யையும் முன்னேறுவதை ஆய்வு செய்வதற்கு பணிகளின் முன்னேற்ற ஆய்வுக்குழு (Pert cell) ஒன்று தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ளது. அதேபோல் இதர மாவட்டங்களில் ரூபாய் 20 இலட்சமும் அதற்கு மேல் மதிப்பீடு உள்ள எல்லா சாலை, பால வேலைகளையும் ஆய்வு செய்வதற்கென்று ஆய்வுக் குழுக்கள் விரைவில் துவக்குவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கிராமச் சாலைகளின் சமூக பொருளாதார ஆய்வு.

23. கிராமப்புறங்களில் சாலைகள் அமைப்பதற்கென்று ஏராளமாக கோரிக்கைகளை அரசு பெற்றுவருகின்றது. ஆனால், அரசின் வசம் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, சம்பந்தப்பட்ட அம்சங்களைக் கணக்கில் கொண்டு பணிகளுக்கு தகுந்த முதன்மையை நிர்ணயம் செய்யாமல் தற்கால அடிப்படையில் பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதனால் பல ஏற்றத்தாழ்வுகள் உண்டாகின்றன. ஆகவே, கிராமப் புறங்களில் புள்ளி விவரங்கள் சேகரித்து சாலை வேலைகளைத் தேர்ந்தெடுப்பதென்று ஒரு திட்டமான வரையறை ஏற்படுத்தப்படவிருக்கிறது. கீழ்க்காணும் மூன்று கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்த தேவையான சாலை வசதி உண்டாக்குவதற்கான ஒரு சமூக பொருளாதார முன்னோடி ஆய்வு செயல்படவிருக்கிறது.

(i) நகரத்தைச் சார்ந்த பகுதிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய பல்வேறு அத்தியாவசிய வசதிகளைச் செய்து கொடுத்தல்

(ii) பொருளாதார ஆக்க வேலைகளுக்கான முன்னேற்ற வேலைகளைச் செயல்படுத்தல், மற்றும்

(iii) முன்னேறிய பகுதியோடு தொடர்புள்ள மேம்பாட்டு வேலைகள்; முதற்கண், மேற்கூறிய முன்னோடி ஆய்வு வேலை மூன்று வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களில் மேற்கொள்ளப்டும். அவை (1) திருவாடானை பஞ்சாயத்து ஒன்றியம் இராமநாதபுரம் மாவட்டம்) கடற்கரைப் பகுதி, (2) ஜமனமருதூர் பஞ்சாயத்து ஒன்றியம் (வட ஆற்காடு மாவட்டம்) மலைப்பகுதி மற்றும் (3) செஞ்சி பஞ்சாயத்து ஒன்றியம் (தென் ஆற்காடு மாவட்டம்) சமவெளிப் பகுதி.

நிலப்படை:

24. தலைமைச் செயலாளரின் தலைமையில் நிலப்படைத் திட்டத்தை இம்மாநிலத்தில் உருவாக்க குழு ஒன்று அமைத்துள்ளது. விரைவில் அப்படை அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேரடியாகச் செயலாற்றும் பணிகள்.

25. ஒப்பந்தக்காரர்கள் சிலவேலைகளைச் செய்வதில் காட்டும் தாமதத்தைக் குறித்து அரசு அதிருப்தி கொண்டுள்ளது. குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைத்துறை வேலைகளில் அவற்றைச் செய்வதற்கான, போதிய சாதனங்களும், இயந்திரங்களும். அனுமதிக்கப்பட்ட அளவில் ஒப்பந்தக்காரர்களிடம் இல்லை.

V211,32 N78 12947

ஆகையால், இவ்வேலைகள் பல ஆண்டுகளாக [illegible]
கின்றன, இதன் காரணமாக இவ்வேலைகளை 'கட்டுமா[illegible]
மூலமாகவோ அல்லது இத்துறை மூலமாகவோ செய[illegible]படுத்து
வது குறித்து மாற்று யோசனைகள் தெரிவி[illegible]டுள்ளது.
இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

<u>சாலை விபத்துக்களை தடுப்பதற்கான ஆய்வு:</u>

26. சாலைகளில் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுகின்
றன. அவற்றில் விபத்துக்களில் சில சாலைகளின் நேர்பாடு,
சாலைகளின் மேற்பரப்பு குறைபாடுகள் முதலியவற்றா[illegible] ஏற்படு
வதற்காகக் கூறப்படுகிறது. இக்குறைபாடுகள், விபத்திற்கு [illegible]
எவ்வாறு காரணமாகின்றன என்பதை எளிதாகக் கண்டறிய
வும் அவைகளைத் தடுக்கவும் சீர் செய்யவும் முடியும். இது
பற்றிய ஆய்வு ஒன்றை அரசு நடத்த இருக்கிறது.

<u>தலைமைச் செயலகத்தில் 'சாலைகள்' என்ற பொருள் பொதுப்
பணித்துறையிலிருந்து போக்குவரத்துக்துறைக்கு மாற்றப்படல்:—</u>

27. ''சாலைகள்'' என்ற பொருள் தற்பொழுது தலைமைச்
செயலகத்தில் பொதுப்பணித்துறையில் செயல்பட்டு வருகிறது.

திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில்
உள்ள போக்குவரத்துத் துறைக்கான குழு தனது 1977 ஜூன்
திங்கள் அறிக்கையில் சாலைகள் என்னும் பொருள் பொதுப்
பணித் துறையினின்று ''சாலைகள் போக்குவரத்து'' என்னும்
பொருளை கவனித்து வரும் போக்குவரத்துத்துறைக்கு மாற்றம்
செய்யப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது. பிரதான
சாலை வேலைகளுக்கும். அதன் பராமரிப்புக்கும் மிகக் குறைந்த
அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அப்போது பல்வேறு
இடங்களிலிருந்து குறிப்பிட்ட பகுதிகளில் சாலை வேலைகள்
எடுத்துச்செயலாற்றப்பட போட்டிக்கோரிக்கைகள் இருந்து
வருகின்றன. இப்படிப்பட்ட போட்டிக்கோரிக்கைள் இருப்பதால்
குறைவான நிதி வசதியை முன்னிட்டு போக்குவரத்து திட்
டங்கள் மீது தனிக்கவனம் கொண்டு சாலைகள் மீதுள்ள
செலவை வரையறை செய்யும் கவனத்தோடு வரையப்பட்ட
திட்டமொன்று அவசியமாகிறது. அமைச்சர் நிலையைப்பொறுத்த
வரையில் சாலைகள் மற்றும் சாலைப் போக்குவரத்து என்னும்
பொருட்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராலேயே கவனிக்
கப்படுவதால் இந்த ஒருங்கிணைப்பு மேற்படி இரு பொருள்
களும் தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத் துறையிலேயே
செயல்பட்டால்தான் முற்றுப்பெறும். மேற்கண்ட போக்கு
வரத்துப் பகுதிக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றுக்
கொண்டு, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளி
லிருந்து 'சாலைகள்' எனும் பொருள் தலைமைச்செயலகத்தில்
பொதுப்பணித் துறையினின்று போக்குவரத்துத் துறைக்கு
மாற்றப்படலாம் என முடிவு செய்துள்ளது.

[1978 மார்ச் 21

28. 1977—78-ல் பல்வேறு சாலை மேம்பாடு பணிகளின் முன்னேற்றம்' குறித்து ஒரு விரிவான ஆய்வு அறிக்கையையும் அவையின் முன் வைக்கப்படுகிறது.

<u>மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் 1978-79 பற்றிய கொள்கை விளக்க குறிப்பு.</u>

1977-78ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சாலைப் போக்குவரத்து பற்றிய ஆய்வுரை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம், 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டம், இவ்விரு சட்டங்களின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றை நிர்வகிப்பது, போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். மோட்டார் வண்டிகள் சட்டம் ஒழுங்கு முறைப் படுத்துவதற்கான சட்டமாகும். இச்சட்டம், மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வண்டிகளைக் கட்டுப்படுத்துதல், ஓட்டுநர் உரிமம் வழங்கல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், மோட்டார் வண்டி விபத்து ஈட்டுறுதி செய்தல் ஆகியவற்றிற்கு வகை செய்கிறது. பயணிகள் சரக்குகள் போக்குவரத்திற்கானப் போதுமான வசதிகளைச் செய்து தந்து, அப்போக்குவரத்தில் மக்கள் பாதுகாப்பிற்கு உறுதி செய்வதும் இதன் குறிக்கோளாகும்.

3. பொது மக்களுக்கு வசதி எனக் கருதப்படும் வழித் தடங்களில் பயணிப் பேருந்துகள் ஓட்டுவதற்காகப் போக்குவரத்து அதிகாரிகளால் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. வாடகை சீருந்துகளுக்கும், சரக்குப் பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள், தாராளமாக வழங்கப்படுகின்றன. ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குவதையும் அவர்கள் ஓட்டும் வேகத்தையும் கட்டுப்படுத்தல், சரக்கு வண்டிகளின் ஏற்றும் பளுவை ஒழுங்குபடுத்தல், பயணிப் பேருந்துகளின் இருக்கைகள், இடைவெளி வசதியாக அமைத்தல், ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல், போக்குவரத்து வண்டிகளை கால முறைப்படி முழுமையாகத் தணிக்கையிடல் ஆகியவற்றின் மூலம் பொது மக்களுக்குப் பாதுகாப்பும் வசதியும் உறுதி செய்யப்படுகிறது.

4. மோட்டார் வண்டிகள் மீதான வரியை வசூல் செய்வதும் போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். போக்குவரத்து வண்டிகளின் மீதான வரி, போக்குவரத்துத் துறையால் நேரடியாக வசூல் செய்யப்படுகிறது. மோட்டார் கார்கள் போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரி வசூலிப்பு மாவட்டங்களில் கருவூலங்கள் மூலமும் சென்னை மாநகரில் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் காவல் நிலையங்கள் மூலமும் வசூல் செய்யப்படுகிறது.

1978 மார்ச் 21]

5. 1974ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், வரி விதிப்பு அடிப்படையைச் சீரமைக்கவும் பயணி வண்டிகள் சரக்கு வண்டிகள் அல்லது இவ்விருவகை வண்டிகளின் மீதான பல்வேறு வரிகளை ஒருங்கிணைப்பதைக் கருத்திற்கொண்டு செய்யப்பட்டதாகும்.

போக்குவரத்துவசதிகளை அமைத்துத் தருவதில் போக்குவரத்துத் துறை போக்குவரத்துத் தேவைகளில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகிறது. ஒரு புதிய வழித்தடத்தைத் தொடங்குவது சிக்கலான நடைமுறையாக இருந்து வந்தது. 1971ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால், புதிய வழித்தடங்களைத் தொடங்குவதில் நிலைமை சீரடைந்துள்ளது. இச்சட்டத்தின்படி, புதிய வழித்தடம் ஒன்றைத் தொடங்குவது என்பது நிர்வாகப்பணி எல்லைக்குள் அமைந்து, அதிகாரியின் தீர்ப்பே முடிவானது என அமைகிறது.

போக்குவரத்துத் தொடர்பற்ற, வெகு தொலைவிலுள்ள மலைப்பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதியளிப்பதற்காக அந்த பகுதிகளில் ஜீப் வகை சிறு பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்த ஜீப் பேருந்துகளுக்கு 25 சதவீத வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து வசதியற்ற பகுதிகளிலும், இராமேசுவரம் தீவிலும் திருசக்கரபீடம் அமைந்த சிறிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்த பேருந்து சலுகை வீதத்தில், பயணி ஒருவருக்கு காலாண்டிற்கு மேல் வரிக் கட்டணத்தையும் சேர்த்து ரூ. 50 வீதம் வரி விதிக்கப்படுகிறது. கிராமப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்கும் பொருட்டு, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டை வட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆற்காடு, வாணியம்பாடி வட்டங்களிலும், அண்மையில் சிறு பேருந்துகள் சோதனை அடிப்படையிலான ஏற்பாட்டின்படி விடப்பட்டுள்ளன. இத்தகைய பேருந்துகளுக்கு, காலாண்டுக்கு பயணி ஒருவருக்கு (மேல்வரி உட்பட) ரூ. 50 எனும் சலுகை வீதத்தில் வரி விடுக்கப்படுகின்றது.

போக்குவரத்துத் தொழிலில் ஏகபோக உரிமையையும், அனுமதிச் சீட்டுகள் சிலரிடம் குவிவதையும் தடுப்பதைக் கருத்திற்கொண்டு, ஓர் உரிமையாளருக்கு பத்துப் பேருந்து அனுமதிச் சீட்டுகளுக்கு மேல் இருக்கலாகாது என உச்சவரம்பு விதித்து 1971ஆம் ஆண்டு மோட்டார் வணடிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் செல்லுபடியை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டு, அது இன்னும் பைசலாகாமல் உள்ளது. எனினும் 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தின்கீழ், உபரி அனுமதிச் சீட்டுகளை அரசுப்போக்குவரத்து நிறுவனங்களுக்கு மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 21

பயணிப் பேருந்து வண்டிகளுக்குப் பயணக் கட்டணப்பட்டியலுக்குப் போக்குவரத்து அதிகாரி ஒப்புதல் அளிக்க வேண்டும். இக்கட்டண வீதத்தில் ஒரே சீரான நிலை இருக்கும் பொருட்டு அரசே கட்டண வீதங்களை நிர்ணயித்துள்ளது. இவ்வாறு நிர்ணயிப்பதில் பொதுமக்கள், பேருந்து உரிமையாளர்களின் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. பயணிப் பேருந்துகளுக்கான உயரளவு கட்டண வீதம் வரையறை செய்யப்பட்டு 12—3—1976ஆம் நாளன்று திருத்தியமைக்கப்பட்டது.

வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆகியவற்றுக்கான கட்டண வீதம் பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக 1974 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் திருத்தியமைக்கப் பட்டது.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு தாராளமாக மக்கள் போக்கு வரத்தும் சரக்குகள் போக்குவரத்தும் நடைபெறுவதற்கு வசதியாக, அண்டை மாநிலங்களோடு, பரிமாற்ற ஏற்பாட்டு, ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன; இவ்வொப்பந்தங்களின்படி ஒவ்வொரு மாநிலமும் பேருந்துகள் விடுவதற்கான வழித்தடங்கள் இன்னவை என ஒதுக்கப்பட்டு, சரக்குப் பேருந்துகள், மற்ற வண்டிகள் ஆகியவற்றிற்கான அனுமதிச் சீட்டு மேலொப்பம் தரப்படும் என்பது பற்றிய எண்ணிக்கையும் நிர்ணயிக்கப்படுகிறது. பயணிப் பேருந்துகளைப் பொருத்த வரையில், வழித்தடங்கள் பொதுவாக அந்தந்த மாநிலங்களில் ஓடும் கிலோமீட்டர் தூரத்தில் சமநிலை இருக்கும்படியாக ஒதுக்கப்படுகின்றன. புதுச்சேரியுடன் ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்படுவதற்கான வரைவுச் செயற் குறிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களோடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களை மாற்றி அமைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

6. இந்தியா முழுவதும் அல்லது ஐந்துக்குக் குறையாமல் ஒன்றை ஒன்று ஒட்டியுள்ள மாநிலங்களிடையே சரக்குப் போக்குவரத்து எளிதாக நடைபெறும் பொருட்டு, சரக்கு வண்டிகளுக்குக்கான தேசிய அனுமதிச் சீட்டு வழங்குவதற்காக இந்திய அரசு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இம்மாநிலத்திற்காக இந்திய அரசு வரையறுத்துள்ள அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 400 ஆகும். இவற்றில் இதுவரை 390 அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 6 அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள அனுமதிக் கோரிக்கையாளர்கள் அனுமதிச்சீட்டு அளிப்பதற்கான பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை.

7. பொது இடத்தில், மோட்டார் வண்டியை ஓட்டிச் செல்ல உரிமம் ஒன்று பெற்றிருக்க வேண்டும். தொழில் முறை ஓட்டுநர்களும் போக்குவரத்து வண்டிகளுக்கான ஓட்டுநர்

1978 மார்ச் 21]

களும் மருத்துவச்சான்று பெற்றிருத்தல் வேண்டும். ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஒழுங்கு படுத்தவும் அவை உரிமம் பெறச் செய்யவும் விதிகள் இயற்றப்பட்டுள்ளன. ஓட்டுநர்களை நன்கு கண்காணித்து "புள்ளி முறைக் கட்டுப்பாடு" என்ற ஒரு முறையைச் செயற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முறையின்கீழ் ஓட்டுநர் ஒருவர் விதிகள் மீறல் ஒவ்வொன்றுக்கும் இத்தனை புள்ளி எனக் கணக்கிட்டு, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள புள்ளிகளைப் பெற்றவுடன் தானாகவே ஓட்டுநர் உரிமம் செல்லுபடி இல்லாமல் போகும். இவ்வாறு செய்வதற்கான ஏற்பாடு பரிசீலனையில் உள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் அல்லது முக்கியமான மாவட்டச் சாலைகளின் பக்கத்தில் உள்ள கிராமங்களை இணைக்கிற நெடுஞ்சாலைச் செல்வழித் தடங்களில் அல்லது கிராமத் தொடர்புச் சாலைகளில் சிறு பேருந்துகளையும், சிறு ஒப்பந்த வண்டிகளையும் விடும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

8. மோட்டார் வண்டிகள் சட்டம், மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் வருவாய் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

(1)	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1977-78. (2)	திருத்த மதிப்பீடு, 1977-78. (3)	வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1978-79. (4)
	(ரூபாய் ஆயிரத்தில்.)		
1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் வருவாய்.	1,48,72	1,59,85	1,66,75
தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வருவாய்.	48,49,28	48,94,22	50,74,23
ஏனைய வருவாய்கள்	2,00	2,30	2,30
மொத்தம் ..	50,00,00	50,56,37	52,43,34

9. செலவினங்களில், 1977-78ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீடு, 1978-79ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

	(ரூபாய் இலட்சத்தில்)
1977-78ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	94.50
1977-78ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு ..	90.68
1978-79ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு	93.53

கருவூலங்கள் மூலம் வசூலிக்கப்படுகின்ற போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரிகள் வசூலுக்கான செலவு இதில் சேர்க்கப்படவில்லை.

10. போக்குவரத்துத் துறையன்றி, காவல் துறையும் மோட்டார் வண்டிகள் சட்டம், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டம் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்புவகிக்கிறது. போக்குவரத்துப் பேருந்துகளல்லாத வண்டிகளின் மீதான வரி செலுத்தப்படுகிறதா எனக் கண்காணிக்கும் பொறுப்பும் காவல் துறையினுடையதாகும்.

நாட்டுடமையாக்குதல்.

பெருகிவரும் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், பொருளாதார வளர்ச்சியின் ஓர் அங்கமான, பயணிகள் சாலைப் போக்குவரத்து அமைய வேண்டும்.

1948ஆம் ஆண்டு சென்னை நகர வழித் தடங்கள் அனைத்தையும் அரசு மேற்கொண்டதன் மூலம் பேருந்துப் பணிகளை நாட்டுடமையாக்கும் முறை தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டது. 120 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்கள் அனைத்தும் அரசால் இயக்கப்படவேண்டும் என்கிற அப்போதையக் கொள்கைப்படி, முன்னாள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, 1959ஆம் ஆண்டு முதல் தொலைதூரப் பயணிப் பேருந்துகளை இயக்க ஆரம்பித்தது. 1967ஆம் ஆண்டு அரசு கீழ்க்கண்ட வகைத்தடங்களை நாட்டுடமையாக்க முடிவு செய்தது:—

(அ) 75 மைலுக்கும் (120 கி. மீட்டர்) அதற்கும் மேற்பட்ட வழித்தடங்கள், சாதாரண, விரைவுப் பேருந்து போக்குவரத்து;

(ஆ) சென்னை மாநகரில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள், அவற்றின் தொலைவு என்னவாயிருப்பினும் அத்தகைய வழித்தடங்கள் அனைத்தும்;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள் யாவும்.

அடுத்தபடியாக, 1971ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்படி 5 உரிமங்களுக்குக் குறையாத தனியார் பேருந்துகள், அவற்றின் தடங்கள், பணிமனைகள், அவற்றில் பணிபுரிந்த பணியாளர்கள் உட்பட யாவும் நாட்டுடைமை யாக்கப்பட்டன. இச்சட்டத்தின் கீழ் சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை; ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி; ராமன் அண்ட் ராமன் பிரைவேட் லிமிடெட், கும்பகோணம்; ஸ்ரீராமவிலாஸ் பிரைவேட் லிமிடெட், கும்பகோணம் மற்றும் சத்தி விலாஸ் பஸ் சர்வீஸ், பொறையார் முதலிய தனியார் நிறுவனங்களிடமிருந்து, கையகப்படுத்தப்பட்ட பேருந்துகளும், வழித்தடங்களும் போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றப் பட்டன. 1973ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டம் நிறைவேற்றப் பட்டது. இச்சட்டம் பயணிப் பேருந்துகளை 5 ஆண்டு களுக்குள் மாவட்ட வாரியாக நாட்டுடைமையாக்க வகை செய்தது. இச்சட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள பேருந்து போக்குவரத்து முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டது. ஆனால் பிற்பாடு சென்னை உயர்நீதிமன்றம் இச்சட்டத்தை செல்திறனற்றது என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அரசு மேல் முறையீடு செய்துள்ளது. இவ்வழக்கு இன்னும் முடிவுறாமல் உள்ளது.

நீதிமன்ற வழக்குகளினால் முழுவேகத்துடன் நாட்டுடைமை திட்டம் செயல்படுத்தப்பட முடியாமை வேதனைக்குரியது. நாட்டுடைமையாக்குத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்தும் நோக்கத்துடன் அரசுப் போக்குவரத்து நிறுவனங் களுக்கு, வருவாய் தரக்கூடிய வழித்தடங்களுக்கான உரிமத் தைப் பெறும் வகையில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி யிடம் அல்லது மாநிலப் போக்குவரத்து அதிகாரியிடம் மனு செய்து கொள்ளுமாறும், மோட்டார் வாகனச் சட்டத்தின் பகுதி IV, IV-Aன் கீழ் நாட்டுடைமையாக்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் எனவும் அரசு கட்டளை வழங்கியுள்ளது. சிறந்த பொருளாதார கோட்பாடுகளுக்கு இணங்கவும், ஒருங்கிணைந்ததாகவும் திறம்படவும் ஆதாயம் அளிக்கும் வகையிலும் போக்குவரத்து முறையை அளிக்கவே மேல் கண்ட நடவடிக்கை தேவைப்பட்டது.

1976 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசுப் போக்கு வரத்துக் கழகங்களின் அமைப்பையும் செயல்திறனையும் ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை வழங்கும் பொருட்டு திரு. சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் குழு வொன்றை அரசு நியமித்தது. 1985 ஆம் ஆண்டு வரை பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை மனதிற்கொண்டு பயணப் போக்குவரத்து முன்னேற்றத்திற்காக வழிமுறைகள் வகுத்தல். இவ்வழிமுறைகளைப் படிப்படியாகச் செயல் படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அறிவித்தல் ஆகியன இக்குழு ஆராய வேண்டிய பொருட்களில் ஒன்றாகும். 1977-ஆம் ஆண்டு சூன் திங்களில் இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது, இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நாட்டுடைமையாக்கும் திட்ட வளர்ச்சியும், வழி முறை களும் கிராம முன்னேற்றத்திற்கான வகையில் அமையும், இவ்வாண்டு தொடங்கப்பட்ட செயல்முறைகள் அடுத்த ஆண்டும், அதைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கிராம மக்கட் தொகை, அவர்களின் பொருளாதார நிலைமை மற்றும் சமூகத் தேவைகள், இவற்றின் அடிப்படையில் கிராமப்புறங்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விரிவானதொரு மதிப்பீடு செய்யுமாறு அனைத்துப் போக்கு வரத்துக் கழகங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. கிராமங்களில் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சியடைய வேண்டும் என்கிற இந்த அரசின் கொள்கைக்குப் பொருத்த மாகவும், மேற்கூறிய மதிப்பீட்டின் அடிப்படையில் போக்கு வரத்துத் தேவைகளை அறிந்து, ஏற்கனவே உள்ள பகுதிகளை புதிய பகுதிகளுடன் இணைப்பது கிராமப்புற பகுதிகள் பயனடையும் வகையில் புதிய தடங்கள் திறக்கப்படுவது ஆகியன செயல்படுத்தப்படும். போக்குவரவு குறைவாக உள்ள தடங்களில் சிறிய பேருந்துகள் விடப்படும். எந்த ஒரு குடியிருப்பில் இருந்தும் 2 கி. மீ. க்கு மேற்படாத தூரத்தில் பேருந்துகள் நிற்குமிடம் அடுத்து 5 ஆண்டுகளில் அமையவேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். பெரு வாரியான மக்களுக்கு மிகுந்த நன்மைகள் என்கிற வலுவான அடிப்படையில் புதிய கிராமங்களைத் தேர்ந்தெடுப்பது அரசின் கவனத்தில் மிகுந்து நிற்கும்.

கிராமங்களை இணைத்தல் எனும் இந்தப் போக்குவரத்துக் கொள்கையால் கிராமச் சாலைகளை சீர்படுத்தவும் சாலை மேம்பாட்டுக்கான திட்டங்களை எதிர்காலக் கண்ணோட்டத் தோடு பார்க்கவும் இயலும். கிராமப்புறப் பகுதிகளுக்கு போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த வேண்டுமானால் கிராமச்சாலைகளை சீர்படுத்த வேண்டியது மிக அவசிய

மாகிறது. சாலைப்பராமரிப்பு துறையும், சாலைப் போக்கு
வரத்துத் துறையும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் எனப்
பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இதனை செயல்
படுத்த இந்த அரசு ஆட்சிக்கு வரும் வரையில், அதற்கான
முயற்சிகள் எடுக்கப்படவில்லை. நமது அரசு சாலைகள்,
சாலைப் போக்குவரத்து இரண்டையும் கவனிக்கும் பொறுப்பினை
ஒரே அமைச்சரிடம் அளித்துள்ளது. நாம் இதனை செயல்
முறையில் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். தேசிய
நெடுஞ்சாலை, நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து ஆகிய
மூன்று துறைக்கும் திட்ட நிலையிலும் செயல்படுத்தும்
நிலையிலும், ஒரே செயலரின் கீழ் இயங்க வகை செய்யப்
பட்டுள்ளது.

நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்தின் வளர்ச்சி.

30-6-1976 நாள் நிலவரப்படி, மாநிலத்திலுள்ள
9,259 பேருந்துகளில் அரசு போக்குவரத்துக் கழகங்கள்
4,419 பேருந்துகளை இயக்கி வருகின்றன. இதில் சென்னை
மாநகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இயக்கப்படும்
1,407 பேருந்துகளும் அடங்கும். நீண்ட தூர விரைவு
பேருந்துகள் நீங்கலாக, பொதுத் துறையில் இயக்கப்படும்
பேருந்துகள் 48 சதவீதமாகும். 31-12-1977 நாள் நிலவரப்படி
தமிழகத்தில் இருந்த பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை
9,537. இதில் 4,988 பேருந்துகள் பொதுத் துறையினிடமும்,
4,549 பேருந்துகள் தனியார் துறையினிடமும் உள்ளன.
பொதுத் துறையினரிடம் உள்ள பேருந்துகள் 52 சதவீதமாகும்.

பயணிகள் போக்குவரத்துக் கழகங்கள்,

இம் மாநிலத்தில் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் (Indian
Companies Act) கீழ்ப்பதிவு செய்யப்பட்ட ஏழு பயணிப்
போக்குவரத்துக் கழகங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட
போக்குவரத்துப் பணிகளை மேற்கொண்டுள்ளன,

சிறந்த பொருளாதார கோட்பாடுகளுக்கிணங்கவும் ஒருங்
கிணைந்ததாகவும் அந்தப் பகுதியில் திறம்படவும், ஆதாயம்
அளிக்கும் வகையிலும் முக்கியமாக பயணிகளின் வசதிகளைக்
கருத்தில் கொண்டும் போக்குவரத்து முறையை இயக்கும்
பொறுப்பை இக்கழகங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. வளர்ச்சிக்
கும், தேய்மானத்திற்கும் ஒதுக்கியபின், இக்கழகங்களின்
வருமானம் முதலீட்டில் 6 சதவீதம் இருக்கவேண்டும்.

போக்குவரத்துக் கழகங்கள் 1972-லிருந்து 1975-க்குள்
ஏற்படுத்தப்பட்டன. முன்னாள் தமிழ்நாடு அரசு போக்கு
வரத்துத் துறையின் வாகனங்களையும், சொத்துக்களையும்,

மாற்றியும் 1971-ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்
கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்
படியும் இக்கழகங்கள் அமைக்கப்பட்டன. அப்போது மாற்றித்
தரப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதி கடனாகவும், மற்றொரு
பகுதி பங்குகளாகவும் கருதப்பட்டது. பின்னால் இக்கழகங்
களுக்குத் தேவையான நடை முதலைக் கடனாகவும், முன்
பணமாகவும் அரசு அளித்தது. இக்கழகங்களின் கடனும்
பங்கும் 1:1 என்கிற விகிதத்தில் அமையுமாறு திருத்தி
அமைக்கப்பட்டன. இவ்வாறு திருத்தி அமைத்தது போக்கு
வரத்துக் கழகங்கள் வாணிப வங்கிகளிடமிருந்து கடன் பெறும்
சக்தியினை அதிகப்படுத்தியது. அரசு போக்குவரத்துக்
கழகங்களின் கடன், பங்கு 1-1-1978 நாளைய நிலவரப்படி
கீழ்க்காணுமாறு இருந்தது:—

வரிசை எண்ணும் கழகத்தின் பெயரும். (1)	பங்கு, (2)	கடன். (3)	கடன் திருப்பியளிக்கப்பட வேண்டிய வரையறை. (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்)	3,35.00	3,32.90	நிரந்தரக் கடன்.
(புற நகர்)	1,10.00	1,07.74	நிரந்தரக் கடன்.
(விரைவு)	3,46.00	2,52.73	நிரந்தரக் கடன்.
2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம்	75.00	74.63	நிரந்தரக் கடன்.
3. சேரன் போக்குவரத்துக் கழகம்	50.00	4.13	5 ஆண்டுகளுக்குள் திருப்பித்தர வேண்டியது.
4. சோழன் போக்குவரத்துக் கழகம்	78.00	பரிசீலனையில் உள்ளது.	
5. அண்ணா போக்குவரத்துக் கழகம்	30.00	11.22	5 ஆண்டுகளுக்குள் திருப்பித் தர வேண்டியது.
6. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்	1,40.00	1,37.00	நிரந்தரக் கடன்.
7. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ..	83.00	63.88	நிரந்தரக் கடன்.
மொத்தம் ...	12,47.00	9,84.23	

இக் கடனுக்கு, 1976-77 ஆண்டிலிருந்து 12 சதவீதம் வட்டி உண்டு இணைப்பு 1-ல் 1976-77 ஆண்டின் பயணிகள் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையினையும் 31-3-1977 நாளைய நிலவரப்படி ஒட்டுமொத்தமான நிலைமையும், 1977-78-ம் ஆண்டில் எதிர்பார்க்கும் ஆதாயம்/இழப்பு முதலிய விவரங்களையும் காணலாம். 1977-78 ஆண்டு மகிழ்ச்சி தரத்தக்க ஆண்டாக அமையும். கடந்த ஆண்டில் ஈட்டிய ஆதாயம் 46.53 இலட்சம். இந்த ஆண்டில் நிகர ஆதாயம் 2,79.88 இலட்சமாக இருக்கும். மக்களுக்கு உதவும் வண்ணம், திரும்பவும் முதலீடு செய்யும் வகையில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 10,61·06 இலட்சம் உபரியாகப் பெருக்கும். சேரன் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் பங்கு மூலதனத்தில் மீதி ஊதியப் பங்காக 12 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 6 இலட்சமும் 4 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 3 இலட்சமும், கொடுக்க முன்வந்துள்ளது எனும் செய்தி உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். அக் கழகங்கள் பணியாளருக்கு 20 சதவீதமாக ரூ. 20.34 இலட்சமும், 13.3 சதவீதமாக 24.65 இலட்சமும் பூரிப்பு ஊதியமாக (Bonus) அளித்துள்ளது. கழகங்களின் தனிப்பட்ட செயல் திறன்களின் வேற்றுமை தொடர்ந்து இருந்து வருகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் முதலியன நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் முதலியன இன்னமும் இழப்பு நிலையில் இருந்து மீளவில்லை. ஆயினும், இக் கழகங்கள் இழப்பு குறிப்பிடத் தக்க வகையில் குறைந்து வந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பண இழப்பு அடைந்த கழகங்கள் இந்த ஆண்டிலும் அதே நிலையில் இல்லாதது திருப்தி அளிக்கிறது. பிரச்சினைக்குரியதாக இருந்த பொருள் போக்குவரத்துக் கழகம், 1977 டிசம்பரிலிருந்து முன்னேற்றம் காட்டி வருகிறது. இதனால் நல்ல நிலையில் இது இயங்க முடியும்.

நடப்பு ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 10.22 இலட்சம் செலவில் 681 புதிய பேருந்துகளை வாங்கி விட்டுள்ளன. இவற்றில் 492 பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டவை. 189 பேருந்துகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டவை. இது தவிர பேருந்து நிலையங்கள், பணிமனைகள், பணியாளர் வசதிகள், பயணிகள் வசதிகள் இவைகளுக்காகப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 2,38.30 இலட்சம் செலவிட்டுள்ளன.

[1978 மார்ச் 21

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நடப்பு ஆண்டின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனம், 285 பேருந்துகள். 2 பெரிய மற்றும் ஒரு சிறிய பணிமனைகள், 8 பேருந்து முனைகள் (Terminals) மற்றும் 400 பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்காக ரூ. 4.05 கோடி உதவ ஒப்புக் கொண்டுள்ளது. இரண்டரை கோடி ரூபாய் கழக நிதியிலிருந்து திரட்டப்படும். இத் திட்டம் மூன்றாண்டுகளில் முடித்து வைக்கப்படும்.

பயணிப் போக்குவர்த்தின் வளர்ச்சியை ஈடுகட்டிய தல்லாமல் இப்பேருந்து எண்ணிக்கையின் அதிகரிப்பு 325 குடியிருப்புகளுக்கும், 8,15,000 புதிய மக்கட் தொகையினருக்கும் பயனளித்துள்ளது. தேய்மானங்களைக் குறிப்பிட்ட இடைவெளியில் தேவைக்கேற்றபடி அவ்வப்போது புதுப்பித்ததினால் திறம்படவும் குறித்த காலத்திலும் போக்குவரத்துப் பணி செயல்பட ஏதுவாகியது. பேருந்துப் பராமரிப்பின் தரம் முன்னேற்றம் கண்டுள்ளது. பேருந்துகளின் உபயோகத்தின் சராசரி அளவு 85லிருந்து 88 சதவீதமாக உயர்ந்துள்ளது.

நகரத்தையே நாடியிருக்கும் போக்குவரத்துத் தொழிலை நாட்டுபுறத்திற்கும் கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. சேரன் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழகங்கள் 15 சிறிய பேருந்துகளை (குறுகிய சக்கர அடிப்படைக் கொண்ட பேருந்துகள் உட்பட) இயக்கி வருகின்றன. சாதாரணப் பேருந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற சிறிய, குறுகிய பாதைகளைக் கொண்ட கிராமங்களுக்கும் பயணி போக்குவரத்து அதிகமில்லாமல் இருக்கும் காரணத்தால் தனியார் பேருந்துகள் விடாத இடங்களிலும், இச்சிறிய பேருந்துகள் விடப்படுகின்றன. சமூக நீதியினை நிலை நாட்டும் கொள்கை, இதுவென அரசு கருதுகிறது. இதனால் கழகங்களுக்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டாலும் அவற்றை ஆதாயக் கணக்கில் சரி செய்துக் கொண்டு, நாட்டுடைமைத் திட்ட முன்னேற்றத்தை நிலை நாட்டும்.

போக்குவரத்துக் கழகங்களின் பணிகள், பொருளாதார மற்றும் சேவை மனப்பான்மையுடன், தொடர்ந்து செயல்படும் முறையில் அரசு இன்னும் முன்னேற்றம் காண முனையும். வழித்தடங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம், தேய்மானங்களைப் புதுப்பிக்கும் கொள்கை, சிக்கனம் மற்றும் திறன் வாய்ந்த பராமரிப்பு, காலம் தாழாத மற்றும் ஆதாயத்துடன் இயக்குதல் முதலியவற்றில் முன்னேற்றம் ஏற்படும். 1978-79 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 1,40.06 இலட்சம் மொத்த ஆதாயமாக (வரி செலுத்துமுன், ஈட்டும் எனவும், அனைத்து போக்குவரத்துக் கழகங்களும்

[1978 மார்ச் 2.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு)

தமிழ்நாட்டு மாவட்டத் தலைமையகங்களைச் சென்னை நகருடன் இணைக்கவும் மாவட்டத் தலைமையகங்கள் ஒன்றை யொன்று இணைக்கவும் முன்னுள் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை நெடுந்தூர விரைவுப் பேருந்துகளை இயக்கி வந்தது. அத்துறை தன்னியக்கக் கழகங்களாக 15-9-1975 முதல் பிரிந்தபோது, விரைவுப் பேருந்துகள் புதியதாக அமைக்கப் பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இவ்விரைவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 தேதியன்று 256. இதில் உபரிப் பேருந்துகள் 30. இதன் மொத்த ஊழியர்கள் 2,600. நாளொன்றுக்கு சராசரியாக 20,000 பயணிகள் இப்பேருந்து களில் பயணம் செய்கிறார்கள். நிதியாண்டு 1976-77-ல் இக் கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. 15-9-1977 முதல் இக்கழகம் பயணக் கட்டணத்தை ஒரு கிலோ மீட்டருக்கு 6 பைசாவிலிருந்து 5.5 பைசாவாக குறைத்துள்ளது.

பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம்.

சென்னை சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பேருந்துகளை (346 வண்டிகள்), 1971 ஆம் ஆண்டின் பேருந்து உரிமையாளர்கள், பயணிப் பேருந்து கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் கீழ், இக்கழகத்திற்கு மாற்றப்பட்டு, 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் முதல் இக்கழகம் செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 அன்று 735 ஆக உயர்ந்துள்ளது. இதில் உபரி பேருந்துகள் 51. மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் இக்கழகம் செயல்படும் பகுதி, ஏறத்தாழ 5,200 ஊழியர்கள் இக்கழகத்தில் பணிபுரிகின்றனர். இக்கழக ஊழியர்கள் அனைவருக்கும் போனசாக 13.3 சதவீதம் 1976-77 கணக்கு எடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. 1977-78 ஆண்டில் மூலதனத்தில் வழங்கப்பட்ட 4 சதவீத பங்கு ஊதியம் (Dividend) ரூ. 3 இலட்சங்களாகும். நாளொன்றுக்கு சராசரி யாக 6 இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். இக்கழகம் நிலக்கோட்டை வட்டத்தில் 4 சிறு பேருந்துகளையும் (Mini buses) இராமேசுவரத் தில் 2 குறைந்த அடித்தளமுள்ள வண்டிகளையும் (Short wheel base buses) இயக்குகிறது.

[1978 மார்ச் 21

பயணிகளின் வசதிக்காக 10 நாட்களுக்கு முன்னதாகவே இருக்கைகளைப் பதிவு செய்யலாம். இந்த வசதியை எல்லாப் பெரிய பேருந்து நிலையங்களிலும், மற்றும் பேருந்து முனைகளிலும் (Terminal) பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு) ஏற்பாடு செய்திருக்கிறது. மேலும் பங்கு (Quota) முறைகளில் இருக்கைகளைப் பதிவு செய்யும் முறை முக்கிய இடை நிலையங்களில் இருக்கிறது. மேற்குறித்த பங்கு அளவிற்குமேல் முன்னுரிமை அடையாளச் சீட்டுக்கும் இடை நிலையங்களில் வழங்கப்படுகின்றன. சென்னை, திண்டிவனம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, வேலூர் போன்ற எல்லா முக்கிய பேருந்து நிலையங்களிலும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு) கழிவறை வசதிகளுடன் கூடிய, பயணிகள் தங்கும் அறைகளைப் பராமரிக்கிறது. திருச்சிராப்பள்ளி, மதுரை நாகர்கோவில், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் ஒய்வு அறைகளும், சாமான் அறை வசதிகளும் இருக்கின்றன. குழுக்களாக வரும் பயணிகள் வசதிக்காக சென்னையில் படுக்கைக் கூடங்கள் (Dormitory type) போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. வரும் ஆண்டில் பேருந்து நிழற் குடைகள், ஒளி சைகைகள், வரிசை (Queue) வசதிகள் போன்ற பயணிகளுக்கான வசதிகள் பெரும்பான்மையோருக்குத் தரப்படும்.

தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

தங்களது பேருந்துகள் சரிவரப் பராமரிப்பது, தங்களது மதிப்புக்குரிய வாடிக்கையாளருக்கு சேவை புரிவது மற்றும் அவர்களது மூன்ருவது சொத்தான பணியாளரின் நலன் பேணுவதை போக்குவரத்துக் கழகங்கள் செய்து வருகின்றன.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுபவருக்கு அவர்களின் பணி நிபந்தனைகளில் ஒரு படித்தான (uniform) நிலை இருக்க வேண்டும் என்று தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரிய உறுப்பினர்கள் எல்லோரும் தொடர்ந்து கோரி வந்தனர். அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்களுடனும் அங்கீகாரம் பெற்ற தொழிற் சங்கங்களுடனும் இதுபற்றி பலமுறை கலந்து பேசப்பட்டது.

இதன் முடிவாக ஆயுட்கால ஊதியத் திட்டம் 1975-ஆம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி முதல் போக்குவரத்து (Traffic) தொழில் நுட்ப, நிர்வாகப் பணியாளர்களுக்கு தொழில் தகராறு சட்டம் 1947 இன் 18(i) இன் பிரிவின் கீழோ அல்லது 12(3) இன் பிரிவின் கீழோ அமுலாக்கப்பட்டது. இத்திட்டம் போக்குவரத்துக் கழகங்களிடையே சீரான ஊதிய அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றிற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டம் அரசு போக்குவரத்துக்

1978 மார்ச் 21]

கழகங்களில் இதற்கு முன்னிருந்த பல்வேறு ஊதிய நிலைகளைச் சீரமைத்துள்ளது. பணியாளரின் கல்வித் தகுதியையும் அனுபவத்தையும் பொறுத்து இவ்வூதியப்படி முறைகளுக்குள் பல்வேறு நிலைகளில் பணியில் அமர்த்துவதற்கு இது வழி செய்துள்ளது. பணி உயர்வுக்குப் போதிய வாய்ப்பு இன்றி தொழிலாளர்கள் மனச் சோர்வு அடையாமல் இருக்கச் செய்வது ஆயுட்காலத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 30 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளி தன்னுடைய பணியைத் திறமையாகவும், நிறைவுள்ள முறையிலும் செய்திருந்தால் பணிக் காலம் முழுவதும் படிப்படியாக ஊதிய உயர்வு பெற்று குறிப்பிட்ட நிலைக்கு உயர வசதியுள்ளது.

மற்ற எல்லாப் பணி நிலைமைகள், அதாவது அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, விடுப்பு, மருத்துவ வசதிகள் போன்றவை அனைத்தும் அனைத்துக் கழகங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

எல்லாக் கழகங்களிலுமுள்ள, எல்லாப் பணியாளர்களுக்கும் பயன் பெறத்தக்க வகையில் தகுந்த ஊக்கத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இது கீழ்க்கண்ட இரண்டு நோக்கங்களை அடைவதற்காக உள்ளது ;—

(அ) மிகுதியான ஊதியத்தால் பணியாளரைப் பயன் பெறச் செய்தல்.

(ஆ) அதிக உற்பத்தி, குறைந்த செலவு மூலம் போக்குவரத்துக் கழகத்தைப் பயன் பெறச் செய்தல்.

சமீபத்தில், கலந்துரை உடன்பாட்டிற்குப் பின், 1-9-1977 முதல் எல்லா போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பொறியியற் கழக பணியாளர்களுக்கு மாதம் ரூ. 27 தனிப்பட்ட கொடையாக வழங்கப்பட்டது. இது தற்போது பணியாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருமுனைப் பேச்சு வார்த்தைகளின் மூலம் நிச்சயிக்கப்படும். இறுதி நிவாரணத் தொகையில் சரிகட்டப்படும்.

இந்த அவையில் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க போக்குவரத்துக் கழகங்கள் சிற்றுண்டிச் சாலைகள் மனமகிழ் வசதிகளுடன் கூடிய ஒய்வு அறைகளையும் திறக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றன. 15-9-1977 முதல் எல்லாப் போக்குவரத்துக் கழக நிர்வாகங்களும், போக்குவரத்துக் கழகப் பணியாளரின் குழந்தைகளுக்கும் பள்ளி, கல்லூரி செல்ல மாணவர்களுக்கான இலவசச் சீட்டுகளை வழங்கி வருகின்றன.

குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்குமுகத்தான் இறந்தவருடைய ஒரு வாரிசிற்கு, போக்குவரத்துக் கழகத்தில் வேலை தேடி தரும் அலுவலகத்தை அணுகாமலேயே, காலியாகும் வேலையிடத்திற்கு அவரது தகுதியைப் பொறுத்து வேலை கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

[1978 மார்ச் 21

அரசு மருத்துவ மனைகளில் அரசு ஊழியர்களுக்கு ஒப்பாகப் போக்குவரத்து ஊழியர்களுக்கும் இலவச மருத்துவம் கிடைக்க அரசு ஆணை பிறப்பிப்பதாக உறுதி அளித்திருந்தது. இதற்கான ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டன. இவ்வகையான இத்திட்டம் 1-4-1978 முதல் நடைமுறைக்கு வரும்.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் குடும்ப நல நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் பணியாளர்களின் நல அறக் கட்டளைகளை ஏற்படுத்தித் தங்களுடைய அதிகப்படி வருவாயிலிருந்து பெரும் பகுதியை அதில் செலுத்தின. இவ்வழியில் சேரன் போக்குவரத்துக் கழகம் தங்கள் பணியாளர்களின் சீரிய பணியின் காரணமாக ரூ. 7.3 இலட்சத்தை இவ்வகையில் செலுத்தி முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்நிதி பணியாளர்களின் குழந்தைகளுக்கு, புத்தகங்கள் குறிப்பு புத்தகங்கள், கரும்பலகைகள் மற்றும் படிப்பு உதவித் தொகை இவற்றிற்காக செலவிடப்படுகின்றது.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் ''பாதுகாப்பு ஓட்டுநர் பரிசுத் திட்டத்தை'' ஏற்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின் கீழ் விபத்துக்கள் இல்லாமல் ஒவ்வொரு முழு வருடத்திய வண்டியியக் கத்திற்கு ஊர்தி ஓட்டுநர்களுக்கு ரூ. 25.ம் இதைத் தவிர ரூ. 75-லிருந்து ரூ. 500 வரை விபத்துக்கள் இன்றி வண்டி ஓட்டும் வருடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிதிப் பரிசு அளிக்கப்படும்.

பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்களும் அவர்களின் பணியாளர்களுக்கு மிதமான வட்டி வீதத்தில் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறும் வகையில் திருமணக் கடன் அளிக்கின்றன.

சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை தங்களது பணியாளருக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்குப் பணியாளர் கூட்டுறவு அங்காடிகளுக்கு சலுகை கட்டண வட்டி வீதத்தில் நிதி உதவி செய்திருக்கின்றன. பல்வேறு கிளைகளில் பணிபுரியும் பணியாளருக்கு உணவுத் தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்காக சேரன் மற்றும் சோழன் போக்குவரத்துக் கழகங்கள் இயங்கும் ஊர்திகளை (Mobile van) ஏற்பாடு செய்திருக்கின்றன.

நிறுவனத்தின்று கடனுதவி பெற்று ''நீங்களே உங்கள் வீட்டை உரிமையாக்கும் திட்டத்தின் கீழ்'' வீட்டு கடனுதவிக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் தங்களது பணியாளருக்கு உதவியிருக்கிறது. ஒரு வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தை அமைக்கும் கருத்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடம் இருக்கிறது.

1978 மார்ச் 21]

எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாளருக்குத் தவறாமல் தைத்த சீருடைகளும் மிதியடிகளும் வழங்குகின்றன.

ஐந்து வருடங்களுக்குமேல் பதவியிலிருக்கும் பணியாளருக்கு அவரது தேவையைப் பொறுத்து இலவசமாகக் கண்ணாடிகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் வழங்கி வருகிறது. அவர்களது சேவையைப் பாராட்டும் வகையில் 10 வருடங்கள் பணி செய்த பணியாளருக்கு கைக்கடிகாரங்களும் பரிசளிக்கப் படுகின்றன. தங்களது பணியாளருக்கு இருக்குமிடம் தருவதற்கான ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை இப் போக்குவரத்துக் கழகம் அமைத்திருக்கிறது.

எதிர் காலத்தில் பணியாளரின் நலனே அரசின் எண்ணத்தில் முதன்மையாக இடம் பெறும். பெரிய மற்றும் நல்ல வேலை நிலைமைகளையும், தொழிலாளர் கல்வியையும், கொடுப்பது தோடல்லாமல் உட்பணி பயிற்சி கொடுப்பதற்கும், உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதுதான் ஆயுட்கால ஊதியத் திட்டத்துடன் தொடங்கப்பெற்ற அலுவல் திட்டம் தனது தர்க்கரீதியான முடிவை எட்டும்.

நடப்பு ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றில் பெரிய வேலை நிறுத்தங்கள் நடந்தன. இந்த வேலை நிறுத்தங்கள் இலட்சக்கணக்கான பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியது மட்டுமின்றி போக்குவரத்துக் கழகங்களுக்கு சுமார் 95 இலட்ச ரூபாய் வரை இழப்பையும் ஏற்படுத்தின. வேலை நிறுத்தமென்பது தொழிலாளர்களுக்கு ஒரு சட்ட ரீதியான ஆயுதமாக இருப்பினும், அவற்றை குறைந்த அளவிலே உபயோகிக்கப்பட வேண்டும். பயணம் செய்யும் மக்களைக் கருத்திற்கொண்டு வேலை நிறுத்தம் போன்ற தீவிர நடவடிக்கைகளை திடீர் என்று எடுப்பதற்கு முன் பயணம் செய்யும் பொது மக்களை பணியாளர்கள் கருத்திற் கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

பொது

பேருந்துப் பணிகளை இயக்கும் பிரச்சினைகளில் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை தருவதற்காக தமிழ் நாடு அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து கலந்தாராயும் குழுவை (Tamil Nadu Nationalised Transport Consultative Committee) அரசு திருத்தி அமைத்தது. இக்குழு, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைத் தவிர 12 சட்டப் பேரவை உறுப்பினர்களையும் 3 சட்ட மேலவை உறுப்பினர்களையும் கொண்டதாகும்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 1977-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளம், புயலை கருத்திற்கொண்டு ரூ. 11.89

இலட்சத்தை நன்கொடையாக நடப்பு வருடத்தில் இலாபத்தை ஈட்டிய சேரன் போக்குவரத்துக் கழகம், சேரன் பொறியியற் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய இவைகள் வழங்கின.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்கு குறைந்த கட்டண செலவில் வசதிகளையும் அதே சமயத்தில் வியாபார நோக்கத்துடன் நிலை நிற்கக் கூடிய நிறுவனமாகவும் இருக்க வேண்டிய இரு நோக்கங்களையும் சரிசமன் செய்ய வேண்டியுள்ளது. இம் மாற்றத்தில் சாலைப் போக்குவரத்துப் பணிகள் இந்நாட்டின் மேம்பட்ட எந்த மாநிலத்தையும் ஒப்பிடக்கூடிய நிலையில் உயர்ந்து உள்ளது.

நடப்பு ஆண்டில் எல்லா போக்குவரத்துக் கழகங்களின் நிதி மேம்பாடு (Financial Performance) பொதுவாக திருப்திகரமாகவே இருந்து வருகிறது. போக்குவரத்துப் பணியாளர்களின் ஒற்றுமையோடு இந்த போக்குவரத்துக் கழகங்கள் இன்னும் சிறந்த முறையிலே தங்களது பணிகளை வரும் ஆண்டில் செவ்வனே தொடரும் என இந்த போக்குவரத்துக் கழகங்கள் எதிர் பார்க்கின்றன.

பொறியியற் கழகங்கள்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஐந்து லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கருத்திற் கொண்டு, 1973-74, 1974-75 ஆண்டுகளில் ஐந்து பொறியியற் கழகங்கள் ஆரம்பிக்கப் பட்டன. 31-12-1977 அன்று இந்த ஒவ்வொரு பொறியியற் கழகங்களிலும் பணிபுரிவோரின் எண்ணிக்கை பின்வருமாறு:—

(1)	பல்லவன் பொறியியற் கழகம்	680
(2)	மதுரை பாண்டியன் பொறியியற் கழகம்	536
(3)	சேரன் பொறியியற் கழகம்	710
(4)	சோழன் பொறியியற் கழகம்	312
(5)	அண்ணா பொறியியற் கழகம்	300
		2,538

அவைகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்கின்றன:—

(அ) ஊர்திக்கான கூடு கட்டுதல்;

(ஆ) பராமரிப்பும், பிரித்து ஆராய்தலும்.

(இ) டயர் புதுப்பித்தல்;

(ஈ) வாகனங்களைப் பராமரித்தல்;

(உ) இரும்பில்லா உலோகக் கலவைகளை வார்ப்படம் செய்தல்;

(எ) கழகங்களின் கட்டிடங்களுக்கு மின் கம்பி பொருத்துதல்.

(ஏ) பெரிய அளவு பழுதுபார்க்கும் வேலைகள்;

(ஐ) தடைக் கருவிகள் (Brake drums) உற்பத்தி செய்தல்] (சேரன் பொறியியற் கழகம்);

(ஒ) எஞ்ஜின் சீர்படுத்துதல் (சேரன் பொறியியற் கழகம்);

(ஓ) மோட்டார் துணைக் கருவிகள் உற்பத்தி செய்தல்.

இக்கழகங்களின் நிதி செயல் திறன் (நிகர இலாபம்/இழப்பு) இணைப்பு II-ல் தரப்பட்டிருக்கிறது.

சேரன் பொறியியற் கழகம் 1976-77-ஆம் நிதி ஆண்டில் 12 சதவீதம் பங்கு வீதத் தொகையான ரூ. 3 இலட்சத்தை வழங்கியிருக்கிறது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்

பொது மக்களிடமிருந்தும் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் வைப்புத் தொகை மற்றும் கடன் ஈட்டுப் பத்திர மூலமாக, அரசுரிமை போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செலவு திட்டங்களுக்கு போதிய நிதி வசதி அளித்திட 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் நிறுவப்பட்டு 2½ ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதுவரை இக்கழகம் ரூ. 600 இலட்சம் வைப்புத் தொகை பெறுவதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டு, தற்போது ரூ. 500 இலட்சம் நிகர வைப்புத் தொகையாக பெற்றுள்ளது. இது தவிர, ரூ. 70 இலட்ச மதிப்புள்ள கடன் ஈட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளது. இக்கழகம் ரூ. 115 லட்சம் பங்கு மூலதனத்தில், தற்போது ரூ. 685 லட்சம் நிதி வசதி படைத்துள்ளது.

2. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை இக்கழகம் ரூ. 14,50 லட்சம் வரை கீழ்க்கண்டவாறு கடன் வசதி அளித்துள்ளது:—

ஆண்டு		நேரடியாக தந்த கடன்	பிறர் மூலமாக கடன் வசதி	மொத்தம்.
(1)		(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)		
1975-76	..	1,49.00	1,65.00	3,14.00
1976-77	..	5,35.55	70.00	6,05.55
1977-78	..	5,31.33	..	5,31.33
மொத்தம்	..	12,15.88	2,35.00	14,50.88

[1978 மார்ச் 21

3. இப்படி ரூ. 14.50 லட்சம் வரை கடன் வழங்கியும் பிறரிடம் கடனுக்கு ஏற்பாடு செய்தும் தந்ததால், போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளின் எண்ணிக்கை சுமாக் 900 அதிகமாகி, அதன் மூலம் 7,000-க்கு மேற்பட்வர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

4. மேற்கண்டவாறு புறநகர் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவி அளித்ததோடு நில்லாமல், இக்கழகம் விரிவு படுத்தப்பட்ட சென்னை பெரு நகரின் நன்மையைக் கருதி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெரு நகர்) மேலும் சுமார் 550 பேருந்துகள் வாங்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து உதவியது. மேற்படி திட்டத்திற்கு தேவையான ரூ. 12,18 லட்சம் தொகையில், இக்கழகம் தன்னுடைய நிதி வசதியிலிருந்தும், மற்றும் பிற நிறுவனங்களின் மூலமாக சுமார் ரூ. 5,60 லட்சம் தர இருக்கிறது. இத் திட்டத்திற்கு பிற நிறுவனங்களின் மூலமாக மீதியுள்ள தொகை கடனாக பெற்றுத் தரப்படும்.

இத்தொகையில் இக்கழகத்தின் பங்கு 1977-78-ம் ஆண்டு ரூ. 70 லட்சமாகவும், மற்றும் 1978-79-ம் ஆண்டு ரூ. 1,20 லட்சமாகவும் இருக்கும்.

5. நாள்தோறும் சுமார் 40 லட்சம் பேர் பயணம் செய்கின்ற அரசு போக்குவரத்து நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, இக் கழகம் இந்த அளவு நிதி வசதி அளித்து உள்ளது. வருகின்ற 1978-79ஆம் ஆண்டு மேலும் அதிக நிதி வசதி அளித்திடும். அது ரூ. 6,50 லட்சமாக இருக்கும்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம், 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் தமிழ்நாட்டில் சாமான்களையும் அவசிய பண்டங்களையும் கொண்டு செல்ல, 1974-75 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பு வளர்ப்புத் திட்டத்தினையொட்டி, 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ. 40 லட்சம்.

2. ஆரம்ப காலத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பளிப்பதும், முக்கியமாக தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கும் கழகத்திற்குத் தேவையான பொருட்களை ஏற்றிச் செல்வதும், இதற்காக 100 சரக்குப் பேருந்துகளை வைத்துக் கொள்வதும் இக்கழகத்தின் நோக்கங்களாக இருந்தன. தற்பொழுது இக்கழகத்திடம் 68 சரக்குப் பேருந்துகள் உள்ளன. மொத்தம் 255 நபர்கள் பணிபுரிகின்றனர். இவர்களில் 188 நபர்கள் முன்னாள் இராணுவத்தினராவார்கள்.

1978 மார்ச் 21]

3. இக்கழகம் தொடக்கக் காலத்தில், தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கும் கழகத்திற்கும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கும் பணியாற்றி வந்தது. தற்பொழுது இந்திய உணவு கழகத்தினரின் உணவு தானிய நடமாட்டத்திற்கான சரக்கு ஏற்றும் இறக்கும் பணிகளையும், தமிழ்நாடு இரும்புக் கழகத்தினருக்கான இரும்புப் போக்குவரத்துப் பணியினையும் இக்கழகம் மொத்த அளவில் மேற்கொண்டுள்ளது. 1977-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாளிலிருந்து இக்கழகம் தமிழ் நாட்டிலுள்ள 89 முக்கிய எல்லா இடங்களையும் உள்ளடக்கி கூட்டுப் போக்குவரத்தினையும் துவங்கியுள்ளது. இதன் மூலம் அரசு அச்சகங்களிலிருந்து பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பப் படும் எழுதுபொருள் மற்றும் பண்டங்கள் எடுத்துச் செல்லும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய வியாபாரங்கள் உள்ள அதிக இடங்களில் சார்பு அலுவலர்களை நியமிப்பது பற்றிய கேள்வி அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. இக்கழகம் தற்பொழுது நட்டத்தில் இயங்கி வருகின்றது. இக்கழகத்திற்கென சென்னையில் ஒரு முறையான தொழிற் கூடம் கட்டுவதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. பராமரிப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் நிலையினாலும், சரக்கெடுத்துச் செல்லும் போக்குவரத்துப் பணியினை பொதுமக்களுடைய கவனத்திற்கு பரந்த அளவில் கொண்டு வருவதனாலும், அரசு உற்பத்திப் பிரிவுகள் இக் கழகத்தினை மேலும் அதிகபட்ச அளவில் பயன்படுத்த முன்வரும் நிலையினாலும், இக்கழகம் தன் போக்கிலிருந்து திரும்பி, நல்ல இலாபம் தரக்கூடிய அமைப்பாக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

சாலைப் போக்குவரத்து நிறுவனம்

எந்த ஒரு நிறுவனத்திற்கும் அதனுடைய முன்னேற்றத்திற்காக அதனுடைய நிர்வாகிகளுக்கு காலமுறை நிர்வாக பயிற்சியும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் தேவை. இந்த அடிப்படை நோக்கத்தின்கீழ், 1976-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சாலைப் போக்குவரத்து நிறுவனம் துவக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாவன—

(1) சாலைப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அந்நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சி, போக்குவரவு, நிர்வாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பது ;

(2) சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் திறமையாக செயல்பட சாலைப் போக்குவரத்துத் துறையில் நடைமுறை மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வது ;

(3) சாலைப் போக்குவரத்தில் தற்கால முன்னேற்றங்கள் பற்றியும் அவைகளின் தற்போதைய பிரச்சினைகள் பற்றியும் விவாதித்து அறிந்துகொள்ள கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்துவது;

(4) மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் கலந்து தக்க ஆலோசனை கூறுவது ;

(5) மாநில போக்குவரத்து நிறுவனங்கள் வாங்கிய பல்வகை உபரி உறுப்புகளின் தன்மைகளை பரிசோதித்து தருதல் ;

(6) போக்குவரத்து நடைமுறை நூல் (Transport Manual) தயாரித்தலும், மற்றும் திட்டமிட்ட அளவு மற்றும் தேவையான வரையறைகளை நிர்ணயித்தலும்;

(7) போக்குவரத்து கழகங்களுக்குத் தேவையான தொலை நோக்குத் திட்டங்களை தயாரித்தல்.

1977-78ஆம் ஆண்டு, போக்குவரத்து அதிகாரிகள், தொழில் நுட்ப அதிகாரிகள், பணி பிரிவு அதிகாரிகள், கிளை மேலாளர்கள், உதவி கிளை மேலாளர்கள், கட்டிடப் பொறியாளர்கள், மற்றும் இளநிலை உதவியாளர்கள்/பொறி யாளர்கள் ஆகியோருக்காக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

இந்நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்து தடங்களைப் பற்றி பல்லவன் போக்குவரத்து (விரைவு) நிறுவனத்திற்கு தக்க ஆலோசனை கூறி அந்நிறுவனம் நெடுந்தூரப் போக்குவரத்து தடங்களில் பேருந்துகள் விட பரிந்துரை செய்தது. இந்நிறுவனம் செய்துள்ள பல குறிப்பிட்ட காரியங்களில் இந்திய தொழில் நுட்ப கழகத் துடன் (I.I.T.) கலந்து பேருந்துகளிலிருந்து வெளியாகும் புகையினை கட்டுப்படுத்தும் வகைக்கான தொழிற்கூடம் ஒன்றை நிறுவியது ஒன்றாகும். அத்தொழிற்கூடத்திற்குத் தொடர் புள்ள கண்காட்சி ஒன்றினையும் நடத்தியது. அக் கண்காட்சி யில் பல சிறப்புப் பெற்ற மோட்டார் வாகன உதிரி உறுப்பு உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். ஐ. சி. எஞ்சின் (I. C. Engine) மற்றும் எண்ணெய் எரி பொருளாவது குறித்து தேசிய மாநாடு ஒன்றினையும் பேருந்துகளுக்குத் தேவையான உதிரி பாகங்களைக் குறைத்து உபயோகப் படுத்துவது குறித்து கருத்தரங்கு ஒன்றினையும் இந்நிறுவனம் நடத்தியது. மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களில் பணி புரியும் அதிகாரிகளுக்கு உதவுகின்ற வகையிலே நூல் நிலையச் செய்திக் கதிர் ஒன்றை கால முறையாக வெளியிட்டது.

போக்குவரத்து நிறுவனம் வெற்றிகரமாக இயங்க மிக முக்கியமானவர் சிறந்த பேருந்து ஓட்டுநர் என்பது தாங்கள் அறிந்த உண்மை. பொதுமக்களிடமிருந்து ஓட்டுநர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றிய புகார்கள் முடிவில்லாமல் வந்த வண்ணம் இருந்தன. அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அவர்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்கமாக இருத்தல் பற்றியும் நிறைய ஆலோசனைகள் கூறப்பட்டன. இக் குறைகளுக்குக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் கோளாறு இருப்பதாக அரசு நம்பு கிறது. அவர்கள் இவற்றினை சரக்கு போக்குவரத்து மற்றும் பார வண்டி ஓட்டுநர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். ஓட்டுநர்கள் தங்களின் கடுமையான உழைப்பினால் தொய்வு அடைந்து சமூக நலனுக்கு பொறுப்பில்லாதவராகி விடுகிறார். தாங்கள் ஆரம்ப நிலையிலிருந்தே ஓட்டுநர்களுக்குச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் விஞ்ஞான ரீதியாகவும், முறையா கவும், உபயோகமான முறையில் பயிற்றுவிக்கவும் சமூக நலனை கருத்தில் கொண்டு நல்ல முறையில் பேருந்துகளை ஓட்டுவிக்கவும் முடிவு எடுத்துள்ளோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு மின் வாரியத்திற்காக தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு கல்கத்தா விலிருந்து சென்னைக்கு நிலக்கரி எடுத்துவரும் பணிக்காக அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மின்வாரியம் இப்பணிக்காக, 1975-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாளில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் ஒரு ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டது. அவ்வொப்பந்தத்தின் அடிப்படையின்பேரில், நிலக்கரி ஏற்றி வரும் பணி, 1976 ஜூன் திங்கள் வரை மேற்கொள்ளப் பட்டது. 1975 மார்ச் மாதத்திலிருந்து 1976 ஜூன் வரை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரிய உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட கால அளவில், சுமார் 1,15,000 மெட்ரிக் டன்கள் நிலக்கரி சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.

2. ஜூன் 1976-க்குப் பின்னர் புயலின் காரணமாக, இரயில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதின் காரணமாக, 1977 ஆகஸ்டிலிருந்து அக்டோபர் முடிய 30,000 டன்கள் நிலக்கரி தற்காலிகமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டது. இது தவிர ஜூன் 1976-க்குப் பின்னர் இரயில் பெட்டிகள் கிடைப்பதில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாகவும், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தா நிலக்கரிச் சுரங்கங் களிடமிருந்துதான் தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரி

பெற வேண்டும் என்ற மைய அரசின் ஏற்பாட்டினுலும், கல்கத்தாவிலிருந்து, தமிழ்நாடு மின்வாரியத்திற்காக கடல் மார்க்கமாக நிலக்கரி எதுவும் கொண்டு வரப்படவில்லை. சமீபத்தில் மத்திய எரிபொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலுள்ள ஊது உலைக்கு மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தாவில் கிடைக்கும் நிலக்கரி ஏற்றவையல்ல என்று தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கருத்து தெரிவித்துள்ளனர். இதனையொட்டி, தமிழ்நாடு மின்வாரியம், மத்திய அரசின் நிலக்கரித் துறைக்கும், பம்பாயிலுள்ள கப்பல் போக்குவரத்துத் தலைமை இயக்குநருக்கும் இரயில் மற்றும் கடல் மார்க்கமாக வங்காளம்—பீகார் நிலக்கரியைக் கொண்டு வரும் பணியை மீண்டும் தொடங்கக் கோரியும், இதற்காக, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களை பயன்படுத்தக் கோரியும் வேண்டுகோள்கள் விடுத்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களான, தமிழ் அண்ணவையும், தமிழ்ப் பெரியாரையும் பயன்படுத்தாத நிலையில் இக்கப்பல்கள் இரயில்வேக்கான நிலக்கரியை எடுத்துவரப் பயன்படுத்தப்பட்டன. கரையோர கப்பல் கட்டண விகிதங்கள் குறைவாக இருந்த காரணத்தால், மேற்சொன்ன வகையில், கழகத்திற்கு நட்டமேற்பட்டது. 1976-77இல் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென, 20,512 மெட்ரிக் டன் நிலக்கரியும் (ஜூன் 1976 வரை) இரயில்வேக்கான, 20,254 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்திற்காக பங்களாதேஷிலிருந்து 3,365 டன் அஸ்பால்டும், 6,040 மெட்ரிக் டன் உப்பும், 193 மெட்ரிக் டன் எடை அளவிற்கு ஏனைய பிற பொருள்களையும் எடுத்து வந்தன. இக்கப்பல்கள் 1977-78 ஆம் ஆண்டு இறுதி வரை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென 31,449 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்திய ரயில்வேக்காக, 30,280 மெட்ரிக் டன் நிலக்கரியும், தனியார் தொழிற்சாலைகளுக்கென 12,110 மெட்ரிக் டன் நிலக்கரியும் எடுத்து வந்தன. தமிழ் அண்ணு கப்பல் 6,298 மெட்ரிக் டன் உப்பும் எடுத்துவர 24 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கும் கொடுக்கப்பட்டது. மேற்கூறிய கரையோர வாணிபம் தவிர, தமிழ்ப் பெரியார் கப்பல் இந்திய தாது மற்றும் உலோக வணிகக் கழகத்திற்கென, 9,941 மெட்ரிக் டன் நிலக்கரியை இலங்கைக்கும் எடுத்துச் சென்றது.

1976-77ஆம் ஆண்டு தமிழ்ப் பெரியார் கப்பல் விசாகப்பட்டினம் இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில் கூடத்தில் 62 இலட்ச ரூபாய் செலவில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட்டது. தமிழ் அண்ணு கப்பல் 1978ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட வேண்டும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வரும் நிலைமையை, இந்தியக் கப்பல் நிறுவனங்களில் மத்திய அரசு இயக்குநர் ஆய்வு செய்து, கழகத்தை நல்ல முறையில் வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடிப்படைக் கட்டமைப்பு உள்ளதென்றும், கழகம் விரிவுபடுத்தப்பட வேண்டுமானல், அதற்கான முடிவை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின்வாரியத்திற்கென ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்கு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருந்து வருகிறது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம்.

தமிழக அரசின் சுமார் 6,000 மோட்டார் வாகனங்களை நன்னிலையில் பேணிப் பராமரிக்கும் பொறுப்பை மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம் ஏற்றுள்ளது. இந்நிறுவனத்தின் பணிக்களரிகள் (Workshops) அரசு வண்டிகள் எல்லாவற்றையும் முழு அளவில் பராமரிக்க இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தால், குறிப்பிட்ட விதிமுறைகளின் கீழ் 39 தனியார் பணிக்களரிகளுக்குப் பழுது பார்க்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பட்டினப்பாக்கத்தின் அருகில் எல்லா வசதிகளுடன் கூடிய புதிய தலைமைச் செயலக சர்வீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேலும், நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் முதல் தரப் பணிக்களரிகள் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளது. இந்நான்கு இடங்களிலும் பணிக்களரிகளுக்கான கட்டிடப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

1977 ஆம் ஆண்டு பல்வேறு வகைப்படும் கிட்டத்தட்ட 15,000 பழுதுப் பணிகளை இந்நிறுவனம் செய்து முடித்தது.

1977 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தைச் சார்ந்த மத்தியக் கொள்முதல் மற்றும் பண்டகசாலை, ரூபாய் 25 இலட்சம் பெறுமானமுள்ள உதிரிச் சாமான்கள், சார்புப் பொருட்கள் ஆகியவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து பணிக்களரிகளுக்கும் இதர துறைகளுக்கும் வழங்கியது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களுக்குக் காலணிகள், சீருடைகள், சோப்பு, துப்புரவுத் துணிகள் போன்றவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தின் எல்லாப் பணியாளர்களையும் 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு தளர்த்தப்பட்ட ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வர இவ்வரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

இணைப்பு I.

போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலை.

கழகத்தின் பெயர். (1)	1976–77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—). (2)	31–3–1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—). (3)	1977–78 கணக்குப்படி திருத்தப்பட்ட மதிப்பீடுகள்*. (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) ..	(—) 0.40	(—) 5,42.56	
(விரைவுப் பிரிவு) ..	(—) 7.29	(—) 1,35.39	(—) 13.16
(புறநகர்ப் பிரிவு) ..	(—) 40.21	(—) 1,13.72	(+) 2.10
2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ..	(+) 85,40	(+) 19.98	(—) 39.08
3. சேரன் போக்குவரத்துக் கழகம் ..	(+) 49.48	(+) 80.37	(+) 1,30.66
4. சோழன் போக்குவரத்துக் கழகம் ..	(—) 13.39	(—) 1,43.15	(+) 75.86
5. அண்ணா போக்குவரத்துக் கழகம் ..	(+) 3.83	(—) 20.95	(+) 15.00
6. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்	(+) 17.67	(—) 1,23.17	(+) 23.32
7. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்	(—) 48.56	(—) 1,47.31	(+) 85.00
			(+) 0.18
மொத்தம் ..	(+) 46.53	(—)11,25.90	(+) 2,79.88

* வருமானவரி செலுத்துமுன்.

இணைப்பு II.

பொறியியற் கழகங்களின் நிதி நிலை.

கழகத்தின் பெயர். (1)	1976-77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—). (2)	31–3–1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—). (3)	1977-78 கணக்குப்படி தற்காலிகமான ஆதாயம் (+) இழப்பு (—)* (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. பல்லவன் பொறியியற் கழகம் ..	(+) 0.14	(—) 0.18	(—) 0.31
2. மதுரை பாண்டியன் பொறியியற் கழகம் ..	(+) 3.61	(—) 2.61	(+) 18.37
3. சேரன் பொறியியற் கழகம் ..	(+) 15.95	(+)20.19	(+) 16.27
4. சோழன் பொறியியற் கழகம் ..	(+) 0.20	(+) 0.13	(+) 3.19
5. அண்ணா பொறியியற் கழகம் ..	(+) 0.18	(—) 4.08	(+) 5.26
மொத்தம் ..	(+) 20.08	(+) 13.45	(+) 42.78

* வருமானவரி செலுத்துமுன்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புதன்கிழமை, 1978 மார்ச் 22

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Medical Colleges

*200 Q.—THIRU K. S. ABDUL WAHAB (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to establish Medical Colleges in Ramanathapuram and Kanyakumari Districts; and

(*b*) if not, the reasons therefor ?

மருத்துவக் கல்லூரிகள்

திரு. கே. எஸ். அப்துல் வகாப் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) & (இ) இல்லை. இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் பிற சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் திருநெல்வேலி, மதுரை மருந்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரிகள் துவக்க வேண்டும் என்று செயற் குறிப்பு இருந்தது. அது எந்த நிலையில் இருக்கின்றது? இப்போது அடுத்த மருத்துவக் கல்லூரி வருவதாக இருந்தால், எந்த ஊருக்கு முதலிடம், 'பிரையாரிட்டி' கொடுக்கப்படும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1978 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இந்தியன் மெடிகல் கவுன்சில் இப்போது புதிதாக மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 100 கல்லூரிகள் இருக்கின்றன. இதிலிருந்து பயிற்சி பெற்று வருகின்ற மருத்துவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் வரும். இந்தப் பிரச்சனை பெரும் பிரச்சினையாக இருப்பதால், இந்த மாநிலத்திலே உடனடியாக மருத்துவக் கல்லூரி துவக்க திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. மாசிலாமணி: புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதாக இருந்தால், அரசுக்கு எவ்வளவு செலவாகும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றை குறைந்தபட்சம் 100 மாணவர்கள் எண்ணிக்கையோடு துவக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் குறைந்தபட்சம் தேவைப்படுகிறது. அதுவும் நிலம் வாங்குவதற்கான செலவு உள்ளிட்டது அல்ல. நிலம் தனிப் பட்ட முறையில் வாங்க வேண்டும். இது எம்.பி.பி.,எஸ். கோர்சுக்கு மட்டும் ஆகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இனிமேலாவது இந்த மாநிலத்தில் அரசு முடிவெடுத்து செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன். மருத்துவ மனைகள் இல்லாமல் இருக்கின்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்குமா? அதற்கென செயற்குறிப்பு உண்டா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஏற்கனவே 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மருத்துவப் பட்டதாரிகள் வேலை இல்லாத நிலைமையில் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். 400 மருத்துவப் பட்டதாரிகளை இந்த ஆண்டு வேலையில் அமர்த்துவதற்கான திட்டத்தைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். மேலும் 1,600 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கிராமங்களிலே போய் பணி புரிகின்ற வகையில் அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இப்போது அமைச்சர் அவர்கள் இந்தியன் மெடிகல் கவுன்சில், இங்கிலீஷ் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பது பற்றிச் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். நாட்டு வைத்தியக் கல்லூரிகள் ஆரம்பிப்பது பற்றி என்ன சொல்லப்படுகிறது? சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் போன்ற வைத்தியங்களில் பயிற்சி கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மருத்துவக் கல்லூரி என்று எந்த அமைப்பை ஆரம்பிப்பதாக இருந்தாலும், இந்தியன் மெடிகல் கவுன்சிலிடமிருந்து நாம் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். அந்த அங்கீகாரத்தை அவர்கள் பொதுவாக புதிதாகத் தோற்றுவிக்கின்ற கல்லூரிகளுக்கு வழங்க வேண்டாம் என்றுதான் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திலே 1,500 லிருந்து 2,000 பேர்கள் வரை மருத்துவப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யோசித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது புதிதாக மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இன்டிஜினஸ் மெடிகல் காலேஜிலே, சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் போன்று அமைக்கப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள இந்தியன் மெடிசன் கல்லூரியில் பல பிரச்சினைகளுக்குப் பிறகு இப்போதுதான் நல்ல நிலைமை வந்திருக்கிறது. புதிதாக எந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டும் என்றாலும், அவர்களுடைய கொள்கையில், எந்தவிதமாவது கால தாமதம் செய்வது நல்லது என்றுதான் கருதப்படுகிறது. அதே நேரத்திலே யூனானி, சித்த வைத்தியங்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற அவர்கள் கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மருத்துவப் பட்டதாரிகள் வேலையின்மை காரணமாக மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைக் குறைத்துச் சேர்க்கின்ற உத்தேசம் இருக்கின்றதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 1,150 மாணவர்கள் என்று இருந்ததை 1,050 என்று குறைத்திருக்கிறோம். மேலும் குறைக்கும் திட்டத்தை அரசு இன்னும் மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன்: புதிய மருத்துவக் கல்லூரிகள் திறப்பதற்கு இந்தியன் மெடிக்கல் கவுன்சில் அங்கீகாரம் அளிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் இதை மறுக்கிறது என்று அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: திரும்பத்திரும்ப அதே பதிலைத்தான் சொல்லவேண்டியதாக இருக்கிறது. காரணம் ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்றிருக்கின்ற மருத்துவப் பட்டதாரிகள் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை இல்லாமல்

இருக்கிருர்கள். 100 மாணவர்களை வைத்து ஒரு மருத்துவக் கல்லூரி திறப்பதானுல், குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அதனுல் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு பரிந்துரை செய்வதைவிட மருத்துவ மனைகளை ஆரம்பிக்கலாம் என்றும், அப்படிச் செய்வது நாட்டிற்கும் நன்மை பயக்கும் என்றும் சொல்கின்ருர்கள். மருத்துவக் கல்லூரிக்குப் பதிலாக மருத்துவ மனை அமைக்கலாம் என்று சொல்கின்ருர்கள். அந்த அடிப்படையில்தான் இது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : மருத்துவக் கல்லூரிகளைத் துவக்காமல் இருப்பதற்குக் காரணங்கள் சொன்ஞர்கள். சித்த வைத்தியம் அல்லது யூஞனி வைத்தியம் என்று இருக்கின்றன. எப்படி விவசாயப் பல்கலைக்கழகம் ''எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ்'' என்று ஒரு இடத்திலே, கோழி வளர்ப்புக்கு, மாடு வளர்ப்புக்கு, ஆடு வளர்ப்புக்கு, என்றும், விவசாய வளர்ச்சிக்கு என்றும் வைத்திருக்கின்ருர்களோ, அதுபோல சித்த மருத்துவத்திற்கு சேலம், மதுரை பக்கத்தில் ''எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ்'' வைத்து சித்த வைத்தியம், யூஞனி வைத்தியத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு சிறு சிறு நிறுவனங்களாக அமைக்க முடியுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற யோசனையை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் ; ஒரு புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தால், ரூ. 2 கோடி தேவைப்படுகிறது என்று மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ஞர்கள். இந்தத் தொகையில் மத்திய அரசு கொடுப்பது எவ்வளவு, மாநில அரசு கொடுப்பது எவ்வளவு என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மாநிலத்திலே மருத்துவக் கல்லூரி முழுச் செலவையும் மாநில அரசுதான் செய்கிறது. இதிலே மத்திய அரசு எதுவும் செய்வதில்லை. இதற்கு முன்பு முது நிலைப்படிப்புகள், எம்.டி., எம்.எஸ். போன்ற படிப்புகளுக்கு மத்திய அரசு ஓரளவுக்குக் கொடுத்து வந்தது. மாநில அரசுதான் இந்தச் செலவை முழு அளவுக்கு ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி தொடங்குவதாக இருந்தால், அதை ஐந்தாண்டுத் திட்டத்திலே கொண்டுவந்து, தொடங்குவதற்கு பாதித் தொகையை அவர்கள் கொடுப்பதாக நான் கேள்விப்பட்டேன். அது சரியா, இல்லையா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே சொன்னதுதான் சரி என்று நான் நினைக்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்ற மருத்துவப் பட்டதாரி டாக்டர்களுக்கு வேலை கொடுக்க முடியாத காரணத்தால், இத்தகைய கல்லூரிகளைப் புதிதாக ஆரம்பிக்கவில்லை என்று மாண்புமிகு முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கொள்கையைப் பின்பற்றுவது என்று ஒரு அடிப்படையில் சென்ருல், மற்றப் படிப்புகளைப் படித்து பட்டம் பெறுவதிலிருந்து பல பேர்களை நிறுத்த வேண்டியதாக இருக்கும். இந்தக் கொள்கை சரிதாஞ. மாணவர்களுக்காக மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பித்து, மேலும் பலரைப் படிக்க வைத்து, உற்பத்தி செய்து, வேலை தர முடியவில்லை என்பதற்காக, அதை நிறுத்தி விட வேண்டும் என்று சொல்வது சரிதாஞ, முறையாகுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்விக்கு நான் சொல்லக் கூடிய பதில் இதுதான். ஏற்கெனவே ஒவ்வொரு மாநிலத்திலும் ஆயிரக்கணக்கான மருத்துவப் பட்டதாரிகள் தொடர்ந்து படித்து வெளியே வந்து கொண்டிருக்கிருர்கள். இதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிருேம். தமிழ் நாட்டில் 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. 1,050 மருத்துவப் பட்டதாரிகள் வருடந்தோறும் உருவாக்கப்படுகிருர்கள். இந்த நிலைமைகளில், மேலும் புதிதாகக் கல்லூரிகளைத் தொடங்குவது என்பது தேவையில்லை என்றுதான் கருதுகிருேம். ஆயிரக்கணக்கான மருத்துவப் பட்டதாரிகள் வருடத்திற்கு உற்பத்தி ஆகின்ற காரணத்திஞலேதான், புதிய மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு அங்கீகரிக்கவில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஏற்கெனவே எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற 1,500 டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிருர்கள். இந்த நிலையில் மத்தியிலுள்ள சுகாதார அமைச்சர், திரு. ராஜ் நாராயண் அவர்கள் கிராமாந்தரங்களில் நடைபாதை மருத்துவர்களை Barefcot Doctors நியமிக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கூறியிருக்கிருர்கள். அதை இங்குள்ள டாக்டர்கள் தங்கள் வேலையைப் பாதிக்குமென்பதால் எதிர்த்திருக்கிருர்கள். இதிலே மாநில அரசின் நிலை என்ன ? மத்திய அரசின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளப் போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மிதியடியில்லாத டாக்டர்களா, கால்நடை டாக்டர்களா அல்லது பாதையோர டாக்டர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : டாக்டர்கள் மிதியடியில்லாமல் சென்றால், அவர்கள் உடல்நிலையே பாதிக்கப் படும். கால்நடை டாக்டர்கள்—கிராமங்களை நோக்கி நடந்து செல்கிற டாக்டர்கள் அவர்கள். கால்நடை என்று சொல்லும் போது, வேறுவிதமாக அர்த்தம் செய்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி மாணவர்கள், House Surgeons எல்லாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு சில பிரச்சினைகளைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத் தைக் கட்டாயப்படுத்தும் நிலையில் மாநில அரசு இல்லை யென்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். அதனால் அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு இப்போது வேலையில்லாமல் இருக்கும் மருத்துவ பட்டம் பெற்ற பட்ட தாரிகளுக்கு எப்படி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது என்பது குறித்துப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கிராமப் பகுதிகளில் பட்டம் பெற்ற டாக்டர்கள் வேலைக்குச் செல்ல அஞ்சுகிறார் கள். காரணம் மருத்துவ மனைக்குப் பக்கத்தில் அவர்கள் தங்க வீடுகள் இல்லை. எனவே மருத்துவமனை உள்ள இடங்களில் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி மாணவர்களும், House Surgeon- களும் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலித்து வருகிறது.

திரு. க. அறிவழகன் : ஒரு மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு எவ்வளவு பணம் செலவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்குத்தான் பதில் கூறியாகிவிட்டதே.

திரு. க அறிவழகன் : ஒரு மாணவருக்கு எவ்வளவு செலவா கிறதென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஒரு மாணவருக்கு கிட்டத்தட்ட 80,000 ரூபாய் அளவிற்கு அரசு செலவு செய்கிறது.

(திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கால் மணி நேரமா கிறது. இந்தக் 'கேள்வி' போய்க் கொண்டிருக்கிறது.

1978 மார்ச் 22]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் டாக்டர்கள் ஜில்லா Headquarters ஆஸ்பத்திரியில் வேலை செய்வதை விட, Taluk Headquarters ஆஸ்பத்திரி, யூனியன் ஆஸ் பத்திரி ஆகியவற்றில் வேலை செய்ய மனுக் கொடுக்கிறார்களென்ற தகவல் அறிகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே Bare foot doctors திட்டத்தை இந்த மாநில அரசு செயல்படுத்தக் கூடாதென்றும், அதற்காக எந்தக் கிராமத்திற்குப் போகச் சொன் னாலும் போகத் தயாராக இருக்கிறோமென்றும் மாணவர்களும் பட்டப் படிப்பு படித்து முடிந்த இளநிலைப் பயிற்சியாளர்களும் கூறி யிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, ஆரம்பத்திலே டாக் டர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டாயம் உரு வாகியுள்ளதால், அதை அவர்களே ஒத்துக் கொண்டுள்ளதால், மனு வந்திருக்கிறதா என்பது பிரச்சினையல்ல. அவர்களே விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஏராளமான மருத்துவர்களுக்கு வேலை யில்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கக் கூடிய 2,000 மருத்துவர்களுக்கு வேலை கொடுக்க எத்தனை ஆண்டுகளாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த ஆண்டு 400 பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. மீதம் இருக்கின்ற 1.600 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டங்களை அரசு ஆராய்ச்சி செய்து வருகிறது. எவ்வளவு விரைவிலே வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே கொடுக்கப்படும். இந்தத் தேதிக்குள் வேலை கொடுக்க முடியுமென்று சொல்ல முடியாது.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒரே கேள்விக்கு எவ்வளவு நேரம்?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அராபிய நாடுகளில், குவைத் போன்ற நாடுகளில் டாக்டர்களை விரும்பிக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட வெளி நாடுகளுக்கு டாக்டர்கள் செல்ல அரசு அனுமதியளிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அதில் இந்த அரசுக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

READER IN PSYCHIATRY.

*201 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. he Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that there is no Reader in Psychiatry at Thanjavur Medical College ; and

(b) if so, the action proposed to be taken in the matter ?

[1978 மார்ச் 22

மனநோய் மருத்துவச் செயல்முறை பேராசிரியர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மனநோய் மருத்துவச் செயல்முறை பேராசிரியர் எவரும் இல்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) (அ) ஆம்.

(இ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள ஒரு மனநோய் மருத்துவ விரிவுரையாளர் பதவியை மனநோய் செயல்முறை மருத்துவ பேராசிரியர் நிலைக்கு உயர்த்தக்கோரும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் இருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : செயல்முறைப் பேராசிரியர் பதவி முன்பு அந்தத் துறையில் இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு ஆண்டுகள் இருந்தது? எப்போது நிறுத்தப்பட்டது? எப்போது மீண்டும் அந்தப் பேராசிரியர் பதவி கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தஞ்சைக் கல்லூரியில் முன்பு டாக்டர் (திருமதி) பத்மாசினி என்பவர் லெச்சரராக 10 ஆண்டுக்காலம் இருந்தார். அவருக்குப் பிறகு பல லெக்சரர்கள் இருந்தார்கள். அங்கே ரீடர் பதவியில்லை. லெக்சரர் பதவியை ரீடர் பதவியாக உயர்த்த வேண்டுமென்ற செயற்குறிப்பு மருத்துவத் துறை அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

Thiru G. SWAMINATHAN : I would like to correct the Hon. Minister's statement. Previously Dr. Padmasini was Reader in Psychiatry and the post was therefore about 15 years from 1969. The post was abolished in or about 1973, when it was not a Post-Graduate institution. How it has become a Post-Graduate institution.? Will the Government kindly consider the appointment of a Reader, which post was downgraded in 1973? May I also invite the attention of the Government to the fact that the University Inspection Commission has also recommended the creation of the post of Reader as early as possible?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான குறிப்பு இல்லையென்றாலும், அதைச் சரிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது முதுநிலை பட்டம் பெற்ற எம். டி. (சைக்கியாட்ரி) அங்கே இருக்கிறார். லெக்சரர் போஸ்டை அப்-கிரேட் செய்ய

1978 மார்ச் 22]

வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அரசு அதைப் பரிசிலனை செய்து வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Sir, he is only an Assistant Professor with M.D. qualification. For a Post-Graduate institution, there should be a Professor for all subjects like Surgery, Medicine, etc. Unfortunately, in the above College, which is serving the people of an area of 150 miles around it, there is no Professor or Psychiatry. The post should be upgraded. There is also a lot of work-load for a Reader in that particular subject. Since the matter is pending for the last five years, will the Government see that the post is created as early as possible?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தஞ்சை மருத்துவக் கல்லூரியிலுள்ள மனநோய் மருத்துவப் பிரிவில் தேவையான அளவுக்குத் தொழில் நுட்பம் மிகுந்த மருத்துவச் சாதனங்களும், தகுதி வாய்ந்த மருத்துவ அலுவலர்களும் இருப்பதால், அங்கு மனநோய் மருத்துவச் செயல்முறைப் பேராசிரியர் இல்லாதது எந்த விதத்திலும் மருத்துவம் பயிலும் மாணவர்களையும், உடனிணைந்த தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நோயாளிகளையும் பாதிக்கவில்லை என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருந்தாலும், பல்கலைக் கழகமும், அதனுடைய குழுவும் பரிந்துரை செய்திருப்பதால், அரசாங்கம் விரைவிலே அதுபற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Are the Government aware that the Principal of that College has recommended even in June 1977 that a post of Reader is absolutely necessary for that College?

மாண்புமிகு திரு. கே, இராஜா முகமது : அரசாங்கத்திற்கு அது நன்கு தெரியுமென்பதால், விரைவிலே முடிவெடுக்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு, கே. எஸ். அப்துல் வகாப் : 'சைக்கியாட்ரி' என்பதும், 'மனநோய்' என்பதும் பைத்தியக்காரத்தனம் என்று பொருள் படுமா? மனநோய் மருத்துவமனை என்பது பைத்தியக்கார ஆஸ்பத்திரியைக் குறிக்கிறதா? அப்படி எத்தனை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மனநோய் என்பது பல்வேறு காரணங்களால் வருவதே தவிர, நேரடியாக உடனே பைத்தியம் என்று சொல்ல முடியாது. அதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அது, Environmental factors, சுற்றுச் சூழ்நிலை காரணமாக வருகிறது. Stress and Strain

காரணமாக, ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் அழுத்தத்தின் காரணமாக ஏற்படுகிறது. Hereditary ஆக பரம்பரையாக வருகிறது. அதைப் போல maladjustment என்று சொல்லப்படும், கணவன் மனைவிக்குள் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் வருகிறது. சூழ்நிலை என்ன என்பதைப் பார்த்துச் சொல்ல வேண்டும். ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் பைத்தியம் என்று சொல்ல முடியாது. அதனால்தான் மனநோய் என்று சொல்கிறார்கள். மனநோய் என்பதற்கும் பைத்தியம் என்பதற்கும் சிறிது வேறுபாடு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சில நாட்களுக்கு முன்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரி, மனநோய் இல்லம், என்று மாற்றப்பட்டது. அதற்கு முன்பு இந்த மனநோய் இல்லம், மனநோய் மருத்துவமனை என்று இருந்தது. அதனால்தான் இது பைத்தியக்கார ஆஸ்பத்திரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இதற்கு முன்பு இருந்தவர்கள், மொழிபெயர்ப்புச் செய்தவர்கள் எப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை. மனநோய் மருத்துவமனை என்றால் பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்று மட்டும் பொருளல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Sir, the Hon. Minister explains the subject so well that he can be Professor of Psychiatry.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இப்படிப் போய் வந்தவர்களைப் பற்றித் தெரியாது. இதற்கு முன் அனுபவம் ஏற்பட்டது கிடையாது. கையிலே உள்ள குறிப்புக்களை வைத்துக் கொண்டுதான் விளக்கம் தருகிறேன்.

DIPLOMA HOLDERS IN TEXTILES TECHNOLOGY.

*202 Q—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister of Education be pleased to state—

(a) whether Engineering Instructors under bifurcated courses of study are granted the pay scale of Rs. 325—15—475—20—575—20—650:

(b) whether this pay scale is applicable to persons with Diploma in Textiles Technology: and

(c) if not, the reasons therefor?

நெசவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றவர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இரு கூறாக்கப்பட்ட பாடமுறைகளின்கீழ் பொறியியல் ஆசிரியர்களாகப் பணி ஆற்றுபவர்களுக்கு ரூ, 325 - 15 - 475 - 20 - 575 - 25 - 650 என்ற சம்பள வீதம் அளிக்கப்படுகின்றதா ?

(இ) நெசவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றுள்ளவர்களுக்கு இந்தச் சம்பள வீதம் பொருந்துமா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இரண்டாவது சம்பளக்கமிஷனின் பரிந்துரைக்கேற்ப பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 325 15-475-20-575-25-650 என்ற சம்பள விகிதத்தையும், நெசவு ஆசிரியர்களுக்கு ரூ. 275-10-375-15-450 மற்றும் தனிச் சம்பளம் ரூ. 25/- என்ற சம்பள விகிதத்தையும் அளிக்க அரசு ஆணையிட்டது. பின்னர் ஒரு நபர் கமிஷன் பரிந்துரைக்கேற்ப பி. டி. ஆசிரியர் சம்பள விகிதம் மாற்றியமைக்கப்பட்டதைப் போன்று நெசவு ஆசிரியர்களின் சம்பள விகிதம் ரூ. 300—15-420-20-500 மற்றும் தனிச் சம்பளம் ரூ. 25/- என மாற்றியமைக்கப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் புதிய சம்பள விகிதங்கள் டெக்ஸ்டைல் டெக்னாலஜி பட்டம் படித்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றனவா? 2 -10—70-லிருந்து வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை.

AMENITY FEE ACCOUNT

*203 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that orders have been issued by the Government permitting the Headmasters of High Schools in Government and local bodies to operate the Amenity Fee Account ; and

(b) if so, the reasons for not extending this privilege to the Headmasters of Aided High Schools ?

[1978 மார்ச் 22

வசதிக் கட்டணக் கணக்கு

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு, உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசதிக் கட்டணக் கணக்கை வைத்து வர அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு இச்சலுகை வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(இ) வசதிக் கட்டண நிதியில் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினங்களைச் செய்ய உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி நிர்வாகிக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், இந்த நிதியை இயக்கும் சலுகையை உதவிபெறும் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்கவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த வசதிக் கட்டணத்தைப் பொறுத்தவரை, இப்போதுள்ள சிறப்புக் கட்டணத்தை அமுல் நடத்தும் நிர்வாக முறையிலேயே, குழு அமைத்து நிர்வகிக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், பள்ளிப் பராமரிப்புக்கு இந்த நிதியிலிருந்து சில செலவினங்களுடைய நிர்வாகத்திற்காகச் செய்தாலும், வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்படவில்லை. பெரும்பாலான செலவினங்களுடைய பராமரிப்பு, பள்ளிகளில் இந்தக் கட்டணங்களிலிருந்து தலைமை ஆசிரியர்களால் செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. குறைந்தபட்ச அடிப்படையில் செலவிடப்பட்டாலும், நிர்வாகம் தகுந்த கணக்கு வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தத் தொகையிலிருந்து செலவு செய்ய தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

TELEVISION SETS IN GOVERNMENT HIGH SCHOOLS.

* 204 Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state —

(a) the number of Government High Schools in which Television Sets have been installed ; and

(b) whether there is any proposal with the Government to instal a set in each Government High School in Madras and Chingleput districts ?

978 மார்ச் 22]

அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தொலைக்காட்சிக் கருவிகள்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எத்தனை அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தொலைக்காட்சி கருவிகள் (Telivision sets) அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள, அரசு உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும், ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) 5

(இ) இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 5 டெலிவிஷன் செட்டுகளைத் தான் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு இதுவரையில் கொடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் டெலிவிஷன், 100 மைல் தூரத்திற்கு அந்தக் காட்சியை அளிக்கக் கூடிய சக்தி கொண்டதாக இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் வரையிலும், இந்தப் பக்கம் செங்கற்பட்டு, சென்னை போன்ற நகரங்களிலும், உயர்நிலைப் பள்ளிகளில் டெலிவிஷன் வசதி செய்து கொடுத்து, மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க விதத்தில் டெலிவிஷன் மூலம் போதிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; இந்தக் கல்வியின் நேரத்தை, தொலைக்காட்சிக் கல்வியின் நேரத்தை விரிவுபடுத்துவது குறித்து நிர்வாகத்தோடு பள்ளிக் கல்வி இயக்குநர் ஏற்பாடு செய்து வருகிறார். இந்தக் கருவிகளைப் பள்ளிகள் வாங்க ஒவ்வொரு மாணவரிடத்திலும் ஒவ்வொரு வருடமும் ரூபாய் இரண்டு வீதம் வசூல் செய்வதற்கான அதிகாரத்தை அரசு அளித்தது. எந்தக் கல்வி நிறுவனத்திற்காவது தனி நபரிடத்திலிருந்து நன்கொடையாக வரும் தொலைக்காட்சிக் கருவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பள்ளிகளுக்கு அரசு அனுமதி கொடுத்துள்ளது. அதைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் டெலிவிஷன் செட் வாங்கிக்கொள்ளலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாணவர்களிடத்தில் 2 ரூபாய் வசூல் செய்து அந்த செட்டுகளை வாங்கிக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது வரவேற்கத்தக்கதுதான். நம்முடைய அரசாங்கம் டெலிவிஷன் நிலையத்தோடு தொடர்பு கொண்டு, குறைந்தது அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தைத் தயாரிக்க நம்முடைய அரசாங்கம் டெலிவிஷன் நிலையத்தைக் கேட்டுக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தொலைக்காட்சிக் கல்வி திட்டத்தின் கீழ் பாடத் திட்டம் தயார் செய்ய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. அந்தக் குழுவினர் தயாரித்த பாடத் திட்டம் தொலைக் காட்சி மையத்திற்குக் கொடுக்கப்படும். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் தொலைக் காட்சி மையம் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து கல்வி போதிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது. உடல்கூறு, விஞ்ஞானம், இரசாயனம், வேளாண்மை மற்றும் விழாக்கள் ஆகியவற்றைப் பற்றிப் பாடத் திட்டம் தயாரிப்பதற்கு 1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து தொலைக்காட்சி எழுத்தாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 2-8-1977 முதல் 28 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் தொலைக் காட்சிக்கான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கிறார்கள். அதற்கான வாய்ப்பு இப்போது உள்ளது. கல்வி சம்பந்தப்பட்ட வரையில், கல்வி இலாகாவின் செயலரும், கல்வி இயக்குநரும் தொலைக்காட்சி மையத்தோடு தொடர்பு கொண்டு இத்திட்டத்தை வகுக்க உதவி செய்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(1) கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மான முன்னறிவிப்பு குறித்து.

திரு வே. தங்கபாண்டியன்: நம்முடைய மாநிலத்தில் நடைபெற இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் பற்றி விவாதிப்பதற்காக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அது என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது திங்கட்கிழமை யன்று எடுத்துக்கொள்ளப்படும்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதற்குள் அது முடிந்து விடும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது முடிந்து விட வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புகிறோம்.

3. அறிவிப்புகள்.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 22-3-78-ல் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் முடிவு செய்யப்பட்டது.

23-3-1978	பிற்பகல் 4-00 மணி ..	1977-78ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை விவர அறிக்கையை அளித்தல்; 1970-71ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.
24-3-1978 ..		தூய வெள்ளிக்கிழமை — விடுமுறை
25-3-1978 ..		கூட்டம் இல்லை.
26-3-1978 ..		ஞாயிறு விடுமுறை
27-3-1978	முற்பகல் 10-30 மணி ..	தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்
	பிற்பகல் 4-00 மணி —	1977-78 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை விவர அறிக்கையின் மீதும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.
28-3-1978		மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.
29-3-1978		உணவு மற்றும் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.
30-3-1978		நிதி சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.

31-3-1978	முற்பகல் 10-30 மணி ..	இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.
	பிற்பகல்	பிரிவு உபசார உரை.
1-4-1978		அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
2-4-1978		ஞாயிறு விடுமுறை.
3-4-1978		அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
4-4-1978		அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.
5-4-1978		அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் மாலை 1-30 மணி வரை கூடும்.

[முற்பகல் 11.00]

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) முதலமைச்சர் வினாக்களுக்கு அவரே விடையளிப்பது குறித்து.

திரு கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள், '22ம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் அவருடைய கேள்விகளுக்கு அவரே பதில் அளிப்பார். அப்படியில்லையென்றால் அவையின் முன்னவர் என்ற முறையிலே நான் பதில் அளிப்பேன்' என்று சொன்னார்கள். இன்றைய தினம் சட்ட மன்றப் பேரவையில் மானியக் கோரிக்கை இருப்பதால், அவர் இங்கு வந்து பதில் அளிக்க முடியாது என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கூடுமான வரைக்கும் இந்த அவைக்கு வராமலிருக்க விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன். கேள்வி நேரம் சாதாரணமான நேரம் அல்ல. கேள்வி நேரத்தைப் பயன்படுத்தி சில விஷயங்களைக் குறித்து முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தலாம். சங்கடமான சில விஷயங்களில்கூட சரியான பதில் தருவதன் மூலம் சில தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். சில விஷயங்களில் முதலமைச்சர் அவர்கள் சில உத்திரவாதத்தைத் தரலாம். அப்படியில்லாமல் முன்னவர் அவர்களே எல்லாவற்றுக்கும் பதில் சொல்லலாம் என்றால்

அவருக்கும் ஒரு சங்கடமான நேரத்தில் அசாதாரணமான நிலை ஏற்படுகிறது. ஆகவே நாங்கள் எதிர்பார்ப்பதுபோல, இனி மேலாவது முதலமைச்சரைச் சார்ந்த கேள்விகளுக்கு அவரே பதில் அளிக்க இந்த அவையின் முன்னவர் அவர்கள் உறுதியளிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆரம்பத்திலே, முதலமைச்சர் அவர்கள் வராவிட்டாலும், தயவு செய்து அவருடைய துறைக்குரிய பதில்களையாவது சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அவ்வாறு இரண்டு, மூன்று முறை கேட்டதற்குப் பின்னால்தான், அவையின் முன்னவர் என்ற முறையில் நான் பதில் அளிக்கிறேன். தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள்தான் வந்து பதில் சொல்லியாக வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சில சூழ்நிலையின் காரணமாக அவர் தற்போது வராமல் இருந்தாலும், நிச்சயமாக இந்த அவைக்கு வருவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அவைக்குரிய மரியாதை எவ்வளவு உயர்ந்தது என்பது இந்த அரசுக்குத் தெரியும். கேள்வி நேரத்திலே எந்தவிதத் தகவலையும் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லும்போது, குறிப்பிட்ட இன்னார்தான் வர வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. இருந்தாலும் முதல்வர் அவர்கள் அவ்வப்போது வந்து கேள்வி நேரத்தில் பதில் சொல்லுவார்கள். கொள்கைக் குறிப்பின் மீதும் பேசவிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, கட்டாயப்படுத்தக் கூடாது என்று சொல்லுவதிலிருந்து முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் கூட, முன்னவர் அவர்கள் பதில் சொல்ல விடமாட்டார் போல் தோன்றுகிறது. நாங்கள் கேட்கிற காரணத்தால், முதல்வர் அவர்கள் பதில் அளிக்கமாட்டார் என்றிருந்தால், நாங்கள் இந்த அவையில் கேள்விகளைக் கேட்காமலிருக்கிறோம். எப்படியும், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு அவரே பதில் சொல்ல வேண்டும். அதிலே சில இலாபம் கிடைக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, 'முதல்வர் அவர்கள் வந்தால் வசதியாக இருக்கும்' என்று சொல்லுவது அன்பு உரைதானே தவிர, ஆட்சேபணையல்ல என்று கருதுகிறேன். ஆகவே அப்படியே செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

4. 82-வது விதியின்கீழ் விவர அறிக்கை.

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் மீது அரசின் முடிவுகள் குறித்து.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளின் மீது அரசு எடுத்திருக்கிற முடிவினை அறிக்கையாக இந்த அவையின் முன் வைக்கிறேன்.

1977 செப்டம்பர் திங்களில் வெளியிடப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து வழங்கப்பட்ட ஆணைகள் குறித்துக் கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள் மேல் அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் கீழ்க்கண்ட முடிவுகளை மேற்கொண்டுள்ளது —

(1) அரசு ஆணை எண் 2106, கல்வி, தேதி 21-9-77, அரசாணை எண் 2107, கல்வி, தேதி 21-9-77 மற்றும் அரசாணை எண் 2159, கல்வி, தேதி 26-9-77 ஆகிய ஆணைகளில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் 1.4.76 முதல் நிர்ணயிக்கப்பட்டு 1-1-77 ல் இருந்து பணப்பயன் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக 1-1-74-ல் இருந்து இவ்வாசிரியர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு 1-1-77-ல் பணப்பயன் வழங்கப்படும் என்று அரசு இப்போது முடிவு செய்துள்ளது. மேலும் தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின் கீழ் ஆசிரியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அடுத்த கட்ட ஊதிய உயர்வு பழைய ஊதிய விகிதத்தில் இவ்வாசிரியர்கள் எத்தேதியில் பெற்றிருப்பார்களோ அதே தேதியிலிருந்து புதிய ஊதிய விகிதத்தில் ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

(2) அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் உள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவிகள் படிப்படியாக நீக்கப் பெறுதல் வேண்டுமென்ற முடிவினை அரசு மேற்கொண்டுள்ளது. வருங்காலத்தில் கல்லூரிகளில் பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள். தற்பொழுதுள்ள பட்ட மேற்படிப்புத் தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 5 ஆண்டு பணி முடிவுற்றவுடன் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்று அரசு ஆணை எண் 2659, நாள் 28-12-77-ல் ஆணைகள் வழங்கப்பட்டிருந்தன. இதனை மாற்றி வருங்காலத்தில் பட்ட மேல்படிப்புத் தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 3 ஆண்டு பணி நிறைவெய்தும்பொழுது உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்று அரசு தற்பொழுது முடிவு செய்துள்ளது. தனியார் கல்லூரிகளில் வரவிருக்கும் உதவிப் பேராசிரியர்களுக்கான காலியிடங்கள் அக்கல்லூரிகளில் கல்வித் தகுதியுள்ள விளக்குநர் மற்றும் பயிற்றுநர்களைக் கொண்டே நிரப்பப்படுதல் வேண்டும் எனவும் அத்தகைய விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் கல்லூரியில் இல்லாமல் இருக்கும் சூழ்நிலையில் மட்டிலுமே புதிய உதவிப்பேரா

சிரியர்களை வெளியிலிருந்து நியமிக்கப்படவேண்டுமென்றும் இத்தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தினர் கோரப்படுவர். இந்த ஆணை அமுல்படுத்துவதை ஒரு நிபந்தனையாகக் கொண்டு அரசினர் மானியம் வழங்குவது நிர்ணயிக்கப்படும்.

(3) பட்டப்படிப்பு விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் பட்ட மேல்படிப்புத் தகுதி பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கவும் அங்ஙனம் அவர்கள் பட்ட மேல்படிப்புத் தகுதி பெறும் வரை திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி ஊதிய உயர்வு பெற அனுமதிக்கப்பெறுவர்,

(4) உதவிப் பேராசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் ரூ. 700–1,600 ஊதிய விகிதம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்கிறது. பேராசிரியர்களுக்கும், துறைத்தலைமைப் பேராசிரியர்களுக்கும் தனியாக படி வழங்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

(5) 1978 ஜூன் முதல் நடைமுறையில் வரவிருக்கும் 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற புது முறைக்கல்வித் திட்டத்தினாலும் 1979 ஜூன் திங்கள் முதல் கல்லூரிகளிலுள்ள புகுமுக வகுப்பு நீக்கப் பெற இருப்பதினாலும் கல்லூரி ஆசிரியர்கட்கு வேலை இழப்பு ஏதும் இராது என்று ஏற்கெனவே வழங்கிய உறுதியினை அரசு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது. இவ்வுறுதிமொழியினை நிறைவேற்றும் பொருட்டு பல்கலைக் கழகங்களுடன் கலந்தாலோசித்து கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கான பணித்திட்டம் மாற்றியமைக்கப்படும். தனியார் கல்லூரிகளில் பணி பளு குறைப்பினால் 31-3-77 அன்று பணியிலிருந்த ஆசிரியர்கள் எவரும் பணியிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்றும் அரசு உறுதியளிக்கிறது.

(6) விதி 10 (ஏ) (1)-ன் கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள் குறித்து அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

(7) நேர்முகச் சம்பளப் பட்டுவாடா செய்யவேண்டுமென்ற தனியார் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கையை கொள்கை அளவில் அரசு ஏற்றுக் கொள்கிறது. இங்ஙனம் நேரடியாக ஊதியம் வழங்குவது சம்பந்தமான நடைமுறைகள் குறித்து அரசு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

(8) தமிழ்நாடு குடும்பசேமநல நிதித் திட்டம் தனியார் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்கட்கும் அளிக்கப்படும்.

(9) தனியார் கல்லூரி சட்ட விதிகள் குறித்தும் இக்கல்லூரிகளில் நியமனம், தகுதிக்கான பருவம், பணியில் உறுதி செய்தல் மற்றும் பதவி உயர்வு, மருத்துவ விடுப்பு வசதிகள் அளித்தல் போன்ற பணி முறைமைகள் குறித்தும் ஆய்ந்தறிய அரசு, தனியார் கல்லூரிகளின் நிர்வாகிகள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் போன்றவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினை

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 22

அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி பொருள்கள் குறித்த பரிந்துரைகளை இக்குழு அமைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

(10) கல்லூரிகளிலுள்ள உடற்பயிற்சி இயக்குநர், நூலகர்கட்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைப்படி ஊதிய விகிதம் நன்மை பெறுவர்.

5. கவன ஈர்ப்பு

முதுகுளத்தூர் வட்டம், சாயல்குடி பஞ்சாயத்தில் உள்ள கருப்புக்கட்டி உற்பத்தியாளர் & கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ள வி. வி. ஆர். காலனியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. வே.—தங்கப்பாண்டியன்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

''முதுகுளத்தூர் வட்டம், சாயல்குடி பஞ்சாயத்தில் உள்ள கருப்புக்கட்டி உற்பத்தியாளர் & கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ள வி. வி. ஆர். காலனியில் 26-2-1978-ல் நடைபெற்ற பெரும் தீ விபத்தினால் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகி விட்டதனால் இலட்சத்திற்கு மேற்பட்ட பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதும் அதனால் ஏழை பனை மரத் தொழிலாளிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்தும்.''

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சாயல்குடி கிராமத்தில் வி. வி. ஆர். காலனியில் 26-2-1978-ம் தேதி, பிற்பகல் சுமார் 1-45 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் 64 கூரை வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. முதுகுளத்தூர் வட்டாட்சியர் தீ விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டது என்றும், உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், பொருள் சேதத்தின் மதிப்பு ரூ. 19,170 இருக்கும் என்றும் அறிக்கை அனுப்பியுள்ளார். கால்நடைகள் சேதம் எதுவும் இல்லை. பரமக்குடியிலிருந்து தீயணைப்புப் படையினர் 26-2-1978-ம் தேதி பிற்பகல் 3-15 மணிக்கு வந்து தீயை அணைத்தார்கள். தீ விபத்தினால் வீடுகளை இழந்த 150 பேர்களும், மேற்படி ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திலும், பக்கத்திலுள்ள வீடுகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் பனையேறிகள். அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. நிலைமை அமைதியாக உள்ளது. ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 வீதம் ஆக ரூ. 5,120 உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 22] [திரு. கே. இராஜா முகமது]

இத்துடன் ஒரு குடும்பத்துக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய வீடுகளைத் திரும்பக் கட்ட விரைவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீ விபத்து நடந்த இடத்தை சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சென்று பார்வையிட்டார். நானும் சென்று பார்வையிட்டேன். ஏறக்குறைய 80 வீடுகள் சேதமாகியிருக்கின்றன. அவர்கள் சேமித்து வைத்திருந்த நவதானியங்கள், உணவுப் பொருள்கள், ஆடைகள் ஆகிய முழுவதும் எரிந்துவிட்டன. அவர்கள் வேண்டுவது, தங்களுடைய குடியிருப்பை ஒரு நிரந்தரமான கட்டிடமாகக் கட்டுவதற்காக நீண்ட காலக் கடன்—அவர்களெல்லாம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்; அவர்களுடைய குடியிருப்புகள் குடிசைகளால் இருப்பதால்தான், இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் நடைபெறுகின்றன. ஆகவே அவர்களுடைய குடியிருப்புகளை கட்டிடமாகக் கட்டிக் கொள்வதற்காக அந்தச் சங்கத்தின் மூலம் நீண்ட காலக் கடன் தொகை கொடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் குறிப்பிட்டதைப் போல, பனையேறும் தொழிலாளர்கள் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பாதுகாப்பிற்கு உட்பட்டவர்கள் என்ற முறையில் வருவாய்த்துறை எடுத்திருக்கிற நடவடிக்கைகளையொட்டி கதர் கிராமக் கைத்தொழில் வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்ட மன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் மற்றவர்களும் என்னிடம் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வருகிற வாரியக் கூட்டத்தில் இந்த விஷயத்தை விவாதித்து, வாரியத்தின் மூலமாக என்னென்ன நன்மைகளைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். விபத்தால் நஷ்டமடைந்திருக்கிற தொழிலாளர்களுக்கு சாதாரண மூலதனச் செலவிற்காக ரூ. 200 கொடுப்பதற்கு இப்போது வழி இருக்கிறது. அதை நான்காண்டுகளுக்குப் பிறகு 4 சதவீத வட்டியில் திருப்பிக்கொடுத்தால் போதும் என்று இருக்கிறது, அதுபோக, கருவிகள் வாங்குவதற்கு ரூ. 100 என்று வைத்து. அதில் ரூ. 50 மானியமாகவும் ரூ. 50 கடனாகவும் இப்போது கொடுக்கப்படுகிறது. விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 100 முதல் ரூ. 200 வரை உதவியாகவும் மானியமாகவும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. வாரியம் இதைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதால், தகுந்த நடவடிக்கை அதன்பேரில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசின் தீர்மானம்

சிறைச்சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Deputy Chairman, Sir, I move :

"That the Policy Notes on Jails and Administration of Justice @ placed on the Table of the House be taken into consideration".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப் பட்ட தீர்மானம்:-

''சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சிறைச் சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய சட்டத்துறை அமைச்சர் வைத்துள்ள உள் துறை நிர்வாகத்திலுள்ள சிறைகள் மற்றும் நீதி நிர்வாகம் சம்பந்தமான கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் நான் பெருமையோடு, மன நிறைவோடு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நினைவு அல்லது அறிவு சரியாக இருந்தால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் அமைச்சராக இருப்பது தமிழ்நாட்டிலே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள்தான் என்று கருதுகிறேன். மத்தியில் பலர் நீதித் துறையில் நீதிபதியாக இருந்தவர்கள் பல்வேறு அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டின் அதிர்ஷ்டம் என்று கூட பெருமையாகச் சொல்கிறேன். நீண்ட அனுபவம் பெற்றவரும் பேறிஞர் அண்ணாவோடு நெருங்கிப் பழகியவரும் ஒரு காலத்தில் மக்கள் நல உரிமைக் கழகத்தை உருவாக்கக் காரணமாக இருந்தவருமான ஒருவர் இன்று நம்முடைய சட்ட அமைச்சர் பொறுப்பில் இருக்கிறார்கள். நீண்ட காலம் நீதிபதியாக இருந்து குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தின் சார்பாக தண்டனை விதித்து நிறைவேற்றியவர் இன்றைக்கு சட்ட அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் அரசியல் சட்ட 44-வது திருத்த சட்ட முன்வடிவு இங்கே விவாதத்திற்கு வந்தபோது, அவர்கள் பெருமையோடு ஒன்றைச் சொன்னார்கள். அது நமக்கெல்லாம் மன நிறைவை அளித்தது. கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அவசர காலத்தில் கொண்டு வந்த அந்தச் சட்டம் ஒரு கருப்புச் சட்டம் என்றே அவர்கள் சொன்னார்கள். அதைச் சொல்லும்போது, சிலருக்குக் கூச்சமாகக் கூட இருந்தது.

@ 220-257 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஏனென்றால் ஒருகாலத்தில் அதை ஆதரித்தோமே என்று பழைய நினைவுகளை எண்ணி, எப்படி இதை ஆதரிப்பது என்று கூச்சப் பட்டுக் கொண்டிருந்தவர்கள் உண்டு. ஆனால் நமது சட்ட அமைச்சர் அவர்கள் அற்புதமான ஆங்கில வார்த்தைகளில் பேசியதை மீண்டும் திரும்ப நினைக்கிற முறையில் ஒரு நீதிமான் சட்ட அமைச்சராக இருந்து அந்த உணர்வோடு, கண்ணோட்டத்தோடு, ஜனநாயக நினைவோடு பேசினார்கள். மக்கள் உரிமைகள் காக்கப்பட வேண்டும், கருப்புச் சட்டம் இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று அவர்கள் வலியுறுத்திப் பேசியபோது, அது எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கு, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு, நீதிமன்றங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறவர்களுக்கு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில். மன நிறைவையும் உற்சாகத்தையும் அளித்தது. நீதி கிடைக்கும் என்று நம்பியவர்களுக்கு ஒரு பச்சைக் கொடி காட்டியதைப் போல் அவர்கள் பேசியது ஒரு வரப்பிரசாதமாக இருந்தது.

I should feel that if I come to you as a Judge, you will do the correct thing. This is what is happening in the High Court. People are talking, "This advocate is close to this Judge. That gentleman is a close friend of this Judge". These thin gsare talked about because the Judges have begun circulating in every place whether it is a cultural association or a club or whatever it is. The Judges are being seen evrey where. The old idiom, "The Judges should be heard and not be seen" is not being followed here. They are seen everywhere. The people, unfortunately, think that the Judges can be influenced by extraneous matters. The people are losing faith in the judiciary. I would request the Hon. the Law Minister to take up the matter in an appropriate manner, whether within his province, or with the Government of India, so that ultimately there may be a code of conduct for the Judges as has been recommended by Justice Beg. In olden days, th

[Thiru G. Swaminathan] [1978 மார்ச் 22

Judges would be in isolation and would not take part in activities which were not good either for the judiciary or for the public of the state.

(The Deputy Chairman sounded the gong)

Sir, I think I have more or less covered all the points except only some sundry points. Thank you.

திரு பி. மாணிக்கம் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்களை மட்டும் கூறிவிட்டு, வேறு சில கருத்துக்களை சிறைபற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நீதித்துறையில் குறிப்பாக சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்தான் என்றாலும் சந்தேகக் கேஸ் என்று ஒன்று இருக்கிறது, சென்ற முறை கூட நான் பேசும்போது இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். மீண்டும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், செக்ஷன் 54, 55, 'A man found without any ostensible means of livelihood' என்கிற அந்த விளக்கத்தின் அடிப்படையிலே, இரவிலே வந்து இரயில் நிலையத்திலோ, பஸ் நிலையத்திலோ, இரயில் பஸ் கிடைக்காமல் தங்குகிற சாதாரண அப்பாவி விவசாயிகள் கைது செய்யப்படுகிறார்கள், காவல் துறையினர் விவரங்களைக் கேட்கும்போது, அவர்கள் முறையாக விவரங்களைச் சொல்ல முடியாமல் அஞ்சித் தயங்குவதனால், அவர்களைச் சந்தேகப் பட்டு கைது செய்து சிறைக்கு அனுப்புகிறார்கள். காவல் துறையினர் வழக்குகள் குறித்துப் புள்ளி விவரங்களைத் தயாரிக்க வேண்டியிருப்பதால், ஸ்டாடிஸ்டிக்ஸ் கேசாக சில நேரங்களில் ஒரே இரவிலே ஐம்பது, அறுபது என்று பேருந்து நிலையங்களில் இருப்பவர்களைக் கைது செய்கிறார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் இன்னும் இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதைத் தீர்ப்பதில் சட்டத் திருத்தம் என்ற பிரச்சினை இருந்தாலும், நீதி வழங்க வேண்டுமென்று வரும்போது, இந்த மாதிரி கைது செய்யப்படுபவர்கள் அப்பாவி விவசாயிகளாக இருந்தால், சாதாரண மனிதர்களாக இருந்தால், அவர்களை நீதிமன்றங்களில் எச்சரிக்கையோடு விட்டு விடுவது நல்லது. அவர்களைக் கொண்டு போய் 15 நாட்களுக்குச் சிறையில் வைத்துவிடுகிறார்கள். அது மாதிரி வழக்கில் யாராவது பொறுப்பேற்றுக்கொண்டு ஜாமீன் வந்தால், அவர்களை விட்டுவிடுகிறார்கள் என்பது உண்மைதான். அந்த ஏழை எளியவர்களுக்கு அவர்களுடைய ஊர்களுக்கு விவரம் தெரிந்து ஆள் வந்து பொறுப்பேற்பதற்கு 15 நாட்களுக்கு மேலாகி ஒரு மாதம் கூட ஆகிவிடுகிறது. அவர்கள் அதுவரையில் சிறையில் இருக்க வேண்டிய நிலையிருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்கும் செலவுதான். ஏனென்றால் அவர்கள் தண்டிக்கப்பட்ட கைதியல்ல. விசாரணைக் கைதிதான். ஆகவே அவர்களுக்குச் செலவாகிறது. ஆகவே இது மாதிரி வழக்குகள் ...த்த வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன், நீதித் துறையில் ...டவட்டமாகக் குற்றங்கள் இருக்குமானால், அவற்றை ஏற்றுக் ...ள்ளலாம். திட்டவட்டமாகக் குற்றம் இல்லாமல் சந்தேகத்திலே

peo
Cou
and t
themse

1978 மார்ச் 22] [திரு. பி. மாணிக்கம்]

சுற்றிக் கொண்டிருந்தவர்களை சிறைக்கு அனுப்புவது சரியாக இருக்காது, திருடர்கள் என்பது வேறு. சில ஆயுதங்களை வைத்திருந்துசில நேரங்களில் சந்தேகிக்கும் முறையில் சுற்றுபவர்கள் கைது செய்யப்படலாம். ஆகவே, அந்த செக்ஷன் 54,55 ஆகியவைகளைத் திருத்தம் செய்வதென்பது பெரிய விஷயம். சட்டத் திருத்தத்தை மாநில அரசு மட்டும் செய்ய முடியாது. நீதியை வழங்க வேண்டுமென்று வரும்போது, மாநில அரசு ஒரு வழிகாட்டி முறையாக கைட்லைன் ஸாக நீதிமன்றங்களுக்கு இவைகளைக் குறிப்பிட்டு ஒரு அறிவுரையை அனுப்பலாம், இது என்னுடைய வேண்டுகோள்.

[பிற்பகல் 12-10]

பல இடங்களில் கீழ் மட்டங்களில் சப் மாஜிஸ்ட்ரேட் அளவில் பல காரியங்கள் நடக்கின்றன. இதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க வில்லை. உண்மை என்பதற்காகத் தெரிவிக்கிறேன். வழக்கறிஞராக வருகிறவர்கள், மருத்துவத் துறையில் உள்ள டாக்டர்கள் இதைப்போல பொது நிறுவனங்களில் செல்வாக்குள்ள மனிதர்கள், ஸ்தாபனங்கள் எல்லாம் கட்சிகள் என்ற முறையில் பலரை சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கத்தான் செய்கிறது. அதற்கு அந்தத் தனி நபர் பொறுப்பல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது, அந்த நிலையில் குறிப்பாக கீழ்மட்டத்திலுள்ள நீதிபதிகள் பல அரசியல் கருத்துக்களுக்கு ஆளாகிறார்கள். அதை தவறு என்று கூறவில்லை. தனிநபர் சுதந்திரம் இருக்கிறது. தனிப்பட்டகருத்துக்களைக் கொண்டிருப்பது அவர்களுடைய உரிமை, அது தவறல்ல, ஆனால் அந்தக் கருத்துக்களை அவர் ஏற்றிருக்கக் கூடிய நீதித் துறைக்கு மாற்றக் கூடாது. சில இடங்களில் எனக்கு நேரடியான அனுபவம் உண்டு. ஒரு சப் மாஜிஸ்ட்ரேட்பற்றி உதாரணத்திற்குச் சொல்கிறேன். என்னுடைய கட்சியைப்பற்றிக் குறிப்பிடுவதால், அதைத் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர், சொல்லும்போது 'நீ சி.பி.ஐ, யைச் சேர்ந்தவர்தானே: நிச்சயமாக தண்டிக்கிறேன்' என்று வராண்டாவில் பத்து பேர் அறியச் சொல்லியிருக்கிறார். பலருக்கு அது தெரியும். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை, அதற்கு முன்னால் சொல்கிறார், இந்த மாதிரி நீதி வழங்க வேண்டியவர்கள் முன் கூட்டியே கருத்துக்களைப் பகிரங்கமாக பச்சையாகச் சொல்வது நல்லதல்ல. மனதிற்குள் வைத்திருந்தால், அதை யாரும் அறிய முடியாது. இப்படி பல இடங்களில் நடக்கின்றன. இதைக் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும். இதனால் ஏழை எளிய மக்களுக்கு இத்துறையின் மீதுள்ள நம்பிக்கை போய்விடுகிறது. எனக்கு முன்னால் பேசிய நண்பர் பேசிய பல அம்சங்கள் எனக்கு உடன்பாடானவைதான். நீதி மன்றங்களில் ஏழை எளிய மக்கள் தங்களுக்கு நீதி கிடைக்குமா என்று அஞ்சக் கூடாது. சந்தேகமே அவர்களுக்கு வரக் கூடாது. சந்தேகம் என்பது குற்றவாளிகளுக்குச் சாதகமாக இருக்க வேண்டும். அதைத்தான் "பெனிஃபிட் ஆப் டவுட்" 'Benefit of doubt' என்பார்கள். அந்த சந்தேகம் அவர்களுக்கு இல்லாமல் வேறு ஒருவருக்குக் கிடைக்கும்

(பிற்பகல் 12-20)

போவதாகவும் கூறப்படுகிறது. 14 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகள் என்று ஆக்குவதுகூட நல்லது. பொதுவாக ஆயுள் தண்டனை அடைந்தவர்கள் 9 1/2 ஆண்டுகள் தண்டனைஅனுபவித்த பிறகு, அவர்கள் விடுதலை குறித்துப் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்கும், தூக்கு தண்டனை பெற்று மீண்டும் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டவர்களுக்கும் இந்தப் பரிசீலனை விஷயத்தில் ஆண்டு வித்தியாசம் தேவையில்லை என்றே கருதுகிறேன். இரண்டையும 9 1/2 வருஷங்கள் என்று வைக்கலாம். நடப்பில் 9 1/2 வருஷம், 10 வருஷம் என்று இருக்கிறது. இப்படி பரிசீலனைக்கு அவர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும்கூட, சாதாரணமாக பெரும்பாலோருக்கு அனுகூலமான முடிவு கிடைப்பதில்லை. எனக்குப் பல நிகழ்ச்சிகள் தெரியும்.

தண்டனை அனுபவிப்பவர்களைப்பற்றி ஊரில் கேட்டால், சொல்லுவார்கள். ''அவன் வந்தால் நல்லது. ஏதோ அவசரத்தில் இப்படிச் செய்துவிட்டான். அவன் இல்லாததால் குடும்பம் தவிக்கிறது. அவன் வெளியே வந்துவிட்டால் நல்லது. அரசு அவனை விடுதலை செய்யுமா?'' என்று கேட்பார்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டு திருந்தியிருக்கிறான். அப்படிப் பட்டவர்கள்பற்றிப் போலீசில் ரிப்போர்ட்டு கேட்டால், அவர்கள் பொதுவாக கிராம முன்சீப்பிடம் ரிப்போர்ட்டு வாங்கி வந்து சொல்லுவார்கள். அதை விட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தில் யாரையாவது போய்க்கேட்டால், ''அவன் வந்தால் இந்த ஊரே அழிந்துவிடும்; திரும்பவும் இந்த ஊரில் கொலை விழும்'' என்று சொல்லுவார்கள். இதைக் கேட்டுவிட்டு இதை அப்படியே போலீஸ் இலாகாவில் எழுதி அனுப்புவார்கள். கீழே கேட்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. கீழ்மட்டத்தில்தான் நல்ல பண்புகள் இருக்கின்றன என்பதை நான் உணர்ந்தவன். ஆனால் இப்படிப்பட்ட சில தவறுகள் நடக்கின்றன. இதன் காரணமாக வரவேண்டியவர்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இது சம்பந்தமாக போர்டு ஆலோசனைக்கு வைக்கும்போது, ஊரில் சென்று அங்குள்ளவர்கள் மத்தியில் தண்டோரா போட்டு அபிப்பிராயம் சேகரித்து வருவார்களானால், அதன்மீது அரசுக்கு அறிக்கை அனுப்பப்படுமானால், நிச்சயமாக 9½ ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழிவதற்கு முன்னாலேயே பல பேர் விடுதலை செய்யப்படுவார்கள். ஏனென்றால் திருந்தியவர்களைப் பார்த்துத்தான் சமுதாயம் படிப்பினையைக் கற்றுக் கொள்ளுமே தவிர, திருந்தவில்லை, திருந்தவில்லை என்ற எண்ணத்திலேயே திருந்தியவர்களைக்கூட உள்ளேயே வைத்திருப்பது சரியல்ல. இப்போது மிகமிக மெதுவாகச் செயல்படுகிறார்கள் Too slow. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். 10, 12 ஆண்டுகள் ஆகியும்கூட, பெரும்

பாலோர் இன்னும் வெளியே வராமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை விடுதலை செய்ய துரித ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மற்றொரு விஷயத்தைப்பற்றிக் கூற ஆசைப்படுகிறேன். சிறைத் துறையோடு சம்பந்தப்பட்ட புரோபேஷன் டிபார்ட்மென்ட் ஒன்று இருக்கிறது. கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில்கூட ''சிறைத் துறைத் தலைவரின் கட்டுப் பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத்தை பணிப் பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரிடைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் துறை காவல் துறையோடு இணைக்கப்பட்டுள்ளது. சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் நடத்தை எப்படி இருக்கிறது என்று மதிப்பிடுவது, எதிர்காலத்தில் அவர்கள் எப்படி இருக்க வேண்டும் எனறு புனர் வாழ்வு சம்பந்தமாகப் பரிந்துரைப்பது ஆகியவற்றை இந்தத் துறை கவனிக்கிறது. இது மிகவும் முக்கியமான இலாக்கா தான் என்றாலும், இது செய்கிற காரியம் மிக நல்ல காரியம் என்றாலும், இந்த இலாக்காவைக் காவல் துறையோடு இணைத்திருப்பது எந்த வகையிலும் சரியில்லை. இதைக் காவல் துறையிலிருந்து பிரிக்க வேண்டும். சிறையோடு தொடர்புள்ள இந்தத் துறை காவல் துறையோடு இருப்பது சரியில்லை. விடுதலைக்குப் பிறகு எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், பொதுவாக மக்களிடம் இருக்கிற ''General impression'' காவல் துறையிடம் அச்சத்தைத்தான் காட்டுகிறது. அந்தத் துறையின் கீழ் இந்த நன்னடத்தை துறை இருப்பதை விட சமூக நலத் துறையின் கீழ் இருப்பது மேலாகும், அப்படி இருந்தால், இந்த இலாக்காவின் பணி இன்னும்சிறப்பாக இருக்கும். இதை நான் சொல்லும்போது, ஒரு அமைச்சரிடம் இருக்கும் இலாக்காவை எடுத்து இன்னொருவரிடம் கொடுக்க வேண்டும். என்ற எண்ணத்தில் சொல்வதாகக் கருதக்கூடாது. அப்படி ஒரு தவறான நோக்கம் வந்துவிடக்கூடாது. சமூக நலத்துறையோடு இந்த இலாக்கா இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. அப்படி இருந்தால், காரியம் நடைபெறுவதில் இன்னும் சிறப்பான நிலையை எய்த முடியும்,

அடுத்து, நீதித் துறையைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கோர்ட்டுகள் சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களில் உள்ள கோர்ட்டுகளில் காரியங்கள் மிகவும் தாமதமாக நடைபெற்று வருகின்றன. அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும். நிதி ஒதுக்கீடு இல்லை என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீடு வேறு பிரச்சினை என்றாலும், காரியங்கள் மிகவும் தாமதமாக நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டியிருக்கிறது. வழக்குகள் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும். துரிதம் என்று சொல்லுகிறபோது, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் Haste means waste என்று சொன்னதால், தயக்கத்தோடு சொல்லுகிறேன். அவசரப்படக்கூடாது என்பது சரி

[திரு. பி மாணிக்கம்] [1978 மார்ச் 22

யானாலும், நீதி தாமதப்படுமானால், நீதியே அநீதியாக மாறிவிடுகிறது. எனவே தாமதமும் வேண்டாம், அவசரமும் வேண்டாம். இவை இரண்டுமில்லாமல், தொழில் கோர்ட்டுகள் நடைபெறுவதற்கு உரிய வழிவகைகளைக் கண்டாக வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : இன்னும் 6 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. எல்லோரும் அதிகமாகப் பேசினால், இறுதியில் உங்களுக்கெல்லாம் பதில் சொல்ல அமைச்சர் அவர்களுக்கு அதிக அவகாசம் இல்லாமல் போய் அவர் குறைத்துக்கொள்கிறார். எனவே அமைச்சர் அவர்களிடம் அதிகமான உறுதிமொழிகளையும் பதிலையும் எதிர்பார்க்கும் உறுப்பினர்கள் தங்கள் பேச்சைச் சுருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI : Hon. Deputy Chairman, I am happy to speak on Justice and Jail Reforms. The other day I had occasion to speak on the Resolution ratifying the 44th Amendment of the Constitution when I brought to the notice of the Hon. Minister the pendency of the cases and, therefore, I would not deal with that now. I would like to request him to revive the system of Honorary Presidency Magistrates.

(Thiru. A. Balasubramaniam, Vice-Chairman in the Chair)

I know the reply he will be giving, because this was the reply given by all those who were in charge of law. The Government of India had passed the rule that the Honorary Presidency Magistrate system should be abolished. But we are a federal State and each State has its own provisions. The States could get permission from the Government of India to revive the Honorary Presidency Magistrate system. I think there would not be any objection, because I feel that if the 44th Amendment has to be a success, we have to see that there is no pendency of cases. To achieve that, the Stipendiary Magistrates should not be taxed with small cases like public nuisance. prohibition and traffic cases, etc. Now the problem of 'doubles riding' is not there, since doubles riding has been recently permitted. But there are many small cases which are taken up by the Stipendiary Magistrates. They may be taken away from them and they should be allowed to deal with only technical cases, so that the pendency of cases before them could be reduced.

1978 மார்ச் 22] [Thirumathl Mandakini Krishuamurthi]

There is another point I wish to mention. The social workers of the past from Mrs. Margaret Cousins to Dr. Muthulakshmi Reddi have fought for Children's Court to be manned by women Hon. Magistrate. The knowledge and experience of the juvenile courts in the other countries would show that only the Woman Honarary Magistrates are best suited to deal with the juvenile delinquents. I would appeal in the name of social welfare that the juvenile offenders should be tried only by women Honorary Magistrates. I hope our Law Minister, with his flexible approach, will definitely take this into consideration and we will be able to see some tangible good done in this particular period.

[பிற்பகல் 12-30]

Regarding Jail reforms there is paragraph X in the Policy Note about Jail visitors. Since Independence, for these 30 years, we are having these jail visitors. Then why is it that we still say that jails are not places for human beings to stay. It is said that the jail visitors are not organised. I feel that these jail visitors should be made into an Advisory Committee for Government Jails. As we are having an Advisory Committee for every hospital, there should be an Advisory Committee for Jail. I feel that at least 50 per cent of the members of that Committee should be women. It is not that I have anything against other people. But I feel that women have a soft heart If there are 50 per cent of women-members on the jail committees, it will be a better action.

I would also like to make a suggestion. One or two members have already suggested this. Some of the jail visitors may be experienced and some of them may have sympathy. But we all need a technical knowledge of things. These jail advisory committees should be provided with good books like the one on the life of Elizabeth Fray who fought for jail reforms and whose hard struggle brought about a new type ofjails in Britain. That book is a Bible for all those who work for jail reforms. There are also some books in Tamil like 'Kaithiyin Kathai' by Mrs. Sarojini Sriram. There are many more books and I would not go into details because our Chairman has given a warning to curtail our speeches. A library with such books should be provided for these jail

[Thirumathi Mandakini Krishnamurthi] [1978 மார்ச் 22

visitors and also jailors so that they may go through these books, have joint seminars, talks and conferences to find out how best the jail reforms could be brought about and how to make these jails human places for the human people sent there so that they may also go back as human beings. In this connection, I would like to congratulate the Hon. the Minister for Information, especially on behalf of women because he has been able to get rid of the obscene posters from our lives. Especially, it was an eye-sore for the women of this State and also for the women of every other State. Tamil Nadu which has always been a fore runner has been the first to have the abolition of obscene posters. I would also add that he should use his influence with the Censor Board in the matter of films with themes like glorifying theft, rape and many other human deficiencies which are now shown. Such themes should not be brought into the films. If that is done, definitely we will have lesser number of such cases. Naturally, when bad things are glorified, our young people think that those things go with a hero and they would like to emulate them.

There is another point which I would like to mention. One of our Hon. Members spoke abut open jails. It is not enough if we have one "Dho Ankhein Rahrah Haaath" or a Tamil film on the same theme. We should have many more such films. I hope that the Hon. the Minister for Information will see that his Government give enough funds to producers who produce such good films on jail reforms so that the jail visitors and also people in the jails may be benefited.

I have another suggestion regarding the Jail Reforms Committee. Very useful suggestions have been made by two very important vocal Members of our Council regarding those people who were in jail during recent times. In the olden times there were 'A' and 'B' classes. In recent times, there was socialistic jail and all people were kept together and that is why we have come to know that there have been such inhuman things happening in jail. On the Committee, there can be one from the ruling party and one from the opposition party who have sufferred during this socialistic jailing so that there may be a balance of power and I hope this committee will really do its work in an effective manner. Thank you.

1978 மார்ச் 22]

<u>திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்</u>: மாற்றுத்தலைவரர்களே, இந்த சிறைச்சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் மீது நானும் சில கருத்துக்களை வழங்கலாம் என்று எண்ணுகிறேன். நீதிமன்றங்களைப்பற்றிப் பல பேர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். கோர்ட்டுகளில் ஏராளமான கேஸ்கள் இருந்துகொண்டிருக்கின்றன, முனிசிபல் கோர்ட்டிலேயிருந்து ஹைக்கோர்ட் வரையிலே கேஸ்கள் இருந்துகொண்டிருக்கின்றன. தாமதமாகிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் காலத்திலே ஜில்லாக்களிலே ஜனத்தொகை சில லட்சங்களாக இருந்தபோது ஏற்பட்ட கோர்ட்டுகள். அந்தக் காலத்திலே 20 கோடியாக மக்கள் ஜனத்தொகை, இருந்தபோது ஏற்பட்ட கோர்ட்டுகள் எண்ணிக்கைக் குறைவாக இருக்கின்றன. இப்போது 4, 5 பங்கு ஜனத்தொகை பெருகியிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போலவே, சிவில் கேஸ்கள் கிரிமினல் கேஸ்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அதிகரிக்கின்ற பாப்புலேஷனுக்கு ஏற்ப அதிகமாகிக்கொண்டே போகிறது. அதற்குத் தகுந்தாற்போல கோர்ட்டுகள் நிறைய இருக்க வேண்டும். ஹைக்கோர்ட்டு என்று சொல்லும் போது, சென்னை மாநகரத்திலேதான் ஒரு ஹைக்கோர்ட் இருந்துகொண்டிருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்து கேஸ்களுக்காக வருகின்ற ஜனங்களுடைய கஷ்டம் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. ஒரு தடவை மட்டும் வந்துவிட்டால், கேஸ் முடிந்துவிடாது. பல தடவைகள் வர வேண்டியிருக்கிறது. கேஸ்கள் 2, 3 வருடங்களுக்குக்கூட நீடிக்கின்றன. சட்ட மன்ற மேலவைக் கூட்டத்திற்கு நாம் வருகின்றோம். கன்னியாகுமரியிலிருந்து வருகிறோம் என்றால், நமக்கு எவ்வளவு செலவாகும் என்று தெரியும். செகண்ட் கிளாசில், தேர்ட் கிளாசில் பிரயாணம் செய்து வந்தாலும்கூட, பஸ் கட்டணமோ, ரயில் கட்டணமோ, ஏராளமான பணம் செலவாகிறது என்பது தெரியும். சரீர முயற்சியும், பொருளும் விரயமாகிறது.

திருச்சியிலே ஒரு ஹைக்கோர்ட்டுப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய பகுதியாகப் பார்த்து, அங்கு கோர்ட்டு வைக்க வேண்டும். வேண்டுமானால் 4 பக்கங்களையும் அளந்து பார்த்துக்கூட அமைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் எல்லாம், "ஏன் திருச்சியில்தான் இருக்க வேண்டுமா? வேறு இடத்தில் இருக்கக்கூடாதா?" என்று கேட்கலாம். திருச்சி நகரத்திலே ஒரு ஹைக்கோர்ட் பிரிவு ஏற்படுத்தினால், சுற்றுப்பக்கத்திலிருந்து வருகின்ற மக்களுக்கு வசதியாக இருக்கும், செலவுகளும் குறையும். இபபோது போக்குவரத்துச் செலவே 4 பங்கு ஆகிறது. சாதாரண மக்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கும், என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உயர்நீதி மன்றங்களை மாற்றியமைக்கும்போது, திருத்தியமைக்கும் போது, திருச்சி நகரத்திலே ஏற்படுத்தினால், நான்கு பக்கத்திலுமிருந்து வருகின்றவர்களுக்கு வசதியாக இருக்கும், சீக்கிரமாகவும் வர முடியும். ஏராளமான கேஸ்கள் பெண்டிங்காக இருப்ப

தாக பேப்பர் வாயிலாகப் பார்க்கிறோம். இவைகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால், ஜனங்களுக்கு நல்ல சௌகரியம் ஏற்படும். எங்கள் ஊரில் ஒரு கேஸுக்குக் கிட்டத்தட்ட 9 வருடங்கள்கூட ஆகியிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் கொடுக்க வேண்டிய பாக்கிக்காக கேஸ் போட்டால், அந்த கேஸ்கள் அதிக காலத்திற்கு நீடித்தால், அந்தப் பாக்கித் தொகையை வசூலிக்க முடியாது. அவர்களுக்குச் சொத்து இருக்கிறதா என்பதுகூடத் தெரியாது போய்விடுகிறது. ஒரு கேஸுக்கு 3 மாதம் அல்லது 6 மாதம் எடுத்துக்கொள்ளலாம், ஒரு வருடமானாலும் பாதகமில்லை.. அதற்கு மேலும் நீடிக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முனிசிபல் கோர்ட்டிலேயிருந்து சப்–கோர்ட்டு, ஹைக்கோர்ட்டு வரையிலே ஏராளமான கேஸ்கள் இருக்கின்றன. பாப்புலேஷன் அதிகமாக இருப்பதால், அப்படி அதிகமான கேஸ்கள் இருக்கின்றன. அப்படி பாப்புலேஷன் அதிகமாக, கேஸ்கள் அதிகமாக இருக்கின்ற இடத்திலே, முனிசிபல் கோர்ட்டுக்களை சப்-கோர்ட்டு அளவுக்கு மாற்றி அமைக்கலாம். இங்கு நமது மாற்றுத் தலைவர். திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள் ஊரிலே, நாமக்கல்லில் உள்ள முனிசிபல் கோர்ட்டில் ஏராளமான கேஸ்கள் பாக்கியிருக்கின்றன. அவர்கள் சேலம் வரவேண்டியிருப்பதால், கஷ்டமாக இருக்கிறது. அங்கேயே ஒரு சப்–கோர்ட் ஏற்படுத்தினால், நன்றாக இருக்கும். அது மாதிரி அங்கு ஏற்படுத்தினால், அங்கே இருக்கின்ற வக்கீல்களுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். நீதிமன்றங்கள் பக்கத்திலே இருந்தால், அவர்கள் போய் வாதாடுவதற்கு, நீதியைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிபதிகளுக்குச் சம்பளம் கொடுப்பது பற்றி இங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் ரூ. 3,500 லிருந்து ரூ. 5,000 வரையில் பெறுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். அது போதாதா? அவர்களுக்கு வேறு வருமானம் இல்லாததால், கொடுக்க வேண்டும் என்பார்கள். அவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் எல்லாம் இருக்கின்றன. சம்பளம் ஏற்றினாலும், அதற்கு ஏற்றாற்போல, அவர்களுக்கு இன்கம்டாக்ஸ் வருகிறது. அதையெல்லாம் அவர்கள் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. அவர்கள் சம்பளத்திலேயே கணக்கிட்டுப் பிடித்துக் கொள்கிறார்கள். உண்மையில் யார் அதிகமாக லஞ்சம் வாங்குகின்றார்கள் என்று பார்க்கும் போது அதிகச் சம்பளம் வாங்குபவர்களும் அரசியல்வாதிகளில் சிலரும் வாங்குகிறார்கள் என்றுதான் சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 12-40)

இப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றன. ஆசையில்லாத மனிதனே கிடையாது. இன்றைக்கு மெம்பராக வந்தால் உடனடியாக மந்திரியாக வர வேண்டுமென்று நினைக்கிறார்கள். பிறகு சென்டருக்குப் போகவேண்டுமென்று நினைக்கிறார்கள். பதவி

வேண்டும். ஆசையில்லாத மனிதனே கிடையாது. கொஞ்சம் சொத்து இருக்கிறவன் மேலும் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிறான். கொஞ்சம் சொத்து இருந்தால் போதும், அதைக்கொண்டு குடும்பம் நடத்துகிறேன் என்று சொல்லுகிறவர்கள் கிடையாது. நான் கொடுப்பதைத் தடுக்கவில்லை. ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் நீதிபதி சம்பளம் என்று சொல்லுங்கள், அதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறவர்கள் இருக்கமாட்டார்கள். தகுதி உள்ளவர்கள் நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், நீதிபதிகள் பொது வாழ்வில் ஈடுபடுகிறார்கள். சர்வீஸ் ஆர்கனைசேஷன்ஸ், ரோட்டரி கிளப், லைன்ஸ் கிளப் போன்றவற்றில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நானும் சில ஆர்கனைசேஷன்ஸ்–ல் உறுப்பினராக இருக்கிறேன். பலவிதமான பொது விஷயங்களில் தலையிடும்போது, பலவிதமான சிபாரிசுகள் வருகின்றன. பொது இடங்களில் நீதிபதிகள் கலந்துகொள்ளும் போது, அவர்களை 'அப்ரோச்' பண்ணுவது சுலபம். அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. கோவில்களுக்கு வந்தால் கூட, சிலர் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு சிலரைப் பற்றிச் சிபாரிசு செய்யும் நிலைமை ஏற்படுகிறது. எனவே பொது வாழ்வில் ஈடுபடுவதை அவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் கலந்து கொள்ளவே கூடாதென்று சொல்லவில்லை. குறைத்துக்கொள்ள வேண்டும். அவர் நேர்மையாகத் தீர்ப்பு அளித்திருக்கலாம். அவர் சொல்லி, இவர் செய்தார் என்று சொல்லும் நிலைமை ஏற்படும். எனவே அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடுவதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஈடுபடாமல் இருந்தால், மிகவும் நல்லது.

நீதி மன்றத்தைப்பற்றி உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். சிறைகளைப்பற்றியும் சொன்னார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே சிறைத் தண்டனை அடைந்த கைதிகளை அந்தமானுக்கு அனுப்பினார்கள். குற்றம் அதிகமாகச் செய்தவர்களை அந்தமானுக்கு அனுப்பினார்கள். திரும்பி வந்தபோது, அங்கேயிருந்து அவர்கள் சம்பாதித்துக்கொண்டு வந்தார்கள். கைதிகளிலே திறமையுள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். எதற்காக அவர்களைச் சிறையில் வைக்கிறோம்? அவர்களைச் சீர்திருத்துவதற்காக வைக்கிறோம். இங்கே சேர்ந்தாற்போல் 4 மணி நேரம் உட்கார்ந்திருக்க முடியவில்லை. 3, 4 தடவை வெளியே போய் விட்டு வருகிறோம். ஒரு இடத்திலேயே உட்கார்ந்தால், 4 பேரிடம் பேச முடியாது, உலகம் எப்படி இருக்குமென்று தெரியாது. எனவே குற்றம் பண்ணியவர்களை ஓரிடத்திலேயே இருக்கும் தண்டனையைக் கொடுத்து சீர்திருத்துகிறோம். எல்லா ஜெயில்களும் ஒரே நிலையில் தான் நடக்கின்றன என்று சொல்ல முடியாது, பத்திரிகையிலே நாம் படிக்கிறோம். நான்கூட 'மிசா' கைதிகளைப் போய் பார்த்திருக்கிறேன். அவர்களை பார்ப்பதில் பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. டி. ஐ. ஆர். கீழ் கைதாகியுள்ள கைதிகளைப் பார்க்க முடிகிறது. ஆனால் 'மிசா'

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1978 மார்ச் 22

கீழ் கைதானவர்களைப் பார்க்கக்கூடாதென்று சட்டம் போட்டார்
கள். அதற்குக் காரணம் தெரியவில்லை. டி.ஐ.ஆர்: கீழ் கைதான
வர்களைப் பார்க்கலாம். சாதாரண குற்றம் செய்த கைதிகளைப்
பொறுத்தும், பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன, காலையிலே
போனால் மாலை 4-30 மணிக்குத்தான் அவர்களைப் பார்க்க முடியும்.
குற்றக் கைதிகளுக்கு நாம் ஒன்றும் செய்யப் போவதில்லை. மிசா'
கைதிகளுக்குப் படியெல்லாம் கொடுக்கிறார்கள். இவர்களைப் போய்
பார்க்கும்போது, 'நீ இங்கே இருக்கிறாய், குடும்பத்திற்கு என்ன
செய்வது, கொடுக்கல், வாங்கலுக்கு என்ன செய்வது
என்பது பற்றித்தான் பேசுவார்கள். அதற்காக அப்போதிருக்கும்
கடுமையான சட்டத்தைத் திருத்தி, அவர்கள் கொஞ்ச நேரம்
அதிகமாகப் பேசுவதற்குச் சலுகை கொடுக்க வேண்டும், அவர்கள்
ரொம்ப தூரத்திலிருந்து வருகிறார்கள், இந்த நேரத்திற்குள்
அப்ளிகேஷன் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. 4
நிமிடங்கள் தாமதமாக வந்தால்கூட, அப்ளிகேஷன் கொடுக்க
முடியாது. கொஞ்சம் தெரிந்தவர்களை விடுகிறார்கள். எல்லோ
ருக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்.

ஜெயில் நிர்வாகத்திலே கைதிகளுக்கான கஷ்டங்கள் கொஞ்ச
நஞ்சமல்ல. சென்னையிலுள்ள மைய சிறைச்சாலையில் இரண்டு
டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் 2,000 கைதிகள் இருக்கிறார்கள்.
அரசியல் ரீதியாகவும் கணக்கில்லாத கைதிகள் வருகிறார்கள்.
நினைத்தால் இங்கே ஸ்டிரைக் நடக்கிறது. அதனால் ஆயிரக் கணக்
கில் உள்ளே போகிறார்கள். இன்று வாழ்க்கைத் தரம் உயர உயர
வியாதிகளும் அதிகமாகின்றன, அங்கே வியாதிக்குத் தகுந்த
டாக்டர் இல்லை. டாக்டருக்குத் தெரிந்த வியாதி வர வேண்
டும், திருச்சி சிறைச்சாலையில் நான் இருந்தபோது, ஒரு தொண்
டருக்கு ஒரு வியாதி வந்தது. 'டெடனஸ்' என்ற வியாதி.
கிட்டத்தட்ட 12 மணி நேரத்திற்கு முன்பு அவரை ஆஸ்பத்
திரிக்கு எடுத்துப் போயிருந்தால், பிழைத்திருப்பார். மருத்துவர்
கள் செய்த கால தாமதத்தால் அவர் இறந்துவிட்டார், அங்கே
சரியான மருந்துகள் கிடையாது, சரியான டிரீட்மென்ட் இல்லை,
ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்று
அவர்கள் எழுதிக் கொடுத்து, அங்கே போவதற்கு 12 மணி
நேரம் காலதாமதமாகிவிட்டது. கடைசியில் அங்கே 'டெடனஸ்'
வியாதி என்று கூறுகிறார்கள். எனவே சிறையிலேயே நல்லவித
மான டிரீட்மென்ட் கொடுத்தால்தான், கைதிகளுக்குச் சௌகரி
யமாக இருக்கும். வீட்டில் இருந்தால் உடனே டாக்டரைக்
கூப்பிடுவோம், சரியான முறையில் டிரீட்மென்ட் கொடுப்போம்.
அடுத்து, சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுபற்றிச்
சொல்ல விரும்புகிறேன், முதலிலே ஜெயிலிலே ஜல வசதி
வேண்டும். திருச்சி ஜெயிலில் மூன்று கிணறுகள் இருக்கின்றன.
ஒரு கிணற்றிலே தான் தண்ணீர் இருக்கிறது. ஒரு வசனம்
சொல்வார்கள், 'மூன்று கிணறு வெட்டினேன், ரண்டு பாழ்
ஒன்றிலே தண்ணீரே இல்லை' என்று சொல்வார்கள் சிறைச்சாலை

1978 மார்ச் 22] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

யிலே மூன்று கிணறுகள் இருந்தாலும், மோட்டார் போட்டால்
5 நிமிடங்கள் கூட தண்ணீர் வராது. தண்ணீர் கீழே போய்
விடும். குடிக்கிற தண்ணீருக்கு முனிசிபாலிடியைத்தான் நம்ப
வேண்டும், சரியான நேரத்தில் அவர்களுக்கு சப்ளை கிடைக்க
வில்லை. கிணற்றில் தண்ணீர் பாதாளத்தில் இருக்கிறது. சுத்த
மாக இருக்கிறதா என்பது தெரியாது. ஏதாவது விழுந்து செத்துக்
கிடக்கிறதா என்பது தெரியாது. எல்லோரும் சிரமப்படுகிறார்கள்,
அவர்கள் அடைக்கப்பட்டுள்ள கொட்டகையில் கோடிக் கணக்கான
உண்ணிகள் இருக்கின்றன, நூற்றுக் கணக்கான கைதிகளைப் படுக்க
வைக்கிறார்கள். சுற்றி சுவரில் உண்ணிகள் இருக்கின்றன. அவர்
களுடைய உடல் நலத்தைப் பற்றி நினைக்கும் போது, ரொம்பவும்
கஷ்டமாக இருக்கிறது, ராத்திரி பூராவும் தூங்க முடியவில்லை.
மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

சிறைக்குச் சென்றால், அங்கே கஷ்டப்பட வேண்டியதுதான்.
மாமியார் வீடு என்று நினைத்துக் கொண்டீர்களா என்று
கேட்கிறார்கள். இந்த ஒரு இடத்தில் மட்டுமில்லை. எல்லா
இடத்திலும் இதே மாதிரி தான் இருக்கிறது. மாமியார் வீடா
உங்களை வரவேற்று சாப்பாடு போடுவாங்களா என்று கேட்
கிறார்கள். மாமியார் வீடில்லைதான். கஷ்டப்படுவதற்காகத்தான்
சிறைக்குச் செல்கிறோம். இருந்தாலும்கூட நியாயமாக நடத்த
வேண்டாமா? இந்த ஜனநாயக காலத்திலும் கூட இவ்வளவு கஷ்டப்
படுத்துவதா? அங்கே கொடுக்கப்படுகிற ஆகாரம் ரொம்ப, ரொம்ப
மோசம். ஒவ்வொரு கைதிக்கும் இவ்வளவு என்று ஆகாரத்திற்காக
அரசாங்கம் செலவு செய்கிறது.

ஒரு வேளை ஆகாரத்திற்கே இரண்டு மூன்று ரூபாய் ஆகிறது
வெளியில். இரண்டு வேளை ஆகாரத்திற்கும் சேர்த்து ஒரு கைதிக்குக்
கொடுக்கப்படுவது மிக மிகக் குறைவு. இதை வைத்துக் கொண்டு
எப்படிச் சரியான முறையிலே பராமரிப்பது? கொஞ்சம் குறைந்திருக்
கலாம். ஆனால் இப்போது கொடுப்பதை வைத்துக் கொண்டு
எப்படி இரண்டு வேளை ஆகாரத்தை சிறையிலே உள்ள ஒருவருக்குப்
போட முடியும்? அவர்களுக்கு என்று கொடுக்கப்படுகிற பணத்திலே
அவர்களுக்குக் கொடுக்கப்படுவது அவர்களுக்குச் சரியான முறை
யிலே போய்ச் சேருவதில்லை. நம்முடைய நண்பர் திரு. மாணிக்கம்
அவர்கள் எடுத்துச் சொல்லியபடி, பூராவாகப் போய்ச் சேரா
விட்டாலும், ஓரளவிற்காவது போய்ச் சேரும் படி பார்த்துக்
கொள்ள வேண்டும்.

நான் சமீபத்திலே சிறைக்குப் போய்விட்டுவந்தேன். சிறையிலே
அளவை மிக மிகக் குறைத்து விட்டார்கள். எனவே அதில்
கண்காணிப்புடன் இருந்து ஜெயிலில் உள்ளவர்களுக்கு அளிக்கப்
படும் ஆகாரத்தின் அளவு குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும்.

அடுத்து, இந்த பக்குவச் சாலை, பாகசாலையைப் பார்க்கும் போது, அது ரொம்பக் கேவலமாக உள்ளது. அவர்களுக்குக் கொடுக்கப்படுவதை வைத்துக் கொண்டு சாம்பார் தயாரிப்பது என்பது மிகவும் சிரமம், காய்ந்த விறகு கூடக் கொடுக்கப்படுவதில்லை. ஈர விறகைக் கொடுக்கிறார்கள். மிசாக் கைதிகளுக்கு 18 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அவர்களுக்கு எப்படிச் சரியான முறையிலே உணவு கொடுக்க முடியும்? அதனால் வெளியிலிருந்து வரவழைத்துக் கொள்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு தான் அவர்களுக்கு உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. ஜெயிலில் இருப்பவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற உணவு அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்றால், இல்லை. எவ்வளவு குறைச்சலாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தான் கொடுக்கப்படுகிறது. ''ஏ'' கிளாஸ் கைதிகளுக்கு. எம். எல். ஏ., எம். எல். சி. போன்றவர்களுக்குக் கொஞ்சம் ஒழுங்காகக் கொடுக்கப்படலாம். அதுவும் ''ஏ'' கிளாஸ் கைதிகளுக்குக் கொடுக்கப்படுவது கூட எம்.எல்.ஏ., எம்.எல்.சி. போன்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. கைதிகள் வைக்கப்படும் அறைகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை. அங்கே கழிப்பிடங்கள் இருப்பதைப் பார்த்தால், நிம்மதியாகத் தூங்க முடியாது. ரொம்ப நாளைக்குச் சுத்தம் பண்ணப்படாமல் இருக்கிறது. அதைச் சுத்தம் செய்வது என்றால் ரொம்ப நாளாகும். ஹெல்த் விசிட்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் வந்து பார்த்ததாகவும், எல்லாம் சரியாக இருப்பதாகவும் எழுதப்படுகின்றன, இவைகளெல்லாம் சரியான முறையில் நடக்கிறதா, நடக்கவில்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இங்லீஷில் பேசும்போது அதிக நேரம் கொடுத்தீர்கள். முதலிலே பேசியவர்களுக்கு அதிக நேரம் கொடுத்தீர்கள். பின்னால் பேசுகிறவர்களைச் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறீர்கள்.

ஜெயில் விசிட்டர்கள் ஜெயிலுக்குப் போய்ப் பார்க்கிறார்கள். ஜில்லாக் கலெக்டரும் போகிறார். ஆனால் சரியான முறையில் கண்காணிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஜெயில் விசிட்டர்கள் பட்டியலில் தங்கள் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக, சில பேர் கோவில் டிரஸ்டிகளின் பெயர்களில் தன் பெயர் இருக்கிறதா என்று பார்ப்பதைப்போல, ஜெயில் விசிட்டர் பட்டியலில் தங்கள் பெயர் என்றைக்கும் இருக்க வேண்டுமென்பதற்காக எல்லாமே நன்றாக இருப்பதாக எழுதி விடுகிறார்கள். அடுத்தாற்போல் போராட்டம் நடத்தினால், தாங்களும் ஜெயிலுக்கு வர வேண்டுமென்பதை மறந்து, எல்லாம்

நன்றாக இருக்கிறது என்று எழுதி விடுகிறார்கள். எனவே இந்த ஜெயில் விசிட்டர்கள் முறையை மாற்றி, வேறு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கென்று ஒருகமிட்டி அல்லது ஆலோசனை கமிட்டியை, டெம்பரரியாக, நிரந்தரமாக அல்ல, ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

சிறையைப் பற்றிய வரைக்கும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். போலீசைப்பற்றிச் சொன்னால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? 10 பேர் ஒருவனைப் பற்றிச் சொன்னால், உடனே அவனைப் பிடித்துக்கொண்டு போய் ''பைன்ட் ஓவர்'' செய்கிறார்கள். 10 பேர் சொல்லிவிட்டால், குற்றம் சாட்டுகிறார்கள். குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டியதுதான், வேண்டாம் என்று சொல்லவில்லை. தண்டனை கொடுத்தால், குற்றங்கள் நடக்காமலிருக்கும். ஆனால் கோபதாபம் இல்லாமல், மாச்சரியமில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

Thiru D. V. D'MONTE : Mr. Deputy Chairman, Sir, legal delays often give rise to statements such as "There is one law for the rich and another for the poor", in the sense that only the well-to-do or the rich can last out all the tortuous proceedings of legal cases to their final conclusion. There is, therefore, definite need for quickening the pace of justice. The steps necessary to quicken the pace of justice have been set out time and time again. Some of them are the appointment of new Judges and more Judges, simplified procedures, fewer adjournments and strengthening the investigating and prosecuting machinery. The number of cases pending in the High Court has gone up to 42,000 in 1976 as against 39,000 cases in 1975. I do not have the current figures. It means that we have not been able to come to grips with the problem. Decentralisation of Courts may be one way of dealing with the situation. A decision on this had been made some years ago. But very little action has been taken so far. Apparently, the Government are dragging their feet on this issue. The Government will do well to implement the proposal at an early date.

A strict time-limit should be placed on arguments and Judges and lawyers must ensure that written statements are made more comprehensive and elaborate than they are now and they should use these effectively to avoid delay. It would be a good thing if the initiative for a change in the system comes from the lawyers themselves who have often been accused of having an interest in prolonging the cases.

In criminal cases, where the Police practically decide cases by calculated delays, there should be a guillotine of three months after which the case for action should automatically cease.

The Emergency brought into focus the extent of politicalisation of the Judiciary that had taken place. Rightly or wrongly, the public feel that political and other extraneous c osiderations often go in the very appointment and selection of Judges. Whatever it be, the Judiciary does not enjoy the same amount of public confidence which it did ten years ago. The Janata Party has promised to restore to the Judiciary the eminent position it held in the country prior to the Emergency. Today, to enable it to do so, a pre-requisite is that politicians and local politics should not try to interfere in the flow of law.

In regard to jail reforms, I welcome the move of the State Government to set up more open-air jails. It is time that we give up the penal approach to crime and criminals and some progress is made towards more humane treatment. There should be a shift in stress from punishment to reformation.

The principal task should be to reform criminals and convicts so that, when they go out they can take their place in society. There is need to modernise our jails and to create proper atmosphere for rehabilitation of prisoners. Overcrowding in jails is common. The Ismail Commission report is a standing monument which has highlighted the inhuman conditions in jails presently in our State. The Central Prison, Madras calls for immediate change. I feel that, with the large number of Prohibition cases that are now coming up, the same old overcrowding is going to become very critical. It is a problem which the Government must attend to immediately.

Sir, no scheme of reform will succeed unless the officers themselves are properly trained and made to understand that they are there to help prisoners rather than to maintain discipline and to prevent the prisoners from escaping. "An eye for an eye" principle is outmoded. Penologists can do well to profit, by their experience of enlightened attempts elsewhere in other countries to find the ways and means for criminals to be made socially acceptable citizens.

Thank you.

(பிற்பகல் 1.00)

புலவர் புலமைப் பித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைத் துறையைப் பற்றியும், நீதி நிர்வாகத் துறையைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களைப் போல நானும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மணிமேகலை என்ற இலக்கியத்தைப் படிக்கிறபோது, சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றியமைத்தாள் மணிமேகலை என்று நாம் படித்திருக்கிறோம்., அதே போல கடந்த காலங்களில் இருந்த நிலைமைகள் மாறி, இனிமேலாவது சிறைச்சாலை என்பது குற்றம் இழைக்கிற மனித உள்ளங்களைத் திருத்தி, அவர்களை வாழத்தக்க மனிதர்களாக ஆக்கத்தக்க அறக் கோட்டமாக மாற வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து இந்த ஆட்சிக் காலத்திலே அது நிறைவேறும் என்று நான் மனமார எதிர்பார்க்கிறேன்,

பெரும்பாலும் இந்த நாட்டில் நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்து வருவதற்குரிய சூழ்நிலைதான் சிறைச்சாலையில் வளரு கிறதே தவிர, குற்றங்களைக் களைவதற்கு, அவற்றைத் திருத்து வதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது என்னுடைய கருத்தாகும். குற்றவாளிகளை மேலும் குதர்க்கவாதிகளாக ஆக்குகிற முயற்சியிலே ஈடுபடுகிறார்களே தவிர, அவர்களை மெய்யாகவே திருத்துவதற்கான வழிமுறைகளைக் கையாண்டதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த நாட்டில் ஏற்படுகிற பெரும்பாலான குற்றங்கள் இல்லாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது, அதனாலே இல்லாமையின் காரணமாகக் குற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதல்ல என்னுடைய வாதம். குற்றங்களைக் களைய வேண்டுமென்று நினைக்கிறவர்கள் அந்தக் குற்றங்களுக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிவதும் அந்தக் காரணங்களை இல்லாமல் நீக்குவதும்தான் நம்முடைய கடமை. குற்றங்களுக்குரிய காரணங்களை முதலிலே கண்டு அதற்கேற்ப செயலாற்றுவது நல்லது என்று கருதுகிறேன். 'நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்க வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்பதைப் போல குற்றங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அந்தக் காரணங்களைக் களைந்து குற்றம் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது நாட்டிற்கு நலம் பயக்கு மென்று கருதுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், சிறைச்சாலையிலே கூட வர்க்க பேதங்கள் இருக்கின்றன. சிறைச்சாலையில், வசதி படைத்தவர் கள் வருகிறபோது, அவர்களுக்கு ஒருவிதமான நடைமுறைகளும், ஏழ்மையில் வாடுகின்றவர்கள் தவறுகளைச் செய்துவிட்டு சிறைக் குள்ளே செல்லுகிறபோது, அவர்களுக்கு ஒருவிதமான நடைமுறை

களும் இருக்கிற தன்மை மாற்றப்பட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. வேண்டுமானால் பொது வாழ்விலே ஈடுபட்டு, அரசியலில் ஈடுபட்டு, அதன் காரணமாக வருகிறவர்களுக்கு ஒருவிதமான நடைமுறைகள் இருக்கலாம். மற்றவர்கள் யாராக இருந்தாலும், தவறுகளைச் செய்தவர்கள் எப்படிப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எல்லோருக்கும் ஒரேவிதமான நடைமுறைகள் இருக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும்.

நான் இந்த எண்ணம் கொண்டதற்குக் காரணம் கள்ள நோட்டு வழக்கிலே ஈடுபட்டு, அதிலே மாட்டிக்கொண்டு சிறைச்சாலைக்குள்ளே சென்றவர்கள், கஷ்டப்பட்டு கள்ள நோட்டு அடித்ததன் காரணமாக ஏற்பட்ட அயர்வைப் போக்கிக் கொள்வதற்காக ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாக இருப்பதை நாம் பார்க்கிறோமே தவிர, அதை ஒரு தண்டனைக்குரிய இடமாக நினைப்பதாகத் தெரியவில்லை. சமுதாயத்தினுடைய உயர் மட்டங்களில் இருக்கிறவர்கள் சிறைச்சாலைக்குள்ளே போய் விட்டால், மாமியார் வீட்டில் உபசரிப்பதைப் போல், உபசாரம் சிறைச்சாலையில் இருப்பதும், இல்லாமையின் காரணமாகத் தவறுகளைச் செய்துவிட்டு சிறைச்சாலைக்குள்ளே போகிறவர்களை மிருகங்களை நடத்துவதைப் போல் மிகவும் கொடுமையான முறையில் நடத்துவது என்பதும் மாற்றியமைக்கப்பட்டாக வேண்டும். பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு, அரசியலிலே ஈடுபட்டு மக்களுக்காக சிறை செல்பவர்களுக்கு ஒருவிதமாகவும் மற்ற யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் அனைவருக்கும் ஒரே விதமாகவும் உருவாக்கப்பட வேண்டுமென்பது ஒரு நல்ல ரீதியாக அமையும் என்று கருதுகிறேன்.

சிறைச்சாலையில் உள்ளவர்களைப் பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்குரிய நிலைமைகளைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் சில பல பேரைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நேரங்களில் சிறைக் கூண்டுகளில் இருப்பதைப் போல் இருக்கிறதே தவிர, நீண்ட நாட்களாகப் பார்க்காமல் இருந்தவர்களைப் பார்க்கும்போது, நல்ல முறையில் அவர்களிடம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் அந்தக் கம்பிகளுக்கு மத்தியிலே நின்று கொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. சிறைக் கைதிகளைப் பார்வையாளர்கள் சந்திக்கும் போது உள்ள நிலைமைகளை மேலும் எளிமைப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுதலாகும்.

சிறைச்சாலைகளில் இருக்கிற ஆயுள் கால தண்டனையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இராமாயணம் படித்தவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிய காரணமோ என்னவோ, இராமாயணத்தில் சொல்வதைப் போல் 'ஈரேழு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வா' என்று 14 ஆண்டுகள் என்று வரையறுத்திருக்கிறார்கள். அந்தக் கால அளவைக் கொஞ்சம்

குறைத்துக் கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன். இதற்குக் காரணம், 14 ஆண்டுக் காலம் சிறைக்குள்ளே இருந்துவிட்டு மீண்டும் திரும்ப வெளி உலகத்திலே வந்து வாழக்கூடிய வாய்ப்பை இழந்து சிறைக்குள்ளேயே மடிந்து போவதென்பது பரிதாபமாக இருக்கிறது. பத்தாண்டுக் காலமாகக் குறைப்பதன் வாயிலாக அவர்கள் திரும்ப வெளியே வந்து கொஞ்ச காலமாவது வாழ வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நான் அதிகமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுவது, நீதித் துறையின் நிர்வாகத்தைப் பற்றியதாகும். 'சட்டம் என்பது ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு சுடர் விளக்கு; அந்த விளக்கின் வெளிச்சம் ஏழைகளின் கரங்களுக்கு எட்டாமல் போகிறது' என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஏழைகளுக்குப் பெரும்பாலும் சட்டத்தின் உதவி எட்டாமல் இருக்கிறது. அது ஆண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து அப்படியே இருந்து வருகிற நிலைமையைப் பார்க்கிறோம், இன்னும் சொல்லப் போனால், நீதியினுடைய விலை அதிகரித்துப் போனதற்குக் காரணம், நீதித் துறையில் பங்கு வகிக்கிற மொழி ஒரு காரணம் என்பது என்னுடைய கருத்து. ஆங்கிலேயர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, நீதி மன்றங்களில் நீதிச் சட்டங்களை ஆங்கில மொழியில் வாதித்து, ஆங்கில மொழி மேலோங்கியிருக்கிற காரணத்தால், நம்முடைய நாட்டுப் பாமர மக்கள் ஆங்கில மொழியின் வாயிலாக நீதியைப் பெறுவதற்காக வழக்கறிஞர்களை நியமித்து, அவர்களுக்குக் கட்டணம் தரவேண்டிய சங்கடத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், சமுதாயத்தில் வசதி படைத்தவர்களால், வசதியற்றவர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, நீதிக்காக வாதாட வசதியில்லாதவர்கள் "எந்த நிலைமை ஏற்பட்டாலும் அனுபவித்தே தீர வேண்டியது நம்முடைய விதி" என்று வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை தொடர்ந்து நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அதனாலே நீதி மன்றங்களின் பணிகளைப் பெறுவதில் இக்கட்டான சூழ்நிலையில் பல பேர் வாடிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய சிற்றூரிலே கூட நான் பார்த்திருக்கிறேன். ஏழையெளியவனுடைய தாய், தந்தையை பெரிய மிராசாக இருக்கிறவன் கொலை செய்துவிடுவான். அதற்குப் பின்னாலே வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன் வாதாட வழியில்லாமல், வழக்கைச் சந்திக்க முடியாமல், தன் தாய் தந்தையை இழந்து விட்டு பின்னாலே அதே நேரத்தில் கொலை செய்த குற்றவாளி தலை நிமிர்ந்து நடக்கிறதைப் பார்த்துக் கொண்டிருப்பான். இந்த நிலை தொடர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறேன். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு வகையில் சொல்லிக் காட்டுவதற்கு உதாரணமாக என்னுடைய வாழ்க்கையே இருக்கிறது என்ற முறையிலே அதையே உதாரணமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 22

நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கும்போது, என்னுடைய தாய் திடீரென்று ஒரு சில குழப்பத்தின் காரணமாக கலவரம் ஏற்பட்டுக் கொல்லப்பட்டாள், அப்போது பகலில் கல்லூரியில் படித்துக்கொண்டும், இரவிலே பஞ்சாலையில் வேலை செய்து கொண்டும் வறுமையில் இருந்த காரணத்தால், என்னால் வழக்காட முடியாமல் போய்விட்டது. நான் பெற வேண்டிய நீதியைப் பெற முடியாமல் தவறிவிட்டதற்குக் காரணம் இல்லாமை தான் என்பதைத் துயரத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இனிமேலும் தொடர்ந்து வராமலிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இக்குறையைப் போக்குவதற்காக, ஏழைகளுக்காக வாதாடித் தருகிற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிகிறேன். அது மெய்யான முறையிலே, சரியான முறையிலே செயல்படுவதற்குரிய வழிமுறைகளை உருவாக்குவதில் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் முனைப்பாக ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன், அப்படி ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

எல்லாத் துறைகளிலும் தமிழ் வரவேண்டுமென்பது ஒரு புறம் இருந்தாலும், நீதித் துறையில் மிக விரைவில் தமிழ் மலர்ந்தாக வேண்டுமென்பது என்னுடைய மிகப் பெரிய பேராவலாகும். அதற்குக் காரணம் ஆங்கில மொழிதான் பாமரர்களை நீதித்துறைப் பக்கத்தில் நெருங்கவிடாமல் செய்திருக்கிறது என்பது என்னுடைய கருத்தாகும். ஏழைகள், பாட்டாளிகள், பஞ்சைகள் பராரிகள் நீதியைப் பெறுவதற்கு உள்ள தடைகள் நீங்க வேண்டுமென்றால், தமிழ் நீதித் துறையில் எல்லா இடங்களிலும் வர வேண்டும். சமநீதித் தத்துவம் அப்போதுதான் நாட்டிலே வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அத்துடன் குற்றம் செய்தவர்கள் திரும்பும்போது, திருந்தி வரவேண்டுமென்று பல சீர்திருத்தங்களைச் செய்கிறோம். திருக்குறள் போன்ற அற இலக்கியங்கள் சிறைச்சாலையில் சொல்லித் தரப்பட வேண்டும். அப்போது அவர்கள் மனிதர்களாகத் திருந்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும். நான் கூட சிறு வயதில் முரட்டுத்தனமாக வளர்ந்தவன்தான். திருக்குறள் படித்த பிறகுதான், பக்குவத்தை, பண்பாட்டைப் பெற்றேன். அதைப் போன்று அற இலக்கியங்களை சிறைச்சாலைகளில் சொல்லித் தருவதன் மூலமாக மனிதன் மனிதனாக மாறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். எல்லா மனிதர்களுக்கும் நீதி தங்கள் வீட்டைத் தேடி வருவதற்கு உரிய வாய்ப்பை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நீதிமான்கள் பக்க துணையாக நின்று செயல்பட வேண்டுமென்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

1978 மார்ச் 22]

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலை நீதி நிர்வாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் சில கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்கிறேன். ஆரம்பத்தில் நான் சொல்ல விரும்புவது, நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஹைகோர்ட்டுக்கு ஆறு நீதிபதிகள் நியமிப்பதில் நான்கு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த நான்கு பேரிலே ஒருவர் முஸ்லீமாக நியமிக்கப்பட்டமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திரு. தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது, திருச்சியிலே ஹைகோர்ட் பிராஞ்சு ஒன்று திறக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். தெற்குப் பகுதியிலே, தெற்கு மாவட்டங்களிலே ஹைக்கோர்ட்டின் ஒரு பிரிவு வேண்டுமென்ற கருத்து நீண்டகாலமாக பரவலாகச் சொல்லப்பட்டு, சென்ற ஆண்டு கூட நம்முடைய சட்ட அமைச்சர் அதைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லியது எனக்கு நினைவுக்கு வருகிறது. மதுரை அல்லது திருச்சி என்று இரண்டு ஊர்களைக் குறித்துச் சொன்னார்கள். மதுரைக்கு வந்தாலும், நான் ஆட்சேபிக்கமாட்டேன். நான் திருச்சியைச் சேர்ந்தவன். மதுரையை விட திருச்சி அதிகப் பொருத்தமான இடம் என்று சொல்லிக்கொள்கிறேன். கன்னியாகுமரி, மெட்ராஸ், கோவை, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பார்த்தால் திருச்சிதான் சென்டர். Heart of Tamil Nadu ஆக திருச்சிதான் இருக்கிறது. மற்ற ஊர்களுக்கு அந்தப் பொருத்தம் இல்லை. மதுரைக்கு வருவதில் ஆட்சேபனை இல்லை. தெற்கு மாவட்டங்களில் வர வேண்டும். அதற்கு அதிகப் பொருத்தம் திருச்சிக்கு இருக்கிறது என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்லிய கருத்திற்கு ஆதரவாக என்னுடைய கருத்தையும் அதில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்போது கோர்ட்டுகளில் கூட்டம் குறைவாக இருக்கிறது. மாரடோரியம் என்ற கடன் நிவாரணச் சட்டம் வந்ததன் காரணமாக, கோர்ட் தாவாக்களில் பாதி குறைந்து வக்கீல்களுக்கும் வேலையில்லை, ஜட்ஜ்களுக்கும் வேலை குறைவு என்ற நிலைமையைப் பார்க்கிறோம். ஆனால் பழைய கேஸ்கள் தீர்ந்ததாகத் தெரியவில்லை. ஐந்து வருஷம் ஏழு வருஷம் ஆகிய கேஸ்கள் எல்லாம் இன்னும் இழுத்துக்கொண்டே இருக்கின்றன. மாரடோரியம் காரணமாக கேஸ்கள் குறைந்திருந்தாலும், பழைய கேஸ்கள் தீராமல் இருக்கின்றன: Why this delay? என்று நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். குற்றம் செய்தவர்கள் வழக்குகள் தள்ளிப் போவதை விரும்புகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தீரவில்லையே என்று நினைக்கிறார்கள். "Ju tice delayed is Justice denied' என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஆகையால் 'டிலே' இல்லாமல் பெண்டிங்காக உள்ள கேஸ்களை துரிதப்படுத்த வேண்டும். அதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

வக்கீல்கள் வாங்கக்கூடிய பீஸ் உயர்வாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. கேஸ் முடிந்து decreed with costs என்று போடுகிறார்கள். ஸ்டாம்புக்கு எவ்வளவு, வக்கீலுக்கு எவ்வளவு என்று அரசாங்கத்தில் நிர்ணயிக்கிறார்கள். நிர்ணயிக்கப் பட்ட பீஸ்தான் அந்த வக்கீல் வாங்குகிறாரா என்றால், அதைப் போல நான்கு அல்லது மூன்று மடங்கு கூடுதலாகத்தான் வாங்கு கிறார்கள். அதற்கு ஒரு நிர்ணயம் இல்லை. நினைத்த மாதிரி வரம்பில்லாமல் வாங்குவதால், அதற்கு நியாயமான கட்டுப்பாடு வர வேண்டும். அரசு அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர் குறிப்பிட்டதைப் போல, Justice has become costly, ரொம்ப செலவு செய்துதான் வக்கீல் வைக்க வேண்டும், நீதியைப் பெற வேண்டுமென்ற நிலையிருப்பதை புலவர் புலமைப் பித்தன் அவர்கள் சொன்னார்கள். கொலை செய்யப்பட்டதால், நீதி தன் பக்கம் இருந்தும் பாதிக்கப் பட்டவர்கள் நியாயத்தைப் பெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. பணக்காரர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து, நீதியைப் பெறுகிறார்கள். அதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண மக்களும் நீதியைப் பெறும் வகையில் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Free legal aid என்று ஏழைகளுக்கு அரசாங்கம் உதவு கிறது. வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஒரு அம்சம் அது. ஆனாலும் அதற்கு வைத்திருக்கிற சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையாக் இருக்கின்றன. ஏழைகள் சாதாரணமாக அதைப் பெறக்கூடிய நிலைமையில் இல்லை. அதைத் தளர்த்த வேண்டும்.

Some leniency should be there in handling the free legal aid aspect

லேபர் கோர்ட்டுகள் மதுரையில், மெட்ராசில், கோவையில் இருக்கின்றன, லேபர் கேஸ்களில் சம்பந்தப்படுபவர்கள் தொழிலாளிகள். அவர்கள் மெட்ராசுக்கும், மதுரைக்கும் கோவைக்கும் போக வேண்டியிருக்கிறது. ஏழைத் தொழி லாளர்கள் நெடுந்தூரம் சென்று இந்தக் கோர்ட்டுகளில் வழக்காட வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த மூன்று இடங்களைத் தவிர்த்து இன்னும் நான்கு ஊர்களில் கடலூர், திருச்சி, வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் லேபர் கோர்ட் அமைக்கப் பட்டால், சாதாரணத் தொழிலாளி அவற்றிற்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகளை எக்ஸ்பெரிமெண்டலாக வைப்பதாகச் சொன்னார்கள். அப்படி தஞ்சையில் நடப்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். சிங்காநல்லூரில் நடப்பதாகக் குறிப்பில் பார்த்தேன். திறந்தவெளிச் சிறைச்சாலை என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். இதைப் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் சாப்பாட்டின் தரம் உயர்த்தப்பட வேண்டும். சாப்பாட்டின் தரம் மட்டுமல்ல; குவாலிடி அண்டு குவான்டிடி quality and quantity இரண்டும் உயர்த்தப்பட வேண்டும். ஒரு கைதிக்கு இரண்டேகால் ரூபாய் அளவிற்கு போடுவதாக குறிப்பில் படித்தேன். அது மிகவும் குறைவு. அதை அதிகப்படுத்த வேண்டும். நல்ல சாதமாக கூடுதலாகக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். இங்கே பேசியவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தைப் போன்று சிறைச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறையாவது '' மாரல் எஜுகேஷன் என்று சொல்லப்படுகிற உபதேசங்களைச் சொல்வதற்கு ஏற்பாடு செய்தால், நலமாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்கிறேன். அரசியல் கைதிகளையும் சாதாரண கைதிகளையும் ஒரே இடத்தில் சில சமயங்களில் போடுவது விரும்பத் தக்கதல்ல. இருவருக்கும் வெவ்வேறாக இடங்கள் அமைக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகளாக வருகிறவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருந்தாலும், போலீஸ் அதிகாரிகள் செக்ஷனைப் போடும்போது கிரிமினல் செக்ஷன்களைப் போட்டு, சாதாரண கைதியாக ஆக்குகிற நிலைமை நீண்டகாலமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து தி. மு. க. ஆட்சி வரையில் பார்த்தேன். இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

கைதி என்றால், அடிமையைப்போல் நடத்துகிறார்கள். அந்தக் காலத்தில் அடிமைகள் எப்படி நடத்தப்பட்டார்களோ அந்த மனப்பான்மையுடன் இன்றைக்கு கைதிகள் நடத்தப்படுகிறார்கள். சிறைக்குச் செல்கிறவர்கள் அரசியல் கைதிகளாக இருந்தாலும் சரி, சாதாரண குற்றங்களுக்காகச் சிறை செல்பவர்களாக இருந்தாலும் சரி, எல்லோருமே அடிமைகளைப்போல்தான் நடத்தப்படுகிற சூழ் நிலையைப் பார்க்கிறோம். இது மிகவும் தவறான போக்கு. இந்தப் போக்கு கைவிடப்படவேண்டும்.

முன்பு கைதியாக இருந்தவர்கள் இப்போது அமைச்சர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை சிறைக்குப் போய் வந்தவர் கள். அவர் இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார். தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன்,

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: அவை முன்ன வரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கணக்கு சரிதானா என்று கேட்கிறேன். (சிரிப்பு)

[1978 மார்ச் 22

திரு கே. எஸ். அப்துல் வகாப் : தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தாம் 13 தடவை சிறைக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். கைதிகள் எப்போதும் கைதிகளாகவே இருப்பதில்லை. இன்றைய தினம் கைதியாக இருப்பவர்கள் நாளைக்கு அமைச்சர்களாக வரக்கூடும். எனவே அவர்களை கண்ணியமான முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு கோ. சி. மணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீதி, சிறைச்சாலை ஆகிய இரண்டு துறைகளின் கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீதித் துறையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லியதைவிட அதிகமாக நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. அவ்வளவு தெளிவாக அவர்கள் இங்கே எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் எனக்கு ஏற்புடைய கருத்துக்கள் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலையைப்பற்றி வழக்கமாக எல்லோரும் சொன்னதைத் தான் நானும் சொல்ல இருக்கிறேன் என்றாலும், குறிப்பாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு மகளிர் சிறைச்சாலைதான் இருக்கிறது. ஆண்களைவிட மகளிர் குற்றவாளிகள் குறைவு என்பது உண்மையாக இருக்கலாம். இருந்தாலும் மகளிருக்கு இருக்கும் ஒரே ஒரு மத்திய சிறைச்சாலை வேலூரிலே அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டின் கடைசியில் உள்ள பாளையங்கோட்டை அல்லது கன்னியாகுமரியில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெறும் ஒரு மகளிர் கைதியை வேலூருக்குக் கொண்டு வரவேண்டும் என்றால், குறைந்தது 2 இரவு ஒரு பகலாகும். சில சமயம் 2 இரவுகள் இரண்டு பகல்களும் ஆகும். எனவே இதன் காரணமாகப் போக்குவரத்தில் எவ்வளவோ சிரமங்கள், எவ்வளவோ சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் அனுசரித்து இரண்டாவது மகளிர் மத்திய சிறைச்சாலையை—இடைவெளியைக் கணக்கிட்டு—தமிழகத்தின் மையப் பகுதியில் அமைப்பதன் மூலம், தற்போது ஏற்படுகிற இடையூறுகளை, இடர்ப்பாடுகளைத் தவிர்க்க இயலும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு மாணிக்கம் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றித் தெளிவாகச் சொன்னாலும், ஒரு பிரச்சினை உண்மையிலேயே இதயத்தைத் தொட்டது. அது இன்றைய தினம் சிறைச்சாலையில் ஆயுள் தண்டனைபெற்று கைதிகளாய் இருப்பவர்களை விடுதலை செய்வது பற்றியதாகும். ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை அவர்கள் தண்டனைக்காலம் முடிந்த பிறகு விடுவிப்பதுபற்றிப் பரிசீலிக்க ஒரு குழு வைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிடம் பரிசீலனைக்கு வருவதற்கு முன்னால்,

1978 மார்ச் 22] [திரு. கோ. சி. மணி]

அவர்கள் குற்றம் செய்த இடத்திலும், பிறந்து வளர்ந்த இடத்திலும், உள்ள காவல் துறையினர் சிபாரிசு செய்யும்படி கேட்கப்படுகிறார்கள்.

எப்போதும் ஒரு சிபாரிசை ஒரு துறை செய்கிறது என்றால், அது தன்மீது பழி வந்துவிடாமல், தன்மீது பாதகம் வந்துவிடாமல், தன்மீது குற்றம் வந்துவிடாமல் சதவீதத்தை அதிகரித்து வைத்து தான் சிபாரிசு செய்யுமே தவிர, அப்படியே ஒன்றைச் சிபாரிசு செய்துவிடாது. காவல் துறையினர் சிபாரிசு செய்து ஒரு கைதி வெளியெ வரலாம் என்று வந்து விட்டால், ஏற்கெனவே இருக்கிற பாதிப்புக்கு உள்ளானவனும் வெளியே வந்தவனும் சேர்ந்து கலகம் விளைவித்து மீண்டும் அங்கே ஒரு கொலை நிகழ்ந்துவிட்டால், பிறகு மேலே இருப்பவர்கள், ''நீ ஏன் அவனை விடுதலை செய்யலாம் என்று எழுதினாய்?'' என்று கேட்டால், சங்கடமாகப் போய்விடுமே என்று உடனே வேண்டாம் என்று எழுதிவிடுவார்கள், அல்லது மிகவும் காலதாமதப்படுத்தி எழுதி அனுப்புவார்கள். மிகவும் செல்வாக்குப் படைத்தவர்கள், பணக்காரர்கள் அல்லது போலீஸ் இலாக்காவில் நல்ல தொடர்பு உள்ளவர்கள், காவல் துறையினரோடு நெருங்கிப் பழகக்கூடியவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் சிபாரிசு செய்தால், ஒன்றிரண்டு பேர்களை விடுவிப்பது தான் அரசாங்கத்தின் வழக்கம். அதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளைப் பொறுத்தவரையில், $9\frac{1}{2}$ ஆண்டுக் காலம் கழித்து அவர்கள் விடுதலை பற்றிப் பரிசீலிக்கலாம் என்றிருக்கிறது. மரண தண்டனை பெற்ற பிறகு, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டிருந்தால், 14 வருஷம் கழித்துப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறது. 14 வருஷம் கழித்துப் பரிசீலிக்கலாம் என்றால், அந்தக் கைதி எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்தச் சிறை அதிகாரிகள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த பரிசீலனைக் குழு ஆகியோரின் பரிந்துரையைப் பெற்று விடுதலை செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். வேண்டுமானால் ஒரு வாதத்திற்குச் சொல்கிறேன். புள்ளிவிவரத்தை வேண்டுமானால் பாருங்கள். காவல் துறையினரிடம் ஒரு கைதியை விடுதலை செய்யலமா என்று கேட்டு அனுப்பி, எத்தனை நேர்வுகளில் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள். 100 கேஸ்களை காவல் துறைக்கு அனுப்பியிருந்தால், எத்தனை கேஸ்களில் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள். எத்தனை பேருக்கு அவர்கள் மறுத்திருக்கிறார்கள்? மறுத்தவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்குமே தவிர, சிபாரிசு செய்தவர்களின் எண்ணிக்கை மொத்தத்திலே ஒன்று இரண்டுதான் இருக்கும். நான் சொன்ன பொருளாதர வசதி, செல்வாக்கு, குடும்ப மேம்பாட்டுத் தரம் ஆகியவை மிக்க குடும்பங்களிலிருந்து ஒருவர் கொலை செய்திருந்தால் அவருக்குத் தான் இப்படிப்பட்ட சிபாரிசு வாய்ப்பு கிடைக்கும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், யாருக்கும் சிபாரிசு செய்வதில்லை. எனவே அருள் கூர்ந்து இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள்

இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அமைச்சரவர்கள் அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டவர். அதற்கு இடமளிக்காதவர். அரசியல் கட்சியில் இடம் பெற்றிருந்தாலும், அவருக்கு இருக்கிற முதலிடம் நீதித் துறையில் நேர்மையாகப் பணியாற்றி நல்ல பெயர் எடுத்தவர். அப்படிப்பட்டவர் இன்றைக்கு சட்டத் துறையின் அமைச்சராக வந்திருக்கிறார். அவரிடம் சொல்லுவது அவர் பரிந்துரைப்பார் என்ற காரணத்தால்தான், அவர் இதனைச் செய்வார் என்ற நம்பிக்கையால் தான் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் கைதிகளைப் பொறுத்தவரையில், இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று 'ஏ' வகுப்பு. மற்றது 'பி'—வகுப்பு. ஆனால் இவை இரண்டுமில்லாமல் மாஜிஸ்ட்ரேட்டுகள் ஸ்பெஷல் வகுப்பு என்று எழுதுகிறார்கள். இது எனக்குப் புரியவில்லை. 2, 3 மாதத்திற்கு முன்னால்கூட வழக்கு ஒன்றில் கோர்ட்டுக்குச் செல்லும் போது, எங்கள் வழக்கறிஞர், என்னைப்பற்றிச் சொல்லும்போது ''இவர் ஒரு எம்.எல்.சி இவருக்கு ஸ்பெஷல் வகுப்பு கொடுக்க வேண்டும்'' என்று கேட்டபோது, அங்கே உள்ள மாஜிஸ்ட்டிரேட் ஸ்பெஷல் வகுப்பு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார். இது வழக்கத்தில் இருக்கிறது என்று நினைக்கிறேன். எப்படியோ அவர்கள் ஸ்பெஷல் கிளாஸ் என்று எழுதுகிறார்கள். இந்த ஸ்பெஷல் கிளாசுக்கும் ஏ—கிளாசுக்கும் ஏதாவது வேறுபாடு மாறுபாடு இருக்கிறதா என்றால், இல்லை.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் சிறைச்சாலையில் கொடுக்கப்படுகிற உணவின் அளவு, அமைப்பு ஆகியவைபற்றிக் குறிப்பிடாமல் விலையைக் காட்டும் புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார்கள். அதிலும் ஏ—பிரிவில் 2 வகை — பி—பிரிவில் 2 வகை — சைவம் அசைவம் என்று இரண்டு வகை இருக்கிறது. வேலை செய்யும் கைதிகள், வேலை செய்யாத கைதிகள் என்று 2 பிரிவுகள் இருக்கின்றன. இவைகளை எதற்காக வைத்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் படுகிற கஷ்டத்தை அனுசரித்து, அவர்களுக்கு உணவில் கொஞ்சம் அதிமான பங்கு கிடைக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். அடுத்து, சத்து உணவு, சத்து இல்லாத உணவு என்று இருக்கிறது. சத்துணவு, சத்து இல்லாத உணவு என்று இருக்கிறதா என்றால், இல்லை. சத்துணவு என்று எழுதியிருப்பது எதைக் குறிக்கிறது என்றால், யாராவது நோய்வாய்ப்பட்டால், உடல் நலிவுற்றால், அல்லது ஒருவரின் எடை குறைந்தால், அந்த எடையைக் கூட்டுவதற்காக அவர்களுக்கு நல்ல புஷ்டியான ஆகாரமாக சத்துணவு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒரு கைதி இத்தனை நாளைக்கு முட்டை, பால், இறைச்சி என்று காலக் கெடு நிர்ணயித்து, மருத்துவர்

சர்ட்டிபிகேட் பேரில் வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். இது நியாயம். ஆனால் சிறைச்சாலையில்கூட சிபாரிசு மேலோங்கி இருக்கிறது. கைதிகளுக்கு இடையேகூட சிபாரிசுகள் உண்டு. அதிகாரிகளுக்கு வேலை செய்பவர்கள், மருத்துவ இலாக்கா அதிகாரிக்கு வேலை செய்பவர்கள். தொடர்புள்ளவர்கள் ஆகியோர் இந்த வசதியைப் பெறுகிறார்கள். திடகாத்திரமாக இருக்கிறார்களா இல்லையா என்றுகூடப் பார்க்காமல் திடகாத்திரர்களுக்குக்கூட இந்த அடிப்படையில் சத்து உணவு வழங்கப்படுகிறது. அதைக் கூர்ந்து கவனிக்கிற வகையில் திட்டமோ அதற்காகத் தனியாக மேல் அதிகாரியோ யாரும் இல்லை. வேலை செய்கிற கைதிகள்—சைவருக்கு ரூ. 5·65. வேலை செய்யாத கைதிக்கு—சைவருக்கு ரூ. 5·40—அதாவது இரண்டு பேருக்கு வித்தியாசம் 25 பைசா. இந்த 25 பைசா வித்தியாசத்தில் என்ன வாரி வழங்கிட முடியும் என்று இந்த அரசு கருதுகிறது என்று எனக்குப் புரியவில்லை. 25 பைசா வித்தியாசத்தில் வேலை செய்பவர்களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் என்ன வித்தியாசத்தை உணவில் செய்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. அடுத்து, சைவம் அசைவம் என்று இருக்கிறது. வேலை செய்யும் கைதிகள் அசைவராக இருந்தால், ரூ. 5·35. வேலை செய்யும் கைதி சைவராக இருந்தால், ரூ. 5·65. என்னைக் கேட்டால், சைவ உணவை விட அசைவ உணவுதான் கொஞ்சம் கூடுதலான விலையில் இருக்கும்.

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர்: இந்த விவாதம் முடிகிறவரை அவைக் கூட்டம் நீடிக்கப்படுகிறது,

[பிற்பகல் 1-30]

திரு. கோ. சி. மணி: சைவ உணவைவிட, அசைவ உணவுதான் விலை அதிகமாக இருக்கும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அதுதான் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. சிறைச்சாலையிலே அனுமதித்திருக்கின்ற சைவ உணவின் விலையைவிட அசைவ உணவின் விலை குறைவாக இருக்கிறது. அசைவ உணவு என்பது முட்டை கொடுப்பது, இறைச்சி கொடுப்பது, வாரத்தில் ஒரு நாள் சத்துணவு கொடுப்பது. பி கிளாசுக்கு அது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவர்கள் இவைகளைப் பெறுவதாகத் தெரியவில்லை. இப்படி வகைகள் பிரித்துக் கொடுப்பது எந்த அடிப்படையிலே வருகிறது? இது உள்ளபடியே அதிகச் செலவு கணக்குக் காட்டுவதற்காகச் செய்யப்படுகிறது என்று நினைக்கிறேன். அந்தக் கணக்குகள் எல்லாம் சரியாக எடுக்கப்படுகின்றனவா? எந்தப் புள்ளிவிவரத்தின் அடிப்படையில் சைவம் ரூ. 5.65, அசைவம் ரூ. 5.35 என்றெல்லாம் விலை நிர்ணயித்திருக்கிறார்கள்? இதற்கான விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, எடுத்துச் சொல்வார்கள் என்று நம்புகிறேன். இது குறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அசைவம், சைவம் என்ற இரண்டுக்கும்

இருக்கின்ற வேறுபாடு அதிகமாக இல்லை, விலை மட்டும் அசைவத்திற்குக் குறைவாக இருக்கிறது. ஏட்டிலே ஒரு பிரிவு படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காகப் போடப்பட்டிருக்கிறது என்பதுதான் என் எண்ணம். நடைமுறையில் அசைவ, சைவ உணவுகளுக்கு சரியான முறையில் விலைகள் நிர்ணயிக்கவில்லை. நடைமுறைப்படுத்துவது சரியாக இருக்குமானால், இந்த 25 நயா பைசா, 30 நயா பைசா விலை வித்தியாசம் காட்டியிருப்பது சரியல்ல என்றுதான் சொல்ல வேண்டும். எதையோ குறைத்து, எதையோ கழித்து, எந்த ஒரு கணக்கையோ போட்டு, சிறைச் சாலையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசு பரிசீலித்தும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறையில் ஆயுட் கைதிகள் 3 ஆண்டு தண்டனை பெற்றவர்கள் பரோலில் வருவதற்கு ரொம்ப கஷ்டப்படுகின்றார்கள். அப்படி வெளியில் வருவதற்கு அவர்கள் வைத்திருக்கின்ற சட்ட திட்டங்கள் மிகக் கடுமையானவையாக இருக்கின்றன. சிறைச் சாலையிலே இருக்கின்ற கைதிகள் அதற்கு வேண்டிய மனுக்களை, பத்திரங்களை எல்லாம் சட்டப்படி என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் எழுதிக் கொடுக்கின்றார்கள். அப்படியெல்லாம் செய்த பிறகும்கூட, அவர்கள் பரோலில் வருவது என்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கின்றது. அப்படி பரோலில் வருவதற்கு என்று சட்டங்கள் இருக்கின்றன. அதன்படி அவர்கள் மனு எழுதி அனுப்பி, போலீஸ் அதிகாரிகளுக்கு அதற்கான சான்றிதழ்களைக் கொடுத்தும், அதற்குத் தக்க காரணங்களையெல்லாம் அறுதியிட்டுக் கூறியும், அதற்குத் தகுந்த அத்தாட்சிகளையெல்லாம் வழங்கியும்கூட, அவர்கள் பரோலில் வருவது என்பது மிகக் கடினமானதாக இருக்கிறது. அதிலே எவ்வளவு காரியங்கள் செய்ய முடியாதோ, அவைகளைச் செய்து சட்டப்படி கொடுத்தாலும்கூட, பரோல் பெறுவது மிகக் கடினமானதாக இருக்கின்றது. பரோலில் வருபவர்கள் யார் யார் என்று கணக்கெடுத்துப் பார்த்தால், அரசியல் செல்வாக்கு உடையவர்கள், பணம் உள்ளவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் அடிக்கடி பரோலில் வருகின்றார்கள். விதிகளில் பல தரப்பட்ட தடைகள் இருக்கின்றன. இருந்தாலும், அவர்கள் அடிக்கடி பரோலில் வருகின்றார்கள். ஆண்டுக்கு ஒரு முறை, 6 மாதத்திற்கு ஒரு முறை வரலாம். சிலநேரங்களில் விதிமுறைகள் இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட தகுதி படைத்தவர்கள்கூட வரமுடியாமல் சிறையில் இருக்கின்றார்கள். அவசரக் காரணங்களுக்காகக்கூட அவர்கள் பரோலில் வர முடிவதில்லை. அது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிகாரிகள் வேகமாகச் செயல்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகாரிகளிடத்தில் மனு கொடுத்தால், அவர்கள் அதைக் காலம் கழித்துத்தான் அனுப்புகிறார்கள். சில பேருக்கு அனுப்பு

கிறார்கள். சில பேருக்கு அனுப்புவதில்லை. அதுவும் ரொம்ப காலம் கழித்துத்தான் அனுப்புகிறார்கள். இங்கு அனுப்பாமல் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். காலம் கழித்து அனுப்புகிறார்கள். ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் செய்துவிடுகின்றார்கள். இப்படிச் செய்வதால் வாய்ப்பு வசதி பெற்றவர்களுக்குக்கூட, பரோல் கிடைப்பது காலம் கடத்தப் படுகிறது. இது எல்லாம் எந்த சர்க்கார் காலத்தில் என்பது பற்றி, கேட்க வேண்டாம். ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சர்க்கார் சொல்கின்றபோது, சிறையிலே அந்தமாதிரிப் பாகுபாடுகள் இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கே இந்தமாதிரி இருக்கின்ற பாகுபாடு, பொருளாதார காரணங்களினால், கைதிகள், குற்றங்கள் செய்து காவல் துறையினால் கைதிகளாக ஆக்கப்பட்டவர்கள், தண்டனை பெற்றவர்கள், வெளியே வரும்போது, அவர்களிடம் எந்தவிதமான சீர்திருத்தத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்களை நாம் சந்திக்கின்ற சூழ்நிலை வரும்போது, அவர்கள் குற்றங்களுக்குச் சொந்தக்காரர்களாகத்தான் வெளியே வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறைகளில் உள்ள சங்கடங்கள் எனக்கும் தெரியும். இத்தனை வருடங்கள் கழித்துவிட்டால், அதற்குப் பிறகு கைதிகள் பரோலில் வரலாம் என்று சட்ட திட்டங்கள் இருந்தால், அவர்கள் தகுதி, நன்னடத்தை அறிந்து சாமான்ய குடும்பத்தைச் சேர்ந்த அந்தக் கைதிகளை பரோலில் விட்டு அவர்கள் குடும்பத்தினரைப் பார்த்துப் பேசுவதற்கு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிறை சீர்திருத்தக் குழுவில் போலீஸ் இலாக்காவினர் அவசியம் தானா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தானே சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள். குற்றம் செய்தோ, குற்றம் செய்யாமலோ, நிரூபிக்கப்பட்டோ, நிரூபிக்கப்படாமலோ, நிரபராதியோ, குற்றவாளியோ, நீதி மன்றத்தில் வழக்காடி, நீதிபதி தீர்ப்பளித்து அனுப்புகிறார்கள். காவல் துறையினரால் அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். சிறைக்கு அனுப்புகின்ற அவர்களே, அந்தக் குழுவில் இருந்து சீர்திருத்தம் செய்வதற்கு என்ன இருக்கின்றது? காவல் துறையில் இருப்பவர்கள், வெளியில் பார்த்துக்கொள்ளலாம். ஜெயிலிலே ஜெயிலர்கள் இருக்கின்றார்கள். அஸிஸ்டெண்ட் சூப்பிரண்டெண்டெண்ட் இருக்கின்றார், டெபுடி சூப்பிரண்டெண்டெண்ட், சூப்பிரண்டெண்டெண்ட் என்று இவ்வளவு பேர் இருக்கின்றார்கள். மேலும் மத்திய சிறைச்சாலையிலேயும் ஒரு தனிக் குழு இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் குழுவிற்குத் தலைமை வகிக்கின்றார். இவ்வளவு பேர் அங்கே இருக்கும்போது, போலீஸ் அதிகாரிகள் அங்கே போய் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அங்கு சென்று என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள்? அவர்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது? கோர்ட்டுக்குக் கொண்டு வந்து வழக்கு நடத்தியபின், கைதிகளைச் சிறைக்கு அனுப்புவதோடு சரி. கைதிகளுக்கு இருக்கின்ற சொந்தங்கூட

[திரு. கோ. சி. மணி] [1978 மார்ச் 22

காவல் துறையினருக்கு இல்லை. அவர்கள் கைதிகளைக் கொண்டு வந்து சிறைச்சாலைக்குள்ளே விடவேண்டியது. சிறை அதிகாரிகள் கைதியைப் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு அக்னாலெட்ஜ் மெண்ட் கொடுக்க வேண்டும். கைதிகளைப் போலீஸ் அதிகாரி களிடமிருந்து பெற்றுக்கொண்ட பிறகு, அவர்கள் கைதிகளுக்கு இந்த இந்த மச்சம் இருக்கின்றதா, அவன் தானா, அவர்களின் மார்பு அளவு இத்தனை அகலம் இருக்கிறதா, அவர்கள் உயரம் சரியாக இருக்கின்றதா என்பதையெல்லாம் கணக்கெடுத்து எழுதிக்கொள்வார்கள். போலீஸ் அதிகாரிகள் அதைப் பெற்றுக் கொண்டு போக வேண்டும். அவர்கள் வேலையை ஒப்படைப்ப தோடு சரி. ஒப்படைத்த பிறகு அக்னாலெட்ஜ்மெண்ட் பெற்றுக் கொள்கின்றார்கள். அதற்குப் பிறகு, சிறை சீர்திருத்தத்தைப்பற்றி இவர்களுக்கு என்ன இருக்கின்றது? யார் இவர்களிடத்தில் வந்து குறைகளைச் சொல்லப்போகின்றார்கள்? எதற்காக காவல் துறையினர் இதிலே இடம் பெற வேண்டும்? தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக சிறைச் சாலையில் பல ஆண்டு காலம் அரசியல் கைதிகளாக இருக்கின்ற வர்கள் அங்கு இருக்கின்றார்கள். அவர் எந்தக் கட்சியாக இருந் தாலும் பரவாயில்லை. அவர்களை இந்தக் குழுவிலே முக்கியமான வராக வைக்கலாம். இந்தக்குழு ஒரு சிறந்த குழுவாக இயங்கச் செய்ய வேண்டும். இதற்குத் தேவையான திட்டங்களை, சீர்திருத் தங்களைச் செய்வது என்று அரசு கருதினால், அப்படிப்பட்டவர் களை வைத்துச் செய்வதுதான் சாலச் சிறந்தது என்று இந்த அரசு கருத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறைச் சாலைகளில் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும். சிறைச்சாலை யில் கைதிகளுக்கு நோய் நொடிகள் வருவதற்குக் காரணம் இருக்கிறது. எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. தந்தை பெரியார் அவர்கள் சட்ட எரிப்புப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத்தில், திருச்சி மத்திய சிறையிலே ரொம்ப பேர்கள் இறந்து விட்டார்கள். அதற்குக் காரணம் காலரா நோய் அங்கு வந்தது தான். அங்கு காலரா நோய் வந்ததற்குக் காரணம், தண்ணீர் வசதி இல்லாததுதான் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள்கூட, 5 டம்ளர் 10 டம்ளர் என்று எண்ணிக்கையில் தண்ணீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருருந்திக்கின்றார்கள். பி வகுப்புக் கைதிகள் பல மாதங்களாகக் குளிக்காமல் இருந்திருக் கின்றார்கள். திருச்சி சிறைச்சாலையிலே தண்ணீருக்கே தட்டுப்பாடு இருக்கின்றது. குடிநீருக்கும் குளிப்பதற்கும் வசதியில்லை. அந்த வசதிகளை உண்டாக்கினால், நோய்வாய்ப் படுவதை, சீக்கு வருவதைத் தடுக்கலாம், குறைக்கலாம். நமது மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாக இதைச் செய்யவேண்டும் என்று நான் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 22] [திரு. கோ. சி. மணி]

போதிய கழிவறைகள் சிறைச்சாலைகளில் இல்லை. மலஜலம் கழிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடம் சிறைச்சாலைகளில் போதிய அளவு இல்லை. அங்கு 6, 7 அறைகள்தான் இருக்கின்றன. ஒரு குற்றவாளியாகப் போய்விட்டால், அவன் மனிதனே அல்ல என்று கருதப்படுகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக் கின்றது. அந்த 6,7 கழிவறைகளைத்தான் அவர்கள் உபயோகித்துக் கொள்ள வேண்டும். சாப்பிட்ட பிறகு அவர்களுக்கு ஒரு அரை மணி நேரம்தான் ஓய்வு கிடைக்கின்றது. வேலை முடிந்த பிறகு, அவர்களுக்குக் கிடைக்கின்ற நேரமும் மிகக் குறைவாக இருக் கின்றது. 6 மணிக்கு மூடவேண்டிய சிறைச்சாலையை ஐந்தே முக்காலுக்கே மூடிவிடுகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரத்திற்குள் எல்லாக் கடன்களையும் முடித்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓய்வு நேரம் முக்கால் மணிநேரம் தான் இருக்கும்.

(பிற்பகல் 1-40)

நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்கு திருச்சி சிறைச்சாலை யிலே ஏற்பட்ட அனுபவத்தை வைத்து, சேலம் சிறைச்சாலை யிலே எற்பட்ட அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். மற்ற சிறைகளுக்குப் போகவில்லை. அங்கே இப்படி இருக்கிறது. குடி தண்ணீர் வசதி, குளிக்க வசதி, அதிகமான கழிவறைகள் வசதி, அவைகளை சுத்தப்படுத்த தேவையான நடவடிக்கைகள் ஆகிய வற்றை மேற்கொண்டால், நோய் குறைந்துவிடும்; வைத்தியச் செலவு குறைந்துவிடுமென்று நிச்சயமாகச் சொல்வேன். ஒரு விஷயம், நான் கேட்டது உண்மையாக இருக்குமென்று கருது கிறேன். நான் 3, 4, மாதங்கள் சிறையில் இருந்தபோது, சாதாரண மருந்து வாங்கிச் சாப்பிட்டேன். வெளியிலே கிடைக்கும் மாத்திரைகள்தான். மாத்திரைகளில் இத்தனை தேதி வரை வீரியம் இருக்குமென்று எழுதி வைத்திருப்பார்கள். அந்தத் தேதி கழிந்துதான் அந்த மாத்திரைகள் அங்கே வருகின்றன என்று நினைக்கிறேன். வியாதிக்கும், மாத்திரைக்கும் சம்பந்தமில்லாத நிலைமை இருக்கிறது. எந்த வியாதியைச் சொன்னாலும், ஒரு பாட்டிலிலிருந்தே மருந்து கொடுக்கிறார்கள். இப்போதுகூட நடக்கிறது. அப்போது நடந்ததுதான், இப்போதும் நடக்கிறது. வியாதி என்று போனால், எல்லோரையும் உட்காரச் சொல்வார்கள். ஒரு கைதி மருந்து பாட்டிலைக் கொண்டு வருவார். வரிசையாக எல்லோரையும் உட்காரச் சொல்லி, வாயைத் திறக்கச் சொல்லி, வரிசையாக ஒரு கைதி ஊற்றிக்கொண்டே போவான். டம்ளரில் ஊற்றிக்கூடக் கொடுக்க மாட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னுமா அப்படி இருக்கிறது?

திரு. கோ. சி. மணி: இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்புகூட அந்த நடைமுறைதான். 'பி' கிளாசில் அப்படி இருக்கிறது. 'ஏ' கிளாசில் இருப்பவர்களுக்கு நன்றாக நடக்கிறது.

வருகிறார்கள், பார்க்கிறார்கள். 'பி' வகுப்பில்தான் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அறிக்கையிலே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். மாநிலத்திலேயுள்ள 8 மைய சிறைச்சாலைகளிலும் 12,121 கைதிகள் இருக்கலாமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருமுறை திருச்சி மத்திய சிறைச்சாலையிலே 8,000 பேர்கள் இருந்தார்கள். எமர்ஜென்சி நேரத்தில் மிசாக் கைதிகள், அதற்குப் பிறகு செக்ஷன் 151 போன்ற பல செக்ஷன்களின்கீழ் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று வருகிற கைதிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாளைக்கு 8,000 பேர்கள் இருந்தார்கள். இந்த மாநிலத்திலுள்ள அத்தனை சிறைச்சாலைகளிலும் 12 ஆயிரத்து சொச்சம் கைதிகள் இருக்கலாம். ஆனால் திருச்சி மைய சிறைச்சாலையிலேயே 8,000 பேர்கள் இருந்திருக்கிறார்கள். நான் சொல்வது பொய் என்றால், அவர்கள் எழுதியுள்ள செலவுக் கணக்கை வைத்துத் தெரிந்து கொள்ளலாம். செலவைக் குறைத்து எழுத முடியாது. அதைக் குறைக்க முடியாது. நான் இப்பொழுதும் சொல்கிறேன். எந்தத் தேதியில் வேண்டுமானாலும் பார்க்கலாம். இப்படிப்பட்ட நேரங்களில் தவிர்க்க முடியாதது தான். அதற்காக சிறைச்சாலையை மாற்றியமைக்க முடியாது. மற்றவற்றை மாற்றி அமைக்காவிட்டாலும், இட வசதியை அளிக்கலாம். உணவுப் பொருள்களைச் சேமித்து வையுங்கள், மருந்துகளை வாங்கி வையுங்கள் என்று சொல்லவில்லை. கழிவறை வசதி, குளிக்க வசதி, குடி தண்ணீர் வசதி, உறங்க வசதி இவைகளைச் செய்துவிட்டால், சிறைச்சாலைகள் சிறந்தவைகளாக இருக்குமென்று கருதுகிறேன். அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். மைய சிறைச்சாலைகளைவிட கிளை சிறைச்சாலைகள் மிகவும் நாதியற்றுக்கிடக்கின்றன. ஒரு மாதத்திற்கு மேல் தண்டனை இருந்தால்தான், மைய சிறைச்சாலைக்கு அனுப்புவார்கள். 15 நாட்கள் தண்டனை என்றால், கிளை சிறைச்சாலையில்தான் இருக்க வேண்டும். ஒரு வழக்கில் ஜாமீன் பெற்று வெளியே வரும் வரை கிளைச் சிறைச்சாலையில் வைக்கிறார்கள். அந்த சிறைச்சாலைகளின் நிலைமையைப் பார்க்கும்போது, ஜாமீனும் கேட்காமல், ரிமாண்டிலும் இல்லாமல் வழக்கையே ஒத்துக்கொண்டு, கொடுத்த தண்டனையை வாங்கிக்கொண்டு போகலாமா என்ற நிலை ஏற்படும். சப்-ஜெயிலில் இருப்பதே, அவர்கள் கொடுக்கிற தண்டனையைவிடக் கடுமையானதாக இருக்கும். சப்-ஜெயிலைப் பார்த்தால், தெரியும். ஒரு அதிகாரி வருகிறார் என்றால், என்னென்ன அந்த சிறைச்சாலையில் இருக்க வேண்டுமோ அவை அன்று மாத்திரம் இருக்கும். இன்ஸ்பெக்ஷன் வரும்போது இருக்கும். இதெல்லாம்கூட ஜெயிலில் உண்டா என்று எண்ணத் தோன்றும். பிளீச்சிங் பவுடர் போடுவார்கள், கூட்டுவார்கள், எல்லாம் செய்வார்கள். இப்படிப்பட்ட வசதிகளும் சிறைச்சாலைகளில் உண்டா என்று நினைக்கத் தோன்றும்.

இன்ஸ்பெக்ஷன் அதாரிட்டி வரும்போது, அவைகள் உண்டு என்று தெரிந்துகொள்ளலாம். மற்ற நாட்களில் அவைகளைப் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. சோற்றை ராத்திரி சமைத்து அடுத்த நாள் மத்தியானம் போடும் சூழ்நிலை தினமும் இருக்கிறது. பழைய சோறு நல்லது. சாப்பிடுவதில் தப்பே கிடையாது. அங்கே பக்குவமாக வைக்கமாட்டார்கள். உலகத்திலேயுள்ள ஈ பூராவும் அங்கே இருக்கும். ஈ மொய்த்த சோறு தின்ன முடியாது. அதை மூட துணி இருக்கிறது; அதைப் போட்டு மூட வேண்டும். கூடு மாதிரி கம்பி போட்ட மூடி இருக்கிறது. எல்லாம் ஸ்டாக் ரெஜிஸ்டரில் இருக்கிறது. ஆனால் சோறு மூடப்பட்டு வருகிறதா என்றால் வரவில்லை. இப்படிப்பட்ட சின்ன விஷயங்களையும் இங்கே சொன்னால்தான், நடக்கும் என்று நம்பிச் சொல்லுகிறோம். இதனால் பெரும் தீங்கு ஏற்படுகிறது. குறை சிறிதென்றாலும், தீங்கு பெரிது. அதனால்தான் இந்த அவையிலே சொல்கிறேன் என்று கூறி, நேரம் கடந்துவிட்டதென்பதால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: Hon. Deputy Chairman, Sir, I must first express my whole-hearted thanks to all the speakers who have participated in the discussion, particularly Thiruvalargal Thangapandian, Swaminathan, Manickam, Thirumathi Mandakini Krishnamurthi, Thiruvalargal D'Monte, Abdul Wahab, Pulamaipithan and K. S. Mani. It is already 12 minutes to two and I will try to cover as much of the ground as possible.

By and large, Thiruvalargal Thangapandian, Manickam and particularly K. S. Mani made a very fervent appeal about the need for reforming the unsatisfactory conditions in the jails, from their personal experience as well as from their personal observation. It is unnecessary for me to deal with every aspect of it. Now the Jail Reforms Commission has started its sittings and I would appeal to every Member of this House particularly those who have participated in this day's debate, to give their evidence so that it may have the official imprimatur as it were for its consideration and for the consideration of the Government, for the purpose of implementing the reforms so fervently desired by the hon. Members. I had some opportunity of visiting, both in 1952-53 and in later years, Amarar Anna in jails. I know what

(பிற்பகல் 1·50.)

amount of waiting I had to do at the Central Jail at Vellore. Even as a lawyer, as his lawyer, as a lawyer of his choice, I myself had to do at least 2 or 3 or 4 hours' waiting for getting an interview

and talking to him for about 2 to 5 minutes. Sometimes, I used to stand in the hot sun right under the trees even. That was my experience and I can very well enter into the spirit of what I call anguish and sympathy for the hon. Members who have expressed their difficulties in interviewing the under-trial prisoners or even the condemned prisoners and the other difficulties which they expressed in regard to the facilities for interviews.

There are so many aspects of the jail administration like dietary expenses, lifers and the difficulties in getting parole. Then there are the other aspects like insanitary conditions, want of, bathing facilities, want of drinking water facilities, want of even sleeping accommodation and the insanitary conditions where bugs rule supreme in the lodging rooms. All these aspects will certainly be looked into by this Government with a great sense of humanity and reformation. It may be remembered that these things have not come into existence just nine months back when this Government assumed charge. I think that some of these very unsatisfactory conditions to which the hon. Members have adverted are the legacies of the barbaric relics of the colonial and imperial past where jail life was equated with punishment and penal punishment at that. I apppreciate the viewpoint expressed by the hon. Member Thiru D' Monte that it must be looked at from the standpoint of reformatory zeal and not from the penal standpoint. The modern approach to criminology and the modern approach to punishment, from the standpoint of penologists, sociologists and reformers is to reform the criminal and rehabilitate him as much as possible so that he may be put back into his normal avocation and back into the community at large. It will be the endeavour of this Government to devise such ways and means as to rehabilitate the prisoner back into a normal citizen so that he may discharge his functions as an ordinary normal citizen with a sense of absolute self-respect in the community in which he lives.

Regarding the administration of justice, I am beholden to the hon. Member Thiru G. Swaminathan for having so picturesquely and so poignantly brought out the infirmities and the defects that are discovered in the free intercourse, the free social intercourse of the Judges moving among the service organisations and the members of the public. As he put it beautifully, they must be heard and not seen anywhere else except in

Courts. But, unfortunately, the tendency has gone so much and the tendency has grown up so much that people think that they need not now live in ivory towers and that they must move with the ordinary people in almost every evening function. The hon. Members Thiru Dikshidar and Thiru Manickam and remarkably Thiru G. Swaminathan have brought out the evils of what is called the approachability of these judges who mix so freely with the members of the public. I may tell you that justice not only must be done but must appear to be done. The Judge should not be seen to mix with any litigant or a friend of any litigant or with any person who is likely to have anything to do with a litigant. He must keep his judicial virtue absolutely pure and unsullied. He must have his reputation so greatly enhanced as to make his name a by-word for integrity. This should normally be the norm and standard that a Judge must follow and must practise. From this standpoint, the stand of Thiru Swaminathan is that there has been a distinct fall and he has given a number of instances about the expression of views in the manner in which he has stated and I would like to take out copies of the remraks and send them to the Union Ministers for Home as well as for Law and Justice so that a Code of Conduct and Ethics for Judges could be evolved.

Chief Justice Beg of the Supreme Court has delivered a judgement in connection with the contempt proceedings against the editor-in-Chief of the Indian Express for two articles published in the paper on December 15 and December 21, 1977 and the said judgement has been reported in "The Hindu" of 27th February 1978. In the course of that judgement, Justice Beg has laid emphasis on the need for evolving a Code of Judicial Ethics. It is stated in column 1 of "The Hindu' 'Judges of the Supreme Court, Mr. Justice Beg said, were not even aware of the confidential letter sent by him as Chief Justice of India to Chief Justices of the various High Courts suggesting *inter alia* a meeting to draft a code of ethics themselves or through a committee of Chief Justices so as to prevent 'possible lapses from the path of rectitude and propriety on the part of judges.' In another place, in column 2 of "The Hindu," it is stated thus;

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 மார்ச் 22

"Mr. Justice Beg said: 'Neither our Constitution nor our law could conceivably be infringed' if judges were to meet to devise means to prevent situations arising in which an accusing finger could be raised against the conduct of a judge whether inside or outside the court. Such code couldonly enhance their independence and prestige."

Therefore Thiru G. Swaminathan and the other hon. Members of this House struck a correct note, right note along with the Chief Justice Mr. Beg on the need to frame a code of Judicial Ethics for Judges and the need has been very remarkably and eloquently brought out by speakers like Thiru Swaminathan, Thiru Dikshidar and others. I would like to assure this House that some of the speeches of the hon. Members today will be duly forwarded to the respective Ministries of the Government of India for proper consideration.

Regarding the arrears in Courts and the suggestion for hvaing more Courts, I can tell you this much. As Chief Justice Khanna, in one of his articles in the "Illustrated Weekly of India" has stated, mere increase in the number of Judges will not result in the dissolution of the arrears of cases

(பிற்பகல் 2-00)

Every Judge must bend his energies, must devote himself and must think that he is rendering dedicated public service in adding an extraordinary amount of personal work and imparting zeal to the judicial work. Unless one does it, it will not be possible to dissolve these arrears of work. He must feel that he is not merely doing judicial service but he is doing dedicated public judicial service. It is with that zeal, with that momentum and with that personal pattern that he must do the work. Until it is done, I do not think that it will be possible for any good amount of progress to be made in the dissolution of these arrears. In fact, in one of the interviews with "The Hindu", I myself expressed the same view and, thank God, I think Justice Khanna, after a month, expressed almost the same view in the "Illustrated Weekly of India" and my view practically got reinforcement from the view of former Justice Khanna. I further said, "The more number of Judges you appoint, there may be a point of time when the Law of Diminishing Returns will be

1978 மார்ச் 22] [Thiru K. Narayanaswamy Mudaliar

operating". I used even that word. The more the number of Judges, the less may be even the disposal. That is the threatening prospect of lesser and lesser work being done by a greater and greater number of people being employed. So, the only factor of considerable importance is that every Judge must feel, "Well, I am a member of the public here; I am born in this country; Let me do my best for the country. Here is an avenue for public service; it is no doubt judicial service but it is as good as public service, let me do my very best far dissolving the arrears and do my best to the cause of justice". Unless one is inspired by such noble ideals, it may not be possible, by a mere increase in the number of Judges in Courts alone, to dissolve these arrears of cases.

I am also thankful to the hon. Member Thirumathi Mandakini Krishnamurthi for the suggestion made in regard to the constitution of the Honorary Presidency Magistrates. This standpoint will be considered in all its seriousness by this Government in due course of time and also in consultation with the Government of India.

Regarding the constitution of the Bench at Madurai and Tiruchirappalli, as I have told the hon. Members of the Legislative Assembly, the Government of India want to have the latest views of the Chief Justice and the High Court of Madras. We are awaiting the reply and it is only after the reply is received that we will be knowing the stand taken by the High Court and the Chief Justice of Madras. Until then, the matter is practically not quite open. It is still under consideration and the Government are not able, at present, to pass any opinion or to make any remark on the expected reply from the High Court of Madras.

In regard to the number of other suggestions made by the hon. Member Thiru Ko. Si. Mani, in respect of parole, diet, lifers and recommendations made by the Advisory Board probably without Police influence, I can assure the hon. Member that all these aspects will be considered duly by the Government. I would appeal to the hon. Member Thiru Ko. Si. Mani to give his first-rate experience as a prisoner in two jails before the Jail Reforms Commission also so that we may have the

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 மார்ச் 22

best of the evidence before the Commission from the hon. Member and the recommendations made by the Commission also thereupon.

Thank you.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஒரு பிரச்சினையைக் குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கூட அதைக் குறிப்பிட்டார்கள். உணவுப் பொருட்களின் தோராயமான மதிப்பீடு என்று 'ஏ' வகுப்புக் கைதிகளுக்கு வேலை செய்யும் கைதிகள் சைவமாக இருந்தால் ரூ, 5.65 என்றும், அசைவமாக இருந்தால் ரூ 5·35 என்றும் இருக்கிறது. வேலை செய்யாக் கைதிகளுக்கு சைவமாக இருந்தால் ரூ. 5.40 என்று இருக்கிறது. இந்தக் குறைபாட்டை கடந்த ஆண்டிலே கூட சுட்டிக்காட்டினேன். அப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். அதே குறைபாடு இந்த ஆண்டும் வந்திருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அதிகாரிகளின் கவனத்திற்கும் தெரிவித்தும் மீண்டும் இந்தத் தவறுகள் தொடர்ந்து நடப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: My recollection is: The various diets and the difference in cost were existing even before this Government assumed office. They were there for a long time, and anterior in point of time. This is the explanation. Vegetarians are given more milk and ghee. That is the reason why their diet costs more than what is allowed for non-vegetarians.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. நாளை காலை அவையின் கூட்டம் இல்லை. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 2-05)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

315. Notification issued with G.O. Ms. No. 164, Agriculture, dated the 3rd February 1978 relating to inclusion of ragi, ine addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of Dharmapuri Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

[1978 மார்ச் 22

316. Notification issued with G.O.Ms. No. 166, Agriculture, dated the 3rd February 1978 relating to inclusion of ragi in addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of regulated market, Krishnagiri. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

317. Notification issued with G.O.Ms. No. 1936, Commercial Taxes and Religious Endowments, dated the 24th November 1977 in regard to amendments to the Indian Stamp Rules, 1925. [Laid on the table of the House under section 75-A (2) of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899)].

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

* 106. Review of the Road Development Programme in Tamil Nadu, 1977-78 (Tamil).

* 107. Performance Budget on Highways and Rural Works Department for the year 1978-79 (Tamil).

** 108. Demand—Land Revenue (Tamil).

109. Policy Note on Jails, 1978-79 (English and Tamil).

110. Policy Note on Administration of Justice, 1978-79 (English and Tamil).

---

* Circulated to all M.L.Cs. on 20th March 1978.

* Circulated to all M.L.Cs on 21st March 1978.

1978 மார்ச் 22]

(156ம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக் குறிப்பைக் காண்க)

சிறைகள்

சிறைகள், ஒரு பார்ஸ்டல் பள்ளி ஆண்களுக்கான ஒரு பிற் காப்பு இல்லம் ஆகியவற்றின் நிர்வாகம், அமைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றை சிறைத்துறை கவனித்து வருகின்றது. சிறைத் தண்டனைப் பெற்றவர்களைச் சீர்திருத்தி அவர்கள் விடுதலையான பின்பு சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நல்ல குடிமக்களாக வாழும் வகையில் அமைத்துக்கொள்ள உதவுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

1. சிறைகளின் வகைப்பாடு

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப் பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) சிறப்புச் சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).

(3) கிளைச்சிறைகள்.

பொதுவாக, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தண்டனையை அடைந்தவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், வழக்க மாக குற்றம் செய்வோரும் மத்திய சிறைகளில் வைக்கப்படு கின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு மாதத்திற்குக் குறை வாக தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படு கின்றனர். சிறைக் கைதிகளில் வயது வந்தவர்கள், இளங் குற்ற வாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர் ; அது போன்று ஆண்களும் பெண்களும் பிரித்துத் தனித்தனிச் சிறைகளில் வைக்கப் படுகின்றனர். வாலாயமான கைதிகள் (Habitual prisoners) சேலத் திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளிலும், பெண் கைதி கள் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் வைக்கப்படு கின்றனர். இளங்குற்றவாளிகள் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். தற்காலிகமாக, மனநோய் குற்ற வாளிகள் சென்னை அரசாங்க மனநோய் மருத்துவமனையில் சேர்க் கப்படுகின்றனர். வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழு நோய் மற்றும் தொற்று நோய் குற்றவாளிகளுக்கென்று தனிச் சிறைக்கூடங்கள் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள வெவ்வேறு நிறுவனங்கள் பின்வருமாறு :—

(1) மத்திய சிறைகள்	8
(2) மாநில மகளிர் சிறை	1
(3) பார்ஸ்டல் பள்ளி	1
(4) சிறப்புக்கிளைச் சிறைகள்	3
(5) திறந்தவெளிச் சிறைகள்	2
(6) கிளைச்சிறைகள்—	
(அ) சிறைத் துறைத் தலைவரின் பொறுப்பில் உள்ளவை	10
(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பில் உள்ளவை	109

1978 மார்ச் 22]

மத்திய சிறைகளிலும் மற்றும் ஏனைய சிறைகளிலும் (கிளைச் சிறைகள் தவிர்த்து) 12,121 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது. கிளைச் சிறைகளில் 3,446 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது.

2. நிர்வாகம்

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பை காட்டும் விளக்கப்படம் ஒன்று பிற்சேர்க்கை 1-ல் இணைக்கப்பட்டுள்ளது.

பிற்சேர்க்கை இரண்டில் 1972-73-லிருந்து 1976-77 வரை சிறைத்துறையின் செலவினங்களும் வருவாயும் 1977-78-க்குரிய திருத்திய மதிப்பீடும், 1978-79-க்கு நிதி நிலை மதிப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. திறந்தவெளிச் சிறைகள்

தற்போது மாநிலத்தில் இரண்டு திறந்த வெளிச் சிறைகள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரில் உள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று கோவை மாவட்டத்திலுள்ள சிங்கா நல்லூரிலும் உள்ளன. இதைத்தவிர சேலம் மத்திய சிறையுடன் இணைந்த ஒரு திறந்த வெளிச் சிறை ஒன்று உள்ளது.

திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன—

(1) சாதாரணச் சிறைகளில் உள்ள இட நெருக்கடியை தவிர்ப்பது.

(2) கைதிகளுடைய எதிர்கால மறு வாழ்வுக்காக அவர்களுக்கு சரியான முறையில் விவசாயத்தில் பயிற்சி அளிப்பது.

(3) சிறைகளுக்குத் தேவைப்படும் வேளாண்மைப் பொருட் களை உற்பத்தி செய்து தன்னிறைவு காண்பது.

(4) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளுக்கு நம்பிக் கையின் பேரில் சிறிதளவு சுதந்திரம் அளிப்பது.

(5) குறைந்த அளவில் சிறைத் தண்டனையை செயல் படுத்த வேண்டும் எனும் கொள்கைக்கு ஆக்கமளிப்பது.

[1978 மார்ச் 22

ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகள் அமைப்பது குறித்து செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது—

(1) இராமனுதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கை அருகில் முத்துப்பட்டி.

(2) நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டி.

(3) தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் மாநில விதைப்பண்ணை.

(4) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வெங்கடமங்கலம்.

4. சிறைவாசிகளின் பாகுபாடும் அவர்களின் உரிமையும்

சிறைகளில் 'ஏ', 'பி' என்ற இரண்டு வகுப்புகளே உள்ளன. சமூக அந்தஸ்து, கல்வி மற்றும் உயர்தரமான வாழ்க்கையைக் கொண்ட கைதிகள் 'ஏ' வகுப்புக்குத் தகுதியுள்ளவர்கள். கீழ்த்தரமான குற்றம் புரிந்தவர்களும் தகாத நடத்தை உடையவர்களும் 'ஏ' வகுப்பில் வைக்கப்படமாட்டார்கள். முன் வரலாறு, நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாலாயமான கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு கொடுப்பது, அதுபற்றிப் பாகுபாடு செய்யும் அதிகாரமுடையவர்களின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கு விரோதமான குற்றம் புரிந்த கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு வழங்கப்படுவதில்லை. 'பி' வகுப்பில் அநேகமாக 'ஏ'வகுப்பிற்கு தகுதியற்ற சாதாரண கைதிகள் வைக்கப்படுகின்றனர்.

(அ) உணவு—

'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்படும் உணவு கீழ்க்கண்ட நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது, அவைகள்—

(1) வேலைசெய்யும் கைதிகள் .. சைவர்கள்.

(2) வேலைசெய்யாக் கைதிகள் .. சைவர்கள்.

(3) வேலைசெய்யும் கைதிகள் .. அசைவர்கள்.

(4) வேலைசெய்யாக் கைதிகள் .. அசைவர்கள்.

இந்தக் கைதிகள் பிஸ்கட், கோகோ, ஓவல்டின் மற்றும் உணவுக்கு பயன்படும் இதர பொருட்களையும், பழங்களையும் தங்கள் சொந்த செலவில் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறுர்கள். 'பி' வகுப்புக் கைதிகளுக்குச் சைவ உணவு குறித்த அளவு வழங்கப்படுகிறது. உணவின் அளவு வேலைசெய்வோர்களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் மாறுபடும் மருத்துவ அதிகாரி உடல் நலனை முன்னிட்டு இவ்வகைக் கைதிகளுக்கு முட்டை, கறி ஆகியவை வழங்குமாறு

1978 மார்ச் 22]

ஒவ்வொரு வகுப்பு குற்றவாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட வெவ்வேறு அளவுகளின்படி அவைகளின் மதிப்பு வேறுபடுகிறது. சிறைவாசிகளின் உணவுமுறை மதிப்புக்கு உச்ச வரம்பு இல்லை. எனினும், விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. உணவுப் பொருட்களின் அளவு நிரந்தரமானது எனினும், அந்தந்த நேரங்களிலுள்ள மார்க்கெட்டு நிலவரங்களுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டிய பொருட்களின் மொத்த மதிப்பீடு மாறுபடுகிறது.

பல்வேறு வகுப்பு சிறைவாசிகளுக்கும் நாளொன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு வழங்கப்பட வேண்டிய அளவுகளின்படி உணவு பொருட்களின் தோராயமான மதிப்பீடு கீழ்வருமாறு:—

	ரூ.	பை.
(1) 'ஏ' வகுப்புக் கைதிகள்—		
வேலை செய்யும் கைதிகள்—சைவர் ..	5	65
வேலை செய்யாக் கைதிகள்—சைவர் ..	5	40
வேலை செய்யும் கைதிகள்—அசைவர் ..	5	35
வேலை செய்யாக் கைதிகள்—அசைவர் ..	4	60
(2) 'பி' வகுப்புக் கைதிகள்—		
சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	2	80
ஓரளவு சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	2	70

சத்துணவுத் திட்டம் (Nutritious Diet Scheme)

1971-ம் ஆண்டில் 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் 'கலோரி' மதிப்பினை அதிகப்படுத்த வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதன் முதலாக சென்னை மத்திய சிறையில் செயல்படுத்தப்பட்டது. பின்பு மதுரை, கோவை மத்திய சிறைகளுக்கும் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விஸ்தரிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி இச்சிறைகளில் காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக மூன்று நாட்களுக்கு இட்லியும் மீதி நான்கு நாட்களுக்கு புட்டும், மாலை வேளைகளில் கடலை சுண்டலுக்கு பதிலாக வேர்க்கடலையும் கொடுக்கப்படுகின்றது.

ஓரளவு சத்துணவுத் திட்டம் (Partly-Nutritious-diet Scheme)

1975-76-ம் ஆண்டு அமுலுக்கு வந்த இத்திட்டத்தின்படி 'பி' வகுப்புக் கைதிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக மூன்று நாட்களுக்கு இட்லியும் நான்கு நாட்களுக்குப் புட்டும் வழங்கப்படுகிறது. மாலை வேளைகளில் கடலை சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மற்ற மத்திய சிறைகளிலும் வேலூர் மாநில மகளிர் சிறையிலும் செயல்பட்டு வருகிறது.

எல்லா மத்திய சிறைகளிலும் மாநில மகளிர் சிறையிலும் உள்ள அனைத்து 'பி' வகுப்புக் கைதிகளுக்கும் ஒரே மாதிரியான உணவு முறையை கொண்டு வருவதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) உடைகளும் படுக்கையும் :

'ஏ' வகுப்புக்கைதிகள் தங்களுடைய சொந்த படுக்கையைப் பயன்படுத்தவும் வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் தங்களுடைய சொந்த உடைகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணிய வேண்டும் உறவினர்களைச் சந்திக்கும் நேரங்களில் 'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்த உடையை அணிய அனுமதிக்கப் படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகள் சிறை ஆடைகளையே அணிதல் வேண்டும்.

(இ) சோப்பும் மற்றும் வாசனைப்பொருட்களும் :

கைதிகள் அனைவரும் சோப்பு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெய் (hair oil) மற்றும் எண்ணெய் ஆகியவைகளை தங்களுடைய சொந்த செலவில் வாங்கி பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள், மாதத்திற்கு ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் ஒரு அவுன்சு (28 கிராம்) எண்ணெய் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு கைதிக்கும் ஒன்றரை அவுன்சு (42 கிராம்) சீயக்காய்த்தூளும், 370 கிராம் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்தியச் சிறையில் உள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்கு குளிப்பதற்காக மாதத்திற்கு ஒரு முறை 2 அவுன்சு (56 கிராம்) எண்ணெய் கொடுக்கப்படுகிறது: நன்னடத்தை உள்ள, தகுதியுள்ள எல்லா வகுப்பு கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பொருட்கள் சிறை உயர் அதிகாரி ஒருவரால் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே கைதிகளுக்கு வழங்கப்படுகிறது,

(ஈ) சந்திப்பும் கடிதத் தொடர்பும் :

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதவும், பெறவும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி சந்திக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு

கைதிகள் மாதந்திற்கு 2 கடிதங்கள் எழுதவும், பெறவும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி நேரம் சந்திக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(உ) நாளிதழ்களும் சஞ்சிகைகளும் :

தற்போது 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன:—

(1) தினமணி (2) சுதேசமித்திரன் (3) நவசக்தி (சுதேசமித்திரன் தற்போது வெளியிடப்படுவதில்லை) நாளிதழ்கள் 100 கைதிகளுக்கு ஒரு பிரதி என்ற விகிதத்தில் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட நாளிதழ்களைத் தங்களது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள 'ஏ' வகுப்பு கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சிறை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட நூலகங்களிலிருந்து புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக்கல்வி இயக்குநருடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்ட புத்தகப் பட்டியல் ஒன்று எல்லாச் சிறைக் கண்காணிப்பாளர்களின் பார்வைக்கும் அனுப்பப்படுகிறது. புத்தகப் பட்டியலிலுள்ள புத்தகங்கள் யாதேனும் தேவைப்பட்டால் அவைகளை வாங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது

(ஊ) இதர சலுகைகள்.

'ஏ' வகுப்புக் கைதிகள் மரச்சாமான்கள். கொசுவலை மற்றும் புகையிலை, சமையல் செய்யவும் சாப்பிடவும் தேவைப்படும் பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைக் கண்காணிப்பாளரின் முடிவுக்கிணங்க மருத்துவ ஆலோசனையின் பேரிலும் இதற்கு முன் சிறைத் தண்டனை அடைந்திராத வழக்கமாகக் குற்றம் செய்தவராக இராத கைதிகள் சிறைக் கண்காணிப்பாளரது முடிவுப்படி சிறையின் மருத்துவ மனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லா மத்திய சிறையிலுள்ள கைதிகளும் ஞாயிற்றுக்கிழமையிலும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் கைப்பந்து, பூப்பந்து, கபடி ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூர் மாநில மகளிர் சிறைவாசிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்;

5, கைதிகளின் தொழிலும் சிறைகளில் தொழிற்சாலைகளும்:—

சிறைகளில் தொழில் அனுமதிக்கப்படுவதின் முக்கிய நோக்கம் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களின் புதுவாழ்வுக்கு உதவுவதே ஆகும். எனவே, பயனில்லாத, உற்பத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. எல்லா சிறை வேலைகளும், கடினம், நடுத்தரம், சுலபம் என்று மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மருத்துவ அதிகாரியின் ஆலோசனைப்படி கைதிக்குரிய வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல், நெசவு,

சாயம்தோய்த்தல், கட்டிடவேலை, கருமார் வேலை, தோல் தொழில், புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல் ஆகிய தொழில்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவுடன் கூடிய நூற்பாலை ஒன்று இருக்கிறது.

கூடுமானவரையில் கைதிகள் சிறைக்கு வரும்முன்னதாக எந்தெந்தத் தொழில்கள் செய்து வந்தார்களோ அத்தொழில்களே கொடுக்கப்படுகின்றன. தொற்று நோய்க்காக ஒதுக்கப்படும்போது கைதிகளுக்கு கொடுக்கப்படும் வேலை, கல்வி, பயிற்சி ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்காக சிறையின் கண்காணிப்பாளர் மூத்த உதவி மருத்துவ அலுவலர், மற்றும் ஜெயிலர் (Jailor) ஆகியோரைக் கொண்ட ''பாகுபாட்டுக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள அச்சுக் கூடத்தில் தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கைதி தன்னுடைய வேலையில் மாற்றம் வேண்டினால் அது குறித்து அந்தச்சிறைக் கண்காணிப்பாளரிடம் விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுச் செய்து முடிக்கப்படும் வேலை உரிய தரமுடையதாகவும், வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேலும் வருவாய் உள்ளதாகவும் இருந்தால் கீழ்க்கண்ட விதங்களில் அத்தகைய வேலைகளுக்குப் பணிகொடை வழங்கப்படுகிறது.

	பணிக்கொடை விகிதம். ரூ.	காசு.	(ஒரு மாதத்திற்கு)
1. கைதி	0	25	,,
2. கைதி (இரவுக் காவலர்)	0	50	,,
3. கைதி (வேலைமேற்பார்வையாளர்),	1	00	,,
4, . கைதி (வார்டர்)	2	00	,,

ஊதியம் வழங்கும் திட்டமானது சேலம் மத்திய சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வழங்கப்ப்டும் ஊதிய விகிதங்களாவன :

	ரூ.	காசு.	(ஒரு நாளைக்கு)
1. தேர்ச்சி பெற்ற வேலையாள்	0	40	,,
2. ஓரளவு தேர்ச்சிப் பெற்ற வேலையாள்.	0	20	,,
3. தேர்ச்சி பெறாத வேலையாள்	0	10	,,

இத்திட்டத்தை மற்ற மத்திய சிறைகளிலும் செயல்படுத்தும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

6. மருத்துவ சுகாதார எற்பாடுகள்—

ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும், வேலூரில் உள்ள மாநில
மகளிர் சிறையிலும், பல்லாவரத்தில் உள்ள ஆண்கள் பிற்காப்பு
இல்லத்திலும் ஒரு மருத்துவமனை உள்ளது. ஒவ்வொரு மத்திய
சிறைசாலையிலும் ஒரு மருத்துவ அதிகாரியும்அவருக்கு உதவி செய்ய
உதவி மருத்துவர்களும், மருந்தாளுநரும் உள்ளனர். பல்லாவரத்
திலுள்ள ஆண்களுக்கான பிற்காப்பு இல்லத்தில் முழு நேர மருந்
தாளுநரும், பகுதி நேர மருத்துவ அதிகாரியும் உள்ளனர். கைதி
களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. கைதிகளுக்கு
அவர்களின் பாகுபாட்டின்படியும் அவர்களுக்கு வழங்கப்படும்
சிகிச்சையின் பொருட்டும் அவர்களுடைய சொந்த செலவிலோ
அல்லது அரசாங்க செலவிலோ பல் வைத்தியம் செய்யப்படுகிறது.
சென்னை மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட பல் மருத்துவர்
வாரத்திற்கு இருமுறை கைதிகளைப் பார்வையிடுகிறார். வேலூர்
திருச்சி மத்திய சிறைச்சாலைகளில் உள்ள தனிக்கூடங்களில் தொழு
நோயால் பாதிக்கப்பட்ட கைதிகள் தனியாக வைக்கப்படுகின்ற
னர். மனநோய்க் குற்றவாளிகள் சென்னை மன நோய் மருத்துவ
மனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

7. கைதிகளுக்குக் கல்வி—

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய நிலையில் இருக்கும் கைதி
களுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய
சிறைச்சாலையிலும் முழுமையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்
கொண்ட தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. சில குறிப்பிட்ட
சிறைச்சாலைகளில் முதியோர் கல்வியில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்
களைக் கொண்டு முதியோர் கல்வித் திட்டம் நவீன முறையில்
நடத்தப்படுகிறது. கைதிகள் விளக்கு வசதி உள்ள சிறைசாலை
களில் இரவு 9 மணி வரை படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.
விளக்கு வசதி இல்லாத சிறைசாலைகளில் அவ்வசதியை ஏற்படுத்த
முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளின் நன்மையைக்
கருதியும், சிறைச்சாலையில் கல்வியை மேம்படுத்தவும் சிறை கண்
காணிப்பாளர்கள் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரி
யர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்துச் சிறைவிடுமுறை
நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் அரசியல் சம்பந்தப்
படாத விஷயங்களில் உரையாற்றுமாறு ஏற்பாடு செய்கிறார்கள்.
கைதிகள் பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு நடத்தும் தேர்வு
களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். புத்தகம்,
தேர்வுக்கட்டணம் மற்றும் இதனைச் சார்ந்த எல்லாச் செலவுகளை
யும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் முதல்முறை
தேர்வில் தேர்ச்சி பெறா விட்டாலும் மேலும் இருமுறை தேர்விற்கு
அரசாங்க செலவிலேயே அனுமதிக்கப்படுகின்றனர்,

மத சம்பந்தமான போதனைகளும், ஒழுக்க நீதி போதனைகளும்
அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் அந்த விரிவுரைகளும், விளக்கவுரை
களும் ஆற்றுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் வேறு மதங்களை
சார்ந்தவர்களைத் தம் மதத்திற்கு மாற்ற முயற்சிக்கக் கூடாது.

1978 மார்ச் 22]

என்றும், தமது சமயத்தைச் சார்ந்தவர்கள் மீது மட்டுமே நாட்டம் செலுத்த வேண்டும் என்றும் நிபந்தனையோடுதான் அனுமதிக்கப்படுகின்றனர்; அறநெறி சம்பந்தமான விரிவுரை ஆற்றுவதற்காக தமிழ் அறிஞர்கள் அழைக்கப்படுகின்றனர்.

8. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை—

இளம் வயது குற்றவாளிகள் (18 வயதுக்கு மேல் 23 வயதிற்குள்) பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை,

(உ) விவசாயம்.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பேண்ட் வாத்தியக் கருவிகள் இசைக்கும் பயிற்சி;

(ஐ) வீட்டு வேலைகள்—சமையல் வேலை போன்றவை.

பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு மேற்படி தொழில் பயிற்சி நிலையங்களிலிருந்து அவர்கள் பிற்காலத்தில் வேலையில் அமர்வதற்கு வசதியாக சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 405 இருக்கும். பார்ஸ்டல் பள்ளியில் தற்போது சராசரியாக 200 மாணவர்கள் உள்ளனர். அங்குள்ள துயிற்கூடம் ஒன்று வயது வந்த இளங்குற்றவாளிகள் (23 முதல் 25 வயது வரை) தங்குவதற்கான நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. வயது வந்த இளங்குற்றவாளிகள் அங்கு 25 வயது வரும் வரை வைக்கப்படுகின்றனர். அந்த துயிற்கூடம் ''சிறைச்சாலை சட்டத்தின்படிக்கான சிறைச்சாலை'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் விடுதலையாகி வரும்போது ரொக்கமாக வழங்காமல் இயந்திரங்களும் பசு மாடு அல்லது எருமை மாடும் வாங்கித்தந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. அவர்கள் மறுவாழ்வு பெற உதவும் பொருட்டு அவர்கட்கு அளிக்கப்பட்ட நிதி உதவி அவர்களிடமிருந்து சுலப தவணையில் வசூலிக்கப்படும்.

1978 மார்ச் 22]

9. ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்—

பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களிலிருந்தும் சீர்திருத்தம் அல்லாத நிறுவனங்களிலிருந்தும் வெளிவருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு தச்சுவேலை, உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதப் பயிற்சிகளினால் அவர்கள் ஒரு நிலையான வாழ்க்கையில் அமர்ந்து தங்களை நேர்மையான சட்டத்திற்குட்பட்ட குடிமக்களாக ஆக்கிக்கொள்ள முடியும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முதல் ஆண்டில் நாளொன்றுக்கு ரூ. 1·50 வீதமும் மறுவருடம் நாளொன்றுக்கு ரூ. 2 உதவித் தொகையும் மற்றும் இலவச உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு தொழிற் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடதிட்டங்களின்படி பிற்காப்பு இல்லத்தில் உள்ள நிலைமைக்கும், வசதிக்கும் ஏற்றார்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது, வயது வந்த ஆண்கள் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 100 என்றாலும் இவ்வில்லத்தில் சராசரியாக 40 பேர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வில்லத்தில் தச்சுவேலை, தையல் வேலை, உலோக வேலை ஆகிய மூன்று தொழிற் பிரிவுகள் உள்ளன.

10. சிறைப்பார்வையாளர்கள் —

பணிச்சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, பணிச்சார்பில்லாத பார்வையாளர்களையும் அரசு நியமிக்கிறது. நீதி, மருத்துவம், சுகாதாரம், தொழில் மற்றும் தியணைக்கும் துறைகளில் பணியாற்றுகிறவர்கள், பணிச்சார்புள்ள பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். பொதுமக்களில் புகழ் பெற்றவர்கள் குறிப்பாக கைதிகளுக்காகப் பணிசெய்யும் மனப்பான்மையுடையவர்களும், மனநோய் நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும், சமூக சேவையாளர்களும் விடுதலை பெற்ற கைதிகளின் சகாய சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்களும் குற்றவாளிகளின் நல்வாழ்வில் அக்கறை உள்ளவர்களும் பார்வையாளர்களாக சாதாரணமாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் பணியாதெனில் சிறை விதிகள் சரியாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதும் சிறைவாசிகளின் குறைபாடுகளைக் கேட்டறிவதும் மற்றும் சிறையின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதும் ஆகும். இவர்களுடைய பதவிக் காலம் இரண்டாண்டுகளாகும்.

11 கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்தல்—

மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் கலந்தாலோசித்து கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்வது வழக்கமாக இருந்து வந்தது. காவல்துறை அதிகாரி

கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு குறிப்புரைகளை அனுப்புவார்கள். இக்குறிப்புகளின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு தங்கள் பரிந்துரைகளை அனுப்புவார்கள். இவ்வாறு இரண்டு வழிமுறைகள் மூலம் குறிப்புகள் வரப் பெற காலதாமதமாவதை தவிர்க்க காவல்துறை அதிகாரிகளை நேரிடையாக அரசுக்கு குறிப்புகள் அனுப்பலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகளின் குறிப்புகளின் பேரில் கைதிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு வருகின்றது.

12. தண்டனைக் குறைப்பு—

கைதிகள் நன்னடத்தையில் இருக்க ஊக்குவிக்கவும், நன்கு வேலை செய்யவும், தங்களுடைய குற்றம் செய்யும் மனப் போக்கை மாற்றிக் கொள்ளவும், பலவிதமான தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் கைதிகளின் நன்னடத்தைக்காகவும் மாதத்திற்கு இரண்டு நாட்கள் அவர்கள் செய்யும் வேலைக்காகவும் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. இவ்விதிகளின்படி கிடைக்கப்பட்ட தண்டனைக் குறைப்புடன், ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சிறைகளில் சமையற்கூடங்களில் வேலை செய்யும் கைதிகளுக்கும் துப்புரவுப்பணி செய்யும் கைதிகளுக்கும் மூன்று மாதத்திற்கு 3 நாட்கள் கூடுதலாகத் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கைதிக் காவலர்களுக்கு மாதத்தில் 8 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. சிறை ஒழுக்கத்தையும் விதிமுறைகளையும் பராமரித்து வரும் கைதிகளுக்கு ஆண்டிற்கு 30 நாட்கள் சிறப்பு தண்டனைக் குறைப்பு சிறை கண்காணிப்பாளரால் வழங்கப்படுகிறது. மிகச் சிறப்பாக பணிபுரிவோருக்கு சிறைத்துறைத் தலைவரால் அல்லது அரசால் 60 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் கைதிகளுக்கு அதிகபட்சம் ஒரு ஆண்டு தண்டனைக் குறைப்பும், இரத்ததானம் செய்யும் கைதிகளுக்கு 10 முதல் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவைகளைத் தவிர, ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளுக்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளின் நினைவாகச் சிறப்பு தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.—

		தண்டனைக் குறைப்பு.
(1)	உலகத்தமிழ் மாநாடு	ஒரு ஆண்டு.
(2)	காந்தி நூற்றாண்டு விழா ..	ஒரு ஆண்டு.
(3)	இந்திய சுதந்திர வெள்ளி விழா ..	ஒன்றரை ஆண்டு.

(4)	முன்னாள் முதல்வர் மறைந்த திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 60ஆம் பிறந்த நாள் விழா.	ஆறு மாதங்கள்.

மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற கைதிகளை காலக்கெடுவுக்கு முன் விடுதலை செய்வது குறித்து கைதிகளின் தண்டனைக் குறைப்பு உள்பட மூன்றில் இரண்டு பங்கு தண்டனையைக் கழித்த பின்பு, ஆலோசனைக்குழு பரிசீலிக்கிறது. ஆலோசனைக் குழு பிரிவு 432 கி.பு.கோ. 1973-ன் படி காலக்கெடுவுக்கு முன் விடுதலை செய்வதுபற்றி பரிந்துரை செய்ய கைதிகளின் முந்தைய பதிவுகளையும், நன்னடத்தை அலுவலர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைகள் ஆகியவைகளை விடுதலை செய்வதற்குமுன் கருத்திற்கொள்கிறது. முதல் தடவையாக தண்டனை பெற்ற 65 வயதிற்கு மேற்பட்ட ஆண் கைதிகளின் நிலைமையையும் 55 வயதிற்கு மேற்பட்ட பெண் கைதிகளின் நிலைமையையும் அவர்களின் தண்டனைக் குறைப்பும் சேர்த்து 2½ ஆண்டு தண்டனை அனுபவித்திருந்தால் ஆலோசனைக் குழுவினால் முன்னதாக விடுதலை செய்யப்படுவதற்காக பரிசீலிக்கப்படுகிறது.

மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு தமிழ் நாட்டு சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனைக் கைதி முழுமையாக 14 வருடம் தண்டனை அனுபவித்திருந்தால், அவர்களுக்கு முன் விடுதலை அளிப்பது குறித்து பரிசீலனை செய்ய ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம். 6—2—1970 அன்று வரை சிறைப்படுத்தப்பட்ட மற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்து, அவர்கள் 9½ ஆண்டுக் காலம் முழுமையாக சிறையில் கழித்தவுடன் அவர்களுடைய முன் விடுதலை பரிசீலனைக்காக ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம். 6—2—1970-க்குப் பின்னால் சிறைப்படுத்தப்பட்ட மற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்து அவர்களுடைய தண்டனையில், தண்டனைக் குறைப்பையும் சேர்த்து 2/3 பாகம் கழித்திருந்தால், ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம்.

மாறுபட்ட அமைப்பு வழி முறைகள்படி, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி மாணவர்களை முன்னதாக விடுதலை செய்வது மரபாக இருந்து வருகிறது. இம்மரபு "உரிமத்தின் மீது விடுதலை செய்வது அல்லது வெளியே அனுப்புவது" என்று அழைக்கப்படுவதுண்டு.

இந்தப் பள்ளி மாணவர்களைப் பொறுத்தமட்டில், இச்சட்டத்தின் 15-வது பிரிவு, (1) உட்பிரிவின்படி, மாணவர்களை விடுதலை செய்ய பரிந்துரைக்க கண்காணிப்பாளர் கருதினால் குழுவின் ஒவ்வொரு கூட்டமும் கூடுவதற்கு முன் 6 வாரத்திற்கு குறையாத அளவில், அத்தகைய மாணவர்களின்

பெயர்களை, கிராமங்களாய் இருப்பின் மாவட்டத்தின் நன்னடத்தை அலுவலருக்கும், சென்னை நகரமாய் இருப்பின் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், அனுப்ப வேண்டும். அவர்கள் மேற்கொண்ட தொழிற் பயிற்சி, அவர் களுக்குப் பொருத்தமான பணிவகைகள் ஆகிய விவரங்களை, அவர்களை விசாரணை செய்ய ஏதுவாக இருக்கும் பொருட்டு அனுப்ப வேண்டும். பார்வையிடவரும் குழுவின் முன், நன்னடத்தை அலுவலர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப் பாளர் இவர்களிடமிருந்து பெற்ற தகவல்களை வைக்க வேண்டும். அவ்வாறு உரிமத்தின் மீது விடுதலை செய்யத் தகுந்த மாணவர் கள் குறித்து விஜயம் செய்யும் குழுவால் பரிந்துரைக்கப் படுபவை கட்டளைக்காக சிறைத்துறைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

திறந்த வெளிச் சிறைகளின் பயன்களையும் அதனைப் பயன்படுத்துவது பற்றியும் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு திறந்த வெளிச்சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு ஞாயிறு விடுமுறை நாட்களை தவிர்த்து ஒரு நாள் வேலைக்கு ஒரு நாள் தண்டனை குறைப்பும் நன்னடத்தைக்கு ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் மேலும் ஐந்து வருட நன்னடத்தைக்கு ஒரு வருட தண்டனைக் குறைப்பும் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

13. கைதிகளின் நலம்.—

தற்போது ஒவ்வொரு மத்திய சிறைக்கும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறைக்கும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் ஒருவர் வீதம் மொத்தம் பத்து கைதிகள் நல அலுவலர்கள் உள்ளனர். இந்த நல அலுவலர்கள் கைதிகளுக்கு உதவியும் கைதிகளுக்குச் சிறையின் விதிமுறைகளுக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும் கைதிகள் வெளி யிலுள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள கடிதப் போக்குவரத்திற்கு உதவி செய்தும் கைதிகள் விடுதலைக்குப்பின் சமுகத்தில் நல்வாழ்வில் இடம் பெறுதற்கும் வழிவகை செய்கிறார்கள்.

பெண் கைதிகளின் மூன்று பயது, அதற்குட்பட்ட குழந் தைகளுக்கு ஒரு காப்பிடமும், மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்படுகிறது.

கைதிகளின் நலத்திற்கும், கலாச்சாரத்திற்கும், ஒழுக்கச் சீரமைப்பிற்காகவும் ஒவ்வொரு மத்தியச் சிறையிலும், கலாச் சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கலாச் சாரக்குழு கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

14. நன்னடத்தைப் பணி—

நன்னடத்தைப் பணி சிறைத் துறையின் ஒரு பிரிவாகும். கைதிகளின் வீட்டு நிலை முதலியன குறித்து விசாரிப்பது பிணைப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் குற்றவாளி களையும் உரிமத்தின் பேரில் விடுதலையாகும் கைதிகளையும் பார்ஸ்டல் பள்ளியில் இருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களிலிருந்தும் விடுதலையாகும் கைதிகளையும் கண்காணிப்பது முதலியன நன்னடத்தை பணியாகும். சிறைத் துறைத் தலைவரின் கட்டுப் பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத்தை பணிப்பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரிடைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. ஒரு மண்டல நன்னடத்தை அலுவலரை கொண்ட ஓர் ஆராய்ச்சிப் பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகளின் நன்னடத்தைச் சட்டம் மத்திய சட்டத்தால் மாற்றப்பட்டது. இரண்டாண்டு களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டு தண்டனையையும் அளிக்கக் கூடிய குற் றத்தைப் புரிந்த குற்றவாளிகளை, முன் குற்றம் ஏதும் அவர்கள் மீது இல்லை என்று நிரூபணம் செய்யப்பட்டால் நீதி மன்றம் இத்தகைய குற்றவாளிகளை நன்னடத்தையின் பேரில் மன்னித்து விடுதலை செய்ய இச்சட்டம் அதிகாரம் அளிக் கின்றது. இச்சட்டத்தின் விதித்துறைகள் நவீன முறையான சீர்திருத்த நிர்வாகத்திற்கு எளிதாகவும், பொருத்தமாகவும் உள்ளன.

15. தமிழ்நாட்டு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம்—

விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இச்சங்கம் விடுதலை பெற்ற கைதிகளுக்கு புது வாழ்வு அமைத்துக் கொடுக்கவும். குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்றவர்களுக்குத் தேவையான ஏனைய உதவிகள் அளித்தலும், இளங்குற்றவாளிகள், தற்செயலாக குற்றம் புரிபவர்கள், குற்றம் புரிவதை வழக்கமாகக்கொள்வதைத் தடுக்கவும், அவர்களது நல்வாழ்விற்காக புதிய சட்டங்களை வகுத்து இருக்கும் சட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இச்சங்கம் சிறு தொழில்கள் நடத்து வதற்கும், கருவிகள், தேநீர் கெண்டி (கொதிகலன்), தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காக, பண வசதி செய்து கொடுக் கிறது. மேலும் புகைவண்டி பேருந்து செலவிற்காக பண வசதியும், தொழிலில் பயிற்சி பெறுவதற்குக் கடனும் வழங்கு

கிறது. வேலை வாய்ப்பிற்கும், சட்ட உதவிகள் பெறுவதற்கும், ஓய்வு கால ஊதியங்கள் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவை வழங்குகிறது.

இச்சங்கம் சென்னையில் உள்ள மத்திய குழுவினாலும் மாவட்டங்களில் மாவட்ட குழுக்களினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது, தற்பொழுது 10 மாவட்டக் குழுக்கள் சென்னையில் உள்ள மத்தியக் குழுவின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவல் சார்பற்ற தலைவர்களாக இருக்கின்றனர். சென்னையிலுள்ள மத்தியக் குழுவில் மொத்தம் 30-க்கு குறையாத தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் சிறைத்துறை தலைவர், காவல்துறை தலைவர், நகர காவல்துறை ஆணையாளர், தலைமை மாநகர மாஜிஸ்டிரேட், சென்னையிலுள்ள மத்திய சிறையின் கண்காணிப்பாளர், முதன்மை நன்னடத்தை கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம் கண்காணிப்பாளர் ஆகியோர் அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள் ஆவர். மத்தியக் குழுவிற்கு அரசு ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமல் நியமனம் செய்ய ஓர் விதித்துறையும் உள்ளது. மாவட்டக் குழுக்கள் ஐம்பது உறுப்பினர்களுக்கு ஒரு நியமன தாரர் என்ற விகிதத்தில் பத்து மாவட்டக் குழுக்கள் தங்களுடைய நியமனதாரர்களை மத்திய குழுவிற்கு அனுப்புகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தைத் தவிர காலாண்டுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களுக்கு அரசு தலைமைச் செயலாளர் அல்லது அரசு உள்துறைச் செயலாளர் முறையான தலைமைப் பணிகளைச் செய்ய தலைமை வகிக்கின்றனர். அதேபோன்று மாவட்டக் குழுக்கள், மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் கூட்டங்களை நடத்துகின்றன.

சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சென்னையிலுள்ள மத்தியக் குழுவும் மதுரையிலுள்ள மாவட்டக் குழுவும், தொழில் பிரிவுகளை நடத்தி வருகின்றன. சென்னையிலுள்ள தொழிற்பிரிவு ஒரு தச்சுப் பட்டறையைப் பெற்றுள்ளது. இது சராசரி மாதமொன்றுக்கு 20 நபர்களுக்கு வேலை அளிக்கிறது. பொதுமக்களிடமிருந்து நன்கொடை சந்தா மூலமாக ரூ. 6,0C0 இச்சங்கம் திரட்ட வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 வீதம் இச்சங்கத்திற்கு சிறைத்துறை தலைவரின் மூலம் அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. இந்தத் தொகை இரண்டு தவணையாக அளிக்கப்படுகிறது.

16. சிறைகள் சீர்திருத்தக் குழு—

சிறை நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துரை செய்வதற்காக அரசு குழு ஒன்றினை நியமித்துள்ளது.

பாட்னா உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற முதல் நீதிபதி திரு. நரசிம்மன் (ஐ.சி.எஸ்.) தலைவராகவும், மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை உளநூல் வல்லுநர் திரு. வேங்கோபராவும் ஓய்வு பெற்ற காவல் துறை அலுவலர் திரு. எஸ். எம். டையஸ் (ஐ.பி.எஸ்.) உறுப்பினர்களாகவும் இக்குழுவில் இருப்பர். இக்குழு சிறைகள் சட்டம், 1894 செயல்முறை அனுபவங்களை கருத்தில் கொண்டு மற்றும் கைதிகள் சட்டம், 1900-ல் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து சட்டத்தின் எந்த விதிகளை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டுமென திட்டவட்டமான பரிந்துரைகளை வழங்கும். அரசியல் கைதிகளை காவலில் வைப்பது, நடத்துவது பற்றிய சட்ட விதிகளையும் நெறிகளையும் தேவைப்பட்டால் மாற்றங்கள் செய்வற்காக பரிந்துரைகள் செய்யும். மாநிலத்தில் தற்போதுள்ள சிறைக் கட்டிடங்களின் தரத்தினை ஆராய்ந்து பெரும்பாலான சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடி ஏனைய குறைபாடுகளை நீக்கும் வண்ணம் மேம்பாடுகள் செய்வதற்கான தனது பரிந்துரைகளை இக்குழு வழங்கும்.

தனது அறிக்கையினை இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதிக்குள் அளிக்குமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

..

..

..

இணைப்பு 2

1972–73 முதல் 1976–77 வரை சிறைத் துறையின் செலவினங்களும் வருவாயும், 1977-78 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டையும், 1978-79-க்கான நிதிநிலை மதிப்பீட்டையும் குறிக்கும் அட்டவணை.

1. செலவு—

		தொகை (ரூபாய் ஆயிரத்தில்).
1972–73	..	2,79,25
1973–74	..	3,19,23
1974–75	..	3,89,06
1975–76	..	4,89,63
1976–77	..	4,72,98
1977–78 (திருத்திய மதிப்பீடு)	..	4,62.56
1978–79 (நிதிநிலை மதிப்பீடு)		4,68,29

1978 மார்ச் 22]

1972-73 முதல் 1976-77 வரை சிறைத் துறையின் செலவினங்களும் வருவாயும், 1977-78 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டையும், 1978-79-க்கான நிதிநிலை மதிப்பீட்டையும் குறிக்கும் அட்டவணை.

2. வரவு—

1972—73	..	80,76
1973—74	..	87,94
1974—75	..	1,00,61
1975—76	..	99,82
1976—77	..	1,18,61
1977—78 (திருத்திய மதிப்பீடு)	..	1,39,57
1978—79 (நிதி நிலை மதிப்பீடு)	..	1,36,49

மாநிலத்திலுள்ள சிறைகளின் எண்ணிக்கை

1.	மத்திய சிறைகள்	..	8
2.	மாநில மகளிர் சிறை	..	1
3.	பார்ஸ்டல் பள்ளி	..	1
4.	தனிக் கிளைச் சிறைகள்	..	3
5.	திறந்த வெளிச் சிறைகள்	..	2
6.	கிளைச் சிறைகள்—		

(அ) சிறைத் துறைத் தலைவரின் நேரடிப் பொறுப்பில் இருப்பவை—10

(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின்கீழ் இருப்பவை—109

சிறைகளின் பட்டியல்

(1) சிறைத்துறையின் கீழ் இருப்பவை—

வரிசை எண். சிறைகளின் பெயர்

1. மத்தியச்சிறை, சென்னை.
2. மத்தியச்சிறை, வேலூர்.
3. மத்தியச்சிறை, கடலூர்.
4. மத்தியச்சிறை, திருச்சி.
5. மத்தியச்சிறை, சேலம்.
6. மத்தியச்சிறை, கோவை.
7. மத்தியச்சிறை, மதுரை.
8. மத்தியச்சிறை, பாளையங்கோட்டை.

1978 மார்ச் 22]

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

(1) சிறைத் துறையின் கீழ் இருப்பவை—தொடர்ச்சி.

வரிசை எண் சிறைகளின் பெயர்.

9. மாநில மகளிர் சிறை, வேலூர்.
10. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.
11. தனிக்கிளைச்சிறை (ஆண்கள்), சேலம்.
12. தனிக்கிளைச்சிறை, கொக்கிரகுளம்.
13. தனிக்கிளைச்சிறை, திருச்சி.
14. திறந்தவெளிச்சிறை, தஞ்சாவூர்.
15. திறந்தவெளிச்சிறை, சிங்கநல்லூர்.
16. கிளைச்சிறை (நிலை-1), சைதாப்பேட்டை.
17. கிளைச்சிறை (நிலை-1), நாகர்கோயில்.
18. கிளைச்சிறை, செங்கற்பட்டு.
19. கிளைச்சிறை, மதுராந்தகம்.
20. கிளைச்சிறை, பூந்தமல்லி.
21. கிளைச்சிறை, தஞ்சாவூர்.
22. கிளைச்சிறை, பொன்னேரி.
23. கிளைச்சிறை, திருவள்ளூர்.
24. கிளைச்சிறை, காஞ்சீபுரம்.
25. கிளைச்சிறை, திருத்தணி.

(2) வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவை—

வட ஆற்காடு மாவட்டம்.

1. கிளைச்சிறை, அரக்கோணம்.
2. கிளைச்சிறை, ஆம்பூர்.
3. கிளைச்சிறை, செய்யார்.
4. கிளைச்சிறை ஆரணி.
5. கிளைச்சிறை, செங்கம்.
6. கிளைச்சிறை, குடியாத்தம்.
7. கிளைச்சிறை, போளூர்.

. கிளைச்சிறை. திருப்பத்தூர்.

. கிளைச்சிறை, திருவண்ணாமலை.

. கிளைச்சிறை, வாணியம்பாடி.

. கிளைச்சிறை, வாலாஜா.

கிளைச்சிறை, வந்தவாசி.

வரிசை எண். சிறைகளின் பெயரும்.

தென்னாற்காடு மாவட்டம்.

13. கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி.
14. கிளைச்சிறை, சிதம்பரம்.
15. கிளைச்சிறை, கடலூர்.
16. கிளைச்சிறை, செஞ்சி.
17. கிளைச்சிறை, காட்டுமன்னார்கோயில்.
18. கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை.
19. கிளைச்சிறை, திண்டிவனம்.
20. கிளைச்சிறை, திருக்கோயிலூர்.
21. கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை.
22. கிளைச்சிறை, விழுப்புரம்.
23. கிளைச்சிறை, விருத்தாசலம்.
24. கிளைச்சிறை, பண்ருட்டி.

கோவை மாவட்டம்.

25. கிளைச்சிறை, அவிநாசி.
26. கிளைச்சிறை, பவானி
27. கிளைச்சிறை, தாராபுரம்.
28. கிளைச்சிறை, ஈரோடு.
29. கிளைச்சிறை, கோபி.
30. கிளைச்சிறை, காங்கேயம்.
31. கிளைச்சிறை, மேட்டுப்பாளையம்.
32. கிளைச்சிறை, சத்தியமங்கலம்.
33. கிளைச்சிறை, திருப்பூர்.
34. கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை.
35. கிளைச்சிறை, பொள்ளாச்சி.
36. கிளைச்சிறை, பெருந்துறை.
37. கிளைச்சிறை, பல்லடம்.

நீலகிரி மாவட்டம்.

38. கிளைச்சிறை, உதகமண்டலம்.
39. கிளைச்சிறை, குனூர்.
40. கிளைச்சிறை, கூடலூர்.

1978 மார்ச் 22

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்.

சேலம் மாவட்டம்.

41. கிளைச்சிறை, ஆத்தூர்.
42. கிளைச்சிறை, நாமக்கல்.
43. கிளைச்சிறை, ஓமலூர்.
44. கிளைச்சிறை, பரமத்தி.
45. கிளைச்சிறை, ராசிபுரம்.
46. கிளைச்சிறை, சங்கரி.
47. கிளைச்சிறை, திருச்செங்கோடு.
48. கிளைச்சிறை (பெண்கள்), சேலம்.

மதுரை மாவட்டம்.

49. கிளைச்சிறை, திண்டுக்கல்.
50. கிளைச்சிறை, கொடைக்கானல்.
51. கிளைச்சிறை, நிலக்கோட்டை.
52. கிளைச்சிறை, பழனி.
53. கிளைச்சிறை, பெரியகுளம்.
54. கிளைச்சிறை, திருமங்கலம்.
55. கிளைச்சிறை, உசிலம்பட்டி.
56. கிளைச்சிறை, உத்தமபாளையம்.
57. கிளைச்சிறை. வேடசந்தூர்.
58. கிளைச்சிறை, மேலூர்.

கன்னியாகுமரி மாவட்டம்.

59. கிளைச்சிறை, தக்கலை.
60. கிளைச்சிறை, குழித்துறை.

இராமனுதபுரம் மாவட்டம்.

61. கிளைச்சிறை, அருப்புக்கோட்டை.
62. கிளைச்சிறை, முதுகுளத்தூர்.
63. கிளைச்சிறை, பரமக்குடி.
64. கிளைச்சிறை, இராமனுதபுரம்.
65. கிளைச்சிறை, சாத்தூர்.

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

66. கிளைச்சிறை, சிவகங்கை.
67. கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
68. கிளைச்சிறை, திருப்பத்தூர்.
69. கிளைச்சிறை, திருவாடனை.
70. கிளைச்சிறை, விருதுநகர்.

திருச்சி மாவட்டம்.

71. கிளைச்சிறை, அரியலூர்.
72. கிளைச்சிறை, ஜெயங்கொண்டான்.
73. கிளைச்சிறை, கரூர்.
74. கிளைச்சிறை, குளித்தலை.
75. கிளைச்சிறை, லால்குடி.
76. கிளைச்சிறை, மணப்பாறை.
77. கிளைச்சிறை, முசிறி.
78. கிளைச்சிறை, பெரம்பலூர்.
79. கிளைச்சிறை, துறையூர்.

புதுக்கோட்டை மாவட்டம்.

80. கிளைச்சிறை, புதுக்கோட்டை.
81. கிளைச்சிறை, அறந்தாங்கி.
82. கிளைச்சிறை, கீரனூர்.
83. கிளைச்சிறை, திருமயம்.

திருநெல்வேலி மாவட்டம்

84. கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்.
85. கிளைச்சிறை, கோவில்பட்டி.
86. கிளைச்சிறை, நாங்குனேரி.
87. கிளைச்சிறை, சங்கரன்கோவில்.
88. கிளைச்சிறை, தூத்துக்குடி.
89. கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்.
90. கிளைச்சிறை, தென்காசி.
1. கிளைச்சிறை, திருச்செந்தூர்.

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்.

தஞ்சாவூர் மாவட்டம்.

92. கிளைச்சிறை, கும்பகோணம்.
93. கிளைச்சிறை, மாயூரம்.
94. கிளைச்சிறை, மன்னார்குடி.
95. கிளைச்சிறை, நாகப்பட்டினம்.
96. கிளைச்சிறை, நன்னிலம்.
97. கிளைச்சிறை, பட்டுக்கோட்டை.
98. கிளைச்சிறை, பாபநாசம்.
99. கிளைச்சிறை, சீர்காழி.
100. கிளைச்சிறை, திருத்துறைபூண்டி.
101. கிளைச்சிறை, திருவையாறு.
102. கிளைச்சிறை, திருவாரூர்.
103. கிளைச்சிறை, தரங்கம்பாடி.
104. கிளைச்சிறை, திருவிடைமருதூர்.

தர்மபுரி மாவட்டம்.

105. கிளைச்சிறை, ஹோசூர்.
106. கிளைச்சிறை, ஊரூர்.
107. கிளைச்சிறை, தர்மபுரி.
108. கிளைச்சிறை, கிருஷ்ணகிரி.
109. கிளைச்சிறை, ஊத்தங்கரை.

சிறைத் துறையில் உள்ள பதவிகளின் விவரங்கள் அடங்கிய அட்டவணை.

பதவியின் பெயர். (1)	தற்போது அமுலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2)
அலுவலர்கள்.	
சிறைத் துறைத் தலைவர்	1
சிறைத் துறைத் துணைத் தலைவர்	1
முதுநிலை கணக்கு அலுவலர்	1
சிறைத் துறைத் தலைவரின் அரசிதழ் பதவி பெற்ற உதவியாளர்.	1

[1978 மார்ச் 22

பதவியின் பெயர். (1)	தற்போது அமுலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை (2)
அலுவலர்கள்—தொடர்ச்சி	
கண்காணிப்பாளர் (தேர்வு நிலை)	1
சிறைக் கண்காணிப்பாளர்கள்	8
கண்காணிப்பாளர், மாநில மகளிர் சிறை, வேலூர்.	1
இணைக் கண்காணிப்பாளர்கள்	5
துணைக் கண்காணிப்பாளர், மாநில மகளிர் சிறை, வேலூர்.	1
சிறை அலுவலர்கள்	8
குடிமுறை உதவி அறுவை மருத்துவர்	16
தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்	1
மண்டல நன்னடத்தை அலுவலர்கள்	12
இளநிலை உதவி அறுவை மருத்துவர்	1
பணியாளர் தொகுதி	
பொது வகைகள்—	
கண்காணிப்பாளர்கள்	6
உதவியாளர்கள்	58
இளநிலை உதவியாளர்கள்	80
சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள்	3
தட்டச்சர்கள்	24
பதிவுரு எழுத்தர்கள்	35
டஃபேதார்	1
கடைநிலை அரசு ஊழியர்கள்	95
சிறப்பு வகைகள்—	
கணக்கர்கள்	8
உற்பத்தி உதவியாளர்	1
மூதாய்	1
துணை சிறை அலுவலர்கள்	8
உதவி கண்காணிப்பாளர்	1
இளநிலை உதவி கண்காணிப்பாளர்	1

1978 மார்ச் 22]

பதவியின் பெயர் (1)	தற்போது அமுலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை (2)
சிறப்பு வகைகள்—தொடர்ச்சி	
தனிக் கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள்	3
காவலர் உதவித் தலைவிகள் (இருப்பு)	2
உயர்தர தேர்ச்சி பெற்ற வேலையாள்	1
தேர்ச்சி பெற்ற வேலையாட்கள் நிலை 2	4
மனோதத்துவ நிபுணர்கள்	3
சமூகப் பணியாளர்கள்	3
போதகர்கள்	3
முதலாள்	1
உதவிச் சிறை அலுவலர்கள்	24
தொழிற்சாலை மேலாள்	1
செவிலிச் சிப்பந்திகள்	10
மருந்து செய்பவர்கள்	18
உதவி ஆண் செவிலியர்கள்	26
முதன்மைத் தலைமைக் காவலர்கள்	22
வாயிற்காப்பாளர்கள்	10
தனிக் கிளைச் சிறைகளின் வாயிற்காப்பாளர்கள்	3
காவலர்கள் மற்றும் சிற்றலுவலர்கள், நிலை 1	115
காவலர்கள் மற்றும் சிற்றலுவலர்கள், நிலை 2	1,047
அலுவலக மேலாளர்கள் நிலை 1	3
அலுவலக மேலாளர்கள், நிலை 2	7
சிப்ப எழுத்தர்கள்	10
இடைநிலை ஆசிரியர்கள்	28
உயர்நிலை ஆசிரியர்கள்	9
உடற்பயிற்சி போதகர்	1
தச்சு ஆசிரியர், நிலை 1 மற்றும் 2	16
நெசவு ஆசிரியர்கள்	4
புத்தகம் கட்டும் கண்காணிகள்	2
தையல் முதலாட்கள்	13

பதவியின் பெயர்

(1)

சிறப்பு வகைகள்—தொடர்ச்சி

கருமான் ஆசிரியர்கள் .. .. ..
அச்சுப்பட்டறை முதலாட்கள் .. ..
மின்கம்பியாட்கள் .. .. ..
கிளைச்சிறை அலுவலர்கள், நிலை 1 .. ..
கிளைச்சிறை அலுவலர்கள், நிலை 2 .. ..
நன்னடத்தை அலுவலர்கள் .. ..
நல அலுவலர்கள் .. .. ..
லாரி ஓட்டுநர்கள் .. .. ..
பாய் முடைதல் போதகர் .. .. ..
தச்சு யந்திரக் கம்மியர் .. .. ..
லாரி ஆள் .. ..
தோல்பொருள் மேற்பார்வையாளர் .. ..
காலணி யந்திரக் கம்மியர் .. .. ..
செருப்பு தைப்போரின் கண்காணிகள் ..
அலுமினிய முதலாள் .. .. ..
கைத்தறி நெசவுக் கண்காணிகள் .. ..
வண்டிக்காரர்கள் .. ..
நூற்பாசிரியர் .. .. ..
நெசவு ஆசிரியர் .. ..
சாய ஆசிரியர் .. ..
இணை சாய ஆசிரியர் .. .. ..
பாவு ஆசிரியர் .. ..
சிட்ட ஆசிரியர் .. ..
பாண்டு வாத்திய ஆசிரியர் .. .. ..
மின்சாரப் பணியாள் .. .. ..
உதவிக் கூடார ஆசிரியர் .. .. ..
பாவு, கஞ்சி போடும் பணியாளர் .. ..
கொதிகலன் பணியாள் .. .. ..

உதவித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கல்வி மானியத்தை மதிப்பிடுவதற்காக, திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில் எத்தனை பள்ளிகளில், அரசு உதவித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை வழங்க அனுமதித்துள்ளது?

(இ) மேற்சொன்ன மாவட்டத்தில் எத்தனை பள்ளிகளில் இந்தப் பதவிகள் நிரப்பப்படாமல் உள்ளன?

(உ) பதவிகளை நிரப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 18 பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு போதனை மானியம் (Teaching grant) வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

(இ) 2 பள்ளிகள்.

(உ) திருச்சி தூய ஜோசப் கல்லூரி உயர்நிலைப்பள்ளியிலுள்ள உதவித் தலைமையாசிரியர் பதவியை நிரப்ப பள்ளிச் செயலர், மாவட்டக் கல்வி அலுவலரால் கோரப்பட்டுள்ளார். இப்பதவியை நிரப்புவதாக பள்ளிச் செயலர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு பள்ளியான திருவரங்கம் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் ஒருவரை, பள்ளி நிர்வாகத்தினரால் உதவித் தலைமையாசிரியராக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒப்புதல் அளிப்பது பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: பொதுவாக ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் பணியிடங்களை அரசு வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு மேலுள்ள பள்ளிகளுக்கு உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்க அனுமதி வழங்கப்படுகிறது.

Secondary Grade Teachers.

*208 Q. THIRU P.R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a representation has been made by the Tamil Nadu Secondary Grade B.T. Teachers' Association to the Government during July 1977, to sanction B. T. scale of pay to all the Secondary Grade Teachers possessing B.T. qualification; and

(b) if so, the action taken thereon?

இடைநிலை ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. பட்டம் பெற்ற இடை நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் பி.டி. ஆசிரியர்களுக்குரிய சம்பள வீதம் வழங்க அனுமதிக்குமாறு, தமிழ் நாடு இடைநிலை பி.டி. ஆசிரியர்கள் சங்கம், 1977 ஜூலைத் திங்களில் அரசுக்கு முறையீடு செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு பட்டதாரி ஆசிரியருக்குரிய சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது. பொறுப்பு அடிப்படையில்தான் ஊதியம் வழங்க முடியும். தகுதி அடிப்படையில் அல்லவென்று அரசு முடிவு செய்துள்ளது.

திரு. பி.ஆர். தாமஸ்: இடைநிலை ஆசிரியர்கள் பத்து ஆண்டுகள் பணி முடித்து பி.டி. தகுதியுள்ளவர்களுக்கு பி.டி. ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பி.டி. ஆசிரியர்களுக்குத் தான் பி.டி. சம்பளம்.

National Foundation for Teachers' Welfare.

*209 Q. Thiru KU. MA. BALASUBRAMANIAM (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the amount collected in our State for the National Foundation for Teachers' Welfare, till now;

(b) the number of teachers benefited by this fund since 1975; and

(c) the amount sanctioned to them?

ஆசிரியர்கள் நல தேசிய நிறுவனம்

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்.—

(அ) ஆசிரியர்கள் நல தேசிய நிறுவனத்துக்காக எவ்வளவு தொகை நமது மாநிலத்தில் இது வரை திரட்டப்பட்டது?

(இ) அந்நிதியிலிருந்து 1975 முதல் எத்தனை ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர்?

(உ) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆசிரியர்கள் நல தேசிய நிறுவனத்திற்கு நமது மாநிலத்தில் 1967-68 ஆம் ஆண்டிலிருந்து 31-7-1977 வரை திரட்டப்பட்ட தொகை ரூ. 64.22 இலட்சம்.

(இ) மொத்த உதவித்தொகையாக (ரூ.100 முதல் ரூ.500 வரை) பெற்றவர்கள் 1,008 பேர்கள். தொடர் மாதாந்திர உதவித் தொகையாக (ரூ. 20 முதல் ரூ. 50 வரை) பெற்றவர்கள் 52 பேர்கள். ஆக மொத்தம் பயன் பெற்றவர்கள் 1,060 ஆகும்.

(உ) 1975 ஆம் ஆண்டு சனவரி முதல் 31-7-1977 வரை உதவி வழங்கப்பட்ட தொகை ரூ. 4,63,835.

திரு. பி. ஆர். தாமஸ்: மாநிலத்தில் சேகரிக்கப்படும் தொகை அனைத்தும் மாநிலத்திற்கே வழங்கப்படுகிறதா? ஒரு பகுதிதான் மாநிலத்திற்கு வழங்கப்படுகிறதா? ஏன் முழுந் தொகையையும் மாநிலத்திற்குக் கேட்டு வாங்கிக்கொள்ளக்கூடாது?

[1978 மார்ச் 23

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாணை எண் 2578, கல்வி—நாள் 10-12-1977ன் படி ஆசிரியர் நல தேசிய நிறுவன நிதியிலிருந்து ரூ. 10 லட்சம் செலவில் சென்னையில் ஒரு விடுதி கட்ட அனுமதிக்கப் பட்டுள்ளது. மேலும் அரசாணை எண் 2451, கல்வி-நாள் 16-11-1977-ல் ஆண்டுக்கு ரூ. 6,000—க்கு மேற்படாத வருமானம் உள்ள ஆசிரியர் களின் பிள்ளைகளுக்குப் பொறியியல், கால்நடை, மருத்துவம், விவ சாயம் ஆகிய துறைகளுக்கான மேற்படிப்புக்கு ரூ. 500க்கு மேற்படா மல் உதவிப்பணம் அளிக்கப்படுகிறது. மேற்படி உதவிப்பணத்திற் காக ஆசிரியர் நல நிதியிலிருந்து ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டது. மீதி இருக்கும் தொகையை உதவி தேவைப்படும் ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் தேவையான சூழ்நிலையில் அளிக் கவும் மத்திய நிதிக்கு தமிழ் நாட்டில் 20 சதவீதம் பங்குத் தொகை பாக்கிக்கும் (1-1-74 முதல் கொடுக்க வேண்டிய பாக்கி) கொடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

Thiru K. S. ABDUL WAHAB : Sir, may I know the criteria on which this amount is disbursed?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் கூறிய பதிலி லிருந்து தெரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என் பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு உறுப்பினர் தேர்தல்:

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு நில மேம் பாட்டு வாரியத்திற்கு திரு. இரத்தின பாலகுருசாமி ஒருவர் மட்டுமே முறைப்படியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், அவர் அவ்வாரியத்திற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என அறிவிக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

4. கவன ஈர்ப்பு.

நாமக்கல் வட்டத்தில் பலவித நோக்கக் கூட்டுறவு நாணய சங்கம் விவசாயிகள் பேரில் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டி ருப்பது குறித்து.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ''நாமக்கல் வட்டத்தில் புயலாலும், வெள்ளத் தாலும் பாதிக்கப்பட்ட விவசாயப் பகுதிகளில் இதுவரையில்

எவ்வித நிவாரண வேலையும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படி யிருந்தும் அப்பகுதியில் பலவித நோக்கக் கூட்டுறவு நாணய சங்கம், விவசாயிகள் பேரில் ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டிருப்பது குறித்து ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை,'' மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : நாமக்கல் வட்டத்தில் உள்ள 177 கிராமங்களில் 58 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்ட கிராமங்களின் மகசூல் 37 பைசாவிற்கும் அதற்கும் குறைவாகவும் உள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவாரி சான்றிதழ் அளித்துள்ளார். இந்த வட்டத்தில் உள்ள 91 கடன் வழங்கு சங்கங்களில், 21 சங்கங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 58 கிராமங்களுக்கு கடன் உதவி அளித்துள்ளன. நவம்பர் 1977 முதல் ஏப்ரல் 1978 வரை நிலு வையாயுள்ள ரூ. 39.18 லட்சம் குறுகிய கால தவணைக் கடன் அடுத்த ஆண்டு முதல் மூன்று ஆண்டுத் தவணைகளாகத் திருப்பித் தரப்படும் நடுத்தரக் காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது. வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மற்ற கடன்தாரர்களைப் பொறுத்தமட்டிலும்கூட அடுத்த அறுவடைக் காலம்வரை அவர் களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படக் கூடாது என்றும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த 21 கடன் வழங்கும் சங்கங்களிலும் கடும் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இந்த மாமன்றத்தில் முன்பே ஒருமுறை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றும், அவ்வாறு கடுமையான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள் வார்களானால், அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

அதற்குப் பின்னால் நான் பலமுறை இம்மாமன்றத்தில் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் நாமக்கல் பகுதியில் சுமார் 250.4 ஏக்கர்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக விவசாய இலாக்கா வின் மதிப்பீடு ரூ. 3,10,110 ஆகும். இதுவரையில் அங்கே மராமத்து வேலை செய்யப்படவில்லை. அதே நேரத்தில் விவசாயிகள் மீது எந்தவிதமான ஜப்தி நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தலைவர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட பகுதிகளில உள்ள விவசாயிகளுக்கு ஜப்தி நோட்டீஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை யில் சொல்லும்போது, பாதிக்கப்பட்ட விவசாயிகள்மீது எந்தவித

மான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்று சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட உறுதிமொழி கொடுத்துவிட்டு, இந்த உறுதிமொழிகள் உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றனவா இல்லையா என்பதே எனக்குத் தெரியவில்லை. எனவே இந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிகாரிகளிடமிருந்து ஜப்தி நோட்டீஸ் ஒருபுறம் வாங்கப்படும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விவசாயிகள் மீது எந்தவிமான கடுமையான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறுவது எந்த வகையில் நியாயம் என்று புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இப்போது நீங்கள் என்ன கேட்கிறீர்கள் ?

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : ஜப்தி போன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது எடுக்கப்படுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படியென்றால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் நோட்டீஸுக்கு என்ன அர்த்தம் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வட்டத்தில் உள்ள 58 பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பொறுத்தவரை அனாவாரி சர்டிபிகேட் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கே பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்பது அரசினுடைய உத்தரவு. இந்த உத்தரவை மீறி அதிகாரிகள் ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த அவையில் ஜப்தி நோட்டீசையும் காட்டியிருக்கிறார்கள். இந்த ஜப்தி நோட்டீசை முறைப்படி எனக்கு அனுப்பி வைத்தால், நிச்சயமாக உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. 1977-78 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை விவர அறிக்கை :

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 121.41 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 34.09 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 87.32 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும் வரும். மொத்தக் கோரிக்கையில் 121.27 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின் கீழும், 0.14 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங்களின் கீழும் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவு விவரங்களைமட்டும் குறிப்பிட முற்படுகிறேன்.

2. துணை மானியக் கோரிக்கையில் மிக அதிகமான நிதி ஒதுக்கீடு, கடன்களும் முன்பணங்களும் என்பதன் கீழ் 70.34 கோடி ரூபாய் அளவுக்கு அமைந்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படுகிற வழிவகை முன்பணம் ஆகிய 55.71 கோடி ரூபாய் இதில் அடங்கும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் நடவடிக்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நில வள உங்கிக்கு உதவித் தொகையாக 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் அடுத்த ஆண்டுக்குரிய தங்களது திட்டங்கள் குறித்து முன் நடவடிக்கை எடுப்பதற்காக ஏனைய வழிவகை முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிவகை முன்பணங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஈடு செய்யப்படுமாதலால், நடப்பாண்டையும் அடுத்த ஆண்டையும் சேர்த்துப் பார்க்கும் போது இதனால் அரசுக்கு நிகரச் செலவு எதுவும் இருக்காது.

3. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத் துறைத் திட்டங்கள், தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனங்களின் நிதி உதவித் திட்டங்கள், நிதி உதவி செய்யும் நிறுவனங்களிடமிருந்து தொகை பெற்று மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றிற்கு 14.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்ட அரசுச் சொத்துக்களைக் கடனாகவும், பங்கு மூலதனமாகவும், மானியமாகவும் கருதும் வகையில் 13.00 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கிடைத்துள்ள 1.94 கோடி ரூபாயை, பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு கொடுத்துள்ளோம். இவற்றாலும் நம் மாநில அரசுக்கு நிகரச் செலவுப் பொறுப்பு எதுவும் இருக்காது.

4. துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய முக்கியமான நிதி ஒதுக்கீடுகளாவன ; மதுரைக்கும் கோயம்புத்தூருக்கும் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள் (2.96 கோடி ரூபாய்), பண்டிகை முன்பணம் கொடுக்கும் தொகை அளவை உயர்த்தியதன் காரணமாகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு (2 கோடி ரூபாய்), உள்ளூர் செஸ் மேல் வரி இணைமானியங்கள் (2 கோடி ரூபாய்), கைத்தறி, கதர் விற்பனை மீது தள்ளுபடிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு (1.51 கோடி ரூபாய்), மாவட்டச் சாலைகளையும் கிராமச் சாலைகளையும் பராமரிப்பதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு (1,50 கோடி ரூபாய்). 1977 ஜூலையில் அறிவித்த கூடுதல் இடைக்கால நிவாரணம் வருவாய்க் கோரிக்கைகளின் கீழ் நிதி ஒதுக்கீடு உயர்ந்திருப்பதற்கு ஒரு காரணமாகும். சம்பளம் கொடுப்பதற்காக ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கும், நகராட்சி

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 23

களுக்கும். பொது நூலகங்களுக்கும் கொடுக்கப்படத்தக்க உயரளவு மானியங்களை முன்னிட்டு, கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் 9.00 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். முதல் துணை மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள 8.80 கோடி ரூபாய்க்கு கூடுதலாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்த குடிசைகளுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க 1.50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

5. இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களுக்குச் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளைக் குறிப்பிட்டுள்ளேன். இவற்றின் விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. இத்துடன் 1977–78ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

6. 1970-71ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ளது.

2. 1974-75 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1970-71ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப்பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1970-71ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 5.31 கோடி ரூபாயாக இருக்கிறது. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமப் பணிகள் வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, '31. பஞ்ச நிவாரணம்' என்ற மானியக் கோரிக்கையின்கீழ் 1.42 கோடி ரூபாயும், முந்தய ஆண்டுக் கணக்குகளில் செலவுகள் தவறாக வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதைச் சரிப்படுத்துவற்கு மானியக்

1978 மார்ச் 23] [திரு. கி. மனோகரன்]

கோரிக்கை '47. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்' என்பதன்கீழ் 1.57 கோடி ரூபாயும் இவ்வகையில் பெரிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1970-71ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 27-3-1978 திங்கட்கிழமை அன்று காலை 10-30 மணிக்குக்கூடும்.

[பிற்பகல் 4-20]

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

318. Notification issued with G. O. Ms. No. 955, Industries, dated the 23rd July 1976 in regard to an amendment to the Tamil Nadu Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the table of the House under section 19 (a) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

319. Notification issued with G. O. Ms. No. 54. Co-operation, dated the 28th January 1978 making the Tamil Nadu Debt Relief Rules, 1978. [Laid on the table of the House under section 28 (2) of the Tamil Nadu Debt Relief Act, 1972 (Tamil Nadu Act 38 of 1972).]

320. Notification issued with G. O. Ms. No. 776, Industries, dated the 22nd June 1976 and G. O. Ms. No. 1005, Industries, dated the 22nd August 1977 in regard to amendments to the Tamil Nadu Molasses (Control and Regulation) Rules, 1958. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

321. Notification issued with G. O. Ms. No. 156, Agriculture, dated the 2nd February 1978 declaring certain areas of Cumbum regulated market to be notified market area for the purpose of the Tamil Nadu Agricultural produce Markets Act in respect of paddy, cotton, groundnut, and chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. Reports, Notifications and other papers.

* 111. Policy Note on Industrial Development (Tamil).

* 112. Performance Budget on Industries for the year 1978-79 (English and Tamil).

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

திங்கட்கிழமை, 1978 மார்ச் 27

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1 தகவல் கோரல்.

முதல்வர் அவர்களுடைய வினாக்களுக்கு அவை முன்னவர் விடையளிப்பது குறித்து.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்</u> : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் மேலவையிலே முதலமைச்சர் அவர்கள் வந்து அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தலைவர் திரு. காமராஜ் காலத்தில் கூட திரு. வெங்கட்டராமன் அவர்களே அவருக்குப் பதிலாக பதில் சொல்லியிருக்கின்றார்கள். இப்போது மறைந்த காமராஜ் அவர்களுடைய சிலை பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறோம். மேலவையில் நாங்கள் ஒவ்வொரு முறையும் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மேலவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாக்கா கேள்விகளுக்கு மாண்புமிகு முன்னவர் அவர்களே தற்காலிகமாக பதில் அளிக்கின்றார்கள். மேலவை என்று ஒன்று இருக்கின்றது. பாராளுமன்றத்திலே கூட மாண்புமிரு மத்திய அமைச்சர் திரு. சரண் சிங் அவர்களை அங்கு வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தி வரவழைத்திருக்கிறார்கள். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களும் எங்களுடைய கேள்விகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து பதிலளிக்க நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டவட்டமாக வரமாட்டார்கள் என்பதையாவது சொல்லிவிட வேண்டும். அவருடைய கேள்விகளுக்கு மாண்புமிகு முன்னவர் அவர்களே பதில் அளிப்பார்கள் என்று சொல்லிவிட்டும் போகலாம்.

[1978 மார்ச் 27

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அன்றையதினம் நான் தங்கள் மூலம் நம்முடைய மேலவை முன்னவர் அவர்களிடம் கேட்டபோது, தாங்களேகூட 'அன்பின் காரணமாக இருக்கலாம், முதலமைச்சர் அவர்கள் வர ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர்கள் முடியும் என்றும் சொல்லவில்லை, முடியாது என்றும் சொல்லவில்லை. முன்னவர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே வரவேண்டும் என்று நாங்கள் பலமுறை கேட்டிருக்கிறோம். முதல்வர் அவர்களே அவருடைய இலாக்கா கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் என்று கேட்கிறோம். முதல்வர் அவர்கள் கேள்விகளுக்கு முன்னவர் அவர்கள் பதில் அளிப்பதை நாங்கள் விரும்பவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்துவிடுவார்கள். தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : கேள்வி பதில் பொறுத்து முதல்வர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னேன். தலைவர் அவர்களுடைய வார்த்தைகளுக்கு நீங்கள் வியாக்கியானம் செய்ய வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் வருகிறார்கள். எந்த விதிப்படியும் அவர்கள் வந்து பதில் சொல்ல வேண்டும் என்று சொல்ல முடியாது. அப்படி விதி எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவரவர்களே, நாங்கள் தலைவர் அவர்கள் மூலமாகத்தான் மாண்புமிகு முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது, என்னுடைய கேள்வியில் நியாயம் இருப்பதாகக் கூறினீர்கள். தாங்களும் முன்னவர் அவர்களுக்குச் சொன்னீர்கள். "அன்பின் காரணமாகக்கூட இருக்கலாம். அவர்களுடைய கேள்விகளுக்கு அவர்களே பதில் அளிக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றும் அறிவித்திருக்கிறீர்கள். அதைக் கேட்டுக் கொண்டு, அது என்னால் இயலாது என்று முன்னவர் அவர்கள் சொல்லவில்லை. அதை ஒத்துக்கொண்டார் என்று தான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கேள்விக்கு முன்னவர் அவர்களே பதில் சொல்ல இருக்கின்றார்கள். அது எங்களுக்குத் திருப்தி இல்லை. ஆகவே

1978 மார்ச் 27]

முதலமைச்சர் அவர்களுடைய கேள்வி—பதில்கள் முடிகின்ற வரை மேலவையிலிருந்து வெளியேறுகிறோம் என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினார்கள்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Statue of Late Leader Thiru Kamaraj.

*210 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Kamaraj Statue Committee of Kanyakumari District, requesting allotment of site at Kanyakumari sea shore to install the statue of the late leader Thiru Kamaraj; and

(*b*) if so, the action taken thereon ?

மறைந்த தலைவர் திரு. காமராஜருக்கு சிலை

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி கடற்கரையில், மறைந்த தலைவர் காமராஜருக்கு சிலை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தர வேண்டி, கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் சிலைக் குழுவிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : மறைந்த திரு. காமராஜ் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டக் காங்கிரஸ் குழு கன்னியாகுமரி கடற்கரையில் உரியதோர் நினைவாலயம் எழுப்புமாறு அரசைக் கேட்டுக் கொண்டது. அரசு இது குறித்து கவனமாக ஆலோசித்த பிறகும் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவைக் கலந்தாலோசித்தும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் சாலையில் காந்தி மண்டபத்திற்கு அருகில் காமராஜ் அவர்களுக்கு சிலை எழுப்புவதற்கான ஏற்ற இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதன் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

MISA Prisoners.

*211 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that certain persons who were selected by the Tamil Nadu Public Service Commission and issued appointment orders, could not join duty, as they were arrested and imprisoned under MISA ;

(b) the number of persons from whom applications were received after their release requesting employment orders ; and

(c) the decision taken thereon by the Government ?

மிசா கைதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்வு உத்தரவு வந்தவர்கள் சிறையில் இருந்ததால் வேலையில் சேரவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) விடுதலையாகி வந்த பிறகு, தங்களை வே[லையில்] அமர்த்த வேண்டுமென்று கோரி எத்தனை பேரிட[மிருந்து] விண்ணப்பம் வந்திருக்கிறது ?

(உ) அவை மீது அரசு எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : ஆம். ஒருவரிடமிருந்து விண்ணப்பம் அரசுக்கு வந்தது. அவர் மீண்டும் [ப]ணியமர்த்தப்பட்டு விட்டார்.

Teacher's who won National Awards

*212 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU K. S. GANAPATHY, THIRU D. SANTOSHAM & THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Ministry of Education, Government of India have suggested to the Government, the continuance for five more years, of the services of the teachers who are the recipients of National Awards, after their retirement ;

(b) if so, whether the Government have taken any action on this suggestion ; and

(c) the number of teachers benefited in this connection ?

தேசிய விருதுகள் பெற்ற ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய விருதுகள் பெற்ற ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களுடைய பணிக்காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்குமாறு, இந்திய அரசின் கல்வி அமைச்சகம், மாநில அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது உண்மையா ?

(இ) ஆமென்னில், இந்த ஆலோசனையின் பேரில் அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா ?

(உ) இதனுல், எத்தனை ஆசிரியர்கள் பயனடைவர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) (இ) & (உ) ஆம். [இ]த்தகைய சலுகை 1976 'மே' திங்கள் முதல் அளிக்க ஆணை [பி]றப்பித்தது. இதுவரை 25 ஆசிரியர்கள் பயன் பெற்றனர். [ஆ]ஞல் நவம்பர் 77-ல் இத்தகைய சலுகைகளை ரத்து செய்[யு]ம்படி மத்திய அரசு பரிந்துரைத்தது. அப்பரிந்துரையை [ஏ]ற்றுக்கொண்டு அரசு ஆணை எண். 453, கல்வி, நாள் 10-3-78-ல் இச்சலுகையை ரத்து செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[1978 மார்ச் 27

Assistant Headmasters

*213 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU K. S. GANAPATHI & THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to appoint Assistant Headmasters in Government 'A' and 'B' Wing Schools, where the total strength of students exceeds one thousand; and

(b) if so, the details thereof ?

உதவித் தலைமையாசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி & திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மொத்தம் ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அரசு பள்ளிகளில், உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Gazetted Headmasters

*214 Q.—PULAVAR PULAMAIPITHAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of 'B' Wing High Schools in Tamil Nadu which have been accorded permission to give Gazetted status to their Headmasters; and

(b) among them, the number of Schools wherein Gazetted Headmasters have not been appointed ?

1978 மார்ச் 27]

அரசிதழ் பதவி பெற்ற தலைமையாசிரியர்கள்

புலவர் புலமைப் பித்தன் (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகத்திலுள்ள 'பி' ('B') பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியருக்கு அரசிதழ் பதவி உயர்வு அளிக்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ?

(இ) அவைகளில், எத்தனை பள்ளிகளில் அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர் நியமிக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 80

(இ) பணி புரிந்து கொண்டிருந்த 80 அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்களில் 11 தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வு, மாறுதல், மற்றும் பணியினின்றும் ஓய்வு பெற்ற காரணங்களால் பணியிடங்கள் காலியாக இருந்தன. அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களுக்கான தேர்ந்த பெயர் பட்டியலில் (Gazetted Head Master Panel) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஆசிரியர்களைக் கொண்டு தலைமை ஆசிரியர் பதவி காலியாக இருந்த 11 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தலைமை ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

அரசு பி. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-70-ஆம் நாள் முதல் 3-3-73ஆம் நாள் வரையிலான கால அளவில் பணியிலமர்த்தப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru K. S. GANAPATHI): Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-regularisation of Secondary Grade Teachers and specialist teachers appointed in Government 'B' Wing High Schools between 1st April 1970 and 3rd March 1973 from their date of joining as it has been due in the case of B.T. Teachers and Grade I Pandits and the resultant hardship caused to thousands of teachers.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 27

தமிழ்நாடு அரசின் பரிவுரைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கமும் இதே கொள்கையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதென்பதை இந்தக் குறிப்பின் மூலம் நாங்கள் அறிந்து கொள்கிறோம். ஆனால் நம்முடைய தமிழ்நாடு அரசு இப்படிப்பட்ட ஒரு கொள்கையை, அறிவிப்பை மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்ன நேரத்தில், தமிழ் நாட்டில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, என்னென்ன சிறுசிறு தொழில்கள் — 504 உற்பத்திப் பொருள்களைக் கொண்ட சிறு தொழில்கள் ஆரம்பிப்பது ; தமிழ் நாட்டில் எப்படிப்பட்ட சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பது குறித்து செயற் குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று பார்த்தேன். ஆனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் அந்த விவரங்களில்லை. அது மட்டுமல்ல. நம்முடைய அரசு. அதிலும் குறிப்பாக நம்முடைய முதல்வரவர்கள் ஒரு புரட்சிகரமான பட்ஜெட்டை அறிவித்து, புரட்சிகரமான கொள்கைகளை அறிவித்துதாலோ என்னவோ, இதுவரையிலே யாருமே சொல்லாத கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால், தமிழ் நாட்டிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தொழில்கள் ஆரம்பிக்கக் கடன்கள் கொடுக்கின்றன. அதன் மூலம் 6,400க்கு மேற்பட்ட சிறு கைத்தொழில்களும், 8,600க்கு மேற்பட்ட சொந்தத் தொழில் நடத்துவோருப் ஜூலை 77 முதல் டிசம்பர் முடிய உள்ள 6 மாத காலத்தி வணிக வங்கிகளின் உதவி பெற்றன என்றும், இதன் மூல 49,000 பேர்களுக்கு மேல் வேலை கிடைக்குமென்றும் அ வித்து, 27 கோடி ரூபாய் அளவிலே தேசிய மயமாக்கப்பட் வங்கிகள் இந்தத் தொழில்களுக்குக் கடன் கொடுத்திரு கின்றன என்று சொல்லி, அதைத் தங்களுடைய சாதனைய அறிவித்திருக்கிறார்கள். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கட கொடுப்பதற்கும், இந்த அரசுக்கும் என்ன சம்பந்தம் ? இந் நாட்டிலே எத்தனையோ பேர்கள், யாருடைய தயவு இல்லாமல், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கட வாங்குகிறார்கள், தொழில்கள் ஆரம்பிக்கிறார்கள். அதன் மூல வேலை வாய்ப்புகள் கொடுக்கிறார்கள். ஏதோ இந்த அரசாங்க அந்த வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது போலவும் தொழில் வளர்ச்சித் திட்டங்களை வளர்த்தது போலவு அறிவித்திருப்பது உள்ளபடியே வேதனை தருவதாக இருக்கிறது அரசாங்கம் தொழில்களை ஆரம்பித்து, இத்தனை பேர்களுக் வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோமென்று சொன்ன பாராட்டலாம். 27 கோடி ரூபாய்க்குத் தொழில்கள் தேசி மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்று வருகின்றன அதை ஒரு அரசாங்கம் எப்படி தனது சாதனையாக அ வித்திருக்கிறதென்பதைப் புரிந் கொள்ளமுடியவில்லை.

1978 மார்ச் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அடுத்தபடியாக, மாவட்டத் தொழில் மையங்கள் அமைப்பது பற்றிய திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி, சேலம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வரும் ஆண்டில் தொழில் மையங்கள் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது குறித்து இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை. நீங்கள் திட்டங்களை அறிவிக்கிறீர்கள். ஆனால் அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறீர்கள் என்று பார்த்தால், ஒன்றுமில்லை. அதுபோலத்தான் 100 கோடி ரூபாயிலே ஒரு காகிதத் தொழிற்சாலை வருமென்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த இடத்தில் என்று அறிவிக்கப்படவில்லை. எந்த 'செக்டார்' என்று தெரிவிக்கப்படவில்லை. இப்படியே கொள்கைகளை அறிவிக்கிறீர்கள். உள்ளபடியே அவைகள் பத்திரிகைகளில்தான் இருக்கின்றன ; புத்தகங்களில்தான் இருக்கின்றன. திட்டங்கள் வரப்போகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல. இன்றையதினம் 'சிட்கோ', 'ஸ்பிக்', 'டிட்கோ' போன்ற நிறுவனங்களின் மூலம் தொழில்கள் வளர எப்படியெல்லாம் அரசாங்கம் கடன் உதவிகளைச் செய்து வருகிறதென்ற கொள்கைத் ... படிக்கிறோம். அந்த ... வைத்து, ... ஆண்டுகளாக மூலதனத்தை தொழில் வளமாக்க முயற்சிகள் ...த்து, தமிழ் நாட்டைத் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன. இன்றையதினம் தமிழ் நாட்டில் என்ற இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் கடன் கொடுத்திருக் நிறுவனம் 60 கோடி ரூபாய்க்குமேல் கடன் கொடுத்திருக்கிறது. அங்கே இப்போது நிர்வாகம் சரியாக இருக்கிறதா கிறார்கள். என்றால், எனக்குத் தெரிந்தவரையில் கவலையோடு தெரிவித் இல்லை. அவசர காலச் சட்டம் அமுலில் துக்கொள்கிறேன், இருந்த நேரத்தில் இளைஞர் ஒருவரைச் செயலராக நியமித் தார்கள். அன்றைய தினம் ஆலோசகராக இருந்த ஒருவரு டைய உறவினர், இன்றையதினம் அந்த நிறுவனத்தின் செயலாளராக இருக்கிறார். அந்த இலாகாவிலே அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, இந்த இளைஞரைப் போட்டிருக்கிறார்கள். எங்கேயோ 400, 500 ரூபாய் சம்பளத்திற்கு இருந்தவரை, கிராஜுவேட் என்பதால் செக்ரட்டரியாக 'டைரக்ட் ரெக்ரூட்மென்ட்' செய் திருக்கிறார்கள். அங்கே அசிஸ்டென்ட் செக்ரட்ரீஸ், லா ஆபிசர், இன்னும் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட் டவர்களை விட்டுவிட்டு, டைரக்ட் ரெக்ரூட்மென்டில் இவரை செக்ரட்டரியாக நியமித்திருக்கிறார்கள். அவர் வந்த பிறகு 'டிக்' நிறுவனத்தில் என்ன நடைபெறுகிறதென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த நிறுவனத்தில் கடன் வாங்கியவர்கள் எந்தச் சூழ்நிலையிலாவது சரியாகக் கடனைத்

தமிழ்நாடு அரசின் பரிவுரைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கமும் இதே கொள்கையை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதென்பதை இந்தக் குறிப்பின் மூலம் நாங்கள் அறிந்து கொள்கிறோம். ஆனால் நம்முடைய தமிழ்நாடு அரசு இப்படிப்பட்ட ஒரு கொள்கையை, அறிவிப்பை மத்திய அரசுக்கு எடுத்துச் சொன்ன நேரத்தில், தமிழ் நாட்டில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, என்னென்ன சிறுசிறு தொழில்கள் — 504 உற்பத்திப் பொருள்களைக் கொண்ட சிறு தொழில்கள் ஆரம்பிப்பது ; தமிழ் நாட்டில் எப்படிப்பட்ட சிறு தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பது குறித்து செயற் குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று பார்த்தேன். ஆனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளில் அந்த விவரங்களில்லை. அது மட்டுமல்ல. நம்முடைய அரசு. அதிலும் குறிப்பாக நம்முடைய முதல்வரவர்கள் ஒரு புரட்சிகரமான பட்ஜெட்டை அறிவித்து, புரட்சிகரமான கொள்கைகளை அறிவித்ததாலோ என்னவோ, இதுவரையிலே யாருமே சொல்லாத கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால், தமிழ் நாட்டிலுள்ள தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் தொழில்கள் ஆரம்பிக்கக் கடன்கள் கொடுக்கின்றன. அதன் மூலம் 6,400க்கு மேற்பட்ட சிறு கைத்தொழில்களும், 8,600க்கு மேற்பட்ட சொந்தத் தொழில் நடத்துவோரும் ஜூலை 77 முதல் டிசம்பர் முடிய உள்ள 6 மாத காலத்தில் வணிக வங்கிகளின் உதவி பெற்றன என்றும், இதன் மூலம் 49,000 பேர்களுக்கு மேல் வேலை கிடைக்குமென்றும் அறிவித்து, 27 கோடி ரூபாய் அளவிலே தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் இந்தத் தொழில்களுக்குக் கடன் கொடுத்திருக்கின்றன என்று சொல்லி, அதைத் தங்களுடைய சாதனையாக அறிவித்திருக்கிறார்கள். தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுப்பதற்கும், இந்த அரசுக்கும் என்ன சம்பந்தம்? இந்த நாட்டிலே எத்தனையோ பேர்கள், யாருடைய தயவும் இல்லாமல், தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் வாங்குகிறார்கள், தொழில்கள் ஆரம்பிக்கிறார்கள். அதன் மூலம் வேலை வாய்ப்புகள் கொடுக்கிறார்கள். ஏதோ இந்த அரசாங்கம் அந்த வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது போலவும், தொழில் வளர்ச்சித் திட்டங்களை வளர்த்தது போலவும் அறிவித்திருப்பது உள்ளபடியே வேதனை தருவதாக இருக்கிறது. அரசாங்கம் தொழில்களை ஆரம்பித்து, இத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோமென்று சொன்னால் பாராட்டலாம். 27 கோடி ரூபாய்க்குத் தொழில்கள் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற்று வருகின்றன. அதை ஒரு அரசாங்கம் எப்படி தனது சாதனையாக அறிவித்திருக்கிறதென்பதைப் புரிந் கொள்ளமுடியவில்லை.

அடுத்தபடியாக, மாவட்டத் தொழில் மையங்கள் அமைப்பது பற்றிய திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி, சேலம், புதுக்காட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வரும் ஆண்டில் தொழில் மையங்கள் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது குறித்து இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை. நீங்கள் திட்டங்களை அறிவிக்கிறீர்கள். ஆனால் அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறீர்கள் என்று பார்த்தால், ஒன்றுமில்லை. அதுபோலத்தான் 100 கோடி ரூபாயிலே ஒரு காகிதத் தொழிற்சாலை வருமென்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த இடத்தில் என்று அறிவிக்கப்படவில்லை. எந்த 'செக்டார்' என்று தெரிவிக்கப்படவில்லை. இப்படியே கொள்கைகளை அறிவிக்கிறீர்கள். உள்ளபடியே அவைகள் பத்திரிகைகளில்தான் இருக்கின்றன ; புத்தகங்களில்தான் இருக்கின்றன. திட்டங்கள் வரப்போகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல. இன்றையதினம் 'சிட்கோ', 'ஸ்பிக்', 'டிட்கோ' போன்ற நிறுவனங்களின் மூலம் தொழில்கள் வளர எப்படியெல்லாம் அரசாங்கம் கடன் உதவிகளைச் செய்து வருகிறதென்ற கொள்கைத் ... [illegible]
படிக்கிறோம். அந்த ... வைத்து, ... முயற்சிகள்
ஆண்டுகளாக மூலதனத்தை தொழில் வளமாக்க தமிழ் நாட்டில்
பிடித்து, தமிழ் நாட்டைத் இன்றையதினம் என்ற
நடைபெற்று வருகின்றன. கார்ப்பரேஷன்
இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கடன் கொடுத்திருக்
நிறுவனம் 60 கோடி ரூபாய்க்குமேல் நிர்வாகம் சரியாக இருக்கிறதா
கிறார்கள். அங்கே இப்போது கவலையோடு தெரிவித்
என்றால், எனக்குத் தெரிந்தவரையில் காலச் சட்டம் அமுலில்
துக்கொள்கிறேன், இல்லை. அவசர செயலராக நியமித்
இருந்த நேரத்தில் இளைஞர் ஒருவரைச் இருந்த ஒருவரு
தார்கள். அன்றைய தினம் ஆலோசகராக அந்த நிறுவனத்தின்
டைய உறவினர், இன்றையதினம் இலாகாவிலே அனுபவம்
செயலாளராக இருக்கிறார். அந்த விட்டுவிட்டு,
பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் எங்கேயோ 400,
இந்த இளைஞரைப் போட்டிருக்கிறார்கள். இருந்தவரை, கிராஜுவேட்
500 ரூபாய் சம்பளத்திற்கு 'டைரக்ட் ரெக்ரூட்மென்ட்' செய்
என்பதால் செக்ரட்டரியாக செக்ரட்ரீஸ், லா ஆபிசர்,
திருக்கிறார்கள். அங்கே ...சிஸ்டன்ட் ...ர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்
இன்னும் எத்தனையோ — ... டைரக்ட் ரெக்ரூட்மென்டில் இவரை
டவர்களை விட்டு ... திருக்கிறார்கள். அவர் வந்த பிறகு
செக்ரட்டரியா ... என்ன நடைபெறுகிறதென்பதைத்
'டிக்' நிறு ... அந்த நிறுவனத்தில் கடன்
தெரிவிக்க ... முறன். ... சரியாகக் கடனைத்
வாங்கியவர்... எந்தச் சூழ்நிலையிலாவது

திருப்பிக் கட்டாவிட்டால், ரீ ஷெட்யூல் போட்டுக் கொடுப்
பது வழக்கம். 10 ஆண்டுகள், 12 ஆண்டுகளுக்கு முன்பு
கடன் வாங்கி, ஒரு நயாபைசாகூட திருப்பிக் கட்டாதவர்
களுக்கு ரீ ஷெட்யூல் போட்டுக் கொடுக்கிறார்கள். ஒழுங்காகப்
பணத்தைக் கட்டி, இப்போது முடியவில்லை என்று சொல்லும்
போது, ரீ ஷெட்யூல் போட்டுக் கொடுக்க மறுக்கப்படுகிறது.
அதற்கு அரசியல் காரணமாக இருக்காதென்று நம்புகிறேன்.
அப்படி இருக்குமானால், நம்முடைய அரசாங்கம் அப்படிப்பட்ட
தவறுகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்றையதினம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
—ஏனென்றால் 1975க்கு முன்னாலே இருந்த ஆண்டுகளில்
இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் தமிழ் நாட்டிற்கே
விரோதிகள், தமிழ் நாட்டிற்கே துரோகம் செய்தவர்கள்.
தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியிலே அக்கறை கொள்ளா
தவர்கள் என்று தள்ளப்பட்டதால் அந்தப் புள்ளி விவரத்
தைத் தராமல் — 1975ல் 7408 தொழிற்சாலைகள் பதிவு
செய்யப்பட்டு, அதிலே 4,99,672 பேர்கள் வேலை செய்தனர்
என்றும் இதே குறிப்பு சொல்கிறது. என்... தெரிவிக்க
... வந்த குறுகிய காலத்திற்குள்ளே ... குறிப்பு சொல்கி
7,408, 8,508 ஆகியிருக்கிறது. எவ்வளவு பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைத்திருக்கிறதென்று புள்ளி விவரத்தைப் பார்க்
கும்போது, நீங்கள் வேலைவாய்ப்பு கொடுத்திருப்பது 24,000
பேர்களுக்கு. லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு,
இரண்டு லட்சம் பேர்களுக்கு வேலைத் திட்டம் என்று
சொல்லி விட்டு, இந்த அளவுக்குப் புள்ளி விவரத்தைத்
தந்திருக்கிறீர்கள். அது மட்டுமல்ல. தொழில் வளர்ச்சி
பெரும்பாலும் மின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது
என்று சொல்லி, தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின்
சக்தியின் அளவைப் பார்த்தால்கூட, 1975ல் 3,059.252
மில்லியன் யூனிட்டுகள் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். 1976-
77ல் 3,051.354 மில்லியன் யூனிட்டுகளாகக் குறைந்திருக்
கின்றன. என்ன காரணம்? அது தெரிவிக்கப் படவில்லை.
அது மட்டுமல்ல. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 1975-
76ல் அரசுத் துறையில் 29. அது திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சிக் காலத்தில். நீங்கள் ஆட்சிக்கு இப்போது
வந்திருக்கிறீர்கள். கிராமங்களில் தொழில்களை ஆரம்பிக்க
வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். அரசுத் துறையிலே எத்தனை
நிறுவனங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்பட்
டிருக்கின்றன என்றால், 12. திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சிக் காலத்தில் 29. இந்த ஆட்சியிலே 12. தனியார்

துறையில் 184 நிறுவனங்கள் 1975ல் பதிவு செய்யப்பட்டன.
இந்த அரசில் 145 நிறுவனங்கள்தான் பதிவு செய்யப்
பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-50)

தி. மு. க. ஆட்சிக் காலத்தை விட இவ்வளவு குறைந்
திருப்பதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. உள்ள
படியே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்
நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டுமென்று ஆர்வம்
இருக்கலாம். ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை,
இந்த இலாக்காவிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இதிலே
அதிகமான அக்கறை செலுத்துவதில்லை என்று சொல்லுகிறார்
கள். தொழிற் கொள்கையிலே குழப்பம் இருப்பதாகச்
சொல்லுகிறார்கள். தனியார் தொழிலை ஆரம்பிக்கப் பயப்
படுகிறார்கள் என்று சொல்லுகிறார்தள். தொழிலாளர் நலனில்
அக்கறை செலுத்தவில்லை என்று சொல்லுகிறார்கள். டி.வி.எஸ்.
நிறுவனத்தில் இருப்பவர்களைக் கேட்டால், இனிமேல் தொழில்
களைக் கருநாடக மாநிலத்திற்குக் கொண்டு போக நினைத்
துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிப்
பட்ட நிலைமைகள் நாட்டிலே இருக்கக் கூடாது. இதனால்
பெரிதும் பாதிக்கப்படுவோம் என்று சொல்லிக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தொழில்களுக்காக உள்ள மூலதனத்
தை பார்த்தால் கூட, அந்த அச்சத்தைத்தான் உண்டாக்
குகிறது. அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிற நேரத்
தில், இருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்களா
என்று பார்த்தால், இல்லை. மூலதனத்திற்காக உள்ள புள்ளி
விவரங்களைப் பார்த்தால், 1975-76ல் அரசுத் துறையில்
27 கோடியே 48 இலட்சம் ரூபாய் மூலதனமாகக் கொடுக்
கப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் 18 கோடியே 8
இலட்சம் ரூபாய் மூலதனம் செய்திருக்கிறார்கள். ஆனால்
1977-78ல் அதாவது இப்போது நடைபெறுகிற இந்த
ஆட்சிக் காலத்தில், அரசுத் துறையில் ரூ. 5 கோடியே
33 இலட்சம்தான் மூலதனத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள்.
தனியார் துறையிலாவது மூலதனம் செய்திருக்கிறார்களா என்று
பார்த்தால் அதிலும் ரூ. 11 கோடியே 52 இலட்சம்
தான் மூலதனம் செய்திருக்கிறார்கள். ஆக இந்த ஆட்சிக்
காலத்திலே தொழில்கள் பெருகுகின்றன என்பதற்கு மாறான
சூழ்நிலை தவிர, இன்றைக்குத் தொழில்கள் பெருகு
வதற்கான வழி குறிப்பே இல்லை என்று தான் இந்தப்
புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் குறிப்பாகத் தமிழகத்திலேயிருந்துதான் அதிகமான தோல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிராமங்களில் உள்ள கால்நடைகள் இறந்துவிட்டால், அதனுடைய தோல்களை எடுத்து சைக்கிளில் போட்டுக் கொண்டு, கிராமம் கிராமமாகச் சென்று கொள்முதல் செய்து, அதை நகரத்திற்குக் கொண்டு வந்து பதனிடுகிறார்கள். அப்படிப்பட்ட கிராமங்களில் இருக்கக்கூடிய அந்தத் தொழில்களில் எந்த அளவுக்கு அக்கறை செலுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஏமாற்றத்தைத்தான் நமக்கு அளிக்கிறது. கடந்த ஆண்டு அதற்காக இருந்த தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை 25, இந்த ஆண்டு அது 19 ஆகக் குறைந்திருக்கிறது. அந்தத் தொழிலுக்காக வழங்கிய தொகையைப்பார்த்தால் கடந்த ஆண்டு ரூ. 2,24,31,000 அது இந்த ஆண்டு ரூ. 69,55,000. ஆகக் குறைந்திருக்கிறது. அந்தத் தொழிலில் உற்பத்தியான பொருள்களினுடைய மொத்த மதிப்பீடு கடந்த ஆண்டு ரூ. 4,90,55,000. ஆனால் இந்த ஆண்டு அது ரூ. 3,56,47,000 ஆகக் குறைந்திருக்கிறது.

அதைப் போலவே எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு கடந்த ஆண்டு 1,190, ஆனால் இந்த ஆண்டு 840. இப்படி வேலைவாய்ப்பும் குறைந்து, முதலீடும் குறைந்து, வழங்கப்பட்ட தொகையும் கடந்த ஆண்டுகளை விடக் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை நம்முடைய மாண்புமி— முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உற்பத்திக்கான மதிப்பீடு எவ்வளவு என்று பார்த்தால், கடந்த ஆண்டு ரூ. 17 கோடியே 44 இலட்சமாக இருந்தது இந்த ஆண்டு ரூபாய் 15 கோடியே 64 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி எந்த அளவுக்குக் கடன் கொடுப்பதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறது என்று புள்ளி விவரத்தைப் பார்த்தால், 1974-75ஆம் ஆண்டு ரூ. 133 இலட்சத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறது; 1975-76ஆம் ஆண்டு ரூ. 155 இலட்சத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறது. ஆனால் இந்த நிதியாண்டு டிசம்பர் 1977 வரை வழங்கியுள்ள கடன் தொகை ரூ. 129 இலட்சம் மட்டும்தான். கூட்டுறவுத் துறையிலாவது நாம் தொழில்களை வளர்ப்பதற்குப் போதிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறோமா என்று பார்த்தால், கடந்த ஆண்டுகளை விட குறைவாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறோம் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலுள்ள கனி வளத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது குறித்து அரசாங்கத்திற்கு நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக தமிழ் நாட்டிலே இருப்பதைப் போல் கனி வளம் இந்தியாவிலோ, உலகத்தில் வேறு எங்கோ இல்லை. இந்தக் கனிவளத்தைக் கவனிக்க நம்முடைய அரசாங்கத்தில் ஜியோலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட் ஒன்று இருக்கிறது. அந்த டிப்பார்ட்மெண்ட்டைப் பற்றி வருத்தப் படாமல் இருக்க முடியவில்லை. நாங்கள் ஆட்சி செய்த காலத்திலும் அப்படித்தான் இருந்தார்கள்; இப்போதும் அவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் எந்தவிதமான அக்கறையும் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணம் தெரியவில்லை. நம்முடைய நாட்டிலே கிடைக்கக் கூடிய செமி—பிரீஷியஸ் ஸ்டோன்ஸ் (Semi precious stones) என்று சொல்லக் கூடிய விலை மதிப்புள்ள கற்களை இராஜஸ்தானில் உள்ளவர்கள் இங்கே வந்து இரவோடு இரவாக தமிழ் நாட்டிலுள்ள சில அதிகாரிகளின் துணையைக் கொண்டு எடுத்துச் சென்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். கரூர் பகுதியிலிருந்து இப்படிக் கொண்டு போகும்போது பிடிக்கப்பட்டு, அவர்கள் மீது கலெக்டர் நடவடிக்கை எடுத்தார் என்று பத்திரிக்கையிலே பார்த்தோம். ஒரு காரை மட்டும் பிடித்திருக்கிறார்கள், மற்ற கார்களைப் பிடிக்கவில்லை. நம்முடைய ஜியாலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட்டிலே இருக்கிறவர்கள் ஆங்காங்கே உள்ள கனிப் பொருள்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலை நடத்துவதற்கு திட்டம் தீட்டித் தந்து அதை நம்முடைய அரசாங்கமே செய்யலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தத் துறையிலே இருக்கிறவர்கள், ''நம்முடைய நாட்டிலே இருக்கிற கனி வளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரும். நாம் மக்களின் மீது வரியே போட வேண்டியதில்லை.'' உதாரணத்திற்குச் சொல்லுகிறேன் நான் போட்டிருக்கக் கூடிய இந்த மோதிரம் (மோதிரத்தை அவைக்குக் காட்டுகிறார்) சாதாரண மோதிரம்தான். இதை முதலமைச்சர் அவர்கள் பார்த்தால், இதிலே அக்கறை எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். இந்த மோதிரத்திலே இருப்பது ஒரு சாதாரண கல் தான். ஆனால் அந்தக்கல் உலகத்திலே வேறு எங்குமே இல்லை. இந்த ஒரே கல்லில் 9 நிறங்கள் மாறிமாறி வருகின்றன. இப்படிப்பட்ட கற்கள் நமது நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஒரு பெரிய கல்கூட இல்லை, ஒரு கோலிக்குண்டு அளவுள்ள கல் வெளிநாடுகளில் ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட்சம் என்று விலை போகுமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு [illegible] மதிப்புள்ள கல் இந்த நாட்டிலே இருக்கிறது. இதிலே இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே அந்தக் கல்லின் பெயர் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பெயர் எனக்குத் தெரியாது. இது கரூர் பகுதியிலே கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

(அந்த மோதிரத்தை சார்புச் செயலாளரிடம் தருகிறார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் தலைவருக்குக் காட்டிவிட்டுக் கொடுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தக் கற்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல கற்கள் நம்முடைய நாட்டிலே கிடைக்கின்றன. இது ஒரு சாதாரண கல்தான். அதைக் கண்டு பிடித்து..........

திரு. வே. தங்கபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே' இந்தக் கல்லினுடைய மதிப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தக் கல்லினுடைய மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. இது ஐந்து கேரட் என்று சொல்லுகிறார்கள். இது வெளிநாடுகளில் இரண்டாயிரம் ரூபாய்க்குப் போகுமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு மதிப்புள்ள கற்களை இந்த நாட்டில் யாராவது போட்டிருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட கற்கள் இந்த நாட்டில் ஏராளமாக கிடைக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவரிடத்திலே கொடுத்த அந்தக் கல் தலைவருக்கே வழங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தலைவரிடத்திலே கொடுத்தது, இந்த அவைக்குக் காட்டுவதற்காக. மாண்புமிகு உறுப்பினரே மனமுவந்து கொடுத்தால் ஏற்கலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கேட்டால், அதைக் கொடுப்பதற்கு எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஏனென்றால் எனக்கும் ஒருவர் கொடுத்தது தான் அது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இவ்வளவு மதிப்புள்ள கல் இந்த 72 வயதில் எனக்கு எதற்கு?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரிடத்திலே இந்தத் தொழில் இலாக்கா இருக்கிற காரணத்தால், இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளை ஊக்குவித்து, இப்படிப்பட்ட கற்களை எடுத்து, அரசாங்கமே வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு வியாபாரம் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஒரு கொள்கையை அறிவித்தார்கள். இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கருங்கற்களை வெட்டும் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே, இந்த ஆண்டு டான்சி நிறுவனம் ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக் கல்லை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு ஒப்பந்தம் செய்திருப்பதாகவும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கறுப்புக் கல் வெட்டி எடுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமே இதைச் செய்வதை நான் வரவேற்கிறேன். நம்முடைய நாட்டிலே இருக்கிற அந்தக் கறுப்புக் கல் எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்றால், உலகத்திலே ஜப்பானாக இருந்தாலும், இங்கிலாந்தாக இருந்தாலும், ஜெர்மனியாக இருந்தாலும், எந்தெந்த நாடுகளில் எல்லாம் தேவை என்று சொல்லுகிறார்களோ, அந்த நாடுகளுக்கெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு சப்ளை செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய நாட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது வரையில் தி. மு. க. அரசாங்கமும், தனியாரும் கண்டு பிடித்தது 120 குவாரிகள்தான். இன்னும் 530 குவாரிகள் கண்டு பிடிக்கப்படாமலே இருக்கின்றன. கன்னம் கிராமத்தில் இருப்பது சிறந்த குவாரி என்று வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற தகவல் இன்றைக்கு இருக்கிறது. இப்படி 700 க்கும் மேற்பட்ட குவாரிகள் தமிழகத்திலே இருக்கும்போது, அதைவெட்டியெடுக்கக் கூடிய பணியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிற நேரத்தில், அரசாங்கத்திற்கு ஒருவேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் டான்சி நிறுவனத்திற்கு ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக்கல்லை வெட்ட மூலதனம் ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிற தென்றால, நம் நாட்டிலுள்ள 700 குவாரிகளையும் வெட்ட 21 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த அளவுக்குப் பணம் நம்முடைய அரசாங்கத்திலே இல்லை. ஆகவே ஒரே இடத்தில் 50 ஏக்கர், 100 ஏக்கர் பரப்பளவில் வெட்டினால் வேண்டிய பொருளும் கிடைக்கும், அரசாங்கத்திற்கு நஷ்டமும் இருக்காது. ஒரு ஏக்கர்,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 27

ஐந்து ஏக்கர் என்று உள்ள குவாரிகளை வெட்டினால் நஷ்டம்தான் வரும். ஆகவே அரசாங்கம் நஷ்டப்படாமல் இலாபத்தில் செயல்பட வேண்டுமென்று சொன்னால் 50 ஏக்கருக்கு அதிகமான நிலபரப்பில் உள்ள குவாரிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு மற்றவைகளை சிறுதொழில் செய்கிறவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களாக இருந்தால், எடுத்து விடுங்கள். நான் விசாரித்த அளவில் மூன்று நான்கு பேர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்தக்கட்சியையும் சேராதவர்கள் எல்லாம் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதை தேசியமயமாக்குவோம் என்று சொன்னால், வேண்டுமானால் தி. மு. க. காரர்களுக்குக் கொடுக்க வேண்டாம்; மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் சிறுதொழிலை ஊக்குவிக்கலாம். அதன் மூலம் இருபதினாயிரம் குடும்பங்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிரானைட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு குறிப்பிடும்போது. இப்படிப்பட்ட சிறிய தொழில்களைத் தேசியமயமாக்க வேண்டியதில்லை என்று சொல்கிறது. கிரானைட் போன்ற பொருள்களை தனியார் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதிக்கிறது. அவர்கள் சட்டதிட்டங்களின்படி. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் அந்தத் தொழிலை தனியார் யாரும் செய்யக்கூடாது என்கிறார்கள். அப்படிச் சொல்லியதன் விளைவு, இந்த நாட்டில் அந்தத் தொழில் செய்தவர்கள் கருநாடகத்திற்கும் ஆந்திராவிற்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் எந்த மலையை எடுத்து, தொடர்ந்து எப்படித் தொழில் செய்வது என்று பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து வருகிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்தில் கிடைக்கின்ற, அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகிற இந்தப் பொருள்கள் கிடைக்கின்ற இடத்தைப் பொறுத்தவரையில், ஐம்பது ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை மட்டும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மற்றவைகளைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யாருக்காகவும் நான் வாதாடவில்லை. இந்த நாட்டுத் தொழிலாளர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சிக் கொள்கைக் குறிப்பில் ஒரு அருமையான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டில் பல தொழில்களை ஆரம்பிக்கிறவர்கள்

1978 மார்ச் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நாளடைவில் நிர்வாகத்தினுடைய கோளாறு காரணமாகவோ, வேறு காரணமாகவோ தொழிலில் நலிவடைந்து விடுகிறார்கள். அப்படி நலிவுற்ற தொழில்களுக்கு அரசு உதவி செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். 1969-ல் அப்படி ஒரு கொள்கை அறிவிக்கப்பட்டு, பல நலிந்துபோன தொழில்களுக்கு அரசாங்கம் உதவி செய்திருக்கிறார்கள். 1969-க்குப் பின்னால் ஒரு நிலைமை ஏற்பட்டு அது செயலாக்கப்பட்டிருந்தால், 1975 வரையில் செய்த அனைத்தும் ஊழல்கள் என்பார்கள். அப்படி ஏதாவது உதவி செய்திருந்தால், அதில் ஏதாவது தவறு நடந்திருக்கும் என்று வாதிடப்பட்டது. இன்றைய தினம் சக்தி பைப் போன்ற கம்பெனிகளுக்கு 1969-ல் ஏற்படுத்தப்பட்ட கொள்கையின் அடிப்படையில் அரசாங்கம் உதவி செய்து, அதை நடத்த வேண்டுமென்று முயற்சித்து இடையில் என்ன காரணத்தாலோ. அது மீண்டும் நலிந்துபோயிருக்கிறது. எந்த முயற்சியும் அதன் பேரில் எடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு சில தொழில்களை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அது நியாயமா தவறா என்று கேட்கவில்லை. நலிந்துபோன தொழில்கள் எதுவானாலும் அரசாங்கம் அவற்றிற்கு உதவி செய்து காப்பாற்ற வேண்டுமென்பது நாங்கள் சார்ந்துள்ள கட்சியின் கொள்கை. அது தவறு என்று சொன்னவர்கள், அதில் ஊழல் நடந்தது என்று சொன்னவர்கள் சக்தி பைப் போன்ற நிறுவனங்களுக்கு உதவி செய்தது மோசடி என்று சொன்னவர்கள் 1977-78-ல் சதர்ன்ஸ்விச் கீர் லிமிடெட், (Southern Switchgears Ltd.) சௌத் இந்தியா கிளாஸ் எனாமல்வர்க்ஸ் South India Glass & Enamel Works) ரவீந்திரா மில்ஸ், கோயம்புத்தூர், (Ravindra Mills Coimbatore) மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர். (Madhu Spinning & Weaving Mills, Coimbatore) பிரகாஷ் மில்ஸ் லிமிடெட் கோயம்புத்தூர், (Prakash Mills Limited, Coimbatore), கோயம்புத்தூர், கமலா மில்ஸ் (Coimbatore, Kamala Mills Limited) சோமசுந்தர சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம் (Somasundara Super Spinning Mills, Ramanathapuram). இப்படிப்பட்ட இந்த நாட்டிலுள்ள மில்களை நலிவு பெற்ற தொழில்கள் என்ற தலைப்பில் எடுத்து அதில் ரவீந்திரா மில்ஸ்க்கு ரூ. 15 லட்சம், மது மில்ஸ்க்கு ரூ. 34 லட்சத்து 33 ஆயிரம் இன்றைய தினம் உதவி செய்திருக்கிறார்கள். இதை தவறு என்று நான் வாதாட விரும்பவில்லை. ஆனால் இதையே நாங்கள் செய்தால் தவறு என்று சொல்வார்கள். இவ்வளவு தாராளமாக இந்த ஏழெட்டுத் தொழில்களுக்கு உதவி செய்தவர்கள் ஏன் இன்னும் சக்தி பைப்பில் கவனம் செலுத்தவில்லை? இதைக் கேட்கும்போது, சக்தி பைப் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அதை மாற்றியமைத்து புத்துயிர் அளிப்பதுபற்றி மத்திய அரசு தொழில் துறை அமைச்சகம் பரிசீலிக்கிறது என்று சொல்கிறார்கள். இவற்றைப்பற்றித் தொழிலாளர்கள் முதலமைச்சரையும், தொழிலாளர் நல அமைச்சரையும் சந்தித்து தங்கள் குறைகளைச் சொல்ல முயற்சிக்கிறார்கள். தொழிலாளர் நல அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு அவர்களின்

பிரச்சினையைக் கொண்டு வர ஒரு நாள் போராட்டம் நடத்தினார்கள். இவ்வளவும் நடந்ததற்குப் பின்னாலும், மத்திய அரசு அதைக் கவனிக்கும் என்று சொன்னால், அது முறைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எதைச் செய்தாலும், அது தி. மு. க. காரர்களுக்காகச் செய்யப்பட்டது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யப்பட்ட உதவி என்றெல்லாம் சொல்லப்பட்டது. 1975-76-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் டிக் நிறுவனத்தின் மூலமாக ரூ. 1,62,88 லட்சம் கடன் உதவி செய்யப்பட்டது. 1977-78ல் இந்த ஆட்சியில் ரூ. 126.69 லட்சம் கடன் உதவி செய்திருக்கிறார்கள். டிக் நிறுவனம் என்பது ஒரு லட்சம் அளவில் தொழில்களுக்குக் கொடுக்கக் கூடிய வசதியுள்ள ஒரு நிறுவனமாகும். நாங்கள் சிறையில் இருந்தபோது, நடுநிலைப் பத்திரிகை ஒன்று இரண்டு காலம் செய்தி போட்டு தி. மு. க. காலத்தில் டிக் மூலமாக தி. மு. க. காரர்களுக்கே உதவி செய்யப்பட்டது என்றும் 1·60 லட்சம் 200 லட்சம் என்றும் செய்தி போட்டார்கள். இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1·76லட்சம் கொடுத்திருக்கிறீர்களே, இதை அத்தனையும் அந்தக் கட்சிக்காரர்களுக்கே கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அது நியாயமாகுமா? ஒரு அரசாங்கம் பொறுப்பில் இருக்கும் போது எதைச் செய்தாலும், அதில் நோக்கம் கற்பிப்பது முறையல்ல. தொழில்கள் பெருக வேண்டுமென்பதில் கொள்கை வேறுபாடு, அரசியல் வேறுபாடு இருக்கக்கூடாது. எனவே யார் தொழில் ஆரம்பித்தாலும், அது இந்த நாட்டின் நல்வாழ்விற்கு, நன்மைக்கு, வளர்ச்சிக்கு என்ற நல்ல எண்ணம் இருக்க வேண்டும். இதற்கு முந்திய ஆண்டு 1977 முடிய சிறு தொழில்களும் அந்தத் தொழில்களுக்குக் கடன்களும் என்ற தலைப்பில் ரூ. 69 கோடி 90 லட்சத்து 60 ஆயிரம் டிக் மூலமாகக் கொடுக்கப்பட்டது. அதில் எவ்வளவு திரும்பப் பெற்றார்கள் என்றால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கிறோம் என்றும் ஆனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள் என்றும் சொல்வார்கள். எப்படிக் கோர்ட்டுக்குப் போகிறார்கள்? இதில் என்ன நியாயம் இருக்கிறது என்று அரசாங்கம் பரிசீலிக்க வேண்டாமா? பத்துப் பன்னிரண்டு ஆண்டு காலமாக கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுக்காமல் வட்டிகூட செலுத்தாத நிலைமையில் இருக்கக் காரணம் என்ன, வட்டி கட்டுவதற்குக் கூட தவணை முறை கேட்கிறார்களே எதற்காக? டிக் எப்படி அதை அனுமதிக்கிறது? அதே சமயத்தில் மூலதனக் கடன் வாங்கிய சிறு இன்ஸ்டால்மெண்டிலே கேட்கிறோம் என்று சொல்லும்போது, அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. இந்த அளவுக்கு வேறுபாடுகளோடு செயல்படுவது முறைதானா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் முதலமைச்சர் கொடுத்துள்ள புள்ளி விவரப்படி சர்க்கரை ஆலைகள் 20 இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் 9, பொதுத்துறையில் 1, தனியார் துறையில் 10 என்று இருக்கின்றன. தனியார் துறையில் உள்ள பத்து ஆலைகள் எபபடி இயங்குகின்றன என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்கள். மற்ற அமைச்சர்களும் அறிந்திருக்கக் கூடும். பொதுத் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நியாயமான விலையைக் கொடுப்பதில்லை. இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தில் தனியார் துறையில் உள்ளவர்கள் குறைத்துக் கொடுக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் வைத்துக்கொண்டிருக்கிற ஆம்பூர் சர்க்கரை ஆலையில் ரூ. 127 கொடுக்கிறார்கள்; 117 ஒத்துக் கொண்டிருக்கிறோம். மதுராந்தகம் ஆலையில் ரூ. 115 கொடுக்கிறோம், ரூ. 124 ஒத்துக் கொண்டிருக்கிறோம். அமராவதி ஆலையில் ரூ. 110 கொடுக்கிறோம். அதை அதிகப்படுத்திக் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறோம். பாரி கம்பெனி லாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கோடிக் கணக்கில் வருமானம் பெறுகிறது. அரசாங்கத் துறையாக இருந்தாலும், பரவாயில்லை, அது தனியார் துறைதான். ஒரு டன்னுக்கு ரூ. 100 தான் கொடுக்கிறது. காவேரி சர்க்கரை ஆலை ரூ. 105-ம் டெக்கான் ரூ. 110-ம் தென்னிந்திய சர்க்கரை ஆலை ரூ,100-ம் கொடுக்கின்றன. விவசாயிகள் எவ்வளவோ இன்னல்களுக்கு இடையில் உற்பத்தி செய்கிற கரும்புக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிற நேரத்தில், அரசாங்கத்தின் கூட்டுறவுத் துறையில் உள்ள ஆலைகள் ரூ. 127, 125 என்று கொடுக்கின்ற அதே சமயம் தனியார் துறையினர் மட்டும் 100 என்றும் 105 என்றும் கொடுப்பது நியாயமா என்று கேட்டால், இவ்வளவுதான் கட்டுப்படியாகிறது என்றும் ரெகவரி ஆகவில்லை என்றும் சொல்வார்கள்.

(முற்பகல் 11-10)

அந்த ரெக்கவரி கணக்கு 'போகஸ்' கணக்கு. வேண்டுமானால் நீங்கள் அரசாங்கத் தரப்பில் ஒருவரை நியமித்து இதைப் பரிசீலிப்பீர்களானால், அவர்கள் காட்டுவது நியாயமான கணக்கா போகஸ் கணக்கா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். கூட்டுறவுத் துறையில் அரசாங்கம் சர்க்கரை ஆலை நடததிக் கொண்டிருக்கிறது. தனியார் துறையில் 10 சர்க்கரை ஆலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி நடத்தப்படும் தனியார் சர்க்கரை ஆலைகளான 10 ஆலைகளில் கோடிக் கணக்கான ரூபாய் லாபம் பெற்றும், ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய லாபம் கிடைக்காமல், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் அவர்களுக்குச் சேரவேண்டிய பங்கு கிடைக்காமல் இயங்கிக் கொண்டிருக்கிற

சூழ்நிலையை மாற்றும் வகையில் அரசாங்கத்திற்கு நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கமே அந்த தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொண்டு நடத்தவேண்டும். அரசாங்கமே அந்த தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொண்டு நடத்தினால்தான், ஒரு நியாயமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். அப்போதுதான் நாட்டு மக்களுக்கும் இங்கே உற்பத்தியாகக் கூடிய உண்மையான சர்க்கரை உற்பத்தியின் அளவும் தெரியும். அதனுடைய பலனும் அப்போதுதான் நாட்டு மக்களுக்குக் கிடைக்கும். எனவே சர்க்கார் இந்தத் தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போலவேதான் சிமிண்ட்தொழிற்சாலையும். அரசாங்கமே அனைத்து சிமிண்ட் தொழிற்சாலைகளையும் மேற்கொண்டால், நாட்டு மக்களுக்கு நல்ல பலன் விளையும்.

சர்க்கரை ஆலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் ஒரு டன் கரும்புக்குக் கொடுக்கப்படும் விலை 117-00 ரூபாய், என்று இங்கே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பின் 204-வது பக்கத்திலே போடப்பட்டிருக்கிறது. ஆனால் 200-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பில் ஆம்பூர் சர்க்கரை ஆலையில் ரூ. 127 ஒரு டன் கரும்புக்குக் கொடுக்கப்படும் விலையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் புள்ளி விவரத்தில் உள்ள விஷயம். ஏதோ குறை சொல்லுவதற்காக நான் இதை இங்கே குறிப்பிட விரும்பவில்லை. ஒரு வேளை இது அச்சுப் பிழையாகக் கூட இருக்கும். எனக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் வழங்கப்படும் விலை தெரியும் அங்கே டன் ஒன்றுக்குக் கரும்புக்கு கொடுக்கப்படும் விலை ரூ.127, இப்படி ரூ. 127 கொடுத்துக் கொண்டிருக்கும்போது ரூ. 117 கொடுக்கப்படுவதாகப் புள்ளிவிவரத்தில் போடுவதன் மூலம் உறுப்பினர்களைக் குழப்பாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே இந்த அளவுக்கு விலைகளைக் கொடுத்து, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். தனியார் துறையில் உள்ள ஆலைகளையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கருங்கல் என்று சொல்லப்படுகிற 'கிரானைட்' தொழிலில் கூட கவனம் செலுத்துகிற இந்த அரசாங்கம் சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் சர்க்கரை ஆலைகள்மீது, மிகுந்த அதிக லாபத்தைத் தருகிற இந்தத் தொழிலில் கவனம்

செலுத்த வேண்டும். இவைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974-75 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள கரும்பு ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 3,85,287டன்னாக இருந்திருக்கிறது. ஆனால் இது என்ன காரணத்தாலோ 1976-77 ஆம் ஆண்டில் அதாவது கடந்த ஆண்டில் 3,21,546 டன்னாகக் குறைந்திருக்கிறது. இவ்வாறு சர்க்கரையின் உற்பத்தி குறைந்ததற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பதிலுரையில் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்குச் செய்த முதலீடுகள் என்ற வகையில் புள்ளிவிவரங்களை இந்தத் தொழிற்துறைக் கொள்கைக் குறிப்பின் 160-வது பக்கத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதிலும் "(ஈ) நலிந்த நிறுவனங்களிலும் பிற தொழில்களிலும் முதலீடுகள்" என்ற தலைப்பின்கீழ் 6-வது. வரிசையில் தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாக ரூ.13,76,000 அரசாங்கத்திலே கொடுத்திருக்கிறார்கள். இது அல்லாமல் கடன் தொகையாக ரூ. 22,75,000 கொடுத்திருக்கிறார்கள். ஆக மொத்தம் ரூ. 36,51,000 அரசாங்கத்தால் இந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக ஒன்றைச் சொல்லக் கூடும். இதை நாங்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு கொடுக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது இந்தத் தொகை என்று சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அகில இந்தியாவிலும் மொத்தம் 4 இடங்களில் இப்படிப்பட்ட ரப்பர் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று வாதாடி, 4 இடங்களில் ரப்பர் தொழிற்சாலைகளை அமைத்தார்கள். அதில் ஒன்று அப்போலோ டயர்ஸ், டெல்லி இரண்டாவது 'ஜே. கே. டயர்ஸ்' - மகாராஷ்டிரம். மூன்றாவது விக்ராந்த் டயர்ஸ், பெங்களூர். நான்காவது, தமிழ்நாட்டில் உள்ள இந்தத் தமிழ்நாடு ரப்பர் லிமிடெட், இப்படி ஆரம்பிக்கப்பட்ட ரப்பர் தொழிற்சாலைகளில் மூன்று தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அயல் மாநிலங்களில் உள்ளவை. அந்த மூன்றும்-உரிமம் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் கிடைக்காமல், அவைகளுக்கு. வேண்டிய மற்ற வசதிகள் இருந்தும்கூட இன்றைய தினம் நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க 30 கோடி ரூபாய் முதலீடு தேவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 30 கோடி ரூபாய் மூலதன பெற்று மூன்று இடங்களில் ஆரம்பிக்கப்பட் இந்த ரப்

தொழிற்சாலைகள் ஒரு பக்கத்தில் நடத்தப்படாமல், அவைகள் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் நம் நாட்டில் நாம் ஒரு தொழிற்சாலையை நடத்த வேண்டும் என்றால், அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு அப்போது கொண்டுவந்த நேரத்தில் முதலீடு போடுவதற்கு திரு. நாகராஜன் என்பவர் முன் வந்தார். அவர் என்ன சொன்னார் என்றால், நான் 3 கோடி ரூபாய் முதலீடு செய்கிறேன். எனக்கு அரசாங்கம் ரூ. 2 கோடி மூலதனப் பங்காகத் தரட்டும். இந்த ரூ. 5. கோடியை வைத்துக்கொண்டு மீதமுள்ள ரூ. 25 கோடியில் ரூ. 20 கோடியைக் கடனாகப் பெற்று மற்ற 5 கோடி ரூபாயைப் பங்குதாரர்கள் மூலமாக நான் சேர்த்து இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று ஒரு பிராஜக்ட் ரிப்போர்ட்டைக் கொடுத்தார். அரசாங்கத்தில் அதை ஏற்றுக்கொண்டு இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்த எல்லாவிதமான முயற்சிகளும் நடைபெற்றன. ஆனால் இடையில் இந்தத் தொழில் நடத்த வாய்ப்பில்லை; ஏனென்றால் மலேசியாவில் இருந்து இந்தத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள் கிடைக்கும் என்று தரப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டு, மூலப் பொருள் கிடைக்காது என்ற சூழ்நிலை ஏற்பட்டதால், இந்தத் தொழிற்சாலையைத் துவக்குவதிலும் தொடர்ந்து நடத்துவதிலும் கொஞ்சம் காலதாமதம் ஆனது. பிறகு அவர் இதை எங்களால் நடத்த முடியாது, அரசாங்கமே ஏற்று நடத்தட்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் நமது அரசாங்கம் கெட்டிக்காரத்தனமாக நாம் ஏற்கெனவே ரூ. 36 லட்சம் கொடுத்திருக்கிறோம். இன்னும் அதிகமான மூலதனத்தைப் போட்டு, இந்தத் தொழிலில் நட்டம் வந்தால், இதற்கு யார் பதில் சொல்வது என்று எண்ணி, திரு. நாகராஜன் அவர்களைப் பார்த்து, நீங்களே வேண்டுமானால் இந்தத் தொழிலை ஏற்று நடத்துங்கள், நாங்கள் கொடுத்துள்ள ரூ. 36,51,000-க்கு எங்களுக்கு ஷேர் கொடுத்து விடுங்கள் என்று அரசாங்கம் சொன்னது. இடையில் அதைப் பற்றிப் பேச்சே இல்லை. இப்போது எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல் அதை அரசாங்கமே ஏற்று நடத்தப் போவதாகத் தெரிகிறது. அவ்வாறு நாங்கள் கேள்விப்படுகிறோம். நலிந்த நிறுவனங்களுக்கு நாம் உதவி செய்வது போல் செய்தாலும் சரி அல்லது அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதாக இருந்தாலும் சரி, ஒன்றை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தியாவின் மற்ற 3 மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்ட 3 தொழிற்சாலைகள் இன்றையதினம் நடத்தப்பட முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது, ஏற்கெனவே அரசாங்கம் ரூ. 36 லட்சம் வரையில் கடனாக உதவியிருக்கும் போது, மலேசியாவில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற அந்தத் தனியார் தம்மாலேயே நடத்த முடியாது என்று சொல்லுகிற

நிலையில் அதை அரசாங்கத்தின்மீது சுமத்துவது என்பது சரியில்லை. இப்படி ஆரம்பித்தால், பிறகு எதிர்காலத்தில் அரசாங்கம் கஷ்டப்படும். ஆகவே பின்னாலே அரசாங்கம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடாது என்று முன்கூட்டியே நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு ஒரு யோசனையாகச் சொல்லுகிறேன். வேண்டுமானால் தனியாரே இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கட்டும். அரசாங்கம் முடிந்தால் உதவி செய்யட்டும். அதை விட்டுவிட்டு தனியார் ஒருவரைக் காப்பாற்ற அரசாங்கம் அதிலே தலையிட்டு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரியில்லை.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் தொழிற்சாலையைப்பற்றி ஒரு தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஏதோ அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்று நடத்த இருப்பதாக ஒரு தகவல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தகவல் எங்கேயிருந்து கிடைத்தது, யார் அந்தத் தகவலைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், இந்த அரசுக்கும் அவைக்கும் நல்லது என்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் இங்கே விளக்கம் கேட்டார்கள். நான் இடையில் குறுக்கிடக்கூடாது என்று விரும்பினாலும், குறுக்கிட வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தமக்கு எங்கேயிருந்து அந்தத் தகவல் கிடைத்தது என்பதைச் சொல்லி அது இங்கே குறிப்பிடப்பட்டால் பதிவு செய்யப்படுவது நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்களைத் தொடர்ந்து பேச அனுமதிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u> : என்னுடைய பேச்சைக் கவனித்துக் கேட்டால் தெரியும். நான் இதை ஒரு குறையாகச் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு குறை சொல்லுவதை வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> நீங்கள் குறை சொல்வதை வரவேற்பீர்கள் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நான் இந்த யோசனையைச் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட எண்ணம் இருக்குமானால், அதை நீங்கள் ஊக்குவிக்காதீர்கள் என்று நான்

கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தனியாரிடமிருந்து அரசாங்கத் துறையில் அந்தத் தொழிற்சாலையை ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று சொல்லவில்லை. அரசாங்கக் குறிப்பில் ரூ. 36,51,000 மூலதனமாக, பங்குத் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையொட்டிதான் நீங்கள் அந்தத் தொழிலை மேற்கொள்ளாதீர்கள், அவர்கள் நடத்துவதற்கு வேண்டுமென்றால் நீங்கள் உதவி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழில்களுக்கு நீங்கள் உதவி செய்யவில்லையா என்றால், செய்திருக்கிறீர்கள். நானே 7 நிறுவனங்களைப்பற்றி முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். இந்தியா மீட்டர்ஸ் என்ற நிறுவனத்திற்கு உதவி செய்திருக்கிறீர்கள். அதையெல்லாம் நான் குற்றமாகவா சொன்னேன்! இதன் மூலமாக 375 பேர்களுக்குத் தொழில் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று பாராட்டுகிறேன். அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசாங்கம் மின்சாரத் துறையின் மூலமாக அந்த மீட்டர்களை வாங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். இவைகள் எல்லாம் குறை சொல்ல வேண்டும் என்ற எண்ணத்திலா சொல்லப்பட்டன. எங்கள் கவனத்திற்கு வருகிறது என்றால், பின்னால் நீங்களேகூட கேட்கக்கூடும். இதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை என்று கேட்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நீங்கள் ஏன் முன்னாலேயே சொல்லியிருக்கக்கூடாது என்று கேட்கலாம். ஆகவேதான் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு நஷ்டம் வராமல் இருக்க இந்த யோசனையைச் சொல்கிறேன். நாங்கள் செய்தால், அதைத் தவறு என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால் அதையே நீங்கள் செய்துவிடக்கூடாது என்று முன்கூட்டியே இதைச் சொல்லுகிறேன். அடுத்து மெட்ராஸ் அலுமினியம் கம்பனி....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் ஏழு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மெட்ராஸ் அலுமினியம் கம்பெனியைப் பற்றிப் பல முறை இம்மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய அளவில் தொழில் இலாகா செயலாளர், பி. டபிள்யு. டி. செயலாளர் முதலியவர்கள் 20-3-78 அன்று மெட்ராஸ் அலுமினியம் கம்பெனிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அங்கிருப்பவர்களை ராஜினமா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோ எவ்வாறோ ஒரு புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகம் பொறுப்பேற்றதன் மூலம் எதிர் காலத்தில் மின்சார இலாகாவிற்கு வரவேண்டிய பணம் வந்துவிடும் என்று நம்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்களையும் அவ

ருடைய பிள்ளையையும் அதில் இயக்குநர்களாகப் போட்டிருக்கின்றார்கள், அதற்கு திரு. வர்கீஸ் அவர்கள் தலைவராக நியமிக்கப் படுவதாக தினமணிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. வர்கீஸைத் தவிர வேறு ஆள் கிடைக்க வில்லையா? அது வெறும் செய்தியாக இருக்குமானால், நான் மகிழ்ச்சியடைகிறேன். அவரையே போடுவதாக இருந்தால், இன்னும் தொழில் துறையில் மிகுந்த ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பரிசீலனை செய்து தொழில் துறையை நன்கு அறிந்தவர்களைத் தலைவராக நியமித்து, அது லாபகரமாக நம்முடைய அரசாங்கத்திற்கு நல்ல முறையில் பலன் கிடைக்கக்கூடிய அளவு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Mr. Deputy Chairman, Sir, I commend the very exhaustive report in the Policy Note on Industrial Development in our State. The Industrial Development of our State has been the aspiration of many people who are working for the development of our State and it has also been the hope of many who would like to be employed.

As I am very closely connected with the Industrial Co-operative for Women, being its President, I would like to bring one matter to the notice of our Chief Minister who has been very frequently saying that the welfare of women, especially the widows, is his first concern about which we are very happy. This particular industrial co-operative has got about 150 to 200 destitute women and widows to whom we give orders through 18 primary societies which are spread all over the City of Madras. These orders are received by us from private individuals also, but mostly they are I.T.I. orders. Very recently, these I.T.I. orders have been suddenly stopped. I fear—I am not sure whether it is true—that now labour is creating trouble and that they want these uniforms in the form of money or cloth. I would like to state that if workers want to receive this benefit in the form of uniforms there is something binding on these women-workers also. If they receive it as money or cloth, the orders to these industrial co-operatives, which are serving especially the poor women, will be curtailed and naturally the overall turnover will become small resulting in the women not getting enough wages for their sustenance besides the bonus quantum also being reduced. I would be grateful to the Labour Department and also the Minister for Labour to whom I have made an appeal if they continue these orders so that the industrial co-operative societies could be benefited. I would appeal to the Chief

(Thirumathi Mandakini Krishnamoorthi) [1978 மார்ச் 27

Minister who is in charge of Industries to press upon the Labour Department that such orders should be given to these women's industrial co-operative societies so that they could be strengthened in such a way as to be of help to these deserving women.

Thank you.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நம் மாநிலத்தில் தொழில் துறையில் திருப்திப் படுவதற்குத் திட்டியுள்ள பல திட்டங்கள் வருங்காலத்தில் நம்முடைய மாநிலத்திற்கு நல்ல மேம்பாட்டை அளிக்கக் கூடிய திட்டங்களாக இருக்கின்றன என்பதை அறியும்போது, இந்த முயற்சிக்காக நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். நம்முடைய மாநிலம் இன்றைக்கு தொழில் துறையில் விருத்தி அடைந்த நிலையில் இருந்தாலும், ஒரு விவசாய மாநில மாகத்தான் அதைக் கணக்கில் எடுக்கிறார்களே தவிர, தொழில் மாநிலம் என்ற நிலையில் இல்லை. சமீப காலத்தில் நான் பஞ்சாப் மாநிலத்திற்கு ஒரு குழுவில் சென்றிருந்தேன். அங்கே உள்ள நிலவரத்தை விசாரிக்கும்போது, அங்கு சொன்னார்கள், சில ஆண்டுகளுக்கு முன் பஞ்சாப் மாநிலத்தில் பிரதான தொழில் எது என்றால், இரண்டு தொழில்கள்தான். ஒன்று விவசாயம். இரண்டாவது இராணுவத்தில் சேருவது. பஞ்சாபிலுள்ள வாலிபர்கள், பெருவாரியான வாலிபர்கள் இராணுவத்தில் சேருவார்கள். மற்றவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இதுதான் அவர்களுடைய மாநிலத்தின் பிரதான தொழிலாக இருந்தது ஒரு காலத்தில். ஆனால் நாளடைவில் அவர்கள் தொழிலின் பால் கவனம் செலுத்தி அந்த மாநிலம் ஒவ்வொரு படியாக முன்னேறி இன்றைக்கு இந்தியாவிலேயே தலைசிறந்த தொழில் மாநிலமாக பஞ்சாப் உருவாகியிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதற்கடுத்த பக்கத்தில் ஹரியானா மாநிலம் உண்டு. அந்த மாநிலத்தில் பாரிதாபாத் இன்டஸ்டிரியல் எஸ்டேட் இருக்கிறது. அது மிகவும் புகழ் வாய்ந்த மாநிலம். ஆனால் அந்த நகரத்திலே நான் விசாரித்ததில், 1600 தொழில்கள் அங்கே இயங்குகின்றன என்று சொன்னார்கள். பாரிதாபாத்தைப் பார்த்து நான் பாராட்டினேன். அதே சமயத்தில் அதற்குப் பக்கத்திலுள்ள பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானாவிற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த நகரத்தில் எவ்வளவு தொழில்கள் இருக்கின்றன என்றால், பாரிதாபாத்தைப் போன்று பத்து பங்கு அதிகமான தொழில்கள் அந்த மாவட்டத்தில் இருக்கின்றன.

1978 மார்ச் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அந்த அளவுக்கு அவர்கள் விருத்தி அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது, உண்மையிலேயே நான் பாராட்டினேன். லூதியானா என்ற ஒரு மாவட்டத்தில் உள்ள அளவுக்கு பல மாநிலங்களில் இல்லை. இந்தியாவிலேயே இல்லை என்ற நிலையை நாம் பார்க்கிறோம். நம் மாநிலம் பஞ்சாப்பைப் போல் தொழில் துறையில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. நம்முடைய மாவட்டங்களில் உள்ள அதிகாரிகள் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்கள். ஆனால் நான் சொல்லக்கூடிய குறை என்னவென்றால், செயல்படக்கூடிய பழைய தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்களே தவிர, புதிதாகத் தொழில் துவக்க முற்படுபவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற போக்கு சரியாக இல்லை. அவர்கள் உண்மையிலேயே புதிதாகத் தொழில் துவக்குகிறவர்களுக்கு அனுசரணையாக உபதேசங்கள் சொல்லி ஆதரவு கொடுக்க வேண்டும். பஞ்சாப் விருத்தி அடைந்தது என்றால், அங்கே அதிகாரிகள் சின்னச் சின்ன சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒரு இண்டஸ்டிரியல் செண்டரில் இத்தனை அடி ஜன்னல், இத்தனை அடி இடம் இருக்க வேண்டுமென்று கடுமையாக அந்தச் சட்டங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் சட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன. வடக்கு மாநிலங்களில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சின்ன விஷயங்களுக்கெல்லாம் விட்டுக் கொடுத்து எப்படியாவது தொழில் நடக்கட்டும், மாநிலம் விருத்தி அடையட்டும் என்ற கண்ணோட்டத்தோடு அங்கே செயல்படுகிறார்களே தவிர, நம்மிடத்தில் ஒரு சின்னக் குறை இருந்தாலும், தடை போடுகிறார்கள். அந்த மனப்பான்மை மாற வேண்டும். புதிதாகத் தொழில் துவக்க முன் வருபவர்களை அரசு அதிகாரிகள் ஊக்குவிக்க அவர்களுக்கு அரசு குறிப்பு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நடத்துபவர்கள் வங்கிகளிலும் அரசாங்கத்தின் கழகங்களிலிருந்தும் கடன்கள் பெறுவது இயற்கை. அந்தக் கடன்களை வாங்குவதற்கான சட்ட திட்டங்கள் மிகவும் கஷ்டமான நிலைமையை உண்டாக்குகின்றன. மற்ற மாநிலங்களில் சுலபமாகக் கடன்கள் கிடைக்க வகைகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே இவர்கள் போட்டிருக்கின்ற சட்டங்களின் முறையைப் பார்த்தால் கடன் வாங்குவதென்றால், கடனே வேண்டாம் என்று போகக்கூடிய நிலை இருக்கிறது. இந்தச் சட்ட திட்டங்கள் சுலபமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மாநிலம் இன்றைக்கு விவசாய மாநிலமாக இருக்கக் கூடிய மாநிலம். தொழில் மாநிலமாக மாறக் கூடிய நிலை வந்து வேலை வாய்ப்பு இல்லையென்ற நிலை மாறி, நாம் மிகவும் உயர்ந்த நிலை அடைய வாய்ப்பு இருக்கிறது.

[திரு கே. எஸ். அப்துல்வகாப்] [1978 மார்ச் 27

(முற்பகல் 11-30)

நான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் இந்தச் சபையில் இருந்திருக்கிறேன். அப்போது இந்தச் சபையிலே, திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் பெருமிதத்துடன் சொல்வார்கள். இன்றைக்கு நம் மாநிலம் பஞ்சாபுக்கு அடுத்ததாக, இந்தியாவில், இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கிறது என்று சொல்வார்கள். இரண்டாவது இடத்தையே பெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய குறிப்புகளைப் பார்த்தால்கூட, இது தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குச் சரியாக இப்போது நினைவில்லை. ஒருவேளை 3வது அல்லது 4வது என்றுகூட இருக்கலாம். அதற்குப் பிறகு இன்றைக்கு சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு, நமது தொழில் வளர்ச்சி சரியில்லை என்பதை அறிந்து, நான் மன வேதனை அடைகிறேன். இன்றைக்கு 8வது அல்லது 10வது நிலையில் இருப்பதாகத்தான் நான் அறிகிறேன். அந்த நிலை மாற, அந்தத் தொழில் துறை நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே வந்துள்ளது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் தலைமையிலே, இந்தத் துறை வெகு விரைவிலே பஞ்சாபுக்கு அடுத்த நிலைக்கு வரக் கூடிய நிலைமைகள் உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் ஆண்டவன் விரும்பினால், பஞ்சாபுக்கும் மீறியதாக, முதன்மை நிலைக்கே வரக் கூடிய நிலைமைகள் உருவாக முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்று அளிக்கப்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக் குறிப்பிலே கிராமத் தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அரசு ஊக்குவிக்கும் கொள்கை ஒரு வரவேற்கத்தக்க கொள்கை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அதைப் பாராட்டுகிறேன். நமது அருமை நண்பர் திரு வீராசாமி அவர்கள் பேசும் போது, ஒரு கல்லைக் கொடுத்தார்கள். அந்தக் கல்லைப்பற்றி விளக்கங்களையும் கொடுத்திருக்கின்றார்கள். கரூர் பகுதியில் காங்கேயம் என்ற ஊரிலே நடந்தது, எனக்குத் தெரிந்த சம்பவம். அதை எடுத்துச் சொல்கிறேன். அது பொருத்தமாக இருக்கும். ஒரு வைர வியாபாரி, கல் வியாபாரி ஒரு கல்லைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த வியாபாரி என்னிடம் நேரடியாகவே சொன்னார். காங்கேயத்திலே ஏதோ ஒரு கல் கிடைத்தது. அது ஒருவரிடத்திலே ரூ. 30 க்கு விற்கப்பட்டது. அந்தக் கல்லை 30 ரூபாய்க்கு வாங்கியவர் அதை ரூ. 500க்கு விற்றாராம். ரூ 500க்கு வாங்கியவர், அதையே சென்னைக்கு கொண்டுவந்து ரூ. 2,000க்கு விற்றாராம். அதற்குப் பிறகு அதை வாங்கியவர் அதை ஹங்காங்குக்கு அனுப்பி ரூ. 6,000க்கு விற்றாகளாம். இதுபற்றி எனக்கு நேரடியாகவே தெரியும்.

1978 மார்ச் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

வேண்டுமானால் அந்த வியாபாரியின் பெயரைக்கூடச் சொல்கிறேன். அதைச் சொல்வதில் தவறில்லை. அந்த மாதிரியான உயர்ந்த கற்கள், வைரக் கற்கள் காங்கேயம் பகுதியிலே கிடைக்கின்றன என்று சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தொழில்களை அரசே நடத்த வேண்டும். அரசாங்கம் தொழில்களை தேசியமயமாக்க வேண்டும் என்றால் எப்படி நடக்கும்? அங்கே கோடிக்கணக்கான கற்கள் கிடைக்கின்றன. அந்த கற்களில் ஒரு கல் வைரமாக இருக்கின்றது. அவைகளைக் கண்டு பிடிக்கத் திறமையானவர்கள் வேண்டும். அந்த வேலையிலே தேர்ச்சி பெற்றவர்கள் ஹாங்காங்கிலே ஒருவர் இருவர்தான் இருப்பதாகச் சொல்கின்றார்கள். நமக்கு அந்தக் கற்கள் சாதாரணமானவைகளாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நமது நாட்டில் அதற்கு என்று படித்துப் பட்டம் பெற்றவர்கள் யாரும் இல்லை, ஜியாலஜிஸ்ட் டிப்பார்ட்மெண்டில் இருப்பவர்கள் நினைத்தால் செய்யலாம் என்றுதான் கருத்துச் சொன்னேன்!

திரு கே. எஸ். அப்துல் வகாப் : அந்தக் கல்லைப் பற்றி படிப்பதற்கு பட்டப் படிப்பு என்று எதுவும் இல்லை. அனுபவத்தில்தான் அவர்கள் அதற்கான தேர்ச்சியை அடைகிறார்கள். அந்தத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கோடிக் கணக்கிலே மூலதனம் இல்லை. அவர்கள் தேர்ச்சிதான் அவர்களுக்கு மூலதனம். ஆகவே அரசு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கற்கள் இருக்கும் இடங்களைக் கைப்பற்றி, அதற்கான நிபுணர்களை, அதில் தேர்ச்சி பெற்றவர்களை, அந்தத் துறை வியாபாரிகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அதை ஏற்று நடத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழில் தமிழகத்தில் ஒரு பிரதானமான தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் ஏற்றுமதியாகின்ற தோலில் 85 சதவிகிதம் தோல் சென்னையிலிருந்து ஏற்றுமதி ஆகின்றது. தமிழகத்திலே உற்பத்தியாகி ஏற்றுமதி ஆகின்றது. பாரின் எக்ஸ்சேஞ்ஜிலே பெரும் பகுதி தோல் ஏற்றுமதியின் மூலம் இந்தியாவிற்குக் கிடைக்கின்றது. இந்தத் தொழில் செய்பவர்களுக்குப் பல சிக்கல்கள் அரசாங்கத்தால் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அந்தத் தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள், அந்தத் தொழிற்சாலைகள் இருக்கும் இடங்களில், அந்தத் தொழிற்சாலையினுடைய கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்கு என்று ஒரு பிளாண்ட் வைக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டுள்ளது. அந்த பிளாண்ட் போடுவதற்கு

ஒவ்வொரு தொழிற்சாலையும் லட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட வேண்டும். அப்படி மூலதனம் போட்டுச் செய்யக்கூடிய நிலைமைகள் சிலருக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக அரசாங்கத்தின் சார்பிலேகூட சில பிளாண்ட்டுகளை வைக்கலாம். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் அதைச் செய்வதற்கு அரசு கடன் உதவி செய்ய வேண்டும். அந்தக் கடன் தொகையை அவர்களிடமிருந்து தவணை முறையில் வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு பாரின் எக்ஸ்சேன்ஜ் சம்பாதிக்கக்கூடிய ஒரு துறை தொழில்துறையாக இருக்கிறது. அதற்கு இது வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் சர்க்கரை மில்களைப் பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, அரசாங்கம் சர்க்கரை விஷயத்திலே என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்று நான் அறியேன். தனியார் நடத்தும் சர்க்கரை ஆலைகளுக்கு, விவசாயிகளிடத்திலேயிருந்து கரும்பைக் கடனாகவே தனியார்கள் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கடனை விவசாயிகளுக்குக் கொடுக்கவேயில்லை. கோடிக்கணக்கில் சர்க்கரை ஆலைக்காரர்கள் கடனைக் கொடுக்காமல், பணத்தைக் கொடுக்காமல், வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வேறு பணமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அதைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். கரும்பு வளர்த்து அவர்களுக்குத்தான் தர வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கோடிக் கணக்கிலே பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அதைத் தன் பொறுப்பிலே எடுத்துக் கொண்டு செயல்பட்டால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டு பேப்பர் ஆலை தொடங்குவதாக செயற் குறிப்பிலே உள்ளது. இந்தப் பேப்பர் ஆலையைத் திருச்சியிலே துவக்கினால், நல்லது என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில், மிக விரிவான பல கருத்துக்களையும், தொழில் துறையிலே உள்ள மாற்றங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். பொதுவாக நம்முடைய சமுதாயம் உலக சமுதாயத்தின் ஒரு பகுதி என்ற முறையில் பெரிய சமூக மாற்றங்களையும் ஒத்துக்

கொள்கின்ற மனப் பாங்கினை, அமைப்பை உடையதாக இன்னும் ஆகவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு என்ன தேவை என்றால், அந்த நாட்டினுடைய கல்வித் தரமும், அந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பில் ஏற்படுகின்ற பல்வேறுவிதமான மாற்றங்களும் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாற்றங்களின் அடிப்படையில்தான் தொழில் வளர்ச்சி உருவாக வேண்டும். சுதந்திரம் கிடைத்த பிறகு, இவ்வளவு நாட்களுக்குப் பிறகுதான் கல்வித்துறையில் மாற்றம் செய்திருக்கிறோம். பல லட்சக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற கல்வி முறையை அடுத்த ஆண்டுதான் நாம் அமைப்பதாக இருக்கிறோம். இதற்கு முன்னால் 16 வயது அடைந்த இளைஞர்கள் இந்த நாட்டில் எந்த விதமான தொழிற் கல்வியும் கற்றுக் கொள்ளாது மிகத் துக்ககரமான நிலைமையில் இருந்தார்கள். இந்தச் சூழ்நிலைதான் நம் சமுதாயத்தில் அமைந்திருக்கிறது. அந்த நிலைமை மாறி தொழிலையே ஒரு கல்வியாகக் கற்றுக் கொண்ட பிறகுதான், அவர்கள் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லத்தக்க நிலைமைகள் ஏற்படும். அதுகூட அந்தத் தொழில் கல்வி உபகரணங்களை உற்பத்தி செய்யக்கூடிய கல்வியாக இல்லாமல் மெயின்டினன்ஸ் தொழில், சைக்கில் ரிப்பேர் செய்வது, மோட்டார் கார் ரிப்பேர் செய்வது போன்ற மெயின்டினன்ஸ் தொழில்கள் என்ற அடிப்படையிலேதான் இருக்கின்றன. அவர்கள் உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அவர்களுக்குத் திறனை அளிக்கின்ற அளவுக்குக் கல்வி அமைய வேண்டும். வேலை வாய்ப்புக்கள் ஏற்படுகின்ற அளவுக்கு தொழில் கல்வி இப்போது அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாதிரி கல்வி அமைக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஒரு பக்கம் நஷ்டம் அடைகின்ற தொழிற்சாலைகளில், குறைந்தபட்ச அளவாவது போனஸ் கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கோடிக்கணக்கான ரூபாயைச் சம்பளமாகத் தொழிலாளர்கள் பெறுகின்ற நிறுவனங்களும் இருக்கின்றன. பெரிய பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. பல்லவன் டிரான்ஸ்போர்ட் நிறுவனமாக இருந்தாலும் சரி, அது போன்று வேறு பெரிய நிறுவனமாக இருந்தாலும் சரி, மேலும் பல சிறு தொழில்களையும் உருவாக்க வேண்டும். பல லட்சக்கணக்கானவர்களுக்குப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழில் திறனை உருவாக்க வேண்டும். பல தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற வேலையாட்கள் அடிப்படைச் சம்பள வசதிகூடப் பெற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளில் சிறு சிறு தொழில்களிலே இருப்பவர்கள், தொழிலாளர்கள் வேறு ஒரு பக்கத்திலே கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு க. அறிவழகன்] [1978 மார்ச் 27

(முற்பகல் 11-40)

ஒரு பக்கத்தில் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் அதிகமாக சம்பளத்தைக் கேட்கிற நிலையும், இன்னொரு பக்கத்தில் வேலை இல்லையே என்று சொல்லுகிற குடும்பங்கள் ஏராளமாக இருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியாத பெற்றோர்கள் ஒரு பக்கம், வசதிகள் வந்திருக்கிற காரணத்தாலே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் பிள்ளைகளை அனுப்பிய பிறகு, அவர்கள் அந்தப் பள்ளிகளில் படிக்காமல் தெருவிலே திரிகிறார்களே என்று வளர்ச்சியடைந்த நாடுகளிலே உள்ள பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள். இதற்கிடையில் மாண்புமிகு முதல்வரவர்கள் தைரியத்துடன் இந்தத் தொழிற் கொள்கையை இந்தச் சபையின் முன் வைத்திருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன், நம்முடைய பிரச்சினைகள் சுதந்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயிருந்து, பிரிட்டிஷ் ஆட்சியினாலும், பல்வேறு காரணங்களாலும் துவங்கின.

திரு வே. தங்கப்பாண்டியன் : இந்தக் கொள்கையை அறிவிக்க மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு என்ன தைரியம் வேண்டும்? என்ன தைரியத்துடன் இந்தக் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள்? புதிதாக ஏதாவது தைரியம் இருப்பதாக உறுப்பினரவர்கள் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன்; உறுப்பினரவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை மாற்றுகிற முயற்சியிலும், இதற்கு முன்னால் இருந்த அரசு செய்த தவறுகளை சரிக்கட்டும் முயற்சியிலும், ஒரு தொழில் கொள்கையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நான் சொன்ன வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு 'என்ன தைரியம்' என்று கேட்கிறார்களென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'தைரியம்' என்பதற்கு 'உறுதி' என்ற பொருளும் உண்டு.

திரு. ஜி. சுவாமிநாதன் ; அடிக்கடி தலைவரவர்கள் உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்களுக்கு 'ஆபத்பாந்தவன்' ஆகச் சென்று, சொல்லுவது ஏன் என்று புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :- அவசியம் ஏற்பட்டால், தங்களுக்கும் 'ஆபத் பாந்தவன்' ஆக வருவேன். இல்லாவிட்டால் 'போர்' அடிக்கும்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பல நேரங்களிலே சிக்கல்களிலே மாட்டிக் கொள்வதை மறந்து விடுகிறார். அவருக்கு மறப்பது சுலபமாக இருக்கிறது. எனக்கு 'ஆபத்பாந்தவன்' ஆக தலைவரவர்கள் வருவதற்குப் பெருமைப்படுகிறேன்.

1978 மார்ச் 27] (திரு. க. அறிவழகன்)

உண்மையிலே இந்த சமுதாயத்தில் ஆபத்தில் பலர் இருக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலையிலே, இந்த ஆட்சி அமைவதற்குப் பல கருத்துக்களை சொல்லியிருக்கிறோம். இந்தச் சமுதாயம் எத்தகைய அபாயகரமான நிலையில் இருக்கிறது; இதை மாற்றியமைக்க நிதி ஆதாரம் அதிகமாக இல்லாத நிலைமையில் ஒரு மாநில அரசின் கையிலே சமுதாயம் சிக்கிக் கொண்டிருப்பதையும், அந்தச் சமுதாயத்தை முழுவதும் மாற்ற வேண்டுமென்ற உறுதி படைத்துள்ள முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோமென்பதையும்தான் நான் எடுத்துச் சொன்னேன். அதற்காகத்தான் சமுதாயத்தின் பிரச்சினைகளை அங்கொன்றும், இங்கொன்றுமாக எடுத்து விளக்கிக் காட்டினேன். உலகில் தொழிற்சாலைகள் வளர்ந்து கொண்டு போகின்றன என்று சொன்னாலும், அந்தத் தொழிற்சாலைகள் மிகச் சிறு அளவில் வளர்கின்ற, வெகுவாக முன்னேற்றம் அடையாத நம்முடைய நாட்டிலேகூட மிகப் பெரிய அளவில் தீங்குகள் வர ஆரம்பிக்கின்றன. வாணியம்பாடி போன்ற ஊர்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருப்பதால், நல்ல குடிநீர் பெற முடியாத நிலையில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள், அங்கே பல பேர்கள் வசதியற்றவர்களாக இருக்கிறார்களென்று சொன்னார்கள். வசதியுடையவர்கள் அதற்குரிய மாற்றங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது; அங்குள்ள பல தொழிலாளர் குடும்பங்களைச் சந்திக்கிற நேரத்தில் அவர்கள்கூட கழிவு நீரைச் சுத்தமாக்கும் கருவிகளை அமைக்கவில்லை என்பது தெரிகிறது. மேலை நாடுகளில் பல கோடிக் கணக்கான ரூபாய் செலவழித்து, தொழிற்சாலைகளிலிருந்து 'பொல்யூஷன்' இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். துணைத் தலைவரவர்களே, இந்த உலகத்தில் நாம் எவ்வளவு ஆண்டுகள் இருப்போம் என்பது கேள்வி. இந்த உலகமே எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்பது மற்றொரு கேள்வியாகும். ஏனென்றால் விஞ்ஞான வளர்ச்சி வந்த பிறகு, உலகத்தில்....,

திரு. ஜி. சுவாமிநாதன் : 'எவ்வளவு நாட்கள் உயிரோடு இருப்போம்' என்று தலைவரவர்களைப் பார்த்து ஏன் உறுப்பினர் கேட்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன் : துணைத் தலைவரவர்களின் மூலமாக நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களைக் கேட்டேன். இந்த உலகம் எவ்வளவு ஆண்டுகளுக்கு இருக்குமென்ற சந்தேகம் எனக்கு எப்படி ஏற்பட்டதென்றால், விஞ்ஞான வளர்ச்சி காரணமாகத்தான். விஞ்ஞான வளர்ச்சி காரணமாக சந்திர மண்டலம், செவ்வாய் மண்டலம் ஆகியவற்றிற்கு 'செட்டிலைட்' அனுப்பி ஆராய்ந்த பிறகு ஒன்று தெரிந்து விட்டது. மனிதன் வாழக்கூடிய ஒரு கிரகம் பூமிதான். வேறு எந்த கிரகத்திலும் மனிதன் வாழ முடியாதென்று தெரிந்து விட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ; இதுவரையிலே ;

திரு. க. அறிவழகன் : தலைவரவர்கள் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று விரும்புகிறார்களென்று கருதுகிறேன். நம்முடைய முதலமைச்சரவர்கள் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ; எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; நான் சொன்னது என்னைச் சுட்டிக் காட்ட அல்ல. தலைவரவர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள் என்று சொன்னேன்.

திரு ஜார்ஜ் கோமகன் ; மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் பேசியதிலிருந்து, அவர்கள் நீண்ட நாட்கள் வாழ விரும்பவில்லை என்று நான் கருதுகிறேன். அவர் அப்படி ஆசைப்படுகிறாரா ?

திரு. க. அறிவழகன் : அதற்குத்தான் பதில் சொல்ல வந்தேன். இந்த உலகம், தூய்மை கெடுவதால் அழிந்து வருகிறதென் பதற்கு நான் நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சொல்ல முடியும். நம்முடைய நாட்டு மகளிர் சிகரெட்டு குடிப்பதில்லை. ஆனால் பஸ் ஸ்டாண்டிலே நிற்கிற ஒரு மகள் பேருந்துகளிலிருந்து அல்லது லாரிகளிலிருந்து வருகிற புகையை 3 நிமிட நேரம் அல்லது 5 நிமிட நேரங்கள் சுவாசித்தால் 100 சிகரெட்டுகள் புகைப்பதால் ஏற்படும் தீங்கு அவர்களுக்கு வருகிறது. அவர்களுக்கு 'கேன்சர்' வரும்போது, 'ஏன் வருகிறதென்று தெரியவில்லையே, எந்தத் தீய பழக்கமும் இல்லையே, அது வருகிறதே, என்று அதை நினைத்து வருந்துகிறார்கள். ஆக 'பொல்யூஷன்' எவ்வளவு ஆபத்தானது என்பது மாத்திரமல்லாமல் உலகத்திற்குள்ள ஆபத்தையும் சொல்லி விட்டார்கள். பொல்யூஷனால் வாயுமண்டலத்தின் தூய்மை கெட்டுப் போகிறது. வளர்ந்துள்ள நாடுகளிலுள்ள தெர்மல் பவர் ஸ்டேஷன்கள் வழி மண்டலத்தில் சூட்டை ஏற்படுத்துவதால், வட துருவத்திலும் தென் துருவத்திலும் இன்று ஐசாக உறைந்திருப்பவை உருகி உலகத்தையே மூழ்கடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 1972-ல் நடைபெற்ற ஸ்டாக்ஹோம் மாநாட்டில் உலகத் தூய்மைப் படுத்தும் மாநாட்டில் "There is only one world and there is only one life to live" என்று சொன்னார்கள். ஒரே ஒரு உலகம்தான் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் ; இன்றைய தினம், மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் தொழில் துறையைப் பற்றிப் பேசுகிறார்களா, சுகாதாரத்தைப் பற்றிப் பேசுகிறார்களா

என்பதை அறிய விரும்புகிறேன். "பொல்யூஷன்" என்பது சுகாதாரத் துறையில் முக்கியமான பகுதி. இன்றைக்குத் தொழில் துறை கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு க. அறிவழகன் : தொழில்களை வளர்த்து, அதனால் தூய்மை கெடுவது பற்றிப் பேச ஆரம்பித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கருதுவதுபோல், நல்வாழ்விற்கு ஏற்படுகிற தீமை என்பதால், மக்கள் நல்வாழ்வோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், தூய்மை கெடுவதற்கான ஆரம்ப இடம் தொழில் துறை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் தூய்மை கெடுவதற்குக் காரணமாக அமைந்துவிடப் போகிறார்களோ என்ற பயம் இருக்கிறது. காரணம் இன்னும், அனல் மின் நிலையங்களை அதிகப்படுத்தினால், அதனால் தூய்மை கெடுகிற நிலைமையும் அதிகமாகும். தூய்மை கெடுவதை இப்போதே தடுக்கவில்லை என்றால், நம்முடைய எதிர்கால சந்ததியினர் நல்வாழ்வு வாழ முடியாது. அதற்காக எல்லாத் தொழிற் சாலைகளையும்....

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் ; 'மூடிவிட வேண்டும்' என்கிறீர்களா ?

திரு. க. அறிவழகன் ; தூய்மை கெடாத வகையிலே தொழில்கள் நடக்கத் தக்க வகையிலே சட்ட திட்டங்களைக் கடுமைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ; திரு. சுவாமிநாதன் அவர்கள் 'ஆபத்பாந்தவன்' என்று சொன்னார். அதனால் ஒரு முறை ஆபத்தை உண்டாக்கலாம் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. க. அறிவழகன் : நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 100 கோடி ரூபாய் அளவில் ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைக்கப் போகிறோம் என்று பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி போன்றவர்கள் நடத்துகிற பத்திரிகைத் தொழில்களுக்கு,—அவர் பத்திரிகைத் தொழிலை நடத்துகிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை— நல்ல தாள்கள் கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல புத்தகங்கள் கிடைக்கும். மேலும் வேலைவாய்ப்பும் கிடைக்கும். காகிதத் தொழிற்சாலைதான் அதிகமாகத் தூய்மையைக் கெடுக்கிறது. அரசாங்கமே தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதால், அதைத் தடுப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற வகையில் காகிதத் தொழிற்சாலையை அரசாங்கமே ஆரம்பிப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரில், எழும்பூரில் ஒரு மாநில பெண்கள் பள்ளி இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு தார் தொழிற்சாலையை நம்முடைய மாநகராட்சி வைத்திருக்கிறது. அதிலிருந்து வருகிற புகை.....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ; ஒரு தொழிற்சாலையையும் விடமாட்டீர்கள் போல் இருக்கிறது.

திரு. க. அறிவழகன் : அத்தொழிற்சாலையிலிருந்து வரும் புகையினால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதன் பக்கத்திலுள்ள உலக யூனிவர்சிட்டி சென்டரில் உள்ளவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

சிறு தொழில்கள் வளருவதற்கு நாம் போதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சோப்புக்கு வரி விதித்ததைப் பற்றி வருத்தப்பட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட, ''நம்முடைய நிதியமைச்சர் திரு. மனோகரன் அவர்கள் பார்ப்பதற்கு நல்ல முறையிலே ஆடை அணிந்து வருகிறார்கள். ஆனால் சோப்புக்கு ஏன் வரி விதிக்கிறார் என்று தெரியவில்லை'' என்று நகைச்சுவையாகச் சொன்னார்கள். நான் சொல்லுவேன், கைத்தொழில்கள் வளர வேண்டுமானால், நிச்சயமாக மல்டி நேஷனல் கம்பெனிகளால் தயாரிக்கப்படும் சோப்புக்கு வரி விதித்தேயாக வேண்டும். 200 கோடி ரூபாய் அளவுக்கு முதல் போட்டு இந்த சோப்பைத் தயாரிக்கும் முதலாளிகள் யார் என்பது தெரியாது. அவர்கள் எங்கும் நிறைந்திருப்பவர்கள்.

திரு. ஜார்ஜ் கோமகன் : துணைத் தலைவர் அவர்களே, மத்தியத் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள், நான் வரவேற்கிறேன். கைத்தொழிலின் மூலம் சோப்பைத் தயாரிக்கலாம். ஆனால் ரூ. 150 கோடி முதலீடு செய்திருக்கிறார்கள் ஒரே ஒரு தேசிய நிறுவனம். மாண்புமிகு தலைவர் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள என்று கருதுகிறேன். அது காந்தியடிகள் கூட பாராட்டிய கல்கத்தா கெமிக்கல்ஸ் நிறுவனம். அவர்கள் இருநூறு கோடி ரூபாய்க்கு சோப்பு தயாரிக்கிறார்கள். சென்னை நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கைத்தொழில்களின் மூலமாக சோப்பு தயாரிக்கிறார்கள். ஏராளமான அளவில்

சோப்பு உற்பத்தியாகின்றது. சோப்புக்குவரிவிதிக்க வேண்டுமென்ற நிலைமை எப்படி ஏற்படுகிறதென்றால், இந்த நாட்டிலே ஏகாதிபத்தியம் கொண்டிருக்கிற பெரும் முதலாளிகள் சிறு தொழில்களை நசுக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதால்தான்.

பட்டை போட்ட வேட்டிகளைத் தயார் செய்வதைக் கைத்தறிக்கென்று விட்டுவிட வேண்டுமென்றும், அந்தத் துணிகளை மில்கள் உற்பத்தி செய்யக் கூடாது என்றும் சொல்லப்பட்ட கருத்து இன்னும் முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. ஒருவேளை திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களை அணுகி, இதை முழு அளவில் நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன். இது குறித்து அண்ணா அவர்கள் காலத்திலேகூட ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. பணத் தோட்டம் என்ற புத்தகத்திலே அண்ணா அவர்கள் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. வில்வம் அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் போடப்பட்டிருக்கிற சோப்பின் மீதான வரியானாலும், வேறு பொருள்களின் மீது போடப்பட்டிருக்கிற வரியானாலும், இந்த வரிகள் திட்டவட்டமாக இந்த நாட்டிலே இருக்கிற சிறு தொழில்கள் வளருவதற்கான முழு வாய்ப்பைத் தந்திருக்கிறதைச் சொல்லி, தலைவர் அவர்களே, நீங்கள் அடிக்கடி கண்களைச் சிமிட்டுவது, என்னுடைய நேரத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதால், இத்துடன் முடித்துக் கொண்டு எனக்குக்கூட பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

* THIRU D. V. D'MONTE : Hon. Deputy Chairman, Sir, a welcome feature in the Policy Note on Industrial Development is the identity of approach between the State Government and the Central Government in the new revised policy, namely, top priority to be given to small scale, cottage and rural industries. Sir, a similar approach and thinking is necessary where industrial policies are concerned and this could be of crucial importance to the State and the Centre and the nation benefits as a whole. In the past, even when the same party was in power in the Centre and in the State, the approach was not always on the same lines. Very often there used to be conflict of interests in the policies announced by the Centre and by the State. You are well aware of the fact that there had been a bitter conflict among the States themselves as to what type of priority industries they should [illegible] their own State. Today there is a shift in the emphasis fr[illegible] industries to small industries. The unseemly competition be[illegible] States no longer exists. Therefore, it is good that the State

[Thiru D. V. D'Monte] [1978 மார்ச் 27

ment have adopted the new industrial policy and as far as the Centre is concerned, there can be no mental reservation to accommodate the States to the maximum possible extent.

It is, therefore, in the fitness of things that somthing like 504 products have been specially reserved for cottage, rural and small scale sectors. The development of these sectors is to give overwhelming importance to our State. Let us for a moment forget the large industries and medium scale industries. We should now concentrate on how best we can make the small scale, rural and cottage industries work effectively and take a rightful place in the economy of the States.

[நண்பகல் 12-00]

In Tamil Nadu, there are 40,000 small scale industries. They are providing employment for almost four lakh persons. According to the Policy Statement, the State proposes to start some more industries (10,000 units) within a period of one year. Sir, this appears very good on paper. But, how is this going to be achieved in the most practical and effective manner? Have we really understood the problems of the small scale sector? I have had occasion, since the present Government had come to power in this State, to speak in this very House about the numerous and serious problems of the small scale sector. If the Government are earnest in developing this sector, it should come to grips with the existing difficulties that are faced by this sector.

Sir, it is easy to register small scale units on paper. But the important thing is to make them viable propositions within a reasonable period of time. The chief aim apparently is to generate employment and make use of the abundant manpower that is available in our State. But what really takes place is that by setting up more industries, we create more problems and more number of sick industries. I shall go into some of the reasons which cause this. Many small scale industries are allowed to come up for the manufacture of products in the same line. This results in a large number of small scale units with the same output and machinery being forced to go to the same large industry to secure their orders. What happens is that large industries virtually exploit the small scale industries and they are forced to manufacture items even below cost. A type of auction takes place all round with the large scale manufacturer on the one side and the number of competing small scale manufacturers on the other, in which the only beneficiary is the [illegible]cale industry. Hence, my plea is that some safeguards should [illegible]ided whereby smaller industries are protected from exploitation [illegible]e industries.

சட ... இருநாறு நகரத்தி களின் பு

1978 மார்ச் 27] [Thiru D. V. D'Monte]

Sir, let us take the burden of interest. The interest rates were considerably enhanced some years ago. While there might have been need for enhanced rates for all types of factories, big and small, this has had a very adverse effect as far as small-scale industries are concerned. This is due to the fact that the very operation of small scale industries is based on high debt-equity ratio as compared to what prevails in big industries. Thus, the cost of interest in the case of small-scale industries is always on the high side as compared to what obtains in the larger industries. I will quote an example. The interest factor which was approximately 5 per cent of selling price in 1973 is today as high as 9 or 10 per cent of the selling price. In the case of large industries, this percentage has had no material effect at all. Probably, it has affected 1 or 2 per cent to 3½ or 4 per cent as compared to 9 or 10 per cent which the small-scale industries have got to face. Now, it will be seen that the interest burden takes away a big chunk of margin left on the selling price and it adds considerably to the cost and affects the margin of profit. Especially, during the last two or three years, because of the serious recession in the automobile industry and also due to power-cuts, many small-scale industries have suffered very heavy losses which in turn has increased their borrowing so much that the interest percentage on selling prices is prohibitive today. Therefore, in order to make the small-scale industries viable, some concession will have to be shown in regard to interest-rates. Apart from this it must also be considered whether we should impose an interest burden on big industries who utilise the services of small industries and who would take their own time in paying their bills.

Sir, let us consider power-supply. Today, load-shedding has become a regular feature while the restriction imposed on peak-hour loads has become almost the order of the day. There have been so many power-cuts during the last five years and what is going to happen during this year or the next is anybody's guess. So, when sufficient power is not available, the small-scale industries are forced to go in for purchase of generating sets. Despite the lack of power, they cannot lay-off their workers because they are expected to provide work to carry on whether they have generating sets or not. The expenditure on the yearly maintenance of these generating sets comes to about Rs. 5,000 to Rs. 10,000 a year. Where is this money to come from? It cannot come from the capital because their resources are very limited. Unless the Banks and the financial institutions come forward to defray or meet this yearly expenditure on maintenance, the problem of these industries will continue to remain.

[Thiru D. V. D'Monte] [1978 மார்ச் 27]

Sir, there are numerous other problems. Perhaps, the most significant disability which the technician and particularly the better qualified one faces today is the inability to adapt to people and the tendency to rub key-persons on the wrong side. To put it bluntly, the world of business and industry needs a thick hide and thin samples and a certain pliability in morals and modes if an entrepreneur is to survive. This is true where at all levels of administration there are sharks who have to be handled circumspectly. To come to the other side of the picture, how much of the official pronouncements and propaganda and pullyhoo about the incentives and aids is the truth. I would say that it is precious little. There appears to be a yawning gap between promise and performance, between intent and content of administrative actions and between the propaganda and practice of financial institutions.

Speaking about banks, they publicise that they give margin free loans and easy credit to industrialist in the small-scale sector. But actually, they hunt around for maximum amount of security, which cannot be ordinarily provided by small scale industries. They will be prepared to lend even 3 umbrellas—until it rains when they will withdraw all of them. It is remarkable how the goodwill and sympathy dries up overnight, the moment one is in trouble and desperately, needs finance to tide over a crisis. It makes no difference whether you are a technical entrepreneur or a tradesman, whether you are making a micro computer or toffees. Banks do not seem to be interested in preferentially promoting industries with high technological content.

I may be pardoned for speaking out, but I speak with first hand knowledge of small-scale industries and with the wealth of information that I have been able to gather in recent years. "Do you know? A technician friend of mine told me : If you go to the S.I.S.I., you are offered project feasibility reports which are not worth the paper on which they are printed and whose data is more than 10 years old." Another and to me: "Most of my time is spent in dealing with 15 and odd Government Departments and agencies and officers whose only objective seems to be the harassment of industrialists." They are a unhelpful ruddersome autocratic lot. They take advantage of the fact that no person can sincerely adhere to the jingle of industrial, labour, tax, Social Welfare, Company and other laws, and yet pay adequate attention to the running of the company. Another friend also says: "Most of us technician entrepreneurs are small scale industrialists more interested in developing

[1978 மார்ச் 27] [Thiru D. V. D'Monte]

and making our products. But the bureaucrats give us no respite." Yet another technician complained : "Foreign exchange clearance, custom duty drawbacks, export cash incentive capital goods clearance and all other items are regularly delayed and small people like us have to go running from office to office chasing files." "Another technician said: "Who said that the State Government had streamlined the procedure for entrepreneurs? Do any of them have a single high power committee to which alone the entrepreneurs need go for all clearances? Do the officials go out of their way, to help the entrepreneurs to get the road blocks cleared?" I have already spoken on the attitude of big industries. The universal complaint I get is that big industries, as I stated already, exploit small industries in delaying payment of their bills. In other words, the giant industries are subsisting on the imposed credits they can manage to get from a number of small scale industries. I would say that the worst offenders are some of our public sector undertakings who, without reason, hold up payment of bills. One of my friends says that he has to grease the palms of the Accounts and Inspection Staff before he gets payment for his bills. If these are some of the numerous and various

(பிற்பகல் 12·10)

problems facing small-scale industries, I would ask whether the existing set up of the Director of Industries and Commerce, even in co-ordination with the SIDCO, can touch even the fringe of these problems. If the new industrial policy of the State has got to work and to work effectively, there is need for setting up a separate Directorate for small-scale, rural and cottage industries. The time has come for concentrated and prompt attention not only to develop but also to promote sick industries and new industries. There is also need for financial institutions to deal separately with the problems of small-scale industries. The time has come for a change lock, stock and barrel. Government must ensure that the 504 items which have been specially reserved for small-scale industries are not given to the big industries to exploit.

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமை)

By the same token, small-scale industries must keep out of producing items which the artisans in the countryside could make in their cottage industries. By the same token, the State Government also should keep out of such industries where small units can

benefit and carry on their work. In this connection, I must make a passing reference to the policy as far as black granite is concerned. Here, the State Government have taken over this industry where a number of small-scale people can do the same work profitably and probably more efficiently.

Government must ensure that big factories confine themselves only to such items which do not touch the products of small-scale industries and that they work exclusively in producing goods they alone can do to the exclusion of small-scale industries. Today, we see that big factories are manufacturing a range of products which the small-scale and cottage industries are well-equipped to do. There is much relevance in the argument of our Union Industries Minister, Thiru George Fernandes, that firms like WIMCO and Hindustan Lever have got to diversify or quit. Rather than selling their products at home, these firms should find foreign markets for their products leaving the small-scale industries thoroughly to exploit their own range of items.

I do not wish to dwell on the serious labour problems that exist in the State. Today, probably, in all the industrial estates—and even in a tiny unit—there is some labour problem or the other. I feel that the labour laws must be simplified and restructured if the entrepreneurs are to devote attention to their work rather than spending their time in Labour Courts.

Sir, there is also the problem of marketing. The entrepreneurs are short of know-how and finesse. Their ignorance is not so much in knowing where the market lies but in such things as organising an outlet networks, pricing, discounting, bargaining and striking while the iron is hot.

Sir, my final plea before closing is that, if the new policy in respect of small-scale industries and cottage industries is to work, these are some hard decisions Government must be prepared to take. take.

Thank you.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி'மாண்டி அவர்கள் பல முக்கியமான கருத்துக்களை எல்லாம் தொழிற்துறையின் மீது தெரிவித்துள்ளார்கள்.

அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் அனைத்தும் தொழிற்துறை பற்றிய நேரிடையான கருத்துக்களாகும். அவரே ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் என்ற முறையில் அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதாக அவர் குறிப்பிட்டார். கிட்டத்தட்ட அதே முறையில்தான் நானும் சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. டி'மாண்டி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையொட்டியே நானும் என்னுடைய பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கருதுகிறேன். திரு. டி'மாண்டி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்தியில் ஆட்சி புரியும் ஜனதா அரசாங்கத்தின் தொழிற் கொள்கையும் நம்முடைய மாநிலத்தில் ஆட்சியில் உள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் தொழிற் கொள்கையும் ஒரே மாதிரியான கொள்கைகள் என்பதால், அவர் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்கள். சில சந்தர்ப்பங்களில் மாநில ஆட்சியில் ஒரு கட்சியும் மத்தியில் உள்ள ஆட்சியில் வேறான ஒரு கட்சியும் இருந்து, வேறுபட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், இங்கே உள்ள அரசின் தொழில் வளர்ச்சிக் கொள்கைக்காக நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்தக் கொள்கை மாநில அரசின் கொள்கை என்பதாலும் பாராட்டுகிறேன். மத்திய அரசின் கொள்கை என்பதாலும் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் இதைப்பற்றி என்ன கருதுகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. ஜனதா ஆட்சிக் கொள்கையைப் பாராட்டுகிறீர்களா என்று கேட்கக்கூடும்.

இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தொழில்களை வளர்க்க பெரும் செலவு செய்த பிறகு, இன்றைய தினம் தொழில் துறையைப் பார்த்தால், அது மிகவும் பின்தங்கிய நிலைமையில்தான் இருக்கிறது என்பதை உணர முடியும். இந்த நாட்டில் இருக்கிற மக்கள் பெருக்கம்—பாப்புலேஷன் எக்ஸ்பிலோஷன் என்ற அடிப்படையில் பார்க்கிறபோது, தொழில் வளர்ச்சி என்பது ·5 சதவீதம் என்ற அளவில் தான் இருக்கிறது.

30 ஆண்டுகளாக ஒரேவிதமான கோட்பாடுகளைக் கடைப்பிடித்து, அன்றும் பிறகு வேறு சில யுக்திகளைக் கடைப்பிடித்து, அவைகளும் சரியாக இல்லாத காரணத்தால், 5 ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு, இன்றைய தினம் திட்டம் தீட்டுபவர்களால் என்ன சொல்லப்படுகிறது என்றால், இந்த நாட்டில் ஏழைகள் 30 மடங்கு அதிகரித்து விட்டார்கள் என்பதாகும். அதாவது ஏழ்மை நிலைக்குக் கீழே இந்த நாட்டில் உள்ள 40 முதல் 60 சதவீத மக்கள் போய்விட்டார்கள்; இவ்வளவு

தொழில் வளர்ச்சிக்குப் பிறகு, அதிகமான மக்கள் ஏழ்மை நிலைக்கும் கீழே போயிருக்கிறார்கள். ஒருமுறை பாராளுமன்றத்தில் அங்கே இருந்த உறுப்பினர் திரு. பிலுமோடி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக, 20 சதவீத மக்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இப்போது ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றிய பிறகு நாட்டில் உள்ள மக்களில் 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தால் 55 முதல் 60 சதவீத மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே போய் வாழ்க்கை நடத்துவார்கள். எனவே இந்தியாவில் உள்ள அத்தனை பேரும் வறுமை நிலைக்கும் கீழே போய் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால், எவ்வளவு திட்டங்களை அரசாங்கம் போட வேண்டும் என்று பாராளுமன்றத்திலே கேட்டார்கள். அந்த நிலைமைதான் இருந்து வந்தது.

இதன் காரணமாகத்தான் தொழில் துறையில் ஒரு அத்தியாவசியமான மாறுதல் ஏற்பட்டாக வேண்டும் என்ற கொள்கையை மத்திய அரசு மேற்கொண்டதற்காக அதை நான் பாராட்டுகிறேன். இந்த நாட்டுத் தொழிற் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தியதோடு, குறைந்த அளவு மூலதனத்தைப் போட்டு, அதிகமான டர்ன்ஓவரை ஏற்படுத்தியது — அதாவது அதிகமான வியாபாரத்தை உண்டாக்கியது எது என்று பார்த்தால், பெரிய தொழில்களை விட சிறிய தொழில்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை. சிறிய தொழில்கள் தான் போடப்பட்ட முதலீட்டைவிட 8 மடங்கு அதிகமான வியாபாரத்தைச் செய்து வருகின்றன. ஒரு கோடி ரூபாய் சிறிய தொழில்களில் முதலீடாகச் செய்யப்பட்டிருந்தால், 8 கோடி ரூபாய் அளவுக்கு அதில் வியாபாரம் செய்ய முடிந்திருக்கிறது. ஒரு பெரிய தொழிலை எடுத்துக்கொண்டால், 1 கோடி ரூபாய் மூலதனம் போட்டால், 1 கோடி ரூபாய் அளவுக்குத் தான் வியாபாரம் செய்ய முடிந்திருக்கிறது. நாட்டில் உள்ள மூலதனப் பற்றாக்குறை காரணமாக – scarcity of capital எந்தத் தொழிலை ஆரம்பித்து தொழிற் பெருக்கத்தை ஏற்படுத்துவது என்றால், சிறிய தொழில்களைத்தான் ஆரம்பித்து ஊக்குவிக்க வேண்டும். சிறு தொழில்களில் போடப்படும் மூலதனத்தின் காரணமாக எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்று பார்த்தால், 3.5 சதவீதம், 4 சதவீதம் பேர்கள் வேலை செய்கிறார்கள். அதாவது நாம் போட்ட மூலதனத்திற்கு வேலை செய்கிறவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், சிறு தொழிலில்தான் அதிகமான அளவு இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். அந்த அளவுக்குப் பெரும் தொழில்களில் வேலை பார்க்க முடியாது. எனவேதான் இன்னும் அதிகமாக சிறு தொழில்களை அபிவிருத்தி செய்தாக வேண்டும்.

சிறு தொழில்கள இந்தியா முழுவதற்கும் பரவலாக இருக்கிற தொழில்கள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் தொழில்களை அமைக்க வேண்டுமென்றால், சிறு தொழில்களைத்தான் தேர்ந்தெடுத்தாக வேண்டும். தற்போது மினி செக்டார் என்று ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. அதாவது ரூ.1 லட்சத்திற்குக் குறைவாக ஒருவர் மூலதனம் போட்டால், அது மினி செக்டாரில் வருகிறது. இதற்கு முன்னால் ரூ 5 லட்சம் முதலீடு போட்டால், அது சிறிய தொழில். அது அடுத்து 7 லட்சம் ரூபாய் முதலீடு என்று மாற்றப்பட்டு, பிறகு அதுவே 10 லட்சம் ரூபாய் முதலீடு என்று மாற்றப்பட்டு, பிறகு மூலதனத்தைப்பற்றிக் கவலைப்படாமல் அதிலே ஈடுபட்டுள்ள நபர்கள், ஆட்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, சில தொழில்கள் சிறு தொழில்கள் என்று வரையறை செய்யப்பட்டன. இப்போது ரூபாய் 1 லட்சத்திற்கும் குறைவாக ஒருவர் மூலதனம் போட்டு, ஒரு தொழில் ஆரம்பித்தால், அது மினி செக்டார் என்று சொல்லப்பட்டு, அதற்கு அதிகப்படியான அளவுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதிகமான அளவுக்கு மக்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் நிலைமையை உருவாக்குவோம் என்கிறார்கள். இதுதான் ஜனதா கட்சியின் தொழில் கொள்கை. அவர்கள் இன்னொன்றையும் சொல்கிறார்கள். நாட்டில் இருக்கிற ஏழ்மை நிலை அகன்றால்தான், நாட்டில் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி உண்டாக முடியும் என்கிறார்கள்.

தொழில்களை ஆரம்பிப்பது என்பது மிகச் சுலபம். தொழில்களை நடத்துவதுதான் முக்கியம். அதிலும் தொழில்களை லாபகரமாக நடத்துவது மிகவும் முக்கியம். அதிலும் முக்கியமானது தொழில்களைத் தொடர்ந்து நடத்துவது. நான் சென்ற முறை இங்கே பேசும்போது, எப்படி தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு மூடப்படுகின்றன என்பதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றேன். 40,000 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கணக்குக் கொடுக்கப்பட்டபோது, நான் இங்கே அவையிலே குறிப்பிட்டேன். அதற்கு ஒரு பாட்டைக்கூடச் சொன்னேன். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவிலும் இருக்கலாம். ''முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டி வைத்தேன், இரண்டு குளம் பாழ், ஒன்றில் தண்ணியே இல்லை'' என்று சொல்வது போல் 40,000 தொழிற்சாலைகளை ஆரம்பித்தோம், அதில் 10,000 தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. 10,000 தொழிற்சாலைகள் நடைபெறவில்லை என்றெல்லாம் சொன்னேன். இப்படி ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அப்படி ஆரம்பிக்கப்படும் சிறு தொழில்களின் மூலமாக உற்பத்தியாகும் பொருள்கள் மக்களால் வாங்கப்பட வேண்டும். இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் 75 முதல் 80 சதவீத மக்கள் கிராமங்களிலே இருக்கிறார்கள்.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1978 மார்ச் 27

(பிறபகல் 12-20)

கிராமத்தில் இருக்கிற மக்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால்தான், அந்தப் பொருள்களை வாங்க முடியும். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வியாபாரம் ஆரம்பித்து, வாங்குவோர் இல்லை என்றால், கடையை மூடவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே ஜனதா கட்சியின் முக்கியமான கொள்கையை, அதாவது கிராமப் புறப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதன் மூலம் வளப்படுத்துவதன் மூலம் தொழில்கள் வளர்ச்சி அடைய முடியும் என்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அந்த அடிப்படையில் தொழில் வளர்ச்சிக் கொள்கையை மாநில அரசாங்கம் கொண்டு வந்ததற்கு நான் பாராட்டுகிறேன். நான் திரு. டி'யான்டி கட்சியில் இல்லாவிட்டாலும், வேறு யார் சொன்னாலும், நல்ல கொள்கை பாராட்டப்பட வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லுகிறேன். மத்திய அரசும் மாநில அரசும் கலந்து கொண்டு, சில தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டியிருக்கின்றன. சில பிரச்சினைகள் மத்திய அரசுக்கும், சில பிரச்சினைகள் மாநில அரசுக்கும் என்று வருகிறது, அவைகள் சேர்ந்து வருவதில்லை. ஒன்று இரண்டு பிரச்சினைகளைத் தொட்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒன்று இன்றைய தினம் மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில், 'எக்சம்ஷன் ஆன் இகுவிட்டி' என்ற அளவில் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் தொழிலில் முதலீடு செய்வதற்கு யாரும் அக்கறை காட்டவில்லை. எங்களைப் போன்றவர்களுக்கும் தெரியும். அதிலும் லிமிடெட் கம்பெனியை ஆரம்பித்து ஷேர் போட வேண்டுமென்றால், அதில் யாருக்கும் அக்கறை இல்லை. நடத்துகிற மேனேஜிங் டைரக்டர், டைரக்டர் என்ற காரணத்தால் போடப்பட்டிருக்கிற பணத்தில் தானே நிர்வகித்து வரக்கூடிய லாபத்தில் ஊதியம் பெற்றுக் கொள்ளக்கூடிய வளர்ச்சி இருந்தால், அந்த கம்பெனியில் யாரையாவது போய் 'அன்பர்களே, ஷேர் போடுங்கள்' என்று கேட்டால், யாரும் போடுவதில்லை. காரணம் ஷேர் போட்டு 5,6 ஆண்டு காலத்திற்குப் பிறகு, நன்கு நடக்கிற கம்பெனியாக இருந்தால் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய முதலாளியாக அவர் இருந்தால், இகுவிட்டி டிவிடென்டு கிடைக்கும். 20 ஆண்டு காலம் டிவிடென்டு கொடுக்காமல் அவர்களே சௌகரியமாக இருக்கும் கம்பெனிகள் இருக்கின்றன. நல்லவராக இருந்து லாபத்தைப் பெருக்கி, பெருகிய லாபத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மனப்பான்மை முதலாளிக்கு இருந்தால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் போட்ட பணத்திற்கு 8 சதவீதம் வட்டி கிடைக்கும். முதலில் 6 சதவீதம் என்று ஆரம்பிப்பார்கள். இரண்டாவது ஆண்டு 8 சதவீதம் கொடுப்பார்கள். 4,5 ஆண்டுகளுக்குப் பிறகு 12 சதவீதம் என்று கொடுப்பார்கள். பல லட்சக்கணக்கில் லாபம் வந்தாலும், வங்கியில் போட்டால் நல்லது என்று நினைப்பதால், பலர் பணம்

1978 மார்ச் 27] [திரு. ஜி. சுவாமிநாதன்]

போடுவதில்லை. ஆகவே இன்றைய தினம் ஜனதா அரசு போட்டிருக்கிற பணத்தில் ரூ.10 ஆயிரம் வரையில் 50 சதவீதம் எக்சம்பஷன். பத்தாயிரம் ரூபாய் வரை இன்கம்டாக்ஸ் ரிபேட் கொடுப்பது போல் ஒரு ஏற்பாடு செய்தால், மாநிலத்தில் தொழில்களை ஊக்குவிக்க முன்மாதிரியாக இருக்கிறது என்று வருவார்கள்,

அடுத்து, ஒன்று இரண்டு குறைபாடுகளை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்ல வேண்டும். முக்கிய குறை கண்ணில்படுவது மத்திய கலால் வரி. சென்டிரல் எக்சைஸ் டாக்ஸ். மத்திய அமைச்சர் பைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ரூ.15 லட்சம் வரையில் தொழிலில் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு ரூ.5 லட்சம் வரையில் கலால் வரியில் எக்சம்ஷன் கொடுக்கிறேன் என்றார். பார்ம சூட்டிக்கல்சைப் பொறுத்தவரையில், 12 சதவீதம் வரையில் வரி கட்ட வேண்டும். ரூ.15 லட்சம் வரையில் முதல் ரூ.5 லட்சத்திற்கு ரூ.60 ஆயிரத்திற்குக் கட்ட வேண்டாம் என்று இருக்கிறது. அதற்கு மேல் போகும்பொழுது, இந்த ரூ.60 ஆயிரத்திற்கும் சேர்த்துக் கட்ட வேண்டும். ஆகவே அந்தக் கம்பெனியை ஆரம்பித்து, அது வளர வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்த சமுதாயத்திற்கும் இருக்க வேண்டும், அரசுக்கு அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற நினைப்பு இருக்க வேண்டும். ரூ 15 லட்சத்திற்கு மேல் ரூ.60 ஆயிரத்தைக் கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது இரண்டாவது ரூ.15 லட்சம் வரையில் ஒரு விலை, அதற்கு மேல் இன்னொரு விலை என்று விற்க முடியாது. ஆகவே மத்திய சர்க்காருக்கு நம் மாநில அரசு எடுத்துச் சொல்லலாம். எந்த வியாபாரம் செய்தாலும், 40, 50 லட்ச ரூபாய் அளவுக்குப் போனாலும், முதல் 5 லட்ச ரூபாய் வியாபாரத்திற்கு அந்தக் கலால் வரியை வசூலிக்க வேண்டாம் என்று கூற வேண்டும். மத்திய அரசு ரூ.50 லட்சம் வியாபாரம் செய்கிறவர்களைச் சிறு தொழில் நடத்துகிறவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். 'பேசிக் எக்சம்ஷன்' கொடுக்க வேண்டும். இன்கம்டாக்சில், அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்சில், பேசிக் எக்சம்ஷன் இருப்பது போல் இதுவும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்த வேண்டும்.

இரண்டாவது, அட்வர்ட்டைஸ்மென்ட் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். சிறு தொழில்களைப் பார்க்கிறோம். ரூ.100 கோடி வியாபாரம் செய்கிறவர்கள் ரூ.1 கோடி விளம்பரம் செய்ய முடியும். சிறு தொழில் நடத்துகிறவர்கள் ரூ.10 லட்சம் வியாபாரம். இவருக்கு ரூ.10 ஆயிரம்தான் விளம்பரம் செய்ய முடியும். சிறு தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு அதிக விளம்பரம் தேவை. செய்கின்ற பொருள்களைப் பொறுத்து விளம்பரம் தேவை. சோப்பு விளம்பரத்தைப்பற்றி நண்பர் திரு. அறிவழகன் சொன்

னார்கள். சோப்புக்கு டாக்ஸ் போட்டார்கள்- பெரிய கம்பெனிகள் தான் சோப்பைத் தயார் செய்கிறார்கள் என்றார். அந்த அடிப்படையில் சோப்பு, காஸ்மெடிக் போன்றவைகளுக்கு அதிக விளம்பரம் தேவை. பாண்டி அவர்கள் குறிப்பிட்டது போல் சிறு தொழில்கள் உற்பத்தி செய்து பெரிய நிறுவனங்களுக்கு விற்பனைக்குக் கொடுத்துவிட்டால், விளம்பரம் தேவையில்லை. பொருள்கள் அடிப்படையில் அந்தப் பொருள் நேரடியாக மக்கள் வாங்குகிற பொருளாக இருந்தால், அதிக விளம்பரச் செலவு கொடுக்க வேண்டும். அதுவும் சிறு தொழில்களுக்கு இவ்வளவு என்று அறுதியிட்டுக் கூற வேண்டும். எண்டெர்டெயின்மென்ட் செலவுக்கு எந்தத் துறையானாலும் ரூ.5 ஆயிரம் வரை கொடுக்கிறார்கள். அட்வர்டைஸ்மெண்டைப் பொறுத்த வரையில், ரூ.1 லட்சம் வரையில் சலுகை காட்ட வேண்டுமென்று அரசு சொல்லலாம் என்று கருதுகிறேன்.

இன்னொன்று, பப்ளிக் செக்டார். பொதுத் துறையில் பலவிதமான தொழில்களை ஆரம்பித்திருக்கிறோம். பொதுத்துறையைப் பொறுத்த வரையில், சொல்ல முடியும். குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் ஒரு தொழில் லாபகரமாக இருப்பதை அடிப்படையாக வைத்துக் கொள்ள வேண்டும். நான் சொல்லவில்லை மத்திய ஆட்சியில் உள்ளவர்கள் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் நாடான யு. எஸ். எஸ். ஆர். பொதுத்துறை நிறுவனங்கள் குறைந்தபட்சம் லாபகரமாக இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாக வைத்திருக்கிறது. கிட்டத்தட்ட போடுகிற பணத்திற்கு 12 சதவீதம் வரவு வரவேண்டுமென்று சொன்னால், தவறு இல்லை. இங்கே மின்சார அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திரு. ஆர். வெங்கட்டராமன் கமிட்டியில் 9 சதவீதம் வேண்டுமென்று சொன்னார்கள். நீங்கள் லாபத்திற்குக் கொண்டுவர வேண்டும். நம் மாநிலத்தில் 6 சதவீதம் வருகிறது. மற்ற மாநிலத்தில் அதிகம் இருக்கலாம். இருந்தாலும் லாபம் ஓரளவுக்கு வர வேண்டும். அன்றையதினம் டிரான்ஸ்போர்ட் அமைச்சர் பதிலளிக்கும்பொழுது சொன்னார்கள். பாண்டியன், சோழன் என்ற நிறுவனங்களை ரூ.12 கோடி மூலதனம் போட்டு ஆரம்பித்தோம். க்யுமிலேட்டிவ் லாஸைப் பார்த்தால், அதற்குப் போட்ட மூலதனம் ரூ.12 கோடி, ஏற்பட்டிருக்கிற நஷ்டம் ரூ.11.75 கோடி. தனிப்பட்டவர் வியாபாரம் செய்தால் ரூ. 10 லட்சம் போட்டு தொழில் நடத்தினால், தான் போட்ட முதல் போய்விட்டால் அவர் தெருவில் நிற்கவேண்டும். போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பணம் வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டு வாங்கலாம். நஷ்டத்திற்கு யார் பொறுப்பு, எப்படி ஈடுகட்டுவது? மக்களிடத்திலிருந்து ஈடுகட்டவேண்டும். லாபமாக இருந்தால் போடுகிற வரியைக் குறைக்கலாம். போடுகிற சேல்ஸ் டாக்ஸ் யார் தலையில் விழுகிறது? நாட்டில் இருக்கக் கூடிய 85 சதவீதம் பாமர மக்கள் தலையில்தான் வரி விழுகிறது.

டைரக்ட் டாக்ஸை நாட்டிலுள்ள 10 லட்சம் பேர் கட்டுகிறார்கள். எக்ஸைஸ் டூட்டி, சேல்ஸ் டாக்ஸை, 85 சதவீதம் ஏழை மக்கள்தான் கட்டுகிறார்கள். இவைகளை ஏழைகளிடமிருந்துதான வாங்கிக் கொடுக்கிறோம். தொழிலிலுள்ள மூலதனத்தைச் சாப்பிடுகிறோம். இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்பொழுது, பூம்புகார் பற்றி ஒரு குறிப்பை இங்கே காலையில் வைத்திருக்கிறார்கள். மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது. காஸ்ட் ஆப் குட்ஸ் சோல்டு, ரூ 1.06 கோடி வியாபாரம் செய்திருக்கிறார்கள். எவ்வளவு நஷ்டம்? கிட்டத்தட்ட ரூ 8 லட்சம் சென்ற ஆண்டுக் கணக்கு. இது ஒரு துறையைப் பொறுத்தவரையில், அதில் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள்? அட்மினிஸ்டிரேஷன் எக்ஸ்பென்சஸ், செல்லிங் எக்ஸ்பென்சஸ் ரூ25.69 லட்சம். வியாபாரம் ரூ 1 கோடி. கிட்டத்தட்ட 25 சதவீதம் அவர்களுடைய அலுவலகத்தை நடத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் செலவு செய்திருக்கிறார்கள். சாதாரணமாக தனியார் தொழில் நடத்தினால், அட்மினிஸ்ரேட்டிவ் எக்ஸ்பென்ஸ் 5 சதவீதத்தில் நடத்தலாமா 4 சதவீதத்தில் நடத்தலாமா என்று பார்ப்பார்கள், பெரிய பங்களாவில் இருப்பவர்கள் சிறிய குடிசைக்குப் போகலாமா என்று நினைப்பார்கள். சிங்கப்பூரில் பார்த்தேன். கோடிக்கணக்கில் முதல் போட்ட பணக்காரன் எவ்வளவு குறைவான வாடகைக்குக் கம்பெனி கட்டிடத்தை வாங்கியிருக்கிறான், சாதாரண மேஜை, நாற்காலிதான் போட்டிருக்கிறான். இதை சிங்கப்பூர், மலேசியாவில் பார்த்தேன், பொதுத் துறை என்றால், மிகப் பெரிய பங்களா ஒன்றைப் பிடிப்பது, அதற்கான மேஜை நாற்காலிகள் வாங்குவது, குளு குளு அறை அமைப்பது, இவைகளைத் தவறு என்று சொல்லவில்லை. நம்நாட்டு கைவினைப் பொருள்களை வாங்க வருபவர்களுக்கு சோழா ஓட்டலில் ஒரு டின்னர் கொடுக்கலாம், நல்லதுதான். தப்பல்ல. எவ்வளவு அளவில் நிர்வாகச் செலவை நடத்தலாம் என்று பார்க்க வேண்டும்,

(பிற்பகல் 12-30)

அதைப் பார்த்துக்கொண்டுதான் செய்ய வேண்டும். எல்லாத் தொழில்களும் நஷ்டத்தில்தான் நடந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கத்திற்கு, அதனால் பல கேடுகள் வரும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,

அடுத்தபடியாக, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், பொதுத் துறை நஷ்டத்தில் நடந்து கொண்டு வருகிறது என்று சொல்கிறோம். இவைகளை நிருவகிப்பவர்கள் யார்? நிருவகிப்பவர்கள் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, நான் கேள்விப்பட்டேன், இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்கள் என்னென்ன? அந்தப் பொது நிறுவனங்களில் இருக்கக்கூடிய மானேஜிங் டைரக்

டர்கள், நிர்வாக இயக்குநர்கள் எவ்வளவு ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள்? எவ்வளவு ஆண்டுகளாக அவர்கள் மானேஜிங் டைரக்டர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குத்தான் போட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் இரண்டுவிதமான துறைகளுக்குக்கூடப் போட்டிருக்கிறார்கள். ஒரு தொழிலைப் பற்றி அறிந்துகொண்டு வருவதற்காக வெளிநாடுகளுக்கு அதிகாரிகளை அனுப்புகிறார்கள். வெளிநாடு சென்றுவிட்டுத் திரும்ப இங்கே வந்து சேருகின்றபோது, இங்கே வேறு பதவியில் போட்டுவிடுகிறார்கள். மாவட்டத்தின் கலெக்டராக இருந்தார்கள். இப்போது இங்கே செயலாளராக இருக்கிறார். அவரைப் பால் வள நிறுவனம்பற்றி அறியவேண்டும் என்று ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பினார்கள், 3 அல்லது 4 மாதங்கள் அங்கு இருந்து கற்றுக்கொண்டு திரும்பி வந்தார்கள். நெய்வேலியிலே உள்ள அதிகாரி ஒருவர், நிலக்கரி பற்றிக் கற்றுக் கொள்ளப் போனார்கள். திரும்பி வந்த போது ''இண்டஸ்ட்ரீஸ்'' இலாகாவிலே போட்டிருக்கிறார்கள். அதற்காக என்று படித்துவிட்டு வந்தவரை அரசாங்கத்திலே அதிகாரியாகப் போட்டிருக்கிறார்கள். இந்தக் காரியங்களுக்காக எவ்வளவு பணச் செலவு ஆகியிருக்கும்? அதனால் ஏதாவது பலன் உண்டா என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுத் துறை நிறுவனங்களை நடத்துகின்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும், தொழில் துறை நிறுவனங்களை நடத்துகின்ற அதிகாரிகளுக்கும் முக்கியமான வேறுபாடுகள் இருக்கின்றன. தொழில் துறையை நடத்துவது யார் என்று சொன்னால், அந்தத் தொழிலிலேயே அனுபவம் உள்ளவர்கள், பரம்பரையாக இருந்து அந்தத் தொழில் செய்பவர்கள்தான் அதை நடத்த முடியும். ஒரு கூட்டாகவே இருந்துகொண்டு பெரிய பெரிய தொழில்களை நடத்துகிறார்கள். தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள்தான் நடத்த வேண்டும். பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் என்பது வேறு, பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் என்பது வேறு. ஐ. ஏ. எஸ் ஆபிஸராக இருப்பதால், தொழில் துறையை நல்லவிதமாக நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது. இதுதான் என்னுடைய அபிப்பிராயம். தொழிலைப் பற்றிப் புரிந்து கொண்டவர்கள்தான் அந்த மாதிரி நிறுவனங்களை நடத்த முடியும். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்பற்றி எனக்கு வருத்தம் கிடையாது. நானே ஒரு தொழில் வைத்திருந்தால், அதற்கு ஒரு மானேஜிங் டைரக்டரைத் தான் போடுவேனே தவிர, ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போட மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு இருக்கக்கூடிய திறமை வேறு, இவர்களுக்கு இருக்கக்கூடிய திறமை வேறு. அந்தத் தொழில் நிறுவனங்களை நடத்துவதற்கு உரியவர்களை, திறமை உள்ளவர்களைப் போட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் வேறு, இவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் வேறு. மற்ற நிறுவனங்களில் கொடுப்பதுபோல, மேனேஜிங் டைரக்டர்களுக்கு ரூ. 4,000, ரூ. 5,000 என்று சம்பளம் கொடுக்க முடியுமா என்று கேட்கலாம்.

நாம் ரூ. 4,000, ரூ. 5,000 என்று சம்பளம் கொடுத்தாலும் கூட அவர்களால் நாளையதினம் வரக்கூடிய லாபத்தைப் பார்க்கும்போது இப்படிப்பட்டவர்களைப் போடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியே ஐ. ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதாக இருந்தாலும் கூட, அவர்கள் 4, 5 ஆண்டுகளுக்காவது அந்தத் துறைகளில் பொறுப்பில் இருக்க வேண்டும். அந்தந்தத் துறைகளில் ஏற்படுகிற லாப நஷ்டங்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்க வேண்டும். எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சமயம் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பொருள்களை அனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டபோது, பணத்தைக் கூட வாங்காமல் அனுப்புகிறார்கள். ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பொருள்களை மலேசியாவிற்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு அந்தப் பணத்தைக் கேட்டார்கள். அங்கு அந்த வியாபாரியையே காணவில்லை. மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்கு Letter of Credit இல்லாமலே விற்றிருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்ட மானேஜிங் டைரக்டர் இப்போது மாறி விட்டார்கள். அடுத்த மானேஜிங் டைரக்டர் இன்றைக்கு அங்கு வந்திருக்கிறார்கள். அந்த நஷ்டத்திற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். அதற்கான தண்டனைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அரசாங்கத்திற்கு லாபம் கிடைக்கும் நிலைமைகள் ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இதற்கு யார் மீதும் பொறுப்பு சொல்ல முடியவில்லை. யாருமே பொறுப்பில்லை என்று சொல்கின்ற முறையிலே ஜனநாயக அமைப்பு இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது ஜனநாயகத்திலே அதிகாரிகள் மாறுகிறார்கள், செயலாளர்கள் மாறுகிறார்கள். இன்றைக்கு ஒருவர், நாளைக்கு ஒருவர். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவர் வருகின்றார்கள், போகின்றார்கள். அமைச்சர் பெருமக்களும் நிரந்தரமாக இருக்க முடியாது. இப்போது வந்திருக்கிற அமைச்சர் பெருமக்கள் இங்கு நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். மொத்தத்தில் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் 4, 5 ஆண்டுகள் கழிந்த பிறகு, மாறுதல்கள் ஏற்பட்டுச் சென்றுவிடலாம், இந்த நாட்டிலே உள்ள மக்கள், நிர்வாகம் நிரந்தரமானது. சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாம், சில காலம் உறுப்பினர்களாக இருக்கின்றோம், போய் விடுகின்றோம். ஆக இருக்கின்ற யாரும் நிரந்தரமானவர்கள் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நலிந்த நிறுவனங்கள் சில மில்களை எடுத்துக்கொள்வது பற்றியும் சொன்னார்கள். 1969-லிருந்து எடுத்துச் செய்கின்றார்கள். இங்கே புதிதாகச் செய்யவில்லை. இதிலே கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சில மில்கள் என்றால் என்ன? கிட்டத்தட்ட 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் முன்னாலே மில்களை, நிறுவனங்களை வைத்தவர்கள், அதிலே வரக்கூடிய லாபத்தைக் கொண்டு சுவிட்ஜர்லாந்து போன்ற வெளி நாடுகளிலிருந்து, அங்கு இருக்கக்கூடிய மெஷினரிகளை, வேண்டிய இயந்

திரங்களை எல்லாம் புதிதாக வாங்கி உபயோகிப்பதில்லை. காரணம்
20, 25 ஆண்டுகள் ஆகிவிட்ட நிறுவனங்களில் உள்ள தொழி
லாளர்களுக்கு அதிகப்படியான டி.ஏ., போனஸ் போன்றவைகள்
கொடுப்பதால், அவர்களால் நடத்த முடியாமல் நஷ்டமும் ஏற்
படுகின்றது. உ.பி.-யிலே சர்க்கரைக்கு விலை 209 ரூபாய் என்று
கொடுக்கிறார்கள். இங்கு நம் நாட்டிலே 196 ரூபாய் என்று விலை
கொடுக்கிறார்கள். அங்கு உள்ள தொழிற்சாலைகள் 25 ஆண்டு
களாக நடக்கின்றன. இந்த அதிகப் படியான சம்பளம் கொடுக்
கின்ற பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்தச்
சூழ்நிலையில் தான் 25 வருடங்களாக நடந்து கொண்டிருக்கிற
நிறுவனங்கள் நலிந்து போகின்றன. ஒரு நாளைக்கு மூடும்படியான
சூழ்நிலையும் ஏற்படுகின்றது. வேலையில் இருப்பவர்களுக்கு வேலை
கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள். தொழிற்
சாலைகளைத் திறக்க வேண்டும் என்று சொல்வார்கள். நான் என்ன
சொல்கிறேன்? ஒரு முக்கியமான பிரச்சினை என்று இங்கு ஒரு கால்
அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுப்பேன். 500 தொழிலாளர்கள்
வேலை இல்லாமல் இருக்கின்றார்கள், அதற்கு அரசாங்கம் என்ன
செய்யப்போகிறது என்று கேட்பேன். இதற்காக என்று இங்கே
நாம் காரசாரமாகப் பேச வேண்டியது. அரசாங்கம் ஒரு தூது
கோஷ்டியை அவர்களிடம் அனுப்ப வேண்டியது. அவர்கள் எங்
களால் நடத்த முடியாது என்று சொல்வார்கள். உங்களால்
நடத்த முடியாது என்றால், நாங்களே நடத்துகிறோம் என்று
எந்தெந்த ஆலைகள் மோசமாக இருக்கின்றனவோ அவைகளை
அவர்கள் அரசாங்கத்தின் தலையிலேயே கட்டிவிடுவார்கள். தொழி
லதிபர்கள் 3, 4 மில்கள் வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள்.
10 மில்கள் வைத்திருப்பவர்களும் இருக்கின்றார்கள். அதில் 3
மில்கள் மிகவும் மோசமான நிலையில் நடைபெற்றுக்கொண்
டிருக்கின்றன. மீதி 7 மில்கள் நன்றாக நடந்து கொண்டிருக்கும்.
அவர்கள் அந்த 3க் மில்களை விட்டுவிட்டு, மீதமுள்ள 7 மில்
களை வைத்துக் கொண்டு அதில் வருகின்ற லாபத்தை அவர்
கள் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே நஷ்டத்தில்
நடந்து கொண்டிருக்கிற மில்களை எடுத்துக்கொள்வதுடன், லாபத்
தில் நடந்துகொண்டிருக்கிற மில்களையும் அரசு எடுத்துக்
நடத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தொழிலா
ளர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக எடுத்து
அவைகளை நடத்துவது என்பது அரசுக்குப் பெரிய நஷ்டத்
தைத் தான் தொடர்ந்து உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இதனால் ஏராளமான நஷ்டம் ஏற்படும். இந்த
முறையை மாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எலெக்ட்ரோ மாக்னடிக் செல் என்று இருக்
கிறது. பெரிய மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்துகின்ற
கருவியாகும். லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உபகரணப்
இது. இந்த உபகரணங்களைக்கூட சரியாகக் காத்துக் கொள்வ

தில்லை. லெஜிஸ்லேட்டார் கமிட்டி என்று ஒன்று போட்டுக் கூட அதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். பெரிய மருத்துவ மனைகளில் எல்லாம் இதுபோன்ற இயந்திரங்கள் இயங்காமல் இருக்கிற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிட்டத் தட்ட 25, 30 சதம் கருவிகள் பல இடங்களிலே இயங்கவில்லை. தஞ்சைப் பகுதியிலே உள்ள மருத்துவமனைகளில் உள்ள 'டீப் எக்ஸ்ரே தெராபி' யூனிட் கடந்த 8 வருடங்களாக இயங்காமல் இருக்கின்றது. சென்னையிலே உள்ள பெரியமருத்துவ மனையிலே கூட 2, 3 இயந்திரங்கள் சரியாக இயங்காமல் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. க. அறிவழகன்: நான் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மருத்துவத் துறை பற்றிப் பேசுகிறாரா என்று கேட்டார். அவரும் இப்போது மருத்துவத் துறை பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'எலெக்ட்ரோ மாக்னடிக் செல்
......

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து): ஏற்கனவே 40 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'பொல்யூஷன்' எப்படி சுகாதாரத்தோடு தொடர்புடையதோ, அதுமாதிரி தொடர்புடையதுதான் இது. அந்த எலெக்ட்ரோ மாக்னடிக் செல் சரியாக இயங்கவில்லை. அதைத் தொழில் துறையோடு இணைத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட 'டீன்' அதை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால், தொழில் துறையோடு சேர்ந்து ஈடுபட வேண்டும். தனியாக தொழில் துறைக்கு இயக்குநர் இருந்தால்கூட, அவர்களுக்கு பல வேலைகள் இருக்கின்றன.

This can be connected to the Director of Medical Education.

இந்தத் துறையை டி.எம்.இ.யுடன் இணைத்துவிட்டால், டீன் இயந்திரங்கள் சரியாக இயங்கவில்லை என்று தெரிவிக்க, அவர் உடனடியாக அவற்றை ரிப்பேர் செய்ய முடியும். எனவே அதை டி.எம்.இ.யுடன் இணைக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். முடிவாக ஓரிரண்டு பிரச்சினைகளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். சீக்கிரமாக முடித்துக் கொள்ளவும்.

திரு. ஜி. சுவாமிநாதன்:- நான் விளக்காமல் சொல்லி விடுகிறேன். 'டிக்' ஐப் பொறுத்த வரையில், அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்றும், சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டாக 'டிக்' நிறுவனத்தின் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்டிரீசுக்குக் டைரக்டர் கிடையாது. உடனடியாக சிறு தொழில்களுக்கென டைரக்டர் நியமிக்க வேண்டும். அடுத்து, சரியான முறையில் தொழில்களை நடத்த வங்கிகளிலிருந்து பணம் கிடைப்பதில்லை. அவர்கள் செக்யூரிட்டி கேட்கிறார்கள். வங்கிகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, என்ன செய்யலாமென்பதை யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் சிறு தொழில்கள் நடத்த 'ரா மெடிரியல்ஸ்—அலுமினியம், ஸ்டீல், பிக் ஐர்ன் ஆகியவை கிடைக்கவில்லை. சிறு தொழில்களை நடத்த முடியாமல் இருக்கிறது. அவை கிடைக்க ஆவன செய்ய வேண்டும். சிறு தொழில்களை ஆரம்பிப்பது நல்லதுதான். இருந்தாலும் புதிதாக ஆரம்பிப்பதைவிட, இருப்பதை முழு அளவுக்கு நடத்த வேண்டும். இப்போது ஆரம்பித்திருக்கக்கூடிய சிறு தொழில்களைப் பொறுத்த வரையில், 'நான்-யுடிலைசேஷன் ஆஃப் கெபாசிடி' 50 சதவீதத்திற்குமேல் இருக்கிறது. எனவே இருக்கின்ற தொழில்களை 'ஃபுல் யுடிலைசேஷன் ஆப் கெபாசிடி' அளவுக்கு ஆக்க வேண்டும். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், மாலை நேரத்திலேயும், காலை நேரத்திலேயும் 'ரெக்ஸ்டிரிக்ஷன் ஆப் எலெக்டிரிசிடி' இருக்கிறது. 'நாங்கள் இரண்டு சதம்தான் மின்சாரம் உபயோகப்படுத்துகிறோம்; ஆனால் பெரிய தொழில்களுக்குக் கொடுக்கிறீர்கள்; அதைப் போன்று எங்களுக்கும் கொடுத்தால், இரண்டு ஷிப்டுகள் போட்டு வேலை செய்ய முடியும்' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் 'பேக்வார்ட் ஏரியா'வில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மத்திய அரசில் ,கிரைடீரியா'. வைத்திருக்கிறார்கள். 'பெர்-கேபிடா இன்கம்' பார்க்கிறார்கள். எங்களுடைய 'பெர்-கேபிடா' விவசாயத்தின் காரணமாக இருப்பதுதான். தொழிலால் அல்ல. எனவே தஞ்சை மாவட்டத்தில் தொழிலில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். அதனுடைய வளர்ச்சி எவ்வளவு; அதனுடைய வருமானம் எவ்வளவு என்ற அடிப்படையின்கீழ் தஞ்சை மாவட்டத்தைப் பின் தங்கிய மாவட்டமாக ... ண்டும்; 'அட்வைசரி கமிட்டி

எங்கள் மாவட்டத்திற்கு இல்லை. பின் தங்கிய மாவட்டங்களுக்கு 'அட்வைசரி கமிட்டி.' போட்டார்களோ என்னவோ. எங்களுடைய மாவட்டத்திற்கும் அத்தகைய கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தொழில்களை ஆரம்பிக்க பணம் இருக்கிறது. எப்படி ஆரம்பிப்பது என்பது தெரியாமல் தனிப்பட்ட விவசாயிகள் இருக்கிறார்கள். அதற்காக கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யத்தில் மெரைன் கெமிகல் காம்ப்ளக்ஸ் 10கோடி ரூபாயில் ஆரம்பிப்பதாக இருந்தது. 4, 5 ஆண்டுகளாக சிப்காட், டிட்கோ நிறுவனங்கள் ஆராய்ச்சிகள் முடிந்து, ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறார்கள். எனவே வேதாரண்யத்தில் மெரைன் கெமிகல் காம்ப்ளக்சை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்டீல் ரோலிங் மில்களில் 10,000 பேர்கள் வேலை பார்க்கிறார்கள், 62 மில்களில் 32 மூடப்பட்டிருக்கின்றன, 'ரீ-ரோலிங், ஐப், பொறுத்தவரையில் சேல்ஸ் டாக்ஸ் எக்செம்ப்ஷன் கொடுக்கப்படுவதில்லை. ஆந்திரா, கர்நாடகாவில் கொடுத்து விட்டார்கள், எனவே அங்கேயிருந்து பொருள்களை வாங்குகிறார்களே தவிர நம்முடைய மாநிலத்திலிருந்து வாங்குவதில்லை, எனவே அண்டை மாநிலங்களிலுள்ள சலுகைகளை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக சர்க்கரை ஆலைகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன், சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த மட்டில், ஒரே மாதிரியான கொள்கை வேண்டும். இன்றைக்கு 65 சதம், நாளைக்கு 35 சதம், லெவியை எடுத்துவிடப் போகிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்படியிருந்தால் நம்முடைய சர்க்கரைத் தொழில் நன்றாக நடக்காது. இன்றைக்குக் கோர்ட்டுக்குப் போய் 232 ரூபாய் விலை வாங்கியிருக்கிறார்கள். எனவே சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில், நிலையான கொள்கை வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சரவர்கள் நேற்றைய தினம் டெல்லிக்குச் சென்றதாகச் சொன்னார்கள். பத்திரிகையில் நாளையதினம்தான் வருவார்கள் என்று செய்தி வந்தது, இன்று அவர் பேச வேண்டுமே நாம் பேசுவதை அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தால், எங்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகுமே, அவர்கள் தொழில் துறை பற்றிப் பேசும்போது, வராமல் இருந்துவிடுவார்களோ என்று வருத்தப்பட்டேன். அவர் டில்லியிலிருந்து விரைந்து வந்து இன்றையதினம் இந்த அவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன், இது போன்றே பல நாட்கள் இந்த அவைக்கு வந்திருந்து, எங்களுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

புலவர் புலமைப் பித்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சிக் கொள்கைக் குறிப்பின் மீது நானும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். சுதந்திரம் கிடைத்து, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்த பின்னாலே என்று கருதுகிறேன். பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். ''நாம் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். அதன் மூலமாக மொத்தமாகப் பார்க்கிற 'பெர்-கேபிடா இன்கம்' என்று சொல்கிற தேசிய வருமானம் மிகப்பெரிய அளவிலே வந்திருக்கிறது என்றாலும், வந்த வருமானம் எந்த வழிகளில் போய்ச் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை, அது பரவலாகச் சென்று சேரவில்லை" என்று பாராளுமன்றத்தில் பண்டித நேரு அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார்கள். திட்டங்களைத் தீட்டுவது என்பது, நலிந்து கிடக்கிற நாட்டில் ஒரு சமத்துவமான பொருளாதாரத்தை உருவாக்குவிப்பதற்குத்தானே தவிர, பொருளாதாரம் ஓரிடத்தில் குவிய அல்ல என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படித் திட்டங்களைத் தீட்டுகிறபோதுகூட, திட்டங்களைப் பரவலாக்குவதென்ற கொள்கைக்கு வருகிறோமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்கு முன்னாலே தொழில்களை கிராமங்களை நோக்கிக் கொண்டுபோய், இல்லாத ஏழைகளுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்போம்; ஏழைகள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைவதற்கான அடிப்படைத் திட்டங்களை வகுப்போம் என்று சொல்லி, சொல்லிச் செய்யாமல் போகவில்லை, சொன்னதைச் செய்கிற முறையில் இன்றைக்குத் திட்டங்களை, செயல்திட்டங்களை உண்டாக்கி சிறு நகரங்களை, கிராமங்களை நோக்கிச் செல்வது, ஒரு பொருளாதார சமத்துவத்தினுடைய முதல் அடிப்படை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். நாம் அதற்கேற்ற வகையில் கல்வித் துறையில் கூட புரட்சியை உண்டாக்கியிருக்கிறோமென்பதை மறந்துவிடக்கூடாது. ''செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமக்குச் செல்வம்'' என்று சொல்லியிருக்கிறோம். செய்யும் தொழில் தெய்வம் என்றாலும், அந்த தெய்வம் கூட நமக்குச் சரியான வகையிலே உதவியாகி அந்தத் துறையிலே திறமை வளர வேண்டும், அதுதான் செல்வமாகுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நாம் தொழில் வளர்ச்சியை நம் மாநிலத்தில் உருவாக்க வேண்டுமென்று நினைக்கும் நேரத்தில், தொழில் கல்வி இல்லாமல், வெறும் திட்டங்களை உருவாக்கினால், போதாதென்ற அடிப்படையிலே ஒரு பக்கத்தில் தொழிற் கூடங்களை உருவாக்கினா-

லும், இன்னொரு பக்கத்தில் தொழிற் பயிற்சிக் கூடங்களையும், தொழிற்பயிற்சி நிலையங்களையும உருவாக்கும் நல்ல சீரான திட்டம் இந்த அரசின் திட்டமென்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு சுவாமிநாதன் அவர்கள், 'ஜனதா கொண்டு வந்தது, அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகம் தருகிறது' என்று திரு தங்கப்பாண்டியன் சொல்லக் கூடுமென்று சொல்லி, அவரே பதிலும் சொன்னார்.

(பிற்பகல் 12-50)

அருமை நண்பர் திரு தங்கப்பாண்டியன் அவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள் என்று நானும் நம்புகிறேன். அப்படிச் சொல்லவில்லை என்று அவரும் தலையை அசைக்கிறார்கள். யார் கொண்டு வந்த திட்டம் என்று சொன்னாலும், ஒரு பரவலான பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட முற்போக்குக் கொள்கை என்றால், அதை ஆதரிப்பார் என்பதிலே நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இது யாருடைய திட்டம் என்பதல்ல முக்கியம். அந்தத் திட்டத்திலே எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என்பதை எண்ணி மற்றவர்கள் பாராட்டுகிறார்கள்.

தொழிலாளர்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை, அதனால்தான் தொழில் வளர்ச்சி அடைய முடியவில்லை என்பது போல குற்றச்சாட்டை அருமை நண்பர் திரு வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தொழில் துறையில் நாம் அக்கறை செலுத்தாமல் இருக்கிறோம் என்ற மனோபாவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. 1976-77-ல் 156 சிறு தொழில்களுக்காக ரூ. 38.83 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1977-78ல் 233 சிறு தொழில்களுக்காகச் செலவினமாக 53.38 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, சிறு தொழில்களைப் பரவலாக்க வேண்டுமென்றும், சிறு தொழில்கள் வளர்ச்சி பெற வேண்டுமென்றும் அதற்குப் பெருந்துணையாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து விடக் கூடாது.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே கனிப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன என்று நம்முடைய அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லி, தன்னுடைய கையில் இருந்த மோதிரத்தைக் கூட காட்டி, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நாம் ஜப்பான் நாட்டைப்பற்றி அடிக்கடி படிக்கிறோம். ஜப்பான் நாட்டினுடைய பொருளாதார அமைப்பைப்பற்றி முன்னாள் நிதியமைச்-

சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். நானே கூட அதைப் பாடமாக நடத்த வேண்டிய நிலைமை இருந்தது. அப்போது ஜப்பான் நாட்டை நானே கூட எண்ணிப் பார்த்து வியப்படைந்தேன். "ஜப்பான் நாடு, பூகோள அமைப்பிலே எந்த வகையிலும் லாயக்கற்ற நாடாக இருக்கிறது. அங்கே 84 எரி மலைகள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அங்கே சமவெளிப் பகுதிகள் கிடையாது. எந்தக் கனிப்பொருளும் கிடையாது. அலுமினியமும் கிடையாது. உப்பும் கிடையாது. இப்படியிருக்கிற நாடு, உலகத்திலுள்ள பொருளாதாரத்தில் உச்சகட்டத்தில் இருக்கக் கூடிய மிகப் பெரிய நாடுகளுக்குச் சமமாக இருப்பதற்குக் காரணம் அந்த நாடு தொழில் துறையிலே பெற்றிருக்கிற முன்னேற்றம் தான்" என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். "அவர்கள் தங்களுக்கு வேண்டிய கனிப்பொருள்களை வேறு நாடுகளிலிருந்து தருவித்துக் கொள்கிறார்கள். அந்தக் கனிப்பொருள்களின் மூலம் பெரிய தொழில்களைச் செய்து அதில் உற்பத்தியாகக் கூடிய பொருள்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள்" என்ற நிலைமையும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதைப் போல அறிவியல் வளர்ந்து போயிருக்கிற நமது நாடு முன்னேறித் தீர வேண்டுமென்றால், தொழில் துறையில் மிகப்பெரிய அளவிலே வளர வேண்டும். தொழில்களில் வருகின்ற வருமானம் பரவலாக எல்லோருக்கும் சென்று சேருகிற அடிப்படையிலே அந்தத் திட்டங்கள் அமைய வேண்டுமென்பதிலே நமக்கெல்லாம் நிச்சயமாக நல்லதொரு குறிக்கோள் இருக்க வேண்டும்.

ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் நம்முடைய நாட்டில் காகிதத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று முனைந்துள்ள அரசை........

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஒரு கோடியல்ல, நூறு கோடி ரூபாய்.

புலவர் புலமைப்பித்தன்: துணைத் தலைவர் அவர்களே, கோடிக் கணக்கில் அதிகமான பழக்கம் இல்லாத காரணத்தால், ஒரு கோடி என்று நினைத்துக்கொண்டேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவருக்குக் கோடிக் கணக்கில் பழக்கம் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் கோடிட்டுக் காட்ட அவர்களுக்குத் தெரியுமென்று நான் கருதுகிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: நன்றி. ரூ. 100 கோடியில் ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கியதற்காக நாம் மனமாரப் பாராட்ட வேண்டும். அது எங்கே அமைகிறது? திருச்சியிலா கோவையிலா என்ற பிரச்சினையைக் காட்டிலும், அது எங்கே அமைந்தாலும், இந்த நாட்டிற்கு பெரிய அளவிலே அது பயன்படுமென்று நம்புகிறேன். இந்தக் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலமாக, "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்" என்று மகா கவி பாரதியார் பாடிய பாட்டிற்கேற்ப அவர் கண்ட கனவை நினைவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அரசுக்கு, பாரதியாரின் சார்பில் ஒரு கவிஞன் என்ற அடிப்படையிலே நான் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் துறையைப்பற்றியும், பொதுத்துறையைப்பற்றியும் அருமை நண்பர்கள் பேசினார்கள். நாடு நலம்பெற வேண்டுமென்றால், தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கு மாற்றப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் என்னவோ தெரியவில்லை, தனியார் துறையில் இருக்கிற தொழில் இலாபம் அடைவதாக இருக்கிறது. அதுவே பொதுத் துறைக்கு வருகிறபோது, நட்டம் அடைவதாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த விந்தை எப்படி நடக்கிறது என்று புரியவில்லை. எங்களுடைய வீட்டிலே ஒரு கடிகாரம் இருக்கிறது. அதை வாட்ச் ரிப்பேர் செய்பவனிடம் கொடுத்தால், அங்கே போகிறபோது, அந்தக் கடிகாரம் நன்றாக ஓடுகிறது. ஆனால் அதே கடிகாரம் வீட்டுக்கு வந்தால், சுவரில் மாட்டப்பட்ட பின் ஓடுவதில்லை. அதைப் போலதனியார் துறையில் இருக்கும்போது, இலாபம் சம்பாதிக்கிறார்கள். ஒரு பஸ் வாங்கியிருப்பவர்கள் ஆறாண்டுக்குள் பத்து பஸ்கள் வாங்கும் அளவுக்கு முன்னேறுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் பொதுத் துறைக்கு வருகிறபோது, அப்படிப்பட்ட நிலை ஏன் இல்லை என்பதைக் கண்டறிய வேண்டும். பொதுத்துறைக்கு வராமல் நாட்டில் பொருளாதாரத் துறையிலே புரட்சி என்பது நடக்காது. அதே நேரத்திலே இப்படி சீரழிந்த நிலைமையிலே இலாபம் இல்லாமல் முன்னேறுவது என்பதும் நடக்காது. இதைப் பார்க்கிறபோது பெண்ணைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கும் போது, உன் மகனுக்கு பைத்தியம் தீர்ந்தால் பெண் தருகிறோம் என்று சொல்லுவது போலவும், பெண் கொடுத்தால்தான் பைத்தியம் தீரும் என்பது போலவும் இருக்கிறது. பொதுத் துறைக்கு வராமல் நாடு புரட்சிகரமான திட்டத்தை உருவாக்க முடியாது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருந்தால் நாடு முன்னேற முடியாது

என்று எண்ணிப் பார்க்கிறபோது, பொதுத் துறையிலே ஏற்படுகிற சீரழிவுகளைப்பற்றி இந்த அரசு வந்த பின்னாலாவது கொஞ்சம் கண்ணோட்டமாக இருந்து, கவனிப்பாக இருந்து, குறைகளைக் கண்டறிந்து நட்டம் ஏற்படுவதற்குரிய காரணங்களைக் களைவதிலே முனைப்பாகவும். எச்சரிக்கையாகவும் இருக்குமென்று நம்பி, அரசு அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த ஆலைகளுக்கு ஆக்கமளிப்பது, ஊக்கமளிப்பது என்கிற திட்டத்தை; நான் கோவையிலே ஒரு காலத்திலே பஞ்சாலைத் தொழிலாளியாக இருந்தேன் என்ற அடிப்படையிலே, ஒரு வகையிலே பாராட்டுகிறேன். இதை நான் பாராட்டுகிறபோது, அருமை நண்பர்கள் சொல்லக் கூடும், ''நாங்கள் சொல்லும் போது இதைக் குணக்குறைவாகச் சொன்னீர்களே, நீங்கள் இதைச் செய்யலாமா?'' என்று. மருத்துவராக இருக்கிறவர் ஓரிடத்திலே பெண்ணுக்குச் சிகிச்சை செய்துவிட்டு பிறகு தானே அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால், அங்கே போகிற நோயாளிகளுக்கெல்லாம் சிகிச்சை செய்துவிட்டுப் பிறகு கல்யாணம் செய்துகொள்வார் என்று அந்த மருத்துவரிடம் சிகிச்சை செய்து கொள்ளக் கூடாது என்று சொல்வதைப்போல அந்த வாதம் இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நலிந்த ஆலைகளுக்கு ஊக்கமளிப்பது என்பது அந்த ஆலைகளுடைய சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதல்ல. கோவையிலே பஞ்சாலைத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் என்று கருதுகிறேன். நலிந்த ஆலைகள் நின்று விடாமல் மீண்டும் தொடரச் செய்தால், அங்கே ஏற்கெனவே வேலையில்லாமல் இருக்கும் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித் தர முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள், முதலாளிகள் பத்து ஆலைகளை வைத்துக் கொண்டு, அதில் 7 ஆலைகளில் இலாபம் வருவதால், அதை வைத்துக்கொண்டு 3 கெட்டுப்போன ஆலைகளை விட்டுவிடுவது என்ற முறையில் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதிலே கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. தொழிலாளர்களைப்பற்றிச் சொல்லும்போது, இன்றைய முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தேர்தல் நேரத்தில் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். ''ஏற்கெனவே வேலையில் இருக்கிற தொழிலாளர்களுக்குத் தொழிற் சங்கங்களை உருவாக்கி, அதற்குத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால் வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்குச் சங்கங்கள் இல்லையே, அதற்கு என்ன

காரணம்?'' என்று கேட்டார்கள். அதனாலே வேலை இல்லாதவர்களுக்கு வேலையை உருவாக்குவது முதற்கட்டம் என்ற அளவில் கிராமப்புறங்களில் தொழில்களை உருவாக்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையில் இந்தத் திட்டத்தை உருவாக்கியதற்காக நான் மீண்டும் மனமாரப் பாராட்டுகிறேன். நலிந்து போன ஆலைகளிலுள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு ஆக்கமளித்து, ஊக்கமளித்து பாதுகாக்கக்கூடிய வகையில் தொழில் திட்டத்தைப் பரவலாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிற இந்த அரசு அந்தத் துறையிலே வெற்றி பெற வேண்டுமென்பது என்னுடைய கருத்து, என்னுடைய எண்ணமாகும். அதே நேரத்தில் தொழில்களை நிம்மதியாக நடத்துவதன் வாயிலாக உற்பத்தியைப் பெருக்க முடியும். போராட்டங்கள், கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது நாட்டினுடைய வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகின்ற வகையில் இருக்கக்கூடாது என்பதை பலமுறை வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், நாட்டில் எத்தனை திட்டங்களை உருவாக்கினாலும், அதனால் வருகிற முன்னேற்றமெல்லாம் தடைபடுகிற வண்ணமாக தேவையில்லாத வகையில் அமைந்து கெடும் சூழ்நிலைகளை உருவாக்க முயற்சிக்கக் கூடாது. கோரிக்கைகள் வரலாம். அவற்றைப் பரிசீலிக்கும்போது, தொழில் வளர்ச்சி பாதிக்கும் நிலையில் அமைந்து விடாமல், எல்லாத் தரப்பினரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை உருவாக்குகிற அரசை வாழ்த்தி வரவேற்று இந்தத் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது, இந்த நாட்டில் ஏராளமான கனி வளங்கள் இருக்கின்றன என்றும், இந்த அரசாங்கம் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். அதற்கு உதவியாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இந்தப் பொருள்கள் பயன்படும் என்பதாலும் அந்தத் தொழில்களை கவனிப்பதற்கு அவற்றைக் காண்பதன் மூலம் ஒரு எண்ணம் உருவாகும் என்பதாலும், தங்கள் மூலமாக இந்தத் திட்டங்களையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தில், இந்தக் கனிப்பொருள்களை முதலமைச்சர் அவர்களிடத்தில் தாங்கள் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 27

(உறுப்பினர் அளித்த சிறு முடிச்சு மாற்றுத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலைப்பற்றி எல்லோரும் பேசினார்கள். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியார் பாடினார். அதற்குப் பிறகு அவர் சொன்னது நமக்குத் தேவை கிடையாது. குறிப்பாக அதைப்பற்றி நான் கொஞ்சம் பேச நினைக்கிறேன். நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் கடந்த இந்த அவையைக் கூட்டத்திற்கு அதிகமாக வரவில்லை. வரவில்லையே என்று சொல்லி எல்லோரும் அவர் வரவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர் வரவேண்டுமென்பதில் அக்கறை எடுத்துக்கொண்டவர்களில் நானும் முதன்மையாக இருந்தவன். அவர் வரவேண்டுமென்று ஏன் விரும்புகிறோம் என்றால், எங்களுடைய சீதோஷ்ண நிலைமை மாறியிருக்கிறது. தஞ்சாவூரை எடுத்துக் கொண்டால், அதன் நிலைமை வேறு, திருச்சியின் நிலைமை வேறு. இப்படி ஒவ்வொரு பகுதிக்கும் நிலைமைகள் வேறு வேறாக இருக்கின்றன. கன்னியாகுமரியில் உள்ள நிலைமை தர்மபுரியில் இருக்காது. இந்த நிலைமைகளைப்பற்றி எல்லாம் மரியாதைக்குரிய திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசினார்கள். அடுத்து புலவர் புலமைப்பித்தன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் நன்றாக இருக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். பித்தன் என்றால், நான் படித்த வரையில், கிறுக்கன் என்றுதான் சொல்வார்கள்.

புலவர் புலமைப் பித்தன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சைவ சமய வழிபாடு கொண்டவர்கள் என்று நினைக்கிறேன். ஆண்டவனுக்குக் கூட பித்தன் என்ற பெயர் உண்டு. பித்தன் என்பதால் பைத்தியக்காரன் என்று கருதிக்கொண்டு இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ் இராமகிருஷ்ணத் தேவர் : அப்படி ஒவ்வொரு ஏரியாவின் நிலைமை வேறுபட்டிருக்கின்றது. கோயம்புத்தூரில் இனி மில் கட்ட இடமே இல்லை என்று சொல்கிறார்கள். அடுத்து, திருச்சி, தஞ்சை போன்ற இடங்கள் இருக்கின்றன. இராமநாதபுரத்தில் என்ன இருக்கிறது? ஐந்தாறு மில்களைக் கட்டினார்கள். அவ்வளவும் சும்மா கிடக்கிறது. மரியாதைக்குரிய திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். நலிந்துபோன மில்களை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நலிந்து அவர்கள் அதை எடுத்துக் கொள்ளும்வகையில் கேட்டு எடுக்கும்படி செய்கிறார்கள் நடத்துகிறவர்கள். எங்கள் பகுதியில் உள்ள ஏழு மில்களில் நான்கு நன்றாக நடக்கின்றன. எல்லாவற்றையும் சேர்த்து எடுத்து நடத்தினால் நன்றாக இருக்கும். புலவர் பித்தன் அவர்கள் பேசும்போது, வேலை பார்த்த தொழிலாளர்கள்

பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் அரசாங்கம் நலிந்த தொழில்களை எடுத்துக் கொள்கிறது என்று சொன்னார்கள். எப்படியோ ஜனங்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக வந்தது மட்டுமல்ல: உண்மையிலேயே சிலர் அவர் பேரில் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உண்மையாகவே ஒரு காரியத்தில் எந்தத் தவறும் இல்லை என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்தால், யாரையும் எதிர்பார்க்காமல் அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்க முன் வருகிறார்கள் என்று மக்கள் எண்ணுகிறார்கள். அந்த மாதிரி அவர்கள் செய்கிற காரியத்தில் தவறும் இல்லை. சூது எதுவும் கிடையாது என்பது என்னுடைய எண்ணம். ஆங்காங்குள்ள சூழ்நிலைக்குத் தகுந்தபடி செய்யாததால், சில காரியங்கள் சில இடங்களில் தவறாகவும் சில இடங்களில் சூழ்நிலையைக் கவனித்துச் செய்வதால் நேர்மையாகவும் இருக்கின்றன.

எங்கள் பகுதியில் உழவைத் தவிர, வேறு தொழில் இல்லை. மேற்கு இராமநாதபுரம் பணப் பயிர்கள் வளரும் பகுதி. கிழக்கு இராமநாதபுரத்தில் நெல்லைவிட்டால், வேறு கதி கிடையாது. மானாவாரி பிரதேசம் அது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாவட்டத்தை மேற்கு, கிழக்கு என்று பிரிக்காமல் பொதுவாக இராமநாதபுரத்திற்கு என்று கேட்டால், நன்றாக இருக்கும். எல்லாமே மானாவாரி பகுதிகள் தான.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மேற்கு இராமநாதபுரத்தில் வைரிப்பற விளைவதாகச் சொல்லவில்லை. எங்கள் கிழக்குப் பகுதியில் நெல் மட்டுந்தான் விளைகிறது. பணப் பயிர்களுக்கான உபகரணங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்றுதான் சொன்னேன். மழை பெய்து கண்மாய்கள் பெருகினால், அந்த வருஷம் நன்றாக இருக்கும். நல்லபடியாக இருப்போம். அதன் பிறகு மூன்று வருஷங்களுக்குக் கஷ்டத்திற்கு ஆளாகிவிடுகிறோம். தற்போது நல்ல எண்ணம் படைத்தவர்கள் இருக்கிற ஒரு காரணத்தினால், இனிமேல் அந்த மாதிரி ஒரு சூழ்நிலை வர வேண்டாம், வராது என்று நம்புகிறேன்,

தொழில்களை எங்கே வைக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். அதிகமாகப் படித்தவர்கள், பணச் செருக்கு உள்ளவர்கள் பகுதியில்தான் அவற்றை வைக்க வேண்டுமா அல்லது மூன்று மாதங்கள் விவசாயம் செய்துவிட்டு ஒன்பது மாதங்கள் மண் வெட்டிக் கொண்டிருக்கிறானே அவனுக்குத் தொழில் வேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும். அவனும் கிராமத்திற்குத் தேவை தான். காலமெல்லாம் கையில் மண் வெட்டியும் தலையில் கூடையுமாக அவன் வாழ வேண்டுமென்று

ஆண்டவன். அவன் தலையில் எழுதிவிட்டான். அவர்களுக்கெல்லாம் நல்ல வாழ்வு கொடுக்க வேண்டுமென்றால், அங்கெல்லாம் தொழில்களை உண்டு பண்ண வேண்டும். லட்ச ரூபாய் போட்டால், கோடிக்கணக்கில் போட்டால், அதற்கான தொழில் வருமென்று சொன்னார்கள். இரண்டுமே கிழக்கு இராமநாதபுரத்தில் இல்லை. பணம் படைத்தவர்களும் அங்கேயே இருந்து தொழில் வளர்ப்பதில்லை. இருக்கிற கொஞ்சம் நிலத்தை யாரிடமாவது விவசாயத்திற்கு விட்டுவிட்டு, வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். அங்கே போய் தொழில் செய்கிறார்கள். பம்பாய், கல்கத்தா என்று பல இடங்களுக்குப் போய் தொழில் செய்கிறார்களே தவிர, இராமநாதபுரம் ஜில்லாவில் இருந்து செய்வதற்கு மனம் இல்லை. உள்ளூர்காரன் சரியாக நடக்க மாட்டான் என்ற எண்ணத்தில் அப்படிப் போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரசுதான் அதற்கு வழி தேடிக் கொடுக்க வேண்டும். அங்கே ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலையை அரசாங்கம் வைக்க வேண்டும். இடம் ஏராளமாகக் கிடக்கிறது அங்கே.

திரு. ஜி. சுவாமிநாதன் : அங்கே காகிதத் தொழிற்சாலை வைப்பதற்கான தண்ணீர் வசதி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : வெள்ளைக்காரன் காலத்தில் யாரோ ஒரு இன்ஜினியர் வந்து, அந்தப் பகுதியை சர்வே செய்து பார்த்து விட்டு, நிலத்தடித் தண்ணீர் இங்கே கிடையாது என்று சொல்லி எழுதிவைத்து விட்டுப் போய்விட்டான். அதற்குப் பின்னால் நாங்கள் எல்லாம் வந்து அமைச்சர்களையும் அதிகாரிகளையும் பார்த்து, சர்வே செய்து பாருங்கள் என்று சொன்னோம். அவர்கள் உடனே பழைய பைலைக் கொண்டுவரச் சொல்கிறார்கள். அதில் வெள்ளைக்காரன் காலத்தில் நிலத்தடி நீர் இல்லை என்று எழுதியிருப்பதைப் பார்த்துவிட்டு, ''நிபுணர்கள் அப்போதே பார்த்துவிட்டு நிலத்தில் ஒன்றுமே இல்லை என்று எழுதிவிட்டார்களே; இப்போது ஏன் மறுபடியும் நீங்கள் தோண்டிப் பார்க்கச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்கிறார்கள்.

(பிற்பகல் 1—10)

இப்போது 3, 4 இடங்களில் டிரில் போடும்படி செய்தோம். அமோகமாக அந்த இடங்களில் மெஷின் இல்லாமலேயே 20 அடி உயரத்திற்குத் தண்ணீர் மேலே வந்து கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் சோதனை செய்து தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்று பார்க்காமல், எங்கள் மண்டையில் அடித்து உட்கார வைத்திருந்தார்கள். இராமநாதபுரம் ஜில்லாக்காரர்களைப் பொறுத்தவரையில் இப்படியேதான் வைத்துவிட்டார்கள். பூமிக்குக் கீழே, பாதாளலோகத்தில் வைத்துவிட்டு,

தண்ணீர் இல்லை, தண்ணீர் இல்லை என்று சொல்லியே காலம் கழித்துவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்துக்காரர்களுக்கே கூட காவேரியிலிருந்து, மேட்டூரிலிருந்து வந்தால்தான் தண்ணீர். எனவே எங்களை மேலே வரவிடாமல் செய்துவிட்டார்கள். இப்போது காகிதத் தொழிற்சாலை எங்கள் மாவட்டத்தில் வைக்க வேண்டுமென்றால், உடனே தண்ணீருக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்கிறார்கள். பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. தண்ணீரைச் சரியான முறையில் எடுக்க முடியாமல் இருக்கிறது. எங்கள் பகுதியில் போக்குவரத்து வசதிகள் சரியில்லாமல் இருந்தன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நல்லெண்ணத்தின் காரணமாக பல இடங்களில் ரோடுகள் போடுகிறார்கள். ரோடுகள் போடுவதில் எஞ்சினியர்கள் தான் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் எப்படிக் குறை சொல்ல முடியும்? எங்களுக்கு என்ன தெரியும்? இருந்தாலும் நாங்கள் குறை சொல்லுகிறமாதிரி அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள்.

இங்கே பீச்சுக்கும் கோட்டைக்கும் இடையே ஒரு ரோடு போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். போடுகிற ரோடு கோட்டைக்கு முன்பே ஒரு 1½ பர்லாங்கு தூரத்தில் நின்றுவிடுகிறது என்றால், அதைப் பற்றி நாம் என்ன நினைப்பது? அளந்துதானே ரோடு போடுகிறார்கள். எப்படி 1½ பர்லாங்குக்கு முன்னே நிற்கும்? இதைப் போலத்தான் எங்கள் பக்கத்தில ஒரு ஊருக்கு ஒரு பர்லாங்குக்குக் குறைவாக, ஒரு 400 அடி, அல்லது 300 அடிக்குள் நின்று விட்டது. 3 கிலோ மீட்டருக்கு ஒரு ரோடு போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ரோடு ஊருக்குள் வராமல் ஊருக்கு வெளியே 300 அல்லது 400 அடிக்கு முன்னேயே நின்றுவிட்டது. மீதியையும் போடுவதுதானே என்று அங்கே உள்ள எஞ்சினியர்களைக் கேட்டால், நாங்கள் 3 கிலோ மீட்டருக்குத்தான் எஸ்டிமேட் போட்டோம். அது முடிந்துவிட்டது. ஏனய்யா இப்படிச் செய்தீர்கள்? நீங்கள் தானே பிளான், எஸ்டிமேட் எல்லாம் போட்டீர்கள்? நீங்கள் சரியாக அல்லவா போட்டிருக்க வேண்டும். ஊருக்குள் போகாமல் ஏன் ரோடு போட வேண்டும்? இப்படிக் கேட்டால், நாங்கள் மேலே எழுதி, பிறகு சாங்ஷன் வாங்கி, இந்த ரோட்டை ஊருக்குள் கொண்டுவருகிறோம் என்கிறார்கள். ஊருக்குள் போகாமல் ரோடு எதற்காகப் போட வேண்டும்? இந்த மாதிரியான நிர்வாகக் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இதையெல்லாம் எங்களைப் போன்றவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏதோ குறை சொல்வதாக நீங்கள்

எண்ணக் கூடாது. "பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்" என்று யாரோ சொல்லிவிட்டுப் போனுன். அதை நாங்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேம். உங்களோடு நாங்களும் நன்றாக வாழ வேண்டும் என்று நீங்கள் எண்ண வேண்டாமா? எங்களுக்கு நீங்கள்தானே வசதி செய்து தர வேண்டும். எதற்காக 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரோடு போட ஒப்பந்தம் போட்டு 300 அடிக்கு 400 அடிக்கு முன்னுலேயே ரோட்டை நிறுத்துவது? இனிமேல் 'பர்தர்' ஆக சாங்க்ஷன் வாங்கப் போகுறேர். ஊருக்குள் ரோட்டைக் கொண்டுவருவோம். இனிமேல் இதற்கு எஸ்டிமேட் போட வேண்டும் என்று சொன்னுல், என்ன நியாயம்? இதைச் சொன்னுல், நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் அவர் குறிப்பிட்டவாறு சாலைக் குறைபாடு இருக்கிறது என்று எழுதிக் கொடுத்தால், கண்டிப்பாக உடனடியாக இந்த அரசு அது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அதுபற்றிய விவரங்களைக் கொடுக்கத்தான் போகிறும். நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள். இங்கே இதைப்பற்றி இப்படி ஒருகைக் குறிப்பிடுவதற்குக் காரணம் நிர்வாகக் குறைபாடுகள் இன்னும் இருந்து வருகின்றன. கருங்குடிக்கும் வளமாவூருக்கும் இடையில் 3 கிலோ மீட்டர் நீள ரோடு போட்டு, அது 300, 400 அடிக்கு முன்னுலேயே முடிந்திருக்கிறது. வளமாவூரை எப்படி எழுதியிருக்கிறுர்கள் என்றுல், வளமாமூர் என்று எழுதியிருக்கிறுர்கள். ஊரவயல், உழுவனூர் ஆகிய ஊர்களின் பெயர்களை எல்லாம் சரியாக எழுதியிருக்கிறுர்கள். இன்னும் கருங்குடியைக்கூட சரியாக எழுதியிருக்கிறுர்கள். வளமாவூரை வளமாமூர் என்று எழுதியிருக்கிறுர்கள். அங்கே அந்த ஊர்க்காரர்களைப் போய்ப் பார்த்து, கேட்டுத்தானே எழுதுகிறுர்கள்? அப்படிச் செய்யாமல் ஒருவேளை ஆபீசிலிருந்துகொண்டே, போனில் கேட்டு எழுதுகிறுர்களா? எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

கெட்ட நோக்கத்தோடு நான் இதைச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிர்வாகக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டத்தான் சொல்லுகிறேன். இதையெல்லாம் அரசாங்கத்தில் கவனிக்க வேண்டும்.

கிழக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் 3, 4 மைலுக்கு ஒரே வெள்ளவெளிமாக, பொட்டலாக இருக்கிறது. இடமில்லை என்பது சரியில்லை. அங்கே என்ன தொழில்களை வைக்கலாம் என்பதை நீங்கதான் கவனித்து முடிவு செய்ய வேண்டும்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் பாடினுர். நாம் உழவுக்குத்தான் வந்தனை செய்து கொண்டிருக்கிறேம். அடுத்துள்ள தொழிலைப்பற்றி யார் கவலைப் பட்டார்கள்? சொல்லலாம் வள்ளுவர் சொன்னுர் என்று. இப்போது எல்லாம் தின்று தீர்த்துக்கொண்டிருக்கிறுர்கள். நன்றாக வடை பாயசத்தோடு சாப்பிடுகிறேம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. - பிரியாணியும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டுத் தூங்குகிறேம். அவ்வளவுதான். "வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாட்டில்தான் இருக்கிறது. எனவே தொழிலைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தைத் திரும்பத் திரும்ப நான் கேட்டுக் கொள்வது இனிமேல் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்றுல், அதை கிழக்கு இராமநாதபுரத்திலதான் ஆரம்பிக்க வேண்டும். நிறைய இட வசதி அங்கே இருக்கிறது. காகிதத்தில் புகழ்ந்து அல்லது வருந்திப் பேசுவதில் பயனில்லை. எங்கள் பகுதியில் இருப்பது 'வைக்கோலும் காட்டுக் கருவேல மரமும்தான்' கருவேல மரத்தை அரைத்துக் காகிதம் செய்யலாம் என்பது என்னுடைய எண்ணம். அங்கே ஏராளமாக காட்டுக் கருவேல மரம் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு அந்த மரங்கள் அங்கேயிருந்து வெட்டப்படுகின்றன. 25 பைசாவுக்கு அங்கே கிடைப்பதை இங்கே கொண்டுவந்து 25 ரூபாய்க்கு விற்கிறுர்கள். இதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் பக்கத்தில் டிராக்டர் வைத்திருக்கிற விவசாயிகள் பாடு சகிக்க முடியவில்லை. டிராக்டர் வைத்திருப்பவர்களைவிட, கூட டிரெய்லர் வைத்திருந்தால், அவர்கள் பாடு மிகவும் கஷ்டம். அவர்கள் அதிகப்படியான டாக்ஸ் கட்ட வேண்டும், கட்டுவதற்கு ஆட்சேபணை இல்லை. ஊரைவிட்டு அதை வெளியே கொண்டு போகிறவர்கள் 100 க்கு 5 பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். வியாபார முறையில் செய்கிறவர்கள் இவர்கள். இவர்கள் டாக்ஸ் கட்டுவதற்காக இப்போது இவர்களை டிராக்டரையும் டிரெய்லரையும் எடுத்துக்கொண்டு ஹெட்குவார்ட்டர்ஸ்-க்கு வரச் சொல்கிறுர்கள். அந்த டாக்ஸ் வசூல் செய்யும் அதிகாரிகள் ஒவ்வொரு பிளாக்குக்கும் வந்து, அங்கே இந்த டிராக்டர்களைக் கொண்டுவரச் சொல்லி, பிரேக் சர்ட்டிபிகேட் வழங்கலாம், டாக்ஸ் வசூல் செய்யலாம். தாலுக்காவுக்கு நான்கு பிளாக்குகள் தான் இருக்கும். நான்கு நாளைக்கு இந்த அதிகாரிகள் போய் அந்த பிளாக் ஆபீசில் இருந்துகொண்டால், அங்கே போய் டிராக்டர்களைக் காட்டி சர்டிபிகேட் வாங்கலாம். இதை ஏன் செய்யக்கூடாது என்று தான் கேட்க விரும்புகிறேன். ஐம்பது

மைலுக்கு அப்பால் இருக்கிற இடத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்கிறார்கள். இதை ஒரு பெரிய செலவாகக்கூடச் சொல்லவில்லை. ஒரு ஏக்கர் உழவு செய்வதற்கு டீசல் செலவு தானே ஆகும் என்று சொல்லலாம். ஆனால் ஒன்றைப் பார்க்க வேண்டும். இந்த டிராக்டர்களை வைத்திருப்பவர்கள் எல்லாம் மிகச் சாதாரண ஆட்கள், சில இடங்களில் 3, 4 பேர் சேர்ந்து டிராக்டர் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் மாடு வைத்துக்கொள்ள முடியாதபடி, இந்த சர்க்கார் செய்து விட்டது. ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்காக என்று முன்னெல்லாம் இடம் இருந்தது. அதையெல்லாம் இப்போது எல்லோருக்கும் 'அசைன்' செய்துவிட்டார்கள். மேய்ச்சலுக்கு இடமே இல்லை. மேய்ச்சலுக்கு என்று இடம் விட்டிருந்ததைக் கூட உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து எடுத்துவிட்டார்கள், இப்போது மாடுகள் மேய்வதற்கு இடமே இல்லை. இந்த நிலையில் இவர்களையெல்லாம் டிராக்டர்களைக் கொண்டுவந்து பிளாக் ஆபீசில் நிறுத்துங்கள் என்றால், சுலபமாகப் போய் விடும். இந்தமாதிரியான சௌகர்யங்களைத்தான் நாங்கள் இந்த அரசாங்கத்திடம் கேட்கிறோம்.

மேலும் ஒன்று முக்கியமானது. டிராக்டர் வைத்திருப்பவர்களிடம் அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள். வியாபாரிகளைப் போல் வைத்திருப்பவர்களிடம் இந்த வசூலைச் செய்யட்டும், பரவாயில்லை. அதற்கு ஆட்சேபணை இல்லை. இவர்களிடம் போய் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்? நீங்கள் இந்த டிராக்டர்களையெல்லாம் வைத்திருக்கிறீர்கள். நாங்கள் இதற்கெல்லாம் ஃபிரீ 'லைசென்ஸ்' தானே கொடுத்திருக்கிறோம். சர்க்கார் திட்டங்களுக்கு ரூ. 100 அல்லது ரூ. 50/ கேட்டால் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறார்கள். இந்த டிராக்டர்களை வைத்துக்கொண்டு தொழில் செய்பவர்களிடம் கேட்டாலாவது பரவாயில்லை. மற்றவர்களுக்கு உழவுக்காக வாடகைக்கு விடுகிறவர்களிடம் கேட்டாலாவது பரவாயில்லை. 10, 40 ஏக்கர் வைத்துக்கொண்டு உழுபவனிடம் கேளுங்கள், பரவாயில்லை. 3 வருஷத்திற்கு ரூ. 150/- வரி தவிர, வருஷம் தோறும் ரூ. 70 கட்டிக் கொண்டிருக்கிற சிறு வியாபாரிகளிடம் போய் எதற்காகக் கேட்கிறீர்கள்? எனவே இந்தக் கஷ்டத்தை எல்லாம் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பக்கத்தில் தொழில் இல்லை. தொழில் என்றாலே, எங்கள் பக்கத்தில் மக்களுக்குத் தெரியாது. ரயில்கூட எங்கள் பக்கத்தில் மிகவும் குறைவு. ரெயில் பார்க்க வேண்டுமானால், இராமநாதபுரம் போனால்தான் பார்க்க முடியும்.

(பிற்பகல் 1-20)

கண்ணால் பார்த்தால், இராமநாதபுரம், சிவகெங்கை, காரைக்குடி, பக்கம் 100 மைலுக்குக் கிடையாது, வரும்பொழுது வரட்டும். இப்போது தொழில் ஒன்று இருக்கிறது. இதுதான் தொழில் எங்கள் ஏரியாவில், பறக்கிறதா, நடக்கிறதா தொழில் என்று தெரியாது. கூடையும் மண்வெட்டியும் தான் தெரியும். நல்லபடி செய்து கொடுக்க வேண்டும், முதலமைச்சர் அவர்கள் அடுத்த மாதம் அமெரிக்கா போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ராஜசிங்கமங்கலத்தில் ஒரு பெரிய பாலத்தைக் கட்டியிருக்கிறார்கள். இது போன்று இந்த ஸ்டேட்டில் வேறு ஒன்று இருக்காது. எல்லா வேலையும் முடிந்துவிட்டது. நீங்கள் தான் ஆரம்பித்து வைக்க வேண்டும். வேலை முடிந்தும் போக்குவரத்து இல்லாமல் தடுக்கப் பட்டிருக்கிறது. மராமத்து அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, ஒரு தேதி கொடுத்து, எந்த டயத்தில் வைக்கலாம் என்று தெரிந்து, முதலமைச்சர் அமெரிக்காவிற்குப் போவதற்கு முன்பு செய்து கொடுத்தால், மிகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய விருப்பம். நீங்கள் தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டு. நீங்கள் அந்தப் பாலத்தை எப்போது திறந்து வைக்கிறீர்கள் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தேவர் அவர்கள் அந்தப் பாலத்தை நான் அமெரிக்கா செல்வதற்கு முன்பே திறந்து வைக்க வேண்டும், அதற்கு ஒரு தேதி சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். நான் பணிவன்புடன் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர்கள் வந்துதான் பாலங்கள், கட்டிடங்கள் திறக்க வேண்டுமென்ற அந்த பந்தாவை, பழைய பழக்க வழக்கத்தை நீக்கிவிட்டு, உடனடியாக அதிகாரிகளைக் கொண்டு, அந்தப் பாலத்தைக் கட்டியவர்களின் பெயர்களைப் பொறித்து, திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து) : அமைச்சரின் பதில் இன்று மாலை இருக்கிறது. 4 மணிக்கு வைத்துக் கொள்ளலாமா அல்லது 4½ மணிக்கு வைத்துக்கொள்ளலாமா என்பதை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

(சிறிது நேரம் கழித்து)

அவையின் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்று, மீண்டும் அவை மாலை 4.30 மணிக்குக்கூடும்.

[பிற்பகல் 1-25]

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

அவை மீண்டும் பிற்பகல் 4.30 மணியளவில் கூடியது :

(பிற்பகல் 4-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. இரத்தின பாலகுருசுவாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் காலையிலே தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலேயே பல அங்கத்தினர்கள் பேசி விட்டார்கள். காலையிலேயே முடிந்துவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதல்வர் அவர்கள் வருவதற்குமுன் பேச வேண்டுமென்று கேட்டார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : காலையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 4 மணி என்பதை 4-30 மணிக்கு என்று கூறி மாற்றி அறிவித்திருக்கிறீர்கள். அவர்கள் வந்து பதிலளித்திருக்கலாம். அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. இரத்தின பாலகுருசுவாமி : தமிழக அரசாங்கம் தொழில் வளர்ச்சி பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொண்டு கிராமப் புற மக்கள் வாழ்வதற்கான நல்ல பல திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கின்றது. அதையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள அந்தத் தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நிறைய பேர்கள் விவாதம் செய்தார்கள். அவர்கள் சர்க்கரை ஆலைகளைப்பற்றி எடுத்துப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் யாரும் பேசவில்லை. மாநிலத்தில் 21, 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அந்த ஆலைகள் எந்த எந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிக்கப்போவதாகக்கூட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. திருக்கோயிலூர் வட்டாரத்திலே தொடங்க இருக்கிறோம் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதையும் சேர்த்து 5 சர்க்கரை ஆலைகள் தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய இருக்கிறது. அமைந்திருக்கின்ற பக்கத்ஆலைகளில் தனியார் ஆலை 1, கூட்டுறவுத் துறை ஆலைகள் 3. இராமநா' ஆலைகள் தற்போது இருந்துகொண்டிருக்கின்றன. இந்த

4 ஆலைகளை மையமாக வைத்துப் பார்க்கின்றபோது, தென்னாற்காடு மாவட்டம் சர்க்கரைத் தொழில் வளம் மிக்க மையமாக இருக்கின்றது. இதுவரையில் எந்த அரசும் தென்னாற்காடு மாவட்டத்திற்குப் பெரிய தொழிலை ஏற்படுத்தித் தரவில்லை. தமிழக முதலமைச்சர் அவர்களையும், இங்கே இருக்கின்ற அமைச்சர்களையும் நம்முடைய மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். 100 கோடி ரூபாய் திட்டத்திலே காகித ஆலை திட்டத்தை நமது அரசு உருவாக்கியிருக்கிறது. அது நிதிநிலை அறிக்கையிலேயும் தரப்பட்டிருக்கிறது. அந்த நூறு கோடி ரூபாய் செலவிலே அமைய இருக்கின்ற தொழிற்சாலை தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், அங்குள்ள பின் தங்கிய மக்களுக்கு அது வாழ்வளிக்கும் திட்டமாக அமையக்கூடும் என்ற காரணத்தால், பெரிய பொறுப்பிலே இருக்கின்ற இந்த அமைச்சர்கள் உள்ள இந்த அவையிலே அந்தத் திட்டத்தை அங்கே நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கு கரும்பு ஆலைகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டதற்குக் காரணம், கரும்பு ஆலை சக்கைகளிலிருந்துதான் அவர்கள் காகிதம் செய்யலாம் என்ற யோசனையை வெளியிட்டார்கள். ஆகவே அந்த மூலப் பொருள் அங்கு அதிகமாகக் கிடைக்கும் என்ற காரணத்தினாலும், அந்தப் பகுதி 5 சர்க்கரை ஆலைகளை உடையது என்ற காரணத்தினாலும், பொதுவாக தென்னாற்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினாலும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது நடு மையமாகவும் அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு வேண்டிய புறம்போக்கு நிலங்களும் எங்கள் பகுதியில் நிறைய இருக்கின்றன. அதற்காகத் தனியாரிடம் போக வேண்டியதில்லை. அதற்கான மூலப்பொருள், கரும்பிலிருந்து பிரிக்கப்படும் சக்கை, அதை போழ்து என்று சொல்வார்கள், அந்த போழ்து அதிகமாக அங்கு கிடைக்கின்றது. இந்தக் காரணங்களுக்காக அந்த இடத்தில் அந்த ஆலையை அமைத்துத் தந்தால், தென்னாற்காடு மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவுக்கும் காகிதத்தைப் பொறுத்தவரையில், நல்ல முறையில் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். நல்ல சத்துள்ள மூலப்பொருள்கள் அங்கே ஏராளமாக இருக்கின்றன. ஆகவே தென்னாற்காடு மாவட்டத்திற்கு இந்தப் பெரிய ஆலையை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாகவும், பின் தங்கிய மக்கள் உள்ள மாவட்டமாகவும் இருக்கிறது. அங்கு காகிதத் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. மற்ற

மாவட்டங்களிலேயும் கரும்பு பயிரிடுகிறார்கள். ஆரூரிலே கரும்பு பயிரிடுகிறார்கள். அங்குள்ள கரும்புச் சத்து 6 புள்ளி, 7 புள்ளிக்குக்கூட இருப்பதில்லை என்று சொல்கின்றார்கள். தென்னாற்காட்டில் கரும்புச் சத்து 11 புள்ளிக்கும் அதிகமாக இருப்பதாக நிபுணர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த 11 புள்ளி அளவுக்கு அதிகமாகப் பயிரிட்டுக்காட்டிப் பரிசும் பெற்றவன் நான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே நல்ல கரும்பு வளம் இருக்கிறது. இந்தியா அளவிலே எடுத்துக்கொண்டாலும். பீகாரிலே, பஞ்சாபிலே, உத்திரப் பிரதேசத்திலே என்று எடுத்துக்கொண்டு பார்த்தாலும்கூட, இந்தத் தென்னாற்காடு பக்கத்திலே விளைகின்ற கரும்பு 10 புள்ளி, 11 புள்ளி, 12 புள்ளி என்று இருக்கின்றது என்று புள்ளிவிவரம் இருக்கிறது. அந்த அளவுக்குப் புள்ளி மற்ற மாவட்டங்களிலும் வரவில்லை. 7, 8, 9 புள்ளிகள் தான் வந்திருக்கின்றன என்பதை தான் தெரிவித்துக் கொள்கிறேன். அதையொட்டித் தான் இங்கே 5 ஆலைகள் மட்டும் இருந்தால், போதாது என்று சொல்கிறேன். சேத்தியாத் தோப்பு பகுதியிலே தரிசாக புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு தொழிலை அமைக்க பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களிடம்கூட வாயால் சொல்லிக் கேட்டேன். எழுதிக் கேட்கவில்லை. எழுத்துமூலமாகக் கேட்கவில்லை. அதை எழுத்து மூலமாகக் கேட்டிருந்தால், நிச்சயமாகச் செய்திருப்பார்கள். பக்கத்திலே வீராணம் ஏரி இருக்கின்றது. வீராணம் ஏரியின்மூலம் தண்ணீர் தட்டுப்பாடின்றி அங்கே விளைகின்ற கரும்புக்கு ஏற்ட அங்கே தொழிலை அமைக்கலாம். அது பொருத்தமான இடம். அந்த இடம் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு விரோதம் இல்லாமல் அங்கே அமைக்க வேண்டும். அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது அங்கு புள்ளி அதிகமாக வருவதால், இந்த ஆலையை அங்கே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கரும்புச் சத்து புள்ளிகள் அதிகமான வட்டாரமாக இருப்பதால், அதிக அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க அரசுக்கும் அது தூண்டுகோலாக இருக்கும். அங்குள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கும். அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே கரும்பு ஆலைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கு அந்தக் காகித ஆலையை நிறுவ வேண்டும். அதற்கு வேண்டிய கரும்புச் சக்கை, கோது, அங்கே அதிகமாகக் கிடைக்கின்றது என்ற காரணத்தினாலே, அங்குள்ள மக்கள் பின் தங்கிய மக்கள், மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்ற

காரணத்தாலே, நம் தமிழக அரசு தென்னாற்காடு மாவட்டத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40.)

பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசுகின்ற போது, இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்று சொன்னார்கள். நானும் அதை உணர்கிறேன். என்றாலும் அந்தத் தொழிலுக்கு வேண்டிய மெடிரியல்ஸ் அங்கே சுலபமாகக் கிடைக்காது. ஆகவே தென் அற்காடு மாவட்டத்திலே......

திரு. வே. தங்கப்பாண்டியன்: எந்த அடிப்படையை வைத்துக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மூலப் பொருள்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்? இன்ன தொழில் என்று சொல்லி, அதற்கு மூலப் பொருள்கள் அங்கே இல்லை என்று சொன்னால் புரிந்துகொள்ளலாம்.

திரு. இரத்தின பாலகுருசாமி: பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது எதுவுமேயில்லை என்று சொன்னதால்தான், நான் அதைச் சொன்னேனே தவிர, காழ்ப்பு உணர்ச்சியாலோ, மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் பாராட்டியோ, இதைச் சொல்லவில்லை. தென் ஆற்காட்டில் கரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கே அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துங்கள் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஒருவரை ஒருவர் மித்திர பேதம் செய்து, எங்களுக்கு வேண்டுமென்று கேட்கிற சுபாவம் உடையவன் அல்ல நான். எங்கள் மாவட்டத்தைப் போன்று, மற்ற மாவட்டத்துக்காரர்களும் கேட்க உரிமையுடையவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே கூட்டிக் குறைத்துப் பேசுகிற சுபாவம் என்னிடமில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்காக நம்முடைய தமிழக அரசு 1978-79 ஆம் ஆண்டிலே எடுக்க இருக்கும் பெரு முயற்சிக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் காலமெல்லாம் உழைத்து, உழைத்து அலுத்துப் போய், உழைத்து அலுத்த பெருமைக்காக தென் ஆற்காடு மாவட்டத்தின் பின் தங்கிய மக்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையிலே அந்த ஆலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி கொள்கை விளக்கக் குறிப்பின்மீது இங்கே எனக்கு முன்னால் பல அரிய ஆலோசனைகளை இந்த அவையிலே கூறினார்கள். தொழில் பரவலாக்கப்பட வேண்டும்,

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 27

தொழில் வளர்ந்தால்தான் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தீருமென்று எல்லோரும், அனைத்துக் கட்சியினரும் ஒட்டுமொத்தமான கருத்தை உடையவர்களாக இருந்தாலும், ஆளுங்கட்சிக்கு இருக்கக்கூடிய செயலாற்றும் திறன், நடைமுறைப்படுத்தும் திறன் எந்த அளவுக்கு இருக்கிறதென்டதை இதுவரை பரிசீலித்தார்கள். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கிராமப் புறங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க நிலை என்று நான் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே, சுதந்திரத்திற்குப் பின்னால், இந்த நாட்டிலே ஒரு நாளைக்கு இரண்டு தொழிற்சாலைகள் என்றமுறையில் அமரர் காமராஜர் அவர்களின் தலைமையில் இயக்கப்பட்டது. அதனால் இந்த நாட்டிலே தொழில் வளம் பெருகியது. வேலை வாய்ப்பு கிடைத்தது. அதை நாடு அறியும். அதற்குப் பின்னால் தொழிலாளர்கள் மத்தியில் வேலை இல்லாமையும், தொழில்களை ஆரம்பிக்க முடியாத நிலையும் இந்த நாட்டிலே உருவாவதற்குக் காரணம் என்ன என்பதை ஓரளவுக்குப் பரிசீலிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். விவசாயிகளுக்கு அனுசரணையாகவுள்ள தொழில்களை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதற்காக நமது கொள்கையிலே ஒரு திருப்பம் வேண்டுமென்றும் இன்றைக்குப் பரவலாகக் கூறிக்கொண்டிருக்கிறோம். அது எந்தத் திருப்பமாக இருந்தாலும் சரி, இன்றைக்கு கிராமங்களிலே இருக்கக்கூடிய நிலங்கள் அப்படியே தான் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பு, உண்ண உணவு இருக்கிறதா என்றால், இல்லை. அவர்கள் அனைவரும் நகர்ப்புறத்தை நாடி வரக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. படித்த பட்டதாரிகளுக்கு வேலையில்லை. அவர்கள் படித்த கல்வியால் வேலை இல்லையா அல்லது தொழிற்சாலைகள் இல்லாமையால் வேலை இல்லையா என்ற பிரச்சினைகளெல்லாம் இன்றைக்கு எழுந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்குத் தரக்கூடிய கல்வி தொழிற் கல்வியாக இல்லாததால், அவர்களாகவே வேலையைத் தேடிக்கொள்ளும் நிலையில் இல்லையா என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் படித்தவர்கள். இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்து, அதனால் ஊதியம், உண்ண உணவு ஆகியவற்றுக்கும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்பதால், அதைப்பற்றி அரசு தீவிரமாகச் சிந்திக்க இருக்கிறார்கள். இன்றைக்கு என்ன நிலை இருக்கிறதென்றால், அவசர கால நிலைக்குப் பின்னால், சில தொழில்களை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் பொறுப்பிலுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சாடக்கூடிய நிலையில் மக்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும், தொழில்களை நடத்தக்கூடிய முதலாளிக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ நல்ல நியாயம் கிடைக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் தலையிட

1978 மார்ச் 27] [திரு. எல். பலராமன்]

வில்லை என்ற நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நிலை அரசாங்கத்திற்கு நல்லதல்ல. அன்றாடம் எழக்கூடிய தொழிலாளர் பிரச்சினைகளில், தொழிலாளர்களுக்கும், நிறுவனத்திற்கும் மத்திமமாக இருந்து, பிரச்சினைகளை எப்படித் தீர்க்கலாம் என்று சிந்தித்து, பிரச்சினைகளைத் தீர்த்தால்தான், தொழில்கள் வளர முடியும். அப்போதுதான் மற்றைய மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு வந்து தொழில்களை ஆரம்பிக்கும் நிலை ஏற்படும். அந்த நிலை இப்போது இந்த மாநிலத்தில் இருக்கிறதா என்றால், ஓரளவுக்குக் குறைந்திருக்கிறதென்பதை உணர்ந்திருக்கிறோம். அதைப் போக்க அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு உதாரணங்கள் பல இருந்தாலும், அதையெல்லாம் சுட்டிக் காண்பிக்காமல், அந்த நிலையைப் போக்க அமைச்சரவையும், இந்த அரசும் முயல வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். தொழிலாளர்களும், தொழில்களும் 'தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்கு தொன்னை ஆதாரமா' என்பது போன்றதாகும். எனவே தொழிலாளர்களுடைய நலனைக் காப்பது பொறுப்பு ; அதைப் போல தொழிற்சாலைகளையும் காப்பது நம்முடைய கடமை என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கிராமப்புறத் தொழில்கள் என்று கிராமப்புற மக்களை வாழ வைக்க வேண்டுமென்பதற்காக அந்தக் கொள்கையைச் சொல்கிறோமா அல்லது அவர்கள் ஆறுதல் அடைவதற்காக அந்தச் சொற்களைக் கூறுகிறோமா என்று தெரியவில்லை. கிராமப்புற மக்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைக்குப் பின்னால், புது ஆண்டிலே தொழிற்சாலைகள் வருமென்று எண்ணிக் கொண்டிருக்கும் நிலையைத்தான் பார்க்கிறோம். அந்த நிலை வாயளவில்தான் இருக்கிறது. அதைச் செயல்படுத்த என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசங்கள் டார்க்கவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு கோவை மாவட்டத்தில் தொழில் வளம் பெருகியிருக்கிறது. மற்ற மாவட்டத்தில் பெருகவில்லை. அதற்குக் காரணம் என்ன? அதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் நிலையில் இருக்கிறோம். அதற்காக அரசாங்கத்திலே உள்ளவர்கள், பொறுப்பிலே உள்ளவர்கள், அங்கே சென்று அந்த மாவட்டத்தின் நிலை, அந்த மாவட்டத்திலுள்ள உப பொருள்கள், கிடைக்கும் மூலப்பொருள்கள் எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தால் நல்ல முறையில் செயல்படும் என்பதையெல்லாம் ஆராய வேண்டும். அதற்காக அதிகாரப் பற்றற்றவர்களைக் கொண்ட 'செமினார்' நடத்துவது வழக்கமாக

கடந்த காலத்தில் இருந்தது. ஆனால் நடத்திய செமினார்களின் முடிவுகளின்மீது எடுத்த நடவடிக்கை என்ன என்று பார்த்தால் ஒன்றுமில்லை என்டதைக் காண்கிறோம்.

(பிற்பகல் 4-50.)

தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்றாலே ஒரே பயம், பீதியாக இருக்கிறது முதலாளிகளிடத்தில். தொழிற்சாலையில் முதலைப் போட்டால், அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்குமா, இலாபகரமாக இருக்குமா, போட்ட முதல் வருமா என்று அவர்கள் சந்தேகிக்கக் கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான போதிய அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்குரிய நல்ல நிறுவனம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

படித்த இளைஞர்கள் ஏதாகிலும் தொழில் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. மாவட்ட அளவிலே; கிராமப் புறங்களில் கிடைக்கக் கூடிய உப-பொருள்களை சர்வே செய்து, அந்தந்த மாவட்டங்களில் அதற்கான தொழில்களைத் தொடங்க ஒரு கருத்தரங்கை நடத்தி, பலருடைய ஆலோசனைகளைப் பெற்றுத் தொழில்களை ஆரம்பித்தால் நலமாக இருக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, வட மாநிலங்களான பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்கள் தொழில் வளத்தில் முன்னேறியிருக்கின்றன என்றும் அங்கே இருக்கக் கூடிய மக்கள் செழிப்பாக இருக்கிறார்கள் என்றும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள், அந்த மக்களைப் போன்றவர்கள்தான் தமிழ்நாட்டு மக்களும். தமிழ் நாட்டு மக்கள் உற்சாகம் நிறைந்தவர்கள்தான். ஆனால், ஏன் தொழில் வளம் தமிழ்நாட்டில் பெருகவில்லையென்றால், ஆலோசனைகளை வழங்குவதில் ஒரு நல்ல நிலை இல்லாததுதான், அங்கேயெல்லாம் எங்கே வேண்டுமானாலும் தொழில்களை ஆரம்பிக்க வழிமுறைகள் இருக்கின்றன. நினைத்த நேரத்திலே தொழில்களை ஆரம்பிக்க அங்கே ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஆனால், இங்கே பல சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஆரம்பிப்பதற்கு முன்னால் வழிமுறைகளை அனுசரிப்பதில் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் தொழில்களை ஆரம்பிக்கும் நிலையில் உள்ள நடைகளைத் தளர்த்த வேண்டுமென்று ஆலோசனைகளைக்கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பத்து குதிரை விசையுள்ள ஆலைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் லைசென்சை யார் வழங்க வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். பத்து குதிரை விசைக்கு மேல இருபது குதிரை விசை வரை உள்ள ஆலைகளுக்கு இன்னொர் லைசென்ஸ் வழங்கலாம் என்று நிர்ணயிக்க வேண்டும். அப்படியில்லாமல், இன்றைக்கு ஒரு சிறு கிராமத்தில் லைசென்ஸ் வேண்டுமென்று மனுச் செய்தால், முதலாவதாக பஞ்சாயத்தில் கொடுக்க வேண்டும். அங்கிருந்து அந்த மனு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு அனுப்பப்படும், பிறகு டவுன் பிளானிங் ஆபீசர், ஹெல்த் ஆபீசர் ஆகியவர்களுடைய அலுவலகங்களுக்கெல்லாம் வரிசையாகச் சென்று திரும்புவதற்குள் வெகு காலமாகிவிடுகிறது. இந்த நிலை ஏன் இப்படி நீடிப்பது நியாயமா என்ற கேள்வியை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதை நீக்குவதற்குரிய பரிகாரம் என்ன என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும். அந்த முறையில் இந்தப் பிரச்சினைகளை அணுகி, சிறு தொழில்கள் ஆரம்பிக்க நாம் ஊக்கம் அளிக்க வேண்டும். படித்த இளைஞர்கள், வேலையற்ற இளைஞர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறார்கள், அவர்களுடைய உணர்வுகளையும் நல்ல முறையில் பயன்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

படித்த இளைஞர்கள் மத்தியிலே வேலையில்லாப் போராட்டம் நடக்கிறது. பட்டதாரிகள் மத்தியிலே வேலையில்லாத நிலை இருக்கிறது. பொறியாளர்களுக்குக்கூட இன்றைக்கு வேலையில்லாத நிலை இருக்கிறது. இவையெல்லாம் போக்க வேண்டுமென்றால், இது போன்ற சிறு தொழில்கள் தேவை என்பதை நாம் உணர வேண்டும். நாம் பிற நாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையானாலும், நம் நாட்டிலுள்ள பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களை முன் மாதிரியாகக் கொண்டு, அங்கெல்லாம் தொழில்களை வளர்க்க என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து அதற்கேற்ப நாமும் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கூற ஆசைப் படுகிறேன்.

ஜப்பானில் 3 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு நல்ல முறையில் விவசாயம் செய்து சீராகவும், சிறப்பாகவும் வாழ்கிறார்கள். அங்கே, தனி நபர் வருமானம் அதிகமாக இருக்கிறது என்ற பரவலான செய்தியை நாம் பத்திரிகையின் வாயிலாகப் பார்க்கிறோம். அங்கே தொழில்கள் செய்பவர்கள்கூட நல்ல முறையில் தொழில்களைச் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அங்கே உற்பத்தி செய்கின்ற எலெக்ட்ரானிக் கருவிகளை இந்திய நாட்டுக்கு அனுப்பி, ஏன் தமிழ் நாட்டிற்குக் கூட அனுப்பி, இங்கே கருவிகள் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. அங்கே

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 27

கூலி அதிகமாக இருக்கிறது என்றும், இங்கே கூலி குறைவாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு அந்த நாடுகளில் எப்படி தொழில் வளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாமும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையில் அணுகினால், தொழில் வளம் நல்ல முறையில் நம் நாட்டிலும் ஏற்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையி லுள்ள சச்சரவுகளை நல்ல முறையில் தீர்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்து அதற் கேற்ப செயலாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

சர்க்கரை ஆலைத்தொழில் இன்றைக்கு பெரிய தொழிலாக விவசாயிகளின் மத்தியில் இருக்கிறது. இன்றைக்கு கரும்பு உற்பத்திக்கு அதிக செலவாகிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது, ஆனால் விலையை அதிகமாக்கிக் கொடுக்க முடியவில்லை என்பதை ஒத்துக் கொள்ளுகிறார்கள், கட்டுபடி யாகக் கூடிய ஒரு நிலையான விலையை வழங்குவது என்பது நல்ல நிலை. அதை வழங்காததற்குக் காரணம் மத்திய அரசாங்கம் என்று பழியை அவர்கள்மீது போட்டு விடலாம் என்றிருந்தாலும், ரிக்கவரியின் அடிப்படையிலே 8.5 சதவீதம் சர்க்கரை கட்டு மானத்திற்கு ரூ. 125 வழங்கலாம் என்று அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இது போதாது என்று விவசாயிகள் இன்றைக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்தித் தர வேண்டுமென்பது தமிழ் நாட்டினுடைய நிலையாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளின் இந்தக் குறையைப் போக்க அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்றன. திருவலம் என்ற இடத்தில் வேலூர் சர்க்கரை ஆலை என்று ஒரு ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. அந்த ஆலையில் நிர்வாகச் சீர்கேடு என்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது. அவர்கள் பத்து மாதத்தில் அறுக்கக் கூடிய அளவுக்கு பல ஏக்கர் கரும்பு நிலத்தைப் பதிவு செய் திருக்கிறார்கள். நட்டு பத்து மாதம் ஆகிய பின்னால் வெட்டு உத்தரவு வழங்க வேண்டுமென்ற நிலை இருந்தாலும், 12, 13 மாதங்கள் கழித்துக் கூட வெட்டு உத்தரவை வழங்காமல் இருக்கிறார்கள். வெட்டி ஒரு வாரம் ஆகிய பின்னும் கழனியில் தொடர்ந்து காயக் கூடிய நிலைதான் இருக்கிறது. இப்படி யெல்லாம் நடப்பதால், வர வேண்டிய அளவுக்குச் சர்க்கரை யின் அளவு இருக்குமா என்று பார்த்தால், இல்லை. கட்டாயம் சர்க்கரையின் அளவு குறையும். அதற்குக் காரணம் லாரிகள்

1978 மார்ச் 27] (திரு. எல். பலராமன்)

கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். லாரிகள் கிடைக்கவில்லை என்ற சாதாரண நிலை இருப்பதைப் போக்குவதற்காக என்ன செய்யப் போகிறீர்கள் என்று அதிகாரிகளைக் கேட்டேன். நாங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப் போகிறோம் என்று கூறினார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இல் லாமல் கிராமத்தில் சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மத்திய அரசாங்கம் செஸ் என்ற முறையில் அதிகமான வரிகளைப் போட்டிருக்கிறது. கொடுக்கக் கூடிய விலையைக் காட்டிலும் மத்திய அரசாங்கம் போடக் கூடிய சர்சார்ஜ் அதிகமாக இருப்பதைத் தவிர்ப்பதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்தால், அது விவசாயிகளை ஊக்குவிப்பதாகவும், அந்தத் தொழில்கள் நல்ல முறையில் நடக்கவும் உதவும் என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 5-00)

கடந்த ஆண்டு ஆம்பூர் சர்க்கரை ஆலையில் நூற்றுக்கணக்கான டன் "மொலாசிஸ்" திறந்து விடப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். அப்படி விடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள பங்குதாரர்களாக உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தத் தொழிற் சாலையினை நல்ல முறை யில் நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகி றேன். கிராமங்களில் நல்ல தொழிற்சாலைகளை ஆரம்பித்து, விவசாயத் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலைகளில் ஈடு படுவதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன், அத்துடன் எளிமையான முறையில் லைசென்சு வழங்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரக் கூடிய தொழில்கள் அவை. அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை களில் வெளியாகும் கழிவுப் பொருள்கள் வெளியேற்றப்படும் போது, விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. பாலாற்றில் விடப் படுகின்ற அந்தக் கழிவு நீர் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை பாதிக்கும் சூழ்நிலை இருக்கிறதைப் பார்க்கிறோம். அந்தப் பாலாறு படுகையிலுள்ள அனைத்து நிலங்களில் விவசாயம் பாதிக்கப்படுவதோடு, அந்தப் பகுதியில் குடிநீரும் பாதிக்கப் படுவதை இந்த அமைச்சரவை உணர வேண்டுமென்று கூறி, அவற்றைச் சீர்திருத்தும் வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் தொழிலாக இருந்தாலும், அதனால் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படாமல் நடவடிக்கை எடுக்க

வேண்டும். விவசாயத்தையே நம்பியிருக்கும் தென்னுற்காடு மாவட்டத்தில் சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காட்டு இலாகா மானியத்தில் தென்னுற்காடு மாவட்டத்தில் சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சிலைகள் செய்பவும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யவும் உள்ள அந்தத் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறி இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திருமதி சத்தியவாணி முத்து : துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்கக் குறிப்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கான நல்ல வாய்ப்புகள் ஏராளமாக உண்டு என்பதை அனைவரும் அறிவார்கள். இது கனி வளம் நிறைந்த நாடு என்பதும் உழவுத் தொழிலுக்கு அடுத்து இந்தத் தொழில் இருக்கிறது என்றும் உழவு, வாணிபம் எல்லாம் சேர்ந்துதான் இந்த பூமி உள்ளது என்றெல்லாம் பண்டைய நாட்டில் தமிழகத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். நெசவுத் தொழில் மிகவும் முக்கியமான தொழில். திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி வளர்த்து ஆட்சி பீடத்தில் கொண்டுவந்து அமர்த்திடுவதற்கு முன், தமிழகத் தொழில் மேம்பாடு அடையும் என்று அன்றைக்குப் பேசினோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லி, அனைத்துத் தொழிலும் வடக்கிலே இருக்கிறது, தெற்கே ஒன்றுமே இல்லை என்று பேசி, வடநாட்டுக்காரர்கள் கடையில் போய் மறியல் செய்தோம். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்தபோது, அந்நிய நாட்டுத் தொழிலையும் பொருள்களையும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று அன்றைய காங்கிரஸ்காரர்கள் சொல்லியதைப் போல, வடநாட்டிலுள்ள தொழிற்சாலைகளைச் சார்ந்தவைப் பொருள்களை வெறுத்தோம். எதை எடுத்தாலும், ஒரு ஆணி வேண்டுமென்றால், அதற்கு மார்வாடியிடம் போக வேண்டும். துணிகளுக்கும் வடநாட்டுக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அதேபோன்று சாதாரண மிட்டாய் கடைக்குக் கூட ஒரு ஆரியபவன் தான் இருக்கிறது என்று இப்படி வடநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் அந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் வந்து அமர்ந்த பிறகு, தமிழ் நாட்டில் அந்த அளவுக்குத் தொழில் துறை முன்னேறியதா என்று பார்த்தால், நாம் மனம் விட்டுச் சொல்ல வேண்டும், தோல்விதான் கண்டோம். பெரிய பெரிய திட்டங்கள் என்று விளம்பரப் படுத்தினோமே தவிர, அவை வெற்றிகரமாக நிறைவேறவில்லை. காவேரிப் படுகையில் எண்ணெய் இருக்கிறது. சேலத்தில் இரும்பு இருக்கிறது. அவற்றையெல்லாம்

எடுப்போம் என்று தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் குரலை எடுத்து ஆட்சிக்கு வந்தது. அவற்றில் வெற்றி பெற்றோமா என்றால், இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் யார் யாரைப் போ வா வா என்று வரவேற்றதுதான். எந்த வட நாட்டுக்காரர்களை வேண்டாமென்று அன்றைக்குச் சொன்னோமோ அவர்களை வரவேற்புக் கூறி அழைத்து, இங்கே தொழில் நடத்தச் சொல்லும் அளவுக்கு கொள்கையில் பலகீனப்பட்டு விட்டோம். தனியார் துறையில் உள்ளவர்களைக் கூட்டுத் துறையில் அரசு சேர்த்து பலருக்குக் கடன் உதவி செய்து தொழில்களை மேம்படுத்தப் பல திட்டங்கள் தீட்டப்பட்டனவே தவிர, இன்றைக்கு அவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் தொழில் துறை முன்னேற்றம் அடையவில்லை. தனியார் விரும்பிச் செய்கிற அந்தத் தொழிலில் உள்ள ஒற்றுமையும் கட்டுப்பாடும் லாபமும் அரசாங்கம் கூட்டு சேர்ந்து செய்வதில் ஏற்படாததற்குக் காரணம் முன்னால் இருந்த அரசு அவ்வளவு தவறான தொழில் கொள்கையை வைத்திருந்ததுதான். ஓட்டல் தொழில் என்பது இன்றைக்கு உலக நாடுகளிலே பெரிய தொழிலாக இருப்பதைக் காண்கிறோம். அந்த ஓட்டல் தொழில் நம் நாட்டிலே அந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்ததா என்றால், இல்லை. சிவகாசியில் செய்யப்படுகிற பட்டாசு அமெரிக்க நாட்டுக்கு அனுப்புகிற அளவுக்கு, உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு, பெருகியிருக்கிறது. அமெரிக்கர்கள் சிவகாசி பட்டாசுகளை வெடித்து மகிழ்கிறார்கள். அவர்களுக்கு இதற்கு முன்னால் இருந்த அரசு என்ன உதவி செய்தது என்றால், ஒன்றுமில்லை. தீப்பெட்டிக்காக அவர்களுக்கு வேண்டிய மெழுகு-அவர்களுக்கு 6,000 டன்னுக்கு மேல் தேவைப்படுகிறது என்றால் மத்திய அரசு 41% தான் தருகிறது. இந்த மெழுகை அதிக அளவில் மத்திய அரசு கொடுத்தால், இதுபோன்ற தொழில்களுக்கு நாம் இன்னும் உதவி செய்ய முடியும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே பலர் பேசும் போது, படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு நிதி உதவி செய்து தனியார் முயற்சியில் ஈடுபட்டு, தொழில் செய்ய விரும்புகிறவர்களுக்கு ஊக்கமளிப்பது அவசியமாகும். அப்படிச் செய்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் தொழில் அமைதி இருக்கிறது. தொழிலாளர்கள் அதிகமாகப் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை. இதை அண்டைய மாநிலத்தில் உள்ளவர்கள் தெரிந்து, நம் மாநிலத்திற்குத் தொழில் நடத்த முன்வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் இன்றைக்கு உதவி செய்ய வேண்டும்.

கேரளாவில் ஆலப்புழையில் இருப்பதைப் போன்ற கயிறு தொழிற்சாலை ஒன்றை நாகர்கோயில் பக்கத்தில் நிறுவ தமிழ் நாடு அரசு கடன் உதவி செய்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலை

அமைப்பதன் வாயிலாக பல பொருள்கள், பாய்கள் போன்றவை இயந்திரங்கள் மூலமாக உற்பத்தி செய்து அயல் நாடுகளுக்கு அனுப்புகிற வாய்ப்பு கிடைக்கிறது. ஹாலந்து நாட்டில் ஒப்பந்தம் வைத்துக்கொண்டு, அங்கிருந்து இயந்திரங்களை வாங்கி நாகர்கோயில் பகுதியில் இரண்டாயிரம் பேருக்கு வேலை தருகிற அளவில் நடத்துகிறார்கள். இயந்திர மயமாகி விட்டதால், அந்தத் தொழில் அதிக மேம்பாடு அடைகிறது என்ற நினைப்பில் கேரள மாநிலத்தில் உள்ளவர்கள் இந்தத் தொழிற்சாலை நாகர்கோயிலில் இருக்கக் கூடாது என்று தடுப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆரம்பத்தில் விவசாயத்தில் ஏர் மாடுகளைக் கொண்டு உழுது வந்தார்கள். பிறகு டிராக்டர் போன்ற இயந்திரங்கள் வந்ததும் அவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண முடிந்தது. வேலை வாய்ப்பு போய்விடும் என்று டிராக்டர் வந்த புதிதில் அதை எதிர்த்தார்கள். இப்போது அது அனுபவத்தில் பழகிவிட்டது.

(பிற்பகல் 5-10)

அதைப்போலவே கைத்தறியில் பவர் லூம் என்று வந்தபோது, கைத்தறியாளர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. அதைப்போலவே விசைப்படகுகள் வந்தபோது, கட்டுமரத்தில் சென்று மீன்பிடித்து வந்தவர்களிடமிருந்து எதிர்ப்பு வரத்தான் செய்தது. எனவே துவக்க காலத்தில் கையால் செய்யும் தொழில்களை இயந்திரத்தின் உதவியோடு செய்கிறபோது, சிறுசிறு எதிர்ப்புகள் எழத்தான் செய்யும். அதைப் போல இந்த காயர் இன்டஸ்ட்ரீஸால் இது வரையில் கையால் செய்து வந்த தொழில் இயந்திரமயமாக்கப்படுகிறது என்பதைப் பார்த்து, அண்டை மாநிலத்தில் உள்ள கேரள அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகத்தில் இருக்கிற இந்த காயர் இன்டஸ்ட்ரீசால் உற்பத்தி செய்கிற பொருட்களை— லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உற்பத்திப் பொருட்களை- ஏறத்தாழ ரூ. 3 லட்சம் பெறுமானமுள்ள பொருட்களை-வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாத அளவுக்கு மத்திய அரசிடம் தடைபோட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசும், அங்குள்ள அமைச்சர்களும் எப்படியாவது இந்தத் தொழில் மேம்பாடு அடைய வேண்டும், இங்கே உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அயல் நாடுகளுக்கு அனுப்ப வேண்டும், அதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். குறிப்பாக மத்தியத் தொழில் அமைச்சர் அவர்களும் ஏனையோரும் நமக்கு ஆதரவாக ஆறுதலாக இருந்தாலும் கூட, இயந்திர மயமாக்குவதால் பலருக்கு வேலை இருக்காது, கேரளத்தில் இருப்பவர்களுக்கு இனி வேலை இருக்காது என்று தமிழ்நாட்டிலுள்ள இந்தத் தொழிற்சாலையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அளவுக்கு அங்கே கருத்துக்கள் இருக்கின்றன. எனவே மத்திய அரசு நமக்குச் சாதகமாய் இருக்கும்போதே, நம் மாநில அரசு அந்தத் தொழிற்சாலைக்கு

அதிகமான ஆதரவைக் கொடுத்து, ஏற்கெனவே உற்பத்தி செய்து வைக்கப்பட்டிருக்கிற சரக்குகளை அந்நிய நாடுகளுக்கு அனுப்புவதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய அந்நியச் செலாவணியைப் பெறுகிற அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னஞ்சிறு தொழில் செய்பவர்களுக்கெல்லாம் அரசாங்கம் கடனுதவி தருகிறது. இந்தக் கடன் உதவி தருவதில் ஏற்படுகிற சிக்கல்களை நாம் நீக்க வேண்டும். சிலபேர் கூட்டாகச் சேர்ந்து தொழில் நடத்த முன்வருகிறபோது, அரசு அவர்களுக்கு உதவ முன்வந்தாலும், அவர்களுக்குக் கடன் உதவி அளிப்பதில் இருக்கிற முறைகளின் காரணமாக ஏற்படுகிற தாமதங்கள் சிலருக்குக் கடன் உதவி பெறுவதில் பல தொல்லைகளைத் தருகிற காரணத்தால், அந்தத் தொல்லைகளை நீக்கிக் கடன் உதவிகளை விரைவில் பெறுகிற அளவுக்கு அந்த முறைகளை எளிமைப்படுத்தினால்தான், ஏராளமானவர்கள் அரசு கடன் உதவிகளைப் பெற்று, சிறு சிறு தொழில்களை ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் ஏற்படுத்தி நடத்த முடியும்.

இன்றைய தினம் ஏராளமானவர்கள், படித்தவர்கள் அரசாங்கப் பணியில் சேர வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அரசாங்கத்தில் வேலை வாய்ப்புகளை எதிர்பார்க்கிறார்கள். காரணம் படித்தவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறபோது, அவர்களுக்கு சரியான ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பட்டதாரிகளுக்கு சில வேலை வாய்ப்புக்கள் எல்லாத் துறைகளிலும் தரப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. அந்த வகையில்தான் தாழ்த்தப்பட்ட பட்டதாரிகளுக்கு-படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு பெட்ரோல் பம்பு வைப்பதற்கும், வேறு சில எஞ்சினீயரிங் தொழிற்சாலைகளை வைப்பதற்கும் உதவி அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, அவைகளை முறையாகப் பெறுவதற்குள்ள வாய்ப்பு எளிதாக இல்லாத காரணத்தால், அவைகளைப் பெற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தொழிலில் முன்னேற்றம் அடைய முடியவில்லை. எனவே இதற்கும் மாநில அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு கிராமங்களிலெல்லாம் சிறு சிறு தொழில்களை உண்டாக்குவதன் மூலமாக கிராம மக்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி நகரத்திற்கு வரும் நிலையைப் போக்க முடியும் என்று செயல்படத் தொடங்கியுள்ளது. கிராமங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலை, மெழுகுவத்தித் தொழிற்சாலை போன்ற சிறு தொழிற்சாலைகளை, நார் தொழிற்சாலை போன்றவைகளை வைப்பதன் மூலமாக, கிராமங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களை வைத்துக்

கொண்டு சிறு தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலமாக மகளிர்க்குத் தனியாகத் தொழில் வாய்ப்பும், வேலையில்லாதிருப்பவர்களுக்குத் தனியாகத் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரவேண்டும்; இதன் மூலமாக கிராமத்தில் வேலைவாய்ப்பில்லை என்று நகரத்தைத் தேடி வருகிற நிலைமையை மாற்ற இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சிகள் ஒரு பெரிய சாதனையாகும். இங்கே காலையில் பேசும்போதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். வருஷத்தில் 3 மாதம்தான் விவசாயிகளுக்கு வேலை இருக்கிறது. மீதி இருக்கிற 9 மாதங்களில் அவர்களுக்கு வேலை ஏதுமில்லாமல் போய்விடுகிறது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்குப் பகுதி நேர வேலை செய்யக் கூடியவர்களாக அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த தாய்மார்களுக்கு தொழிற்சாலைகளை அமைக்க இன்றைக்கு இருக்கிற இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும். இதன் மூலமாக கிராமங்களிலிருந்து விவசாய மக்கள் நகரங்களை நாடி வரும் நிலைமை இல்லாமல் செய்ய வேண்டும்.

தொழில்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் இடம், மின்சாரம் மற்றும் தண்ணீர், போக்குவரத்து ஆகியவை உள்ள இடங்களில் நிறைய தொழிற்சாலைகளை அமைக்க இந்தக் கொள்கைக் குறிப்பில் ஏராளமான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அரசு எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சிகளுக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் குறை ஏதும் சொல்லாமல், அதை ஏற்றுக்கொண்டு ஒத்துழைக்கும் வகையில் செயல்பட்டால், நிச்சயமாக இந்த நாட்டில் தொழில் வளம் பெருகும், கிராம மக்களுக்கும் நகர மக்களைப் போல் சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை உருவாக்க முடியும் என்று எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் தொழிற் கொள்கையைப் பற்றிய விளக்கத்தை, மக்களுக்குத் தொழில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றி, இங்கே இருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையில் எங்கள் கொள்கை விளக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கிற நான் முதலில் ஒன்றைக் குறிப்பிட்டு அந்தப் பணியில் ஈடுபடலாம் என்று கருதுகிறேன்.

நான் மேலவைக்கு அடிக்கடி வர முடியவில்லை என்பதை நன்றாக அறிந்திருக்கிற இந்த மாமன்ற உறுப்பினர்கள் நான் இந்த மன்ற உறுப்பினர்களின் கருத்தை நேரில் கேட்டு, அவர்களுடைய மனதில் எழுந்து, கருத்தாக வருகிற குறிக்கோளை நான் நன்கு புரிந்து கொண்டு அதை இந்த அரசு செயலாக்க முன்வர வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு

அவர்கள் தங்கள் கருத்தினை வெளியிடும்போது கேட்கிற வாய்ப்பு அமைச்சரவையில் இருக்கிற எங்களுக்குக் கிடைத்தால் நல்ல கருத்துக்களைப் போற்றி வரவேற்போம், அவைகளைச் செயல்படுத்த முயல்வோம் என்ற நம்பிக்கையோடு அந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். நான் இந்த அவைக்கு வர இயலாது இருந்தபோதும் அப்படிப்பட்ட கருத்துக்கள் இங்கே கூறப்பட்டன என்பதையும்,—இன்று காலையில்கூட என்று நான் நினைக்கிறேன்—கேள்வி நேரத்தின்போது இந்த அவைக்கு நான் வரவில்லை என்கிற குறையைக் காட்ட, தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்கிற நிலையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கண்டனத்தைக் காட்டுகிற வகையில் செயல்பட்டார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன்.

நான் முதலில் ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்த மேலவை நடக்கிற நேரம் எப்போது என்பதைப்பற்றிப் பேசிய ஒரு கட்டத்தில் — மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் இருந்தபோது —

(பிற்பகல் 5-20)

நானும் இருந்து சட்டமன்றத்தைக் காலையிலும் மேலவையை மாலையிலும் வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டபொழுது, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட அங்கு இருந்தார் என்று நினைக்கிறேன். அவர்கள் சொன்னார்கள், காலையில் நடத்திப் பார்ப்போம், ஒத்து வரவில்லையென்றால், மாற்றிக் கொள்ளலாம் என்ற அளவில் கருத்தைச் சொன்னார்கள். எதிர்பாராத விதமாக சட்டமன்றத்தில் இரண்டு நாள் என்று குறிப்பிடும் பொழுது மூன்று நாட்களாகவும் இரண்டு மணி நேரம் என்பது எட்டு மணி நேரம் அங்கே கருத்துக்கள் பரிமாறிக்கொள்ள வேண்டிய அவசியமும் விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் ஏற்பட்ட சூழ்நிலையில், எல்லா அமைச்சர்களும் ஒரே நேரத்தில் சட்டமன்றத்திலும் மேலவையிலும் இருக்க முடியாமல் போயிற்று. அதோடு என்னைப் பொறுத்தவரையில் டெல்லியில் நடந்த சில கூட்டங்களில் கலந்து தீரவேண்டுமென்ற கட்டாய சூழ்நிலை உருவாகியது. நான் அங்கே செல்லவேண்டிய அந்தப் பொறுப்பினைத் தட்டிக்கழிக்க முடியாமல், இங்கே முன்னவரையும் சட்டமன்றத்தில் முன்னவராக இருக்கின்ற இரண்டு அமைச்சர்களும் நான் இல்லாதுபோனால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டவர்கள் என்கிற நிலைமையில், நான் இருந்து என்ன சொல்லுவேனோ அக்கருத்தை வெளியிடுகிற நிலையில் இருந்தார்கள். ஒரு அமைச்சரவையில் எடுக்கிற முடிவுகள் குறிப்பிட்ட இலாக்காவை

வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதிகமாகவும் மற்ற அமைச்சர்களுக்குக் குறைவாகவும் அதைப்பற்றித் தெரியும் என்கிற நிலையில் இல்லாமல் இந்த அமைச்சரவை எதைப் பற்றியும் தன்னுடைய தனிப்பட்ட கருத்தாக வைத்துக் கொள்ளாமல், அமைச்சருடைய கருத்தாக இல்லாமல் அமைச்சரவையின் கருத்து என்ற நிலையில் நாங்கள் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்து எங்கள் அறிவுக்கு எட்டிய வகையில் முடிவு செய்து வெளியிடுகிறோம். இந்த நம்பிக்கையில்தான் இங்கே வர இயலாது இருந்தது. வேறு வழியின்றி நான் அதில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எதையும் கூறத்தக்க தகுதி உள்ளவர்கள் அல்லவென்றோ, அல்லது இந்த மன்றத்தில் உள்ளவர்கள் கூறினால் என்ன, கூறாவிட்டால் என்ன, கேட்டால் தான் என்ன, கேட்காவிட்டால் என்ன என்ற அலட்சிய போக்கோடோ, இங்கே என்ன நடந்துவிடப் போகிறது, சட்ட மன்றத்தில் பார்த்துக்கொள்வோம் என்ற ஒரு மமதை என்று கூடச் சொல்லலாம், அந்த நிலையில் இந்த அமைச்சரவையோ நானோ நடந்து கொள்ளவில்லை என்பதை தலைவர் மூலமாக மன்ற உறுப்பினர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இன்று காலையிலிருந்து இங்கே கருத்துக்கள் கூறிய போது, நேரில் கேட்டபோது, இதே அவையில் ஒரு சில ஆண்டுகள் எம்.எல்.சி. ஆக உறுப்பினராக இருந்திருக்கிறேன் என்பதையும் மறைந்த அமரர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் போன்றவர்கள் இங்கே இருந்து கருத்துக்களை வெளியிட்ட நேரத்தில் எப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே சொல்லி ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆதரவு தந்து அவர்கள் செம்மையாக நடப்பதற்கு வழிவகைகளை எடுத்துக்காட்டி, நிலைமையை விளக்க முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் நினைத்துப் பார்க்கின்றபோது, மேலவையில் உட்கார்ந்து கூறுகிற கருத்துக்களைக் கேட்பது ஒரு அமைச்சரவைக்கு தேவையான ஒன்று என்பதைப் புரிந்துகொண்டவன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலையில்கூட நான் அமர்ந்து கொண்டிருக்கும்பொழுது, அவசரமாக எழுந்து சென்றதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்திருப்பார்கள். அதிலும் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது போகவேண்டியிருந்தது என்றாலும், இங்கும் அங்கும் ஒரே நேரத்தில் அவைகள் நடக்கும்பொழுது காலையில் அங்கே பேசிய பேச்சில் உரத்த குரலில் வெளியிட்ட கருத்துக்கள் என்ன என்பது தெரியாவிட்டாலும், அந்த ஒலி சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கிறது என்பதைப் போல் இருந்த காரணத்தால், நான் சென்று பார்த்து உண்மை...

பேசிய நண்பர்கள் அக்கறையோடு தங்கள் உணர்ச்சிகளை ஒன்று படுத்தி கருத்துக்களை வெளியிட்டார்கள் என்று தெரிந்தபிறகு, நிம்மதியோடு இங்கே வந்து உட்கார்ந்தேன் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், அங்கே பல்வேறு பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அது சட்டமன்றத்தில் தேவை என்றாலும், அது ஒரு பாணி என்று அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே மேலவையில் பேசும்பொழுது, யாரையும் குறைத்து மதிப்பிட்டு அவமானப்படுத்தி குறைகூற விரும்பவில்லை. இங்கே பேசும்பொழுது, அதிகமான புள்ளி விவரங்களைத் தரக்கூடிய வகையில் அமைதியோடும் ஆராய்ச்சி மனப்பக்குவத்தோடும் சட்டமன்றத்தில் பலர் தங்கள் கருத்துக்களை எப்படி வைக்கிறார்களோ அதற்குக் கொஞ்சம்கூட குறையாமல், சொல்லப்போனால் இங்கே இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், மன்ற உறுப்பினர்கள் வேகத்தைத் தடுத்து அமைதிப்படுத்தி, மனநிலையை ஒருமைப்படுத்தி, உள்ளத்தைச் செம்மைப் படுத்துகிற வகையில் வார்த்தைகளை வெளியிடுகிற ஒரு நல்ல சூழ்நிலையில் நடத்தப்படுகிற அவை என்பதை நான் காண்கிற நேரத்தில், அமரர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் போன்றவர்களால் அவையின் கௌரவம் இங்கே காப்பாற்றப் பட்டுக்கொண்டிருக்கிறது என்று நினைக்கின்ற வகையில் நாம் பெருமைப்படுவோம். இங்கே இருக்கிற மன்ற உறுப்பினர் களுடைய எண்ணங்களுக்கு மதிப்புத் தருவோம், அமைச்சரவையில் உள்ளவர்கள் நாங்கள் நிச்சயமாக அதற்குப் பொருத்தமான வகையில் நடந்துகொள்வோம் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

அதிலும் நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் காலையில் பேசும்பொழுது கூறினார்கள். எங்கோ இருந்து அது தெரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், நேரில் இருக்கும்போது நான் பேசும்போது இருக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டேன். டெல்லிக்கு எதற்குப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டபோது, வருத்தம் அடைந்தோம், அந்த நிலைமை தெரிந்தும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இங்கே வந்திருப்பது மனநிறைவாக இருக்கிறது என்று சொன்னதைக் கேட்டு நான் நெகிழ்ந்து போனேன் என்பதைச் சொல்லித்தான் தீர வேண்டும். இன்றைய தினம் நடைபெறுவதாக இருந்த அந்தக் கூட்டம் பஞ்சாயத்து என்கிற பெயரில் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்திலும், யூனியன் பிரதேசத்திலும் எந்த அளவுக்கு விவசாயத் துறையில் கொஞ்சம் விரைவுபடுத்தி, விஞ்ஞானத்தின் உதவியோடு உற்பத்தியைப் பெருக்க இயலும்; இந்த வழியைக் கடைய பிடிப்பது பற்றி தீவிரமாக பரிசீலனை செய்கிற முறையில் அமைக்கப்பட்ட குழு கூட்டமாகும். மரியாதைக்குரிய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

திரு. அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் இயங்குகிற
குழுவில் தமிழகத்தின் சார்பில் என்னையும் உறுப்பினராக
நியமித்திருக்கிற காரணத்தால், தமிழக அரசின் கருத்துக்களை
அங்கே வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருந்தும்
முதல் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள முடியாமல் இருந்தது.
சட்டமன்றக் கூட்டம் தொடர்ந்து நடப்பதால், இன்றைய
தினம் அங்கே இருந்திருக்க வேண்டும். இங்கே முக்கிய
பிரச்சினையான தொழில் பிரச்சினை, மருத்துவக் கொள்கை பற்றி
விளக்கிப் பேசுகிற உறுப்பினர்களின் எண்ணங்களைத்
தெரிந்துகொள்வது மிகத் தேவை என்கிற வகையில்,
நேற்றைய தினம் மருத்துவமனையிலிருந்து கொஞ்சம் நோய்
தீர்ந்திருக்கிறது என்று சொல்லுகிற வகையில் வெளி
வந்திருக்கிற திரு. அசோக் மேத்தா அவர்களை 1 மணி முதல்
1½ மணி அளவு வரையில், அந்த அளவுக்கு நீண்ட நேரம்
பேசி நமது கருத்துக்களில் சிலவற்றைச் சொல்லிவிட்டு,
முழுவதையும் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறி,
நிலைமையை விளக்க நான் இங்கே வந்திருக்கிறேன். இவைகளை
ஏன் இவ்வளவு தூரம் சொல்லுகிறேன் என்றால். எவ்வளவு
கண்ணியத்தோடும் நல்லெண்ணத்தோடும் கருத்துக்கள் இங்கே
எடுத்து வைக்கப்படுகின்றனவோ அதற்கு நேர்மாறாக
மக்களிடம் தவறான கருத்துக்களை உருவகப்படுத்தி, அதன்
மூலம் தங்களை வளர்த்துக் கொள்ள முடியுமா என்ற அளவில்,
ஒரு சில அரசியல் கட்சிகள் இந்த மாமன்றத்தில் சொல்லுகிற
கருத்துக்களை எல்லாம் வேறுவிதமாக முலாம் பூசி வண்ணம்
தீட்டி, மெருகு கொடுத்து அவைகளைச் சொல்லி மக்களை
குழப்பத்தில் ஆழ்த்த நினைக்கிறார்கள் என்று கேள்விப்
படுகிறேன். அதனால் இந்த அளவுக்குச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். இன்னும் கூடச் சொல்லுவேன். எங்களைக்
குறை கூறுவதை, குற்றம் சாட்டுவதை நாங்கள் நிச்சயமாக
வரவேற்போம் என்பதை முன்னமே எடுத்துரைத்திருக்கிறேன்.
அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்றாக வேண்டும், எந்த
ஒரு அமைச்சரவையும் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும்
என்ற கருத்தோடு செயல்பட முன்வருமேயானால்,
குறை சொல்லுகிறவர்களை நண்பர்களாக்கிக் கொள்வது
மிக நல்லது என்பதை நான் பல முறை சொல்லியிருப்பவன்.
அனுபவத்தில் அறிந்திருப்பவன். குறைகளை எடுத்துக்
காட்டினால், நிறைகள் அதிகமாக வாய்ப்புக் கிடைக்கிறது
என்பதில் சந்தேகமில்லை. பத்திரிகையிலே வெளிவருகின்ற

(பிற்பகல் 5-30)

செய்திகளில் எங்களைக் குறை கூறுவதைப் பெரிதுபடுத்தி
எழுதி வெளியிடுகிறார்கள்; அச்சிட்டு வெளியிடுகிறார்கள்,
அதிலேகூட உண்மையான நிலைமைகளையெல்லாம் மாற்றி,

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்து வெளியிடுகிறார்கள். அப்படிச் செய்வதை நாங்கள் காணும்போது, வேதனைப் படாமல் இருக்க முடியாது. அவைகளையெல்லாம் அவர்கள் மாற்றிக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. 'உடன் பிறந்தது உடலுடன்தான்' என்று சொல்வார்கள் பெரியவர்கள். அதுபோலத்தான் இது இருக்கிறது.

நம்முடைய நண்பர்கள், மரியாதைக்குரிய உறுப்பினர்கள், கொள்கை விளக்கத்தின் மீது சொல்கின்ற கருத்துக்களை நாங்கள் மதிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவைகளைப் பற்றிப் பேசுவதால், இந்த நேரத்தில் கொள்கை பற்றி அதிகமாகச் சொல்வதற்கு கிடைத்திருக்கக் கூடிய நேரம் குறைந்து விடுகிறது. இருந்தாலும் எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளிப்பது என்னுடைய கடமை என்ற அளவில் என்னுடைய கருத்துக்களையும் இந்த அவையில் எடுத்து வைக்கிறேன்.

ஒவ்வொரு அரசுக்கும், அவர்கள் மக்களிடம் வாக்குகள் வாங்கும்போது என்ன கூறுகிறார்களோ அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் இருக்கவேண்டும் என்பது கட்டாயமாகும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியது அவரவர்களுடைய கடமையுமாகும். அந்த வகையில் சில கொள்கைகளை எங்களைப் போன்றவர்கள் வெளியிட்டு, மக்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வந்து பணியாற்றும் போது, ஆராய்ச்சிப் பக்குவத்தோடு வெளியிடுகின்ற கருத்துக்களுக்குச் சொந்தக்காரர்களாகவும், தகுதி பெற்றவர்களாகவும் இருக்கின்ற உறுப்பினர்கள் தங்களுடைய விளக்கங்களை, திருத்தங்களைத் தர விரும்புகிறார்கள் என்றால், அது எவ்வளவு பெரிய நல்ல வாய்ப்பு என்பதை உணருகிறோம். அது எந்த அளவுக்குத் துணையாக இருக்கின்றது என்பதையும் உணருகிறோம். அது மட்டுமல்ல. எங்களுடைய கொள்கைக்கு இந்தக் கருத்துக்கள் ஒத்ததாக இருக்கின்றனவா என்றும் சிந்தித்துப் பார்க்கிறோம். அப்படிச் சிந்தித்துப்பார்த்து, இந்தக் காரணத்திற்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்று விளக்கம் கூறுகிறோம். அப்படிச் சொல்லும்போது இந்தக் கருத்துக்கள் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அல்லாமல், எங்களுக்கு வாக்கு அளித்த மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்கள் எல்லாம் மக்களைப் போய் சேரும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது. இப்படிப்பட்ட வாய்ப்புக்களை நாங்கள் விட்டுவிடமாட்டோம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். நான் திரும்பத் திரும்ப என்ன சொல்கிறேன்? அந்தக் கொள்கைகளுக்கும் அங்கே வெளியிட்டிருக்கின்ற திட்டங்களுக்கும் சம்பந்தம் உண்டா என்ற கேள்வியைக்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

கேட்கின்றவர்களுக்கு என்ன சொல்லப் போகின்றோம்? இன்றுள்ள சூழ்நிலைகளில்தான், சுற்று சார்பிலிருந்துதான் இந்தக் கோணத்திலிருந்துதான், இந்த அடிப்படையில்தான் இந்த எண்ணங்களுடைய எதிரொலியாகத்தான், இந்தத் திட்டங்களை நாங்கள் நிறைவேற்ற முயற்சி செய்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்களுக்கு என்று ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு விளம்பரம் செய்திருக்கிறோம். அந்தக் கொள்கையைப் பரப்பியிருக்கிறோம். அந்த விளம்பரம் சுய நலத்திற்காக மட்டுமல்லாமல், அவை மக்களுடைய நல்வாழ்வுக்காக எடுத்து வைக்கப்பட்ட திட்டங்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் ஒவ்வொரு கருத்தை வெளியிடுகிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால், தொழில் துறையில் நாங்கள் ஒரு அடிப்படையான கொள்கையை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கிடைக்கின்ற எந்த ஒரு வாய்ப்பையும், எந்த ஒரு சிறு வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறோம். தொழில் என்று சொல்லும்போது எத்தனை பேருக்கு அதனால் வேலை கிடைக்கும் என்பது ஒரு கேள்வி. அவர்களுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பது ஒரு கேள்வி. அந்தத் தொழிலிலிருந்து கிடைக்கின்ற லாபம் யாருக்குப் போய்ச் சேருகிறது என்பது அடுத்த கேள்வி. அந்த லாபம் திரும்ப இந்த நாட்டிற்குப் பயன்படுகிறதா என்பது ஒரு கேள்வி. நாங்கள் செயல்பட முன்வரும்போது, அந்த மாதிரிக் கேள்விகள் பிறக்கின்றன. அது நம் மாநிலத்திற்குப் பயன் படுகிறதா, உள்நாட்டிலேயே பயன்படுகிறதா என்ற கேள்வி பிறக்கிறது. அது மட்டுமல்ல, அரசுக்கு அதனால் என்ன பலன்? மக்களுக்கு என்ன பலன் ? அந்தப் பலன்கள் தொடருமா, தொடராதா? அது தொடர்ந்து நீடிக்குமா என்ற கேள்வியும் வருகிறது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய அளவிலேதான் எங்கள் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். முதலிலேயே ரூ. 25 கோடி ரூ. 35 கோடி, என்று திட்டமிட்டு ஒரு தொழிலைத் தொடங்கும்போது, எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று கேட்கும்போது, சுமார் 200, 250 பேர்களுக்குக் கிடைக்கும் என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அங்கு உற்பத்தியாகின்ற பொருள்கள் வெளி நாடுகளுக்குச் சென்றால், வெளிநாட்டுச் செலாவணி வரும் என்பதற்காக மட்டும் தொழில்களை அமைத்துவிட முடியாது. இதை விவரம் தெரிந்த, அனுபவம் பெற்ற, ஆராய்ச்சிப் பக்குவம் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. மக்களுக்காகப் போடப்பட்ட இந்தத் திட்டங்கள் இந்த அடிப்படையிலே போடப்பட்டனவா என்பதிலே சில ஐயப்பாடுகள் ஏற்படுகின்ற

1978 மார்ச் 27] [திரு எம். ஜி. இராமச்சந்திரன்]

நேரத்தில், அந்தத் தொழில் நிலைமைகளில் தொல்லைக ஏற்படும்போது, அதை மூடிவிடலாமா என்ற கேள்வ எழுந்து நாம் ஆமாம் என்று பதில் சொல்கின்ற நிலைமை ஏற்படும்போது, எவ்வளவு வேதனைப்பட வேண்டியிருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு தனி மனிதன் உணவு இன்றி இருந்தாலே இந்த உலகத்தினை அழித்துவிடுவோம் என்று பாரதி அவர்கள் பாடியிருக்கிறார்கள். 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியிருக்கின்றார்கள். அழிக்கப்படுகிறதா என்பதல்ல முக்கியம். அளிக்கப்படுகிறதா என்ற கேள்விக்குத்தான் நாம் விடை காண முயலுகிறோம், அதற்கு நம் சுற்றுச் சார்பு தருகின்ற பதில் ஏமாற்றமாகத்தான் அமைந்து விடுகிறது. நான் இப்போது திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், தனியார் துறை, கூட்டுறவுத் துறை, பொதுத் துறை என்று மூன்றாகப் பேசப்பட்டிருந்தாலும், பொதுத் துறை அதிகமாக வேண்டும் என்பதிலே எனக்கு அக்கறை உண்டு. அதைப் பூரணமாக்க வேண்டுமென்பதிலே எனக்கு நிச்சயமான, உறுதியாக கொள்கை உண்டு. சட்டமன்றத்திலே கூறிய ஒரு கருத்தை இங்கே நான் வைத்தாக வேண்டும். ஒரு அரசு மக்களுடைய வரிப் பணத்தை வாங்கி, அதை மக்களுக்குப் பயன்படும்படியாகச் செலவழிப்பதற்கு நாம் திட்டமிடும்போது, நல்ல யோசனையோடு செய்ய வேண்டும். நமது கடமையைச் செய்கின்ற ஆர்வத்தோடு நாம் செய்ய வேண்டும். நாம் நிச்சயமாகச் செய்ய வேண்டும். மக்களிடத்திலே நாம் நல்ல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமானால், எப்படி இருந்தாலும் இந்தக் கொள்கையிலிருந்து நாம் மாற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தும்போது. சுற்று சார்புகளை உருவாக்கிடும்போது, அவர் எவ்வளவு நல்லவராக இருந்தாலும், வேகமாக உழைப்பவராக இருந்தாலும், செயல்படுபவராக இருந்தாலும், அவர்கள் எல்லாம் இந்தத் திட்டங்களுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தருகிறார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஒரு சிலர் அப்படி இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களில் சிலர் மிகப் பெரிய தவறுகளைச் செய்கிறார்கள். தங்களையும் அறியாமல் அவர்கள் தீமைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-40)

திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிடும்போது, தெளிவாகச் சொன்னார்கள். எந்த ஒரு தொழிலை எடுத்துக்கொண்டாலும், லாபத்தில் நடக்கின்றதா என்று பார்ப்பதோடு, அது எந்த

அளவுக்குக் காப்பாற்றப்பட வேண்டுமென்பதுபற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இன்னும் சில உறுப்பினர்கள், தொழிலைத் தொடங்கிவிட்டால் போதாது, தொடர்ந்து நடக்குமா என்பதைப்பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று கூறினார்கள். இதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும்; அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெற வேண்டும்; தொடர்ந்து நடைபெறுவதோடு லாபத்தோடு நடைபெற வேண்டும். லாபத்தோடு நடைபெறும்போது, அந்த லாபம் தனி மனிதனுக்குச் சொந்தமாகி அவர்கள் மேலும் மேலும் கோடீஸ்வரனாகாமல், அது ஏழைகளுக்குத் திரும்பி வந்து, அவர்களும் வாழ்க்கை வசதிகளைப் பெற்று நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்ற கருத்தினை, வேறு வார்த்தைகளைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள். என்னுடைய 7, 8 மாத அனுபவத்தில் நான் தெரிந்துகொண்டவை, முன்னாலே இருந்த அரசையோ, அமைச்சர்களையோ, அந்த அமைச்சர்கள் எந்தக் கட்சியிலிருந்து வந்தார்களோ அந்தக் கட்சியைக் குறை கூறுவதற்கோ இந்த மாமன்றத்தின் நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை, என்றாலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொஞ்சம் அவசரப்பட்டு இவ்வளவெல்லாம் செய்துவிட்டார்கள் என்று பட்டியலை மாத்திரம் மக்கள் தெரிந்துகொள்ளும் வகையிலே, சிலர் செயலிலே ஈடுபட்ட நிலைமையையும், அடிக்கடி சொல்கிறார்களே. இந்த அரசுக்குத் தவறான வழியை, விளக்கத்தைச் சொல்லித் தந்துவிடுகிறார்கள் என்று—நாங்கள் சிந்திப்பதும் இல்லை; அதைப்பற்றி எண்ணிப் பார்ப்பதும் இல்லை கவனிப்பதும் இல்லை; யாரோ அதிகாரிகள் சொல்கிறார்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்கிற வகையிலே எங்கள்மீது அனுதாபப்பட்டுச் சொல்லும் விதத்தில் வார்த்தைகளில் காட்டி, விவரம் தெரியாத, ஒன்றுமே புரியாத, யாரோ சொல்வதைக் கேட்கும் அமைச்சர்கள் என்று தம் திருப்தியை வெளியிடுபவர்களைப் பார்க்கிறேன். ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, இந்த அரசு சில காரியங்களில் கொஞ்சம் தாமதமாக நடை போடப் பார்க்கிறது. சில காரியங்களில் முன்பு இருந்ததைவிட விரைவும் தேவையென்று கருதுகிறது. நடவடிக்கை என்றால் நல்ல காரியத்தை நிறைவேற்றும்போதும் நடவடிக்கைதான்; நல்ல காரியத்தைக் கெடுப்பவர்கள்மீதும் எடுக்கின்ற செயலும் நடவடிக்கைதான். எங்களைப் பொறுத்தவரையில், முதலிலே தயார் நிலையில் இருந்து, தொடங்கப்பட்ட ஆலைகள், தொழிற்சாலைகள், இவை போன்ற நிறுவனங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்று பார்க்க வேண்டியிருந்தது. அந்த அளவில் பார்க்கும்போது, இங்கே சொன்னதுபோல் பல குறைகள் இருந்தன. சில நிறைகளு

மில்லாமல் இல்லை. ஆனால் குறைகள் அதிகமாக இருந்ததன் விளைவாகத்தான் 'ஊழல்கள்' என்று நாங்கள் சொல்லவேண்டிய கட்டாயத்துக்கு ஆளானோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி போன்றவர்கள் தெரிந்து கொள்வார்களென்று நான் கருதுகிறேன். 'ஊழல்கள்' என்று சொல்லும்போது, ஒரு அமைச்சர் நேரடியாகச் சென்று செய்வதும் ஊழல்தான், அமைச்சரவையின் அனுமதியோடு அதிகாரிகள் செய்வதும் ஊழலாக இருக்கலாம்; அதிகாரிகள் செய்த ஊழலைத் தெரிந்து கொண்டு, அதை விட்டுவைத்தால் அதுவும் ஊழல்தான். ஊழல், ஊழல் என்று பேசும்போது, எந்த நோக்கத்தோடு சொல்கிறோம் என்றால் 25 கோடி, 30 கோடி என்று செலவழித்து விட்டு, இன்று எந்த நிலையில் அன்று தொடங்கிய தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று பார்க்கும்போது, தொடர வேண்டாம், கைவிட்டால் போதும் என்ற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கூறிய போது, கோடிக்கணக்கான ரூபாய்களைப் பார்த்ததுகூட இல்லையென்று சொன்னார்கள். அதுபோல எண்ணிப் பார்க்கக்கூடிய அளவுக்குக் கூட இல்லாத எண்ணிக்கையுள்ள எண்களைப்போட்டு வெளிக் காட்டுவதுபோல் கணக்கிட்டுப் பார்த்தால், எத்தனை கோடி ரூபாய்கள் வீணாகி இருக்கின்றன என்பதை வேதனையோடு சொல்லியாகவேண்டும். இங்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். சில நிறுவனங்களை, சிக் மில்களை எடுத்துக்கொள்கிறீர்கள் சில மில்களை விட்டு விடுகிறீர்கள்; இதற்கெல்லாம் என்ன காரணம்; நாங்கள் செய்தால் அது ஊழல்; நீங்கள் செய்தால், 'நாங்கள் ஊழல் என்று சொல்லவில்லை', பாராட்டுகிறோம் என்று சொன்னார்கள். செய்ய வேண்டியதை அவர்கள் செய்தார்கள், நாங்கள் குறை கூறினோம். ஆனால் அதையே நாங்கள் செய்யும்போது அவர்கள் பாராட்டுகிறார்கள் என்கிற பெருந்தன்மையால் அவர்கள் சொல்கிறார்கள் என்று நான் நம்பமாட்டேன் என்று அவர்களுக்கே தெரியும். ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மில்லை எடுத்துக்கொள்வது என்பது சாதாரண விஷயமல்ல. புள்ளி விவரத்தைப் பார்த்து, இது தேறுமா, தேறாதா; இதற்கு மேற்கொண்டு இந்த அரசு போட வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்கள்; கோடிக்கணக்கான ரூபாய்கள், போடும்போது அதுவும் சேர்ந்து போய்விடுமா அல்லது திரும்ப வருமா என்ற கணக்கைப் பார்த்து, அந்த அளவில் சில சிக் மில்களை எடுத்துக்கொண்டோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. சில மில்களை விட்டுவிட்டதற்குக் காரணம் இனி அவை தேறாது. அவ்வளவுதான் அதன் விதி என்று அவைகளை விட்டுவிட்டு, எடுத்த மில்கள் நஷ்டமின்றி இப்போது ஓடிக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று பேசுகிற நிலையில் எங்கள் கருத்துக்களை நாங்கள் வைத்துக்கொள்ள மாட்டோம். இதைத் தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். திரு. வீராசாமி போன்றவர்களுக்குப் புதிய நண்பர்கள் கிடைத்திருக்கலாம்; அவர்கள் வசதியுடையவர்களாக இருக்கலாம். அவர்களோடு நானும் சில காலம், கட்சியில் இருந்தபோது இருந்திருக்கிறேன். அவரைப்பற்றி எனக்குத் தெரியும். என்னைப்பற்றி அவருக்குத் தெரியும். அப்போது எப்படிப்பட்டவர்கள் அவரோடு இருந்தார்கள் என்பதும், அவர் எப்படி இருந்தார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். நான் எப்படிப்பட்டவர்களோடு இருந்தேன் என்பதும் அவருக்குத் தெரியும். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், ஏதோ எனக்கு அவரைத் தெரியாது போலவும், என்னைப்பற்றி அவர் தெரிந்துகொள்ள முடியாமல் போனது போலவும், எங்களுடைய கருத்துக்களை வெவ்வேறு பாதைகளில் செல்லும்படியாக அமைத்துக் கொண்டிருக்கிறோமென்றும் வேண்டுமென்றே யார் மீதோ பழி சுமத்தி, இந்த அமைச்சரவையை தள்ளிக்கொண்டு போக வேண்டிய நிலையில் இந்த ஆட்சியில்லை. அவர் நினைத்துக் கொண்டால் போதாது, அவர் நம்ப வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தொழில் என்பது வெறும் இயந்திரங்களோடு நின்றுவிடுவதல்ல. இயந்திரங்களை அங்கே கொண்டுவந்து சேர்த்து உருவாக்கி, அதை இயக்கும்போது மனிதன் அதை இயக்கவேண்டியவனாகும்போது, பிரச்சினைகள் எழுகின்றன. இயந்திரம் தன்னைத்தானே இயக்கிக்கொண்டு, பணியைச் செய்து கொண்டு போகிறபோது, எங்கேயாவது தேய்மானம் உடையது போல் இருந்தால், இன்னொரு இயந்திரத்தைப் புகுத்தி, தேவையினை நிறைவேற்றிக் கொள்ளலாம், இது அப்படியல்ல. தொழில் என்று சொல்லும்போது, மனிதனுடைய பிரச்சினைகள் அதிலே உருவாகின்றன. மனிதனுடைய பிரச்சினைகளை எண்ணிப் பார்க்காமலிருந்தால், நிச்சயமாக தொழில் துறை என்று கவனம் செலுத்தும்போது, முதல் அடியே தவறான அடியாக எடுத்து வைத்துவிட்டோமென்று நம்ப வேண்டியிருக்கும். இந்த அரசைப் பொறுத்தவரையில், அப்படி நடைபோட விரும்பவில்லை. ஒரு அடி எடுத்து வைக்க நம்மால் முடிகிறதென்றால், அந்த அடி சறுக்காமல், வழுக்காமல், பின்னால் வருகிறவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருக்கிற அடியாக வைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் முன்னால் இருந்தவர்கள் அப்படிச்

(பிற்பகல் 5-50)

செய்தார்களா என்பதிலே சந்தேகத்திற்குரிய அளவில் நிறைய ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன.

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தொழிற்சாலைகளுக்கு உதவி செய்யும்போது எல்லா மில்களையும் ஏன் நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லை, ஒரு சிலவற்றை மட்டும் ஏன் எடுத்துக்கொள்ளுகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, ''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்பதிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. பக்கத்து வீட்டிலே உள்ள மலர் அவர்களுடையதுதானே, ஏதோ நசித்துப் போகட்டும் என்பதல்ல எங்களுடைய நோக்கம். தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப்பட்டு, அதன் மூலம் நிர்வாகத்தைச் சீர் செய்யக்கூடிய சூழ்நிலை இருந்தால், அதன் மூலம் காப்பாற்ற முடிந்தால், நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைச் சொல்லுவதற்காகத்தான் நான் இதை வற்புறுத்திக் கூறுகிறேன். யார் செய்தாலும், யார் நடத்தினாலும், அதன் பயன் மக்களுக்குக் கிடைக்கும், ஒருவர் இருவருக்குப் பயன் அளிக்குமென்றாலும், இந்த அரசு அதைப் பற்றிச் சிந்தித்துத் தீரும். அதிலே கவனம் செலுத்தித் தீரும் என்ற ஒரு உண்மையை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

என்பீல்ட் இந்தியா தொழிற்சாலை மூடப்பட்டிருந்து இப்போது திறக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எவ்வளவு நாட்களாக மூடப்பட்டிருந்தது என்பதும் எல்லோருக்கும் தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பு இராணுவ வீரர்கள் நடத்திக் காட்டிய சாகசங்கள் அந்தத் தொழிற்சாலையில் உருவான வண்டியில்தான் நடத்திக் காட்டப்பட்டது. இதை அவர்கள் அங்கே விளம்பரமாக மக்களுக்குத் தெரியும்படி செய்யாவிட்டாலும், அதைப் பார்க்கும்போது, நம்முடைய உள்ளம் பூரிக்காமல் இருக்காது. எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் அரிய வீர விளையாட்டுகளைச் செய்து காண்பிக்கக் கூடிய அளவுக்குள்ள அந்த வண்டிகள் தமிழகத்திலே உற்பத்தியாகின்றன என்று எண்ணிப் பார்க்கும்போது, அதை உற்பத்தி செய்த அந்தத் தொழிற்சாலை மூடப்படுவதை எப்படி அனுமதிக்க முடியும் என்று உங்களைக் கேள்வி கேட்க விரும்புகிறேன். நான் இப்படிக் கேள்வி கேட்பது, நீங்கள் இந்தக் கருத்துக்கு மாறுபட்டிருப்பீர்கள் என்ற சந்தேகத்தால் அல்ல. நாம் இதைச் செய்கிறோம் என்று சொல்லும்போது, ஏன் செய்கிறோம் என்பதை உலகம் புரிந்துகொள்ளுவதற்காகத்தான் நான் உங்கள் முன் இதைச் சொல்லுகிறேன். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அந்தத் தொழிற்சாலையில் ஏறத்தாழ இரண்டாயிரம் பேர் வேலை செய்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு அவர்களுடைய தொழிற் சங்கத் தலைவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். ''எப்படியாவது அரசு அதற்குப் பணம் கொடுக்க வேண்டும். அந்தப் பணம் வீணாகாது. ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் கொடுங்கள். மூன்று, நான்கு

ஆண்டுகளில் நாங்கள் நிச்சயமாக கடன் தீர்க்கிற அளவுக்கு உழைத்து அதை வெற்றி பெறச் செய்கிறோம்'' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதைச் சிந்தித்துப் பார்த்த பிறகுதான் அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொஞ்ச காலம், ஓராண்டுக் காலமோ, பல மாதங்களோ கழித்து கொஞ்சம் கொஞ்சமாகத் தரட்டும் என்றும், அதற்கு மேலும் வேறு நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குப் பணம் கிடைக்குமாறும், வங்கிகளின் மூலம் பணம் கிடைக்குமாறும், மத்திய அரசிலிருந்து வசதிகள் ஏற்படுமாறும் நாங்கள் சில ஏற்பாட்டைச் செய்தோம். ஆகவேதான் இன்றைக்கு மகிழ்ச்சிகரமான முறையில் அந்தத் தொழிற்சாலை செயல்பட முடிந்திருக்கிறது. இதை நான் மீண்டும் குறிப்பிடுவது இன்னொரு ஆதாரத்திற்காக. எங்களுக்கு யார் சொந்தக்காரர்கள் என்பது கவலையில்லை. அதை நாங்கள் கவனிக்கப் போவதுமில்லை. யாருக்கு இது சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு அக்கறை, தொழிற்சாலை எது என்பதல்ல. அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகின்ற பொருள்கள், அதில் வருகின்ற இலாபம் யாருக்குக் கிடைக்கப்போகிறது. எங்கே கிடைக்கப் போகிறது என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், ''இங்கேயிருக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் கருநாடகத்துக்கோ அல்லது வேறு எங்கோ கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நிலைமை இருப்பது நல்லது இல்லை'' என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படி இருந்தால் அது நல்லதல்ல. அப்படி இருக்கிறதா? இருந்தது எப்போது? எந்த நேரத்தில் அப்படி இருந்தது என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். மில்களைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. வேலூரில் இருக்கிற அமெரிக்கன் மிஷன் என்ற மருத்துவமனையில் போராட்டம் நடந்தபோது நான் பங்களூரில் இருந்தேன். இங்கேயிருந்து பல நண்பர்கள் அங்கே வந்தார்கள். இதை மேல் வெளியிடுவதில் தவறில்லை என்ற காரணத்தால் உண்மைகளைச் சொல்ல விரும்புகிறேன். கருநாடக மாநிலத்தின் இன்றைய முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் எனது நண்பர். அண்ணன் தம்பியைப் போல் நாங்கள் இருவரும் பழகி அன்புள்ளம் கொண்டவர்களாக இணைந்திருக்கிறோம். அவரிடம்தான் அன்று இங்கிருந்த வந்த நண்பர்கள் கேட்டார்கள். ''இனிமேல் தமிழகத்தில், வேலூரில் அந்த மருத்துவமனையை நடத்த இயலாது. நீங்கள் இடம் கொடுங்கள். கட்டிடம் கட்ட ஏதாவது இடம் கொடுங்கள். நாங்கள் அங்குள்ள கருவிகளை இங்கே கொண்டு வந்து வைத்து, நல்ல மருத்துவர்களை இங்கே கொண்டு வந்து பணியாற்றச் செய்து

கர்நாடக மாநிலத்தில் மருத்துவப் பணியைச் செய்கிறோம். ஏனென்றால் எங்களால் அங்கே வெற்றிகரமாக பணியைச் செய்ய முடியவில்லை. அங்கே மக்களுக்குச் சேவை செய்ய இயலாவிட்டாலும், நோய்வாய்ப்பட்டிருக்கிற மக்கள் எங்கே இருந்தாலும், அவர்களுக்கு நாங்கள் பணியைத் தொடர விரும்புகிறோம் அதற்கு வாய்ப்புக் கொடுங்கள்'' என்று கேட்டார்கள். நானும் இப்போது முதலமைச்சராக இருக்கிற திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும் இதுபற்றிப் பேசினோம். அப்போது நான் குறிப்பிட்டேன். ''மாநிலங்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்றால், மக்களிடையே நல்ல தொடர்பு இருந்தாக வேண்டும். மக்களிடத்திலே வேறுபாடு உணர்வு இல்லாமல், அந்த மாநிலம், இந்த மாநிலம், அந்த ஊர் இந்த ஊர் என்ற வேறுபாடு இல்லாமல், உன் மொழியென்ன, என் மொழியென்ன என்று வியாபாரமாகப் பேசி இலாபம் பெற ஆசைப்பட்டால், நாட்டின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. எத்தனையோ கன்னடக்காரர்கள் தமிழகத்திலே வாழ்கிறார்கள். நீங்கள் இப்படியொரு காரியத்தை அனுமதித்தால், தமிழகத்திலே இருக்கிற மக்கள் நமது நாட்டிலிருந்து 'கர்நாடக' மாநிலத்தில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டார்கள். நமக்கிருந்த ஒரு நல்ல வாய்ப்பை ஒழிக்கச் செய்துவிட்டார்கள் என்று வருத்தப்படுவார்கள். ஏன், கோபப்படக்கூட நியாயமுண்டு. அதை உருவாக்கக் கூடாது'' என்று கேட்டுக்கொண்டேன். அதற்குப் பிறகு அவர், ''கொஞ்சம் பொறுமையாக இருங்கள். உங்களுடைய குறைகள் விரைவிலே சரியாகிவிடும். அதற்குப் பிறகு வேண்டிய வாய்ப்புக் கிடைக்கும். அதுவரையிலே பொறுத்திருங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டார். நான் அப்போது முதலமைச்சராக இல்லை. ஏதாவது ஊருக்குப் போய் பேசிவிட்டு திரும்ப வருவேனா என்ற சந்தேகத்தில் வாழ்ந்துகொண்டிருந்த நேரம். அந்த நிலைமையிலேயே அப்படிச் சொன்னேன் என்றால், இங்கிருந்து ஒரு தொழிலை இன்னொரு மாநிலத்திற்கு மாற்ற விரும்புவேனா, அதற்கு இடம் கொடுப்பேனா, இந்தச் சூழ்நிலையை உருவாக்குவேனா என்பதை இந்தக் கருத்தை வெளியிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே தொழிற்சாலைகளைப் பெருக்க விரும்புகிறோம் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்காது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இங்கே முன்பு சொல்லியது போலவும், சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டது போலவும், பெரிய தொழிற்சாலைகளை அழித்துவிட்டு அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்துவிட்டு, புதிய சிறு தொழில்களை உருவாக்கி, அதன் மூலம் நாங்கள் கடமையைச்

செய்யப் போவதாக யாரும் தயவு செய்து கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த அளவிலேதான் 100 கோடி ரூபாயைப் போட்டு ஒரு தொழிற்சாலையைத் துவங்குகிறோம் என்று சொன்னால், 100 கோடி ரூபாயை ஒரே ஆண்டில் செலவழித்து ஒரே ஆண்டில் நிறுவி, அந்த ஆண்டு முடிவதற்குள் 12 மாதங்களுக்குள் செயல்பட்டு, பலன் கொடுக்க ஆரம்பிக்குமா என்று உண்மையிலேயே தொழில்களைப்பற்றித் தெரிந்தவர்கள் கேட்கமாட்டார்கள். தொழில்களைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல எனக்கு அருகதையில்லை. யாராவது அப்படிச் சொன்னால், உள்நோக்கத்தோடுதான் சொல்ல முடியுமே தவிர, உண்மையாகவே அவர்கள் சொன்னதாக இருக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[பிற்பகல் 6-00]

இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ''அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்களே. இவைகளை எப்போது நிறைவேற்றப் போகிறீர்கள்? இந்த ஆண்டிலா? 1978-79-லா, எப்போது நடக்கும்''? என்று கேட்டிருக்கிறார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்து 7, 8 மாதங்கள்தான் ஆகிறது கணக்குப்பார்த்தால். இன்னும் 15 மாதங்கள் ஆகிவிடவில்லை. ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினால், அதை நிறுவி பயன்தரத்தக்க அளவுக்கு உருவாக்க வேண்டுமென்றால், குறைந்தது இரண்டு, மூன்று ஆண்டுகளாவது ஆகுமென்பது எல்லோருக்கும் தெரியும். தெரியாததல்ல. ஆனால் சில உறுப்பினர்கள் பேசும்போது, ''அந்தத் தொழிற்சாலை என்னவாயிற்று? அதற்குப் பணம் கொடுத்தார்களே அது என்னவாயிற்று?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள். திரும்ப நான் கேட்க மாட்டேன் நாகராஜனுக்கு எப்படிப் பணம் கொடுக்கப்பட்டது என்று. ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளுக்குள் 30 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இப்போது என்னவாயிற்று என்று எங்களைக் கேட்பதைவிட, அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லியிருக்க வேண்டாமா? இங்கே சொன்னார்கள், ஏதோ ஒரு தொழிற்சாலை வரும்போல் இருந்தது, அதுவும் மூடிவிடப்படுவது போல இருக்கிறதே என்று. உடனே நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஒரு தனியாருடைய லாபத்திற்காக அவர் பணத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அரசு கோடிக்கணக்கான மூலதனத்தைப் போட்டு, அதைச் செலவு செய்யக்கூடாது என்று சொன்னார்கள். நல்ல யோசனை. அதை அவர்கள் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஊழல் என்று அதைத்தான் மக்களிடம் நாங்கள் சொன்னோம். மூன்று கோடி ரூபாய்

கொடுக்கிறேன் என்று சொன்ன நண்பர் அந்த மூன்று கோடியில் எத்தனை லட்சம் போட்டார்? மற்ற பணத்தை எங்கே கொண்டு வந்தார்கள்? கொண்டுவரவில்லை. இருந்தாலும் அரசிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அதற்காகப் பணத்தைச் செலவழித்தார்கள். ஏன் அனுமதித்தார்கள்? இத்தனை ரூபாய்க்கு அனுமதி அளிப்பதாகக் கூறிவிட்டு, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தனி நபர் லாபத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் மூல தனத்தைப் போட்டு, பலன் இல்லாமல் வீணாக்கப் போகிறீர்களா? மக்களுக்குத் துரோகம் செய்கிறீர்களா? துரோகம் என்ற வார்த்தையை வேண்டுமானால் பயன்படுத்தாமல் இருந்திருக்கலாம். இதை கண்ணியமான வார்த்தையுடன் நாங்கள் கேட்டோம். அவரால் பாக்கிப் பணத்தைக் கொண்டுவர முடிந்ததா என்றால், இல்லை, நாங்கள் வந்த பிறகு அவர் பணம் கொண்டுவந்தாலன்றி அதை ஏற்றுக் கொள்ள முடியாது; மேற்கொண்டு அரசு பணத்தைச் செலவழிக்காது, நாட்டு மக்களுடைய பணத்தை வீணாக்கத் தயாராக இல்லை என்று சொன்னோம். எங்கிருந்தோ தகவல் வந்ததாக நண்பர் கூறினார். யார் அவருக்குத் தகவல் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி என்று கேட்கிறார்கள். என்னிடம் கேட்கக் கூடாதா? மற்ற அமைச்சர்களிடம் கேட்கக் கூடாதா? மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா அப்படிக் கேட்க? வேறு வேறு தொகுதிகளிலிருந்து வந்திருந்தாலும், நியமிக்கப் பட்டிருந்தாலும், இந்த அரசை நடத்துவதற்குத் துணை நிற்கிற அத்தனை பேரும் அரசின் பங்குதாரர்கள் அல்லவா? ஒரு தொலை பேசியில் கூப்பிட்டு, ''என்ன எம்.ஜி.ஆர்., இப்படிச் செய்து விட்டீர்களாமே? அப்படிச் செய்யலாமா?'' என்று கேட்கக் கூடாதா? கேட்டால், அந்த அதிகாரி என்ன சொல்லியிருப்பார் என்று சொல்லியிருப்பேன். என்ன தடை? நாங்கள் எண்ணிப் பார்த்து என்ன முடிவெடுத்திருக்கிறோம் என்றால், என்ன கட்டளையிட்டிருக்கிறோம் என்றால், அவர்களை நம்பி யாரும் பணம் போட முன்வராததால், இனிமேல் பணம் போட முடியாது என்று முடிவு செய்துவிட்டோம். நாங்கள் பணத்தைச் செலவிட்டுவிட்டதாகத் தனக்குத் தகவல் வந்ததாக நண்பர் சொல்கிறார். 30 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமா? அப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்று சொல்லித்தான் இந்தப் பதவிக்கு வந்திருக்கிறோம். உண்மையாகவே நினைத்தது மட்டுமல்ல. அங்குள்ள கட்டிடங்களை, பொருள்களை அவர் விற்க ஆரம்பிக்கிறார் என்று செய்தி வந்தது. உடனே அதிகாரிகள் மூலமாக அவற்றிற்குத் தடை போட்டோம். விற்கக் கூடாது, விற்க அனுமதிக்க மாட்டோம் என்று அதிகாரிகளுக்குச் சொன்னோம். அதைவிட என்ன செய்ய முடியும்? கோப்புகள் இருக்கின்றன. நான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறேன். வேண்டுமானால் பார்க்கலாம். ஆனால் நண்பருக்குத் தவறான தகவல்களை யாரோ சொல்கிறார்கள். இதை நம்பி அவரும்

பேசுகிறார் என்றால் உண்மையில் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.
கருங்கல் எடுக்கிறார்கள். அதற்கு எப்படிப்பட்ட உதவி செய்ய
வேண்டும்? பத்து ஏக்கர், நான்கு ஏக்கர் என்று வைத்திருக்
கிறவர்களுக்கு நாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று
சொல்கிறார். நாற்பது, ஐம்பது ஏக்கராக உள்ளவற்றை மட்டும்
அரசில் எடுத்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னார். திரும்பவும்
சொல்கிறேன், பத்து ஏக்கர், ஐந்து ஏக்கர் என்ற அளவிற்குப்
போதுமென்று யாருக்கும் போசனை சொல்ல வேண்டியதில்லை,
அப்படி அரசு எடுத்துக் கொள்ளாது என்றால், இன்றைய தினம்
ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் என்னால் பெற முடியும்.
அப்படி இருக்கிறார்கள் அவர்கள். இதில் என்ன சாமர்த்தியம்
இருக்கிறது? சாமர்த்தியம் அவர்கள் வார்த்தையில்தான்
இருந்தது. அந்த சாமர்த்தியத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம்
என்பதுதான் உண்மை. அவர்கள் இரண்டு ஏக்கர், பத்து
ஏக்கர் வைப்பதற்கு அனுமதியுங்கள், அது சிறு தொழில்தானே
என்றும் சொன்னார். நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்.
அது சிறு தொழிலா? இங்கே அரசிற்குக் கிடைக்க வேண்டிய
கோடிக்கணக்கான பணம் தனி மனிதனுக்குச் சொந்தமாகக்
கூடிய நிலைமை தேவையா? பத்து ஏக்கர் அனுமதி என்றால்,
பதினைந்து ஏக்கர்களில் கனி வெட்டி எடுத்துக் கொண்டிருந்
தார்கள். அந்த வளம் அப்படிப் போய்க்கொண்டிருந்தது.
ஊழல் என்று சொல்லும்போது, இவற்றைச் சொன்னோம்.
அந்தத் தலைவருடைய சொந்தக்காரர்களுக்குப் பணத்தைப்
பயன்படுத்துவதாக அன்றைய நிலைமை இருந்தது. நண்பர்
பேசும்போது, ''எங்கள் கட்சிக்காரர்கள் யாராவது இருந்தால்
கொடுக்க வேண்டாம்'' என்று சொன்னார். மற்றவர்களுக்குக்
கொடுங்கள், ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றும் சொன்னார்.
மற்றவர்கள் என்கிறார்களே, அவர்கள் யார்? என்னுடைய
மனைவி என்று நான் சொல்ல வேண்டாம். மைத்துனனை
மற்றவன் என்று நான் சொல்லக் கூடாதா? தம்பியின்
குழந்தைகளை மற்றவர்கள் என்று சொல்லக் கூடாதா?
மச்சானை, மாமனை அவர்களுக்குத் தூர பந்துக்களாக
உள்ளவர்களின் பெயரில் விண்ணப்பங்களை அனுப்பிப்பெறுவதற்கு
எவ்வளவு நேரமாகும்? அப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெற
வில்லையா? எத்தனை பேர் எத்தனை டாக்சிகளை வேறு வேறு
பெயர்களில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? சென்னையில், மற்ற
இடங்களில் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பது
தெரியாதா? எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறார்கள் அவர்கள்,
ஆனால் என் பெயரில் ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்கள்.
பேசுகிறார்கள். உண்மையைப் பேசி உண்மையில் செயல்பட
வேண்டுமென்ற ஆசையில் இவற்றை வெளியிடுகிறேன், நடந்த
தவறுகள் திருத்தப்பட வேண்டும். இனிமேல் அப்படிப்பட்ட
தவறுகள் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திரும்பத்
திரும்பச் சொல்கிறார்கள், இது சிறு தொழில் என்று. தொழி

லாளர்கள் ஆயிரக்கணக்கில் வேலை இழக்கிறார்கள் என்று
பேசுகிறார்கள். இருக்கலாம். சில நேரங்களில் பிரசவத்தில்
அறுவை சிகிச்சை செய்யும் நிலைமை வந்தால், அந்த நேரத்தில்
தாயையும், குழந்தையையும் காப்பாற்றும் மருத்துவர்தான்
நமக்குத் தேவை, அப்படிப்பட்ட நிலைமையில் நடவடிக்கை
எடுக்கிறோம். தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்.
அதே சமயம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான
பணம் வந்து சேர்ந்தாக வேண்டும். சந்தன மரங்களைக்கூட
இன்னொரு மாநிலத்திற்கு அனுப்பி அவர்கள் அவற்றைப் பயன்
படுத்தி சித்தர வடிவங்களோடு, சிலைகளாகச் செய்து, கைவினைப்
பொருள்களாக நமது மாநிலத்திற்கு அனுப்பி வருகிறார்கள்.
சுதந்திரம் வாங்குவதற்கு முன்பு சொன்னோம், நாம் பஞ்சை
அனுப்பி வெள்ளைக்காரன் அதைத் துணியாக்கி நம்மிடமே
விற்கிறான் என்று. அந்த நிலைமைதான் அப்போது இருந்தது.
சந்தன மரங்களை ஏலம் விட்டார்கள். யார் ஏலம் எடுப்பார்கள்?
அதைப்பற்றி விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. போட்டி
போட ஆள் இருந்தால்தானே? இரண்டு லட்சம் ரூபாய்க்கு
ஏலத்தில் போக வேண்டிய மரங்கள் பத்தாயிரத்திற்குப் போகும்.
கேட்க ஆள் இருக்காது. கேட்டால் அவன் வெளியே இருக்க
முடியாது. அவன் மீது வழக்குப் போடப்படும். அப்படிப்பட்ட
நிலையில் எத்தனையோ பேர்கள் சம்பாதிக்கிறார்கள். அதை
விட இதைத் தடை செய்து, நாமே நடத்தி, நாமே தொழிற்
சாலைகளை உருவாக்கி, நமது மாநிலத்திற்குப் பயன்படும்படி
செய்ய வேண்டுமென்றால், அது குற்றமா? அது எப்படி சிறு
தொழிலை நசுக்குவதாகும்? சிறு தொழில் அது என்று சொல்
கிறார்கள், லட்சக்கணக்கான பணத்திற்கு அதை நடத்தியவர்கள்
சொந்தக்காரர்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது. எந்தக்
கட்சிக்காரர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள்,
எந்தெந்தக் குடும்பங்களுக்கு, யார் யார் பெயரில் வாங்கப்பட்டு
யார் எடுத்தார்கள் என்ற விவரம் எங்களிடம் இருக்கிறது.
முன்பு வெளிநாட்டிலிருந்து வருகிற சரக்கை விற்பதற்கு
மொத்தமாக விற்பனை செய்யும் உரிமை தனி நபர்களிடம்
கொடுக்கப்பட்டது. முதல் போடாமல் வாயாலேயே இத்தனை
லட்சம் முதல் போடுகிறோம் என்று சொல்வார்கள், அதை
எழுதிக்கொண்டு உத்தரவு வரும், அட்வான்சும் கிடைக்கும்.
முதல் போடாமல் அப்படி சம்பாதித்து லட்சாதிபதியானவர்கள்
பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடை செய்ய
வேண்டுமென்கிறோம். அத்தனை பணமும் அரசின் மூலமாக மக்க
ளுக்குக்குப் பயன்பட வேண்டும். மூலப்பொருள்களாக இருந்தாலும்,
பணமாக இருந்தாலும், வெளிநாட்டுப் பணமாக இருந்தாலும்,
மக்களுக்கு அவை வர வேண்டுமெனறு சொல்கிறோம். தொழில்
வளரவேண்டுமென்றுதான் அவற்றைத் தடை செய்கிறோம். இல்லை
என்று மறுக்கவில்லை. பல கோப்புகளில் எழுதியிருக்கிறேன்.
நான்தான் முதலில் கட்டளை போட்டேன். புள்ளிவிவரத்தைப்

பார்த்து, யார் யார் சொந்தக்காரர்கள் என்று தெரிந்து, யார் யார் அதை வைத்துக்கொண்டிருந்தார்கள், ஆரம்பிக்கும்போது அவர்கள் சொத்து எவ்வளவு, அதற்குப் பிறகு எவ்வளவு சொத்து வந்திருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து, இனிமேல் அதை அனுமதிக்கக் கூடாது, இது தமிழகத்திற்குத் துரோகம் என்றுதான் தடை விதித்தேன். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். முதலமைச்சர் என்ற வகையில்தான் தடை செய்தேன். அவற்றைத் தடை செய்துவிட்டு அதிகாரிகள்தான் நடத்த வேண்டுமென்று கையெழுத்துப் போட்டேன். போட்டவன் நான்தான். முதலமைச்சர் பதவியிலிருந்து இதைச் சொல்கிறேன். இதில் என்ன தவறு ?

(பிற்பகல் 6-10)

சிறு தொழில் என்பது என்ன? அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே பேசும்போது, சிறு தொழில் என்று சொல்லி, பெரிய தொழில்களை நீங்கள் மூடிவிடக் கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் எங்கே மூடுகிறோம்? திறப்பு விழாக்களைத் தானே நடத்துகிறோம். அதுவும் திறப்பு விழாக்களில் எங்கள் பெயரைப் போடாதே, இங்கே உழைத்தவனின் பெயரைப் போடுங்கள் என்றுதானே சொல்லுகிறோம். திறப்பு விழாக்கள் இன்றும் நடக்காமல் இல்லை. இன்றுகூட இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். நான் வந்துதான் அங்கேயுள்ள பாலத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அப்போதே சொன்னேன். நான் வர முடியாது, அங்கே உள்ள அதிகாரிகளை அழைத்து, அங்கே பணியாற்றியவர்களைக் கொண்டு திறந்து, அந்தப் பணியாளர் ஒருவரின் பெயரை வையுங்கள் என்றுதான் சொன்னேன். இப்படித்தான் நடக்கவேண்டும்; அப்படித்தான் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமே தவிர, அடிக்கல் நாட்டுவதற்கு முதலமைச்சரான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தான் வர வேண்டும்; திறந்து வைக்கவும் முதலமைச்சரான திரு. எம். ஜி. இராமச்சந்திரனதான் வரவேண்டும், என்ற அளவுக்குக் கூறி, என்னுடைய தரத்தைத் தாழ்த்திக் கொள்ளநான் தயாராக இல்லை. நான் இதய தெய்வமாக போற்றி வணங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இதன் மூலம் கெட்ட பெயர் உண்டாக்க விரும்பவில்லை. இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் எந்தத் தொழிலையும் அழித்துவிடும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. இதைத்தான் இந்த அரசின் தொழிற் கொள்கை என்ற அளவில் விளக்கமாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். புதிய தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்படுவதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகிற மூலதனம், சேர்க்கப்படுகிற தொகைகள் ஆகிய இவையனைத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், எத்தனை பேருக்கு இதனால் வேலை கிடைக்கும், உற்பத்தி செய்யப்படும்

பொருள்களுக்கு மார்க்கெட் எங்கே என்று இரண்டு அடிப்படையின் மீது தான் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இவ்வளவு கோடி செலவு செய்துவிட்டோம். இதை யார் தலையில் கட்டுவது என்று 5 ஆண்டுகளுக்குப் பிறகு தேட வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது என்றுதான் இந்த அரசு எண்ணுகிறது.

எந்தத் தொழிலை யார் ஆரம்பிப்பது என்றாலும், நாங்கள் அதை வரவேற்கிறோம். சட்டமன்றப் பேரவையில் பேசும்போது கூட நான் இதைக் குறிப்பிட்டேன். சிமெண்ட் தொழிற்சாலைகளைத் துவக்க இருக்கிறோம். சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இருக்கிறோம். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் தோல் பதனிடும் தொழில் அதிபர்கள் கோரிக்கைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்களுக்கு ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தண்ணீர் காரணமாக எத்தனை வளம் மிகுந்த நிலமாக இருந்து பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்கு வாய்ப்பு வசதி பெற்ற ஆயிரக்கணக்கான நிலங்கள் பாழாக்கப்பட்டிருக்கின்றன என்பதும், மக்களுடைய குடிதண்ணீரில்கூட அது கலந்து விடுவதால் எவ்வளவு நோய்கள் பொதுமக்களுக்கு வருகின்றன என்பதும் நமக்குத் தெரியாததல்ல. எனவேதான் அதைப் பற்றி நன்கு எண்ணிப்பார்த்து, இந்தக் கழிவு நீரை வெளியே விடாமல் பாதுகாக்கப்பட்ட இடத்தில் தேக்கி வைக்க வேண்டும். வெளியே விடக்கூடாது என்று உத்தரவிட்டோம். இதற்கு அரசே பணம் கொடுத்து இந்த வேலையை முடிக்க வேண்டும். பிறகு அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடமிருந்து—தோல் பதனிடும் தொழிலதிபர்களிடமிருந்து—பணத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். யோசனை நல்ல யோசனை தான். நான் குறைகூறவில்லை. வரவேற்கிறேன். ஆனால் எத்தனையாண்டுகளாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? நமக்குத் தெரியும், கடந்த 5, 6 ஆண்டுகளாக இவைகளைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றது. மக்கள் அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார்கள். விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நேரம் குறித்து, நாள் குறித்து என்று சொல்லுவார்களே, அதைப்போல் இத்தனையாம் தேதிக்குள் இதைச் செய்யவில்லை என்றால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியும் அந்தத் தொழில் அதிபர்கள் அரசாங்கத்தை அணுகி, திரும்பத் திரும்ப வந்து தவணை கேட்பார்கள். திரும்பத் திரும்ப அவர்களுக்குத் தவணை தரப்படும். இப்படியே நாட்கள் ஒத்தி வைக்கப்பட்டன. இதற்கு முடிவில்லாமல் போய்விட்டது. நாங்கள் ஆட்சிப்

பொறுப்பை மேற்கொண்ட பிறகும் ஒருமுறை தவணை கொடுத்தோம். இத்தனை நாட்களுக்குள் இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்து நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும், இதன் மூலம் மக்களுக்கு நல்வாழ்வு ஏற்பட உதவி செய்ய வேண்டும் என்று இந்தத் தொழில் அதிபர்களைக் கேட்டுக்கொண்டோம். மீண்டும் நேரம் கேட்டார்கள். மீண்டும் தவணை தந்தோம். இன்னும் செய்யவில்லை. இன்றைக்குக் கடைசியாகச் சொல்லி விட்டோம். "மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் தோல்பதனிடும் தொழில்திபர்கள் இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்யாவிட்டால் அதனால் ஏற்படுகிற விபரீதத்திற்கு, தொல்லைக்கு, நட்டத்திற்கு அதனதன் சொந்தக்காரர்கள்தான் பொறுப்பே தவிர, இந்த அரசு பொறுப்பு அல்ல." இதை நாங்கள் சொல்வதற்குக் காரணம் இந்தத் தொழில் வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வருகிறது. இந்திய நாட்டிலேயே இந்த மாநிலத்தில்தான் 70 முதல் 80 சதவீதம் தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொன்னார்கள். உண்மைதான். நல்ல அறுவை சிகிச்சை தெரிந்த ஒரு மருத்துவர் தம்மிடம் உள்ள கத்தியை பிறரைக் கொல்ல பயன்படுத்துகிறார் என்று தெரிந்த பிறகும், யாரோ ஒருவருக்கு அவர் அறுவை சிச்கிச்சை செய்ய இந்தக் கத்தியைத்தான் உபயோகப்படுத்துகிறார் என்பதற்காக நூற்றுக் கணக்கானவர்களை கொலை செய்வதற்கு இந்தக் கத்தியை அவர் உபயோகப்படுத்த நாம் அனுமதிக்கலாமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு மருத்துவர் நமக்கு எதற்குத் தேவை என்றுதான் நாம் கேட்போம். அந்த வகையில்தான் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நோய்களை உண்டாக்குகிற பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு தொல்லை அளிக்கிற இந்தப் பிரச்சினையில், மக்கள் உண்ணும் குடிதண்ணீரில் தீமையைப் புகுத்தும் இந்தப் பிரச்சினையில், விபரீதமான இந்தப் பிரச்சினையில், இன்னும் எத்தனை நாளைக்குத்தான் யோசனை சொல்லிக் கொண்டிருப்பது? இத்தனை யாண்டுகளாக ஏன் அவர்கள் வற்புறுத்தவில்லை? உங்களை அணுகி இப்படி யோசனை சொல்லுங்கள் என்று சொல்லுகிறவர்கள் மக்கள் பிரச்சினையில்கூட இப்படித் தாமதம் காட்டுவது ஏன்? நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 7, 8 மாதங்களாக நாங்களும் நேரம் கொடுத்தோம்; தவணை கொடுத்தோம். இதற்குள் முடித்துவிட வேண்டும் என்று சொன்னாலும், ஏன் அதற்காக எந்த முயற்சிகளையும் அவர்கள் எடுக்கவில்லை? இப்படியே சொல்லி நாளைக் கழித்துவிடலாம் என்று பணத்தை மட்டும் எண்ணுகிற நினைவு சரியில்லை. எனவே பணத்தை மட்டும் எண்ணிப் பார்க்காமல், மனிதனின் மனதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் இந்தப் பிரச்சினையில் எத்தனை மக்களின் வாழ்வு பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலை கொடுப்பது என்பதைப்பற்றியும் நாங்கள் சிந்திப்போம். அதையும் இன்றே சொல்லிவிடுகிறேன். கிராமப்புற கைத் தொழில் என்று சொல்லுகிறபோது, கிராமத்தில் என்ன கைத் தொழிலை ஆரம்பிக்கப் போகிறீர்கள், எங்கே ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் திட்டம் தீட்டுகிறோம். திட்டம் தீட்டும்போது, நாங்கள் அந்த வரைபடத்தை எழுதி இது தான் வரைபடம், இதைப்போல் செய்துவிடுங்கள் என்று சொல வதில்லை. நாங்கள் தீர்மானித்து முடிவு எடுத்து அதிகாரிகளைக் கூப்பிட்டு, ''இனி உனக்கு உன்னுடைய துறையில் வேலை இல்லை; இந்த வேலையைப் பார்; உங்களுடைய இலாக்கா இதற்கு ஒப்புக் கொள்கிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்; நீ இந்த வேலையைப்பார்; நேரடியாக என்னை வந்து பார்'' என்று சொல்லுகிற அளவுக்குப் பணியாற்ற நான் தயாராக இல்லை. முன்பு இருந்தவர்கள் சாமர்த்தியத்திற்கு இந்த முறை ஒரு அடையாளமாக இருந்திருக்கலாம். மறுக்க வில்லை. அந்தச் சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, ஒன்றுமட்டும் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு திட்டம் ரூ. 5 லட்சத்தில் ஆரம்பித்து, இறுதியில் ஒரு கோடிக்குப் போகிற நிலையை இனி இந்த மாமன்றம் காணாது. முன்பிருந்த நிலைமைகளைப்பற்றி நான் இங்கே நினைவுபடுத்த விரும்பவில்லை. தொழில்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில் நிபுணர்களை அழைத்து, அதற்கான பயிற்சி பெற்றவர்களை அழைந்து அவர்களைப் பயன்படுத்தி அவர்களிடம் கருத்தைக் கேட்டு, ஆரம்பிக்கும்போதே எத்தனை கோடி ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டால் அல்லது இத்தனை லட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டால் இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு விலைவாசி உயர்வின் காரணமாக, பொருள்களின் விலை உயர்வு காரணமாக அது எங்கே போய் நிற்கும் என் பதையும் இப்போதே குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்வோம், இப்போது தொடங்கும்போது 20 கோடி ரூபாயாகும் என்றால், இறுதியில் 2 ஆண்டுகளுக்குப் பிறகு 30 கோடி ரூபாயில் முடியும் என்றால், அதையும் இப்போதே குறிப்பிட்டுக் காட்டும் வகையில்தான் எங்கள் திட்டம் இருக்கும். எப்படியோ ஒவ்வொரு ஆண்டு முடிந்ததும் எங்களுடைய சாதனைகளைப் பார்த்தீர்களா என்று ஆங்காங்கே நிலைமைகளை உருவாக்கி, கல்நாட்டு விழாக்களைத் தொடங்கி வைத்துவிட்டு, பின்னால் எப்படியோ ஆகட்டும் என்று நாங்கள் செயல்படத் தயாராக இல்லை.

(பிற்பகல் 6-20)

ஒன்றை உறுதியாகச் சொல்லுகிறேன். பெரிய தொழிற் சாலைகளைத் தொடங்குவதற்கு யார் முன் வந்தாலும், இந்த அரசு அவர்களுக்குத் துணை நிற்கும். அதில் சந்தேகம் வேண்டாம். கூட்டுறவுத் துறை என்றாலும், பொதுத் துறை என்றாலும், உதவி செய்ய அறிவாற்றலை அதற்குக் காணிக்கையாக்குங்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் தங்களுடைய சக்தியின் துணிவின் நுண்ணறிவின் ஆற்றலுக்குத் தகுந்த பதவியைப் பெற்று பணி செய்ய விரும்பினால் நாங்கள் மறுக்கமாட்டோம். ஆனால் அதைப் போலவே கூட்டுறவுத் துறையில் தான் இயங்கவேண்டும். அதுதான் பாதுகாப்பு என்றால், அதில் நீங்கள் எந்த அளவுக்குப் பயன் பெறுவீர்கள் என்று தெரிந்துகொண்டு அதை ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இங்கே கேள்விப்பட்டிருக் கிறீர்கள். நண்பர் அனந்தசாமி வழக்கு மன்றத்திற்குப் போய் ஜாமீனில் வந்திருக்கிறார். அவர் மீது இன்னொரு வழக்கையும் போடவிருக்கிறோம். அது மிகப் பெரிய மோசடி வழக்கு. அதை இங்கே சொல்லக்கூடாது என்பதில்லை. இன்னொரு வழக்கு போடப்போகிறோம் என்பதிலிருந்து அவர் எப்படிப்பட்டவர் என்பதை இந்த நாடு புரிந்துகொள்ளும் என்பதற்காகச் சொல்ல விழைகிறேன். பணமே போடவில்லை. அவருடைய கணக்கில் பணம் வருகிறது. எவ்வளவு சாமார்த்தியசாலி! யாரும் கண் டிருக்க முடியாது. அவர் எல்லாக் கட்சியிலும் இருந்து எல்லோருடனும் நண்பராக இருந்திருக்கிறார். என்னைப் பார்க்கும் பொழுது, உற்ற துணைவர்போல் பழகுகிறார். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தவறுகளைச் செய்தால் இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது. கோப்புகளைப் பார்த்தோம் என்று சொல்லுகிறபோது அது கேலியாகக்கூட இருந்தது. கொண்டு வந்து காட்டுங்கள் என்று கேட்டு, ஒரு கோப்பைத் தான் சட்ட மன்றத் தில் காண்பித்தேன். அவர்களுக்குத் தங்கள் பத்திரிகையில் போடத் துணிவு இல்லை. தங்களுக்குச் சொந்தமாக இருக்கிற பாதுகாப்போடு இருக்கிற பத்திரிகைகளில் வெளியிடவில்லை. ''ஆனால் அரசு கடன் கொடுக்க வேண்டும். திரும்ப கேட்கக் கூடாது. அரசாங்கம் தவணைகளில் வாங்க வேண்டும். வட்டி யைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்கொள்ள வேண்டும். அரசு வெளியிடுகிற உண்மையைப் பத்திரிகைகளில் போடமாட் டோம்''. இதுதான் அவர்கள் கொள்கை. நல்ல தர்மம், நல்ல எண்ணம், பத்திரிகை தர்மம் அவர்களிடம் ஒழுங்காக நடை பெறுகிறது. அதற்காக யார் மீதும் ஆத்திரப்படப் போவ தில்லை. பழி வாங்கப் போவதில்லை. ஆனால் மக்கள் பணம் இப்படிப் பாழாவதை அனுமதிக்கமாட்டோம். மால்கோ என்ன ஆயிற்று? யாரை மாற்றினீர்கள் என்று மறுபடியும் அந்த விவகாரத்தை இழுக்கிறார்கள்: அதில் உள்ளவர்கள் டைரக்ட ராக இருக்கிறார்கள் என்று கேட்கின்றனர். அது அவர்களுடைய சக்தியையும் வசதியையும் பொறுத்தது. அதில் குறுக்கிடத்

தயாராக இல்லை. ஆனால் டைரக்டரான பிறகு, அவர்கள்
பேரில் குற்றம் ருசுவாகி, அவர்கள் தண்டிக்கப்படுகிற நிலை
வர வேண்டும். எந்த ஆதாரத்தை வைத்துத் தொடங்கினார்
களோ அதுவரையில் டைரக்டராக இருப்பதை நீக்குவதற்கு
அரசுக்கு அதிகாரம் இல்லை. அது ஒரு தனி 'பாடி'. இங்கி
ருப்பவர்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். இப்படிச் செய்,
அப்படி செய் என்று வற்புறுத்துவதற்கு அரசுக்கு அதிகாரம்
இல்லை. யாரிடமோ பணம் வாங்குகிறார்கள். யாருக்கு பணம்
கொடுக்க வேண்டுமோ, அதாவது மின்சார போர்டு, வழக்குப்
போடுகிறது. இவைகளை வற்புறுத்திச் சொல்வதற்குக் காரணம்,
தொழிலை நசுக்கிவிட நடவடிக்கை எடுக்க இன்றைக்கு ஆட்சிக்கு
வரவில்லை. மீண்டும் சொல்கிறேன். பெரிய தொழிற்சாலை யார்
தொடங்க விரும்பினாலும், தனியார் துறையானாலும், ஆரம்
பிக்கலாம். தடை செய்யப் போவதில்லை. ஆரம்பியுங்கள்.
இத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்
னால், மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். அவ்வாறு வேலை
வாய்ப்பு கொடுக்கிறபோது, அவர்களுக்குக் கடன் வாங்கு
வதற்குத் துணைசெய்ய அரசு தயாராக இருக்கிறது. கொள்கை
விளக்கம் என்பதால், இப்படிப் பேசுகிறார்கள். அதனால் புள்ளி
விவரங்களைச் சொல்லாமல் எங்களது கொள்கைளை விளக்கு
கிறோம்.

சிறு தொழில் என்ன என்று கேட்கிறார்கள். செருப்புத்
தைப்பது என்பது சிறு தொழில்தான். பெரிய தொழிலும்தான்.
இதை எப்படிப் பயன்படுத்துகிறோமோ, அதற்கேற்ப அது அமை
யும். தெருவில் உட்கார்ந்து தைத்துக் கொண்டிருக்கிறானே
ஒரு தொழிலாளி, அந்தத் தொழிலாளியும் இன்னும் நான்கு
பேரும் அதே செருப்புக் கடையை இயக்குகிற இயந்திரங்களை
அமைத்துச் செய்தால், சிறு தொழில். மிகப் பெரிய அளவில்
பாட்டா மாதிரி செய்ய ஆரம்பித்தால், அது பெரிய தொழில்.
எண்ணுகிற எண்ணம், செயல்படுகிற விதம் இவைகளைப்
பொறுத்து எதையும் சிறு தொழிலாக்கலாம், சிலவற்றைப்
பெரும் தொழிலாக மாற்றி அமைக்கலாம். அந்த நிலைமையில்
சில தொழில்களை ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதற்கு விளக்கம்
கொடுத்திருக்கிறோம். சிறு தொழில் என்று சொல்லும்போது,
சிலருக்கு சந்தேகம் வருகிறது. குறிப்பில் கூறியிருக்கிறோம்,
அதை நினைவுபடுத்துகிறோம். ஏறத்தாழ 50 ஆயிரத்திற்கு அதிக
மாக இருக்கிற இடங்களில் ஒரு தொழில் ஆரம்பிக்க விரும்
பினால், ஒரு லட்ச ரூபாய்க்கு குறையாமல் உதவி செய்யத்
தயாராய் இருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறோம். முன்னர்
ஒரு நிபந்தனை இருந்தது, அதைத் தளர்த்த வேண்டுமென்று
ஒருவர் குறிப்பிட்டார். பெயரைச் சொல்ல விரும்பவில்லை.
அவர், "அங்கே ஜன்னல் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கக்
கூடாது; பஞ்சாப்பிலும் ஹரியானாவிலும் அதை அனுமதிக்

கிறார்கள் என்றார். சட்டம் என்பதே ஒரு வரையறைதான்.
அதுதான் சட்டம். கண்ணாடிக்குக்கூட சட்டம் போடுகிறோம்.
12'' நீளம் 6'' அகலம் அதற்குமேல் போடக்கூடாது, இந்தப்
பக்கம் 12 அடி அந்தப் பக்கம் 8 அடி என்றால், அது
ஒழுங்காக இருக்காது. சட்டம் சில சமயங்களில் கஷ்டத்தைத்
தரும், ஆனால் நஷ்டத்தைத் தராது. நஷ்டத்தை யாருக்குத்
தரும்? கட்டுப்பாட்டை, சட்டத்தை மீறுகிறவர்களுக்கு,
கடமை தவறுகிறவர்களுக்கு இழப்பாகும். இதைத் தான்
சொல்ல விரும்புகிறார்கள். சட்டத்தைப் போட்டாக வேண்டும்.
சட்டத்தின்படி நாகரிக பழக்க வழக்கங்களை உருவாக்க வேண்டும்,
இந்தத் தொழிற்சாலை இப்படி இயங்க வேண்டுமென்றால்,
அப்படி அமைக்க வேண்டும். பள்ளியைச் கட்டுகிறபோது, பல
வாசற்படிகளை வைக்கிறோம். ஏன்? எந்த நேரத்தில் எந்த
விபத்து ஏற்படுமோ தெரியாது. குழந்தைகள் 2, 3 நிமிடங்
களில் கொட்டகையிலிருந்து வெளியே வர வேண்டுமென்று
நிறைய கதவுகள் வைக்கிறோம். இதையெல்லாம் கேட்கக்கூடாது;
ஒரு கதவுதான் வைப்போம்; நெருப்புப் பிடித்தால், குழந்தை
கள் மெல்ல வெளியே வந்து சேரட்டும் என்றால், ஒத்துக்
கொள்ளுவோமா? சட்டத்தை மதிக்க வேண்டும். பெரிய
தொழில் செய்ய வாய்ப்பு இல்லையென்றால், இந்த அரசைப்
பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லது இருக்கின்ற அறி
வாற்றலை வைத்துக் கொண்டு சிறு தொழிலை ஆரம்பிக்க முன்
வர வேண்டும். இதைச் சொல்லுவதற்குக் காரணம், சிறு
தொழில் என்பது வேடிக்கைக்காகவோ அல்லது யாராவது புகழ
வேண்டும், மக்களிடம் சொல்லி வாக்குகளை வாங்கி விட்டோமே,
பட்டியலில் இருக்கட்டும் என்று கணக்கைக் காட்டுவதற்காகவோ
அல்ல. ஆறு மாதம் கழித்து, எங்களுடைய அரசு எத்தனை
தொழில்கள் ஆரம்பித்திருக்கின்றன என்று தயவு செய்து கவ
னித்தால், எடுத்துக்கொள்ளுகிற முயற்சி எப்படிப்பட்ட சீரிய
முயற்சி என்பதும், எத்தனை ஆயிரம் பேர்களை வாழ வைக்கப்
போகிறது என்பதும் தெரியும். உதாரணத்திற்கு ஒன்று
சொல்லுவேன். ஒரு நிறுவனம். பணம் செலவழித்திருக்கிறார்கள்.
80 கோடி ரூபாய் வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.
அந்த வட்டியைக் கொடுக்காமல் இருந்திருந்தால், எவ்வளவோ
திட்டங்களைத் தீட்டியிருக்க முடியும். கடன் வாங்குவது பெரி
தல்ல. அதைத் திருப்பிக் கொடுக்கிற அளவில் பொருளா
தாரத்தை அதிகமாக்க வேண்டும். மக்களுக்கு அந்தப் பலனைத்
தந்தாக வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
திரு சுவாமிநாதன் அவர்களும் வேறு சிலரும் ஒரு கருத்தைச்
சொன்னார்கள். வாங்குகிற சக்தியை மக்களுக்கு அதிகப்படுத்த
வேண்டும் என்று சொன்னார்கள். எப்படி வரும்? தொழில்
கிடைக்க வேண்டும். தொழில் எப்படி வரும்? பெரிய
தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதனால் இரண்டா
யிரம் பத்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். இப்போது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

வேலையில்லாத் திண்டாட்டத்தின் கணக்கு என்ன? அது வருஷா வருஷம் உயருகிறது. 'பாவர்ட்டி லைன்' என்று சொல்லுகிறீர்களே, அது ஆண்டுக்கு ஒரு விதமாக நான்கு ஆண்டுகளாகப் பெருகி வந்திருக்கிறது. இவைகளை இப்படிச் செய்து கொண்டே போனால், பொருளாதார அடிப்படையில் மக்களைச் சந்தித்து உங்களுக்குத் தொழில் தந்திருக்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? எப்படி வாங்குவார்கள்? வாங்கும் சக்தியை எப்படி உருவாக்க முடியும்? உற்பத்தியைப் பெருக்கினால் போதாது. பொருள்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம், சட்ட மன்றத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்த அரசு, அரசைச் சேர்ந்த அமைப்புகள் எவ்வளவோ பொருள்களை வாங்க வேண்டியிருக்கிறது. கடுதாசியிலிருந்து, பிளாட்டிங் பேப்பர், துணி உருண்டையிலிருந்து எல்லாவற்றையும் வாங்க வேண்டும். என்ன செய்வது, கான்டிராக்ட் கொடுத்து வாங்குகிறோம். பணம் எங்கே போகிறது? உதாரணத்திற்குச் சொல்லுவேன். பஸ்களை எடுத்துக்கொள்ளுங்கள். கணக்குப் போட்டு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3¼ கோடி பெறுமான டயர் வாங்க வேண்டியிருக்கிறது. கான்டிராக்டுக்குப் போனால், ஊழல் வந்துவிடுகிறது. நாங்கள் பொறுப்பா?

[பிற்பகல் 6.30]

அதில் எல்லாம் லஞ்சம் வாங்கிவிட்டார்கள் என்று குறைகளைச் சொல்கின்றார்கள். அந்தக் குறைகளை நாங்கள் எடுத்துச் சொல்கின்றோம். மனதிலே இருக்கின்றதை அப்படியே எடுத்துச் சொல்கிறேன். அப்படி இந்த அரசு செய்யுமானால், இங்கே இருக்கின்றவர்களில் யார் வேண்டுமானாலும், தைரியமாக எடுத்துச் சொல்லலாம். அவர்கள் மீது இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்குள்ள அமைச்சர் செய்தாலும், நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்தாலும், மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இனிமேலும் மக்கள் பேசாமல் இருக்கமாட்டார்கள். அவர்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது. நிச்சயமாக இனிமேல் அப்படிச் செய்ய முடியாது என்பதை அவைகளைச் செய்பவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமகிருஷ்ண தேவர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பெரியவர்கள். அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு தேவர் அவர்கள் கிழக்கு இராமநாதபுரம் பற்றிக் கேட்டார்கள். அப்போது பின்னாலிருந்து குரல் வந்தது. மேற்கு இராமநாதபுரத்தைப் பிரிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், பிரிவினை வேண்டாம். ஒருமைதான் வேண்டும்.

1978 மார்ச் 27]

திரு வே. தங்கப்பாண்டியன்: மேற்கு இராமநாதபுரம் என்று பிரித்துப் பேசுவது அந்தப் பகுதி மக்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை இவ்வளவு வேகமாக எழுந்து சொல்ல வேண்டாம். கொஞ்சம் நிதானமாகவே சொல்லியிருக்கலாம். அதிலே ஆட்சேபணை இல்லை. அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். மேற்கு மாம்பலம், கிழக்கு மாம்பலம் என்றெல்லாம் சொல்கிறார்கள். கிழக்கு ராமநாதபுரம், மேற்கு ராமநாதபுரம் என்று எல்லாம் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை. எந்தப் பகுதியில் சாலைகள் சரியாக அமைக்கப்படவில்லை என்றாலும் நாங்கள் வருத்தப்படுவோம், இதை நான் சட்ட மன்றத்திலேயும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கடற்கரையிலே போடுகின்ற சாலை எதுவரையில் போகிறது என்று அவர்கள் கேட்டார்கள். அப்போது நான் சட்ட மன்றத்திலே சொன்னேன்: வெளியிலே காரிலே போகின்றவர்களுக்கு வசதியாகச் சாலைகள் போடப்படுவதாகச் சொன்னார்கள். கிராமப் பகுதியிலுள்ள மக்கள் வசதியாக வாழ வேண்டுமென்பதற்காகத் திட்டம் போடவேண்டும் என்று நான் அப்போது குறிப்பிட்டேன். பிறரைக் குற்றம் சொல்ல மட்டும் இந்தக் கட்சி தொடங்கப்படவில்லை. நியாயத்தைப் பாராட்டுவோம். தீமை செய்பவர்களைக் கண்டிப்போம். குற்றங்களைக் கண்டால், அந்தக் குற்றங்களை எடுத்துச் சொல்வது எங்கள் கடமை. குற்றங்களை குற்றங்கள் என்று எடுத்துச் சொல்வது நமது கடமை என்று அண்ணா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவைகளை எடுத்துச் சொல்ல நாங்கள் தயங்குவதில்லை. தாமே முதுகைப் பார்க்க முடியாது, பிறர் சொல்லித்தான் பார்க்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்த்தால் தெரியும் என்றுதான் நான் சொன்னேன். அதைப் பத்திரிகையிலே போடவில்லை. அதையே வேறுவிதமாக வெளியிலே பேசியிருக்கிறார்கள். நான் பேசி அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று சொல்லவில்லை. தன் முதுகு தனக்கே தெரியாது என்பது பாடமான ஒரு பழமொழிதான். அதுதான் கருத்து. அதிலே எதிர்ப்பு ஒன்றுமில்லை. நாங்கள் எந்த வகையிலே செய்தாலும் குறையிருந்தால் எங்களைக் குறை கூறிக் கொண்டு, வேறு வழியில்லை, இதனால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது, இப்படிச் செய்கிறோம் என்று சொல்கிறோம். பணம் இல்லை, நிதி இல்லை என்று சொல்கிறோம். "ரூ. 100 கோடி போட்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்றீர்களே: எங்கள் பக்கத்தில் ரெயில்வே இல்லாவிட்டாலும் ஒரு தொழிற்சாலையையாவது ஆரம்பித்துத் தரவேண்டும். எங்கள் பகுதியிலிருக்குத் தொழிற்சாலை என்றால் என்ன என்பதையாவது,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

இந்த மாவட்டத்திற்குச் சொல்லித்தாருங்கள்'' என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் சொல்லும்போது நாம் சிரித்தாலும், அவர்களுடைய உள்ளத்திலே எவ்வளவு வேதனை இருக்கிறது என்பதை நாம் கவனித்துப்பார்க்கவேண்டும். எல்லையில்லாத வேதனை இருப்பதால்தான், அந்தக் குமுறல் அவரிடமிருந்து வருகிறது. அதை நாம் உணர வேண்டும். அதை மதிக்க வேண்டும். நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் அதை மதிக்கிறேன். ஒருவர் தண்ணீர் எங்கே என்று கேட்டார். அவருக்குக் கொஞ்சம் ஆத்திரம் வந்திருக்கிறது. அதனால் கேட்கிறார். இங்கே சொல்கின்றோம். அவர்கள் செய்வார்கள் என்று நம்பியிருக்கும்போது, தடைசெய்யக் கூடியவகையில் இங்கே பேசுகிறார்களே என்ற அளவில் அவர்கள் கேட்கிறார்கள். ''20 அடி, 50 அடிக்குக் கீழேயிருந்து இயந்திரங்கள் மூலம் இழுத்தால், தண்ணீர் வெளியே வருகிறது. கிடைக்கிறது. இதற்கு முன்னாலே இருந்தவர்கள் பார்த்தபோது தண்ணீரே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இப்போது வருகிறது. எப்படி வருகிறது?'' என்று கேட்டார்கள். சில இடங்களிலே வறட்சியாக இருக்கும். சில இடங்களிலே நீர் இருக்கும். குறிப்பாக இந்த ஆண்டில் அளவுக்கு மீறிய மழை பெய்ததால், தண்ணீர் ஊறியிருக்கும். அந்தக் காரணத்தினால் தண்ணீர் ஊற்றெடுத்து வருகிறது. இந்தத் தண்ணீரைப்பற்றிச் சிலர் சொல்வார்கள். நாம் எடுக்க எடுக்க, இறைக்க இறைக்க தண்ணீர் ஊறும் என்று சொல்வார்கள். அது எப்படிப்பட்ட காலம் என்றால் மாதம் மும் மாரி பெய்தது என்று சொல்வார்களே அந்தக் காலம். அந்த மாதிரியான நிலைமைகள் இருக்க வேண்டும். அந்த நிலைமை 3, 4 ஆண்டுகளுக்கு இல்லாமல் போனதால், வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பிறகு தண்ணீர் ஊறி, இன்றைக்கு தண்ணீர் வருகின்ற நிலைமைகள் இருக்கின்றது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். இராமநாதபுர மாவட்டத்தில் ஒரு பகுதியில் ஒரு கிணறு இருக்கிறது. அந்த ஊரிலே இருக்கின்ற மக்கள் அதிலிருந்து தண்ணீர் எடுத்து பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்திக்கொள்கிறார்கள், அதற்குப் பக்கத்திலே 5 அல்லது 6 மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்திலே தண்ணீரே இல்லை. கிணற்றிலே தண்ணீர் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியிலே உள்ள எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக பெரிய கிணறாக வெட்டி, தண்ணீர் இறைத்து, அந்தப் பகுதி கிராம மக்களுக்குக் குழாய் மூலம் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அப்போது அந்த ஊரிலேயிருந்து வந்தார்கள். எங்கள் ஊரிலே இதன் காரணமாகத் தண்ணீர் இல்லாமல் போய்விடும். கிணறு வெட்டுவதை நிறுத்த வேண்டும் என்று தடுத்தார்கள். அதற்கான ஒரு விண்ணப்பம் வந்தது. நாங்கள் போராடுவோம் என்றும் சொன்னார்கள்.

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நாங்கள் உங்களுக்கு அந்த நிலைமைகள் ஏற்படுகின்ற அளவுக்குச் செய்யமாட்டோம் என்று சொன்னோம். அந்த மாதிரியான நிலைமை உங்களுக்கு ஏற்படாது என்று சொன்னோம். அந்தப் பகுதி மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் குடிப்பதற்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். அவர்களுக்குக் குளிப்பதற்குக் கிடைக்கவில்லை என்றாலும் குடிப்பதற்காவது கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பியிருக்கிறோம். அந்த மக்களுக்குப் புரியவில்லை. தனி மனிதனுக்கு சுய நலம் வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் மட்டும் வாழ வேண்டும் என்று சொல்லாமல், நாம் அனைவரும் வாழ வேண்டும் என்று சொல்ல வேண்டும். சுயநல மனப்பான்மை நமக்கு வரக் கூடாது. எனக்கு மட்டும் தண்ணீர் வேண்டும் என்ற உணர்வுகளை எல்லாம் நாம் மாற்றியமைக்க வேண்டும். பெரியவர்களைப் போன்றவர்கள், அவர்களுக்கெல்லாம் புத்தி சொல்ல வேண்டும். இப்படிச் சொல்கின்ற கடமை அரசுக்கும் உண்டு. நம் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும். அதை இந்த அரசு தந்தாக வேண்டும். இதைச் சொல்லும்போது அதற்கான திட்டங்களைத் தீட்டும்போது, இப்படி 100 கோடி ரூபாய் போட்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது, அதை எப்படிக் கொண்டு வருவது என்பதையும் பார்க்க வேண்டும். அதை அங்கே நிறைவேற்ற முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் எல்லாம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். வேறு மாநிலத்திலிருந்து அங்கு அந்த மூலப் பொருள்களைக் கொண்டு வரவேண்டியிருக்குமா, அப்படிக் கொண்டு வரமுடியும் என்றால் எவ்வளவு தூரம் என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் செய்ய வேண்டும். நான் பெரியவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு வேறுபாடு பார்க்காது. இந்த மாவட்டத்திற்குச் சலுகை, இந்த மாவட்டத்திற்கு அலட்சியம் என்று நிச்சயமாக கணக்கிட்டுச் செய்யாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். உதாரணத்திற்கு இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏழு மாவட்டங்களை அமைத்துப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. அப்படி அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் சொன்னபோது, தங்கள் மாவட்டத்தைச் சேர்க்கவில்லை என்று நமது ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்கள். நான் உடனே அதை ஏற்றுக்கொண்டு சேர்த்துக் கொண்டேன்.

ஆகவே எந்த மாவட்டத்தில் மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அதற்கேற்ப தொழில்களை அமைக்க வேண்டும். அவர்கள், ''எங்கள் ஊரில் வைக்கோல் நிறைய கிடைக்கிறது'' என்று சொன்னார்கள். வைக்கோலை மூலப் பொருளாக வைத்து ஏதாவது தொழில் செய்ய முடியும் என்றால், அதையும்செய்யலாம்.

லட்சக் கணக்கான பனை மரங்கள் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். வெளி நாடுகளுக்கு அதிலிருந்து தேவையான பொருள்களைச் செய்து அனுப்பலாம். தென்னையிலிருந்து குச்சிகளைப் பிரித்தெடுத்து அவைகளைத் துடைப்பங்களாகச் செய்து அனுப்பலாம். அந்நிய நாடுகளுக்குத் துடைப்பத்தை அனுப்பினால், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று சொல்கிறார்கள். அதுகூட அவர்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்களே என்று நாம் பெருமைப்படுத்திக்கொள்ளக்கூடாதா என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

நுங்குகளை எடுத்து, கெட்டுப் போகாமல் பதம் செய்து, பக்குவப் படுத்தி, டின்களிலே அடைத்து, அதை மக்களுக்கும் ஆங்காங்கே வரும் வெளிநாட்டுக்காரர்களுக்கும் கொடுத்து, விளம்பரம் செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதிலே என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன, எவ்வளவு குளிர்ச்சி நிறைந்தது, எவ்வளவு உஷ்ணத்தைத் தடுக்கும், உடலுக்கு எவ்வளவு உறுதியைக் கொடுக்கும், எந்தக் கெடுதலையும் செய் யாது, என்பதையெல்லாம் விளக்கிச் செய்ய முடியாதா? இது போன்ற எத்தனையோ காரியங்களைச் செய்ய முடியும். அதைச் செய்யவில்லை. சரியாகப் பயன்படுத்தவில்லை. இதுவரை பயன் படுத்தத் தயாராக இல்லை. காதி போர்டில் சிலர் தங்களுக்குத் தெரிந்த அளவில் சர்க்கார் பணத்தை வைத்துக்கொண்டு, உழைப்பவர்கள் உழைத்து, சில காரியங்களைச் செய்திருக் கிறார்கள். ஆனால், பெருத்த அளவுக்குத் திட்டமிட்டு, இவை இவை இவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள்; இவற்றை யெல்லாம் சேர்த்துச் செய்யும் பெரிய தொழிற்சாலை இது; சிறு சிறு பொருள்களையெல்லாம் ஒன்றாக இணைக்கும் பெரிய தொழிற் சாலை இது என்று திட்டம் போட்டுச் செய்தால், வெற்றிகரமாக இருக்கும். இந்த நேரத்தில் ஒரு கொள்கையைச் சொல்ல வேண்டி யவனாக இருக்கிறேன். எங்களுடைய கொள்கை கூடுமான வரையில் பெரிய தொழில்களையெல்லாம் பொதுத் துறை ஆக்கு வதுதான். ஆனால் அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்பதற்காக அதைப் பயனில்லாமல் செய்யும் போது, அதைப் பரிசீலனை செய்யாமல் இருந்தால், நாங்கள் அமைச்சர்களாக இருப்பதற்கோ, ஒரு பொறுப்பை நிறைவேற்றி மக்களுக்கு நன்மை செய்கிறோமென்று சொல்வதற்கோ, நாங்கள் தகுதியுடையவர்களாகமாட்டோம். அந்த முறையில் சட்ட மன்றத்தில் சொன்னதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். வேண்டுமென்றே தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு தமிழக அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் மக்களுடைய நன்மைகளைப் புறக்கணித்து, மக்களைத் துன்பத்திற்கு ஆளாக்கி, அவர்கள் வேதனையோடு வாழக்கூடிய

சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் மக்களால் கொடுக்கப்படும் வரிப் பணத்திலிருந்து உருவாக்கப்பட்ட பஸ்களையோ, வாகனங்களையோ அது போன்ற அமைப்புக்களையோ, நிறுவனங்களையோ தாக்கி, பாழாக்கி, பயமுறுத்தி, நாங்கள் வேலை நிறுத்தம் செய்வோ மென்று சொல்லி, எங்களை அச்சுறுத்தி, இந்தத் தகராறில் மாட்டிக் கொண்டால் அரசு நடக்காமல் போய், எங்கள் பதவி போய்விடுமென்று பயந்து, அவர்களுக்கு இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று நாங்கள் எதை எடுத்தாலும் ஒப்புக் கொள்வோமென்று யாராவது கற்பனை செய்து கொண்டு, தூண்டி விட்டால், கடைசியில் தூண்டி விட்டவர்கள் அந்தத் தொழி லாளர்களாலேயே தாக்கப்படும் நிலைக்கு காரணமாகி விடுவார் களென்ற பரிதாபத்தை, அந்த உணர்வினை அவர்கள் உள்ளத்திலே பதிய வைப்பதற்காக நான் இங்கே சொல்கிறேன், தமிழக அரசு நியாயமான கோரிக்கைகளைத் தவிர, வேறு எதையும் ஏற்காது. தமிழக அரசை பயமுறுத்தியோ, அச்சுறுத்தியோ, எங்களிடம் சலுகைகள் பெறுவது மட்டுமல்ல, எங்களைப் பொம்மைகள்போல் ஆட்டி வைக்க முடியுமென்று யாராவது கருதினால், அரசு அவர் களைச் சட்டத்தின் மூலமாக, சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க சந்திக்க கிஞ்சித்தும் தயங்காது என்பதை நான் எங்களுடைய கொள்கையாக இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறோம் மக்களுக்கு. சிறுபான்மையினர் பெருபான்மையினரை அடக்கிவிடக்கூடாது; அச்சுறுத்தி கீழ்படியச் செய்யக்கூடாது. அதுபோன்ற பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைப் பாது காத்து, அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இந்த இரண்டையும் நாங்கள் செய்வோம் என்று சொல்லியிருக்கிறோம். அதிலே, அதைச் செய்வதைத் தடுப் போம், இதை ஆதரிப்போம். சிறுபான்மையினர் பெரும்பான்மை யினரை அச்சுறுத்தி, பயமுறுத்தி, நாங்கள் இப்படியெல்லாம் செய்து விடுவோம், அப்படியெல்லாம் செய்துவிடுவோமென்று சொல்லி பொதுமக்களுடைய வாழ்க்கையை முன்னால் வைத்து, அவர்களுக்குச் சிக்கல் வந்து விடுமோ, தொல்லை வந்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாகத் தங்களை வாழ வைத்துக்கொள்ளலாமென்றும் வளர்த்துக்கொள்ளலாமென்றும் நினைத்தார்களானால் தமிழக அரசு ஒருபோதும் விட்டுக் கொடுக்காது. அதிலே நாங்கள் அண்ணா வழியிலே நின்று, அற வழியிலே சந்திப்போமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிலர் சில சமயங்களிலே நான் பேசுவதையெல்லாம் புரிந்து கொண்டு, புரியாததுபோல் பேசுகிறார்களா அல்லது உண்மை யிலேயே அவர்களுக்குப் புரியவில்லையா என்பது தெரியவில்லை. நான் முன்பு சொன்னேன். அதாவது போராட்டத்தின் மூலம் இந்த அரசு செய்கின்ற காரியங்களைத் தடுப்பது என்று இருந்தால்,

மக்களே பார்த்துக் கொள்வார்கள், மக்களே பதில் சொல்வார்கள் என்று சொன்னேன். உடனே எங்கள் தொண்டர்கள் அடித்தது போலவும். 'இவர்கள் தானா' மக்கள் என்று கேட்டதாகவும் பத்திரிகையில் படித்தேன். நான் திரும்பவும் சொல்கிறேன். என்றாவது ஒரு நாள் பஸ்ஸிலே போகின்ற மக்கள் கல்லெறி பட்டு, துன்பப்படுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சில சமயங்களில் இளைஞர்கள், வாலிபர்கள் அதிலே போகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் இறங்கி திரும்பினால், அவர்கள் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதையும் விவாதித்து, புள்ளி விவரத்தை எடுத்து வைத்து, நாட்டின் வளத்தைப் புரிந்து, வருமானத்தை அறிந்து, இதற்கெல்லாம் செலவிடுகிறார்கள், இதைச் செய்ய முடியுமா?; இதைச் செய்ய வேண்டுமென்று கேட்பவர்கள் நமது ஆட்கள்தானே, இங்கே வந்து நம்மையும் கேட்கச் சொல்லுகிறார்களே, இது நியாயமா; இதை ஏன் முன்பே நம்மிடம் சொல்லிக் கேட்டிருக்கக்கூடாது; நமக்கு வாங்கித் தந்திருக்கக் கூடாதா—இதையெல்லாம் சிந்திக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறவர்கள் வன்முறையில் இறங்குவதன் மூலம் இந்த ஆட்சியையோ அல்லது சட்டத்தையோ அல்லது ஒழுங்கையோ குலைக்க முடியும், நிலைகுலைக்கச் செய்ய முடியுமென்று நம்பினால், நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். ஆட்சியில் இருக்கிறேன் என்ற மமதையில் அல்ல, கடமையாற்ற துணிந்து வந்திருக்கிறேன் என்ற உரிமையோடு, பொறுப்போடு சொல்ல விரும்புகிறேன், வன்முறையை எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசு அனுமதிக்காது. வன்முறை செய்பவர்கள் எங்கள் வீட்டுப் பிள்ளைகளாக இருந்தாலும், அவர்கள் சட்டம் என்ன தீர்ப்பு வழங்குகிறதோ அதற்கு ஆளாக வேண்டியவர்களாவார்கள் என்பதை மாத்திரம் இங்கே கொள்கை என்ற அடிப்படையிலே வெளியிட விரும்புகிறேன். இவைகளைத் திருத்திப் போடாமல்—இங்கே எழுதியிருப்பார்கள், அதை வாங்கி பத்திரிகை நண்பர்கள் அப்படியே வெளியிட வேண்டுமென்று பணிவன்போடு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். சிவப்புக் கல்லைக் காண்பித்து, 9 நிறம் இதிலே தெரிகிறது, இப்படிப்பட்ட கற்கள் இருக்கின்றன, இவைகளையெல்லாம் நாம் வெட்டி எடுத்து வெளிநாட்டிற்கு அனுப்பினால், வரிபோடாமலேயே இந்த நாட்டை நடத்தும் அளவுக்குப் பணம் வருமென்று சொன்னார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர் தங்கள்கட்சி ஆட்சியில்இருந்தபோது ஏன் இதைச் சொல்லவில்லை என்பது புரியவில்லை. இப்போதுதான் யாராவது அவருக்கு அதைப்பற்றிச் சொல்லியிருப்பார்கள்; அல்லது அந்தக் கல்லை அன்பளிப்பாகத் தந்திருப்பார்கள்; அதை நண்பர் சொல்லியிருக்கலாம். அதைப் பிறகு தெரிந்து சொன்னதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். இந்த வாய்ப்பை அவர் கட்சிக்குச் சொல்லு

முடியாத நிலைமை இருந்ததை எண்ணி வேதனைப்படுகிறேன். இவையெல்லாம் நல்ல யோசனைகள். இதைச் செய்வதில் கஷ்டமில்லை. வெட்டி எடுத்து நல்ல கற்களை வெளியில் விற்று, அதனால் வருமானம் வந்து, தமிழகத்திற்கு 500 கோடி ரூபாய் வருகிறதென்றால் சாதாரணமானதல்ல. 5 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு, 50 கோடி ரூபாய் கடன் வாங்கி நாம் வளத்தைக் கிராமங்களில் உண்டாக்க முடியுமென்று நம்ப முடியுமானால், 500 கோடி ரூபாய்க்கு அப்படிப்பட்ட கற்கள் நிச்சயமாகக் கிடைக்குமென்றால், 500 கோடியோடு அது நிற்காது. எந்த அளவுக்கு தொழிலை விருத்தி செய்கிறோமோ அதற்கேற்ப ஆயிரம் கோடிக் கணக்கில் கிடைக்கும் அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் என்னுடைய துரதிருஷ்டம் என்று சொல்லுவேன். நான் அந்தக் கட்சியிலே இருக்கும்போது, இப்படிக் கொடுக்கக் கூடிய நண்பர்கள் அவருக்கும் கிடைக்கவில்லை, எனக்கும் கிடைக்கவில்லை. இப்போது அவருக்கு நல்ல நண்பர்கள் கிடைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நண்பர்கள் கிடைத்த பிறகு, அவர்கள் சொல்வதாலே ஆட்சேபணையில்லை, தலைவருக்குக் கொடுக்கலாமா என்று கேட்டார்கள். கேட்டால் கொடுப்பேன் என்று சொன்னார்கள். எல்லோரும் வாய்ப்பும், வசதியும் பெற்று, இந்த நாட்டிலே மக்கள் வாழ வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. பிறருக்கு கொடுக்கும் அளவுக்கு வாழ்க்கை வசதிகளைப் பெற்றால், அதைவிட வேறு வளம் நாட்டிலே இருக்க முடியாது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட வாழ்க்கை எல்லோருக்கும் அமைய வேண்டும்.

(பிற்பகல் 6-50)

தொழிற் கொள்கையில், பெரிய தொழில்களை உருவாக்கவே கூடாது என்பது எங்களுடைய கொள்கையல்ல. தனியார் தொழில்கள் என்ற வகையில் பல தொழில்களை ஏற்படுத்த யார் முன் வந்தாலும், அவர்களுக்கு வேண்டிய உதவியை நாங்கள் செய்வோம். ஆனால் அனந்தசாமி போன்றவர்கள் வருவார்களேயானால், இந்த அரசு சிந்தித்துத்தான் முடிவு செய்யும். அவசரப்பட்டு அவருக்குப் பணம் கொடுத்துவிட்டு, அவரைக் கூண்டிலே ஏற்றி, கைதியாக்கி சிறையிலே தள்ள வேண்டிய அளவுக்கு நாங்கள் நிச்சயமாக ஆளாகமாட்டோம் என்பதை உறுதியாக இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அத்தோடு, இந்தப் பொதுத்துறையைப்பற்றி ஒரே ஒரு சிறு விளக்கம் மட்டும் சொல்லி, நேரம் இல்லாத காரணத்தால், என்னுடைய பேச்சை முடிக்கலாம் என்று கருதுகிறேன். சிறு தொழில்கள் என்று சொல்லும்போது, தனியார் துறையினுடைய அறிவாற்றல், அவர்களது அனுபவம் ஆகியவைகள் தமிழகத்திற்குக் கிடைத்தாக வேண்டும். எந்தத் துறையிலும் அனுபவம் பெற்று நல்ல திறமைசாலிகள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் நாம் பயன்படுத்திக்கொள்ள

வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுடைய யோசனைகளைச் சொல்லலாம். நாங்கள் நிச்சயமாக மதிப்புக் கொடுத்து அவர்களை வரவேற்போம். அதே நேரத்தில் பொதுத் துறையினால் நிச்சயமாக சர்க்காருக்கோ, மற்றவர்களுக்கோ பயன் இல்லையென்று கருதினால், தனியார் துறையைப்பற்றி இந்த அரசு சிந்திக்காமல் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுத் துறையை மாற்றியமைத்தால்தான், அல்லது தனியார் துறையை உருவாக்கினால்தான் தமிழக மக்கள் நிம்மதியாக வாழ முடியுமென்ற நிலைமையை உருவாக்குவார்களேயானால், இந்த அரசு அந்த எல்லைக் கோட்டையும் சந்திக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மக்களுக்காகத்தான் அரசே தவிர, மக்கள் வாழ்வதற்காகத்தான் கொள்கையைச் சொல்லுகிறோமே தவிர, கொள்கையை வகுத்துவிட்டு, மக்கள் செத்தாலும் பரவாயில்லை, அந்தக் கொள்கையின்படிதான் நடப்போம் என்று சொல்வது சரியா என்று சிந்திக்க வேண்டும். சுதந்திரத்திற்காகச் செத்தாலும் பரவாயில்லை. இந்த நாடு விடுதலை அடைவதற்காக குடும்பமே அழிந்தாலும் பரவாயில்லை. ஒரு சமுதாயம் அமுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சமுதாயம் விடுதலை பெறுவதற்காகச் செத்தாலும் பரவாயில்லை என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்கும். நான் செத்தாலும் பரவாயில்லை என்பதற்குப் பதிலாக, மக்கள் செத்தாலும் பரவாயில்லை, என் கொள்கையை விடமாட்டேன் என்று சொல்லி பதவியிலேயே இருந்து, தனி மரமாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொன்னால், அதை இந்த அரசு ஏற்காது. மக்களுடைய நல்வாழ்வைப் பிரதிபலிப்பதாகத்தான் அரசினுடைய கொள்கை அமைய வேண்டும். மக்கள் என்று சொல்லும்போது, சிறு தொழில்களைச் செய்கின்றவர்கள், தொழிலாளர்கள், வேறு பணியைச் செய்துகொண்டிருக்கிறவர்கள், அலுவலகத்திலே இருப்பவர்களை மட்டும் கணக்கிலே எடுத்துக்கொள்ள முடியாது. இங்கே பணிவன்போடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் கூட அதைச் சொன்னார்கள். சங்கங்கள் இல்லாதவர்களுக்கும் நாங்கள் பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறோம் என்ற குறிக்கோள்களைச் சொல்லியிருக்கிறோம். உதாரணமாக, மூட்டை சுமக்கும் தொழிலாளர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்காக சங்கத்தை உருவாக்க இரண்டாண்டுகளாக முயன்று அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சங்கமே இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் கூட சொன்னார்கள். 3 மாதங்கள் வேலையைச் செய்துவிட்டு, பிறகு) மாதங்களுக்கு மண் வெட்டி, கூடை ஆகியவைகளை வைத்துக்கொண்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று

வேதனையோடு சொன்னார் அவர். அவர்களுடைய சங்கம் என்று ஒன்று தோன்றிவிட்டால், அந்தச் சங்கத்தில் அவர்கள் உறுப்பினராக ஆகிவிட்டு, அவர்களும் தங்களுக்கு இவைகள் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துக் கேள்விகளை எழுப்பினால், இந்தச் சமுதாயமும், இந்த அரசும் பதில் சொல்ல வேண்டுமென்று, போராட்டம், போராட்டம் என்று சங்கங்களை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் சொல்லுவதைப் போல, அந்தக் கோடிக்கணக்கான மக்களும், அந்த உழைக்கும் தொழிலாளர்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் அவர்களும் போராட்டத்தை ஆரம்பித்தால், நாமெல்லாம் நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு இவ்வளவு நேரம் பேசுவதற்கு விடவேமாட்டார்கள். அப்படி விட்டாலும் வெளியே நாம் வரமுடியுமா என்பது சந்தேகம். முன்பெல்லாம்கூட சுதந்திரப் போராட்டக் காலத்திலே வ.உ.சி. போராடும் போது நாவிதர்கள் ஒத்துழைக்கவில்லை. சலவைத் தொழிலாளர்கள் ஒத்துழைக்கவில்லை. ஆகவே இப்படிப் பட்ட உழைக்கும் கரங்கள் போராட்டம் என்று நடத்த முன்வந்தால், இந்த நாடு நிச்சயமாக அதைத் தாங்காது. அந்த நிலைமை ஏற்படுவதற்கு முன் அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்தாக வேண்டும் என்பகற்காக எடுக்கப்படும் முன்முயற்சிதான் இந்தக் கொள்கை விளக்கம், இந்தத் திட்டம் என்று சொல்லி, நிறைய புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டுமென்று கொண்டு வந்திருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தாலும், அவைகள் எல்லோருக்கும் தெரியும் என்ற நம்பிக்கையிருப்பதாலும், அதைப்பற்றிச் சொல்லாமல், பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் எதையோ கேட்க விரும்புகிறார் என்பதால், நிச்சயமாக ஏதாவது ஒரு தொழிற்சாலையை அவருடைய மாவட்டத்தில் ஏற்படுத்த ஒத்துழைப்போம் என்பதையும் சொல்லி, அதே போல் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த உத்திரவாதத்தைத் தந்து இந்த அளவுக்கு என் பேச்சைப் பொறுமையோடு கேட்டவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களை வேண்டி, தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத்தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு சில தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் கொள்கைகளை அறிவித்தபோது, குறுக்கிட்டுப் பேசவேண்டாமென்று இருந்தேன். தவறு செய்தவர்கள் மீது வழக்குப் போடப் போவதாகத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை நிச்சயமாக நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிரானைட்டைப் பற்றிச் சொல்லும்போது, சிறுதொழில் செய்யலாமா என்று நான் கேட்டதைப்போல் நினைத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். தானே கையெழுத்துப் போட்டதாகவும் சொன்னார்கள். அவர் கையெழுத்துப் போடலாமா என்று நான் கேட்கவில்லை. நான் குறிப்பிட்டதெல்லாம், அதிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளித்தாலே போதுமானது. .அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

நூறு கோடி ரூபாய் செலவில் ஆலை எப்போது வருமென்று கேட்டதற்கு, முதலமைச்சர் இந்த ஆண்டிலே வந்துவிடுமா என்று நான் கேட்டதாக நினைத்துக்கொண்டு, பதில் சொன்னார்கள். நூறு கோடி ரூபாய் செலவில் காகித ஆலையை ஏற்படுத்த ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏதாவது இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இந்த ஆண்டு திட்டத்தை அறிவித்துவிட்டு, 12 மாதங்களில் பொருள்களைக் கொடுக்க முடியுமா என்று கேட்க நாங்கள் நிச்சயமாக விவரம் தெரியாதவர்கள் அல்ல. ரூபாய் 100 கோடித் திட்டம் என்று சொல்லும்போது, அந்தத் திட்டத்திற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காவது இந்த ஆண்டு பணம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று கேட்டேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> ; சுருக்கமாக விளக்கம் கேட்டால் பதில் சொல்வதற்குச் சுலபமாக இருக்கும்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> நான் மோதிரக் கல்லைக் கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிட்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டு, அதற்குரிய பதிலையும் அவரே சொன்னார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> முடிந்த விவாதத்தைப்பற்றி என்ன கேட்க விரும்புகிறீர்கள் ?

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன் தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன் என்று.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> இது தன்னிலை விளக்கமேயில்லை.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> அந்தக் கல்லைக் கொடுத்த கள் சமீப காலத்திலே கொடுத்த காரணத்தினால்தான் வைத்து கொடுத்தேன். இது என்னோடு நின்றுவிடக் கூடாது

என்ற எண்ணத்தில்தான் உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் கொடுக்காதது என்னுடைய குற்றமல்ல என்பதைத் .தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மேலவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் என்னால் சொல்ல முடியவில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் அவர்கள் இவ்வளவு தூரம் பேசினார்கள் என்று நினைக்கிறேன். ஒரு தொழிலை ஆரம்பிப்பது என்றால், ஆரம்பித்த ஆண்டிலிருந்து ஒரு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகும் அது முடிய. அவர் சொன்னது குறிப்பேட்டில் இருக்கும். சிறு தொழில்கள் என்ற வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொன்னார் என்பதைக் .குறிப்பேட்டில் பார்த்தால் தெரியும்.

என்னிடம் லைசென்ஸ் வேண்டுமென்று வந்தார்கள். நான் விட்டுக்கொடுப்பேன் என்ற எண்ணத்தில் அவர் வந்தார். வந்தவர் யாரென்று சொல்லக் கூடாது. நியாயமில்லை. யாரோடு வந்தார் என்றும் சொல்ல விரும்பவில்லை. வந்தவரிடம் வெளிப்படையாகவே. " உங்களுக்கு இதில் என்னய்யா கிடைக்கப் போகிறது " என்று கேட்டேன். கோடிக் கணக்கான ரூபாய் கிடைக்குமென்று சொன்னார். " எப்படிக் கிடைக்கும் " என்று கேட்டேன். "வெட்டுவது கொஞ்சம்தானே, ஆனால் அதை விற்பதன் மூலம் அதிகமான தொகை கிடைக்கும். ஒரு இலட்சம் செலவு செய்தால், அதன் விளைவாக ஒரு கோடி கிடைக்கும் " என்று சொன்னார்கள். அதனால் தான் உடனே இலாக்கா அதிகாரிகளை அழைத்து இதை அனுமதிப்பதற்கில்லை என்று நான் சொன்னேன். இந்தச் சலுகையைக் காட்டாததால், அவர்களுக்கு என்மீது கோபம் இருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. புரியாதவர்கள் என்று நான் யாரையும் சொல்லவில்லை. அப்படி நினைக்கவுமில்லை. அதைத்தான் 15 நிமிடங்களுக்கு மேல் விளக்கிச் சொன்னேன்.

மேலவையில் உள்ளவர்கள் எப்படிப்பட்ட யோசனையைச் சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்திருக்கிறேன். அமரர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டு அதை விளக்கினேன். இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கருப்புக் கற்களை எங்கே அனுப்புகிறார்கள் என்று அவர் சொல்லவில்லை என்றாலும், நான் சொல்ல வேண்டும். ஜப்பானிலிருந்து வந்து இதை வாங்குகிறார்கள். அவர்கள் அதை ஒழுங்கு

படுத்தி பல நாடுகளுக்கு விற்கிறார்கள். அவர்கள் அதில் கோடிக்கணக்கான டாலர்கள் சம்பாதிக்கிறார்கள். இங்கே எடுக்கப்படுகிற கற்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இறுதித் துணை மதிப்பீடுகளின் பேரில் நடைபெறும் விவாதம் முடிவடைகிற வரையில் அவைக் கூட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அந்த அளவில் அவர்கள் அதை ரா-மெட்டீரியல் என்பதாக வாங்க விரும்புகிறார்கள். நாமே அதைப் பக்குவப்படுத்திக் கொடுத்தால், அவர்களுக்கு வேலை போய்விடும். அவர்களோ அவற்றை ஒழுங்கு படுத்த விரும்புகிறார்கள். நாம் அந்தத் தொழிலை இங்கேயே செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். அதைப் பேராசை என்று சொன்னாலும் சொல்லலாம். அந்தத் தொழிலை இங்கே ஆரம்பிக்க என்ன நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து, இங்கேயே தயாரித்து விற்றால், அவற்றில் நான்கு அல்லது ஐந்து மடங்கு விலைக்குப் போகும். காலையில் உறுப்பினர் அவர்கள் சில கற்களை என்னிடம் கொடுத்தார்கள், அதற்கு நன்றி சொல்ல மறந்துவிட்டேன், அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கற்களை இலாக்காவிடம் கொடுத்து பரிசீலனை செய்து என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவு எடுக்கப்படும். இப்போது எந்த எண்ணத்தோடு சொல்கிறேன் என்று புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பி அமைகிறேன்.

(பிற்பகல் 7-00)

5. 1977-78 ஆம் ஆண்டு இறுதித் துணை விவர அறிக்கை, 1970-71 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது மணி ஏழு. உறுப்பினர்களெல்லாம் சுருக்கமாகத் தங்களது கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இல்லை, நாங்கள் நீண்ட நெடு நேரம் பேசுவோம் என்று ஒவ்வொருவரும் சொல்வார்களானால், நள்ளிரவு வரையில் தங்களுடன் ஒத்துழைக்கத் தயாராக ...றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

...DMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Deputy ... though I would like to speak in detail, since we have been ...quested to curtail our speeches, I would like to be brief. The ...ant to make is that I find under the budget for Education,

there is no mention of grant to orphanages. There is a column where 'Welfare of Harijans' is mentioned. There is another item mentioned as "Welfare of Women and Children". But the orphans have always been receiving step-motherly treatment, because the Orphanages come under the Education Department. I hope you would agree with me that the grant to the Orphanages was extended by the then British Government who thought that orphans belonged to the days of Oliver Twsit who needed very little food and no subsistence. The orphanages were given a grant at Rs. 3 per orphan in 1930's and it was very slowly at snail's speed increased to Rs. 6, then to Rs. 8 then to Rs. 10 and then to Rs. 12. Now we get Rs. 14. Just for the sake of economics, I would like to bring to the notice of our Hon. Finance Minister that there are about a dozen private Certified Schools catering to 3,000 children. Nearly Rs. 12 lakhs is given to 3,000 children belonging to a dozen certified schools for which the Home Department makes the provision. But the 390 institutions which look after 60,000 children get hardly a grant of Rs. 10 lakhs. In India all concerned are thinking of celebrating the International Children's Year in 1979 and the provision and planning for that is going to take place during 1978. I would like to state that there should not be any differentiation between one child and another. As prevention is better than cure, I hope that under our dynamic Finance Minister, a provision would be made where all children would be treated alike.

Thank you.

THIRU G. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, since you have reminded me regarding the time-factor, I want to finish as early as possible. Since I feel that I will be brief in English, I want to speak in English for a few minutes.

Sir, the first point which I want to mention is that the Excess Expenditure for 1970-71 is being ratified in 1978-79. The Excess Expenditure was incurred in 1970-71, the Public Accounts Committee took up the matter in 1974-75 and the Legislature is being asked to ratify it in 1978-79. Some items of ... expenditure may be routine ones, some items may not ha... ...ne ones and the Public Accounts Committee migh... ...lt with some items of expenditure. Whatever it... ...erstand why such a long time of nearly 7 or 8 y... ...n for this ratification. I would only suggest t... ...inance Minister that any kind of excess expendi... ...n up by the Public Accounts Committee and al... ...Legis-

lature as quickly as possible, instead of 7 or 8 years being taken, because the findings of the Public Accounts Committee may not be very relevant after a period of time.

Secondly, I strongly oppose the Central levy on the State Electricity Board. Here, I wish to say that the Central levy has been imposed on the State Electricity Board because the Government of India have felt that the State Electricity Board is not getting enough amount, especially from the consumers. They wanted the State Governments to see that the State Electricity Boards were run on viable lines and also to have a tariff commensurate with the administration of the State Electricity Boards. The object of levy was that the money should be collected from the agriculturists. But from the speech of the Hon. the Minister for Electricity, I find that the Government have found it fit not to impose any levy on the agriculturists, for which I am thankful. But, the Government have to make the State Electricity Board somewhat viable because otherwise, the Government's money will get locked up. The State Electricity Board has become a white elephant. I would only wish to state that some measures of economy should be taken in respect of the State Electricity Board. Because the Hon. the Minister for Electricity is here, I wish to bring this to his knowledge. If the Electricity Board does not find itself in a profitable position, then it will have to levy excess tariff on the consumers. The very fact that the Government of India have imposed the levy shows that they want more tariff to be levied mainly on agriculturists.

Whatever it is, there is a lot of scope, according to me, to see that the State Electricity Board is run economically. Four or five years ago, when our former Chief Secretary Thiru P. Sabhanayagam was the Chairman of the Electricity Board, he submitted a paper to the Government stating that there were about 15,000 employees in the Electricity Board over and above the requirements. I would only request the Hon. Minister to see that economy measures are taken by the Board so that the tariff levied on the people may be as low as possible.

The third point is regarding the recent National Development Council meeting held this month at Delhi and which was attended by the Hon. the Chief Minister and by the Hon. the Finance Minister. Sir, I fully concur with the points expressed by the

Hon. the Chief Minister in the National Development Council meeting. Discussion is very much necessary before the National Development Council decides about plan requirements. It is a very important matter in which our State is also involved. There is no point in thrusting a particular Plan on the States. It has been happening in the past when the Chief Ministers in the States agreed to whatever was stated in the National Development Council. Now the Chief Ministers of the States have started to make their view-points known at the N.D.C. meeting just as we, Members in this House, have started to speak and clamour for various things. The Chief Ministers of West Bengal, Maharashtra and Kerala have been vocal in their protest. Our Hon. Chief Minister was sober and he has welcomed the rolling plan. I only wish to state that the rolling plan is very good and such a rolling plan is observed in industries. The rolling plan would mean that we take stock of the situation and then we formulate a plan for a concern for a period of 12 months. Formerly what they were doing was that though it was also an annual plan, the achievements were analysed after the end of the year and by the time they were talked about, there would be no possibility to rectify the mistake found. Only to avoid such a contingency, rolling plan is observed in industries. According to me, the Hon. the Chief Minister has rightly welcomed the rolling plan and I also welcome the rolling plan of the Government of India.

Another point stressed by the Hon. the Chief Minister is regarding the achievement of the financial commitment. It is not sufficient to achieve financial commitment but it is necessary that it should be for the good of the people and larger financial allocations have been requested by the Hon. the Chief Minister for doing good to the people.

I only wish to point out one thing. Our Hon. Chief Minister has made many important points on behalf of this State regarding this matter. What has transpired at the N.D.C. meeting may be placed as a White Paper on the table of this House so that we may be able to know the points of view and the line of thinking of the Government on this matter. Previously when the then Hon. Chief Minister Dr. Karunanidhi returned after attending the N.D.C. meeting, my hon. Friend Thiru Damodaran and I requested him to place the facts before the Council and to place White Paper on the table of the House. Of course, he did not place any White Paper

[Thiru G. Swaminathan] /1978 மார்ச் 27

but the Hon. the then Chief Minister gave us a brief summary of what had happened at the N.D.C. meeting. Our Hon. Chief Minister and Hon. Finance Minister have gone there to Delhi to attend the N.D.C. meeting, when the Legislature is in session. I hope the Hon. the Finance Minister will take the opportunity of giving us information about the N.D.C. meeting when he will be replying to the discussion on the Supplementary Budget so that we may know the view points of the Government.

Another point I wish to mention is in regard to plan policy. The N.D.C. has talked about various matters. But my only feeling is that the policy frame of the Sixth Plan is not being properly considered. The States are not very clear about the policy framework of the whole planning and every State has got its own view. Even in the matter of agricultural land reform, urban land ceiling, increase of income and its distribution, fiscal and monetary policies, every State Government has got its own view. Unless the State Governments and the Central Government have got an all-India policy frame, as it has been stressed by Thiru Gadgil then, merely having an objective and merely trying to achieve a target, will not serve any purpose.

(முற்பகல் 7.10)

Another point I wish to mention here is that the plan funds, as it has been advocated in the N.D.C. meeting, should be allotted not by the Planning Forum but by the Finance Commission. The Finance Commission has already started its work. There is no point in a part of the funds being given by the Planning Commission and a part of the funds being given by the Finance Commission. We do not know where we stand till the Seventh Finance Commission gives its report. I will recommend to the Government and request the Hon. the Chief Minister and the Hon. the Finance Minister to impress at the next meeting of the National Development Council—I do not know when it will be held; perhaps it may be at the end of the year—on the Government of India that the total funds that will devolve to the State should be given through a statutory body. I feel that the allocation of Plan funds should also be taken up by the Finance Commission.

Sir, much has been talked about the various powers of the State. Naturally, in such a meeting, the powers of the State have to be talked about. The Hon. the Chief Minister was supposed to attend a meeting which was conducted mainly by the Chief Minister of West

1978 மார்ச் 27/ [Thiru G. Swaminathan]

Bengal who is very vociferous on this point. I only wish that the Government should stress two points. The first point is about the fiscal powers that are very necessary for the State. I think that even the Centre-State Relations Committee which was set up by the Government has considered this. I feel that the Hanumanthaiya Committee also has spent a lot of its energy on the subject of fiscal powers. I hope that the Government will take it up appropriately both at the meeting of the National Development Council and at the meeting of Chief Ministers. Secondly, regarding State Plans, we have got a State Planning Commission here and there is no point in the Government of India giving various Plans to our State making the whole concept of our Planning Commission infructuous. Therefore, the total allotment of funds to the State may be done in a complete manner, so that through our State Planning Commission, we may be able to do whatever we may feel necessary, within the funds that may be available. Of course, they are not going to oblige us; but a point can be made by our Hon. the Chief Minister on this.

Sir, finally, I want to mention one more point regarding the Steel Rolling Mills in Tamil Nadu. I have made mention about this in the morning also during the discussion on the Policy Note on Industries, when the Hon. the Chief Minister was present here. I wish to point out that out of the 62 Steel Rolling Mills in Tamil Nadu, 32 Mills have already been closed down. It is said that there is sales tax here on the re-rolled products, that the Governments of Karnataka and Andhra Pradesh have waived it and that because of that the products are coming to Tamil Nadu from there. I would only request the Hon. the Finance Minister to look into this point because this is an industry where 10,000 people are employed and capital of about Rs. 10 crores has been employed.

Thank you.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
இந்த விவாதத்தைத் துவக்கி வைக்கும்போதே, விரைவில்
முடிக்க வேண்டும். அதற்கான பதிலுரையை விரைவில் அற்ற
வேண்டும் என்ற உணர்வை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
உணர்த்தியிருக்கிற காரணத்தால், என்னுடைய எண்ணத்தை
வேகமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இன்றைக்கு மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தினுடைய மின்சார உற்பத்திக்குக் கூடுதலான வரி விதித்து அதன் மூலம் தன்னுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய கெட்டிக்காரத்தனத்தின் காரணமாக விவசாயிகள் தலையில் மறைமுகமாக கையை வைத்திருக்கிறார்கள். ஒன்றை நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து மின்சாரத்திற்கு வரி வசூல் செய்கிறார்கள். மின்சாரத்திற்காக விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்யும் போது, இத்தனை யூனிட்டுக்கு என்று போடுகிறார்களே தவிர ஒரு யூனிட் மின்சாரத்திற்கு இத்தனை பைசா கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்று போடுவதில்லை. இன்றைக்கும் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில், சிறு விவசாயிகள் பெரு விவசாயிகள் என்று பிரிக்கப்படவில்லை. நிதியமைச்சர் அவர்கள் இதில் ஏமாந்துவிடமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். ஏற்கெனவே அவர் கெட்டிக்காரத்தனமாக ஊராட்சி மன்றங்களில் தலையிட்டு, அதில் கை வைத்திருக்கிறார்கள். தன்னுடைய இலாக்காவுக்கு வருவாய் அதிகமாக வரவேண்டும் என்று பிற இலாக்காக்களில் நுழைந்து பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நவம்பர் டிசம்பர் மாதங்களில் ஏராளமாக தமிழ் நாட்டில் மழை பெய்கிறது. அப்போது தமிழ் நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகள் தங்கள் பம்புசெட்டுகளைப் பயன்படுத்துவதே இல்லை. மின் உபயோகத்தைப் பொறுத்த வரையில், மினிமம் ரேட் தான் வரும். அந்த அளவுக்குத் தான் நிலைமை இருக்கிறது. ஆனாலும் எல்லோருக்கும் 40, 50 ரூபாய் என்ற அளவுக்கு பில் போட்டு அனுப்பிவிடுகிறார்கள். என்னுடைய பேரூராட்சி மன்றத்தில் பெருமழை காரணமாக அங்கே இருந்த மின்சார பம்புசெட்டுகள் மேலே தூக்கி வைக்கப்பட்டிருந்தன. இருந்தாலும் மாதத்திற்கு 50 ரூபாய் என்று விவசாயிகளுக்குப் போடப்பட்டிருக்கிறது. கேட்டால் ரீடிங் எடுப்பவர் ஒருவர், அக்கவுண்ட்ஸ் வைத்திருப்பவர் ஒருவர், வசூல் செய்பவர் ஒருவர் என்று சொல்கிறார்கள். இதில் பாதிக்கப்படுபவர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதில் மிக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போராட்டம் வரும் என்றார்கள். போராட்டம் என்றதுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக வேகமாகப் பேசினார்கள். போராட்டம் வரக்கூடாது என்ற எண்ணம் இருக்குமானால், டிபார்ட்மெண்டில் ஒரு கிளாரிட்டி இருக்க

வேண்டும். வருவாய் வர வேண்டும் என்பதற்காக விவசாயிகளிடம் அதிகமான தொகை வசூலிப்பது குற்றம். விவசாயிகளை ஏமாற்றிப் பணம் வாங்குவது என்பது மிகப் பெரிய குற்றம். இந்த மாதிரியான நிலைமை இனியாவது இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒன்றை எதிர் பார்க்கிறேன். 15 ஆண்டுகளாக நீங்கள் பாராளுமன்ற அனுபவம் உள்ளவர்கள். நீங்கள் நிதியமைச்சராக இருக்கிறீர் கள் இன்றையதினம். அதிலே எனக்குப் பெரிய பெருமை உண்டு. நான் உங்களுடைய கம்பீரமான அற்புதமான தமிழ் மொழிப் பேச்சிலும் ஆங்கில மொழி அறிவிலும் ஒரு காலத்தில் லயித்திருந்தவன். இன்றைக்கும் லயித்திருப்பவன். அன்றைக்கு உறுப்பினர்களுக்காக வாதாடுகிற எண்ணம் உங்களுக்கு இருந்தது. இன்றைக்கு நீங்கள் அமைச்சராக மாறியிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக வாதாடும் நிலைமையில். அவர்களுக்காக அவர்களுடைய உரிமையைக் கொடுக்கும் நிலையில் நீங்கள் இல்லை. உறுப்பினர்களுக்கான வசதிகள் இன்றையதினம் இல்லை. தமிழ் நாடு சட்டமன்றத் தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. நான் குழுக் கூட்டத் திற்காகப் பலமுறை டெல்லி வந்திருக்கிறேன். அங்கே பாராளுமன்றத்தில் உள்ள மைய மண்டபத்தைப் பார்த்திருக் கிறேன். நீங்கள் அங்கேயுள்ள மத்திய அமைச்சர்களோடு கைகுலுக்கி, சரளமாகப் பேசுவதை அமைச்சர்களோடு இணைந்து செயல்படுவதை, அமைச்சர்களுக்கு ஆலோசனை சொல்வதை எல்லாம் நான் அப்போது பார்த்திருக்கிறேன். இன்றைக்கு அமைச்சர்களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையே ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பாக மேலவை நடத்தப்படுகிற முறை இருக்கிறதே அது—மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அனுமதியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.—''Our House is being treated in a step-motherly way''. இதை யாரும் புறக்கணிக்க முடியாது. இன்றைக்கும் காலையில் சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவர் அறைக்கு முன்னால் எங்களைப் பார்ப்பதற்கு வந்த பார்வையாளர்கள் காவலர்களால் விரட்டப்பட்டிருக்கிறார்கள். பார்வையாளர் களுக்கு பாஸ் வாங்கித்தர வேண்டும் என்றாலும், நாங்கள் வருவதற்குள் அவர்கள் போலீஸ்காரர்களால் விரட்டி அடிக்கப் படுகிறார்கள். இந்த மேலவையில் 10, 40 பேர்கள் உட்கார வேண்டியிருக்கிறது.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதையெல்லாம் என்னுடைய கவனத் திற்கே கொண்டு வந்திருக்கலாமே.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த மேலவையில் போதுமான இடமில்லை. மேலவையில் அதிகாரிகள் உட்கார்ந்து கொண்டு பல்வேறு விவாதத்தின்போது எங்கள் பேச்சுக்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக்கொள்வதற்குக்கூட வசதி இல்லை.

(பிற்பகல் 7-20)

ஆகவே மேலவைக்கு இடவசதி செய்து கொடுக்க வேண்டும். என்ன காரணம் இருந்தாலும், உறுப்பினர்களுக்குச் சில பாதுகாப்புகள், உரிமைகள், வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். வசதிதான், சலுகை அல்ல. இந்தச் சட்டமன்றத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். அங்கே எல்லாம் உறுப்பினர்கள் ஜனநாயக கடமைகளை ஆற்றுவதற்கு அவர்கள் சில வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவைகள் கிடைக்கிற பொழுது, தவறுகளுக்கு, குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாமல், உண்மையாக மக்களுக்குக் கடமையாற்ற வாய்ப்புக் கிடைக்கிறது. இவைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் செய்து தரப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை இங்கே உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பகுதிகளுக்குப் போய் வந்த காரணத்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் எல்லாம் தெரியும். அதையெல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் கேட்கிறார்கள் என்று பாராமல் நிரந்தரமாக உறுப்பினர்களுக்குச் செய்து தரவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை அரசு மருத்துவமனைக்கு திடீரென்று விஜயம் செய்தார்கள். அங்கே முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. கக்கன் அவர்கள் தரையில் போடப்பட்டிருந்ததைக் கண்டார்கள். நாளைய தினம் அது சம்பந்தமான கொள்கைக் குறிப்பில் பேசலாம் என்று இருக்கிறேன். அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் என்ற முறையில் சில சலுகைகள் இருக்க வேண்டும். பதவியில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு என்ன வசதிகள் உள்ளதோ பதவி முடிந்த பிறகும் அவைகளை அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

என். ஜி. ஓ. வினர் போராட்டத்தையொட்டி முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். செக்ரட்டேரியட்டில் ஒன்பது அண்டர் செக்கரட்டரி பதவிகள் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த ஒன்பது பதவிகளும் வேறு பல துறைகளில் உள்ளவர்களுக்குத்தான் கிடைத்திருக்கின்றன. நம் சட்டப்பேரவையில் பணி புரிகிறவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. இன்று லோக் சபையில்

அது ஒரு ஆட்டானமஸ்பாடியாக இருக்கிறது. அதற்கும் நிதித் துறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவர்கள் எந்த போஸ்ட் வேண்டுமானாலும் கிரியேட் பண்ணிக் கொள்ளலாம். இங்கே கன்கரன்ஸ், கன்சன்ட், உங்களிடம் பெற வேண்டியிருக்கிறது. அவ்வளவு சுயேச்சையாக இயங்க முடியவில்லை.

அடுத்து, சில அமைச்சர்கள் வெளிநாடு சென்று வந்த குறிப்பைப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் அமைச்சர்கள் வெளிநாடு சென்று வருவதை இப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் மிகப் பெருங்குறையாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திரு. எட்மண்டு அவர்களும் வெளிநாடு சென்று வந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வெளிநாடு செல்லவிருக்கிறார்கள். மேல்நாடு செல்வது என்றால், அறிவை விருத்தி செய்துகொள்ள, புதிய கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்காகத் தான். ஆனாலும் அன்றைய தினம் அதைப் பெரும் குறையாக எதிர்க் கட்சியாக இருந்தபோது சொன்னார்கள். இன்றைக்கு அதற்கான கூடுதல் செலவுக்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். நல்ல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, ஏர் பிரான்ஸ் சங்கத்திலிருந்து சிலர் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்தோம்பலுக்காக ரூ. 2.51 லட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை அவசியம்தானா, சிக்கனம் செய்திருக்கக் கூடாதா, டூரிஸ்ட் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் என்ன பணியாற்றியது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மற்றவைகளை அப்ரோபிரியேஷன் பில்லில் பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவர்களுக்குச் சலுகை என்பதல்ல. வசதிகள் செய்து தரப்பட வேண்டும். பதவிக் காலம் முடிந்த பிறகும், முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் சில வசதிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மேலவை புறக்கணிக்கப்படுகிற நிலைமை உருவாகக் கூடாது. இந்தத் துறைக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்புள்ள காரணத்தால், இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு கோரிக்கைகளுக்கு கேட்டிருக்கிற செலவினங்கள் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிற சூழ்நிலையில் என்னுடைய கருத்தைச் சொல்லி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுகோளை ஏற்று விரைவாக தெளிவான கருத்துக்களை அழுத்தமான முறையில் எடுத்துச்

சொல்லி உறுப்பினர்கள் எல்லாம் அமர்ந்துவிட்ட பிறகு, இந்த அவையின் நேரத்தை நான் அதிகமாக எடுத்துக் கொண்டால், அது ஒருவேளை உரிமை மீறல் ஆகுமோ என்ற அச்சத்தின் காரணமாக எனது பேச்சையும் சுருக்க மாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அமைச்சர் அவர்கள் அதிகமாகப் பேச வேண்டும் என்பதற்காக சுருக்கமாகப் பேசினோம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு இன்றைக்கு மாலை அதிகம் வேலை இல்லை என்று கருது கிறேன். என்னைப் பொறுத்தவரையில், கொஞ்சம் கட்சி வேலை காத்திருப்பதால், அதற்கும் செல்ல வேண்டியிருக்கிறது என்பதால், நான் அப்ரோபிரியேஷன் பில்லில் பேசுகிறபொழுது, மிக விளக்கமாகக் கருத்துகளைத் தெரிவிப்பேன் என்ற உறுதியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே முதன் முதலில் இந்த 1977 - 78 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைப் பற்றிய குறிப்பின் மீது நமது உறுப்பினர் திருமதி கிருஷ்ணமூர்த்தி பேசும்போது, அனாதைகளைப்பற்றி சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டில் எதுவுமே குறிப்பிடப்பட வில்லை என்று தெரிவித்தார். அனாதைகளைப்பற்றி அந்த அம்மையாருக்கு இருக்கின்ற அக்கறை எனக்குத் தெரியும். அவர்கள் எந்த அளவுக்கு சமூகப் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நான் அறியாதவன் அல்ல. அதற்குப் போது மான அளவிற்கு நிதி வசதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வசதி களைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் அம்மையாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி நாதன் சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார். அதில் ஒன்று, 1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானிய கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டார். 1970-71-ம் ஆண்டில் உள்ளதாயிற்றே, இப்போது 1978-ம் ஆண்டிலே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறார்களே இவ்வளவு இடைவெளி எதற்காக, ஏன் ஏற்பட்டது, தேவை தானா என்று கேட்டார். நான் அதற்கு அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிற பதில், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பித்த ஆண்டு 1974 - 75. அதற்குப் பிறகு சட்டமன்றம் கூடவில்லை. 1976 முதல் 1—7—77 வரை உங்களுக்குத் தெரியும், குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தது. ஆகவே புதிய சர்க்கார் பொறுப்பேற்ற பிறகு தான், இந்த மிகைச் செலவு மானியக் கோரிக்கையை

வைக்க முடியுமே தவிர, மற்றபடி இடைப்பட்ட காலத்தில் வைக்க முடியவில்லை என்ற காரணத்தை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு திரு. சுவாமிநாதன் அவர்கள் ரோலிங் மில்லைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 62 இயங்குகின்றன என்றும், 62ல் 32 ரோலிங்கில் இருக்கின்றன, மீதி ரோல் ஆகாமல் அமைதி யாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றி இந்த அரசு ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, அப்படி ரோலிங் மில் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசம் திரு. சுவாமிநாதனுக்கு இருக்குமானால், அதற்கு இந்த ஆட்சி உதவியாக இருக்கும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு திரு. சுவாமிநாதன் ஒன்றைச் சொன்னார்கள். நேஷனல் டெவலப்மெண்டு கவுன்சிலில் என்ன நடந்தது, அதைப்பற்றி வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று சொல்லி, நமது இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படி ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்று கேட்ட தாகவும், அதற்கு அன்றைய முதல்வர் அறிக்கை தாக்கல் செய்யாவிட்டாலும் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையே தொடர்ந்து நானும் செய்வேன் என்ற உறுதியை திரு. சுவாமி நாதன் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு திரு. தங்கப்பாண்டியன் அவர்கள்—என் அருமைத் தம்பியாகக் கருதுகிற திரு. தங்கபாண்டியன் அவர்கள் அவர் கல்லூரியில் படிக்கும்பொழுது என்னை அழைத்துக்கொண்டு போய் அவர் கல்லூரியில் என்னைப் பேச வைத்தது நினைவில் இருக்கிறது— அப்படிப்பட்ட அவர் பேசும்பொழுது இந்த மின் கட்டணத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, நமது பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் எனக்கு மிடையே ஒரு தகராறை உருவாக்குவதற்கு முயற்சி செய்து, முயற்சியில் தோற்றுப்போயிருப்பதைப் பார்த்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "நமது பொதுப் பணித் துறை அமைச்சர் மின்வாரியத்தின் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார், திரு. இராமச்சந்திரன் அவர்கள் விவசாயிகள் விஷயத்தில் நேர்மையாக இருக்கிறார்கள், அனுதாபத்தோடு இருக்கிறார்கள், ஆனால் மத்திய சர்க்கார் இப்போது போட்டிருக்கிற வரியை எதிர்த்து நீங்கள் எல்லாம் பெறவேண்டியதைப் பெறவேண்டும்" என்று திரு. சுவாமிநாதன்

கேட்டார். நான் பணிவன்புடன் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டெல்லியில் போய் அமைச்சர்களைச் சந்தித்துவிட்டு, ஹல்லோ, ஹல்லோ, என்று சொல்லிவிட்டு வருகிற வேலை எனக்கோ முதலமைச்சருக்கோ இல்லை என்பதையும், அழுத்தமாகப் பேசிப் பழக்கப்பட்ட காரணத்தால், அழுத்தமாகப் பேச வேண்டியதைச் சொல்லி, அதே நேரத்தில் உள்ளத்தில் பதிய வைக்கும் அளவுக்குச் சொல்லி, இதைச் செய்யாவிட்டால் நிதி நிலை மிக நெருக்கடியாக மாறும் என்று சுட்டிக்காட்டி லெவியை ரீகன்சிடர் செய்யக் கேட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 7-30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். பெரும்பாலும் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களே இதை எதிர்க்கிறார்கள். கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கின்றார்கள். எல்லா மாநிலத்தவர்களும் எதிர்க்கின்றார்கள். இது கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட முறையிலே இருந்தது என்பதை என்.டி.சி. கூட்டத்தில் கூட பார்த்தேன். நம் மின் துறை மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. ப. இராமச்சந்திரன் அவர்கள்கூட இதைப் பற்றி மறுபரிசீலனை செய்வதாக இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நம் உரிமையை நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். தம்பி தங்கப்பாண்டியன் அவர்கள் அங்கத்தினர்களைக் கொஞ்சம் மரியாதையாக நடத்த வேண்டும் என்றும், எங்களுக்குப் போதுமான அளவுக்கு உரிமைகள் வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் ஒருவரையொருவர் பரஸ்பரம் உணர்ந்தவர்களாகவும், ஒருவரையொருவர் புரிந்தவர்களாகவும், மதிக்கும் மனப்பான்மையைப் பெற்றவர்களாகவும் இருக்கிறோமே தவிர, வேறு அல்ல. இது இரண்டாவது சேம்பர், இதற்கு மரியாதையே இல்லை, பேரவைதான் மதிக்கப்படுகிறது. அங்குள்ள அங்கத்தினர்கள்தான் மரியாதைக்குரியவர்களாக கருதப்படுகிறார்கள் என்ற கருத்துச் சொல்லப்படுகிறது. அந்த மாதிரியான கருத்து இந்த அரசுக்கு இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில்கூட அங்கத்தினர்களாகி அமைச்சர்களாகியவர்கள் 4 பேர்கள் இருக்கிறோம் என்பதையும் நான் தம்பி தங்கப்பாண்டியன் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, எப்படி நாங்கள் உங்களை அவமரியாதையாக நடத்த முடியும் என்பதை எண்ணிப்

பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு ஒரு நிகழ்ச்சியைப் பற்றி திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் நடத்தப்பட்ட விதம் பற்றிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்திருந்தால், அதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்கள் மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்களும் வேதனைப்படாமல் இருக்க முடியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மனிதாபிமான உணர்ச்சியோடுதான் இருக்க வேண்டும். இந்த அரசு அப்படித்தான் இயங்கும், காழ்ப்புணர்ச்சியோடு அல்ல என்பதை நெஞ்சத்திலே கொண்டுதான் நாங்கள் பணியாற்றுகிறோம் என்பதைத் தம்பி தங்கப்பாண்டியன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னார்கள், பசிபிக் ஏர் பிரான்ஸ் சங்கத்தைச் சேர்ந்த இரண்டாயிரம் அங்கத்தினர்கள் இங்கே வந்தார்கள். அவர்களுக்கு என்று செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2,51,000 என்று குறிப்பிட்டுச் சொல்லி, இவ்வளவு செலவு தேவைதானா என்றும் கேட்டார்கள். சாப்பாட்டிற்காகவும், ஓட்டலிலே தங்குவதற்காகவும் மட்டும் ஆன தொகையல்ல இது என்பதையும், அவர்களுக்கு என்று சமர்ப்பிக்கப்பட்ட மெட்டிரியல்ஸ்களுக்காகவும் செலவழிக்கப்பட்ட தொகை என்பதை நினைவிலே கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சிறிய மகாநாடு நடத்துகிறபோதுகூட பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு இது ஒரு பெரும் தொகையாக எப்படிப்பட்டது என்பதை நான் நினைத்துப் பார்க்க முடியவில்லை. வந்தவர்கள் அனைவரும் வெளிநாட்டிலேயிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு நல்ல விருந்து வழங்கியிருந்தால், அது நம்முடைய பெருமையைக் கூட்டுவதற்கும் வளர்ப்பதற்கும் பயன்படுமே தவிர வேறு அல்ல. இவ்வளவு தொகையை ஒதுக்கி, இதற்குச் செலவழிக்கலாமா என்று அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து கருதக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன். இது அவ்வளவு பெரிய தொகையல்ல என்பதையும், சராசரியாக ஒருவருக்கு ரூ. 100 என்ற அளவுக்குத்தான் செலவுக் கணக்கு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இரண்டாயிரம் பேர்கள் பசிபிக் ஏர் பிரான்ஸ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வ[illegible]தொழிற்சாலைகள் என்ற அந்த எண்ணிக்கை தெரிந்திருந்தால், உயர்தொழில் கேள்வியை எழுப்பியிருக்க மாட்டேன் என்று செ[illegible] தொடர்ந்து பயன்படுத்த கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> விளக்கம் சொன்ன பிறகு அதை ஏற்றுக்கொள்கின்ற மனதைப் படைத்தவர்கள் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் என்பது எனக்குத் தெரியும். இது புதியதல்ல. ஏற்கெனவே அந்த மனதைப் படைத்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்குத் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்கு நன்றி. இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்ன அங்கத்தினர்களுக்கும் என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:</u> இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 7-35)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

280 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பு

தொழில் வளர்ச்சிக் கொள்கை

கடந்த இருபது ஆண்டுகளாக இந்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை, 1956-ம் ஆண்டு தொழில் கொள்கைத் தீர்மானத்தை ஒட்டி அமைந்துள்ளது. இந்தக் கொள்கைத் தீர்மானத்தில் பல கூறுகள் இன்றுகூட செல்திறன் உள்ளவையாக இருந்தபோதிலும், இக்கொள்கை, சமூகநீதி, பொருளாதார வளம் மக்களிடையே பரவலாக்குதல் போன்ற நோக்கங்களை முழுவதும் எய்தவில்லை என்று உணரப்பட்டது. தொழிற்சாலைகளை பெருமளவில் சிற்றூர்களிலும், சிறு நகரங்களில் பரவலாக அமைப்பதற்கும் பெருவாரியான மக்களின் கையில் செல்வம் போய்ச் சேருவதற்கும் வழிகோலும் நோக்கத்தோடு அண்மையில் மத்திய அரசு புதிய தொழில் கொள்கையை அறிவித்தது. குடிசைத் தொழில், சிறுதொழில், கிராமத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப்புதிய கொள்கையின் தலையாய நோக்கமாகும். மாநில அரசின் தொழிற்கொள்கையும் மத்திய அரசின் கருத்துக்களோடு பொதுவாக ஒத்திருக்கின்றது, முன்னிலும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்வதை சிறுதொழில், குடிசைத் தொழில், கிராமத் தொழில் துறைக்கு ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிவுரை செய்யப்பட்டது. மத்திய அரசு, அண்மையில் மொத்தம் 504 உற்பத்திப் பொருட்களை சிறு தொழில், கிராமத் தொழில், குடிசைத் தொழில் துறைக்கு ஒதுக்கும் தனது கொள்கையை அறிவித்தபோது, தமிழ்நாடு அரசின் பரிவுரைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறு தொழில், கிராமத் தொழில் துறைகள் வளர்ச்சி மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகையில், பெரிய தொழில்கள் வளர்ச்சியைப் புறக்கணித்துவிடும் முடியாது. பெரிய தொழில்கள் சிறிய தொழில், காட்) ந துணைத் தொழில்கள் (ancillaries) என்ற முறையில் வி அளிப் ர முடியு. மேலும் அவை அடிப்படைப் பொரு திட்டங்களை நிறை கச்சாப் பொருட்கள், மூலப் பொளிக்கிறது. தமிழ்நாடு நுட்பம் வாய்ந்த பொருட்ச (டிட்கோ) பொதுத் துறை உற்பத்தி செய்து சிறு தொழில் கூட்டுத்துறை நிறுவனங்களும் உதவுகின்றன.

பெரும் நகர்களில் மேலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் படுவதை தடுப்பதற்கும், தொழிற்சாலைகளை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக ஏற்படுத்த இயலுவதற்கும் வழிவகுக்கும் பொருட்டு, 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள பெருநகர்களில் தொழிற்சாலைகளைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு உரிமங்கள்வழங்கலாகாது என்றும் மத்திய அரசு தீர்மானித்துள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகளையும் கடுமையான நடைமுறைகளையும் தளர்த்தும் நோக்கோடு, தற்போதுள்ள நடைமுறைகளை எளிதாக்குவதற்கும், உரிமங்கள் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை நீக்குவதற்கும், ஏற்றுமதி, இறக்குமதி,கம்பெனி விவகாரங்கள் ஆகியவை குறித்தும் கருத்துரை வழங்க பல குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. உரிமம் வழங்கும் துறைகளையும், நிதி வழங்கும் நிறுவனங்களையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்தல், குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்க அரசு நிதிவழங்கு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரங்களை அளித்தல், உரிமங்களையும், அனுமதிக் கடிதங்களையும் தொடர்ந்து ஆய்வு செய்தல், உரிமம் வழங்கப்படவிருக்கும் நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதில் வங்கிகளும், நிதிவழங்கு நிறுவனங்களும் இணைந்து செயல்படுதல், சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி உதவியைச் செய்து கொடுக்கும் மாநில அரசின் கழகங்களை சப்ளைஸ்-டிஸ்போஸல்ஸ் தலைமை இயக்குநர் அலுவலகம் தாமாகவே பதிவு செய்து கொள்ளுதல் ஆகியவை குறித்து இந்த அரசு கருத்துரை வழங்கியுள்ளது. ஏற்றுமதி-இறக்குமதி பற்றிய விதிமுறைகள் தளர்த்தப்பட்டு சிறுதொழில்கள் மாவட்ட அளவிலும், பெரிய தொழில்கள் மாநில அளவிலும் வேண்டிய அனுமதிகள் பெற ஏற்ற முறையில் விதிமுறைகளைத் திருத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியுள்ளது. பெருவாரியான மக்களுக்குச் சுய வேலை வாயப்புக்கான ஆதாயந்தரத்தக்க வழிகளுக்கு வகை செய்யும் சிறுதொழில்களும், கிராமத் தொழில்களும் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படுவதற்காக ஒதுக்கப் பட்டுள்ள பட்டியலில் முன்பு உள்ள சுமார் 180 இனங்களின் எண்ணிக்கையை 504 ஆக இந்திய அரசு உயர்த்தியுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் இனங்களை உற்பத்தி செய்யக்கூடிய முறைகள் குறித்து ஆய்வு செய்யவும், அத் தொழில்களைத் தொடங்குவதில் அக்கறை காட்டும் தொழில் முனைவர்களுக்கு உதவி புரிவதற்காக திட்ட விவரங்களைத் தயாரிக்கவும், தொழில் வணிகத் துறையும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வர். சிறு தொழில் தொடங்குவோருக்கு தக்க ஆலோசனைகள் கூறி அவர்கள் வாங்கவேண்டிய இயந்திரங்கள், விற்பனை வசதி பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்றுத்தருவது போன்ற எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்து செயல்படும் நோக்கத்துடன் மாவட்டங்கள் தோறும் மாவட்ட தொழில் மையங்களை அமைக்க எண்ணியுள்ளோம். வரும் ஆண்டில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி சேலம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இவை அமைக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத்துறை, கதர் கிராமத் தொழில் வாரியம் போன்ற அமைப்புகளின் அலுவலர்களை ஒரேஇடத்தில்கொண்டதாக இந்தமையங்கள் உருவாக்கப்படும்.

தொழில் துறையில், தொழிற்சாலையை உருவாக்குவது, மேம்படுத்துவது, அதற்கு வேண்டிய நிதிக்கு வகை செய்வது, அடிப்படைத்தேவைகளை மேம்படுத்துவது ஆகியவையே அரசின் முக்கியமான பணிகளாகும். இத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில் மேம்பாட்டு அமைப்புகள் பல அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகளில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மிகவும் முக்கியமான ஒன்றாகும். சிறு தொழில் வளர்ச்சிக்கான எல்லா உதவிகளையும் இது அளிக்கிறது. மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) சிறு தொழில் திட்டங்களுக்கும், நடுத்தரத் தொழில் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்கும் நிறுவனமாகும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நடுத்தர, பெருந்தொழில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு அடிப்படைத் தேவைகளை உருவாக்கி திட்டங்களை நிறைவேற்றுவதில் எல்லா உதவியையும் அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை நிறுவனங்களை நிர்வகிப்பதுடன் கூட்டுத்துறை நிறுவனங்களையும் ஊக்குவிக்கிறது.

1975ஆம் ஆண்டு தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (அடிப்படை ஆண்டு 1970-100) 137·66 ஆக இருந்தது. இது 1977 செப்டம்பரில் 142·9 ஆக (தற்காலிகமானது) இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும், அத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் கீழே உள்ள விவர அட்டவணை காட்டும்:—

ஆண்டு.	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.	தொழிலாளர்களின் எண்ணிக்கை.
1973	6,816	4,53,000
1974	6,985	4,98,804
1975	7,408	4,99,672
1976	8,196	5,04,899
1977	8,508	5,23,233

தொழில்களின் வளர்ச்சி பெரும்பாலும் மின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின் சக்தியின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளது:—

ஆண்டு.	மில்லியன் யூனிட்டுகள்.
1972-73	2,463.469
1973-74	2,338.625
1974-75	2,402.284
1975-76	3,059.252
1976-77	3,051.354

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவு செய்யப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து தெரிய வரலாம் :—

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.		அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்.)	
	அரசுத் துறை.	தனியார் துறை.	அரசுத் துறை.	தனியார் துறை.
1972-73	20	166	1,381	11,616
1973-74	37	210	3,342	1,926
1974-75	32	268	3,599	3,706
1975-76	29	184	2,748	1,808
1976-77	13	173	691	1,578
1977-78	12	145	533	1,152

தொழில் முதலீடுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் மூலம் நடப்பாண்டில் சிறு தொழில்கள் பெருமளவில் பயனடைந்தன. 1976-77-ல் 156 சிறு தொழில்களே பயனடைந்து ரூ. 38·83 இலட்சம் பெற்றன. ஆனல் 1977-78—ல் 233 சிறு தொழில்களுக்கு ரூ. 57·34 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் செயலாக விவரங்கள் இணைப்பு9-ல் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் 1977-78-ல் ரூ. 99·08 இலட்சம் விற்பனை வரிக்கடனுக 18 தொழில்களுக்கு வழங்கப்பட்டது. ஆனல் முந்தைய ஆண்டில் ரூ. 79.44 இலட்சம்தான் விற்பனைவரிக் கடனுக 15 தொழில்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய தொழில் வளர்ச்சி 1978-79-லும் தொடரும் என்று கருதப்படுகிறது. விற்பனை வரிக்கடன் திட்டத்தினை விரிவுபடுத்த சில மாற்றங்களை செய்யவும் அரசு பரிசீலித்து வருகிறது.

[1978 மார்ச் 27

தொழில்-வணிக இயக்குநரகப் பணிகள்

பொதுவாக தொழில்களையும் குறிப்பாக, சிறு தொழில் களையும் வளர்ப்பதற்கான அரசுத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு-தொழில் வணிக மாநில இயக்குநர் அலுவலகம் முகவரமைப்பாகச் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாநில அரசு, வங்கிகள், ஏனைய முகவரமைப்புகள் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகிய வற்றை சிறு தொழில்கள் பெருவதற்கேற்ப, அவற்றைப் பதிவு செய்தல், தொழில் நுட்பத் தகவல் அளித்தல், நிதி உதவி, பயிற்சி, பழுதுபார்க்கும் வசதிகள் ஆகியவற்றை தனது பல்வேறு பிரிவுகள் மூலம் அளித்தல், தொழில்களைத் தொடங்குவதற்கான திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், அத்தகைய தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதிஉதவி, அங்காடி வசதி, ஏனைய வசதிகள் ஆகியவற்றை அளித்தல், வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்ய "இன்றியமையாமை சான்றிதழ்" வழங்குதல் மாநிலத்தின் கனிவளத்தை ஆய்வு செய்தல், மாநிலத்தில், பெரிய உப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக உப்பு—அதனைச் சார்ந்த பொருட்களுக்கான தொடக்க ஆய்வு களை நடத்தல், கிராமப் பகுதிகளில் சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்காக மத்திய அரசு பொறுப் பேற்கும் கிராம தொழில் திட்டத்தைச் செயல்படுத்துதல் முதலியவற்றை தொழில்—வணிக மாநில இயக்குநர் அலுவலகம் கவனித்து வருகிறது.

தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பணி

2. தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவர்களுக்கும் தொழில் நுட்ப நூலகங்கள் மூலம் தகவல் வழங்குவதற்காக, நூலகத்துடன் கூடிய தொழில் நுட்பப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவில், தேவையான புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றும், நூல் வெளியீடு பிரிவு ஒன்றும், மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்றும், தொழில் நுட்பத் திரைப்படங்களைத் திரையிடுவதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் அரங்கு ஒன்றும் உள்ளன. கிண்டி, தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவின் துணைப்பிரிவாக செய்திச் கருள் பிரிவு ஒன்றும் நிலையான பொருட்காட்சி

1978 மார்ச் 27]

ஒன்றும் இயங்கி வருகின்றன. மதுரை, பேட்டை, அம்பத் தூர், காடபாடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய ஊர்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவுகள், அவற்றோடு இணைந்துள்ள நூலகங்கள் மூலம், தொழிற்பேட்டைகளிலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள தொழிலதிபர்கள், தொழில் முனைவர்கள் ஆகியோருக்கு மேற் சொன்ன அதே வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. இப் பிரிவுகள் அனைத்திலும், நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில் நுட்பம் குறித்து வெளியிடப்பட்ட வெளியீடுகள் உள்ளன. மேலும் இந் நூலகங்களில் 'சிப்காட்' 'சிட்கோ' போன்ற அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்த பத்திரிக்கைகளும் சிறு வெளியீடுகளும். தொழில் முனைவர்களுக் கான திட்ட அமைப்பு, செய்தி அறிவிப்பு ஆகியவைகளும் உள்ளன.

தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி

3. பொறியியலில் பட்டமும், தகுதிப்பட்டயமும் பெற்றவர் களுக்கும், தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர் களுக்கும் சிறப்புப் பயிற்சியை இந் நிலையம் அளிக்கிறது. வார்ப்புரு வடிவமைப்பு, அச்சுவார்ப்பு, கருவிகள் செய்தல் உலைக்களத்தில் உருக்கைக் காய்ச்சி அடித்தல், இயந்திரங்களை இயக்குதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது பட்ட தாரிகளுக்கும், தகுதிப் பட்டயதாரர்களுக்கும் முறையே திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயும் 75 ரூபாயும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது: பட்டதாரிகளுக்கும், தகுதிப்பட் டயதாரர்களுக்கும் இப்பயிற்சிக் கால அளவு ஒவ்வொரு தொகுதியினருக்கும் 12 மாதங்களாகும்; தொழில் பயிற்சிநிலைய சான்றிதழ்தாரர்களுக்கு 18 மாதங்களாகும். புதிதாக குளிர் பதனம், சீர்வளி பொறியியல் பாடமுறை 15 மாணவர்களைக் கொண்டு 1976ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் தொடங் கப்பட்டது மின் அணுவியல் கருவிகள் தயாரிப்பு பாடமுறை 1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தொடங்கப்பட்டது. 1977–78 ஆம் ஆண்டில் பல்வேறு தொழில்களில் மொத்தம் 90 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

கருவிகள் வார்ப்புரு தயாரிப்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல்

4. பல்வேறு பொறியியல் பிரிவுகளுக்குத் தேவைப்படும் கருவிகள், வார்ப்புக்களை, குறிப்பாக, பூட்டுக்களை வடிவமைத் துத் தயாரிப்பதில், ஒவ்வோர் ஆண்டும் மூன்று

தொகுதியினருக்கு தொகுதி ஒன்றில் 22 மாணவர்களுக்கு புத்தகக் கல்வி, செய்முறைப் பயிற்சி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சியை இந்நிலையம் அளித்து வருகிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். இப்பயிற்சி நிலையத்தில் சேருவதற்குத் தேவையான குறைந்த அளவு கல்வித் தகுதி பள்ளியிறுதித் தேர்ச்சியாகும். இதுவரையில் 189 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கருமார், தச்சர் தொழிற்பிரிவு, அரக்கோணம்

5. இத் தொழிற் பிரிவு அரக்கோணத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கருமார், தச்சுத் தொழிலில் பயிற்சி அளிப்பதோடு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வசதிகளையும் அளிக்கிறது.

மின்சார—மின் அணுவியல் பிரிவு

6. மின்சார, மின் அணுவியல் தொழில்களின் வளர்ச்சியோடு தொடர்புடைய நடவடிக்கைகள் அனைத்தும் இப்பிரிவில் கவனிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு, 1972 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மிகு நேர்த்தியான பொருட்களைத் தயாரிக்க சிறந்த தகுதி பெற்ற விஞ்ஞானிகளும், பொறியாளர்களும் சிறிய தொழிற்பிரிவுகளில் தயாரிக்க இப்பிரிவு தக்க ஆலோசனை வழங்கி உதவி வருகின்றது.

7. **சோதனையிடுவதற்கான வசதிகள்.** (அ) காக்களூரில் அமைக்கப்பட்டுள்ள மத்திய மின்சார ஆய்வுக்கூடம், மின் சாரப் பொருட்கள், இணைபொருட்கள், துணைப் பொருட்கள், துணைமுறைகள் ஆகியவற்றை "தயாரித்தபிறகு" சோதனையிடு வசதிகளைச் செய்துகொடுக்கிறது. சோதனைச்சான்றிதழ்களை வழங்குவதற்காக இந்த ஆய்வுக்கூடம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தாலும், ரயில்வேயாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மின் விசிறிகளைச் சோதனையிடும் அறைகளைக் கொண்ட இது இந்நாட்டிலுள்ள சோதனையிடு ஆய்வுக்கூடங்களில் சிறந்த ஒன்றாகும். 1977–78 ஆம் ஆண்டில் 30-11-1977 ஆம் நாள் வரையில் 318 மாதிரிகள் முழுவதும் சோதனையிடப்பட்டு தேவையான சோதனையிடு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவற்றின்மூலம் சோதனையிடு கட்டணமாக ரூபாய் 32,488 வருவாய் கிடைத்தது.

(இ) மின்அணுவியல் தொழிற்பிரிவுகளுக்கான சோதனையிடு வசதிகளுடன் கூடிய சோதனைச் சான்றிதழ்—உற்பத்தி வளர்ச்சி மத்திய ஆய்வுக்கூடம் ஒன்று அடையாறு மின் அணுவியல் கருவிகள் தொழிற்பேட்டையில் உள்ளது. சோதனையிடு சிறப்புக் கருவிகளை வாங்குவதற்காக 15·91 இலட்சம் ரூபாயை மத்திய அரசைச் சேர்ந்த மின் அணுவியல் துறை வழங்கியுள்ளது.

மின்சார மின்னணுவியல் தொழில் குறித்த புள்ளி விவரங்கள் தொகுப்பு நிலையம்.

8. இம் மாநிலத்திலுள்ள மின்சார, மின்னணுவியல், கருவிகள் தயாரிப்புத் தொழில்கள் குறித்த தகவலைச் சேகரிப்பதற்கான புள்ளி விவரத்தொகுப்பு நிலையம் ஒன்று அடையாறு, மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புத் தொழிற்பேட்டையில் (Instronic) அமைக்கப்பட்டுள்ளது. இது இத்துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், இன்றியமையாத அடிப்படை வசதிகள், பொதுவான வசதிகள் ஆகியவை குறித்துத் திட்டமிடுவதற்கான தகவலை அளிக்கும் நிலையமாகச் செயல்படுகிறது. எல்லாத் துறைகளையும் சேர்ந்த 1,800-க்கும் அதிகமான தொழிற் பிரிவுகளிலிருந்து ஏற்கனவே தகவல் சேகரிக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற்காகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மின்சார—மருத்துவக் கருவிகளுக்கான பணி நிலையங்கள்.

9. மின்சார—மருத்துவக் கருவிகளைச் செப்பனிடுவதற்கான பணி நிலையம் ஒன்று கிண்டியிலும், தஞ்சாவூர், மதுரை ஆகிய ஊர்களில் துணை நிலையங்கள் இரண்டும் மொத்தம் சுமார் 16·00 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. தஞ்சாவூரிலுள்ள துணை நிலையம், 1976–77 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டத்தின்கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணி நிலையங்கள், இம் மாநிலத்திலுள்ள மருத்துவ, கால்நடை மருத்துவ ஏனைய நிலையங்களின் 20,000-க்கு மேற்பட்ட கருவிகளை இதுவரையில் பழுதுபார்த்துள்ளன. இந்த வகையில் 23·98 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்புள்ள பழுதுபார்க்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டன. கோயம்புத்தூரிலுள்ள பிறிதொரு நிலையம் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதோடு, இதேபோல் ஒரு நிலையத்தைத் திருநெல்வேலியில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 27

மின்னணுவியல் கருவிகளைச் சோதனையிடுதல், சான்றளித்தல் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்கான நிலையம், மதுரை

நடைமுறையில் உள்ள தரங்களுக்கு இணங்க "உற்பத்திக்குப் பிறகு" சோதனையிடுதல், சான்றளித்தல், உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்காக, மதுரை, தொழிற்பேட்டையில் மின்னணுவியலுக்கான ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை கப்பலூர் தொழிற்பேட்டைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையம் இதுவரையில் 31-12-77 முடிய 50 மாதிரிகளைச் சோதனை செய்துசான்றளித்துள்ளது.

தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம்.

10. இம் மாநிலத்தில் மின் அணுவியல் தொழில்கள் வளர்ச்சியடைவதை விரைவுபடுத்தும் நோக்கோடு தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் பற்றி, மின்னணுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கலந்து பேசப்பட்டது. அரசுத்துறைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள பொருட்களைஉற்பத்திசெய்வதை இந்நிறுவனம்மேற்கொள்வது நலம் பயக்கும் என்று கூறப்பட்டது. தொழில் கல்வி அறிஞர்கள் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மற்ற தொழில் அறிஞர்களுடன் கலந்துபேசி, ஒரு சில சிறப்புப் பொருட்களை உற்பத்தி செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். வரும் ஆண்டில் இதற்கான நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும்.

மின் அணுவியல் சிறு தொழிற்பிரிவுகள்.

11. இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, அல்லது விரிவுபடுத்தப்பட்ட மின் அணுவியல் சிறுதொழில்கள் எண்ணிக்கை 46 ஆகும். 1978-79ஆம் ஆண்டு முடிவில் மின்அணுவியல் சிறுதொழில்களின் உற்பத்தி ரூ. 8 கோடியளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டிற்குள் மேற்கண்ட மின்னணுவியல் சிறுதொழில்களில் 1,585 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர, 35 நுண்திறம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, அவைகளுக்கான தொழிற் பிரிவுகள் அமைக்கும் தருவாயில் உள்ளது. இதனால் 1978-79 ஆம் ஆண்டுமுடிவில் 500 பேர்களுக்கும்1979-80ல் மேலும் 500 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

1978 மார்ச் 27]

இரசாயன சோதனை பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

12. கிண்டி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள இரசாயன சோதனை—பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள், பல்வேறு வகை மூலப்பொருட்கள், உற்பத்தியான பொருட்கள் ஆகியவற்றைச் சோதனையிட்டு இரசாயன, உலோக, பொறியியல் தொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. சிறுதொழில் பிரிவுகளுக்குச் சோதனைக் கட்டணங்களில் 50 சதவீதம் சலுகையளிக்கப்படுகிறது. இந்திய தர நிர்ணய சான்றிதழ் அடையாளக் குறியீடு திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெறும் தொழிற்சாலைகளுக்கு 33.1/3 சதவீதம் சலுகை அளிக்கப்படுகிறது. இந்த ஆய்வுக் கூடங்கள் 1977–78ஆம் ஆண்டில் 31–12–1977 வரையில் 4,173 மாதிரிகளைச் சோதனையிட்டு பகுப்பாய்வு செய்துள்ளன. இதன் மூலம் கட்டணமாக 1,46,400 ரூபாய் பெற்றுள்ளன. சேலத்தில் உள்ள சவ்வரிசி ஆராய்ச்சிஆய்வுக்கூடம்தரமானசவ்வரிசிஸ்டார்ச்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உதவி புரிகிறது. இந்திய தர நிர்ணய நிலையத்தின் வரையறைகளின் படி, ஸ்டார்ச், சவ்வரிசிஆகியவற்றைப் பகுப்பாய்வுசெய்வதற்கான சோதனையிடு வசதிகளையும் அளிப்பதோடு, பல்வேறு மாதிரிகளைச் சோதனையிடும் பணியையும் மேற்கொள்கிறது. இந்த ஆய்வுக் கூடம்1977–78ஆம் ஆண்டில் 31–12–1977ஆம் நாள்வரையில் 370 மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அவற்றின்மூலம் சோதனைக் கட்டணமாக 3,490 ரூபாயை ஈட்டியுள்ளது.

தூத்துக்குடியிலுள்ள உப்பு—கடல்படு இரசாயனப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம், உப்பு உற்பத்தியை அளவிலும்தரத்திலும் உயர்த்துவதில்உப்புத்தொழிற்சாலைக்கு உதவுகிறது. பவநகர், மத்திய உப்பு—கடல்படு இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலையில் நெருங்கிய உடனுழைப்புடன்தூத்துக்குடி, உப்பு—கடல்படு இரசாயனக்பொருட்கள் மாநில ஆராய்ச்சி நிலையத்தை நடத்தக் கருதப்பட்டுள்ளது.

13. இரசாயனத் தொழில்கள் குறித்த புள்ளி விவரங்களையும் தொழில்நுட்பத் தகவல்களையும் சேகரிப்பதற்காக கிண்டியில் புள்ளி விவரத்தகவல் தொகுப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 1977, டிசம்பர் வரையில், இந்நிலையம் 484 இனங்கள் குறித்தும் 33 திட்ட அமைப்புகள் குறித்தும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கியுள்ளது.

14. இரசாயனப் பிரிவு, பராபின் மெழுகு, தீக்குச்சி மெழுகு பொருட்களைக் கொள்முதல் செய்வதில் சிறு தொழில்களுக்கு அவசியமான உதவி செய்கிறது. இப்பிரிவு, இரசாயனத் தொழில்களைத்தொடங்குவதற்குத் தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது. மேலும், தொழிற் சாலைகள் குறிப்பாகக் கேட்டுக் கொள்வதன் பேரில் இப் பிரிவு இரசாயன தொழிற்சாலை முன்னோடி ஆய்வுகளையும் மேற்கொள்கிறது. சிறு தொழில் பிரிவுகள், தங்களது உரிமங்களையும், உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து மூலப்பொருள் ஒதுக்கீட்டையும் பெறவியலும் வகையில் இந்த இரசாயன பிரிவு பூச்சிக் கொல்லிமருந்து உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

மட்பாண்டப் பயிற்சி நிலையம்.

15. விருத்தாசலம், மட்பாண்டத் தொழிற் பயிற்சி நிறுவனம், மட்பாண்டத் தொழில் நுட்ப நிறுவனம் என்று மாற்றி பெயரிடப்பட்டது. இந்நிறுவனம் 15 மாணவர்களுக்கு நான்காண்டுக் காலப் பயிற்சி வகுப்பு நடத்துகிறது. வணிகத் தொழில் பிரிவுகளில் அளிக்கப்படும் ஓராண்டு பயிற்சியும் இப்பயிற்சிக் காலத்தில் அடங்கும். முதல், இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 75-ம், மூன்றும், நான்காம் ஆண்டு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-ம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பிற மாநில அரசுகள், மட்பாண்டத் தொழிற்சாலைகள், மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து இடங்கள் உட்பட, பயிற்சி உதவித்தொகை இல்லாமல் பயிற்சி பெறுவதற்காக மேலும் பத்து மாணவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். மூலப்பொருட்களையும் வேலை நிறைவுபெற்றபொருட்களையும் சோதித்துப் பார்ப்பதற்காக எல்லா வசதிகளுடன் கூடிய ஆய்வுக்கூடம் ஒன்று இந்நிறுவனத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

கண்ணாடித் தொழிற் பயிற்சி நிலையம்.

16. கிண்டியிலுள்ள அரசு ஆய்வுக்கூட கண்ணாடித் தயாரிப்புப் பயிற்சி நிலையத்தில் ஆய்வுக்கூட கண்ணாடி சாதனம் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரையில் 26 தொகுதியினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரிலுள்ளகண்ணாடிக் கருவிகள் தயாரிப்புக்கான பயிற்சி — உற்பத்தி நிலையம், கோயம்புத்தூரிலும்

அதனைச் சுற்றிலுமுள்ள கல்வி நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்நிலையத்திலும் ஆய்வுக்கூட கண்ணாடி சாதனம் தயாரிக்கப்படும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்தொழிற் பிரிவில் தயாரிக்கப்படும் கண்ணாடி பொருட்களுக்கு நல்ல விற்பனை உள்ளது.

சிறு தொழில்களைப் பதிவு செய்தல்.

17. இயந்திரங்கள் தளவாடச் சாமான்கள் இவற்றில் மொத்த முதலீடு பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவை சிறு தொழில்களாகக் கருதப்படும். பெரிய தொழிற் சாலைகளுக்குத் துணைத் தொழில்களாக அமையும்போது இத் தகைய முதலீடு 15 இலட்சம் ரூபாய்வரை இருப்பினும் சிறு தொழிலாகக் கருதப்படுகின்றன. தற்போதுள்ள பதிவு நடைமுறையின்கீழ், முதலில் புதிய தொழில்களுக்குத் தற் காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ் 6 திங்களுக்குத்தான் செயல் திறனுடைய தாகும். இது முதலில் 6 திங்களுக்கு மேலும் புதுப்பிக்கப் படலாம். ஆய்வுக்குப் பின்னர், மேலும் 2 அரையாண்டுக் காலத்திற்கும் புதுப்பிக்கப்படலாம். சிறு தொழில் அமைக் கப்பட்டதைக் கண்டறிந்தபின், நிலையான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள தொழில் வணிக துணை இயக்குநர்கள் இந்தச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

சிறு தொழில்கள், குறிப்பாக, படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்போருக்குப் பெருமளவு சுய வேலைவாய்ப்பை அளிக்கின்றன. மாநிலம் முழுவதும் கிராமப் பகுதிகளிலும் ஓரளவு நகர்ப்புற பகுதிகளிலும் தொழில் வளம் பெருகுவதற்கு வகை செய்வதும் சிறுதொழில், குடிசைத் தொழில், வணிகம் மற்றப் பணிகள் ஆகியவற்றில் சொந்தத் தொழில் வாய்ப்புகளுக்கும் வழி வகுப்பதே மாநில அரசின் உறுதியான கொள்கையாகும்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி மாநிலத்தில் சுமார் 40,000 பதிவு செய்யப் பட்ட சிறு தொழில்கள் இருந்தன. இவை சுமார் 4 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு நல்கின. சிறுதொழில் குறித்து மாவட்டவாரியான விவரங்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 50,000 பேர்களுக்கு வேலை அளிப்பதற்காக ஓராண்டுக்குள் 10,000 சிறுதொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு, தொழில் வணிக

இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) ஒத்துழைப்புடன் அவசியமான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் பல்வேறு சிறு தொழில்களைத் தொடங்குவது சம்பந்தப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான வளர்ச்சிப் பணி அமைப்புகளாக தொழில்-வணிகத் துறை இயக்குநரையும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தையும் (சிட்கோ) அரசு குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பகுதியிலும் பொறியியல், இரசாயனம், உணவு, செய்முறைப் படுத்தல், தோல், மட்பாண்டத் தொழில், மின்னணுவியல், கைவினைப் பொருட்கள் முதலிய வற்றில் ஒவ்வொரு துறை குறித்தும் ஆய்வு செய்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சாதகமாயுள்ள தொழில் குறித்து கண்டறியப் படும். குறிப்பிட்ட இடங்களில் தொழில் முனைவோரைத் தெரிந்தெடுப்பதற்கு கூட்டங்களும் நடத்தப்படும்.

புள்ளி விவரத் தகவல் சேகரிப்பு :

18. பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சிறுதொழில் பிரிவும் ஒவ்வொராண்டின் இறுதியிலும் உற்பத்தி குறித்த விவர அறிக்கையை வரையறுக்கப்பட்ட படிவத்தில் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பக் கடமைப் பட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் 'கார்டெக்ஸ்' முறைப்படி வகைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றன. 31—12—1977 அன்றைய நிலையின்படி சிறு தொழில்கள் பற்றிய ஆண்டுக் குறிப்பேடு ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சிறு தொழில் பற்றிய தேசியப் புள்ளி விவரம் :

19. அனைத்திந்திய அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சிறு தொழில் பற்றிய தேசியப் புள்ளி விவரம் தொடர்பாக தொழில்—வணிக இயக்குநர் அலுவலகம், பதிவுபெற்ற சிறு தொழிற்சாலைகள் பற்றி, தயாரிப்பு வகை, வேலைக்கமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை, முதலீடு செய்யப் பட்ட மூலதனம், எந்திரங்களின் மதிப்பு, பயன்படுத்தப் படும் மூலப்பொருட்களின் மதிப்பு, தரம், உற்பத்தியின் மதிப்பு, ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை உற்பத்தி வாரியாகச் சேகரிக்கிறது.

மையப் பிரிவு :

20. சிறு தொழில் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கையாக ''மையப்பிரிவு'' ஒன்று இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் பணிகளாவன:—

(1) சிறுதொழில் துறையில் உற்பத்திக் குறியெண்ணைத் தயாரிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களைத் தயாரிக்கும் சிறுதொழில் பிரிவுகளிலிருந்து மாதாந்திர உற்பத்தி அறிக்கைகளைச் சேகரித்தல்.

(2) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது 20 சதவிகித உற்பத்தித் திறனுக்குக் குறைவாக செயல்படுவதாகக் கண்டறியப்பட்ட சுமார் 1,300 சிறு தொழில்கள் குறித்த பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவை நன்முறையில் செயல்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(3) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது மூடப்பட்டதாகக் கண்டறியப் பட்ட அல்லது எங்கு உள்ளன என்று கண்டுபிடிக்க இயலாத சுமார் 10,000 சிறுதொழிற் பிரிவுகள் குறித்து பரிசீலனை செய்தல்.

சிறு தொழில்களுக்கு மின்சக்தி, குடிநீர், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சாலை வசதிகள் முதலிய வசதிகளுடன் நன்கு திட்டமிட்ட இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் மாநில முழுவதும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட தொழிலுக்குரிய தொழிற்பேட்டைகள், தோல், மின்சாரம், மின்னணுவியல் போன்ற சிறப்புவகை தொழில்களின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்கின்றன. நவீன சிறந்த வகைத் தொழில்களின் வளர்ச்சிக்காக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய கீழ்க் காணும் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

(1) மின் தொழிற் பேட்டை, காக்கலூர்.

(2) டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட், அடையாறு.

(3) மின்னணுவியல் தொழிற் பேட்டை, திருச்சிராப் பள்ளி.

(4) மின்னணுவியல் தொழிற் பேட்டை, ஓசூர்.

(5) மின்னணுவியல் தொழிற் பேட்டை, சேலம்.

மின் அழுத்த மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்), ஸ்விட்ச் கியர்கள், கண்ட்ரோல்கள் (controls) ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக அடையாறு மின் அணுவியல் துணைத் தொழிற் பேட்டை சென்னையிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ்' வளாகத்திற்கு மிக அருகில் அமைக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, சிவகாசி, வியாசர்பாடி, சேலம் ஆகிய இடங்களில் தனியார் கூட்டுறவு தொழிற்பேட்டைகள் உள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள்:

21. சென்னைக்கருகில் மின்சார மின்னணுவியல் கருவித் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 100 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. 23 தொழில் முனைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அரை ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் வரை அவர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

22. பல்வேறு சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைத்திறன் பணியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை தொழில்-வணிகத் துறை தொடங்கியுள்ளது. பாய்முடைதல், பிரம்பு, மூங்கில் தொழில்கள், ஏனைய குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் போன்ற வற்றில் ஈடுபட்டுள்ள சுமார் 100 சங்கங்கள் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. 31—12—1977 அன்றையபடி ரூ. 255 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையுடைய 294 சங்கங்கள். சுமார் 23,000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பை அளித்து வந்தன. 1—4—1977—லிருந்து 31—12—1977 வரையிலான கால அளவில் இச்சங்கங்கள் ரூ. 1,053 இலட்சம் மதிப்புள்ள பொருட்களைத் தயாரித்து ரூ. 1,297·48 இலட்சத்திற்கு விற்பனை செய்தன.

தொழிற்சாலைகளுக்கு அரசு உதவியளிக்கும் சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்படும் உதவி.—தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1923) கீழ் புதிய தொழில்கள் அமைத்தல், அல்லது தற்போதுள்ள தொழில்களை விரிவு படுத்.

தொழிற்சாலைகளுக்காக நிலம் வாங்குதல், புதிய தொழிற் சாலைக் கட்டிடங்கள் கட்டுதல் அல்லது தொழிற்சாலையின் தற்போதைய கட்டிடத்தை மாற்றியமைத்தல், தொழிற் சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றுக்காகவும், நடைமுறை மூலதனத்திற்காகவும், சிறு தொழில், குடிசைத் தொழில் செய்பவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படலாம். இச்சட்டத்தின்கீழ் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படக்கூடிய உயரளவு தொகை ரூ. 2 இலட்சம் ஆகும். இச் சட்டத்தின்கீழ், கடன் வழங்குவதற்காக, 1977—78 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு தொழில்—வணிக இயக்குநர் பங்கு மூலதனக் கடன் வழங்கும் பொருட்டு இத்தொகை ஒதுக்கப் பட்டுள்ளது. 31—12—1977 வரையில் ரூ. 8,54,000 பங்கு மூலதனக் கடனைக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூ. 1,46,000 31—3—1978-க்கு முன்னதாக வழங்கப்படும்.

கீழ்க் கண்டவகைக் கடன் உதவிகளை தொழில்—வணிகத் துறை தொடர்ந்து அளித்து வருகிறது :—

(1) பங்கு மூலதனம் செலுத்துவதற்காகத் தொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் ;

(2) தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்;

(3) கிராமத் தொழில்கள் திட்டப்பணித்திட்டத்தின கீழ் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கும் ஏனையோருக்கும் கடன்கள் ;

(4) தென்னை நாரிலிருந்து இயந்திரத்தால் கயிறு உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகள் உட்பட தென்னை நார்த் தொழில்களின் வளர்ச்சிக்குக் கடன்கள்.

கடந்த ஒன்பதாண்டுகளில் தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள், உதவி பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு XX-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தோல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

23. வேலை நிறைவு செய்யப்பட்ட தோல் பொருட்களை உற்பத்தி செய்வதில் தேவையான இன்றியமையாத அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம், தோல் தொழிலுக்கும் குறிப்பாக சிறு அளவில் தோல் பதனிடுபவர்களுக்கு உதவி புரிவதற்கென்று வாணியம்பாடியில் தோல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. தோல் பதனிடுபவர்கள் பெருவாரியாக இருக்கும் பகுதிகளில் கூட்டுறவுத்துறையில் மேலும் சில பணி நிலையங்களை அமைக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டு வருகிறது. அரசு வணிக நிறுவனம் அளித்துள்ள ரூ. 25 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களுக்குச் சமமான ரொக்கத் தொகையைத் தொடக்க மூலதன தேவையாகக்கொண்டு மேலும் நான்கு பணி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. தோல் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் முழு அளவில் வளர்ச்சி பெற்று பெருக வேண்டும் என்பதே இவ்வரசின் குறிக்கோளாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1976–77, 1977–78-ம் (ஜனவரி 1978 வரை) ஆண்டில் தோல் வளர்ச்சிக்கு வழங்கிய நிதியுதவியைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

விவரங்கள்.	1976–77. (ஏப்ரல்–மார்ச்சு.)	1977–78. (ஏப்ரல்–ஜனவரி.)
1. தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	25	19
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
2. வழங்கிய தொகை	2,24.31	1,69.55
3. அவற்றில்—		
(அ) தொழில் வளர்ச்சி நிறுவனம்-உலக வங்கிகளின் கீழ் அன்னிய நாணயமாகக் கடன் வழங்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை	11	8
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
(ஆ) அன்னியச் செலாவணிக்கடன்கள்	61.77	2.44

விவரங்கள்.	1976-77. (ஏப்ரல்-மார்ச்சு.)	1977-78. (ஏப்ரல்-ஜனவரி
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
4. திட்டங்களின் மொத்த மதிப்பீடு	4,90.55	3,56.47
5. எதிர் பார்க்கும் வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை	1,190	840
6. எதிர்பார்க்கும் வருட உற்பத்தியின் மதிப்பீடு ..	1,744.74 இலட்சம்.	1,564.44 இலட்சம்.

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்.

24. தமிழ்நாட்டில் பதினொன்று தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் எல்லாம் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளன. நட்டத்தில் செயல்பட்டுவந்த ஒரே தொழிற்சாலையான கைகாட்டி தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை, முந்திய ஆண்டுகளின் நட்டத்தை ஈடு செய்துவருகிறது. இந்தத் தொழிற்சாலைகள் ரூ. 18.27 இலட்சத்துக்கு மேம்பாட்டு ஒதுக்க நிதி, தேய்மான ஒதுக்கநிதி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளன. 1976–77-ல் தயாரிக்கப்பட்ட தேயிலை ரூ. 440.00 இலட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தத் தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் 5,099 சிறு தேயிலைச் சாகுபடியாளர்கள் பயனடைகின்றனர். இவர்கள் சுமார் 11,400 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களைச் சொந்தத்தில் உடையவர்களாவர்.

அரசு அளிக்கும் பங்கு மூலதன உதவி, தேயிலை வாரியம் அளிக்கும் கடனுதவி தவிர, தொடக்க நிலையில் நிர்வாகப் பணியாளர்களின் இலவசப் பணிகள், தவணை கொள்முதல் முறையின்கீழ் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு உத்திரவாதம் ஆகியவையும் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, இந்தத் தொழிற்சாலைகளின் நடைமுதல் மூலதனத் தேவைகளுக்கு வகைசெய்கிறது. தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் அனைத்திற்குமான மத்தியப் பணிச்சங்கம், தொழிற்சாலைகள் அனைத்தின் அலுவல்களை ஒருங்கிணைக்கிறது.

சிறு தேயிலைச் சாகுபடியாளர்களுக்கு தேவைப்படும் எருவை மொத்தமாகக் கொள்முதல் செய்கிறது. தேயிலைக் கிடங்கு நடத்துகிறது. தேயிலை விற்பனையில் உதவுகிறது. ஏனைய பணி வசதிகளைச் செய்து தருகிறது. இச்சங்கம் ஆதாயத்தில் செயல் பட்டு வருகிறது.

25. கூட்டுறவுத் தீப்பெட்டிச் சங்கங்கள்.

25. தமிழ்நாட்டில், 13 சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தி செய்வோர் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்தல், உற்பத்தியான தீப்பெட்டிகளை விற்பனைசெய்தல் ஆகியவற்றில் தயாரிப்பாளர்களுக்கு உதவிபுரிந்து வருகின்றது. இவற்றில் ஐந்து சங்கங்கள் 1975-ம் ஆண்டுக்கு முன்பே தொடங்கப்பட்டன. 1975 ஆம் ஆண்டுக்கு பிறகு பதிவு செய்த 6 சங்கங்கள் இன்னும் நல்ல விற்பனையை எட்டிப்பிடிக்கவில்லை. எஞ்சிய இரு புதிய சங்கங்கள் இன்னும் விற்பனையைத் தொடங்கவில்லை. 1976—77-ல் இச்சங்கங்களின் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை 354.00 இலட்ச ரூபாயாகும். 1977—78 ஆம் ஆண்டில் (31-1-78 முடிய) தீப்பெட்டி விற்பனை ரூ. 344 இலட்சமாகும் மேற்படி சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து தமிழ் மாநிலத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு சங்கக் கூட்டமைப்பை அமைத்துள்ளன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம் ஆகியவற்றின்கீழ், வேலையற்ற பொறியியலாளர்கள், பட்டயதாரர்கள் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ்ப் பெற்றவர்கள், ஏனைய தகுதிபெற்றவர்கள், ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, மூன்றுவகை தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 115 பொறியியல் பட்டதாரிகள், 39 பட்டயதாரர்கள், 169 தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றவர்கள், ஏனைய தகுதி பெற்ற 303 பேர் ஆகியவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கான 14 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மாநில அரசு பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக 25.77 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம்,

சுய வேலை வாய்ப்புத்திட்டம் ஆகியவற்றின் கீழ் 22 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, 561 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற பின்னர், 137 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 396 பேர்கள், வெவ்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி.

26. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கென்றே 1961 ஆம் ஆண்டில் ஒரு தலைமை வங்கி தனியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கியில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 64.03 இலட்சம். இதில் ரூ. 38.30 இலட்சம் அரசினால் வழங்கப்பட்டது. 31—12—77 ஆம் நாள் நிலவரப்படி 357 சங்கங்களுக்கு இவ்வங்கி நிதி உதவி அளித்தது. இந்த வங்கியினால் வழங்கப்படும் கடன் அளவும் படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம் :—

ஆண்டு.			வழங்கப்பட்ட கடன் (ரூபாய் இலட்சத்தில்.)
1967—68	..	..	24.61
1968—69	..	..	16.83
1969—70	..	..	18.85
1970—71	..	..	41.81
1971—72	..	..	39.00
1972—73	..	..	97.95
1973—74	..	..	130.84
1974—75	..	..	153.06
1975—76	..	..	155.56
1976—77	..	..	173.13
1977—78 (31—12—77 வரை).			129.90

இவ்வங்கியின் நிதி உதவியைப் பெற்றுவரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் மிக முக்கியமானவை நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை களாகும். இக்கூட்டுறவு வங்கியை ஒரு தலைமை வங்கியாக ரிசர்வ் வங்கி அங்கீகரிக்கவில்லை. அதனால் ரிசர்வ் வங்கியினால் கொடுக்கப்படும் மறுநிதி உதவி வசதிகளையும் மற்ற கடன் உத்தரவாத வசதிகளையும் இந்த வங்கி பெற முடியவில்லை.

கைத்திறத் தொழில்கள்.

27. தென்காசியில் உள்ள நார் தயாரிப்பு நிலையம், கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும் நிலையம் ஆக இரண்டு உற்பத்தி நிலையங்கள் தற்போது தொழில் வாணிகத் துறையில் உள்ளன. நார் தயாரிப்புப் பிரிவானது கலப்பு நார் மூலம் மெத்தைகள் தயாரித்து, மருத்துவ மனைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. இப்பிரிவு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை 58 டன் கலப்பு இழையைத் தயாரித்துள்ளது. 65 டன் கலப்பு நார் இழையை விற்பனை செய்துள்ளது. கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும் நிலையத்தை தருமபுரி மாவட்ட வளர்ச்சி நிறுவனத் திற்கு மாற்றி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பல்வேறு கைத்திறப் பொருள்கள் உற்பத்தியில் ஈடு பட்டுள்ள கைத்திறப் பணியாளர்கள் குறித்த புள்ளி விவரங் களைத் திரட்டுவதற்காகவும் கைத்திறத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும் விவரங்களைத்திரட்ட கைத்திறத் தொழில் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் கள் கைத்திறத் தொழிற்பிரிவுகளை பதிவு செய்கின்றனர். மூன்று ஆண்டுகள் கால அளவுவரை இவற்றிற்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை 17,705 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. 16,794 தொழிற் பிரிவு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு, பதிவு ஆகியவை குறித்த பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்னை நார்த் தொழில்.

28. தமிழ்நாட்டில் தற்போது பத்து தென்னை நார்த் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு மத்திய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

ஆகும். ஒன்று மாநில நார் விற்பனை மையத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆகும். தென்னை நார் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களும் சங்க உறுப்பினர்களும் உற்பத்தி செய்யும் நார்ப் பொருள்களை தென்னை நார் விற்பனை மத்திய தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன.

ஈத்த மொழியில் செய்யப்பட்ட தென்னை நார்ப்பள்ளி யின் சொத்து உடைமைகளை மேற்கொண்டு, நாகர் கோயில் மாவட்ட தென்னை நார் விற்பனை மத்திய தொழிற் கூட்டுறவுச் சங்கம் பெரிய அளவில் தென்னை நார் எடுக்கவும், நார் விரிப்புகள், தேயிலைக் கோணிகள், தூசு மிதியடிகள் ஆகியவற்றைத் தயாரிக்க வகை செய்யும் திட்டமொன்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு வேண்டிய பணியாளர்கள் தந்துள்ளதோடு 1976 ஜனவரித் திங்களில் 45,000 ரூபாய் அரசின் பங்கு மூலதனமாக இச்சங்கத்திற்கு வழங்கப் பட்டது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து தாயகத்திற்கு திரும்பியவர்களுக்கு இச்சங்கம் பயிற்சி அளிக்கும். பயிற்சிக்குப் பின்னர், இச்சங்கத்தின் உற்பத்திப் பிரிவில் அவர்களைப் பணியில் அமர்த்தும். அகதிகள் கூட்டுறவு நிதி வளர்ச்சி வங்கி, இத்திட்டத்திற்கென 3·35 இலட்சம் ரூபாய்க்கு உதவி செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இது வரையில் இவ்வங்கி 77,500 ரூபாய் தந்துள்ளது. ஐம்பது அகதிகள், இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர். மாநில அரசின் 0·10 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் உட்பட, 1.46 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் கொண்ட தமிழ்நாடு மத்திய தென்னை நார் விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கம், 36 உறுப்பினர் களுடன் தஞ்சையைத் தலைமையிடமாகக்கொண்டு செயல் பட்டு வருகின்றது. உறுப்பினர்கள் அனைவரும், இயந்திர முறையில் நாரெடுக்கும் தொழிற் பிரிவுகளின் உரிமையாளர் களாவர். தமிழ்நாட்டில் இயந்திர முறையில் நாரெடுக்கும் தொழிற் பிரிவுகள் 110 உள்ளன. இத்தொழிற் பிரிவுகளின் உரிமையாளர்கள் அனைவரையும் இச்சங்கத்தின் உறுப்பினர் களாக பதிவு செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி மேற்படி தமிழ்நாடு மத்திய தென்னை நார் விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி விற்பனையின் அளவு ரூ. 1·38 இலட்சத்தை எட்டியது. இதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், அதிக அளவில் பழுப்பு நிற கயிறு நார்களைப் பெறவும் ரூ. 6.65, இலட்சம் செலவில் இச்சங்கத்தில் சுருட்டப்பட்ட நார்

உற்பத்திப் பிரிவு ஒன்றை தொடங்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு புதுக் கோட்டையிலுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நிதி உதவி செய்யும். மேற்சொன்ன பிரிவைத் தொடங்க இச்சங்கத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டுப்புழு வளர்த்தல்.

29. மேம்பட்ட முசுக்கட்டை இனங்களின் ஒட்டுப் பதியன்களை வழங்கும் பொருட்டு, இம்மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் பத்து முசுக்கட்டை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1976–77ஆம் ஆண்டில் வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் புதிதாக இரண்டு முசுக்கட்டை பண்ணைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முசுக்கட்டை பண்ணைகள் புதிய ரக முசுக்கட்டை மர இனங்களைப் பெருக்கியும் பட்டுப்புழு வளர்ப்போர் பாசன முறையில் பயிரிட விதைப் பொருள்களை வழங்கியும் வருகிறது. மேலும் சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தீவிர பட்டுப்பூச்சி வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களில் முசுக்கட்டை மரம் வளர்க்கப்படும் பகுதிகள் 825 ஏக்கருக்கு மேல் உள்ளன. தளி, பேரிகை, வாணியம்பாடி, கோயம்புத்தூர், பழனி ஆகிய 5 இடங்களில் அமைந்துள்ள பட்டுப்புழுக்கூடு விற்பனை நிலையங்கள், பட்டுப்புழு வளர்ப்போர் தாங்கள் உற்பத்தி செய்த பட்டுப்புழுக்கூடுகளை விற்பனை செய்து உடனடியாக பணம் பெற உதவிபுரிந்து வருகின்றன. இந்த ஐந்து பட்டுப்புழுக்கூடு விற்பனை நிலையங்கள் ரூ. 15·00 இலட்சம் மதிப்புள்ள சுமார் 1,00,000 கிலோ கிராம் பட்டுப் புழுக் கூடுகளை விற்பனை செய்துள்ளது.

ஓசூர், கொலட்டி, சேலம், வாணியம்பாடி, சத்யமங்கலம், மதஹள்ளி ஆகிய இடங்களிலுள்ள ஆறு துணை நிலையங்கள் புதிய இனங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றன என்பதை நேரடியாகக் கண்டறிந்து குறிப்புகளை எடுத்து குன்னூரிலுள்ள ஆராய்ச்சி விஸ்தரிப்பு நிலையத்திற்குக் கொடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் தீவிர அபிவிருத்தி திட்டமொன்று, மத்திய பட்டுவாரிய உதவியுடன் 1977–78 மற்றும் 1978–79 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூ. 52.63 இலட்சம் செலவில் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் விவரமாவது :—

1. முசுக்கட்டை பயிர் நிலப்பரப்பை விரிவாக்குதல்.

2. பட்டுப்புழு வளர்ப்பு, விற்பனை மற்றும் விற்பனை பயன்களை ஏற்படுத்துதல்.

3. மற்றும் நிர்வாகம்.

1977–78-ம் ஆண்டிற்கு ரூ. 3 இலட்சங்களை நிர்வாகம் மற்றும் அலுவலர்கள் செலவினங்களுக்காக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும்பொழுது ஏற்கனவே உள்ள 12,000 ஏக்கரா தவிர சுமார் 12,000 ஏக்கரா அதிகப்படியாக விரிவடைவதுடன் அதிகப்படியாக ஆண்டுக்கு 25 லட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி அதிகரிக்கும்.

பட்டு நூற்பு ஆலைகள் திட்டமிட்டப்படி ஆரம்பிக்கப்படின் கூடுதல் $2\frac{1}{4}$ இலட்சம் கிலோ பட்டு உற்பத்தி ஆவதுடன் இம்மாநில பட்டுத் தேவையினை 35 சதவிகிதம் பூர்த்தி செய்யும். சுமார் 48,000 கிராமவாசிகளுக்கு இத் தொழிலில் வேலைவாய்ப்பு ஏற்படும். தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது முசுக்கட்டை மரங்கள் பயிரிடப்படும் பகுதி சுமார் 13,000 ஏக்கர்கள் ஆகும். இது 1978–79 ஆம் ஆண்டுக்குள் 15,000 ஆக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978–79ஆம் ஆண்டில் வட ஆற்காடு, சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 20 பட்டிழை கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் இவைகளைத் தொடங்க, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்பாக, தொழில்—வணிக இயக்குநர் இடங்களைத் தெரிந்தெடுத்து அரசுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் மொத்தப் பட்டுப் புழுக்கூடு உற்பத்தி 1,200 மெட்ரிக் டன்களாகும். ஆனால் தமிழ்நாட்டிலேயே பட்டிழை எடுப்பது 231 மெட்ரிக் டன் மட்டுமே. எனவே பட்டிழை எடுப்பதற்கான வசதிகளைப் பெருக்கி வருகிறோம்.

கிராமத் தொழில் திட்டம்.

30. பொதுவசதி நிலையங்கள், துறை உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், உள்ளூரிலுள்ள பரம்பரைக் கைத்திறப் பணியாளர்களுக்கு கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவை கிராமத்தொழிலில் திட்டப் பகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தில் அடங்கும். கிராமத் தொழில் திட்டத்தின் ஏனைய நடவடிக்கைகளில் அடங்கியவை—

1. பல்வேறு கிராமத் திட்டங்களில் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

2. சிறுதொழில் பணிநிலையம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிதி உதவி நிறுவனங்கள் ஆகிய முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

3. தேவைப்படும் நேரத்தில் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கைகளை நிதி உதவி நிறுவனங்களுக்கு அளித்தல்.

4. புதிய தொழில்களை அமைக்க தொழிலதிபர்களுக்கு உதவுதல்.

5. விரிவாக்கப் பணிகள் செய்தல்.

6. தொழில் துவங்க, தொழில் முனைவர்களைத் தெரிந்தெடுத்தல்.

7. திட்ட அளவிலான குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், தொழிலதிபர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

8. தனிப்பட்ட தொழில் துவங்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்.

9. பிற நடவடிக்கைகள்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ், கிராமத் தொழில் திட்ட மைய நிதியிலிருந்து, ஆண்டொன்றுக்கு $7\frac{1}{2}$ சதவீதம் என்ற குறைந்த அளவு வட்டிக்கு தனியார் தொழில் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ் நாட்டில் கனிவளம்.

31 பெரும்பாலான தொழில்களுக்குக் கனிப்பொருள்கள் அடிப்படையாக அமைந்து இருப்பதால், கனிவளங்களை ஆய்வு செய்வதற்கான நவீன, சிறந்த முறைகளைப் பயன்படுத்தி, புதிய கனிவளப் படிவங்களைக் கண்டுபிடிப்பதில் தமிழக அரசு தன் கவனத்தைச் செலுத்தியுள்ளது. அரசு, புதிய கனிவளத் தொழில்களைத் தொடங்குவதற்கான பகுதிகளையும், ஏற்கெனவே செயல்பட்டுவரும் கனிவளத் தொழில்களை விரிவு படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் கண்டறிந்து வருகிறது. தமிழ்நாட்டில், பூமியின் மேற்பரப்பில் காணப்பட்ட கனிப் பொருட்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டு எடுக்கப்பட்டு விட்டன. எனவே, பூமிக்கடியிலுள்ள கனிவளப் படிவங்களைக் குறிப்பாக மூலக்கனிப் பொருள்கள், கதிர்-இயக்கக் கனிப் பொருள்கள். ஏனைய தொழில் கனிப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டெறிய புதிய முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும், தீவிர ஆய்வுகள் செய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருச்சி மாவட்டம், அரியலூர், நகரத்தில் கிழக்குப் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டதன் விளைவாக, அரியலூரில் அரசு தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம் மூலம் ஒரு சிமிட்டி தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. கல்லாற்றின் தெற்குப் பகுதிகளிலும், மேற்கொண்டு ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அப்பகுதியில் சிமிட்டிக்கேற்ற 50 மில்லியன் டன் சுண்ணாம்புக் கற்கள் (75 சதவீதம் முதல் 95 சதவீதம் வரை சுத்தமான) இருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் திருகாமலை, சிற்றேரி மலைப்பகுதிகளில் மின்னணுத் தொழில்களுக்கான உயர்ரக மாக்னசைட் ஆய்வு செய்யும் ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கண்ணாடி தொழிலுக்குப் பொருத்தமான சிலிகா மணல் கிடைப்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்னார்க்காடு மாவட்டம் மரக்காணம் அருகே 10 மில்லியன் டன் சிலிகா மணல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் பணிகள் நிறைவேறி வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கப்பட்ட ஆய்வுகள், செங்கீரைசெட்டிப் பட்டி, எருச்சி முதலிய பகுதிகளுக்கருகில் சுடு செங்கலுக்குரிய களிமண் கிடைப்பதை வெளிப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விமானம் மூலம் நில அமைப்பினை ஆய்வு செய்ததன் அடிப்படையில் நில அமைப்பு முரண்பாடு பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய ஒரு ஆய்வு, பவானி அருகே மாரப்பன்பாளையம் கிராமத்தில் செம்பு கிடைப்பதை வெளிப்படுத்தியது. அது போலவே தர்மபுரி மாவட்டம், சாமல்பட்டி அருகே மோட்டு

சூலக்கரையில், ஏற்கனவே இரசாயன ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, செம்பு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய துளையிடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அம்பத்தூரில் முன்னோடித் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட வெர்மிகுலேட் சிம்பு தயாரிக்கும் தொழிற்சாலை சிம்புப்பொருட்களை வெற்றிகரமாக தயாரித்து வருகிறது. சேலத்தில் கனிவளச் சோதனைக் கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கனிவளத்தை முறையாக மதிப்பீடு செய்யும் நோக்கத்தோடு திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் மூன்று கனிவள வட்டார சிறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய குழுக்கள் மிகவும் பயனுள்ளனவாய் இருக்கின்ற காரணத்தால் மேலும் மூன்று வட்டார குழுக்களை அமைப்பதற்கு 1978–79ஆம் ஆண்டு புதிய திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புவியியல் அமைப்புக் குறித்து முக்கிய கூறுகளைக் கண்டறியும் பொருட்டு, அகமதபாத் இந்தியா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் வட்டார அளவில் ஆராய்ச்சி நடத்துவதற்கான திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. புவியியல் அமைப்பு நில உருவாக இயல் கூறுகள், கனிவளப் படிவங்கள், நில நீர் ஆகியவற்றை எடுப்பது குறித்து தகவல் அளிக்கக்கூடிய பயனுள்ள புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுப்பணி சேலம், தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 10,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கருங்கல் ஒரு சிறு கனிப்பொருளாகும். இது தற்போது மாநில சுரங்க விதிகளின்கீழ் தனிப்பட்ட தொழில் முனைவோருக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. பெருமளவு ஆதாயத்துடன் ஜப்பான் நாட்டுக்கு இதனை குத்தகை எடுப்பவர்கள் ஏற்றுமதி செய்கின்றனர். தனிப்பட்ட தொழில் முனைவோருக்குக் குத்தகைக்கு விடுவதை நிறுத்தி விடுவதற்கும், இக்கனிப்பொருளையும், ஏனைய கனிப்பொருட்களையும், வெட்டியெடுக்கும், பணியை அரசு முகவரமைப்பு ஒன்றிடம் ஒப்படைப்பதற்கும், அரசு எடுத்துள்ள கொள்கை முடிவைத் தொடர்ந்து அரசு "தமிழ்நாடு கனிவள நிறுவனம்" என்ற பெயரில் கனிவள மேம்பாட்டு நிறுவனத்தை அமைத்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இந்நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக ரூபாய் 20·00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் செலவை ஏற்பதற்காக 1977–78-ல் ரூ. 7·5 இலட்சம் (பங்கு மூலதனமாக) அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசின் முடிவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தனிப்பட்டவர் தொடுத்த வழக்கு ஒன்று நடந்து வருகின்றது.

தமிழக அரசு நிறுவனமான டான்சிக்கு கடந்த ஆண்டு தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 81·52 ஏக்கர் நிலப்பரப்பில் கருப்புக் கல் வெட்டி எடுக்கும் குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. இந்நிறுவனம், கருப்புக்கல் வெட்டி எடுக்கும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. டோக்கியோவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு, 1,000 கன மீட்டர் அளவுள்ள கருப்புக் கல் தேவை ஆணையை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் நிறைவு செய்யும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

32. தொழில் வணிக இயக்குநரது பொறுப்பின்கீழ் 1978–79 ஆம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் சில முக்கிய புதிய திட்டங்கள் வருமாறு:—

1. விசையேற்றங்கள் (pumpsets) சோதனை செய்வதற்கான வசதிகளைச் செய்து தருவதற்கு கோயம்புத்தூர் வட்டார சோதனை ஆய்வுக்கூடத்தை விரிவு படுத்துதல்.

2. திருச்சிராப்பள்ளி வட்டார அறிவியல்-தொழில் ஆய்வுக் கூடம் ஒன்றை அமைத்தல்.

3. தற்போதுள்ள வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களை விரிவுபடுத்தல், வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களைப் புதிதாக அமைத்தல்.

4. தமிழ்நாடு கனிவளங்கள் நிறுவனத்திற்கு பங்கு மூலதன உதவி.

5. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சிறு தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் பணி-தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு அமைத்தல்.

6. இருபது பட்டிழை சுற்றும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல்.

7. விரிவுப் பணித் திட்டத்திற்காக நீலகிரி மாவட்டத்தில் ஆறு தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் பங்கு மூலதனம் அளித்தல்.

8. இராமநாதபுரத்திலும் திருநெல்வேலியிலும் 50 தீப்பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

இந்த நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(1) தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் கொட்டகைகளைக் கட்டித் தருதல்.

(2) சிட்கோ-டிஐஐசி கூட்டுத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்களை தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குதல்.

(3) சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும், இன்றியமையாத மூலப் பொருட்களை கொள்முதல் செய்து வழங்குதல்.

(4) சிறுதொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களது விற்பனைக்கு உதவுதல்.

(5) "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் / வேலை வாய்ப்பு" பெருக்கத் திட்டத்தின்கீழ் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

(6) பின் தங்கிய பகுதிகளில் உள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு மத்திய மூலதன உதவித் தொகையை வழங்குதல்.

(7) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி உதவி.

(8) தொழிற்பேட்டைகள், சீர் செய்த மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நிர்வகித்தல்.

(9) புதிய கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்குக் கடன்கள் வழங்குதல்.

(10) அகதிகள் கூட்டுறவு நிதி—வளர்ச்சி வங்கியின் ஒத்துழைப்புடன் சிறு தொழில்களுக்கு கடன்கள்.

பணிக் கொட்டகைகள் கட்டுதல்.

2. 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய தவணைக் கொள் முதல் முறையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் ரூ. 319 இலட்சம் மதிப்புள்ள பணிக் கொட்டகைகளை 347 தொழில் முனைவர்கள் பெற்றுள்ளனர். மேலும் 1977–78ஆம் ஆண்டில், அம்பத்தூர், ஹோசூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மாத்தூர், திருச்செங்கோடு, நாமக்கல், கிருஷ்ண கிரி, வடலூர் ஆகிய இடங்களில் ரூ 205 இலட்சம் மதிப் பீட்டுச் செலவில் மேலும் 200 கொட்டகைகளைக் கட்ட சிறு

தொழில் வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது. இதனால் சுமார் 2,050 பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 1,070 பேர் கிராமப் பகுதிகளிலும், 980 பேர் நகர்ப்பகுதிகளிலும் வேலை வாய்ப்பு பெறுவர். அம்பத்தூர், கிண்டி, சேலம், திண்டுக்கல் போன்ற இடங்களில் உள்ள சின்னஞ்சிறு தொழிற் பிரிவுகள் தேவையை நிறைவு செய்ய கொட்டகை ஒன்றுக்கு 5,900 ரூபாய் செலவில் 14 இலட்சம் மொத்தச் செலவில், மேலும் 200 கொட்டகைகளைக் கட்டவும் கருதப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நகர்ப் புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 1977–78 முதல் 1979–80 வரை ரூ 220 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 120 பணிக்கொட்டகைகள் கட்டவும் கருதப் பட்டுள்ளது.

சிறு தொழில்களுக்கு இயந்திரங்கள் வழ்ங்குதல்.

3. 1970 அக்டோபர் முதல் 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரை 1,201 தொழில் முனைவர்களுக்கு ரூ. 531 இலட்சம் மதிப்பிற்கு "சிட்கோ" உதவியுள்ளது. இதனால் சுமார் 15,600 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் "சிட்கோ" இயந்திரங்களுக்கான கடன் உதவியை நேரடியாக வழங்குவதை நிறுத்தியுள்ளது. தற்போது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்—சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 1,686 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இறுதி வரை 1,050 சிறு தொழில் முனைவர் களுக்கு "சிட்கோ" உதவியுள்ளது.

4. மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.

இரும்பு, உருக்கு, சுட்ட நிலக்கரி, எரிசோடா, மாமிசக் கொழுப்பு, தீப்பெட்டி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு ஆகிய மூலப்பொருள்களை ரூ. 2,910 இலட்சம் மதிப்பிற்கு 1970 அக்டோபர் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய "சிட்கோ" வழங்கியது. மேலும் இதே காலவரையில், அதாவது, 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்களுடன் முடிவடைந்த கால அளவிற்கு ரூ. 321 இலட்சம் மதிப்பிற்கு ஏஜென்சி அடிப்படையில் அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. 1975–76-லிருந்து இரும்பு உருக்குப் பொருள்களின் விற்பனையில் ஏற்பட்ட மந்த

நிலையின் காரணமாக, ''சிட்கோ'' முன்னெச்சரிக்கையுடன் அதன் செயல் திட்டங்களை மாற்றி அமைத்ததின் மூலம், இதர மூலப்பொருட்களை சிறுதொழில் அமைப்புகட்கு கிடைக்க வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருட்கள் குறிப்பாக வத்தி மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரைட், இரும்பு முதலியன தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் மூலம் விநியோகம் செய்யப் படுகின்றன. குறிப்பாக பாரபின் மெழுகு நமது தேவைக்கு சுமார் 10,000 டன்களும், தீப்பெட்டி மெழுகு 6,000 டன்களும் ஆண்டொன்றுக்குத் தேவைப்படுகின்றது. ஆயினும் இந்திய சர்க்காரிடமிருந்து இரண்டும் சேர்ந்து நமக்குக் கிடைப்பது சுமார் 6,600 டன்கள்தான். இது நமது தேவையில் 41 சதவீதமே ஆகும். ஆகவே தேவையான அளவு மெழுகு சிறு தொழில்களுக்கு வழங்க இயலவில்லை. இதை ஒட்டி சுத்திகரிக்கப்படாத மட்ட மெழுகு தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளது. இதனை சுத்திகரிப்பதற்கான தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இவை செயல்படத் தொடங்கும் போது, நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சென்னையிலுள்ள பெட்ரோலியம் எண்ணெய் ஆலையினர் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

5. சிறு தொழில் பிரிவுகளுக்கு விற்பனை வசதியை ஏற்படுத்தி தருதல்.

சிறு தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு விலை முன்னுரிமையை அளிக்கும் அரசின் முடிவையொட்டி, தொழிற்பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை பெரிய அளவில் விற்பனை செய்ய 'சிட்கோ' விரும்பியது. இந்த ஆய்வாண்டில், தொழில் நுட்ப கைவினைப் பொருட்கள் பிரிவு தயாரித்த சீலிங் மின்விசிறியை விற்பனை செய்வதில் 'சிட்கோ' உதவியுள்ளது. பாலிதின் பைகள், தார்வண்ணச் சாயம், ஆட்டோமொபைல் புஷஸ் போன்றவற்றிற்கு ஆணைகளைப் பெற்றுத் தருவதிலும் 'சிட்கோ' உதவியுள்ளது.

6. மத்திய மூலதன உதவித் தொகை வழங்குதல்.

1974-ம் ஆண்டு எப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாள் வரை மத்திய முதலீட்டு உதவித் தொகை திட்டத்தின் கீழ் 639 புதிய பிரிவுகளுக்கு

கீழ்க்கண்டவாறு உதவித் தொகை இந்த நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது:—

	1974–75.	1975–76.	1976–77.	1977–78.
				(ரூபாய் இலட்சங்களில்.)
எண்ணிக்கை ..	105	145	156	2[illegible]3
ஒப்பளிக்கப்பட்டவை.	11·69	40.31	38.86	57.34
கொடுக்கப்பட்டவை.	3.59	22.44	35.22	30.68

7. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழும், வேலை வாய்ப்பு பெருக்கத் திட்டத்தின் கீழும் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

இத்திட்டத்தின்கீழ், 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய தொழில் நுட்பவினைஞர்கள் உட்பட படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு ரூ. 250 இலட்சம் அளவிற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 1,407 பேர் பயனடைந்தனர்.

8. ஏற்றுமதி/அதிக அளவில் இறக்குமதி செய்ய சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி.

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மின்னணு பாகங்களையும், ஜிப் பேசனர்கள் (Zip Fasteners) இறக்குமதியை செய்ய 'சிட்கோ' சிறு தொழில் பிரிவுகளுக்கு உதவியுள்ளது. மூக்குக் கண்ணாடி பிரேம்கள், சாவிகள், பட்டுக் குஞ்சங்கள், கைக்குட்டைகள், கைவினைப் பொருள்கள், ஆகியவற்றை ரூ. 1,10,252 மதிப்பிற்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய நேரடியாக அது ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதி விற்பனைமீது ரூ. 3,861 ஊக்கத் தொகையை 1976–77-ல் இந்திய அரசிடமிருந்து இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

9. தமிழக அரசின் சார்பில் தொழிற்பேட்டைகள் மற்றும் சீரமைக்கப்பட்ட மனைகள் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

தமிழகத்தில் உள்ள தொழிற்பேட்டைகளையும், சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளையும் அரசின் சார்பில் நிர்வகிக்கும் பொறுப்பு 'சிட்கோவிற்கு' அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி 33 தொழிற்பேட்டைகளும், 6 சீரமைக்கப்பட்ட மனைப்பேட்டைகளும் 'சிட்கோ' ஏற்று நடத்துகிறது. அரசுத் தொழிற்பேட்டைகளை மேலாண்மை செய்யும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முகமைப் பணிகள் பின்வருமாறு:—

(1) அரசுச் சொத்தை வாங்குதலும் விற்பனை செய்தலும் சம்பந்தப்பட்ட பணிகள்.

(2) புதிய அமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கு முதற்பொருள் செலவு செய்தல் பற்றியவை.

(3) தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

இதன்படி 783 தொழிற் கூடங்களையும், குறைந்த வாடகை தொழில் வீட்டு வசதி திட்டத்தின்படி கட்டப்பட்ட 1,117 தொழிலாளர் குடியிருப்புக்களையும் 1974ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் 'சிட்கோ' நிர்வகித்து வருகிறது. மற்றும் தமிழக அரசின் சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளை நிர்வகிக்கும் பொறுப்பும் சிட்கோவிற்கு அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

10. அகதிகள் கூட்டுறவு நிதி வள வங்கியின் உதவியுடன் சிறு தொழில்களுக்கு கடன்கள்.

1978 ஜனவரி முதல் தொடங்கப்பட்ட இத் திட்டம், நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அகதி ஒருவருக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில், அகதிகள் கூட்டுறவு நிதிவள வங்கி, அனுப்பிய அகதிகளை வேலைக்கமர்த்திய சிறு தொழில் பிரிவுகளுக்கு கடன்கள் வழங்க வகை செய்கிறது.

11. வருங்காலத் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டுக்கான 'சிட்கோவின்' திட்டத்தில், சிறு தொழில்களுக்கான பணிக்கொட்டகை கட்டுதல், தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழிற்சாலைக் கொட்டகை கட்டுதல் ஆகியவை அடங்கும். இன்றியமையாத வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கான முதலீடு ரூ. 354 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

	(ரூபாய் இலட்சங்களில்.)
சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டுதல் ..	23.60
தவணை முறைத் திட்டத்தின்கீழ் தொழிற்கூடங்கள்.	250.00
மத்திய மூலதன மானியம்	30.00
சிட்கோ அகதிகள் மறுவாழ்வு மற்றும் கூட்டுறவு நிதி வள வங்கி திட்டத்தின்கீழ் உதவி	50.00
நிர்வாகப் பயிற்சி	0.45
மொத்தம் ...	354.05

இத்துடன் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சிட்கோ திட்டப் பணிக்காகத் தனியாக ரூ. 40 இலட்சம் கடனாக அரசால் வழங்கப்படும். நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ரூ. 37 இலட்சம் திரட்டப்படும். தொழில் முனைவர்களிடமிருந்து ரூ. 9 இலட்சம் பெறப்படும். இவ்வாறாக, மொத்தச் செலவு ரூ. 86 இலட்சமும் சரிக்கட்டப்படும். இந்த நிறுவனம் ரூ. 1,672 இலட்சம் வியாபாரத் தொகை காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 21,822 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். இதில் 11,661 பேர் கிராமப் பகுதியிலும், 10,161 பேர் நகர்ப்புறப் பகுதியிலும் இருப்பர்.

தொழிற் பேட்டைகளில் உள்ளனவும், சிட்கோ உதவி பெறுவனவுமான சிறு தொழில் அமைப்புகளில் நலிவடைந்த அமைப்புகளை இனங்கண்டு அவற்றிற்கு மறுவாழ்வு வழங்கிட வசதியாக பொது மதிப்பாய்வு நடத்திட 'சிட்கோ' உத்தேசித்துள்ளது. விரிவான முறையில் அமைந்த ஆலோசனைப் பிரிவும் 'சிட்கோவில்' ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி).

அரசு 1965-ம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தை (டான்சி) அமைத்தது. தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 65 தொழிற் பிரிவுகளை வணிக அடிப்படையில் நடத்தும் நோக்கத்துடன் அரசு, இந் நிறுவனத்திற்கு மாற்றியது. 1—12—1965 அன்றையபடி டான்சிக்கு மாற்றப்பட்ட இருப்புக்களின் மதிப்பு ரூ. 989 இலட்சமாகும். இத் தொகையில் ரூ. 400 இலட்சம் பங்கு மூலதனமாகவும் எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

2. நிறுவனம் மேற்கொண்ட புதிய திட்டப் பணிகளின் நிலையான மூலதனச் செலவை (இயந்திரங்கள் முதலியன வாங்குவதற்காகும் செலவு ஏற்பதற்காக பங்குத்தொகையாகவும் கடனாகவும் அரசு உதவி அளித்து வருகிறது. ரூ. 150 இலட்சம் கடன் தொகையை பங்கு மூலதனமாக மாற்றுவதன் மூலம் நிறுவனத்தின் கடன் பங்குத் தொகை விகிதம் (Debt Equity Ratio) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. இந்த நிறுவனத்தில் தற்போது 57 உற்பத்திப் பிரிவுகள் உள்ளன. கீழே குறிப்பிட்டுள்ளவாறு அவற்றை ஒன்பது தொகுதிகளாகத் தொகுக்கலாம்:—

1. கட்டுமானப் பட்டறைகள்
2. கருவிப் பட்டறைகள்
3. வார்ப்படச்சாலை
4. பொறியியல் பிரிவுகள்
5. 'பேப்ரிகேஷன்' பிரிவுகள்
6. தச்சுத் தொழில்கள்
7. தோல் தொழில்கள்
8. கண்ணாடிப் பொருள்
9. பல்வகை/சிறப்புவகைப் பிரிவுகள்.

4. இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு கடந்த ஆண்டுகளில் அதிகரித்து வந்துள்ளது. இது 1965—66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. 1976—77-ல் ரூ.1,062 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1976—77-ல் விற்பனை ரூ. 1,022 இலட்சமாக இருந்தது. 1977—78-ல் (1977 டிசம்பர் முடிய) உற்பத்தி அளவு ரூ. 650 இலட்சமாக உள்ளது. பல்வேறு ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் பிரிவுகள் வேறுபட்ட ஆதாய, விரய விவரங்களைக் காட்டுகின்றன. முன்பு இந்த நிறுவனம் ஆதாயத்தை ஈட்டிய போதிலும் கடும் போட்டி காரணமாக கடந்த சில ஆண்டுகளில் இது இழப்பு அடைந்துள்ளது. போதுமான அளவுக்கு உற்பத்திக்கான கோரிக்கைகளை இந்த நிறுவனம் பெற முடியவில்லை; கிடைத்தவற்றிலும் பெற்ற பண வீதங்கள், நிறுவனம் முன்னர் பெற்ற வீதங்களைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன. வணிக வகையில் தனித்தியங்கும் உற்பத்தி நிலையங்களாக இப்பிரிவுகளை நடத்த இந்த நிறுவனம் முயற்சிகளை எடுத்து வருகிறது.

5. ''டான்சி'' தனது நடவடிக்கைகளை பலதிறப்படுத்தியுள்ளது. 'தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட்' என்றழைக்கப்படும் புதிய துணை நிறுவனம் மூலம் 'மாயூரம்' என்ற விற்பனைப் பெயரில் மொபெட்ஸ் ஸ்கூட்டர்களை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இராணிப்பேட்டையில் இயந்திரக் கருவிகள் தயாரிப்பது மற்றொரு திட்டமாகும். இத்திட்டத்திற்கான கட்டிடங்கள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. தென்னார்க்காடு மாவட்டம் குன்னம் கிராமத்தில் உள்ள தனது கல் உடைக்கும் தொழிற்சாலையில் வணிக முறையில் வெட்டியெடுப்பதற்காக 'டான்சி' கருங்கல் படிகங்களை வெட்டியெடுக்கத் தொடங்கியுள்ளது. கருங்கற்களை (Hand dressed granites) ஏற்றுமதி செய்வதற்காக ரூ. 36 இலட்சம் அளவிற்கு புகழ் பெற்ற ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் ரூ. 17·4 இலட்சம் மதிப்புள்ள கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக்கருவிகள் தயாரிப்பு நிறுவனம் வழங்கிய பாகங்களைக் கொண்டு கடிகாரம் செய்வதற்கான திட்டம் ஒன்று டான்சியால் செயல்படுத்தப்படுகிறது. உதகமண்டலத்தில் உள்ள இத்தொழிற்

சாலைக் கட்டிடங்கள் முடிவுற்று 21 பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி முதல் ஆரம்ப கட்ட உற்பத்தி தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்

இம்மாநிலத்தில் உள்ள கைத்திறப் பொருள் விற்பனைக்கு உதவ, அவற்றை உருவாக்கும் திறனை வளர்க்க, அவற்றை உருவாக்குபவர்களுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தர தமிழ்நாடு கைத்திறப் பொருள் *வளர்ச்சி நிறுவனம் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 1-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

2. அதற்கு முன்பு தொழில் வணிகத் துறையின் பொறுப்பில் இயங்கி வந்த விற்பனை மற்றும் உற்பத்தி பயிற்சி நிலையங்களின் இருப்புகளையும், பொறுப்புகளையும், சென்னை மாநில கைத்திறப் பொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வியாபார இருப்புகளையும் நிறுவனம் மேற்கொண்டது.

3. விற்பனை நிலையங்களின் தோற்றத்தை மேம்படுத்தவும், வெளி நாடுகளில் நடைபெறும் பொருட்காட்சிகளில் பங்கு கொள்வதை மேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, அந்நிய நாடுகளில் கைத்திறப் பொருட்களில் வியாபாரம் செய்துவருபவர்கள் நிறுவனங்களிடமிருந்து இந்த நிறுவனம் தற்போது பல தேவை ஆணைகளைப் பெற்று வருகிறது. விரைவில் இந்த நிறுவனம் கணிசமான அளவுக்கு அந்நிய செலவாணியை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. பயிற்சி நிலையங்களை நடத்துவதற்காக, பங்கு மூலதனத்திற்கு தொகை அளித்தல், கடன்கள், உதவித் தொகை கொடுத்தல் ஆகியவை மூலமாக இந்த நிறுவனத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனை நிலையங்களை ரூ.4.50 இலட்சம் செலவில் நவீனமாக்கவும், கன்னியாகுமரியில் சுமார் ரூ. 2.00 இலட்சம் செலவில் புதிய விற்பனை நிலையம் ஒன்றை திறக்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. கைத்திறப் பணியாளர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்க

அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக சென்னையில் இந் நிறுவனத்தின் வடிவமைப்பு நிலையம் ஒன்று உள்ளது. இங்குள்ள கைத்திறப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க கேரளா, ஆந்திரப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து கைத்திறப் பொருள் வல்லுநர்களை அழைத்து வரவும், இப்பொருட்களின் தொழில் நுட்ப உத்திகளையும் உற்பத்தி நடைமுறைகளையும் அவர்கள் அறிந்து கொள்ள இயலும் வகையில் அகில இந்திய கைத்திறப் பொருட்கள் வாரியம், பிற நிறுவனங்கள் நடத்திவரும் பல்வேறு வடிவமைப்பு நிலையங்களுக்கு பணியாளர்களை அனுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் இலாப, நட்ட விவரங்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளள :—

		(+) இலாபம்	(—) நட்டம்
		ரூ.	ரூ.
1973–74	..	(+) 2,748	..
1974–75	..	..	(—) 33,399
1975–76	..	..	(—) 8,49,475

இந் நிறுவனத்தின் விற்பனை பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

					[ரூபாய் இலட்சத்தில்]
1973–74	..	..	..	..	52.63
1974–75	..	..	..	..	1,33.60
1975–76	..	..	..	..	1,53.60
1976–77	..	..	..	..	1,50.85
1977–78	..	..	..	..	1,51.00
1978–1979 (எதிர்பார்க்கப்படுவது)					1,85.50

[1978 மார்ச் 27

தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (TACEL)

தமிழ்நாட்டில் அரசினரால் நடத்தப்பட்ட பல்வேறு மட்பாண்டம் பொருள் உற்பத்திப் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றின் அலுவல்களை வணிக அடிப்படையிலேயே அமைக்க ''தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்'' என்ற நிறுவனத்தை அரசு 1973 டிசம்பர் திங்கள் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 2.00 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 98.54 இலட்சமாகும். மேலும் அரசு ரூ. 98.56 இலட்சம் கடனுக வழங்கியுள்ளது. இந்நிறுவனம் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்திடமிருந்தும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திடமிருந்தும் (TANSI) 8 தொழில் பிரிவுகளை எடுத்துக் கொண்டு 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இவற்றில் 3 பிரிவுகள் வணிக அடிப்படையிலானவை. ஏனையவை வளர்ச்சி நோக்கமானவை.

வளர்ச்சியும் செயலும்—

தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்டின் மூன்று வணிகப் பிரிவுகள் அதாவது விருத்தாசலம், 'டாசெல்' பீங்கான் தொழிற்சாலை, டாசெல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம், டாசெல் இயந்திரச் தொழிற்சாலை, திருமழிசை ஆகியவை வரும் ஆண்டுகளில் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள பீங்கான் பொருட்களுக்காக குறிப்பிட்ட தொழிற்பேட்டை பொது வசதி பணி நிலையம் ஒன்று உள்ளது. விருத்தாசலத்தில் உள்ள இத்தொழிற் பேட்டையில் 35 தொழிற் கொட்டகைகள் உள்ளன. ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உள்ள ஆதாரத்துடன் கைவினையர்களுக்கும், சிறிய தொழில் முனைவருக்கும் 12 தொழிற் கொட்டகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ. 25,000-லிருந்து ரூ. 50,000 வரையிலான ஆதாரத்துடன் ஏனைய 23 கொட்டகைகளை சிறு தொழில் அதிபர்கள் எடுத்துக்கொண்டுள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள அடிப்படை இன்றியமையாத வசதிகளில், பதப்படுத்தப்பட்ட பொருள்கள் வழங்குதல், பொது உலையில் சுட்டுத்தருதல் ஆகியவை அடங்கும்.

1978 மார்ச் 27]

அடித்தள மக்களுக்கு வேலை வாய்ப்பு

இத் தொழிற்பேட்டையில் உள்ள தொழில் முனைவர்கள் சுமார் 600 பேருக்கு, முக்கியமாக சமூகத்தின் அடித்தள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றனர். அவர்களுடைய உற்பத்தி மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20·00 இலட்சமாகும். சிறிய தொழில் முனைவர்களுக்கு பெரிய அளவில் உதவும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த நிறுவனம், பணிநிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1,200 டன் உற்பத்தித் திறனுள்ள இயந்திரச் சூளை ஒன்றை நிறுவி வருகிறது. தொழில் முனைவர்கள் தங்களிடம் உள்ள வேலைவாய்ப்பு வசதியை இரட்டிப்பாக்க உதவுவதுடன், ஆண்டு ஒன்றில் உற்பத்தி மதிப்பை ரூ. 50·00 இலட்சமாக அதிகரிக்கவும் இம்முயற்சி உதவும். 1977–78-ல் இந்த பொதுப்பணி வசதி நிலையம் ரூ. 9.25 இலட்சம் அளவுக்கு பணிவசதி செய்துள்ளது. வரும் நிதியாண்டில் இது ரூ. 14·00 இலட்சமாக கூடுதலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும் பெரம்பூரிலுள்ள கலைப் பொருட்கள் நிலையமும் பயிற்சி உற்பத்தி இரண்டும் இணைந்த நிலையங்களாகும். இவற்றில் முறையே ஆண்டொன்றுக்கு 15 பேருக்கும் 10 பேருக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியாளர்களுக்கு மாதமொன்றுக்கு 50 ரூபாய் பயிற்சி உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. பழைய பண்பாடு நவீன பண்பாடுகளுக்கு உகந்த வகையில் பீங்கான் கலைப்பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்த இரு பிரிவுகளும் தனிக் கவனம் செலுத்துகின்றன. சென்னை, பம்பாய், டில்லி முதலிய ஊர்களில் கலையுணர்வுள்ள மக்களிடையே இரு நிலையங்கள் உருவாக்கிய பொருட்கள் நன்கு பிரபலமாயுள்ளன. இப்பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக சென்னை, பெங்களூர், கொச்சி முதலிய இடங்களில் இந்த நிறுவனம் விற்பனைக் காட்சிக் கடைகளை ஏற்படுத்தியுள்ளது. ஹைதராபாத்திலும் இக் கடை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளை மேம்படுத்தும் தனது முயற்சியில் சேலம் மாவட்டம் ஓமலூரில், சிறிய பீங்கான் தொழிற் பிரிவு ஒன்றை 'டாசெல்' நடத்தி வருகிறது. அதனுல் அருகில் உள்ள கிராமப்பகுதிகளைச் சேர்ந்த ஓரளவு படித்த இளைஞர்களை சுமார் 50 பேருக்கு இப்பிரிவு வேலைவாய்ப்பு

அளிக்கின்றது. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் கீழ்க்கண்ட 3 திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1978–79 ஆண்டுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

எதிர்காலத் திட்டம்

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. விருத்தாசலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் கூடுதலாக மூன்று கொட்டகைகள் கட்டுதல்.	6.00
2. விருத்தாசலத்தில் உள்ள பணிநிலையத்தை விரிவுபடுத்துதல்.	2.40
3. ஓமலூரில் கூடுதல் கொட்டகை கட்டுதலும், விரிவுத் திட்டமும்.	2.25
மொத்தம் ..	10.65

இத் திட்டங்களால் கூடுதலாக 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள்.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு துறைத் திட்டங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் கீழ்க் காணும் நான்கு பெரும் பிரிவுகள் அடங்கியுள்ளன. அவை யாவன :—(1) பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் (2) அனல் மின் நிலையம் (3) உரத் தொழிற்சாலை (4) நிலக்கரித் தூளைக் கரிக் கட்டிகளாக்கும் தொழிற்சாலை. நிலக்கரிச் சுரங்கத்தின் முதலாவது கட்டத்தில், ஆண்டொன்றுக்கு 3·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்க வேண்டுமென திட்ட மிடப்பட்டது. ரூபாய் 87 கோடி செலவில்ஆண்டு ஒன்றுக்கு

6·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக் கப்படும் வகையில் தற்போதுள்ள பழுப்பு நிலக்கரி சுரங்கத் தின் திறனை உயர்த்துவதற்கான ஒரு திட்டத்திற்கும் உரத் தொழிற்சாலையில் பழுப்பு நிலக்கரியை எரி பொருளாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு அதற்குப்பதிலாக ரூ. 12.57 கோடி செலவில் எரியெண்ணெயைப் பயன்படுத்துவதற் கான ஒரு திட்டத்திற்கும் இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. 30–9–1977-ல் அன்றுள்ளவாறு இந்த நிறுவனம் 16,735 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

இரயில் பெட்டித் தொழிற்சாலை, சென்னை.

3. இந்திய அரசு, இரயில்வே அமைச்சகத்தின் கீழ் உற் பத்தி தொழிற்சாலையாக இயங்கிவருகிற இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, நடப்பாண்டில் தொடர்ந்து ஏற்றுமதி ஆணைகளை நிறைவேற்றி வந்தது. இத்தொழிற்சாலை. தைவான், பர்மா, ஜாம்பியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளுக்கு இரயில் பெட்டிகளையும், உதிரிப் பாகங்களையும் வழங்கி வந்துள்ளது. 1–4–1977 முதல் 31–12–1977 வரை உள்ள கால அளவில், இது 491 பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31–12–1977 வரை இது உற்பத்தி செய்துள்ள வண்டிக்கூடுகள் 12,996 ஆகும். இவற் றில் 10,296 வண்டிக் கூடுகள் முழுமையான இரயில் பெட்டிகளாக தயாரிக்கப்பட்டு வெளிவந்தன. இந்த தொழிற்சாலை 13,147 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தொழிற்சாலை.

4. இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1.4 இலட்சம் டன் மசகெண்ணெய் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இத்தொழிற்சாலை ரூ. 88.89 இலட்சம் மூலதன முதலீட்டுடன் இயங்கி வருவதுடன், 180 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கிறது. இத்தொழிற்சாலையில் 1977 ஏப்ரல் முதல் 1977 டிசம்பர் வரை 63,056 கிலோ லிட்டர் மசகெண்ணெய் (மதிப்பு ரூ. 19 கோடி) உற்பத்தி செய்யப்பட்டது.

[1978 மார்ச் 27

சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற் சாலை.

5. இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை இப்பொழுது முழு உற்பத்தித் திறனில் இயங்கி வருகிறது. 1977 ஆம் ஆண்டில், ரூ. 254 கோடி மதிப்புள்ள 2.46 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் பிரித்தெடுக்கப் பட்டது. கீழ்க்கண்ட இனங்களைப் பொறுத்த மட்டில் 1976 ஆம் ஆண்டினை உற்பத்தியின் அளவுடன் ஒப்பிடு கையில், 1977 ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு உயர்ந் துள்ளது.

உற்பத்தி.		1977.	1976.
		('000 டன்களில்)	
விமான எரியெண்ணெய்	..	142	89
உயர்வேக டீசல் எண்ணெய்	..	540	530
தார்	..	189	180
மசகெண்ணெய் அடிப்படை	..	161	147

ஆண்டொன்றுக்கு சுமார் 20,000 டன் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையை 4.54 கோடி ரூபாய் செலவில் அமைப்பதும், 30,000 டன் லீனியர் அல்கையல் பென் சின் (Linear Alkyl Benzene) தயாரிக்கும் தொழிற் சாலையை 31.6 கோடி ரூபாய் செலவிலும் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 593.

சென்னை உரத் தொழிற்சாலை.

6. மணலியில் நிறுவப்பட்டுள்ள உரத் தொழிற்சாலை, 1971 நவம்பரில் உற்பத்தியினைத் தொடங்கியது. இது 1,079 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அமோனியா, யூரியா, போன்றவைகளாகும். இந்நிறுவனம், திருவாளர்கள் அம்கோ இந்தியா இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒன்றைச் செய்து

1978 மார்ச் 27]

கொண்டுள்ளது. திருவாளர்கள் அம்கோ இன்கார்பரேட்டட் நிறுவனம், சிகாகோவிலுள்ள அம்கோ அனைத்து நாட்டு எண்ணெய்க் கம்பெனியின் துணை நிறுவனமாகும்.

இத்தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனும், 1977 ஆம் ஆண்டின் உற்பத்தியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	நிறுவப்பட்ட திறன்.	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி.
	(மெட்ரிக் டன்.)	(மெட்ரிக் டன்.)
அமோனியா	347,500	194,329
யூரியா	292,000	242,928
என்.பி.கே.	544,500	418,725

கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.

7. போர்க் கவசவண்டிகள் மற்றும் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பிற வண்டிகளை உற்பத்தி செய்வ தற்காக, புது டெல்லியிலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின் கீழ் நிறுவப்பட்ட துறையின் தொழிற் பிரிவாகும்.

படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

8. இத்தொழிற்சாலை, பாதுகாப்புக்குத் தேவைப்படுகின்ற சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்கிறது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுபடி இத்தொழிற் சாலையில், இந்திய அரசு, ரூபாய் 971.04 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இத் தொழிற்சாலையில் தற்போது, 2,344 அதிகாரிகள், தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், சென்னை.

9. இத்தொழிற்சாலை, தொலை அச்சுப் பொறிகள் (Teleprinters) மின் தட்டச்சுப்பொறிகள், முத்திரைத்தாளை இரத்து செய்யும் தானியங்கு இயந்திரம், தொலைபேசி, தொலை தட்டெழுத்து (Telex) தொடர்பகங்களுக்கான மின்விசைப் பொறிகள், தொலை செய்தியை பதிவுசெய்து மீண்டும் வழங்கும் தானியங்கிப் பொறிகள் (regenerative repeaters) ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ரூ. 256.77 இலட்சம் மதிப்புள்ள 3,734 தொலையச்சுப் பொறிகளும், துணைக் கருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை 1,944 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

இந்துஸ்தான் நிழற்படச்சுருள் தொழிற்சாலை, உதகமண்டலம்

10. இத்தொழிற்சாலையில் திரைப்படச் சுருள்கள், ஊடுகதிர் படச்சுருள்கள், நிழற்படச்சுருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டில் ரூபாய் 3,561·45 இலட்சம் மதிப்புள்ள 9.150 மில்லியன் சதுர மீட்டர் அளவிற்குப் பலவகைப்பட்ட நிழற்படப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந் நிறுவனம் 2,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த பொருள்களின் விவரங்கள் பின்வருமாறு:—

உற்பத்தி.	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி. (சதுர மீட்டரில்.)	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
திரைப்படச் சுருள் பாசிட்டிவ்.	21,00,206	495.30
திரைப்படச் சுருள் (கலர்) பாசிட்டிவ்.	20,12,251	906.61
திரைப்பட ஒலி	4,42,245	115.44
நிழற்படம் எடுக்கும் தாள் ..	21,20,724	498.01
மருத்துவ ஊடுகதிர்த்தாள்	18,49,008	1,019.95
நிழற்படச் சுருள் ..	4,79,967	403.47
ஏனையவைகள்	1,45,634	122.67
மொத்தம் ..	91,50,035	3,561.45

வருங்கால வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 'கிராபிக் ஆர்ட்ஸ்', ஊடுகதிர் படச்சுருள்களை மாற்றுவதற்காக, சென்னையில் உள்ள அம்பத்தூரில் மாற்று வசதியை அமைக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூபாய் 2 கோடி முதலீடு செய்யவும், சுமார் 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து இறுதி ஏற்பளிப்பு எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஏற்பளிப்பு வந்தவுடன் ஒரு வருடத்திற்குள் தொழிற்சாலை உற்பத்தியினைத் தொடங்கும்.

மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி, சென்னை.

11. நடப்பாண்டில், இத் தொழிற்சாலை ரூ. 50·81 இலட்சம் மதிப்புள்ள மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகளை ரூ. 1 கோடி மூலதனத்தில் மருந்துகள் தயாரித்துள்ளது. கலந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Formulation Plant) ஒன்றிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலையின் உற்பத்தி, அடுத்த நிதியாண்டு தொடக்கத்தில் தொடங்கும். சென்னை தொழிற்சாலை பிரிவில் அண்மையில் தொடங்கப்பட்ட கருவிகள் இணைப்புப் பிரிவு (Fabrication Unit) இந்திய மருந்துகள்-இரசாயன மருந்துப் பொருள்கள் தயாரிப்பு (IDPL) நிறுவனத்தின் துணை நிறுவனங்களுக்காக செய்முறைக் கருவிகள், கொள்கலன்கள் இவற்றைத் தயாரித்து வருகிறது.

பாரத் கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

12. அனல் மின் நிலையங்கள் முதலியவற்றிற்குத் தேவைப்படும் கனரக கொதிகலன்கள், ஏனைய சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள மத்தியத் துறையைச் சேர்ந்த ஒரு பெரிய தொழிற்சாலையாகும். இத் தொழிற்சாலை 2,500 மெகாவாட் அல்லது 87,000 மெட்ரிக் டன் கொதிகலன் கூட்டுறுப்புகளின் திறன் கொண்டதாகும். இத் தொழிற்சாலையில் 37 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 11,000 பேர்கள் பணிபுரிகின்றனர். 1977-78 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையின் உற்பத்தி, ரூ. 161·50 கோடி மதிப்புள்ள 81,620 மெட்ரிக் டன்களாகும். 1976-77 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ. 152·6 கோடி மதிப்புள்ள 75,000 மெட்ரிக் டன்களாகும்.

சேலம் உருக்காலை.

13. சேலத்தில் கிடைக்கும் கலவைக்கான பொருட்களைக் கொண்டு தனி உருக்காலை ஒன்றை நிறுவுவதற்காக முதலீடு செய்வது பற்றிய முடிவினை 1972 ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு எடுத்தது.

தகடுகளும் துண்டுகளும். (1)	ஓராண்டிற்கு உற்பத்தி அளவு. (2) (டன்களில்.)
வெப்பமூட்டாமல் உருட்டி அடிக்கப்பட்டது ..	65,000
வெப்பமூட்டப்பட்டு உருட்டி அடிக்கப்பட்டது ..	5,000
சிலிகான் உருக்கு—வெப்பமூட்டாமல் அடிக்கப்பட்டது	75,000
ஏனைய சிறப்பு உருக்குகள்-வெப்பமூட்டப் பட்டு உருட்டி அடிக்கப்பட்டது ..	50,000
மொத்தம் ..	1,95,000

இத்திட்டத்தை நிறைவேற்ற, சேலம் உருக்காலை என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்திய அரசு நிறுவியது. சேலம் உருக்காலையின் விரிவான திட்ட அறிக்கை 1977 மே திங்களில் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத் தொழிற்சாலை இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்படும். ரூ. 126·81 கோடி முதலீடு செய்து 40,000 டன்கள் வெப்பமூட்டப் பட்டு அடிக்கப்பட்டச் சுருள்களைப் பயன்படுத்தி 32,000 டன் கருக்காத உருக்குத் தகடுகளும் துண்டுகளும் உற்பத்தி செய்வதற்கான, வசதிகளை செய்யும் வகையில், முதற்கட்டப்பணி உடனடியாக மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணியுடன் தொடர் புடைய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலத்தில் துருப்பிடிக்காத எஃகு தகடுகளை வெப்பமூட் டாமல் உருட்டி அடிக்கப்படுவதற்கான தொழில்நுட்ப பணிகளையும், தகவல்களையும் வழங்குவதற்காக பிரான்ஸில் உள்ள திருவாளர்கள் பெகோட் லாயருடன் (M/S. Peugeo

Loire, France) 1978 ஜனவரியில் நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1981 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியினைத் துவங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தொழிற்சாலைக்கும், தொழிற்சாலை யுடன் தொடர்புடைய ஏனைய பல்வேறு திட்டங்களுக்கும் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு உருக்காலை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ஆலங்குளத்தில் சிமிட்டி தொழிற்சாலையை அமைப்பதற் காகவும், அரக்கோணத்தில் ஒரு தொடர் வார்ப்பட உருக்காலையை (இப்பொழுது தமிழ்நாடு உருக்காலை என்றழைக்கப்படுகிறது) அமைப்பதற்காகவும் 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய செயல் வரம்பு விரிவுபடுத்தப்பட்டது. சிறிது காலத்திற்கு, அதாவது 1969—71-ல் டிட்கோ பல நலிந்த நிறுவனங்களுக்கு அவற்றின் பங்கு மூலதனத்தில் பங்கு ஏற்பதுடன் அவைகளுக்குக் கடனும் வழங்கியது. சுமார் 400 கோடி ரூபாய் மொத்த மூலதனத்துடனும், சுமார் 21,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடனும் 40 திட்டங்களை அமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் அளவுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தற்போது மாநில அரசின் ஒரு முக்கிய நிறுவனமாகவும், நாட்டிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே முக்கியமான தொரு நிறுவனமாகவும் ஆகிவிட்டது.

2. 1977—78 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் அனுமதி பெற்ற மூலதனம் ரூபாய் 17 கோடியிலிருந்து ரூபாய் 25 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின்

பங்கு மூலதனம், கடன் முதலிய தொகைகளைத் தவிர, இந்நிறுவனம் கடனீட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலமும்; பொது மக்களிடம் வைப்புத் தொகைகளை பெற்றுக்கொள்வது மூலமும், தன்னுடைய நிதிவாயில்களை பெருக்கியுள்ளது. 31–12–1977 அன்றுள்ளபடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 17·27 கோடி ஆக இருந்தது. அதன் பிறகு மூலதன வாயில்கள் ரூ. 16.91 கோடி; ஆகமொத்தம் ரூ. 34.18 கோடி.

3. 31–3–1977, 31–12–1977 தேதிகளின்படி பல்வேறு பொதுத்துறை, கூட்டுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட பணமுதலீடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள்.	31–3–1977-ன் படி முதலீடுகள்.	31–12–1977ன் படி முதலீடுகள்.
	(ரூபாய் கோடியில்.)	
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.	10·57	12·65
தமிழ்நாடு ஸ்டீல்ஸ்—உருக்கு பாளங்கள் திட்டம், அரக்கோணம்.	9.25	9.31
ஏனைய பொதுத்துறைத் திட்டங்கள்	..	0·16
கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகளுக்கான முதலீடும், கடனும்.	8·83	9·34
	28·65	31·46
இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பும், நடை முறை மூலதனமும்.	2·62	2·72
மொத்தம் ..	31·27	34·18

4. கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 31–12–1977-ன் படி முதலீடு விபரங்கள் பிற்சேர்க்கை X-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1978–79-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

பொதுத்துறை நிறுவனங்கள் :—

	(ரூபாய் கோடியில்.)
அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை, ஆலங்குளம் சிமிட்டி தொழிற்சாலை, ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தயாரிப்பு தொழிற்சாலை.	.. 9.99
தமிழ்நாடு ஸ்டீல் அண்ட் ரோலிங் மில்ஸ் தொழிற்சாலை, அரக்கோணம்.	.. 1.25
தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட்	.. 2·00
கூட்டுத்துறை நிறுவனங்கள்.	
கூட்டுத் துறை நிறுவனங்களுக்கு முதலீடும் கடனும்.	.. 3·88
மொத்தம் ..	17·12

இந்நிறுவனத்தின் தோற்றம் முதல் 31–3–1977 வரையிலான காலத்தில் நிதி வாயில்கள், செலவுகள் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை இணைப்பு XI-ல் உள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள்.

5. தற்போது பொதுத்துறையில் ஐந்து திட்டப்பணிகளை டிட்கோ மேற்கொண்டுள்ளது. இரண்டு திட்டப் பணிகளில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று திட்டப் பணிகளும் பல்வேறான நிலைகளில் செயல்படுத்தப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும் வருகின்றன. இவை ஒவ்வொன்றிலும் உள்ள முன்னேற்றம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. அரியலூரில் சிமெட்டித் தொழிற்சாலைத்

திட்டத்தையும், ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தொழிற்சாலைத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காகவும், ஆலங்குளத்தில் ஏற்கெனவேயுள்ள சிமிட்டித் தொழிற்சாலையை நிர்வகிப்பதற்கும், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயரில் துணை நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை:

6. ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை ஆண்டுக்கு 4 இலட்சம் டன் சிமெண்டை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. இதில் நாளொன்றுக்கு 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும், ஈரத் தயாரிப்பு முறையுடைய சுழற் சூளைகள் இரண்டு உள்ளன. இத்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிமெண்ட் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் தொடங்கியது. பின் தங்கிய பகுதி ஒன்றில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலை 1,450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்தத் தொழிற் பிரிவில் 1975–76 முதல் 1977–78 ஆண்டு வரையிலான சிமிட்டி உற்பத்தி, விற்பனை விபரம் பின்வருமாறு :—

காலம்.		உற்பத்தி.		சிமிட்டி விற்பனை (டன்களில்).
		அளவு. (டன்களில்.)	நிறுவத் திறனளவு (சத வீதத்தில்.)	
1975–76	..	2,62,729	66	2,58,052
1976–77	..	3,38,445	85	3,33,294
1977–78 (திருத்த மதிப்பீடு)	..	3,30,000	83	3,35,000

7. 1976–77ல் இந்த தொழிற்சாலையின் சாதனை பாராட்டத் தக்கதாக இருந்தது. தற்கால அறிவியல் முறைகளில் சுரங்கங்கள் அடைந்துள்ள வளர்ச்சியாலும், மேலும் நவீன முறைகள் கையாளப்படுவதாலும் தகுந்த முறையில் திட்டம் இயற்றுவதாலும் இத்தொழிற்சாலையானது, மின்வெட்டு இருந்த போதிலும் கூட (இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களாகும்), 3,38,445 டன் உற்பத்தி செய்து வியத்தகு சாதனை புரிந்துள்ளது. விற்பனையும் சுமார் 3,33,294 டன் அளவிற்கு எட்டியுள்ளது. இந்த ஆண்டு 65,320 டன் சிமிட்டி ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் ரூ. 405.00 இலட்சமாக இருந்த விற்பனை இந்த ஆண்டு ரூ. 742.02 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்தொழிற்சாலை 1976–77ஆம் ஆண்டில் ரூ. 1.99 இலட்சம் ஆதாயம் ஈட்டியுள்ளது. சூளை ஒன்றில் பழுது பார்க்கும் வேலைகள் மேற்கொண்டிருந்ததால் அது சுமார் மூன்று திங்கள் கால அளவிற்கு பயனற்றதாக இருந்தது ; மேலும் முதல் மூன்று மாத கால அளவிற்கு மின் வெட்டு இருந்தது. இத் தடைகள் இருந்த போதிலும் இத்தொழிற்சாலை 1977–78 ஆம் ஆண்டில் 3,30,000 டன் சிமிட்டி உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. 1978–79ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலை அதன் முழு உற்பத்தித் திறனை அடைந்து விடத் திட்டமிட்டுள்ளது.

அரியலூர் சிமிண்டு ஆலை:

8. அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்கள் திறனுள்ள சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான தொழில் உரிமம் ஒன்று பெறப்பட்டு உள்ளது. இந்த தொழிற்சாலை உலர்ந்த முறைப்படி சிமெண்ட் தயாரிக்கும். இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 29.00 கோடி ஆகும். திருவாளர்கள் ஹோல் டெக் இஞ்சினியர்ஸ் (பி) லிமிடெட் என்ற நிறுவனம் இத் திட்டத்திற்கான பொறியியல் ஆலோசகர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். பெரிய உற்பத்தியாளர்களிடம் பெருமளவு இயந்திரங்களையும் சாதனங்களையும் பெறுவதற்குரிய தேவைக் குறிப்புப் பட்டியல்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன ; அவற்றில் சில ஏற்கெனவே வந்து விட்டன. கட்டட நிர்மாணப் பணி, 1977ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் நிறுவும் பணி 1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டு உள்ளது. ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சம் டன் உற்பத்தி செய்யும் திறனுள்ள முதல் சூளை, 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1977ஆம் ஆண்டு இறுதி வரை, ரூ. 9.01 கோடி செலவிடப்பட்டுள்ளது. இரண்டாவது சூளை இயக்கப்பட்ட பின், 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குள், இந்த தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் என்ற

முழு உற்பத்தித் திறனளவை எட்டிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இத் திட்டப்பணி முடிவடையும் போது, 1,100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் திட்டம்:

9. ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற்சாலை ஒன்று ரூ. 1.66 கோடி மதிப்பீட்டுச் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக் கடிதம் பெறப்பட்டுள்ளது. இத் திட்டம் 1978–79ஆம் ஆண்டில் விரைவில் செயலாக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டப்பணி முடிவடைந்த பின்னர் இது சுமார் 270 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்பரேஷன் லிமிடெட். (TANCEM.)

10. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு துணைக் கம்பெனியாக தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் டான்சம்நிறுவப்பட்டது. இரண்டுசிமெண்ட் தொழிற்சாலைகள், அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற்சாலை ஆகியவற்றின் நிர்வாக பொறுப்பினை இது மேற்கொண்டுள்ளது.

இந் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடி ஆகும். 1977ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் நாள் நிலவரப்படி அதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5·87 கோடியாகும். ' டிட்கோ ' நிறுவனத்தைச் சேர்ந்த இந்த இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 8·11 கோடியாகும். டிட்கோ 1—4—76-ல் இவற்றை இந் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

தமிழ்நாடு உருக்குத் தொழிற்சாலை, அரக்கோணம்:

11. வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த தொழிற்சாலை தொடர் வார்ப்பட தொழில் முறையை பயன்படுத்தி உருக்கு பாளங்களைத் தயாரிப்பதற்கு இரும்புத் துகள்களை பயன்படுத்தி வருகிறது. இந்தியாவில் பொதுத் துறையில் முதன் முறையாக நிறுவப்பட்டுள்ள சிறு

உருக்குத் தொழிற்சாலை இதுவேயாகும். ஒரே ஒரு மின் ஒளி உலையும், 100 ச.மி. மீட்டர், 75 ச.மி. மீட்டர் அளவுள்ள உருக்குப் பாளங்கள் தயாரிப்பதற்கான செங்குத்தான தொடர் வார்ப்பு இயந்திரம் ஒன்றும் தற்போது நிறுவப்பட்டுள்ளன. இதனால் கிடைக்கக்கூடிய திறன் ஓர் ஆண்டுக்கு 40,000 டன் ஆகும். இது சுமார் 600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1977ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் வரை இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 6.78 கோடி ஆகும்.

12. இந்த தொழிற்சாலை 1—7—1972-ல் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையில் 1975-76 முதல் 1977-78 வரை செய்துள்ள உற்பத்தி விற்பனை குறித்த விபரம் பின்வருமாறு :—

காலம்.	உருக்குப் பாளங்கள் உற்பத்தி. அளவு (டன்னில்)	உருக்குப் பாளங்கள் உற்பத்தி. நிறுவத் திறனளவு (சதவீதத்தில்).	கிடைக்கக் கூடிய திறனளவு (சதவீதத்தில்).	விற்பனை (டன்னில்).
(1)	(2)	(3)	(4)	(5)
1975–76	12,272	25	31	10,114
1976–77	28,948	58	72	33,554
1977–78 (திருத்த மதிப்பீடு).	25,100	50	63	28,000

1977–78 முதல் மூன்று திங்கள் கால அளவிற்கு மின் வெட்டு இருந்தும், 9—9—1977 முதல் 9—10—1977 வரை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தும், இத் தொழிற்சாலை இவ்வாண்டில் 25,100 டன் பாளங்களை உற்பத்தி செய்யும் என்றும், ரூ. 6.19 கோடி மதிப்புள்ள 28,000 டன் பாளங்களையும் உருட்டியடிக்கப்பட்ட பொருள்களையும் விற்பனை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[1978 மார்ச் 27

1977-78ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1978-79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் படியும் முறையே ரூ. 78 இலட்சம், ரூ. 59 இலட்சம் நிகர இழப்பு இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உருக்கு உருளை ஆலைத்திட்டம்:

13. தமிழ்நாடு உருக்கு உற்பத்திப் பொருள் ரகங்களை பல தரப்படுத்தவும் அதை மேலும் ஆதாயம் ஈட்டும் வகையில் செயல்படச் செய்யவும் தனி உருக்கு பாளங்களை மீண்டும் உருட்டியடிக்கும் வசதிகளுடன் கூடிய உருளை ஆலை ஒன்றை ரூ. 8 கோடி மூலதனச் செலவில் நிறுவுவது குறித்துத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. நிதி வசதிகளும் தேவையான தொழில் நுட்ப அறிவும் கொண்டுள்ள தொழில் முனைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுத் துறையில் திட்டங்களை நிறுவுவதிலும், 'டிட்கோ' நிறுவனம் முனைப்பான பங்கேற்றுள்ளது. இதுவரை பங்கு மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனம் 26 சதவீதமும், தனிப் பட்ட தொழில் முனைவர்கள் 25 சதவீதமும், எஞ்சிய 49 சதவீதம் பொதுமக்களிடமிருந்து பெற்றும் கூட்டுத்துறை நிறுவனங்களை 'டிட்கோ' அமைத்து வந்துள்ளது. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் நாள் ஒன்றுக்கு 30 டன் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை டிட்கோ 15 சதவிகிதம் பங்கு மூலதனம் போட்டு நிறுவுவதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித் துள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய இருக்கும் இத்தொழிற்சாலையின் மூலம் 300 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பும், 1,000 பேர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

15. மாநில அரசு பிறப்பித்துள்ள வழி முறைகளின்படி ரூ. 100 லட்சத்திற்கு மேல் செலவு மதிப்புடைய திட்டங்கள் மட்டுமே டிட்கோவால் மேற்கொள்ளப் படுகின்றன. கூட்டுத் துறையில் 33 திட்டங்கள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன. அவற்றில் 21 கம்பெனிகள் ஏற்கனவே கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள

1978 மார்ச் 27]

கம்பெனிகளில் 12 கம்பெனிகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய 12 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. உற்பத்தி செய்து வருகின்ற 12 கூட்டுத் துறை நிறுவனங் களின் மொத்த விற்பனை 1-4-77 முதல் 31-12-77 முடிய ரூ. 67·75 கோடி ஆகும் ; மேலும் இவை சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இதுவன்றி, கூட்டுத் துறையில் மேலும் உருவாக்கப்பட்டு வருகின்ற 9 நிறுவனங்களின் மொத்த மூலதனச் செலவு ரூ. 47·45 கோடி ஆகும் ; இறுதியாக அவை சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். இந்த 33 திட்டங்கள் குறித்த விபரங்களை பிற்சேர்க்கை XII-ல் காணலாம்.

16. ரேயான் கிரேடுபல்ப் பைபர் திட்டம்.

ரேயான் இழைத் திட்டத்தை ரூ. 40 கோடி செலவில் செயல்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம், நாள் ஒன்றுக்கு 50 டன் ரேயான் கிரேடு கூழ்ப் பொருள்களையும் 40 டன் விஸ்கோஸ் பாலினுசிக் இழைகளையும் உற்பத்தி செய்யும்.

17. தூத்துக்குடி ஆல்கலிகெமிக்கல்ஸ் நிறுவனம்,

தூத்துக்குடி கடற்கரையோரப் பகுதிகளில் கிடைக்கும் உப்பையும் சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் (ஸ்பிக்) நிறுவனத்திடமிருந்து உபரியாகக் கிடைக்கும் அமோனியாவையும் கொண்டு சோடியம் கார்ப னேட் (Na_2CO_3), அமோனியம் குளோரைடு தயாரிப்பதற் காக, இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலைக்கு அருகாமையில் அமைக்கப்படும். ரூ. 34 கோடி மூலதனச் செலவில் அமைக் கப்படும் இந்த நிறுவனம், ஆண்டொன்றுக்கு 70,000 டன் சோடியம் கார்பனேட்டும் 70,000 டன் அமோனியம் குளோ ரைடும் உற்பத்தி செய்யும். இந்நிறுவனம் சுமார் 480 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். ஸ்பிக் நிறுவனத் துடன் கூட்டாகச் சேர்ந்து செயல்படுத்தும் பொருட்டு முதற் கண் இந்நிறுவனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறு வனத்திற்கு முதலீடு செய்யப் போதிய அளவு உபரி நிதிக்கு ஏற்பாடு செய்ய ஸ்பிக் நிறுவனத்திற்கு இயலாமற்போனதன் காரணமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தாமத மடைந்துவருகிறது. எனவே, இந்த நிறுவனத்தை விரைவில் செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆய்வு செய்து வருகின்றது.

[1978 மார்ச் 27

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக, ரூபாய் 5 கோடி அதிகாரம் பெற்ற மூலதனத்துடன், தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளைத் துரிதமாகத் தொழில் மயமாக்குவதற்கும்அமைக்கப்பட்டதாகும். இந்நிறுவனம் 31–12–1977 வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 21.4 கோடி உதவி வழங்க ஒப்புதலவித்ததுடன், இதன் மூலம் ரூ. 163 கோடி முதலீட்டை ஊக்குவித்து, 24,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக் கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில்பின் தங்கிய பகுதிகளிலே உள்ளது என்பதாகும். அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 1,971·33 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ. 151 கோடிக்குமேல் முதலீடு, இம்மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. 22,500 பேருக்குமேல் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தந்துள்ளது.

2. சிப்காட் உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் பின்வருமாறு :—

1. ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.

(i) சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கு (Feasibility Study) உதவித் தொகை.

ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்காக சாத்தியக்கூறு பற்றிய ஆய்வுகளை சிப்காட் தொடங்கியுள்ளது. இந்த ஆய்வுகளை தொழில் முனைவோர்க்கு சலுகை விலையில் அளிக்கிறது. 31—12—1977 முடிய 35 சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டன.

1978 மார்ச் 27]

2. வட்டியில்லா விற்பனை வரிக் கடன்

ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டத்தின் முக்கிய பகுதியாக வட்டியில்லா விற்பனை வரியினை மாநில அரசின் முகவரமைப்பாக சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது ஒன்றிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர் தொழில் தொகுதியிலும் குன்னத்தூர் வட்டாரத்திலும் உள்ள நடுத்தர, பெரிய தொழில்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன. விவரம் இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி, திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்குத் தொழிலை விரிவுபடுத்தும் போதோ அல்லது பொருத்தமான பகுதிகளில் வேறு பிரிவுகளாகப் பெருக்கும் போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவுக்கு அமைக்க இருக்கும் தொழிற்சாலையின் நிலையான இருப்புக்களில் 25 சதவீதம் அல்லது ரூபாய் 15 இலட்சம் இவற்றில் எந்த தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்படாமல் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் தொகை அளிக்கப்படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 12 ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் 3 ஆண்டு சம தவணைகளில் வட்டியின்றி இந்தக் கடன் தொகை திருப்பி செலுத்தப்படத்தக்கதாகும். இரண்டாம் பகுதித்திட்டத்தின்கீழ் புதிய தொழிற்பிரிவு, அந்த ஆண்டில் செலுத்திய விற்பனை வரிக்கு இணையான ஒரு தொகையை, உற்பத்தி ஆண்டின் முதல் ஆறு ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பெறும், நிறுவப்பட்ட தொழில் நிறுவனத்தில் நிலையான இருப்புகளில் 8 சதவீத அளவுக்கு மேற்படாமல் இத்தொகை அளிக்கப்படும். இந்தக் கடன் மூன்று திங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட 18 ஆண்டுகளுக்குப் பிறகு, மூன்று ஆண்டு சம தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும். இத் திட்டம், பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஒரு சக்தி வாய்ந்த தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதை நிரூபித்துள்ளது.

3. நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தமிழ் நாட்டில் செயல் படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின் தங்கிய வட்டங்களில் ஏதாவதொன்றில் நிறுவப்படும், தொழிற் பிரிவு, அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள், சாதனங்கள், இயந்திரங்கள் முதலியன உட்பட) 15 சதவீத நேரடி மானியம் அல்லது உதவித் தொகை பெற தகுதி உடையதாகும். முன்னேற்றமடைந்த பகுதியிலிருந்து மேற் குறிப்பிடப்பட்ட பின் தங்கிய வட்டங்களில் ஒன்றிற்குத் தங்களது சாதனங்களையும் இயந்திரங்களையும் மாற்றக்கூடிய தொழில் பிரிவுகளும்கூட 15 சதவீத உதவித்தொகை பெற உரிமையுள்ளவையாகும். அந்த 33 வட்டங்களின் பெயர்கள் இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற் பிரிவையும் பொறுத்தமட்டில், உயரளவு உதவித் தொகை ரூபாய் 15 இலட்சம் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகையில் 85 சதவீதம் உற்பத்தி தொடங்கு வதற்கு முன்பாகவும், எஞ்சிய தொகை உற்பத்தி தொடங்கிய பின்னரும் வழங்கப்படும்.

4. உயர் அழுத்த விநியோகத்திற்கு சலுகைவீத மின் கட்டணம்.

தமிழகத்தில் நிறுவப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்குச் சலுகை வீதங்களில் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆறுவது ஆண்டிலிருந்து மட்டுமே கீழ்க் கண்டவாறு அத்தொழிற்சாலைகள் முழு மின்சக்திக் கட்டணத்தை செலுத்த வேண்டும். விவரம் வருமாறு :—

(1) முதல் 3 ஆண்டுகளுக்கு.. சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் $66\frac{2}{3}$ சதவீதம்.

(2) நான்காவது ஆண்டுக்கு.. சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 80 சதவீதம்.

(3) ஐந்தாவது ஆண்டுக்கு .. சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 90 சதவீதம்.

இவை தவிர, இம்மாநிலத்தில் பின்தங்கிய வட்டங்களெனத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள வட்டம் எதிலும் (செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர், குன்னத்தூர் வட்டாரம்) உட்பட நிறுவப்படவிருக்கும் புதிய தொழில்கள் மின் சக்திக் கட்டணத்தில் மேலும் 15 சதவீதச் சலுகை பெறத் தகுதியுடையவைகளாகும், இந்தச் சலுகைபெறத் தகுதி பெற்ற பின்தங்கிய வட்டங்களின் பெயர்ப்பட்டியல் இணைப்பு VIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை.

இம்மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்கள் ஏதாவது ஒன்றில் நிறுவப்பட்டுள்ள புதிய தொழில்கள், ஆண்டுக்கு ரூபாய் 300 என்ற வரையறுத்த கட்டணத்தை தண்ணீர் உரிமைக் கட்டணமாக செலுத்திவிட்டு, பொது நீர்வாயில் களிலிருந்து எவ்வளவு அளவு வேண்டுமானாலும் தண்ணீர் எடுத்துக் கொள்ள தொடக்கத்தில் முதல் ஆறு ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சென்னை மாநகரத்திற்கு அருகில் செங்கற்பட்டு மாவட்டத்தில், மறைமலை நகரிலும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குன்னத்தூர் வட்டாரத்திலும் அமைக்கப்பட்ட தொழில் பிரிவுகளும் இச் சலுகையைப் பெறத் தகுதியுடையவைகளாகும்.

11. தொழில் வளர்ச்சி நிலையங்கள்.

இம்மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களில், சிப்காட் இரண்டு தொழில் வளர்ச்சி நிலையங்களை உருவாக்கியுள்ளது வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையிலும், தருமபுரி மாவட்டம் ஓசூரிலும் இவை அமைந்துள்ளன.

(அ) வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் தொழில் வளர்ச்சி நிலையம்.

வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் சிப்காட் உருவாக்கியுள்ள முதலாவது தொழில் வளர்ச்சி நிலையத்தை தமிழ்நாடு அரசு கையகப்படுத்தி, 'சிப்' நிறுவனத்திடம் ஒப்படைத்த 712 ஏக்கர் பரப்புள் அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழில் தொகுதியில் உள்ள 85 மேம்பாடு செய்யப் பட்ட மனைகளில், 431·4 ஏக்கர் பரப்புள்ள 55 மனைகள், 47 தொழிற் பிரிவுகளுக்கு (31-12-1977 வரை) ஒதுக்கப் பட்டுள்ளன. இவற்றில், 19 தொழிற் பிரிவுகள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. 12 தொழிற் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கும் நிலையில் உள்ளன. சிறு தொழில்களுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 71 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (SIDCO), ஒதுக்கப்பட்டுள்ளது. 119·8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது.

நாளது தேதிவரை உதவி பெற்று வந்த எல்லா பிரிவுகளுக்குமாக ரூபாய் 40 கோடிவரை மொத்த முதலீடு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 4,600 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிட்டும்.

தருமபுரி மாவட்டம் ஒசூரிலுள்ள தொழில்வளர்ச்சி நிலையம்.

1974 ஆம் ஆண்டில், சிப்காட் தருமபுரி மாவட்டத்தில் ஒசூரில் இரண்டாவது பெரிய தொழில் தொகுதியை, மேம் பாடு செய்வதற்காக எடுத்துக்கொண்டது. இத்தொகுதியில், 755·87 ஏக்கர் பரப்புள்ள 131 மனைகள், தொழிற் பிரிவு களுக்கு ஒதுக்கப்படலாம்.

31-12-1977 வரை, 329·80 ஏக்கர் பரப்புள்ள, 54 மனைகள், 45 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 34 தொழிற்பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. தொழிற்பிரிவுகள் கட்டிடங்கள் கட்ட தொடங்கியுள்ளன.

III. நிதி உதவி

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் மறு நிதியுதவி பெறத் தகுதியுடைய இரண்டாவது மாநில [illegible] ளாவு நிதி நிறுவனமாக சிப்காட்டை, இந்திய அரசு ஏற்றுக் [illegible] ண்டுள்ளது. குறைந்த வட்டி வீதத்திலும், நீண்ட காலத் [illegible] னகளுடனும் சிப்காட் நிதி உதவுவதற்கு இது வகை [illegible] து. நிதி உதவும் துறையில் தமிழ்நாடு தொழில் நிறுவனம் (TIIC) இந்திய தொழில் நிதி (IFCI), இந்திய தொழில் கடன் முதலீட்டு (ICICI), இந்திய தொழில் வளர்ச்சி வங்கி

(IDBI), வர்த்தக வங்கிகளுடன் சிப்காட் நெருக்கமாக ஒத்துழைத்து வருகிறது. இம்மாநிலத்தின் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதித் தேவைகள் முழுவதும் இந்த நிறுவனங் களின் கூட்டு முயற்சியின் மூலம் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதே இவ்வாறு செயல்படுவதன் நோக்கம்.

(3) ரூபாய் 90 இலட்சத்திற்கு அதிகமாகக் கடன் தேவைப் படாத தொழில் நிறுவனங்கள், அகில இந்திய அளவில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களை அணுகாமல், இம் மாநிலத் திலேயே உள்ள, சிப்காட், டி.ஐ.ஐ.சி. வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து நிதியுதவி பெற முடியும்.

(4) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு, சிப்காட், அடியிற் கண்டவகை நிதியுதவிகளை அளிக்கிறது.

(1) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் மறு நிதியுதவியளிக்கும் திட்டத்தின் கீழ் தவணைக் கடன்.

(2) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் ஆரம்ப மூலதன நிதியுதவி.

(3) மூலதன கடன்களுக்கு உத்தரவாதமளித்தல்.

(4) வர்த்தக வங்கிகளிலிருந்து பெறும் கடன்களுக்கு உத்தரவாதம்.

(5) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இதுவரை 69 திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 836·24 இலட்சம் தவணைக் கடனை வழங்கியுள்ளது. நடப்பாண்டில் 11 தொழிற் பிரிவு களுக்கு ரூ. 241·78 இலட்சம் தவணைக் கடன் வழங்கப் பட்டது.

(6) மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட தொழில்களுக்கு மட்டுமே பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை வாங்குவது மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 67·20 இலட்சத்திற்கு பங்குகளை வாங்க அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் ரூபாய் 61·86 இலட்சம் பெறுமானமுள்ள பங்குகளை பொதுமக்களே வாங்கியுள்ளனர். எஞ்சியுள்ள ரூ. 5·34 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் நிறுவன த்தால் வாங்கப்பட்டது. அதில் ரூ. 3·84 இலட்சம் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது.

14-3-1978 வரை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) அளித்த நிதியுதவி IX இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(8) 1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு சிப்காட்டிற்கு கீழே விவரித்துள்ளவாறு ரூ. 225 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

			(ரூபாய் இலட்சத்தில்)
விற்பனை வரிக் கடன்	..	..	150
தவணைக் கடன்	..	..	50
பங்கு மூலதனம்	..	..	25
மொத்தம் ..			225

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

இந்தியாவில் மாநில அளவில் அமைந்துள்ள நிதியுதவும் நிறுவனங்களில் முன்னோடியாகத் திகழ்வது தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகும். இது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் தலையாய நோக்கத்துடன், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதனைக்கருத்தில் கொண்டு, இந்நிறுவனம், தொழில்நிறுவனங்களுக்கு முக்கியமாக நிரந்தர சொத்துக்களான நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்ட கால, நடுத்தரக்கால கடன்களை வழங்குகிறது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள் இவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும், தவணை முறையில் இயந்திரங்கள் வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதம்/எதிர் உத்திரவாதம் அளிக்கிறது. இந்நிறுவனம், கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும், போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் உதவி புரிகின்றது. தொழிற்சாலைகளை புதிதாக

தொழில்களுக்கு நிதி உதவி—

7. தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டி, கடந்தஇரு
பதாண்டுகளில் மாநில அரசுத்துறைகளிலும், மத்திய அரசுத்
துறையிலும் பல கடனுதவி நிறுவனங்கள் அமைக்கப்
பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்
நிறுவனங்களின் செயல்முறை பற்றிய ஆய்வு கீழே கொடுக்கப்
பட்டுள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI)

8. மத்திய நிறுவனமான இவ்வங்கி பங்குத் தொகை
களுக்கு உத்திரவாதமளித்தல், கடனீட்டுறுதிப்பத்திரங்களுக்கு
உத்திரவாதமளித்தல், தொழில் பிரிவுகளுக்கு காலக்
கடன்களை வழங்குதல், ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது.
எனினும் இவ்வங்கியின் முக்கிய நோக்கம் மாநில நிதி
உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து
அவை கடன் வழங்க மறுநிதி உதவி செய்வதே ஆகும்.

இவ்வங்கி தொடங்கியது முதல் 1977 டிசம்பர் இறுதி
வரை தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு நேரடியாக
ரூ. 275·23 கோடி நிதி உதவி அளித்துள்ளது. தமிழ்நாட்டி
லுள்ள தொழில்களுக்கு 1976 ஜூலைத் திங்கள் முதல் 1977
ஜூன் வரையில் அனுமதியளிக்கப்பட்ட தொகை ரூ. 72·50
கோடியாகும்.

இந்தியத் தொழில் கடன்–முதலீட்டு நிறுவனம் (ICICI)—

அமைக்கப்பட்ட மற்று
9. இந்நிறுவனம் தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்று
மொரு வளர்ச்சி வங்கியாகும். தொழில்களுக்கு வெளி நாடு
களிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவது இதன் நோக்க
மாகும். தவிர பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப்
பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற
உதவிகளையும் அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழு
வதிலுமுள்ள தொழில்களுக்கு 1977-ல் அளித்த நிதி உதவி
ரூபாய் 10,277 இலட்சமாகும். தமிழ்நாட்டிலுள்ள தொழில்
களுக்கு அளித்த நிதி உதவி ரூ. 597 இலட்சமாகும்.

இந்திய தொழில் நிதி உதவி நிறுவனம் (IFCI)—

10. நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1948 ஆம் ஆண்டு
நிறுவப்பட்ட இந்நிறுவனம், பொதுவாகத் தொழில் பிரிவு
களுக்கும், குறிப்பாக நெசவாலைத் தொழிலுக்கும்,
சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்டகால, நடுத்தரக் காலக்

1978 மார்ச் 27]

சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)
266	4,96·24	239	2,91·25

சிறப்புத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உதவி—

	அளிக்கப் பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்)	நபர்கள் எண்ணிக்கை
1. அன்னியச் செலாவணிக் கடன்	2,24·85	17
2. தொழில்நுட்ப வினைஞர்கள்	38·13	32
3. பேருந்து உரிமையாளர்கள்	0·40	1
4. ஜெனரேட்டர் செட்கள்	33·94	18

இந்நிறுவனம், தொழில் நுட்ப வினைஞர்கள் கிராமங்களில் உள்ள மருத்துவர்கள் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள், உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தாராளமாக நிதி உதவி அளிக்க பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில், இச் சிறப்புத் திட்டங்களின்கீழ், இந்நிறுவனம் அனுமதி வழங்கிய தொகை. கொடுத்த தொகைகள் இணைப்பு XVII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு தனது பங்கு மூலதனமாக அரசு, 1978-79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது.

[1978 மார்ச் 27

நிதியுதவி அளித்தது. பின்னர் அண்மைக் காலத்தில் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் இந்நிறுவனம் தனது பணியைப் பலவகையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

4. தொடங்கியதிலிருந்து 31-12-1977 வரையில், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் அனுமதித்த, வழங்கிய கடன்தொகை பற்றிய விவர அறிக்கை இணைப்பு XIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கடந்த பத்தாண்டுகளில் தொழிற்சாலைகளுக்கு தொழில் வாரியாக அனுமதி அளித்த தொகைகள், வழங்கிய தொகைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு XIV-ல் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக பங்குகளுக்கு உத்தரவாதமளித்தல், காலம் தாழ்த்தித் தொகை கொடுப்பதற்காக இந்நிறுவனம் அளித்துள்ள உத்தரவாதம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து இந்நிறுவனம் பெற்ற மறுநிதி உதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் முறையே இணைப்பு XV, XVI-ல் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில், கடன் மனுக்களை அனுமதித்தல், வழங்குதல் ஆகிய இரு பணிகளிலும் இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

5. 1977-78-ம் ஆண்டில் (ஏப்ரல் 1977-1978 ஜனவரி) இந்நிறுவனம் அனுமதித்த கடனுதவி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

கடன்கள்—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
314	10,89·20	282	7,32·27

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது.	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
171	6,04·32	127	4,80·69

ஆரம்பிப்பதற்கு மட்டும் அல்லாமல், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், நவீன முறையில் மாற்றி அமைக்கவும், தொழில்களை பல்திறப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. அண்மையில், இது, தனது பணிகளை விரிவுபடுத்தி, அவற்றை பல்திறப்படுத்தியுள்ளது. இதன்மூலம் சிறுதொழில் நிறுவனங்களுக்கும், பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற் பிரிவுகளுக்கும், தொழில் வினைஞர்களுக்கும் தொழில் நுட்ப முனைவோர் திட்டம் என்னும் சிறப்புத் திட்டத்தின்கீழ் அதிக நிதியுதவி அளிக்கிறது. தொழில் நுட்ப உத்திகள், இயந்திரப் பாகங்கள், உதிரிப் பாகங்கள் முதலியவை உட்பட இயந்திரங்களையும் சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், உலக வங்கியின் மூலமாக அந்நியச் செலாவணி கடன் உதவியும் வழங்குகிறது.

2. பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு உயரளவு ரூபாய் முப்பது இலட்சம் வரையிலும், பங்குதாரர்கள் உரிமை நிறுவனம் அல்லது ஒரே உரிமையாளர் நிறுவனத்திற்கு ரூ. 15 இலட்சம் வரையிலும் கடன் உதவி செய்கிறது. மேலும், காலம் தாழ்த்திச் தொகையளிக்கும் அடிப்படையில் உயரளவு முப்பது இலட்சம் ரூபாய் வரை கடன் பெறவும் இத்தொழில் நிறுவனங்களுக்கு உத்தரவாதம் அளிக்க வகையுண்டு. மேலும். இருபத்தைந்து இலட்சம் ரூபாய் அல்லது தொழிலை உருவாக்குவோர் அளிக்கும் தொகைக்குச் சமமான ஒரு தொகை அல்லது பொதுமக்களின் பங்கு மூலதனத்தில் 25 சதவீதம், இவற்றில் எது குறைவான தொகையோ அதை இந்நிறுவனம் கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்குக் கடன் பத்திரங்களாகவும், நேரடிப் பங்குகளாகவும் வழங்கலாம். பொதுவாக எந்த ஒரு நிறுவனத்திற்கும் ரூ. 60 இலட்சத்திற்கு மேல் நிதி உதவியளிக்கப்படுவதில்லை. இந்நிறுவனத்தால் அளிக்கப்படும் நிதி உதவியின் குறைந்த பட்ச அளவு ரூபாய் 10,000.

3. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலும், மத்திய அரசின் நேரடிப் பொறுப்பிலுள்ள பாண்டிச்சேரியிலும் பெருவாரியான தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இந்நிறுவனம் ஆரம்ப காலத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொழில் உருவாவதற்குத் தேவைப்படும் மூலதனம் மிகவும் பற்றாக்குறையாக இருந்த காலத்தில் தொழில் நிறுவனங்களின் பங்கு மூலதனத்திற்கு ஏராளமாக

கடன்களை வழங்குகிறது. வட்டியில்லா பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்குக் காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்திரவாதமளிக்கிறது இந்நிறுவனம்.

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 9 திட்டங்களுக்கு 1—7—77 முதல் 31—12—1977 வரை மொத்தம் ரூ. 8,76·13 இலட்சம் நிதியுதவி (நிகரம்) அளித்தது.

இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் (LIC)

11. தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்களில் பெரும்பான்மையோரின் நீண்டகாலச் சேமிப்புகளை ஒருங்கு திரட்டுவதோடு, கவனமாகவும் திட்டமிட்டும் முதலீடு செய்வதன் மூலம் இந்த நிதி வாயில்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகிறது.

1976-77-ஆம் ஆண்டில் தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் பிரிமியமாக வசூலித்த வகையில் (மாநில வாரியான) கிடைத்துள்ள வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாநிலம்.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
கருநாடகம்	4,243·23
ஆந்திரப் பிரதேசம்	4,343·25
தமிழ்நாடு (பாண்டிச்சேரி உட்பட) ..	5,166·73
கேரளம்	2,289·15
	16,042·36

இந்நிறுவனம், 1976-77-ல் தமிழ்நாட்டில் தொழில்களில் முதலீடு செய்த தொகை ரூ. 539·54 இலட்சமாகும்.

[1978 மார்ச் 27

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி

12. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத் தொழில் துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்வங்கி வழங்கிய காலக் கடன்களையும், திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை குறித்த விவரங்களையும் இணைப்பு XVIII-ல் உள்ள அட்டவணையில் காணலாம். மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனக் கடன்கள் பற்றிய விவரங்களை இணைப்பு XIX-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.

சர்க்கரைத் தொழில்

சர்க்கரைத் தொழில் வேளாண்மை சார்ந்த ஒரு தொழிலாக இருப்பதால் கிராமப் புறங்களில் வாழும் உழவர்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. முக்கியத்துவம் உடைய இத்தொழில் தமிழ்நாட்டில் கடந்த இருபதாண்டுகளில் நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1950 முதல் 1960 வரையிலான பத்தாண்டு காலத்தில் சர்க்கரை உற்பத்தித் துறையில் கூட்டுறவியக்கம் அடியெடுத்து வைத்தது. அடுத்த பத்தாண்டு காலத்தில் அதைத்தொடர்ந்து வளர்ச்சி பெறலாயிற்று. சர்க்கரை உற்பத்தித் தொழில், குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உரிய முறையில் வளர்ந்து செயல்படுவதைத் தொடர்ந்து கவனித்து வரும் பொருட்டு தமிழ்நாடு அரசு, சர்க்கரைத் தொழில் இயக்குநர் அலுவலகத்தை 1969 அக்டோபரில் தோற்றுவித்தது. சர்க் ஈரைத் தொழில் தொடர்பான அனைத்து பணிகளையும் கவனிப்பது இந்த இயக்குநர் அலுவலகத்தின்பணியாகும். இந்த இயக்குநர் அலுவலகம், குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வது, மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதற்காக தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்தின் தொடர்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடைய அதிகாரங்கள் அனைத்தும் சர்க்கரைத் தொழில் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

1978 மார்ச் 27]

2. இந்த ஆய்வில், 1976–77-ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் (1976ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய) சாதனைகள், முந்திய ஆண்டான 1975–76 இல் நிகழ்த்தப் பெற்ற சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. மேலும், 1977–78ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் திட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்படுகின்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன. அவற்றுள் 10 ஆலைகள் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவை ; 9 ஆலைகள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகும். எஞ்சிய இரண்டும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன், நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆகியவை குறித்த விவரங்கள், பின்னால் இணைப்பு XXI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு பயிரிடல்.

3. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் துறைக்குப் புதியதுதான், என்றாலும் இத்துறையில் இம்மாநிலம் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந்தியாவில் பெருமளவில் சர்க்கரை உற்பத்தி செய்கிற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாட்டின் சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப் படும் பரப்பளவைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் அதே அளவிற்குக் குறையாமல் பார்த்துக் கொள்வது மட்டுமின்றி, சில ஆண்டுகளில் பரப்பளவில் அதிகமாகவும் பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் சிறந்த சாதனையைப் புரிந்திட உதவிய அம்சங்கள் பின் வருவன : இந்திய அரசு வரையறுத்த சட்டபூர்வ விலைக்குச் சற்றுக்கூடுதலாகவே அமைந்த விலை கரும்புபயிரிடுவோருக்கு உடனுக்குடன் வழங்கப்படுகிறது; சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்புபயிரிடுவோருக்குமிடையே பொதுவாக நல்லுறவு நிலவுகிறது. கரும்பு பயிரிடுவதற்காக ஆலைகள் கணிசமான ஊக்க உதவித் தொகைகள் வழங்குகின்றன. 1974–75 முதல் 1976–77 வரையில் கரும்புக்கு இந்திய அரசு வரையறுத்த விலை, தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை, இறுதியாக சர்க்கரை ஆலைகள் வழங்கிய விலைகள்ஆகியன இணைப்பு XXII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில், கரும்பு பயிரிடப்பட்ட பரப்பு, கரும்பு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்பு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	கரும்பு பயிரிட்ட பரப்பு. (1000 ஹெக்டேரில்).	விளைவித்த கரும்பின் அளவு. (1000 டன்களில்).	ஆலைகள் பிழிந்த கரும்பின் அளவு. (1000டன் களில்.)	மொத்த உற்பத்தியில் ஆலைகள் பிழிந்த அளவு சதவீதம்.	ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல். (டன்களில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1968–69 ..	172	14,024	4,169	30	81·53
1969–70 ..	139	10,916	3,656	34	78·53
1970–71 ..	114	9,391	3,326	35	82·38
1971–72 ..	117	10,357	3,236	31	88·52
1972–73 ..	144	12,113	4,008	33	84·12
1973–74 ..	186	18,183	5,287	29	97·76
1974–75 ..	160	14,593	4,556	31	91·21
1975–76 ..	128	11,936	1,969	17	93·25
1976–77 ..	133	13,162	3,791	29	98·96

சர்க்கரை ஆலைகளின் சாதனை.

4. தமிழ்நாட்டில், நான்காவது ஐந்தாண்டுத்திட்டகாலம் முழுவதும், குறிப்பாக 1973–74ஆம் ஆண்டில், சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க சிறந்த சாதனையைப் புரிந்திருந்தது. ஆனால், மாநிலம் முழுவதும் முன்னெரு போதும் கண்டிராத அளவு வறட்சி நிலவிய காரணத்தினால் 1975–76, 1976–77 ஆம் ஆண்டுகளில் இத்தொழில் பின்னடைவு கண்டது. 1974–75 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பிழிந்த அரவைத் திறன் (Capacity Utilisation) 88·15 சதவீதம் ஆகும்; இந்த சதவீதம் 1975–76-ல் 44·02 சதவீதமாகக் குறைந்தது. 1976–77-ல் கரும்பு வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட ஒருமித்த முயற்சி காரணமாக அரவைத்திறன் கணிசமான அளவு (70·83 சதவீதம்) முன்னேற்றமடைந்தது. 1974–75 ஆம் ஆண்டு முதல் 1976–77 ஆம் ஆண்டுவரையில் சர்க்கரை ஆலைகளின் சாதனைகளைக்காட்டும் விவரங்கள் இணைப்பு XXIIIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு விலை.

5. இந்திய அரசு தற்போது கரும்புக்கு வரையறுத்துள்ள குறைந்த அளவு விலையானது இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடுவோரை ஊக்குவிப்பதாக அமையவில்லை. கரும்பு பயிரிடுவதற்காகவும் செலவு உயர்ந்துள்ளதையொட்டி கரும்பு பயிரிடுவோருக்கு ஆதாயமளிக்கக் கூடியதாக இருக்கும் வகையில், கரும்புக்கு நடப்புக்கொத்த விலைகளை வரையறுக்குமாறு மாநில அரசு, வேளாண்மை விளை பொருள் விலைகள் குழுவிற்கும் இந்திய அரசுக்கும் பரிவுரை செய்துள்ளது. 1976–77-ல் சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் அளவுள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிந்துரைத்திருந்தது. ஆனால், இந்திய அரசு டன் ஒன்றுக்கு விலை ரூ. 85 மட்டுமே என வரையறுத்தது. கரும்புக்குப் போட்டியாகப் பயிரிடப்படுகின்ற வாழைக்கும் நெல்லுக்கும் அளிக்கப்படும் விலையுடன் கரும்பிற்கு அளிக்கப்படும் விலையை ஒப்பிட்டால், கரும்பு பயிரிடுவோருக்குக் கிடைக்கும் ஆதாயம் குறைவு என்பதால் இந்த விலை போதுமானதல்ல என்று கருதப்பட்டது. 1977–78 ஆம் ஆண்டிலும், சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிவுரை செய்தது. இந்திய அரசு 1977–78 ஆம் ஆண்டுக்கும்

[1978 மார்ச் 27

(முந்திய ஆண்டில் வரையறுத்த) அதே குறைந்த அளவு விலையை, அதாவது டன் ஒன்றுக்கு ரூ. 85 என வரையறுத்தது. ஆனால், அதே சமயத்தில் கரும்பு பயிரிடுவோரின் நலனைப் பாதுகாக்க, 1977-78 ஆம் ஆண்டில் கரும்புக்கு கொடுக்கப்படும் விலை ஏறத்தாழ முந்திய ஆண்டில் கொடுத்த விலையின் அளவிற்கே இருத்தல் நலம் என்று தனது கொள்கையை இந்திய அரசு அறிவித்துள்ளது. எனினும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கரும்பிற்கு இந்திய அரசு வரையறுத்த விலைக்குக் கூடுதலாகவே கவர்ச்சிகரமான விலைகளைக் கொடுத்து வருகின்றன. இது பற்றிய விவரங்களை இணைப்பு XXII இல் காணலாம்.

சர்க்கரை விலை.

6. இந்திய அரசு ஆண்டுதோறும் சர்க்கரைக்குரிய விலையை வரையறுக்கிறது. இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 (3-c) பிரிவில் விதித்துள்ள விதிகளுக்கு ஒத்த வகையில் சர்க்கரை விலை வரையறுக்கப்பட வேண்டும், அவ்வாறு வரையறுக்கையில் கீழ்க்காணும் கருத்துக்களைக் கருதிப்பார்த்து வரையறுக்க வேண்டும் :—

(அ) கரும்புக்கு வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு விலை ;

(இ) சர்க்கரை உற்பத்திச் செலவு ;

(உ) அதற்குச் செலுத்தப்பட்ட, செலுத்தப்படத் தக்க தீர்வை அல்லது வரி இருப்பின் அது ;

(எ) சர்க்கரை உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட முதலுக்கு நியாயமான ஆதாயத்தைப் பெறுதல்.

இவை தவிர, கரும்பு பயிரிடும் காலம், சர்க்கரை தயாரிப்புக்காலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விலைகள் நிர்ணயக் குழு (Tariff Commission) தயாரித்த செலவு விவர அட்டவணையும் (Cost Schedule) கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெரும்பாலும் ஒவ்வோராண்டும் தமிழ்நாட்டுக்குக் குறைந்த விலையே அளிக்கப்பட்டு வந்துள்

1978 மார்ச் 27]

ளது. ஊதியம், வரி, எரிபொருள், உதிரிப் பாகங்கள், சாக்கு இவற்றின் விலை, வட்டி வீதம், கரும்பின் விலை ஆகிய ஒவ்வொரு இனமும் உயர்ந்துள்ளபடியால் சர்க்கரை உற்பத்திச் செலவு உயர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 1975-76ஆம் ஆண்டுக்கு இறுதியாக வரையறுக்கப்பட்ட விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 178·13 ஆகும். 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளுக்கும்கூட அதே விலைதான் வரையறுக்கப்பட்டது. விலையை வரையறுப்பது குறித்து இந்திய அரசு பின்பற்றுகிற முறைகளுக்கிணங்க வரையறுத்தாலும்கூட 1977-78 ஆம் ஆண்டுக்குரிய விலை குவிண்டால் ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 214·91 ஆக இருக்க வேண்டும். சர்க்கரைக்கு இது போல ஆதாயமளிக்காத விலைகளை வரையறுத்த காரணத்தால், எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் பெருமளவில் நட்டம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; இதனால், அவை கரும்புக்கு ஆதாயமளிக்கக்கூடிய விலையை அளிக்கும் திறனும் கூட மோசமாகப் பாதிக்கப்படும். இத்தகைய நிலைமை தொடருமானால் தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் வளர்ச்சி பெறுவது இயலாது. இது பற்றி மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி வருகின்றது. தனியார் ஆலைகள் சிலர் இது பற்றி வழக்கு மன்றம் சென்றுள்ளதாகவும் தெரிகின்றது.

சர்க்கரை ஆராய்ச்சி நிலையம்.

7. சர்க்கரை ஆராய்ச்சி நிலையத்தை அமைக்க சம்பந்தப்பட்ட தொழில் முனைவர்களுடன் கலந்து பேசி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

8. 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வறட்சி நிலவியதன் காரணமாக சர்க்கரைத் தொழிலின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. அதன் பிறகு இத்தொழில் முன்னேற்றமடைந்து வந்தது. ஆனால் மறுபடியும் தமிழ்நாட்டில் 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இதுவரை கண்டிராத அளவில் புயல், வெள்ளம் வந்து சின்னாபின்னப் படுத்தி விட்டது. 1976-77-ல் கரும்பு பிழிந்த அளவு

[1978 மார்ச் 27

சர்க்கரை உற்பத்தியின் அளவுகளும், 1977-78-ல் எதிர் பார்க்கப்படும் இவற்றின் அளவுகளும் கீழே தரப்படு கின்றன:—

	1976-77-ல் பிழியப்பட்ட கரும்பின் அளவு.	1977-78-ல் பிழிய எதிர் பார்க்கப்படும் கரும்பின் அளவு
	(லட்சம் டன்களில்.)	
கூட்டுறவுத் துறை ..	14·86	20·70
தனியார் துறை	22·65	21·55
அரசுத் துறை	0·40	2·20
மொத்தம் ..	37·91	44·45

	1976-77-ல் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு.	1977-78-ல் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படும் சர்க்கரையின் அளவு.
	(லட்சம் டன்களில்.)	
கூட்டுறவுத்துறை ..	1·33	1·82
தனியார்துறை	1·85	1·73
அரசுத்துறை	0·04	0·19
மொத்தம் ..	3·22	3·74

1978 மார்ச் 27]

விரிவுபடுத்தும் திட்டமும் புதிய ஆலைகளைத் தொடங்குவதும்

9. தற்போதுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 5 ஆலைகள் சாறு பிழியும் திறனளவை விரிவுபடுத்திக்கொள்ள உரிமம் பெற்றன. அதன் விவரம் வருமாறு:—

கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயர்.	ஆரம்பத்தில் திறன்.	விரிவு படுத்தப் படும் திறன்.	தோராய செலவு (ரூபாய் லட்சத்தில்.)
(1)	(2)	(3)	(4)
	(நாள் ஒன்றுக்கு டன்களில்)		
1. அமராவதி ..	1,250	2,000	275
2. மதுராந்தகம் ..	1,000	1,750	250
3. கள்ளக்குறிச்சி	1,250	2,000	285
4. சேலம்	1,750,	2,500	140
5. நேஷனல் ..	1,000	1,500	195

நேஷனல் சர்க்கரை ஆலை தவிர மற்ற எல்லாக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் 1977-78 ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட திறனளவில் சாறு பிழியத் தொடங்கியுள்ளன. நேஷனல் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்பட்ட திற னளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளான வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், 1976-77-ல் சோதனை முறையில் சாறு பிழியத் தொடங்கின. இவை ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பை பிழியும் திறன் கொண்டவை யாகும்.

தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் (TASCO)

10. சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் நிறுவவேண்டு மென்று, அரசு 1974 ஆம் ஆண்டில் எடுத்த முடிவின்படி, தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் அமைக்கப்பட்டது. தஞ்சாவூர், பெரம்பலூர், சங்கரன்கோயில், திருக்கோயிலூர் சிவகங்கை ஆகிய பகுதிகளில் 5 சர்க்கரை ஆலைகள் அமைக்க இந்நிறுவனம் உரிமங்களைப் பெற்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைப்ப

தற்கான உரிமம் தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. தஞ்சாவூர் அருகில் அமைக்கப்பட்ட ஆலை 1976–77 ஆம் ஆண்டில் சோதனை முறையில் சாறு பிழியும் பணியைத் தொடங்கியது. திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் அமைக்கப்பட்ட இரண்டாவது ஆலையில் இயந்திரங்கள் நிறுவப்பட்டு 2—2—1978–ல் சோதனை முறையிலான சாறுபிழியும் பணியைத் தொடங்கியது.

புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுதல்.

11. 1974-ல் பொதுத்துறையில் சர்க்கரை ஆலைகளை அமைக்க அரசு முடிவு செய்தது. 1977-ல் இம்முடிவினை அரசு மறு பரிசீலனை செய்து, கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளை அமைப்பதில் உள்ள கீழ்க்கண்ட சாதகங்களைக் கருத்தில் கொண்டு, இனி புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையில் மட்டுமே நிறுவ வேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

(1) பொதுத்துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலையைவிட, கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும் சர்க்கரை ஆலைகளில் அரசின் பங்காகிய நிதி ஒதுக்கீடு குறைந்த அளவில் மட்டுமே தேவைப்படும். இது தவிர தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து கடன் பெறலாம்.

(2) கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு கரும்பு பயிரிடுவோரிடமிருந்து பெற வேண்டிய 10 சதவிகிதம் பங்குத் தொகையை எளிதாகப் பெறலாம்.

(3) கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சிறிய விவசாயிகளும் நேரடியாகப் பங்கு கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. அதன்படி, தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் பெரிய செவலை கிராமத்தில் ஒரு புதிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலை 1979–80 ஆம் ஆண்டு சர்க்கரை கிடைக்கும் காலத்தில் செயல்படத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலையில் அரசின் பங்கு மூலதனத்திற்காக 1977–78 ஆம் ஆண்டில் ரூ. 160 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்ய 1978–79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 162 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் பின் தங்கிய பகுதியொன்றில், மொத்தம் ரூ. 145 லட்சம் முதலீட்டைக் கொண்டு 5,566 ஏக்கர் பரப்பில், மாரியூர்-வாலிநோக்கம் உப்பளம் அமைக்கப்படுகிறது. இத் திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு, முதற்கண் ரூ. 50 லட்சம் அதிகாரமளிக்கப்பட்ட முதலீட்டுடன் தமிழ் நாடு உப்பு நிறுவனம் 1974 ஜூலைத் திங்கள் 22-ம் நாளில் நிறுவப்பட்டது. இந்த உப்பளத் தொகுதியில் 500 உப்பளங்களும் (Crystallisers) அவற்றுடன் உப்பு நீர்த் தேக்கங்களும் உப்புப் பாத்திகளும் (Condenser areas) இருக்கும். 1978 ஆம் ஆண்டில் இங்கு ஏறத்தாழ 20,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தியளவு 1984 ஆம் ஆண்டில் 2,40,000 டன்னுக உயரக்கூடும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. தமிழ் நாடு அரசு இதுவரை இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் ரூபாய் 30 லட்சம் முதலீடு செய்துள்ளது. தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட கடன் ரூபாய் 30 லட்சத்தில் இதுவரை ரூ. 18·75 லட்சம் பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடமிருந்து ரூ. 2·50 லட்சம் உதவித் தொகையாகப் பெறப்பட்டுள்ளது.

3. உப்பளப் பகுதி முழுமைக்கும் எல்லை வரையறுக்கப்பட்டு, 24 கி. மீ. நீளத்துக்கு ரூ. 13 லட்சம் செலவில் அந்தப் பகுதியைச் சுற்றிலும் வரப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது. 18 உப்பளங்கள் உப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 4-ஆவது 5-ஆவது தளங்களில் அமைந்துள்ள 165 ஏக்கர் நிலப்பரப்பும் சமன்படுத்தப்பட்டு உப்பளப் பாத்திகள் கட்டப்பட்டுள்ளன. மூன்று உப்பு நீர்த் தேக்கங்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 4,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. களப்பணி அலுவலகம், ஆய்வுக் கூடக் கட்டிடம், வானிலை ஆராய்ச்சிக் கூடம், தற்காலிக வண்டிக்கொட்டகை, நன்னீர் கிணறுகள் ஆகியவற்றைக் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. கடலிலிருந்து பெருமளவில் உப்பு நீரைக் கொண்டுவருவதற்கு அவசியமான

விசையேற்றங்களும் இடைநிலை விசையேற்றங்களும் டிராக்டர்கள், இணைப்பு வண்டிகள் முதலியவையும் வாங்கப் பட்டுள்ளன. இந்நிறுவனம் இதுவரையில் இத் திட்டத்திற்காக சுமார் ரூ. 48 லட்சம் செலவிட்டுள்ளது.

4. உப்பு நிறுவனம் கீழ்க்காணும் பணிகளைச் செய்யக் கருதியுள்ளது—

(1) பெரிய, நடுத்தர அளவிலான உப்பு தொடர்பான பணிகளை நிறுவுவதற்கான தகுந்த இடங்களைக் கண்டுபிடித்தல், உப்பு, உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனப் பொருட்கள் மற்றும் எல்லாவிதமான கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்கள் இவற்றினை உற்பத்தி செய்தல்.

(2) சிறு உப்பு உற்பத்தியாளர்களுக்கு அவர்களது பகுதிகளின் உப்பு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், கடல் நீர் வழங்குதல், மேம்படுத்தல், உப்பு விற்பனைக்கு வசதிகள் செய்தல், கடன் வசதிகளைப் பெருக்குதல் போன்றவைகள்.

(3) உப்பு நிறுவனம் ஏனைய சிறு உப்பு உற்பத்தியாளர்களும் தயாரித்த உப்பை விற்பனை செய்தல்.

(4) உப்பு உற்பத்தியாளர்களுக்கு உப்பைப் பற்றியும் கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்களைப் பற்றியும் செய்திகள் கிடைக்குமாறு செய்ய ஒரு ஆலோசனை நிலையத்தை நிறுவுதல்.

நலிவுற்ற தொழிற் பிரிவுகள்

தொழிற் பிரிவுகள் தவறான நிர்வாகத்தாலோ, நிதி நெருக்கடியினாலோ, தொழில் நுட்பச் சிக்கல்களினாலோ நலிவுற்றிருப்பின், இயன்ற அளவுக்கு உதவி செய்வது தமிழ்நாடு அரசின் கொள்கையாகும். வேலை வாய்ப்பு இழப்பை தடுத்தல், பொது நிதி நிறுவனங்கள் செய்துள்ள முதலீடுகளுக்குப் பாதுகாப்பு அளித்தல், நிறுவுத்திறன் பயனற்றுப் போவதிலிருந்து தடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக அரசு நலிவுற்ற ஆலைகளுக்கு உதவியளிக்கிறது. இதற்காக 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகிற நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தை அரசு இயற்றியது. வேலை வாய்ப்பின்மையை தடுக்க, அல்லது நிவாரணம் அளிக்க, நலிவுற்ற தொழிற் பிரிவை நடத்துவது இன்றியமையாதது எனக் கருதினால், தொழில் நிறுவனங்கள் தொடர்பான

தொழில் நல்லுறவுகள், நிதிக் கடப்பாடுகள், இது போன்ற ஏனையவற்றைப் பொறுத்தவரையில் நலிவுற்ற ஆலைகளுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு அரசு பாதுகாப்பு அளிக்க இதனால் ஏதுவாகிறது.

1977-78 (31—12—1977 வரை) ..	4	17·00	1	28·83
	19	70·60	21	452·42

* அந்த ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையைவிட கழிவுத் தொகை அதிகம்.

இணைப்பு XVI.

தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

கடந்த ஐந்தாண்டுகளாக இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து பெற்ற மறு நிதி உதவி.

ஆண்டு.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்.)
1973-74	171·04
1974-75	357·24
1975-76	545·70
1976-77	1,003·05
1977-78 (31—12—1977 வரை)	513·91
மொத்தம் ..	2,590·94

இணைப்பு XVII.

தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சென்னை.

சிறப்புத் திட்டங்களின் முன்னேற்றம் (அனுமதிக்கப்பட்டவை) (வழங்கப்பட்டவை).

(ரூபாய் இலட்சத்தில்).

சிறப்புத் திட்டங்கள்.	1975-76		1976-77		1977-78 1977 ஏப்ரல் முதல் 31—1—78)	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
தொழில் வினைஞர்கள்—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	64	59·42	72	71·05	38	45·53
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	51	43·73	44	44·41	32	38·13
கடன் கொடுக்கப்பட்டவை ..	23	10·95	38	28·37	27	20·61
கிராமப்புற மருத்துவர்கள்—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	11	8·50	9	6·15	7	4·09
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	7	4·49	7	4-27	..	..
கடன் கொடுக்கப்பட்டவை ..	3	1·86	4	3·39	2	1·41
போக்குவரத்து உரிமையாளர்கள்—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	14	205·35	125	60·74	28	19·31
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	9	193·32	118	55·52	1	0·40
கடன் கொடுக்கப்பட்டவை ..	9	162·57	79	110·94	24	19·37
உணவகம் கட்டும் திட்டங்கள்—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	10	97·50	5	65·00	4	18·75
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	5	71·50	3	(—)0·93	2	11·75
கடன் கொடுக்கப்பட்டவை ..	6	72·41	4	42·58	..	7·63
பின்தங்கிய பகுதி—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	335	1078·34	301	946·52	284	729·14
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	262	928·90	205	780·71	171	604·32
கடன் கொடுக்கப்பட்டவை ..	147	611·56	207	620·35	127	480·69
சிறு தொழில்கள்—						
வரப்பெற்ற விண்ணப்பங்கள் ..	472	720·00	666	1,010·96	608	989·77
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	452	632·96	445	578·90	266	496·24
கடன் கொடுக்கப்பட்டவை ..	317	444·14	395	452·54	239	291·25

இணைப்பு XVIII.

தமிழ் நாடு மாநில் கூட்டுறவு வங்கி, சென்னை.

செய்முறைச் சங்கங்களுக்கு தவணைக்கடன்.

வரிசை எண். (1)	ஆலையின் பெயர். (2)	31—12—1975 அன்று நிலுவைகள். (3)	1976 கொடுக்கப்பட்ட தொகை. (4)	1976 திருப்பிக் கொடுத்த தொகை. (5)	31—12—76 அன்று நிலுவைகள். (6)	1977ல் கொடுக்கப்பட்ட தொகை. (7)	1977ல் திருப்பிக் கொடுத்த தொகை. (8)	31—12—1977 அன்று நிலுவைகள். (9)
							(ரூ. இலட்சத்தில்.)	
	கூட்டுறவு நூற்பாலைகள் :							
1.	கன்னியாகுமரி	12.00		1.00	11.00		4.75	6.25
2.	மதுரை	7.00	20.00	26.00	26.00	5.00	2.50	28.50
3.	திருச்சிராப்பள்ளி	7·00			7.00			7.00
4.	கோயம்புத்தூர்	7.00			7.00			7.00
5.	தஞ்சாவூர்	20.50	15.00	7.00	28.50			28.50
6.	வடஆற்காடு	33.00		10.00	23.00			23.00
7.	தென்னார்க்காடு	13.45			13.45			13.45
8.	காஞ்சீபுரம்	11.70			11.70			11.70
9.	தென்னிந்தியா	4.00	5.00	2.20	6.80		1.20	5.60
10.	சேலம்	2.50	30.00	1.00	31.50	5.00	10.50	26.00
11.	திருச்செந்தூர்	7.70	8.00	8.45	7.25			7.25
12.	திருவில்லிபுத்தூர்	3.00		1.00	2.00		1.00	1.00
	கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் :							
1.	சேலம் (மோகனூர்)		25.00		25.00			25.00
2.	கள்ளக்குறிச்சி					50.00	40.00	10.00
3.	ஆம்பூர்	5.00		5·00				
4.	அமராவதி		30.00		30.00			30.00
5.	மதுராந்தகம்		50.00		50.00	50.00	10.00	90·00
6.	திருப்பத்தூர் (வேலூர் மத்தியக் கூட்டுறவு வங்கி).					25.00		25.00
7.	கள்ளக்குறிச்சி (கடலூர், தென்னார்க்காடு மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாக).					39.50		39.50
8.	மதுராந்தகம் (காஞ்சீபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி).					4.50		4.50
		133.85	183.00	36.65	280.20	179.00	69.95	389.25

இணைப்பு XIX.

தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, சென்னை.

நடைமுறை மூலதன வசதி.

வரிசை எண். (1)	மத்திய கூட்டுறவு வங்கிகளின் பெயர். (2)	ஆலைகளின் பெயர். (3)	வரையறை 1976. (4)	31—12—1976 அன்று நிலுவை. (5)	வரையறை 1977. (6)	31—12—1977 அன்று நிலுவை. (7)	1978க்கு வரையறை அனுமதிக்கப்பட்டவை. (8)
							(ரூ. இலட்சத்தில்.)
	நூற்பாலைகள் (மத்திய வங்கிகள் மூலமாக நிதி உதவி)						
1.	வேலூர்	வட ஆற்காடு	45·00	20·00	65·00	50·25	65·00
2.	சேலம்	சேலம்	30·00	..	40·00	..	40·00
3.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	10·00	..	10·00	..	
4.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் காமாட்சிஅம்மன்.	45·00	9·96	60·00	49·71	60·00
5.	தென்னார்க்காடு	தென்னார்க்காடு	30·00	26·00	35·00	33·28	..
	ணம்	தஞ்சாவூர்	35.00	18·98	35·00	32·09	35·00
7.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	25·00	24·00	45·00	30·00	35·00
8.	மதுரை	மதுரை	25·00	22·50	50·00	..	35·00
9.	இராமநாதபுரம்	திருவில்லிப்புத்தூர்	30·00	..	40·00	32·00	40·00
10.	திருநெல்வேலி	தென்னிந்தியா அண்டு திருச்செந்தூர்.	100·00	52·95	175·00	145·00	90·00
11.	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	30·00	..	55·00	26·89	45·00
			405·00	174·39	610·00	400·12	445·00
	சர்க்கரை ஆலைகள் :						
1.	வேலூர்	ஆம்பூர் திருப்பத்தூர் வேலூர்.	80·00	23·00	360·00	129·10	575·00
2.	சேலம்	சேலம்	40·00	..	125·00	..	100·00
4.	காஞ்சிபுரம்	மதுராந்தகம்	115·00	14·95	145·00	69·94	200·00
5.	தென்னார்க்காடு	கள்ளக்குறிச்சி	135·00	73·00	240·00	90·40	285·00
6.	மதுரை	நேஷனல்	50·00	33·00	95·00	42·00	95·00
			450·00	143·95	1045·00	392·19	1355·00

இணைப்பு XX.

அரசு உதவிச் சட்டத்தின்கீழ் 1969-70 முதல் 1977-78 ஆகிய ஆண்டுகளில் (1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில்) ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன் விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை.

(1)	1969—70		1970—71		1971—72	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		ரூ.		ரூ.		ரூ.
1. குடிசைத் தொழில் அதிகாரிகளால் ஒப்பளிப்பு வழங்கிய கடன்கள் எண்ணிக்கை.	526	4,17,650	802	8,27,850	644	5,79,600
2. தொழில் வணிகத் துறை உதவி இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	931	14,12,200	921	16,22,161	1097	23,21,841
3. வட்டாரத் துணை இயக்குநர், திட்ட அதிகாரி ஆகியோரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	4	29,500	6	44,000	5	36,000
4. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	2	18,200	..	..
5. தொழில் வணிகத் துறை இணை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	5	91,000	4	88,500	6	88,950
6. தொழில் வாரியத்தின் பரிவுரையின் மேல், தொழில் வணிகத்துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	4	1,64,000	5	2,28,000	6	2,09,500
7. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பங்கு மூலதனக் கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..

(1)	1972—73		1973—74		1974—75	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை
	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
		ரூ.		ரூ.		ரூ.
1. குடிசைத் தொழில் அதிகாரிகளால் ஒப்பளிப்பு வழங்கிய கடன்கள் எண்ணிக்கை.	344	3,84.102	223	5,42,080	கிடைக்கப் பெற வில்லை.	18,81,000
2. தொழில் வணிகத் துறை உதவி இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	61	6,66,850	31	11,53,254	..	..
3. வட்டாரத் துணை இயக்குநர், திட்ட அதிகாரி ஆகியோரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..
4. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..
5. தொழில் வணிகத் துறை இணை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	1	24,500	..	..
6. தொழில் வாரியத்தின் பரிவுரையின் மேல், தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	1	34,000	1	40,000	..	..
7. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பங்கு மூலதனக் கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..

	1975—76		1976—77		1977—78	
	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.	எண்ணிக்கை.	தொகை.
	(14)	(15)	(16)	(17)	(18)	(19)
		ரூ.		ரூ.		ரூ.
					(31-12-77 வரை.)	
1. குடிசைத் தொழில் அதிகாரிகளால் ஒப்பளிப்பு வழங்கிய கடன்கள் எண்ணிக்கை.	385	5,66,500	245	3,85,000	..	..
2. தொழில் வணிகத் துறை உதவி இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	206	3,99,500	624	4,56,500	..	..
3. வட்டாரத் துணை இயக்குநர், திட்ட அதிகாரி ஆகியோரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	68	34,000	188	1,58,500	..	..
4. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..
5. தொழில் வணிகத் துறை இணை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..
6. தொழில் வாரியத்தின் பரிவுரையின் மேல், தொழில் வணிகத்துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	..	..	..
7. தொழில் வணிகத் துறை இயக்குநரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பங்கு மூலதனக் கடன்களின் எண்ணிக்கை.	..	..	..	8,54,000	..	..

இணைப்பு XXI

தமிழ் நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன், நிறுவன நிலை உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் காட்டுகின்ற விவரங்கள்.

தொடர் எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும்.	நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன்.	நாளது நாள் வரையிலான நிறுவன நிலை உற்பத்தித் திறன்.
(1)	(2)	(3)
கூட்டுறவுகள் :	(நாளொன்றுக்கு டன்களில்.)	
1. ஆம்பூர் ..	2,200	2,200
2. மதுராந்தகம் ..	1,750	1,750
3. அமராவதி ..	2,000	2,000
4. சேலம் ..	2,500	2,500
5. கள்ளக்குறிச்சி ..	2,000	2,000
6. நேஷனல் ..	1,500	1,000
7. தருமபுரி ..	1,250	1,250
8. வேலூர் ..	1,250	1,250
9. திருப்பத்தூர் ..	1,250	1,250
மொத்தம் ..	15,700	15,200

தொடர் எண்ணும், சக்கரை ஆலைகளின் பெயரும் (1)	நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன். (2)	நாளது நாள் வரையிலான நிறுவன நிலை உற்பத்தித் திறன். (3)
தனியார் துறை—		
10. இ.ஐ.டி. பாரி நிறுவனம்	4,000	3,000
11. காவேரி	1,500	1,250
12. டெக்கான் (தெக்கணம்)	2,500	1,850
13. தென்னிந்தியா (சௌத் இந்தியா)	1,500	2,700
14. சக்தி	4,000	4,000
15. அருணா	4,000	4,000
16. மதுரை	1,100	600
17. கோத்தாரி	4,000	1,500
18. திரு ஆரூரான்	2,000	2,000
19. பாலாறு	400	400
	25,000	21,300
பொதுத் துறை—		
20. தஞ்சாவூர்	1,250	1,250
21. பெரம்பலூர்	1.250	1,250
22. திருக்கோயிலூர்	1,250	..
23. சங்கரன் கோயில்	1,250	..
24. சிவகங்கை	1,250	..
25. கோயம்புத்தூர்	1,250	..
மொத்தம்	7,500	2,500
பெரு மொத்தம்	48,200	39,000

சுருக்கம்.

கூட்டுறவுகள்	15,700	15,200
கூட்டுப் பங்கு நிறுவனங்கள்	25,000	21,300
பொதுத் துறை	7,500	2,500
	48,200	39,000

இணைப்பு XXII.

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1974–75 முதல் 1976–77 வரையில், கரும்பு விலை குறித்த அறிக்கை.

வரிசை எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும்.	1974–75			
	இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக்கான குறைந்த அளவு கரும்பு விலை.	தமிழ்நாடு அரசு வரையறுத்த தெடைக்க விலை.	இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக்கான இறுதி விலை.	ஆலைகள் வழங்கிய இறுதி விலை.
(1)	(2)	(3)	(4)	(5)
கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்—				
1. ஆம்பூர்	98·00	108·00	108.73	127·00
2. மதுராந்தகம்	100·00	110·00	109·99	126·00
3. அமராவதி	88·00	100·00	96·25	100·00
4. சேலம்	93·00	103·00	103·07	117·00
5. கள்ளக்குறிச்சி	96·00	106·00	108·49	126·00
6. நேஷனல்	90·00	100·00	98·23	115.00
7. தருமபுரி	103·00	113·00	114·25	128·00
8. திருப்பத்தூர்	..	..	..	..
9. வேலூர்	..	..	..	..
பொதுத்துறை சர்க்கரை ஆலைகள்—				
10. தஞ்சாவூர்	..	..	..	..
தனியார் துறை சர்க்கரை ஆலைகள்—				
11. இ.ஐ.டி. பாரி கம்பெனி ..	88·00	100·00	95·73	100·00
12. காவேரி	87·00	100·00	97·31	100·00
13. டெக்கான்	96·00	106·00	104·86	108·00
14. தென்னிந்தியா	87·00	100·00	92·84	100·00
15. அருணா	89·00	100·00	97·76	113·00
16. சக்தி	94·00	103·00	105·24	110·00
17. மதுரை	86·00	100·00	94·64	100·00
18. கோத்தாரி	92·00	102·00	102·07	110·00
19. திரு ஆரூரன்	86·00	100·00	93·12	96·00
20. பாலாறு	85·00	100·00	82·59	110·00

இணைப்பு XXII—தொடர்ச்சி.

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1974–75 முதல் 1976–77 வரையில், கரும்பு விலை குறித்த அறிக்கை—தொடர்ச்சி.

வரிசை எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும்.	1975–76. இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான குறைந்த அளவு கரும்பு விலை.	தமிழ் நாடு அரசு வரையறுத்த தொடக்க விலை.	இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக் கான இறுதி விலை.	ஆலைகள் வழங்கிய இறுதி விலை.
	(6)	(7)	(8)	(9)
கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்—				
1. ஆம்பூர்	99·00	114·00	105·43	114·00
2. மதுராந்தகம்	99·00	114·00	106·16	114·00
3. அமராவதி	85·00	100·00	94·25	100·00
4. சேலம்	93·00	108·00	101·32	108·00
5. கள்ளக்குறிச்சி	92·00	107·00	100·60	107·00
6. நேஷனல்	92·00	107·00	106·90	107·00
7. தருமபுரி	104·00	119·00	112·81	119·00
8. திருப்பத்தூர்	..	..	..	
9. வேலூர்	..	..	..	..
ாதுத் துறை சர்க்கரை ஆலைகள்—				
10. தஞ்சாவூர்	..	..	..	..
னியார் துறை சர்க்கரை ஆலைகள்—				
11. இ.ஐ.டி. பாரி கம்பெனி ..	88·00	103·00	94·41	103·00
12. காவேரி	85·00	100·00	88·37	100·00
13. டெக்கான்	92·00	107·00	94·92	107·00
14. தென்னிந்தியா	90·00	105·00	101·62	101·62
15. அருணா	94·00	109·00	103·66	110·00
16. சக்தி	92·00	107·00	99·73	107·00
17. மதுரை	85·00	100·00	86·63	100·0
18. கோத்தாரி	94·00	109·00	103·98	105·00
19. திரு ஆரூரன்	87·00	102·00	97·81	97·81
20. பாலாறு	85·00	100·00	..	..

இணைப்பு XXII—தொடர்ச்சி.

தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1974–75 முதல் 1976–77 வரையில், கரும்பு விலை குறித்த அறிக்கை—தொடர்ச்சி.

வரிசை எண்ணும் சர்க்கரை ஆலையின் பெயரும்.	1976–77.			
	இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக்கான குறைந்த அளவு கரும்பு விலை.	ஆலைகள் ஒப்புக் கொண்ட தொடக்க விலை.	இந்திய அரசு வரையறுத்த சட்டப்படிக்கான இறுதி விலை.	இறுதியாக வழங்கப்பட்ட விலை/ஆலைகள் ஒப்புக் கொண்ட விலை.
	(10)	(11)	(12)	(13)
கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்—				
1 ஆம்பூர்	102·00	117·00	இன்னும் நீர்ணயிக்கப்படவில்லை.	117·00
2 மதுராந்தகம்	100·00	115·00	,,	115·00
3 அமராவதி	90·00	110·00	,,	110·00
4 சேலம்	95·00	110·00	,,	110·00
5 கள்ளக்குறிச்சி	94·00	109·00	,,	109·00
6 நேஷனல்	101·00	116·00	,,	116·00
7 தருமபுரி	100·00	119·00		119·00
8. திருப்பத்தூர்	85.00	117.00	,,	117.00
9. வேலூர்	85.00	117.00	,,	117.00
பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் —				
10. தஞ்சாவூர்	94.00	110.00	,,	110.00
தனியார்துறை சர்க்கரை ஆலைகள் —				
11. இ.ஐ.டி. பாரி கம்பெனி ..	85.00	100.00	,,	100.00
12. காவேரி	91.00	105.00	,,	105.00
13. டெக்கான்	94.00	110.00	,,	110.00
14. தென்னிந்தியா	93.00	93.00	,,	100.00
15. அருணா	95.00	113.00	,,	113.00
16. சக்தி	96.00	111.00	,,	111.00
17. மதுரை	89.00	100.00	,,	100.00
18. கோத்தாரி	99.00	105.00	,,	105.00
19. திரு ஆரூரன்	94.00	100.00	,,	100.00
20. பாலாறு	..	..	..	..

இணைப்பு—XXIII

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, சராசரி சர்க்கரையின் சதவீதம் பற்றிய விவரங்கள்.

சர்க்கரை ஆலைகளின் பெயர்கள். (1)	1974-75 பிழியப்பட்ட கரும்பு. (2)	உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. (3) (டன்களில்)	சராசரி சர்க்கரையின் சதவீதம். (4)
கூட்டுறவுச் சங்கங்கள்—			
1. ஆம்பூர்	3,09,528	29,331	9.48
2. மதுராந்தகம்	2,22,073	20,233	9.11
3. அமராவதி	1,88,281	13,637	7.24
4. சேலம்	2,37,045	21,081	8.89
5. கள்ளக்குறிச்சி	2,04,422	17,650	8.63
6. நேஷனல்	1,44,420	12,907	8.94
7. தருமபுரி	1,64,847	16,478	10.00
8. திருப்பத்தூர்	..	..	..
9. வேலூர்	..	..	..
மொத்தம்	14,70,616	1,31,317	8.93
பொதுத்துறை நிறுவனங்கள் —			
1. தஞ்சாவூர்	..	..	..
கூட்டுப் பங்கு —			
1. இ.ஐ.டி. பாரி	5,36,813	41,613	7.75
2. காவேரி	2,04,664	15,052	7.35
3. டெக்கான்	2,69,864	22,984	8.52
4. தென்னிந்தியா	2,45,938	20,392	8.29
5. அருணா	4,05,866	34,307	8.45
6. சக்தி	9,24,300	79,106	8.56
7. மதுரை	65,251	4,794	7.35
8. கோத்தாரி	2,13,109	19,035	8.93
9. திரு ஆரூரன்	2,11,567	16,282	7.70
10. பாலாறு	7,738	405	5.23
மொத்தம்	30,85,110	2,53,970	8.23
பெரு மொத்தம்	45,55,726	3,85,287	8.46

இணைப்பு XXIII—தொடர்ச்சி.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, சராசரி சர்க்கரையின் சதவீதம் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

சர்க்கரை ஆலைகளின் பெயர்கள்.	1975-76 பிழியப்பட்ட கரும்பு. (5)	1975-76 உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. (6) (டன்களில்)	1975-76 சராசரி சர்க்கரையின் சதவீதம். (7)
கூட்டுறவுச் சங்கங்கள் :—			
1. ஆம்பூர் ..	1,58,728	15,860	9.99
2. மதுராந்தகம் ..	1,64,731	15,246	9.26
3. அமராவதி ..	98,377	8,337	8.48
4. சேலம் ..	48,302	4,560	9.44
5. கள்ளக்குறிச்சி ..	1,38,019	12,595	9.13
6. நேஷனல் ..	51,920	5,222	10.06
7. தருமபுரி ..	74,441	7,442	10.00
8. திருப்பத்தூர் ..	..	..	..
9. வேலூர் ..	..	..	..
மொத்தம் ..	7,34,512	69,262	9.43
பொதுத்துறை நிறுவனங்கள் :—			
1. தஞ்சாவூர் ..	..	..	..
கூட்டுப் பங்கு :—			
1. இ.ஐ.டி. பாரி ..	3,07,917	25,043	8.13
2. காவேரி ..	40,754	3,582	8.79
3. டெக்கான் ..	45,143	4,241	9.40
4. தென் இந்தியா ..	1,00,992	9,328	9.24
5. அருணா ..	2,22,679	20,835	9.36
6. சக்தி ..	2,53,127	26,262	8.95
7. மதுரை ..	21,943	1,942	8.85
8. கோத்தாரி ..	77,716	7,664	9.86
9. திரு ஆரூரன் ..	1,64,703	15,399	9.35
10. பாலாறு ..	..	..	..
மொத்தம் ..	12,34,974	1,10,696	8.96
பெரு மொத்தம் ..	19,69,486	1,79,958	9.14

இணைப்பு XXIII—தொடர்ச்சி.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை, சராசரி சர்க்கரையின் சதவீதம் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

சர்க்கரை ஆலைகளின் பெயர்கள்.	1976-77 பிழியப்பட்ட கரும்பு. (8)	உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. (9) (டன்களில்.)	சராசரி சர்க்கரையின் சதவீதம். (10)
கூட்டுறவுச் சங்கங்கள் :—			
1. ஆம்பூர்	2,59,204	25,270	9.75
2. மதுராந்தகம்	1,21,616	11,289	9.28
3. அமராவதி	1,64,945	13,743	8.33
4. சேலம்	2,74,670	24,062	8.76
5. கள்ளக்குறிச்சி	2,05,205	18,364	8.95
6. நேஷனல்	1,86,050	15,604	8.39
7. தருமபுரி	2,18,006	20,360	9.34
8. திருப்பத்தூர்	41,405	3,260	7.87
9. வேலூர்	15,118	1,098	7.26
மொத்தம்	14,86,219	1,33,050	8.95

பொதுத்துறை நிறுவனம் :—			
1. தஞ்சாவூர்	40,492	3,564	8.80
கூட்டுப் பங்கு :—			
1. இ.ஐ.டி. பாரி	5,27,219	40,704	7.72
2. காவேரி	1,42,910	10,420	7.29
3. டெக்கான்	3,29,043	27,126	8.24
4. தென்னிந்தியா	2,34,153	20,587	8.79
5. அருணா	4,10,615	34,068	8.30
6. சக்தி	2,57,560	20,311	7.89
மதுரை	44,420	3,436	7.73
8. கோத்தாரி	1,62,369	14,081	8.67
9. திரு ஆரூரன்	1,56,412	14,199	9.08
10. பாலாறு	..	..	..
மொத்தம்	22,64,701	1,84,932	8.17
பெரு மொத்தம்	37,91,412	3,21,546	8.48

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

செவ்வாய்க் கிழமை, 1978 மார்ச் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினா 215 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: May I make this request, Mr. Deputy Chairman, Sir? Both the Questions No. 195 and No. 196 may be taken together.

Judicial Services.

@ * 195 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU S. RAMAKRISHNA THEVAR): Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether any order has been issued by the Government to upgrade all the posts of Judicial Second Class Magistrates as Judicial First Class Magistrates and to integrate with the cadre of District Munsifs;

(*b*) if so, whether the said order is now being implemented;

(*c*) whether any guidelines have been prescribed to implement the above order; and

(*d*) whether any suggestion regarding the order has been called for from the Madras High Court?

@ 21—3—1978 தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

நீதித் துறைப் பணிகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் சார்பில்) : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீதித் துறை இரண்டாம் வகுப்பு நடுவர்கள் எல்லாரையும் முதல் வகுப்பு நடுவர்களாக உயர்த்தியும் மாவட்ட முன்சிப்புகள் தகுதிக்கு இணையாக வைத்தும் அரசு ஆணை எதும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த ஆணை தற்பொழுது அமுல் நடத்தப்பட்டு வருகிறதா ?

(உ) மேற்படி அரசு ஆணையை நிறைவேற்ற உதவும் வகையில் நடைமுறை விதிகள் எவ்வயேனும் இயற்றப்பட்டுள்ளனவா ?

(எ) இந்த ஆணை தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றத்தாரின் கருத்து அறியப்பட்டதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (a) Yes.

(b) No.

(c) Draft amendments to the Tamil Nadu State Judicial Service Rules have been received from the High Court, for approval. They are under the consideration of the Government.

(d) Yes.

@ * 196 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) whether there is any proposal to integrate the Magistracy and the Subordinate Judiciary;

(b) if so, the details thereof; and

(c) the stage at which the matter now stands ?

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றவியல் நீதிபதி அலுவல்களையும், துணை நீதிபதிகள் அலுவல்களையும் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இது தற்போது எந்த நிலையில் உள்ளது ?

@ 21—3—1978 தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (a) Yes.

(b) The Government have issued orders on 31st January 1976, upgrading the posts of Judicial Second Class Magistrates into First Class Magistrates and integrating the upgraded posts with the cadre of District Munsifs.

(c) The Registrar, High Court, Madras has sent draft amendments to the Tamil Nadu State Judicial Service Rules. The matter is under the consideration of the Government.

Leave facilities to Non-Teaching Staff in Aided High Schools.

* 216 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation from the Tamil Nadu Aided High Schools Non-Teaching Staff Association, requesting the extension of leave facilities to the non-teaching staff in Aided High Schools on a par with the staff of the Department which has no leave facilities;

(b) if so, the action taken thereon; and

(c) the reasons for modifying the earned leave facility granted in G.O. No. 10, Education, dated 4th January 1973?

மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு விடுமுறை வசதிகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு விடுமுறை இல்லாத இலாக்காவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒப்ப விடுமுறை வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்று, தமிழ் நாடு, அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் அல்லாத அலுவலர் சங்கத்திடமிருந்து முறையீடு எதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை எண் 10-ன் படி அளிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு வசதியை, மாற்ற வேண்டிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (இ) & (உ) இக்கோரிக்கையும், இது தவிர ஏனைய ஆறு கோரிக்கைகளையும் கொண்ட மனு அண்மையில் அரசிற்கு வந்துள்ளது. இவைகளைப் பரிசீலித்து கூடிய விரைவில் அரசாணை வெளியிடப்பெறும்.

Posting of Couples in One Station.

* 217 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have recently issued orders regarding the posting of married couples in service in one and the same station as far as possible;

(*b*) whether the same is being implemented by the Officers of the Education Department; and

(*c*) if not, the reason therefor?

தம்பதிகளை ஒரே இடத்தில் நியமித்தல்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பணியில் உள்ள கணவன், மனைவி இருவரையும் இயன்ற வரையில் ஒரே இடத்தில் நியமிப்பதற்கு அரசு அண்மையில் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது உண்மையா ?

(இ) கல்வித் துறையிலுள்ள அதிகாரிகளால் இது செயற்படுத்தப்படுகிறதா ?

(உ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கணவனும் மனைவியும் அரசு பணியிலிருந்தால் அவர்களை ஒரேயிடத்தில் நியமனம் செய்ய வேண்டும் என்று அரசு 1937-ம் ஆண்டிலேயே ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையினை வலியுறுத்தி அடிக்கடி அரசு கட்டளை பிறப்பித்து வருகின்றது. இவ்வாணையினை வலியுறுத்தி கடைசியாக அரசு தன்து ஆணை நிலை எண் 930 (பணியாளர் மற்றும் சீர்திருத்தத் துறை), நாள் 27—7—1977-ல் கட்டளையிட்டுள்ளது.

(இ) ஆம். அரசின் நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு, இயன்ற வரையில் மேற்கூறிய அரசு ஆணை கல்வித்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: கணவனும, மனைவியும் ஒரே இடத்தில் வேலை பார்க்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் அரசு உத்தரவு போடுகிறது. ஆனால் ஊராட்சி ஒன்றிய அளவில் இந்தக் காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. 'பி'விங் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வாய்ப்பு சரிவர தரப்படுவதில்லை என்று அவர்கள் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே இந்த மனிதாபிமானக் காரியத்தைப் பின்பற்றும்படி அரசு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் இந்தக் குறைபாடுகள் இருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். 'பி' விங் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களை 'ஏ' விங்கோடு இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இணைப்பிற்குப் பிறகு இத்தகைய மாறுதல்களுக்கு நிறைய வாய்ப்புகள் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: கணவன் அல்லது மனைவி அரசுத் துறையிலும், மற்றொருவர் இன்னொரு ஊரில் தனியார் துறையிலும் இருந்தால், அரசுத் துறையில் மாற்றுவதற்கு வாய்ப்பு இருந்தால், அவரை அங்கே மாற்றுவதற்கு அரசு தக்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதுள்ள ஆணையை, அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு நிறைவேற்றுவதிலேயே பல்வேறு சங்கடங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். எனவே இதை நிறைவேற்றும்போது, அது போன்ற காரியங்களைப்பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அரசின் ஆணையை, அரசுத் துறைகளுக்கு மட்டுமல்லாமல், பல்லவன் போக்கு வரத்துக் கழகம், மின் வாரியம் போன்ற அரசு அன்டர்டேக்கிங்ஸுக்கும் விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்வித் துறை தன்னுடைய அதிகாரத்தின்கீழ் உள்ளவர்களுக்கு இந்த ஆணையை விஸ்தரிப்பதிலேயே பல சங்கடங்கள் இருக்கின்றன. எனவே அந்த ஆணையை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

திரு. எல். பலராமன்: கணவன், மனைவி அலுவலகத்திற்குத் தெரிவிக்காமலேயே ஆசிரியர்களாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ? தெரிவித்தால் வருமான வரி விதிப்பார்கள் என்ற காரணத்தால், தெரிவிக்காமல் இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. இந்த மாதிரி சங்கடமான நிலைமைகளைத் தீர்க்க அரசு என்ன செய்ய உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பல்வேறு சங்கடங்கள் காரணமாக தங்களுடைய கணவன், மனைவி உறவை வெளிப்படுத்தாமல் இருக்கக்கூடும்; தனிப்பட்ட அந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிட விரும்பவில்லை.

திரு. ஜார்ஜ் கோமகன் : கணவன், மனைவிக்குள் மன வேற்றுமை ஏற்பட்டு, அதன் காரணமாகப் பிரிந்து போக விரும்பினால், அவர்களைத் தனித் தனியாக மாற்ற அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒன்றாக இருப்பதன் மூலம் பெரிய தீமை விளையுமென்று கருதினால், அவர்களுக்கு ஒத்துழைப்புத் தரலாம்.

* 218 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is fact that a number of representations have been received from teachers by the Chief Educational Officer, Thanjavur, requiring transfer to, or near about, the station where their spouses are working;

(b) the number of such representations received during the last 3 years;

(c) whether any of them is still pending;

(d) if so, the period of pendency;

(e) the reasons therefor; and

(f) the action proposed to be taken by the Government in the matter ?

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தங்கள் கணவர் அல்லது மனைவி பணிபுரியும் இடத்திற்கு அல்லது அதற்கு அருகிலுள்ள இடத்திற்கு மாற்றல் வேண்டி ஆசிரியர்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அதிகாரிக்கு வந்திருப்பது உண்மையா ?

(இ) கடந்த 3 ஆண்டுகளில் இவ்வாறு வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது ?

(உ) அவற்றில் இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருக்கும் விண்ணப்பங்கள் எவையேனும் உள்ளனவா ?

(எ) ஆம் எனில், எவ்வளவு நாட்களாக முடிவுறாமல் உள்ளன ?

(ஐ) அதற்கான காரணங்கள் யாவை ?

(ஒ) இது குறித்து, அரசு எடுக்கக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) 39.

(உ) ஆம். 6 பேர்களுடைய கோரிக்கை இன்றும் நிலுவையில் உள்ளது

(எ) 6 மாதங்கள்.

(ஐ) பணியிடம் இல்லாததால்.

(ஒ) கணவனும் மனைவியும் அரசுப் பணியிலிருந்தால், அவர்களை ஒரே இடத்தில் அல்லது, அவர்கள் மனைவிகள் பணியாற்றும் இடத்திற்கு அருகில் நியமனம் செய்வதற்கு, இயன்றவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Special Pay to Headmasters of High Schools.

* 219 Q.—THIRU P. R. THOMAS, THIRU D. SANTOSHAM & THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Headmasters of High Schools in the State have not been allowed to draw Special Pay for the post, after 2nd October 1970.

(b) whether it is also a fact that even while refixation was done, the Special Pay was not taken into consideration;

(c) if so, the reasons therefor; and

(d) the action proposed to be taken thereon ?

உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தனிச் சம்பளம்.

திரு. பி. ஆர். தாமஸ், திரு. டி. சந்தோஷம் & திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், 2—10—1970-ம் நாளுக்குப் பிறகு, அவர்களது பதவிக்கான தனிச் சம்பளம் பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) அடிப்படைச் சம்பளம் மீண்டும் நிர்ணயிக்கப்பட்டபோது கூட தனிச் சம்பளம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம். இரண்டாவது ஊதியக் குழு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியருக்கு அவர்கள் ஏற்கனவே பெற்று வந்த தனிச் சம்பளத்தையும் கணக்கில் கொண்டு இரண்டு விதமான ஊதிய விகிதங்கள் ஏற்படுத்தப் பரிந்துரை செய்தது. அப்பரிந்துரைக்கேற்ப உயர் நிலைப் பள்ளி தலைமையாசிரியருக்கு அப்பள்ளியில் கல்வி பயிலும் மொத்த மாணவர்களைக் கணக்கில் கொண்டு, இரண்டு வித ஊதிய விகிதம் 2—10—1970 முதல் அளிக்க அரசு ஆணையிட்டது. அதனால் அவர்களுக்கு தனிச்சம்பளம் அளிக்க இடமில்லை.

(இ) தலைமையாசிரியர்களின் சம்பளத்தை இரண்டாவது ஊதியக்குழு சம்பள விகிதங்களில் நிர்ணயம் செய்யப்படுகையில் அவர்கள ஏற்கனவே பெற்று வந்த தனிச்சம்பளம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

(உ) & (எ) மேலே கூறப்பட்ட விடையினால் இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. பி. ஆர். தாமஸ்: 2—10—1970-க்கு முன்னதாக இரண்டு வேறு பாடான ஊதிய விகிதங்கள் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. அதே அடிப்படையிலே தொடர்ந்து 2—10—1970-க்குப் பின்னாலும் வழங்கப்பட்டன. 2—10—1970-க்கு முன்னதாக தலைமை ஆசிரியர்களுக்குத் தனியாகப் படி வழங்கப்பட்டது. அந்தப் படி 2—10—1970க்குப் பின் நிறுத்தப்பட்டு விட்டது. அதை மீண்டும் வழ்ங்க மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இரண்டாவது சம்பளக் குழு தலைமையாசிரியர்களுடைய சம்பளத்தை நிர்ணயம் செய்கிற நேரத்தில், அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நிர்ணயம் செய்ததால், அப்படிப்பட்ட யோசனை இல்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினா எண் 215 ஒத்தி வைக்கப் படுகிறது. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

முதுகுளத்தூர் வட்டத்தில், சாயல்குடி கிராமத்தில் தீ விபத்து நிவாரண நடவடிக்கை குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் 22 ஆம் தேதியன்று 42-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்

கையைச் சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் முதுகுளத்தூர் வட்டத்தில், சாயல்குடி கிராமத்தில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் சார்பாக ரூபாய் 80 கொடுக்கப்பட்டது என்றும், அது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வேட்டியும் ஒரு சேலையும் கொடுக்கப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

ஆனால் நான் சென்ற 25 ஆம் தேதியன்று ஊருக்குச் சென்று அங்கே கேட்ட போது, வேட்டியோ, சேலையோ பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை என்று நேரிலும் சொன்னார்கள், அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எழுத்து மூலமாகவும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். துணைத் தலைவர் அவர் களே, அதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்து அதற்குரிய விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், முதுகுளத்தூர் வட்டத்தில், சாயல்குடி பஞ்சாயத்தில் அமைந்துள்ள வி.வி.ஆர். காலனியில் 26—2—1978 அன்று நடந்த தீ விபத்து குறித்தும், அதனால் அங்கே ஏற்பட் டிருக்கக் கூடிய இன்னல்களைக் குறித்தும் அரசு எடுத்த நடவடிக்கைகளைக் குறித்தும் இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அரசுத் தரப்பிலே அன்றைக்கு ஒரு விளக்கமான அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. அந்த அறிக்கையில் ஒரு குடும்பத்திற்கு ரூபாய் 80 வீதம், 5,120 ரூபாய் நிவாரணமாக உடனடியாகக் கொடுக்கப்பட்டது என்றும், இத்துடன் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் விநியோகிக்கப் பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டதை இங்கே தலைவர் அவர்களின் மூலமாகத் தெரிவித்தேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி சேலைகள், வேட்டிகள் வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத் தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவரிடம் இருக்கக் கூடிய தகவலை என்னிடம் கொடுத்தால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு விசாரிக்கிறேன். ஏனென்றால் இந்த அறிக்கை அவரால் தயாரிக்கப்பட்டது தான். அப்படி வழங்கப்பட்டதா அல்லது மாண்புமிகு உறுப்பினருக்குத் தவறான தகவல்களைக் கொடுத்தார்களா என்பதையெல்லாம் விசாரித்து, தேவைப்பட்டால் மேலவையிலேயே ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, நானே நேரிலே சென்றிருக்கிறேன். 25 ஆம் தேதி வரை கொடுக்கப்படவில்லை. அது சம்பந் தப்பட்டவர்களே என்னிடம் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை தவறாக இருக்குமென்று கருதுகிறேன்.

ஆகவே அவரோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வேட்டியும், சேலையும் கிடைக்கச் செய்தால், நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, 5 நாட்களுக்கு முன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தால் அதையும் எடுத்துக் கொள்ளுவதற்கு நாளாகிறது. அதற்குள் நான் எழுப்பிய பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலையே இல்லாமல் போகிறது. ஆகவே உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமெரிக்காவுக்குக் கூட போன் செய்யக் கூடிய அளவுக்குச் சர்க்காருக்கு நிறைய வசதிகள் இருக்கின்றன. ஆகவே 5 நாள் என்று எடுத்துக்கொள்ளாமல் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் கவனிக்கிறேன். 25-ந் தேதிதான் கொடுத்திருக்கிறீர்கள். முறைப்படி 7 நாள் அவகாசம் இருக்கிறது அதற்கு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : சீக்கிரம் முடியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகத்தின் வாடகை வசூலுக்கு எதிர்ப்பு தெரிவித்து 3—3—1978 அன்று நடந்த வியாபாரிகளின் பூரண கடையடைப்பு குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகத்தின் வாடகை வசூல் குறித்து எதிர்ப்புத் தெரிவித்து 3—3—1978 அன்று வியாபாரிகள் பூரண கடையடைப்புச் செய்ததால் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து."

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் தருகிற வகையில் சுற்றுக்கு விடப்பட்ட அந்த அறிக்கையிலே ஒரு சில மாறுதல் செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் உங்களுடைய சம்மதத்தோடு இந்த அறிக்கையை மேலவையிலே வைக்கிறேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலுக்குச் சொந்தமான கட்டிடங்களில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு கடை நடத்துபவர்களின் மொத்த எண்ணிக்கை 508. இவர்களில் சுமார் 100 கடைக்காரர்கள் அக்கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து 3—3—1978 அன்று கடையடைப்புச் செய்தனர். இக்கட்டிடங்களுக்கு இதுவரை நியாயமான வாடகை நிர்ணயிக்கப்படாமல், மிகக் குறைந்த வாடகையே பெறப்பட்டு வந்தது. இதைச் சீர்படுத்தி, கோவில்களுக்கு முறையாக வர வேண்டிய வருமானத்தைப் பெறுவதற்காக இந்து சமய அறக் கட்டளைத் துறை ஆணையரால் ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு குழு நியமிக்கப்பட்டு அது, பொதுப் பணித் துறை விதிகளில் குறிப்பிட்டுள்ள முறைகளைக் கருத்தில் கொண்டு இந்த கடை, கட்டிடங்களுக்குக் கொடுக்கப்படும் வாடகையையும் அருகாமையிலிருக்கும் அவை போன்ற தனியார் கட்டிடங்களுக்குக் கொடுக்கப்படும் வாடகையையும் ஆராய்ந்து, ஒவ்வொரு கடைக்கும் வாடகையை நிர்ணயித்து வருகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்படும் வாடகை, அக்கம் பக்கத்தில் மற்ற தனியார் கட்டிடங்களுக்குப் பெறப்படும் வாடகையை விட மிகக் குறைவாகவே உள்ளது. இந்த வாடகை உயர்வு, கடைக்காரர்களுக்கு மிகுந்த இடர்ப்பாடு அளிக்காமல் இருப்பதற்காக குழுவால் நியாயம் என நிர்ணயிக்கப்பட்ட வாடகை எவ்வளவு இருப்பினும், இவ்வுயர்வு தற்போதைய வாடகையைவிட 200 சதவிகிதம் மேற்படாமலிருக்கவும், மற்றும் அவ்வுயர்வினை ஒரே தடவையில் உயர்த்தாமல், மூன்று அரையாண்டு தவணைகளில் படிப்படியாக அமுல் செய்யவும் இடப்பட்ட ஆணையரின் உத்தரவின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அனேக கோவில்களின் பூசை, பணியாளர் ஊதியம் ஆகியவற்றுக்கான செலவுகள், அதிகமானபோதிலும், அவற்றின் வருமானம் அதிகரிக்க ஏதுவில்லாமலிருக்கிறது. நகரங்களிலுள்ள கோவில்கள் தம் அன்றாட செலவுகளுக்குப் பெரும்பாலும் கட்டிடங்களில் இருந்து வரும் வாடகையையே நம்பியுள்ளன. ஆகவே, ஆலயங்களிலும் அவைகளில் பணியாற்றும் குறைந்த சம்பளம் வாங்குகின்ற தொழிலாளர்கள் மற்றும் நாதசுரம், தவில் போன்ற இசைக் கலைஞர்களுக்கும் ஓரளவிற்காவது ஊதியத்தை உயர்த்தவும், குறைந்த பட்ச செலவுகளைச் செய்து கொடுக்கவும் வாடகைதாரர்கள் நியாய வாடகையினை கொடுக்க மறுக்கமாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், மதுரையிலே புதுமண்டபம்

என்று ஒன்று இருக்கிறதென்று. அதனுடைய பெயர்தான் புதுமண்டபமே ஒழிய, அது திருமலை நாயக்கர் காலத்திலே கட்டப்பட்டது. அங்கே தையல் காரர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் கடைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் தரம் பிரித்து வாடகையை உயர்த்தலாம். அவர்கள் உயர்த்தக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் 8 ரூபாய் கொடுத்திருந்த வாடகைக்குப் பதிலாக 30 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று திடீரென்று உயர்த்தி யிருக்கிறார்கள். ஆகவே அரசு அதை மறு ஆய்வு செய்து புதுமண்டபத்தில் உள்ள சிறு வியாபாரிகளைப் பொறுத்த வரையில், கூடுமான அளவுக்குக் குறைந்த வாடகையை வசூலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுப்பதற்கு முன்பே மதுரையிலிருந்து கடைக் காரர்கள் வந்திருக்கிறார்கள் என்றும் அவரைப் போய்ப் பார்க்க வேண்டு மென்றும் என்னிடம் சொன்னார்கள். அது எனக்கும் தெரியும். அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயமானதை உடனடியாக இந்து அறநிலையத் துறை ஆணையாளருக்கும், செயலாளருக்கும் அனுப்பி, அவர் களுடைய கருத்தைப் பெற்றுத்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டாவது, அங்குள்ள 508 கடைகளுக்கும் ஒட்டு மொத்தமாக வாடகையை உயர்த்தவில்லை. 46 இனங்களுக்கு வாடகையே உயர்த்தப்படாமல் அப்படியே விடப்பட்டிருக்கிறது. 1 முதல் 16 சதவீதம் வரை 16 இடங்களில் வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. 26 முதல் 99 சதவீதம் வரை 81 கடைகளுக்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. 100 முதல் 200 சதவீதம் வரை 325 கடைகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பக்கத்திலே உள்ள தனியார் கடைகளில் பெற்று வருகிற வாடகையின் கணக்குப்படி வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கும், இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதிலே இன்னொன்றையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். சில கடைக்காரர்கள் வாடகைக்குக் கோயில் இடங்களைப் பெற்றுக்கொண்டு, பிறகு உள்வாடகைக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்று ஆதார பூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக வடக்கு வாசலில் அனுமான் கோயிலில் 60 ரூபாய்க்கு நாராயணசாமி என்பவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் உள்வாடகையின் மூலம் அவர் பெறுவது 160 ரூபாய். அவர் கோயிலுக்குத் தர வேண்டிய பாக்கி 300 ரூபாய். இப்படி ஒவ்வொரு

விதமாகவும் கணக்கு எடுத்துப் பார்த்துத்தான் இதைச் செய்திருக்கிறார்கள். ஆகவே 200 சதவீதத்திற்கு மேல் உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லும் போதும் அது இரண்டு மடங்குக்கு மேல் இருக்கிறது என்று சொல்லும்போதும் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். 8 ரூபாய் வாடகை என்றால், 100 சதவீதம் அதிகமாக உயர்த்தியிருக்கிறோமென்றால், அவர் கொடுக்க வேண்டியது 16 ரூபாய்தான். அதைப்போலவே 200 சதவீதம் அதிகமாக உயர்த்தியிருக்கிறோம் என்றால், அவர் கொடுக்க வேண்டியது 24 ரூபாய்தான். இந்த 8 ரூபாய் வாடகை என்பது 15 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆகவே அவர்கள் 24 ரூபாயைக் கொடுப்பது என்பது ஒரு பெரிய விஷயம் அல்ல, தையல்காரர்களைப்பற்றிச் சொன்னார்கள். அதைத் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். அங்கே வெறும் மண்டபம்தான் இருக்கின்றது. அதிலே கூரையைப் போட்டுக்கொண்டு அவர்கள் இருக் கிறார்கள். நானும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் அது எனக்கும் தெரியும். அவர்களுடைய பிரச்சினைகளைக் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது தனியாக கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[முற்பகல் 10-50]

4. அரசின் தீர்மானம்.

மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட 'மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் * பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட 'மருத்தவமும், மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள்' பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

---

* 661–732–ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளன.

[மேலவைத் துணைத் தலைவர்] [1978 மார்ச் 28

இன்று பன்னிரண்டு பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நேரத்தை கண்டிப்பாகக் கடைப்பிடித்தாலொழிய முடியாது. இன்று காலைக்குள் முடிக்க வேண்டியிருக்கிறது. தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

* **திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கொள்கை பற்றிய குறிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருப்பதைப் படித்தேன். அண்மையில் இதுபற்றி அவர்கள் பேசிய சில கருத்துக்களையும் கவனித்தேன். அரசு மருத்துவ மனைகளைப் பற்றியும் அங்கே பணியாற்றுகிற டாக்டர்களைப் பற்றியும் சென்ற கூட்டத் தொடரில் நான் என்ன சொன்னேனோ அந்தக் கருத்துக்களைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்ட முறையில் அவர்கள் பேசியிருப்பதைக் கண்டு பாராட்டுகிறேன். அரசு மருத்துவமனைகளில் வேலை செய்கிற டாக்டர்கள் தனிப்பட்ட மருத்துவ மனைகளை வைத்துக்கொண்டு பொது மருத்துவ மனையிலும் கவுரவ டாக்டர்களாகப் பணியாற்றுவதால் அந்த வாய்ப்பை அங்குள்ள நல்ல வசதியுள்ள நோயாளிகளை தனியாகக் கவனிப்பதற்கு வாய்ப்பாகவும் சில முக்கியமான மருந்துகளை எடுத்துப்போவதற்கு வாய்ப்பாகவும் பயன்படுத்துகிறார்கள். பொது மருத்துவ மனையில் போதிய கவனம் செலுத்துவதில்லை. அதிகமாக தங்கள் சொந்த மருத்துவ மனையில் சிகிச்சை செய்து நல்ல பெயர் எடுக்கவும் அதன் மூலம் லாபம் சம்பாதிக்கவும் கவனம் செலுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதுபற்றி முதலமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அந்த நிலையைத் தடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் இனி என்ன ஏற்பாடு செய்யப்போகிறார்கள் என்பதைப்பற்றிச் சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை. ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவரை டாக்டருக்குப் படிக்க வைத்து பட்டம் பெறச் செய்வதற்கு அரசாங்கம் ரூ 80 ஆயிரம் செலவு செய்கிறது என்று அண்மையில் இங்கே கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு வேறு அமைச்சர் பதில் அளித்தார்கள் என்று நினைக்கிறேன். அதையே மீண்டும் இப்போது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபோது, ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாய் செலவாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மருத்துவத் துறையில் பொறுப் பேற்றுள்ள முதலமைச்சர் அவர்கள் சொல்வதுதான் சரியான கணக்காக இருக்குமென்று நம்பி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் வரிப் பணத்திலிருந்து 105 ஆயிரம் ரூபாயைச் செலவு செய்து ஒருவரை டாக்டருக்குப் படிக்கவைத்து அவர் படித்தவுடனே தனிப்பட்ட சொந்த மருத்துவ மனையை வைத்துக்கொண்டு சொந்தத் தொழில் நடத்த அனுமதிப்பது மிகப் பெரிய தவறு என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நானும் வரவேற்கிறேன். அரசாங்கப் பணத்தையும் மக்கள் வரிப்பணத்தையும்

1978 மார்ச் 28] [திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்]

எடுத்து அதில் படிக்க வைத்து அதன் மூலம் டாக்டரானதும் தனியாகத் தொழில் செய்ய அனுமதித்தால், நாட்டிலுள்ள வேறு பல தரப்பினரும் அப்படி அரசாங்கப் பணத்தைக் கொண்டு முன்னேறி தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக்கொள்ள உரிமை உண்டு. முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஏன் அவர்கள் ஆயுட்காலம் பூராவும் அரசாங்கத்தில் பணி செய்ய வேண்டுமென்று எழுதி வாங்கக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். கருத்து சரிதான். நடைமுறையில் அது சாத்தியமா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. டாக்டருக்குப் படித்துப் பட்டம் பெறுகிறவர்கள் அரசாங்க உதவியிலிருந்து அந்தத் தகுதியைப் பெறுவதால் குறைந்த பட்சம் ஐந்தாண்டு காலத்திற்கு அரசுப் பணியில்தான் ஈடுபட வேண்டும், தனியாகத் தொழில் செய்யக் கூடாது என்று நிபந்தனை போடலாம். வெளி நாடுகளுக்கு விசேஷப் படிப்புக்கு டாக்டர்களை இங்கேயிருந்து அனுப்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கப் பணம் அதிகமாகச் செலவாகிறது. வெளி நாடு சென்று வந்தபிறகு, ஸ்பெஷலிஸ்ட் என்று சொந்த மருத்துவமனை வைத்துக் கொண்டு தொழில் செய்கிறார்கள் என்றால், அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிக காலம் அதாவது பத்தாண்டுகளாவது அரசுப் பணிதான் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தனி மருத்துவமனை வைக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிப்பது நல்லது.

அரசு மருத்துவ மனையில் உள்ள டாக்டர்கள், செவிலியர்கள் சிறந்த வைத்தியம், உடனடியான கவனிப்பு, அக்கறையோடு கூடிய சிகிச்சை வேண்டுமென்றால், தனியார் மருத்துவ மனைக்குப் போகவேண்டியது தானே என்று சொல்கிறார்கள். அண்மையில் ஒருமுறை என்னுடைய மகனை ஒரு மருத்துவ மனைக்குக் கொண்டு போனபோது, சாதாரணமாகக் கவனித்தார்கள். "என்னம்மா சரியாய் கவனிக்கவில்லையே, டாக்டர் வரும்போது என்னை விரட்டுகிறார்கள். நான் போகும்போது டாக்டர் வரமாட்டார். இப்படி வசதியில்லாமல் இருக்கிறதே?" என்று கேட்டால், அதாவது ஒரு சட்ட மன்ற உறுப்பினராக உள்ள நான் கேட்கும்போதே, அதைச் சொன்னதும், அந்த டாக்டருக்குக் கோபம் வந்துவிட்டதாம். அவ்வளவு அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்றால், தனியார் மருத்துவ மனைக்குப் போகவேண்டியதுதானே என்று அவர் சொல்லியதாகக் கேள்விப்பட்டேன். அரசாங்க மருத்துவ மனைகளில்தான் பிரத்தியேகமான முறையில் பல விஞ்ஞானக் கருவிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர் நடத்தும் மருத்துவ மனைகளில் சற்று அதிகமான அக்கறை காட்டப்படுமே தவிர, வேறு எந்த வகையில் அவர்கள் உயர்ந்த சிகிச்சை அளிக்க முடியும்? தனிப்பட்டவர்கள் சொந்தப் பணத்தில் சாதாரண கருவிகளை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி

[திரு. சு. மா. பாலசுப்பிரமணியம்] [1978 மார்ச் 28

யிருக்கும்போது அங்கேதான் சரியான மருத்துவம் அளிக்கப்படும் என்று சொல்வது என்ன நியாயம்? இதைக் கட்டாயம் கட்டுப் படுத்த வேண்டும். நோயாளிகளும் அப்படி நினைக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் நோய் வந்தால் தனியார் மருத்துவ மனைக்குப் போகிறார்கள். அதிகச் செலவு செய்து கவனித்துக் கொள்கிறார்கள். பொது மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், அங்கே என்னென்ன செய்ய வேண்டுமென்று இங்குள்ள உறுப்பினர்கள் எல்லாம் பேசி அதற்கான காரியங்களைச் செய்கிறோம். அப்படி பொது மருத்துவ மனைகள் விளங்கும்போது, ஒரு தனிப்பட்ட டாக்டரின் சொந்த மருத்துவமனையை நம்பிப் போவதற்குத்தான் சிலருக்குத் துணிச்சல் வருகிறது. அரசு மருத்துவ மனையை நம்பி வருவதற்கு மக்களிடம் துணிவு இல்லை. இது அரசுக்குப் பெருத்த அவமானம். அதைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல பேர் பேச இருப்பதால், என் நேரத்தைச் சுருக்கச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு பொது மருத்துவ மனையிலே ரூ 15 ஆயிரம் செலவில் புற நோயாளிகள் தனி அறைகள் கட்டுவதற்கு குறிப்பு தந்திருக்கிறார்கள். அந்தச் செலவில் எத்தனை தனி அறைகள் கட்ட முடியும்? அதனால் எந்தெந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று தெரியவில்லை. கொஞ்சம் தாராளமாக அதில் இருந்திருக்கலாம். பொது மருத்துவ மனைகளில் முக்கியமாக எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையிலே தாய் சேய் நல விடுதியிலே போதுமான படுக்கைகள் இல்லை. டாக்டர்கள் எண்ணிக்கையும் போதுமானதாக இல்லை. என்னுடைய பேத்தியை அங்கே சிகிச்சைக்காகக் கொண்டு போனபோது பார்த்தேன். இரவு முழுவதும் ஒரே டாக்டர் கவனித்து வந்தார். சில டாக்டர்களைப்பற்றிக் குறை சொன்னாலும், வேறு சில டாக்டர்களைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. அந்த டாக்டர் இரவு முழுவதும் இருந்து ஏராளமான குழந்தைகளைக் கவனித்தார். காலையில் ஏழு மணிக்கு வீட்டுக்குப் போய் மறுபடியும் பத்து மணிக்கே வந்து விட்டார். அதைப்பற்றிக் கேட்டதற்கு மாற்று டாக்டர்கள் இல்லை என்று தெரிய வந்தது. அப்படி சில டாக்டர்கள் அக்கறையோடு பாடுபடுகிறார்கள். குழந்தை மருத்துவ மனையில் உள்ள தலைமை டாக்டர் அம்மையார் அவருடைய பெயர் தெரியவில்லை—மிகுந்த அக்கறையோடு பாடுபடுகிறார்கள். பணியாளர்களும் அக்கறையோடு கவனிக்கிறார்கள். ஆனால் அங்கே அதிகமான படுக்கை வசதியில்லை. கட்டில்கள் அங்கே இல்லை. தொட்டில்கள்தான் இருக்கின்றன. குழந்தைகள் மருத்துவ மனைதானே? அந்தத் தொட்டிலுக்குக் கீழேயும் குழந்தைகளைப் போட்டிருந்தார்கள். இரண்டு டையர் மூன்று டையர் ரயில் வண்டிப் படுக்கைகள்போல கீழே போட்டிருந்தார்கள். இரண்டு தொட்டிலு

1978 மார்ச் 28] [திரு. சு. மா. பாலசுப்பிரமணியம்]

களுக்கு இடையில் குழந்தைகள், நடுவே பாதையிலும் குழந்தைகள் இப்படி கீரையை அள்ளிப் போடுவது போல போட்டிருக்கிறார்கள். என்னுடைய பேத்தியை அங்கே வைத்திருப்பதற்குக் கூட பயமாக இருந்தது. அந்தக் குழந்தைக்கு வெறும் காய்ச்சல்தான். ஆனால் அங்கேயுள்ள மற்ற குழந்தைகளுக்கு என்னென்ன நோய்கள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட குழந்தைகள் மத்தியில் இருக்கும்போது, அந்த நோய் மற்றக் குழந்தைகளுக்குத் தொத்துமோ என்ற அச்சம் உண்டாகிறது. அதனால் அதிகமான படுக்கை வசதிக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பொது மருத்துவ மனையில் சென்ற ஆண்டு 1572 ஆக இருந்த படுக்கைகள் 1624 ஆக, 52 படுக்கைகள்தான் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்டான்லி மருத்துவ மனையில் பத்தும் ராயப்பேட்டை மருத்துவ மனையில் 94-ம் அதிகமாகியிருக்கின்றன. அதைத் தவிர மற்ற கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, கண் மருத்துவ மனை, கஸ்தூரிபாய் மகப்பேறு மருத்துவ மனை என்று மொத்தம் 23 மருத்துவமனைப் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் வேறு எதிலும் படுக்கைகளை அதிகப் படுத்தவில்லை.

(முற்பகல் 11-00)

தற்போது 54, 96 என்ற அளவுக்கு இரண்டே மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதுகூட 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' போல்தான் இருக்கிறது. இன்றையதினம் நோய்கள் அதிகமாக இருக்கின்றன. பிணியாளர்களும் அதிகமாக இருக்கின்றார்கள். மருத்துவ மனைகளுக்குச் சென்று பார்த்தால், அங்கே நம்மைப் போல் வெள்ளையாகச் சட்டை போட்டவர்களுக்குத்தான் படுக்கை கொடுத்து படுக்க வைக்கிறார்கள். மற்ற ஏழை எளிய மக்களுக்கு முக்கியமாகப் படுக்கை வசதி தேவைப்படும் மிக நலிந்த பிணியாளர்களுக்கு, காய்ச்சலாலும், கழிச்சலாலும் கஷ்டப்படுகிறவர்களுக்கு படுக்கை தர வசதியில்லை. அவர்களெல்லாம் கீழே படுக்க வைக்கப்படுகிறார்கள். அவர்களை உரிய முறையில் கவனிப்பதற்கு ஆளே இல்லை. டாக்டர்களையும் செவிலியர்களையும் கண்காணிப்பதற்குக்கூட ஆள் இல்லை. மருத்துவ மனைகளில் கண்காணிப்பாளர் என்று ஒருவர் இருக்கிறார். ஆனால் அது மட்டும் போதாது. டாக்டர்களும், செவிலியர்களும் தங்கள் பணியைச் சரியாகச் செய்கிறார்களா என்று கண்காணிக்க இன்னும் அதிகாரிகளை வைக்க வேண்டும். மண்டையில் அடிபட்டு ஒருவர் இருக்கிறார். அந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டு, கட்டுப்போடுவதற்கு டாக்டர்கள் அங்கே வருவதில்லை. டாக்டர்கள், செவிலியர்கள் எல்லாம் அங்கே இருந்தாலும், அவர்கள் வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தாய் தந்தையர், அல்லது தமக்கை, அண்ணன் தம்பி போன்றவர்கள் அடிபட்டிருந்தால் அந்த

டாக்டர்களும் செவிலியர்களும் எப்படி பதை பதைப்பார்களோ அந்த அளவுக்கு மற்றவர்கள் அடிபட்டு வரும்போது அக்கறையோடு பார்ப்பதில்லை. தினமும் நோயாளிகளைப் பார்த்துப் பார்த்து மரத்துப் போய்விட்டார்களோ என்றுகூட நான் நினைக்கிறேன். எனவே இரக்க புத்தியோடு டாக்டர்களும், செவிலியர்களும் பணியாற்றும்படி அவர்களைக் கண்காணிக்க இன்னும் தனி அதிகாரிகளை நியமிப்பதுகூட நல்லது என்று நான் நினைக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி, இந்த மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள், செவிலியர்கள் போன்றவர்களைக் கண்காணிக்க அதிகாரிகள் போடப்பட வேண்டும். அடுத்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றி சென்ற முறை பேசும்போதுகூட நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் தனியாக மருத்துவ மனைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்பதுதான் அது. அதையே இப்போது மீண்டும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். தங்களுடைய தனி மருத்துவ மனையில் அக்கறை உள்ள வரையில் அரசாங்க மருத்துவ மனையில் அவர்கள் சரியாக கவனம் செலுத்த மாட்டார்கள். அரசாங்க மருத்துவ மனைக்கு யாராவது வசதி உள்ளவர்கள் நோய்வாய்ப்பட்டு வருகிறார்களா என்று தூண்டில்காரனைப் போல் பார்த்துக் கொண்டிருப்பார்களே தவிர, அரசாங்க மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்கு நல்ல சிகிச்சை செய்வோம், நல்ல வகையில் இங்கே பணியாற்றுவோம் என்ற எண்ணமே அவர்களுக்கு வருவதில்லை. ஆகவே, இந்த அரசு கண்டிப்பாக ஒரு நிபந்தனையைப் போட வேண்டும். அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் சொந்தமாக மருத்துவ மனை வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிபந்தனை போட வேண்டும். அவ்வளவு பெரிய 'ஸ்பெஷலிஸ்ட்'களாகத் தங்களைக் கருதிக்கொண்டால், அவ்வாறான ஸ்பெஷலிஸ்ட்கள் அரசாங்க மருத்துவ மனைகளுக்கே வேண்டாம். அரசாங்கச் செலவில் நாமே ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர்களைப் படிக்க வைத்து 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அவர்களிடம் ஒப்பந்தம்—அக்ரிமெண்ட்— எழுதி வாங்கிக்கொண்டு, அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு அரசாங்க மருத்துவ மனைகளை நடத்த வேண்டும். இந்த முறையை அரசு கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்துவதால், மிகுந்த செலவு கூட ஆகிவிடாது. கட்டில்களை 'சீப்' ஆகக் கூட வாங்கிப் போடலாம். ஆகவே அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளை அதிகரிக்க

வேண்டும், அங்கே உள்ள டாக்டர்களும், செவிலியர்களும் நோயாளிகளிடம் தகுந்த முறையில் கவனம் செலுத்த, கண்காணிப்பு அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது 10 நிமிடங்களுக்கு அதிகமாகப் போகாமல் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Deputy Chairman, being very closely associated with the Nursing and Midwives Council of Madras and very closely associated with the welfare of women, I would like to make certain suggestions regarding the Auxiliary Midwifery and Nursing Training. We have been talking a lot about welfare schemes for widows and deserted wives. But in practice sometimes, these schemes are not strictly followed. We, as an organisation, have been appealing to the Government from 1962–63 onwards that all these women who come out of the condensed course must be given preference in nursing and midwifery because they are more mature than others and age exemption should be given to them. This was brought into existence and there was a Government Order stating that all these women who come out of the condensed course must be given preference but it has not been followed after 1967. There was another Government Order which said that women coming from Social Welfare Institutions should be given some representation in Midwifery training. This also has not been followed after 1967. As you know, these institutions which cater to the welfare of adult women want to train them and rehabilitate them after giving them some kind of training. One point is that the Auxiliary Nurse Midwifery training course has gone to the districts. I welcome this move. Still girls from Madras and Chingleput very rarely get place in this. There is proposal to have an Auxiliary Nurse Midwife Training—I hope it is true—in Tirunelveli. I have made this appeal again and again that because the City is very crowded, we do need a second line of defence of nursing women to help the patients. Hence I request that the Auxiliary-Nurse Midwifery training could be restarted in Madras City. I would like to say that the Select Committees, when they are appointed, must be given the rules and regulations of selection, because in a selection, it is not merely the qualification and merit that are concerned. When the merit and qualifications of 20 women are equal, if there are five or six deserving candidates, I think preference should be given to those deserving women. It is human approach

[Thirumathi Mandakini Krishnamoorthi] [1978 மார்ச் 28

Another point which the hon. Member just now said is about the medical profession. I feel that our doctors are very well qualified and they stand much above the Doctors of other countries but they are very over-worked. It is one of the difficulties of our system, because our population is great and our medical facilities are limited. We know we do not have the necessary finances. But I feel that if we have a system called locum system in which our doctors will be given leave for a day and some doctors who are easily available from outside are asked to substitute these doctors who are on leave, it will be useful. If we give one day's leave in a week to the doctor, he will be very happy and he will come afresh for duty. This locum system will also ease the unemployment problem among the doctors. While the Government will be able to get the services of a doctor without much cost, it will also help the unemployed doctors to do some part-time job. It will especially help the women doctors who are married and who, because of the non-availability of domestic servants, have their own responsibility to look after their homes. If we can got lady doctors who could do part-time jobs, I think, we will be able to solve our problem of individual attention to the patients.

[முற்பகல் 11-10]

Sir, I would like to mention another point. It is not that I am a feminist; but I see that there is a Vigilance Committee. I commend this Committee. I find that there are very many qualified men-doctors on that Committee. I would like to know whether the Hon. Minister for Health would think of having one or two qualified women-doctors also on that Committee so that there may be a balance of power. Women would be able to find out small thefts and pilferages as they are used to house management. If we have women on the Vigilance Committee, I feel that the Committee's purpose to check pilferages will be fully served.

Thank you.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தில் இந்த அரசு நல்ல அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று பழமொழி சொல்லப்பட்டிருக்கிறது. நோயில்லாத வாழ்க்கை இருந்தால்தான், மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். இல்லையென்றால் நாட்டில் நல்ல காரியம் எதுவும் நடக்காது. எந்த

1978 மார்ச் 28] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

அரசாங்கம் வந்தாலும், மக்கள் நல்வாழ்வில் அக்கறை காட்ட வேண்டும். அது சரியான முறையில் நடைபெறுகிறதா என்று பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மக்கள் மத்தியில் நோய் வராமல், நோய் பரவாமல் தடுக்க வேண்டும் என்பதை ஜனங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நம் நாட்டு ஜனங்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், எங்கே போனாலும் அந்த இடத்தை சுத்தமாக, துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது தெரிவதில்லை. குப்பையை எங்கே வேண்டுமானாலும் கொட்டுகிறார்கள். சென்னை போன்ற பெரிய நகரத்திற்கு வந்தால், எச்சிலை எங்கே வேண்டுமானாலும் துப்புகிறார்கள். 'யூரினை' எங்கே வேண்டுமானாலும் கழிக்கிறார்கள். மலத்தை எங்கே வேண்டுமானாலும் கழிக்கிறார்கள். யாருக்கும் ஒருவிதமான பொறுப்பும் கிடையாது. இத்தனையும் சர்க்கார் பார்த்துச் சுத்தப்படுத்த வேண்டும். புகையிலை போடுகிறவர்கள் ஒரு அடி அகலத்திற்கு கவலைப் படாமல் துப்பிவிடுகிறார்கள். இப்படியெல்லாம் செய்தால், வியாதி வராமல் என்ன செய்யும்? இதற்கெல்லாம் பரிகாரமாக நாம் பலவித முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. கல்வியின் மூலம் முக்கியமாக ஜனங்களுக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லித் தருகிறோம். இதெல்லாம் மக்களிடத்தில் நன்றாக வேரூன்றாமல் சுத்தத்தை நாம் உண்டாக்க முடியாது. கல்வி முறையில் நாம் பலவற்றை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். சுகாதாரமாக நடக்க வேண்டும், குப்பைகளைக் கண்ட இடத்தில் போடக் கூடாது, எச்சிலைக் கீழே துப்பக்கூடாது, போன்ற சுகாதாரமான முறைகளை ஜனங்களுக்குக் கற்றுத் தர வேண்டும். மக்கள் எல்லோருமே இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அரசாங்கம் என்ன செய்தாலும், நாட்டில் நல்வாழ்வு இருக்காது. அரசாங்கம் செய்கிற அத்தனையும் நஷ்டமாகத்தான் போகும்.

(முற்பகல் 11-10)

நகரத்தைப் பொறுத்த வரைக்கும், முனிசிபாலிட்டிதான் பொறுப்பாக இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும். நகரைச் சுத்தம் செய்வது, குப்பைகளை அகற்றுவது போன்ற வேலைகள் எல்லாம் நடக்க வேண்டும். அங்கு அதிகாரிகள் எப்படி நடந்துகொள்கின்றார்களோ அதைப் பொறுத்துத்தான் அந்தப்பகுதி சுத்தமாக இருக்கும். கொசுக்கள் இப்போது அதிகமாகப் பெருகிவிட்டன. நகரங்களிலே கொசுக்கள் பெருகியிருப்பதைப் பார்த்தால், கொசு கடிப்பதற்குப் பதிலாக ஆளையே தூக்கிக்கொண்டு போய்விடும் போல இருக்கிறது. அவ்வளவு பெரிதாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை மருந்துகளை அடிக்கிறார்கள். அதிகாரிகளை நான் இதில் குறை சொல்வதற்கில்லை, காலையிலே மருந்து அடிக்கிறார்கள். அப்படி

அவர்கள் மருந்து அடித்தும் கொசுக்கள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவர்களுக்கும் இதைத் தடுப்பது எப்படி, என்ன பண்ணுவது என்பது தெரியவில்லை. சாக்கடைகளைத் திருத்தவில்லை. எந்தத் திட்டம் போட்டாலும், அதைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஸ்ரீரங்கம் கொசுக்கள்தான் அப்படி இருக்கின்றதா? மற்ற முனிசிபாலிட்டியில் உள்ள இடங்களிலும் அப்படி இருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அப்படி இருக்கிறதா?

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டி எவ்வளவோ மேலாக இருக்கிறது. அந்தக் காலத்திலே யானைக்கால் வியாதிகூட இருந்தது. இப்போதெல்லாம் அந்த அளவுக்குப் பெருகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கும்பகோணத்தில்கூட இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டி என்று சொன்னதற்காக கும்பகோணம் முனிசிபாலிட்டியையும் சேர்த்துச் சொல்கிறார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: கும்பகோணம் கொசுவுக்கும் ஸ்ரீரங்கம் யானைக்காலுக்கும் பேர் பெற்றவை என்று சொல்வார்கள். அது தான் வழக்கம். எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இப்போது யானைக்கால், மலேரியா என்று இருந்து கொண்டிருக்கிறது. எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. இதற்கென்று முனிசிபாலிட்டியில் ஹெல்த் ஆபிசர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் நன்கு ஒத்துழைப்பதில்லை. ஹெல்த் ஆபிசருக்கும், கமிஷனருக்கும் இடையே சண்டைகள் வந்துகொண்டிருக்கும். ஹெல்த் ஆபிசருக்குச் சம்பளம் ஜாஸ்தி. கமிஷனருக்குச் சம்பளம் குறைவு என்ற அளவில் பேசிக் கொள்வார்கள். இந்த நிலைமைகளில் ஹெல்த் டிப்பார்ட்மெண்டிலே இருப்பவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. கமிஷனர் ஒரு இடம் போய்விடுவார். ஹெல்த் ஆபீசர் இன்னொரு இடம் போய்விடுவார். கமிஷனர், "என்னைக் கேட்காமல் ஏன் செய்தாய்?" என்று சொல்வார். அதனால் பண்ணுவதில்லை. ஹெல்த் இன்ஸ்பெக்டர் நமக்கு என்ன வந்தது என்று இருந்து விடுவார். பணம் செலவாகும் விஷயத்தில் தகராறுகள் வந்துவிடும். இவர்கள் பொறுப்பாக வேலை செய்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். எனக்கு கூட பிராக்டிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. பேப்பரிலேயிருந்து, டைப் ரைட்டரிலேயிருந்து, கமிஷனர் அவர்கள் கொண்டு போய்விடுவார்கள். அங்கே

கூட்டுமாறுதான் விட்டுவிட்டுப் போவார்கள். டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்கள் ஹெல்த் அதிகாரிகளை நியமிக்கிறார்கள். முனிசிபாலிட்டி அட்மினிஸ்ட்ரேஷன் அளவுக்கு வருகிறார்கள். 4 சிபாரிசுகளைப் பெற்றுக் கொண்டு, வேலைக்கு வந்துவிடுகிறார்கள். இதனால் தவறு ஏற்பட வழியிருக்கின்றது. சுகாதாரம் இல்லாமல் நாட்டிலே பெருமை இல்லை. வியாதிகள் நாட்டிலே பெருகிக் கொண்டிருக்கின்றன. சுகாதார டிப்பார்ட்மெண்டில், ஆபிசரிலிருந்து, ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் வரை ஒழுங்காக வேலை செய்வதில்லை. அந்தப் பணிகள் எல்லாம் ஒழுங்காக நடக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். எங்களைப் போன்ற அரசியல் வாதிகள் எல்லாம் இதில சிபாரிசு செய்கிறார்கள். அவர்களுக்கு சிபார்சுகள் செய்வதால், இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய முடிவதில்லை. சாதாரணமாக ஓட்டல்களில் போனால்கூட அங்கே தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பெரிய பெரிய ஓட்டல்களில் கூட சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றது. சாப்பிடும்போது, ஸ்பூனை தொண்டை வரையிலும்கூட வைத்துப் சாப்பிடுகிறார்கள். தொண்டைக்குள்ளேயே விட்டுக் கொள்கிறார்கள். டவுன்களிலே உள்ள ஓட்டல்களிலேதான் இப்படிச் செய்கின்றார்கள். கிராமங்களிலேகூட அந்த நிலைமைகள் வந்து விட்டன. பிளேட்டிலே சாப்பிடுவது, ஸ்பூன் வைத்துச் சாப்பிடுவது என்று வந்துவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுகூட சுகாதாரத்திற்கு என்று தானே வைத்திருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தொண்டை வரையில் இருக்கின்ற வியாதிகள் எல்லாம் அந்த ஸ்பூனுக்கு வருகின்றன. பெரிய ஓட்டல்களில் அந்தப் பாத்திரங்களைச் சரியாகக்கூட அலம்புவதில்லை. பொதுமக்கள் பெரிய ஓட்டல்களாக இருப்பதால், அங்கு சுத்தமாக வைத்திருப்பார்கள் என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் அங்கேதான் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களிடம் நிறைய பணம் இருக்கிறது. அதைப்பற்றி அதன் சொந்தக்காரர்களிடம் கேட்க முடியாது. அவர்களுக்குப் பண வசதி இருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அளவுக்குக் காரியங்களைச் செய்து கொள்வார்கள். அந்த மாதிரி ஓட்டல்களில் உள்ள அசுத்தங்களால் வேண்டிய வியாதிகள் பெருகுகின்றன. க்ஷயரோகம் வருகின்றது. க்ஷயரோக ஆஸ்பத்திரி என்று ஒன்றுதான் இருந்தது. தாம்பரத்தில்தான் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பெரிய க்ஷயரோக ஆஸ்பத்திரி அமைக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் சேர்வதற்கு விண்ணப்பம் போடுவார்கள். ரிஜிஸ்டர் செய்து வைப்பார்கள். அவர்களுக்கு ரிஜிஸ்தர் பண்ணிய பிறகு ஒரு மாதம், இரண்டு மாதங்கள் கழித்து வந்து சேர்ந்து கொள்ளும்படி ஆர்டர்

வரும். அதற்குள் அந்த நோயாளியே இறந்து விட்டிருப்பார். அவர் போய்ச் சேர்ந்துவிட்டிருப்பார். அவர்கள் மீது குறை சொல்வதற்கில்லை. அந்த அளவுக்குத்தான் இடவசதி இருக்கிறது. அங்கு 100 அல்லது 150 பெட்கள்தான் இருக்கும். அதற்கு மேல் பல அப்ளிகேஷன் வந்து கொண்டிருக்கின்றன. அது எப்படித்தான் வருகிறது என்பது நமக்குத் தெரியவில்லை. நேற்று தொழில்பற்றிப் பேசும்போது, சுகாதாரத்தைப் பற்றிப் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்கள்கூட சுகாதாரத்தைப் பற்றியும் பேசினார்கள். இந்த வியாதிகள் பெருகுவதற்குக் காரணம் என்ன? பெரிய தொழிற்சாலை, சிறிய தொழிற்சாலை, மில்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளிலிருந்து கழிவுப் பொருள்கள் எங்கு பார்த்தாலும் பரவிவிடுகின்றன. அதன் காரணமாக வியாதிகள் ஏற்படுகின்றன. அந்தக் கழிவுப் பொருள்கள் தண்ணீரில் கலந்து விடுகின்றன. 'புரோடெக்டட் வாட்டர் சப்ளை' என்று சொல்கின்றார்கள். அந்த வாட்டர் சாப்பிடுகின்ற அளவுக்கு இருப்பதில்லை.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, in protected water supply, water is being protected well with chlorination and other things.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதைப்பற்றி எப்படிச் சொல்வது? 'புரோடெக்டட் வாட்டர் சப்ளை' என்று தான் சொல்கிறார்கள். நானும் 15 வருடங்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த நீரைத்தான் நாங்களும் குடித்துப் பழகிக் கொண்டிருக்கிறோம். வியாதிகள் வந்துகொண்டுதானிருக்கின்றன. நாங்கள் வேறு என்ன பண்ண முடியும்? பேப்பர் மில்ஸ் ஒன்று ஈரோட்டிலே இருக்கிறது. அதன் வட்டாரத்திலே, பக்கத்திலே வருகின்ற கழிவுப் பொருள்கள் வியாதியை உண்டாக்குகின்றன. லட்சக் கணக்கான மீன்கள் செத்துவிடுகின்றன. இதனால் வியாதிகள் எல்லாம் பெருகுகின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மீன்கள் செத்துப் போகின்றன என்றாலும்கூட, பெருத்த நஷ்டம் தான் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்த மாதிரியான கழிவுப் பொருள்கள் எல்லாம் இந்த வாட்டரிலே வந்து கலக்கின்றன. காவேரிப் பூம்பட்டினம் வரையில் போகிறது என்றுகூட சொல்லலாம். என் காவேரியிலிருந்து தஞ்சை, கும்பகோணம் வரைகூட போகலாம். ஆரூரான் சர்க்கரை ஆலை நடத்துகிறார்கள். அதன் கழிவுப் பொருள்கள் அந்தப் பகுதியில் பாவியிருக்கின்றன. அதிலிருந்து வருகின்ற வாசனை கிட்டத்தட்ட 15 மைல்களுக்குக் கூட வருகிறது. அந்தக் கழிவு நீர் வருவதால், விவசாயம்கூட அந்தப் பகுதியில் பாதிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 4,500 ஏக்கர் ஆயக்கட்டு பாதிக்கப் படுகிறது. ஒவ்வொரு வருடமும் இந்தப் பகுதியில் விளைவது பாதிக்கப்

படுகிறது. கரூர் சிமெண்ட் பாக்டரி இருக்கிறது. அதன் கழிவுப்பொருள்கள் சுமார் 20 மைல் தூரத்திற்குப் பரவிவிடுகின்றன. அந்தப் பகுதி வெள்ளை அடித்த மாதிரி இருக்கிறது. சுண்ணாம்பு அடித்த மாதிரி இருக்கிறது. சிமெண்டைத் தூவினால், எப்படி இருக்குமோ அப்படி இருக்கும். அரசாங்கம் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலிலேயே பார்க்க வேண்டும். வியாதி வராமலிருப்பதற்கு வழி செய்ய வேண்டும். வியாதிகள் வந்த பிறகு பார்ப்பது என்பது கடினமாகும். நம்மையும் மீறி புயல், வெள்ளம் என்று வந்துவிடுகிறது. வந்த பிறகு நாம் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

மருத்துவ மனைகளைப் போய்ப் பார்க்கின்றபோது, ஒரு விதமான வாடை வீசுகிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ளேயேகூட ஒரு அரை பர்லாங்குக்கு அந்த வாடை வீசுகின்றது. அந்த மாதிரியான வாடை எல்லா ஆஸ்பத்திரி களிலும்தான் இருக்கிறது. மெயின்டினன்ஸ் அந்த ஆஸ்பத்திரியில் சரியாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் என்ன பண்ணுவார்கள்? அங்கு வியாதியஸ்தர்கள் பெருகி வந்து கொண்டிருக்கிறார்கள். வியாதிகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் அதை மெயின்டினன்ஸ் பண்ண முடியாத நிலைமைகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. 2 பேர்களுக்கு பெட் புரொவைட் பண்ணுகின்ற இடத்தில் 10 பேர்களுக்குப் பண்ண வேண்டிய

(முற்பகல் 11.20)

நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஜில்லா ஹெட்குவார்ட்டர்சில் பிரைவேட் நர்சிங் ஹோம் எப்படி ஏற்படுகிறது? மருத்துவ மனையிலும் கும்பல். நர்சிங் ஹோமிலும் இடமில்லை. பிரைவேட் பிராக்டிஸ் பண்ணுகிறவர்கள் ஆனரரி சர்ஜன்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்பத்திரி மருந்துகளை எடுத்துச் செல்லுகிறார்கள் என்று சொன்னால், நான் அதை நம்ப மாட்டேன். அங்கே வருகிற மருந்து முதல், இரண்டாவது, மூன்றாவது தர மருந்தாகவும் இருக்கிறது. ஆகவே மருத்துவ மனை டிரிட்மெண்டை நம்பினால், பிரயோசனமில்லை. பிம்பிரியில் பென்சிலின் தயாரித்து அனுப்புகிறார்கள். இந்தப் பென்சிலின் ஊசியைப் போட்டால் பிளட் பிரஷர் வருகிறது. அலர்ஜி வந்துவிடுகிறது. முன்பு வந்த பென்சிலின் மருந்து நன்றாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து வந்தது. ஜனங்களுக்கு நல்ல மருந்து தான் வேண்டும். சென்டரில் ஜனதா கவர்ன்மெண்டு நடக்கிறது. உள்நாட்டில் தயாராகும் மருந்து பிரயோசனமில்லை. இந்த மருந்தைப் போட்டுவிட்டு நோயாளியைப்பற்றி டாக்டர் பயப்படுகிறார். ஆகவே பென்சிலினைப் போடுவதில்லை. திடமான மருந்து இல்லை. மெடிக்கல் கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. இது சரியான மருந்தா இல்லையா என்று சொல்வதில்லை. இந்தக் கமிட்டியை

சர்க்கார் தான் நியமிக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், அடுத்த தடவை இந்தக் கமிட்டியில் இடம் கிடைக்குமோ இல்லையோ என்று பயப்படுகிறார்கள். எல்லோரும் 'ஆமாம்' என்று சொல்லிவிடுகிறார்கள் . . . . நான் ஒரு மணி பஸ்சுக்குப் போக வேண்டும், அங்கே கூட்டம் இருக்கிறது. சீக்கிரத்தில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒரு மணி பஸ்சுக்கு ரொம்ப நேரம் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மக்கள் நல்வாழ்வுத் துறையில் கடைசி வரையில் எல்லோரும் ஒத்துழைத்தால்தான், நல்வாழ்வாக முடியும். எல்லோரும் நல்வாழ்வுடன் இருந்துவிட்டால், மெடிக்கல் காலேஜில் படித்து விட்டு வெளியே வரும், 500, 1,000 டாக்டர்களுக்கு என்ன வேலை? நாம் இப்போது இங்கிலீஷ் மருந்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய எம்.எல்.சி. திரு. மாசிலாமணி அவர்கள் நாட்டு வைத்தியத்தில் கெட்டிக்காரர். அதை விரிவுபடுத்த வேண்டும். ஆராய்ச்சி பண்ண வேண்டும். இப்போது அதற்குக் கொடுக்கிற பணம் போதாது. நாட்டு மருந்துக்கு நிறைய பணம் ஒதுக்க வேண்டும். சித்த வைத்திய முறையும் சிறந்த முறை. இது ஒரு வீட்டுக்குத் தெரிந்தால், மற்றவனுக்குச் சொல்ல மாட்டான். பக்கத்து வீட்டுப் பிள்ளைக்குக் கூட சொல்ல மாட்டான். அவ்வளவு ரகசியமாக வைத்திருப்பான். அது இன்றையதினம் அழிந்து போகிற நிலைமையில் இருக்கிறது. இதற்கு விரிவான பண உதவி செய்ய வேண்டும். அதே மாதிரி ஆயுர்வேத அரிஷ்டங்களுக்குக் கட்டுப்பாடு என்கிறார்கள். ஆல் இண்டியா லெவலில் ஆயுர்வேத முறை இருக்கிறது. அதை ஆராயமல் கட்டுப்படுத்துகிறேன் என்று சொல்லுவது சரியல்ல. காரணம் சொல்ல வேண்டும்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: அரிஷ்டங்கள் என்று சொல்லி மது கஷாயங்கள் தயாரிப்பதனால், இதைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஒரு சிலர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். அதற்காக பதவியே வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா? எம்.எல்.ஏ., எம்.எல்.சி., என்பவர்கள் தவறு செய்தால், அந்தப் பதவிகளே வேண்டாம் என்று சொல்லலாமா? எது நல்லதாக இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதை ஜனங்கள் பார்த்துக் கொள்ளட்டுமே. மக்கள் நல்வாழ்வுக்கு அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வும் மருத்துவமும் என்பது குறித்துப்பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்த அரசு நகரத்தில் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதிகள் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்காமல் இருந்ததை நிறைவேற்றுகிற வகையில் நல்ல வழியில் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, மனதிற்குத் தெம்பு ஏற்படுகிறது. அதுவும் ஓரப்புறங்களில் உள்ள கிராமங்களில் 'இன்டீரியர் வில்லேஜஸ்' இது போன்ற மருத்துவ வசதி ஏற்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால் இன்றைக்கு அது எந்த அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும். உதாரணமாக, எங்கள் கொல்லிமலைப் பகுதியில் வாழக்கொந்தி கோம்பை, நடுக் கோம்பை என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ஐயாயிரம் மலைவாழ்மக்கள் வசிக்கின்றனர். அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கூட கிடையாது. குறிப்பில் இருக்கிற மொபைல் யூனிட் வாரத்திற்கு ஒன்று இரண்டு தடவை வந்து மக்கள் நோயை அறிந்து மருந்து கொடுக்கும் வசதியும் இல்லை. அவர்கள் நோய் வாய்ப்பட்டுவிட்டால், வைத்தியம் பார்க்க 10 மைல் தொலைவிலுள்ள சேந்தமங்கலத்திற்கு வரவேண்டும். வாகன வசதி இல்லை. இரட்டை மாட்டு வண்டி அல்லது மாட்டு வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு வரவேண்டும். கல்ரோடு. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை அரசு கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசைத் தாக்குறைவாக, தாறுமாறாகப் பேசுகிறேன், குற்றம் சொல்லுகிறேன் என்று பொருள் அல்ல. இது போன்ற மருத்துவ வசதி பெற முடியாத மக்கள் இருக்கின்றனர் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நகரப் புறங்களில் குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் ஆனவுடன் 'போலியோ டிராப்ஸ்', டிரிபிள் ஆன்டிஜன் போன்ற வகைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மிகவும் உஷாராக இருக்கிறார்கள். கிராம மக்களுக்கு இதை எப்படிக் கொடுப்பது, எந்த நேரத்தில் கொடுப்பது என்பது தெரியாது. அப்படிப்பட்ட மக்களுக்கு மருத்துவ அறிவை ஏற்படுத்தி, கிராம மக்கள் பயன்பெற வழி வகை செய்ய வேண்டுமென்று இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், பக்கத்தில் 10 மைல் தொலைவிலுள்ள சேந்தமங்கலம் ஒன்றியத்தில் 25 முதல் 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவ விடுதியில் இரண்டு மகப்பேறு நிலையங்கள்தான் இருக்கின்றன. ஆஸ்பத்திரி தோன்றிய காலத்தில் இருந்ததுதான் இப்போதும் இருக்கிறது. அங்கே அதைத் தவிர வேறு தனி மருத்துவமனை இல்லை. சேலம் மாவட்டத்தில் நாமக்கல் தாலுகா தான்

பெரிய தாலுகா. எட்டு பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்டது. அங்கே உள்ள மருந்தகம் மிகச் சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது. அங்கே உள்ள நிலை என்ன? சுற்றுச் சுவர் இல்லாத ஆஸ்பத்திரி. அனஸ்தேஷியா கொடுக்க ஆள் இல்லை. ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை. தண்ணீர் வசதி இல்லை. பிளட் பாங்கில் ஒரு பாட்டில் ரத்தம் கூட இல்லை. தாலுகா தலைமை ஆஸ்பத்திரியின் நிலைமை இப்படி இருக்கிறது. அங்கே சீப் மெடிக்கல் ஆபீசர் ஒருவர் இருக்கிறார். நான் அட்வைசரி போர்டில் இருக்கிறேன் என்பதால், ஏதாவது லெட்டர் கொடுத்தால், அட்மிட் செய்து விடுகிறார்கள். 11 மணிக்குப் பார்க்கப் போனால் தயவு செய்து சேலத்திற்குக் கொண்டு போய் விடுங்கள் அனஸ்தேஷியா கொடுக்க ஆள் இல்லை, ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை, எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இரவு 11 மணிக்கு மேல் கார் வைத்து ஈரோடு அல்லது சேலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு அந்த தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு லேடி டாக்டர்தான் இருக்கிறார். அதிகமாக மகப்பேறு கேஸ்கள் வந்தால், எப்படிப் பார்த்துக் கொள்ள முடியும்? தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் இந்த மாதிரி நிலை இருப்பதால் இதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. ஆஸ்பத்திரியில் மருந்துகள் இல்லை. இதனால் மருத்துவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. இதை டி.எம்.ஓ. விடம் பல முறை சொன்னேன். நாமக்கல் ஆஸ்பத்திரியை கவனித்தால், சேலம் ஆஸ்பத்திரியைக் கவனிக்க முடியாதே என்கிறார். என்ன சொல்லுகிறேன் என்றால், மருத்துவ வசதி இல்லாத சாதாரண மக்களுக்கு நல்ல ஒரு வசதி ஏற்பட வேண்டுமென்றால், உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால், அந்தத் தாலுகா மையத்தில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள் சிறந்த முறையில் அமைக்கப்பட வேண்டும். சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால், ஆஸ்பத்திரியைப் பொது வழியாக மக்கள் பயன்படுத்துகிறார்கள். சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் பாட்மின்டன் கிரவுண்டில் விளையாடுகின்றனர். கைதட்டி கேளிக்கை விளையாட்டு நடக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.30)

அதோடு மட்டுமல்ல. ரோடிலே நடந்து போகும்போது, துர்வாடை வீசுகிறது. அங்கே போதுமான தண்ணீர் வசதியில்லை. ஆதலால் பராமரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நாமக்கல் பக்கத்தில் மோகனூரில் 'ஐ காம்ப்' நடந்தது. 200, 300 பேர்களுக்கு ஆபரேஷன் நடைபெற்று, அவர்கள் கண்ணொளி பெற்று, கண்ணாடியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த மருத்துவ மனையில் கண் டாக்டர் இல்லை. இ.என்.டி.க்கு டாக்டர் இல்லை. பெரிய மருத்துவ மனை

யாக அது இருக்கிறது. அங்கே வெறும் கட்டிடம்தான் இருக்கிறது. தாலுகா ஹெட்குவார்டர்ஸ் ஹாஸ்பிடல் என்று போர்டு இருக்கிறது. பிளட் பேங்க் இருக்கிறது, ஆபரேஷன் தியேட்டர் இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் இல்லை. இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தனியார் மருத்துவ மனைகள் எவ்வளவோ பரவாயில்லை. அரசு மருத்துவ மனைகளில் அச்சமே இல்லாமல் போய்விட்டது. அங்கேயுள்ள டாக்டர்கள் தங்களுக்குள்ளாகவே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். ஒரு தடவை நானே பார்த்தேன். ஒரு டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக்கொண்ட ஒருவர், இன்னொரு டாக்டரிடம் போனார். அதனால் அந்த 'பேஷன்ட்'க்கும் டாக்டருக்கும் அடிதடி சண்டை நடந்தது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. நான்கூட அரசுக்கு ஆலோசனையாக ஒன்றைச் சொல்வேன். சர்க்கார் மருத்துவ மனைகளில் பணி புரிகிறவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுங்கள்; 'பிரைவேட் பிரேக்டிஸ்'ஐ நிறுத்திவிடுங்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் பெரிய பல் மருத்துவ மனை இருக்கிறது. சென்ற வாரம் பல்வலி காரணமாக அந்த மருத்துவ மனைக்குச் சென்றேன். அங்கே இருக்கின்ற கருவிகளிலே 80 சதவிகிதம் கருவிகள் உபயோகத்திற்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. 20 சதவிகிதம் கருவிகள் துருப் பிடித்திருக்கின்றன. துருப் பிடித்த கருவியை வாயிலே வைத்து, வைத்தியம் செய்தால் மேலும் நான்கு வியாதிகள் வந்து சேருகின்றன, 10 நாட்கள் வீக்கம் அப்படியே இருந்தது. மருத்துவ மனையிலே இருக்கும் கருவிகளில் 80 சதவிகிதம் வேலை செய்யவில்லை. இருப்பது 20 சதவிகிதம் கருவிகள்தான். நான் போன அன்றைக்கு மருத்துவ மனைப் படிக்கட்டில் பெரிய தகராறு நடந்தது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். ஏன் அடித்துக்கொள்கிறார்களென்று கேட்டேன். அங்கே கணவனும், மனைவியும், மனைவியின் பல் வைத்தியத்திற்காகச் செல்லும்போது, மனைவியை மாத்திரம் மேலே போக அனுமதிக்கிறார்கள். அவர்கள் வர 3 மணி நேரம் அல்லது 4 மணி நேரமானாலும், கணவன் கீழேயேதான் இருக்க வேண்டும். குழந்தைகளை அழைத்துச் சென்றால்கூட, ஒருவர்தான் கூடப் போகலாம். மேலே விடுகிறவருக்கும், 'பேஷன்ட்'க்கும் அடிதடி, சண்டை. அதைப்பற்றிக் கேட்டபோது, 'இதெல்லாம் சர்வசாதாரணம், மண்டையெல்லாம் உடைந்திருக்கிறது' என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நல்லவேளை பல் உடையவில்லை, மண்டைதான் உடைந்தது.

திரு. க. அறிவழகன் : பல் உடைந்ததால்தான் அங்கே போகிறார்கள்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அந்த மருத்துவ மனையில் ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய நவீன கருவிகளை இன்னமும் பொருத்தாமல், ஸ்டோர் ரூமிலேயே வைத்திருக்கிறார்கள். மன்றத் தலைவரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், திடீரென்று பல்வலி என்று அங்கு போனால், உட்கார சேர் கிடைக்க அரை மணி நேரமாகும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : என் பெயரை இழுக்காமல் இருந்தால் நல்லது. போன வாரம்தான் நான் போயிருந்தேன். நல்ல முறையில்தான் கவனித்தார்கள். ஒரு பல்லைப் பிடுங்கிக்கொண்டு வந்தேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இருக்கிற நிலைமைகளை நான் சொல்கிறேன். நூதன சாதனங்கள் அங்கே பொருத்தப்படாமல் இருக்கின்றன. மருந்துகள் வாங்கி வாருங்கள் என்று சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கேயுள்ள ஒரு டாக்டரே மருந்துக் கடை வைத்திருக்கிறார். அவர் சீட்டு எழுதிக் கொடுத்தவுடன், 2 ரூபாய் பெருமானமுள்ள மருந்து, 5 ரூபாய் கொடுத்து அந்தக் கடையிலிருந்து வாங்கி வருகிறார்கள். மருத்துவத் துறையிலே பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். கண்காணிப்பு இருக்கிறது. அமைச்சர்கள் இருக்கிறார்கள். சர்ப்ரைஸ் விசிட் செய்கிறார்கள். இருந்தும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி, அந்த மருத்துவ மனையிலுள்ள கருவிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவ மனையில் செயற்கை சிறுநீரகக் கருவி ஒன்று இருக்கிறது. அங்கேயுள்ள நோயாளிகளைப் பராமரிக்க அது இருக்கிறது. ஆனால் திடீரென்று ஒருவருக்கு அந்தக் கருவியைப் பொருத்த வேண்டுமென்றால், போதுமான வசதியில்லை. எனவே இன்னொரு செயற்கை சிறுநீரகக் கருவியைப் பொது மருத்துவ மனையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே உள்ள பொது மருத்துவ மனைக்கு அதிகமான நோயாளிகள் வருகிறார்கள். ஆனால் அங்கே போதுமான அப்பேரடஸ் இல்லை. இன்றைக்கு எங்கும் மாடர்ன் சயன்ஸ் என்று பேசப்பட்டு, எல்லா நாடுகளும் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நாம் புதிய சாதனங்களையாவது நம்முடைய மருத்துவ மனையிலே வைக்க வேண்டும். தலைமை மருத்துவ மனையில் சாதனங்கள் இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு ‘எக்ஸ்பர்ட்’ என்று சொல்லக்கூடிய பெரிய டாக்டர்கள், ஒரு துறையிலே சிறப்புத் தன்மை பெற்றவர்கள் வெளியிலே இருந்துகொண்டு பணியாற்றும் காட்சியைப் பார்க்கிறோம். அரசாங்கத்திலே பணியாற்றும்போது அவர்களுடைய ஆர்வம் குறைந்து விடுகிறது. ஏனென்றால் அவர்களுடைய பயிற்சியே மறந்து போகுமோ என்று அஞ்சக்கூடிய அளவுக்கு மருத்துவ மனைகளில் போதுமான இன்ஸ்டிருமென்ட்ஸ் இல்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் அங்கே சிகிச்சைக்காகச் செல்பவர்கள்தான், சாதாரண ஏழை மக்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் அரசு உடனடியாக கவனம் செலுத்தி, அப்போதைக்கப்போது வேண்டிய கருவிகளை வாங்கிக் கொடுத்து, பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

கடைசியாக நான் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மலை அடிவாரங்களில் 5,000 மக்கள் தொகை இருந்தால், அதை ஒரு யூனிட்டாக வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். எந்தப் பகுதியில் அப்படியிருக்கிறதென்று பார்த்து, உடனடியாக அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இருப்பதேயில்லை. அவர்கள் போய்விடுகிறார்கள். இரவில் ஏதாவது ஆபத்தான கேஸ்கள் வந்தால்கூட, டாக்டர்கள் விடிந்துதான் வருகிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை செய்கிறவர்கள், அங்கேயே இருக்க வேண்டுமென்று ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமை மருத்துவராக இருக்கக் கூடியவர்கள் தினந்தோறும் அங்கே இல்லையென்றாலும், வாரத்திற்கு இன்னின்ன நாட்களில் கண்டிப்பாக இருப்பார் என்று அறிவிக்க வேண்டும். நாமக்கல் தலைமை மருத்துவ நிலையத்தில் இருப்பதேயில்லை. கேட்டால் சேலத்தில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடவுளுக்கு அடுத்தபடியாக டாக்டர்களைத் தான் தெய்வமாகக் கருதுகிறார்கள். கடவுள் பிறப்பைக் கொடுக்கிறார். அதற்குப் பின்பு ஏதாவது நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தால், ‘மறுபிறப்பு’ எடுத்து வந்தேன் என்று சொல்கிறோம். மற்ற துறைகளைவிட இந்தத் துறை மிகவும் பொறுப்போடு இருந்து செயலாற்ற வேண்டும். முதலமைச்சரவர்கள் இருக்கும்போது, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இன்று முதலமைச்சரவர்கள் இல்லாதது என்னுடைய துரதிருஷ்டமென்றுதான் சொல்ல வேண்டும். இந்த

சிறப்பான துறை. முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக பரிகாரம் செய்வார் என்று நினைத்தேன். எனது துரதிருஷ்டம் அவர் இங்கு வரவில்லை என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீதும் மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீதும் இங்கே எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு அங்கத்தினர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். மேலும் என்னுடைய ஆலோசனைகள் சிலவற்றையும் கூறி, விரைவில் முடித்துக் கொள்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று நாம் அனைவரும் பண்டைக்காலம் தொட்டே குழந்தைகளை ஆசிர்வதித்து வந்திருக்கிறோம். இருந்தபோதிலும் இன்று நோய் அதிகமாகப் பரவுகிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். என்னென்ன புதிய நோய்கள் வருகின்றன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். மேலை நாடுகளில், மருத்துவ மனைகளிலே இவ்வளவு படுக்கைகளைக் குறைத்தோமென்று அறிக்கை வருகிறது. அங்கே நோயற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் 'இவ்வளவு படுக்கைகளை விஸ்தரித்தோம்' என்று அறிக்கை வைக்கிறோம். அதற்குக் காரணம் ஏழ்மையான நாட்டிலே, பஞ்சமான நாட்டிலே அதிகமான நோயாளிகளைப் பெற்றிருக்கிறோமென்பதுதான். இன்றைய தினம் உள்ள மருத்துவ வசதி போதுமானதா என்றால், இல்லை. அதிக்மான தேவைகளைத் தான் நாம் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறோம். கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு இன்றைய சூழ்நிலையில் மருத்துவ வசதி நிறைவாகப் பெற்றிருக்கிறார்களா என்றால், இல்லை என்று எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். பத்துப்

(முற்பகல் 11.40)

பதினைந்து மைல்களுக்கு அப்பால் சென்றுதான் பிரசவத்திற்கு வைத்தியம் பார்க்கக் கூடிய முறையில் நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அங்கே எடுத்துச் செல்வதற்கு வாகன வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்தால், அதுவுமில்லை. கட்டில்களில் வைத்து ஆட்களின் தலைமேல் வைத்து எடுத்துச் செல்ல வேண்டிய நிலைதான் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். அந்த அளவுக்குக் கிராமங்களில் இந்த மருத்துவத் துறையைப் பொறுத்த அளவில் குறைகள் இருப்பதை நாம் உணர்கிறோம். 70 சதவிகிதம் மக்கள் வாழக்கூடிய கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்தாயிரம் மக்கள் தொகை உள்ளவர்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்

வைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், நிறைவாக எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்படுத்தப் போகிறோமா என்று பார்த்தால் இல்லை. கிராமப் புறத்து மக்களை அணுகி, அவர்களுக்கான மருத்துவ வசதிகளைச் செய்து தரக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இல்லையென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருந்துகளை வாங்குவதற்காக உள்ள 12 ஆயிரம் ரூபாயை 14 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இரண்டாயிரம் ரூபாய் மட்டும் உயர்த்தியிருப்பது போதுமா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். நோய்கள் வந்த பின்னால், அதைப் போக்குவதைக் காட்டிலும், நோய்களைத் தடுப்பதற்கு நாம் வழி முறைகளை ஆராய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நோய் பரவுவது என்பது ஒரு சோஷலிசமாக ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் கூட நாகரிகத்தின் பெயரால் இன்றைக்குப் பல வியாதிகள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஓட்டலில் சாப்பிடுவதைக் கூட சுட்டிக்காட்டி அப்படி சாப்பிடக்கூடிய பாத்திரங்கள் நல்ல நிலையிலே பாதுகாக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். இதனால்தான் இன்றைக்கு கிராமங்களில் கூட, க்ஷய நோயைப் பெற்றிராத கிராம மக்களுக்குக் கூட இன்றைக்கு க்ஷய நோய் பரவுவதைப் பார்க்கிறோம். கிராமந்தோறும் பத்துப் பதினைந்து டீக்கடைகள் இருக்கின்றன. அங்கே இருக்கக் கூடிய டம்ளர்கள் சுகாதார முறையில் இல்லாததால், அங்கே வியாதிகள் விரைவாகப் பரவுகின்றன. க்ஷய நோய் வந்தவர்கள் ஆரம்ப நிலையில் இதை அறிவதில்லை. வியாதி முற்றி இரத்த வாந்தி எடுக்கும்போதுதான் மக்கள் அதை அறிகிறார்கள். இதை ஆரம்ப நிலையிலே தடுக்க மாவட்ட அளவில் மருத்துவ மனைகள் ஏதாவது இருக்கின்றனவா என்றால், இல்லை. ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தடுப்பு ஊசியைப் போடக் கூடிய நிலையை உருவாக்கி யிருக்கிறோம் என்றாலும், அந்த வியாதி முற்றிய பின்னால் அவர்களை மருத்துவ மனையில் அனுமதித்தால்தான், அந்த வியாதி தீருமென்ற நிலைதான் இருக்கிறது. க்ஷய நோய் வந்தவர்கள் பலர் அதிலிருந்து குணமடையாமல் இறந்துவிடுவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், க்ஷய நோய் வந்தவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்ற பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து சிபார்சுக் கடிதங்களைப் பெற்று வந்தால்தான், அவர்களை மருத்துவ மனையில் அனுமதிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலேகூட ஊழல்கள் இருப்பதாக அரசுக்கு பல புகார்கள்

வந்திருக்கின்றன. அதையும் போக்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே பெண்ணாத்தூர் பகுதியிலே ஒரு க்ஷய நோய் மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய படுக்கைகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதை நான் அறிவேன். அங்கே சேர்வதற்காக என்னிடமே பத்துப் பதினைந்து பேர்கள் சிபார்சுக் கடிதம் பெறுவதற்காக வருவார்கள். நான் சிபார்சு செய்வது சரியா இல்லையா என்று பார்க்காமல், அவர்களுடைய நிலையைப் பார்த்துக் கடிதம் கொடுப்பது வழக்கம். அனுபவபூர்வமாகக் கூற வேண்டுமென்றால், ஒரு முறை என்னிடம் கடிதம் வாங்கிக்கொண்டு ரிக்ஷாவில் ஏறும் போதே இரத்த வாந்தி எடுத்து, என்னுடைய வீட்டு வாசற்படியிலேயே ஒருவர் இறந்துவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அளவுக்கு க்ஷய நோய் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. ஏதோ பெருமையாக அந்த நோயைத் தடுத்து விட்டோம் என்று கூறினாலும், அந்த நோயால் பிடிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். குழந்தைப் பருவத்திலேயே இந்த நோய் பிடிப்பதைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். குழந்தைகள் பலமாக இருந்தால்தான் எதிர்காலத்தில் சந்ததிகள் நல்ல முறையில் இருக்க முடியும் என்ற முறையில், குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிகளைப் போடும் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதோடு மட்டும் நின்று விடாமல், மேலும் கிராமப்புறங்களில் இருக்கக் கூடிய குழந்தைகளைப் பராமரிப்பதற்கு வேண்டிய பரிசோதனைகளையும் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன். ஆரம்பத்திலேயே நோய்களைத் தடுப்பதற்கான அறிவுரைகளைக் கூறுவதற்கும், மருத்துவ மனைகளில் அவர்களை அழைத்து வந்து மருந்துகளை வழங்குவதற்கும் அரசாங்கம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நன்றாகப் படிக்கக் கூடிய குழந்தைகள் நோயால் பாதிக்கப்பட்டு, அதனால் குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய குடும்ப வாழ்வும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகளைப் பார்க்கிறோம். அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

மலேரியா நோய் பரவுவதை நல்ல முறையிலே நாம் கட்டுப்படுத்தியிருந்தாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இந்த நோய் பரவக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று இங்கே கொடுத்துள்ள அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். மலேரியாவைப் போக்குவதற்காகக் கொடுக்கக்கூடிய மருந்துகளை ஜீரணிக்கக் கூடிய அளவுக்குக் கொசுக்களுடைய தன்மை உயர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் சிறியதாக இருந்த கொசுக்கள் இன்றைக்கு ஒரு ஈயின் அளவுக்குப் பெரிதாக வளர்ந்திருக்கின்றன. அது ஏன் என்று புரியவில்லை. அந்த மருந்துகளைப் போட்டாலும்,

கொசுக்கள் ஒழியக் கூடிய நிலையில் இல்லை. அதற்காக இருக்கக் கூடிய சுகாதார அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வியாதி வட ஆற்காடு மாவட்டத்திலே அதிகமாக இருப்பதைத் தடுப்பதற்குப் பாடுபட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நோய்கள் வருவதற்கு முன்னால் ஆரம்பத்திலேயே அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறேன். நாம் உண்ணும் பல உணவால் கூட பல வியாதிகள் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். நெல்-அரிசியால் கூட பல வியாதிகள் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். அதிக விளைச்சலை விளைவிக்க வேண்டுமென்று பயிர்களுக்குத் தெளிக்கக் கூடிய டி.டி.டி. போன்ற பூச்சி கொல்லி மருந்துகளால் கூட நோய்கள் வருகின்றன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். விவசாயத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமான விளைச்சலைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கம் ஒரு பக்கம் இருந்தாலும், அதை உண்ணுவதால் மக்களுக்கு வரும் நோயைத் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலப்படத்தினால் ஏற்படக் கூடிய நோய்களைத் தடுத்து விட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். இதிலே 22,700 கேஸ்களில் 4,300 பேர்களுக்கு அபராதம் விதித்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இது வரவேற்கப்பட வேண்டியதுதான் என்றாலும், ஐந்தில் ஒரு பங்கு பேர்களுக்குத்தான் தண்டனை கிடைத்திருக்கிறது. ஐந்தில் நான்கு பங்கு பேர்களுக்குத் தண்டனையில்லை. அவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்லவர்களுக்குச் சிரமங்கள் கொடுப்பது நல்லதல்ல. கலப்படம் செய்பவர்கள் யார் என்பதை அறிய இங்கிதமாக அவர்களை அணுகி தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலில் தண்ணீரைக் கலப்பது ஆபத்தான நிலையில்லை. இருந்தாலும் அதற்காக கடுமையான தண்டனையை வழங்கியிருக்கிறோம். மற்ற உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க வழிமுறைகள் இருக்க வேண்டும். கிராமங்களிலே ஐந்து பைசா, பத்துப் பைசா என்று ஐஸ் விற்கிறார்கள். அதை குழந்தைகள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அந்த ஐஸில் பலவிதமான கலர்களைக் கலந்து விற்பதால், அதைச் சாப்பிடும் குழந்தைகளுக்கு கேன்சர் போன்ற வியாதிகள் வருகின்றன என்று கூறுகிறார்கள். இதை அரசு உணர்ந்து அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமப் புறங்களில் சித்த மருத்துவத்தைப் பரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சித்த மருத்துவ முறையை எளிமையாக்கி கிராமப்புறங் களில் நடைமுறைப்படுத்தினால், கிராமப் புற மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும். சித்த மருத்துவ முறை எளிமையானது, செலவினமும் அதிகமாகாது என்ப தால், அதை உணர்ந்து, அதற்கான முக்கியத்துவம் கொடுத்து, சித்த மருத்துவ முறையை கிராமப்புறங்களில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன். கிராமப்புறங்களில் ஊர்திகள் மூலம் சென்று மருத்துவ வசதிகள் செய்து தருவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இறந்த வர்களை எடுத்துச் செல்வதற்கு மருத்துவ மனைகளில் வாகனங்கள் கொடுப்ப தில்லை. தலைமை மாவட்ட மருத்துவ மனைகளில் யாராவது இறந்துவிட்டால், அவரது உடலை எடுத்துச் செல்ல வேண்டுமென்றால், தனிப்பட்டவர்களிடத்திலே தான் வண்டியைக் கேட்க வேண்டும். பத்து ரூபாய் கேட்க வேண்டியதற்கு நூறு ரூபாய் கேட்கிறார்கள். அதற்கு மேலும் சில நேரங்களில் கேட்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அந்த அளவுக்குக் கஷ்டப்படுவதைத் தவிர்க்க தலைமை மருத்துவ மனைகளிலே பிணங்களை எடுத்துச் செல்வதற்கு உதவக் கூடிய வகையில் வாகனங்களை அனுப்புகிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். திடீரென்று ஏற்படுகிற விபத்துக்களைத் தடுப்பதற்கு வாகனங்கள் தேவை. கிராமப்புறங்களி லிருந்து தகவல் அனுப்பினால் தலைமை மருத்துவ மனையிலிருந்து வாகனங்கள் வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். வேலூர் மருத்துவ மனை நல்லதொரு நிலையில் இயங்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்றைக்கு செய்துள்ள நன்மைகளைப் பாராட்டி மேலும் நல்ல காரியங்களைச் செய்வதற்கான குறிப்புகளை வைப்பார் கள். அதைச் செயல்படுத்துவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்து, அமை கிறேன். **வணக்கம்.**

திரு. மு. மாசிலாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது பேசுவதற்கு வாய்ப்பை நல்கியமைக்காக இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் மருத்துவத் துறை மனித சமுதாயத்தில் இன்றியமையாத ஒன்று என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதுபோல மனிதன் தன்னுடைய தாய் வயிற்றிலிருந்து பிறந்து வளர்ந்து

வாழ்ந்து வருகிற நேரத்தில் தன்னுடைய உடல் நலத்தைப் பேணிக் காப்பது முக்கியமானது என்று கருதினாலும் கூட, சிற்சில சமயங்களில் உண்ணும் உணவு செயல்முறையின் காரணமாக உடலைப் பாதுகாக்க முடியாமல் இறந்துபடுகிற காட்சியைப் பார்க்கிறோம். இன்றைய தினம் சென்னையில் பொது மருத்துவ மனை இருக்கிறது. அடுத்து, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை எல்லாம் இருக்கின்றன. அதைப் போன்று தமிழகத்திலே தமிழ் மருத்துவத் துறையிலே பேரறிஞர் அண்ணா பெயரில் அண்ணா நகரில் ஒரு மருத்துவ மனை இயங்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் சித்த வைத்தியத்தினால் தமிழக மக்கள் பயன் பெற்று வருகிறார்கள். ஆங்கில மருத்துவ மனைகளிலே ஆங்கில மருத்துவத்தினால் குணப்படுத்த முடியாத நோய்களை எல்லாம் சித்த மருத்துவத்திலே குணப்படுத்தி ஆக்க பூர்வமாக மனித சமுதாயத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட அவர்களுடைய வாழ்நாளில் சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தி அவ்வப் பொழுது வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை யாகும். மனிதனுக்கு நோய் எப்படி ஏற்படுகிறது என்றால், வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் இன்றியமையாதது ; அந்த வாதம், பித்தம், கபம் இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று குறைந்தாலும் மிகுதியானாலும் நோய் அவனைத் தொத்திக் கொள்கிறது. அந்த முறையிலே இன்றைய தினம் சென்னையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு நாளும் 600-க்கு மேற்பட்ட ஆண்களும், 600-க்கு மேற்பட்ட பெண்களும் குழந்தைகளும் வருகிறார்கள். அங்கே நுழையும்போது பார்த்தால், ஒரு விழா நடப்பது போலக் காட்சியளிக்கிறது. அந்த அளவுக்கு மக்கள் வெள்ளம் கிட்டத்தட்ட சென்னையில் 33 லட்சம் அளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறது. அந்த நிலைமையில் மருத்துவர்கள் பல பிரிவுகளிலே பணியாற்றுகிறார்கள். வருகிற நோயாளிகளிடம் நோயைக் கேட்டு சிகிச்சை செய்து பம்பரம் போல சுழன்று பணியாற்றுவதை நான் பார்த்திருக்கிறேன். சில வார்டுகளிலே செவிலியர்கள், டாக்டர்கள் அவசர நிமித்தமாகவும் விரையும் போது பொறுமை இழக்கும்படியாகிறது. அவர்களும் மனிதர்கள் தானே ! இவ்வளவு நோயாளிகளையும் பார்க்கிறபோது, ஒரு சில நேரங்களில் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுகிறார்கள். அது தவிர்க்க முடியாத ஒன்று. இன்றைய தினம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நோயாளிகள் எந்த வார்டுக்கு வரவேண்டும், அவசர கேஸ்கள் எங்கே செல்ல வேண்டுமென்று அறிவிக்க சிகப்பு விளக்கு ஒரு பகுதியையும் 'பச்சை விளக்கு ஒரு பகுதியையும் காட்டுகிற வகையில் பார்வையாளர்களுக்கு அறிவிக்கிற தன்மை அங்கே வைத்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். சென்னையில் காச நோய் மருத்துவமனை ஓட்டேரி பகுதியில் இருக்கிறது. நீண்டநாட்களாக அந்தப் பகுதியில் உள்ள

மக்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். காச நோய் என்பது தொத்து நோய் என்று கருதப்படுகிறது. கிட்டத்தட்ட 40 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் பேர்கள் வாழ்கிற பகுதி நம்மாழ்வார் பேட்டை, சுப்பையாசெட்டித் தெரு போன்ற நெருக்கடி நிறைந்த பகுதியின் மத்தியில் அந்தக் காசநோய் மருத்துவமனை இருக்கிறது. அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரி வருகிறார்கள். தலைவர் அவர்கள் மூலமாக தமிழக முதல்வர் எங்கள் இயக்கத்தின் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா பெயரைக் கொண்ட சித்த மருத்துவமனை அங்கே துவக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பல நோய்கள் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. நாய்க்கடிக்கும், பெருச்சாளிக்கடிக்கும் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் விஷம் தலைக்கேறி மருத்துவமனைக்கு வருகிறார்கள். நாய் கடித்து எத்தனை நாளாகிறது என்று கேட்டால், மூன்று மாதமாகிறது என்பார்கள். ஏன் சும்மா இருந்தீர்கள் என்று கேட்டுவிட்டு, வயிற்றில் பதினாறு ஊசிகளைப் போடுகிறார்கள். அப்படிப் போட்டும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுகிறது. நம்மாழ்வார் பேட்டையில் ஒரு பெரியவர் 55 வயதுள்ளவர் குடைத் தொழில் செய்கிறவர் இருந்தார். பெருச்சாளி கடித்ததைக் கவனிக்காமல் இருந்ததால், ஒருநாள் திடீரென்று இரவு அந்தப் பெரியவர்க்கு குளிர் வந்து ஜன்னி கண்டு அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அவருக்குப் பன்னிரண்டு பிள்ளைகள். அவர்கள் தெருவில் கூடி அழுததை நான் கண்ணால் பார்த்தேன். அப்படிப்பட்ட பெருச்சாளிக் கடிக்கும், நாய்க்கடிக்கும் சித்த மருத்துவத்திலே நல்ல மருந்துகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சட்ட மன்றத்தில் பேசுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சித்த மருத்துவத்திற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைத்திருப்பதாகவும் அதற்கு டாக்டர் உத்தமராயன் அவர்களைத் தலைவராக அமைத்திருப்பதாகவும் சொன்னார்கள். அதைப் பார்த்ததும் நீண்ட நாட்களாக இருந்த என் எண்ணம் நிறைவேறியதற்காக நான் இருந்த இடத்திலேயே இருந்து மகிழ்ச்சியும் நன்றியும் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டேன். சித்த மருத்துவத்திலே பெருச்சாளிக் கடிக்கு வேப்பிலை, அருகம்புல், மஞ்சள் இவற்றைக் கூட்டி அரைத்துத் தடவினால் விஷம் இறங்கிவிடும். என்னுடைய தாய்க்கு இதைச் செய்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். பெருங்களத்தூரில் அவர்கள் இருந்தபோது அங்கே பெருச்சாளி கடித்துவிட்டது. ஒரு நாள் இரவு அவர்கள் தூங்கும்போது, பெருச்சாளி குரலைப்போன்று கொர் கொர் என்று சத்தம் வந்தது. என்ன என்று கேட்டேன். பெருச்சாளி கடித்துவிட்டது என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரிக்குச் சென்று ஊசி போட வேண்டுமென்று சொன்னால், எங்கள் பாட்டி வேண்டாமென்று மறுத்துவிட்டார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பெருச்சாளி என்று உறுப்பினர் சொல்லும்போது 'ச்'-சை சேர்க்காமல் பேசுகிறார்கள்.

திரு. மு. மாசிலாமணி: அப்போது எங்கள் பாட்டி ஒரு மருந்தைத் தயார் செய்து கொடுத்ததும் அது குணமாகிவிட்டது. அதைப்போல சித்த மருந்து கிராம மக்களுக்கு உதவக் கூடிய மருந்து. மூலிகைகளிலிருந்து செய்யப்படும் அந்த சித்த மருந்துகள் நல்ல பயன் தரக்கூடியனவாக இருக்கின்றன. அந்த மூலிகைகளை வைப்பதற்கு பண்ணை வைக்கப்போவதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரியது. சென்னையில் சித்த மருத்துவ மனைகள் இருக்கின்றன. தலைமைச் செயலகத்தில் ஒன்றும், சைதாப்பேட்டையில் ஒன்றும், திருவல்லிக்கேணியில் ஒன்றும், சேப்பாக்கத்தில் ஒன்றும் இருக்கின்றன. வட சென்னைப் பகுதியில் தொழிலாளர் அதிகமாக வசிக்கிறார்கள். அங்கே சித்த மருத்துவ மனை அமைக்கப்பட வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். சித்த வைத்தியராக இருந்தாலும், அலோபதி டாக்டராக இருந்தாலும், நோயாளிகளிடம் மிகவும் வாஞ்சையாக நடந்துகொள்ள வேண்டும். நோயாளிகளைக் கண்டதும் என்ன நோய் என்கிறார்கள். அவர்கள் எதையோ சொல்கிறார்கள். அதைக் கேட்டுக் கொண்டு இவர்கள் எதையோ செய்கிறார்கள். என்ன மருந்தையோ கொடுக்

[நண்பகல் 12-00]

கிறார்கள். நாடியைப் பார்த்து இந்த நோய் எப்படி ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். நெஞ்சிலே சளி எப்படி கட்டுகிறது என்று பார்க்கிறார்கள். சளிக்கு அடிப்படைக் காரணம் என்ன? சூடு. சூடும் வெப்பமும் சேர்ந்தால் கபம் கட்டுகிறது என்கிறார்கள். அந்தச் சூட்டைப் போக்க சித்த வைத்தியத்திலே முறை சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் சித்த மருத்துவ முறையில் செய்கிறார்கள். ஆனால் அலோபதிக் முறையில் என்ன நடக்கிறது? எதற்கெடுத்தாலும் டேப்லெட் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஜுரம் இருந்தாலும் சரி, வயிற்றுப் போக்கு இருந்தாலும் சரி, டேப்லெட் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஆனால் இவைகளுக்கெல்லாம் சித்த மருத்துவத்தில் நல்ல மூலிகைகள் இருக்கின்றன. சண்டமாருதம் என்ற ஒரு மூலிகை இருக்கிறது. வாய்வும் சீதளமும் சேர்ந்தால், பாரிச வாய்வு வந்து விடும். அலோபதிக் முறையில் ஒரு வைத்தியமும் சரியாக இல்லை. கடைசியாக ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிடுகிறார்கள். ஒரு நோயாளிக்கு நோய் வந்து அதை டாக்டர் பரிசோதித்து நீண்ட நாட்களாக வைத்தியம் செய்து, மருந்து கொடுத்து ஊசி போட்டு, அதிலே அந்த டாக்டர் வெற்றி பெற்றால், டாக்டருக்கு நல்ல பெயர் கிடைக்கிறது. அது இல்லாமல் நோயாளி போய்

விட்டால், உடனே "அவன் தலை எழுத்து அவ்வளவுதான்; அவனுக்கு விதி முடிந்துவிட்டது" என்று சொல்லிவிடுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் சித்த மருத்துவத்தில் நல்ல மருந்துகள் இருக்கின்றன.

இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத்துறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கீழ் இருப்பதால், மிகவும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள்கூட டாக்டர்களையோ அதிகாரிகளையோ அணுகக்கூடாது, அதன் விளைவாக அவர்களுடைய பணியில் தடங்கலோ அவர்களின் செயல்முறைகளில் தாமதமோ ஏற்படக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தெரிவித்திருப்பதன் காரணமாக, சட்ட மன்ற உறுப்பினர்களேகூட இப்போது டாக்டர்களுக்கு சிபாரிசுக் கடிதம் கொடுப்பதில்லை. சிபாரிசு இல்லாமல் மக்கள் நல்வாழ்வுத் துறை இன்றையதினம் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மக்கள் இந்தத் துறையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்களைப் பார்த்து, ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நொடிந்துபோய் வருகிற நோயாளி, வசதி எதுமற்ற நோயாளி, பஸ்ஸில் ஏறிச் சென்று மருத்துவ மனைக்கு வரக்கூட முடியாத நோயாளி, 4 அணா கொடுத்து ரசீது வாங்கக்கூட முடியாத நோயாளி, இந்தச் சமுதாயத்தில் கீழ் நிலையில் உள்ள நோயாளி டாக்டர்களாகிய உங்களிடம் மருத்துவம் வேண்டி வருகிறான். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், நோயாளிகளுக்கு ஆண்டவனைப் போல் இருக்கிற நீங்கள் தயவு செய்து அவர்களைக் கொஞ்சம் சரியான முறையில் பரிசோதனை செய்து அவர்களின் நோயைப் போக்க வேண்டும். அவர்களிடம் கொஞ்சம் தன்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் சென்னையைப் பொறுத்தவரையில் இங்கே உள்ள மருத்துவ மனைகளில் நல்ல மருத்துவம் செய்யப்படுகிறது. மதுரையில் உள்ள எர்ஸ்கின் மருத்துவ மனையில் நல்ல அறுவை சிகிச்சை செய்கிறார்கள். அதைப் போலவே ஈரோட்டில் உள்ள மருத்துவ மனையிலும் சிறந்த முறையில் மருத்துவ சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் செய்யப்படுகின்றன. இவற்றிற்காகவெல்லாம் நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் —இந்தியன் மெடிகல் ஸ்டோர்சில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட சாமான்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அங்கே இருக்கிற டாக்டர்களைக் கேட்டால், மேல் நாடுகளிலிருந்து மின்சாரத்தால் இயக்கக்கூடிய அறுவை இயந்திரங்களைக் கொண்டு வர வேண்டும், அப்போதுதான் இங்கே உள்ளவைகளையும் பயன்படுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். எனவே அத்தகைய இயந்திரங்களை விரைவில் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவ மனையில் மருந்துப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அடுத்து, அங்கே தண்ணீர் பஞ்சமும் அதிகமாக இருப்பதால், சென்னை மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு தண்ணீர் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பொது மருத்துவ மனையில் ஒரு பெரிய தண்ணீர் தொட்டி கட்டுவதற்காக பணத்தை ஒதுக்கீடு செய்திருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல செயல்களைப் புரிந்து வருகிற இந்த அரசாங்கத்தை இந்த மாநிலத்தில் உள்ள மக்களும், நாட்டில் உள்ள எல்லா மக்களும் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள், பாராட்டுவதோடு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிற மக்கள், சென்னை கூட தெரியாத மக்கள், இங்கே இருக்கிற மூர் மார்க்கெட் பற்றிகூட அறியாத மக்கள், சென்னையில் உள்ள பொது மருத்துவ மனைகூட இருக்கும் இடம் தெரியாத மக்கள் எல்லாம் இன்றையதினம் இந்த அரசாங்கத்தின் மூலமாக நல்ல பயனை அனுபவித்து வருகிறார்கள். அதை நான் கண்ணாரக் காண்கிறேன், காதாரக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று சொல்லிக் கொண்டு எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பொறுப்பின் கீழுள்ள மக்கள் நல்வாழ்வுத்துறை குறித்து அளித்துள்ள கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்பநலத் துறை ஆகியவற்றின் கொள்கைக் குறிப்பில் முன்னுரையிலேயே இந்த அரசு என்ன செய்ய காத்திருக்கிறது என்று ஆரம்பித்து, என்னென்ன திட்டங்களுக்கு இந்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது, எப்படியெல்லாம் இந்தப் புதிய அரசு தன்னுடைய பணிகளைத் தொடங்க இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றை மட்டும் மையமாக வைத்து, ஒன்றை மட்டும் மிகவும் வலியுறுத்தி இந்தக் கொள்கைக் குறிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அது என்ன என்றால், இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை கிராமத்தை மையமாக வைத்து சிறப்பாக இயங்க முற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதாகும். கிராமப்புற மக்களின் நல்வாழ்வில் இந்த அரசுக்கு மிக முக்கியமான அக்கறை இருக்கிறது. கிராமப்புற மக்களின் நல்வாழ்வில் இந்த அரசாங்கம் மிகுந்த பங்கு கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் இந்தப் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று மக்கள் நல்வாழ்வுத் துறைக்குப் பொறுப்பேற்றி ீக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மேலெழுந்தவாரியாக இதைப் பார்க்கிறபோது, மக்கள் இதை உண்மையிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, இவைகளைக்கொண்டு முதலமைச்சருடைய எண்ணங்களை நிறைவேற்ற முடியுமா, இந்தத் திட்டங்களையெல்லாம் கிராமப்புறங்களில் செயல்படுத்த முடியுமா, புதிய பணிகளைத் தொடங்க முடியுமா என்ற அச்சம்தான் ஏற்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லக்கூடும். துணை மதிப்பீட்டில் இவைகளையெல்லாம் சரிக்கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான் இவைகளைப் போட்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடும். அப்படிச் சொல்வாரானால், நான் ஒன்றை மட்டும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். When wealth is lost nothing is lost; when health is lost, something is lost. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் இங்கே பேசும்போது, சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிற மக்கள், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த மருத்துவ மனைகளுக்குச் செல்கிறார்கள் என்றார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்று பார்த்து, வியாதிகள் வருவது கிடையாது. இது இந்தத் தமிழகத்தில் வாழும் $4\frac{1}{2}$ கோடி மக்களும் சம்பந்தப்பட்ட பிரச்சினை. எந்தப் பகுதி மக்களுக்கு அதிகமாக நோய் ஏற்பட்டு, நலத்துறையின் மூலமாக அதைத் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது, எந்தப் பகுதி மக்களுக்கு அரசாங்கத்தின் பரிகாரம் கிடைக்கிறது என்பதுதான் பிரச்சினை.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. பலராமன் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசாங்கத்தின் கண்காணிப்பில் உள்ள இந்த நிலையங்கள் சரிவர, முறைப்படி செயல்படுவதில்லை; இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முறைப்படி கண்காணிக்கப்பட்டு பணியாற்றினால், அங்கே உள்ள டாக்டர்கள் நல்ல முறையில் பணியாற்றினால், பெரும்பாலான பிரச்சினைகள் தடுக்கப்பட முடியும் என்று சொன்னார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். 70 சதவீத மக்கள் உழவர்களாக, உழைப்பாளிகளாக கிராமப்புறத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நோய்நொடிகளை இந்த அரசாங்கம் போக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த ஆரம்பச் சுகாதார மருத்துவ நிலையங்களுக்கு ஆண்டுதோறும் மருந்து வாங்குவதற்கு என்று வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ. 12,000 இன்றைக்கு ரூ. 14,000 என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உயர்வான ரூ. 2,000 என்பது பெரிய தொகை அல்ல. வளர்ந்து வருகிற மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு பார்த்தால், ஒரு ரூ. 2,000 என்பது மிக மிகச் சிறிய தொகையாகும். சின்னஞ் சிறிய ஊராட்சி ஒன்றியம் என்றாலும்கூட, அங்கே 40 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இந்த 40 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குள் இரண்டு மருத்துவமனைகள்—ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒரு நிலையத்திற்கு மருந்துக்காக மட்டும் ரூ. 2,000 அதிகப்படுத்திவிட்டோம் என்பது எந்த வகையிலும் ஒரு பெரிய தொகை அல்ல.

மற்றொன்று கிராமப்புறப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளுக்குச் சென்று பணியாற்ற டாக்டர்கள் அதிகமான அளவுக்கு உற்சாகம் காட்டுவதில்லை. அங்கு சென்று பணியாற்றவே தயங்குகிறார்கள். இதற்கு அரசாங்கம் ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

டாக்டர்கள் மீது பொதுவாகக் குற்றம் சாட்டுகிறார்கள். பல டாக்டர்கள் நல்ல டாக்டர்களாக இருக்கிறார்கள். மிகுந்த கடமை உணர்ச்சியோடு பணியாற்றக் கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில டாக்டர்கள் கடமையில் தவறுகிறார்கள். அதைத்தான் நாம் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 28

(பிற்பகல் 12-10)

கிராமப்புறத்திற்கு முழுமையாக வருவதற்கு முன்னாலே மாவட்ட மருத்துவ மனைகளிலும், தாலுக்கா மருத்துவ மனைகளிலும் நாம் இந்த விசேஷப் பிரிவுகளை, ஸ்பெஷல் பிரிவுகளை எக்ஸ்ரே பிரிவுகள் போன்ற பிரிவுகளையெல்லாம் ஏற்படுத்தவேண்டும். அப்படிப்பட்ட ஸ்பெஷல் பிரிவுகள் எல்லாம் கொண்டு வந்தால், நல்லதாக இருக்கும். அப்படிச் செய்தால், சென்னை, மதுரை போன்ற நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் மாவட்டம் மாவட்டமாகக் கொண்டுவர வேண்டும். பிறகு தாலுக்கா வாரியாகக் கொண்டு வர வேண்டும். இப்படிச் செய்வதால், ஆரம்பச் சுகாதார மருத்துவ மனைகளை நாம் பிரித்துக்கொள்ள முடியும்.

மருத்துவ மனைகளில் உபயோகப்படும் சாதனங்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். கிராமப்புறங்களில் நிபுணர்கள் சென்று பணியாற்ற வேண்டும். அது நல்ல கருத்து. கிராமப்புறங்களுக்கு நல்ல உபகரணங்களைக் கொண்டு செல்ல முடியாது. பல்வேறு தாலுக்கா மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே யூனிட்டுக்கள் கூட கிடையாது. ஆகவே கிராமப்புறங்களுக்கு நிபுணர்களை, வல்லுநர்களை அனுப்பிவிட்டு, அங்கே அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை அனுப்பாவிட்டால், அதிலே பயன் இல்லை. நாம் எந்த நோக்கத்தை நிறை வேற்ற வேண்டும் என்று நினைக்கின்றோமோ, இந்த அரசு எந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கின்றதோ, கருதுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் போகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலே, சுற்றுப்புறங்களிலே உருவாக்குகின்ற திட்டங்களுக்கு என்று நாம் அதிகமான தொகைகளை ஒதுக்கீடு செய்கிறோம். அங்கு நிபுணர்களை, வல்லுநர்களை அனுப்பும்போது, அவர்களுக்கு வேண்டிய மருந்து களும் தாலுக்கா மருத்துவ மனைகளில், மாவட்ட மருத்துவ மனைகளில் கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். மிக முக்கியமான ஒன்றை நமது முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். சென்னையில் இருக்கின்ற பெரிய மருத்துவ மனையில் கண்காணிப்புக் குழு என்று போட்டிருக்கிறார்கள். சிறந்த டாக்டர்கள் அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் கண் காணிப்புக் குழுவையும் போட்டிருக்கிறார்கள். அம்மையார் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருக் கிறார்கள். அதில் பெண்களுக்கும் அதிக இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே உள்ளவர்களாக, ஒழுக்க சீலர்களாக இருப்பவர்கள், நம்மால பாராட்டப் பெற்றவர்கள்தான் அந்தக் குழுவில் பணி

1978 மார்ச் 28] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

யாற்ற வர வேண்டும். அங்கு இருக்கின்ற டீன்கள், மேல் மருத்துவர்கள் இவர்களுக்கு மேல் கண்காணிப்புக்காக இவர்கள் இருக்க வேண்டும். அவர்கள் இந்தத் துறையிலே ஈடுபட்டவர்களாக இருக்க வேண்டும். மிகச் சிறந்தவர் களாக இருக்க வேண்டும். பொதுமக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் களாக இருக்க வேண்டும். இந்த முறை சென்னையோடு நின்றுவிடக்கூடாது., ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தாலுக்காவுக்கும் இந்தக் கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், பொதுமக்களுக்கு அவர்கள் தூய உள்ளத்தோடு பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும் என்று கருது கிறேன். மாவட்ட மருத்துவ மனைகளில் இட நெருக்கடி இருந்து கொண்டிருக் கிறது. மக்கள் தொகை பெருகிப் பெருகி இட நெருக்கடி ஏற்படுகிறது. மாவட்ட மருத்துவ மனைகளுக்கு மக்கள் கூட்டம் பெருகி வந்து கொண்டிருக் கின்றது. ஒரு குறிப்பிட்ட மருத்துவ மனையில் சென்று மருத்துவம் செய் தால்தான், நோய் தீரும், குறிப்பிட்ட டாக்டர் அவர்களிடம் சென்றால்தான் நோய் தீரும் என்று போகின்றார்கள். இன்றைக்கு சென்னைக்கு வந்தால்தான் நோய்தீரும் என்று இருக்கிறார்கள். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். மதுரை போன்ற பல தலைநகரங்களுக்குப் போவதைக் கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைக்கின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு வந்தபோது, இரண்டு முறை அரசாங்க மருத்துவ மனைக்கு, எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்வை யிட்டார்கள். அவர்கள் மதுரைக்கு வந்ததனாலேதான், அந்தச் சுற்றுப்புறப் பகுதிகளைக் கண்காணித்து வைத்தார்கள். நம்முடைய முன்னாள் அமைச்சர், மிகப் பெரிய தொண்டர், போலீஸ் அமைச்சராக இருந்தவர், திரு. கக்கன் அவர்கள் பொதுப்படையான பெட்டிலே போடப்பட்டிருந்திருக்கிறார்கள். அது உங்களுடைய கவனத்திற்கு வந்ததால்தான், நல்ல சிகிச்சை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதுபோன்ற விஷயங்கள் நம் கவனத்திற்கும் கருத்துக்கும் வராமலிருந்தால், சரியாக நடப்பதில்லை. அதற்கு என்று ஒரு புது உத்தரவு போட வேண்டும். அரசாங்கத்திலேயிருந்து ஒரு உத்தரவு போட வேண்டும். அந்த உத்தரவின்படி அவர்கள் நடக்கின்றார்களா, அதைக் கடைப்பிடிக் கிறார்களா என்பதையெல்லாம் கண்காணிப்புக் குழுவின் மூலம் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நல்ல நோக்கம் நிறை வேறாமல் போய்விடக்கூடாது. ஒருவர் கையிலே ஐஸ் கட்டி ஒன்றைக் கொடுத்து அது 4, 5 பேர்கள் கைக்கு வரும்போது கடைசியிலே சொட்டுத் தண்ணீர்தான் இருக்கும் என்று சொல்வார்கள். அது போல அந்த உத்தரவுகள் கடைப்பிடிக்கப்படவில்லை. டாக்டர்கள் சரியாகப் பணியாற்ற வில்லை என்ற நிலைமைகள் இருக்கக் கூடாது. டாக்டர்கள் நன்றாக என்கேஜ் பண்ணிக்கொள்ள வேண்டும். சிறந்த பணி ஆற்றுகின்றவர்களுக்கு என்னென்ன

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 28

ஊக்கங்கள் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் தவறு செய்பவர்களைக் கண்டுபிடிக்கும்போது, அவருக்கு எவ்வளவு பெரிய சிபாரிசாக இருந்தாலும்கூட, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னால், அதை நான் பெருமையாகக் கொள்வேன்.

மதுரையில் ரோட்டரி சங்கத்தார் 40,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு இயந்திரம் வாங்கி மருத்துவ மனைக்குக் கொடுத்தார்கள். அந்த இயந்திரம் செயற்கை சிறுநீரகம் பொருத்துகின்ற இயந்திரம். ரோட்டரி சங்கத்தாரால் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அதையும் இன்றைக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். ஒரு சிறு டெக்னிஷியன் இல்லாத காரணத்தால், ஒரு பொது நிறுவனம் அளித்த அந்தக் கருவியை அரசு பயன்படுத்த முடியவில்லை. ஒரு பெரிய மருத்துவ மனையிலே இருக்கிறது. நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்த இயந்திரத்தைச் செம்மைப் படுத்தி, பயன்படுத்தும் அளவிலே இல்லை. குறிப்பிட்ட ஒரு டெக்னிஷியன் பொறுப்பில் அது இருக்க வேண்டும். டாக்டர்கள் அதிலே ஒன்றும் செய்வதில்லை. அந்தக் காரியங்கள் நடப்பதற்கு வேண்டிய ஆணைகளை அரசாங்கம் போட வேண்டும். அந்தக் காரியங்கள் செம்மையாக நடக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல நிறுவனங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மருத்துவத் துறையிலே முதலமைச்சர் அவர்கள் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரி பிரின்ஸ்பால், மருத்துவ மனை இணைக்கப்பட்டதனால், ஒரே இடத்தில் இருக்கிறார். இரண்டு துறைகளையும் அவர்கள் பொறுப்பிலே விட்டிருக்கிறார்கள். இரண்டு துறைகளும் ஒன்றாக இருப்பதால், அவைகளைச் சிறப்பாகக் கவனித்துக் கொள்ள முடியும். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஏற்படுகின்ற சிரமங்களைப்பற்றி, தவறுகளைப்பற்றி பத்திரிகைகளிலே "Letters to the Editor"-லே குறிப்பிட்டு எழுதிவிடுகிறார்கள். அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. ஒரு சின்ன விஷயத்தைக்கூட அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து விடுகின்றார்கள். ஆனால் கிராமப் புறங்களிலே உள்ள சிரமங்களை யார் கொண்டுவர முடியும்?

பொதுவாக கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளில் 2 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்று ஜீப் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு மாதத்திற்கு இவ்வளவு பெட்ரோல் உபயோகித்துக் கொள்ளலாம்

1978 மார்ச் 28] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மருத்துவ மனையில் 3 மருத்துவர்கள் இருக்கின்றார்கள் என்றால், ஒரு குழுவாகப் போனால் தான் அதை உபயோகித்துக்கொள்ள முடியும். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்தப்படும் பெட்ரோல் கட்டுப் படுத்தப்படுகிறது. கொடுக்கப்படுகின்ற பெட்ரோலை முதல் 10 நாட்களுக்குத் தான் பயன்படுத்த முடியும். பெட்ரோல் அளவு மிகக்குறைவாக இருக்கிறது. மீதி இருக்கின்ற 20 நாட்களுக்கு அவர்கள் அந்த ஜீப்பை உபயோகப்படுத்த முடியாத நிலைமைகள்தான் இருக்கின்றன. அந்தப் பெட்ரோலின் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும். பெட்ரோல் இல்லாமல் இருப்பதால், அந்த ஜீப்களை உபயோகப்படுத்த முடிவதில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஜீப் பயன்படாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். கிராமப் புறங்களில் விபத்துக்கு உள்ளானவர்களுக்கு வேண்டிய வாகன வசதிகள் இல்லை. அங்கங்கே உள்ள மருத்துவ மனைகளில் இந்த வாகன வசதியைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே விருதுநகரிலே உள்ள மருத்துவ மனைக்கு ஒரு போலீஸ் சி.ஐ.டி. வந்திருக்கிறார்கள். அவர் ஒரு வார காலமாக அங்குள்ள டாக்டர்களிடமும், செவிலியர்களிடமும் மாற்றிவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கு சென்று அவர்களிடம் நீங்கள் ஆஸ்பத்திரியை சரியாக கவனிக்கவில்லை, தவறு செய்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மாற்றிவிடுவார்களோ என்று பயந்திருக்கிறார்கள். மருத்துவ மனை அதிகாரிகளிடமும் அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அதன் பின்னர் மருத்துவ அதிகாரிகள் அவரைப் பிடித்துவிட்டார்கள். அவரைப் போலீஸ் ஸ்டேஷனிலே பிறகு ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த சி.ஐ.டி. போல வந்தவர்

(பிற்பகல் 12-20)

அங்கிருந்த செவிலியரிடம் பணம்கூட வாங்கியிருக்கிறார்கள். பெண் செவிலியர் பலருக்குக் கொடுமைகளைச் செய்திருக்கிறார். அங்குள்ள மருத்துவ அதிகாரி அவருக்கு உடந்தையாக இருந்திருக்கிறார். காரணம் பெரிய மருத்துவ அதிகாரி திருச்சியைச் சேர்ந்தவராம். போலீஸ் சி.ஐ.டி. என்று சொல்லிக் கொண்டிருப்பவரும் திருச்சியைச் சேர்ந்தவராம். அவருக்கு உதவியாக இருந்த தலைமைச் செவிலியரும் திருச்சியைச் சேர்ந்தவராம். எனவே பாதிக்கப்பட்ட செவிலியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அரசாங்கம் நடத்துகிற அரசு மருத்துவ மனைகளில் நடைபெறுகிற சம்பவங்கள் உங்கள் பார்வைக்கு வராத காரணத்தால், பெரிய தவறுகள் ஏற்படுகின்றன. இது வேறு இடங்களில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

நீங்கள் பதவிக்கு வந்த பிறகு, டைரக்டர் ஆப் ஹெல்த் செர்விசஸ் அண்டு பேமிலி பிளானிங் என்ற பதவிக்கு இன்னும் ஆள் போடப்படவில்லை. இன்னொருவர் அடிஷனல் பொறுப்பில் இருக்கிறார். இதற்கு நிரந்தரமான ஒரு ஆளைப் போடவேண்டும். மக்கள் நல்வாழ்வுத் திட்டம் கிராமப்புறங்களுக்கு நகர்ந்து வரவேண்டுமென்ற நிலையில் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய நண்பர்கள் ரொம்ப விவரமாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். சுகாதாரம் மற்றும் மக்களுடைய நல்வாழ்வு இவைகளைப்பற்றி நிறைய எடுத்துச் சொல்லிவிட்டார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் சகிக்க முடியாத வாசனை வந்து கொண்டே இருக்கிறது. இதை ஒருவரும் சொல்லவில்லை என்பது என்னுடைய ஐயப்பாடு.

அடுத்தபடியாக, செங்கற்பட்டு போகிற வழியில் மாமண்டூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. 1½ மைல் நீளத்திற்கு சுகாதாரக் கேடாக உள்ளது. அந்த வழியில் அதிகாரிகள் போகிறார்கள். டாக்டர்கள் போகிறார்கள். அமைச்சர்களும் போகிறார்கள். எங்களைப் போன்ற சாதாரண ஆட்களும் போகிறார்கள். பாதசாரிகளும் போகிறார்கள். சுகாதார நுணுக்கத்தைத் தெரிந்தவர்களுக்கு அது தெரியும். அந்த சுகாதாரக் கேட்டை அகற்ற வேண்டும்.

நம்முடைய மதிப்பிற்குரிய நாமக்கல் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் 20 ஆயிரம் கொண்ட ஜனத்தொகை உள்ள பஞ்சாயத்து யூனியனில் நல்ல காரியங்கள் எல்லாம் நடைபெறவில்லை என்றும் அங்கே இருக்கக்கூடிய உண்மை நிலைமைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அதே மாதிரி என்னுடைய பஞ்சாயத்து யூனியன், ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் கணக்கு எடுக்கப்பட்டபோது, 60 ஆயிரம் ஜனத்தொகை கொண்டதாக இருந்தது. இப்போது ஒரு லட்சமாகியிருக்கலாம். இந்தப் பஞ்சாயத்து யூனியனில் நான்கு இடங்களில் சித்த வைத்திய ஆஸ்பத்திரி இருந்தது. அதில் ஒன்றை அரசு எடுத்துக் கொண்டது. ஆனத்தூர் பஞ்சாயத்து யூனியனில் அந்த ஆஸ்பத்திரியை அரசு எடுத்ததிலிருந்து அங்கே போவார் யாரும் இல்லை, எந்த வைத்தியமும் கிடையாது, ஆஸ்பத்திரியைச் சுற்றி வைத்து வைக்கோல் படப்பு வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலையில் இருக்கிறது அந்த ஆஸ்பத்திரி.

அடுத்து, திருப்பாலக்குடியில் முஸ்லிம்கள் அதிகம் இருக்கின்றனர். மீன் பிடிக்கின்றவர்கள் இருக்கக்கூடிய இடம். அங்கே சுகாதாரத்தை அதிகமாகப் புகுத்தல் வேண்டும். அவர்கள் விரும்பாவிட்டாலும், மக்களுடைய நல்வாழ்வைக் கருதி அரசு செய்ய வேண்டும். இதுவரைக்கும் செய்யவில்லை. நல்ல முறையில் ஆஸ்பத்திரி நடைபெறுவதில்லை. எட்டு மாதத்திற்குள் இந்தக் காரியத்தை ஏன் செய்யவில்லை என்று சுட்டிக் காட்டவில்லை. செய்ய வேண்டும். செய்தால்தான் அவர்களுக்கு சுகாதார, வைத்திய வசதிகள் எல்லாம் நல்லமுறையில் கிடைக்கும். நவீன கருவிகள் எல்லாம் ஒவ்வொரு இடத்திலும் ஏராளமாகக் கெட்டுப் போயிருக்கின்றன என்று எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். தேவகோட்டைக்கும் காரைக்குடிக்கும் இடையே ஒரு காசநோய் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே எல்லா இன்ஸ்ட்ருமெண்ட்ஸும் இருக்கின்றன. விலையுயர்ந்த சாமான்களெல்லாம் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே இருக்கிறது. ஒரு பக்கம் பட்டனைப் போட்டால், இன்னொரு பக்கம் போகும். இந்த மாதிரி சீர்கெட்டுப் போயிருக்கிறது. அது போக ஆஸ்பத்திரி வைக்கின்ற காலத்தில் வைக்கப்பட்ட படுக்கை, தலையணை முதலியவைகளில் மூட்டைப் பூச்சிகள் ஏறி, மனிதர்கள் படுக்கவே லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. ஆனால் இதைத் தவிர வேறு ஆஸ்பத்திரி கிடையாது, இந்த வியாதிக்கு. ஓலைப் பாயை விரித்துப் படுக்கப் பிரியப்படுகிறார்கள். உள்ளே படுத்தால் மூட்டைப் பூச்சி உள்ள ரத்தத்தையும் குடித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். இது மாதிரி நிலைமை ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் சில இடங்களில் ஆட்களே இல்லை. அதற்குப் பஞ்சாயத்து யூனியன்கள் பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று கொடுப்பார்கள். அறுபதாயிரம் ஜனத்தொகையுள்ள இடத்திற்கு இது போதுமா? பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மருந்து வாங்கினால் போதுமா? நிறையத் தேவையிருக்கிறது. இதற்கு நல்ல முறையில் அரசு பரிகாரம் தேட வேண்டுமென்று விரும்புகிறோம்.

அது மாதிரி முக்கூர் ஆஸ்பத்திரி 20 வருஷங்களுக்கு முன்னால் ரூ 25 ஆயிரம் செலவில், கண்ட்ரிபியூஷன் வாங்கி கட்டப்பட்டது. அப்போதுள்ள விஞ்ஞான முறை ஒரு சுவர் மூன்றடி அகலம். தார்சு மூன்றடி கனம். அது தார் தாராக ஓடிப்போய்விட்ட நிலையில் யாரும் போகப் பயப்படுகிறார்கள். அதேமாதிரி திருப்பாலக்குடியில் கட்டிடம் கட்டியிருக்கிறது. சரியான மருத்துவர்கள் இல்லை. இன்னொன்றையும் எல்லோரும் சொன்னார்கள். கிளினிக் என்று சொல்லுகிறார்களே, அது இருக்கிறவரைக்கும் நல்லதல்ல. அது இருப்பதால், ஆஸ்பத்திரியிலிருந்து மருந்து அங்கே போவதாகச் சொல்லுகிறார்கள். என்னுடைய ஊரில் ராஜசிங்கமங்கலத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு பெண் டாக்டரும் ஒரு ஆண் டாக்டரும் இருக்கிறார்கள். அவர்கள் நல்லமுறையில் வைத்தியம் பண்ணுகிறார்கள். அதில் குறை இல்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பெட்ரோல் குறைச்சலாக இருக்கிறது, போதவில்லை, எனவே கிராமங்களுக்குப் போவதில்லை என்கிறார்கள். மக்கள் எங்கள் ஊருக்கு டாக்டர்

வருவதில்லை என்கிறார்கள். டாக்டர்களைக் கேட்டால், இத்தனை லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள், அது எத்தனை நாட்களுக்குப் போதும், நீங்கள் கார் கொண்டு வருகிறீர்களா என்று கேட்கின்றனர். அதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும்.

அமராவதி புதூரில் காசநோய் ஆஸ்பத்திரியில் பல லட்ச ரூபாய் பெறுமான சாமான்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கெட்டுப்போய் உள்ளன. அதற்குத் தகுதி உள்ள டாக்டர்கள் இல்லை. பக்கத்திலுள்ளவர்களைப் பிடித்துப் போடுகிறார்கள். இதை உடனடியாக கவனிக்க வேண்டும். பிரைமரி ஹெல்த் சென்டரில் இன்னும் குடும்பக் கட்டுப்பாடு உள்ள இடத்தில்தான் ஆஸ்பத்திரி நடந்து வருகிறது. ராஜசிங்கமங்கலத்தில் எல்லாம் வயல்களுக்குள்ளே தான் ஊர் இருக்கிறது. ஒரு சென்ட் நிலம் சென்னையைக் காட்டிலும் கூடுதலான விலை. வாங்க முடியவில்லை. இல்லாவிட்டால் அரசு 'அக்குவையர்' பண்ணிக் கொடுக்க வேண்டும். 1½ ஏக்கர் நிலம் வாங்கினார்கள். இவர்கள் ஐந்து ஏக்கர் நிலம் கேட்கிறார்கள். பிரைமரி ஹெல்த் சென்டர் கட்ட ஐந்து ஏக்கர் நிலம் வாங்குவதென்றால், பத்து லட்சம் ரூபாய் வேண்டும். அப்படியானால்தான் வாங்கலாம். தனிப்பட்டவர்கள், தாங்களே முன் வந்து கொடுக்கக்கூடிய பெரிய ஆட்கள் இல்லை. எப்படி இந்த விலை ஏறியது என்றால், ஒரு வீடு கட்டுவதற்கு மூன்று சென்ட் அல்லது நான்கு சென்ட் நிலம் வேண்டும். மலேயா, சிங்கப்பூரிலிருந்து பணம் சம்பாதித்துக்கொண்டு வருபவன் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்குகிறான். ஐந்து ஏக்கர் நிலம் வாங்க வேண்டுமென்றால் அந்த விலையைப் போட்டுக் கேட்கிறான். ஏராளமான ரூபாய் வேண்டியிருக்கிறது. அரசுதான் பார்த்துச் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. என்ன நன்கொடை வாங்கினாலும், பிரயோசனப்படவில்லை. ஆஸ்பத்திரி ஒன்று கட்ட வேண்டும்.

(பிற்பகல் 12-30)

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை)

சுகாதார நடவடிக்கைகள் இன்று எட்டளவில்தான் இருக்கின்றன. மாமண்டூர் பக்கம் போக முடியவில்லை. அந்தப் பக்கம் எத்தனையோ அதிகாரிகள் போகிறார்கள். பஸ்களில் நாம் போகும்போது, பெரிய துண்டை மூக்கில் வைத்துக்கொண்டுதான் போக வேண்டும். அது ஒரு தொழில் கேந்திரத்திலிருந்துதான் வருகிறது. இதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் முதலமைச்சரவர்களை வர வேண்டுமென்று அழைத்தது பெரிய ஆடம்பரத்தை உண்டு பண்ண வேண்டுமென்பதற்காக அல்ல. அந்த மாதிரி எண்ணமும் எனக்கு இல்லை. அங்கேயிருக்கும் நிலைமைகளை முதலமைச்சரவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் ரொம்ப நேரம் பேசினார்கள். நீங்கள் வர வேண்டுமென்று விரும்புவது வேறு ஒரு எண்ணத்தின் அடிப்படையில். அந்த இடத்திற்கு நீங்கள் இரவிலே தான் வந்து போயிருக்கிறீர்கள். பகலில் வந்ததாகத் தெரியவில்லை. பகலில் அங்கு வர வேண்டும். அங்குள்ள சீர்கேடுகளை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். சாவகாசமாகப் பேசுவதற்கு இது இடமில்லை. மணி அடித்துக் கொண்டே இருப்பார்கள். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் கூப்பிட்டேன். எனக்குப் பெருமை தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால் அல்லது குபேரன் ஆக வேண்டுமென்ற எண்ணத்தால் கூப்பிடவில்லை. முதலமைச்சரவர்கள் வர வேண்டுமென்றுதான் கூப்பிட்டேன். நீங்கள் மக்களின் நல்லெண்ணத்தில் இருக்கிறீர்கள். எனவே இந்த அரசும், முதலமைச்சரவர்களும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். நல்ல காரியங்களை எங்கே செய்ய வேண்டுமென்பதைத்தான் சிந்திக்க வேண்டும். முன்னால் பேசிய திரு. மாசிலாமணி அவர்கள், சென்னையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் அவரவர்கள் தொகுதியில் உள்ள நிலைமையைத்தான் எடுத்துச் சொல்ல முடியும். அவர்களால் அதைத்தான் செய்ய முடியும். ஆனால் அரசாங்கத்திற்குப் பொதுவான கண்ணோட்டம் இருக்க வேண்டும். அங்கே ரோட் இப்படி இருக்கிறதே, அங்கே ஆஸ்பத்திரி இப்படி இருக்கிறதே, அங்கே சர்க்கார் கட்டிடங்கள் இப்படி இருக்கிறதே என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில்தான் நான் கூப்பிட்டேன். அந்த விருப்பம் நிறைவேறுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்போது 'ஒரு மணி' அடித்ததோடு முடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். மக்களுக்கு இந்த அரசு நேரடியாகச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

இரண்டாவது 'மணி' அடித்தாகிவிட்டது. நல்ல எண்ணத்தோடு இந்த அரசு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்-

* THIRU D.V.D'MONTE : Hon. Vice Chairman, Public Health has been defined by the World Health Organisation as "the science and art of preventing diseases, prolonging life and promoting mental and physical development, and health and efficiency through organised community effort, for the sanitation of the environment for the control of communicable infection, the organisation of rural medical and nursing services, the early diagnosis and effective treatment of

diseases and the development of social machinery to ensure to every individual a standard of living and the maintenance of health and organisation so as to enable every citizen to realise his birthright of health and longevity." The priority, therefore, is given to prevention of disease and the improvement of environmental hygiene to protect people from the attack of diseases. Even considering the very wide interpretation given to Public Health, the situation, as I see it, is not hopeless, if from curative medicines, we turn to preventive aspects. If we turn to prevention of disease, from curing of disease we ought to be able to some extent to solve the problem of rural health.

The Government of India have formulated a plan for the provision of Rural Health Services by means of Community Health workers to be deployed in villages. As against this recommendation, the Tamil Nadu Government have proposed to have mobile medical teams radiating from the Primary Health Centres to every village. It is, therefore, very important to make the scheme work as effectively as possible.

Let us look at the position of Primary Health Centre. Each Centre is allotted Rs. 12,000 per year for medicine and I have noted that it has been increased to Rs. 14,000 for the year 1978-79. I am told that this medicine supply lasts barely for a month and according to the rules, the doctors are unable to make local purchases. I am told that the Primary Health Centres are supplied with slow moving medicines which cannot be put to use. The quality of the medicines cannot be described as good. The Government undertakings from whom the Centres are expected to purchase medicines are unable to supply most of the medicines ordered by them. I am told that even if they purchase the medicines, the prices are very much above the market rates. I would request the State Government to look into this lacuna and set it right and provide some remedial solution.

I feel that the strengthening of Primary Health Centres would prevent over-crowding in our Hospitals. My humble suggestion is that there should be a three tier structure of hospital service. At the first level, there should be a network of dispensaries, each having one doctor, a pharmacist and first-aid helper. At the second level, there should be poly-clinics with diagnostic and laboratory facilities, served by a full competent team of doctors. At the third level, we should have the regular hospitals. It is also necessary that the sub-

centres under the Primary Health Centres should be transferred to the control of the Primary Health Centres so that administratively and technically, they may function well.

Today many distinguished persons including our Hon. Chief Minister appeal to young doctors that soon after they get medical degrees, they should go and practise in villages and bring medical relief to the doors of the villagers. I feel that it is an unfair appeal because young doctors who have been educated in towns are out of touch with village life through their general and professional education given in towns. They have been accustomed to urban life and there are no amenities like decent housing, transport, viable roads, etc. to enable them to do their work in the villages.

I have spoken before and I would say once again that it is not doctors that we need in the villages but we need Sanitary Inspectors not in thousands but in tens of thousands, one or two for each Panchayat Union. They should be charged with the duty of seeing that the provisions of our excellent Public Health Acts, which are very good on paper, are put to proper use.

(பிற்பகல் 12-40)

According to an English authority, malaria and ordinary fever are diseases of dirt and not of poverty. The incidence of hook-worm is due to lack of sanitation, drainage, sewerage and protected water-supply. Malaria affects thousands and causes economic difficulties to hundreds of thousands. Hook-worm and Kala Azar occur due to diet deficiencies which weaken the labour forces of our cultivators. Unprotected wells and tanks, unswept village streets and insanitary conditions in which the villagers live are the causes of diseases or weakness that they suffer from. Who is to blame when there are no latrines, domestic or community, which people may use ? It is for the Government to provide people with water and sanitary facilities and then we can blame people for their habits. One may indeed ask: Which makes the pig dirty—the sty or the pig ? But, men are not pigs and they can be educated about the many insanitary habits. People should be given enough water, wells, latrines, drainage and sewerage facilities. Government could do very well to use the mass media to educate our people in hygienic and sanitary habits.

Recently doctors are not allowed to go abroad to pursue higher studies. The world of medicine has been making stupendous advances and it is only natural that our doctors will try to achieve

expertise by going abroad. To send them abroad will be in the interests of the State. I would urge the Government to relax their stand and to work out some scheme by which the doctors may be able to go abroad at least for brief periods. I appeal to the Hon. the Chief Minister to take a pragmatic and sympathetic view in this matter.

One more matter and I have done. I would refer to my own community, the Anglo-Indian community, a microscopic community, who are suffering a great deal in recent times. Over the past years, the community has distinguished itself by its well-known nurses and doctors. Anglo-Indian women are well-noted for their sense of total dedication to the nursing profession. Similarly, Anglo-Indian doctors have proved to be eminent surgeons. In fact, one of the most eminent and internationally known surgeons in cancer was an Anglo-Indian. As years rolled by, the community has come down in the economic ladder because of lack of economic facilities and patronage. The community has not been getting its due share and representation in medical services. I would appeal to the Government to exploit the special talents of this community in the medical field by extending adequate incentives. I would say that at least 4 or 5 seats may be provided in the Medical Colleges to enable our boys and girls to get admission into the medical profession.

Thank you.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்து மிகப் பெரிய பிரச்சினைகளை உள்ளடக்கி மிக நீண்ட நேரம் பேசக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது இது. இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு டி.வி. டிமாண்டி அவர்கள் மிகவும் குறுகிய காலத்தில் பேசக் கூடியவர் என்று பெயர் வாங்கியவர். அவரே கூட நீண்ட நேரம் பேச வேண்டிய பிரச்சினைகள் இதிலே இருந்தன. குறுகிய காலத்தில் பேசுமாறு எனக்கும் நிர்ப்பந்தம் இருப்பதால், எவ்வளவு தூரம் சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): மேலும் 4 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. பிறகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: எவ்வளவு நேரம் என்று சொல்லி நீங்களே மணி அடித்தால் முடித்துக்கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): பத்து நிமிடங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சித்த முறை மருத்துவத்தை வளரச் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாசிலாமணியும், திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் பேசினார்கள். அந்தத் துறையைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறி, அவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சித்த மருத்துவத் துறை தமிழ் நாட்டிற்கே உரிய துறை. மிகச் சிறந்த மருந்துகளை உள்ளடக்கியது சித்த மருத்துவம். திரு. மாசிலாமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அலோபதிக் மருத்துவ முறையில் குணப்படுத்த முடியாத வியாதிகளைக் கூட சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த இயலும். இந்தத் துறைக்கு நம்முடைய அரசு ஒரு ஆய்வுக்குழுவைப் போட்டிருந்தது. அதிலே திரு. உத்தமராயன் அவர்களும் மற்றும் டாக்டர் தியாகராஜன் அவர்களும் மற்ற சித்த மருத்துவ வல்லுநர்களையும் போட்டதற்காக நம்முடைய அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசிலே இந்தத் துறைக்காக இந்திய மருத்துவத்துறை, ஹோமியோபதி மற்றும் யோகா கழகம் என்று இருந்தது. சி.சி.ஆர்.ஐ.எம்.எச். என்பது அதனுடைய பெயர். ஆயுர்வேதம், சித்தம், யுனானி, யோகம், ஹோமியோபதி ஆகிய எல்லாவற்றுக்கும் சேர்ந்து இந்தக் கழகம் சென்ற மாதம் முதல் தேதி வரையில் இருந்தது. சென்ற மாதம் 1 ஆம் தேதியோ அல்லது இந்த மாதம் 1 ஆம் தேதியோ என்று நினைக்கிறேன், அதைத் தனியாகப் பிரித்து ஆயுர்வேதத்திற்கென்று தனியாக ஒரு குழுவும், யுனானிக்கென்று தனியாக ஒரு குழுவும், ஹோமியோபதிக்காக தனியாக ஒரு குழுவும் ஏற்படுத்தி சித்த மருத்துவத்தை ஆயுர்வேத மருத்துவத்தோடு இணைத்து "Ayurvedha including Siddha Council" என்ற ஒரு கழகத்தை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறார்கள். மத்திய அரசுச் சட்டத்திலேயே சித்த மருத்துவம் என்பது தனியான மருத்துவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி இருக்கும்போது, ஆயுர்வேதத்தோடு, அதனுடைய வால் போல, 'இன்குளூடிங் சித்தா கவுன்சில்' என்று வைக்கவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று தெரியவில்லை. சித்தாவுக்கென்று தனியாக ஒரு கவுன்சிலை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். யோகாவுக்குத் தனியாக இருப்பதைப் போலவும், ஹோமியோபதிக்கு என்று தனியாக கவுன்சில் இருப்பதைப் போலவும் சித்தாவுக்கென்றும் தனியாக ஒரு கவுன்சில் இருக்க வேண்டும். அந்தக் கவுன்சிலையும் தமிழ்நாட்டிலேயே, சென்னையில் வைப்பது நலம். ஏனென்றால் இந்திய நாட்டிலே சித்த மருத்துவம் தமிழ்

நாட்டில் ஒன்றில்தான் இருக்கிறது. மற்ற எல்லா இடங்களிலும் ஆயூர்வேதம் இருக்கிறது. இந்த அடிப்படையிலே அந்தக் கவுன்சிலின் கூட்டம் நடக்கிறபோது, இங்கிருந்து நிறையபேர் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே சித்தாவுக்கென்று தனியாக ஒரு கவுன்சிலை இங்கேயே ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, மத்திய அரசிலே இருக்கக் கூடிய சுகாதார அமைச்சகத்தில் ஆயுர்வேதத்திற்கென்றும், யுனானிக்கென்றும், யோகாவுக்கென்றும், ஹோமியோபதிக்கென்றும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரு டெபுடி அட்வைசர் வைத்திருக்கிறார்கள். ஆனால் சித்தா மருத்துவத்திற்கென்று தனியாக ஒரு டெபுடி அட்வைசர் கிடையாது. ஆகவே சித்த மருத்துவத்திற்கென்று தனியாக ஒரு டெபுடி அட்வைசர் இருக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, சென்னையிலே 'சென்ட்ரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஃபார் சித்தா' என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கு ஒரு ஆபிசர்-இன்-சார்ஜ் இருந்தார். அவர் அங்கிருந்து போய் ஒன்றரை வருடகாலம் ஆகிவிட்டது. அந்தப் பதவியில் மற்றொருவரை இன்னும் மத்திய அரசாங்கம் போடவில்லை. இதை மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சித்த மருத்துவத் துறையிலே அதிகமான புத்தகங்களை வெளியிட வேண்டும். புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சித்த மருத்துவம் முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. அன்பழகன் அவருடைய காலத்திலே மிகச் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்தது என்பதிலே பெருமை கொண்டவர்களில் நானும் ஒருவன். அதைப் போலவே இந்த ஆட்சியிலும் சித்த மருத்துவம் சிறந்த முறையில் வளர்ச்சியடைய வேண்டும். இவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதெல்லாம் முன்பிருந்த அரசாங்கம் செய்ததுதானே தவிர, இந்த அரசாங்கத்தின் காலத்திலோ, ஆளுநர் ஆட்சிக் காலத்திலோ செய்யப்பட்டதல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 44 புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது எந்தவிதமான புத்தகங்களையும் பிரசுரிக்கவில்லை. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிக் கொடுத்த வரலாறு அச்சகத்திற்குப் போக, கிட்டத்தட்ட 2 ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது. நாட்டிலே ஆளுநர் ஆட்சி இருந்தபோது, அவர்கள் சித்த வைத்தியத்தில் அக்கறை காட்டவில்லை என்பது வேறு விவகாரம். அதற்குப் பின் வந்த இந்த அரசாவது சித்த மருத்துவத்தை நல்ல முறையிலே மேம்பாடு செய்ய வேண்டும். மேம்பாடு செய்யும் என்ற என்னுடைய உறுதியான நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவான விவகாரங்களைக் குறித்து ஒரு ஐந்து நிமிடங்களுக்குப் பேசிவிட்டு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கிராமப் புறங்களில் மருத்துவர்கள் வேண்டுமென்று மாண்புமிகு திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசினார்கள். கிராமங்களில் உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களில் மூன்றாவது மருத்துவரை நியமிக்க வேண்டும். இரண்டு மருத்துவர்கள் மட்டும் போதாது. கேரள மாநிலத்திலே இன்னொன்றைச் செய்கிறார்கள். கிராம மக்கள் நோய் இல்லாமல் வாழ வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பிளாக் ஏரியாவிலும் அரசாங்கத்தின் சார்பிலே ஒரு டிஸ்பென்சரியை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கூட அங்கே செய்திருப்பதைப் போல, ஒவ்வொரு பிளாக்கிலும் அரசாங்க டிஸ்பென்சரியை வைக்க வேண்டும். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

சமுதாய நலப் பணியாளர்களைப்பற்றி திரு. டிமாண்டி அவர்கள் சொன்னார்கள். இதிலே மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் கருத்து வேறுபாடு இருப்பதைப் போலத் தோன்றுகிறது. மத்திய அரசிலே இருக்கக் கூடிய திரு. ராஜ்நாராயணன் அவர்கள், "கிராமங்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சமுதாய நலப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அவர்கள்தான் கிராமங்களில் நல்ல முறையில் பணிபுரிய முடியும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். "நகரத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் டாக்டர்கள், கிராமத்தில் இருப்பவர்களுக்கு சமுதாய நலப் பணியாளர்களா? ஆகவே படித்தவர்களும் கிராமங்களுக்குப் போவதுதான் நல்லது" என்று இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பேசுவதாக நான் அறிகிறேன். இதிலே மத்திய அரசாங்கத்தின் கருத்து நல்ல கருத்து என்று நான் நினைக்கிறேன். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம் 70 சதவீதம் மக்கள் வாழ்கிற கிராமத்திற்கு ஒதுக்கீடு செய்யும் தொகை 30 சதவீதம் மக்கள் வாழ்கிற நகரப் பகுதிகளுக்கு ஒதுக்குவதைவிடக் குறைவாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, இன்னும் அதிகமான முறையிலே செலவு செய்து மருத்துவமனைகளை ஆரம்பித்தால்தான் கிராமங்களுக்கு மருத்துவர்கள் செல்ல முடியும். அங்கே கம்பவுண்டர்கள் வேறு தேவையாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு லட்சம், ஒன்றேகால் லட்சம் ரூபாய் செலவிட்டும் மருந்துகள் போதவில்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். 14 ஆயிரம் ரூபாய் எப்படிப் போதும் என்று கேட்கிறார்கள். அதிகமான மருத்துவ மனைகளை ஆரம்பித்துவிட்டு, அங்கே டாக்டர்கள் போக வேண்டுமென்றால், அது சரியாக இருக்கும். டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல

வேண்டுமென்றால், யாருடைய ஆதரவில் அங்கே அவர்கள் பிழைப்பார்கள்? அரசாங்கம் அந்த வசதியைச் செய்து கொடுக்க முடியவில்லை. பிரைவேட் பிராக்டிஸ் கூடாது என்று சொல்லும்போது, மற்ற மாநிலங்களில் ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. நோய்க்கு சிகிச்சைக்காக வருகிறவர்களிடம் ஆளுக்கு 25 காசுகள் என்ற முறையில் வாங்கி அதைக் கொண்டு சம்பளம் கொடுக்கலாமா என்று யோசித்தார்கள். அந்த முறையைக் கூட பல இடங்களில் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. இளைஞர்கள் டாக்டர்களாக வருகிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குப் போக வேண்டுமென்றால், போக்கு வரத்து வசதி போன்றவை இல்லாமல் இருக்கிறது. இங்கே கூட நண்பர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். டாக்டருக்குப் படித்தவுடன் ஐந்தாண்டு காலம் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்க வேண்டும். கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொல்லி ஒத்துக்கொண்டால்தான், எம்.பி.பி.எஸ். அட்மிஷன் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் பேசினார்கள். அதில் ஆட்சேபணை இல்லை. மலேசியாவில் இப்படி ஒரு முறை இருக்கிறது. அங்கே ஐந்தாண்டு காலம் அரசுத் துறையில் பணியாற்றிய பிறகுதான் பிரைவேட் பிராக்டிஸ் செய்ய முடியும். இப்போதே இங்கு கிட்டத்தட்ட 1,500 பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை அரசாங்கத்தில் வேலை செய்யுங்கள் என்றால், அவர்களுக்கு யார் வேலை கொடுப்பது? ரிடையர் ஆனவர்களுக்கு ஒரு ஊதியத்தைக் கொடுத்து கிராமங்களுக்குப் போங்கள் என்று சொன்னால், அவர்களுக்கும் உதவியாக இருக்கும். டாக்டர்களைப் பொறுத்தவரையில், பார்ட் டைம் ஸ்கீம் என்ற முறையில் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் நியமித்து ரூ. 250 ஸ்டைபண்டு கொடுத்து, போக்குவரத்து வசதியும் செய்து கொடுத்தால், தங்குகிற இடம் வேறாக இருந்தாலும், கிராமங்களுக்குச் சென்றுவர வசதியாக இருக்கும். பார்ட் டைம் டாக்டர்களாக வேறு நாடுகளில் இருக்கிறார்கள். அதைப்பற்றி யோசிக்க வேண்டும். கிராமங்களுக்கு இப்போது மருத்துவ வசதி கொடுத்திருக்கிறார்கள். பாரம்பரையாக ஆயாக்கள் அங்கே இருக்கிறார்கள். பிரசவம் பார்க்கிறார்கள். வைத்திய வசதி செய்து கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்து மாதாந்தரம் ரூ. 40 அல்லது ரூ. 50 கொடுத்து அவர்களுடைய உதவியைப் பெற்றால், கிராமங்களில் உள்ளவர்களுக்குச் சிறந்த முறையில் உதவியாக இருக்கும்.

பினி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு தனியார் நிறுவனம், அரசு நிறுவனம், மத்திய அரசு நிறுவனம் இவை சேர்ந்து 1 : 1 என்ற அடிப்படையில் செய்தோம் என்று சொன்னார்கள். நல்லமுறையில் ஆரம்பித்த திட்டம். தஞ்சையில் நானே தலைவராக இருந்து இரண்டு திட்டம் ஆரம்பித்தேன். மூன்று ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆறு

மாதங்களாகின்றன. இன்னும் பணம் வரவில்லை. ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆறு லட்சம் ரூபாயில் திட்டமிட்டு இரண்டு லட்சம் ரூபாய் நாங்கள் கொடுப்பதாகச் சொல்லி மாநிலம் இரண்டு லட்சமும், மத்திய அரசு இரண்டு லட்சமும் கொடுப்பதாகச் சொல்லி ஓராண்டு ஆகிறது. இதுவரையில் அதுபற்றிய தகவலே இல்லை. இங்கே சொல்லிவிட்டு, நடைமுறையில் ஒன்றுமே வரவில்லை என்றால், சரியாக வராது. அதை நடைமுறையில் வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எலக்ட்ரோ மெடிகல் செல் பற்றிச் சொன்னார்கள். இதுபற்றி முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். லட்சக்கணக்கான ரூபாய் போட்டு, இயந்திரங்களை வாங்கி, அவை இயங்காமல் இருப்பது நியாயமல்ல. இயந்திரப் பகுதியைப் பொறுத்தவரையில், ஒருவரைத் தனியாக வைத்திருக்கிறோம். டி.எம்.இ. நேரடிப் பார்வையில் இயங்கும்படி விட்டுவிட்டால், அவ்வப்போது என்னென்ன இல்லை என்ற தகவல் வந்ததும் அவர் மூலமாக அதைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். பெரிய மருத்துவ மனைகளில் மற்றும் சிறிய மருத்துவமனைகளில் கூட பி. டபிள்யூ. டிபார்ட்மென்ட் வேலையாக இருந்தால், இ.இ. இடம் போக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. டீன், பிரின்ஸிபால் இவர்களிடம் அதை இணைத்துவிட்டால், உடனடியாக அந்த வேலைகளைக் கவனித்து வேலை நடப்பதற்கு சௌகரியமாக இருக்கும்.

தஞ்சையைப் பொறுத்தவரையில், அட்வைசரி கமிட்டி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அந்தக் கமிட்டி இப்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கடந்த ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டு காலமாக தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் ஆலோசனைக் கமிட்டி போடப் படவில்லை என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி டி.டி.சி. கூட்டத்தில் கூட எடுத்துச் சொன்னோம். தஞ்சையில் Professer of Gynaecology and Obstetrics போட்டார்கள். நகரத்தில் உள்ளவர்கள் கிராமத்திற்குப் போக மாட்டார்கள், மாதத்திற்கு இருபதினாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால் இருக்கும் இடத்தைவிட்டுப் போக மாட்டேன் என்றுதான் சொல்வார்கள். மருத்துவத் துறையிலே இரண்டு சர்வீஸ்கள் உண்டு என்று சொல்வார்கள். மெட்ராஸ் மெடிகல் சர்வீஸ், மொஃபிசில் மெடிகல் சர்வீஸ் என்பார்கள். மெட்ராஸ் மெடிகல் சர்வீசில் உள்ளவர்கள் மெட்ராசைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். மொஃபிசில் மெடிகல் சர்வீசில் உள்ளவர்கள் மொஃபிசிலுக்கு ஓடிக்கொண்டிருப்பார்கள். சென்னையில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வசதிகள் அதிகம். அமைச்சர்களிடம், அதிகாரிகளிடம் நேரடியாக வந்து காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியும்.

டிரான்ஸ்ஃபர் போட்டாலும், அங்கேயே இருந்துகொண்டிருப்பார்கள். இதைப் பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களே பேசிவிட்டார்கள். சிலர் இருபது ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அதைப்பற்றி ஒரு கேள்வி இங்கே கொடுத்து, அதற்கு மேல் நண்பர்கள் சொல்லி, நானே அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன். கேள்வியைப் பார்த்தாலே, பயங்கரமாக இருந்தது. நானே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியாக ஆகிவிட்டது.

தஞ்சை மருத்துவ மனையில் Reader in Psychiatry இல்லை. ஒரு அம்மையார் அதில் இருந்தார்கள். போஸ்ட் கிராஜுவேட் போஸ்டாக இருந்தது. அதை 'டவுன்கிரேடு' செய்தார்கள். பிறகு அந்த அம்மையார் வேறு கல்லூரிக்கு மாற்றப்பட்டார்கள். மனநோய் பிரிவுக்கு ரீடர் வேண்டுமென்று ஒன்றரை ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். அதைப்பற்றிக் கேள்வி கேட்டபோது, இங்கே அவை முன்னவர் அவர்கள் இதுபற்றித் தீவிரமாக ஆலோசிப்பதாகச் சொன்னார்கள். அதைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் டீப் எக்ஸ்ரே தெராபி கொடுத்திருக்கிறார்கள். அந்த இயந்திரம் ஒன்றரை ஆண்டு காலமாக ரிப்பேராக இருந்தது. யாரோ வந்து செய்தார்கள். இன்னும் சரியாக இயங்கவில்லை. அங்கேயிருந்து ஒருவர் சென்னைக்கு வந்துவிட்டார். கோபால்ட் யூனிட்டைப் பொறுத்தவரையில், மதுரைக்கும் பாண்டிச்சேரிக்கும் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். சென்னையில் மறுபடியும் கோபால்ட் யூனிட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது இல்லாத இடங்களுக்கு அனுப்ப வேண்டும். தஞ்சையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர்கள் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் பலர் ஓய்வு பெறப் போகிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு கோரிக்கையை என்னிடத்தில் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, மருத்துவ வசதி வேண்டும். இப்போது பெற்று வரும் மருத்துவ வசதியை, ஓய்வு பெற்ற பிறகு, பெற முடிவதில்லை. ஐந்து அல்லது பத்து வருஷம் இந்த அவையில் இருந்து ஓய்வு பெற்று வெளியே சென்றதும், மருத்துவ வசதி கிடைக்காமல் போகிறது. ஆகையால் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும்போது பெறுகின்ற மருத்துவ வசதிகளை அதே முறையில் ஓய்வு பெற்ற பின்பும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. அறிவழகன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓய்வு பெறப்போகிற உறுப்பினர்களுக்காக ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே எதிர்காலத்தில் ஓய்வு பெறுகிற எல்லா உறுப்பினர்களுக்கும் அது பயன்படும் என்ற முறையில் அதை வரவேற்கிறேன்.

இந்தத் துறை அடித்தள மக்கள் அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு துறை. அடித்தள மக்கள் அதிகமாகப் பயன்பெறாமல் சிரமப்படுகிற துறையும் இதுதான். மேல்குடி மக்கள் பணிபுரிகிற மக்கள். அப்படிப்பட்ட மேல் தட்டு மக்கள் அந்தப் பலனை முழுவதும் பெறுகிற துறையும் இதுதான். இதில் பெரிய மாற்றம் நிச்சயமாகத் தேவை. இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தின் மூலம் ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் அந்தத் துறைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் துறைக்கு வேறு யார் அமைச்சராக வந்தாலும், இந்தக் கருத்துக்களைச் சொல்வதில் மிகுந்த சிரமங்கள் வந்திருக்கும். ஒருவரை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொடுத்த கேள்வியையே திரும்பப் பெற வைத்த சூழ்நிலை அது. அந்தத் துறையில் அவ்வளவு வலிவானவர்கள் இருக்கிறார்கள். புரட்சிகரமான கருத்துக்களைச் சொல்கிறவர்களை எப்படியாவது தங்கள் பக்கம் வலித்துக்கொள்ள வேண்டுமென்ற பெரு முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள்.

இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற அல்லது சொல்லப்படுகிற நல்ல கருத்துக்கள் வரவேற்கத் தக்கவையாகும். திருமதி மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி அவர்கள் 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக அமைய வேண்டுமென்று உலக நாடுகள் மன்றம் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியே நாமும் கொண்டாட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்தியக் கணக்கின்படி ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன என்றால் அவற்றில் 131 கிராமங்களிலே பிறக்கின்ற குழந்தைகள் இறந்து விடுகிறார்கள் என்றும் நகர்ப்புறங்களிலே ஆயிரத்திற்கு 81 குழந்தைகள் இறக்கிறார்கள் என்றும் புள்ளிவிவரம் கூறுகிறது. நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதியில் வாழ்கிற மக்கள் மத்தியில் அந்த நிலைமை இருப்பதாகவும் அந்த இந்தியக் கணக்கு எடுத்துச் சொல்கிறது. அப்படி உலகக் குழந்தைகள் ஆண்டாக 1970-ஐ கொண்டாடுவதோடு 'No child year' குழந்தைகளே பிறக்காத ஆண்டு என்ற முறையிலும் கொண்டாட வேண்டும். அதைக் கொண்டாடக் காலம் இருக்கிறதா என்றால், பத்து மாதங்கள் அதற்காக விட்டுவிடலாம். அப்படி 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் பிறக்காத ஆண்டு என்று கூட நாம் கொண்டாட முடியும். ஆனால் இந்தச் செய்தி கிராம

மக்களுக்குப் போய்ச் சேர்ந்து ஜனத்தொகை வளர்ச்சியினுல் சமுதாயத்திற்குக் கேடு என்று உணர்த்துவதற்கும் இன்னும் பல காரியங்களைச் செய்வதற்கும் இந்தத் துறை விரைந்து செயல்பட வேண்டும்.

(பிற்பகல் 1-00)

நம்முடைய நாட்டில் மருத்துவத் துறை வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு, குந்தகமாக இருக்கின்ற காரணங்கள் எவை எவை என்று பார்த்தால், அதில் மிக முக்கியமானது நோய்கள் வராமல் தடுப்பதற்குரிய மருத்துவம் ஊக்குவிக்கப்படாததாகும். அதாவது நோய் வராமல் தடுப்பதற்குரிய மருத்துவம்பற்றி நமது மருத்துவத் துறையில் உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆசியா கண்டத்திலிருக்கிற மருத்துவ நிலையங்களைப்பற்றி ஆராய்ந்து சொன்ன டாக்டர் சார்லஸ் எலியெட் என்பவர் ஒரு கருத்தைச் சொன்னர். நமது மருத்துவத் துறையில் ஏதேனும் ஒரு துறை மிகவும் அலட்சியப்படுத்தப்பட்டு கவனிக்கப்படாது இருக்கிறது என்ருல், அது 'Preventive Medicine' பற்றி பயிலுகிற துறையாகும். Preventive Medicine என்கிற நோய் வராது தடுக்கும் துறையில் பணியாற்றுகிறவர்களை, மருத்துவத் துறையின் மற்ற பிரிவுகளைச் சார்ந்தவர்கள் பார்க்கிறபோது கூட மிக அலட்சியமாகப் பார்க்கிருர்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

எவ்வளவு தொகையை நாம் செலவு செய்து, நோய்களைப் போக்க பல்வேறுவிதமான காரியங்களைச் செய்தாலும், அதனுல் ஏற்படும் பலன்களை விட சமுதாயத்தில் நோய் வராமல் தடுப்பதற்குரிய பணிகளை நாம் செய்வதன் மூலம் நல்ல பலனைக் காண முடியும். 3,000 ஆண்டுகளுக்கு முன்னுலே இருந்த 'மொகஞ்சதாரோ'-வை அகழ்ந்தெடுத்துப் பார்க்கிற போது அப்போது வாழ்ந்த மக்கள்கூட நல்ல குடி-தண்ணீர் வசதியையும், நல்ல கழிவிடங்களையும், வீட்டிற்குள்ளேயே நல்ல சுகாதாரமான இடங்களையும் பெற்றிருந்தார்கள் என்று அறிகிருேம். 3,000 ஆண்டுகளுக்கு முன்னுல் வைத்துக்கொண்டிருந்த சமுதாய சூழலில் வளர்ந்து வந்த இந்தச் சமுதாயம் இன்றைக்கு 20-வது நூற்ருண்டின் 2 ஆம் பகுதியில் வாழ்கிற நமக்கு பள்ளிகளிலும், தெருக்களிலும், வீடுகளிலும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற வசதிகள் கூட இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். இப்படிப்பட்ட வசதிகள், சுகாதார வசதிகள் விரைவில் செய்யப்பட்டால்தான், மருத்துவத் துறை என்பது மக்கள் நல்வாழ்வுத் துறையாக மாறுவதற்குரிய வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சமுதாயத்தில் பொருளாதார வளமும் வாய்ப்பும் பெற்றவர்களும், மேல் தளத்தில் உள்ளவர்களும் அதிகமாகப் பணியாற்றுகிற இந்தத் துறையில் பூசல் மிகுந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி 1973-74 ஆம்

ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக இருந்த திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். ஏன் இந்தத் துறையில் மட்டும் இந்த அளவுக்கு வம்பும் வல்லடியும் டாக்டர்களிடையே பூசலும் இருக்கின்றன? நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பல மருத்துவமனைகளில் இருக்கும் சங்கடமான சூழ்நிலைகளுக்கு என்ன காரணம் என்று அவர் தம் அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிருர்கள்.

"The Committee is pained to note that in the matter of allocation of staff among different units, much discrimination creeps in and even the orders of Government are flouted and at times questioned. From what is happening, the Committee is able to understand that in certain departments, effort is made to see that the new unit proves a failure. The Committee is pained to note that team-spirit and spirit of service are conspicuously absent in many of the departments of the hospital. It strongly recommends that professional rivalries be avoided and team-spirit maintained."

இந்தத் துறையில் வருகிற பல்வேறு லாபங்கள் காரணமாகவும், மேல் தட்டில் இருப்பவர்கள் கீழ் மட்டத்தில் இருப்பவர்களை அடக்கி ஆளும் சூழ்நிலை காரணமாகவும், ஒரு துறை வளரக்கூடாது, அது வளர்ந்தால் நம் துறை வளராது என்று நினைக்கிற நினைப்பின் காரணமாகவும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்று அவர் தம் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிருர். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல் ஒரு கருத்தைச் சொல்லி வருகிருர்கள். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கே மருத்துவம் செய்ய வேண்டும், அப்போதுதான் கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். இதுபோன்ற கருத்தைத்தான் சீனத் தலைவர் மாசே-துங் அவர்களும் குறிப்பிட்டார்கள். அப்போதுதான் நாட்டில் மக்கள் நோய் வாய்ப்படுவது மிகக் குறைவாக இருக்கும் என்று மாசே-துங் குறிப்பிட்டார்கள். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், 5 ஆண்டு காலத்திற்குப் படிக்கிற மிகப் பெரிய கல்வி தேவையில்லை. அந்த அளவுக்கு 5 ஆண்டு காலக் கல்வியைப் பெற்றவர்கள், வேண்டுமானுல் ஆராய்ச்சியாளர்களாக கல்வி நிலையங்களில் இருக்கட்டும். அவர்கள் கல்வி நிலையங்களில் பணியாற்றலாம். மூன்று ஆண்டு படித்தாலே போதும் என்ருர்.

"It is enough to fix three years to graduates from higher primary schools for working in the rural areas".

இந்த வகையில் 3 ஆண்டுகளுக்குப் பயிற்சி பெற்றவர்கள், படித்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றலாம் என்று மாசேதுங் சொன்னார். அதைக்கூட மொழி பெயர்க்கத் தெரியாமல் மொழிபெயர்த்து 'Bare-foot doctors' என்று சொல்லி தமிழில் அவர்களை கால்நடை மருத்துவர்கள் என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். நாட்டுப்புற டாக்டர்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கருத்தைச் சொல்லும்போது, ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டதைப் போல், இந்தத் துறையில் சம்பந்தப்படாத லட்சக் கணக்கான டாக்டர்கள் அறிவு இயல் பெறாமல், ஆற்றல் பெறாமல், நாட்டுப்புற டாக்டர்கள் என்ற பெயரில் ஹோமியோபதி டாக்டர்கள் என்ற பெயரில், கிராமங்களில் வாழ்ந்து வருவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களைப் பிடித்து இழுத்து வந்து அவர்களுக்குத் தர வேண்டிய அடிப்படையான மருத்துவப் பயிற்சிகளைத் தந்து, அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படையான மருத்துவச் செய்திகளைத் தெரிவித்து, அவர்கள் எந்தத் துறையில் மட்டும் மருத்துவம் செய்ய வேண்டும் என்று தெரிவித்து, இந்த அளவுக்கு மேல் அவர்கள் செல்லக்கூடாது என்று கட்டுப்படுத்தினால்தான், மருத்துவம் என்பது கிராம மக்களுக்கு ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கிடைக்க வேண்டிய அளவுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது, கிராம மக்களிடம் தற்போது மருத்துவ உதவி செய்து வரும் ஆயாக்களின் பணிக்குக்கூட இந்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவர் அவ்வாறு கூறியதை நான் எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்றால், அவர்கள் மருத்துவ அறிவியல் பெற்றவர்களாக, அடிப்படைச் சுகாதாரக் கருத்துக்களைத் தெரிந்தவர்களாக, ஆக்கப்பட்டு சமுதாயத்தில் உலவ விட வேண்டும். அவ்வாறு அல்லாமல் அவர்களை முழுச் சுதந்திரம் பெற்றவர்களாக சமுதாயத்தில் மருத்துவம் செய்ய உலவ விடுவதால், தீமைகள் தான் அதிகமாக ஏற்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டில் பல்வேறு விதமான மருத்துவ நிலையங்கள்—பல் மருத்துவ நிலையம், ஈ.என்.டி. என்று சொல்லப்படுகிற நிலையங்கள்—உருவாக்கப் பட்டிருந்தாலும், பல்லைப் பொறுத்தவரை, 83 இடங்களில் மருத்துவம் நடைபெறுகிறது. இது போதாது என்று நான் சொல்லுவதற்குக் காரணம் பல் மருத்துவத்தில் படித்து வெளியே வந்திருக்கும் நூற்றுக்கணக்கான டாக்டர்கள் இந்தத் துறையில் பணியாற்ற ஆவலாக இருக்கிறார்கள். பல் மருத்துவத் துறை இன்னும் வளர வேண்டிய துறை. அவர்களுக்கெல்லாம்

வேலை கொடுக்கிற முறையிலும் இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கும் டெண்டல் கிளினிக்ஸ்—பல் மருத்துவ மனைகள் இன்னும் அதிகமான அளவுக்குத் துவக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்து, இதைச் சீரமைக்க வேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை நன்கு மாற்றி அமைப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கை எனக்கு உண்டு. அவர்களுடைய முயற்சிகள் முழுவதும் வெல்க என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

5. மேலவை விதி 82-ன்கீழ் அமைச்சரின் விளக்க உரை.

கவிஅரசு கண்ணதாசன் அவர்கள் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்ட மன்ற மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை இந்த அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1949 ஆம் ஆண்டில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் அரசின் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஆஸ்தான கவிஞர் நியமிக்கும் பழக்கம் கைவிடப்பட்டது. இந்த அரசு மீண்டும் அதனைப் புதுப்பிக்கக் கருதி உள்ளது.

கவிஅரசு கண்ணதாசன் அவர்களை ஆஸ்தான கவிஞராக நியமித்திட அரசு முடிவு செய்துள்ளது. அவருக்குச் சிறப்பு ஊதியமாக மாதம் ரூ. 1,000 வழங்கப்படும். மேலும் உந்து வண்டியும் தொலைபேசி போன்ற வசதிகளும் அளிக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்—தொடர்ச்சி.

(பிற்பகல் 1-10)

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உறு பசியும் ஓவாப் பிணியும், செறு பகையும்
சேரா தியல்வது நாடு"

என்று ஒரு நாட்டிற்குரிய இலக்கணத்தை வள்ளுவப் பெருந்தகை மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். அந்த வகையில் பசியை நீக்குவதும் பிணிகளை அகற்றுவதும் ஆகிய பொறுப்பை கடமையாகக் கொண்டிருக்கிற தமிழகத்தில், மருத்துவத் துறையையும் மக்கள் நல்வாழ்வுத் துறையையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். காரணம் இந்த இரண்டு துறையும் மக்களைப் பேணிப் பாதுகாக்கத் தொடங்கியிருக்கிறது என்பது.

அதிலும் குறிப்பாக நடமாடும் மருத்துவ மனைகள் என்ற புதிய திட்டத்தின் மூலமாக எங்கெங்கே வந்துற்ற பிணிகளை அகற்றிக் கொள்ள முடியாது போராடிக் கொண்டிருக்கிறார்களோ, அந்தப் பகுதி மக்களையெல்லாம் சந்தித்து, அவர்களையெல்லாம் தேடிச் சென்று பார்த்து, அவர்களுக்குரிய மருத்துவப் பணிகளைச் செய்வதற்கு முன்வந்திருக்கிற இந்த அரசை எல்லோரும் ஒருமனதாகப் பாராட்டித் தீர வேண்டும். மத்திய அரசின் திட்டம் ஒன்று என்றும், இங்கே மாநிலத்தில் வேறுவிதமான திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது என்றும், இதை எண்ணிப் பார்க்கிறபோது, மத்திய அரசின் திட்டமே பரவாயில்லை போல் தெரிகிறது என்கிற பாணியிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் அவ்வாறு குறிப்பிடும்போது, இந்தத் திட்டத்தில் ஏதோ **பழுது** இருப்பதாக நான் சந்தேகப்படுவதற்கு இடமிருந்தது. ஆனால் அவர் சொன்னது 70 விழுக்காடு அளவுக்கு கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களுக்கு 30 விழுக்காடு பணத்தைச் செலவழிப்பது என்பது கட்டுப்படியாகாது என்ற அடிப்படையில் சொன்னார்களே தவிர, இந்தத் திட்டம் தவறு என்ற அடிப்படையில் அவர்கள் குறிப்பிடவில்லை என்பதற்காக நான் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டங்களுக்கு அதிக நிதி

(முற்பகல் 1-10)

ஒதுக்கீடு தேவையாக இருக்கிறது. அதற்கு மத்திய அரசு மிகச் சிறந்த முறையிலே கவனிக்க வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுத்திருந்தால், **மிக** நலமாக் இருக்கும் என்று கருதுகிறேன். நான் இந்த நேரத்திலே இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வது **பொருத்தமுடையதாகும் என்று கருதுகிறேன்.**

நாட்டிலே தொழு நோய் என்பது ஒரு மிகக் கொடுமையான நோய் என்று உணர்ந்திருக்கிறார்கள். அந்தச் சொல்லேகூட கொஞ்சம் அச்சுறுத்துவது போன்ற ஒன்றாக இருக்கிறது. அப்படிப்பட்ட நோயாக இருப்பதனாலேயோ என்னவோதான் அது தொழு நோய் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தொழு நோய் நாட்டிலே ஆயிரம் பேருக்கு 10-லிருந்து 40 பேர்கள் வரை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது வெளிப்படையாகத் தெரிவதாக நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்தப் பிணிக்குத் தீர்வு காண்பதற்கு,

டேப்சோன் என்ற மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த மருந்து இப்போது தடைசெய்யப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். **அது** வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அது என்ன காரணத்தினாலேயோ தடைசெய்யப்பட்டுவிட்டது. அதைப்பற்றிப் பத்திரிகையிலேகூட எழுதியிருக்கின்றார்கள் என்று எண்ணுகிறேன். தொழு நோயை மிக விரைவிலே தீர்க்க வேண்டும் என்று திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு எந்தக் காரணத்தினால் அதைத் தடைப்படுத்தியிருக்கிறது என்பது புரியவில்லை. அந்தப் பிணியை மிக விரைவிலே அகற்றுவதற்காக இருக்கின்ற மருந்துகளை மீண்டும் தருவித்து, அந்த நோயை முழுமையாக அகற்ற முயற்சிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். அதற்கு வேண்டிய மருந்துகள் வெளிநாட்டிலேயிருந்து வருவிப்பது தவறு என்றால், அந்த மருந்துகளை உள்நாட்டிலேயே கண்டுபிடித்து அந்தத் தொழு நோயை நீக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் குறிப்பிடுகிற போது,

“When wealth is lost, nothing is lost;
When health is lost, something is lost.”

என்று சொன்னார்கள். நான் அதற்கும் மேலே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

“when character is lost, everything is lost”.

ஒழுக்கக் குறைபாடுகள்தான் அந்தவிதமான நோய்களுக்கெல்லாம் காரணமாகும். அந்த நோய்களையெல்லாம் அவை உருவாக்குகின்றன என்பதை நாம் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இந்நாட்டிலே இருக்கின்ற இளைஞர்கள் எல்லாம் இந்நாட்டின் எதிர்காலத்தையே உருவாக்குகின்றவர்கள், இந்நாட்டு மன்னர்கள் என்று சொல்வார்கள். அவர்களில் பலர் மயக்க மருந்துகளை உட்கொள்ளும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். ‘மேன்டர்ராக்ஸ்’ என்று சொல்லப்படுகின்ற மருந்துகளை, போதைப் பொருட்களை எல்லாம் உட்கொள்வதாகச் சொல்கிறார்கள். ஏராளமான பேர்கள் உட்கொள்வதாக நான் அறிகிறேன். மயக்கத்தைத் தெளிவிக்க அறிவு வளர வேண்டும் என்று நாட்டில் துடித்துக்கொண்டிருக்கும்போது, மயக்கத்தையே உருவாக்கிக்கொள்ளத் துடிக்கின்ற பல பேர்களைப் பற்றி எனக்குப் புரியவில்லை. அந்த மயக்க மருந்துகள் விற்கப்படுவதைத் **தடுக்க** வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[புலவர் புலமைப்பித்தன்] [1978 மார்ச் 28

மூன்று பிணிகளிலே காமம், வெகுளி, மயக்கம் என்று சொல்லி மயக்கத்தைக் கடைசியிலே வைத்திருக்கிறார்கள். கடைசிவரை அந்த மயக்கம் தொடர்ந்து இருக்கும் என்ற காரணத்தினாலேயோ என்னவோ அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். எலும்புருக்கி நோய் என்று சொல்வார்கள். அது ஒரு கொடுமையான நோய். அது பெரும்பாலும் பஞ்சாலைத் தொழிலாளியாக இருப்பவர்களுக்கு அதிகமாக பிடிக்கிறது. நானும் ஒரு காலத்திலே பஞ்சாலைத் தொழிலாளியாக இருந்தவன். பஞ்சாலைகளிலே வேலை செய்பவர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்ய வேண்டும். அப்படி மருத்துவ பரிசோதனை வசதி செய்து தருவது நல்லதாக இருக்கும்.

அடுத்ததாக, சித்த மருத்துவத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சித்த மருத்துவம் தமிழ் நாட்டுப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலேயோ என்னவோ அது புறக்கணிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். சித்த மருத்துவத்திலிருந்துதான் மேல்நாட்டு மருந்து முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. காது வலி வருகிறது. அது தீராத வலியாக வருகிறபோது, அந்தக் காது வலி நீங்க, வலம்புரிக்காய், இடம்புரிக்காய் என்று சொல்வார்கள், அந்தக் காய்களை எண்ணெயில் இட்டு வாட்டி எடுத்து, அந்த எண்ணெயை காதில் விட்டுக்கொண்டால், அந்தக் காது வலி விரைவிலே தீரும். கள்ளிப் பூண்டு என்று சொல்வார்கள். அவை வேலிக்குப் பக்கத்திலே இருக்கின்ற சின்னச்சின்ன பூண்டுகளாகும். அந்தப் பூண்டுகளை உபயோகித்து, காயங்களைச் சுகப்படுத்தலாம். பெரிய மருத்துவர்கள் சொல்வார்கள். இது பெருங்காயம், இந்தப் பெருங்காயத்தை மாற்றுவது என்பது முடியாது என்று சொல்வார்கள். அச்சப்படுகின்ற அளவுக்கு இருக்கின்ற காயங்களை எல்லாம் தீர்ப்பதற்கு, மிகப் பெரிய அளவிலே காயங்கள் இருந்தாலும், அந்தச் சின்னச் சின்ன கள்ளிப் பூண்டுகளை உபயோகித்து மூன்று நாட்களிலே குணமாக்கிவிடுவார்கள். அதை நானும் நேரடியாகக் கண்டவன். நான் கூட வேடிக்கைக்குப் பாடுகிறபோது இந்தப் பாட்டைப் பாடுவேன்.

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை
மங்காத சீரகத்தை தந்திரேயாயின்
தேடேன் பெருங்காயம் ஏலகத்துச் செட்டியாரே

என்று பாடுகிறபோதுகூட, நம்முடைய சித்த மருத்துவ முறைகளை நிலைமையாகவே பாடிய நாடு நம் நாடு. சித்த மருத்துவத் துறையிலே கொஞ்சம் தீவிரமான முயற்சிகளை எடுத்துச் செய்தால், நல்ல பலன்கள்

1978 மார்ச் 28] [புலமைப் பித்தன்]

விளையும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு நண்பருக்கு முகவாய் ஜன்னி என்று வந்துவிட்டது. அவருடைய அழகான முகமே மிக விகாரமாக மாறிவிட்டிருந்தது. அவர் பல்வேறு மருத்துவர்களிடத்திலே சென்று பார்த்தார். குணம் காண முடியாத நிலைமையில் சித்த மருத்துவரைப் பார்த்தார். பத்து நாட்களிலே அந்த நோய் குணமாகிவிட்டது. அவருக்கு மீண்டும் அந்தப் பழைய அழகான முகம் வந்துவிட்டது. சித்த மருத்துவத்தால் அவர் அதைப் பெற முடிந்தது. இப்படிப்பட்ட மிக வலிவான அடிப்படையிலே தோன்றிய மருந்துகளை நம் நாட்டினுடைய தலைவிதி போலும், சொன்னால் பலிக்காது என்று அப்போது சொல்லிக் கொண்டிருந்த காரணத்தினாலே, மறைத்துவிட்டுப் போய்விட்டார்கள். விண்டவர் கண்டிலர், கண்டவர் விண்டிலர் என்று சொல்வார்கள். இந்த அளவில் அந்த மருத்துவ முறை அழிந்திருக்கிறது என்ற காரணத்தினாலே, அந்த மருத்துவ முறை பற்றிய அருமையான நூல்களை வெளிக்குக் கொண்டு வந்து, அந்த முறைகளை மீண்டும் செயல்படுத்த வேண்டும். அந்தத் துறை வளம் பெறுவதற்கான நல்ல வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓய்வு பெற்ற லெஜிஸ்லேட்டர்களுக்கு அவர்கள் பதவியில் இருக்கும்போது கிடைக்கக்கூடிய மருத்துவ உதவிபோல் இலவச மருத்துவ உதவி கொடுக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்தார்கள். என்னிடத்தில் பல ஆண்டுகளாகச் சொன்னதன் காரணமாக, இதே கோரிக்கையை சென்ற ஆண்டு இங்கே நான் பேசியபோது குறிப்பிட்டுச் சொன்னேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்கிறார்கள். நான் அவருக்கு ஆதரவாகப் பேசுகிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பதில் சொன்னதைப் போன்று சொல்லாமல், இந்த ஆண்டு இதற்குச் சாதகமான பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று மருத்துவத் துறையின் அமைச்சராக பொறுப்பு ஏற்றதன் காரணமாக நீண்ட நெடுங்காலமாக ஊழலில் ஊறிப்போயிருந்த இந்தத் துறை பெரும் அளவுக்கு சுத்தப்படுத்தப் பட்டிருக்கிறது. குறிப்பாக எம்.பி.பி.எஸ். செலக்ஷனில் ஏகப்பட்ட ஊழல் இருந்தது இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய ஊழல் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. பெருவாரியான ஊழல்கள் குறைந்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். குறைந்தது என்று தான் சொல்லுகிறோம். ஊழல் ஒழிந்துவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைவர

வேண்டும். அவர்களுடைய திறமையை, முயற்சியைப் பாராட்ட வேண்டும். மேலும் மேலும் முயற்சி செய்து இந்தத் துறையில் வெற்றி பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மருத்துவ மனைகள் அரசாங்கத்தின் சார்பில் பரவலாக நடத்தப்படுகின்றன. மருத்துவ மனையிலே வியாதியஸ்தர்களுக்கு மட்டமான மருந்துகள் கொடுக்கப் படுவது தவிர்க்கப்படுவதற்கு வழி செய்யப்படுகிறது. டாக்டர்கள் சீட்டு எழுதிக்கொடுத்தால், அந்த சீட்டைக் கொண்டுபோய் கொடுத்தால், அந்த இன்ஜெக்ஷன் மருந்தை வரவழைத்துப் போட்டுக் கொள்கிறார்கள். அந்த நல்ல மருந்துகளைச் சாப்பிடுகின்றார்கள். அதனால் உடனடியாக குணம் அடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையைப்

(பிற்பகல் 1-20)

பாராட்டுகிறேன். டாக்டர் இருப்பதைச் சாப்பிடு என்று சொல்லாமல், நல்ல மருந்தை வரவழைத்து வினியோகிக்கும் முறையைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தேவையான மருந்து இல்லை என்ற குறை எப்படி வருகிறது? இதில் இரண்டு வகை இருக்கின்றது. ஒன்று அரசாங்க சார்பில் உயர்ந்த மருந்து வாங்கிக் கொடுக்கப்படுவதில்லை. அல்லது கொடுக்கப் படக் கூடிய உயர்ந்த மருந்துகள் எல்லாம் திருடு போகின்றன என்பது பரவலாக நீண்ட காலமாக இருக்கக்கூடிய குறை. திருட்டுப் போகிறது என்பது மிகப் பெரிய குற்றம். அதைப் பரிசீலனை செய்து கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைகளில் மருந்துகள் விற்கின்றன. உயர்ந்த மருந்துகளும் உண்டு. விலை குறைவான மருந்துகளும் உண்டு. உயர்ந்த மருந்துகளில் பெருவாரியான மருந்துகளை டூப்ளிகேட்டாக விற்கிறார்கள். என் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். டாக்டர் ஒரு உயர்ந்த மருந்தை வாங்கிக் கொடு என்று எழுதிக் கொடுத்தார். எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கிக் கொடுத்தவுடன் அவர் குணம் அடைந்தார். டாக்டர் அந்த மருந்தைத் தொடர்ந்து கொடுங்கள் என்றார். நாங்கள் கொடுத்துக் கொண்டே வந்தோம். அந்த நோய் திரும்பி வந்துவிட்டது. நோயாளியை டாக்டரிடம் திரும்ப அழைத்துச் சென்றேன். நான் கொடுத்த மருந்தை வாங்கிக் கொடுத்திருந்தால், வியாதி வந்திருக்காது என்று டாக்டர் சொன்னார். "டூப்ளிகேட் மருந்தாக இருந்ததால், திரும்ப வந்துவிட்டது, நீங்கள் வாங்கிய கடையில் மருந்தை வாங்காதீர்கள், இந்தக் கடை என்று குறிப்பிட்டு அந்தக் கடையில் வாங்கிக் கொடுங்கள், வியாதி தீர்ந்துவிடும்" என்று டாக்டர் சொன்னார். நாங்கள் அவர்

சொன்ன கடையில் மருந்தை வாங்கிக் கொடுத்தோம். வியாதியஸ்தர் குணப் பட்டார். இந்தத் துறையில் கடைகளில் உள்ள மருந்துகள் பரவலாகப் பரிசோதனை செய்யப்பட்டு இவைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் உறுப்பினராக நான் உத்திரப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே ஹரித்துவார் என்ற ஊரில் மத்திய சர்க்கார் ஒரு மருந்துத் தொழிற்சாலையை நடத்துகிறார்கள். சில மருந்துகளைத் தயாரித்து இந்தியா பூராவும் அவர்களே வினியோகிக்கிறார்கள். அந்த மருந்து தரத்தில் இம்மி அளவு கூட வித்தியாசம் இல்லாமல் தரம் உள்ள மருந்தாகத் தயாரிப்பது பாராட்டுக்குரியதாகும். ஆகவே விலை உயர்ந்த மருந்துகளை நம் மாநில அரசாங்கமே மருந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வினியோகித்தால், தரமுள்ள மருந்து கிடைக்கும் என்ற உத்தரவாதத்துடன் அரசாங்கத்திற்கும் கொஞ்சம் நல்ல லாபம் கிடைப்பதற்கு வகை உண்டு. அந்த வகையிலே அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா தலைநகரிலுள்ள ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி என்று சொல்லக் கூடிய மருத்துவ மனையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு படுக்கைகள் போதாமல் ஓரங்களில் படுக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். எனவே எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் படுக்கைகளைக் கூடுதலாக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு டாக்டர்களைப் போட்டால், அவர்கள் போவதில்லை. தொழு நோய் மருத்துவ இல்லங்களுக்கு டாக்டர்களைப் போட்டால், அங்கே போவதற்குத் தயங்குகிறார்கள். அப்படித் தயங்குவதில் ஒரு நியாயமும் உண்டு. நான் ஒன்றைச் சொல்லுகிறேன். வலுக்கட்டாயப் படுத்தி அவர்களை அனுப்புவதை விட அவர்களாகப் போகக்கூடிய வகையில், அப்படி கிராமங்களுக்குப் போகக்கூடியவர்களுக்கு, தொழு நோய் மருத்துவ இல்லங்களுக்குப் போகக்கூடியவர்களுக்கு ரூ. 200, ரூ. 300 கூடுதல் சம்பளம் என்று அமைத்தால், தாங்களாக விரும்பிப் போகக்கூடியவர்கள் பலர் இருக்க முடியும் என்ற என் கருத்தைச் சொல்லுகிறேன்.

இந்திய மருத்துவத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நம்முடைய மாநில அரசு முயற்சி செய்து வருகிறதை கொள்கை அளவில் நான் வரவேற்கிறேன். இந்திய மருத்துவம் என்றால் சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யூனானி என்று மூன்று வகை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்கு யூனானி வைத்தியத்தினுடைய தரம் குறைய ஆரம்பித்திருக்கிறது. சில ஆண்டு களுக்கு முன்பு சென்னை நகரில் ஒரு சிறு யூனானி கல்லூரி உருவாகியது.

B. Reports, Notifications and Other Papers.

* 113. Policy Note on Co-operation Department for the year 1978-79. (English and Tamil).

* 114. Pamphlets relating to Co-operation.

* 115. Policy Note on Food situation in Tamil Nadu (Tamil).

* 116. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme, 1978-79 (English and Tamil).

* 117. Demand No. 19—Supplemental Note on 'Sewerage and Water-Supply, 1978-79 (English and Tamil).

* 118. Policy Note on Fisheries, 1978-79 (English and Tamil).

* 119. Performance Budget on Fisheries for the year 1978-79 (English).

* 120. Performance Budget on Co-operative Department for the year 1978-79 (English and Tamil).

* 121. Policy Note on Medical, 1978-79 (Tamil).

* 122. Performance Budget on Medical Education for the year 1978-79 (English).

* 123. Performance Budget on Medical Services and Family Welfare for the year 1978-79 (English).

* 124. Policy Note on Public Health, 1978-79 (Tamil).

* 125. Performance Budget on Public Health for the year 1978-79 (English).

126. Return of Assets of Thirumathi Subbulakshmi, M.L.A., and Thiru K. M. Abdul Razack, M.L.A., as on 31st March 1977, placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August, 1969.

£ Laid on the Table of the House on 27th March 1978.

* Circulated to all M.L.Cs. on 27th March 1978.

இணைப்பு.

99ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க)
மருத்துவத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

பேரவைத் தலைவர் அவர்களே,

'மருத்துவம்' குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

I. கொள்கை விளக்கம்.

கிராமப் பகுதிகளில் முன்னிலும் சிறந்த சீரான வசதிகளைச் செய்து கொடுப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்கிற கருத்திற்கிணங்க, மாவட்ட, வட்டத் தலைமையிடத்திலும் பிறயிடங்களிலுமுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் முதலியவற்றில், இந்த நோக்கத்தினை அடைய வசதிகள் படிப்படியாகக் கூடுதலாக்கப்பட்டுள்ளன.

A. மருத்துவக் கல்வி.

II. (i) மருத்துவக் கல்லூரிகள்.

(அ) பட்டப்படிப்பு வகுப்புகள்.

இம் மாநிலத்தில், தமிழ்நாடு அரசு 8 மருத்துவக் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இவற்றில், மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், எஞ்சிய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. இந்த 8 கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மருந்தாக்கியல் பட்டப் படிப்பு வகுப்பு சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது. இதற்கு ஆண்டுதோறும் சென்னை மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 25 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பல் நோய்ச் சிகிச்சை பட்டப்படிப்பு (B.D.S. Course) சென்னை மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இதில் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் பயிற்சிக் கல்லூரியில், செவிலியர் பட்டப் பாடமுறை நடத்தப்படுகிறது. இது இரண்டரை ஆண்டு காலமாகும். அரசுப் பணியில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி பெற்ற செவிலியரும், தனிப்பட்டவர்களும் இவ்வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆண்டுதோறும் செவிலியர் பணியிலிருந்து 10 பேரும், வெளியிலிருந்து 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) பட்ட மேற்படிப்பு வகுப்புகள்,

பல்வேறு துறைகளில் போதுமான அளவுக்கு வல்லுநர்களும், ஆசிரியர்களும் இல்லை. இதனைச் சரிசெய்ய வெவ்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளும், பட்டயத்தகுதி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மேற்சொன்னவாறு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு. பட்டயத்தகுதி வகுப்புகள் பற்றிய விவரங்கள் I-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. I-A இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாட முறைகள் மருத்துவ மன்றத்தின் இசைவு கிடைக்கப்பெற்ற பின்னர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலும் 1978 ஏப்ரல் முதல் தொடங்கப்படும். II-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பட்ட மேற்படிப்பு வகுப்புகளையும், பட்டயத்தகுதி வகுப்புகளையும் 1978-79 கல்வியாண்டில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) புதிய மருத்துவக் கல்லூரிகளை இந்திய மருத்துவ மன்றம் ஏற்பளித்தல்.

இம் மாநிலத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மட்டும் 1977 ஆம் ஆண்டு வரை ஏற்பளிக்கப்படாமல் இருந்தது. 1977-ல் மருத்துவ மன்றத்தின் ஆய்வுக்கமிஷன் இம்மருத்துவக் கல்லூரியை பார்வையிட்டு இதனை ஏற்பளிப்பதற்கான தனது ஒப்புதலைக் குறிப்பிட்டது. புதுடில்லி, இந்திய மருத்துவ மன்றத்திடமிருந்து முறையான ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள்.

1977-78-ல் கீழ்க்கண்ட கட்டிட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது:—

1. சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவைச் சிகிச்சை, இதய நோய் சிகிச்சை தொகுதிகளில் உள்ள மின் இணைப்பு தொகுதியுடன் இணைப்பதற்காக ரூ. 2,29,300 செலவில் குறைவழுத்த மின் இணைப்புத் தொகுதிக்கு (L. T. Panel Boards) வகை செய்தல்.

2. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ.70,000 செலவில் நீர்த்தொட்டி கட்டுதல்.

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விலங்குப் பிரிவு கட்டிடம் ஒன்றை ரூ. 77,000 செலவில் கட்டுதல்.

4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் பின்புற சுற்றுப்புற எல்லையில் ரூ. 2,50,000 செலவில் சுற்றுப் சுவர் கட்டுதல்.

1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடப் பணிகளை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது:—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் நோய் நுண் உயிரியல் துறைக்காக புதிய சமூக நல் நோய்த்தடுப்பு மருந்துத் தொகுதிக்கு மேல் ரூ. 5.30 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மாடி கட்டுதல்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூ. 98,000 செலவில் மத்திய விலங்குப்பிரிவு கட்டிடம் கட்டுதல்.

3. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ரூ. 3.58 இலட்சம் செலவில் விரிவுரைக் கூடங்கள் இரண்டு கட்டுதல்.

(ii) மருந்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்.

(அ) படுக்கைகளின் எண்ணிக்கை.

இம்மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 19 மருத்துவ மனைகள் உள்ளன. இவை, பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியல் ஒன்று III-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அகநோயாளி சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சில மருத்துவ மனைகளில் கூடுதலாக படுக்கைகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு மருத்துவ மனைகளில் 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை IV-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகள் அனைத்திலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 1976-1977-ல் 13,294 ஆக இருந்தது, 1977-78-ல் 13,471 ஆக உயர்ந்தது என்று மேற்சொன்ன இணைப்பிலிருந்து கண்டறியலாம்.

(ஆ) மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்.

விபத்துக்குள்ளான, அவசர சிகிச்சை தேவைப்படுகிற நோயாளிகளுக்கு விரைவாக மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டு சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலும், சென்னை, அரசு பொது மருத்துவமனையிலும் 24 மணி நேரமும் செயல்படும் இயங்கும் விபத்து சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. விபத்துப் பற்றிய செய்தி கிடைத்தவுடன் மருத்துவ அதிகாரி சார்பு மருத்துவ அலுவலருடன் ஏனைய வசதிகள் கொண்ட தம்முடைய "வேனில்" விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக செல்லுவார். விபத்து நடந்த இடத்திலேயே அவசர சிகிச்சை, தேவைப்படுகிற நோயாளிகளுக்குத் தொடங்கப்பெறும். அதன் பிறகு காயமடைந்தவருக்கு மருந்துவ வசதி அளிப்பதற்கும், சிகிச்சையைத் தொடர்வதற்கும் அவர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

(இ) மருத்துவ ஆவணத் துறைகள்.

நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் முழு விவரத்துடன் கூடிய நோயாளியின் நோய் பற்றிய துல்லிய மான அடங்கல் ஆவணங்களை வைத்து வருவதே மருத்துவ ஆவணங்கள் துறையின் பணியாகும்.

கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத்துறை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது;—

(1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(2) அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

(3) குழந்தைகள் நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(4) இராயப்பேட்டை அரசு மருத்துவமனை சென்னை.

(5) மகளிர்-குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(6) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, செங்கல்பட்டு.

(7) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

1976-77 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள அரசு கண் மருத்துவமனையிலும், தஞ்சாவூரில் உள்ள தஞ்சாவூர் மருத் துவக் கல்லூரி மருத்துவமனையிலும் மருத்துவ ஆவணத் துறையை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்துறை, மேற்சொன்ன இரண்டு மருத்துவமனைகளிலும் 1977 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. மருத்துவக் கல் லூரியுடன் இணைந்த ஏனைய மருத்துவமனைகளிலும் படிப் படியாக மருத்துவ ஆவணத்துறையை அமைக்கவும் கருதப் பட்டுள்ளது.

(ஈ) புறநகர் மருத்துவ மனைகள்.

அனுமதியளிக்கப்பட்ட ஐந்து மருத்துவமனைகளில் தற்போது கே. கே. நகரில் உள்ள மருத்துவமனை புற நோயாளி சிகிச்சை வசதியுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. ரூபாய் 32,34 இலட்சம் செலவில் தண்டையார்பேட்டையில் மருத்துவமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 28.02 இலட்சம் ரூபாய் செலவில் அறிஞர் அண்ணா நகரில் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பெரம்பூரிலும், தென் சென்னையிலும் கட்டத் திட்டமிடப்பட்ட ஏனைய இரண்டு மருத்துவமனை களைப் பொறுத்தவரையில் நிலத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(உ) கே. கே. நகரில் உள்ள மறுவாழ்வு செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் நிலையங்கள்.

1974 ஆம் ஆண்டில், முட நோயாளிகளுக்கு மறுவாழ்வு செயற்கை உறுப்பு தயாரிப்பு நிலையம் ஒன்றைத் தொடங் கவும், இயற்கை முறை மருத்துவம், தொழில் ஈடுபாட்டு முறை மருத்துவம், செயற்கை முறை உறுப்பு, உடல் உறுப்புகளை இறுக இணைத்துக் கட்டுதல் (Brace fitting) சமூக-வாழ்க்கைத் தொழில் பயிற்சி மூலம் புதுவாழ்வு ஆகிய பணிகளை ரூ. 23 இலட்சம் செலவில் அளிக்கவும் அரசு அனு மதித்தது. கட்டிடம்கட்டும்பணி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்.

(ஊ) கட்டிடப் பணிகள்

(i) பின்வரும் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி 1977-78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. அவை அரசால் எடுத்துக்கொள் ளப்பட்டு, செயல்படத் தொடங்கியுள்ளன:—

(1) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் சீர் வசதிகளுடன் சீரமைத்த பிணவறைத் தொகுதி.

(2) ரூ. 8.20 இலட்சம் செலவில், சென்னை, இராயப் பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு விபத்து சிகிச்சைத் தொகுதி.

(3) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை யிலும் சென்னை, அரசுப் பொது மருத்துவமனையிலும் (ஒவ் வொன்றும் ரூ. 0.90 இலட்சம் செலவில்) தொழு நோய்ச் சிகிச்சைத் தொகுதி.

(4) செங்கல்பட்டில் உள்ள, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ. 6.00 இலட்சம் செலவில் ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(ii) பின்வரும் கட்டிடங்கள் கட்டும் பணி 1977-78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன;—

(1) இராயப்பேட்டை, அரசு மருத்துவ மனையில் ரூ. 10.02 இலட்சம் செலவில் புற்று நோய் சிகிச்சைத் தொகுதி.

(2) சென்னை, மகளிர்—குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் ரூ. 10.50 இலட்சம் செலவில் 150 படுக்கைகளுடன் கூடிய மருத்துவப் பிரிவு.

(3) சென்னை, குழந்தைகள் நல நிறுவனம் குழந்தை கள் மருத்துவமனையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் தாய்மார் கைவினைப் பணி நிலையம்.

(4) சென்னை, அரசு கண் மருத்துவமனையில் ரூ.2.33 இலட்சம் செலவில், புதிய புற நிலை நோயாளிகள் தொகுதிக்கு மேல் இரண்டாவது மாடி.

(5) காஞ்சீபுரத்திலுள்ள காரப்பேட்டையில் ரூ. 50.72 இலட்சம் செலவில் 250 படுக்கை வசதிகளுடன் கூடிய புற்று நோய் மருத்துவமனை.

(6) திருநெல்வேலியிலுள்ள, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ரூ, 6.40 இலட்சம் செலவில் ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(iii) 1977–78 ஆம் ஆண்டில், பின்வரும் கூடுதல் கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன:—

(1) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் ரூ. 15,000 செலவில் புற நோயாளிகள் தொகுதிக்குத் தனியறைகள் கட்டுதல்.

(2) சென்னை, அரசுப் பொது மருத்துவமனை நீராவி சலவைத் தொகுதியைச் சுற்றியுள்ள சுற்றுச் சுவரை ரூ. 15,350 செலவில் உயர்த்துதல்.

(3) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில், மாநகராட்சி வழங்கும் குடிநீரைச் சேமித்து வைக்க ரூ. 1.25 இலட்சம் செலவில் ஒரு கூடுதல் நீர்த்தொட்டி கட்டுதல்.

(4) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் ரூ. 3.35 இலட்சம் செலவில், அவசர அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

(5) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவிற்கு (Intensive Coronary Care Unit) அருகே ரூ. 12,000 செலவில் ஓரளவு நிலையான தங்குமிடக் கொட்டகை கட்டுதல்.

(6) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில், ரூ. 70,000 செலவில் இதய நோய் தீவிர சிகிச்சை பிரிவிற்கு (Intensive Cardiac Care Unit) கூடுதல் வசதிகள் செய்து கொடுத்தல்.

(7) சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு (ப்ளாஸ்டிக்-சர்ஜரி) ரூ. 33,600 செலவில் சீர்வளிச் சாதனங்கள் இரண்டை அமைப்பது.

(8) சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் ?3,000 ரூபாய் செலவில் பிளட் காஸ் அபரடஸ் (Blood Gas Apparatus) அறையில் சீர்வளிச் சாதனத்தைப் பொருத்துதல்.

(9) சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம் மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் 72,000 ரூபாய் செலவில் ஜெனரேட்டர் ஒன்றைப் பொருத்துவது.

(10) சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம் மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் சவக் கிடங்கிற்கு ரூ. 2.70 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுதல். குளிர் பதன வசதிகள் செய்தல்.

(11) சென்னை, ஓட்டேரி, அரசினர் டி.டி.பி. மருத்துவ மனையில் 20,000 ரூபாய் செலவில் உலை எண்ணெயைச் சேமித்து வைப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட கான்கிரீட் கற்கலவை மூடியுடன் கூடிய தொட்டியைக் கட்டுதல்.

(12) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் 25,000 ரூபாய் செலவில் புதிய மகப்பேறு கட்டிடத்திற்கும் அகநோயாளிகள் கட்டிடத்திற்குமிடையே கட்டிடத் தொடர்புத் தாழ்வாரம் கட்டுதல்.

(13) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 51,000 ரூபாய் செலவில் ஆண்-பெண் அறுவைச் சிகிச்சை வார்டுக்கு சரிவுப் பாதை கட்டுதல்.

(14) தஞ்சாவூர், அரசினர் ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் 16,500 ரூபாய் செலவில் அறையை மாற்றியமைப்பது, முதல் தளத்தில் தாமஸ் கூடத்திலுள்ள அலுவலகத்திற்கு மின் வசதி வழங்குவது.

(iv) 1978-79 ஆம் ஆண்டில் கட்டக் கருதப்பட்டுள்ள கட்டிடத் திட்டங்கள்:—

(1) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் உளவியல் மருத்துவ சிகிச்சை வார்டின் புறநோயாளிகள் பிரிவுக்கு இடவசதி அளிப்பதற்காக, தற்போதுள்ள புற நோயாளிகள் மருத்துவப் பிரிவிற்கு மேல் 92,000 ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

(2) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் மத்திய ஸ்டெரிலைசேஷன் பிரிவு அமைத்தல்.

(3) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் 36,000 ரூபாய் செலவில் உள்நாக்கு அறுவை சிகிச்சை வார்டுக்கு சீர்வளி வசதி செய்தல்.

(4) சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கியின் இரத்தம் எடுக்கும் அறைக்கு 50,000 ரூபாய் செலவில் சீர்வளி வசதி அமைத்தல்.

(5) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் கைக்காய மருத்துவ சிகிச்சைப் பணிக்கூடத்திற்காக, கைக்காய மருத்துவச் சிகிச்சை வார்டுக்கு மேல் 1.83 இலட்சம் ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

(6) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை கூடத்தை அமைப்பதற்காக, தற்போதுள்ள அறுவை சிகிச்சை புதிய கட்டிடத்தின் அடித்தளத்திற்கு மேல் கூடுதலாக மாடிகளை 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

(7) கே. கே. நகர் புறநகர் அரசினர் மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.44 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப்பதன வசதிகளுக்கு வகை செய்தல்.

(8) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.65 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப்பதன பொறியை அமைத்தல்.

(9) தஞ்சாவூர், ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் 3.00 இலட்சம் ரூபாய் செலவில், தாமஸ் கூடத்தைப் பழுது பார்த்தல், மகப்பேறு புதிய பிரிவைப் பழுது பார்த்தல், முடநீக்கியல் மருத்துவ புறநோயாளிகள் பிரிவைக் கட்டுதல்.

(10) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தற்போதுள்ள புறநோயாளிகள் கட்டிடத்திற்கு மேல் 2.00 இலட்சம் ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

(11) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூபாய் 45,000 செலவில் அறுவை சிகிச்சைக் கூடங்கள் இரண்டைக் கட்டுதல்.

(12) தோப்பூர், அரசினர் காச நோய் மருத்துவ மனையில் ரூபாய் .45,000 செலவில் கூடுதலாக சமையல் கட்டிடத்தைக் கட்டுதல்.

(13) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 1.00 இலட்சம் ரூபாய் செலவில் புறநோயாளிகள் கட்டிடத்திலும், மகப்பேறு கட்டிடத்திலும் சரிவுப்பாதை கட்டுதல்.

(14) காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 2.90 இலட்சம் ரூபாய் செலவில் உயர் அழுத்த மின் சக்தி வழங்கலுக்கு வகை செய்தல்.

(எ) (i) 1977-78-ம் ஆண்டு கீழ்க்கண்ட கருவிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது :-

1. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள ஐ. எம். சி. பிரிவுக்கு ரூபாய் 39,960 செலவில் சிங்கிள் சேனல் பெட் சைடு மானிட்டர்கள் (Single Channel Bedside Monitors) ஹார்ட் ரேட் மீட்டர் அலாரம் (H:art rate Metre Alram) ஆட்டோ ரிக்கார்டர் (Auto reccrder டிமாண்ட் பேஸ் மேக்கர் (Demand pace maker ஆகிய கருவிகள்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். ஐசோடோப் துறையிலும் (Isotope Department B. I. R. and cancer) புற்று நோய்ச் சிகிச்சைப்பிரிவிலும் பயன்படுத்துவதற்காக ரூபாய் 45,600 செலவில் துணைக் கருவிகளுடன் கூடிய காமா-ரே ஸ்பெக்டோ மீட்டர் (Gamma-Ray Spectometer.)

3. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவில் பயன்படுத்துவதற்காக 3,41,754 ரூபாய் செலவில் ரெக்டிலினியர் ஸ்கேன்னர் (Rectilinear Scanner)

4. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு பேச முடியாத நிலையிலும் படுத்த படுக்கையாகவும் உள்ள நோயாளிகளின் இருதயத்துடிப்புக்களை தெரிந்து கொள்வதற்கு ரூ. 41,150 செலவில் "சிங்கில் சேனல் டெலிமீட்ரி யூனிட்".

5. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனையின் நோய்க்குறியியல் துறையின் அறிவியல் ஆய்வுக் கூடப் பயனுக்காக ரூபாய் 8,750 செலவில் அல்ட்ரா சோனிக் கிளீனர் (Ultra sonic cleaner)

6. சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் நரம்பு சிகிச்சைத் துறைக்கு தலையில் ஏற்படும் காயங்கள் காரணமாக உறை குருதியை நீக்குவதற்காகவும், மண்டை ஓட்டை மூன்று நிமிடங்களுக்குள் திறப்பதற்காகவும் ரூபாய் 41,500 செலவில் பினுமேடிக் கிரானியோடொமி (Pneumatic Craniotomy) கருவி.

7. ரூபாய் 1,25,000 செலவில் சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனைக்கு மூச்சுத் திணறல் அவசர சிகிச்சைக்காகவும் சிறு நீர்ப்பை செயல்படாது நின்றுவிடும் நிலையிலும் உபயோகிக்க உயிர்க்காக்கும் கருவிகள்-பென்னெட் ரெஸ்பிரேட்டர் ஒன்று (One Bennet Respirator) ஹேமோடைலைசர் ஒன்று (One Haemodialyser)

8. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் புதியஅறுவை சிகிச்சை அறைக்கு ரூபாய் 1,83,687 செலவில் கூடுதலாக சில கருவிகள்.

(ii) 1978-79 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ள சாதனங்கள் :

	(ரூபாய்.)
1 சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய் (B. I. R. and Cancer) சிகிச்சைப் பிரிவிற்கு ஆட்டோமாடிக் பிலிம் பிராஸஸர் ஒன்று ..	1,73,000

2	சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் இருதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவில் மத்திய அமைப்புடன் நோயாளிக்குப் பக்கத்தில் இருதயத்துடிப்பு அளவிட்டுக் கருவி ..	1,58,000
3	ஸ்டான்லி அரசினர் மருத்துவமனையில் கோபால்ட் பிரிவு	2,000 (அடையாள நிதி ஒதுக்கம்.)
4	சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்—மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் உயிர் வேதியல் நோய்க்குறியியல் துறைக்கு கருவிகள் ..	2,17,000
5.	மதுரை, அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு 200 எம். ஏ. எக்ஸ்-கதிர் ..	1,60,000

(III) மருத்துவமனைகளில் பல்நலக் கம்மியர் மற்றும் பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவிகள்.—திருநெல்வேலி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் பல்நலக் கம்மியர் பதவி ஒன்றும், பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவி ஒன்றும் அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் உள்ள அரசு மன நோய் மருத்துவ மனையிலும், அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையிலும் ஒரு பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவியும் ஏற்படுத்தியுள்ளது.

(IV) வெள்ள நிவாரண நடவடிக்கைகள்.—1977, நவம்பர் திங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத புயல், வெள்ளம் காரணமாக பெருமளவில் சமுதாயத்தில் பலவகை சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகின. பல்வேறு வகைப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இவை தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மருந்துகள் வாங்குவதற்காக மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளுக்கு ரூ. 21 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டது.

புயல், வெள்ளத்திற்குப் பின்னர் கொள்ளை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினைக் கருத்திற் கொண்டு தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலியிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் சிவில் மருத்துவர்கள் பொறுப்பில் மருத்துவப் பணியாளர் குழுக்கள் மருத்துவ உதவி அளிப்பதற்காகவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அமைக்கப் பட்டன. தஞ்சாவூரிலிருந்து இப்பணியாளர் குழுக்கள் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, நாகூர், மன்னார்குடி, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி போன்ற பல்

வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டன. மதுரை மருத்துவக் கல்லூரியிலிருந்து அனுப்பப்பட்ட மருத்துவக் குழுக்கள், மதுரை மாநகரம், திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளைக் கவனித்துக்கொண்டன. அதுபோன்றே திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து 3 குழுக்கள் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அனுப்பப் பட்டன. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலிருந்தும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலிருந்தும் மருத்துவப் பணியாளர் குழுக்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ உதவியை நல்கின.

இந்த மருத்துவ வல்லுநர் குழுக்களைத்தவிர சென்னை மாநகரத்திலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இம்முகாம்களுக்குச் சென்று மருத்துவப் பணிபுரிவதில் உதவினர்.

மருத்துவ உதவிகள் வழங்குதல் கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைத் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்குப் பல வைட்டமின் சத்து மாத்திரைகளும், 'பி' காம்ப்ளக்ஸ் மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

(V) பயிற்சி (அ) செவிலிப்பணி.—பொது நோய்களுக்கான சிகிச்சையில் செவிலியர் பயிற்சி பெறுவதற்காக ஆறு பயிற்சி நிலையங்கள் உள்ளன. பயிற்சி பெற்ற செவிலியர்கள் அதிகம் தேவைப்படுவதை நிறைவு செய்யும் பொருட்டு, செவிலி பயிற்சி வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கையை 1977-78 முதல் அரசு 200லிருந்து 250ஆக உயர்த்தியுள்ளது. செவிலிப் பயிற்சிப் பணிக்கான சான்றிதழ் 1977 ஆம் ஆண்டில் 'செவிலிப் பணியில் பட்டயம்' என்று மாற்றி பெயரிடப்பட்டது.

(ஆ) துணைச் செவிலி மகப்பேறு துணைப்பணி.—திருச்சிராப்பள்ளி அரசினர் தலைமையிட மருத்துவமனையில் பயிற்சி உதவித்தொகை அளிக்கப்படாத இடங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 9 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேலூர், திண்டுக்கல். சேலம் ஆகிய மூன்று பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் வீதம் 15 இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(அ) மருத்துவ ஆராய்ச்சி.—இம்மாநிலத்திலுள்ள, மருத்துவ நிலையங்கள் அனைத்திலும் எல்லா நிலைகளிலும், ஆராய்ச்சிப் பணிகளுக்காக வசதிகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

ஆராய்ச்சிக்கு நிதியுதவி வழங்கும் முக்கிய அமைப்புகள் வருமாறு:—

1. மாநில அரசு.

2. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் போன்ற தேசிய அமைப்புகள்.

3. உலகச் சுகாதார நிறுவனம், யுனிசெப் நிறுவனம் போன்ற உலக நாடுகள் அமைப்புகள்.

(ஆ) தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு.—1944-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு, தமிழ்நாட்டில் மருத்துவம் சார்ந்த அறிவியலில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்கமளிக்கிறது.

ஆராய்ச்சிப் பணிக்கு மானியம் கேட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலிப்பதோடு தகுதியுடைய திட்டங்களுக்கு உதவி நல்குகிறது. தற்போது ஆண்டுதோறும் இக்குழுவிடம் மொத்த மானியமாக ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(VII) கிங் நிறுவனம், கிண்டி.—கிங் நிறுவனம், கிண்டி 1899-ல் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்படுகிறது. இது பல நாடுகளிடையே பிரசித்திப் பெற்ற விலங்கின் குருதி நிணநீர் அம்மைப்பால் ஆகியவற்றைத் தயாரித்து, பெரும் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடமாக வளர்ச்சியடைந்துள்ளது. இது கிழக்கு நாடுகளில் போதனை நிலையமாகவும் ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்குகிறது.

இந்த கிங் நிறுவனம் பொதுவாக நோயின் தன்மை கண்டறியும் ஆய்வுக் கூடமாகவும் விளங்குகிறது. இது உறைய வைத்து உலரச் செய்த அம்மைப்பால், காலரா, டைபாயிட், ஆட்டோ-க்யுரேட்டிவ் அம்மைப்பால், இசிவு நோய்த் தடுப்பு மருந்து, விலங்குகளின் குருதி நிணநீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான நிலையமாகும். இது இரத்தத் தொகுதிக்கேற்ற நிணநீர் தயாரித்தல், பிளாஸ்மாவை பதப்படுத்துதல், மாநிலத்தில் உள்ள இரத்த சேமிப்பிடங்களை நிர்வகித்தல் ஆகியவற்றிற்கான நிலையமாகும். இது நோய்க் கிருமிகளில்லாத உப்பு, ஏனைய பாரன்டெரல் (Parent ral) கரைசல் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. இது, உயிரியல் சார்ந்தக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடமாக விளங்குகிறது. இது ஆய்வுக்கூட தொழில் நுட்பவியலுக்கான பயிற்சி நிலையமாகும். இது பாக்டீரியா என்னும் கிருமிகள் பற்றிய ஆராய்ச்சி, மருந்துகள், பகுப்பாய்வு, பொதுச் சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பாடங்கள் ஆகியவற்றில் பட்ட மேற்படிப்புப் பயிற்சி ஆராய்ச்சி நிலையமாகும்,

தொத்து நோய் பற்றிய ஆய்வு, எங்கும் பரவியுள்ளதும் அசாதாரண கூறுகளுடன் கூடியதுமான நோய்களைப் பற்றி விரிவான கள ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக நடமாடும் ஆய்வுக்கூடம் ஒன்று செயல்படுகிறது. மக்கள் திரளாகக் கூடும் இடங்களான வர்த்தகப் பொருட்காட்சி, திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு குழு/பிரிவு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டு நோய் பரவுவதைத் தடுப்பதிலும், காலரா போன்ற நோய்கள் மக்களிடையே பரவாமல் தடுக்கும் வண்ணம், அவற்றை ... விலேயே கண்டறிவதிலும் இக்குழு உதவிபுரிகிறது.

(அ) உறைய வைத்து உலர வைக்கும் அம்மைப்பால் பிரிவு.—உறையவைத்து உலர வைக்கும் அம்மைப்பால் தயாரிப்பு 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து நிறுத்தப்பட்டு வெறிநாய்க் கடியின் நச்சு அகற்றுகிற மருந்தை உற்பத்தி செய்வதற்கான தொடக்கப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

(ஆ) மத்திய இரத்த சேமிப்பிடம்.—இந்த நிலையத்தின் மத்திய இரத்த சேமிப்பிடம், ஒருவருக்கு இரத்தம் ஏற்றுதல், நினைவிழந்தவர்களை மீண்டும் நினைவு பெறச் செய்து முனைப்பாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் பணி ஆகியவற்றில் மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது. உலர வைத்த பிளாஸ்மா, ஈரக்கசிவுள்ள பிளாஸ்மா, நிணநீர் ஆகியவை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும், தனியார் நிலையங்களுக்கும், இரயில்வே துறைகளுக்கும், இந்தியாவில் ஏனைய சில மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும் இன்றியமையாத இரத்த சேமிப்பு சாதனங்கள் வழங்கப்படுகின்றன,

(இ) மூன்று நோய் தடுப்பு ஊசி மற்றும் டெடனஸ் டாக்ஸைட்.— குழந்தைகளுக்கு மூன்று நோய் தடுப்பு ஊசி போடுவதற்கு இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்வதற்காக டி. பி. டி., டி. டி., மருந்துகளை உற்பத்தி செய்வது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

(ஈ) வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புப் பணிகள்.— புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்குப்பின்னர் கொள்ளை நோய் எதுவும் தோன்றிப் பரவாவண்ணம் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படக்கூடிய பெரும் தேவையை சரிகட்டும் பொருட்டு, கிண்டியிலுள்ள, ‘கிங்’ நிறுவனத்தில் காலரா தடுப்பு ஊசி மருந்து, டைபாய்டு தடுப்பு ஊசி மருந்து ஆகியவற்றின் உற்பத்தி விரைவுபடுத்தப்பட்டது. உடனடியாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு காலரா தடுப்பு ஊசி மருந்து இருபத்தோரு இலட்சம் பேருக்கு செலுத்தப்படக் கூடிய அளவிற்கு அனுப்பப்பட்டது.

மீண்டும் ஒரு வாரத்துக்குள் மேலும் 10 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய காலரா தடுப்பு ஊசி மருந்து ‘கிங்’ நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு விமானத்தின் மூலம் மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தவிரவும், ஹைதராபாத்திலிருந்து, $2\frac{1}{2}$ இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு காலரா தடுப்பு ஊசி மருந்தும், பம்பாயில் உள்ள ‘ஹாப்கின்ஸ்’ நிறுவனந்திலிருந்து 14 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு மருந்தும், கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து $6\frac{1}{2}$ இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு

மருந்தும் பெறுவதற்கு இந் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்தது. இந்த அளவு மருந்துகளை உரிய காலத்தில் வழங்கியதன் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொள்ளை நோய் எதுவும் தோன்றி பரவாமல் தவிர்க்க முடிந்தது. இந்த குறுகிய காலத்துக்குள் இந் நிறுவனத்திடமிருந்து மட்டும் ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள தடுப்பு ஊசி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இதுபோல நாட்டின் வேறு பல நிலையங்களிலிருந்து 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தடுப்பு ஊசி மருந்துகள் பெறப்பட்டன.

B. மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை.

I. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரை கீழே விவரித்துள்ளவாறு 90 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகர்கோவில்.	60
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.	30

கீழே உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் கீழ்க்கண்டவாறு படுக்கைகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கக் கருதப்பட்டுள்ளது.

மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்	105
மாவட்ட தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை	100
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.	30
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.	40

II. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டங்கள்.

1977-78-ல் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(1) சேலம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக ரூ. 1.63 இலட்சம் செலவில் புதிய கட்டிடம்.

(2) ஆம்பூர் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அளித்த நன்கொடை மூலம் வேலூர் அரசினர் பென்ட்லன்ட் மருத்துவமனையில் இதயநோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு ரூபாய் 5,000 செலவில் எட்டு படுக்கைகள் கொண்ட வார்டு.

1978-79-ம் ஆண்டுக்கான திட்டம்

காஞ்சிபுரம், தலைமையிட மருத்துவமனையில் ரூ. 50,000 செலவில் கழிவுநீர் அகற்று ஏற்பாட்டிற்கு வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

III. வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் மொத்தம் 5,653 படுக்கைகள் கொண்ட 108 வட்ட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை கீழே காட்டப்பட்டுள்ளவாறு வட்ட மருத்துவமனைகளில் 96 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1.	அரசு மருத்துவமனை,	குடியாத்தம் ..	16
2.	டி	ஏற்காடு ..	2
3.	டி	கோவில்பட்டி ..	12
4.	டி	ஓசூர் ..	12
5.	டி	கிருஷ்ணகிரி ..	12
6.	டி	ஆத்தூர் ..	12
7.	டி	ஸ்ரீவில்லிப்புத்தூர் ..	12
8.	டி	முதுகுளத்தூர் ..	6
9.	டி	கரூர் ..	12
		மொத்தம் ..	96

கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மேலும் 122 படுக்கைகளைச் சேர்க்க கருதப்பட்டுள்ளது :—

1.	அரசு மருத்துவமனை,	குளித்தலை ..	16
2.	டி	திருவள்ளூர் ..	12
3.	டி	சிதம்பரம் ..	4
4.	டி	விழுப்புரம் ..	6
5.	டி	சங்கரி ..	24

6.	அரசு மருத்துவமனை,	கூடலூர் ..	40
7.	டிை	ஒரத்தநாடு ..	8
8.	டிை	மணப்பாறை ..	12
		மொத்தம் ..	122

IV. வட்ட மருத்துவமனைகளுக்கான கட்டிட திட்டங்கள்.

1977-78 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது :—

(i) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 33,000 செலவில் நீர் சேமிப்புத் தொட்டியுடன் மேல்நிலை நீர் தொட்டி கட்டுதல்.

(ii) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 16,800 செலவில் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(iii) மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் ரூ. 26,000 செலவில் கழிப்பிடம் கட்டுதல்.

(iv) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரூ. 14,800 செலவில் கூடுதல் நச்சுத்தடை மலத் தொட்டி கட்டுதல்.

(v) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ. 18,000 செலவில் சமையல் அறை ஒன்று கட்டுதல்.

(vi) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை, கட்டுதல்.

(vii) சேலம் மாவட்டம், இராசிபுரம் மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை கட்டுதல்.

(viii) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி அரசு மருத்துவமனையில் ரூ. 60,000 செலவில் எக்ஸ்-ரே தொகுதி ஒன்று கட்டுதல்.

(ix) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவமனையில் ரூ. 95,000 செலவில் பிண அறுவைக் கொட்டகை கட்டுதல்.

1978–79-ஆம் ஆண்டுக்கான திட்டம்.

1978-79-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது.

1. மதுராந்தகம், நாங்குநேரி, சீர்காழி, விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ. 2.80 இலட்சம் செலவில் அறுவை சிகிச்சை கூடங்கள் கட்டுதல்.

2. தர்மபுரி மாவட்டம், தென்கனிக்கோட்டையில் ரூ. 3.75 இலட்சம் செலவில் புதிய அரசு மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

V. வட்டத் தலைமையிடங்களில் அல்லாத மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளும், 5 காசநோய் நலம் பேண் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,724 படுக்கைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை கீழே காட்டியுள்ளவாறு 54 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1.	அரசு மருத்துவமனை, காங்கேயம்	10
2.	அரசு மருத்துவமனை, *காட்டுமன்னார்கோயில் ..	8
3.	அரசு மருத்துவமனை, மண்டபம் கேம்ப் ..	20
4.	அரசு மருத்துவமனை, இராமேஸ்வரம் ..	16
	மொத்தம் ..	54

* தற்போதுள்ள அரசு மருந்தகம், மருத்துவமனையாக மாற்றப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழியில் 4 படுக்கைகளுடன் கூடிய அரசு மகப்பேறு மருத்துவமனை 1978 ஜனவரியில் திறக்கப்பட்டது.

பின்வரும் மருத்துவமனைகளில் 92 கூடுதல் படுக்கைகள் சேர்க்கப்படுகின்றன :—

1.	அரசு மருத்துவமனை, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.	8
	அரசு மருத்துவமனை, உடையார் பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	6
	அரச மருத்துவமனை, கம்பம், மதுரை மாவட்டம்	6
	அரசு மருத்துவமனை, கொடுமுடி, கோயம்புத்தூர் மாவட்டம்.	20
	அரசு மருத்துவமனை, ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்	8
	அரசு மருத்துவமனை, சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை மாவட்டம்	24
	அரசு மருத்துவமனை, செய்யூர், செங்கல்பட்டு மாவட்டம்.	20
	மொத்தம் ..	92

[1978 மார்ச் 28

1978-79 ஆம் ஆண்டிற்கான திட்டம்.

1978-79 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. சேலம் மாவட்டம். மல்லூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 27,000 செலவில் 8 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

2. சேலம் மாவட்டம், இடப்பாடியில் உள்ள மருந்தகத்தை ரூ. 45,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

3. மதுரை மாவட்டம், சாப்தூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 26,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

4. கன்னியாகுமரி மாவட்டம், கொளச்சல் அரசு மருத்துவமனையில், 10 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு மற்றும் அறுவைச் சிகிச்சைக் கூடமும் மருத்துவ அதிகாரி குடியிருப்பும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

5. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ. 80,000 செலவில் 15 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு கட்டுதல்.

VI. அரசு மருந்தகங்களுக்கு மேம்பாடுகள்.

1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியில் 157 அரசு மருந்தகங்களில் 236 படுக்கைகள் உள்ளன.

1977-78ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூரில் புதிதாகக் கட்டப்பட்ட மருந்தகம், தேவையான பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கியது.

1978-79-ம் ஆண்டிற்கான திட்டங்கள்.

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் அளிப்பதற்காக 1978-79ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் புதிய மருந்தகங்களைத் திறக்க அரசு கருதியுள்ளது:—

1. பெரியபட்டினம், இராமநாதபுரம் மாவட்டம்.
2. வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்.
3. உச்சிநத்தம், இராமநாதபுரம் மாவட்டம்.
4. கோணப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மேற்பனைக்காடு, புதுக்கோட்டை மாவட்டம்.
6. அனுக்கூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
7. கரடிக்குப்பம், வட ஆற்காடு மாவட்டம்.

1978 மார்ச் 28]

1978-79ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூர் அரசு மருந்தகத்தில் ரூ. 70,000 செலவில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்.

(2) பின்வரும் அரசு மருந்தகங்களில் ஆறு படுக்கைகள் கொண்ட பகுதி, மகப்பேறுக்கான பிரசவ மற்றும் அறுவை அரங்கம், ஒரு சிறிய சமையற்கூடம் ரூ. 6.00 இலட்சம் மொத்தச் செலவில் புதியகட்டிடங்கள் கட்டுதல்.

1. அரசு மருந்தகம், பள்ளிகொண்டா, வடஆற்காடு மாவட்டம்.

2. அரசு மருந்தகம், பொங்கலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. அரசு மருந்தகம், ஆர். வெள்ளவேடு, மதுரை மாவட்டம்.

4. அரசு மருந்தகம், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

5. அரசு மருந்தகம், தோகைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6. அரசு மருந்தகம், இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

VII. எக்ஸ் கதிர் மற்றும் மருத்துவக் கருவிகள்.

கீழ்க்காணும் அரசினர் மருத்துவ நிலையங்கள் பலவற்றிற்கு கருவிகளை வாங்க 1977-78ஆம் ஆண்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

1. தருமபுரி, அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30-எம்.ஏ. இயல் எக்ஸ் கதிர் சாதனம்.

2. ஹரூர், அரசினர் மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30 எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம் மேலும் ரேடியோகிராபர் பதவி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. உடுமலைப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு 100 எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

4. கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, சேலம் ஊர்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் பத்தாயிரம் செலவில் ஒரு பல் மருத்துவப் பெரும் பிரிவு வீதம் நான்கு பல் மருத்துவப் பிரிவுகள்.

5. கீழ்க்காணும் அரசினர் மருத்துவமனை ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 செலவில் ஒரு சிறிய பல் மருத்துவப் பிரிவு:—

(1) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர், வடஆற்காடு மாவட்டம்.

(2) அரசினர் மருத்துவமனை, திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

(3) அரசினர் மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

(4) அரசினர் மருத்துவமனை, பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

(5) அரசினர் மருத்துவமனை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(6) அரசினர் மருத்துவமனை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

(7) அரசினர் மருத்துவமனை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

(8) அரசினர் மருத்துவமனை, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

(9) அரசினர் மருத்துவமனை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.

(10) அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வடஆற்காடு மாவட்டம்.

(11) அரசினர் மருத்துவமனை, கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(12) அரசினர் மருத்துவமனை, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

1978-79-ம் ஆண்டிற்கான திட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு, 1,05,000 ரூபாய் செலவில் 100 எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவு சாதனம் வாங்குதலும், ரேடியோகிராபர் பதவியை ஏற்படுத்துதலும்.

VIII. தனித்துறைகளை ஏற்படுத்துவது

(1) இரத்தச்சேமிப்பு வங்கி—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ நிலையங்களில் தற்போது 37 இரத்த சேமிப்பு வங்கிகள் இயங்கி வருகின்றன. கீழ்காணும் மருத்துவமனைகளில் 1977-78-ம் ஆண்டில் 3 இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்க்காணும் இரண்டு மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டில் 2 இரத்தசேமிப்பு வங்கிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(2) பல் மருத்துவப் பிரிவு—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத கீழ்காணும் மூன்று மருத்துவ மனைகளில் பல் மருத்துவப் பிரிவுகளை, 1977-78ம் ஆண்டில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, வாலாஜாபேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்காணும் மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டு ஐந்து பல் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

4. அரசினர் மருத்துவமனை, ஓசூர், தர்மபுரி மாவட்டம்.

5. அரசினர் மருத்துவமனை, பரமகுடி, இராமநாதபுரம் மாவட்டம்.

பல் மருத்துவத்தில் பயிற்சி பெற்ற பணியாளர்களைப் பெறுவதற்கும், பல்வேறு மருத்துவப்பிரிவுகளை நிர்வகிப்பதற்கும், கீழ்க்காணும் மருத்துவ மனைகளில் பல் நலக் கம்மி யர், பல் நல கோட்பாடு மருத்துவர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

தொடர் எண்ணும், மருத்துவமனையின் பெயரும்.	பல் நல கோட்பாடு மருத்துவர்.	பல் நலக் கம்மியர்.
(1)	(2)	(3)
1 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, வேலூர், வட ஆற்காடு மாவட்டம்	1	..
2 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திருச்சிராப்பள்ளி ..	1	..
3 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, சேலம், சேலம் மாவட்டம்	1	..
4 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, கடலூர், தென்னார்காடு மாவட்டம்	1	..
5 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்	1	..
6 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, திண்டுக்கல், மதுரை மாவட்டம்	..	1
7 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தூத்துக்குடி, திருநெல் வேலி மாவட்டம்	..	1
8 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்	..	1
9 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தருமபுரி..	..	1
10 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, ஊட்டி, நீலகிரி மாவட்டம்	...	1

(3) முடநீக்கியல் மருத்துவப் பிரிவு—

தற்போது ஒன்பது மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் முடநீக்கியல் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978-79-ம் ஆண்டில் உதகமண்டலம், தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள்—

பதினொரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978-79-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள்:—

தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் பால் வினைநோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற் போது எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் பால் வினை நோய் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதல்லாமல் நான்கு வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கிவருகின்றன்.

(6) கண் மருத்துவம்—

பதினொரு மாவட்டத் தலைமையிட மருத்துவ் மனைகளிலும் 2 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் கண் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1978-79-ம் ஆண்டில் புதுக் கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கண் மருத்துவப் பிரிவு ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(7) மனநோய் மருத்துவம்—

பதினன்கு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் 5 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மட்டுமே மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

கீழ்க்காணும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டில் மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரி வுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.

2. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

3. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.

4. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.

5. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.

6. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.

(8) சிசுநோய் மருத்துவம்

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் தற்போது சிசுநோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

IX. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் சாதனைகள் பின் வருமாறு :—

1. கூடலூர் பஜாரில் மருந்தகம் ஒன்று.

2. மசினகுடியில் ஒரு மருந்தகம்.

3. களஹட்டியில் ஒரு மருந்தகம்.

4. மஞ்சூரில் ஒரு மருந்தகம்.

5. தொலைவில் உள்ள இடங்களில் மருத்துவ உதவிகளை அளிக்க உதகமண்டலத்தில் மற்றொரு இயங்கும் மருத்துவப்பிரிவு.

6. கூடலூரில் ஆம்புலன்ஸ் ஊர்தி வசதி.

உதகமண்டலம் அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 40 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கூடலூரில் 40 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

X. பழங்குடி மக்கள் நலத் திட்டம்—பழங்குடி மக்கள் நலத் திட்டத்தின்கீழ் கருமான்துறை (சேலம் மாவட்டம்), செங்காட்டுப்பட்டி (பச்சைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்), ஜவ்வாது மலை (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்கள் ஒவ்வொன்றில் ஒன்றாக மூன்று மருந்தகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவை, அப்பகுதிகளிலுள்ள பழங்குடியினரின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்கின்றன.

1977-78-ல் இன்னும் மூன்று மருந்தகங்களை சித்தேரி (தருமபுரி மாவட்டம்), புதூர்நாடு (வட ஆற்காடு மாவட்டம்), பச்சைமலை (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. புதுக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரையில் இந்த மருந்தகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படும்.

XI. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.— 1968-69-லிருந்து 1976-77 வரையில் 112 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன. 1977-78-ம் ஆண்டில் v, vi நிதி நிலைத் தரத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது.

XII. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ நிவாரணப் பணி.—புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர மாவட்டங்களிலும், வெள்ளம் ஏற்பட்ட பல மாவட்டங்களிலும், கிராம மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, மருத்துவமனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் போதுமான அளவு இன்றியமையாத மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ மனைகள் அனைத்திலுமுள்ள மருத்துவர்களும், துணை மருத்துவப் பணியாளர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துன்புற்ற மக்களுக்குச் சிகிச்சை அளிக்க விரைந்து அனுப்பப்பட்டனர்.

XIII தொற்று நோய்கள்—(அ) தமிழ்நாட்டில் தொழுநோய்க்கட்டுப்பாடு.—தமிழ்நாட்டில் தொழுநோய் மிக அதிகமான அளவில் பரவியுள்ளது. ஆயிரத்தில் 10 முதல் 40 பேரிடம் இந்நோய் காணப்படுகிறது. தொழுநோய்க்கு ஆளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதே தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவப் பணியாளர்கள் இடம் இடமாக ஊர்திகளில் சென்று, கூடுமான அளவுக்கு நோயாளிகளின் வீடுகளுக்கருகிலேயே சிகிச்சை அளிக்கின்றனர். இதனால், நோயாளிகள் தங்களது ஊதியத்தை இழக்காமலேயே முறையாகச் சிகிச்சையைத் தொடர்ந்து பெற முடிகிறது. வேலை தேடியும், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும் கிராமப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறப் பகுதிகளுக்கு தொழுநோயாளிகள் செல்கின்றனர். இதனால், முக்கியமான நகர்ப்புற பகுதிகள் அனைத்திலும் நகர்ப்புற தொழுநோய்ச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை அளிக்கப்படுகையில் நோய்க்காக இடையில் ஏற்படும் தொற்று நோய்கள், எதிர் விளைவு அல்லது வெப்பத்தால் ஏற்படும் புண் போன்ற சிக்கல் விளையக்கூடிய நோயாளிக்கு மருத்துவ உதவி அளிப்பதற்கான வசதியைச் செய்ய, 20 நோயாளிகளுக்கு தற்காலிக சிகிச்சை அளிக்கக்கூடிய வார்டுகளைக் கட்டுவதன் மூலம் எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 வார்டுகளுக்கு இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 10 வார்டுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 3 வார்டுககள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. எஞ்சிய வார்டுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

தொழு நோய்க்கு ஆளானதாக மதிப்பிடப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 7.45 லட்சம்; அவர்களில் நாளதுவரை 5.72 லட்சம் பேருக்குத் தொழு நோய் பற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 4,55,065 பேர்கள் மருத்துவச் சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில், பள்ளி செல்லும் மாணவர்களிடையே தொழு நோய் பற்றியுள்ளவர்களைக் கண்டறிய சுகாதார ஆய்வாளர்களின் உதவியோடு பள்ளி மாணவர்கள் மருத்துவ பரிசோதனைத் திட்டத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தச் சுகாதார ஆய்வாளர்களுக்குரிய பயிற்சித் திட்டங்கள் முடிவடைந்துள்ளன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு பிரிவும் செய்து முடித்த பணிகளின் அளவையும் தரத்தையும் மதிப்பிடுவதற்காக கண்காணிப்பு மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றைத் துறைக்குள்ளேயே அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் குறிப்பிடப்பட்டது போல தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்கான ஆர்வத்தை மருத்துவர்களிடம் தூண்டுவதற்காக மருத்துவர்கள் 25 பேர் களப்பணிப் பயிற்சிக்காக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இப்பயிற்சி தொடங்கி நடந்து வருகிறது.

(ஆ) காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்—நோயை கண்டறிதலும் சிகிச்சையளித்தலும்.—மருத்துவ மனைகளில் புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவிற்கு வரும் நோயாளிகள் தங்களுக்கு இந்நோய் கண்டுள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன எனத் தெரிவிப்பதன் பேரில் இந் நோய் குறித்த விவரங்கள் கண்டறியப்படுகின்றன. மருத்துவ மனையில் சேர்க்கப்படுகின்ற நோயாளிகளுக்கு மூன்று வார காலத்துக்கு மேல் இருமல் தொடர்ந்து இருந்திருந்து எடைக் குறைவோடு விட்டு விட்டுக் காய்ச்சலும் வந்திருந்தால் அவர்களின் சளி சோதனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. சளி சோதனையில் நோய்குறி இல்லை என அறியப்படும் நோயாளிகள் எக்ஸ்-கதிர் படமெடுக்க அனுப்பி வைக்கப்படுகின்றனர். சளியிலும் எக்ஸ்-கதிர்ப் படத்திலும் நோய்க் குறிகள் இருப்பதாகத் தெரிய வந்த நோயாளிகளுக்கு அவர்கள் இல்லங்களின் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நோய்க் கண்டவர்களுடன் தொடர்பு கொள்வோருக்கும் இந்நோய் தொற்றலாம் ஏன்று கருதி அவர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்படுகிறது.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காச்நோய் மருத்துவ நிலையம் உள்ளது. மாவட்டக் காச நோய் நலம்பேணும் அதிகாரி இதன் தலைவராவார். மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள், அரசு மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளை இவர் ஒருங்

கிணைப்பதோடு, காசநோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் பணியையும் கவனிக்கிறார். தமிழ்நாட்டில் 937 மருத்துவ நிறுவனங்கள் மூலமாகக் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையிலும், தமிழ்நாட்டில் 7.7 லட்சம் நோயாளிகள் காச நோய்ச் சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உமிழும்போது சளியுடன் இரத்தமும் வருவதுபோன்ற Haemoptysis சிக்கலான நிலைமையில் உள்ள நோய் முற்றிய நோயாளிகளும், முதல் நிலை மருந்துகள் கொடுத்தும் நோய்க்கட்டுப்படாத நோயாளிகளும், காசநோய் நலம் பேணும் நிலையங்களிலும் காசநோய் மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். இவ்வாறு, நோயாளிகள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்ற மருத்துவ நிலையங்களில் மொத்தம் 3,534 படுக்கைகள் உள்ளன. 1977-78-ம் ஆண்டில், ஈரோட்டிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும், உசிலம்பட்டியில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் 15 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும் நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கியது. மாவட்ட காச நோய் மருத்துவ நிலையங்கள் மட்டுமின்றி மார்புநோய் மருத்துவப் பிரிவுகள் (Chest clinics T· B·) எனப்படுகின்ற காச நோயைக் கண்டறியும் சிறப்பு நிலையங்கள் பூவிருந்தவல்லி, விழுப்புரம், அருப்புக்கோட்டை, திருவண்ணாமலை, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஜி. ஊசி தொடக்க நிலையில் காச நோய் வராமல் தடுத்துக் காக்கின்றது. இருபது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்படுகிறது. பி.சி.ஜி. ஊசி போடும் 23 குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. இந்தக் குழுக்கள் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று தடுப்பு ஊசிகளைப் போடுகின்றன. இதுவரை 1;19 இலட்சம் பேருக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது.

காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்காக ஊக்கத்துடன் ஈடுபாடு கொள்ள பயிற்சி மருத்துவர்கள் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

1978–79–ம் ஆண்டில், கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோரிடையே காச நோய் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு ஆய்வுகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

XIV தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி—நலிப்பட்ட மன்றங்கள், கூட்டமைப்புகள், சங்கங்கள், சமயப்பணி (மிஷினரி) மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவ நிறுவனங்களில் தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகின்றது. இம் மாநிலத்தில் வழங்கப்படுகின்ற பலவகைப்பட்ட மானியங்கள் பின்வருமாறு :—

(i) தனியார் தொழுநோய் மருததுவ நிறுவனங்களுக்கு தலைவீத மானியங்கள் (Capitation grants). அளித்தல்—தொழுநோயாளி ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும் தொழு நோயாளியைச் சார்ந்துள்ள உடல் நலமுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரு. 12 வீதமும் தனியார் தொழுநோய் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மயுடைய தொழுநோயுற்ற நோயாளிகளுக்கும், தொழுநோய் குணமாகி உறுப்புகள் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவை சிகிச்சை பெற்றுவரும் தொழு நோயாளிகளுக்கும், சூட்டினுல் ஏற்படக் கூடிய புண்ணுக்கு சிகிச்சை பெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள தொழுநோய்த் தோற்றமுடைய ஆனுல் தொழு நோய்ச் சார்பில்லாத நோயாளிகளுக்கும் (Non-Lepromatous patients) சிகிச்சையளிக்கும் தனித் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படத்தக்கதாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து தலைவீத மானியங்கள் பெறும் தொழு நோய் மருத்துவத் தொண்டு நிறுவனங்களின் தற்போதைய எண்ணிக்கை பதினென்று ஆகும். சராசரியாக ஆண்டொன்றுக்கு ரு. 5 இலட்சம் தலைவீத மானியமாக இவற்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 1976-77-ம் ஆண்டில் ரூ. 4.78 இலட்சம் வழங்கப்பட்டது.

(ii) தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பேணுதல் மானியங்கள்:—மருத்துவப் பணிகள்-குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிவுரையின் பேரில் அரசு இம்மானியங்களுக்கு அனுமதி வழங்குகிறது. தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை அளிப்பதன் பேரிலும், இம்மானியங்கள் வழங்கப்படுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகள் நிறைவு செய்துள்ளதாக ஆய்வு அதிகாரிகள் அறிவித்த பின்னருமே இந்த மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து பேணுதல் மானியங்களை 38 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1976-77-ம் ஆண்டில் மானிய உதவியாக ரூ. 21.88 இலட்சம் வழங்கப்பட்டது.

(iii) கட்டிட மானியங்கள்.—மருத்துவப் பணிகளுக்கென கட்டிடங்கள் கட்டுவதற்காக, ஒவ்வொரு கட்டிடப் பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டுச் செலவில் பாதியளவுக்கு தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன;

ஒவ்வொரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில் வழங்கப்படுகின்ற இம்மானியத் தொகை, அரசு வரையறுத்த குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இருக்கும்.

1976–77-ம் ஆண்டில் கீழ்க்காணும் நிறுவனங்களுக்குக் கட்டிட மானியங்கள் வழங்கப் பெற்றன :—

		ரூ. பை.
1	மகளிர் குழந்தைகளுக்கான ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை கோயம்புததூர்	4,90,355.00
2	'வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ்' நிறுவனம். அடையாறு, சென்னை ..	42,905.75
3	குழந்தைகள் முட நீக்கியல் நிலையம். கோயம்புத்தூர்	1,22,500.00

(iv) கருவிகளுக்கான மானியம்.—1976-77-ம் ஆண்டில், கருவிகளுக்கான மானியம் பெறுவதற்கு தனியார் மருததுவ நிறுவனம் எதுவும் முன் வரவில்லை.

XV அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டம்.—பார்வையிழந்து தவிக்கும் ஏழை மக்களுக்குக் கண் பார்வை அளிக்கும் பொருட்டு, அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைக்கும் திட்டம் 1972-ஜூன் மாததத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் பொருட்டு ஐந்து கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அதாவது சென்னையில் 2 பிரிவுகளும், மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 பிரிவுகளுமாக மொத்தம் 5 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மருத்துவப் பணிகள் குடும்ப நலத்துறை இயக்குநர் இந்த இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கின்றார். சென்னையிலுள்ள மருத்துவக் கல்வி இயக்குநர், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைச் செய்கிறார். ஒவ்வொரு கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுக்கும் ஒரு அரசு மருத்துவர் பொறுப்பு வகிக்கிறார். அவருககு உதவி புரிய மூன்று உதவி மருத்துவர்களும் (கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள்), பன்னிரண்டு செவிலியர்களும் பிற மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர்.

2. வருவாய்-வளர்ச்சி வட்டாரப் பணியாளர்களின் உதவியுடன் பிரிவு மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில், மாவட்ட ஆட்சியர் இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துகின்றனர். தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மருத்துவத்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

3. இக்கண் சிகிச்சை முகாம்களில், விழிவெண்படல அறுவைச் சிகிச்சைகளும் கண்களில் வரும் சிறிய நோய்களுக்கான சிறு அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இவையன்றி, கண்விழி விறைப்பு நோய், கண்ணிமை அரிப்பு நோய், மாலைக்கண் நோய் ஆகியவற்றுக்கும் இம்முகாம்களில் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

4. இந்த முகாம்களில் விழி வெண்படல அறுவை சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளிக்கும் உணவு முதலியவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் ரூ. 44-ம் மருந்துகள் முதலியவற்றை வழங்குவதற்காக மருத்துவத் துறை பொறுப்பில் ரூ. 21 ஆக ரூ. 65 செலவு செய்ய அரசு அனுமதி வழங்குகிறது. அரசு இலவசக் கண் சிகிச்சை முகாமில் நடத்தப்படும் ஒவ்வொரு விழிவெண்படல அறுவைச் சிகிச்சைக்கும், 5 புறநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இக்கண் சிகிச்சை முகாமில் ஒரு புறநோயாளிக்கு சிகிச்சை அளிக்க ஆகும் செலவிற்காக ஐம்பது பைசாவுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. கண் சிகிச்சை முகாம் நிதி 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் சிறப்பாக துவக்கப்பட்டு, இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிதி, 1976-ம் ஆண்டு சிறப்பு நலத் திட்டங்களுக்கான முதலமைச்சர் நிதியுடன் இணைக்கப்பட்டது.

6. அரசு இலவசக் கண்சிகிச்சை முகாம் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக தற்போதுள்ள திட்டத்தில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(1) கண்சிகிச்சை முகாமிற்கு சிகிச்சைக்காக வரும் நபர்களின் எண்ணிக்கைக்கேற்ப கண் சிகிச்சை முகாமினை ஏழு முதல் பத்து நாட்கள் வரை நடத்துவது;

(2) தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஆண்டு முழுவதும் கண் சிகிச்சை முகாமினை நடத்துவது;

(3) ஒரு கண்சிகிச்சை முகாமில் செய்யப்படும் விழிவெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 300-க்கு மேற்படாமலும், ஒரு நாளைக்கு செய்யப்படும் விழி வெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 150-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஒரு மருத்துவரால் செய்யப்படும் விழி வெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 30-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(4) விழி வெண்படல அறுவை சிகிச்சை செய்துகொண்ட அனைவருக்கும் தையல் போட வேண்டும்.

(5) விழி வெண்படல அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் மதிப்புடைய நோய்த்தடுப்பு களிம்பு மருந்தைக் கொடுத்து அதை எப்படி பயன்படுத்துவது என்ற முறையையும் அவர்களுக்குச் சொல்லி கொடுக்க வேண்டும்

(6) அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், வரையறுக்கப்பட்ட தேவையான மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்வதற்காக ஆறு வாரங்களுக்குப் பிறகு கண் அறுவை சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்படுவர்.

(7) தரமான மூக்குக் கண்ணாடிகளை புகழ் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த முறையில் வாங்கும் பணியை சென்னை கண் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் மேற்கொள்வார். விழி வெண்படல அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுக்குக் கண்ணாடி வழங்குவதற்காக அவைகளை இவர் பிரிவு மருத்துவ அதிகாரிக்கு அனுப்புவார்.

1972-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை அடைந்துள்ள சாதனையின் விவரம் வருமாறு:—

முகாம்களின் எண்ணிக்கை.	விழிவெண்படல அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை.	மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	இறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்கள்.	புற நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
					ரூபாய்
451	1,52,960	1,52,960	1,279	10,14,789	1,45,39,048

அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டத்தை 1978-79-ம் ஆண்டிலும் செயல்படுத்த ரூபாய் இருபது இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

XVI. ஹோமியோபதி:

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் இம்மாநிலத்தில் 1972-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்று சென்னை மாநகரத்தில் 1975-ம் வருடம் செப்டம்பர் திங்கள் 15-ம் நாளிலிருந்து செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில், ஹோமியோபதி மருத்துவ முறை

யிலான முதல் அரசினர் கல்லூரி மருத்துவமனை இதுவேயாகும். தற்போது இங்கு பல்வேறு வகுப்புகளில் 123 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

1977–78-ம் ஆண்டில், அரசு திண்டுக்கல்லில் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையுடன் இணைந்த ஹோமியோபதி மருந்தகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது: அது 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது.

1978–79-ம் ஆண்டிற்கான திட்டம்:

1978–79 ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஹோமியோபதி மருந்தகத்தைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

XVII. குடும்ப நலத் திட்டம்:

குடும்ப நலத் திட்டம் முன்பு எப்போதும் இருந்ததை விட இன்று தனி முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்நாட்டில் மக்கள் தொகை அளவு கடந்து பெருகி வருவதைக் கட்டுப்படுத்த மத்திய அரசும், மாநில அரசும் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றன. பொருளாதாரச் சுதந்திரமும், சமூக மறுமலர்ச்சியும் அடையும் வகையில் முன்னேற்றம் காண விழையும் நமது முயற்சிகளுக்கு இன்றியமையாச் சாதனமாக விளங்கக் கூடியது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதேயாகும் என்று நமது குடியரசுத் தலைவரும், தலைமை அமைச்சரும், மத்திய அரசு மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சரும் தத்தம் அறிக்கைகளில் பெரிதும் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய அரசு தேசிய மக்கள் தொகைக் கொள்கையை உருவாக்கியுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாளில் நடைபெற்ற அனைத்து மாநிலங்கள், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளின் மக்கள் நல்வாழ்வு அமைச்சர்கள் மாநாட்டில், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு குடும்ப நல அமைச்சர் கொள்கை அறிக்கையை வெளியிட்டார். அண்மையில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வு குடும்ப நலக் கூட்டுக் குழுக்கள் மாநாட்டிலும் கூட இக்கொள்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் தற்போதைய பிறப்பு விகிதம் 1,000-க்கு 30 ஆகவுள்ளது; இதனை, ஆறுவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 1,000-க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே இக்கொள்கை அறிக்கையின் உத்தேசமாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக திருமண வயதை உயர்த்துதல், பெண் கல்வி மேம்பாட்டின் மூலம் மக்கள் தொகையில் படித்த பெண்களின் விகிதத்தை உயர்த்துதல் போன்ற சில அடிப்படை நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இக்கொள்கை அறிவிப்பில் இன்றியமையாப் பகுதியாக விளங்குவது. மக்களிடையே, தொழி

லாளர் தலைவர்கள், தொழிலதிபர்கள், தனித் தொண்டு நிறுவனங்கள் போன்ற பல்வேறு பிரிவினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் குடும்ப நலத் திட்டத்தை முழுமுரப்படுத்துவதாகும்.

தமிழ்நாட்டில். முந்திய ஆண்டுகளில், குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று மக்களைக் கட்டாயப் படுத்தாமலும், நிர்பந்தப்படுத்தாமலும் நடந்தது போல இந்த ஆண்டிலும் எவ்வித நிர்பந்தமோ, கட்டாயமோ இன்றி குடும்ப நலத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்களாக உள்ள பெண்களுக்கு முதல் மூன்று குழந்தைகட்கு மட்டுமே சம்பளத்துடன் பேறுகால விடுப்பு வழங்கப்படும் எனக் கட்டுப்படுத்தியது போல, முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊக்க மறுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு ரத்து செய்துள்ளது.

குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அவரவர் விருப்பத்தின்படி நடக்க உரிமையளிக்கின்ற அணுகுமுறை (Cafeteria approach) பின்பற்றப்படுகிறது. தம்பதிகள் இத்திட்டத்தைப் பின்பற்றத் தாம் விரும்பும் முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள லாம். மக்கள் தாமாகவே திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வ தற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிராமப் பகுதி களில் நாடகம், கதாகாலட்சேபம், இசையரங்குகள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டுப்புற மக்களைக் கவருகின்ற நிகழ்ச்சிகள் வாயிலாக குடும்ப நலத்திட்டம் பற்றி மக்கட்கு எடுத்துரைக்கப் படுகிறது; பிரச்சாரம் செய்யப்படுகிறது. சிறுபான்மையாயுள்ள பிற சமயத்தவரும் எவ்வித நிபந்தனையுமின்றி குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பதுதான் தமிழ்நாட்டில் இத் திட்டத்தின் சிறப்பான அம்சமாகும். இவர்களில் மிகப்பெரும் எண்ணிக்கையினர் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு தாமாகவே மனம் ஒப்பிக் கருத் தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள முன் வந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் குடும்பநலத் திட்டத்தின் இன்றியமையாத நோக்கங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்கின்ற முக்கிய நிலையங்களாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படு கின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாமாக மனம் ஒப்பி வருவோர்க்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தல், பெண் களுக்குக் கருத்தடை வளையம் பொருத்துதல், தாய்-சேய் நலப் பணிகள் ஆகிய பணிகளைச் செய்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 10,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் வீதம் துணை நிலையங்கள் உள்ளன. அத்துணை நிலையங்களின் பணிகளை துணைச்செவிலி மகப்பேறு பணியாளர் கவனிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பகுதியில் தாய்-சேய் நலப் பணி, குடும்ப நலப் பணி ஆகியவற்றை கவனிக்கின்றனர்.

நகரப் பகுதிகளில், குடும்பநலப் பணிகளையும் தாய்-சேய் நலப் பணிகளையும் அங்குள்ள நகர்ப்பகுதி குடும்ப நல நிலையங்கள் கவனிக்கின்றன. இவை, அரசாலும் உள்ளாட்சி மன்றங்களாலும் தனியார் தொண்டு நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

1977-78 ஆம் ஆண்டிற்கான குடும்ப நலத் திட்ட உதவி ஏற்பாட்டின்கீழ் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு உடன்படுபவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ரொக்க உதவித் தொகையும், உணவுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றையும் இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிற ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 100-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 120-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும் வகையில் இந்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 115-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 145-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் குடும்ப நலத் திட்டம் குறித்த சிறப்பு இயக்கங்கள் நடத்தப்படுவது வழக்கம். 1977-78-லும் இதுபோன்ற சிறப்பு இயக்கங்களை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல் மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல்:—

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல், மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் கீழ்க்காணும் இலக்குகளை 1977-78ஆம் ஆண்டில் எய்தவேண்டுமென இந்திய அரசு வரையறுத்துள்ளது:—

	இம்மாநிலத்துக்கு வரையறுக்கப்பட்ட இலக்கு.	எய்திய இலக்கு. (20-2-78 வரை.)
மக்கள் தாமே முன் வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளுதல்.	3,50,000	69,357
கருத்தடை வளையம் பொருத்துதல்.	35,500	18,040
மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல்.	2,21,800	1,00,749

ஊக்க உதவித்தொகைகள் வழங்குதல் முதலியன குறித்த இந்திய அரசின் ஆணை மிகவும் காலதாமதமாகவே வந்து சேர்ந்தபடியால், குடும்ப நலத் திட்டஇயக்கம் 1977 அக்டோபருக்குப் பின்னரே முனைப்பாக நடத்தப்பட முடிந்தது. இந்தச் சூழல்களில் மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து

கொள்வது குறித்த இலக்கினை இவ்வாண்டில் எய்தவியலாது; எனினும், இது தேசிய அளவில் உள்ள நிலைமையாகும். இருந்தபோதிலும் இன்றைய நிலவரப்படி, இந்த நிதியாண்டு இறுதிக்குள், மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காகக் குறித்துள்ள இலக்கில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கும் எனத் தெரிகிறது.

தாய்-சேய் நலத் திட்டங்கள்:

இதற்கு முந்திய ஆண்டுகளிலெல்லாம், தாய்-சேய் நலத் திட்டப் பணிகளில் பெரும்பான்மையானவை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் நடைபெற்று வந்தன. அவற்றை அங்கு பணிபுரிந்துவந்த மருத்துவ அதிகாரிகள், உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் ஆகியோர் கவனித்து வந்தனர். 1977-78 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெரும் பகுதியான தடுப்பூசி மருந்துகள், மாவட்ட சுகாதார அதிகாரிகள் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, மாவட்டச் சுகாதார அதிகாரிகள் மூலம் வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம் செயல்படும் முறை பற்றி சிறிது காலம் தொடர்ந்து கவனித்து வந்த பின்னர், முன்பு இருந்தது போலவே, இத்திட்டங்களுக்குப் பொறுப்பு வகிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அதிகாரியை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது. அவர் மாவட்டக் குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரி ஆவார். எனவே, இத்துறையில் ஏற்கெனவே பணிபுரிந்து வருகின்ற உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் தவிர, உடல் நல ஆய்வாளர்கள், அம்மைப் பால் குத்துடவர்கள் போன்ற தகுதி வாய்ந்த பணியாளர்கள் அனைவரையும் பயன்படுத்தி, தாய்-சேய்நலத் திட்டப்பணியை விரிவுபடுத்துவதற்கான சிறப்பு இயக்கங்களை நடத்துமாறு மாவட்ட குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வகை நலப் பணியின் கீழும் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வரை பயன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையினைக் கீழ்க் குறித்த விவர அறிக்கை காட்டும்:—

முத்தடுப்பு ஊசி குத்தப்பட்டவர்கள்: (தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய், கக்குவான் நோய்—D.P.T.):	
பிரைமரி (Primary)	2,82,295
பூஸ்டர் (Booster)	52,006
தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி குத்தப் பெற்றவர்கள் (D.T.)	
பள்ளிச்சிறுவர்கள் ..	3,50,579
நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி (T.T.) கருவுற்றிருக்கும் பெண்கள்	1,73,446

தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்படும் ரத்த சோகையைத் தடுப்பதற்கான மருந்து.

(இரும்புச் சத்து நிறைந்த மாத்திரைகள்)

தாய்மார்கள்	2,62,944
குழந்தைகள்	2'63,894

வைட்டமின் 'ஏ' குறைவினால் குழந்தைகளுக்குக் கண் குருடாவதைத் தடுப்பதற்கான மருந்து

(வைட்டமின் 'ஏ' திரவம்)

குழந்தைகள் முதலாவது அளவு (Dose)	6,21,636
இரண்டாம் அளவு (Dose) ..	2,53,187

மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை (Post Partum Programme).

1969-70 ஆம் ஆண்டில், மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் மூன்று மத்திய அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1971-72 ஆம் ஆண்டில், திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் போது, இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மேலும் 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் (தனித் தொண்டு நிறுவனமாக) வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் ஒரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கும் நீட்டிக்கப்பட்டது 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து, இது மேலும் 12 தலைமையிட மருத்துவமனைகளுக்கும் (அதாவது புதிதாக அமைக்கப்பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்துக்குரிய தலைமையிட மருத்துதமனை நீங்கலாக மற்றவை) மேலும் ஒரு தனித் தொண்டு நிறுவனத்திற்கும் அதாவது சென்னையிலுள்ள ஆந்திர மகிள சபாவிற்கும், நீடிக்கப்பட்டது. தற்போது, மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 24 நிறுவனங்கள் செயற்படுத்தி வருகின்றன.

பிரிட்டிஷ் உதவித் திட்டம்;

1976-77-ல் இத்திட்டத்தின் கீழ் 6 வட்ட மருத்துவமனைகளும், 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இருக்கின்ற மகப்பேறு அறையைப் புதுப்பித்து அதனை அறுவை சிகிச்சைக் கூடமாக மாற்றி அமைத்தல் பொருட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 வரை நிதியுதவியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறுவை சிகிச்சைச் சாதனங்கள் வாங்குவதற்காக அவற்றிற்கு ரூ. 10,000 அளிக்கப்பட்டுள்ளது. வட்ட நிலையிலான ஆறு மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 33,000 செலவில் 6 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைக்கான வார்டு ஒன்றும், சாதனங்களுக்காகவும், படுக்கைகளுக்காகவும், 12,000ரூபாயுனம் அனுமதி

வழங்கப்பட்டது. இந்த மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்
கூடம் கட்டுவதற்காக 50,000 ரூபாயும், அறுவைச் சிகிச்சைக்
கருவிகளுக்காக 10,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய
வட்ட நிலையிலான ஆறு மருத்துவமனைகளில் 6 படுக்கைகள்
கொண்ட வார்டுகளும், அறுவை சிகிச்சை கூடங்களும் கட்டி
முடிக்கப்பட்டுள்ளன. பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில்
ஏற்கெனவே இருந்த மகப்பேறு அறையை அறுவை சிகிச்சைக் கூட
மாக மாற்றும் பணியும் முடிவடைந்துள்ளது. இந்த மருத்துவ
நிலையங்களுக்கான அறுவைச் சிகிச்சை சாதனங்களும் வாங்கப்பட்
டுள்ளன. 1977-78-ல் வட்ட நிலையிலான 9 மருத்துவமனைகளிலும்,
12 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கருத்தடை அறுவைச் சிகிச்சை
செய்துக் கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுக்க இந்திய
அரசு அனுமதியளித்துள்ளது. இந்த 12 ஆரம்பச் சுகாதார
நிலையங்களுக்கும், வட்ட நிலையிலான 9 மருத்துவ மனைகளுக்கும்
அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்
டுள்ளன. கட்டிடங்களும் கூடிய விரைவில் கட்டி முடிக்கப்படும்.

குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம்:

குடும்ப நலத் திட்டம் பற்றிய விளம்பரங்கள், பெரும் பலகை
கள், சுவர் சித்திரங்கள், நாடகங்கள், பாடல்கள், வில்லுப்பாட்டு,
கருத்தடை சாதனங்களை விளம்பரப்படுத்தும் உலோகத் தகடுகள்,
பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் வைத்திருத்தல், திரைப்படங்
கள், அகில இந்திய வானொலியில் ஒலி பரப்புதல், செய்தித்தாள்
களிலும், வார மாதப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள், பொருட்
காட்சிகள் திரைப்படக் கொட்டகைகளில் சிலைடுகள் போட்டுக்
காட்டுதல் முதலியவை வாயிலாக குடும்ப நலத் திட்டம் பற்றி
விளம்பரப்படுத்தப்படுகின்றன.

மானிய உதவி:

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு
நகர்ப்பகுதி குடும்ப நல நிலையங்கள், துணைச் செவிலியர் மகப்பேறு
பணியாளர் பயிற்சி நிலையங்கள், மகப்பேறுக்குப் பின் கருத்தடை
அறுவைச் சிகிச்சை செய்யும் நிலையங்கள் ஆகியவற்றை நடத்து
வதற்காக அரசு மானிய உதவி அளிக்கிறது. இந்த மானியங்கள்
இந்திய அரசு நிர்ணயித்துள்ள முறையில் வழங்கப்படுகின்றன. தற்
போது 13 தொண்டு நிறுவனங்களும், 19 உள்ளாட்சி மன்றங்களும்
இந்த மானிய உதவி பெறுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில்
கீழ்க்கண்டவாறு மானிய உதவி அளிக்கப்பட்டது:—

ஆண்டு.				மானியத் தொகை (ரூபாய் லட்சத்தில்).
1974-75	..	..	..	20·31
1975-76	..	..	..	18·42
1976-77	...	..	..	45·94

1978-79 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு:—

1978-79-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 999·45 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் ஏற்படக்கூடிய செலவினங்களுக்காக இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் இந்திய அரசின் பங்கு ரூ. 924·30 லட்சமாகும். மீதமுள்ள 75·15 லட்சத்தை தமிழக அரசு ஏற்கும். இருந்தபோதிலும், 1978-79 ஆம் ஆண்டிற்கு இந்திய அரசு உதவித் தொகை அளிக்கும் முறையில் மாறுதல் ஏதும் இருந்தால் செலவினங்களில் மாற்றம் செய்ய வேண்டிவரும்.

C. இந்திய மருத்துவத்துறை :

1. கொள்கை—

இந்திய மருத்துவ முறையை, குறிப்பாக தமிழ்நாட்டின் நாட்டு மருத்துவ முறையான சித்த மருத்துவ முறையை ஊக்குவித்து வளர்ப்பதற்கும், ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கான வாய்ப்புகளுக்கு வகை செய்யவும் அரசு கடமைப்பட்டுள்ளது.

2. மருத்துவ நிவாரணம்—

(1) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை சென்னை.

இந்திய முறை மருத்துவத்திற்கென தனியாக ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு 1968 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அது 1970-ல் அரும்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்த இந்திய முறை மருத்துவப் பிரிவு அங்கிருந்து மாற்றப்பட்டு, அரும்பாக்கத்தில் கட்டப்பட்ட புதியகட்டடத்தில் அமைக்கப்பட்டது. இந்த மருத்துவ மனைக்கு ''அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை'' என்று பெயரிடப்பட்டது. இம்மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடன் 14-4-1970 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. ஒரே வளாகத்திற்குள் சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளில் புற நிலை நோயாளிகளுக்கும், அக நிலை நோயாளிகளுக்கும் மருத்துவச் சிகிச்சை வசதிகளை நல்கும் சிறப்புத் தன்மையை இந்த மருத்துவமனை கொண்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் புதிதாகக் கட்டப்பட்ட வார்டில் மேலும் 50 படுக்கைகள் 1976-77 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன.

அரசு பணியாளர்களுக்கு மேற்சொன்ன மூன்று மருத்துவ முறைகளின்கீழ் புற நிலை நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்க இம் மருத்துவ மனையில் தனியாக ஓர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 2—1—1978 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கி யுள்ளது.

சித்த மருத்துவ முறையின்கீழ் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள், சென்னை மாநகரில் பின்வரும் இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்களில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அம்மருந்தகங்களாவன: —

(i) அரசினர் மருந்தகம், தலைமைச் செயலகம்.

(ii) அரசினர் மருந்தகம், சேப்பாக்கம் அலுவலக வளைவு.

(iii) அரசினர் மருந்தகம், சைதாப்பேட்டை.

(iv) அரசினர் மருந்தகம், திருவல்லிக்கேணி.

இந்த மருந்தகங்கள் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையோடு இணைக்கப்பட்டுள்ளன.

(2) பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு இணைந்துள்ள மருத்துவ மனை.

பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு, மருத்துவமனை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது 108 படுக்கைகள் கொண்டது. இங்கு சித்த மருத்துவ முறையின் கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த மருத்துவமனையில் மேலும் 100 படுக்கைகளை அமைக்க ரூபாய் 5·95 இலட்சத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு, அது 1977 செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

ரூபாய் 1·80 இலட்சம் செலவில் 1976 அக்டோபரில் ஒப்பளிக்கப்பட்ட புதிய புற நிலை நோயாளிகள் பகுதி ஒன்று 1977 டிசம்பரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(3) சித்த மருத்துவப் பிரிவுகள்:

14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 49 வட்ட மருத்துவமனைகளிலும் வட்ட நிலையில் அல்லாத பிற மருத்துவ மனைகளிலும் தற்போது 63 சித்த மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதில் 1977-78-ல் தொடங்கப்பட்ட 4 சித்த மருத்துவப் பிரிவுகளும் அடங்கும், அவை கீழ்க்காணும் வட்ட, வட்ட நிலையில் அல்லாத மருத்துவமனைகளில் உள்ளது :—

(i) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

(ii) அரசினர் மருத்துவமனை, மேலூர், மதுரை மாவட்டம்.

(iii) அரசினர் மருத்துவமனை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

(iv) அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, வலையப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்.

1978-79ஆம் ஆண்டில் மேலும் 10 சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4) இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள்;

இம் மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் 13 அரசினர் மருந்தகங்கள் செயல்படுகின்றன. அவை வருமாறு:—

சென்னை மாநகரம்	.. சித்த மருத்துவ முறை	..	4
மாவட்டங்கள்	.. சித்த மருத்துவ முறை	..	4
மாவட்டங்கள்	.. ஆயுர்வேத மருத்துவமுறை	..	5

(5) முறையான கிராமப்புற மருந்தகங்கள் :

மேற்சொன்னவற்றைத் தவிர, முறையான கிராமப்புற இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள், நகராட்சிகளாலும் ஊராட்சி ஒன்றியங்களாலும் நடத்தப்படுகின்றன. கிராமப்புற மருந்தகங்கள் பரம்பரை நாட்டு வைத்தியர்களால் அல்லது மரபு வழியில் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் பெரும் பாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. முறையான மருந்தகங் கள் இந்திய மருத்துவ பட்டதாரிகளாலும், பட்டயதாரர் களாலும் நடத்தப்படுகின்றன.

1977-78ஆம் ஆண்டில் ஆறு கிராம மருந்தகங்கள் கீழ்க் காணும் கிராமங்களில் தொடங்கப்பட்டன :—

(i) கிராம சித்த மருத்துவ மருந்தகம், டி. புதுப்பாளையம், தென் ஆற்காடு மாவட்டம்.

(i) கிராம சித்த மருத்துவ மருந்தகம், பெர்மந்தூர், தென் ஆற்காடு மாவட்டம்.

(iii) கிராம சித்த மருத்துவ மருந்தகம், கள்ளிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(v) கிராம சித்த மருத்துவ மருந்தகம், சிற்ருவு, மதுரை மாவட்டம்.

(v) கிராம சித்த மருத்துவ மருந்தகம், போண்டிநாயக் கன்பட்டி, சேலம் மாவட்டம்.

(v) கிராம ஆயுர்வேத மருந்தகம், சிரநத்தம், கோயம் புத்தூர் மாவட்டம்.

3. இந்திய மருத்துவமுறை மருந்துக் கூடங்கள் :

சென்னை அறிஞர் அண்ணு அரசினர் இந்திய மருத்துவ மனையுள் மருந்துக் கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது மூன்று இந்திய மருத்துவ முறைகளிலும் சிகிச்சை அளிக்கும் 150 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையின் தேவைகளை யும், சென்னை மாநகரிலுள்ள சித்த மருந்தகங்களின் தேவை களையும் நிறைவு செய்துவருகிறது. இந்த மருந்துக் கூடத் தில் உற்பத்தியாகும் மருந்துகளின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 5 இலட்சம் ஆகும். இம் மருந்துக் கூடத்தில் இயந்திரங்களை நிறுவுவதற்காக இவ்வரசின் செயற்குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவ முறை கல்லூரி மருத்துவமனையுடன் மருந்துக்கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துக்கூடம் மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், பாளையங்கோட்டை, இந்திய மருத்துவ முறை அரசினர் கல்லூரி மாணவர்கள் மருந்துகளைத் தயாரிப்பதில் ைடமுறைப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தேவையான யிற்சி வசதிகளை வழங்குவதற்கும், சித்த முறையில் மருந் ுகளைத் தயாரிக்கின்றது. இந்த மருந்துக்கூடத்திற்காக ரூ. 3.80 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அக்கட்டிடம் 1977 நவம்பரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

4. மூலிகைச் செடிப் பண்ணைகள் :

அறிஞர் அண்ணு அரசினர் இந்திய மருத்துவமனையோடும் இந்திய முறை அரசு மருத்துவக் கல்லூரியோடும் இணைக்கப் பட்ட மூலிகைச் செடிப் பண்ணைகள், இந்திய முறை மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட மருந்துக் கூடங்களுக்கு மூலிகைகளையும், மருந்துச் செடிகளையும் தொடர்ந்து அளித்து வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் வீரபுலிகாப்புக் காட்டில் உள்ள மூலிகை செடிப்பண்ணை.

1977-78-ல் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்புகளைக் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஜீப் வழங்குதல், அணுகு சாலைகளை அமைத்தல் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5. மருத்துவக் கல்வி :

மதுரைப் பல்கலைக் கழகத்தின் இந்திய மருத்துவ முறைப் படிப்பியலில் பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத் துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறையில் பட்டப் படிப்புப் பாடமுறை நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டொன்றுக்கு 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் (அவர்களில் பயிற்சி உதவித் தொகை பெறுபவர்கள் 30 பேர் ஆவர். பயிற்சி உதவித் தொகை பெருதவர்கள் 10 பேர் ஆவர்). புதுடெல்லி, இந்திய மருத்துவ மத்திய மன்றத்திஞல் ஏற் பளிக்கப்பட்டு ''பி.எஸ்.எம். அண்டு எஸ்'' பட்டம் பெறுவ தற்கு வழிகோலும் பாடத் திட்டம் 1977-78 கல்வியாண் டிலிருந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாக தேவைப்படுபவற்றை நிறைவு செய்ய கல்லூரியில் உள்ள பல்வேறு துறைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன கல்லூரியில் திறமையான கல்வி கற்பிக்கும் வசதிகளை அளிக்கும் பொருட்டு 1978-79-ல் ரூ. 3.40 இலட் சம் செலவில் எல்லாவகையிலும் நிறைவுபெற்ற உடற்கூற் றியல் தொகுதி (Anatomy Block) ஒன்றைக் கட்டக் கருதப் பட்டுள்ளது.

இக்கல்லூரியில் 'பி.எஸ்.எம். அண்டு எஸ்.' பாடமுறையில் (சித்த மருத்துவம், அறுவைச் சிகிச்சை பட்டப்படிப்பு) உள்ள 40 இடங்களில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக் காக 4 இடங்களை பரிமாற்ற ஏற்பாட்டு அடிப்படையில் அரசு ஒதுக்கியுள்ளது. அதேபோல, கேரளாவில் உள்ள அரசு ஆயுர் வேத கல்லூரிகள் இரண்டில் உள்ள பி.ஏ.எம். அண்டு எஸ். வகுப்பில் (ஆயுர்வேத மருத்துவம், அறுவைச் சிகிச்சை) தமிழ் நாட்டைச் சேர்ந்த 4 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் கேரள அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஏற்பாடு 1977-78 கல்வியாண்டிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவமுறை மருத் துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் (மருந்து), சித்த குண பாடம் ஆகிய இரண்டு பட்ட மேற்படிப்பு பயிற்சி வகுப் புகள் இந்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் 20 மாணவர்கள் (மருத்துவத்திற்கு 10 மாணவர் களும் குணபாடத்திற்கு 10 மாணவர்களும்) ஆண்டு தோறும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 200 படிப்புதவித்தொகை கொடுக்கப்படுகிறது. இதுவரை 5 தொகுதிகளில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 16 மாணவர்கள் பட்ட மேற்படிப்பு பட்டம் பெற்றுள்ளனர்.

மருந்து தயாரிப்பு முறையில் பட்டயப்படிப்பு.

ஆயுர்வேத, சித்த, யுனானி முறைகளில் மருந்து தயாரிப்பதில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 1974-75ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டை யிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977-78ஆம் ஆண்டில் மேற்கூறிய வகுப்பில் 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 30 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

6. இந்திய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி :

புதுடெல்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக்குழுவின் ஆதரவுடன் சென்னை மாநகரில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த

ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு மாநில அரசு இட வசதியும், படுக்கை வசதிகளும் கொடுத்துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுடன் தொடர் புடைய ஏனைய செலவுகள் அனைத்தையும், புதுடில்லியிலுள்ள இந் திய மருத்துவ முறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஏற்கிறது :—

( ) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத் துவமனையில் ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய மருத்துவ முறைகளில் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு கள்.

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையம் (சித்த முறை).

(ii) சென்னை. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்ள கேப்டன் சீனிவாச மூர்த்தி ஆராய்ச்சி நிலையம்.

(v) புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோ பதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழுவின்கீழ் உள்ள மூலிகைச் செடிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு, சித்த மருத்துவ நூல்கள் ஆராய்ச்சிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு ஆகிய இரண்டு ஆராய்ச்சிப் பிரிவுகள், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவமுறை மருத்துவக் கலலூரியில் செயல் பட்டு வருகின்றன.

சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவ மனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலைய (சித்த முறை) பிரிவுப் பணிகளுக்காக 2,19,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 30 கூடுதல் படுக்கைகளைப் போடுவதற்கு இடவசதி அளிக்கக் கூடு தல் கட்டிடங்கள் கட்டுவதற்கு 1977-78 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

7 சித்த மருத்துவ முறை அறிவியல் மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவமுறை அறிவியல் மேம்பாட்டுக்குழு, 1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பட்டது. பனை ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சிடப்பெற்ற அரிய நூல்கள் ஆகியவற்றைத் திரட்டுதல், பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படும் பி.ஐ.எம். (B.I.M.) பட்டப்படிப்பு, எம்.டி. (சித்த மருத்துவ முறை) பட்டமேற்படிப்பு ஆகியவற்றுக்காகவும், சித்த வைவ திய பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவை இக்குழுவின் பொறுப்பாகும்.

இக்குழு தொடங்கப்பட்ட நாள் முதல் அது ஆற்றிய குறிப்பிடத்தக்க பணிகளாவன:—

அரிய நூல்களைத் திரட்டுதல்—

(i) அச்சிடப்பெற்ற அரிய நூல்கள்	..	561
(ii) பனை ஓலைச் சுவடிகள்	..	360
(iii) கையேட்டுப் பிரதிகள்	..	84

அச்சிடப்பெற்ற அரிய 561 நூல்களில், அச்சிடுவதற்காக, முதற்கண் 84 நூல்கள் தெரிதெடுக்கப்பட்டன. சுமார் 40 நூல்களின் படிகள் எடுக்கப்பட்டு அவற்றிலுள்ள பிழைகள் முதலியவை முறையே நீக்கப்பட்டன. திரட்டப்பட்ட பனை ஓலைச் சுவடிகள் கையேட்டுப் பிரதிகள் ஆகியவற்றை பகுத்தாய்ந்து, மீண்டும் எழுதவேண்டியுள்ளது.

மேற்கூறிய பணிகளைத் தவிர, அச்சிடப்பெற்ற 5 சித்த வைத்திய நூல்களின் நகல்கள் தனியார் வெளியீட்டார்களிடமிருந்து வாங்கப்பட்டு, துறைவாரியாக விற்கப்பட்டு வருகின்றன.

ஒன்பது சித்த வைத்தியப் பாட நூல்கள் இதுவரை அச்சிடப்பெற்றுள்ளன. (1) உடல் கூறுகள், (2) தோற்றக் கிரம ஆராய்ச்சி என்கிற இரண்டு பாட நூல்கள் எழுதி முடிக்கப்பட்டு அரசினர் அச்சகத்தில் அச்சிடுவதற்காகக் கொடுக்கப்பட்டன. மேலும் ஐந்து பாட நூல்கள் இன்னும் எழுதப்பட்டு வருகின்றன.

திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் தயாரித்த சித்த மருத்துவ அகராதியில் எஞ்சியுள்ள 4, 5 ஆம் பகுதிகள் தொகுக்கப்பட்டு கோயம்புத்தூரில் உள்ள ஜி. டி. நாயுடு அறக்கட்டளை அச்சகத்தில் இலவசமாக அச்சிடப்பெற்று வருகின்றன. இப்பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியுள்ள "சித்த மருத்துவ வரலாறு" என்கிற ஆங்கில நூல் ஒன்று அச்சிடுவதற்காக அச்சகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறது.

8. தொண்டாற்றும் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்

இந்திய மருத்துவ முறையில் இலவச சிகிச்சை அளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானிய உதவி அளிக்கிறது. மக்களுக்கு தொண்டாற்றுகிற இந்த நிறுவனங்களைப் பேணி வருவதற்காகும் செலவில் துண்டு விழும் ஒரு பகுதியை ஈடு செய்வதற்காக இந்த மானிய உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஆண்டு தோறும் மானிய உதவி பெற்றுவருகின்றன:—

(i) திரு. வெங்கடரமண ஆயுர்வேத மருந்தகம் மயிலை, சென்னை.		ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,000
(ii) ருக்மணி நினைவு மருத்துவமனை, பட்டுக்கோட்டை.		ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000
(iii) அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தானம் ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம்.		ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000

9. யோகாசன முறை சிகிச்சை.

யோகாசன முறையை ஒரு சிகிச்சை முறையாக அங்கீகரிக்கலாமா என்பது பற்றி அரசிற்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்பட்ட முன்னோடிக்குழு இரண்டொரு தடவை கூடி, யோகாசன முறைக்குத் தொடர்புள்ள நிறுவனங்களிடமிருந்தும் தனியாரிடமிருந்தும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் இப்போது தகவல்களைச் சேகரித்து வருகிறது.

10. யோகாசனம் கற்பிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு அரசு மான்யம் வழங்குதல்.

திருப்பதியில் உள்ள இந்திய யோகாசனத் தொடர்புள்ள அறிவியல்கள் ஆராய்ச்சி நிறுவனம் (பதிவு செய்யப்பட்டது) ஆஸ்த்துமா, மஞ்சள் காமாலை நோய் போன்ற சிலவகை நோய்களை யோகாசன முறையில் குணப்படுத்துவதுபற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இந்நிறுவனத்தைப் பேணி வருவதற்காகும் செலவினத்தில் துண்டு விழும் ஒரு பகுதியை பிற மாநில அரசுகளுடன் சரிநிகர் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சம் என்கிற உச்ச அளவிற்கு உட்பட்டு ஈடு செய்யலாம் என்கிற திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டிற்காக இந்நிறுவனத்திற்கு ரூ. 3 இலட்சம் மானிய உதவி முன் கூட்டியே அளிக்கப்பட்டுள்ளது.

11. இயற்கை முறை மருத்துவம்

தமிழ் நாட்டில் நோய் சிகிச்சை முறைகளில் 'இயற்கை முறை மருத்துவச் சிகிச்சையும்' ஒன்று என்பதை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 'இயற்கை முறை மருத்துவ சிகிச்சை' குறித்தும் இந்த வகை சிகிச்சை முறையை மேம்படுத்துவது குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அது அமைத்துள்ள ஆலோசனைக்குழு இந்த சிகிச்சை முறையில் பயிற்சி அளிப்பதற்காக பாடங்கள்—பாடத் திட்டங்கள் குறித்த வரைவு அறிக்கை ஒன்றை அரசிற்கு அளித்துள்ளது. இதனை அரசு ஆய்வு செய்து வருகிறது.

இணைப்பு 1,

பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு பற்றிய விவரங்கள்;

தொடர் எண்ணும் பட்ட மேற்படிப்பும் மற்றும் பட்டயத் தகுதிகளின் பட்டியல்.	இடங்களின் எண்ணிக்கை.			
	சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை	தஞ்சை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்
(1)	(2)	(3)	(4)	(5)
பட்ட மேற்படிப்பு;				
1 எம்.டி. (பொது மருந்தியல்)	21	20	19	5
2 எம்.டி. (மகப்பேறு மருத்துவ இயல்),	12	8	5	..
3 எம்.டி.. (நோய் குறியியல்)	4	..	2	..
4 எம்,டி, (நுண் உயிரியல்)	6	..	2	..
5 எம்,டி. (உடல் அமைப்பியல்)	4	4	4	..
6 எம்.டி. (மருந்தாக்கியல்)	4	..	4	..
7 எம்.டி. (குழந்தை நோய் இயல்)	17	..	3	..
8 எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் அறி இயல்).	4	..	..	..
9 எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் சிகிச்சை இயல்)	4	..	..	..
10 எம்.டி. (மயக்கமருந்து இயல்).	5	3	5	..
11 எம்.டி. (தோல் நோய் இயல்)	4	..	..	..
12 எம்.டி. (மேகநோய் இயல்)	4	..	..	..
13 எம்.டி. (உயிர் வேதியல்)	4	..	..	..

இணைப்பு I—தொடர்ச்சி.

பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)
14 எம்.டி. (சமூக தடுப்பு மருத்துவம்)	1	..	..	..
15 எம்.டி. (சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல்).	2	..	2	..
16 எம்.டி. (உளநோய் இயல்)	2	..	..	..
17 எம்.எஸ். (பொது அறுவைச் சிகிச்சை).	21	20	18	6
18 எம். எஸ். (முடநீக்கியல் அறுவை சிகிச்சை).	4	..	2	..
19 எம். எஸ். (கண் நோய் இயல்)	6	..	6	..
20 எம். எஸ். (காது மூக்கு, தொண்டை இயல்).	6	..	4	..
21 எம். எஸ். (உடற்கூறு ஆய்வு இயல்).	4	..	2	..
22 எம். எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	4	..	..	..
23 எம். சி. எச். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	..	..	2	..
பட்டயத் தகுதி படிப்பு:				
1 டி. ஓ.	8	..	6	..
2 டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3. டி. எல். ஓ. ..	12	..	6	..
4. டி. ஜி. ஓ. ..	18	8	8	..
5 டி. வி.	8	..	..	..
6 டி. டி.	6	..	..	..
7 டி. சி. பி. ..	4	..	..	..
8 டி. எ.	6	6	10	..
9 டி. சி. எச். ..	18	6	6	..
10 டி. எம். ஆர். டி.	4	4	6	..
11 டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..

இணைப்பு I—தொடர்ச்சி.

பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

பட்டயத் தகுதி படிப்பு—தொடர்ச்சி

	(1)	(2)	(3)	(4)	(5)
12	டி. பி. எம். ..	4	..	3	..
13	டி. எம்.ஆர்.டி.(தெரப்பி)	4	..	..	..
14	டி.டி.சி.டி.(ஆண்டொன்றிற்கு).	12	..	..	..
	அக்டோபரில் துவங்குவது:				
1	டி. ஓ.	8	..	6	..
2	டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3	டி. எல். ஓ. ..	12	..	6	..
4	டி. ஜி. ஓ ..	18	8	8	..
5	டி. வி.	8	..	..	..
6	டி. டி.	6	..	..	..
7	டி. சி. பி. ..	5	..	..	..
8	டி. ஏ.	6	6	10	..
9	டி. சி. எச். ..	18	6	6	..
10	டி. எம். ஆர். டி.	4	4	6	..
11	டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..
12	டி. பி. எம். ..	4	..	3	..
13	டி.எம்.ஆர்.டி.. (தெரப்பி)	4	..	..	..
	உயர்நிலை சிறப்புத் துறைகள் :				
1	எம்.டி.எஸ். (ஓரல் சக்ஜரி)	3	..	..	..
2	பி.எஸ்.எஸ்.சி. / எல்.பி.எச்.	10 1	..	..	..
3	எம்.சி.எச். (மார்பு அறுவை சிகிச்சை இயல்).	2	..	..	..
4	எம்.சி.எச். (சிசு நோய் அறுவை சிகிச்சை இயல்).	3	..	2	..
5	எம்.சி.எச் (சிறுநீரக அறுவை சிகிச்சை இயல்).	4	..	..	..
6	எம்.சி.எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்)	3	..	..	..
7	டி.எம். (நரம்பியல்)	4	..	..	..
8	டி.எம். (இருதய நோய் இயல்)	2	..	..	..

	(1)	(2)	(3)	(4)	(5)
9	எம்.டி.எஸ். (பல்வலியால் ஏற்பட்டுள்ள வீக்கம்)	3	..	..	..
10	எம்.டி.எஸ் (பல் மருத்துவ அறுவை சிகிச்சை இயல்).	2	..	..	
11	எம்.டி.எஸ் (ஆத்தோர் டென்ஷியா)				
12	டி.எம். (குடல்நோய் இயல்)	..	1	..	..
13	எம். பார்மஸி..	..	..	..	3
14	பி. எச். டி.		10 இடங்கள்		

இணைப்பு I-A.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்க உள்ள பாடப் பிரிவு கீழ்வருமாறு :—

கல்லூரியின் பெயர்.	பாடப் பிரிவின் பெயர்.	இடங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம்.எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	2
	டி.டி.	2
	டி.எல்.ஓ.	4
	எம்.டி,(தோல் நோய் இயல்)	1
	எம்.டி. (குழந்தை நோய் இயல்).	2
சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி.	எம்.டி. (பொது மருந்தியல்).	12 ஆண்டு ஒன்றுக்கு
	எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை).	1 ,,
	டி.எல்.ஓ... ..	2 செஷன் ஒன்றுக்கு
	டி. ஆர்த்தோ ..	4 ,,
	டி.ஜி.ஓ.	4 ,,
	டி.சி.எச்.	4 ,,

ஜூன் 1978 முதல் தொடங்கவுள்ள பாடப் பிரிவு:—

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம்.சி.எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்).	2

[1978 மார்ச் 28

இணைப்பு II.

கீழே குறிப்பிட்டுள்ள பட்டமேற் படிப்புகள் தகுதி பட்டயங்கள் 1978-79 ஆம் ஆண்டு முதல் தொடங்கக் கருதப் பட்டுள்ளது.

கல்லூரியின் பெயர். (1)	பாடப்பிரிவின் பெயர். (2)
சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை.	டி. எம். (நெப்ராலஜி). மருத்துவ உளவியலில் பட்டயத் தகுதி படிப்பு. எம். டி. (காசமும் மார்பு நோய்களும்).
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	டி. ஓ. டி. எல். ஓ. டி. ஜி. ஓ. டி. சி. எச். டி. ஏ. எம். டி. (உயிர் வேதியல்).
கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.	எம்.டி. (பொது மருந்தியல்). எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை). டி. சி. எச். டி. ஜி. ஓ. டி.ஏ.

இணைப்பு III.

பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகளின் பட்டியல்

1 அரசு பொது மருத்துமனை, சென்னை-3.
2 அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1.
3 கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10.
4 அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை-14.
5 அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.
6 பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை-5.
7 மகப்பேறு, மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான அரசு மருத்துமனை, சென்னை-8.

1978 மார்ச் 28]

8 இராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.
9 குழந்தை நல நிறுவனம். குழந்தைகள் மருத்துவமனை, சென்னை-8.
10 அரசு திருவொற்றீஸ்வரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.
11 அரசு மார்பு நோய் நிலையம், சேத்துப்பட்டு, சென்னை.
12 அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை-10.
13 அரசு காசநோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.
14 அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.
15 அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
16 தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
17 செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.
18 கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
19 திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திருநெல்வேலி.

இணைப்பு IV.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் உள்ள மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

	மருத்துவ மனைகளின் பெயர். (1)	1976-77. (2)	1977-78. (3)
1	அரசு பொது மருத்துவமனை, சென்னை.	1,572	1,624
2	அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	1,011	1,021
3	அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, சென்னை.	420	420
4	அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை.	526	620
5	அரசு கண் மருத்துவமனை, சென்னை.	328	328
6	பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை, சென்னை.	675	675
7	மகப்பேறு மகளிர் நோயியல் மகளிர்-குழந்தைகள் நல மருத்துவ நிலையம், சென்னை.	534	534

	மருத்துவமனைகளின் பெயர் (1)	1976--77. (2)	1977--78. (3)
8	ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.	426	426
9	குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.	250	250
10	திருவொற்றீஸ்வரர் காச நோய் அரசு மருத்துவமனை, ஒட்டேரி, சென்னை.	222	222
11	அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.	1,800	1,800
12	அரசு காச நோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.	750	750
13	அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	1,394	1,394
14	அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.	662	612*
15	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.	538	589
16	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.	663	663
17	கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி கோயம்புத்தூர்.	805	805
18	செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.	416	416
19	அரசு பெரிடாமோன்னியர் மருத்துவமனை, களக்காடு.	30	30
20	அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை.	32	32
21	அரசு காச நோய் மருத்துவமனை, தோப்பூர்.	162	182
22	அரசு தொற்று நோய் மருத்துவமனை, தோப்பூர்.	50	50
23	அரசு காலரா சேகரிப்பு நிலையம், தோப்பூர்.	28	28
	மொத்தம் ..	13,294	13,471

*தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலிருந்து 50 படுக்கைகள் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டது.

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே,

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகின்றேன்.

I. கொள்கை

மக்களின் நல்வாழ்வு ஒரு முக்கியமான வளமாகும். ஆகவே, அது நாட்டின் பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. எனவே, இச்சொத்து எல்லா காலங்களிலும் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க உறுதி கொண்டுள்ள அரசு, மக்களின் உடல்நலம் மற்றும் நல் வாழ்வைப் பராமரித்து மேம்படச்செய்யும் நடவடிக்கைகளை அரசு நிறுவனங்களோ அல்லது பொது நலத் தொண்டு நிறுவனங்களோ மேற்கொள்ளும்போது அத்தகைய பணிகளை அரசு ஊக்குவிக்கிறது.

இவ்வாறு அளிக்கப்படும் பலவகையான நல்வாழ்வுப் பணிகள் தாய் மற்றும் குழந்தைகளின் உடல் நலனை மேம்படுத்தவும் மக்களின் ஊட்டச் சத்தை மேம்படுத்தவும் தொற்று நோய்கள் பிற நோய்களைத் தடுத்தல், தொற்று நோய்கள் தோன்றுமிடங் களில் அவற்றை அழித்தல், சுற்றுப்புற துப்புரவு மேம்பாடு; உணவுப் பொருள், மருந்துகளில் கலப்படங்களைத் தடுத்தல், மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் வகுக்க பிறப்பு இறப்புப் பதிவு உட்பட சுகாதாரப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்தல், மற்றும் மக்கள் நல்வாழ்வு, வழிமுறைகள் பற்றி மக்களுக்குக் கல்வி விளக்கம் அளித்தல் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றன. கிராமப் பகுதிகளில் இப்பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிளை நிலையங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகின்றன.

II. கிராம நல்வாழ்வுப் பணி.

தமிழ்நாட்டில் 70 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். கடந்த ஆண்டுகளில் கிராமப்புறப் பகுதிகளை புறக்கணித்து விட்டு நகரப் பகுதிகளிலேயே நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் நாட்டம் செலுத்தப்பட்டு வந்தது. சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு கிராம மக்களின் உடல் நல முன்னேற்றம் அத்தியாவசியமானதாகும். ஏனெனில் விவசாயி களின் உடல் நலமின்மையினால் உழைக்கும் நேரம் வீணாவதை அவர் கள் உடல் நலத்தை பேணுவதின் மூலம் குறைக்க முடியும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும் கிளை நிலையங்கள் மூலமாகவும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மேன்மேலும் அதிக மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் முக்கியமான பணிகளில் மருத்துவ வசதி அளிப்பது ஒன்றாகும். ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளி கள் சிகிச்சை பெறுவதுடன் உடல் பரிசோதனையோடு மருந்துகளும் தகுந்த அறிவுரைகளையும் பெறுகிறார்கள். நாளுக்கு நாள் வெளிப் புற நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

130 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது மருத்துவர் ஒருவர் பணியாற்றுகிறார். வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதை கருத்தில் கொண்டும் நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவும் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஆண்டிற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை ரூ. 12,000-லிருந்து ரூ. 14,000-மாக அரசு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து அதிகப்படுத்தியுள்ளது.

(i) நடமாடும் மருத்துவப் பணிகள்.

கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வுப் பணிகளை அளிக்கும் குறிக்கோளுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் சென்று மருத்துவ வசதி அளிக்க முடிவதில்லை. ஆதலால் 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திட்டமான நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு, நோய்த்தீர்ப்பு, நோய்த்தீர்ப்புக்கு பின் நலம் பேணுதல் ஆகிய பணிகளை அளிப்பார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக்குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்று வரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள். கிராம மக்களுக்கும் வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல ஆய்வாளர்கள் சிகிச்சை சம்பந்தமான ஆதாரப்பணிகளை செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும், மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட நாட்களில் தகுந்த பிணியாளர்களை சிகிச்சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவப் பணிகளை செய்வார்கள். இவ்வாறாக மக்களுக்கு மருத்துவப் பணிகள் அவர்கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

இத்திட்டம் ரூ. 7.16 இலட்சம் செலவில் மூன்றாவது மருத்துவ அதிகாரியுள்ள 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவக்கப்பட்டது. இந்தப் புதுமையான திட்டம் துவக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. மருத்துவக் குழுவின் நடமாட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பெட்ரோல் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லாமல் மேலும்

ரூ. 10,000 இம்மருத்துவக் குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மருந்து-கலக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய அரசு நாடு முழுவதற்குமான சமுதாய நல பணியாளர்கள் திட்டம் என்னும் ஓர் புதிய திட்டத்தை, பணியாளர்கள் கிராம மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமப்பணிகளில் ஈடுபடுத்துவதற்காக உருவாக்கியது. இருப்பினும் இவ்வரசு மத்திய அரசுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து இயக்கப்படும் நடமாடும் மருத்துவக்குழு என்னும் ஓர் மாற்று திட்டத்தை தெரிவித்தது. இதன் நோக்கம் தமிழ்நாட்டில் சிறந்த முறையில் இணைப்பு சாலைகளும் மின்சார வசதிகளும் அமைந்து இருப்பதால் நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலமாக சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்க முடியும் என்பதாகும். மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சர் தங்களது திட்டத்தை 1977 அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி முதல் தமிழக அரசு அமுல் படுத்த வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுவதால், பிரதமருக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சருக்கும் மத்திய அரசின் திட்டத்திற்கு பதிலாக மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக் குழுவின் மூலம் மருத்துவ வசதி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த எண்ணியிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. பிரதமரும், மத்திய நல்வாழ்வு அமைச்சரும் மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்த விருப்பத்தோடு அனுமதி அளித்தார்கள்.

மத்திய அரசின் சமுதாய நலப்பணியாளர்கள் திட்டத்தை நமது மாநிலத்தில் அமுல்படுத்தியிருந்தால், இவ்வரசுக்கு 100 சதவீதம் மத்திய அரசின் உதவித் தொகையான ரூ. 17 இலட்சமும், முதல் படி உதவித் தொகையான ரூ. 2.27 இலட்சமும் கிடைத்திருக்கும். 1977-78 ஆம் ஆண்டில் இந்த உதவித் தொகையான ரூ. 17 இலட்சத்தை அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) சிறிய சுகாதார நிலையங்கள்:

கிராம மக்கள் தொகையின் சிறு பகுதிக்குக் கூட்டுறவு அடிப்படையில் சுகாதார பணி புரியும் குறிக்கோளுடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இதில் தொடர்புள்ள முக்கிய அமைப்புகள் மத்திய அரசு மாநில அரசு ஒரு பொதுநல நிறுவனம் ஆகும். இதில் மொத்தச் செலவு 1 : 1 : 1 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்துக் கொள்ளப்படும். ஒரு சிறு சுகாதார நிலையம் 5,000 மக்கள் தொகைக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட நல்வாழ்வுப் பணிகள் புரிய, பொதுநல நிறுவனங்கள் செயல்படும். ஒரு சிறு சுகாதார நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் 18,000 ரூபாய் தொடர் செலவாகும்.

சிறு சுகாதார நிலையம் ஒன்றில், பகுதி நேர டாக்டர் ஒருவர், முழு நேர ஆண் மற்றும் பெண் பணியாளர் ஒருவர், முதல் உதவியாளர்கள் மூவர் அமர்த்தப்படுவார்கள். 1977-78 ஆம் ஆண்டில் அரசு ரூ. 4.86 இலட்சம் செலவில் 54 சிறிய சுகாதார நிலையங்களை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயலாக்கப்படுவதாலும், பொது மக்களாலும், தனியார் நிறுவனங்களாலும் இத்திட்டம் பெரிதும் வரவேற்கப்படுவதாலும், சில தொண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெறும், மனுக்களை பொறுத்து மேலும் 50 சிறு நிலையங்களை அமைக்க உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம்:

பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம், கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த சுகாதாரப் பணிகளை வழங்குவதற்கான மற்றுமொரு திட்டமாகும்.

மலேரியா ஒழிப்பு பராமரிப்புத் திட்டம், பெரியம்மை ஒழிப்புத் திட்டம், தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம், முதலான பல்வேறு திட்டங்களைத் அரசு நிறைவேற்றி வருகிறது. ஒவ்வொரு திட்டப்பணிக்கென சுகாதாரப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கென வரையறுக்கப்பட்ட திட்டப் பணிகளை, பிறதிட்டங்களுடன் ஒருமைப்பாடின்றி, செய்து வருகின்றனர். இவர்கள், திட்டத்தின் தேவையைப் பொறுத்து 10,000 முதல் 20,000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகைய தனித் திட்டப்பணியாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு எல்லா திட்டங்களையும் நிறைவேற்றப் பயன்படுத்தப்படுவார்களேயானால் அவர்கள் ஒரு சிறு பகுதிக்கு, சிறிய மக்கள் தொகைக்கு பணிபுரிய வேண்டி வருவதுடன், அந்தந்தப் பகுதி கிராமங்களில் வாழும் குடும்பங்களின் நோய்த் தடுப்பு முறைகளை இரண்டே சுகாதாரப் பணியாளர்கள் கவனித்துக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 5;000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆண், மற்றும் ஒரு பெண் சுகாதாரப் பணியாளர் வீதம் அமர்த்தப்படுவார். இப் பணியாளர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள மக்கள் தொகைக்கு சாதாரண நோய்கள் எவையேனும் இருப்பின் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் 5,000 மக்கள் தொகைக்கு மொத்த சுகாதாரப் பணிகளையும் செய்து வருவார்கள். நான்கு ஆண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு ஆண் மேற்பார்வையாளர் வீதமும் நான்கு பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு பெண் மேற்பார்வையாளர் வீதமும் அமர்த்தப்படுவார்கள்.

செங்கற்பட்டு, தென்னார்காடு, மதுரை, சேலம், கன்னியாகுமரி மாவட்டங்களில் முதற்கட்டமாக நிறைவேற்றப்படும் பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட

விருக்கும் பல்வேறு திட்டங்களின்கீழ் ஆண் சுகாதாரப் பணியாளர் மற்றும் ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களாக அமர்த்தப்படுவதற்குத் தேவையானவர்கள், ஏற்கெனவே உள்ள பல்வேறு திட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். பெண் சுகாதாரப் பணியாளர் மற்றும் பெண் சுகாதார மேற்பார்வையாளரைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விரைவில் பொறுப்பேற்பார்கள்.

இந்திய அரசு 1981 ஆம் ஆண்டிற்குள் இத்திட்டம் தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. அதிகமான மருத்துவச் சார்பற்ற பணியாளர்களுக்கும், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியிருப்பதால், பயிற்சியளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கையையும் பள்ளிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

(iv) மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டம்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் கோட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் காந்தி கிராம நிறுவனம் ஆத்தூர் வட்டாரத்தில் பின்பற்றிய புதிய முறைகளின்படி ஒருங்கிணைந்த ஒருமுகப்பட்ட சுகாதாரப் பணிபுரிவதற்கென்று, மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணியாளர் பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிந்த பின்னர் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

III. தாய்-சேய் நலப் பணிகள்.

(அ) மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள்:

மகப்பேற்றுக்குரிய வயதுடைய மகளிர் (15—45 ஆண்டுகள்) மற்றும் குழந்தைகள் (0—16 ஆண்டுகள்) சுகாதாரக் கேடுகளுக்கு எளிதில் இரையாகிறார்கள். அவர்கள் நமது மக்கள் தொகையில் 60 சதவீதத்தினராக உள்ளனர். அவர்களுடைய சுகாதார மேம்பாட்டுக்காகவும், நோய்த் தடுப்புக்காகவும், அவர்களிடைத் தோன்றும் நோய்களை விரைவில் கண்டறிந்து சிகிச்சையளிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சி வளமான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் தாய்மார்களிடையே குறைவான இறப்பு என்ற வகையில் பெரும் பயன் தரவல்லதாகும்,

எனவே, நல்ல தரமுள்ள மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகளுக்கான ஏற்பாடு எப்போதும் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக விளங்குகிறது.

கிராமப் பகுதிகளில், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு மகப்பேறு நிலையங்களின் மூலம் மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகள் செய்யப்படுகின்றன. இந்நிலையங்களில் மகப்பேறு உதவியாளர்களின் தொழில் நுட்ப வேலைக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையச் சுகாதாரப் பார்வையாளர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் வழி காட்டுகின்றனர்.

சாதாரண பிரசவங்களைக் கவனிக்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு படுக்கை வசதி உள்ளது. சிக்கலான பிரசவ வேதனையுள்ள மகளிர் சிறந்த வசதிகள் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் 2,983 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 2,880 நிலையங்கள் அரசு நிதி உதவியுடன் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

நகராட்சிப் பகுதிகளில். மகப்பேறு சேய் நலப் பணிகள் நகராட்சி மன்றங்கள் நடத்தும் மகப்பேறு நிலையங்கள் மற்றும் மகப்பேறு இல்லங்களினால் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்துக்காக நகராட்சி மன்றங்கள் 25 சதவீத மானியம் பெறுவதற்கு உரியனவாகும். நமது மாநிலத்தில் 128 நகராட்சி மகப்பேறு இல்லங்களும், 372 நகராட்சி மகப்பேறு நிலையங்களும் உள்ளன. இத்திட்டத்திற்கு 1976-77-ம் ஆண்டுக்கு ரூபாய் 14.93 இலட்சம் உதவி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப்பணிகள்.

பள்ளிக் குழந்தைகளின் நலப்பணிகள் திட்டம் 1965-ல் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் 53 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 5 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஆண்டொன்றுக்கு 6 முதல் 11 வயது வரை உள்ள 2,000 பள்ளிக்குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது; நகரப் பகுதிகளில் ஒரு நகராட்சிக்கு, ஆண்டொன்றுக்கு 10,000 பள்ளிக் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, உடல் நலம் குறைவாகத் தோன்றும் மாணவர்கட்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்கல்வி நிறுவனங்களில், எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் உடல் நலம் மற்றும் நோய்கள் பற்றிய சில பொது உண்மைகளை அறிந்து கொள்ளவும், அவர்களுடைய உடல் நலனைக் காத்துக் கொள்ளும் வழி முறைகளை அறிந்து கொள்ளவும், இப்பள்ளிகளில் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது. 1977 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 72,371 மாணவர்கள் மருத்துவ சோதனை செய்யப்பட்டனர்.

1978-79ல் மேலும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தினை நீடிக்க கருதப்பட்டுள்ளது.

(இ) மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம்.

தமிழ்நாட்டில் மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் 1964-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்படி, கக்குவான், தொண்டை அடைப்பு, இசிவு நோய் ஆகிய நோய்களைத் தடுக்கின்ற முத்தடுப்பு ஊசி 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதார

நிலையங்கள் மூலமாகப் போடப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் 8 முதல் 12 வார இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராமப் பகுதிகளில் இத்திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றுவதற்காக 13 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்ட பொது சுகாதார செவிலி அமர்த்தப்பட்டார். மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்களும் படிப்படியாக அமர்த்தப்பட்டு வருகின்றனர். இதுவரை 85 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்தகைய கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 1978-79 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக சுகாதாரப் பார்வையாளர் ஒருவரை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் (0—5 வயது) எண்ணிக்கை வருமாறு:—

ஆண்டு.			தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.
1974-75	..	..	1,18,528
1975-76	..	..	1,86,528
1976-77	..	..	2,62,209
1977-78	..	..	1,59,814 (டிசம்பர் 1977 வரையில்.)

மூன்று நோய்த் தடுப்பு ஊசி மருந்து கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மத்திய அரசினரால் வழங்கப்படுகின்றது. 1977-ம் ஆண்டின் பிற்பகுதியில் இம்மருந்து கிடைப்பதில் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் மூன்று நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தை செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டன. எனவே, தமிழ்நாடு மற்றும் தேவையானால் மற்ற மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கிண்டி கிங் நிறுவனத்தில் தடுப்பு ஊசி மருந்தைத் தயாரிக்க இவ்வரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

ஊட்டச் சத்து மேம்பாடு.

நம் நாட்டு மக்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துதல் முக்கியமான சுகாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதற்காக மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், பால்வாடிகள் ஆகிய இடங்களில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து பற்றிய கல்வி விளக்கம் அளிக்கப்படுகிறது.

தாய்மார்கள், குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை மேம்பாட்டுக்கான சில சிறப்புத் திட்டங்கள் வருமாறு:—

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் 'ஏ' உயிரின் சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்தலுக்கான மருத்துவ வசதித் திட்டம்.

(4) மலைவாழ் பழங்குடி மக்கள் வளர்ச்சித் திட்டம்.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்.

(6) 'கேர்' நிறுவன உதவியுடன் நடைபெறும் தாய் சேய் நல உணவு வழங்கும் திட்டம்.

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.—இத்திட்டம் தல்லி வட்டாரம் மற்றும் நிலக்கோட்டை வட்டாரத்திலும், சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் 1976-ல் தொடங்கப்பட்டது. இவ்விரண்டு கிராம வட்டாரங்களிலும் 31,348 பள்ளிக் குழந்தைகள் மற்றும் 20,146 தாய்மார்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். குழந்தைகளுக்கு காச நோய், பெரியம்மை, தொண்டை அடைப்பு, கக்குவான், இசிவு நோய்களுக்கான தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. சத்துக் குறைப்பாடுகளை ஈடு செய்வதற்காக உணவுப் பண்டங்களும் கொடுக்கப்பட்டன.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.—சேய் கவனிப்பு முன்னோடித் திட்டம் மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 கிராமங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புவனம் வட்டாரத்தில் 46 கிராமங்களிலும் திட்டப்பணியில் சேரா திட்டமாக வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகிறது. இத் திட்டத்தின் பரந்த குறிக்கோள்களாவன:—

(i) ஒவ்வொரு கிராமத்திலும் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையம் ஒன்று வீதம் படிப்படியாகத் தொடங்குதல். மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையத்தில் குழந்தை ஊட்டச் சத்துத் துறையில் பயிற்சி பெற்ற ஒரு பாலசேவிகாவின் பொறுப்பின்கீழ் ஒவ்வொரு ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையமும் இருக்கும். ஊட்டச் சத்தில் தொடர்ந்து ஆர்வம் இருக்கும் வகையில் அவர் தாய்மார்களுக்கு அறிவுறுத்துவார்.

(ii) கிராம மக்களுக்கு உணவு வழங்குதல், மற்றும் நிலையம் அமைப்பதற்குத் தேவைப்படும் பிற வசதிகளைச் செய்தலின் மூலம் ஆர்வமுடன் ஈடுபடச் செய்தல்.

(iii) குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைபாட்டைக் குறைத்தல், மற்றும் 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளை சராசரி உயரம் மற்றும் எடைக்குக் கொண்டு வருதல்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே தோன்றும் கண் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்துதல்.

செயல்முறை ஊட்டச் சத்து உணவுத் திட்டம் செயல்படாத ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் குழந்தைகளின் கண் பார்வையிழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை சமூக நலத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதற்கு தமிழ் நாடு அரசு ஒப்பளித்துள்ளது.

இத்திட்டம் கீழ்க்கண்ட வட்டாரங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது:—

வட்டாரங்கள். (1)	மாவட்டங்கள். (2)
பனைமரத்துப்பட்டி	சேலம்.
பூதலூர்	தஞ்சாவூர்.
நரிக்குடி	இராமநாதபுரம்.
அன்னவாசல்	புதுக்கோட்டை.
அந்தநல்லூர்	திருச்சிராப்பள்ளி.
கணியம்பாடி	வட ஆற்காடு.
திருத்தணி	செங்கற்பட்டு (வடக்கு)
அச்சரப்பாக்கம்	செங்கற்பட்டு (தெற்கு).
பரங்கிப்பேட்டை	தென்னாற்காடு.
கொட்டாம்பட்டி	மதுரை.
கிள்ளியூர்	கன்னியாகுமரி.
உதகமண்டலம்	நீலகிரி.

மேற்குறித்த வட்டாரங்களில் கீரைகள், காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், மீன் முதலிய வைட்டமின் 'ஏ' சத்துமிக்க உள்ளூரில் கிடைக்கத்தக்க உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குகின்ற ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மருத்துவ சார்பற்ற பணியாளர்கள் மற்றும் சமுதாயப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். அவர்கள், சத்துக் குறைப்பாட்டு நோய்களைக் கண்டறிந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' டானிக்குகள் வழங்குகின்றனர்.

(4) மலைவாழ் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்.—இம்மலைப் பகுதிகளில் வாழ்கின்ற பழங்குடி மக்களின் சுகாதாரப் பணிகளுக்கென்று கல்ராயன் மலைகளில் ஓர் இயங்கு மருத்துவப் பிரிவை அரசு அமைத்துள்ளது. இப்பகுதி மக்களுக்கு சத்துக்குறை ஈடு

செய்யும் உணவுப் பொருட்களும், வைட்டமின் 'ஏ' மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. இப்பகுதிகளில் கிராமக் கழிவிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்.—1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து, சேலம் நகராட்சியிலும், சேலம் மாவட்டம், கண்ணன் குறிச்சி வட்டாரத்திலும் "கேர்" நிறுவன உதவியுடன் தமிழ்நாடு அரசு, குடும்ப நல முறைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்காக ஒருங்கிணைந்த ஊட்ட சத்துத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் "கேர்" நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஊட்ட உணவுகளை வழங்குதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல், குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொண்ட குடும்பங்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி செல்லும் வயதடையா சிறுவர், சிறுமியர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலானோருக்கும் உடல் நலப் பரிசோதனை மற்றும் வைட்டமின் மாத்திரைகள் வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படுகிறது.

(6) உணவு வழங்குதல் திட்டம்.—ஏழை மக்களுக்கு குறிப்பாக கிராமப்பகுதிகளிலும் நகரங்களில் குடிசைப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கு உதவுகின்ற வகையில் மகப்பேறு மற்றும் சேய் நல நடவடிக்கைகள்; 'பால்வாடி' நடவடிக்கைகள் இவற்றின் ஒரு பகுதியாக சத்துக் குறை நிரப்பு உணவு வழங்குத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பேர்களுக்கு 3,306 உணவு வழங்கும் நிறுவனங்கள் மூலம் "கேர்" வழங்கும் கூடுதல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் நிலையிலுள்ள தாய்மார்கள் அல்லது பள்ளிப் பருவம் அடைந்திராத இளஞ்சிறார்களும் ஆவர்.

உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தல், கடுமையான சமூகத் தீமைகளில் ஒன்றாகும். சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரச் சட்டத்தின் மூலம் இத்தீமையைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் நம்பத்தக்க தரமுள்ள உணவுப் பண்டங்களை மட்டுமே வாங்குவதன் மூலம் சிறந்த உணவுப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிப்பதற்கும், உணவுப் பண்டங்கள் தரம் குறைந்துள்ளன மற்றும் கலப்படம் செய்யப்பட்டுள்ளன என்ற சந்தேகம் எழும்போது அறிவிப்பாளர்களாகச் செயல்படுத்துவதற்கும், கிராமம் மற்றும் நகரப்பகுதிகளில் பணிபுரியும் சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள், பிற சுகாதாரப் பணியாளர்கள், சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். கலப்பட உணவு தயாரிப்போர், சேமித்து வைப்போர், விற்பனை செய்வோர் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்காக 1977 ஆம் ஆண்டு விற்பனைக்கு வைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் 22,700 மாதிரிகள் பகுப்பாய்வு, செய்யப்பட்டன. இவற்றுள் 4,300 மாதிரிகளில் சோதனைமூலம், கலப்படம் செய்யப்பட்டதாக கண்டறியப்பட்டது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரை அபராதமாக விதிக்கப்பட்ட தொகை ரூ. 10.73 இலட்சமாகும். அதிகமாக உணவு மாதிரிகளை பகுபப்பாய்வு செய்வதற்கு இப்பொழுதுள்ள ஆய்வுக்கூடங்களில் வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டையில் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டு இலாக்காவால் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேலத்தில் ஆய்வுக்கூடம் கட்டுதல் முடியும் தருணத்தில் இருக்கிறது. இத்துடன் நமது மாநிலத்தில் மொத்தம் 7 (ஏழு) உணவு ஆய்வகங்கள் உள்ளன. இவற்றின்மூலம் ஆண்டொன்றுக்கு 50,000 உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை அனுப்ப முடியும்.

உணவுக் கலப்பட தடுப்புச் சட்ட விதிகளைச் செயல்படுத்துவதற்காக சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு 121 ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

VI தொற்று நோய்த் தடுப்பு:

(1) வாந்தி பேதி (காலரா).—வட ஆற்காடு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் இந்நோய் பரவுதற்குரிய இடங்கள், அரசு போதுமான காலரா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சுகாதார ஆய்வாளர்கள், காலரா பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற சிறப்புப் பணியாளர்கள், நோய்க்குரிய இம்மாவட்டங்களில் காலராத் தடுப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளனர் மேலும், மாவட்டத் தலைநகரங்களில் 64 தனி கொள்ளை நோய் சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். அவர்கள் வாந்தி பேதி, குடல் இரப்பை நோய்கள் அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு காலராத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பப்படுகின்றனர்.

(2) பிளேக் நோய்:—தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு முதல் பிளேக் நோய் முற்றிலும் இல்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வட ஆற்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் முதலான பிளேக் நோய் பரவும் மாவட்டங்களில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

(3) பெரியம்மை:—தமிழ்நாட்டில் 1963 ஆம் ஆண்டிலிருந்து தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டபின்னர், 1969 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பெரியம்மை நோய் இல்லை. 1974 ஆம் ஆண்டு வரை வெளி மாநிலங்களிலிருந்து வந்த சிலருக்கு இந்நோய் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. "இந்தியா பெரியம்மையிருந்து அறவே விடுபட்டுள்ளது" என்று 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்

23 ஆம் தேதியில் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இதுகுறித்து நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருக்கக் கூடாது என சர்வதேச பெரியம்மை பற்றிய நிபுணர் குழுவும் இந்திய அரசும் எச்சரித்துள்ளன. உலகம் முழுவதும் பெரியம்மை நோயிலிருந்து விடுபட்டதாக விளம்பும் வரையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்பட வேண்டுமென தெரிவித்துள்ளன.—

(i) புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு முதல் நிலையில் அம்மைப்பால் குத்துதல்;

(ii) தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் பெரியம்மை என ஐயப்படத்தக்க நோய் இருக்கும் பகுதிகளை கண்டறிந்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தவிர ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்வதற்காக மாதிரிகளை சேகரித்தல்.

இந்த நடவடிக்கைகள் நம் மாநிலத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்ட அலுவலர்கள் மேலே கூறியுள்ள வேலைகளுடன், தடுப்பு ஊசி போடும் விரிவுத்திட்டத்தை நிறைவேற்ற ஈடுபடுவர். தொண்டை அழற்சி நோய், கக்குவான், இசிவு நோய், சின்னம்மை, இளம்பிள்ளைவாதம், காசநோய் ஆகியவற்றின் கண்காணிப்புக்கும் தடுப்பு ஊசி குத்துவதற்கும் இத்திட்டம் ஒருங்கிணைந்து செயல்படும். தற்பொழுது மாநிலத் தலைமை இடத்திலுள்ள தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்டப்பிரிவு, மத்திய அரசின் கருத்துரைப்படி ''கொள்ளை நோயியல் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பிரிவு'' என பெயர் மாற்றம் செய்யப்படும். அலுவலர்கள் உலக சுகாதார நிறுவனத்தின் நிதி உதவியுடன் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளை மேற்கொள்ள மறு பயிற்சியளிக்கப்படுவர். தடுப்பு ஊசி மருந்துகளும், அவைகளை சேமித்து வைப்பதற்காக குளிர்பதன இயந்திரம் போன்ற கருவிகளும் இந்திய அரசினரால் வழங்கப்படும்.

(4) மலேரியா.— தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றி வந்தது. 1977-ல் இந்திய அரசு தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் திருத்தப்பட்ட செயல் திட்டத்தை எல்லா மலேரியா நோயாளிகளையும் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பதன் மூலமும், மலேரியாவினால் ஏற்படும் நலிவு மற்றும் இறப்புகளை ஒழித்தல் அல்லது குறைத்தல் மற்றும் மலேரியா பரவுதலைக் குறைப்பதற்காக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் வகுக்கப்பட்டுள்ளது. இத் திருத்தப்பட்ட செயல் திட்டம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

நமது மாநிலத்தில் தற்போது சென்னை, சேலம், ஈரோடு திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர், தூத்துக்குடி முதலான சில நகர் பகுதிகளிலும், வட ஆற்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி மாவட்டங்களிலும் பெண்ணையாற்றங்கரையோரக் கிராமப்பகுதிகளிலும் இராமேசுவரம் தீவு உட்பட இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கறை கிராமங்களில் மட்டுமே மலேரியா நோய் உள்ளது. நகர்பகுதிகளில் தீவிர நோய் கண்டறிதல் மற்றும் மருந்து வழங்குதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத்துடன் மலேரியா பரப்பும் கொசு உற்பத்தியை குறைப்பதற்கான ''புழு ஒழிப்பு பணிகளும்'' மேற்கொள்ளப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் மலேரியா காய்ச்சலைக் கண்டறிந்து அவரவர் வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்காக 15 நாட்களுக்கொருமுறை ஒவ்வொரு குடும்பத்தினரையும் அலுவலர்கள் பார்வையிட்டு வருகின்றனர். மேலும் கிராமங்களில் எல்லா நேரங்களிலும், மலேரியாத் தடுப்பு மருந்துகள் கிடைக்கும் வகையில் ஆர்வமுள்ள கிராமத்தினரின் ஒத்துழைப்புடன் கிராமங்களில் காய்ச்சல் சிகிச்சை நிலையங்களும், மருந்து வழங்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 2,625 கிராமங்களில் இத்தகைய மருந்து வழங்கும் நிலையங்கள், காய்ச்சல் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மலாதியன் அல்லது டி.டி.டி. பி.எச்.சி. மருந்து தெளித்தல் போன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளினால் காய்ச்சலைக் கண்டறிதலும் சிகிச்சையளித்தலும் வலுப்படுத்தப்படுகின்றன. இத்தகைய மருத்து தெளிப்பு வேலை இராமேஸ்வரம் தீவிலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தென்னார்க்காடு, வடாற்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களிலும் பெரிய அளவில் செய்யப்படுகிறது.

ஏற்கெனவே மத்திய அரசு திட்டமான நகர்புற மலேரியா திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நகரங்களைத் தவிர, வேலூர், ஈரோடு நகரங்களுக்கும் நகர்ப்புற மலேரியாத் திட்டத்தை அரசு விஸ்தரித்துள்ளது. பெருமளவில் நோய் பரவும் இடங்களான திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும் இத்திட்டத்தை மேற்கொள்ளும்படி இந்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1977-ம் ஆண்டில் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. 1977-ம் ஆண்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 79,537. ஆனால் 1976-ம் ஆண்டில் மலேரியா கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 1,03,921 ஆக இருந்தது.

5. யானைக்கால் நோய்.—நமது மாநிலத்தில் க்யூலெக்ஸ் என்ற வகை கொசுக்களினால் பரப்பப்படும் யானைக்கால் நோய் இருக்கிறது. இந்த நோய் மிகுதியாகப் பரவும் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை 1957-58-லிருந்து நாம் நிறைவேற்றி வருகிறோம். நான்காம் ஐந்தாண்டு திட்ட காலங்களில் இதுவரை பதின்மூன்று கட்டுப்பாட்டு யூனிட்டுகள், ஒரு சர்வேயூனிட்டு, மூன்று யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு கிளினிக்குகள் நிறுவப்பட்டன. மேலும் இரண்டு கட்டுப்பாட்டு யூனிட்டுகளும், பத்து யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுக் கிளினிக்குகளும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளன.

அரசு செயற்படுத்தும் யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை உதவி மானியத் திட்டத்தின் மூலம் 169 உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றி வருகின்றன.

6. நரம்பு சிலந்திநோய்.—இத்திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) நரம்புச் சிலந்தி நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிதலும், அவர்களுக்கு சிகிச்சையளித்தலும்:

(2) இந்நோயைப் பரவச் செய்யும் சைகிலோப் என்னும் ஒரு வகை நத்தையைக் கொல்லுவதற்காக ஆறு வாரங்கட்கு ஒரு முறை நோய்க் கிருமிகள் உள்ள தண்ணீரில் டி.டி.டி. (D. D. T.) 5 பி.பி.எம். (5 P. P. M.) பூச்சிக் கொல்லி மருந்தை தெளித்தல்.

7. யாஸ் (சரும) நோய்.—யாஸ் (சரும) நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு யூனிட் திட்டப் பணியாக சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த யூனிட் கல்ராயன் மலைகளில் ஆய்வு நடத்தி வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில், இந்த யூனிட் 176 யாஸ் நோயாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்தது.

8. காலா அஜார் (கருங்காய்ச்சல்).—காலா அஜார் கட்டுப்பாட்டுத் திட்டம் இராமநாதபுரத்தில் 1977ஆம் ஆண்டு மே மாதம்வரை செயல்பட்டு வந்தது. அம்மாவட்டத்தில் வேலை முடிந்த பிறகு இப்பிரிவு திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. இப்பிரிவு காலா அஜார் நோயாளிகளைக் கண்டறியவும், மக்களிடையே இந்நோய் பரப்புகின்ற மணல் ஈக்களின் செறிவையும் இம்மாவட்டத்தில் ஆய்வு நடத்துகிறது. இப்பிரிவினால் 1977-ஆம் ஆண்டில் 48 நோயாளிகள் கண்டறியப்பட்டனர். கண்டறியப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்கென்று அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

VII வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள்.

1977 அக்டோபர், நவம்பர் மாதங்களில் சென்னை மாநகரம் மற்றும் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும், மதுரை இராமநாதபுரம், தென்னார்க்காடு மாவட்டங்களின் பகுதிகளும் புயலினாலும் பெருமழையினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டன. சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் தீவிரமான வெள்ளத் துயர் துடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. காலராத் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் தேவையான எல்லா மருந்துகளும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் போதுமான அளவில் வெள்ளம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விரைந்து அனுப்பப்பட்டன. மொத்தம் 60 இலட்சம் காலராத் தடுப்பு ஊசிகள் (வெள்ளம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 51 இலட்சமும், சென்னை மாநகரில் 9 இலட்சமும்) போடப்பட்டன. வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளில் 1,500 சுகாதார பணியாளர்கள் 44 சுகாதார அலுவலர்களின் மேற்பார்வையில் 8 மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறை உதவி இயக்குநர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். சுகாதாரப் பணியாளர்கள் காலராத் தடுப்பு ஊசிகள் போடுவதுடன் கூட, இறந்தவர்களின் உடலை அப்புறப்படுத்துதல், குப்பைகள் முதலான கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் போன்ற வேலைகளிலும் உதவி செய்தனர். வெள்ளத் துயர் துடைப்புப் பணியின் பகுதியாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மொத்தம் 4.4 இலட்சம் மக்கள் எல்லா வகை நோய்களுக்காகவும் சுகாதாரக் குழுக்களினால் சிகிச்சை அளிக்கப்பட்டனர். மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறைப் பணியாளர்கள் சரியான நேரத்தில் தடுப்பு நடவடிக்கைகளை இரவு பகல் 24 மணி நேரமும் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பகுதி மக்களின் எண்ணிக்கையையும் நீர் வழி பரவும் நோய்களையும் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது நிலைமை மோசமடைந்திருக்கும். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ளூர்ப் பணியாளர்களைக் கொண்டு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

VIII சந்தைகளும், திருவிழாக்களும்

சந்தைகளிலும் திருவிழாக்களிலும் செய்யப்பட்டுள்ள துப்புரவு ஏற்பாடுகள் மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறைப் பணியாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது. சில முக்கிய திருவிழாக்களின் தொடர்பாகச் செய்யப்படும் துப்புரவு ஏற்பாடுகள், மக்கள் நல்வாழ்வுத் துறை உதவி இயக்குநரால் நேரடி மேற்பார்வை செய்யப்படுகின்றன. எல்லா சந்தைகளும் மற்றும் திருவிழாக்களும் எந்தவிதக் கொள்ளை நோய்களும் தோன்றாமல் நடந்தேறின.

[1978 மார்ச் 28

IX சுகாதாரக் கல்வி

சுகாதாரப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண்பதற்கு
மக்களின் மனமுவந்த ஒத்துழைப்பு தேவையாகும். இந்த
உண்மையை உணர்ந்து மாநில சுகாதாரக் கல்விக் கழகம், கீழ்க்
கண்ட குறிக்கோள்களுடன் அமைக்கப்பட்டுள்ளது:—

(1) மக்கள் தங்களின் சுகாதாரப் பிரச்சினைகளை புரிந்து
கொள்ள உதவுதல்.

(2) சிறந்த சுகாதாரத் தரங்களை மக்கள் விரும்பி
ஏற்றுக்கொள்ள உதவுதல்.

(3) மக்கள் அவர்களுடைய சொந்த முயற்சி மற்றும்
செயல்களின் மூலம் அவர்களுடைய சுகாதாரப் பிரச்சினை
களைத் தீர்த்துக்கொள்ளும் பொறுப்பு ஏற்பதற்கு உதவுதல்

(4) சுகாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறை
வேற்றுவதில் மக்களின் ஒத்துழைப்பையும் மனமுவந்த ஈடு
பாட்டையும் திரட்டுதல்.

(5) சுகாதாரக் கல்வி முறையில் சுகாதாரம் மற்றும்
குடும்ப நலத் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

இக்கழகம் தென்னார்க்காடு, தஞ்சாவூர். மதுரை, இராம
நாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய
ஏழு மாவட்டங்களுக்கு ''யூனிசெப்'' நிறுவனத்திடமிருந்து,
ஒலி—ஒளிக் காட்சி சாதனங்களைப் பெற்றுள்ளது. திருநெல்
வேலி, மதுரை, தஞ்சாவூர், செங்கற்பட்டு (பூந்தமல்லி)
மாவட்டங்களில் கிராமக் கழிப்பிட திட்டம் பற்றியும், சுற்றுப்
புற துப்புரவு பற்றியும் கல்வி விளக்கம் அளிப்பதற்கு ஆராய்ச்
சிச் செயல் திட்டப் பிரிவுகள் பணிபுரிந்து வருகின்றன.

இக்கழகம் சுகாதாரக் கல்வி பற்றிய பாடங்களைப் பல்வேறு
வகுப்புகளில் பாடத் திட்டத்தில் சேர்ப்பதற்கு உதவி செய்
துள்ளது. இதுவரை மாநிலத்தில் பல்வேறு பள்ளிகளில் 579
ஆசிரியர்களுக்கு பள்ளிகளில் சுகாதாரக் கல்வி கற்பிக்க சுகா
தாரக் கல்வி முறைகளில் பயிற்சி அளித்துள்ளது. மேலும்
இந்திய அரசின் தேசியப் பள்ளிச் சுகாதார திட்டத்தின் கீழ்
பள்ளிகளில் சுகாதாரக் கல்விப் பழக்கங்களை செயல் விளக்
கங்களின் மூலம் நடத்திக் காட்ட 30 பள்ளிகளை மேற்
கொள்ள இது கருதியுள்ளது.

தர்மபுரி மாவட்ட ஆரம்ப சுகாதார நிலையப் பணி
அலுவலர்கட்கு சுகாதாரக் கல்வித் திட்ட பயிற்சி அளிக்கப்
பட்டது.

1977—ம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி
களில் நோய்க் கிருமிகள் பாதிக்காத முறையில் தூய்மை
படுத்திய நீரைக் குடித்தல் முதலியன பற்றி மக்களுக்கு
அறிவுறுத்தும் பொருட்டு மக்களிடையே விநியோகிப்பதற்
காக மாநில சுகாதாரக் கல்வி அச்சகம் சுவரொட்டிகள்,
துண்டு அறிவிப்புகள் உட்பட 76 வெளியீடுகளை அச்சிட்டு
வெளியிடப்பட்டுள்ளது.

1978 மார்ச் 28]

திரைப்படத் தொகுப்பகம் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் முதலான இடங்களில் திரையிடுவதற்கென்று 552 படங்களை வழங்கியுள்ளது. மேலும் இக்கழகம் பல்வேறு பொது சுகாதாரப் பொருள் பற்றி 38 திரைப்படக் காட்சி கள், 30 பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாரத்தில் யூனி செப் நிறுவன உதவியுடன் ஒரு சிறப்பு சுகாதாரக் கல்வித் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதற்காக கிராமத்திற்கு ஒருவர் வீதம் 28 உறுப்பினர்கள் அக்கிராமத்திலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்திற்கு தேவைப்படும் துணைச் சாதனங்கள் முதலியன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

X பிறப்பு இறப்புப் பதிவு

பல்வேறு சுகாதாரத் திட்டங்களை உருவாக்கிச் செயற் படுத்த மக்கள் பிறப்பு இறப்பு புள்ளிவிபரங்களைச் சேகரிப்பது இன்றியமையாததாகும். 1899 ஆம் ஆண்டு III-வது சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம், 1919 இவற்றின் கீழ் 30-6-1977 வரை செய்யப்பட்டு வந்த பிறப்பு இறப்புகள் பதிவு 1 - 7 — 1977 முதல் 1969-ம் ஆண்டு 18-வது மத்திய சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சட்டங்களின் கீழ் குடிமுறைப் பதிவு முடிவு பெறவில்லை. எனவே சரியான பிறப்பு வீதம் இறப்பு வீதம் முதலியவற்றையும் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தையும் அறிவதற்கு மாதிரிப் பதிவு திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது.

XI மருந்து கட்டுப்பாடு

மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் இம்மாநிலத்தின் மருந்து கட்டுப்பாடு அதிகாரி ஆவார், அவருக்கு உதவியாக ஒரு இணை மாநில மருந்து கட்டுப் பாடு அதிகாரியும் 2 உதவி மாநில மருந்து கட்டுப்பாடு அதிகாரிகளும். 59 மருந்து ஆய்வாளர்களும், பத்து முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் உள்ளனர். மருந்து கட்டுப்பாடு அமைப்பின் முக்கியப் பணிகளாவன:—

(அ) மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் தயாரிப்பு, விற்பனை விநியோகம் முதலியவற்றை ஒழுங்கு படுத்துவதன் மூலமாக, மருந்து மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தை அமுல் செய்வது.

(ஆ) மருந்துப் பொருட்களின் அதிக பட்ச சில்லரை விலை நிர்ணயிக்கும் 1955-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட 1970-ம் ஆண்டு மருந்துப் பொருள் (விலைக்கட்டுப்பாடு) ஆணையின் விதித் துறைகளைச் செயல்படுத்தல்.

(இ) 1954-ம் வருடத்திய மருந்து மற்றும் மாந்திரீக நிவாரண (தவிர்க்கப்படவேண்டிய விளம்பரங்கள்) சட்டத்தை அமுலாக்குதல்.

(ஈ) அபாய மருந்து சட்டத்தின் கீழ். அபாய மருந்துகளை கைவசம் வைத்திருத்தல், தயாரித்தல், மற்றும் விற்பனை செய்தல் போன்றவைகளை ஒழுங்கு படுத்துதல்.

(உ) மருந்துகள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்தல், லெவி சர்க்கரையை மருந்து தயாரிக்கும் தொழில்களுக்கு பங்கிடுதல்.

(ஊ) சாராவி மற்றும் போதைப் பொருட்கள் கலந்திருக்கும் மருந்து, உள மயக்கம் தரும் மருந்துகள் மற்றும் வாசனைக் கலவைகளை தவறான வழிகளில் பயன்படுத்துவதை தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

(எ) பொது மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கின்றனவா என்பதைக் கவனித்து எங்கெல்லாம் மருந்துகளின் பற்றுக்குறை ஏற்படும் என்று தோன்றுகிறதோ அங்கெல்லாம் போதுமானநிவாரண நடவடிக்கைகள் எடுத்தல்.

(ஏ) மருந்துகளின் எதிர் விளைவுகள் பற்றிய முறையீடுகளை புலனாய்தல்.

(ஐ) சோதனை வசதிகள்

மருந்து ஆய்வாளர்களிடம் இருந்து வரும் மாதிரி மருந்துகள் மற்றும் வாசனைப் பொருட்களை மக்கள் நல்வாழ்வு மருந்துத் துறை இயக்குநரின் கீழ் உள்ள கிண்டி கிங் நிலையத்திலுள்ள அரசு பகுப்பாய்வு ஆராய்ச்சியாளர் சோதனை செய்கிறார்.

1974-ல் அனுமதி வழங்கப்பட்ட மருந்து ஆய்வுக்கூடம் ரூ. 18 இலட்சம் மதிப்புள்ள புதிய உபகரணங்களுடனும், வசதிகளுடனும் கூடிய சீக்கிரத்தில் செயல்படவிருக்கிறது. அங்காடிகளில் தரமுள்ள மருந்துகள் கிடைப்பதற்கான வழி வகை செய்வதில் இச்சோதனைக் கூடம் மிக உதவியாக இருக்கும்.

போலி மருந்துகளைப் பற்றி மக்கள் எச்சரிக்கும் வகையிலான 250 தொகுப்பு சினிமா சிலைடுகள் (ஒவ்வொரு தொகுப்பிலும் 4 சிலைடுகள் இருக்கும்) தயாரிக்கப்பட்டு சென்னை மாநகர ஆணையாளருக்கும், மாவட்டங்களில் உள்ள பொது சுகாதார அலுவலர்களுக்கும் திரை அரங்குகளில் வெளியிடுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

ஆயுர்வேதம், யுனானி, சித்த மருந்துகள் தயாரிப்பது மற்றும் விற்பனை செய்வது பற்றிய மருந்துகள் மற்றும் வாசனைப் பொருட்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளை மருந்து கட்டுப்பாடு நிர்வாகம் 1—6—1977 முதல் அமுல் செய்து வருகிறது. அரிஷ்டம், ஆசவம் போன்றவைகளின் தயாரிப்பு மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்த இது உதவுகிறது.

XII சுற்றுப்புற மாசு கட்டுப்படுத்துதல்

இம்மாநிலம் வேகமாக தொழில் மயம் ஆக்கப்படுவதால், தொழிற்சாலைகளிருந்து வரையறையில்லாமல் வெளியேறும் திட, திரவ, வாயு, கழிவுப்பொருட்கள் சுற்றுப்புறத்தை அசுத்தப் படுத்தி, நிலம், நீர் காற்று ஆகியவைகளை பாதிக்கின்றன. தமிழ்நாட்டில், இத்தகைய சுகாதார சீர்கேட்டை உண்டாக்கும் பெரிய தொழிற்சாலைகள் பின்வருமாறு:—

(1) தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.
(2) சர்க்கரை தொழிற்சாலைகளும், வடிப்பகங்களும்.
(3) காகிதம் மற்றும் காகிதக்கூழ் தொழிற்சாலைகள்.
(4) சிமெண்டு தொழிற்சாலைகள்.
(5) இரசாயன உரத் தொழிற்சாலைகள்.
(6) அனல் மின் நிலையங்கள்
(7) பெட்ரோல் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள்.

தொழிற்சாலைகள் போதுமான அளவில் கழிவுப் பொருட்களை அகற்ற மாசு தடுப்பு முறைகள் போதிய அளவில் உள்ளனவா என்பதையும், தூய்மைக் கேட்டை விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் தக்கமுறையில் அகற்றப்படுகின்றனவா என்பதையும் கண்டறிய கிங் நிலையத்தில் இருக்கும் அரசு நீர்பகுப்பு ஆய்வுக் கூடம் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நேரிட ஆய்வுகளையும் கழிவுப் பொருட்களை அனுப்புதல் பற்றியவைகளையும் பரிசோதித்து வருகின்றது. இதுவுமல்லாமல், தொழிற்சாலைகளில் கழிவுப் பொருட்கள், சுற்றுப்புறங்களை பாதிக்கின்றனவா என்று சரி பார்க்க பலவகையான நிலநீர், தரை நீர், பாதுகாக்கப்பட்ட நீர் இவையாவும் பரிசோதிக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளால் மேற்கொள்ளப்படுகின்ற கழிவுப் பொருள் வெளியேற்றும் நடவடிக்கைகள் காற்று எந்த அளவுக்கு எந்த விதமாக மாசுபடுத்தப்படுகின்றது என்பதை ஆராய தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள், புகைகள், தூசுகள் இவைகளால் சுற்றுப்புறம் மாசுபடுதல் ஆராயப் படுகின்றது.

இந்த ஆய்வுக் கூடம், மாநிலத்தில் சுற்றுப்புற சூழல்கள் தூய்மை கேடு அடைவதாகத் தெரியவரும் இடங்களுக்கு பணியாளர்களை நேரடியாக அனுப்பி வைக்கிறது. சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய அந்த இடத்தை சோதித்து அப்பகுதியை ஆய்வு செய்து கழிவுப் பொருட்கள், நீர், காற்று இவைகளின் மாதிரிகளை சேகரித்து சோதனை செய்யப்படுகின்றன.

நம்மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவ சுகாதார துறையினரால் அனுமதி வழங்கப்படுகிறது. தொழிலின் தன்மை, மேற்கொள்ளப்படும் முறைகள், வெளியேற்றப்படக்கூடிய நலக் கேடு விளைவிக்கின்ற திட, திரவ, வாயுப் பொருள்களின் தன்மை,

மாசுத்தடுப்பு ஏற்பாடுகள், கழிவுப் பொருட்களை வெளிப்படுத்தும் ஏற்பாடுகள், இந்த இடம் தொழிற்சாலைக்கு உகந்ததாயிருத்தல், ஏற்படக்கூடிய புறச் சூழ்நிலை பாதிப்பு முதலியன நன்கு ஆய்வு செய்யப்படுகின்றன. அதன் பின்னர் தொழிற்சாலை நிறுவப் பட்டுள்ள இடம் ஆராயப்பட்டு அவ்வாறு தொழிற்சாலைகள் நிறுவப்படுவதனால் சுகாதாரக்கேடு ஏதும் விளையாது என அறிந்த பின்னரே புதிய தொழிற்சாலைகளை தொடங்க அனுமதி யளிக்கப்படுகிறது.

பழைய தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை தற்போதுள்ள நிலைமையை பரிசோதித்து சுற்றுப் புற மாசு படுத்தலை தவிர்ப் பதற்கு அவசியமாக கையாளும் முறைகளை ஏற்பாடு செய்ய கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

கிண்டியிலுள்ள நீர் பகுப்பாய்வுக் கூடத்தைத் தவிர தனி அலுவலர் (தலைமைப் பொறியாளர்) தலைமையின் கீழ் அமைக்கப் பட்ட சுற்றுப்புற சுகாதாரத் துறை, தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்கள், பூச்சி கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் பயன்படுத்துவது இவற்றால் ஏற்படும் தூய்மைக் கேடு நிலைகளைப் பற்றி ஆராய்ந்து வருகின்றது. சூழ் நிலை மாசுபடுவது சம்பந்தமாக அரசினாலும் மற்றவர்களினாலும் அனுப்பப்படும் பிரச்சினைகளை இத்துறை ஆராய்ந்து தூய்மை கேட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறுகிறது. இந்திய அரசு 1974-ம் ஆண்டு நீர் மாசு தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி நீர் மாசுபடுதலை தடை செய்ய, "மத்திய நீர் மாசு தடுப்பு வாரியம்" ஒன்றை ஏற்படுத்தி யுள்ளது. மத்திய அரசின் சட்டத்தை ஏற்பதா அல்லது மாநில மசோதாவை செயல்படுத்துவதா என்னும் பிரச்சினை அரசின் பரிசீலனையில் உள்ளது.

சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக அரசிற்கு ஆலோசனை கூற மேதகு ஆளுநரின் தலைமையில் சுற்றுப் புற சூழல் காப்புக் கழகம் ஒன்றை தமிழக அரசு 1976-ல் அமைத்தது. இக்கழகம் புதிய தொழிற்சாலைகளுக்கு சுற்றுப்புற சூழல் பாது காப்பு குறித்து அனுமதி வழங்குவதற்காக வழிமுறைகளை அங்கீகரித்துள்ளது. இவ்வாண்டு ஜனவரி திங்களில் மேதகு ஆளுநர் அவர்களைத் தலைவராகவும் முதலமைச்சர் அவர்களை உபதலைவ ராகவும் கொண்டு இக்கழகம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களினால் சுற்றுப்புற சூழ் நிலைக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து ஆராய்ந்து, இக்கழகம் சுற்றுப்புற சூழ்நிலை பாதுகாக்க வேண்டிய முறைகள் பற்றி ஆலோசனை கூறும். சுற்றுப்புற சுகாதாரத்துறை இக்கழகத்தின் அலுவலகமாக பணிபுரிகிறது.

சுற்றுப்புறத்தை பெருமளவுக்கு மாசுபடுத்தும் தோல் பத னிடும் தொழிற்சாலைகள் மாசு தடுப்பு ஏற்பாடு குறித்து தக்க நடவடிக்கைகள் 31-3-1978-க்குள் எடுக்க வேண்டுமென்று அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வடிசாலைகள், ரசாயன காகிதத் தொழிற்சாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றிற்கு இதுபோன்ற அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

21st to 23rd and 27th and 28th March 1978.

VOLUME CXLVIII (Nos. 1 to 5)

PAGES.

A

ABDUL WAHAB, THIRU K. S.—

Policy Note on—

Industrial Development, discussion on 300-304

Jails and Administration of Justice, discussion on 201-204

Medical and Public Health, discussion on ... 655-658

Nationalised Transport, Shipping, Highways and Rural Works, discussion on 15-21, 87

ADJOURNMENT MOTION—

Information *re* strike by Village Officers given notice of 148

ADMINISTRATION OF JUSTICE—

Policy Notes on Jails and—, discussion on ... 156-218

Policy Note on—, laid on the table 219

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—

Declaration of areas of Cumbum Regulated market for paddy, cotton, groundnut and chillies, notification laid on the table 272

PAGES.

A—*cont.*

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—*cont.*

Inclusion of ragi in addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of Dharmapuri Market Committee, notification laid on the table 218–219

Inclusion of ragi in addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of regulated market, Krishnagiri, notification laid on the table 219

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Policy Notes on Nationalised Transport, Shipping, Highways and Rural Works, discussion on ... 6, 7

Secondary Grade Teachers and Specialist Teachers in Government B-Wing High Schools, statement *re* non-regularisation of service 280

Statement under rule 82 of the Council Rules *re*—Appointment of Kavi Arasu Kannadasan as Poet Laureate of the State 651

Decision of Government on demands of University and College Teachers 152–15

ARIVAZHAGAN, THIRU K.—

Policy Note on—

Industrial Development, discussion on ... 304–311, 327

Medical and Public Health, discussion on ... 647–651

Nationalised Transport, Shipping, Highways and Rural Works, discussion on 7, 8, 57–62, 67, 84

PAGES.

A—*cont.*

ASSISTANT HEADMASTERS—
See Teachers

B

BALARAMAN, THIRU L.—

Policy Note on Industrial Development, discussion on 347–354

Policy Note on Medical and Public Health, discussion on 618–622

BALASUBRAMANIAM, THIRU A.—

Multi-purpose Co-operative Society in Namakkal taluk, calling Minister's attention to distraint action against agriculturists by 266–268

Policy Note on Medical and Public Health, discussion on 613–618

BALASUBRAMANIAM, THIRU KU. MA.—

Policy Note on Medical and Public Health, discussion on 600–605, 612

BUSINESS ADVISORY COMMITTEE—
See Committees.

C

COLLEGE(S)—

Question *re*—

Medical Colleges in Ramanathapuram and Kanyakumari districts, establishment of 135–141

Reader in Psychiatry in Thanjavur Medical College, filling up of post of 141–144

PAGES.

C—*cont.*

COMMERCIAL INSTRUCTORS—
See Teachers

COMMITTEES—
Business Advisory Committee, decision of 149–150

CO-OPERATION DEPARTMENT—
Performance Budget for—1978–79, laid on the table 660
Policy Note on—, 1978–79, laid on the table ... 660

CO-OPERATIVE SOCIETIES—
Multipurpose Co-operative Society in Namakkal taluk, Minister's attention called to distraint action against agriculturists by 266–268

COUPLES—
Question *re* posting of married—in one station, implementation in Education Department ... 590–592

D

DEBT RELIEF RULES, 1978—
Making of—, notification laid on the table 271

DEMANDS FOR EXCESS EXPENDITURE FOR 1970–71—
Presentation of Statement 270–271

DEPUTY CHAIRMAN—
Announcement *re*—
Business Advisory Committee's decision 149–150
Election of one Member to the Land Improvement Board 266

PAGES

D—*cont.*

DEPUTY CHAIRMAN—*cont.*

Information *re*—
Adjournment motion *re* strike by Village Officers, given notice of 148
Fire accident in Sayalkudi village, Mudukulathur taluk, relief to victims 594–595
Questions to be answered by Chief Minister 151, 273–275
Land Improvement Board, election of Member to 266
Obituary reference *re* death of Sudarsanam Naidu, Thiru M. V., former Member of the Council ... 259

Policy Note on—
Industrial Development, discussion on ... 281, 288, 289, 298, 306, 308, 309, 310, 344, 394, and 396
Jails and Administration of Justice, discussion on 161, 163, 164, 165, 168, 194, 203, 207
Nationalised Transport, Shipping, Highways and Rural Works, discussion on 7, 21, 52, 53, 54, 58, 61, 63, 73

Statement of Supplementary Expenditure for 1977–78 (Final) and Statement of Demands for Excess Expenditure for 1970–71, discussion on 403

D—*cont.*

D'MONTE THIRU D. V.—

Policy Note on Industrial Development, discussion on

Policy Note on Medical and Public Health, discussion on ... ...

Policy Notes on Jails and Administration of Justice, discussion on ... ...

Policy Notes on Nationalised Transport, Shipping, Highways and Rural Works, discussion on ...

E

EDMUND, THE HON. THIRU G. R.—

Multi-purpose Co-operative Society in Namakkal taluk, Statement *re* distraint action against agriculturists by ... ...

ENGINEERING INSTRUCTORS—

See Teachers

F

FIRE ACCIDENT—

Destruction of houses and damage caused to property by fire accident on 26th February 1978 and consequent hardship to palm-tappers of V.V.R. Colony of Palmgur Production and Co-operative Society in Sayalgudi Panchayat of Mudukulathur taluk, Minister's attention called to ... ...

Information *re*—in Sayalgudi village, Mudukulathur taluk, relief to victims ... ...

FISHERIES—

Performance Budget for 1978–79, laid on the table

Policy Note on—, 1978–79, laid on the table ...

PAGES

G

RGE KOMAGAN, THIRU—

olicy Note on Industrial Development, discussion on 308, 310

H

DICRAFTS DEVELOPMENT CORPORATION LIMITED, TAMIL NADU—

Review on working of—for period ended 31st March 1975 together with Second Annual Report and Statement of Accounts, laid on the table ... 659

GHER PHYSICAL EDUCATION TEACHERS—

See Teachers.

GHWAYS AND RURAL WORKS—

olicy Note on—, laid on the table 88

இக் கடனுக்கு, 1976-77 ஆண்டிலிருந்து 12 சதவீதம் வட்டி உண்டு இணைப்பு 1-ல் 1976-77 ஆண்டின் பயணிகள் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையினையும் 31-3-1977 நாளைய நிலவரப்படி ஒட்டுமொத்தமான நிலைமையும், 1977-78-ம் ஆண்டில் எதிர்பார்க்கும் ஆதாயம்/இழப்பு முதலிய விவரங்களையும் காணலாம். 1977-78 ஆண்டு மகிழ்ச்சி தரத்தக்க ஆண்டாக அமையும். கடந்த ஆண்டில் ஈட்டிய ஆதாயம் 46.53 இலட்சம். இந்த ஆண்டில் நிகர ஆதாயம் 2,79.88 இலட்சமாக இருக்கும். மக்களுக்கு உதவும் வண்ணம், திரும்பவும் முதலீடு செய்யும் வகையில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 10,61·06 இலட்சம் உபரியாகப் பெருக்கும். சேரன் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் பங்கு மூலதனத்தில் மீது ஊதியப் பங்காக 12 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 6 இலட்சமும் 4 சதவீதம் என்கிற கணக்கில் ரூ. 3 இலட்சமும், கொடுக்க முன்வந்துள்ளது எனும் செய்தி உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். அக் கழகங்கள் பணியாளருக்கு 20 சதவீதமாக ரூ. 20.34 இலட்சமும், 13.3 சதவீதமாக 24.65 இலட்சமும் பூரிப்பு ஊதியமாக (Bonus) அளித்துள்ளது. கழகங்களின் தனிப்பட்ட செயல் திறன்களின் வேற்றுமை தொடர்ந்து இருந்து வருகிறது. சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் முதலியன நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் முதலியன இன்னமும் இழப்பு நிலையில் இருந்து மீளவில்லை. ஆயினும், இக் கழகங்கள் இழப்பு குறிப்பிடத் தக்க வகையில் குறைந்து வந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பண இழப்பு அடைந்த கழகங்கள் இந்த ஆண்டிலும் அதே நிலையில் இல்லாதது திருப்தி அளிக்கிறது. பிரச்சினைக் குரியதாக இருந்த பொருள் போக்குவரத்துக் கழகம், 1977 டிசம்பரிலிருந்து முன்னேற்றம் காட்டி வருகிறது. இதனால் நல்ல நிலையில் இது இயங்க முடியும்.

நடப்பு ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 10.22 இலட்சம் செலவில் 681 புதிய பேருந்துகளை வாங்கி விட்டுள்ளன. இவற்றில் 492 பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாகச் சேர்க்கப்பட்டவை. 189 பேருந்துகள் அதிகமாகச் சேர்க்கப்பட்டவை. இது தவிர பேருந்து நிலையங்கள், பணிமனைகள், பணியாளர் வசதிகள், பயணிகள் வசதிகள் இவைகளுக்காகப் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 2,38.30 இலட்சம் செலவிட்டுள்ளன.

[1978 மார்ச் 21

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் நடப்பு ஆண்டின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனம், 285 பேருந்துகள். 2 பெரிய மற்றும் ஒரு சிறிய பணிமனைகள், 8 பேருந்து முனைகள் (Terminals) மற்றும் 400 பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்காக ரூ. 4.05 கோடி உதவ ஒப்புக் கொண்டுள்ளது. இரண்டரை கோடி ரூபாய் கழக நிதியிலிருந்து திரட்டப்படும். இத் திட்டம் மூன்றாண்டுகளில் முடித்து வைக்கப்படும்.

பயணிப் போக்குவரத்தின் வளர்ச்சியை ஈடுகட்டியதல்லாமல் இப்பேருந்து எண்ணிக்கையின் அதிகரிப்பு 325 குடியிருப்புகளுக்கும், 8,15,000 புதிய மக்கட் தொகையினருக்கும் பயனளித்துள்ளது. தேய்மானங்களைக் குறிப்பிட்ட இடைவெளியில் தேவைக்கேற்றபடி அவ்வப்போது புதுப்பித்ததினால் திறம்படவும் குறித்த காலத்திலும் போக்குவரத்துப் பணி செயல்பட ஏதுவாகியது. பேருந்துப் பராமரிப்பின் தரம் முன்னேற்றம் கண்டுள்ளது. பேருந்துகளின் உபயோகத்தின் சராசரி அளவு 85லிருந்து 88 சதவீதமாக உயர்ந்துள்ளது.

நகரத்தையே நாடியிருக்கும் போக்குவரத்துத் தொழிலை நாட்டுபுறத்திற்கும் கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. சேரன் மற்றும் பாண்டியன் போக்குவரத்துக் கழகங்கள் 15 சிறிய பேருந்துகளை (குறுகிய சக்கர அடிப்படைக் கொண்ட பேருந்துகள் உட்பட) இயக்கி வருகின்றன. சாதாரணப் பேருந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற சிறிய, குறுகிய பாதைகளைக் கொண்ட கிராமங்களுக்கும் பயணி போக்குவரத்து அதிகமில்லாமல் இருக்கும் காரணத்தால் தனியார் பேருந்துகள் விடாத இடங்களிலும், இச்சிறிய பேருந்துகள் விடப்படுகின்றன. சமூக நீதியினை நிலை நாட்டும் கொள்கை, இதுவென அரசு கருதுகிறது. இதனால் கழகங்களுக்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டாலும் அவற்றை ஆதாயக் கணக்கில் சரி செய்துக் கொண்டு, நாட்டுடைமைத் திட்ட முன்னேற்றத்தை நிலை நாட்டும்.

போக்குவரத்துக் கழகங்களின் பணிகள், பொருளாதார மற்றும் சேவை மனப்பான்மையுடன், தொடர்ந்து செயல்படும் முறையில் அரசு இன்னும் முன்னேற்றம் காண முனையும். வழித்தடங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம், தேய்மானங்களைப் புதுப்பிக்கும் கொள்கை, சிக்கனம் மற்றும் திறன் வாய்ந்த பராமரிப்பு, காலம் தாழாத மற்றும் ஆதாயத்துடன் இயக்குதல் முதலியவற்றில் முன்னேற்றம் ஏற்படும். 1978-79 ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் ரூ. 1,40.06 இலட்சம் மொத்த ஆதாயமாக (வரி செலுத்துமுன்) ஈட்டும் எனவும், அனைத்து போக்குவரத்துக் கழகங்களும்

1978 மார்ச் 21]

ரூ. 18,00.23 இலட்சம் உபரியாகப் பெருக்கும் எனவும், எதிர்பார்க்கப்படுகிறது. அளவில் வேறுபட்டாலும், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் ஆதாயத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். கட்டுமானத் தேவையான பேருந்து பணிமனைகள், இயந்திரங்கள், மற்றும் கட்டிட வேலைகள் முதலியனவற்றிற்கு ரூ. 3,64.72 இலட்சம் செலவிடப்படும்.

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுவது குறித்த முக்கிய கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்ப் பிரிவு)

பல்லவன் போக்குவரத்துக் கழகம், 1,288 பேருந்துகளுடன் 1972 ஆம் ஆண்டு சனவரி 1-ஆம் நாள் அன்று அமைக்கப்பட்டது. இதன் இயக்கம் சென்னைப் பெருநகர் பகுதியில் அடங்கும். 31-1-1978 தேதியில் இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 1,469 ஆகும். இதில் 121 உபரிப் பேருந்துகள். இதில் வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை ஏறத்தாழ 12,800. கணக்கெடுப்பு ஆண்டு 1976 77-ல் இக்கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் சராசரி நாளொன்றுக்கு 20 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். குறைந்த மக்கள் தொகையுள்ள புதிய இருப்பிடங்களில் வாழ்வோரின் வசதிக்காக இக்கழகம் பத்து சிறிய பேருந்துகள் (Mini buses) இயக்குகிறது. உடல் ஊனமுற்றோர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு கொடுத்துள்ளமையில் இக்கழகம் முதல் இடம் வகிக்கிறது என இந்தியக் குடியரசுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இக்கழகம் உபரி உறுப்புகள் சீர்திருத்தத்திலும் மற்றும் நாட்டு மூல வள பாதுகாப்பிலும் 1977 ஆம் ஆண்டின் சிறந்த பாதுகாப்பகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டுள்ளது.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு)

முன்னாள் மாநிலப் போக்குவரத்துத் துறையினால் இயக்கப்பட்டு வந்த மாவட்டத் தடங்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு 15-9-1975-லிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மாவட்ட பிரிவாக அமைந்தது. இக்கழகத்தின் இயக்கம் செங்கற்பட்டு மாவட்டம். இதன் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978-ம் தேதியில் 411. இதில் 35 உபரிப் பேருந்துகள் உள்ளன. இக்கழகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் எண்ணிக்கை 3,030. கணக்கெடுப்பாண்டு 1976-77ல் இக்கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவீதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. இக்கழகப் பேருந்துகளில் சராசரி நாளொன்றுக்கு 1.2 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு)

தமிழ்நாட்டு மாவட்டத் தலைமையகங்களைச் சென்னை நகருடன் இணைக்கவும் மாவட்டத் தலைமையகங்கள் ஒன்றை யொன்று இணைக்கவும் முன்னுள் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை நெடுந்தூர விரைவுப் பேருந்துகளை இயக்கி வந்தது. அத்துறை தன்னியக்கக் கழகங்களாக 15-9-1975 முதல் பிரிந்தபோது, விரைவுப் பேருந்துகள் புதியதாக அமைக்கப் பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவிற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இவ்விரைவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 தேதியன்று 256. இதில் உபரிப் பேருந்துகள் 30. இதன் மொத்த ஊழியர்கள் 2,600. நாளொன்றுக்கு சராசரியாக 20,000 பயணிகள் இப்பேருந்து களில் பயணம் செய்கிறார்கள். நிதியாண்டு 1976-77-ல் இக் கழகம் எல்லா ஊழியர்களுக்கும் 8.33 சதவிதம் குறைந்த அளவு போனசாக வழங்கியது. 15-9-1977 முதல் இக்கழகம் பயணக் கட்டணத்தை ஒரு கிலோ மீட்டருக்கு 6 பைசாவிலிருந்து 5.5 பைசாவாக குறைத்துள்ளது.

பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம்.

சென்னை சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பேருந்துகளை (346 வண்டிகள்), 1971 ஆம் ஆண்டின் பேருந்து உரிமையாளர்கள், பயணிப் பேருந்து கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் கீழ், இக்கழகத்திற்கு மாற்றப்பட்டு, 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பதினேழாம் நாள் முதல் இக்கழகம் செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 அன்று 735 ஆக உயர்ந்துள்ளது. இதில் உபரி பேருந்துகள் 51. மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் இக்கழகம் செயல்படும் பகுதி, ஏறத்தாழ 5,200 ஊழியர்கள் இக்கழகத்தில் பணிபுரிகின்றனர். இக்கழக ஊழியர்கள், அனைவருக்கும் போனசாக 13.3 சதவிதம் 1976-77 கணக்கு எடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. 1977-78 ஆண்டில் மூலதனத்தில் வழங்கப்பட்ட 4 சதவித பங்கு ஊதியம் (Dividend) ரூ. 3 இலட்சங்களாகும். நாளொன்றுக்கு சராசரி யாக 6 இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். இக்கழகம் திண்டுக்கல் கோட்டை வட்டத்தில் 4 சிறு பேருந்துகளையும் (Mini buses) இராமேசுவரத் தில் 2 குறைந்த அடித்தளமுள்ள வண்டிகளையும் (Short wheel base buses) இயக்குகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம்.

ஏ. பி. டி. பிரைவேட் ஸ்தாபனத்திடமிருந்து அரசு எடுத்துக் கொண்ட பேருந்துகளை தமிழ்நாடு போக்குவரத்துத் துறை சேரன் போக்குவரத்திற்கு மாற்றம் செய்து 1-3-72-ஆம் நாள் முதல் இக்கழகம் செயல்பட துவங்கியது. இக்கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 31-1-1978 அன்று உபரிப் பேருந்துகள் 57 உட்பட 724 ஆகும். 197 -ஆம் ஆண்டில் 12வது சட்டம் செல்திறன் குறித்து தமிழக அரசு தலைமை நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு, நிலுவையில் உள்ள காரணத்தால் 93 பேருந்துகள் இயக்கமில்லாமல் உள்ளன. இக்கழகம் கோயமுத்தூர், நீலகிரி மாவட்டப் பகுதிகளில் செயல்படுகிறது. இக்கழகத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,950. இக்கழக ஊழியர் அனைவருக்கும் உயர்ந்த பட்ச போனசாக 20 சதவிதம் கணக்கெடுப்பு ஆண்டு 1976-77ல் வழங்கப்பட்டது. செலுத்தப்பட்ட மூலதனத்தில் இக்கழகம் 12 சதவிதம் பங்கு ஊதியம் வழங்கியது. இதில் அரசிற்கு கிடைத்த தொகை ரூ. 6 இலட்சம். இக்கழகப் பேருந்து களில் நாளொன்றுக்கு 4 இலட்சம் பயணிகள் பயணம் செய்கின்றனர். இக்கழக நிதி நிலைமை நிரந்தரமாகவும் நன்றாகவும் அமைந்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் இக்கழகம் 9 சிறு ஊர்திகளை இயக்க ஆரம்பித்துள்ளது.

சோழன் சாலைப்போக்குவரத்துக் கழகம்.

கும்பகோணம் ஸ்ரீராமவிலாஸ் பஸ் சர்வீஸ் லிமிடெட், கும்பகோணம் (65 பேருந்துகள்); திருவாளர்கள் ராமன் அண்டு ராமன் நிறுவனம் (180 பேருந்துகள்); ஸ்ரீசக்தி விலாஸ் பஸ் சர்வீஸ், பொறையாறு நிறுவனம் (50 பேருந்துகள்); ஆகியவற்றைச் சேர்ந்த பேருந்துகளையும் தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டில் பேருந்து உரிமையாளர்கள்-பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு இக் கழகம் 1972-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது. இதன் மொத்த எண்ணிக்கை 31-1-1978-ல் 560. இதில் 38 உபரிகளும் உள்ளடங்கியுள்ளன, இக்கழகத்தின் தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,610 ஆகும். 1976-77 கணக்கெடுப்பு ஆண்டில் அனைத்து தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு போனசாக 8.33 சதவிதம் வழங்கியுள்ளது.

சராசரி தினமும் நான்கு லட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

அண்ணா போக்குவரத்துக் கழகம்

அண்ணா போக்குவரத்துக் கழகம் 41 பேருந்துகளுடனும் சேலம், தருமபுரி மாவட்டங்களில் அரசு போக்குவரத்துத் துறையின் சொத்துக்களுடனும் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி

திங்கள் 15-ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள் மூன்றினையும் இக்கழகம் எடுத்துக் கொண்டுள்ளது. 21 உபரிகள் அடங்கிய 269 பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக்கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்ச போனஸ் 8.33 சதவீதம் 1976-77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இக்கழக ஊழியர்களின் எண்ணிக்கை 1,665. சராசரியாக தினமும் 1.12 இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்

இக்கழகம் 1974-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ஆம் நாளில் செயல்படத் தொடங்கியது. இது செயல்படும் பகுதி திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களாகும். இப் பகுதிகளில், இயங்கிய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து களும் இக்கழகத்திற்கு மாற்றப்பட்டன. 458 பேருந்துகளுடன் தொடங்கி, தற்போது 48 உபரிகள் அடங்கிய 560 பேருந்துகளைக் கொண்டுள்ளது. இக்கழக ஊழியர்களின் எண்ணிக்கை 4,040. இக்கழகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்ச போனசாக 8.33 சதவீதம் 1976-77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. சராசரியாக தினமும் நான்கு இலட்சம் பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.

போக்குவரத்துக் கழகம் ஒன்றின் நிர்வாகத் திறனைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பல்லவன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் ஆகியவை இம்மாவட்டத்தில் இயக்கிய 172 பேருந்துகளை மேற்கொண்டதன் மூலம் வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலுள்ள பேருந்துப் போக்குவரத்து முறைக்குப் புதிய கழகம் ஒன்று 1975-ம் ஆண்டு சனவரித் திங்கள் 16-ஆம் நாள் முதல் அமைக்கப்பட்டது. இந்தக் கழகத்திற்கு விழுப்புரம் தலைமை யிடமாகும். 31-1-1978 அன்று 22 உபரிகள் உள்ளிட்ட 243 பேருந்துகளை இக்கழகம் கொண்டுள்ளது. இக்கழகத் தொழி லாளர்கள் அனைவருக்கும் குறைந்த பட்ச போனசாக 8.33 சதவீதம் 1976-77 கணக்கெடுப்பு ஆண்டில் வழங்கப்பட்டது. இக் கழகத்தின் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,680. சராசரி தினமும் 84,000 பயணிகள் இக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள்.

பயணிகளுக்கு வசதிகள்.

பொது மக்களின் நலனைக் கருதி, அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள், பெருவாரியான வழித்தடங்களில் இழப்பு ஏற்பட்ட போதிலும், பேருந்துகளை இயக்கி வருகிறது. 1977-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அன்று உள்ள 4,368 பணிகளில் 2,898 பணிகள், ஆதாயமற்றவை. இது 66.35 சதவீதம் ஆகும்.

அரசு போக்குவரத்து நிறுவனப் பேருந்துகளில், புற்று நோயாளிகள் மருத்துவ சிகிச்சைக்காக இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். விழி இழந்தோர் சென்னை நகரில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாநகரில் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள ஒரு தானியங்கும் போக்குவரத்து சைகை காட்டியை (Signal) நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

உதகமண்டலத்தில் சேரன் போக்குவரத்துக் கழகம் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய ஒரு பேருந்து நிலையத்தை ரூ. 5 லட்சம் செலவில் கட்டியுள்ளது. கோயமுத்தூரிலும் உதகமண்டலத்திலும் பல இடங்களில் பேருந்து நிழற் குடைகள் கட்டப்பட்டுள்ளன. சேரன் போக்குவரத்துக் கழகம் கோயம் புத்தூரில் ஒரு தானியங்கும் சாலைப் போக்குவரத்து சைகை காட்டியைப் (Signal) பொருத்தியுள்ளது.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு விழாக்களுக்கும், கண்காட்சிகளுக்கும், சிறப்பு வசதிகள் செய்கின்றன. பயணிகள் கூட்டத்தைத் தவிர்க்கப் போதுமான அளவு தனிப் பேருந்துகளை இயக்கி போக்குவரத்து வசதி செய்கின்றன. ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் கூடிய போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்கின்றன. பயணிகளின் வசதிக்காக, தேவையான இடங்களில் பந்தல்கள், மற்றும் குடி நீர் வசதி, கழிவறைவசதி முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தாயமங்கலத்தில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஒரு பயணிகள் தங்கு மிடத்தைக் கட்டியுள்ளது. இந்த மாவட்டத்தில் இருக்கன் குடியில் ஒரு பயணிகள் தங்குமிடத்தைக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்விடங்களுக்குப் பெருமளவு எண்ணிக்கையில் யாத்திரிகர்கள் விழாக்களுக்கு வருவதனால். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் தனிப் பேருந்துகளை இயக்குகின்றது.

[1978 மார்ச் 21

அரசு மருத்துவ மனைகளில் அரசு ஊழியர்களுக்கு ஒப்பாகப் போக்குவரத்து ஊழியர்களுக்கும் இலவச மருத்துவம் கிடைக்க அரசு ஆணைப் பிறப்பிப்பதாக உறுதி அளித்திருந்தது. இதற்கான ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டன. இவ்வகையான இத்திட்டம் 1-4-1978 முதல் நடைமுறைக்கு வரும்.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் குடும்ப நல நிதி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் பணியாளர்களின் நல அறக் கட்டளைகளை ஏற்படுத்தித் தங்களுடைய அதிகப்படி வருவாயிலிருந்து பெரும் பகுதியை அதில் செலுத்தின. இவ்வழியில் சேரன் போக்குவரத்துக் கழகம் தங்கள் பணியாளர்களின் சீரிய பணியின் காரணமாக ரூ. 7.3 இலட்சத்தை இவ்வகையில் செலுத்தி முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்நிதி பணியாளர்களின் குழந்தைகளுக்கு, புத்தகங்கள் குறிப்பு புத்தகங்கள், கரும்பலகைகள் மற்றும் படிப்பு உதவித் தொகை இவற்றிற்காக செலவிடப்படுகின்றது.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் ''பாதுகாப்பு ஓட்டுநர் பரிசுத் திட்டத்தை'' ஏற்படுத்தியுள்ளன. இத்திட்டத்தின் கீழ் விபத்துக்கள் இல்லாமல் ஒவ்வொரு முழு வருடத்திய வண்டியியக் கத்திற்கு ஊர்தி ஓட்டுநர்களுக்கு ரூ. 25-ம் இதைத் தவிர ரூ. 75-லிருந்து ரூ. 500 வரை விபத்துக்கள் இன்றி வண்டி ஓட்டும் வருடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து நிதிப் பரிசு அளிக்கப்படும்.

பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்களும் அவர்களின் பணியாளர்களுக்கு மிதமான வட்டி வீதத்தில் சுலபத் தவணைகளில் திரும்பப் பெறும் வகையில் திருமணக் கடன் அளிக்கின்றன.

சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை தங்களது பணியாளருக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்குப் பணியாளர் கூட்டுறவு அங்காடிகளுக்கு சலுகை கட்டண வட்டி வீதத்தில் நிதி உதவி செய்திருக்கின்றன. பல்வேறு கிளைகளில் பணிபுரியும் பணியாளருக்கு உணவுத் தானியங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் வினியோகிப்பதற்காக சேரன் மற்றும் சோழன் போக்குவரத்துக் கழகங்கள் இயங்கும் ஊர்திகளை (Mobile van) ஏற்பாடு செய் திருக்கின்றன.

நிறுவனத்தினரது கடனுதவி பெற்று ''நீங்களே உங்கள் வீட்டை உடைமையாக்கும் திட்டத்தின் கீழ்'' வீட்டு கடனுதவிக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் தங்களது பணியாளருக்கு உதவி வருகிறது. ஒரு வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தை அமைக்கும் கருத்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்திடம் இருக்கிறது.

1978 மார்ச் 21]

எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாள ருக்குத் தவறாமல் தைத்த சீருடைகளும் மிதியடிகளும் வழங்கு கின்றன.

ஐந்து வருடங்களுக்குமேல் பதவியிலிருக்கும் பணியாளருக்கு அவரது தேவையைப் பொறுத்து இலவசமாகக் கண்ணாடிகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் வழங்கி வருகிறது. அவர்களது சேவையைப் பாராட்டும் வகையில் 10 வருடங்கள் பணி செய்த பணியாளருக்கு கைக்கடிகாரங்களும் பரிசளிக்கப் படுகின்றன. தங்களது பணியாளருக்கு இருக்குமிடம் தருவதற்கான ஒரு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தை இப் போக்குவரத்துக் கழகம் அமைத்திருக்கிறது.

எதிர் காலத்தில் பணியாளரின் நலனே அரசின் எண்ணத்தில் முதன்மையாக இடம் பெறும். பெரிய மற்றும் நல்ல வேலை நிலைமைகளையும், தொழிலாளர் கல்வியையும், கொடுப்ப தோடல்லாமல் உட்பணி பயிற்சி கொடுப்பதற்கும், உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதுதான் ஆயுட்கால ஊதியத் திட்டத்துடன் தொடங்கப்பெற்ற அலுவல் திட்டம் தனது தர்க்கரீதியான முடிவை எட்டும்.

நடப்பு ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றில் பெரிய வேலை நிறுத்தங்கள் நடந்தன. இந்த வேலை நிறுத்தங்கள் இலட்சக்கணக்கான பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியது மட்டுமின்றி போக்குவரத்துக் கழகங் களுக்கு சுமார் 95 இலட்ச ரூபாய் வரை இழப்பையும் ஏற்படுத்தின. வேலை நிறுத்தமென்பது தொழிலாளர்களுக்கு ஒரு சட்ட ரீதியான ஆயுதமாக இருப்பினும், அவற்றை குறைந்த அளவிலே உபயோகிக்கப்பட வேண்டும். பயணம் செய்யும் மக்களைக் கருத்திற்கொண்டு வேலை நிறுத்தம் போன்ற தீவிர நடவடிக்கைகளை திடீர் என்று எடுப்பதற்கு முன் பயணம் செய்யும் பொது மக்களை பணியாளர்கள் கருத்திற் கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

பொது

பேருந்துப் பணிகளை இயக்கும் பிரச்சினைகளில் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை தருவதற்காக தமிழ் நாடு அரசுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து கலந்தாராயும் குழுவை (Tamil Nadu Nationalised Transport Consultative Committee) அரசு திருத்தி அமைத்தது. இக்குழு, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைத் தவிர 12 சட்டப் பேரவை உறுப்பினர்களையும் 3 சட்ட மேலவை உறுப்பினர்களையும் கொண்டதாகும்.

முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 1977-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளம், புயலை கருத்திற்கொண்டு ரூ. 11.89

[1978 மார்ச் 21

இலட்சத்தை நன்கொடையாக நடப்பு வருடத்தில் இலாபத்தை ஈட்டிய சேரன் போக்குவரத்துக் கழகம், சேரன் பொறியியற் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய இவைகள் வழங்கின.

அரசு போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்கு குறைந்த கட்டண செலவில் வசதிகளையும் அதே சமயத்தில் வியாபார நோக்கத்துடன் நிலை நிற்கக் கூடிய நிறுவனமாகவும் இருக்க வேண்டிய இரு நோக்கங்களையும் சரிசமன் செய்ய வேண்டியுள்ளது. இம் மாற்றத்தில் சாலைப் போக்குவரத்துப் பணிகள் இந்நாட்டின் மேம்பட்ட எந்த மாநிலத்தையும் ஒப்பிடக்கூடிய நிலையில் உயர்ந்து உள்ளது.

நடப்பு ஆண்டில் எல்லா போக்குவரத்துக் கழகங்களின் நிதி மேம்பாடு (Financial Performance) பொதுவாக திருப்திகரமானதாகவே இருந்து வருகிறது. போக்குவரத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்போடு இந்த போக்குவரத்துக் கழகங்கள் இன்னும் சிறந்த முறையிலே தங்களது பணிகளை வரும் ஆண்டில் செவ்வனே தொடரும் என இந்த போக்குவரத்துக் கழகங்கள் எதிர் பார்க்கின்றன.

பொறியியற் கழகங்கள்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஐந்து லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கருத்திற் கொண்டு, 1973-74, 1974-75 ஆண்டுகளில் ஐந்து பொறியியற் கழகங்கள் ஆரம்பிக்கப் பட்டன. 31-12-1977 அன்று இந்த ஒவ்வொரு பொறியியற் கழகங்களிலும் பணிபுரிவோரின் எண்ணிக்கை பின் வருமாறு:—

(1)	பல்லவன் பொறியியற் கழகம்	680
(2)	மதுரை பாண்டியன் பொறியியற் கழகம்	585
(3)	சேரன் பொறியியற் கழகம்	710
(4)	சோழன் பொறியியற் கழகம்	31[illegible]
(5)	அண்ணா பொறியியற் கழகம்	300
		[illegible]

அவைகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்கின்றன:—

(அ) வண்டிக்கான கூடு கட்டுதல்;

(ஆ) பராமரிப்பும், பிரித்து ஆராய்தலும்.

(இ) டயர் புதுப்பித்தல்;

(ஈ) எஞ்சின்களைப் பராமரித்தல்;

(உ) இரும்பில்லா உலோகக் கலவைகளை வார்ப்படம் செய்தல்;

1978 மார்ச் 21]

(எ) கழகங்களின் கட்டிடங்களுக்கு மின் கம்பி பொருத்துதல்.

(ஏ) பெரிய அளவு பழுதுபார்க்கும் வேலைகள்;

(ஐ) தடைக் கருவிகள் (Brake drums) உற்பத்தி செய்தல்] (சேரன் பொறியியற் கழகம்);

(ஒ) எஞ்ஜின் சீர்படுத்துதல் (சேரன் பொறியியற் கழகம்);

(ஓ) மோட்டார் துணைக் கருவிகள் உற்பத்தி செய்தல்.

இக்கழகங்களின் நிதி செயல் திறன் (நிகர இலாபம்/இழப்பு) இணைப்பு II-ல் தரப்பட்டிருக்கிறது.

சேரன் பொறியியற் கழகம் 1976-77-ஆம் நிதி ஆண்டில் 12 சதவீதம் பங்கு வீதத் தொகையான ரூ. 3 இலட்சத்தை வழங்கியிருக்கிறது.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம்

பொது மக்களிடமிருந்தும் மற்றும் நிறுவனங்களிடமிருந்தும் வைப்புத் தொகை மற்றும் கடன் ஈட்டுப் பத்திர மூலமாக, அரசுரிமை போக்குவரத்துக் கழகங்களின் மூலதன செலவு திட்டங்களுக்கு போதிய நிதி வசதி அளித்திட 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் நிறுவப்பட்டு 2½ ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதுவரை இக்கழகம் ரூ. 600 இலட்சம் வைப்புத் தொகை பெறுவதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டு, தற்போது ரூ. 500 இலட்சம் நிகர வைப்புத் தொகையாக பெற்றுள்ளது. இது தவிர, ரூ. 70 இலட்ச மதிப்புள்ள கடன் ஈட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளது. இக்கழகம் ரூ. 115 லட்சம் பங்கு மூலதனத்தில், தற்போது ரூ. 685 லட்சம் நிதி வசதி படைத்துள்ளது.

2. 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் வரை இக்கழகம் ரூ. 14,50 லட்சம் வரை கீழ்க்கண்டவாறு கடன் வசதி அளித்துள்ளது:—

ஆண்டு	நேரடியாக தந்த கடன்	பிறர் மூலமாக கடன் வசதி	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1975-76 ..	1,49.00	165.00	3,14.00
1976-77 ..	5,35.55	70.00	6,05.55
1977-78 ..	5,31.33	..	5,31.33
மொத்தம் ..	[illegible]	2,35.00	14,50.88

3. இப்படி ரூ. 14.50 லட்சம் வரை கடன் வழங்கியும் பிறரிடம் கடனுக்கு ஏற்பாடு செய்தும் தந்ததால், போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 900 அதிகமாகி, அதன் மூலம் 7,000-க்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

4. மேற்கண்டவாறு புறநகர் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவி அளித்ததோடு நில்லாமல், இக்கழகம் விரிவுபடுத்தப்பட்ட சென்னை பெரு நகரின் நன்மையைக் கருதி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெரு நகர்) மேலும் சுமார் 550 பேருந்துகள் வாங்குவதற்கு உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து உதவியது. மேற்படி திட்டத்திற்கு தேவையான ரூ. 12,18 லட்சம் தொகையில், இக்கழகம் தன்னுடைய நிதி வசதியிலிருந்தும், மற்றும் பிற நிறுவனங்களின் மூலமாக சுமார் ரூ. 5,60 லட்சம் தர இருக்கிறது. இத்திட்டத்திற்கு பிற நிறுவனங்களின் மூலமாக மீதியுள்ள தொகை கடனாக பெற்றுத் தரப்படும்.

இத்தொகையில் இக்கழகத்தின் பங்கு 1977-78-ம் ஆண்டு ரூ. 70 லட்சமாகவும், மற்றும் 1978-79-ம் ஆண்டு ரூ. 1,20 லட்சமாகவும் இருக்கும்.

5. நாள்தோறும் சுமார் 40 லட்சம் பேர் பயணம் செய்கின்ற அரசு போக்குவரத்து நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, இக்கழகம் இந்த அளவு நிதி வசதி அளித்து உள்ளது. வருகின்ற 1978-79ஆம் ஆண்டு மேலும் அதிக நிதி வசதி அளித்திடும். அது ரூ. 6,50 லட்சமாக இருக்கும்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம், 1975-ம் ஆண்டு மார்ச் திங்கள் தமிழ்நாட்டில் சாமான்களையும் அவசிய பண்டங்களையும் கொண்டு செல்ல, 1974-75 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பு வளர்ப்புத் திட்டத்தினையொட்டி, 19[illegible] ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ. 40 லட்சம்.

2. ஆரம்ப காலத்தில் முன்னாள் இரா[illegible] வேலை வாய்ப்பளிப்பதும், முக்கியமாக தமிழ்நாடு நுகர் [illegible] வழங்கும் கழகத்திற்குத் தேவையான பொருட்களை ஏற்றிச் செல்வதும், இதற்காக 100 சரக்குப் பேருந்துகளை வைத்துக் கொள்வதும் இக்கழகத்தின் நோக்கங்களாக இருந்தன. தற்[illegible] இக்கழகத்திடம் 68 சரக்குப் பேருந்துகள் உள்ளன. [illegible] பணிபுரிகின்றனர். இவர்களில் 188 [illegible]த்தினராவார்கள்.

3. இக்கழகம் தொடக்கக் காலத்தில், தமிழ்நாடு நுகர் பொருள் வழங்கும் கழகத்திற்கும், தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கும் பணியாற்றி வந்தது. தற்பொழுது இந்திய உணவு கழகத்தினரின் உணவு தானிய நடமாட்டத்திற்கான சரக்கு ஏற்றும் இறக்கும் பணிகளையும், தமிழ்நாடு இரும்புக் கழகத்தினருக்கான இரும்புப் போக்குவரத்துப் பணியினையும் இக்கழகம் மொத்த அளவில் மேற்கொண்டுள்ளது. 1977-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாளிலிருந்து இக்கழகம் தமிழ்நாட்டிலுள்ள 89 முக்கிய எல்லா இடங்களையும் உள்ளடக்கி கூட்டுப் போக்குவரத்தினையும் துவங்கியுள்ளது. இதன் மூலம் அரசு அச்சகங்களிலிருந்து பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் எழுதுபொருள் மற்றும் பண்டங்கள் எடுத்துச் செல்லும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய வியாபாரங்கள் உள்ள அதிக இடங்களில் சார்பு அலுவலர்களை நியமிப்பது பற்றிய கேள்வி அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. இக்கழகம் தற்பொழுது நட்டத்தில் இயங்கி வருகின்றது. இக்கழகத்திற்கென சென்னையில் ஒரு முறையான தொழிற்கூடம் கட்டுவதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. பராமரிப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும் நிலையினாலும், சரக்கெடுத்துச் செல்லும் போக்குவரத்துப் பணியினை பொதுமக்களுடைய கவனத்திற்கு பரந்த அளவில் கொண்டு வருவதனாலும், அரசு உற்பத்திப் பிரிவுகள் இக்கழகத்தினை மேலும் அதிகபட்ச அளவில் பயன்படுத்த முன்வரும் நிலையினாலும், இக்கழகம் தன் போக்கிலிருந்து திரும்பி, நல்ல இலாபம் தரக்கூடிய அமைப்பாக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

சாலைப் போக்குவரத்து நிறுவனம்

எந்த ஒரு நிறுவனத்திற்கும் அதனுடைய முன்னேற்றத்திற்காக அதனுடைய நிர்வாகிகளுக்கு காலமுறை நிர்வாக பயிற்சியும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் தேவை. இந்த அடிப்படை நோக்கத்தின்கீழ், 1976-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சாலைப் போக்குவரத்து நிறுவனம் துவக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்களாவன—

(1) சாலைப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அந்நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சி, போக்குவரவு, நிர்வாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பது ;

(2) சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் திறமையாக செயல்பட சாலைப் போக்குவரத்துத் துறையில் நடைமுறை மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வது ;

(3) சாலைப் போக்குவரத்தில் தற்கால முன்னேற்றங்கள் பற்றியும் அவைகளின் தற்போதைய பிரச்சினைகள் பற்றியும் விவாதித்து அறிந்துகொள்ள கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்துவது;

(4) மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் கலந்து தக்க ஆலோசனை கூறுவது ;

(5) மாநில போக்குவரத்து நிறுவனங்கள் வாங்கிய பல்வகை உபரி உறுப்புகளின் தன்மைகளை பரிசோதித்து தருதல் ;

(6) போக்குவரத்து நடைமுறை நூல் (Transport Manual) தயாரித்தலும், மற்றும் திட்டமிட்ட அளவு மற்றும் தேவையான வரையறைகளை நிர்ணயித்தலும்;

(7) போக்குவரத்து கழகங்களுக்குத் தேவையான தொலை நோக்குத் திட்டங்களை தயாரித்தல்.

1977-78ஆம் ஆண்டு, போக்குவரத்து அதிகாரிகள், தொழில் நுட்ப அதிகாரிகள், பணி பிரிவு அதிகாரிகள், கிளை மேலாளர்கள், உதவி கிளை மேலாளர்கள், கட்டிடப் பொறியாளர்கள், மற்றும் இளநிலை உதவியாளர்கள்/பொறி யாளர்கள் ஆகியோருக்காக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது.

இந்நிறுவனம் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேருந்து தடங்களைப் பற்றி பல்லவன் போக்குவரத்து (விரைவு) நிறுவனத்திற்கு தக்க ஆலோசனை கூறி அந்நிறுவனம் நெடுந்தூரப் போக்குவரத்து தடங்களில் பேருந்துகள் விட பரிந்துரை செய்தது. இந்நிறுவனம் செய்துள்ள பல குறிப்பிட்ட காரியங்களில் இந்திய தொழில் நுட்ப கழகத் துடன் (I.I.T.) கலந்து பேருந்துகளிலிருந்து வெளியாகும் புகையினை கட்டுப்படுத்தும் வகைக்கான தொழிற்கூடம் ஒன்றை நிறுவியது ஒன்றாகும். அத்தொழிற்கூடத்திற்குத் தொடர் புள்ள கண்காட்சி ஒன்றினையும் நடத்தியது. அக் கண்காட்சி யில் பல சிறப்புப் பெற்ற மோட்டார் வாகன உதிரி உறுப்பு உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். ஐ. சி. எஞ்சின் (I. C. Engine) மற்றும் எண்ணை எரி பொருளாவது குறித்து தேசிய மாநாடு ஒன்றினையும் பேருந்துகளுக்குத் தேவையான உதிரி பாகங்களைக் குறைத்து உபயோகப் படுத்துவது குறித்து கருத்தரங்கு ஒன்றினையும் இந்நிறுவனம் நடத்தியது. மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களில் பணி புரியும் அதிகாரிகளுக்கு உதவுகின்ற வகையிலே நூல் [illegible] செய்திக் கதிர் ஒன்று கால முறையாக [illegible] வெளியிடப்பட்டது.

போக்குவரத்து நிறுவனம் வெற்றிகரமாக இயங்க மிக முக்கியமானவர் சிறந்த பேருந்து ஓட்டுநர் என்பது நாங்கள் அறிந்த உண்மை. பொதுமக்களிடமிருந்து ஓட்டுநர்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றிய புகார்கள் முடிவில்லாமல் வந்த வண்ணம் இருந்தன. அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அவர்களைக் கட்டுப்படுத்தவும், ஒழுக்கமாக இருத்தல் பற்றியும் நிறைய ஆலோசனைகள் கூறப்பட்டன. இக் குறைகளுக்குக் காரணம் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் கோளாறு இருப்பதாக அரசு நம்பு கிறது. அவர்கள் இவற்றினை சரக்கு போக்குவரத்து மற்றும் பார வண்டி ஓட்டுநர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். ஓட்டுநர்கள் தங்களின் கடுமையான உழைப்பினால் சோர்வு அடைந்து சமூக நலனுக்கு பொறுப்பில்லாதவராகி விடுகிறார். நாங்கள் ஆரம்ப நிலையிலிருந்தே ஓட்டுநர்களுக்குச் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் விஞ்ஞான ரீதியாகவும், முறையா கவும், உபயோகமான முறையில் பயிற்றுவிக்கவும் சமூக நலனை கருத்தில் கொண்டு நல்ல முறையில் பேருந்துகளை ஓட்டுவிக்கவும் முடிவு எடுத்துள்ளோம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு மின் வாரியத்திற்காக தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு கல்கத்தா விலிருந்து சென்னைக்கு நிலக்கரி எடுத்துவரும் பணிக்காக அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மின்வாரியம் இப்பணிக்காக, 1975-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாளில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துடன் ஒரு ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டது. அவ்வொப்பந்தத்தின் அடிப்படையின்பேரில், நிலக்கரி ஏற்றி வரும் பணி, 1976 ஜூன் திங்கள் வரை மேற்கொள்ளப் பட்டது. 1975 மார்ச் மாதத்திலிருந்து 1976 ஜூன் வரை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரிய உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட கால அளவில், சுமார் 1,15,000 மெட்ரிக் டன்கள் நிலக்கரி சென்னைக்கு எடுத்து வரப்பட்டது.

2. ஜூன் 1976-க்குப் பின்னர் புயலின் காரணமாக, இரயில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டதின் காரணமாக, 1977 ஆகஸ்டிலிருந்து அக்டோபர் முடிய 30,000 டன்கள் நிலக்கரி தற்காலிகமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டது. இது தவிர ஜூன் 1976-க்குப் பின்னர் இரயில் பெட்டிகள் கிடைப்பதில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாகவும், மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தா நிலக்கரிச் சுரங்கங் களிடமிருந்துதான் தமிழ்நாடு மின்சார வாரியம் நிலக்கரி

பெற வேண்டும் என்ற மைய அரசின் ஏற்பாட்டினாலும், கல்கத்தாவிலிருந்து, தமிழ்நாடு மின்வாரியத்திற்காக கடல் மார்க்கமாக நிலக்கரி எதுவும் கொண்டு வரப்படவில்லை. சமீபத்தில் மத்திய எரிபொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலுள்ள ஊது உலைக்கு மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சந்தாவில் கிடைக்கும் நிலக்கரி ஏற்றவையல்ல என்று தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கருத்து தெரிவித்துள்ளனர். இதனையொட்டி, தமிழ்நாடு மின்வாரியம், மத்திய அரசின் நிலக்கரித் துறைக்கும், பம்பாயிலுள்ள கப்பல் போக்குவரத்துத் தலைமை இயக்குநருக்கும் இரயில் மற்றும் கடல் மார்க்கமாக வங்காளம்—பீகார் நிலக்கரியைக் கொண்டு வரும் பணியை மீண்டும் தொடங்கக் கோரியும், இதற்காக, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களை பயன்படுத்தக் கோரியும் வேண்டுகோள்கள் விடுத்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களான, தமிழ் அண்ணாவையும், தமிழ்ப் பெரியாரையும் பயன்படுத்தாத நிலையில் இக்கப்பல்கள் இரயில்வேக்கான நிலக்கரியை எடுத்துவரப் பயன்படுத்தப்பட்டன. கரையோர கப்பல் கட்டண விகிதங்கள் குறைவாக இருந்த காரணத்தால், மேற்சொன்ன வகையில், கழகத்திற்கு நட்டமேற்பட்டது. 1976-77இல் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென, 20,512 மெட்ரிக் டன் நிலக்கரியும் (ஜூன் 1976 வரை) இரயில்வேக்கான, 20,254 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனத்திற்காக பங்களாதேஷிலிருந்து 3,365 டன் அஸ்பால்டும், 6,040 மெட்ரிக் டன் உப்பும், 193 மெட்ரிக் டன் எடை அளவிற்கு ஏனைய பிற பொருள்களையும் எடுத்து வந்தன. இக்கப்பல்கள் 1977-78 ஆம் ஆண்டு இறுதி வரை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் தமிழ்நாடு மின்வாரியத்திற்கென 31,449 மெட்ரிக் டன் நிலக்கரியும், இந்திய ரயில்வேக்காக, 30,280 மெட்ரிக் டன் நிலக்கரியும், தனியார் தொழிற்சாலைகளுக்கென 12,110 மெட்ரிக் டன் நிலக்கரியும் எடுத்து வந்தன. தமிழ் அண்ணா கப்பல் 6,298 மெட்ரிக் டன் உப்பும் எடுத்துவர 24 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கும் கொடுக்கப்பட்டது. மேற்கூறிய கரையோர வாணிபம் தவிர, தமிழ்ப் பெரியார் கப்பல் இந்திய தாது மற்றும் உலோக வணிகக் கழகத்திற்கென, 9,941 மெட்ரிக் டன் நிலக்கரியை இலங்கைக்கும் எடுத்துச் சென்றது.

1976-77ஆம் ஆண்டு தமிழ்ப் பெரியார் கப்பல் விசாகப்பட்டினம் இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழில் கூடத்தில் 62 இலட்ச ரூபாய் செலவில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட்டது. தமிழ் அண்ணா கப்பல் 1978ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிறப்பு மதிப்பீட்டாய்வு செய்து பழுது பார்க்கப்பட வேண்டும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வரும் நிலைமையை, இந்தியக் கப்பல் நிறுவனங்களில் மத்திய அரசு இயக்குநர் ஆய்வு செய்து, கழகத்தை நல்ல முறையில் வளர்ச்சி அடையச் செய்வதற்கான அடிப்படைக் கட்டமைப்பு உள்ளதென்றும், கழகம் விரிவுபடுத்தப்பட வேண்டுமானால், அதற்கான முடிவை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மின் வாரியத்திற்கென ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்து வரும் பணிக்கு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்களைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருந்து வருகிறது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம்.

தமிழக அரசின் சுமார் 6,000 மோட்டார் வாகனங்களை நன்னிலையில் பேணிப் பராமரிக்கும் பொறுப்பை மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனம் ஏற்றுள்ளது. இந்நிறுவனத்தின் பணிக்களரிகள் (Workshops) அரசு வண்டிகள் எல்லாவற்றையும் முழு அளவில் பராமரிக்க இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தால், குறிப்பிட்ட விதிமுறைகளின் கீழ் 39 தனியார் பணிக்களரிகளுக்குப் பழுது பார்க்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பட்டினப்பாக்கத்தின் அருகில் எல்லா வசதிகளுடன் கூடிய புதிய தலைமைச் செயலக சர்வீஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேலும், நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் முதல் தரப் பணிக்களரிகள் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளது. இந்நான்கு இடங்களிலும் பணிக்களரிகளுக்கான கட்டிடப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டன.

1977 ஆம் ஆண்டு பல்வேறு வகைப்படும் கிட்டத்தட்ட 15,000 பழுதுப் பணிகளை இந்நிறுவனம் செய்து முடித்தது.

1977 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தைச் சார்ந்த மத்தியக் கொள்முதல் மற்றும் பண்டகசாலை, ரூபாய் 25 இலட்சம் பெறுமானமுள்ள உதிரிச் சாமான்கள், சார்புப் பொருட்கள் ஆகியவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து பணிக்களரிகளுக்கும் இதர துறைகளுக்கும் வழங்கியது.

மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களுக்குக் காலணிகள், சீருடைகள், சோப்பு, துப்புரவுத் துணிகள் போன்றவை இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தின் எல்லாப் பணியாளர்களையும் 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு தளர்த்தப்பட்ட ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் கொண்டு வர இவ்வரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

இணைப்பு I.

போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலை.

கழகத்தின் பெயர்.	1976—77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—).	31—3—1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—).	1977—78 கணக்குப்படி திருத்தப்பட்ட மதிப்பீடுகள்*.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பிரிவு) ..	(—) 0.40	(—) 5,42.56	(—) 13.16
(விரைவுப் பிரிவு) ..	(—) 7.29	(—) 1,35.39	(+) 2.10
(புறநகர்ப் பிரிவு) ..	(—) 40.21	(—) 1,13.72	(—) 39.08
2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ..	(+) 85.40	(+) 19.98	(+) 1,30.66
3. சேரன் போக்குவரத்துக் கழகம் ..	(+) 49.48	(+) 80.37	(+) 75.86
4. சோழன் போக்குவரத்துக் கழகம் ..	(—) 13.39	(—) 1,43.15	(+) 75.86
5. அண்ணா போக்குவரத்துக் கழகம் ..	(+) 3.83	(—) 20.95	(+) 15.00
6. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்	(+) 17.67	(—) 1,23.17	(+) 23.32
7. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்	(—) 48.56	(—) 1,47.31	(+) 85.00
மொத்தம் ..	(+) 46.53	(—) 11,25.90	(+) 0.18
			(+) 2,79.88

* வருமானவரி செலுத்துமுன்.

இணைப்பு II.

பொறியியற் கழகங்களின் நிதி நிலை.

கழகத்தின் பெயர்.	1976-77 ஆண்டில் ஆதாயம் (+) இழப்பு (—).	31—3—1977 கணக்குப்படி திரண்ட ஆதாயம் (+) இழப்பு (—).	1977-78 கணக்குப்படி தற்காலிகமான ஆதாயம் (+) இழப்பு (—)*
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1. பல்லவன் போறியியற் கழகம் ..	(+) 0.14	(—) 0.18	(—) 0.31
2. மதுரை பாண்டியன் பொறியியற் கழகம் ..	(+) 3.61	(—) 2.61	(+) 18.37
3. சேரன் பொறியியற் கழகம் ..	(+) 15.95	(+) 20.19	(+) 16.37
4. சோழன் பொறியியற் கழகம் ..	(+) 0.20	(+) 0.13	(+) 3.19
5. அண்ணா பொறியியற் கழகம் ..	(+) 0.18	(—) 4.08	(+) 5.26
மொத்தம் ..	(+) 20.08	(+) 13.45	(+) 42.78

* வருமானவரி செலுத்துமுன்.

புதன்கிழமை, 1978 மார்ச் 22

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Medical Colleges

*200 Q.—THIRU K. S. ABDUL WAHAB (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to establish Medical Colleges in Ramanathapuram and Kanyakumari Districts; and

(b) if not, the reasons therefor ?

மருத்துவக் கல்லூரிகள்

திரு. கே. எஸ். அப்துல் வகாப் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) & (இ) இல்லை. இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் பிற சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் திருநெல்வேலி, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரிகள் துவக்க வேண்டும் என்று செயற் குறிப்பு இருந்தது. அது எந்த நிலையில் இருக்கின்றது? இப்போது அடுத்த மருத்துவக் கல்லூரி வருவதாக இருந்தால், எந்த ஊருக்கு முதலிடம், "பிரையாரிட்டி" கொடுக்கப்படும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1978 மார்ச் 22

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> இந்தியன் மெடிகல் கவுன்சில் இப்போது புதிதாக மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 100 கல்லூரிகள் இருக்கின்றன. இதிலிருந்து பயிற்சி பெற்று வருகின்ற மருத்துவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய பிரச்சினைகள் வரும். இந்தப் பிரச்சனை பெரும் பிரச்சினையாக இருப்பதால், இந்த மாநிலத்திலே உடனடியாக மருத்துவக் கல்லூரி துவக்க திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. மாசிலாமணி :</u> புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதாக இருந்தால், அரசுக்கு எவ்வளவு செலவாகும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றை குறைந்தபட்சம் 100 மாணவர்கள் எண்ணிக்கையோடு துவக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் குறைந்தபட்சம் தேவைப்படுகிறது. அதுவும் நிலம் வாங்குவதற்கான செலவு உள்ளிட்டது அல்ல. நிலம் தனிப் பட்ட முறையில் வாங்க வேண்டும். இது எம்.பி.பி.,எஸ். கோர்சுக்கு மட்டும் ஆகிறது.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன் :</u> இனிமேலாவது இந்த மாநிலத்தில் அரசு முடிவெடுத்து செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன். மருத்துவ மனைகள் இல்லாமல் இருக்கின்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்குமா? அதற்கென செயற்குறிப்பு உண்டா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> ஏற்கனவே 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மருத்துவப் பட்டதாரிகள் வேலை இல்லாத நிலைமையில் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். 400 மருத்துவப் பட்டதாரிகளை இந்த ஆண்டு வேலையில் அமர்த்துவதற்கான திட்டத்தைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். மேலும் 1,600 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கிராமங்களிலே போய் பணி புரிகின்ற வகையில் அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :</u> இப்போது அமைச்சர் அவர்கள் இந்தியன் மெடிகல் கவுன்சில், இங்கிலீஷ் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிப்பது பற்றிச் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். நாட்டு வைத்தியக் கல்லூரிகள் ஆரம்பிப்பது பற்றி என்ன சொல்லப்படுகிறது? சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம் போன்ற வைத்தியங்களில் பயிற்சி கொடுக்கத்தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 22]

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> மருத்துவக் கல்லூரி என்று எந்த அமைப்பை ஆரம்பிப்பதாக இருந்தாலும், இந்தியன் மெடிகல் கவுன்சிலிடமிருந்து நாம் அங்கீகாரம் பெற்றாக வேண்டும். அந்த அங்கீகாரத்தை அவர்கள் பொதுவாக புதிதாகத் தோற்றுவிக்கின்ற கல்லூரிகளுக்கு வழங்க வேண்டாம் என்றுதான் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் சொல்ல விரும்புகிறேன். மாநிலத்திலே 1,500 லிருந்து 2,000 பேர்கள் வரை மருத்துவப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யோசித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது புதிதாக மருத்துவக் கல்லூரி துவக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :</u> இன்டிஜினஸ் மெடிகல் காலேஜிலே, சித்த வைத்தியம், யூனானி வைத்தியம் போன்று அமைக்கப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> தலைவரவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள இந்தியன் மெடிசன் கல்லூரியில் பல பிரச்சினைகளுக்குப் பிறகு இப்போதுதான் நல்ல நிலைமை வந்திருக்கிறது. புதிதாக எந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டும் என்றாலும், அவர்களுடைய கொள்கையில், எந்தவிதமாவது காலதாமதம் செய்வது நல்லது என்றுதான் கருதப்படுகிறது. அதே நேரத்திலே யூனானி, சித்த வைத்தியங்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற அவர்கள் கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> மருத்துவப் பட்டதாரிகள் வேலையின்மை காரணமாக மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைக் குறைத்துச் சேர்க்கின்ற உத்தேசம் இருக்கின்றதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> 1,150 மாணவர்கள் என்று இருந்ததை 1,050 என்று குறைத்திருக்கிறோம். மேலும் குறைக்கும் திட்டத்தை அரசு இன்னும் மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஜார்ஜ் கோமகன் :</u> புதிய மருத்துவக் கல்லூரிகள் திறப்பதற்கு இந்தியன் மெடிக்கல் கவுன்சில் அங்கீகாரம் அளிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் இதை மறுக்கிறது என்று அரசு அறியுமா ?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> திரும்பத்திரும்ப அதே பதிலைத்தான் சொல்லவேண்டியதாக இருக்கிறது. காரணம் ஏற்
கெனவே படித்துப் பட்டம் பெற்றிருக்கின்ற மருத்துவப் பட்ட
தாரிகள் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை இல்லாமல்

இருக்கிறார்கள். 100 மாணவர்களை வைத்து ஒரு மருத்துவக் கல்லூரி திறப்பதானால், குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. அதனால் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு பரிந்துரை செய்வதைவிட மருத்துவ மனைகளை ஆரம்பிக்கலாம் என்றும், அப்படிச் செய்வது நாட்டிற்கும் நன்மை பயக்கும் என்றும் சொல்கின்றார்கள். மருத்துவக் கல்லூரிக்குப் பதிலாக மருத்துவ மனை அமைக்கலாம் என்று சொல்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் இது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : மருத்துவக் கல்லூரிகளைத் துவக்காமல் இருப்பதற்குக் காரணங்கள் சொன்னார்கள். சித்த வைத்தியம் அல்லது யூனானி வைத்தியம் என்று இருக்கின்றன. எப்படி விவசாயப் பல்கலைக்கழகம் ''எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ்'' என்று ஒரு இடத்திலே, கோழி வளர்ப்புக்கு, மாடு வளர்ப்புக்கு, ஆடு வளர்ப்புக்கு, என்றும், விவசாய வளர்ச்சிக்கு என்றும் வைத்திருக்கின்றார்களோ, அதுபோல சித்த மருத்துவத்திற்கு சேலம், மதுரை பக்கத்தில் ''எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ்'' வைத்து சித்த வைத்தியம், யூனானி வைத்தியத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு சிறு சிறு நிறுவனங்களாக அமைக்க முடியுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற யோசனையை அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் ; ஒரு புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தால், ரூ. 2 கோடி தேவைப்படுகிறது என்று மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தொகையில் மத்திய அரசு கொடுப்பது எவ்வளவு, மாநில அரசு கொடுப்பது எவ்வளவு என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : மாநிலத்திலே மருத்துவக் கல்லூரி முழுச் செலவையும் மாநில அரசுதான் செய்கிறது. இதிலே மத்திய அரசு எதுவும் செய்வதில்லை. இதற்கு முன்பு முது நிலைப்படிப்புகள், எம்.டி., எம்.எஸ். போன்ற படிப்புகளுக்கு மத்திய அரசு ஓரளவுக்குக் கொடுத்து வந்தது. மாநில அரசுதான் இந்தச் செலவை முழு அளவுக்கு ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி தொடங்குவதாக இருந்தால், அதை ஐந்தாண்டுத் திட்டத்திலே கொண்டுவந்து, தொடங்குவதற்கு பாதித் தொகையை அவர்கள் கொடுப்பதாக நான் கேள்விப்பட்டேன். அது சரியா, இல்லையா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே சொன்னதுதான் சரி என்று நான் நினைக்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்ற மருத்துவப் பட்டதாரி டாக்டர்களுக்கு வேலை கொடுக்க முடியாத காரணத்தால், இத்தகைய கல்லூரிகளைப் புதிதாக ஆரம்பிக்கவில்லை என்று மாண்புமிகு முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் கொள்கையைப் பின் பற்றுவது என்று ஒரு அடிப்படையில் சென்றால், மற்றப் படிப்புகளைப் படித்து பட்டம் பெறுவதிலிருந்து பல பேர்களை நிறுத்த வேண்டியதாக இருக்கும். இந்தக் கொள்கை சரிதானா மாணவர்களுக்காக மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பித்து, மேலும் பலரைப் படிக்க வைத்து, உற்பத்தி செய்து, வேலை தர முடியவில்லை என்பதற்காக, அதை நிறுத்தி விட வேண்டும் என்று சொல்வது சரிதானா, முறையாகுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்விக்கு நான் சொல்லக் கூடிய பதில் இதுதான். ஏற்கெனவே ஒவ்வொரு மாநிலத்திலும் ஆயிரக்கணக்கான மருத்துவப் பட்டதாரிகள் தொடர்ந்து படித்து வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். இதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. 1,050 மருத்துவப் பட்டதாரிகள் வருடந்தோறும் உருவாக்கப்படுகிறார்கள். இந்த நிலைமைகளில், மேலும் புதிதாகக் கல்லூரிகளைத் தொடங்குவது என்பது தேவையில்லை என்றுதான் கருதுகிறோம். ஆயிரக் கணக்கான மருத்துவப் பட்டதாரிகள் வருடத்திற்கு உற்பத்தி ஆகின்ற காரணத்தினாலேதான், புதிய மருத்துவக் கல்லூரி கள் ஆரம்பிப்பதற்கு அங்கீகரிக்கவில்லை என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஏற்கெனவே எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற 1,500 டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலையில் மத்தியிலுள்ள சுகாதார அமைச்சர், திரு. ராஜ் நாராயண் அவர்கள் கிராமாந்தரங்களில் நடைபாதை மருத்துவர்களை Barefcot Doctors நியமிக்க வேண்டுமென்ற திட்டத்தைக் கூறியிருக்கிறார்கள். அதை இங்குள்ள டாக்டர்கள் தங்கள் வேலையைப் பாதிக்குமென்பதால் எதிர்த்திருக்கிறார்கள். இதிலே மாநில அரசின் நிலை என்ன ? மத்திய அரசின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளப் போகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மிதியடியில்லாத டாக்டர்களா, கால்நடை டாக்டர்களா அல்லது பாதையோர டாக்டர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 22

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : டாக்டர்கள் மிதியடியில்லாமல் சென்றால், அவர்கள் உடல்நிலையே பாதிக்கப்படும். கால்நடை டாக்டர்கள்—கிராமங்களை நோக்கி நடந்து செல்கிற டாக்டர்கள் அவர்கள். கால்நடை என்று சொல்லும் போது, வேறுவிதமாக அர்த்தம் செய்துகொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி மாணவர்கள், House Surgeons எல்லாம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு சில பிரச்சினைகளைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தைக் கட்டாயப்படுத்தும் நிலையில் மாநில அரசு இல்லையென்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். அதனால் அவர்கள் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு இப்போது வேலையில்லாமல் இருக்கும் மருத்துவ பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு எப்படி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது என்பது குறித்துப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கிராமப் பகுதிகளில் பட்டம் பெற்ற டாக்டர்கள் வேலைக்குச் செல்ல அஞ்சுகிறார்கள். காரணம் மருத்துவ மனைக்குப் பக்கத்தில் அவர்கள் தங்க வீடுகள் இல்லை. எனவே மருத்துவமனை உள்ள இடங்களில் அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கெனவே மருத்துவக் கல்லூரி மாணவர்களும், House Surgeon- களும் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலித்து வருகிறது.

திரு. க. அறிவழகன் : ஒரு மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கு எவ்வளவு பணம் செலவு செய்யப்படுகிறது?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதற்குத்தான் பதில் கூறியாகிவிட்டதே.

திரு. க அறிவழகன் : ஒரு மாணவருக்கு எவ்வளவு செலவாகிறதென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஒரு மாணவருக்கு கிட்டத்தட்ட 80,000 ரூபாய் அளவிற்கு அரசு செலவு செய்கிறது.

(திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : கால் மணி நேரமா [illegible]. இந்தக் கேள்வி போய்க் கொண்டிருக்கிறது.

1978 மார்ச் 22]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மருத்துவ மனைகளில் வேலை பார்க்கும் டாக்டர்கள் ஜில்லா Headquarters ஆஸ்பத்திரியில் வேலை செய்வதை விட, Taluk Headquarters ஆஸ்பத்திரி, யூனியன் ஆஸ்பத்திரி ஆகியவற்றில் வேலை செய்ய மனுக் கொடுக்கிறார்களென்ற தகவல் அறிகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : எற்கெனவே Bare foot doctors திட்டத்தை இந்த மாநில அரசு செயல்படுத்தக் கூடாதென்றும், அதற்காக எந்தக் கிராமத்திற்குப் போகச் சொன்னாலும் போகத் தயாராக இருக்கிறோமென்றும் மாணவர்களும் பட்டப் படிப்பு படித்து முடிந்த இளநிலைப் பயிற்சியாளர்களும் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, ஆரம்பத்திலே டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற கட்டாயம் உருவாகியுள்ளதால், அதை அவர்களே ஒத்துக் கொண்டுள்ளதால், மனு வந்திருக்கிறதா என்பது பிரச்சினையல்ல. அவர்களே விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : ஏராளமான மருத்துவர்களுக்கு வேலையில்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கக் கூடிய 2,000 மருத்துவர்களுக்கு வேலை கொடுக்க எத்தனை ஆண்டுகளாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த ஆண்டு 400 பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டத்தை அரசு அறிவித்திருக்கிறது. மீதம் இருக்கின்ற 1,600 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டங்களை அரசு ஆராய்ச்சி செய்து வருகிறது. எவ்வளவு விரைவிலே வேலை கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே கொடுக்கப்படும். இந்தத் தேதிக்குள் வேலை கொடுக்க முடியுமென்று சொல்ல முடியாது.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒரே கேள்விக்கு எவ்வளவு நேரம்?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அராபிய நாடுகளில், குவைத் போன்ற நாடுகளில் டாக்டர்களை விரும்பிக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட வெளி நாடுகளுக்கு டாக்டர்கள் செல்ல அரசு அனுமதியளிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அதில் இந்த அரசுக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

READER IN PSYCHIATRY.

*201 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that there is no Reader in Psychiatry at Thanjavur Medical College ; and

(b) if so, the action proposed to be taken in the matter ?

[1978 மார்ச் 22

மனநோய் மருத்துவச் செயல்முறை பேராசிரியர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மனநோய் மருத்துவச் செயல்முறை பேராசிரியர் எவரும் இல்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) (அ) ஆம்.

(இ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள ஒரு மனநோய் மருத்துவ விரிவுரையாளர் பதவியை மனநோய் செயல்முறை மருத்துவ பேராசிரியர் நிலைக்கு உயர்த்தக்கோரும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் இருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : செயல்முறைப் பேராசிரியர் பதவி முன்பு அந்தத் துறையில் இருந்தது என்பது அரசுக்குத் தெரியுமா? எவ்வளவு ஆண்டுகள் இருந்தது? எப்போது நிறுத்தப்பட்டது? எப்போது மீண்டும் அந்தப் பேராசிரியர் பதவி கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தஞ்சைக் கல்லூரியில் முன்பு டாக்டர் (திருமதி) பத்மாசினி என்பவர் லெச்சரராக 10 ஆண்டுக்காலம் இருந்தார். அவருக்குப் பிறகு பல லெக்சரர்கள் இருந்தார்கள். அங்கே ரீடர் பதவியில்லை. லெக்சரர் பதவியை ரீடர் பதவியாக உயர்த்த வேண்டுமென்ற செயற்குறிப்பு மருத்துவத் துறை அதிகாரிகளால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

Thiru G. SWAMINATHAN : I would like to correct the Hon. Minister's statement. Previously Dr. Padmasini was Reader in Psychiatry and the post was therefore about 15 years from 1969. The post was abolished in or about 1973, when it was not a Post-Graduate institution. How it has become a Post-Graduate institution? Will the Government kindly consider the appointment of a Reader, which post was downgraded in 1973? May I also invite the attention of the Government to the fact that the University Inspection Commission has also recommended the creation of the post of Reader as early as possible?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான குறிப்பு இல்லையென்றாலும், அதைச் சரிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது முதுநிலை பட்டம் பெற்ற எம். டி. (சைக்கியாட்ரி) [illegible] இருக்கிறார். லெக்சரர் போஸ்டை அப்-கிரேட் செய்ய

1978 மார்ச் 22]

வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அரசு அதைப் பரிசீலனை செய்து வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Sir, he is only an Assistant Professor with M.D. qualification. For a Post-Graduate institution, there should be a Professor for all subjects like Surgery, Medicine, etc. Unfortunately, in the above College, which is serving the people of an area of 150 miles around it, there is no Professor or Psychiatry. The post should be upgraded. There is also a lot of work-load for a Reader in that particular subject. Since the matter is pending for the last five years, will the Government see that the post is created as early as possible?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தஞ்சை மருத்துவக் கல்லூரியிலுள்ள மனநோய் மருத்துவப் பிரிவில் தேவையான அளவுக்குத் தொழில் நுட்பம் மிகுந்த மருத்துவச் சாதனங்களும், தகுதி வாய்ந்த மருத்துவ அலுவலர்களும் இருப்பதால், அங்கு மனநோய் மருத்துவச் செயல்முறைப் பேராசிரியர் இல்லாதது எந்த விதத்திலும் மருத்துவம் பயிலும் மாணவர்களையும், உடனிணைந்த தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நோயாளிகளையும் பாதிக்கவில்லை என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருந்தாலும், பல்கலைக் கழகமும், அதனுடைய குழுவும் பரிந்துரை செய்திருப்பதால், அரசாங்கம் விரைவிலே அதுபற்றி முடிவு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Are the Government aware that the Principal of that College has recommended even in June 1977 that a post of Reader is absolutely necessary for that College?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அரசாங்கத்திற்கு அது நன்கு தெரியுமென்பதால், விரைவிலே முடிவெடுக்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : 'சைக்கியாட்ரி' என்பதும் 'மனநோய்' என்பதும் பைத்தியக்காரத்தனம் என்று பொருள்படுமா? மனநோய் மருத்துவமனை என்பது பைத்தியக்கார ஆஸ்பத்திரியைக் குறிக்கிறதா? அப்படி எத்தனை ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மனநோய் என்பது பல்வேறு காரணங்களால் வருவதே தவிர, நேரடியாக உடனே பைத்தியம் என்று சொல்ல முடியாது. அதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அது, Environmental factors, சுற்றுச் சூழ்நிலை காரணமாக வருகிறது. Stress and Strain

[1978 மார்ச் 22

காரணமாக, ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் அழுத்தத்தின் காரணமாக ஏற்படுகிறது. Hereditary ஆக பரம்பரையாக வருகிறது. அதைப் போல maladjustment என்று சொல்லப்படும், கணவன் மனைவிக்குள் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் வருகிறது. சூழ்நிலை என்ன என்பதைப் பார்த்துச் சொல்ல வேண்டும். ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் பைத்தியம் என்று சொல்ல முடியாது. அதனால்தான் மனநோய் என்று சொல்கிறார்கள். மனநோய் என்பதற்கும் பைத்தியம் என்பதற்கும் சிறிது வேறுபாடு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சில நாட்களுக்கு முன்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரி, மனநோய் இல்லம், என்று மாற்றப்பட்டது. அதற்கு முன்பு இந்த மனநோய் இல்லம், மனநோய் மருத்துவமனை என்று இருந்தது. அதனால்தான் இது பைத்தியக்கார ஆஸ்பத்திரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இதற்கு முன்பு இருந்தவர்கள், மொழிபெயர்ப்புச் செய்தவர்கள் எப்படிச் செய்தார்கள் என்று தெரியவில்லை. மனநோய் மருத்துவமனை என்றால் பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்று மட்டும் பொருளல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru G. SWAMINATHAN : Sir, the Hon. Minister explains the subject so well that he can be Professor of Psychiatry.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இப்படிப் போய் வந்தவர்களைப் பற்றித் தெரியாது. இதற்கு முன் அனுபவம் ஏற்பட்டது கிடையாது. கையிலே உள்ள குறிப்புக்களை வைத்துக் கொண்டுதான் விளக்கம் தருகிறேன்.

Diploma Holders in Textiles Technology.

*202 Q—Thiru P. R. THOMAS (on behalf of Thiru K. S. GANAPATHI) :Will the Hon. the Minister of Education be pleased to state—

(a) whether Engineering Instructors under bifurcated courses of study are granted the pay scale of Rs. 325—15—475—20—575—20—650:

(b) whether this pay scale is applicable to persons with Diploma in Textiles Technology: and

(c) if not, the reasons therefor?

1978 மார்ச் 22]

நெசவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றவர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இரு கூறாக்கப்பட்ட பாடமுறைகளின்கீழ் பொறியியல் ஆசிரியர்களாகப் பணி ஆற்றுபவர்களுக்கு ரூ. 325 - 15 - 475 - 20 - 575 - 25 - 650 என்ற சம்பள வீதம் அளிக்கப்படுகின்றதா ?

(இ) நெசவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றுள்ளவர்களுக்கு இந்தச் சம்பள வீதம் பொருந்துமா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இரண்டாவது சம்பளக்கமிஷனின் பரிந்துரைக்கேற்ப பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 325 15-475-20-575-25-650 என்ற சம்பள விகிதத்தையும், நெசவு ஆசிரியர்களுக்கு ரூ. 275-10-375-15-450 மற்றும் தனிச் சம்பளம் ரூ. 25/- என்ற சம்பள விகிதத்தையும் அளிக்க அரசு ஆணையிட்டது பின்னர் ஒரு நபர் கமிஷன் பரிந்துரைக்கேற்ப பி. டி. ஆசிரியர் சம்பள விகிதம் மாற்றியமைக்கப்பட்டதைப் போன்று நெசவு ஆசிரியர்களின் சம்பள விகிதம் ரூ. 300—15-420-20-500 மற்றும் தனிச் சம்பளம் ரூ. 25/- என மாற்றியமைக்கப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் புதிய சம்பள விகிதங்கள் டெக்ஸ்டைல் டெக்னலஜி பட்டம் படித்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றனவா? 2 -10—70-லிருந்து வழங்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை.

Amenity Fee Account

* 203 Q.—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that orders have been issued by the Government permitting the Headmasters of High Schools in Government and local bodies to operate the Amenity Fee Account ; and

(b) if so, the reasons for not extending this privilege to the Headmasters of Aided High Schools ?

[1978 மார்ச் 22

வசதிக் கட்டணக் கணக்கு

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு, உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசதிக் கட்டணக் கணக்கை வைத்து வர அனுமதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு இச்சலுகை வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(இ) வசதிக் கட்டண நிதியில் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினங்களைச் செய்ய உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி நிர்வாகிக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், இந்த நிதியை இயக்கும் சலுகையை உதவிபெறும் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்கவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த வசதிக் கட்டணத்தைப் பொறுத்தவரை, இப்போதுள்ள சிறப்புக் கட்டணத்தை அமுல் நடத்தும் நிர்வாக முறையிலேயே, குழு அமைத்து நிர்வகிக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், பள்ளிப் பராமரிப்புக்கு இந்த நிதியிலிருந்து சில செலவினங்களுடைய நிர்வாகத்திற்காகச் செய்தாலும், வசதிக் கட்டண நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்படவில்லை. பெரும்பாலான செலவினங்களுடைய பராமரிப்பு, பள்ளிகளில் இந்தக் கட்டணங்களிலிருந்து தலைமை ஆசிரியர்களால் செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. குறைந்தபட்ச அடிப்படையில் செலவிடப்பட்டாலும், நிர்வாகம் தகுந்த கணக்கு வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தத் தொகையிலிருந்து செலவு செய்ய தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

TELEVISION SETS IN GOVERNMENT HIGH SCHOOLS.

* 204 Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state —

(a) the number of Government High Schools in which Television Sets have been installed ; and

(b) whether there is any proposal with the Governme[illegible] instal a set in each Government High School in Madras and Chingleput districts ?

1978 மார்ச் 22]

அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தொலைக்காட்சிக் கருவிகள்

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எத்தனை அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தொலைக்காட்சி கருவிகள் (Telivision sets) அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள, அரசு உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும், ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) 5

(இ) இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : 5 டெலிவிஷன் செட்டுகளைத் தான் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு இதுவரையில் கொடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் டெலிவிஷன், 100 மைல் தூரத்திற்கு அந்தக் காட்சியை அளிக்கக் கூடிய சக்தி கொண்டதாக இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் வரையிலும், இந்தப் பக்கம் செங்கற்பட்டு, சென்னை போன்ற நகரங்களிலும், உயர்நிலைப் பள்ளிகளில் டெலிவிஷன் வசதி செய்து கொடுத்து, மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க விதத்தில் டெலிவிஷன் மூலம் போதிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; இந்தக் கல்வியின் நேரத்தை, தொலைக்காட்சிக் கல்வியின் நேரத்தை விரிவுபடுத்துவது குறித்து நிர்வாகத்தோடு பள்ளிக் கல்வி இயக்குநர் ஏற்பாடு செய்து வருகிறார். இந்தக் கருவிகளைப் பள்ளிகள் வாங்க ஒவ்வொரு மாணவரிடத்திலும் ஒவ்வொரு வருடமும் ரூபாய் இரண்டு வீதம் வசூல் செய்வதற்கான அதிகாரத்தை அரசு அளித்தது. எந்தக் கல்வி நிறுவனத்திற்காவது தனி நபரிடத்திலிருந்து நன்கொடையாக வரும் தொலைக்காட்சிக் கருவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பள்ளிகளுக்கு அரசு அனுமதி கொடுத்துள்ளது. அதைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் டெலிவிஷன் செட் வாங்கிக்கொள்ளலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாணவர்களிடத்தில் 2 ரூபாய் வசூல் செய்து அந்த செட்டுக்களை வாங்கிக்கொள்ளலாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது வரவேற்கத்தக்கதுதான். நம்முடைய அரசாங்கம் டெலிவிஷன் நிலையத்தோடு தொடர்பு கொண்டு, குறைந்தது அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தைத் தயாரிக்க நம்முடைய அரசாங்கம் டெலிவிஷன் நிலையத்தைக் கேட்டுக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தொலைக்காட்சிக் கல்வி திட்டத்தின் கீழ் பாடத் திட்டம் தயார் செய்ய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. அந்தக் குழுவினர் தயாரித்த பாடத் திட்டம் தொலைக் காட்சி மையத்திற்குக் கொடுக்கப்படும். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் தொலைக் காட்சி மையம் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து கல்வி போதிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது. உடல்கூறு, விஞ்ஞானம், இரசாயனம், வேளாண்மை மற்றும் விழாக்கள் ஆகியவற்றைப் பற்றிப் பாடத் திட்டம் தயாரிப்பதற்கு 1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து தொலைக்காட்சி எழுத்தாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. 2-8-1977 முதல் 28 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் தொலைக் காட்சிக்கான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கிறார்கள். அதற்கான வாய்ப்பு இப்போது உள்ளது. கல்வி சம்பந்தப்பட்ட வரையில், கல்வி இலாகாவின் செயலரும், கல்வி இயக்குநரும் தொலைக்காட்சி மையத்தோடு தொடர்பு கொண்டு இத்திட்டத்தை வகுக்க உதவி செய்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(1) கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்பு குறித்து.

திரு வே. தங்கப்பாண்டியன் : நம்முடைய மாநிலத்தில் நடைபெற இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் பற்றி விவாதிப்பதற்காக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன். அது என்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அது திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படும்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அதற்குள் அது [illegible] விடும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அது முடிந்து விட [illegible]மென்றுதான் எல்லோரும் விரும்புகிறோம்.

3. அறிவிப்புகள்.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 22-3-78-ல் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் முடிவு செய்யப்பட்டது.

23-3-1978	பிற்பகல்	4-00 மணி ..	1977-78ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை விவர அறிக்கையை அளித்தல்; 1970-71ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையை அளித்தல்.
24-3-1978 ..			தூய வெள்ளிக்கிழமை — விடுமுறை
25-3-1978 ..			கூட்டம் இல்லை.
26-3-1978 ..			ஞாயிறு விடுமுறை
27-3-1978	முற்பகல்	10-30 மணி ..	தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்
	பிற்பகல்	4-00 மணி —	1977-78 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை விவர அறிக்கையின் மீதும் 1970-71 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.
28-3-1978			மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்.
29-3-1978			உணவு மற்றும் கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.
30-3-1978			நிதி சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.

31-3-1978	முற்பகல் 10-30 மணி ..	இஸ்மாயில் கமிஷன் அறிக்கையின் மீது விவாதம்.
	பிற்பகல்	பிரிவு உபசார உரை.
1-4-1978		அரசின் சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.
2-4-1978		ஞாயிறு விடுமுறை.
3-4-1978		அரசின் சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.
4-4-1978		அரசின் சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.
5-4-1978		அரசின் சட்ட முன் வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் மாலை 1-30 மணி வரை கூடும்.

[முற்பகல் 11.00]

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) முதலமைச்சர் வினாக்களுக்கு அவரே விடையளிப்பது குறித்து.

திரு கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள், '22ம் தேதி யன்று முதலமைச்சர் அவர்கள் அவருடைய கேள்விகளுக்கு அவரே பதில் அளிப்பார். அப்படியில்லையென்றால் அவையின் முன்னவர் என்ற முறையிலே நான் பதில் அளிப்பேன்' என்று சொன்னார்கள். இன்றைய தினம் சட்ட மன்றப் பேரவையில் மான்யக் கோரிக்கை இருப்பதால், அவர் இங்கு வந்து பதில் அளிக்க முடியாது என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கூடுமான வரைக்கும் இந்த அவைக்கு வராமலிருக்க விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன். கேள்வி நேரம் சாதாரணமான நேரம் அல்ல. கேள்வி நேரத்தைப் பயன்படுத்தி சில விஷயங்களைக் குறித்து முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தலாம். சங்கடமான சில விஷயங்களில்கூட சரியான பதில் தருவதன் மூலம் சில தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். சில விஷயங்களில் முதலமைச்சர் அவர்கள் உத்திரவாதத்தைத் தரலாம். அப்படியில்லாமல் முன்னவர் அவர்களே எல்லாவற்றுக்கும் பதில் சொல்லலாம் என்றால்

அவருக்கும் ஒரு சங்கடமான நேரத்தில் அசாதாரணமான நிலை ஏற்படுகிறது. ஆகவே நாங்கள் எதிர்பார்ப்பதுபோல, இனி மேலாவது முதலமைச்சரைச் சார்ந்த கேள்விகளுக்கு அவரே பதில் அளிக்க இந்த அவையின் முன்னவர் அவர்கள் உறுதியளிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆரம்பத்திலே, முதலமைச்சர் அவர்கள் வராவிட்டாலும், தயவு செய்து அவருடைய துறைக்குரிய பதில்களையாவது சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அவ்வாறு இரண்டு, மூன்று முறை கேட்டதற்குப் பின்னால்தான், அவையின் முன்னவர் என்ற முறையில் நான் பதில் அளிக்கிறேன். தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள்தான் வந்து பதில் சொல்லியாக வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சில சூழ்நிலையின் காரணமாக அவர் தற்போது வராமல் இருந்தாலும், நிச்சயமாக இந்த அவைக்கு வருவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அவைக்குரிய மரியாதை எவ்வளவு உயர்ந்தது என்பது இந்த அரசுக்குத் தெரியும். கேள்வி நேரத்திலே எந்தவிதத் தகவலையும் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லும்போது, குறிப்பிட்ட இன்னார்தான் வர வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. இருந்தாலும் முதல்வர் அவர்கள் அவ்வப்போது வந்து கேள்வி நேரத்தில் பதில் சொல்லுவார்கள். கொள்கைக் குறிப்பின் மீதும் பேசவிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவர் அவர்களே, கட்டாயப் படுத்தக் கூடாது என்று சொல்லுவதிலிருந்து முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் கூட, முன்னவர் அவர்கள் பதில் சொல்ல விடமாட்டார் போல் தோன்றுகிறது. நாங்கள் கேட்கிற காரணத்தால், முதல்வர் அவர்கள் பதில் அளிக்கமாட்டார் என்றிருந்தால், நாங்கள் இந்த அவையில் கேள்விகளைக் கேட்காமலிருக்கிறோம். எப்படியும், முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு அவரே பதில் சொல்ல வேண்டும். அதிலே சில இலாபம் கிடைக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, 'முதல்வர் அவர்கள் வந்தால் வசதியாக இருக்கும்' என்று சொல்லுவது அன்பு உரைதானே தவிர, ஆட்சேபணையல்ல என்று கருதுகிறேன். ஆகவே அப்படியே செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

[1978 மார்ச் 22

4. 82-வது விதியின்கீழ் விவர அறிக்கை.

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் மீது அரசின் முடிவுகள் குறித்து.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகளின் மீது அரசு எடுத்திருக்கிற முடிவினை அறிக்கையாக இந்த அவையின் முன் வைக்கிறேன்.

1977 செப்டம்பர் திங்களில் வெளியிடப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து வழங்கப் பட்ட ஆணைகள் குறித்துக் கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து பெறப் பட்ட முறையீடுகள் மேல் அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் கீழ்க்கண்ட முடிவுகளை மேற்கொண்டுள்ளது —

(1) அரசு ஆணை எண் 2106, கல்வி, தேதி 21-9-77, அரசாணை எண் 2107, கல்வி, தேதி 21-9-77 மற்றும் அரசாணை எண் 2159, கல்வி, தேதி 26-9-77 ஆகிய ஆணைகளில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் 1.4.76 முதல் நிர்ணயிக்கப்பட்டு 1-1-77 ல் இருந்து பணப்பயன் அளிக்கப் படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக 1-1-74-ல் இருந்து இவ்வாசிரியர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு 1-1-77-ல் பணப்பயன் வழங்கப்படும் என்று அரசு இப்போது முடிவு செய்துள்ளது. மேலும் தற்பொழுது மாற்றியமைக்கப் பட்ட ஊதிய விகிதத்தின் கீழ் ஆசிரியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப் பட்ட பிறகு அடுத்த கட்ட ஊதிய உயர்வு பழைய ஊதிய விகிதத்தில் இவ்வாசிரியர்கள் எத்தேதியில் பெற்றிருப்பார்களோ அதே தேதியிலிருந்து புதிய ஊதிய விகிதத்தில் ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

(2) அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளில் உள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவிகள் படிப்படியாக நீக்கப் பெறுதல் வேண்டுமென்ற முடிவினை அரசு மேற்கொண் டுள்ளது. வருங்காலத்தில் கல்லூரிகளில் பயிற்றுநர் மற்றும் விளக் குநர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள். தற்பொழுதுள்ள பட்ட மேற்படிப்புத் தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 5 ஆண்டு பணி முடிவுற்றவுடன் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்று அரசு ஆணை எண் 2659, நாள் 28-12-77-ல் ஆணைகள் வழங்கப்பட்டிருந்தன. இதனை மாற்றி வருங்காலத்தில் பட்ட மேல்படிப்புத் தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 3 ஆண்டு பணி நிறைவெய்தும்பொழுது உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்று அரசு தற்பொழுது முடிவு செய்துள்ளது. தனியார் கல்லூரிகளில் வரவிருக்கும் உதவிப் பேராசிரியர்களுக் கான காலியிடங்கள் அக்கல்லூரிகளில் கல்வித் தகுதியுள்ள விளக்கு நர் மற்றும் பயிற்றுநர்களைக் கொண்டே நிரப்பப்படுதல் வேண்டும் [illegible] அத்தகைய விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் கல்லூரியில் [illegible] இருக்கும் சூழ்நிலையில் மட்டிலுமே புதிய உதவிப்பேர

1978 மார்ச் 22] [திரு. செ. அரங்கநாயகம்]

சிரியர்களை வெளியிலிருந்து நியமிக்கப்படவேண்டுமென்றும் இத்தனி யார் கல்லூரிகளின் நிர்வாகத்தினர் கோரப்படுவர். இந்த ஆணை அமுல்படுத்துவதை ஒரு நிபந்தனையாகக் கொண்டு அரசினர் மானி யம் வழங்குவது நிர்ணயிக்கப்படும்.

(3) பட்டப்படிப்பு விளக்குநர் மற்றும் பயிற்றுநர்கள் பட்ட மேல்படிப்புத் தகுதி பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கவும் அங்ஙனம் அவர்கள் பட்ட மேல்படிப்புத் தகுதி பெறும் வரை திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி ஊதிய உயர்வு பெற அனுமதிக்கப்பெறுவர்,

(4) உதவிப் பேராசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் ரூ. 700–1,600 ஊதிய விகிதம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக் கையை அரசு ஏற்கிறது. பேராசிரியர்களுக்கும், துறைத்தலைமைப் பேராசிரியர்களுக்கும் தனியாக படி வழங்கப்படல் வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

(5) 1978 ஜூன் முதல் நடைமுறையில் வரவிருக்கும் 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற புது முறைக்கல்வித் திட்டத்தினாலும் 1979 ஜூன் திங்கள் முதல் கல்லூரிகளிலுள்ள புகுமுக வகுப்பு நீக்கப் பெற இருப்பதினாலும் கல்லூரி ஆசிரியர்கட்கு வேலை இழப்பு ஏதும் இராது என்று ஏற்கெனவே வழங்கிய உறுதியினை அரசு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது. இவ்வுறுதிமொழியினை நிறை வேற்றும் பொருட்டு பல்கலைக் கழகங்களுடன் கலந்தாலோசித்து கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கான பணித்திட்டம் மாற்றியமைக்கப் படும். தனியார் கல்லூரிகளில் பணி பளு குறைப்பினால் 31-3-77 அன்று பணியிலிருந்த ஆசிரியர்கள் எவரும் பணியிலிருந்து நீக்கப் படமாட்டார்கள் என்றும் அரசு உறுதியளிக்கிறது.

(6) விதி 10 (ஏ) (1)-ன் கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள் குறித்து அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்கும்.

(7) நேர்முகச் சம்பளப் பட்டுவாடா செய்யவேண்டுமென்ற தனியார் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கையை கொள்கை அளவில் அரசு ஏற்றுக் கொள்கிறது. இங்ஙனம் நேரடியாக ஊதியம் வழங்குவது சம்பந்தமான நடைமுறைகள் குறித்து அரசு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

(8) தமிழ்நாடு குடும்பசேமநல நிதித் திட்டம் தனியார் கல்லூரிகளி லுள்ள ஆசிரியர்கட்கும் அளிக்கப்படும்.

(9) தனியார் கல்லூரி சட்ட விதிகள் குறித்தும் இக் கல்லூரிகளில் நியமனம், தகுதிக்கான பருவம், பணியில் உறுதி செய்தல் மற்றும் பதவி உயர்வு, மருத்துவ விடுப்பு வசதிகள் அளித்தல் போன்ற பணி முறைமைகள் குறித்தும் ஆய்ந்தறிய அரசு, தனியார் கல்லூரிகளின் நிர்வாகிகள், தனியார் கல்லூரி ஆசிரியர் கள் போன்றவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினை

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 22

அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி பொருள்கள் குறித்த பரிந்துரைகளை இக்குழு அமைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

(10) கல்லூரிகளிலுள்ள உடற்பயிற்சி இயக்குநர், நூலகர் கட்கு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைப்படி ஊதிய விகிதம் தன்மை பெறுவர்.

5. கவன ஈர்ப்பு

முதுகுளத்தூர் வட்டம், சாயல்குடி பஞ்சாயத்தில் உள்ள கருப்புக்கட்டி உற்பத்தியாளர் & கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ள வி. வி. ஆர். காலனியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"முதுகுளத்தூர் வட்டம், சாயல்குடி பஞ்சாயத்தில் உள்ள கருப்புக்கட்டி உற்பத்தியாளர் & கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ள வி. வி. ஆர். காலனியில் 26-2-1978-ல் நடைபெற்ற பெரும் தீ விபத்தினால் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகி விட்டதனால் இலட்சத்திற்கு மேற்பட்ட பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதும் அதனால் ஏழை பனை மரத் தொழிலாளி களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்தும்."

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத் திலுள்ள சாயல்குடி கிராமத்தில் வி. வி. ஆர். காலனியில் 26-2-1978-ம் தேதி, பிற்பகல் சுமார் 1-45 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் 64 கூரை வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. முதுகுளத்தூர் வட்டாட்சியர் தீ விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டது என்றும், உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், பொருள் சேதத்தின் மதிப்பு ரூ. 19,170 இருக்கும் என்றும் அறிக்கை அனுப்பியுள்ளார். கால்நடைகள் சேதம் எதுவும் இல்லை. பரமக்குடியிலிருந்து தீயணைப்புப் படையினர் 26-2-1978-ம் தேதி பிற்பகல் 3-15 மணிக்கு வந்து தீயை அணைத்தார்கள். தீ விபத்தினால் வீடுகளை இழந்த 150 பேர்களும், மேற்படி ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திலும், பக்கத்திலுள்ள வீடுகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் பனையேறிகள். அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. நிலைமை அமைதியாக உள்ளது. ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 வீதம் ஆக [illegible] 1[illegible]0 உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 22] [திரு. கே. இராஜா முகமது]

இத்துடன் ஒரு குடும்பத்துக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய வீடுகளைத் திரும்பக் கட்ட விரைவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீ விபத்து நடந்த இடத்தை சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சென்று பார்வையிட்டார். நானும் சென்று பார்வையிட்டேன். ஏறக்குறைய 80 வீடுகள் சேதமாகி யிருக்கின்றன. அவர்கள் சேமித்து வைத்திருந்த நவதானியங்கள், உணவுப் பொருள்கள், ஆடைகள் ஆகிய முழுவதும் எரிந்துவிட்டன. அவர்கள் வேண்டுவது, தங்களுடைய குடியிருப்பை ஒரு நிரந்தர மான கட்டிடமாகக் கட்டுவதற்காக நீண்ட காலக் கடன்— அவர்களெல்லாம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்; அவர்களுடைய குடியிருப்புகள் குடிசைகளால் இருப்பதால்தான், இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் நடைபெறு கின்றன. ஆகவே அவர்களுடைய குடியிருப்புகளை கட்டிடமாகக் கட்டிக் கொள்வதற்காக அந்தச் சங்கத்தின் மூலம் நீண்ட காலக் கடன் தொகை கொடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் குறிப் பிட்டதைப் போல, பனையேறும் தொழிலாளர்கள் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பாதுகாப்பிற்கு உட்பட்டவர்கள் என்ற முறையில் வருவாய்த்துறை எடுத்திருக்கிற நடவடிக்கைகளையொட்டி கதர் கிராமக் கைத்தொழில் வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று சட்ட மன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் மற்றவர்களும் என்னிடம் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வருகிற வாரியக் கூட்டத்தில் இந்த விஷயத்தை விவாதித்து, வாரியத்தின் மூலமாக என்னென்ன நன்மைகளைச் செய்ய முடியுமோ அவற் றைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். விபத்தால் நஷ்டமடைந்திருக்கிற தொழிலாளர்களுக்கு சாதாரண மூலதனச் செலவிற்காக ரூ. 200 கொடுப்பதற்கு இப்போது வழி இருக்கிறது. அதை நான்காண்டு களுக்குப் பிறகு 4 சதவீத வட்டியில் திருப்பிக்கொடுத்தால் போதும் என்று இருக்கிறது, அதுபோக, கருவிகள் வாங்குவதற்கு ரூ. 100 என்று வைத்து. அதில் ரூ. 50 மானியமாகவும் ரூ. 50 கடனாகவும் இப்போது கொடுக்கப்படுகிறது. விபத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு ரூ. 100 முதல் ரூ. 200 வரை உதவியாகவும் மானியமாகவும் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. வாரியம் இதைப் பரிசிலனை செய்து கொண்டிருப்பதால், தகுந்த நடவடிக்கை அதன்பேரில் எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

6. அரசின் தீர்மானம்

சிறைச்சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்.

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Deputy Chairman, Sir, I move :

"That the Policy Notes on Jails and Administration of Justice @ placed on the Table of the House be taken into consideration".

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப் பட்ட தீர்மானம்:-

''சட்ட மன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள சிறைச் சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

திரு. வே. தங்கப்பாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய சட்டத்துறை அமைச்சர் வைத்துள்ள உள் துறை நிர்வாகத்திலுள்ள சிறைகள் மற்றும் நீதி நிர்வாகம் சம்பந்த மான கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் நான் பெருமையோடு, மன நிறைவோடு ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நினைவு அல்லது அறிவு சரியாக இருந்தால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் அமைச்சராக இருப்பது தமிழ்நாட்டிலே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள்தான் என்று கருதுகிறேன். மத்தியில் பலர் நீதித் துறையில் நீதிபதியாக இருந்தவர்கள் பல்வேறு அமைச்சர் களாக இருந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டின் அதிர்ஷ்டம் என்று கூட பெருமையாகச் சொல்கிறேன். நீண்ட அனுபவம் பெற்ற வரும் பேறிஞர் அண்ணாவோடு நெருங்கிப் பழகியவரும் ஒரு காலத்தில் மக்கள் நல உரிமைக் கழகத்தை உருவாக்கக் காரண மாக இருந்தவருமான ஒருவர் இன்று நம்முடைய சட்ட அமைச்சர் பொறுப்பில் இருக்கிறார்கள். நீண்ட காலம் நீதிபதியாக இருந்து குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தின் சார்பாக தண்டனை விதித்து நிறைவேற்றியவர் இன்றைக்கு சட்ட அமைச்சர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் அரசியல் சட்ட 44-வது திருத்த சட்ட முன்வடிவு இங்கே விவாதத்திற்கு வந்தபோது, அவர்கள் பெருமையோடு ஒன்றைச் சொன்னார்கள். அது நமக்கெல்லாம் மன நிறைவை அளித்தது. கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அவசர காலத்தில் கொண்டு வந்த அந்தச் சட்டம் ஒரு கருப்புச் சட்டம் என்றே அவர்கள் சொன்னார்கள். அதைச் சொல்லும்போது, சிலருக்குக் கூச்சமாகக் கூட இருந்தது.

@ 256-257 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஏனென்றால் ஒருகாலத்தில் அதை ஆதரித்தோமே என்று பழைய நினைவுகளை எண்ணி, எப்படி இதை ஆதரிப்பது என்று கூச்சப் பட்டுக் கொண்டிருந்தவர்கள் உண்டு. ஆனால் நமது சட்ட அமைச்சர் அவர்கள் அற்புதமான ஆங்கில வார்த்தைகளில் பேசியதை மீண்டும் திரும்ப நினைக்கிற முறையில் ஒரு நீதிமான் சட்ட அமைச்சராக இருந்து அந்த உணர்வோடு, கண்ணோட்டத் தோடு, ஜனநாயக நினைவோடு பேசினார்கள். மக்கள் உரிமைகள் காக்கப்பட வேண்டும், கருப்புச் சட்டம் இந்த நாட்டிற்குத் தேவையில்லை என்று அவர்கள் வலியுறுத்திப் பேசியபோது, அது எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கு, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு, நீதிமன்றங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்குகிறவர்களுக்கு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில். மன நிறைவையும் உற்சாகத்தையும் அளித்தது. நீதி கிடைக்கும் என்று நம்பியவர்களுக்கு ஒரு பச்சைக் கொடி காட்டியதைப் போல் அவர்கள் பேசியது ஒரு வரப்பிரசாதமாக இருந்தது.

அது தொடர்பாக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். ஏழை மக்கள் இன்றுள்ள சட்டங்களின் மூலமாகப் பாதுகாப்பு பெற வேண்டும். ஏழைகள் என்றால், குற்றமற்றவர்கள், குற்றம் சாட்டப்பட்டு தவறாகத் தண்டிக்கப்பட்டவர்கள் விடு விக்கப்பட வேண்டும். அதற்காக நீதிமன்றத்தில் வழக்காடும் வாய்ப்பில்லாமல் போகக்கூடாது என்றுதான் இலவசமாக வழக்கறிஞர்கள் மூலமாக ஆலோசனை கொடுத்து அதன் வாயிலாக ஏழைகளுக்கும் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்று விவரமாகச் சொல்லப்பட்டது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இருபதாண்டு காலத்திற்கு முன்பு ஒரு படத்தில் வசனமாக எழுதியபோது, ''சட்டம் ஒரு இருட்டறை, அதிலே வக்கீலின் வாதம் தான் விளக்கு, அந்த விளக்கை ஏழைகளால் பெற முடியவில்லையே'' என்ற ஏக்கத்தை அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு அந்த வாசகத்திற்கு வரிவடிவம் கொடுக்கப்பட்டு ஏழைகளுக்கும் சட்டப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அவர்களுடைய ஜனநாயக உரிமைகள், உணர்வு கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் தொடர்பாக, மாநில அரசாங்கமாக இருந்தாலும், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், தண்டனை கொடுத்தால், அதை விஞ்ஞான அடிப்படையில், மனிதாபிமான உணர்வோடு, அண்ணாவின் மொழியில் சொன்னால், தாய் உள்ளத்தோடு, அணுக வேண்டுமென்ற உணர்வு இன்றைக்குத் தலை தூக்கியிருக் கிறது. மத்திய அரசிலும் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார் கள். தூக்கு தண்டனை இந்தியாவில் கூடாது, அது பிரிட்டிஷார் காலத்தில் ஏற்பட்ட சிறைத் தண்டனை என்ற எண்ணம் வலுப்பெற்று வருகிறது. சிறைச்சாலையில் உள்ளவர்கள் சிறை மானுயுவல் வேண்டுமென்று கேட்பதே முன்பெல்லாம் பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. யாரும் கேட்க மாட்டார்கள்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 22

கேட்டால் அவர்கள் அடிக்கப்படுவார்கள். இன்றைக்குத் தலைவர் ஸ்தானத்தில் இருந்து கொண்டு விளக்கம் கொடுக்கிறவர்கள், இந்தக் கொள்கைக் குறிப்பை முன் மொழிந்த சட்ட அமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சியில் உள்ள பல்வேறு அரசியல் வாதிகள் அத்தனை பேருக்கும் சிறைச்சாலை அனுபவம் இருக்கும். சுதந்திரப் போராட்ட காலத்தில்...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு அந்த அனுபவம் உண்டா என்பது தெரியவில்லை. (சிரிப்பு)

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஆளும் கட்சித் தரப்பில் உள்ள பலருக்கு அந்த அனுபவம் இருக்கலாம். எல்லோருக்கும் எல்லா அனுபவங்களும் ஏற்பட்டுவிடுவதில்லை,

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Deputy Chairman Sir, I have the experience of visiting Jails and interviewing the prisoners.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் நம்முடைய அன்புச் சிறையில் தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வே. தங்கப்பாண்டியன் : எல்லாக் காரியங்களிலும் எல்லோருக்கும் நேரடியான அனுபவம் இருக்க வேண்டுமென்பதில்லை. புதிய கண்ணோட்டம் இன்று ஏற்பட்டிருக்கிறது. சிறையில் உள்ளவர்களை கைதிகள் என்று அழைப்பதை விட சிறை வாழ் மக்கள், சிறை வாழ் நண்பர்கள் என்று பேச வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி துருப்பிடித்துப்போன பழைய சட்டங்கள், வழக்கங்கள் மாற்றப்பட வேண்டும். ஏதோ ஒன்பது மாத காலத்திற்குள் அத்தனையையும் செய்து விட வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. நாமெல்லாம் ஜனநாயகப் பாரம்பரியத்தில் நின்று மக்கள் மத்தியில் இவை எல்லாம் நடைபெற வேண்டுமென்று சொன்னவர்கள். நாங்கள் சிறையிலிருந்தபோது, அங்கிருந்தவர்கள் புதிய சட்டங்கள் வருமென்ற நம்பிக்கையில் இருந்தார்கள். விடிவெள்ளி தோன்றும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலம் போய்க்கொண்டே இருக்கிறது. அதற்கு வாய்ப்பான சட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை.

சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். வரவேற்கத்தக்கது. அந்தக் குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருக்க வேண்டியதுதான். சட்ட அமைச்சர் அவர்கள் கூட நீதிபதிதான். மருத்துவத் துறையில் மன நோய் மருத்துவர் இருக்கிறார்.

7 மார்ச் 22]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தண்டனை கொடுத்து சிறைக்குக் கைதிகளாக அனுப்பி வைத்தவர்களே அதில் இருக்கிறார்கள் என்கிறீர்களா?

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களுக்குத் தெரியாததல்ல. கைதிகளாக அனுப்பி வைத்தவர்கள்தான் சீர்திருத்தப் பணியில் இருக்கிறார்கள் போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். மருத்துவத் துறையில் உள்ள மனநோய் டாக்டர் அதில் இருக்கிறார். ஆனால் அவர்களுடைய பரிந்துரைகள் சிறைவாழ் நண்பர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு நன்மை அளிக்கும் வகையில் இருக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, regarding the members who have been appointed. it has been mentioned that Dr. Venkoba Rao is a psychologist of the Erskine Hospital. He is not a psychologist. There is a difference between a psychologist and a psychiatrist. He is a Professor of Psychiatry in Erskine Hospital. There seems to be an error in the Policy Note, in both the English and Tamil versions.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த மூன்று பேர் கொண்ட குழு சிறைச்சீர்திருத்தங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நல்ல நோக்கத்தோடுதான் இதைச் செய்திருக்கிறது. அதற்கு முன்னால் மத்திய அரசாங்கத்தின் எண்ணத்தின்படி இங்கே இஸ்மாயில் கமிஷன் அமைக்கப்பட்டு அதிலிருந்து பரிந்துரைகள் வந் திருக்கின்றன. அதில் இன்றைக்கு சிறைச்சாலையில் எப்படி நடக் கிறது, என்னென்ன கொடுமைகள் அங்கே இழைக்கப்படுகின்றன என்பவை விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அவர் களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்றும்

(முற்பகல் 11-20)

அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷன் நியமிப்பதிலேயே நாம் தாமதம் காட்டியிருக்கிறோம். பிறகு அதன் அறிக்கையை வெளி யிடுவதிலே தாமதம் என்ற நிலை இருக்கிறது. எனவே தான் சொல் கிறேன். அமைக்கப்பட்ட கமிஷன்களின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்கம் பல்வேறு உத்தரவுகளைப் போடலாம்.

இப்போதுகூட அரசாங்கம் அனந்தநாராயணன் கமிஷனை நியமித்திருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் ஷா கமிஷனுக் குக் கொடுத்த முறையீடுகளின் பேரில் விசாரணைசெய்வதற்கு அனந்த நாராயணன் கமிஷன் போடப்பட்டு, அது இன்றையதினம் விசாரித் துக் கொண்டிருக்கிறது, அதிலேகூட நான் ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் போன்றவர் கள் கொடுத்த புகாருக்கு ஆதாரமாக சாட்சியம் சொல்லுவதற்கு சாட்சி யாரையாவது அழைத்துச் சென்று கமிஷன் முன்னால்

கேட்டால் அவர்கள் அடிக்கப்படுவார்கள். இன்றைக்குத் தலைவர் ஸ்தானத்தில் இருந்து கொண்டு விளக்கம் கொடுக்கிறவர்கள், இந்தக் கொள்கைக் குறிப்பை முன் மொழிந்த சட்ட அமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சியில் உள்ள பல்வேறு அரசியல் வாதிகள் அத்தனை பேருக்கும் சிறைச்சாலை அனுபவம் இருக்கும். சுதந்திரப் போராட்ட காலத்தில்...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு அந்த அனுபவம் உண்டா என்பது தெரியவில்லை. (சிரிப்பு)

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஆளும் கட்சித் தரப்பில் உள்ள பலருக்கு அந்த அனுபவம் இருக்கலாம். எல்லோருக்கும் எல்லா அனுபவங்களும் ஏற்பட்டுவிடுவதில்லை,

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman Sir, I have the experience of visiting Jails and interviewing the prisoners.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் நம்முடைய அன்புச் சிறையில் தொடர்ந்து இருந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு வே. தங்கப்பாண்டியன்: எல்லாக் காரியங்களிலும் எல்லோருக்கும் நேரடியான அனுபவம் இருக்க வேண்டுமென்பதில்லை. புதிய கண்ணோட்டம் இன்று ஏற்பட்டிருக்கிறது. சிறையில் உள்ளவர்களை கைதிகள் என்று அழைப்பதை விட சிறை வாழ் மக்கள், சிறை வாழ் நண்பர்கள் என்று பேச வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி துருப்பிடித்துப்போன பழைய சட்டங்கள், வழக்கங்கள் மாற்றப்பட வேண்டும். ஏதோ ஐந்து மாத காலத்திற்குள் அத்தனையையும் செய்து விட வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. நாமெல்லாம் ஜனநாயகப் பாரம்பரியத்தில் நின்று மக்கள் மத்தியில் இவை எல்லாம் நடைபெற வேண்டுமென்று சொன்னவர்கள். நாங்கள் சிறையிலிருந்தபோது, அங்கிருந்தவர்கள் புதிய சட்டங்கள் வருமென்ற நம்பிக்கையில் இருந்தார்கள். விடிவெள்ளி தோன்றும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலம் போய்க்கொண்டே இருக்கிறது. அதற்கு வாய்ப்பான சட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை.

சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். வரவேற்கத்தக்கது. அந்தக் குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் இருக்க வேண்டியதுதான். சட்ட அமைச்சர் அவர்கள் கூட நீதிபதிதான். மருத்துவத் துறையில் மன நோய் மருத்துவர் இருக்கிறார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தண்டனை கொடுத்து சிறைக்குக் கைதிகளாக அனுப்பி வைத்தவர்களே அதில் இருக்கிறார்கள் என்கிறீர்களா?

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களுக்குத் தெரியாததல்ல. கைதிகளாக அனுப்பி வைத்தவர்கள்தான் சீர்திருத்தப் பணியில் இருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். மருத்துவத் துறையில் உள்ள மனநோய் டாக்டர் அதில் இருக்கிறார். ஆனால் அவர்களுடைய பரிந்துரைகள் சிறைவாழ் நண்பர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு நன்மை அளிக்கும் வகையில் இருக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.

THIRU G. SWAMINATHAN: Sir, regarding the members who have been appointed. it has been mentioned that Dr. Venkoba Rao is a psychologist of the Erskine Hospital. He is not a psychologist. There is a difference between a psychologist and a psychiatrist. He is a Professor of Psychiatry in Erskine Hospital. There seems to be an error in the Policy Note, in both the English and Tamil versions.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த மூன்று பேர் கொண்ட குழு சிறைச்சீர்திருத்தங்களைச் செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நல்ல நோக்கத்தோடுதான் இதைச் செய்திருக்கிறது. அதற்கு முன்னால் மத்திய அரசாங்கத்தின் எண்ணத்தின்படி இங்கே இஸ்மாயில் கமிஷன் அமைக்கப்பட்டு அதிலிருந்து பரிந்துரைகள் வந்திருக்கின்றன. அதில் இன்றைக்கு சிறைச்சாலையில் எப்படி நடக்கிறது, என்னென்ன கொடுமைகள் அங்கே இழைக்கப்படுகின்றன என்பவை விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அவர்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்றும்

(முற்பகல் 11-20)

அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கமிஷன் நியமிப்பதிலேயே நாம் தாமதம் காட்டியிருக்கிறோம். பிறகு அதன் அறிக்கையை வெளியிடுவதிலே தாமதம் என்ற நிலை இருக்கிறது. எனவே தான் சொல்கிறேன். அமைக்கப்பட்ட கமிஷன்களின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்கம் பல்வேறு உத்தரவுகளைப் போடலாம்.

இப்போதுகூட அரசாங்கம் அனந்தநாராயணன் கமிஷனை நியமித்திருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் ஷா கமிஷனுக்குக் கொடுத்த முறையீடுகளின் பேரில் விசாரணை செய்வதற்கு அனந்தநாராயணன் கமிஷன் போடப்பட்டு, அது இன்றையதினம் விசாரித்துக் கொண்டிருக்கிறது. அதிலேகூட நான் ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் போன்றவர்கள் கொடுத்த புகாருக்கு ஆதாரமாக சாட்சியம் சொல்லுவதற்கு சாட்சியாரையாவது அழைத்துச் சென்று கமிஷன் முன்னால்

சொல்லச் செய்ய வேண்டுமென்றால், அதற்குரிய படி அந்தச் சாட்சிகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அந்தக் கமிஷனே மத்திய அரசாங்கம் சொன்னதன் பேரில்தான் போடப்பட்டது என்பது வேறு விஷயம். ஆனால் அமைக்கப்பட்ட அந்தக் கமிஷன் முன்பு இன்றைய தினம் எங்களுடைய முறையீட்டுக்கு ஆதாரமாக, பக்கபலமாக சாட்சியங்களைக் கூப்பிட்டுக் கொண்டு வர வேண்டுமென்றால், அப்படிக் கொண்டுவரப்படும் சாட்சிகளுக்குப் பணம் கொடுக்க முடியாது என்கிறது அனந்தநாராயணன் கமிஷன். காரணம் அந்தக் கமிஷனுக்குப் பணம் இல்லை. இந்த அரசாங்கம் அந்தக் கமிஷனுக்குப் பணம் கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. சோமசுந்தரம் கமிஷன் போடப்பட்ட போது, அங்கே சாட்சி சொல்ல வருகிறவர்களுக்கு படி அளிக்கப்பட்டது. அரசாங்கத்தாரிலேயே அவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். ஆனால் அனந்தநாராயணன் கமிஷனில் சாட்சிகளுக்குப் படி கொடுக்க பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

எதற்கு சொல்லுகிறேன் என்றால், இன்றிருக்கும் நிலைமையில் நீதியின் முடிவுகளை அறிவிப்பதில் நிர்வாகம் எவ்வளவு காலதாமதம் செய்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்பதற்காகத்தான். ஆங்கிலத்திலே Justice delayed is Justice denied என்று சொல்லுவார்கள். வழக்கு முடிவு கூறப்படுவதற்கு முன்னால் இடையில் ஏற்படுகிற காலதாமதம் காரணமாக அவர்கள் கொள்ளுகிற ஏக்கம், என்றைக்கோ கிடைக்க இருக்கிற நீதிக்காக அவர்கள் ஏறி இறங்குகிற படிக்கட்டுகள் வழக்கறிஞர்கள் பின்னால் சுற்றும் சூழ்நிலை ஆகியவை இனிமேலும் இருக்கக்கூடாது. தொடுக்கப்படுகிற வழக்குகள் விரைவிலே தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு கமிஷனுக்கு அரசாங்கமே சாட்சியம் தயாரித்து அழைத்து வருவது என்பதும் அரசாங்கம் அமைத்த மற்றொரு கமிஷனுக்கு வருகிற சாட்சிகளுக்குப் பணம் கொடுப்பதற்குக் கூட வழியில்லாமல் செய்வது போன்ற Step-motherly treatment கொடுப்பதும் எந்த வகையிலும் சரியில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, சிறையில் உள்ள மக்களின் பிரச்சினைகளைச் சிந்தித்துக் காரியம் செய்ய வேண்டும். சிறைக்குள்ளே வந்தவுடனே கொடுமைக்கு ஆளாக்கப்படுவது என்பது சரியல்ல. அவர்கள் வெளியே ஏதோ தவறு செய்து விட்டுத்தான் வருகிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அப்படி வருகிற பல்வேறு இளைஞர்கள் தெரிந்தோ தெரியாமலோ அவற்றைச் செய்து விட்டு வருகிறார்கள் சிலர் provocation காரணமாக சில குற்றங்களைச் செய்து வருகிறார்கள். ஆத்திரத்தின் காரணமாக சில குற்றங்களைச் செய்து விட்டு வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு எதிர்கால வாழ்க்கை இருக்கிறது என்பதற்குரிய முறையில் சிறையில் அவர்களுக்கு அடித்தளம் தயாரிக்கப்பட

வேண்டும். ஒரு 'கிரவுண்ட்' தயாரிக்கப்பட வேண்டும் இதைச் செய்யாமல் அவர்கள் சிறைச்சாலைக்குள் நுழைந்த உடனேயே அவர்களை அடிப்படையில் அவர்களை அடித்து நொறுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நடத்துவது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'அடி' விவகாரம் பற்றித் தனியாகப் பேச சந்தர்ப்பம் வருகிறது. அன்றைக்கு அதை வைத்துக்கொள்ளலாம். இன்றைக்கு நிர்வாகத்தைப்பற்றி மட்டும் பேசுவது நல்லது.

திரு வே. தங்கப்பாண்டியன் தலைவர் அவர்களின் யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். சிறைக்கு வருகிறவர்களைச் சீர்திருத்தம் செய்வதற்குப் பதில் ஆட்டு மந்தைகளைப் போல் நடத்துகிற தன்மை இன்றைக்கு இருந்து வருகிறது. ஆனால் அண்டை மாநிலங்களான கருநாடகத்திலும், கேரளத்திலும், சிறையில் இருக்கிற கைதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கிற வகையில் பல்வேறு காரியங்கள் செய்திருக்கிறார்கள். சிறைத் தண்டனை முடிவுற்று அவர்கள் வெளியே வரும்போது ஒரு நல்ல நம்பிக்கையோடு, ஒரு வேலைவாய்ப்பைப் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு வருகிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலையை உருவாக்க தற்போது இருக்கும் ஜெயில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட முறையிலேயே சிறைக்கு வருகிறவர்கள் சிறைக்குள்ளேயே உலவிடவும் வேலைகளைக் கற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட வேண்டும். இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற கமிஷனைக் கூட அரசாங்கமே கேரளத்திற்கும் கருநாடகத்திற்கும் அனுப்பி அங்கே இருக்கிற நிலைமைகளைப் பார்த்து வரச்செல்லலாம். அந்த வகையில் அதற்கு ஒரு வேண்டுகோள்கூட விடலாம்.

கேரளத்தில், மத்திய சிறைச்சாலையில் அவர்களே 'கேண்டீன்' நடத்துகிறார்கள். சிறையில் இருக்கும் நண்பர்கள் தங்கள் உழைப்பின் மூலமாகக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய பொருள்களை அங்கே வாங்கிக்கொள்ளலாம் என்ற முறையில் வைத்திருக்கிறார்கள். இதைக் கருநாடகத்திலும் பின்பற்றுகிறார்கள்.

சிறையின் விதிகள் சட்டங்கள் எல்லாம் மாற்றப்பட வேண்டும் என்று நான் ஏதோ அலங்காரத்திற்காகச் சொல்ல வரவில்லை. 2000 பேர்கள் தான் அந்தச் சிறைச்சாலையில் இருக்கிறார்கள், அவர்களைப் பற்றி நமக்கு என்ன கவலை என்று யாரும் இருந்துவிடக்கூடாது. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த விதிமுறைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்ற நிலைமை மாறி, அவர்களைத் திருத்தக்கூடிய வகையில் சட்ட திட்டங்கள் இப்போதே உருவாக்கப்பட வேண்டும்.

வெளியே இழைத்துவிட்ட குற்றங்களுக்காக அந்த நண்பர்கள் சிறைச்சாலைக்குள் வருகிறார்கள். அவர்கள் இழைத்த குற்றங்களுக்காக அவர்களை மக்கள் மத்தியிலிருந்து பிரித்து வைக்கிறோம். அவர்களை சமுதாயத்தில் மற்றவர்களோடு வாழ முடியாத வகையில் தனியாகப் பிரித்து வைக்கிறோம். இது அவர்களுக்குத் தண்டனையாக வழங்கப்படுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் சிறைச்சாலைக்குள் வந்த பிறகு, அங்கே அவர்களுடைய உழைப்பை நாம் 'எக்ஸ்பிளாய்ட்' செய்கிறோம். இதைச் சொல்லும்போது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சிறைச்சாலையில் அவர்களுடைய உழைப்பை அரசாங்கம் பெறும்போது, அவர்களுக்கு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படவேண்டும். நாள் ஒன்றுக்கு 20 பைசா, 25 பைசா, 40 பைசா என்ற அளவில் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. பல்வேறு மத்தியச் சிறைச்சாலைகளில் உள்ளவர்களால் மேசைகள், நாற்காலிகள், மற்றும் நெசவுப் பொருள்கள், தச்சுப் பொருள்கள், இரும்புப் பட்டறைப் பொருள்கள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு அவைகளையெல்லாம் அரசாங்கம் வாங்குகின்றது. அந்தப் பொருள்கள் யாருடைய உழைப்பிலே உருவாக்கப்பட்டன? சிறையில் உள்ள நண்பர்கள் உழைப்பிலிருந்து செய்யப்பட்ட அந்தப் பொருள்களுக்கு, நாம் என்ன ஊதியத்தைத் தருகிறோம்? அந்தப் பொருளை விற்று அரசாங்கம் லாபம் பெறுகிறதே தவிர, இதனால் சிறைவாழ் மக்களுக்கு ஊதியம் கிடைக்கிறதா என்றால் இல்லை. இதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பி-வகுப்பு சிறைக் கைதிகளுக்கு தினம் ரூ. 2.75 அளவுக்குச் செலவு செய்யலாம் என்று விதி போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் பி-வகுப்பு, கைதி எந்த வகையில் 3 வேளை சாப்பாட்டைப் பெற முடியும்? அவன் ஏற்கனவே செய்த குற்றத்திற்காக நொந்து போய் இருக்கிறான், அவனிடத்திலே உழைப்பை வேறு வாங்குகிறோம். எனவே உழைப்பை வாங்குகிறபோது போடப்படும் உணவாவது வயிறார உண்ணுகிற அளவுக்கு இருக்க வேண்டாமா? ஒரு பி-வகுப்பு கைதிக்கு ரூ. 2-75-ஐ வைத்துக் கொண்டு என்ன சாப்பாடு போட முடியும்?

இப்போது அடிக்கடி சிறைச்சாலைத் துறைத் தலைவர் சிறைக்கு வருகிறார். வர வேண்டும். அவர் வருகிறார் என்றால், எங்களுக்குத் தெரிந்துவிடும். அப்போது சிறை சுத்தம் செய்யப்படுகிறது. சிறையில் இருக்கிற கைதிகளுக்கு அப்போது சுத்தமான உடை கொடுக்கிறார்கள். சாம்பாரிலே பருப்புகூட இருக்கிறது! உடனே எங்களுக்கு வித்தியாசம் தெரிகிறது. அடிக்கடி சிறைத் துறைத் தலைவர் சிறைச்சாலைகளுக்குப் போய்வர வேண்டும். முன்பு பேசும்போது, அமைச்சர்கள் மாறுவேஷம் போட்டுக்கொண்டு போய் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். அப்படி சட்ட அமைச்சர் அவர்கள் மாறு வேஷம் போட்டு உள்ளே போனால் அவரையும் ஒரு 'செல்'-லுக்குள் தள்ளி பூட்டி விடுவார்கள்

சிறைத் துறைத் தலைவர் அங்கே அடிக்கடி சென்றால்தான், சிறைச்சாலைகளில் முறைப்படி காரியங்கள் நடைபெறும். அப்படிச் சென்று அவர்கள் அடிக்கடி காரியங்களைக் கண்காணிக்க வேண்டும்.

சிறையினுடைய கண்காணிப்பாளர்கள் வருகிறபோது பார்த்தால் ஏதோ ''ராஜாதி ராஜ ராஜ கம்பீர...' என்று சொல்வார்களே, அப்படி வருகிறார்கள். அவர்களுக்கும் சிறையில் இருப்பவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு சிறையில் உள்ளவர்களோடு எந்தத் தொடர்பு இருப்பதாகவும் அவர்கள் நடந்துகொள்வதில்லை. சிறையில் உள்ளவர்கள் மீண்டும் திருந்தி இந்த நாட்டுப் பிரஜையாக ஆகவேண்டும். அவர்களை அந்த வகையில் பக்குவப்படுத்த வேண்டும் என்ற உணர்வு சிறைக் கண்காணிப்பாளர்களுக்குக் கண்டிப்பாக இல்லை. அங்கே ஒரு வெல்பேர் ஆபீசர் இருக்கிறார். அவர் அவருடைய பர்சனல் வெல்பேரைப் பார்த்துக்கொள்ளுகிறாரே தவிர, சிறைக் கைதிகளின் வெல்பேரிலே அக்கறை காட்டுவதில்லை. ஒரு மனு எழுத வேண்டுமென்று ஒரு பேப்பர் கேட்டால்கூட கொடுப்பதில்லை. ஆனால் பெரிய அதிகாரிகள் வரும்போது அவர்களிடம் கோரிக்கை கொடுத்தால் உடனடியாக தீர்த்துக்கொள்ள முடிகிறது. ஆகவே, தான், சிறைத் துறைத்தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று வந்தால், கைதிகளுடைய கஷ்டங்களுக்கு நிவாரணம் செய்ய முடியும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கமிஷனின் பரிந்துரையின் மீது ஒரு குழு போட்டிருக்கிறோம். காரியங்களைச் செய்யாமல் தள்ளித் தள்ளிப் போடுவதற்குத்தான் குழுக்களைப் போடுகிறோம். அந்த நிலைமைகள் இனியாவது இல்லாமல் செய்ய வேண்டும். சிறையில் அதிகாரிகள் வருகிறார்கள் என்றால் காலையிலேயே கைதிகளை 'பைல்' என்று சொல்லி அதிகாரிகள் எத்தனை மணிக்கு வந்தாலும் சரி, அறைக்கு முன்னால் அத்தனை பேரும் அமர்ந்து கொண்டிருக்க வேண்டும்; கையிலே பிளேட் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லி விடுவார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:</u> வேட்டியோடு விட்டு விடுகிறார்களா?

<u>திரு வே. தங்கப்பாண்டியன்:</u> டிரௌசர் போட்டுக்கொண்டு உட்காரச் சொல்லுவார்கள். அன்றைக்கு பிரிட்டிஷ்காரன் இதையெல்லாம் செய்தான். அந்தச் சம்பிரதாயங்களை நம்முடைய காலத்திலும் பின்பற்றுவது சரியா என்றுதான் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆயுள் கைதிகளும் தூக்கு தண்டனை பெற்று பிறகு கருணை மனு மூலமாக ஆயுள் கைதியாக மாறியவர்களும் 14, 15

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 22

வருஷங்களாகச் சிறையில் இருக்கிறார்கள். 14, 15 ஆண்டுகளாகியும் இவர்கள் இரண்டு பேருக்கும் விடுதலை வருவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். 7 ஆண்டுகள் முடிந்த உடனே அவர்களை விடுதலை செய்வது குறித்த பரிசீலனையை மேற்கொள்ள வேண்டும். அப்போது ஆரம்பித்தால் தான், மாவட்ட ஆட்சித் தலைவர், சிறைக் கண்காணிப்பாளர், மற்ற அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்களை அறிந்து அவர்களுடைய உழைப்பு, நன்னடத்தை, அவர்கள் சிறையில் இருக்கும் காலத்தில் பெற்ற மார்க் ஆகியவைகளையும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு மாதத்தில் கிடைக்கும் 2 நாள் ரெமிஷனையும் கணக்கில் கொண்டு, 10 ஆண்டுக் காலம் முடிவடைவதற்கு முன்னாலே விடுதலைபற்றி முடிவெடுக்க முடியும். 7 ஆண்டுக் காலம் என்பதைக்கூட 5 ஆண்டுக் காலமாகக் குறைத்துக் கொள்ளலாம். ''ஹாபிச்சுவல் அஃபெண்டர்ஸ்'' என்று சொல்லப்படுகிறவர்கள் தவிர, மற்றவர்களைப் பொறுத்தவரை மீண்டும் மீண்டும் சிறைக்கு வரவேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வருவதில்லை. எனவே, ஏதோ ஒரு நிலையில் தவறு இழைத்து ஆயுள் தண்டனை பெற்றவர்களுடைய விடுதலையைப்பற்றி 7 ஆண்டில் தொடங்கி 10 ஆண்டுகள் முடிவதற்குள் முடிவெடுக்க வேண்டும். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அந்தக் கைதிகள் தண்டனைகளைக் குறைக்க வேண்டும். பத்தாண்டு காலம் கழித்து விடுவிக்கப் படவேண்டும். நானும் பல பத்திரிகைகளில் கதைகள் படித்திருக்கிறேன். குமுதத்திலே ஒரு கதை வந்திருந்தது. 'பட்டாம்பூச்சி' என்று ஒரு பிரஞ்சு நாட்டுக் கதை வந்திருந்தது அதையும் படித்தேன். திரு. சி. ஏ. பாலன் அவர்கள் எழுதிய அவருடைய சிறை வாழ்க்கை பற்றிய 'தூக்குமரத்தின் நிழலிலே' என்ற நூல் ஒன்றையும் நான் படித்திருக்கிறேன். அந்தப் புத்தகங்களை எல்லாம் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் படிக்கின்றார்களா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அந்தப் புத்தகங்களை ஆங்கிலத்திலேகூட மொழி பெயர்த்துக் கொடுக்கலாம். அவர்கள் அதை முழுமையாகப் படித்துப் பார்க்க வேண்டும்.

<u>மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார்:</u> துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தமிழ் படிக்கத் தெரியும். ஆனால் சரளமாகப் பேச வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் படிப்பதாக இருந்தால், நான் எளிய தமிழில் எழுதித் தருகிறேன்.

1978 மார்ச் 22]

<u>மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்</u> : அந்த நூல்களிலே பிரத்தியட்சமான உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதற்கு அவைகள் வரலாற்றுக் காப்பியங்களாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆயுட்காலக் கைதிகள்பற்றி அரசாங்கம் நல்ல முடிவு எடுக்க வேண்டும். இதற்காக ஒரு கமிஷன் போட்டால் கூட, அதை அவர்கள் புறக்கணிக்கமாட்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். பரோலில் விடப்படுவதற்கு மனுச் செய்கிறார்கள், அதைக் காவல் துறைக்கு அனுப்புகிறார்கள். யார் அவர்களுக்குத் தண்டனை அளித்தார்களோ அவர்கள் மூலமாக அனுப்பப்படுகிறது. காவல் துறையில் இருக்கும் அதிகாரிகள் அதில் அக்கறை எடுத்துச் செய்வதில்லை. அவர்கள் பரோலில் முக்கியமான காரியங்களுக்காகச் செல்ல வேண்டும் என்று சொல்லும்போது அவர்களுக்கு பரோல் கிடைப்பதில்லை. இங்கே இருக்கின்ற உள்துறையினர் ஏற்றுக்கொண்டுவிட்ட பின்னர், சிறைக் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் ஜாமீன் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு, பரோலில் வரக்கூடிய நிலை இருக்க வேண்டும், இப்போதுள்ள நிலையில், 2, 3 மாதங்கள் ஆனாலும் பரோல் கிடைப்பதில்லை. உற்றார் உறவினர்கள், தெரிந்தவர்கள் ஜாமீன் கொடுத்தும், தாசில்தார் அவர்களிடமும் சென்று அவர்களிடமும் கையெழுத்துப் பெற்று கொண்டுவந்து கொடுக்க வேண்டியுள்ளதால், காலதாமதம் ஆகின்றது. எனவே இதிலே இருக்கின்ற ''ரெட் டேப்பிஸ''த்தைக் குறைத்து அவர்களுக்கு சீக்கிரத்தில் பரோல் கிடைப்பதற்கு வேண்டிய உத்தரவுகளை மத்திய சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம பரோல் வாங்குவதற்கு வேண்டிய பத்திரங்கள் எல்லாம் விதிமுறைகளின்படி கொடுத்த பின்னரும் கால தாமதம் செய்யப்படுகின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறையிலிருப்போரைப் பார்க்க வருகின்றவர்கள் பற்றி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தங்கள் மனைவி, குழந்தைகளைச் சந்திக்க விரும்புகிறார்கள். அவ்வாறு காண வருபவர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் நூறு, இருநூறு பேர்களுக்கு மேல் வருகிறார்கள். அந்த ஜன நெருக்கடியில், அவர்களுடைய சொந்தக்காரர்கள் யார் என்பதைக்கூட கண்டு பிடிக்க முடிவதில்லை. யார் கணவன் யார் மனைவியோடு பேசுகிறார்கள் என்பதுகூட தெரியாத நிலைமைகள் தான் அங்கு இருக்கும்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> ரொம்பவும் சங்கடமாகத்தான் இருக்கும்.

[1978 மார்ச் 2?

திரு. வே. தங்கப்பாண்டியன்: கைதிகள் அவர்களின் மனைவி, குழந்தைகளைப் பார்ப்பதற்கு ஒரு அரை மணிநேரம் என்றுதான் ஒதுக்குகின்றார்கள். ஆனால் 5 நிமிடங்கள்கூட அனுமதிக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மனைவி, குழந்தைகளை அந்த நெருக்கடியில் தேடிப்பார்த்துப் பேசுவதற்குள் நேரமாகிறது. அவர்களை 5 நிமிடங்கள்கூட பார்த்துப் பேசவிடாமல் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். 2 மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறைகள் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களை அதிக நேரம் பார்கக அனுமதிக்க வேண்டும், அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் மனுப் போட்டு, அந்த மனுவின் பேரில் அனுமதியும் பெற்று வந்து பார்க்கின்றார்கள். அதற்கான விதிமுறைகள் எப்படி இருக்கின்றனவோ அதுபற்றி எனக்கு விவரமாகத் தெரியாது. பார்த்துப் பேசுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறைகளிலுள்ள மருத்துவ மனைகளில் மருத்துவ வசதிகள் சரியாக உண்டா என்றால், இல்லை. எனக்கு அந்த நிலைமை ஏற்பட்டது. சிறைச்சாலையில் 2 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். கைதிகள் கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள், மத்திய சிறைச்சாலைகளிலே 11 மணிக்கு மருத்துவர்கள் வருகின்றார்கள், 1 மணிக்குப் போகிறார்கள். அவர்கள் விரும்பினால் மருந்துகள் எழுதிக் கொடுப்பார்கள்: தயிர் பால் கொடுக்கச் செய்வார்கள். அவர்கள் விரும்பினால், ஆளைப் பார்த்துக் கொடுக்கிறார்கள். சில நேரங்களில் அந்த மருத்துவ அதிகாரிகள் கைதிகளின் நோயை அங்கே தீர்க்க முடியாது என்று சொல்லி, அரசாங்கப் பெரிய மருத்துவ மனைக்கு அனுப்புகின்றனர். அப்படி அரசாங்க மருத்துவமனைக்கு அனுப்புகின்ற முறை இருக்கிறதே, அதைப் போன்ற கரடு முரடான முறை வேறு இருக்க முடியாது. அந்த மருத்துவ மனைக்குச் சென்றால், அங்கே 6 படுக்கைகள்தான் இருக்கும். அந்த 6 படுக்கைகளும் நிறைந்து விடும், அந்த நிலையில் அவசர கேஸ் என்று யார் போனாலும், ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எங்களை மிசா கைதிகளாகப் போட்டிருந்தார்கள். நான்கூட சொன்னேன். நான் ஒரு மேலவை உறுப்பினன், அதன் விதி முறைகள்படித் தனியாக 'பெட்' கொடுக்க வேண்டும் என்றுகூட சொன்னேன். அவர்கள் திரும்பவும் சிறைச்சாலைக்கே அனுப்பி விட்டார்கள். விதி முறைகளைப்பற்றிக் குற்றம் இல்லை. விதி முறைகளில் வசதி செய்யலாம் என்பதற்கு வழி இருக்கிறது. அதையும் மருத்துவ அதிகாரிகள் செய்துகொடுக்கலாம் என்று சொல்கின்றார்கள். சில அதிகாரிகள் அதை நிறைவேற்றுவதில்லை. இதுதான் அங்கு இருக்கிற உண்மையான நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 22] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

இந்த நிலைமைகளை மாற்றுவதுபற்றி கண்காணிப்பாளர்கள்
ஆராயவேண்டும். சட்டத்தின் மூலமாக, அந்தக் கைதிகளைக்
கொடுமைப்படுத்துவது என்ற நோக்கை நிச்சயமாக மாற்றி
யமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரை, சப்-கோர்ட்டுகளிலிருந்து
ஹைகோர்ட்டு வரையிலே வந்து தேங்கியுள்ள கேஸ்கள் ஏராளமாக
இருக்கின்றன. இதைப்பற்றி நமது சட்ட அமைச்சர் அவர்களே
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அதை ஒத்துக்கொண்டிருக்
கின்றார்கள். கோர்ட்டுகளுக்குப் போய் வருவதற்குள், அதற்காக
அலைவதற்குள் ஏராளமாகச் செலவு ஆகின்றது. கோர்ட்டுகளிலே
இருக்கின்ற ரிட் பெட்டிஷன்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன.
சட்ட அமைச்சர் அவர்கள், நீதி மன்றங்களில் உள்ள வழக்குகளின்
கணக்கை எடுத்துப் பார்க்க வேண்டும். எவ்வளவு வழக்குகள்
இருக்கின்றன, எத்தனை ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்
கின்றன, நீதிபதிகள் இல்லாமல், போதுமான கோர்ட்டுகள் இல்லா
மல் காலதாமதம் ஆகின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்து,
நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அரசியல் காரணமாக
உள்ள கேஸ்கள் கோர்ட்டுகளில் இருக்கின்றன. அந்த மாதிரி
காலதாமதமாக ஆகிக்கொண்டிருக்கிற வழக்குகளைத் தீர்க்க,
விரைவாக நடத்துவதற்குப் போதுமானதாக சட்டதிட்டங்களை
மாற்றியமைக்க வேண்டும். சிறைச் சாலையிலே இருக்கின்றவர்
களுக்கு மறுவாழ்வும், சிறைச் சாலையிலே இருந்துகொண்டிருக்கின்ற
கைதிகளின் துயர் துடைப்பதற்கு பரிகாரமும் காண வேண்டும்.
அதற்கான நல்ல திட்டங்களை அரசு கொண்டுவர வேண்டுமென்று
சொல்லிக்கொள்கிறேன். இப்போது நல்ல பல திட்டங்களை அரசு
கொண்டுவந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். சிறைச்
சாலையில் உள்ள அதிகாரிகள் நல்ல மனிதத்தன்மையுள்ளவர்களாக
இருக்க வேண்டும். சிறைச்சாலையில் உள்ள அதிகாரிகளும் கைதி
களை மனிதர்களாகக் கருதி நடத்த வேண்டும், இவற்றைப்பற்றி
நன்கு சிந்தித்து அவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சட்ட
அமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் போன்று
நல்ல தாயுள்ளத்தோடு காரியங்களைக் கைதிகளுக்காகச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு பேசுவதற்கு வாய்ப்
பளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு
அமைகிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-40]

Thiru G. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, with your permission, I wish to offer certain suggestions. My esteemed Friend and colleague, Thiru Thangapandian has impassioned us with his speech. Perhaps, the main reason for that is that he has served some months as a prisoner in jail. So, with all his practical experience, he has been able to make some observations about the difficulties faced by prisoners in jails.

One important point which he raised is about the Committee which has recently been appointed. on that Committee, I find that there is a retired I. C. S. officer. A retired Inspector-General of Prisons and a psychiatrist from the Madurai Hospital also find place on that Committee. I am not aware whether the hon. Member Thiru Thangapandian has already mentioned this point. However, I would suggest that somebody who had been in prison should also be included as one of the members of that Committee. I have a reason for saying this. Those who now find a place on that Committee would have seen the prisons and their working onlyfrom outside. The Hon. Minister just now seld that he had knowledge about prisons only as a visitor wh never he visited the prisons. But, to be a visitor of jails is something radically different from being a prisoner in jail. In the former, one is trying to understand things whereas in the latter, one experiences certain things which, perhaps, other people may not be able to understand. Therefore, I wish to suggest to the Hon. Minister that on that particular committee, at least one member should be appointed from any political party, who had experience in prison. I was thinking that Government might appoint even our revered Chairman as one of the members of the Committee.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரும்ப வந்து விடலாம் இல்லையா?

Thiru G. SWAMINATHAN : Sir, I think you can simultaneously have both the posts of Chairman and member of that committee I think one is not a bar for the other. I think it is not proper for me to suggest this your experience in jail was some years ago. I think it was before Independance came in 1947. Only after 1947......

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சுதந்திர இந்தியாவிலேயே இரண்டு தடவை போயிருக்கிறேன், எல்லைப் போராட்டத்தில்.

Thiru G. SWAMINATHAN : Sir, I think it was for a very few days. I think that at that time our esteemed Rajaji was the Chief Minister and he was a close friend of our Deputy Chairman He felt at that time that you should be released as quickly as possible. I know the sentiments expressed by Rajaji at that time. Sir, you were in jail about 30 years ago. But to be in jail recently is a different experience. So, if you appoint any member, you should appoint a member who has gone to jail. I would even recommend the hon. Member Thiru Thangapandian who has got much experience. Even though he happens to be an Opposition Member, I have always found him to be very dispassionate in his views on any matter.

Coming to the next question regarding the High Court, the hon. Member Thiru Thangapandian has already dealt with the matter regarding arrears of cases in the High Court, how thousands of cases have been pending and how litigants have to go to Courts for some years. Because the cases are delayed, some of the litigants who want only delay and not justice are going to the Courts on Writ Petitions because they know fully well that if they go to Court, their cases may be delayed for 4 or 5 years and that is the redress they want during the period of 4 or 5 years. Especially, I know businessmen who want to avoid taxes invariably go on Writ Petition because their cases will be pending for 4 or 5 years and then they can pay tax later on. The delay not only produces difficulties for the litigants but litigants also produce difficulties in causing the delays. Unless the delay is eliminated, it may not be possible to render justice in the proper manner.

Sir, I would wish to bring to your kind notice that during the last 1½ years in our High Court, there have been vacancies of 6 Judges. It has taken nearly 1½ years for the Government to appoint Judges. Only recently, four Judges have been appointed and the positions of 2 more Judges are vacant during the last 1½ years. If you think that at least about 20 cases are being taken by an Hon.Justice in the High Court per day, nearly 10,000 cases have clogged down because of this 1½ year period and it has eventually created delay. I do not understand why there should be delay in the appointment of Judges. Now, I understand from my learned lawyer friends that to avoid delay especially after Justice Beg has sent a circular, I learn, to all Chief Justices of High Courts, to avoid delays—what they are doing in the High Court is just to disallow the petitions from admission.

Whenever they go to the High Court with a Writ Petition, it is rejected even at the admission stage and not at all admitted. I think that such a procedure is adopted to see that there is

not much pendency in the High Court. That is not a proper method to adopt. Suppose we go to the hospital *for treatment*; the best way is to treat the patient and send him away so that there may be enough space and medicine in the Hospital for the other people coming there. If we take a decision not to allow the patients into the Hospital so that there may be no crowd inside, it will not be a proper method. If I have been correctly informed by my lawyer friends, the *rejection of the* Writ Petitions at the admission stage *itself is not* a correct method to see that cases are not in pendency in the High Court. I would request the Hon. Minister to take up the matter in the appropriate manner to see that the Writ Petitions are admitted because nowadays a feeling has come about among the litigants that they would not get justice *in the* Courts of the District Munsifs, District Judges, *etc. They* feel that those officers being in small towns, they are known to one or the other person and naturally they can be influenced by others. I do not want to cast aspersion on anybody. But that is the impression in the minds of the people and they want to come to the High Court where, they hope, justice *will be* impartially administered. If the High Courts do not admit the Writ Petitions, then the litigants feel dissatisfied. I wish to mention to you that this matter should be taken up very seriously and the vacancies in the post of Judges should be filled up very quickly. This is one point. I would also request the Hon. the Law Minister to appoint two more High Court Judges, *in the* posts which are vacant for the last one and a half *years, as early* as possible. The reason why the appointments of Judges are not made quickly is that a decision could not be made at the higher quarters. There are many aspirants for the post. The process by which we try to select Judges is this. The Chief Justice and one or two High Court Judges form a panel *and* this panel has to send the names of the people to *the* Government. The Hon. the Chief Minister and perhaps the Hon. the Law Minister also, have got a say in the matter of appointment of District Judges, High Court Judges and also in the promotion as High Court Judges. Then what happens is this. *The* very panel which has to decide upon *the candidates is not* able to decide because they are influenced from various quarters. I have heard about the appointment of District Judges. The aspirants have been after the High Court Judges

who are sitting in the panel, trying to influence one Judge or the other. The Judges are not able to make up their minds. They make a recommendation to the Government. The Government also have got the names of some people in whom they are interested. This is what is happening. I do not accuse the present Government on this question. This has been happening all these years about which I have also come to know. Government have also got certain names. Naturally a dialogue goes on between the people in the Government and the Hon. the Judges of the High Court. They say: "I am interested in the particular person. What is wrong with him? Why have you not selected him?" We all know and as an Hon. Judge of the High Court, the Hon. the Law Minister also would have known, that sometime back certain selection was delayed because the recommendation of the Chief Justice was not accepted by the Government and or *vice versa*. Whatever it may be, it was delayed for a very long time. So, I wish to recommend to the Government that a separate High Power Committee should be constituted by the Government to go into the matter of appointment of Judges. That High Power Committee should select a panel of names and the Government should select only from the panel of the names given by the High Power Committee or Board, whatever it may be called. That is the method that is being followed for the appointment of Vice-Chancellor. A committee is formed and that Committee recommends a panel of people and the Government are given the authority to appoint a particular person only from that panel. If that procedure is followed, most probably these delays will not occur. I would also plead that the appointment of the High Court Judges is not going to be a loss to the Government because I understand that the High Court and the Law College are not incurring any loss but are only making a marginal profit. The Government are getting money out of every stamp purchase. I would also mention here—even though it is a small point—that recently about one or two years ago, the court-fee on the Writ Petition has been enhanced from Rs. 25 to Rs. 100. I would plead with the Hon. Minister that the court-fee on Writ Petition should be reduced from Rs. 100 to Rs. 25. The reason for my plea is this. We go to High Court on Writ Petitions regarding the funda-

mental rights. If I am not in a position to pay Rs. 100 as court-fee on Writ Petition, I am penalised and I may not be able to derive the benefits of the Constitutional provisions to safeguard the fundamental rights. This is a point which is only incidental.

Then, coming to the salary of the Judges, I think the salary that is offered to the High Court Judges is very small from my piont of view. I am informed that the High Court Judges are being paid round about Rs. 3500. After deduction for Provident Fund and Income-tax, they are able to get only

[முற்பகல் 11-50]

round about Rs. 2000 per month. You can understand how to live with a particular status. The High Court Judges are expected to live in a particular status. They are to live with very important persons of a particular area. They are asked to live on Rs. 2,000. Let us suppose that this gentleman has got a car. Now, to maintain a car costs quite a lot. It is not as in olden days when the cost of petrol was very low. Because I am maintaining a car, I know that to maintain a car without a driver now costs Rs. 700 to Rs. 750. Then, he may like to have a driver. Naturally, every Hon. Judge may like to have a driver because he may not like to involve himself in accidents. Otherwise, it may create unseemly things. Naturally he may like to have a driver. To have a driver and a car may cost around Rs. 1,000. Then, you have to have your own bungalow. I do not know whether quarters have been given to all Judges. Certain Judges are not having their own houses. If the Government are not able to allot houses to the Judges, very often a Judge may have to spend Rs. 500 or 600 or 700 on house rent alone. Coming to that, he has got the remaining amount of Rs. 300 or Rs. 400 for him to live. I do not know how the Judges can live on that Rs. 300 or Rs. 400. So, I would very strongly recommend that, if a Judge should be impartial, if he should be beyond corruption, he should be paid a particular emolument which will not make it necessary for him to indulge in corrupt activities. When I say "corrupt activities, I do not say that anybody is engaged in corrupt activities except, that one case has come in C.B.I. Where a Chief Justice is involved, where it is said, that this

gentleman was corrupt and then cases have gone there. I do not know. It may be correct or it may not be correct. But after all is said and done, the people at large feel that a Judge may not be able to live within his own means and he has to receive money from elsewhere for his high living. That is the position that has been created. This is one reason why we are not able to get good people as Judges. I do not say about the Judges at present. There are very good people. In spite of that, they are not able to get the same remuneration as they had been getting as lawyers. I know the Hon. Minister even when he was a lawyer. I know that his income as a lawyer was nearly three to four times what he got as a Judge.

The Hon. Thiru S. RAGHAVANANDAM: Is it the contention of the Hon. Member that rich people do not get corrupted and do not indulge in corrupt practices ?

Thiru G. SWAMINATHAN: My argument is this and I want to be very plain in this matter. You are allowing only rich people to come to the High Court as High Court Judge. This is what is happening now a days. Many of my friends, I know who are legal luminaries are getting per day Rs. 3,000. I would tell you that there are many people who are my friends who are getting Rs. 3,000 per day. I do not know whether they are showing it for Income-tax purposes. that is beside the point. But whatever it is, you are offering a Judge Rs. 3,000 per month. Which man is interested. Nobody interested. I think no sensible person will be interested. If I am a lawyer getting much income and if I am offered a post with Rs. 3.500. I would not be interested. Why should I accept that? What really happens is this. You should be a rich person to come to that post. Only rich persons can accept that. Either you should be hereditarily rich or you should have earned sufficiently and accumulated wealth. Then you want to come as High Court Judge where you can be for about five or six years and have the honour of a High court Judge. But within your 45th age. you should have made all the money. That is the same thing which I mentioned on the floor of the Council regarding the Hon. Ministers also. I have been saying in this very Council Hall that a payment of Rs. 1,250 or Rs. 1,500. to a Minister, from my point of view, is completely inadequate.

The Hon. Thiru S. RAGHAVANANDAM: It is Rs. 1,000

Thiru G. SWAMINATHAN: That is inadequate. Normally, supposing I am paying my manager Rs. 3,500, as Managing Director I should get Rs. 5,000.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: துணைத்தலைவர்களே, நாட்டிலே ஒவ்வொருவருக்கு எவ்வளவு பணம் வருகிறது, சாமானிய சம்பளம் வாங்குகிறவர்கள் எவ்வளவோ பாடுபடுகிறார்கள்: வேலையில்லாமல் திண்டாடுகிறவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஹைகோர்ட் ஜட்ஜகளுக்குச் சம்பளம் போதாது என்று மாண்புமிகு உறுப்பினர் பேசுவதைப் பார்த்தால், அவர்களை "ரெப்ரசென்ட்' செய்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது, எவ்வளவு கொடுத்தாலும் கூட நாட்டிலே "கரப்ஷன்"ல் ஈடுபடுகிறவர்கள் இருக்கிறார்கள். பெரிய அரசியல் வாதிகளே கூட "கரப்ஷன்"ல் ஈடுபடுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறவர்கள் வரிசையில் இருக்கிறார். அப்போது பேசிக் கொள்ளலாம்.

Thiru G. SWAMINATHAN: I want to be very clear and precise on this point because I do not want to compromise on this point. I will tell you a particular incident where a particular person from Thanjavur was appointed to a very coveted post in Madras City recently. I wanted to tell the Chief Minister when speaking on another Demand. He was appointed to a post which is a topmost post in the State. When I asked him, this gentleman said "I am not interested in going and joining". I phoned him up to congratulate him, thinking that he would be happy on getting that job. He said, "Swaminathan, I will talk to you later". When we met in the Club, he told me, "I am least interested in taking up that job". I asked, "Why? That is one of the coveted posts and one of the best posts that you will get in the State". He said, "Swaminathan, I am getting a salary of Rs. 1,700 and when I go to that post I will get only Rs. 1,700." He is a scrupulously honest man. After all, he has got only 1½ years to retire. He then said, "I am owning a car here. Though I am owning a car, I am living very near to my office. From the office I walk to my place. If I go to Madras, I will have to pay for my car. I do not know whether Government will provide me a residence. From my residence, I will have to go to other places. I will have to take part in discussions on various matters at Ezhilagam

or the Board or the Secretariat. Whatever it is, I will have to pay Rs. 750 for my car. The House Rent Allowance that I am getting is only Rs. 100. For my post, I will have to pay a house rent of Rs. 750. After paying this Rs. 750, the expenses will come to about Rs. 1,500. What I am getting is only Rs. 1,700. How am I to live on Rs. 200?". At that time, a very close friend came to his house and he said, "Why do you worry? I will provide you a car." That friend said so because in that post he will be dealing with Rs. 5 crores and he could offer benefits to some people for many lakhs. He had been honest as on officer all these years and he wanted to be honest for 1½ years before his retirement. That is the state of affairs which is happening. You talk of socialism. When the Hon. Minister is getting Rs. 1,000, his car is subsidised, the repairs to his car are subsidised, his petrol is subsidised, his house rent is subsidised, his electricity is subsidised and he is given servants. If all these subsidies are taken into account, he gets nearly Rs. 5,000.

To say that a Minister is getting only Rs. 1,000 is, I think, a misnomer. I would again say what Thiru Dandekar said in Parliament. He said "You pay the Minister Rs. 5,000 per month and ask him to pay all the bills. Let him pay for electricity and let him pay the phone bills". I know of Ministers who spent Rs. 1,500 on phone bills every month because it is on public account. If it is said that a Minister is getting only Rs. 1,000 and he is living as a poor man, nobody will believe it provided he has got some sense. This is what I would say as my reply to the Hon. Minister.

Coming again to the question of salary of the High Court Judges, it will have to be increased if really they have to be impartial. Otherwise only people who had no practice and who would think that this Rs. 3,500 per month is a big salary would come to occupy the position of High Court Judges. Naturally the judicial position which is near about the brain of the whole process will suffer ultimately for lack of blood and naturally justice cannot be rendered.

I have another point to make regarding the Code of Conduct for the Judges. Recently we saw in the papers that the

[Thiru G. Swaminathan] [1978 மார்ச் 22

Hon'ble the Chief Justice of the Supreme Court Thiru Be[illegible] before his retirement, said in a particular judgement that [illegible] Code of Conduct was very necessary for the Judges.

We also remember what the Hon. the Chief Justice Thiru A.N. Ray mentioned in a particular Judgment in a case coming from Haryana. In that case 20 advocates had sent a petition to the President of India stating that an Hon'ble Judge came to their place and talked on some political matters at a meeting. They wrote about it to the President and sent copies to the Chief Justice and others in the year 1976. This was taken as contempt of court and the matter came up before the High Court of Haryana. They were let off but, I think, only with a warning. They took the whole matter to the Supreme Court where they pointed out the facts in the following manner: "In the conduct of a particular Judge, we find that he has been articulating certain views about politics on public platforms. Then we have got every right to take the matter to the highest forum in the country, namely, the President of India and the Chief Justice. We should not be taken to have committed contempt of Court". Thiru Justice A. N. Ray raised two points. The High Court Judges and the Supreme Court Judges should not enter into the arena of postulating matters which will be criticised. They should not enter into the arena of politics either directly or indirectly. They should not make pronouncements on political and economic issues. The reason why he said this is : If they make such pronouncement, they are apt to be criticised. You make a pronouncement; I do not like it and I criticise it. This is what has happened in Thanjavur also. I will tell you a small incident. A few months back an Hon'ble Judge of the High Court came to Thanjavur to participate in the function of a cultural association. I was also asked to speak on that particular occasion. This gentleman was invited by a particular lawyer. There were a lot of lawyers, litigants and other people. Many of us, M.L.A's and M.L.C's had also been invited. The Hon'ble Judge of the High Court was there as a special invitee. Then one of the Judges of that place who, perhaps, wanted too curry the favour of the High Court Judge said : "This particular gentleman has come here to save Hinduism, [illegible]

1978 மார்ச் 22] [Thiru G. Swaminathan]

"Hinduism has been sought to be saved by so many people. It has been saved or it has not been saved. I do not think this Judge who belongs to another religion has come here to save Hinduism. I do not accept it." I openly said it at that particular forum. I have come into a lot of contradictions with Judges during all these years—I do not know the reason—and I have mentioned this everywhere. Then I had to go away because my father was ill and had to be admitted in the Hospital. Immediately after I went away, the Hon'ble Judge made comments about me, which were not liked by my friends. They phoned to me that the Hon'ble Judge made uncharitable comments about me. I got offended and I spoke about it in a particular platform and also said it to my friends.

What has happened is this. The gentleman came there in connection with a cultural association meeting and made some pronouncements, which were apt to be criticised, and which sometimes wounded others. I have also got a right to criticise. When you take contempt of court proceedings, it is said that Judges should not be criticised and they are on a very high pedestal. They should also see that the Judges behave in such a manner that they are not criticised.

(நண்பகல் 12·00)

You cannot have the cake and eat it too. You cannot want to be on an ivory pedestal not to be crititicised and behave in a manner that is liable to be criticised. The second point is about accepting invitations of cultural organisations. What is a cultural organisation ? I do not know. But you go to a particular organisation. I will give you certain instances of District Judges and High Court Judges being members of cultural and service organisations. I am a member of various Service Organisations. Many of the Hon. Judges are also members of the service orgonisation to which I belong. I will tell you a personal incident where I contested for the post of Governor of a Rotary. Many of the High Court Judges and District Judges are members of the Rotary. A particular Judge took it into his mind—I do not know whether on instigation from High Court Judges or not—that I should not come

out successful as Governor of the Rotary. This gentleman, a member of the Rotary, took it on himself to see that I did not come out successful. He canvassed many of the lawyer friends in the service organizations. He canvassed not only in Thanjavur but throughout Tamil Nadu and Kerala State wherever there were service organisations, he took in his own car many of his own advocates who were members of the organsiation, so that he could canvass the members of the other organisations. For nearly one month, the District Judge was canvassing throughout against my election. Even recently, a month back, this gentleman was canvassing for another person from Madras. Then I made it known that it was not proper for a Judge to canvass for election to a service organisation. Sir, he said, "When I am allowed to be a member of the organisation, I have got every right to canvass for an election to the organisation". Even previously, I have pointed out, by means of a question, a particular peculiar incident which happened in Thanjavur. A District Judge there organised a festival. It was supposed to be a festival of a service organisation where a cabaret dance was arranged by the honourable persons where a High Court Judge, an eminent High Court Judge was there. He was a very important officer of that organisation. He was asked to be there. He was witness of the cabaret dance. That was happening. I was not present at that time. I came over here. Nearly 200 or 300 persons were there and it became a scandalous affair. It so happened that the Collector's car was there. I do not know who attended from the Collector's place. Those people sent word to my family, "This is happening in Tanjavur. Don't allow your husband to associate himself with that organisation". I understand that many Judges are doing many matters which are not good. That is the kind of controversy that has come about.

I will mention another incident. I spoke here itself about this. I have known occasions when previously Hon. Judges of the High Court sent invitations and I was a member. 1,200 people are being invited to dinner by the Judges of the High Court. In those days, it was a dinner with a liquor party [illegible] Judges and the parties were going about associating [illegible] with all kinds of people. Not only that.

It so happens that the District Judge may be a superior officer in a particular service organisation. I think you will understand what a service organisation is. If not, I will tell you privately because I am a member and I do not want to say it publicly because I will be criticised. This man is a superior officer and a High court Judge comes to that organisation. What happens ? This Judge is sitting on a higher pedestal than the High court Judge and the High court Judge has to sit in another place. Because the High court Judges are there, the District Judges are there. A number of advocates join that organisation because they know that if they join, naturally they will come to know of the Judges. Naturally, when the District Judge is there Munsifs and all the other people join because they want to acquaint themselves with the District Judge. Many Lawyers come because they may get intimate connection with the Judiciary. We are watching that and we litigants also join because that will become a very good forum for us to talk about matters. I know, in private associations the litigant public have been peciding on cases on private grounds. I have known people being taken by District Judges to Madras, sitting down at hotels, talking to the High court Judges on individual cases. J can tell you but I do not want to mention it. That is happening. I want to tell you, if you really want people to believe your judiciary--you may not have done anything wrong and it is a different matter--you should appear to be doing justice. is most important.

I should feel that if I come to you as a Judge, you will do the correct thing. This is what is happening in the High Court. People are talking, "This advocate is close to this Judge. That gentleman is a close friend of this Judge". These thin gsare talked about because the Judges have begun circulating in every place whether it is a cultural associatiou or a club or whatever it is. The Judges are being seen evrey where. The old idiom, "The Judges should be heard and not be seen" is not being followed here. They are seen everywhere. The people, unfortunately, think that the Judges can be influenced by extraneons matters. The people are losing faith in the judiciary. I would request the Hon. the Law Minister to take up the matter in an appropriate manner, whether within his province, or with the Government of India, so that ultimately there may be a code of conduct for the Judges as has been recommended by Justice Beg. In olden days, th

[Thiru G. Swaminathan] [197° மார்ச் 22

Judges would be in isolation and would not take part in activities which were not good either for the judiciary or for the public of the state.

(The Deputy Chairman sounded the gong)

Sir, I think I have more or less covered all the points except only some sundry points. Thank you.

திரு பி. மாணிக்கம்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இரண்டு கருத்துக்களை மட்டும் கூறிவிட்டு, வேறு சில கருத்துக்களை சிறைபற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நீதித்துறையில் குறிப்பாக சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்தான் என்றாலும் சந்தேகக் கேஸ் என்று ஒன்று இருக்கிறது. சென்ற முறை கூட நான் பேசும்போது இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். மீண்டும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், செக்ஷன் 54, 55, 'A man found without any ostensible means of livelihood' என்கிற அந்த விளக்கத்தின் அடிப்படையிலே, இரவிலே வந்து இரயில் நிலையத்திலோ, பஸ் நிலையத்திலோ, இரயில் பஸ் கிடைக்காமல் தங்குகிற சாதாரண அப்பாவி விவசாயிகள் கைது செய்யப்படுகிறார் கள், காவல் துறையினர் விவரங்களைக் கேட்கும்போது, அவர்கள் முறையாக விவரங்களைச் சொல்ல முடியாமல் அஞ்சித் தயங்கு வதனால், அவர்களைச் சந்தேகப் பட்டு கைது செய்து சிறைக்கு அனுப்புகிறார்கள். காவல் துறையினர் வழக்குகள் குறித்துப் புள்ளி விவரங்களைத் தயாரிக்க வேண்டியிருப்பதால், ஸ்டாடிஸ்டிக்ஸ் கேசாக சில நேரங்களில் ஒரே இரவிலே ஐம்பது, அறுபது என்று பேருந்து நிலையங்களில் இருப்பவர்களைக் கைது செய்கிறார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் இன்னும் இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதைத் தீர்ப்பதில் சட்டத் திருத்தம் என்ற பிரச்சினை இருந்தாலும், நீதி வழங்க வேண்டு மென்று வரும்போது, இந்த மாதிரி கைது செய்யப்படுபவர்கள் அப்பாவி விவசாயிகளாக இருந்தால், சாதாரண மனிதர்களாக இருந்தால், அவர்களை நீதிமன்றங்களில் எச்சரிக்கையோடு விட்டு விடுவது நல்லது. அவர்களைக் கொண்டு போய் 15 நாட்களுக்குச் சிறையில் வைத்துவிடுகிறார்கள். அது மாதிரி வழக்கில் யாராவது பொறுப்பேற்றுக்கொண்டு ஜாமீன் வந்தால், அவர்களை விட்டுவிடு கிறார்கள் என்பது உண்மைதான். அந்த ஏழை எளியவர்களுக்கு அவர்களுடைய ஊர்களுக்கு விவரம் தெரிந்து ஆள் வந்து பொறுப் பேற்பதற்கு 15 நாட்களுக்கு மேலாகி ஒரு மாதம் கூட ஆகிவிடுகிறது. அவர்கள் அதுவரையில் சிறையில் இருக்க வேண்டிய நிலையிருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்கும் செலவுதான். ஏனென்றால் அவர்கள் தண்டிக்கப்பட்ட கைதியல்ல. விசாரணைக் கைதிதான். ஆகவே அவர்களுக்குச் செலவாகிறது. ஆகவே இது மாதிரி வழக்குகள் ...த்த வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். நீதித் துறையில் ...டவட்டமாகக் குற்றங்கள் இருக்குமானால், அவற்றை ஏற்றுக் ...ளலாம். திட்டவட்டமாகக் குற்றம் இல்லாமல் சந்தேகத்தி...

1978 மார்ச் 22] [திரு. பி. மாணிக்கம்]

சுற்றிக் கொண்டிருந்தவர்களை சிறைக்கு அனுப்புவது சரியாக இருக் காது, திருடர்கள் என்பது வேறு. சில ஆயுதங்களை வைத்திருந்துசில நேரங்களில் சந்தேகிக்கும் முறையில் சுற்றுபவர்கள் கைது செய்யப் படலாம். ஆகவே, அந்த செக்ஷன் 54,55 ஆகியவைகளைத் திருத்தம் செய்வதென்பது பெரிய விஷயம். சட்டத் திருத்தத்தை மாநில அரசு மட்டும் செய்ய முடியாது. நீதியை வழங்க வேண்டுமென்று வரும்போது, மாநில அரசு ஒரு வழிகாட்டி முறையாக கைடலைன் ஸாக நீதிமன்றங்களுக்கு இவைகளைக் குறிப்பிட்டு ஒரு அறிவுரையை அனுப்பலாம், இது என்னுடைய வேண்டுகோள்.

[பிற்பகல் 12-10]

பல இடங்களில் கீழ் மட்டங்களில் சப் மாஜிஸ்ட்ரேட் அளவில் பல காரியங்கள் நடக்கின்றன. இதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க வில்லை. உண்மை என்பதற்காகத் தெரிவிக்கிறேன். வழக்கறிஞ ராக வருகிறவர்கள், மருத்துவத் துறையில் உள்ள டாக்டர்கள் இதைப்போல பொது நிறுவனங்களில் செல்வாக்குள்ள மனிதர் கள், ஸ்தாபனங்கள் எல்லாம் கட்சிகள் என்ற முறையில் பலரை சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கத்தான் செய்கிறது. அதற்கு அந்தத் தனி நபர் பொறுப்பல்ல. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக் கிறது, அந்த நிலையில் குறிப்பாக கீழ்மட்டத்திலுள்ள நீதிபதிகள் பல அரசியல் கருத்துக்களுக்கு ஆளாகிறார்கள். அதை தவறு என்று கூறவில்லை. தனிநபர் சுதந்திரம் இருக்கிறது. தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பது அவர்களுடைய உரிமை, அது தவறல்ல, ஆனால் அந்தக் கருத்துக்களை அவர் ஏற்றிருக்கக் கூடிய நீதித் துறைக்கு மாற்றக் கூடாது. சில இடங்களில் எனக்கு நேரடியான அனுப வம் உண்டு. ஒரு சப் மாஜிஸ்ட்ரேட்பற்றி உதாரணத்திற்குச் சொல் கிறேன். என்னுடைய கட்சியைப்பற்றிக் குறிப்பிடுவதால், அதைத் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர், சொல்லும்போது 'நீ சி.பி.ஐ. யைச் சேர்ந்தவர்தானே: நிச்சயமாக தண்டிக்கிறேன்' என்று வராண்டாவில் பத்து பேர் அறியச் சொல்லியிருக்கிறார். பலருக்கு அது தெரியும். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை, அதற்கு முன்னால் சொல்கிறார், இந்த மாதிரி நீதி வழங்க வேண்டியவர்கள் முன் கூட்டியே கருத்துக்களைப் பகிரங்கமாக பச்சையாகச் சொல்வது நல்லதல்ல. மனதிற்குள் வைத்திருந்தால், அதை யாரும் அறிய முடியாது. இப்படி பல இடங்களில் நடக்கின்றன. இதைக் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும். இதனால் ஏழை எளிய மக்களுக்கு இத்துறையின் மீதுள்ள நம்பிக்கை போய்விடு கிறது; எனக்கு முன்னால் பேசிய நண்பர் பேசிய பல அம்சங்கள் எனக்கு உடன்பாடானவைதான். நீதி மன்றங்களில் ஏழை எளிய மக்கள் தங்களுக்கு நீதி கிடைக்குமா என்று அஞ்சக் கூடாது. சந்தேகமே அவர்களுக்கு வரக் கூடாது. சந்தேகம் என்பது குற்ற வாளிகளுக்குச் சாதகமாக இருக்க வேண்டும். அதைத்தான் 'Benefit of doubt' என்பார்கள். அந்த ''பெனிஃபிட் ஆப் டவுட்'' அவர்களுக்கு இல்லாமல் வேறு ஒருவருக்குக் கிடைக்கும் சந்தேகம் அவர்களுக்கு

நிலைமையில் இன்றைக்கு நிலைமை இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு நீதியின் பேரில் நம்பிக்கை ஏற்படா விட்டால், இப்படிப்பட்ட குழுக்கள் அமைப்பதால் மட்டும் பயனில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சிறைச்சாலை என்று வரும்போது, இந்த அறிக்கையில் மூன்று திறந்த வெளி ஜெயில்கள் வருமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதுவும் பரிசிலனையில் இருப்பதாக 'still under consideration' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்கான ஐந்து நோக்கங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் பொதுவான உடன்பாடு எனக்குண்டு. இருந்தாலும் சிறையை சீர்திருத்தசாலையாக மாற்றுவதைப் பற்றி இன்னும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கலாம். அதைத் தலையாய நோக்கமாகக் குறிப்பிடுவது அவசியம். பொறுப்பேற்கும் அதிகாரிகளுக்கு இந்த நோக்கம் வலியுறுத்தப் படவேண்டும். சிறையை சீர்திருத்தச்சாலை என்ற அடிப்படையில் அவர்கள் பார்க்க வேண்டும். அவற்றைத் துரிதப்படுத்த வேண்டும். அவை அமைக்கப் படுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகுமென்று சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் பதிலில் அதைத் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். அதில் நான்கு சிறைகள் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் அவை அதிகமாக்கப்பட வேண்டும். பல சிறைச்சாலைகளில் அடைபட்டுக் கிடக்கும் அப்பாவிகளைத் திருத்துவதற்கு பதிலாக அவர்களைக் கெடுப்பதற்கான சூழ்நிலை தான் இருக்கிறது. சிறைத் துறையைப்பற்றித் தவருகக் குறிப்பிடுவதாகக் கருதக் கூடாது. சிறைச்சாலைக்கு நான் பல வகையில் பி-வகுப்புக் கைதியாக, விசாரணைக் கைதியாக, தண்டனைக் கைதியாகச் சென்றிருக்கிறேன். அந்த அனுபவத்தோடு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன், உண்மையிலேயே சாதாரண உழைப்பாளிகள் தவறு செய்து தண்டிக்கப்பட்டு சிறைக்குச் சென்ருல், அவர்களைத் திருத்துவதற்காகத்தான் இந்தத் திறந்த வெளி சிறைச்சாலைகள் பயன்பட வேண்டும். உழைப்பு என்பது மனிதனைப் பல வகையில் திருத்தும். மனிதனைத் திருத்துவதில் உழைப்பு பெரும் பங்கு வகிக்கிறது. வரலாறும் சமூக இயலும் அதைத்தான் சொல்கின்றன. மூன்று மாதம், ஆறு மாதம் என்று தண்டனை பெற்றுச் செல்கிறவர்கள் இந்த முறையில் துரிதமாகத் திருத்தப்படலாம். ஏ-வகுப்பு, பி-வகுப்பு என்று வைத்திருக்கிருர்கள். ஏ-வகுப்பிற்குச் சில சலுகைகள் தரப்படுகின்றன். பி-வகுப்பு சம்பந்தமாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே பத்திரிகைகளைப் பொறுத்து, தினமணி, சுதேசமித்திரன், நவசக்தி ஆகிய பத்திரிகைகள் கொடுக்கப்படுகின்றன. சுதேசமித்திரன் இப்போது நின்றுவிட்டது. நான் இருந்த போதெல்லாம் நம் சொந்தச் செலவில் வேண்டுமானல் ஆங்கிலப்பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளலாம். இப்போது எப்படி என்பது இனிமேல் போனல்தான் தெரியும். சிறையில் வேறு சில பத்திரிகைகளையும் கொடுக்க வேண்டும். அனுமதிக்க வேண்டும். சில பத்திரிகைகளை அனுமதிப்பதால், அவற்றின்

மூலமாகப் போட்டிகள், வாதங்களுக்கு இடம் ஏற்படும் என்று கருதி
சிறை அதிகாரிகள் அவை தவிர்க்கப்பட வேண்டுமென்று எச்சரிக்கை
யாக நடந்து கொள்ளலாம். மாதாந்திரப் பத்திரிகைகள் பல
இருக்கின்றன. சுவையான கதைகள் வரக்கூடிய பத்திரிகைகள் பல
இருக்கின்றன. அவைகளைக் குறிப்பிட்டுச் சொன்னல், தவருகக்
கருதுவார்கள், அவற்றை அனுமதிப்பதன் வாயிலாக அவர்களைப்
பண்படுத்த முடியும். ஆகையால் பல பத்திரிகைகளைக் கூடுதலாகப்
போடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

கடிதங்கள், இண்டர்வியூக்களைப் பொறுத்த வரையில், பி-
வகுப்பிற்கு மாதத்திற்கு இரண்டுதான் கடிதங்கள் தரப்படுகின்றன.
அதை நான்காக ஆக்கலாம். குடும்பத்தோடு நண்பர்களோடு
கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதால் எவ்வளவோ மன
மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு. வெளி உலகத்திற்கு ஏற்ப நாமும்
திருந்த வேண்டுமென்ற எண்ணத்தை அது ஊக்குவிக்கும். ஆகையால்
கடிதங்களை நான்காக உயர்த்த வேண்டும். பேட்டியையும் இரண்
டாக உள்ளதை நான்காக அதிகப்படுத்த வேண்டும், விசாரணைக்
கைதியாக இருக்கும்போது, அது தரப்படுகிறது. தண்டனைக் கைதி
யாக இருந்தால், பேட்டியை ஏற்பாடு செய்வதையும் கடிதங்களை
அனுப்புவதையும் நிர்வாகத் துறையிலே சிக்கலான வேலையாக
நிர்வாக முறையில் சிறை அதிகாரிகள் குறிப்பிடலாம். இண்டர்வியூ
நேரத்தில் மட்டும்தான் அதிகாரிகள் இருக்க வேண்டியது அவசியம்.
அந்த முறையில் இண்டர்வியூவையும் கடிதங்களையும் அதிகப்படுத்த
வேண்டும். அதைப்பற்றி அமைச்சர் பதிலில் சொல்வார்கள்
என்று நம்புகிறேன். சென்ற முறை சிறைச் சீர்திருத்தம் சம்பந்த
மாக அமைச்சர் அவர்கள் அறிவித்தபோது, என்னைவிட சிறையில்
கைதிகளாக உள்ளவர்கள் அதை அறிந்து மகிழ்ச்சியடைந்தார்கள்.
அது இன்னும் வரவில்லை. விரைவில் வந்தால், அவர்கள் இன்னும்
மகிழ்ச்சியடைவார்கள். எண்ணெய் முழுக்கிற்காக மாதத்திற்கு
ஒருவருக்கு 25 கிராம் எண்ணெய் கொடுக்கப்படுகிறது. அதை
மாதத்திற்கு இரண்டு முறை அளிப்பதற்கு வகை செய்ய வேண்டும்.
ஒரு அவுன்சு கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும் அது கைதி
களின் கைக்கு வரும்போது, அளவில் மிகவும் குறைந்து விடும்
என்பது யாவருக்கும் தெரிந்தது. காவிரியில் வெள்ளம் வந்தாலும்
கடைசி இடத்தில் போகும்போது கொஞ்சமாகத்தான் போகிறது.
வழியில் வற்றிப் போகிறது, அதைப்போல ஒரு அவுன்சு குறைந்து
விடுகிறது. அதை இரண்டு அவுன்சாக உயர்த்த வேண்டும்.
பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அளிக்க வேண்டும். எண்ணெய்
தேய்த்துக் குளிப்பது உடலுக்கு நல்லது. நான் எண்ணெய்
தேய்த்துக் குளிப்பதில்லை. ஆனலும் அது உடல் வலியைப் போக்கக்
கூடியது, சிறைக் கைதிகளின் உடலைப் பதப்படுத்தப் பயன்படும்.
அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூக்குத் தண்டனை கொடுத்து அப்பீலில் அதை ஆயுள்
தண்டனையாகக் குறைக்கும்போது, 14 ஆண்டுகள் கழித்து
அவர்களுக்கு விடுதலை தரலாம் என்று ஆலோசனை போர்டு
சொல்லியிருக்கிறது. அதைப்பற்றி ஆலோசனை செய்யப்

[திரு. பி. மாணிக்கம்] [1978 மார்ச் 22

(பிற்பகல் 12-20)

போவதாகவும் கூறப்படுகிறது. 14 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகள் என்று ஆக்குவதுகூட நல்லது. பொதுவாக ஆயுள் தண்டனை அடைந்தவர்கள் 9 1/2 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த பிறகு, அவர்கள் விடுதலை குறித்துப் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்கும், தூக்கு தண்டனை பெற்று மீண்டும் அது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டவர்களுக்கும் இந்தப் பரிசீலனை விஷயத்தில் ஆண்டு வித்தியாசம் தேவையில்லை என்றே கருதுகிறேன். இரண்டையும 9 1/2 வருஷங்கள் என்று வைக்கலாம். நடப்பில் 9 1/2 வருஷம், 10 வருஷம் என்று இருக்கிறது. இப்படி பரிசீலனைக்கு அவர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும்கூட, சாதாரணமாக பெரும்பாலோருக்கு அனுகூலமான முடிவு கிடைப்பதில்லை. எனக்குப் பல நிகழ்ச்சிகள் தெரியும்.

தண்டனை அனுபவிப்பவர்களைப்பற்றி ஊரில் கேட்டால், சொல்லுவார்கள். "அவன் வந்தால் நல்லது. ஏதோ அவசரத்தில் இப்படிச் செய்துவிட்டான். அவன் இல்லாததால் குடும்பம் தவிக்கிறது. அவன் வெளியே வந்துவிட்டால் நல்லது. அரசு அவனை விடுதலை செய்யுமா?" என்று கேட்பார்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டு திருந்தியிருக்கிறான். அப்படிப் பட்டவர்கள்பற்றிப் போலீசில் ரிப்போர்ட்டு கேட்டால், அவர்கள் பொதுவாக கிராம முன்சீப்பிடம் ரிப்போர்ட்டு வாங்கி வந்து சொல்லுவார்கள். அதை விட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தில் யாரையாவது போய்க்கேட்டால், "அவன் வந்தால் இந்த ஊரே அழிந்துவிடும்; திரும்பவும் இந்த ஊரில் கொலை விழும்" என்று சொல்லுவார்கள். இதைக் கேட்டுவிட்டு இதை அப்படியே போலீஸ் இலாகாவில் எழுதி அனுப்புவார்கள். கீழே கேட்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. கீழ்மட்டத்தில்தான் நல்ல பண்புகள் இருக்கின்றன என்பதை நான் உணர்ந்தவன். ஆனால் இப்படிப்பட்ட சில தவறுகள் நடக்கின்றன. இதன் காரணமாக வரவேண்டியவர்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இது சம்பந்தமாக போர்டு ஆலோசனைக்கு வைக்கும்போது, ஊரில் சென்று அங்குள்ளவர்கள் மத்தியில் தண்டோரா போட்டு அபிப்பிராயம் சேகரித்து வருவார்களானால், அதன்மீது அரசுக்கு அறிக்கை அனுப்பப்படுமானால், நிச்சயமாக 9½ ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழிவதற்கு முன்னாலேயே பல பேர் விடுதலை செய்யப்படுவார்கள். ஏனென்றால் திருந்தியவர்களைப் பார்த்துத்தான் சமுதாயம் படிப்பினையைக் கற்றுக் கொள்ளுமே தவிர, திருந்தவில்லை, திருந்தவில்லை என்ற எண்ணத்திலேயே திருந்தியவர்களைக்கூட உள்ளேயே வைத்திருப்பது சரியல்ல. இப்போது மிகமிக மெதுவாகச் செயல்படுகிறார்கள் Too slow. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். 10, 12 ஆண்டுகள் ஆகியும்கூட, பெரும்

1978 மார்ச் 22] [திரு. பி. மாணிக்கம்]

பாலோர் இன்னும் வெளியே வராமல் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை விடுதலை செய்ய துரித ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மற்றொரு விஷயத்தைப்பற்றிக் கூற ஆசைப்படு கிறேன். சிறைத் துறையோடு சம்பந்தப்பட்ட புரொபேஷன் டிபார்ட்மெண்ட் ஒன்று இருக்கிறது. கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில்கூட "சிறைத் துறைத் தலைவரின் கட்டுப் பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத்தை பணிப் பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரிடைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் துறை காவல் துறையோடு இணைக்கப்பட்டுள்ளது. சிறை யிலிருந்து விடுதலை பெற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள், அவர்கள் நடத்தை எப்படி இருக்கிறது என்று மதிப்பிடுவது, எதிர்காலத்தில் அவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று புனர் வாழ்வு சம்பந்த மாகப் பரிந்துரைப்பது ஆகியவற்றை இந்தத் துறை கவனிக்கிறது. இது மிகவும் முக்கியமான இலாக்கா தான் என்றாலும், இது செய்கிற காரியம் மிக நல்ல காரியம் என்றாலும், இந்த இலாக்காவைக் காவல் துறையோடு இணைத்திருப்பது எந்த வகையிலும் சரியில்லை. இதைக் காவல் துறையிலிருந்து பிரிக்க வேண்டும். சிறையோடு தொடர் புள்ள இந்தத் துறை காவல் துறையோடு இருப்பது சரியில்லை. விடுதலைக்குப் பிறகு எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், பொதுவாக மக்களிடம் இருக்கிற "General impression" காவல் துறையிடம் அச்சத்தைத்தான் காட்டுகிறது. அந்தத் துறையின் கீழ் இந்த நன்னடத்தை துறை இருப்பதை விட சமூக நலத் துறையின் கீழ் இருப்பது மேலாகும், அப்படி இருந்தால், இந்த இலாக்காவின் பணி இன்னும்சிறப்பாக இருக்கும். இதை நான் சொல்லும்போது, ஒரு அமைச்சரிடம் இருக்கும் இலாக்காவை எடுத்து இன்னொரு வரிடம் கொடுக்க வேண்டும். என்ற எண்ணத்தில் சொல்வதாகக் கருதக்கூடாது. அப்படி ஒரு தவறான நோக்கம் வந்துவிடக்கூடாது. சமூக நலத்துறையோடு இந்த இலாக்கா இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. அப்படி இருந்தால், காரியம் நடைபெறு வதில் இன்னும் சிறப்பான நிலையை எய்த முடியும்,

அடுத்து, நீதித் துறையைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். தொழில் கோர்ட்டுகள் சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களில் உள்ள கோர்ட்டுகளில் காரியங்கள் மிகவும் தாமதமாக நடைபெற்று வருகின்றன. அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும். நிதி ஒதுக்கீடு இல்லை என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீடு வேறு பிரச்சினை என்றாலும், காரியங்கள் மிகவும் தாமதமாக நடைபெறு கின்றன என்பதைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டியிருக்கிறது. துரிதம் வழக்குகள் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டும். துரிதம் என்று சொல்லுகிறபோது, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் Haste means waste என்று சொன்னதால், தயக்கத் தோடு சொல்லுகிறேன். அவசரப்படக்கூடாது என்பது சரி

[திரு. பி மாணிக்கம்] [1978 மார்ச் 22

யாலும், நீதி தாமதப்படுமானால், நீதியே அநீதியாக மாறிவிடு கிறது. எனவே தாமதமும் வேண்டாம், அவசரமும் வேண்டாம். இவை இரண்டுமில்லாமல், தொழில் கோர்ட்டுகள் நடைபெறு வதற்கு உரிய வழிவகைகளைக் கண்டாக வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : இன்னும் 6 உறுப்பினர் கள் பேச இருக்கிறார்கள். நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. எல்லோரும் அதிகமாகப் பேசினால், இறுதியில் உங்களுக்கெல்லாம் பதில் சொல்ல அமைச்சர் அவர்களுக்கு அதிக அவகாசம் இல்லா மல் போய் அவர் குறைத்துக்கொள்கிறார். எனவே அமைச்ச அவர்களிடம் அதிகமான உறுதிமொழிகளையும் பதிலையும் எதிர்பார்க் கும் உறுப்பினர்கள் தங்கள் பேச்சைச் சுருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI : Hon. Deputy Chairman, I am happy to speak on Justice and Jail Reforms. The other day I had occasion to speak on the Resolution ratifying the 44th Amendment of the Constitution when I brought to the notice of the Hon. Minister the pendency of the cases and, therefore, I would not deal with that now. I would like to request him to revive the system of Honorary Presidency Magistrates.

(Thiru. A. Balasubramaniam, Vice-Chairman in the Chair)

I know the reply he will be giving, because this was the reply given by all those who were in charge of law. The Government of India had passed the rule that the Honorary Presidency Magistrate system should be abolished. But we are a federal State and each State has its own provisions. The States could get permission from the Government of India to revive the Honorary Presidency Magistrate system. I think there would not be any objection, because I feel that if the 44th Amendment has to be a success, we have to see that there is no pendency of cases. To achieve that, the Stipendiary Magistrates should not be taxed with small cases like public nuisance, prohibition and traffic cases, etc. Now the problem of 'doubles riding' is not there, since doubles riding has been recently permitted. But there are many small cases which are taken up by the Stipendiary Magistrates. They may be taken away from them and they should be allowed to deal with only technical cases, so that the pendency of cases before them could be reduced.

1978 மார்ச் 22] [Thirumathi Mandakini Krishuamurthi]

There is another point I wish to mention. The social workers of the past from Mrs. Margaret Cousins to Dr. Muthulakshmi Reddi have fought for Children's Court to be manned by women Hon. Magistrate. The knowledge and experience of the juvenile courts in the other countries would show that only the Woman Honarary Magistrates are best suited to deal with the juvenile delinquents. I would appeal in the name of social welfare that the juvenile offenders should be tried only by women Honorary Magistrates. I hope our Law Minister, with his flexible approach, will definitely take this into consideration and we will be able to see some tangible good done in this particular period.

[பிற்பகல் 12-30]

Regarding Jail reforms there is paragraph X in the Policy Note about Jail visitors. Since Independence, for these 30 years, we are having these jail visitors. Then why is it that we still say that jails are not places for human beings to stay. It is said that the jail visitors are not organised. I feel that these jail visitors should be made into an Advisory Committee for Government Jails. As we are having an Advisory Committee for every hospital, there should be an Advisory Committee for Jail. I feel that at least 50 per cent of the members of that Committee should be women. It is not that I have anything against other people. But I feel that women have a soft heart If there are 50 per cent of women-members on the jail committees, it will be a better action.

I would also like to make a suggestion. One or two members have already suggested this. Some of the jail visitors may be experienced and some of them may have sympathy. But we all need a technical knowledge of things. These jail advisory committees should be provided with good books like the one on the life of Elizabeth Fray who fought for jail reforms and whose hard struggle brought about a new type of jails in Britain. That book is a Bible for all those who work for jail reforms. There are also some books in Tamil like 'Kaithiyin Kathai' by Mrs. Sarojini Sriram. There are many more books and I would not go into details because our Chairman has given a warning to curtail our speeches. A library with such books should be provided for these jail

visitors and also jailors so that they may go through these books, have joint seminars talks and conferences to find out how best the jail reforms could be brought about and how to make these jails human places for the human people sent there so that they may also go back as human beings. In this connection, I would like to congratulate the Hon. the Minister for Information, espeically on behalf of women because he has been able to get rid of the obscene posters from our lives. Especially, it was an eye-sore for the women of this State and also for the women of every other State. Tamil Nadu which has always been a fore runner has been the first to have the abolition of obscene posters. I would also add that he should use his influence with the Censor Board in the matter of films with themes like glorifying theft, rape and many other human deficiencies which are now shown. Such themes should not be brought into the films. If that is done, definitely we will have lesser number of such cases. Naturally, when bad things are glorified, our young people think that those things go with a hero and they would like to emulate them.

There is another point which I would like to mention. One of our Hon. Members spoke abut open jails. It is not enough if we have one "Dho Ankhein Rahrah Haaath" or a Tamil film on the same theme. We should have many more such films. I hope that the Hon. the Minister for Information will see that his Government give enough funds to producers who produce such good films on jail reforms so that the jail visitors and also people in the jails may be benefited.

I have another suggestion regarding the Jail Reforms Committee. Very useful suggestions have been made by two very important vocal Members of our Council regarding those people who were in jail during recent times. In the olden times there were 'A' and 'B' classes. In recent times, there was socialistic jail and all people were kept together and that is why we have come to know that there have been such inhuman things happening in jail. On the Committee, there can be one from the ruling party and one from the opposition party who have sufferred during this socialistic jailing so that there may be a balance of power and I hope this committee will really do its work in an effective manner. Thank you.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாற்றுத்தலைவரர்களே, இந்த சிறைச்சாலை, நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் மீது நானும் சில கருத்துக்களை வழங்கலாம் என்று எண்ணுகிறேன். நீதிமன்றங்களைப்பற்றிப் பல பேர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். கோர்ட்டுகளில் ஏராளமான கேஸ்கள் இருந்துகொண்டிருக்கின்றன, முனிசிபல் கோர்ட்டிலேயிருந்து ஹைக்கோர்ட் வரையிலே கேஸ்கள் இருந்துகொண்டிருக்கின்றன. தாமதமாகிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தக் காலத்திலே ஜில்லாக்களிலே ஜனத்தொகை சில லட்சங்களாக இருந்தபோது ஏற்பட்ட கோர்ட்டுகள். அந்தக் காலத்திலே 20 கோடியாக மக்கள் ஜனத்தொகை, இருந்தபோது ஏற்பட்ட கோர்ட்டுகள் எண்ணிக்கைக் குறைவாக இருக்கின்றன. இப்போது 4, 5 பங்கு ஜனத்தொகை பெருகியிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போலவே, சிவில் கேஸ்கள் கிரிமினல் கேஸ்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. அதிகரிக்கின்ற பாப்புலேஷனுக்கு ஏற்ப அதிகமாகிக்கொண்டே போகிறது. அதற்குத் தகுந்தாற்போல கோர்ட்டுகள் நிறைய இருக்க வேண்டும். ஹைக்கோர்ட்டு என்று சொல்லும் போது, சென்னை மாநகரத்திலேதான் ஒரு ஹைக்கோர்ட் இருந்துகொண்டிருக்கிறது. கன்னியாகுமரியிலிருந்து கேஸ்களுக்காக வருகின்ற ஜனங்களுடைய கஷ்டம் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. ஒரு தடவை மட்டும் வந்துவிட்டால், கேஸ் முடிந்துவிடாது. பல தடவைகள் வர வேண்டியிருக்கிறது. கேஸ்கள் 2, 3 வருடங்களுக்குக்கூட நீடிக்கின்றன. சட்ட மன்ற மேலவைக் கூட்டத்திற்கு நாம் வருகின்றோம். கன்னியாகுமரியிலிருந்து வருகிறோம் என்றால், நமக்கு எவ்வளவு செலவாகும் என்று தெரியும். செகண்ட் கிளாசில், தேர்ட் கிளாசில் பிரயாணம் செய்து வந்தாலும்கூட, பஸ் கட்டணமோ, ரயில் கட்டணமோ, ஏராளமான பணம் செலவாகிறது என்பது தெரியும். சரீர முயற்சியும், பொருளும் விரயமாகிறது.

திருச்சியிலே ஒரு ஹைக்கோர்ட்டுப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய பகுதியாகப் பார்த்து, அங்கு கோர்ட்டு வைக்க வேண்டும். வேண்டுமானால் 4 பக்கங்களையும் அளந்து பார்த்துக்கூட அமைக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் எல்லாம், ''ஏன் திருச்சியில்தான் இருக்க வேண்டுமா? வேறு இடத்தில் இருக்கக்கூடாதா?'' என்று கேட்கலாம். திருச்சி நகரத்திலே ஒரு ஹைக்கோர்ட் பிரிவு ஏற்படுத்தினால், சுற்றுப்பக்கத்திலிருந்து வருகின்ற மக்களுக்கு வசதியாக இருக்கும், செலவுகளும் குறையும். இபபோது போக்குவரத்துச் செலவே 4 பங்கு ஆகிறது. சாதாரண மக்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கும், என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். உயர்நீதி மன்றங்களை மாற்றியமைக்கும்போது, திருத்தியமைக்கும்போது, திருச்சி நகரத்திலே ஏற்படுத்தினால், நான்கு பக்கத்திலுமிருந்து வருகின்றவர்களுக்கு வசதியாக இருக்கும், சீக்கிரமாகவும் வர முடியும். ஏராளமான கேஸ்கள் பெண்டிங்காக இருப்ப

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1978 மார்ச் 22]

தாக பேப்பர் வாயிலாகப் பார்க்கிறோம். இவைகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால், ஜனங்களுக்கு நல்ல சௌகரியம் ஏற்படும். எங்கள் ஊரில் ஒரு கேஸுக்குக் கிட்டத்தட்ட 9 வருடங்கள்கூட ஆகியிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் கொடுக்க வேண்டிய பாக்கிக்காக கேஸ் போட்டால், அந்த கேஸ்கள் அதிக காலத்திற்கு நீடித்தால், அந்தப் பாக்கித் தொகையை வசூலிக்க முடியாது. அவர்களுக்குச் சொத்து இருக்கிறதா என்பதுகூடத் தெரியாது போய்விடுகிறது. ஒரு கேஸுக்கு 3 மாதம் அல்லது 6 மாதம் எடுத்துக்கொள்ளலாம், ஒரு வருடமானாலும் பாதகமில்லை.. அதற்கு மேலும் நீடிக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முனிசிபல் கோர்ட்டிலேயிருந்து சப்-கோர்ட்டு, ஹைக்கோர்ட்டு வரையிலே ஏராளமான கேஸ்கள் இருக்கின்றன. பாப்புலேஷன் அதிகமாக இருப்பதால், அப்படி அதிகமான கேஸ்கள் இருக்கின்றன. அப்படி பாப்புலேஷன் அதிகமாக, கேஸ்கள் அதிகமாக இருக்கின்ற இடத்திலே, முனிசிபல் கோர்ட்டுக்களை சப்-கோர்ட்டு அளவுக்கு மாற்றி அமைக்கலாம். இங்கு நமது மாற்றுத் தலைவர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள் ஊரிலே, நாமக்கல்லில் உள்ள முனிசிபல் கோர்ட்டில் ஏராளமான கேஸ்கள் பாக்கியிருக்கின்றன. அவர்கள் சேலம் வரவேண்டியிருப்பதால், கஷ்டமாக இருக்கிறது. அங்கேயே ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்தினால், நன்றாக இருக்கும். அது மாதிரி அங்கு ஏற்படுத்தினால், அங்கே இருக்கின்ற வக்கீல்களுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். நீதிமன்றங்கள் பக்கத்திலே இருந்தால், அவர்கள் போய் வாதாடுவதற்கு, நீதியைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிபதிகளுக்குச் சம்பளம் கொடுப்பது பற்றி இங்கு கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் ரூ. 3,500 லிருந்து ரூ. 5,000 வரையில் பெறுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். அது போதாது, அவர்களுக்கு வேறு வருமானம் இல்லாததால், கொடுக்க வேண்டும் என்பார்கள். அவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் எல்லாம் இருக்கின்றன. சம்பளம் ஏற்றினாலும், அதற்கு ஏற்றாற்போல் அவர்களுக்கு இன்கம்டாக்ஸ் வருகிறது. அதையெல்லாம் அவர்கள் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. அவர்கள் சம்பளத்திலேயே கணக்கிட்டுப் பிடித்துக் கொள்கிறார்கள். உண்மையில் யார் அதிகமாக லஞ்சம் வாங்குகின்றார்கள் என்று பார்க்கும் போது அதிகச் சம்பளம் வாங்குபவர்களும் அரசியல்வாதிகளில் சிலரும் வாங்குகிறார்கள் என்றுதான் சொல்லப்படுகிறது.

(பிற்பகல் 12-40)

இப்படிப்பட்ட நிலைமைகள்தான் இருக்கின்றன. ஆசையில்லாத மனிதனே கிடையாது. இன்றைக்கு மெம்பராக வந்தால் உடனடியாக மந்திரியாக வர வேண்டுமென்று நினைக்கிறார்கள், பிறகு [illegible]டருக்குப் போகவேண்டுமென்று நினைக்கிறார்கள். பதவி

1978 மார்ச் 22] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

வேண்டும். ஆசையில்லாத மனிதனே கிடையாது. கொஞ்சம் சொத்து இருக்கிறவன் மேலும் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கிறான். கொஞ்சம் சொத்து இருந்தால் போதும், அதைக்கொண்டு குடும்பம் நடத்துகிறேன் என்று சொல்லுகிறவர்கள் கிடையாது. நான் கொடுப்பதைத் தடுக்கவில்லை. ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் நீதிபதி சம்பளம் என்று சொல்லுங்கள், அதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறவர்கள் இருக்கமாட்டார்கள். தகுதி உள்ளவர்கள் நூற்றுக் கணக்கில் இருக்கிறார்கள்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், நீதிபதிகள் பொது வாழ்வில் ஈடுபடுகிறார்கள். சர்வீஸ் ஆர்கனைசேஷன்ஸ், ரோட்டரி கிளப், லையன்ஸ் கிளப் போன்றவற்றில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நானும் சில ஆர்கனைசேஷன்ஸ்-ல் உறுப்பினராக இருக்கிறேன். பலவிதமான பொது விஷயங்களில் தலையிடும்போது, பலவிதமான சிபாரிசுகள் வருகின்றன. பொது இடங்களில் நீதிபதிகள் கலந்துகொள்ளும் போது, அவர்களை 'அப்ரோச்' பண்ணுவது சுலபம். அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. கோவில்களுக்கு வந்தால்கூட, சிலர் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு சிலரைப் பற்றிச் சிபாரிசு செய்யும் நிலைமை ஏற்படுகிறது. எனவே பொது வாழ்வில் ஈடுபடுவதை அவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் கலந்து கொள்ளவே கூடாதென்று சொல்லவில்லை. குறைத்துக்கொள்ள வேண்டும். அவர் நேர்மையாகத் தீர்ப்பு அளித்திருக்கலாம். அவர் சொல்லி, இவர் செய்தார் என்று சொல்லும் நிலைமை ஏற்படும். எனவே அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடுவதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஈடுபடாமல் இருந்தால், மிகவும் நல்லது.

நீதி மன்றத்தைப்பற்றி உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். சிறைகளைப்பற்றியும் சொன்னார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே சிறைத் தண்டனை அடைந்த கைதிகளை அந்தமானுக்கு அனுப்பினார்கள். குற்றம் அதிகமாகச் செய்தவர்களை அந்தமானுக்கு அனுப்பினார்கள். திரும்பி வந்தபோது, அங்கேயிருந்து அவர்கள் சம்பாதித்துக்கொண்டு வந்தார்கள். கைதிகளிலே திறமையுள்ளவர்கள் கூட இருக்கிறார்கள். எதற்காக அவர்களைச் சிறையில் வைக்கிறோம்? அவர்களைச் சீர்திருத்துவதற்காக வைக்கிறோம். இங்கே சேர்ந்தாற்போல் 4 மணி நேரம் உட்கார்ந்திருக்க முடியவில்லை. 3, 4 தடவை வெளியே போய் விட்டு வருகிறோம். ஒரு இடத்திலேயே உட்கார்ந்தால், 4 பேரிடம் பேச முடியாது, உலகம் எப்படி இருக்குமென்று தெரியாது. எனவே குற்றம் பண்ணியவர்களை ஓரிடத்திலேயே இருக்கும் தண்டனையைக் கொடுத்து சீர்திருத்துகிறோம். எல்லா ஜெயில்களும் ஒரே நிலையில் தான் நடக்கின்றன என்று சொல்ல முடியாது, பத்திரிகையிலே நாம் படிக்கிறோம். நான்கூட 'மிசா' கைதிகளைப் போய் பார்த்திருக்கிறேன். அவர்களை பார்ப்பதில் பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. டி. ஐ. ஆர். ல் கைதாகியுள்ள கைதிகளைப் பார்க்க முடிகிறது. ஆனால் 'மிசா'

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1978 மார்ச் 22]

கீழ் கைதானவர்களைப் பார்க்கக்கூடாதென்று சட்டம் போட்டார்கள். அதற்குக் காரணம் தெரியவில்லை. டி.ஐ.ஜி.: கீழ் கைதானவர்களைப் பார்க்கலாம். சாதாரண குற்றம் செய்த கைதிகளைப் பொறுத்தும், பலவிதமான சங்கடங்கள் இருக்கின்றன, காலையிலே போனால் மாலை 4-30 மணிக்குத்தான் அவர்களைப் பார்க்க முடியும். குற்றக் கைதிகளுக்கு நாம் ஒன்றும் செய்யப் போவதில்லை. மிசா கைதிகளுக்குப் படியெல்லாம் கொடுக்கிறார்கள். இவர்களைப் போய் பார்க்கும்போது, 'நீ இங்கே இருக்கிறாய், குடும்பத்திற்கு என்ன செய்வது, கொடுக்கல், வாங்கலுக்கு என்ன செய்வது என்பது பற்றித்தான் பேசுவார்கள். அதற்காக அப்போதிருக்கும் கடுமையான சட்டத்தைத் திருத்தி, அவர்கள் கொஞ்ச நேரம் அதிகமாகப் பேசுவதற்குச் சலுகை கொடுக்க வேண்டும், அவர்கள் ரொம்ப தூரத்திலிருந்து வருகிறார்கள், இந்த நேரத்திற்குள் அப்ளிகேஷன் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. 4 நிமிடங்கள் தாமதமாக வந்தால்கூட, அப்ளிகேஷன் கொடுக்க முடியாது. கொஞ்சம் தெரிந்தவர்களை விடுகிறார்கள். எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்.

ஜெயில் நிர்வாகத்திலே கைதிகளுக்கான கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சென்னையிலுள்ள மைய சிறைச்சாலையில் இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் 2,000 கைதிகள் இருக்கிறார்கள். அரசியல் ரீதியாகவும் கணக்கில்லாத கைதிகள் வருகிறார்கள். நினைத்தால் இங்கே ஸ்டிரைக் நடக்கிறது. அதனால் ஆயிரக் கணக்கில் உள்ளே போகிறார்கள். இன்று வாழ்க்கைத் தரம் உயர உயர, வியாதிகளும் அதிகமாகின்றன, அங்கே வியாதிக்குத் தகுந்த டாக்டர் இல்லை. டாக்டருக்குத் தெரிந்த வியாதி வர வேண்டும், திருச்சி சிறைச்சாலையில் நான் இருந்தபோது, ஒரு தொண்டருக்கு ஒரு வியாதி வந்தது. 'டெடனஸ்' என்ற வியாதி. கிட்டத்தட்ட 12 மணி நேரத்திற்கு முன்பு அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிருந்தால், பிழைத்திருப்பார். மருத்துவர்கள் செய்த கால தாமதத்தால் அவர் இறந்துவிட்டார், அங்கே சரியான மருந்துகள் கிடையாது, சரியான டிரீட்மென்ட் இல்லை, ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்று அவர்கள் எழுதிக் கொடுத்து, அங்கே போவதற்கு 12 மணி நேரம் காலதாமதமாகிவிட்டது. கடைசியில் அங்கே 'டெடனஸ்' வியாதி என்று கூறுகிறார்கள். எனவே சிறையிலேயே நல்லவிதமான டிரீட்மென்ட் கொடுத்தால்தான், கைதிகளுக்குச் சௌகரியமாக இருக்கும். வீட்டில் இருந்தால் உடனே டாக்டரைக் கூப்பிடுவோம், சரியான முறையில் டிரீட்மென்ட் கொடுப்போம். அடுத்து, சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் உணவுபற்றிச் சொல்ல விரும்புகிறேன், முதலிலே ஜெயிலிலே ஜல வசதி வேண்டும். திருச்சி ஜெயிலிலே மூன்று கிணறுகள் இருக்கின்றன. ஒரு கிணற்றிலே தான் தண்ணீர் இருக்கிறது. ஒரு வசனம் சொல்வார்கள், 'மூன்று கிணறு வெட்டினேன், ரண்டு பாழ் ஒன்றிலே தண்ணீரே இல்லை' என்று சொல்வார்கள் சிறைச்சாலை

1978 மார்ச் 22] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

யிலே மூன்று கிணறுகள் இருந்தாலும், மோட்டார் போட்டால் 5 நிமிடங்கள் கூட தண்ணீர் வராது. தண்ணீர் கீழே போய் விடும். குடிக்கிற தண்ணீருக்கு முனிசிபாலிடியைத்தான் நம்ப வேண்டும், சரியான நேரத்தில் அவர்களுக்கு சப்ளை கிடைக்க வில்லை. கிணற்றில் தண்ணீர் பாதாளத்தில் இருக்கிறது. சுத்தமாக இருக்கிறதா என்பது தெரியாது. ஏதாவது விழுந்து செத்துக் கிடக்கிறதா என்பது தெரியாது. எல்லோரும் சிரமப்படுகிறார்கள், அவர்கள் அடைக்கப்பட்டுள்ள கொட்டகையில் கோடிக் கணக்கான உண்ணிகள் இருக்கின்றன, நூற்றுக் கணக்கான கைதிகளைப் படுக்க வைக்கிறார்கள். சுற்றி சுவரில் உண்ணிகள் இருக்கின்றன. அவர்களுடைய உடல் நலத்தைப் பற்றி நினைக்கும் போது, ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது, ராத்திரி பூராவும் தூங்க முடியவில்லை. மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

(பிற்பகல் 12-50)

சிறைக்குச் சென்றால், அங்கே கஷ்டப்பட வேண்டியதுதான். மாமியார் வீடு என்று நினைத்துக் கொண்டீர்களா என்று கேட்கிறார்கள். இந்த ஒரு இடத்தில் மட்டுமில்லை. எல்லா இடத்திலும் இதே மாதிரி தான் இருக்கிறது. மாமியார் வீடா உங்களை வரவேற்று சாப்பாடு போடுவாங்களா என்று கேட்கிறார்கள். மாமியார் வீடில்லைதான். கஷ்டப்படுவதற்காகத்தான் சிறைக்குச் செல்கிறோம். இருந்தாலும்கூட நியாயமாக நடத்த வேண்டாமா? இந்த ஜனநாயக காலத்திலும் கூட இவ்வளவு கஷ்டப்படுத்துவதா? அங்கே கொடுக்கப்படுகிற ஆகாரம் ரொம்ப, ரொம்ப மோசம். ஒவ்வொரு கைதிக்கும் இவ்வளவு என்று ஆகாரத்திற்காக அரசாங்கம் செலவு செய்கிறது.

ஒரு வேளை ஆகாரத்திற்கே இரண்டு மூன்று ரூபாய் ஆகிறது வெளியில். இரண்டு வேளை ஆகாரத்திற்கும் சேர்த்து ஒரு கைதிக்குக் கொடுக்கப்படுவது மிக மிகக் குறைவு. இதை வைத்துக் கொண்டு எப்படிச் சரியான முறையிலே பராமரிப்பது? கொஞ்சம் குறைந்திருக்கலாம். ஆனால் இப்போது கொடுப்பதை வைத்துக் கொண்டு எப்படி இரண்டு வேளை ஆகாரத்தை சிறையிலே உள்ள ஒருவருக்குப் போட முடியும்? அவர்களுக்கு என்று கொடுக்கப்படுகிற பணத்திலே அவர்களுக்குக் கொடுக்கப்படுவது அவர்களுக்குச் சரியான முறையிலே போய்ச் சேருவதில்லை. நம்முடைய நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் எடுத்துச் சொல்லியபடி, பூராவாகப் போய்ச் சேரா விட்டாலும், ஓரளவிற்காவது போய்ச் சேரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான் சமீபத்திலே சிறைக்குப் போய்விட்டுவந்தேன். சிறையிலே அளவை மிக மிகக் குறைத்து விட்டார்கள். எனவே அதில் கண்காணிப்புடன் இருந்து ஜெயிலில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் ஆகாரத்தின் அளவு குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த பக்குவச் சாலை, பாகசாலையைப் பார்க்கும் போது, அது ரொம்பக் கேவலமாக உள்ளது. அவர்களுக்குக் கொடுக்கப்படுவதை வைத்துக் கொண்டு சாம்பார் தயாரிப்பது என்பது மிகவும் சிரமம், காய்ந்த விறகு கூடக் கொடுக்கப்படுவதில்லை. ஈர விறகைக் கொடுக்கிறார்கள். மிசாக் கைதிகளுக்கு 18 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு அவர்களுக்கு எப்படிச் சரியான முறையிலே உணவு கொடுக்க முடியும்? ஆகுல் வெளியிலிருந்து வரவழைத்துக் கொள்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு தான் அவர்களுக்கு உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. ஜெயிலில் இருப்பவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற உணவு அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருகிறதா என்றால், இல்லை. எவ்வளவு குறைச்சலாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தான் கொடுக்கப்படுகிறது. "ஏ" கிளாஸ் கைதிகளுக்கு. எம். எல். ஏ., எம். எல். சி. போன்றவர்களுக்குக் கொஞ்சம் ஒழுங்காகக் கொடுக்கப்படலாம். அதுவும் "ஏ" கிளாஸ் கைதிகளுக்குக் கொடுக்கப்படுவது கூட எம். எல். ஏ., எம். எல். சி. போன்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. கைதிகள் வைக்கப்படும் அறைகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை. அங்கே கழிப்பிடங்கள் இருப்பதைப் பார்த்தால், நிம்மதியாகத் தூங்க முடியாது. ரொம்ப நாளைக்குச் சுத்தம் பண்ணப்படாமல் இருக்கிறது. அதைச் சுத்தம் செய்வது என்றால் ரொம்ப தானாகும். ஜெயில் விசிட்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் வந்து பார்த்ததாகவும், எல்லாம் சரியாக இருப்பதாகவும் எழுதப்படுகின்றன. இவைகளெல்லாம் சரியான முறையில் நடக்கிறதா, நடக்கவில்லையா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரமாக முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இங்லீஷில் பேசும்போது அதிக நேரம் கொடுத்தீர்கள். முதலிலே பேசியவர்களுக்கு அதிக நேரம் கொடுத்தீர்கள். பின்னால் பேசுகிறவர்களைச் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறீர்கள்.

ஜெயில் விசிட்டர்கள் ஜெயிலுக்குப் போய்ப் பார்க்கிறார்கள். ஜில்லாக் கலெக்டரும் போகிறார். ஆனால் சரியான முறையில் கண்காணிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஜெயில் விசிட்டர்கள் பட்டியலில் தங்கள் பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக, சில பேர் கோவில் டிரஸ்டிகளின் பெயர்களில் தன் பெயர் இருக்கிறதா என்று பார்ப்பதைப்போல, ஜெயில் விசிட்டர் பட்டியலில் தங்கள் பெயர் என்றைக்கும் இருக்க வேண்டுமென்பதற்காக எல்லாமே நன்றாக இருப்பதாக எழுதி விடுகிறார்கள். அடுத்தாற்போல் போராட்டம் நடத்தினால், தாங்களும்

வேண்டுமென்பதை மறந்து, எல்லாம்

ஜெயிலுக்கு வர

நன்றாக இருக்கிறது என்று எழுதி விடுகிறார்கள். எனவே இந்த ஜெயில் விசிட்டர்கள் முறையை மாற்றி, வேறு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கென்று ஒருகமிட்டி அல்லது ஆலோசனை கமிட்டியை, டெம்பரரியாக, நிரந்தரமாக அல்ல, ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

சிறையைப் பற்றிய வரைக்கும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். போலீசைப்பற்றிச் சொன்னால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? 10 பேர் ஒருவனைப் பற்றிச் சொன்னால், உடனே அவனைப் பிடித்துக்கொண்டு போய் "பைண்ட் ஓவர்" செய்கிறார்கள். 10 பேர் சொல்லிவிட்டால், குற்றம் சாட்டுகிறார்கள். குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டியதுதான், வேண்டாம் என்று சொல்லவில்லை. தண்டனை கொடுத்தால், குற்றங்கள் நடக்காமலிருக்கும். ஆனால் கோபதாபம் இல்லாமல், பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

Thiru D. V. D'MONTE: Mr. Deputy Chairman, Sir, legal delays often give rise to statements such as "There is one law for the rich and another for the poor", in the sense that only the well-to-do or the rich can last out all the tortuous proceedings of legal cases to their final conclusion. There is, therefore, definite need for quickening the pace of justice. The steps necessary to quicken the pace of justice have been set out time and time again. Some of them are the appointment of new Judges and more Judges, simplified procedures, fewer adjournments and strengthening the investigating and prosecuting machinery. The number of cases pending in the High Court has gone up to 42,000 in 1976 as against 39,000 cases in 1975. I do not have the current figures. It means that we have not been able to come to grips with the problem. Decentralisation of Courts may be one way of dealing with the situation. A decision on this had been made some years ago. But very little action has been taken so far. Apparently, the Government are dragging their feet on this issue. The Government will do well to implement the proposal at an early date.

A strict time-limit should be placed on arguments and Judges and lawyers must ensure that written statements are made more comprehensive and elaborate than they are now and they should use these effectively to avoid delay. It would be a good thing if the initiative for a change in the system comes from the lawyers themselves who have often been accused of having an interest in prolonging the cases.

[Thiru D. V. D'MONTE] [1978 மார்ச் 22

In criminal cases, where the Police practically decide cases by calculated delays, there should be a guillotine of three months after which the case for action should automatically cease.

The Emergency brought into focus the extent of politicalisation of the Judiciary that had taken place. Rightly or wrongly, the public feel that political and other extraneous considerations often go in the very appointment and selection of Judges. Whatever it be, the Judiciary does not enjoy the same amount of public confidence which it did ten years ago. The Janata Party has promised to restore to the Judiciary the eminent position it held in the country prior to the Emergency. Today, to enable it to do so, a pre-requisite is that politicians and local politics should not try to interfere in the flow of law.

In regard to jail reforms, I welcome the move of the State Government to set up more open-air jails. It is time that we give up the penal approach to crime and criminals and some progress is made towards more humane treatment. There should be a shift in stress from punishment to reformation.

The principal task should be to reform criminals and convicts so that, when they go out they can take their place in society. There is need to modernise our jails and to create proper atmosphere for rehabilitation of prisoners. Overcrowding in jails is common. The Ismail Commission report is a standing monument which has highlighted the inhuman conditions in jails presently in our State. The Central Prison, Madras calls for immediate change. I feel that, with the large number of Prohibition cases that are now coming up, the same old overcrowding is going to become very critical. It is a problem which the Government must attend to immediately.

Sir, no scheme of reform will succeed unless the officers themselves are properly trained and made to understand that they are there to help prisoners rather than to maintain discipline and to prevent the prisoners from escaping. "An eye for an eye" principle is outmoded. Penologists can do well to profit, by their experience of enlightened attempts elsewhere in other countries to find the ways and means for criminals to be made socially acceptable citizens.

Thank you.

1978 மார்ச் 22]

(பிற்பகல் 1.00)

புலவர் புலமைப் பித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைத் துறையைப் பற்றியும், நீதி நிர்வாகத் துறையைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களைப் போல நானும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மணிமேகலை என்ற இலக்கியத்தைப் படிக்கிறபோது, சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றியமைத்தாள் மணிமேகலை என்று நாம் படித்திருக்கிறோம். அதே போல கடந்த காலங்களில் இருந்த நிலைமைகள் மாறி, இனிமேலாவது சிறைச்சாலை என்பது குற்றம் இழைக்கிற மனித உள்ளங்களைத் திருத்தி, அவர்களை வாழத்தக்க மனிதர்களாக ஆக்கத்தக்க அறக் கோட்டமாக மாற வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து இந்த ஆட்சிக் காலத்திலே அது நிறைவேறும் என்று நான் மனமார எதிர்பார்க்கிறேன்.

பெரும்பாலும் இந்த நாட்டில் நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்து வருவதற்குரிய சூழ்நிலைதான் சிறைச்சாலையில் வளருகிறதே தவிர, குற்றங்களைக் களைவதற்கு, அவற்றைத் திருத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது என்னுடைய கருத்தாகும். குற்றவாளிகளை மேலும் குதர்க்கவாதிகளாக ஆக்குகிற முயற்சியிலே ஈடுபடுகிறார்களே தவிர, அவர்களை மெய்யாகவே திருத்துவதற்கான வழிமுறைகளைக் கையாண்டதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால், இந்த நாட்டில் ஏற்படுகிற பெரும்பாலான குற்றங்கள் இல்லாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதனாலே இல்லாமையின் காரணமாகக் குற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதல்ல என்னுடைய வாதம். குற்றங்களைக் களைய வேண்டுமென்று நினைக்கிறவர்கள் அந்தக் குற்றங்களுக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிவதும் அந்தக் காரணங்கள் இல்லாமல் நீக்குவதும்தான் நம்முடைய கடமை. குற்றங்களுக்குரிய காரணங்களை முதலிலே கண்டு அதற்கேற்ப செயலாற்றுவது நல்லது என்று கருதுகிறேன். 'நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்க வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்பதைப் போல குற்றங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, அந்தக் காரணங்களைக் களைந்து குற்றம் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது நாட்டிற்கு நலம் பயக்குமென்று கருதுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், சிறைச்சாலையிலே கூட வர்க்க பேதங்கள் இருக்கின்றன. சிறைச்சாலையில், வசதி படைத்தவர்கள் வருகிறபோது, அவர்களுக்கு ஒருவிதமான நடைமுறைகளும், ஏழ்மையில் வாடுகின்றவர்கள் தவறுகளைச் செய்துவிட்டு சிறைக்குள்ளே செல்லுகிறபோது அவர்களுக்கு ஒருவிதமான நடைமுறை

களும் இருக்கிற நன்மை மாற்றப்பட வேண்டுமென்பது என்னுடைய கருத்து. வேண்டுமானால் பொது வாழ்விலே ஈடுபட்டு, அரசியலில் ஈடுபட்டு, அதன் காரணமாக வருகிறவர்களுக்கு ஒருவிதமான நடைமுறைகள் இருக்கலாம். மற்றவர்கள் யாராக இருந்தாலும், தவறுகளைச் செய்தவர்கள் எப்படிப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எல்லோருக்கும் ஒரேவிதமான நடைமுறைகள் இருக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும்.

நான் இந்த எண்ணம் கொண்டதற்குக் காரணம் கள்ள நோட்டு வழக்கிலே ஈடுபட்டு, அதிலே மாட்டிக்கொண்டு சிறைச்சாலைக்குள்ளே சென்றவர்கள், கஷ்டப்பட்டு கள்ள நோட்டு அடித்ததன் காரணமாக ஏற்பட்ட அயர்வைப் போக்கிக் கொள்வதற்காக ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாக இருப்பதை நாம் பார்க்கிறோமே தவிர, அதை ஒரு தண்டனைக்குரிய இடமாக நினைப்பதாகத் தெரியவில்லை. சமுதாயத்தினுடைய உயர் மட்டங்களில் இருக்கிறவர்கள் சிறைச்சாலைக்குள்ளே போய்விட்டால், மாமியார் வீட்டில் உபசரிப்பதைப் போல், உபசாரம் சிறைச்சாலையில் இருப்பதும், இல்லாமையின் காரணமாகத் தவறுகளைச் செய்துவிட்டு சிறைச்சாலைக்குள்ளே போகிறவர்களை மிருகங்களை நடத்துவதைப் போல் மிகவும் கொடுமையான முறையில் நடத்துவது என்பதும் மாற்றியமைக்கப்பட்டாக வேண்டும். பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு, அரசியலிலே ஈடுபட்டு மக்களுக்காக சிறை செல்பவர்களுக்கு ஒருவிதமாகவும் மற்ற யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் அனைவருக்கும் ஒரே விதமாகவும் உருவாக்கப்பட வேண்டுமென்பது ஒரு நல்ல ரீதியாக அமையும் என்று கருதுகிறேன்.

சிறைச்சாலையில் உள்ளவர்களைப் பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்குரிய நிலைமைகளைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் சில பல பேரைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நேரங்களில் சிறைக் கூண்டுகளில் இருப்பதைப் போல் இருக்கிறதே தவிர, நீண்ட நாட்களாகப் பார்க்காமல் இருந்தவர்களைப் பார்க்கும்போது, நல்ல முறையில் அவர்களிடம் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் அந்தக் கம்பிகளுக்கு மத்தியிலே நின்று கொண்டிருக்கிற நிலைமைதான் இருக்கிறது. சிறைக் கைதிகளைப் பார்வையாளர்கள் சந்திக்கும் போது உள்ள நிலைமைகளை மேலும் எளிமைப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய வேண்டுதலாகும்.

சிறைச்சாலைகளில் இருக்கிற ஆயுள் கால தண்டனையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இராமாயணம் படித்தவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பிய காரணமோ என்னவோ, இராமாயணத்தில் சொல்வதைப் போல் 'ஈரேழு ஆண்டுகள் கழித்துத் திரும்பி வா' என்று 14 ஆண்டுகள் என்று [illegible]யறுத்திருக்கிறார்கள். அந்தக் கால அளவைக் கொஞ்சம்

குறைத்துக் கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன். இதற்குக் காரணம், 14 ஆண்டுக் காலம் சிறைக்குள்ளே இருந்துவிட்டு மீண்டும் திரும்ப வெளி உலகத்திலே வந்து வாழக்கூடிய வாய்ப்பை இழந்து சிறைக்குள்ளேயே மடிந்து போவதென்பது பரிதாபமாக இருக்கிறது. பத்தாண்டுக் காலமாகக் குறைப்பதன் வாயிலாக அவர்கள் திரும்ப வெளியே வந்து கொஞ்ச காலமாவது வாழ வாய்ப்பு இருக்கிறது என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக நான் அதிகமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுவது, நீதித் துறையின் நிர்வாகத்தைப் பற்றியதாகும். 'சட்டம் என்பது ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு சுடர் விளக்கு; அந்த விளக்கின் வெளிச்சம் ஏழைகளின் கரங்களுக்கு எட்டாமல் போகிறது' என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஏழைகளுக்குப் பெரும்பாலும் சட்டத்தின் உதவி எட்டாமல் இருக்கிறது. அது ஆண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து அப்படியே இருந்து வருகிற நிலைமையைப் பார்க்கிறோம், இன்னும் சொல்லப் போனால், நீதியினுடைய விலை அதிகரித்துப் போனதற்குக் காரணம், நீதித் துறையில் பங்கு வகிக்கிற மொழி ஒரு காரணம் என்பது என்னுடைய கருத்து. ஆங்கிலேயர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, நீதி மன்றங்களில் நீதிச் சட்டங்களை ஆங்கில மொழியில் வாதித்து, ஆங்கில மொழி மேலோங்கியிருக்கிற காரணத்தால், நம்முடைய நாட்டுப் பாமர மக்கள் ஆங்கில மொழியின் வாயிலாக நீதியைப் பெறுவதற்காக வழக்கறிஞர்களை நியமித்து, அவர்களுக்குக் கட்டணம் தரவேண்டிய சங்கடத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள், சமுதா த்தில் வசதி படைத்தவர்களால், வசதியற்றவர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, நீதிக்காக வாதாட வசதியில்லாதவர்கள் "எந்த நிலைமை ஏற்பட்டாலும் அனுபவித்தே தீர வேண்டியது நம்முடைய விதி" என்று வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை தொடர்ந்து நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அதனாலே நீதி மன்றங்களின் பணிகளைப் பெறுவதில் இக்கட்டான சூழ்நிலையில் பல பேர் வாடிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய சிற்றூரிலே கூட நான் பார்த்திருக்கிறேன். ஏழையெளியவனுடைய தாய், தந்தையை பெரிய மிராசாக இருக்கிறவன் கொலை செய்து விடுவான். அதற்குப் பின்னாலே வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன் வாதாட வழியில்லாமல், வழக்கைச் சந்திக்க முடியாமல், தன் தாய் தந்தையை இழந்து விட்டு பின்னாலே அதே நேரத்தில் கொலை செய்த குற்றவாளி தலை நிமிர்ந்து நடக்கிறதைப் பார்த்துக் கொண்டிருப்பான். இந்த நிலை தொடர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்திருக்கிறேன். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு வகையில், சொல்லிக் காட்டுவதற்கு உதாரணமாக என்னுடைய வாழ்க்கையே இருக்கிறது என்ற முறையிலே அதையே உதாரணமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[புலவர் புலமைப் பித்தன்] [1978 மார்ச் 22

நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கும்போது, என்னுடைய தாய் திடீரென்று ஒரு சில குழப்பத்தின் காரணமாக கலவரம் ஏற்பட்டுக் கொல்லப்பட்டாள், அப்போது பகலில் கல்லூரியில் படித்துக்கொண்டும், இரவிலே பஞ்சாலேயில் வேலே செய்து கொண்டும் வறுமையில் இருந்த காரணத்தால், என்னுல் வழக்காட முடியாமல் போய்விட்டது. நான் பெற வேண்டிய நீதியைப் பெற முடியாமல் தவறிவிட்டதற்குக் காரணம் இல்லாமை தான் என்பதைத் துயரத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலேகள் இனிமேலும் தொடர்ந்து வராமலிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இக்குறையைப் போக்குவதற்காக, ஏழைகளுக்காக வாதாடித் தருகிற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிகிறேன். அது மெய்யான முறையிலே, சரியான முறையிலே செயல்படுவதற்குரிய வழிமுறைகளே உருவாக்குவதில் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், தமிழக முதல்வர் அவர்களும் முனைப்பாக ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன், அப்படி ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

எல்லாத் துறைகளிலும் தமிழ் வரவேண்டுமென்பது ஒரு புறம் இருந்தாலும், நீதித் துறையில் மிக விரைவில் தமிழ் மலர்ந்தாக வேண்டுமென்பது என்னுடைய மிகப் பெரிய பேராவலாகும். அதற்குக் காரணம் ஆங்கில மொழிதான் பாமரர்களே நீதித்துறைப் பக்கத்தில் நெருங்கவிடாமல் செய்திருக்கிறது என்பது என்னுடைய கருத்தாகும். ஏழைகள், பாட்டாளிகள், பஞ்சைகள் பராரிகள் நீதியைப் பெறுவதற்கு உள்ள தடைகள் நீங்க வேண்டுமென்ருல், தமிழ் நீதித் துறையில் எல்லா இடங்களிலும் வர வேண்டும். சமநீதித் தத்துவம் அப்போதுதான் நாட்டிலே வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். அத்துடன் குற்றம் செய்தவர்கள் திரும்பும்போது, திருந்தி வரவேண்டுமென்று பல சீர்திருத்தங்களேச் செய்கிறோம். திருக்குறள் போன்ற அற இலக்கியங்கள் சிறைச்சாலேயில் சொல்லித் தரப்பட வேண்டும். அப்போது அவர்கள் மனிதர்களாகத் திருந்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும். நான் கூட சிறு வயதில் முரட்டுத்தனமாக வளர்ந்தவன்தான். திருக்குறள் படித்த பிறகுதான், பக்குவத்தை, பண்பாட்டைப் பெற்றேன். அதைப் போன்று அற இலக்கியங்களே, சிறைச்சாலேகளில் சொல்லித் தருவதன் மூலமாக மனிதன் மனிதனுக மாறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். எல்லா மனிதர்களுக்கும் நீதி தங்கள் வீட்டைத் தேடி வருவதற்கு உரிய வாய்ப்பை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நீதிமான்கள் பக்க துணையாக நின்று செயல்பட வேண்டுமென்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

1978 மார்ச் 22]

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்: துணைத் தலேவர் அவர்களே, சிறைச்சாலே நீதி நிர்வாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் சில கருத்துக்களேச் சொல்வதில் நான் மகிழ்கிறேன். ஆரம்பத்தில் நான் சொல்ல விரும்புவது, நண்பர் திரு. சுவாமி நாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஹைகோர்ட்டுக்கு ஆறு நீதிபதிகள் நியமிப்பதில் நான்கு பேர் நியமிக்கப் பட்டிருக்கிருர்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த நான்கு பேரிலே ஒருவர் முஸ்லீமாக நியமிக்கப்பட்டமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திரு. தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது, திருச்சியிலே ஹைகோர்ட் பிராஞ்சு ஒன்று திறக்கப்பட வேண்டுமென்று சொன்ஞர்கள். தெற்குப் பகுதியிலே, தெற்கு மாவட்டங்களிலே ஹைக்கோர்ட்டின் ஒரு பிரிவு வேண்டுமென்ற கருத்து நீண்டகாலமாக பரவலாகச் சொல்லப் பட்டு, சென்ற ஆண்டு கூட நம்முடைய சட்ட அமைச்சர் அதைப்பற்றிச் சில கருத்துக்களேச் சொல்லியது எனக்கு நினைவுக்கு வருகிறது. மதுரை அல்லது திருச்சி என்று இரண்டு ஊர்களேக் குறித்துச் சொன்ஞர்கள். மதுரைக்கு வந்தாலும், நான் ஆட்சேபிக்கமாட்டேன். நான் திருச்சியைச் சேர்ந்தவன். மதுரையை விட திருச்சி அதிகப் பொருத்தமான இடம் என்று சொல்லிக்கொள்கிறேன். கன்னியாகுமரி, மெட்ராஸ், கோவை, கடலூர் ஆகிய இடங்களிலிருந்து பார்த்தால் திருச்சிதான் சென்டர். Heart of Tamil Nadu ஆக திருச்சிதான் இருக்கிறது. மற்ற ஊர்களுக்கு அந்தப் பொருத்தம் இல்லே. மதுரைக்கு வருவதில் ஆட்சேபணே இல்லே. தெற்கு மாவட்டங்களில் வர வேண்டும். அதற்கு அதிகப் பொருத்தம் திருச்சிக்கு இருக்கிறது என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்லிய கருத்திற்கு ஆதரவாக என்னுடைய கருத்தையும் அதில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்போது கோர்ட்டுகளில் கூட்டம் குறைவாக இருக்கிறது. மாரடோரியம் என்ற கடன் நிவாரணச் சட்டம் வந்ததன் காரணமாக, கோர்ட் தாவாக்களில் பாதி குறைந்து வக்கீல் களுக்கும் வேலேயில்லே, ஜட்ஜ்களுக்கும் வேலே குறைவு என்ற நிலேமையைப் பார்க்கிறோம், ஆனல் பழைய கேஸ்கள் தீர்ந்த தாகத் தெரியவில்லே, ஐந்து வருஷம் ஏழு வருஷம் ஆகிய கேஸ்கள் எல்லாம் இன்னும் இழுத்துக்கொண்டே இருக்கின்றன. மாரடோரியம் காரணமாக கேஸ்கள் குறைந்திருந்தாலும், பழைய கேஸ்கள் தீராமல் இருக்கின்றன: Why this delay? என்று நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். குற்றம் செய்தவர்கள் வழக்குகள் தள்ளிப் போவதை விரும்புகிருர்கள். பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் தீரவில்லேயே என்று நினைக்கிருர்கள். "Ju tice delayed is Justice denied" என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஆகையால் 'டிலே' இல்லாமல் பெண்டிங்காக உள்ள கேஸ்களே துரிதப்படுத்த வேண்டும். அதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

வக்கீல்கள் வாங்கக்கூடிய பீஸ் உயர்வாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. கேஸ் முடிந்து decreed with costs என்று போடுகிறார்கள். ஸ்டாம்புக்கு எவ்வளவு, வக்கீலுக்கு எவ்வளவு என்று அரசாங்கத்தில் நிர்ணயிக்கிறார்கள். நிர்ணயிக்கப் பட்ட பீஸ்தான் அந்த வக்கீல் வாங்குகிறாரா என்றால், அதைப் போல நான்கு அல்லது மூன்று மடங்கு கூடுதலாகத்தான் வாங்கு கிறார்கள். அதற்கு ஒரு நிர்ணயம் இல்லை. நினைத்த மாதிரி வரம்பில்லாமல் வாங்குவதால், அதற்கு நியாயமான கட்டுப்பாடு வர வேண்டும். அரசு அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர் குறிப்பிட்டதைப் போல, Justice has become costly, ரொம்ப செலவு செய்துதான் வக்கீல் வைக்க வேண்டும், நீதியைப் பெற வேண்டுமென்ற நிலையிருப்பதை புலவர் புலமைப் பித்தன் அவர்கள் சொன்னார்கள். கொலை செய்யப்பட்டதால், நீதி தன் பக்கம் இருந்தும் பாதிக்கப் பட்டவர்கள் நியாயத்தைப் பெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. பணக்காரர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்து, நீதியைப் பெறுகிறார்கள். அதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண மக்களும் நீதியைப் பெறும் வகையில் அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Free legal aid என்று ஏழைகளுக்கு அரசாங்கம் உதவு கிறது. வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஒரு அம்சம் அது. ஆனாலும் அதற்கு வைத்திருக்கிற சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையாக இருக்கின்றன. ஏழைகள் சாதாரணமாக அதைப் பெறக்கூடிய நிலைமையில் இல்லை. அதைத் தளர்த்த வேண்டும்.

Some leniency should be there in handling the free legal aid aspect

லேபர் கோர்ட்டுகள் மதுரையில், மெட்ராசில், கோவையில் இருக்கின்றன, லேபர் கேஸ்களில் சம்பந்தப்படுபவர்கள் தொழிலாளிகள். அவர்கள் மெட்ராசுக்கும், மதுரைக்கும் கோவைக்கும் போக வேண்டியிருக்கிறது. ஏழைத் தொழி லாளர்கள் நெடுந்தூரம் சென்று இந்தக் கோர்ட்டுகளில் வழக்காட வேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த மூன்று இடங்களைத் தவிர்த்து இன்னும் நான்கு ஊர்களில் கடலூர், திருச்சி, வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் லேபர் கோர்ட் அமைக்கப் பட்டால், சாதாரணத் தொழிலாளி அவற்றிற்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

திறந்தவெளிச் சிறைச்சாலைகளை எக்ஸ்பெரிமெண்டலாக வைப்பதாகச் சொன்னார்கள். அப்படி தஞ்சையில் நடப்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். சிங்காநல்லூரில் நடப்பதாகக் குறிப்பில் பார்த்தேன். திறந்தவெளிச் சிறைச்சாலை என்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். இதைப் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் கொடுக்கப்படும் சாப்பாட்டின் தரம் உயர்த்தப்பட வேண்டும். சாப்பாட்டின் தரம் மட்டுமல்ல; குவாலிடி அண்டு குவான்டிடி quality and quantity இரண்டும் உயர்த்தப்பட வேண்டும். ஒரு கைதிக்கு இரண்டேகால் ரூபாய் அளவிற்கு போடுவதாக குறிப்பில் படித்தேன். அது மிகவும் குறைவு. அதை அதிகப்படுத்த வேண்டும். நல்ல சாதமாக கூடுதலாகக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். இங்கே பேசியவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தைப் போன்று சிறைச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறையாவது '' மாரல் எஜுகேஷன் என்று சொல்லப்படுகிற உபதேசங்களைச் சொல்வதற்கு ஏற்பாடு செய்தால், நலமாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்கிறேன்: அரசியல் கைதிகளையும் சாதாரண கைதிகளையும் ஒரே இடத்தில் சில சமயங்களில் போடுவது விரும்பத் தக்கதல்ல. இருவருக்கும் வெவ்வேறாக இடங்கள் அமைக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகளாக வருகிறவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருந்தாலும், போலீஸ் அதிகாரிகள் செக்ஷனைப் போடும்போது கிரிமினல் செக்ஷன்களைப் போட்டு, சாதாரண கைதியாக ஆக்குகிற நிலைமை நீண்டகாலமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து தி. மு. க. ஆட்சி வரையில் பார்த்தேன். இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்த நிலை மாறவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

கைதி என்றால், அடிமையைப்போல் நடத்துகிறார்கள். அந்தக் காலத்தில் அடிமைகள் எப்படி நடத்தப்பட்டார்களோ அந்த மனப்பான்மையுடன் இன்றைக்கு கைதிகள் நடத்தப்படுகிறார்கள். சிறைக்குச் செல்கிறவர்கள் அரசியல் கைதிகளாக இருந்தாலும் சரி, சாதாரண குற்றங்களுக்காகச் சிறை செல்பவர்களாக இருந்தாலும் சரி, எல்லோருமே அடிமைகளைப்போல்தான் நடத்தப்படுகிற சூழ் நிலையைப் பார்க்கிறோம். இது மிகவும் தவறான போக்கு. இந்தப் போக்கு கைவிடப்படவேண்டும்.

முன்பு கைதியாக இருந்தவர்கள் இப்போது அமைச்சர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை சிறைக்குப் போய் வந்தவர் கள். அவர் இன்றைக்கு அமைச்சராக இருக்கிறார். தொழி லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன்,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன்னவரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற கணக்கு சரிதானா என்று கேட்கிறேன். (சிரிப்பு)

திரு கே. எஸ். அப்துல் வகாப் : தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தாம் 13 தடவை சிறைக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். கைதிகள் எப்போதும் கைதிகளாகவே இருப்பதில்லை. இன்றைய தினம் கைதியாக இருப்பவர்கள் நாளைக்கு அமைச்சர்களாக வரக்கூடும். எனவே அவர்களை கண்ணியமான முறையில் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு கோ. சி. மணி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீதி, சிறைச்சாலை ஆகிய இரண்டு துறைகளின் கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீதித் துறையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லியதைவிட அதிகமாக நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. அவ்வளவு தெளிவாக அவர்கள் இங்கே எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் எனக்கு ஏற்புடைய கருத்துக்கள் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலையைப்பற்றி வழக்கமாக எல்லோரும் சொன்னதைத் தான் நானும் சொல்ல இருக்கிறேன் என்றாலும், குறிப்பாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு மகளிர் சிறைச்சாலைதான் இருக்கிறது. ஆண்களைவிட மகளிர் குற்றவாளிகள் குறைவு என்பது உண்மையாக இருக்கலாம். இருந்தாலும் மகளிருக்கு இருக்கும் ஒரே ஒரு மத்திய சிறைச்சாலை வேலூரிலே அமைந்திருக்கிறது. தமிழ் நாட்டின் கடைசியில் உள்ள பாளையங்கோட்டை அல்லது கன்னியாகுமரியில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெறும் ஒரு மகளிர் கைதியை வேலூருக்குக் கொண்டு வரவேண்டும் என்றால், குறைந்தது 2 இரவு ஒரு பகலாகும். சில சமயம் 2 இரவுகள் இரண்டு பகல்களும் ஆகும். எனவே இதன் காரணமாகப் போக்குவரத்தில் எவ்வளவோ சிரமங்கள், எவ்வளவோ சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் அனுசரித்து இரண்டாவது மகளிர் மத்திய சிறைச்சாலையை—இடைவெளியைக் கணக்கிட்டு—தமிழகத்தின் மையப் பகுதியில் அமைப்பதன் மூலம், தற்போது ஏற்படுகிற இடையூறுகளை, இடர்ப்பாடுகளைத் தவிர்க்க இயலும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு மாணிக்கம் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றித் தெளிவாகச் சொன்னாலும், ஒரு பிரச்சினை உண்மையிலேயே இதயத்தைத் தொட்டது. அது இன்றைய தினம் சிறைச்சாலையில் ஆயுள் தண்டனைபெற்று கைதிகளாய் இருப்பவர்களை விடுதலை செய்வது பற்றியதாகும். ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை அவர்கள் தண்டனைக்காலம் முடிந்த பிறகு விடுவிப்பதுபற்றிப் பரிசீலிக்க ஒரு குழு வைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிடம் பரிசீலனைக்கு வருவதற்கு முன்னால்

அவர்கள் குற்றம் செய்த இடத்திலும், பிறந்து வளர்ந்த இடத்திலும், உள்ள காவல் துறையினர் சிபாரிசு செய்யும்படி கேட்கப்படுகிறார்கள்.

எப்போதும் ஒரு சிபாரிசை ஒரு துறை செய்கிறது என்றால், அது தன்மீது பழி வந்துவிடாமல், தன்மீது பாதகம் வந்துவிடாமல், தன்மீது குற்றம் வந்துவிடாமல் சதவீதத்தை அதிகரித்து வைத்து தான் சிபாரிசு செய்யுமே தவிர, அப்படியே ஒன்றைச் சிபாரிசு செய்துவிடாது. காவல் துறையினர் சிபாரிசு செய்து ஒரு கைதி வெளியெ வரலாம் என்று வந்து விட்டால், ஏற்கெனவே இருக்கிற பாதிப்புக்கு உள்ளானவனும் வெளியே வந்தவனும் சேர்ந்து கலகம் விளைவித்து மீண்டும் அங்கே ஒரு கொலை நிகழ்ந்துவிட்டால், பிறகு மேலே இருப்பவர்கள், ''நீ ஏன் அவனை விடுதலை செய்யலாம் என்று எழுதினாய்?'' என்று கேட்டால், சங்கடமாகப் போய்விடுமே என்று உடனே வேண்டாம் என்று எழுதிவிடுவார்கள், அல்லது மிகவும் காலதாமதப்படுத்தி எழுதி அனுப்புவார்கள். மிகவும் செல்வாக்குப் படைத்தவர்கள், பணக்காரர்கள் அல்லது போலீஸ் இலாக்காவில் நல்ல தொடர்பு உள்ளவர்கள், காவல் துறையினரோடு நெருங்கிப் பழகக்கூடியவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் சிபாரிசு செய்தால், ஒன்றிரண்டு பேர்களை விடுவிப்பது தான் அரசாங்கத்தின் வழக்கம். அதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளைப் பொறுத்தவரையில், 9½ ஆண்டுக் காலம் கழித்து அவர்கள் விடுதலை பற்றிப் பரிசீலிக்கலாம் என்றிருக்கிறது. மரண தண்டனை பெற்ற பிறகு, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டிருந்தால், 14 வருஷம் கழித்துப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறது. 14 வருஷம் கழித்துப் பரிசீலிக்கலாம் என்றால், அந்தக் கைதி எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்தச் சிறை அதிகாரிகள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அந்த பரிசீலனைக் குழு ஆகியோரின் பரிந்துரையைப் பெற்று விடுதலை செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். வேண்டுமானால் ஒரு வாதத்திற்குச் சொல்கிறேன். புள்ளிவிவரத்தை வேண்டுமானால் பாருங்கள். காவல் துறையினரிடம் ஒரு கைதியை விடுதலை செய்யலமா என்று கேட்டு அனுப்பி, எத்தனை நேர்வுகளில் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள். 100 கேஸ்களை காவல் துறைக்கு அனுப்பியிருந்தால், எத்தனை கேஸ்களில் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று பாருங்கள். எத்தனை பேருக்கு அவர்கள் மறுத்திருக்கிறார்கள்? மறுத்தவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்குமே தவிர, சிபாரிசு செய்தவர்களின் எண்ணிக்கை மொத்தத்திலே ஒன்று இரண்டுதான் இருக்கும். நான் சொன்ன பொருளாதர வசதி, செல்வாக்கு, குடும்ப மேம்பாட்டுத் தரம் ஆகியவை மிக்க குடும்பங்களிலிருந்து ஒருவர் கொலை செய்திருந்தால் அவருக்குத் தான் இப்படிப்பட்ட சிபாரிசு வாய்ப்பு கிடைக்கும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், யாருக்கும் சிபாரிசு செய்வதில்லை. எனவே அருள் கூர்ந்து இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள்

இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அமைச்சரவர்கள் அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்டவர். அதற்கு இடமளிக்காதவர். அரசியல் கட்சியில் இடம் பெற்றிருந்தாலும், அவருக்கு இருக்கிற முதலிடம் நீதித் துறையில் நேர்மையாகப் பணியாற்றி நல்ல பெயர் எடுத்தவர். அப்படிப்பட்டவர் இன்றைக்கு சட்டத் துறையின் அமைச்சராக வந்திருக்கிறார். அவரிடம் சொல்லுவது அவர் பரிந்துரைப்பார் என்ற காரணத்தால்தான், அவர் இதனைச் செய்வார் என்ற நம்பிக்கையால் தான் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் கைதிகளைப் பொறுத்தவரையில், இரண்டு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று 'ஏ' வகுப்பு. மற்றது 'பி'—வகுப்பு. ஆனால் இவை இரண்டுமில்லாமல் மாஜிஸ்ட்ரேட்டுகள் ஸ்பெஷல் வகுப்பு என்று எழுதுகிறார்கள். இது எனக்குப் புரியவில்லை. 2, 3 மாதத்திற்கு முன்னால்கூட வழக்கு ஒன்றில் கோர்ட்டுக்குச் செல்லும் போது, எங்கள் வழக்கறிஞர், என்னைப்பற்றிச் சொல்லும்போது "இவர் ஒரு எம்.எல்.சி இவருக்கு ஸ்பெஷல் வகுப்பு கொடுக்க வேண்டும்" என்று கேட்டபோது, அங்கே உள்ள மாஜிஸ்ட்டிரேட் ஸ்பெஷல் வகுப்பு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார். இது வழக்கத்தில் இருக்கிறது என்று நினைக்கிறேன். எப்படியோ அவர்கள் ஸ்பெஷல் கிளாஸ் என்று எழுதுகிறார்கள். இந்த ஸ்பெஷல் கிளாசுக்கும் ஏ—கிளாசுக்கும் ஏதாவது வேறுபாடு மாறுபாடு இருக்கிறதா என்றால், இல்லை.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் சிறைச்சாலையில் கொடுக்கப்படுகிற உணவின் அளவு, அமைப்பு ஆகியவைபற்றிக் குறிப்பிடாமல் விலையைக் காட்டும் புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார்கள். அதிலும் ஏ—பிரிவில் 2 வகை — பி—பிரிவில் 2 வகை — சைவம் அசைவம் என்று இரண்டு வகை இருக்கிறது. வேலை செய்யும் கைதிகள், வேலை செய்யாத கைதிகள் என்று 2 பிரிவுகள் இருக்கின்றன. இவைகளை எதற்காக வைத்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் படுகிற கஷ்டத்தை அனுசரித்து, அவர்களுக்கு உணவில் கொஞ்சம் அதிமான பங்கு கிடைக்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். அடுத்து, சத்து உணவு, சத்து இல்லாத உணவு என்று இருக்கிறது. சத்துணவு, சத்து இல்லாத உணவு என்று இருக்கிறதா என்றால், இல்லை. சத்துணவு என்று எழுதியிருப்பது எதைக் குறிக்கிறது என்றால், யாராவது நோய்வாய்ப்பட்டால், உடல் நலிவுற்றால், அல்லது ஒருவரின் எடை குறைந்தால், அந்த எடையைக் கூட்டுவதற்காக அவர்களுக்கு நல்ல புஷ்டியான ஆகாரமாக சத்துணவு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒரு கைதி இத்தனை நாளைக்கு முட்டை, பால், இறைச்சி என்று காலக் கெடு நிர்ணயித்து, மருத்துவர்

சர்ட்டிபிகேட் பேரில் வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். இது நியாயம். ஆனால் சிறைச்சாலையில்கூட சிபாரிசு மேலோங்கி இருக்கிறது. கைதிகளுக்கு இடையேகூட சிபாரிசுகள் உண்டு. அதிகாரிகளுக்கு வேலை செய்பவர்கள், மருத்துவ இலாக்கா அதிகாரிக்கு வேலை செய்பவர்கள். தொடர்புள்ளவர்கள் ஆகியோர் இந்த வசதியைப் பெறுகிறார்கள். திடகாத்திரமாக இருக்கிறார்களா இல்லையா என்றுகூடப் பார்க்காமல் திடகாத்திரர்களுக்குக்கூட இந்த அடிப்படையில் சத்து உணவு வழங்கப்படுகிறது. அதைக் கூர்ந்து கவனிக்கிற வகையில் திட்டமோ அதற்காகத் தனியாக மேல் அதிகாரியோ யாரும் இல்லை. வேலை செய்கிற கைதிகள்—சைவருக்கு ரூ. 5·65. வேலை செய்யாத கைதிக்கு—சைவருக்கு ரூ. 5·40—அதாவது இரண்டு பேருக்கு வித்தியாசம் 25 பைசா. இந்த 25 பைசா வித்தியாசத்தில் என்ன வாரி வழங்கிட முடியும் என்று இந்த அரசு கருதுகிறது என்று எனக்குப் புரியவில்லை. 25 பைசா வித்தியாசத்தில் வேலை செய்பவர்களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் என்ன வித்தியாசத்தை உணவில் செய்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. அடுத்து, சைவம் அசைவம் என்று இருக்கிறது. வேலை செய்யும் கைதிகள் அசைவராக இருந்தால், ரூ. 5·35. வேலை செய்யும் கைதி சைவராக இருந்தால், ரூ. 5·65. என்னைக் கேட்டால், சைவ உணவை விட அசைவ உணவுதான் கொஞ்சம் கூடுதலான விலையில் இருக்கும்.

<u>மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் :</u> இந்த விவாதம் முடிகிறவரை அவைக் கூட்டம் நீடிக்கப்படுகிறது,

[பிற்பகல் 1-30]

<u>திரு. கோ. சி. மணி:</u> சைவ உணவைவிட, அசைவ உணவுதான் விலை அதிகமாக இருக்கும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், அதுதான் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. சிறைச்சாலையிலே அனுமதித்திருக்கின்ற சைவ உணவின் விலையைவிட அசைவ உணவின் விலை குறைவாக இருக்கிறது. அசைவ உணவு என்பது முட்டை கொடுப்பது, இறைச்சி கொடுப்பது, வாரத்தில் ஒரு நாள் சத்துணவு கொடுப்பது. பி கிளாசுக்கு அது பொருத்தமானதாகத் தெரியவில்லை. அவர்கள் இவைகளைப் பெறுவதாகத் தெரியவில்லை. இப்படி வகைகள் பிரித்துக் கொடுப்பது எந்த அடிப்படையிலே வருகிறது? இது உள்ளபடியே அதிகச் செலவு செய்யப்படுகிறது என்று கணக்குக் காட்டுவதற்காகச் செய்யப்படுகிறது என்று நினைக்கிறேன். அந்தக் கணக்குகள் எல்லாம் சரியாக எடுக்கப் படுகின்றனவா? எந்தப் புள்ளிவிவரத்தின் அடிப்படையில் சைவம் ரூ. 5.65, அசைவம் ரூ. 5.35 என்றெல்லாம் விலை நிர்ணயித்திருக்கிறார்கள்? இதற்கான விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, எடுத்துச் சொல்வார்கள் என்று நம்புகிறேன். இது குறித்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அசைவம், சைவம் என்ற இரண்டுக்கும்

இருக்கின்ற வேறுபாடு அதிகமாக இல்லை. விலை மட்டும் அசைவத்திற்குக் குறைவாக இருக்கிறது. ஏட்டிலே ஒரு பிரிவு படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காகப் போடப்பட்டிருக்கிறது என்பதுதான் என் எண்ணம். நடைமுறையில் அசைவ, சைவ உணவுகளுக்கு சரியான முறையில் விலைகள் நிர்ணயிக்கவில்லை. நடைமுறைப்படுத்துவது சரியாக இருக்குமானால், இந்த 25 நயா பைசா, 30 நயா பைசா விலை வித்தியாசம் காட்டியிருப்பது சரியல்ல என்றுதான் சொல்ல வேண்டும். எதையோ குறைத்து, எதையோ கழித்து, எந்த ஒரு கணக்கையோ போட்டு, சிறைச் சாலையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அரசு பரிசீலித்தும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறையில் ஆயுட் கைதிகள் 3 ஆண்டு தண்டனை பெற்றவர்கள் பரோலில் வருவதற்கு ரொம்ப கஷ்டப்படுகின்றார்கள். அப்படி வெளியில் வருவதற்கு அவர்கள் வைத்திருக்கின்ற சட்ட திட்டங்கள் மிகக் கடுமையானவையாக இருக்கின்றன. சிறைச் சாலையிலே இருக்கின்ற கைதிகள் அதற்கு வேண்டிய மனுக்களை, பத்திரங்களை எல்லாம் சட்டப்படி என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் எழுதிக் கொடுக்கின்றார்கள். அப்படியெல்லாம் செய்த பிறகும்கூட, அவர்கள் பரோலில் வருவது என்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கின்றது. அப்படி பரோலில் வருவதற்கு என்று சட்டங்கள் இருக்கின்றன. அதன்படி அவர்கள் மனு எழுதி அனுப்பி, போலீஸ் அதிகாரிகளுக்கு அதற்கான சான்றிதழ் களைக் கொடுத்தும், அதற்குத் தக்க காரணங்களையெல்லாம் அறுதியிட்டுக் கூறியும், அதற்குத் தகுந்த அத்தாட்சிகளையெல்லாம் வழங்கியும்கூட, அவர்கள் பரோலில் வருவது என்பது மிக கடினமானதாக இருக்கிறது. அதிலே எவ்வளவு காரியங்கள் செய்ய முடியாதோ, அவைகளைச் செய்து சட்டப்படி கொடுத் தாலும்கூட, பரோல் பெறுவது மிகக் கடினமானதாக இருக்கின்றது. பரோலில் வருபவர்கள் யார் யார் என்று கணக்கெடுத்துப் பார்த்தால், அரசியல் செல்வாக்கு உடையவர்கள், பணம் உள்ளவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் அடிக்கடி பரோலில் வருகின்றார்கள். விதிகளில் பல தரப்பட்ட தடைகள் இருக்கின்றன. இருந்தாலும், அவர்கள் அடிக்கடி பரோலில் வருகின்றார்கள். ஆண்டுக்கு ஒரு முறை, 6 மாதத்திற்கு ஒரு முறை வரலாம். சிலநேரங்களில் விதிமுறைகள் இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட தகுதி படைத்தவர்கள்கூட வரமுடியாமல் சிறையில் இருக்கின்றார் கள். அவசரக் காரணங்களுக்காகக்கூட அவர்கள் பரோலில் வர முடிவதில்லை. அது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அதிகாரிகள் வேகமாகச் செயல்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகாரிகளிடத்தில் மனு கொடுத்தால், அவர்கள் அதைக் காலம் கழித்துத்தான் அனுப்புகிறார்கள். சில பேருக்கு அனுப்பு

கிறார்கள். சில பேருக்கு அனுப்புவதில்லை. அதுவும் ரொம்ப காலம் கழித்துத்தான் அனுப்புகிறார்கள். இங்கு அனுப்பாமல் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். காலம் கழித்து அனுப்புகிறார்கள். ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் செய்துவிடுகின்றார்கள். இப்படிச் செய்வதால் வாய்ப்பு வசதி பெற்றவர்களுக்குக்கூட, பரோல் கிடைப்பது காலம் கடத்தப் படுகிறது. இது எல்லாம் எந்த சர்க்கார் காலத்தில் என்பது பற்றி, கேட்க வேண்டாம். ஒரு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சர்க்கார் சொல்கின்றபோது, சிறை யிலே அந்தமாதிரிப் பாகுபாடுகள் இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கே இந்தமாதிரி இருக்கின்ற பாகுபாடு, பொருளாதார காரணங்களினால், கைதிகள், குற்றங்கள் செய்து காவல் துறையினால் கைதிகளாக ஆக்கப்பட்டவர்கள், தண்டனை பெற்றவர்கள், வெளியே வரும்போது, அவர்களிடம் எந்தவிதமான சீர்திருத்தத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்களை நாம் சந்திக்கின்ற சூழ்நிலை வரும்போது, அவர்கள் குற்றங்களுக்குச் சொந்தக்காரர்களாகத்தான் வெளியே வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறைகளில் உள்ள சங்கடங்கள் எனக்கும் தெரியும். இத்தனை வருடங்கள் கழிந்துவிட்டால், அதற்குப் பிறகு கைதிகள் பரோலில் வரலாம் என்று சட்ட திட்டங்கள் இருந்தால், அவர்கள் தகுதி, நன்னடத்தை அறிந்து சாமான்ய குடும்பத்தைச் சேர்ந்த அந்தக் கைதிகளை பரோலில் விட்டு அவர்கள் குடும்பத்தினரைப் பார்த்துப் பேசுவதற்கு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சிறை சீர்திருத்தக் குழுவில் போலீஸ் இலாக்கா வினர் அவசியம் தானா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் கள் தானே சிறைச்சாலைக்கு அனுப்புகிறார்கள். குற்றம் செய்தோ, குற்றம் செய்யாமலோ, நிரூபிக்கப்பட்டோ, நிருபிக்கப்படாமலோ, நிரபராதியோ, குற்றவாளியோ, நீதி மன்றத்தில் வழக்காடி, நீதிபதி தீர்ப்பளித்து அனுப்புகிறார்கள். காவல் துறையினரால் அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். சிறைக்கு அனுப்பு கின்ற அவர்களே, அந்தக் குழுவில் இருந்து சீர்திருத்தம் செய் வதற்கு என்ன இருக்கின்றது? காவல் துறையில் இருப்பவர்கள், வெளியில் பார்த்துக்கொள்ளலாம். ஜெயிலிலே ஜெயிலர்கள் இருக்கின்றார்கள். அஸிஸ்டெண்ட் சூப்பிரண்ட்டென்டென்ட் இருக்கின்றார், டெபுடி சூப்பிரண்ட்டென்டென்ட், சூப்பிரண்ட் டென்டென்ட் என்று இவ்வளவு பேர் இருக்கின்றார்கள். மேலும் மத்திய சிறைச்சாலையிலேயும் ஒரு தனிக் குழு இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் குழுவிற்குத் தலைமை வகிக் கின்றார். இவ்வளவு பேர் அங்கே இருக்கும்போது, போலீஸ் அதிகாரிகள் அங்கே போய் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அங்கு சென்று என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார் கள்? அவர்களுக்கு என்ன தொடர்பு இருக்கிறது? கோர்ட்டுக்குக் கொண்டு வந்து வழக்கு நடத்தியபின், கைதிகளைச் சிறைக்கு அனுப்புவதோடு சரி. கைதிகளுக்கு இருக்கின்ற சொந்தங்கூட

காவல் துறையினருக்கு இல்லை. அவர்கள் கைதிகளைக் கொண்டு வந்து சிறைச்சாலைக்குள்ளே விடவேண்டியது. சிறை அதிகாரிகள் கைதியைப் பெற்றுக்கொண்டேன் என்பதற்கு அக்னலெட்ஜ்மெண்ட் கொடுக்க வேண்டும். கைதிகளைப் போலீஸ் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட பிறகு, அவர்கள் கைதிகளுக்கு இந்த இந்த மச்சம் இருக்கின்றதா, அவன் தானா, அவர்களின் மார்பு அளவு இத்தனை அகலம் இருக்கிறதா, அவர்கள் உயரம் சரியாக இருக்கின்றதா என்பதையெல்லாம் கணக்கெடுத்து எழுதிக்கொள்வார்கள். போலீஸ் அதிகாரிகள் அதைப் பெற்றுக் கொண்டு போக வேண்டும். அவர்கள் வேலையை ஒப்படைப்பதோடு சரி. ஒப்படைத்த பிறகு அக்னலெட்ஜ்மெண்ட் பெற்றுக் கொள்கின்றார்கள். அதற்குப் பிறகு, சிறை சீர்திருத்தத்தைப்பற்றி இவர்களுக்கு என்ன இருக்கின்றது? யார் இவர்களிடத்தில் வந்து குறைகளைச் சொல்லப்போகின்றார்கள்? எதற்காக காவல் துறையினர் இதிலே இடம் பெற வேண்டும்? தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக சிறைச்சாலையில் பல ஆண்டு காலம் அரசியல் கைதிகளாக இருக்கின்றவர்கள் அங்கு இருக்கின்றார்கள். அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் பரவாயில்லை. அவர்களை இந்தக் குழுவிலே முக்கியமானவராக வைக்கலாம். இந்தக்குழு ஒரு சிறந்த குழுவாக இயங்கச் செய்ய வேண்டும். இதற்குத் தேவையான திட்டங்களை, சீர்திருத்தங்களைச் செய்வது என்று அரசு கருதினால், அப்படிப்பட்டவர்களை வைத்துச் செய்வதுதான் சாலச் சிறந்தது என்று இந்த அரசு கருத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறைச்சாலைகளில் தண்ணீர் வசதி செய்து தரவேண்டும். சிறைச்சாலையில் கைதிகளுக்கு நோய் நொடிகள் வருவதற்குக் காரணம் இருக்கிறது. எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. தந்தை பெரியார் அவர்கள் சட்ட எரிப்புப் போராட்டத்தைத் தொடங்கிய நேரத்தில், திருச்சி மத்திய சிறையிலே ரொம்ப பேர்கள் இறந்துவிட்டார்கள். அதற்குக் காரணம் காலரா நோய் அங்கு வந்ததுதான். அங்கு காலரா நோய் வந்ததற்குக் காரணம், தண்ணீர் வசதி இல்லாததுதான் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகள் 4 ஆண்டுகள்கூட, 5 டம்ளர் 10 டம்ளர் என்று எண்ணிக்கையில் தண்ணீர் வாங்கிக் குடித்துக் கொண்டிருந்திருக்கின்றார்கள். பி வகுப்புக் கைதிகள் பல மாதங்களாகக் குளிக்காமல் இருந்திருக்கின்றார்கள். திருச்சி சிறைச்சாலையிலே தண்ணீருக்கே தட்டுப்பாடு இருக்கின்றது. குடிநீருக்கும் குளிப்பதற்கும் வசதியில்லை. அந்த வசதிகளை உண்டாக்கினால், நோய்வாய்ப் படுவதை, சிக்கு வருவதைத் தடுக்கலாம், குறைக்கலாம். நமது மேலவைத் தலைவர் அவர்கள் மூலமாக இதைச் செய்யவேண்டும் என்று நான் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

போதிய கழிவறைகள் சிறைச்சாலைகளில் இல்லை. மலஜலம் கழிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடம் சிறைச்சாலைகளில் போதிய அளவு இல்லை. அங்கு 6, 7 அறைகள்தான் இருக்கின்றன. ஒரு குற்றவாளியாகப் போய்விட்டால், அவன் மனிதனே அல்ல என்று கருதப்படுகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கின்றது. அந்த 6,7 கழிவறைகளைத்தான் அவர்கள் உபயோகித்துக் கொள்ள வேண்டும். சாப்பிட்ட பிறகு அவர்களுக்கு ஒரு அரை மணி நேரம்தான் ஓய்வு கிடைக்கின்றது. வேலை முடிந்த பிறகு, அவர்களுக்குக் கிடைக்கின்ற நேரமும் மிகக் குறைவாக இருக்கின்றது. 6 மணிக்கு மூடவேண்டிய சிறைச்சாலையை ஐந்தே முக்காலுக்கே மூடிவிடுகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரத்திற்குள் எல்லாக் கடன்களையும் முடித்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஓய்வு நேரம் முக்கால் மணிநேரம் தான் இருக்கும்.

(பிற்பகல் 1-40)

நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்கு திருச்சி சிறைச்சாலையிலே ஏற்பட்ட அனுபவத்தை வைத்து, சேலம் சிறைச்சாலையிலே ஏற்பட்ட அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். மற்ற சிறைகளுக்குப் போகவில்லை. அங்கே இப்படி இருக்கிறது. குடி தண்ணீர் வசதி, குளிக்க வசதி, அதிகமான கழிவறைகள் வசதி, அவைகளை சுத்தப்படுத்த தேவையான நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொண்டால், நோய் குறைந்துவிடும்; வைத்தியச் செலவு குறைந்துவிடுமென்று நிச்சயமாகச் சொல்வேன். ஒரு விஷயம், நான் கேட்டது உண்மையாக இருக்குமென்று கருதுகிறேன். நான் 3, 4, மாதங்கள் சிறையில் இருந்தபோது, சாதாரண மருந்து வாங்கிச் சாப்பிட்டேன். வெளியிலே கிடைக்கும் மாத்திரைகள்தான். மாத்திரைகளில் இத்தனை தேதி வரை வீரியம் இருக்குமென்று எழுதி வைத்திருப்பார்கள். அந்தத் தேதி கழிந்துதான் அந்த மாத்திரைகள் அங்கே வருகின்றன என்று நினைக்கிறேன். வியாதிக்கும், மாத்திரைக்கும் சம்பந்தமில்லாத நிலைமை இருக்கிறது. எந்த வியாதியைச் சொன்னாலும், ஒரு பாட்டிலிலிருந்தே மருந்து கொடுக்கிறார்கள். இப்போதுகூட நடக்கிறது. அப்போது நடந்ததுதான், இப்போதும் நடக்கிறது. வியாதி என்று போனால், எல்லோரையும் உட்காரச் சொல்வார்கள். ஒரு கைதி மருந்து பாட்டிலைக் கொண்டு வருவார். வரிசையாக எல்லோரையும் உட்காரச் சொல்லி, வாயைத் திறக்கச் சொல்லி, வரிசையாக ஒரு கைதி ஊற்றிக்கொண்டே போவான். டம்ளரில் ஊற்றிக்கூடக் கொடுக்க மாட்டார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: இன்னுமா அப்படி இருக்கிறது?

<u>திரு. கோ. சி. மணி</u>: இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்புகூட அந்த நடைமுறைதான். 'பி' கிளாசில் அப்படி இருக்கிறது. 'ஏ' கிளாசில் இருப்பவர்களுக்கு நன்றாக நடக்கிறது.

வருகிறார்கள், பார்க்கிறார்கள். 'பி' வகுப்பில்தான் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அறிக்கையிலே புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். மாநிலத்திலேயுள்ள 8 மைய சிறைச்சாலைகளிலும் 12,121 கைதிகள் இருக்கலாமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருமுறை திருச்சி மத்திய சிறைச்சாலையிலே 8,000 பேர்கள் இருந்தார்கள். எமர்ஜென்சி நேரத்தில் மிசாக் கைதிகள், அதற்குப் பிறகு செக்ஷன் 151 போன்ற பல செக்ஷன்களின்கீழ் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று வருகிற கைதிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாளைக்கு 8,000 பேர்கள் இருந்தார்கள். இந்த மாநிலத்திலுள்ள அத்தனை சிறைச்சாலைகளிலும் 12 ஆயிரத்து சொச்சம் கைதிகள் இருக்கலாம். ஆனால் திருச்சி மைய சிறைச்சாலையிலேயே 8,000 பேர்கள் இருந்திருக்கிறார்கள். நான் சொல்வது பொய் என்றால், அவர்கள் எழுதியுள்ள செலவுக் கணக்கை வைத்துத் தெரிந்து கொள்ளலாம். செலவைக் குறைத்து எழுத முடியாது. அதைக் குறைக்க முடியாது. நான் இப்பொழுதும் சொல்கிறேன். எந்தத் தேதியில் வேண்டுமானாலும் பார்க்கலாம். இப்படிப்பட்ட நேரங்களில் தவிர்க்க முடியாதது தான். அதற்காக சிறைச்சாலையை மாற்றியமைக்க முடியாது. மற்றவற்றை மாற்றி அமைக்காவிட்டாலும், இட வசதியை அளிக்கலாம். உணவுப் பொருள்களைச் சேமித்து வையுங்கள், மருந்துகளை வாங்கி வையுங்கள் என்று சொல்லவில்லை. கழிவறை வசதி, குளிக்க வசதி, குடி தண்ணீர் வசதி, உறங்க வசதி இவைகளைச் செய்துவிட்டால், சிறைச்சாலைகள் சிறந்தவைகளாக இருக்குமென்று கருதுகிறேன். அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். மைய சிறைச்சாலைகளைவிட கிளை சிறைச்சாலைகள் மிகவும் நாதியற்றுக்கிடக்கின்றன. ஒரு மாதத்திற்கு மேல் தண்டனை இருந்தால்தான், மைய சிறைச்சாலைக்கு அனுப்புவார்கள். 15 நாட்கள் தண்டனை என்றால், கிளை சிறைச்சாலையில்தான் இருக்க வேண்டும். ஒரு வழக்கில் ஜாமீன் பெற்று வெளியே வரும் வரை கிளைச் சிறைச்சாலையில் வைக்கிறார்கள். அந்த சிறைச்சாலைகளின் நிலைமையைப் பார்க்கும்போது ஜாமீனும் கேட்காமல், ரிமாண்டிலும் இல்லாமல் வழக்கை ஒத்துக்கொண்டு, கொடுத்த தண்டனையை வாங்கிக்கொண்டு போகலாமா என்ற நிலை ஏற்படும். சப்-ஜெயிலில் இருப்பதே அவர்கள் கொடுக்கிற தண்டனையைவிடக் கடுமையானதாக இருக்கும். சப்-ஜெயிலைப் பார்த்தால், தெரியும். ஒரு அதிகாரி வருகிறார் என்றால், என்னென்ன அந்த சிறைச்சாலையில் இருக்க வேண்டுமோ அவை அன்று மாத்திரம் இருக்கும். இன்ஸ்பெக்ஷன் வரும்போது இருக்கும். இதெல்லாம்கூட ஜெயிலில் உண்டா என்று என்னைத் தோன்றும். பிளீச்சிங் பவுடர் போடுவார்கள், கூட்டுவார்கள், எல்லாம் செய்வார்கள். இப்படிப்பட்ட வசதிகளும் சிறைச்சாலைகளில் உண்டா என்று நினைக்கத் தோன்றும்.

இன்ஸ்பெக்ஷன் அதாரிட்டி வரும்போது, அவைகள் உண்டு என்று தெரிந்துகொள்ளலாம். மற்ற நாட்களில் அவைகளைப் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. சோற்றை ராத்திரி சமைத்து அடுத்த நாள் மத்தியானம் போடும் சூழ்நிலை தினமும் இருக்கிறது. பழைய சோறு நல்லது. சாப்பிடுவதில் தப்பே கிடையாது. அங்கே பக்குவமாக வைக்கமாட்டார்கள். உலகத்திலேயுள்ள ஈ பூராவும் அங்கே இருக்கும். ஈ மொய்த்த சோறு தின்ன முடியாது. அதை மூட துணி இருக்கிறது; அதைப் போட்டு மூட வேண்டும். கூடு மாதிரி கம்பி போட்ட மூடி இருக்கிறது. எல்லாம் ஸ்டாக் ரெஜிஸ்டரில் இருக்கிறது. ஆனால் சோறு மூடப்பட்டு வருகிறதா என்றால் வரவில்லை. இப்படிப்பட்ட சின்ன விஷயங்களையும் இங்கே சொன்னால்தான், நடக்கும் என்று நம்பிச் சொல்லுகிறோம். இதனால் பெரும் தீங்கு ஏற்படுகிறது. குறை சிறிதென்றாலும், தீங்கு பெரிது. அதனால்தான் இந்த அவையிலே சொல்கிறேன் என்று கூறி, நேரம் கடந்துவிட்டதென்பதால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR : Hon. Deputy Chairman, Sir, I must first express my whole-hearted thanks to all the speakers who have participated in the discussion, particularly Thiruvalargal Thangapandian, Swaminathan, Manickam, Thirumathi Mandakini Krishnamurthi, Thiruvalargal D'Monte, Abdul Wahab, Pulamaipithan and K. S. Mani. It is already 12 minutes to two and I will try to cover as much of the ground as possible.

By and large, Thiruvalargal Thangapandian, Manickam and particularly K. S. Mani made a very fervent appeal about the need for reforming the unsatisfactory conditions in the jails, from their personal experience as well as from their personal observation. It is unnecessary for me to deal with every aspect of it. Now the Jail Reforms Commission has started its sittings and I would appeal to every Member of this House particularly those who have participated in this day's debate, to give their evidence so that it may have the official imprimatur as it were for its consideration and for the consideration of the Government, for the purpose of implementing the reforms so fervently desired by the hon. Members. I had some opportunity of visiting, both in 1952-53 and in later years, Amarar Anna in jails. I know what

(பிற்பகல் 1·50.)

amount of waiting I had to do at the Central Jail at Vellore. Even as a lawyer, as his lawyer, as a lawyer of his choice, I myself had to do at least 2 or 3 or 4 hours' waiting for getting an interview

and talking to him for about 2 to 5 minutes. Sometimes, I used to stand in the hot sun right under the trees even. That was my experience and I can very well enter into the spirit of what I call anguish and sympathy for the hon. Members who have expressed their difficulties in interviewing the under-trial prisoners or even the condemned prisoners and the other difficulties which they expressed in regard to the facilities for interviews.

There are só many aspects of the jail administration like dietary expenses, lifers and the difficulties in getting parole. Then there are the other aspects like insanitary conditions, want of bathing facilities, want of drinking water facilities, want of even sleeping accommodation and the insanitary conditions where bugs rule supreme in the lodging rooms. All these aspects will certainly be looked into by this Government with a great sense of humanity and reformation. It may be remembered that these things have not come into existence just nine months back when this Government assumed charge. I think that some of these very unsatisfactory conditions to which the hon. Members have adverted are the legacies of the barbaric relics of the colonial and imperial past where jail life was equated with punishment and penal punishment at that. I apppreciate the viewpoint expressed by the hon. Member Thiru D' Monte that it must be looked at from the standpoint of reformatory zeal and not from the penal standpoint. The modern approach to criminology and the modern approach to punishment, from the standpoint of penologists, sociologists and reformers is to reform the criminal and rehabilitate him as much as possible so that he may be put back into his normal avocation and back into the community at large. It will be the endeavour of this Government to devise such ways and means as to rehabilitate the prisoner back into a normal citizen so that he may discharge his functions as an ordinary normal citizen with a sense of absolute self-respect in the community in which he lives.

Regarding the administration of justice, I am beholden to the hon. Member Thiru G. Swaminathan for having so picturesquely and so poignantly brought out the infirmities and the defects that are discovered in the free intercourse, the free social intercourse of the Judges moving among the service organisations and the members of the public. As he put it beautifully, they must be heard and not seen anywhere else except in

Courts. But, unfortunately, the tendency has gone so much and the tendency has grown up so much that people think that they need not now live in ivory towers and that they must move with the ordinary people in almost every evening function. The hon. Members Thiru Dikshidar and Thiru Manickam and remarkably Thiru G. Swaminathan have brought out the evils of what is called the approachability of these judges who mix so freely with the members of the public. I may tell you that justice not only must be done but must appear to be done. The Judge should not be seen to mix with any litigant or a friend of any litigant or with any person who is likely to have anything to do with a litigant. He must keep his judicial virtue absolutely pure and unsullied. He must have his reputation so greatly enhanced as to make his name a by-word for integrity. This should normally be the norm and standard that a Judge must follow and must practise. From this standpoint, the stand of Thiru Swaminathan is that there has been a distinct fall and he has given a number of instances about the expression of views in the manner in which he has stated and I would like to take out copies of the remraks and send them to the Union Ministers for Home as well as for Law and Justice so that a Code of Conduct and Ethics for Judges could be evolved.

Chief Justice Beg of the Supreme Court has delivered a judgement in connection with the contempt proceedings against the editor-in-Chief of the Indian Express for two articles published in the paper on December 15 and December 21, 1977 and the said judgement has been reported in "The Hindu" of 27th February 1978. In the course of that judgement, Justice Beg has laid, emphasis on the need for evolving a Code of Judicial Ethics. It is stated in column 1 of "The Hindu' 'Judges of the Supreme Court, Mr. Justice Beg said, were not even aware of the confidential letter sent by him as Chief Justice of India to Chief Justices of the various High Courts suggesting *inter alia* a meeting to draft a code of ethics themselves or through a committee of Chief Justices so as to prevent 'possible lapses from the path of rectitude and propriety on the part of judges.' In another place, in column 2 of "The Hindu," it is stated thus:

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 மார்ச் 22

"Mr. Justice Beg said: 'Neither our Constitution nor our law could conceivably be infringed' if judges were to meet to devise means to prevent situations arising in which an accusing finger could be raised against the conduct of a judge whether inside or outside the court. Such code couldonly enhance their independence and prestige."

Therefore Thiru G. Swaminathan and the other hon. Members of this House struck a correct note, right note along with the Chief Justice Mr. Beg on the need to frame a code of Judicial Ethics for Judges and the need has been very remarkably and eloquently brought out by speakers like Thiru Swaminathan, Thiru Dikshidar and others. I would like to assure this House that some of the speeches of the hon. Members today will be duly forwarded to the respective Ministries of the Government of India for proper consideration.

Regarding the arrears in Courts and the suggestion for hvaing more Courts, I can tell you this much. As Chief Justice Khanna, in one of his articles in the "Illustrated Weekly of India" has stated, mere increase in the number of Judges will not result in the dissolution of the arrears of cases

(பிற்பகல் 2-00)

Every Judge must bend his energies, must devote himself and must think that he is rendering dedicated public service, in adding an extraordinary amount of personal work and imparting zeal to the judicial work. Unless one does it, it will not be possible to dissolve these arrears of work. He must feel that he is not merely doing judicial service but he is doing dedicated public judicial service. It is with that zeal, with that momentum and with that personal pattern that he must do the work. Until it is done, I do not think that it will be possible for any good amount of progress to be made in the dissolution of these arrears. In fact, in one of the interviews with "The Hindu", I myself expressed the same view and, thank God, I think Justice Khanna, after a month, expressed almost the same view in the "Illustrated Weekly of India" and my view practically got reinforcement from the view of former Justice Khanna. I further said, "The more number of Judges you appoint, there may be a point of time when the Law of Diminishing Returns will be operating". I used even that word. The more the number of Judges, the less may be even the disposal. That is the threatening prospect of lesser and lesser work being done by a greater and greater number of people being employed. So, the only factor of considerable importance is that every Judge must feel, "Well, I am a member of the public here; I am born in this country; Let me do my best for the country. Here is an avenue for public service; it is no doubt judicial service but it is as good as public service, let me do my very best far dissolving the arrears and do my best to the cause of justice". Unless one is inspired by such noble ideals, it may not be possible, by a mere increase in the number of Judges in Courts alone, to dissolve these arrears of cases.

1978 மார்ச் 22] [Thiru K. Narayanaswamy Mudaliar

I am also thankful to the hon. Member Thirumathi Mandakini Krishnamurthi for the suggestion made in regard to the constitution of the Honorary Presidency Magistrates. This standpoint will be considered in all its seriousness by this Government in due course of time and also in consultation with the Government of India.

Regarding the constitution of the Bench at Madurai and Tiruchirappalli, as I have told the hon. Members of the Legislative Assembly, the Government of India want to have the latest views of the Chief Justice and the High Court of Madras. We are awaiting the reply and it is only after the reply is received that we will be knowing the stand taken by the High Court and the Chief Justice of Madras. Until then, the matter is practically not quite open. It is still under consideration and the Government are not able, at present, to pass any opinion or to make any remark on the expected reply from the High Court of Madras.

In regard to the number of other suggestions made by the hon. Member Thiru Ko. Si. Mani, in respect of parole, diet, lifers and recommendations made by the Advisory Board probably without Police influence, I can assure the hon. Member that all these aspects will be considered duly by the Government. I would appeal to the hon. Member Thiru Ko. Si. Mani to give his first-rate experience as a prisoner in two jails before the Jail Reforms Commission also so that we may have the

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 மார்ச் 22

best of the evidence before the Commission from the hon. Member and the recommendations made by the Commission also thereupon.

Thank you.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, ஒரு பிரச்சினையைக் குறிப்பிடுவார்கள் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கூட அதைக் குறிப்பிட்டார்கள். உணவுப் பொருட்களின் தோராயமான மதிப்பீடு என்று 'ஏ' வகுப்புக் கைதிகளுக்கு வேலை செய்யும் கைதிகள் சைவமாக இருந்தால் ரூ. 5.65 என்றும், அசைவமாக இருந்தால் ரூ 5·35 என்றும் இருக்கிறது. வேலை செய்யாக் கைதிகளுக்கு சைவமாக இருந்தால் ரூ. 5.40 என்று இருக்கிறது. இந்தக் குறைபாட்டை கடந்த ஆண்டிலே கூட சுட்டிக்காட்டினேன். அப்போது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். அதே குறைபாடு இந்த ஆண்டும் வந்திருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அதிகாரிகளின் கவனத்திற்கும் தெரிவித்தும் மீண்டும் இந்தத் தவறுகள் தொடர்ந்து நடப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIYAR: My recollection is: The various diets and the difference in cost were existing even before this Government assumed office. They were there for a long time, and anterior in point of time. This is the explanation. Vegetarians are given more milk and ghee. That is the reason why their diet costs more than what is allowed for non-vegetarians.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. நாளை காலை அவையின் கூட்டம் இல்லை. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 2-05)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. STATUTORY RULES AND ORDERS.

315. Notification issued with G.O. Ms. No. 164, Agriculture, dated the 3rd February 1978 relating to inclusion of ragi, in addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of Dharmapuri Market Committee. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

[1978 மார்ச் 22

316. Notification issued with G.O.Ms. No. 166, Agriculture, dated the 3rd February 1978 relating to inclusion of ragi in addition to groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms, cotton and paddy in respect of regulated market, Krishnagiri. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

317. Notification issued with G.O.Ms. No. 1936, Commercial Taxes and Religious Endowments, dated the 24th November 1977 in regard to amendments to the Indian Stamp Rules, 1925. [Laid on the table of the House under section 75-A (2) of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899)].

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

* 106. Review of the Road Development Programme in Tamil Nadu, 1977-78 (Tamil).

* 107. Performance Budget on Highways and Rural Works Department for the year 1978-79 (Tamil).

** 108. Demand—Land Revenue (Tamil).

109. Policy Note on Jails, 1978-79 (English and Tamil).

110. Policy Note on Administration of Justice, 1978-79 (English and Tamil).

* Circulated to all M.L.Cs. on 20th March 1978.

** Circulated to all M.L.Cs on 21st March 1978.

1978 மார்ச் 22]

(156ம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக் குறிப்பைக் காண்க)

சிறைகள்

சிறைகள், ஒரு பார்ஸ்டல் பள்ளி ஆண்களுக்கான ஒரு பிற்காப்பு இல்லம் ஆகியவற்றின் நிர்வாகம், அமைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றை சிறைத்துறை கவனித்து வருகின்றது. சிறைத் தண்டனைப் பெற்றவர்களைச் சீர்திருத்தி அவர்கள் விடுதலையான பின்பு சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நல்ல குடிமக்களாக வாழும் வகையில் அமைத்துக்கொள்ள உதவுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

1. சிறைகளின் வகைப்பாடு

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்பட்டுள்ளன :—

(1) மத்திய சிறைகள்.

(2) சிறப்புச் சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).

(3) கிளைச்சிறைகள்.

பொதுவாக, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தண்டனையை அடைந்தவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், வழக்கமாக குற்றம் செய்வோரும் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு மாதத்திற்குக் குறைவாக தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளில் வயது வந்தவர்கள், இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர் ; அது போன்று ஆண்களும் பெண்களும் பிரித்துத் தனித்தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வாலாயமான கைதிகள் (Habitual prisoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளிலும், பெண் கைதிகள் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் வைக்கப்படுகின்றனர். இளங்குற்றவாளிகள் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். தற்காலிகமாக, மனநோய் குற்றவாளிகள் சென்னை அரசாங்க மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய் மற்றும் தொற்று நோய் குற்றவாளிகளுக்கென்று தனிச் சிறைக்கூடங்கள் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள வெவ்வேறு நிறுவனங்கள் பின்வருமாறு :—

(1) மத்திய சிறைகள்	..	..	8
(2) மாநில மகளிர் சிறை	..	..	1
(3) பார்ஸ்டல் பள்ளி	..	..	1

1978 மார்ச் 22]

(4) சிறப்புக்கிளைச் சிறைகள்	..	..		3
(5) திறந்தவெளிச் சிறைகள்	..	..		2
(6) கிளைச்சிறைகள்—				
(அ) சிறைத் துறைத் தலைவரின் பொறுப்பில் உள்ளவை	..	..	..	10
(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பில் உள்ளவை	..	..	..	109

மத்திய சிறைகளிலும் மற்றும் ஏனைய சிறைகளிலும் (கிளைச் சிறைகள் தவிர்த்து) 12,121 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது. கிளைச் சிறைகளில் 3,446 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது.

2. நிர்வாகம்

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பை காட்டும் விளக்கப்படம் ஒன்று பிற்சேர்க்கை 1-ல் இணைக்கப்பட்டுள்ளது.

பிற்சேர்க்கை இரண்டில் 1972-73-லிருந்து 1976-77 வரை சிறைத்துறையின் செலவினங்களும் வருவாயும் 1977-78-க்குரிய திருத்திய மதிப்பீடும், 1978-79-க்கு நிதி நிலை மதிப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. திறந்தவெளிச் சிறைகள்

தற்போது மாநிலத்தில் இரண்டு திறந்த வெளிச் சிறைகள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரில் உள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று கோவை மாவட்டத்திலுள்ள சிங்கா நல்லூரிலும் உள்ளன. இதனைத்தவிர சேலம் மத்திய சிறையுடன் இணைந்த ஒரு திறந்த வெளிச் சிறை ஒன்று உள்ளது.

திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன—

(1) சாதாரணச் சிறைகளில் உள்ள இட நெருக்கடியை தவிர்ப்பது.

(2) கைதிகளுடைய எதிர்கால மறு வாழ்வுக்காக அவர்களுக்கு சரியான முறையில் விவசாயத்தில் பயிற்சி அளிப்பது.

(3) சிறைகளுக்குத் தேவைப்படும் வேளாண்மைப் பொருட்களை உற்பத்தி செய்து தன்னிறைவு காண்பது.

(4) நன்முறையில் நடந்து கொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் சிறிதளவு சுதந்திரம் அளிப்பது.

(5) குறைந்த அளவில் சிறைத் தண்டனையை செயல்படுத்த வேண்டும் எனும் கொள்கைக்கு ஆக்கமளிப்பது.

ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகள் அமைப்பது குறித்து செயற் குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளது—

(1) இராமனுதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கை அருகில் முத்துப்பட்டி.

(2) நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டி.

(3) தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் மாநில விதைப்பண்ணை.

(4) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வெங்கடமங்கலம்.

4. சிறைவாசிகளின் பாகுபாடும் அவர்களின் உரிமையும்

சிறைகளில் 'ஏ', 'பி' என்ற இரண்டு வகுப்புகளே உள்ளன. சமூக அந்தஸ்து, கல்வி மற்றும் உயர்தரமான வாழ்க்கையைக் கொண்ட கைதிகள் 'ஏ' வகுப்புக்குத் தகுதியுள்ளவர்கள். கீழ்த்தரமான குற்றம் புரிந்தவர்களும் தகாத நடத்தை உடையவர்களும் 'ஏ' வகுப்பில் வைக்கப்படமாட்டார்கள். முன் வரலாறு, நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாலாயமான கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு கொடுப்பது, அதுபற்றிப் பாகுபாடு செய்யும் அதிகாரமுடையவர்களின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கு விரோதமான குற்றம் புரிந்த கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு வழங்கப்படுவதில்லை. 'பி' வகுப்பில் அநேகமாக 'ஏ'வகுப்பிற்கு தகுதியற்ற சாதாரண கைதிகள் வைக்கப்படுகின்றனர்.

(அ) உணவு—

'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்படும் உணவு கீழ்கண்ட நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள்—

(1) வேலைசெய்யும் கைதிகள் .. சைவர்கள்.

(2) வேலைசெய்யாக் கைதிகள் .. சைவர்கள்.

(3) வேலைசெய்யும் கைதிகள் .. அசைவர்கள்.

(4) வேலைசெய்யாக் கைதிகள் .. அசைவர்கள்.

இந்தக் கைதிகள் பிஸ்கட், கோகோ, ஒவல்டின் மற்றும் உணவுக்கு பயன்படும் இதர பொருட்களையும், பழங்களையும் தங்கள் சொந்த செலவில் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகளுக்குச் சைவ உணவு குறித்த அளவு வழங்கப்படுகிறது. உணவின் அளவு வேலைசெய்வோர்களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் மாறுபடும் மருத்துவ அதிகாரி உடல் நலனை முன்னிட்டு [illegible] கைதிகளுக்கு முட்டை, கறி ஆகியவை வழங்குமாறு [illegible] செய்யலாம்.

ஒவ்வொரு வகுப்பு குற்றவாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட வெவ்வேறு அளவுகளின்படி அவைகளின் மதிப்பு வேறுபடுகிறது. சிறைவாசிகளின் உணவுமுறை மதிப்புக்கு உச்ச வரம்பு இல்லை. எனினும், விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. உணவுப் பொருட்களின் அளவு நிரந்தரமானது எனினும், அந்தந்த நேரங்களிலுள்ள மார்க்கெட்டு நிலவரங்களுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டிய பொருட்களின் மொத்த மதிப்பீடு மாறுபடுகிறது.

பல்வேறு வகுப்பு சிறைவாசிகளுக்கும் நாளொன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு வழங்கப்பட வேண்டிய அளவுகளின்படி உணவு பொருட்களின் தோராயமான மதிப்பீடு கீழ்வருமாறு:—

	ரூ.	பை.
(1) 'ஏ' வகுப்புக் கைதிகள்—		
வேலை செய்யும் கைதிகள்—சைவர் ..	5	65
வேலை செய்யாக் கைதிகள்—சைவர் ..	5	40
வேலை செய்யும் கைதிகள்—அசைவர் ..	5	35
வேலை செய்யாக் கைதிகள்—அசைவர் ..	4	60
(2) 'பி' வகுப்புக் கைதிகள்—		
சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	2	80
ஓரளவு சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	2	70

சத்துணவுத் திட்டம் (Nutritious Diet Scheme)

1971-ம் ஆண்டில் 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வழங்கப் படும் உணவின் 'கலோரி' மதிப்பினை அதிகப்படுத்த வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதன் முதலாக சென்னை மத்திய சிறையில் செயல்படுத்தப்பட்டது. பின்பு மதுரை, கோவை மத்திய சிறைகளுக்கும் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விஸ்தரிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி இச் சிறைகளில் காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதி லாக மூன்று நாட்களுக்கு இட்லியும் மீதி நான்கு நாட்களுக்கு புட்டும், மாலை வேளைகளில் கடலை சுண்டலுக்கு பதிலாக [illegible]கடலையும் கொடுக்கப்படுகின்றது.

ஓரளவு சத்துணவுத் திட்டம் (Partly-Nutritious-diet Scheme)

1975-76-ம் ஆண்டு அமுலுக்கு வந்த இத்திட்டத்தின்படி 'பி' வகுப்புக் கைதிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக மூன்று நாட்களுக்கு இட்லியும் நான்கு நாட்களுக்குப் புட்டும் வழங்கப்படுகிறது. மாலை வேளைகளில் கடலை சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மற்ற மத்திய சிறைகளிலும் வேலூர் மாநில மகளிர் சிறையிலும் செயல்பட்டு வருகிறது.

எல்லா மத்திய சிறைகளிலும் மாநில மகளிர் சிறையிலும் உள்ள அனைத்து 'பி' வகுப்புக் கைதிகளுக்கும் ஒரே மாதிரியான உணவு முறையை கொண்டு வருவதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) உடைகளும் படுக்கையும் :

'ஏ' வகுப்புக்கைதிகள் தங்களுடைய சொந்த படுக்கையைப் பயன்படுத்தவும் வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் தங்களுடைய சொந்த உடைகளைப் பயன் படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணிய வேண்டும் உறவினர்களைச் சந்திக்கும் நேரங்களில் 'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்த உடையை அணிய அனுமதிக்கப் படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகள் சிறை ஆடைகளையே அணிதல் வேண்டும்.

(இ) சோப்பும் மற்றும் வாசனைப்பொருட்களும் :

கைதிகள் அனைவரும் சோப்பு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெய் (hair oil) மற்றும் எண்ணெய் ஆகியவைகளை தங்களுடைய சொந்த செலவில் வாங்கி பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள், மாதத்திற்கு ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் ஒரு அவுன்சு (28 கிராம்) எண்ணெய் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு கைதிக்கும் ஒன்றரை அவுன்சு (42 கிராம்) சீயக்காய்த்தூளும், 370 கிராம் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்தியச் சிறையில் உள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்கு குளிப்பதற்காக மாதத்திற்கு ஒரு முறை 2 அவுன்சு (56 கிராம்) எண்ணெய் கொடுக்கப்படுகிறது: நன்னடத்தை உள்ள, தகுதியுள்ள எல்லா வகுப்பு கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பொருட்கள் சிறை உயர்அதிகாரி ஒருவரால் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

(ஈ) சந்திப்பும் கடிதத் தொடர்பும் :

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதவும், பெறவும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி சந்திக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு

கைதிகள் மாதந்திற்கு 2 கடிதங்கள் எழுதவும், பெறவும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி நேரம் சந்திக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(உ) நாளிதழ்களும் சஞ்சிகைகளும் :

தற்போது 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன:—

(1) தினமணி (2) சுதேசமித்திரன் (3) நவசக்தி (சுதேசமித்திரன் தற்போது வெலியிடப்படுவதில்லை) நாளிதழ்கள் 100 கைதிகளுக்கு ஒரு பிரதி என்ற விகிதத்தில் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட நாளிதழ்களைத் தங்களது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள 'ஏ' வகுப்பு கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சிறை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட நூலகங்களிலிருந்து புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக்கல்வி இயக்குநருடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்ட புத்தகப் பட்டியல் ஒன்று எல்லாச் சிறைக் கண்காணிப்பாளர்களின் பார்வைக்கும் அனுப்பப்படுகிறது. புத்தகப் பட்டியலிலுள்ள புத்தகங்கள் யாதேனும் தேவைப்பட்டால் அவைகளை வாங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது

(ஊ) இதர சலுகைகள்.

'ஏ' வகுப்புக் கைதிகள் மரச்சாமான்கள். கொசுவலை மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். புகையிலை, சமையல் செய்யவும் சாப்பிடவும் தேவைப்படும் பாத் திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மருத்துவ ஆலோசனையின் பேரிலும் சிறைக் கண்காணிப்பாளரின் முடிவுக்கிணங்க இதற்கு முன் சிறைத் தண்டனை அடைந்திராத வழக்கமாகக் குற்றம் செய்தவராக இராத கைதிகள் சிறைக் கண்காணிப்பாளரது முடிவுப்படி சிறையின் மருத்துவ மனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லா மத்திய சிறையிலுள்ள கைதிகளும் ஞாயிற்றுக்கிழமையிலும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் கைப்பந்து, பூப்பந்து, கபடி ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூர் மாநில மகளிர் சிறைவாசிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்;

5. கைதிகளின் தொழிலும் சிறைகளில் தொழிற்சாலைகளும்:—

சிறைகளில் தொழில் அனுமதிக்கப்படுவதின் முக்கிய நோக்கம் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களின் புதுவாழ்வுக்கு உதவுவதே ஆகும். எனவே, பயனில்லாத, உறபத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. எல்லா சிறை வேலைகளும், கடினம், நடுத்தரம், சுலபம் என்று மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மருத்துவ அதிகாரியின் ஆலோசனைப்படி கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல், நெசவு,

சாயம்தோய்த்தல், கட்டிடவேலை, கருமார் வேலை, தோல் தொழில், புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல் ஆகிய தொழில்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவுடன் கூடிய நூற்பாலை ஒன்று இருக்கிறது.

கூடுமானவரையில் கைதிகள் சிறைக்கு வரும்முன்னதாக எந்தெந்தத் தொழில்கள் செய்து வந்தார்களோ அத்தொழில்களே கொடுக்கப்படுகின்றன. தொற்று நோய்க்காக ஒதுக்கப்படும்போது கைதிகளுக்கு கொடுக்கப்படும் வேலை, கல்வி, பயிற்சி ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்காக சிறையின் கண்காணிப்பாளர் மூத்த உதவி மருத்துவ அலுவலர், மற்றும் ஜெயிலர் (Jailor) ஆகியோரைக் கொண்ட ''பாகுபாட்டுக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள அச்சுக் கூடத்தில் தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கைதி தன்னுடைய வேலையில் மாற்றம் வேண்டினால் அது குறித்து அந்தச்சிறைக் கண்காணிப்பாளரிடம் விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுச் செய்து முடிக்கப்படும் வேலை உரிய தரமுடையதாகவும், வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேலும் வருவாய் உள்ளதாகவும் இருந்தால் கீழ்க்கண்ட விதங்களில் அத்தகைய வேலைகளுக்குப் பணி கொடை வழங்கப்படுகிறது.

	பணிக்கொடை விகிதம். ரூ.	காசு.	(ஒரு மாதத்திற்கு)
1. கைதி	0	25	,,
2. கைதி (இரவுக் காவலர்)	0	50	,,
3. கைதி (வேலைமேற்பார்வையாளர்),	1	00	,,
4, கைதி (வார்டர்)	2	00	,,

ஊதியம் வழங்கும் திட்டமானது சேலம் மத்திய சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வழங்கப்ப்டும் ஊதிய விகிதங்களாவன :

	ரூ.	காசு.	(ஒரு நாளைக்கு)
1. தேர்ச்சி பெற்ற வேலையாள்	0	40	,,
2. ஓரளவு தேர்ச்சிப் பெற்ற வேலையாள்.	0	20	,,
3. தேர்ச்சி பெறாத வேலையாள்	0	10	,,

இத்திட்டத்தை மற்ற மத்திய சிறைகளிலும் செயல்படுத்தும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

6. மருத்துவ சுகாதார எற்பாடுகள்—

ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும், வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும், பல்லாவரத்தில் உள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லத்திலும் ஒரு மருத்துவமனை உள்ளது. ஒவ்வொரு மத்திய சிறைசாலையிலும் ஒரு மருத்துவ அதிகாரியும்அவருக்கு உதவி செய்ய உதவி மருத்துவர்களும், மருந்தாளுநரும் உள்ளனர். பல்லாவரத்திலுள்ள ஆண்களுக்கான பிற்காப்பு இல்லத்தில் முழு நேர மருந்தாளுநரும், பகுதி நேர மருத்துவ அதிகாரியும் உள்ளனர். கைதிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. கைதிகளுக்கு அவர்களின் பாகுபாட்டின்படியும் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் பொருட்டும் அவர்களுடைய சொந்த செலவிலோ அல்லது அரசாங்க செலவிலோ பல் வைத்தியம் செய்யுப்படுகிறது. தலைமை மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட பல் மருத்துவர் வாரத்திற்கு இருமுறை கைதிகளைப் பார்வையிடுகிறார். வேலூர் திருச்சி மத்திய சிறைச்சாலைகளில் உள்ள தனிக்கூடங்களில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட கைதிகள் தனியாக வைக்கப்படுகின்றனர். மனநோய்க் குற்றவாளிகள் சென்னை மன நோய் மருத்துவ மனைக்கு அனுப்பபப்படுகின்றனர்.

7. கைதிகளுக்குக் கல்வி—

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய நிலையில் இருக்கும் கைதிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் முழுமையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. சில குறிப்பிட்ட சிறைச்சாலைகளில் முதியோர் கல்வியில் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு முதியோர் கல்வித் திட்டம் நவீன முறையில் நடத்தப்படுகிறது. கைதிகள் விளக்கு வசதி உள்ள சிறைசாலைகளில் இரவு 9 மணி வரை படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். விளக்கு வசதி இல்லாத சிறைசாலைகளில் அவ்வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளின் நன்மையைக் கருதியும், சிறைச்சாலையில் கல்வியை மேம்படுத்தவும் சிறை கண்காணிப்பாளர்கள் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்துச் சிறைவிடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் அரசியல் சம்பந்தப்படாத விஷயங்களில் உரையாற்றுமாறு ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். புத்தகம், தேர்வுக்கட்டணம் மற்றும் இதனைச் சார்ந்த எல்லாச் செலவுகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் முதல்முறை தேர்வில் தேர்ச்சி பெறா விட்டாலும் மேலும் இருமுறை தேர்விற்கு அரசாங்க செலவிலேயே அனுமதிக்கப்படுகின்றனர்,

மத சம்பந்தமான போதனைகளும், ஒழுக்க நீதி போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் அந்த விரிவுரைகளும், விளக்கவுரைகளும் ஆற்றுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் வேற்று மதங்களை சார்ந்தவர்களைத் தம் மதத்திற்கு மாற்ற முயற்சிக்கக் கூடாது.

1978 மார்ச் 22]

என்றும், தமது சமயத்தைச் சார்ந்தவர்கள் மீது மட்டுமே நாட்டம் செலுத்த வேண்டும் என்றும் நிபந்தனையோடு நான் அனுமதிக்கப்படுகின்றனர்; அறநெறி சம்பந்தமான விரிவுரை ஆற்றுவதற்காக தமிழ் அறிஞர்கள் அழைக்கப்படுகின்றனர்.

8. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை—

இளம் வயது குற்றவாளிகள் (18 வயதுக்கு மேல் 23 வயதிற்குள்) பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை,

(உ) விவசாயம்.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பேண்ட் வாத்தியக் கருவிகள் இசைக்கும் பயிற்சி;

(ஐ) வீட்டு வேலைகள்—சமையல் வேலை போன்றவை.

பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு மேற்படி தொழில் பயிற்சி நிலையங்களிலிருந்து அவர்கள் பிற்காலத்தில் வேலையில் அமர்வதற்கு வசதியாக சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 405 இருக்கும். பார்ஸ்டல் பள்ளியில் தற்போது சராசரியாக 200 மாணவர்கள் உள்ளனர். அங்குள்ள துயிற்கூடம் ஒன்று வயது வந்த இளங்குற்றவாளிகள் (23 முதல் 25 வயது வரை) தங்குவதற்கான நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. வயது வந்த இளங்குற்றவாளிகள் அங்கு 25 வயது வரும் வரை வைக்கப்படுகின்றனர். அந்த துயிற்கூடம் ''சிறைச்சாலை சட்டத்தின்படிக்கான சிறைச்சாலை'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் விடுதலையாகி வரும்போது ரொக்கமாக வழங்காமல் இயந்திரங்களும் பசு மாடு அல்லது எருமை மாடும் வாங்கித்தந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. அவர்கள் மறுவாழ்வு பெற உதவும் பொருட்டு அவர்கட்கு அளிக்கப்பட் ்நிதி உதவி அவர்களிடமிருந்து சுலப தவணையில் வசூலிக்கப்படும்.

1978 மார்ச் 22]

9. ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்—

பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களிலிருந்தும் சீர்திருத்தம் அல்லாத நிறுவனங்களிலிருந்தும் வெளிவருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு தச்சுவேலை, உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதப் பயிற்சிகளினால் அவர்கள் ஒரு நிலையான வாழ்க்கையில் அமர்ந்து தங்களை நேர்மையான சட்டத்திற்குட்பட்ட குடிமக்களாக ஆக்கிக்கொள்ள முடியும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முதல் ஆண்டில் நாளொன்றுக்கு ரூ. 1·50 வீதமும் மறுவருடம் நாளொன்றுக்கு ரூ. 2 உதவித் தொகையும் மற்றும் இலவச உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு தொழிற் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடதிட்டங்களின்படி பிற்காப்பு இல்லத்தில் உள்ள நிலைமைக்கும், வசதிக்கும் ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது, வயது வந்த ஆண்கள் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 100 என்றாலும் இவ்வில்லத்தில் சராசரியாக 40 பேர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வில்லத்தில் தச்சுவேலை, தையல் வேலை, உலோக வேலை ஆகிய மூன்று தொழிற் பிரிவுகள் உள்ளன.

10. சிறைப்பார்வையாளர்கள் —

பணிச்சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, பணிச்சார்பில்லாத பார்வையாளர்களையும் அரசு நியமிக்கிறது. நீதி, மருத்துவம், சுகாதாரம், தொழில் மற்றும் தீயணைக்கும் துறைகளில் பணியாற்றுகிறவர்கள், பணிச்சார்புள்ள பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். பொதுமக்களில் புகழ் பெற்றவர்கள் குறிப்பாக கைதிகளுக்காகப் பணிசெய்யும் மனப்பான்மையுடையவர்களும், மனநோய் நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும், சமூக சேவையாளர்களும் விடுதலை பெற்ற கைதிகளின் சகாய சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்களும் குற்றவாளிகளின் நல்வாழ்வில் அக்கறை உள்ள வர்களும் பார்வையாளர்களாக சாதாரணமாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் பணியாதெனில் சிறை விதிகள் சரியாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதும் சிறை வாசிகளின் குறைபாடுகளைக் கேட்டறிவதும் மற்றும் சிறையின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதும் ஆகும். இவர் களுடைய பதவிக் காலம் இரண்டாண்டுகளாகும்.

11 கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்தல்—

மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் கலந்தாலோசித்து கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்வது வழக்கமாக இருந்து வந்தது. காவல்துறை அதிகாரி

கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு குறிப்புரைகளை அனுப்புவார்கள். இக்குறிப்புகளின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு தங்கள் பரிந்துரைகளை அனுப்புவார்கள். இவ்வாறு இரண்டு வழிமுறைகள் மூலம் குறிப்புகள் வரப் பெற காலதாமதமாவதை தவிர்க்க காவல்துறை அதிகாரிகளை நேரிடையாக அரசுக்கு குறிப்புகள் அனுப்பலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகளின் குறிப்புகளின் பேரில் கைதிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு வருகின்றது.

12. தண்டனைக் குறைப்பு—

கைதிகள் நன்னடத்தையில் இருக்க ஊக்குவிக்கவும், நன்கு வேலை செய்யவும், தங்களுடைய குற்றம் செய்யும் மனப் போக்கை மாற்றிக் கொள்ளவும், பலவிதமான தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் கைதிகளின் நன்னடத்தைக்காகவும் மாதத்திற்கு இரண்டு நாட்கள் அவர்கள் செய்யும் வேலைக்காகவும் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. இவ்விதிகளின்படி கிடைக்கப்பட்ட தண்டனைக் குறைப்புடன், ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சிறைகளில் சமையற்கூடங்களில் வேலை செய்யும் கைதிகளுக்கும் துப்புரவுப்பணி செய்யும் கைதிகளுக்கும் மூன்று மாதத்திற்கு 3 நாட்கள் கூடுதலாகத் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கைதிக் காவலர்களுக்கு மாதத்தில் 8 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. சிறை ஒழுக்கத்தையும் விதிமுறைகளையும் பராமரித்து வரும் கைதிகளுக்கு ஆண்டிற்கு 30 நாட்கள் சிறப்பு தண்டனைக் குறைப்பு சிறை கண்காணிப்பாளரால் வழங்கப்படுகிறது. மிகச் சிறப்பாக பணிபுரிவோருக்கு சிறைத்துறைத் தலைவரால் அல்லது அரசால் 60 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் கைதிகளுக்கு அதிகபட்சம் ஒரு ஆண்டு தண்டனைக் குறைப்பும், இரத்ததானம் செய்யும் கைதிகளுக்கு 10 முதல் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவைகளைத் தவிர, ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளுக்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளின் நினைவாகச் சிறப்பு தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.—

	தண்டனைக் குறைப்பு.
(1) உலகத்தமிழ் மாநாடு	ஒரு ஆண்டு.
(2) காந்தி நூற்றாண்டு விழா ..	ஒரு ஆண்டு.
(3) இந்திய சுதந்திர வெள்ளி விழா ..	ஒன்றரை ஆண்டு.

(4) முன்னாள் முதல்வர் மறைந்த திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 60ஆம் பிறந்த நாள் விழா.	ஆறு மாதங்கள்.

மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர மூன்றாண்டுகளுக்கு
மேல் தண்டனை பெற்ற கைதிகளை காலக்கெடுவுக்கு முன்
விடுதலை செய்வது குறித்து கைதிகளின் தண்டனைக் குறைப்பு
உள்பட மூன்றில் இரண்டு பங்கு தண்டனையைக் கழித்த பின்பு,
ஆலோசனைக்குழு பரிசீலிக்கிறது. ஆலோசனைக் குழு பிரிவு
432 கி.பு.கோ. 1973-ன் படி காலக்கெடுவுக்கு முன் விடுதலை
செய்வதுபற்றி பரிந்துரை செய்ய கைதிகளின் முந்தைய பதிவு
களையும், நன்னடத்தை அலுவலர், காவல்துறை கண்காணிப்
பாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைகள்
ஆகியவைகளை விடுதலை செய்வதற்குமுன் கருத்திற்கொள்கிறது.
முதல் தடவையாக தண்டனை பெற்ற 65 வயதிற்கு மேற்பட்ட
ஆண் கைதிகளின் நிலைமையையும் 55 வயதிற்கு மேற்பட்ட
பெண் கைதிகளின் நிலைமையையும் அவர்களின் தண்டனைக்
குறைப்பும் சேர்த்து 2½ ஆண்டு தண்டனை அனுபவித்திருந்தால்
ஆலோசனைக் குழுவினால் முன்னதாக விடுதலை செய்யப்படுவதற்காக
பரிசீலிக்கப்படுகிறது.

மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்
கப்பட்டு தமிழ் நாட்டு சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள
ஆயுள் தண்டனைக் கைதி முழுமையாக 14 வருடம் தண்டனை
அனுபவித்திருந்தால், அவர்களுக்கு முன் விடுதலை அளிப்பது
குறித்து பரிசிலனை செய்ய ஆலோசனைக் குழுவின் முன் வைக்
கப்படலாம். 6—2—1970 அன்று வரை சிறைப்படுத்தப்பட்ட
மற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்து, அவர்கள் 9½
ஆண்டுக் காலம் முழுமையாக சிறையில் கழித்தவுடன் அவர்
களுடைய முன் விடுதலை பரிசீலனைக்காக ஆலோசனைக் குழுவின்
முன் வைக்கப்படலாம். 6—2—1970-க்குப் பின்னால் சிறைப்
படுத்தப்பட்ட மற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்து
அவர்களுடைய தண்டனையில், தண்டனைக் குறைப்பையும்
சேர்த்து 2/3 பாகம் கழித்திருந்தால், ஆலோசனைக் குழுவின்
முன் வைக்கப்படலாம்.

மாறுபட்ட அமைப்பு வழி முறைகள்படி, புதுக்கோட்டை
பார்ஸ்டல் பள்ளி மாணவர்களை முன்னதாக விடுதலை செய்வது
மரபாக இருந்து வருகிறது. இம்மரபு ''உரிமத்தின் மீது
விடுதலை செய்வது அல்லது வெளியே அனுப்புவது'' என்று
அழைக்கப்படுவதுண்டு.

இந்தப் பள்ளி மாணவர்களைப் பொறுத்தமட்டில், இச்
சட்டத்தின் 15-வது பிரிவு, (1) உட்பிரிவின்படி, மாணவர்
களை விடுதலை செய்ய பரிந்துரைக்க கண்காணிப்பாளர் கருதி
னால் குழுவின் ஒவ்வொரு கூட்டமும் கூடுவதற்கு முன் 6
வாரத்திற்கு குறையாத அளவில், அத்தகைய மாணவர்களின்

பெயர்களை, கிராமங்களாய் இருப்பின் மாவட்டத்தின் நன்னடத்தை அலுவலருக்கும், சென்னை நகரமாய் இருப்பின் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும், அனுப்ப வேண்டும். அவர்கள் மேற்கொண்ட தொழிற் பயிற்சி, அவர்களுக்குப் பொருத்தமான பணிவகைகள் ஆகிய விவரங்களை, அவர்களை விசாரணை செய்ய ஏதுவாக இருக்கும் பொருட்டு அனுப்ப வேண்டும். பார்வையிடவரும் குழுவின் முன், நன்னடத்தை அலுவலர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் இவர்களிடமிருந்து பெற்ற தகவல்களை வைக்க வேண்டும். அவ்வாறு உரிமத்தின் மீது விடுதலை செய்யத் தகுந்த மாணவர்கள் குறித்து விஜயம் செய்யும் குழுவால் பரிந்துரைக்கப் படுபவை கட்டளைக்காக சிறைத்துறைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

திறந்த வெளிச் சிறைகளின் பயன்களையும் அதனைப் பயன்படுத்துவது பற்றியும் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு திறந்த வெளிச்சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு ஞாயிறு விடுமுறை நாட்களை தவிர்த்து ஒரு நாள் வேலைக்கு ஒரு நாள் தண்டனை குறைப்பும் நன்னடத்தைக்கு ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் மேலும் ஐந்து வருட நன்னடத்தைக்கு ஒரு வருட தண்டனைக் குறைப்பும் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

13. கைதிகளின் நலம்.—

தற்போது ஒவ்வொரு மத்திய சிறைக்கும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறைக்கும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் ஒருவர் வீதம் மொத்தம் பத்து கைதிகள் நல அலுவலர்கள் உள்ளனர். இந்த நல அலுவலர்கள் கைதிகளுக்கு உதவியும் கைதிகளுக்குச் சிறையின் விதிமுறைகளுக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும் கைதிகள் வெளியிலுள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள கடிதப் போக்குவரத்திற்கு உதவி செய்தும் கைதிகள் விடுதலைக்குப்பின் சமூகத்தில் நல்வாழ்வில் இடம் பெறுதற்கும் வழிவகை செய்கிறார்கள்.

பெண் கைதிகளின் மூன்று வயது, அதற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு காப்பிடமும், மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்படுகிறது.

கைதிகளின் நலத்திற்கும், கலாச்சாரத்திற்கும், ஒழுக்கச் சீரமைப்பிற்காகவும் ஒவ்வொரு மத்தியச் சிறையிலும், கலாச்சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கலாச்சாரக்குழு கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

14. நன்னடத்தைப் பணி—

நன்னடத்தைப் பணி சிறைத் துறையின் ஒரு பிரிவாகும். கைதிகளின் வீட்டு நிலை முதலியன குறித்து விசாரிப்பது பிணைப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் குற்றவாளிகளையும் உரிமத்தின் பேரில் விடுதலையாகும் கைதிகளையும் பார்ஸ்டல் பள்ளியில் இருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும், ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களிலிருந்தும் விடுதலையாகும் கைதிகளையும் கண்காணிப்பது முதலியன நன்னடத்தை பணியாகும். சிறைத் துறைத் தலைவரின் கட்டுப் பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத்தை பணிப்பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரிடைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. ஒரு மண்டல நன்னடத்தை அலுவலரை கொண்ட ஓர் ஆராய்ச்சிப் பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகளின் நன்னடத்தைச் சட்டம் மத்திய சட்டத்தால் மாற்றப்பட்டது. இரண்டாண்டு களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டு தண்டனையையும் அளிக்கக் கூடிய குற் றத்தைப் புரிந்த குற்றவாளிகளை, முன் குற்றம் ஏதும் அவர்கள் மீது இல்லை என்று நிரூபணம் செய்யப்பட்டால் நீதி மன்றம் இத்தகைய குற்றவாளிகளை நன்னடத்தையின் பேரில் மன்னித்து விடுதலை செய்ய இச்சட்டம் அதிகாரம் அளிக் கின்றது. இச்சட்டத்தின் விதித்துறைகள் நவீன முறையான சீர்திருத்த நிர்வாகத்திற்கு எளிதாகவும், பொருத்தமாகவும் உள்ளன.

15. தமிழ்நாட்டு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம்—

விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இச்சங்கம் விடுதலை பெற்ற கைதிகளுக்கு புது வாழ்வு அமைத்துக் கொடுக்கவும். குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்றவர்களுக்குத் தேவையான ஏனைய உதவிகள் அளித்தலும், இளங்குற்றவாளிகள், தற்செயலாக குற்றம் புரிபவர்கள், குற்றம் புரிவதை வழக்கமாக கொள்வதைத் தடுக்கவும், அவர்களது நல்வாழ்விற்காக புதிய சட்டங்களை வகுத்து இருக்கும் சட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இச்சங்கம் சிறு தொழில்கள் நடத்து வதற்கும், கருவிகள், தேநீர் கெண்டி (கொதிகலன்), தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காக, பண வசதி செய்து கொடுக் கிறது. மேலும் புகைவண்டி பேருந்து செலவிற்காக பண வசதியும், தொழிலில் பயிற்சி பெறுவதற்குக் கடனும் வழங்கு

1978 மார்ச் 22]

கிறது. வேலை வாய்ப்பிற்கும், சட்ட உதவிகள் பெறுவதற்கும், ஓய்வு கால ஊதியங்கள் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவை வழங்குகிறது.

இச்சங்கம் சென்னையில் உள்ள மத்திய குழுவினாலும் மாவட்டங்களில் மாவட்ட குழுக்களினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது, தற்பொழுது 10 மாவட்டக் குழுக்கள் சென்னையில் உள்ள மத்தியக் குழுவின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவல் சார்பற்ற தலைவர்களாக இருக்கின்றனர். சென்னையிலுள்ள மத்தியக் குழுவில் மொத்தம் 30-க்கு குறையாத தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் சிறைத்துறை தலைவர், காவல்துறை தலைவர், நகர காவல்துறை ஆணையாளர், தலைமை மாநகர மாஜிஸ்டிரேட், சென்னையிலுள்ள மத்திய சிறையின் கண்காணிப்பாளர், முதன்மை நன்னடத்தை கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம் கண்காணிப்பாளர் ஆகியோர் அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள் ஆவர். மத்தியக் குழுவிற்கு அரசு ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமல் நியமனம் செய்ய ஓர் விதித்துறையும் உள்ளது. மாவட்டக் குழுக்கள் ஐம்பது உறுப்பினர்களுக்கு ஒரு நியமனதாரர் என்ற விகிதத்தில் பத்து மாவட்டக் குழுக்கள் தங்களுடைய நியமனதாரர்களை மத்திய குழுவிற்கு அனுப்புகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தைத் தவிர காலாண்டுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களுக்கு அரசு தலைமைச் செயலாளர் அல்லது அரசு உள்துறைச் செயலாளர் முறையான தலைமைப் பணிகளைச் செய்ய தலைமை வகிக்கின்றனர். அதேபோன்று மாவட்டக் குழுக்கள், மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் கூட்டங்களை நடத்துகின்றன.

2. துணை மானியக் கோரிக்கையில் மிக அதிகமான நிதி ஒதுக்கீடு, கடன்களும் முன்பணங்களும் என்பதன் கீழ் 70.34 கோடி ரூபாய் அளவுக்கு அமைந்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படுகிற வழிவகை முன்பணம் ஆகிய 55.71 கோடி ரூபாய் இதில் அடங்கும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல் நடவடிக்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நில வள உங்கிக்கு உதவித் தொகையாக 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் அடுத்த ஆண்டுக்குரிய தங்களது திட்டங்கள் குறித்து முன் நடவடிக்கை எடுப்பதற்காக ஏனைய வழிவகை முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிவகை முன்பணங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஈடு செய்யப்படுமாதலால், நடப்பாண்டையும் அடுத்த ஆண்டையும் சேர்த்துப் பார்க்கும் போது இதனால் அரசுக்கு நிகரச் செலவு எதுவும் இருக்காது.

3. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத் துறைத் திட்டங்கள், தன்னாட்சி உரிமையுள்ள நிறுவனங்களின் நிதி உதவித் திட்டங்கள், நிதி உதவி செய்யும் நிறுவனங்களிடமிருந்து தொகை பெற்று மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றிற்கு 14.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்களுக்கு மாற்றப்பட்ட அரசுச் சொத்துக்களைக் கடனாகவும், பங்கு மூலதனமாகவும், மானியமாகவும் கருதும் வகையில் 13.00 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கிடைத்துள்ள 1.94 கோடி ரூபாயை, பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கு கொடுத்துள்ளோம். இவற்றாலும் நம் மாநில அரசுக்கு நிகரச் செலவுப் பொறுப்பு எதுவும் இருக்காது.

4. துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய முக்கியமான நிதி ஒதுக்கீடுகளாவன ; மதுரைக்கும் கோயம்புத்தூருக்கும் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள் (2.96 கோடி ரூபாய்), பண்டிகை முன்பணம் கொடுக்கும் தொகை அளவை உயர்த்தியதன் காரணமாகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு (2 கோடி ரூபாய்), உள்ளூர் செஸ் மேல் வரி இணைமானியங்கள் (2 கோடி ரூபாய்), கைத்தறி, கதர் விற்பனை மீது தள்ளுபடிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு (1.51 கோடி ரூபாய்), மாவட்டச் சாலைகளையும் இராமச் சாலைகளையும் பராமரிப்பதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு (1,50 கோடி ரூபாய்). 1977 ஜூலையில் அறிவித்த கூடுதல் இடைக்கால நிவாரணம் வருவாய்க் கோரிக்கைகளின் கீழ் நிதி ஒதுக்கீடு உயர்ந்திருப்பதற்கு ஒரு காரணமாகும்: சம்பளம் கொடுப்பதற்காக ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கும், நகராட்சி

களுக்கும். பொது நூலகங்களுக்கும் கொடுக்கப்படத்தக்க உயரளவு
மானியங்களை முன்னிட்டு, கல்வி மானியக் கோரிக்கையின்கீழ்
9.00 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். முதல் துணை
மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள 8.80 கோடி ரூபாய்க்கு கூடுதலாக
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்த குடிசை
களுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க 1.50 கோடி ரூபாய்
ஒதுக்கியுள்ளோம்.

5. இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு
செலவினங்களுக்குச் செய்துள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளைக்
குறிப்பிட்டுள்ளேன். இவற்றின் விவரங்கள் அவையில் வைக்கப்
பட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. இத்துடன்
1977–78ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கை
களை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

6. 1970-71ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே,
1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக்
கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.
அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக
அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகி
யுள்ளது.

2. 1974-75 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக்
குழு, 1970-71ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை
ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ்
அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகி
யிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான
காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின்
கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும்
ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை
சட்டப்பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக்
கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே,
1970-71ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கை
களின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின் முன்
வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 5.31 கோடி
ரூபாயாக இருக்கிறது. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில்
வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமப் பணிகள்
வேலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, '31. பஞ்ச
நிவாரணம்' என்ற மானியக் கோரிக்கையின்கீழ் 1.42 கோடி
ரூபாயும், முந்தய ஆண்டுக் கணக்குகளில் செலவுகள் தவறாக
வகைப்பாடு செய்யப்பட்டிருப்பதைச் சரிப்படுத்துவதற்கு மானியக்

கோரிக்கை '47. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்
பணங்களும்' என்பதன்கீழ் 1.57 கோடி ரூபாயும் இவ்வகையில்
பெரிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு
மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள
மானிய கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்
பட்டுள்ளன.

3. 1970-71ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான
மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க
வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய
நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 27-3-1978
திங்கட்கிழமை அன்று காலை 10-30 மணிக்குக்கூடும்.

[பிற்பகல் 4-20]

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

318. Notification issued with G. O. Ms. No. 955, Industries, dated the 23rd July 1976 in regard to an amendment to the Tamil Nadu Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the table of the House under section 19 (a) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

319. Notification issued with G. O. Ms. No. 54 Co-operation, dated the 28th January 1978 making the Tamil Nadu Debt Relief Rules, 1978. [Laid on the table of the House under section 28 (2) of the Tamil Nadu Debt Relief Act, 1972 (Tamil Nadu Act 38 of 1972).]

320. Notification issued with G. O. Ms. No. 776, Industries, dated the 22nd June 1976 and G. O. Ms. No. 1005, Industries, dated the 22nd August 1977 in regard to amendments to the Tamil Nadu Molasses (Control and Regulation) Rules, 1958. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

321. Notification issued with G. O. Ms. No. 156, Agriculture, dated the 2nd February 1978 declaring certain areas of Cumbum regulated market to be notified market area for the purpose of the Tamil Nadu Agricultural produce Markets Act in respect of paddy, cotton, groundnut, and chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. Reports, Notifications and other papers.

* 111. Policy Note on Industrial Development (Tamil).

* 112. Performance Budget on Industries for the year 1978-79 (English and Tamil).

* Circulated to all M. L. Cs. on 22nd March 1978.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

திங்கட்கிழமை, 1978 மார்ச் 27

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1 தகவல் கோரல்.

முதல்வர் அவர்களுடைய வினாக்களுக்கு அவை முன்னவர் விடையளிப்பது குறித்து.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்</u> : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் மேலவையிலே முதலமைச்சர் அவர்கள் வந்து அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தலைவர் திரு. காமராஜ் காலத்தில் கூட திரு. வெங்கட்டராமன் அவர்களே அவருக்குப் பதிலாக பதில் சொல்லியிருக்கின்றார்கள். இப்போது மறைந்த காமராஜ் அவர்களுடைய சில பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறோம். மேலவையில் நாங்கள் ஒவ்வொரு முறையும் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மேலவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாக்கா கேள்விகளுக்கு மாண்புமிகு முன்னவர் அவர்களே தற்காலிகமாக பதில் அளிக்கின்றார்கள். மேலவை என்று ஒன்று இருக்கின்றது. பாராளுமன்றத்திலே கூட மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சரண் சிங் அவர்களை அங்கு வரவேண்டும் என்று கட்டாயப்படுத்தி வரவழைத்திருக்கிறார்கள். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களும் எங்களுடைய கேள்விகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து பதிலளிக்க நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டவட்டமாக வரமாட்டார்கள் என்பதையாவது சொல்லிவிட வேண்டும். அவருடைய கேள்விகளுக்கு மாண்புமிகு முன்னவர் அவர்களே பதில் அளிப்பார்கள் என்று சொல்லிவிட்டும் போகலாம்.

[1978 மார்ச் 27

<u>திரு. கோ. சி. மணி</u> : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அன்றையதினம் நான் தங்கள் மூலம், நம் முடைய மேலவை முன்னவர் அவர்களிடம் கேட்டபோது, தாங்களேகூட 'அன்பின் காரணமாக இருக்கலாம், முதலமைச்சர் அவர்கள் வர ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர்கள் முடியும் என்றும் சொல்லவில்லை, முடியாது என்றும் சொல்லவில்லை. முன்னவர் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களே வரவேண்டும் என்று நாங்கள் பலமுறை கேட்டிருக்கிறோம். முதல்வர் அவர்களே அவருடைய இலாக்கா கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் என்று கேட்கிறோம். முதல்வர் அவர்கள் கேள்விகளுக்கு முன்னவர் அவர்கள் பதில் அளிப்பதை நாங்கள் விரும்ப வில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : தகவல் வந்தி ருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்துவிடுவார் கள். தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு இருக்கிறது.

<u>திரு. கோ. சி. மணி</u> : கேள்வி பதில் பொறுத்து முதல்வர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்று அறிவித் திருந்தார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னேன். தலைவர் அவர்களுடைய வார்த்தைகளுக்கு நீங்கள் வியாக்கியானம் செய்ய வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் வருகிறார்கள். எந்த விதிப்படியும் அவர்கள் வந்து பதில் சொல்ல வேண்டும் என்று சொல்ல முடியாது. அப்படி விதி எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. கோ. சி. மணி</u> : துணைத் தலைவரவர்களே, நாங்கள் தலைவர் அவர்கள் மூலமாகத்தான் மாண்புமிகு முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொண்டபோது, என்னுடைய கேள்வி யில் நியாயம் இருப்பதாகக் கூறினீர்கள். தாங்களும் முன்னவர் அவர்களுக்குச் சொன்னீர்கள். "அன்பின் காரணமாகக்கூட இருக்கலாம். அவர்களுடைய கேள்விகளுக்கு அவர்களே பதில் அளிக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றும் அறிவித்திருக்கிறீர்கள். அதைக் கேட்டுக் கொண்டு, அது என்னால் இயலாது என்று முன்னவர் அவர்கள் சொல்ல வில்லை. அதை ஒத்துக்கொண்டார் என்று தான் சொல்ல விரும்புகிறேன். ஆனால் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கேள்விக்கு முன்னவர் அவர்களே பதில் சொல்ல இருக்கின்றார்கள். அது எங்களுக்குத் திருப்தி இல்லை. ஆகவே

1978 மார்ச் 27]

முதலமைச்சர் அவர்களுடைய கேள்வி—பதில்கள் முடிகின்ற வரை மேலவையிலிருந்து வெளியேறுகிறோம் என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலி ருந்து வெளியேறினார்கள்.)

2. வினுக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினுக்கள்.

Statue of Late Leader Thiru Kamaraj.

*210 *Q*.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Kamaraj Statue Committee of Kanyakumari District, requesting allotment of site at Kanyakumari sea shore to install the statue of the late leader Thiru Kamaraj; and

(*b*) if so, the action taken thereon ?

மறைந்த தலைவர் திரு. காமராஜருக்கு சிலை

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்</u> : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி கடற்கரையில், மறைந்த தலைவர் காமராஜருக்கு சிலை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து தர வேண்டி, கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் சிலைக் குழு விடமிருந்து கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த முடிவு என்ன?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்)</u> : மறைந்த திரு. காமராஜ் அவர் களுக்கு கன்னியாகுமரி மாவட்டக் காங்கிரஸ் குழு கன்னியா குமரி கடற்கரையில் உரியதோர் நினைவாலயம் எழுப்புமாறு அரசைக் கேட்டுக் கொண்டது. அரசு இது குறித்து கவன மாக ஆலோசித்த பிறகும் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவைக் கலந்தாலோசித்தும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் சாலையில் காந்தி மண்டபத்திற்கு அருகில் காமராஜ் அவர்களுக்கு சிலை எழுப்புவதற்கான ஏற்ற இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதன் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

MISA Prisoners.

*211 Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru M. SANKARALINGAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that certain persons who were selected by the Tamil Nadu Public Service Commission and issued appointment orders, could not join duty, as they were arrested and imprisoned under MISA ;

(b) the number of persons from whom applications were received after their release requesting employment orders ; and

(c) the decision taken thereon by the Government ?

மிசா கைதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்வு உத்தரவு வந்தவர்கள் சிறையில் இருந்ததால் வேலையில் சேரவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) விடுதலையாகி வந்த பிறகு, தங்களை வேலையில் அமர்த்த வேண்டுமென்று கோரி எத்தனை பேரிடமிருந்து விண்ணப்பம் வந்திருக்கிறது ?

(உ) அவை மீது அரசு எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : ஆம் ஒருவரிடமிருந்து அவ்விண்ணப்பம் அரசுக்கு வந்தது. அவர் மீண்டும் வேலையிலமர்த்தப்பட்டு விட்டார்.

Teacher's who won National Awards

*212 Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru S. GANAPATHY, Thiru D. SANTOSHAM & Thiru P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Ministry of Education, Government of India have suggested to the Government, the continuance for five more years, of the services of the teachers who are the recipients of National Awards, after their retirement ;

(b) if so, whether the Government have taken any action on this suggestion ; and

(c) the number of teachers benefited in this connection ?

தேசிய விருதுகள் பெற்ற ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி திரு. டி. சந்தோஷம் & திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய விருதுகள் பெற்ற ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களுடைய பணிக்காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்குமாறு, இந்திய அரசின் கல்வி அமைச்சகம், மாநில அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், இந்த ஆலோசனையின் பேரில் அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டுள்ளதா ?

(உ) இதனால் எத்தனை ஆசிரியர்கள் பயனடைவர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) (இ)&(உ) ஆம். இத்தகைய சலுகை 1976 'மே' திங்கள் முதல் அளிக்க ஆணை பிறப்பித்தது. இதுவரை 25 ஆசிரியர்கள் பயன் பெற்றனர். [illegible] நவம்பர் [illegible]-ல் இத்தகைய சலுகைகளை ரத்து செய்யும்படி மத்திய அரசு பரிந்துரைத்தது. அப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அரசு ஆணை எண். 453, கல்வி, நாள் [illegible]-3-78-ல் இச்சலுகையை ரத்து செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

Assistant Headmasters

*213 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf THIRU K. S. GANAPATHI & THIRU P. R. THOMAS): Will the the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to app Assistant Headmasters in Government 'A' and 'B' Wing Scho where the total strength of students exceeds one thousand ; an

(b) if so, the details thereof ?

உதவித் தலைமையாசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மொத்தம் ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட மற்றும் 'பி' பிரிவு அரசு பள்ளிகளில், உதவித் தலைமை சிரியர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)&

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Gazetted Headmasters

*214 Q.—PULAVAR PULAMAIPITHAN (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of 'B' Wing High Schools in Tamil Nadu whi have been accorded permission to give Gazetted status to their Hea masters ; and

(b) among them, the number of Schools wherein Gazetted Hea masters have not been appointed ?

அரசிதழ் பதவி பெற்ற தலைமையாசிரியர்கள்

புலவர் புலமைப் பித்தன் (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகத்திலுள்ள 'பி' ('B') பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியருக்கு அரசிதழ் பதவி உயர்வு அளிக்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ?

(இ) அவைகளில், எத்தனை பள்ளிகளில் அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர் நியமிக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 80

(இ) பணி புரிந்து கொண்டிருந்த 80 அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்களில் 11 தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வு, மாறுதல், மற்றும் பணியினின்றும் ஓய்வு பெற்ற காரணங்களால் பணியிடங்கள் காலியாக இருந்தன. அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களுக்கான தேர்ந்த பெயர் பட்டியலில் (Gazetted Head Master Panel) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஆசிரியர்களைக் கொண்டு தலைமை ஆசிரியர் பதவி காலியாக இருந்த 11 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தலைமை ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

அரசு பி. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் 1-4-70-ஆம் நாள் முதல் 3-3-73ஆம் நாள் வரையிலான கால அளவில் பணியிலமர்த்தப்பட்ட ஆசிரியர்களைப் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru K. S. GANAPATHI): Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-regularisation of Secondary Grade Teachers and specialist teachers appointed in Government 'B' Wing High Schools between 1st April 1970 and 3rd March 1973 from their date of joining as it has been due in the case of B.T. Teachers and Grade I Pandits and the resultant hardship caused to thousands of teachers.

1978 மார்ச் 27]

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> முன்மொழியப் பட்ட தீர்மானம்

''சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''.

(முற்பகல் 10-40)

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அவையினுடைய முன்னவர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே தொழில்கள் வளர வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும், நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியிலே அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையின் அடிப்படையிலே ஒவ்வொரு அரசும் அக்கறை காட்டுவது வரவேற்கத்தக்கதாகும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து, எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும், தொழில் வளர்ச்சி அடைவதிலே அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்களென்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போதுகூட பல இடங்களில் தொழிற் பேட்டைகள் அமைத்து, ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே நடவடிக்கைகளை மேற்கொண்டது. ராணிப்பேட்டை போன்ற இடத்திலே கூட 600 ஏக்கர் நிலப் பரப்பிலே சிப்காட் உருவாக்கியுள்ள தொழில்கள் வளர்ச்சி பெற திட்டங்களைத் தீட்டி, அங்கே பல தொழில்கள் வளர்ச்சி அடைந்து வருவதை நம்முடைய அரசு உணர்ந்திருக்குமென்று நம்புகிறேன். ஆனால் இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சரவர்கள் பெயரிலே கொடுத்திருக்கும் கொள்கைக் குறிப்பில் ஒரு புதிய விதமான தொழில் கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். அது என்ன புதிய தொழிற் கொள்கை என்றால், 'குடிசைத் தொழில், சிறு தொழில், கிராமத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப் புதிய கொள்கையின் தலையாய நோக்கமாகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படியே கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே இதை அரசு அறிவித்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. மத்திய அரசு 504 உற்பத்திப் பொருட்களை சிறு தொழில், கிராமத் தொழில், குடிசைத் தொழில் துறைக்கு ஒதுக்கும் ஒரு கொள்கையை அறிவித்தபோது,

அடுத்தபடியாக, மாவட்டத் தொழில் மையங்கள் அமைப்பது பற்றிய திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி, சேலம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வரும் ஆண்டில் தொழில் மையங்கள் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது குறித்து இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லை. நீங்கள் திட்டங்களை அறிவிக்கிறீர்கள். ஆனால் அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறீர்கள் என்று பார்த்தால், ஒன்றுமில்லை. அதுபோலத்தான் 100 கோடி ரூபாயிலே ஒரு காகிதத் தொழிற்சாலை வருமென்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த இடத்தில் என்று அறிவிக்கப்படவில்லை. எந்த 'செக்டார்' என்று தெரிவிக்கப்படவில்லை. இப்படியே கொள்கைகளை அறிவிக்கிறீர்கள். உள்ளபடியே அவைகள் பத்திரிகைகளில்தான் இருக்கின்றன; புத்தகங்களில்தான் இருக்கின்றன. திட்டங்கள் வரப்போகிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல. இன்றையதினம் 'சிட்கோ', 'ஸ்பிக்', 'டிட்கோ' போன்ற நிறுவனங்களின் மூலம் தொழில்கள் வளர எப்படியெல்லாம் அரசாங்கம் கடன் உதவிகளைச் செய்து வருகிறதென்ற கொள்கைக் குறிப்புகளைப் படிக்கிறோம். அந்த நிறுவனங்களெல்லாம் ஓரளவுக்குப் பல ஆண்டுகளாக மூலதனத்தை வைத்து, தொழில்களை ஆரம்பித்து, தமிழ் நாட்டைத் தொழில் வளமாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இன்றையதினம் தமிழ் நாட்டில் இன்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் 60 கோடி ரூபாய்க்குமேல் கடன் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இப்போது நிர்வாகம் சரியாக இருக்கிறதா என்றால், எனக்குத் தெரிந்தவரையில் கவலையோடு தெரிவித்துக்கொள்கிறேன், இல்லை. அவசர காலச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் இளைஞர் ஒருவரைச் செயலராக நியமித்தார்கள். அன்றைய தினம் ஆலோசகராக இருந்த ஒருவருடைய உறவினர், இன்றையதினம் அந்த நிறுவனத்தின் செயலாளராக இருக்கிறார். அந்த இலாகாவிலே அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு, இந்த இளைஞரைப் போட்டிருக்கிறார்கள். எங்கேயோ 400, 500 ரூபாய் சம்பளத்திற்கு இருந்தவரை, கிராஜுவேட் என்பதால் செக்ரட்டரியாக 'டைரக்ட் ரெக்ரூட்மென்ட்' செய்திருக்கிறார்கள். அங்கே அசிஸ்டன்ட் செக்ரட்டரீஸ், லா ஆபிசர், இன்னும் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை விட்டுவிட்டு, டைரக்ட் ரெக்ரூட்மென்டில் இவரை செக்ரட்டரியாக நியமித்திருக்கிறார்கள். அவர் வந்த பிறகு 'டிக்' நிறுவனத்தில் என்ன நடைபெறுகிறதென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த நிறுவனத்தில் கடன் வாங்கியவர்கள் எந்தக் கம்பெனியிலாவது சரியாகக் கடனைத்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 27

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் குறிப்பாகத் தமிழகத்திலேயிருந்துதான் அதிகமான தோல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிராமங்களில் உள்ள கால்நடைகள் இறந்துவிட்டால், அதனுடைய தோல்களை எடுத்து சைக்கிளில் போட்டுக் கொண்டு, கிராமம் கிராமமாகச் சென்று கொள்முதல் செய்து, அதை நகரத்திற்குக் கொண்டு வந்து பதனிடுகிறார்கள். அப்படிப்பட்ட கிராமங்களில் இருக்கக்கூடிய அந்தத் தொழில்களில் எந்த அளவுக்கு அக்கறை செலுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், ஏமாற்றத்தைத் தான் நமக்கு அளிக்கிறது. கடந்த ஆண்டு அதற்காக இருந்த தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை 25, இந்த ஆண்டு அது 19 ஆகக் குறைந்திருக்கிறது. அந்தத் தொழிலுக்காக வழங்கிய தொகையைப்பார்த்தால் கடந்த ஆண்டு ரூ. 2,24,31,000 அது இந்த ஆண்டு ரூ. 69,55,000. ஆகக் குறைந்திருக்கிறது. அந்தத் தொழிலில் உற்பத்தியான பொருள்களினுடைய மொத்த மதிப்பீடு கடந்த ஆண்டு ரூ. 4,90,55,000. ஆனால் இந்த ஆண்டு அது ரூ. 3,56,47,000 ஆகக் குறைந்திருக்கிறது.

அதைப் போலவே எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு கடந்த ஆண்டு 1,190, ஆனால் இந்த ஆண்டு 840. இப்படி வேலை வாய்ப்பும் குறைந்து, முதலீடும் குறைந்து, வழங்கப்பட்ட தொகையும் கடந்த ஆண்டுகளை விடக் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உற்பத்திக்கான மதிப்பீடு எவ்வளவு என்று பார்த்தால், கடந்த ஆண்டு ரூ. 17 கோடியே 44 இலட்சமாக இருந்தது இந்த ஆண்டு ரூபாய் 15 கோடியே 64 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி எந்த அளவுக்குக் கடன் வழங்குவதில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறது என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால், 1974-75ஆம் ஆண்டு ரூ. 133 இலட்சத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறது; 1975-76ஆம் ஆண்டு ரூ. 155 இலட்சத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறது. ஆனால் இந்த நிதியாண்டு டிசம்பர் 1977 முடிய வழங்கி யுள்ள கடன் தொகை ரூ. 129 இலட்சம் மட்டும்தான் கூட்டுறவுத் துறையிலாவது நாம் தொழில்களை வளர்ப்பதற்குப் போதிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறோமா என்று பார்த்தால், கடந்த ஆண்டுகளை விட குறைவாக நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறோம் என்பதை நான் அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1978 மார்ச் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அடுத்து, இந்த நாட்டிலுள்ள கனி வளத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது குறித்து அரசாங்கத்திற்கு நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக தமிழ் நாட்டிலே இருப்பதைப் போல் கனி வளம் இந்தியாவிலோ, உலகத்தில் வேறு எங்கோ இல்லை. இந்தக் கனிவளத்தைக் கவனிக்க நம்முடைய அரசாங்கத்தில் ஜியோலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட் ஒன்று இருக்கிறது. அந்த டிப்பார்ட்மெண்ட்டைப் பற்றி வருத்தப் படாமல் இருக்க முடியவில்லை. நாங்கள் ஆட்சி செய்த காலத்திலும் அப்படித் தான் இருந்தார்கள்; இப்போதும் அவர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் எந்தவிதமான அக்கறையும் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணம் தெரியவில்லை. நம்முடைய நாட்டிலே கிடைக்கக் கூடிய செமி—பிரீஷியஸ் ஸ்டோன்ஸ் (Semi precious stones) என்று சொல்லக் கூடிய விலை மதிப்புள்ள கற்களை இராஜஸ் தானில் உள்ளவர்கள் இங்கே வந்து இரவோடு இரவாக தமிழ் நாட்டிலுள்ள சில அதிகாரிகளின் துணையைக் கொண்டு எடுத்துச் சென்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். கரூர் பகுதியிலிருந்து இப்படிக் கொண்டு போகும்போது பிடிக்கப்பட்டு, அவர்கள் மீது கலெக்டர் நடவடிக்கை எடுத் தார் என்று பத்திரிக்கையிலே பார்த்தோம். ஒரு காரை மட் டும் பிடித்திருக்கிறார்கள், மற்ற கார்களைப் பிடிக்கவில்லை. நம்முடைய ஜியாலாஜிக்கல் டிப்பார்ட்மெண்ட்டிலே இருக்கிற வர்கள் ஆங்காங்கே உள்ள கனிப் பொருள்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலை நடத்துவதற்கு திட்டம் தீட்டித் தந்து அதை நம்முடைய அரசாங்கமே செய்யலாம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தத் துறையிலே இருக்கிறவர்கள், ''நம்முடைய நாட்டிலே இருக்கிற கனி வளங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், ஆண்டு ஒன்றுக்கு 500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரும். நாம் மக்களின் மீது வரியே போட வேண்டியதில்லை.'' உதாரணத் திற்குச் சொல்லுகிறேன் நான் போட்டிருக்கக் கூடிய இந்த மோதிரம் (மோதிரத்தை அவைக்குக் காட்டுகிறார்) சாதாரண மோதிரம்தான். இதை முதலமைச்சர் அவர்கள் பார்த்தால், இதிலே அக்கறை எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகி றேன். இந்த மோதிரத்திலே இருப்பது ஒரு சாதாரண கல் தான். ஆனால் அந்தக்கல் உலகத்திலே வேறு எங்குமே இல்லை. இந்த ஒரே கல்லில் 9 நிறங்கள் மாறிமாறி வருகின்றன. இப்படிப்பட்ட கற்கள் நமது நாட்டில் ஏராளமாகக் கிடைக் கின்றன. ஒரு பெரிய கல்கூட இல்லை, ஒரு கோலிக்குண்டு அளவுள்ள கல் வெளிநாடுகளில் ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட் சம் என்று விலை போகுமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு விலை மதிப்புள்ள கல் இந்த நாட்டிலே இருக்கிறது. இதிலே இந்த அரசாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லின் பெயர் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பெயர் எனக்குத் தெரியாது. இது கரூர் பகுதியிலே கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

(அந்த மோதிரத்தை சார்புச் செயலாளரிடம் தருகிறார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் தலைவருக்குக் காட்டிவிட்டுக் கொடுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தக் கற்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல கற்கள் நம்முடைய நாட்டிலே கிடைக்கின்றன. இது ஒரு சாதாரண கல்தான். அதைக் கண்டு பிடித்து..........

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே' இந்தக் கல்லினுடைய மதிப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தக் கல்லினுடைய மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. இது ஐந்து கேரட் என்று சொல்லுகிறார்கள். இது வெளிநாடுகளில் இரண்டாயிரம் ரூபாய்க்குப் போகுமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு மதிப்புள்ள கற்களை இந்த நாட்டில் யாராவது போட்டிருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட கற்கள் இந்த நாட்டில் ஏராளமாக கிடைக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவரிடத்திலே கொடுத்த அந்தக் கல் தலைவருக்கே வழங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தலைவரிடத்திலே கொடுத்தது, இந்த அவைக்குக் காட்டுவதற்காக. மாண்புமிகு உறுப்பினரே மனமுவந்து கொடுத்தால் ஏற்கலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கேட்டால், அதைக் கொடுப்பதற்கு எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஏனென்றால் எனக்குப் ஒருவர் கொடுத்தது தான் அது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இவ்வளவு மதிப்புள்ள கல் இந்த 72 வயதில் எனக்கு எதற்கு ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரிடத்திலே இந்தத் தொழில் இலாக்கா இருக்கிற காரணத்தால், இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளை ஊக்குவித்து, இப்படிப்பட்ட கற்களை எடுத்து, அரசாங்கமே வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு வியாபாரம் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஒரு கொள்கையை அறிவித்தார்கள். இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கருங்கற்களை வெட்டும் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே, இந்த ஆண்டு டான்சி நிறுவனம் ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக் கல்லை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு ஒப்பந்தம் செய்திருப்பதாகவும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கறுப்புக் கல் வெட்டி எடுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமே இதைச் செய்வதை நான் வரவேற்கிறேன். நம்முடைய நாட்டிலே இருக்கிற அந்தக் கறுப்புக் கல் எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்றால், உலகத்திலே ஜப்பானாக இருந்தாலும், இங்கிலாந்தாக இருந்தாலும், ஜெர்மனியாக இருந்தாலும், எந்தெந்த நாடுகளில் எல்லாம் தேவை என்று சொல்லுகிறார்களோ, அந்த நாடுகளுக்கெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு சப்ளை செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய நாட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது வரையில் தி. மு. க. அரசாங்கமும், தனியாரும் கண்டு பிடித்தது 120 குவாரிகள்தான். இன்னும் 530 குவாரிகள் கண்டு பிடிக்கப் படாமலே இருக்கின்றன. குன்னம் கிராமத்தில் இருப்பது சிறந்த குவாரி என்று வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற தகவல் இன்றைக்கு இருக்கிறது. இப்படி 700 க்கும் மேற்பட்ட குவாரிகள் தமிழகத்திலே இருக்கும்போது, அதைவெட்டியெடுக்கக் கூடிய பணியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் வரவேற்கிற நேரத்தில், அரசாங்கத்திற்கு ஒருவேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் டான்சி நிறுவனத்திற்கு ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக் கல்லை வெட்ட மூலதனம் ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிற தென்றால, நம் நாட்டிலுள்ள 700 குவாரிகளையும் வெட்ட 21 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த அளவுக்குப் பணம் நம்முடைய அரசாங்கத்திலே இல்லை. ஆகவே ஒரே இடத்தில் 50 ஏக்கர், 100 ஏக்கர் பரப்பளவில் வெட்டினால் வேண்டிய பொருளும் கிடைக்கும். அரசாங்கத்திற்கு நஷ்டமும் இருக்காது. ஒரு ஏக்கர்,

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லின் பெயர் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பெயர் எனக்குத் தெரியாது. இது கரூர் பகுதியிலே கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

(அந்த மோதிரத்தை சார்புச் செயலாளரிடம் தருகிறார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் தலைவருக்குக் காட்டிவிட்டுக் கொடுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தக் கற்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல கற்கள் நம்முடைய நாட்டிலே கிடைக்கின்றன. இது ஒரு சாதாரண கல்தான். அதைக் கண்டு பிடித்து.........

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லினுடைய மதிப்பு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தக் கல்லினுடைய மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. இது ஐந்து கேரட் என்று சொல்லுகிறார்கள். இது வெளிநாடுகளில் இரண்டாயிரம் ரூபாய்க்குப் போகுமென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு மதிப்புள்ள கற்களை இந்த நாட்டில் யாராவது போட்டிருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட கற்கள் இந்த நாட்டில் ஏராளமாக கிடைக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவரிடத்திலே கொடுத்த அந்தக் கல் தலைவருக்கே வழங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தலைவரிடத்திலே கொடுத்தது, இந்த அவைக்குக் காட்டுவதற்காக. மாண்புமிகு உறுப்பினரே மனமுவந்து கொடுத்தால் ஏற்கலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கேட்டால், அதைக் கொடுப்பதற்கு எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஏனென்றால் எனக்குப் ஒருவர் கொடுத்தது தான் அது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இவ்வளவு மதிப்புள்ள கல் இந்த 72 வயதில் எனக்கு எதற்கு?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சரிடத்திலே இந்தத் தொழில் இலாக்கா இருக்கிற காரணத்தால், இந்தத் துறையிலுள்ள அதிகாரிகளை ஊக்குவித்து, இப்படிப்பட்ட கற்களை எடுத்து, அரசாங்கமே வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு வியாபாரம் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஒரு கொள்கையை அறிவித்தார்கள். இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கருங்கற்களை வெட்டும் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே, இந்த ஆண்டு டான்சி நிறுவனம் ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக் கல்லை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு ஒப்பந்தம் செய்திருப்பதாகவும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 82. ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கறுப்புக் கல் வெட்டி எடுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கமே இதைச் செய்வதை நான் வரவேற்கிறேன். நம்முடைய நாட்டிலே இருக்கிற அந்தக் கறுப்புக் கல் எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்றால், உலகத்திலே ஜப்பானாக இருந்தாலும், இங்கிலாந்தாக இருந்தாலும், ஜெர்மனி யாக இருந்தாலும், எந்தெந்த நாடுகளில் எல்லாம் தேவை என்று சொல்லுகிறார்களோ, அந்த நாடுகளுக்கெல்லாம் ஆயிரம் ஆண்டுகளுக்கு சப்ளை செய்யக்கூடிய அளவுக்கு நம்முடைய நாட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது வரையில் தி. மு. க. அரசாங்கமும், தனியாரும் கண்டு பிடித்தது 120 குவாரிகள்தான். இன்னும் 530 குவாரிகள் கண்டு பிடிக்கப்படாமலே இருக்கின்றன. கன்னம் கிராமத்தில் இருப்பது சிறந்த குவாரி என்று வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்ற தகவல் இன்றைக்கு இருக்கிறது. இப்படி 700 க்கும் மேற்பட்ட குவாரிகள் தமிழகத்திலே இருக்கும்போது, அதைவெட்டியெடுக்கக் கூடிய பணியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது எனபதை நான் வரவேற்கிற நேரத்தில், அரசாங்கத்திற்கு ஒருவேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் டான்சி நிறுவனத்திற்கு ஆயிரம் கன மீட்டர் அளவுள்ள கறுப்புக் கல்லை வெட்ட மூலதனம் ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிற தென்றால, நம் நாட்டிலுள்ள 700 குவாரிகளையும் வெட்ட 21 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த அளவுக்குப் பணம் நம்முடைய அரசாங்கத்திலே இல்லை. ஆகவே ஒரே இடத்தில் 50 ஏக்கர், 100 ஏக்கர் பரப்பளவில் வெட்டினால் வேண்டிய பொருளும் கிடைக்கும். அரசாங்கத்திற்கு நஷ்டமும் இருக்காது. ஒரு ஏக்கர்,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 27

ஐந்து ஏக்கர் என்று உள்ள குவாரிகளை வெட்டினால் நஷ்டம்தான் வரும். ஆகவே அரசாங்கம் நஷ்டப்படாமல் இலாபத்தில் செயல் பட வேண்டுமென்று சொன்னால் 50 ஏக்கருக்கு அதிகமான நில பரப்பில் உள்ள குவாரிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு மற்ற வைகளை சிறுதொழில் செய்கிறவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டு மென்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

அதிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களாக இருந்தால், எடுத்து விடுங்கள். நான் விசாரித்த அளவில் மூன்று நான்கு பேர்கள்தான் திராவிட முன் னேற்றக் கழகக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனும் கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்தக்கட்சியையும் சேராதவர்கள் எல்லாம் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் காரர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதை தேசியமயமாக்குவோம் என்று சொன்னால், வேண்டுமானால் தி. மு. க. காரர்களுக்குக் கொடுக்க வேண்டாம்; மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் சிறு தொழிலை ஊக்குவிக்கலாம். அதன் மூலம் இருபதினாயிரம் குடும் பங்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கிரானைட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு குறிப் பிடும்போது. இப்படிப்பட்ட சிறிய தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டியதில்லை என்று சொல்கிறது. கிரானைட் போன்ற பொருள்களை தனியார் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதிக் கிறது. அவர்கள் சட்டதிட்டங்களின்படி. இந்தியா விலேயே நம்முடைய மாநிலத்தில்தான் அந்தத் தொழிலை தனியார் யாரும் செய்யக்கூடாது என்கிறார்கள். அப்படிச் சொல்லியதன் விளைவு, இந்த நாட்டில் அந்தத் தொழில் செய்தவர்கள் கருநாட கத்திற்கும் ஆந்திராவிற்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் எந்த மலையை எடுத்து தொடர்ந்து எப்படித் தொழில் செய்வது என்று பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து வருகிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்தில் கிடைக் கின்ற, அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகிற இந்தப் பொருள் கள் கிடைக்கின்ற இடத்தைப் பொறுத்தவரையில், ஐம்பது ஏக் கருக்கு மேற்பட்ட நிலங்களை மட்டும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மற்றவைகளைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யாருக்காகவும் நான் வாதாடவில்லை. இந்த நாட்டுத் தொழிலாளர்களின் சார்பில் கேட்டுக்கொள் கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சிக் கொள்கைக் குறிப்பில் ஒரு அருமையான கருத்தைச் சொல்லியிருக் கிறார்கள். இந்த நாட்டில் பல தொழில்களை ஆரம்பிக்கிறவர்கள்

1978 மார்ச் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நாளடைவில் நிர்வாகத்தினுடைய கோளாறு காரண மாகவோ, வேறு காரணமாகவோ தொழிலில் நலிவடைந்து விடு கிறார்கள். அப்படி நலிவுற்ற தொழில்களுக்கு அரசு உதவி செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். 1969-ல் அப்படி ஒரு கொள்கை அறிவிக்கப்பட்டு பல நலிந்துபோன தொழில்களுக்கு அரசாங்கம் உதவி செய்திருக்கிறார்கள். 1969-க்குப் பின்னால் ஒரு நிலைமை ஏற்பட்டு அது செயலாக்கப்பட்டிருந்தால், 1975 வரையில் செய்த அனைத்தும் ஊழல்கள் என்பார்கள். அப்படி ஏதாவது உதவி செய்திருந்தால், அதில் ஏதாவது தவறு நடந்திருக்கும் என்று வாதிடப்பட்டது. இன்றைய தினம் சக்தி பைப் போன்ற கம்பெனிகளுக்கு 1969-ல் ஏற்படுத்தப்பட்ட கொள்கையின் அடிப் படையில் அரசாங்கம் உதவி செய்து, அதை நடத்த வேண்டு மென்று முயற்சித்து இடையில் என்ன காரணத்தாலோ அது மீண்டும் நலிந்துபோயிருக்கிறது. எந்த முயற்சியும் அதன் பேரில் எடுக்கப்படவில்லை. இந்த ஆண்டு சில தொழில்களை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அது நியாயமா தவறா என்று கேட்கவில்லை. நலிந்துபோன தொழில்கள் எதுவானாலும் அரசாங்கம் அவற்றிற்கு உதவி செய்து காப்பாற்ற வேண்டுமென்பது நாங்கள் சார்ந்துள்ள கட்சியின் கொள்கை. அது தவறு என்று சொன்னவர்கள், அதில் ஊழல் நடந்தது என்று சொன்னவர்கள் சக்தி பைப் போன்ற நிறு வனங்களுக்கு உதவி செய்தது மோசடி என்று சொன்னவர்கள் 1977-78-ல் சதர்ன்ஸ்விச் கீர் லிமிடெட், (Southern Switchgears Ltd.) சௌத் இந்தியா கிளாஸ் எனமல்வர்க்ஸ் South India Glass & Enamel Works) ரவீந்திரா மில்ஸ், கோயம்புத்தூர், (Ravindra Mills Coimbatore) மது ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ், கோயம் புத்தூர், (Madhu Spinning & Weaving Mills, Coimbatore) பிரகாஷ் மில்ஸ் லிமிடெட் கோயம்புத்தூர், (Prakash Mills Limited, Coimbatore), கோயம்புத்தூர், கமலா மில்ஸ் (Coimbatore, Kamala Mills Limited) சோமசுந்தர சூபர் ஸ்பின்னிங் மில்ஸ், இராம நாதபுரம் (Somasundara Super Spinning Mills, Ramanathapuram). இப்படிப்பட்ட இந்த நாட்டிலுள்ள மில்களை நலிவு பெற்ற தொழில்கள் என்ற தலைப்பில் எடுத்து அதில் ரவீந்திரா மில்ஸ்க்கு ரூ. 15 லட்சம், மது மில்ஸ்க்கு ரூ. 34 லட்சத்து 33 ஆயிரம் இன்றைய தினம் உதவி செய்திருக்கிறார்கள். இதை தவறு என்று நான் வாதாட விரும்பவில்லை. ஆனால் இதையே நாங்கள் செய் தால் தவறு என்று சொல்வார்கள். இவ்வளவு தாராளமாக இந்த ஏழெட்டுத் தொழில்களுக்கு உதவி செய்தவர்கள் ஏன் இன்னும் சக்தி பைப்பில் கவனம் செலுத்தவில்லை? இதைக் கேட்கும்போது, சக்தி பைப் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அதை மாற்றியமைத்து புத்துயிர் அளிப்பதுபற்றி மத்திய அரசு தொழில் துறை அமைச்சகம் பரிசீலிக்கிறது என்று சொல்கிறார்கள். இவற்றைப்பற்றித் தொழிலாளர்கள் முதலமைச்சரையும், தொழி லாளர் நல அமைச்சரையும் சந்தித்து தங்கள் குறைகளைச் சொல்ல முயற்சிக்கிறார்கள். தொழிலாளர் நல அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு அவர்களின்

பிரச்சினையைக் கொண்டு வர ஒரு நாள் போராட்டம் நடத்தினர்
கள். இவ்வளவும் நடந்ததற்குப் பின்னும், மத்திய அரசு
அதைக் கவனிக்கும் என்று சொன்னல், அது முறைதானு என்
பதை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எதைச்
செய்தாலும், அது தி. மு. க. காரர்களுக்காகச் செய்யப்பட்டது,
அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்காகச் செய்யப்பட்ட உதவி
என்றெல்லாம் சொல்லப்பட்டது. 1975-76-ல் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் டிக் நிறுவனத்தின் மூலமாக
ரூ. 1,62.88 லட்சம் கடன் உதவி செய்யப்பட்டது. 1977-78ல்
இந்த ஆட்சியில் ரூ. 126.69 லட்சம் கடன் உதவி செய்திருக்
கிறார்கள். டிக் நிறுவனம் என்பது ஒரு லட்சம் அளவில்
தொழில்களுக்குக் கொடுக்கக் கூடிய வசதியுள்ள ஒரு நிறுவன
மாகும். நாங்கள் சிறையில் இருந்தபோது, நடுநிலைப் பத்திரிகை
ஒன்று இரண்டு காலம் செய்தி போட்டு தி. மு. க. காலத்தில்
டிக் மூலமாக தி. மு. க. காரர்களுக்கே உதவி செய்யப்பட்டது
என்றும் 1·60 லட்சம் 200 லட்சம் என்றும் செய்தி போட்டார்
கள். இப்போது அண்ணு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
1'76 லட்சம் கொடுத்திருக்கிறீர்களே, இதை அத்தனையும் அந்தக்
கட்சிக்காரர்களுக்கே கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னல்,
அது நியாயமாகுமா? ஒரு அரசாங்கம் பொறுப்பில் இருக்கும்
போது எதைச் செய்தாலும், அதில் நோக்கம் கற்பிப்பது
முறையல்ல. தொழில்கள் பெருக வேண்டுமென்பதில் கொள்கை
வேறுபாடு, அரசியல் வேறுபாடு இருக்கக்கூடாது. எனவே யார்
தொழில் ஆரம்பித்தாலும், அது இந்த நாட்டின் நல்வாழ்விற்கு,
நன்மைக்கு, வளர்ச்சிக்கு என்ற நல்ல எண்ணம் இருக்க வேண்டும்.
இதற்கு முந்திய ஆண்டு 1977 முடிய சிறு தொழில்களும் அந்தத்
தொழில்களுக்குக் கடன்களும் என்ற தலைப்பில் ரூ. 69 கோடி 90
லட்சத்து 60 ஆயிரம் டிக் மூலமாகக் கொடுக்கப்பட்டது. அதில்
எவ்வளவு திரும்பப் பெற்றூர்கள் என்றுல் நம்முடைய முதல
மைச்சர் அவர்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கிறோம் என்றும்
ஆனல் அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள் என்றும் சொல்
வார்கள். எப்படிக் கோர்ட்டுக்குப் போகிறார்கள்? இதில் என்ன
நியாயம் இருக்கிறது என்று அரசாங்கம் பரிசீலிக்க வேண்டாமா?
பத்துப் பன்னிரண்டு ஆண்டு காலமாக கடன் வாங்கியவர்கள்
திருப்பிக் கொடுக்காமல் வட்டிகூட செலுத்தாத நிலைமையில்
இருக்கக் காரணம் என்ன, வட்டி கட்டுவதற்குக் கூட தவணை
முறை கேட்கிறார்களே எதற்காக? டிக் எப்படி அதை அனுமதிக்
கிறது? அதே சமயத்தில் மூலதனக் கடன் வாங்கிய சிலர் இன்ஸ்
டால்மெண்டிலே கேட்கிறோம் என்று சொல்லும்போது, அவர்
களுக்கு மறுக்கப்படுகிறது. இந்த அளவுக்கு வேறுபாடுகளோடு
செயல்படுவது முறைதானு என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் முதலமைச்சர்
கொடுத்துள்ள புள்ளி விவரப்படி சர்க்கரை ஆலைகள் 20 இருக்
கின்றன. கூட்டுறவுத் துறையில் 9, பொதுத்துறையில் 1, தனி
யார் துறையில் 10 என்று இருக்கின்றன. தனியார் துறையில்
உள்ள பத்து ஆலைகள் எபபடி இயங்குகின்றன என்பதை முதல்
அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மற்ற அமைச்சர்களும் அறிந்
திருக்கக் கூடும். பொதுத் துறையில் உள்ள சர்க்கரை ஆலை
கள் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நியாயமான
விலையைக் கொடுப்பதில்லை. இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்
களைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தில் தனியார்
துறையில் உள்ளவர்கள் குறைத்துக் கொடுக்கிறார்கள். நம்முடைய
அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் வைத்துக்கொண்டிருக்கிற
ஆம்பூர் சர்க்கரை ஆலையில் ரூ. 127 கொடுக்கிறார்கள், 117
ஒத்துக் கொண்டிருக்கிறோம். மதுராந்தகம் ஆலையில் ரூ. 115
கொடுக்கிறோம், ரூ. 124 ஒத்துக் கொண்டிருக்கிறோம். அமரா
வதி ஆலையில் ரூ. 110 கொடுக்கிறோம். அதை அதிகப்படுத்திக்
கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறோம். பாரி கம்பெனி லாபத்
தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கோடிக் கணக்கில் வருமானம்
பெறுகிறது. அரசாங்கத் துறையாக இருந்தாலும், பரவாயில்லை,
அது தனியார் துறைதான். ஒரு டன்னுக்கு ரூ. 100 தான்
கொடுக்கிறது. காவேரி சர்க்கரை ஆலை ரூ. 105-ம் டெக்கான்
ரூ. 110-ம் தென்னிந்திய சர்க்கரை ஆலை ரூ,100-ம் கொடுக்கின்றன.
விவசாயிகள் எவ்வளவோ இன்னல்களுக்கு இடையில் உற்பத்தி
செய்கிற கரும்புக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று
சொல்லப்படுகிற நேரத்தில், அரசாங்கத்தின் கூட்டுறவுத் துறை
யில் உள்ள ஆலைகள் ரூ. 127, 125 என்று கொடுக்கின்ற அதே
சமயம் தனியார் துறையினர் மட்டும் 100 என்றும் 105 என்றும்
கொடுப்பது நியாயமா என்று கேட்டால், இவ்வளவுதான்
கட்டுப்படியாகிறது என்றும் ரெகவரி ஆகவில்லை என்றும் சொல்
வார்கள்.

(முற்பகல் 11-10)

அந்த ரெக்கவரி கணக்கு 'போகஸ்' கணக்கு. வேண்டு
மானல் நீங்கள் அரசாங்கத் தரப்பில் ஒருவரை நியமித்து
இதைப் பரிசீலிப்பீர்களானல், அவர்கள் காட்டுவது நியாய
மான கணக்கா போகஸ் கணக்கா என்பதைக் கண்டுபிடிக்க
முடியும். கூட்டுறவுத் துறையில் அரசாங்கம் சர்க்கரை ஆலை
நடததிக் கொண்டிருக்கிறது. தனியார் துறையில் 10 சர்க்கரை
ஆலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி நடத்
தப்படும் தனியார் சர்க்கரை ஆலைகளான 10 ஆலைகளில்
கோடிக் கணக்கான ரூபாய் லாபம் பெற்றும், ஏழை விவசாயி
களுக்குக் கிடைக்க வேண்டிய லாபம் கிடைக்காமல், அவர்
களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் அவர்களுக்குச்
சேரவேண்டிய பங்கு கிடைக்காமல் இயங்கிக் கொண்டிருக்கிற

சூழ்நிலையை மாற்றும் வகையில் அரசாங்கத்திற்கு நான் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கமே அந்த தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொண்டு நடத்தவேண்டும். அரசாங்கமே அந்த தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொண்டு நடத்தினால்தான், ஒரு நியாயமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். அப்போதுதான் நாட்டு மக்களுக்கும் இங்கே உற்பத்தியாகக் கூடிய உண்மையான சர்க்கரை உற்பத்தி யின் அளவும் தெரியும். அதனுடைய பலனும் அப்போதுதான் நாட்டு மக்களுக்குக் கிடைக்கும். எனவே சர்க்கார் இந்தத் தனியார் சர்க்கரை ஆலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போலவேதான் சிமிண்ட் தொழிற்சாலையும். அரசாங்கமே அனைத்து சிமிண்ட் தொழிற்சாலைகளையும் மேற்கொண்டால், நாட்டு மக்களுக்கு நல்ல பலன் விளையும்.

சர்க்கரை ஆலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையில் ஒரு டன் கரும்புக்குக் கொடுக் கப்படும் விலை 117-00 ரூபாய், என்று இங்கே கொடுக் பட்டுள்ள கொள்கைக் குறிப்பின் 204-வது கொடுக்கப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் 200-வது பக்கத்திலே கப்பட்டுள்ள இணைப்பில் ஆம்பூர் சர்க்கரை ஆலையில் கொடுக் ஒரு டன் கரும்புக்குக் கொடுக்கப்படும் விலையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் புள்ளி விவரத்தில் ரூ. 127 விஷயம். ஏதோ குறை சொல்லுவதற்காக நான் இதை உள்ள குறிப்பிட விரும்பவில்லை. ஒரு வேளை இது அச்சுப் இங்கே கூட இருக்கும். எனக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் பிழையாகக் ஆம்பூர் சர்க்கரை ஆலையில் வழங்கப்படும் விலை உள்ள அங்கே டன் ஒன்றுக்குக் கரும்புக்கு கொடுக்கப்படும் விலை தெரியும் இப்படி ரூ. 127 கொடுத்துக் கொண்டிருக்கும்போது ரூ.127, கொடுக்கப்படுவதாகப் புள்ளிவிவரத்தில் போடுவதன் ரூ. 117 உறுப்பினர்களைக் குழப்பாமல் இருக்க வேண்டும் என்று மூலம் கொள்கிறேன். எனவே இந்த அளவுக்கு விலைகளைக் கேட்டுக் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்க கொடுத்து, தனியார் துறையில் உள்ள ஆலைகளையும் வேண்டும். கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள அரசாங்கமே மேற் விரும்புகிறேன்.

கருங்கல் என்று சொல்லப்படுகிற 'கிரானைட்' தொழிலின் கூட கவனம் செலுத்துகிற இந்த அரசாங்கம் சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் சர்க்கரை ஆலைகள்மீது, மிகுந்த அதிக லாபத்தைத் தருகிற இந்தத் தொழிலில் கவனம்

செலுத்த வேண்டும். இவைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974-75 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள கரும்பு ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 3,85,287டன்னாக இருந்திருக்கிறது. ஆனால் இது என்ன காரணத் தாலோ 1976-77 ஆம் ஆண்டில் அதாவது கடந்த ஆண்டில் 3,21,546 டன்னாகக் குறைந்திருக்கிறது. இவ்வாறு சர்க்கரையின் உற்பத்தி குறைந்ததற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பதிலுரையில் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டு றவுத் துறை நிறுவனங்களுக்குச் செய்த முதலீடுகள் என்ற வகையில் புள்ளிவிவரங்களை இந்தத் தொழிற்துறைக் கொள்கைக் குறிப்பின் 160-வது பக்கத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதிலும் "(ஈ) நலிந்த நிறுவனங்களிலும் பிற தொழில்களிலும் முதலீடுகள்" என்ற தலைப்பின்கீழ் 6-வது வரிசையில் தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாக ரூ.13,76,000 அரசாங்கத்திலே கொடுத்திருக்கிறார்கள். இது அல்லாமல் கடன் தொகையாக ரூ. 22,75,000 கொடுத்திருக் கிறார்கள். ஆக மொத்தம் ரூ. 36,51,000 அரசாங்கத்தால் இந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்த்தியமாக ஒன்றைச் சொல்லக் கூடும். இதை நாங்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு கொடுக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டது இந்தத் தொகை என்று சொல்ல லாம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அகில இந்தியாவிலும் மொத்தம் 4 இடங்களில் இப்படிப்பட்ட ரப்பர் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும் என்று வாதாடி, 4 இடங்களில் ரப்பர் தொழிற்சாலைகளை அமைத்தார்கள். அதில் ஒன்று அப்போலோ டயர்ஸ், டெல்லி இரண்டாவது 'ஜே. கே. டயர்ஸ்' - மகாராஷ்டிரம். மூன்றாவது விக்ராந்த் டயர்ஸ், பெங்களூர். நான்காவது, தமிழ்நாட்டில் உள்ள இந்தத் தமிழ்நாடு ரப்பர் லிமிடெட், இப்படி ஆரம்பிக் கப்பட்ட ரப்பர் தொழிற்சாலைகளில் மூன்று தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அயல் மாநிலங்களில் உள்ளவை. அந்த மூன்றும்-உரிமம் பெற்று ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள் கிடைக் காமல், அவைகளுக்கு வேண்டிய மற்ற வசதிகள் இருந்தும்கூட இன்றைய தினம் நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க 30 கோடி ரூபாய் முதலீடு தேவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 30 கோடி ரூபாய் மூலதன பெற்று மூன்று இடங்களில் ஆரம்பிக்கப்பட் இந்த ரப்ப

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 மார்ச் 27

தொழிற்சாலைகள் ஒரு பக்கத்தில் நடத்தப்படாமல், அவைகள் போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில் நம் நாட்டில் நாம் ஒரு தொழிற்சாலையை நடத்த வேண்டும் என்றால், அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு அப்போது கொண்டுவந்த நேரத்தில் முதலீடு போடுவதற்கு, திரு. நாகராஜன் என்பவர் முன் வந்தார். அவர் என்ன சொன்னார் என்றால், நான் 3 கோடி ரூபாய் முதலீடு செய்கிறேன். எனக்கு அரசாங்கம் ரூ. 2 கோடி மூலதனப் பங்காகத் தரட்டும். இந்த ரூ. 5. கோடியை வைத்துக்கொண்டு மீதமுள்ள ரூ. 25 கோடியில் ரூ. 20 கோடியைக் கடனாகப் பெற்று மற்ற 5 கோடி ரூபாயைப் பங்குதாரர்கள் மூலமாக நான் சேர்த்து இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று ஒரு பிராஜக்ட் ரிப்போர்ட்டைக் கொடுத்தார். அரசாங்கத்தில் அதை ஏற்றுக்கொண்டு இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்த எல்லாவிதமான முயற்சிகளும் நடைபெற்றன. ஆனால் இடையில் இந்தத் தொழில் நடத்த வாய்ப்பில்லை: ஏனென்றால் மலேசியாவில் இருந்து இந்தத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள் கிடைக்கும் என்று தரப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டு, மூலப் பொருள் கிடைக்காது என்ற சூழ்நிலை ஏற்பட்டதால், இந்தத் தொழிற்சாலையைத் துவக்குவதிலும் தொடர்ந்து நடத்துவதிலும் கொஞ்சம் காலதாமதம் ஆனது. பிறகு அவர் இதை எங்களால் நடத்த முடியாது, அரசாங்கமே ஏற்று நடத்தட்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனால் நமது அரசாங்கம் வேண்டுகாரத்தனமாக நாம் ஏற்கெனவே ரூ. 36 லட்சம் கொடுத்திருக்கிறோம். இன்னும் அதிகமான மூலதனத்தைப் போட்டு, இந்தத் தொழிலில் நட்டம் வந்தால், இதற்கு யார் பதில் சொல்வது என்று எண்ணி, திரு. நாகராஜன் அவர்களைப் பார்த்து, நீங்களே வேண்டுமானால் இந்தத் தொழிலை ஏற்று நடத்துங்கள், நாங்கள் கொடுத்துள்ள ரூ. 36,51,000-க்கு எங்களுக்கு ஷேர் கொடுத்து விடுங்கள் என்று அரசாங்கம் சொன்னது. இடையில் அதைப் பற்றிப் பேச்சே இல்லை. இப்போது எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல் அரசாங்கமே ஏற்று நடத்தப் போவதாகத் தெரிகிறது. அதை நாங்கள் கேள்விப்படுகிறோம். நலிந்த நிறுவனங்களுக்கு அவ்வாறு உதவி செய்வது போல் செய்தாலும் சரி அல்லது அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்துவதாக இருந்தாலும் சரி, ஒன்றை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தியாவின் மற்ற 3 மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்ட 3 தொழிற்சாலைகள் இன்றையதினம் நடத்தப்பட முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது, ஏற்கெனவே அரசாங்கம் ரூ. 36 லட்சம் வரையில் கடனாக உதவியிருக்கும் போது, மலேசியாவில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற அந்தத் தனியார் தம்மாலேயே நடத்த முடியாது என்று சொல்லுகிற

1978 மார்ச் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நிலையில் அதை அரசாங்கத்தின்மீது சுமத்துவது என்பது சரியில்லை. இப்படி ஆரம்பித்தால், பிறகு எதிர்காலத்தில் அரசாங்கம் கஷ்டப்படும். ஆகவே பின்னாலே அரசாங்கம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடாது என்று முன்கூட்டியே நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு ஒரு யோசனையாகச் சொல்லுகிறேன். வேண்டுமானால் தனியாரே இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கட்டும். அரசாங்கம் முடிந்தால் உதவி செய்யட்டும். அதை விட்டுவிட்டு தனியார் ஒருவரைக் காப்பாற்ற அரசாங்கம் அதில் தலையிட்டு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரியில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ரப்பர் லிமிடெட் தொழிற்சாலையைப்பற்றி ஒரு தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஏதோ அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்று நடத்த இருப்பதாக ஒரு தகவல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தகவல் எங்கேயிருந்து கிடைத்தது, யார் அந்தத் தகவலைக் கொடுத்தார்கள் என்று சொன்னால், இந்த அரசுக்கும் அவைக்கும் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் இங்கே விளக்கம் கேட்டார்கள். நான் இடையில் குறுக்கிடக்கூடாது என்று விரும்பினாலும், குறுக்கிட வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தமக்கு எங்கேயிருந்து அந்தத் தகவல் கிடைத்தது என்பதைச் சொல்லி அது இங்கே குறிப்பிட்டால் பதிவு செய்யப்படுவது நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்களைத் தொடர்ந்து பேச அனுமதிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: என்னுடைய பேச்சைக் கவனித்துக் கேட்டால் தெரியும். நான் இதை குறை யாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு குறை சொல்லுவதை வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நீங்கள் குறை சொல்வதை வரவேற்பீர்கள் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நான் இந்த யோசனையைச் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட எண்ணம் இருக்குமானால், அதை நீங்கள் ஊக்குவிக்கிறீர்கள் என்று நான்

கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தனியாரிடமிருந்து அரசாங்கத் துறையில் அந்தத் தொழிற்சாலையை ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று சொல்லவில்லை. அரசாங்கக் குறிப்பில் ரூ. 36,51,000 மூலதனமாக, பங்குத் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போட்டுத்தான் நீங்கள் அந்தத் தொழிலை ஏற்றுக்கொண்டீர்கள். அவர்கள் நடத்த வேண்டுமென்றும் நீங்கள் உதவி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் [illegible] நீங்கள் உதவி செய்ய [illegible] நிறுவனம் என்ற நிறுவனத்திற்கு உதவி செய்கிறீர்கள். இந்தியா மீட்டர்ஸ் நான் [illegible] சொல்வேன்! [illegible] மூலமாக 375 பேருக்குத் தொழில் வேலைவாய்ப்பு [illegible] அந்தத் தொழிலுக்கு [illegible] அரசாங்கம் [illegible] துறையின் [illegible] பாதுகாப்பு கொடுக்க வேண்டும் [illegible] அந்த மீட்டர்களை [illegible] [illegible] நீங்கள் [illegible] வருகிறது என்றும், பின்னால் [illegible] முதலமைச்சர் அவர்களே [illegible] அரசாங்கத்திற்கு [illegible] என்று நீங்கள் சொல் [illegible] இதைச் சொல்லுகிறேன். அதே [illegible] செய்யக்கூடாது என்று அனுமதி [illegible]... அடுத்து மெட்ராஸ்

பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஏழு நிமிடங்கள் [illegible] இருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-20)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மெட்ராஸ் அலுமினியம் கம்பெனியைப் பற்றிப் பல முறை இம்மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய அளவில் தொழில் இலாகா செயலாளர், பி. டபிள்யு. டி. செயலாளர் முதலியவர்கள் 20-3-78 அன்று மெட்ராஸ் அலுமினியம் கம்பெனிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அங்கிருப்பவர்களை ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டோ எவ்வாறோ ஒரு புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகம் பொறுப்பேற்றதன் மூலம் எதிர் காலத்தில் மின்சார இலாகாவிற்கு வரவேண்டிய பணம் வந்துவிடும் என்று நம்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்களையும் அவ

குடைய பிள்ளையையும் அந்த [illegible] கொடுக்க [illegible]கள், அதற்கு [illegible] அவர்களை தலைவராக [illegible] மிக்கப் படுவதாக [illegible] வந்திருக்கிறது. [illegible] தவிர வேறு [illegible] கிடைக்க வில்லையா? அது கெடும் செய்வதாக இருக்குமாகும். நான் [illegible] கிறேன் [illegible] போடுவதாக இருந்தால், [illegible] தொழில் துறையில் [illegible] ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். [illegible] தொழில் துறையை நமது [illegible] நடத்துவதற்கு தலைவராக நியமித்து, அது வியாபாரமாக நம்முடைய அரசாங்கத்திற்கு நல்ல முறையில் பலன் கிடைக்கக்கூடிய அளவு [illegible] வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Mr. Deputy Chairman, Sir, I commend the very exhaustive report in the Policy Note on Industrial Development in our State. The Industrial Development of our State has been the aspiration of many people who are working for the development of our State and it has also been the hope of many who would like to be employed.

As I am very closely connected with the Industrial Co-operative for Women being its President I would like to bring one matter to the notice of our Chief Minister who has been very frequently saying that the welfare of women especially the widows is his first concern about which we are very happy. This particular industrial co-operative has got about 150 to 200 destitute women and widows to whom we give orders through 18 primary societies which are spread all over the City of Madras. These orders are received by us from private individuals also but mostly they are I.T.I. orders. Very recently, these I.T.I. orders have been suddenly stopped. I fear—I am not sure whether it is true—that now labour is creating trouble and that they want the uniforms in the form of money or cloth. I would like to state that if workers want to receive this benefit in the form of uniforms there is something binding on these women workers also. If they receive it as money or cloth, the orders to these industrial co-operatives, which are serving especially the poor women, will be curtailed and naturally the overall turnover will become small resulting in the women not getting enough wages for their sustenance besides the bonus quantum also being reduced. I would be grateful to the Labour Department and also the Minister for Labour to whom I have made an appeal if they continue these orders so that the industrial co-operative societies could be benefited. I would appeal to the Chief

Minister who is in charge of Industries to press upon the Labour Department that such orders should be given to these women's industrial co-operative societies so that they could be strengthened in such a way as to be of help to these deserving women.

Thank you.

<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப் :</u> துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நம் மாநிலத்தில் தொழில் துறையில் திருப்திப் படுவதற்குத் திட்டியுள்ள பல திட்டங்கள் வருங்காலத்தில் நம்முடைய மாநிலத்திற்கு நல்ல மேம்பாட்டை அளிக்கக் கூடிய திட்டங்களாக இருக்கின்றன என்பதை அறியும்போது, இந்த முயற்சிக்காக நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். நம்முடைய மாநிலம் இன்றைக்கு தொழில் துறையில் விருத்தி அடைந்த நிலையில் இருந்தாலும், ஒரு விவசாய மாநில மாகத்தான் அனைவரும் கணக்கில் எடுக்கிறார்களே தவிர, தொழில் மாநிலம் என்ற நிலையில் இல்லை. சமீப காலத்தில் நான் பஞ்சாப் மாநிலத்திற்கு ஒரு குழுவில் சென்றிருந்தேன். அங்கே உள்ள நிலவரத்தை விசாரிக்கும்போது, அங்கு சொன்னார்கள், சில ஆண்டுகளுக்கு முன் பஞ்சாப் மாநிலத்தில் பிரதான தொழில் எது என்றால், இரண்டு தொழில்கள்தான். ஒன்று விவசாயம். இரண்டாவது இராணுவத்தில் சேருவது. பஞ்சாபி ஒன்ன வாலிபர்கள், பெருவாரியான வாலிபர்கள் இராணுவத்தில் சேருவார்கள். மற்றவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவார்கள். இதுதான் அவர்களுடைய மாநிலத்தின் பிரதான தொழிலாக இருந்தது ஒரு காலத்தில். ஆனால் நாளடைவில் அவர்கள் தொழிலின் பால் கவனம் செலுத்தி அந்த மாநிலம் வெகுவாக முன்னேறி இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு படி தொழில் மாநிலமாக பஞ்சாப் உருவாகி இருக்கிறது. நல்லிருந்த பார்க்கும்பொழுது, நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதற்கு பக்கத்தில் ஹரியானா மாநிலம் உண்டு. அந்த மாநிலத்தில் பாரிதாபாத் இண்டஸ்டிரியல் எஸ்டேட் இருக்கிறது. அது மிகவும் புகழ் வாய்ந்த மாநிலம். ஆனால் அந்த நகரத்திலே நான் விசாரித்ததில், 1600 தொழில்கள் அங்கே இயங்குகின்றன என்று சொன்னார்கள். பாரிதாபாத்தைப் பார்த்து நான் பாராட்டினேன். அதே சமயத்தில் அதற்குப் பக்கத்திலுள்ள பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானாவிற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த நகரத்தில் எவ்வளவு தொழில்கள் இருக்கின்றன என்றால், பாரிதாபாத்தைப் போன்று பத்து பங்கு அதிகமான தொழில்கள் அந்த மாவட்டத்தில் இருக்கின்றன.

அந்த அளவுக்கு அவர்கள் விருத்தி அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் பொழுது, உண்மையிலேயே நான் பாராட்டினேன். லூதியானா என்ற ஒரு மாவட்டத்தில் உள்ள அளவுக்கு பல மாநிலங்களில் இல்லை. இந்தியாவிலேயே இல்லை என்ற நிலையை நாம் பார்க்கிறோம். நம் மாநிலம் பஞ்சாபைப் போல் தொழில் துறையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. நம்முடைய மாவட்டங்களில் உள்ள அதிகாரிகள் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிறார் கள். ஆனால் நான் சொல்லக்கூடிய குறை என்னவென்றால், செயல்படக்கூடிய பழைய தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்களே தவிர, புதிதாகத் தொழில் துவக்க முற் படுபவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற போக்கு சரியாக இல்லை. அவர்கள் உண்மையிலேயே புதிதாகத் தொழில் துவங்குகிறவர் களுக்கு அனுசரணையாக உபதேசங்கள் சொல்லி ஆதரவு கொடுக்க வேண்டும். பஞ்சாப் விருத்தி அடைந்தது என்றால், அங்கே அதிகாரிகள் சின்னச் சின்ன சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒரு இண்டஸ்டிரியல் செண்டரில் இத்தனை அடி ஜன்னல், இத்தனை அடி இடம் இருக்க வேண்டுமென்று சட்டங்கள் இருக்கின்றன. கழகத்தில் கடுமையாக அந்தச் சட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன. வடக்கு மாநிலங்களில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சின்ன விஷயங்களுக்கெல்லாம் விட்டுக் கொடுத்து எப்படியாவது தொழில் நடக்கட்டும், மாநிலம் விருத்தி அடையட்டும் என்று எண்ணுகிறார்களே தவிர, நம் மாநிலத்தில் ஒரு சட்டத்தோடு அங்கே சொல்கிறார்களே தவிர, நம் மாநிலத்தில் ஒரு சின்னக் குறை இருந்தாலும், தடை போடுகிறார்கள். அந்த மனப் பான்மை மாற வேண்டும். புதிதாகத் தொழில் துவக்க முன் வரு பவர்களை அரசு அதிகாரிகள் ஊக்குவிக்க அவர்களுக்கு, அரசு குறிப்பு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நடத்துபவர்கள் வங்கிகளிலும் அரசாங்கத்தின் கழகங்களிலிருந்தும் கடன்கள் பெறுவது இயற்கை. அந்தக் கடன்களை வாங்குவதற்கான சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையான நிலைமையை உண்டாக்குகின்றன. மற்ற மாநிலங்களில் சுலபமாகக் கடன்கள் கிடைக்க வகைகள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே இவர்கள் போட்டிருக்கின்ற சட்டங்களின் முறையைப் பார்த்தால் கடன் வாங்குவதென்றால், கடனே வேண்டாம் என்று போகக்கூடிய நிலை இருக்கிறது. இந்தச் சட்ட திட்டங்கள் சுலபமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மாநிலம் இன்றைக்கு விவசாய மாநிலமாக இருக்கக் கூடிய மாநிலம். தொழில் மாநிலமாக மாறக் கூடிய நிலை வந்து வேலை வாய்ப்பு இல்லையென்ற நிலை மாறி, நாம் மிகவும் உயர்ந்த நிலை அடைய வாய்ப்பு இருக்கிறது.

[திரு கே. எஸ். அப்துல்வகாப்] [1978 மார்ச் 27

(முற்பகல் 11-30)

நான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும் இந்தச் சபையில் இருந்திருக்கிறேன். அப்போது இந்தச் சபையிலே, திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தொழில் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் பெருமிதத்துடன் சொல்வார்கள். மாநிலப் பஞ்சாபுக்கு அடுத்ததாக, இந்தியாவில், இரண்டாவது ஸ்தானத்தில் இருக்கிறது என்று சொல்வார்கள். இரண்டாவது இடத்தையே பெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய குறிப்புகளைப் பார்த்தால்கூட, இது தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்குச் சரியாக இப்போது நினைவில்லை. ஒருவேளை 3வது அல்லது 4வது என்றுகூட இருக்கலாம். அதற்குப் பிறகு இன்றைக்கு சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு, நமது தொழில் வளர்ச்சி சரியில்லை என்பதை அறிந்து, நான் மன வேதனை அடைகிறேன். இன்றைக்கு 8வது அல்லது 11வது நிலையில் இருப்பதாகத்தான் நான் அறிகிறேன். அந்த நிலைமாற, அந்தத் தொழில் துறை நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே வந்துள்ளது ஒரு வரவேற்கத்தக்க அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் தலைமையிலே, இந்தத் துறை வெகு விரைவிலே பஞ்சாபுக்கு அடுத்த நிலைக்கு வரக் கூடிய நிலைமைகள் உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என் ஆண்டவன் விரும்பினால், பஞ்சாபுக்கும் மீறியதாக, முதன்மை நிலைக்கே வரக் கூடிய நிலைமைகள் உருவாக முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்று அளிக்கப்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக் குறிப்பிலே கிராமத் தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அரசு ஊக்குவிக்கும் கொள்கை ஒரு வரவேற்கத்தக்க கொள்கை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அதைப் பாராட்டுகிறேன். நமது அருமை நண்பர் திரு வீராசாமி அவர்கள் பேசும் போது, ஒரு கல்லைக் கொடுத்தார்கள். அந்தக் கல்லைப்பற்றி விளக்கங்களையும் கொடுத்திருக்கின்றார்கள். அந்தக் கரூர் பகுதியில் காங்கேயம் என்ற பகுதியிலே நடந்தது, எனக்குத் தெரிந்த சம்பவம். அதை எடுத்துச் சொல்கிறேன். அது பொருத்தமாக இருக்கும். ஒரு வைர வியாபாரி, கல் வியாபாரி ஒரு கல்லைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த வியாபாரி என்னிடம் நேரடியாகவே சொன்னார். காங்கேயத்திலே ஏதோ ஒரு கல் கிடைத்தது. அது ஒருவரிடத்திலே ரூ. 30 க்கு விற்கப்பட்டது. அந்தக் கல்லை 30 ரூபாய்க்கு வாங்கியவர் அதை ரூ. 500க்கு விற்றாராம். ரூ 500க்கு வாங்கியவர், அதையே சென்னைக்கு கொண்டுவந்து ரூ. 2,000க்கு விற்றாராம். அதற்குப் பிறகு அதை வாங்கியவர் அதை ஹாங்காங்குக்கு அனுப்பி ரூ. 6,000க்கு விற்றாராம். இதுபற்றி எனக்கு நேரடியாகவே தெரியும்.

1978 மார்ச் 27] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

வேண்டுமானால் அந்த வியாபாரியின் பெயரைக்கூடச் சொல்கிறேன். அதைச் சொல்வதில் தவறில்லை. அந்த மாதிரியான உயர்ந்த கற்கள், வைரக் கற்கள் காங்கேயம் பகுதியிலே கிடைக்கின்றன என்று சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தொழில்களை அரசே நடத்த வேண்டும். அரசாங்கம் தொழில்களை தேசியமயமாக்க வேண்டும் என்றால் எப்படி நடக்கும்? அங்கே கோடிக்கணக்கான கற்கள் கிடைக்கின்றன. அந்த கற்களில் ஒரு கல் வைரமாக இருக்கின்றது. அவைகளைக் கண்டு பிடிக்கத் திறமையானவர்கள் வேண்டும். அந்த வேலையிலே தேர்ச்சி பெற்றவர்கள் ஹாங்காங்கிலே ஒருவர் இருவர்தான் இருப்பதாகச் சொல்கின்றார்கள். நமக்கு அந்தக் கற்கள் சாதாரணமானவைகளாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u> : நமது நாட்டில் அதற்கு என்று படித்துப் பட்டம் பெற்றவர்கள் யாரும் இல்லை. ஜியாலஜிஸ்ட் டிப்பார்ட்மெண்டில் இருப்பவர்கள் நினைத்தால் செய்யலாம் என்றுதான் கருத்துச் சொன்னேன்.

<u>திரு கே. எஸ். அப்துல் வகாப்</u>: அந்தக் கல்லைப் பற்றி படிப்பதற்கு பட்டப் படிப்பு என்று எதுவும் இல்லை. அனுபவத்தில்தான் அவர்கள் அதற்கான தேர்ச்சியை அடைகிறார்கள். அந்தத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கோடிக் கணக்கிலே மூலதனம் இல்லை. அவர்கள் தேர்ச்சிதான் அவர்களுக்கு மூலதனம். ஆகவே அரசு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கற்கள் இருக்கும் இடங்களைக் கைப்பற்றி, அதற்கான நிபுணர்களை, அதில் தேர்ச்சி பெற்றவர்களை, அந்தத் துறை வியாபாரிகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அதை ஏற்று நடத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோல் பதனிடும் தொழில் தமிழகத்தில் ஒரு பிரதானமான தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் ஏற்றுமதியாகின்ற தோலில் 85 சதவிகிதம் தோல் சென்னையிலிருந்து ஏற்றுமதி ஆகின்றது. தமிழகத்திலே உற்பத்தியாகி ஏற்றுமதி ஆகின்றது. பாரின் எக்ஸ்சேஞ்ஜிலே பெரும் பகுதி தோல் ஏற்றுமதியின் மூலம் இந்தியாவிற்குக் கிடைக்கின்றது. இந்தத் தொழில் செய்பவர்களுக்குப் பல சிக்கல்கள் அரசாங்கத்தால் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அந்தத் தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்கள், அந்தத் தொழிற்சாலைகள் இருக்கும் இடங்களில், அந்தத் தொழிற்சாலையினுடைய கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்கு என்று ஒரு பிளாண்ட் வைக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டுள்ளது. அந்த பிளாண்ட் போடுவதற்கு

[திரு கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 27

ஒவ்வொரு தொழிற்சாலையும் லட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட வேண்டும். அப்படி மூலதனம் போட்டுச் செய்யக்கூடிய நிலைமைகள் சிலருக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக அரசாங்கத்தின் சார்பிலேகூட சில பிளாண்ட்டுகளை வைக்கலாம். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் அதைச் செய்வதற்கு [illegible] கடன் உதவி செய்ய வேண்டும். அந்தக் கடன் தொகையை அவர்களிடமிருந்து தவணை முறையில் வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு பாரின் எக்ஸ்சேன்ஜ் சம்பாதிக்கக்கூடிய ஒரு துறை தொழில்துறையாக இருக்கிறது. அதற்கு இது வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் சர்க்கரை மில்களைப் பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையிலே, அரசாங்கம் சர்க்கரை விஷயத்திலே என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்று நான் அறியேன். தனியார் நடத்தும் சர்க்கரை ஆலைகளுக்கு, விவசாயிகளிடத்திலேயிருந்து கரும்பைக் கடனாகவே தனியார்கள் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கடனை விவசாயிகளுக்குக் கொடுக்கவேயில்லை. கோடிக்கணக்கில் சர்க்கரை ஆலைக்காரர்கள் கடனைக் கொடுக்காமல், பணத்தைக் கொடுக்காமல், வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வேறு பணமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் அதைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். கரும்பு வளர்த்து அவர்களுக்குத்தான் தர வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கோடிக் கணக்கிலே பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அதைத் தன் பொறுப்பிலே எடுத்துக் கொண்டு செயல்பட்டால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு கோடி ரூபாய் மூலதனம் போட்டு பேப்பர் ஆலை தொடங்குவதாக செயற் குறிப்பிலே உள்ளது. இந்தப் பேப்பர் ஆலையைத் திருச்சியிலே துவக்கினால், நல்லது என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில், மிக விரிவான பல கருத்துக்களையும், தொழில் துறையிலே உள்ள மாற்றங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். பொதுவாக நம்முடைய சமுதாயம் உலக சமுதாயத்தின் ஒரு பகுதி என்ற முறையில் பெரிய சமூக மாற்றங்களையும் ஒத்துக்

1978 மார்ச் 27] [திரு க. அறிவழகன்]

கொள்கின்ற அமைப்பு பாங்கில், அமைப்பை உடையதாக இன்னும் ஆகவில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு என்ன தேவை என்றால், அந்த நாட்டினுடைய கல்வித் தரமும், அந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பில் ஏற்படுகின்ற பல்வேறுவிதமான மாற்றங்களும் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாற்றங்களின் அடிப்படையில்தான் தொழில் வளர்ச்சி உருவாக வேண்டும். சுதந்திரம் கிடைத்த பிறகு, இவ்வளவு நாட்களுக்குப் பிறகுதான் கல்வித்துறையில் மாற்றம் செய்திருக்கிறோம். பல லட்சக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற கல்வி முறையை அடுத்த ஆண்டுதான் நாம் அமைப்பதாக இருக்கிறோம். இதற்கு முன்னால் 16 வயது அடைந்த இளைஞர்கள் இந்த நாட்டில் எந்த விதமான தொழிற் கல்வியும் கற்றுக் கொள்ளாது மிகத் துக்ககரமான நிலைமையில் இருந்தார்கள். இந்தச் சூழ்நிலைதான் நம் சமுதாயத்தில் அமைந்திருக்கிறது அந்த நிலைமை மாறி தொழிலையே ஒரு கல்வியாகக் கற்றுக் கொண்ட பிறகுதான், அவர்கள் ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்று சொல்லத்தக்க நிலைமைகள் ஏற்படும். அதுகூட அந்தத் தொழில் கல்வி உபகரணங்களை உற்பத்தி செய்யக்கூடிய கல்வியாக இல்லாமல் மெயின்டினன்ஸ் தொழில், சைக்கில் ரிப்பேர் செய்வது, மோட்டார் கார் ரிப்பேர் செய்வது போன்ற மெயின்டினன்ஸ் தொழில்கள் என்ற அடிப்படையிலேதான் இருக்கின்றன. அவர்கள் உபகரணங்களை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அவர்களுக்குத் திறமை அளிக்கின்ற அளவுக்குக் கல்வி அமைய வேண்டும். வேலை வாய்ப்புக்கள் ஏற்படுகின்ற அளவுக்கு தொழிற் கல்வி இப்போது அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மாதிரி கல்வி அமைக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ஒரு பக்கம் நஷ்டம் அடைகின்ற தொழிற்சாலைகளில், குறைந்தபட்ச அளவாவது போனஸ் கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கோடிக்கணக்கான ரூபாயைச் சம்பளமாகத் தொழிலாளர்கள் பெறுகின்ற நிறுவனங்களும் இருக்கின்றன. பெரிய பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. பல்லவன் டிரான்ஸ்போர்ட் நிறுவனமாக இருந்தாலும் சரி, அது போன்று வேறு பெரிய நிறுவனமாக இருந்தாலும் சரி, மேலும் பல சிறு தொழில்களையும் உருவாக்க வேண்டும். பல லட்சக்கணக்கானவர்களுக்குப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழில் நிலை உருவாக்க வேண்டும். பல தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற வேலையாட்கள் அடிப்படைச் சம்பள வசதிகூடப் பெற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளில் சிறு சிறு தொழில்களிலே இருப்பவர்கள். தொழிலாளர்கள் வேறு ஒரு பக்கத்திலே கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு க. அறிவழகன்] [1978 மார்ச் 27

(முற்பகல் 11-40)

ஒரு பக்கத்தில் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள் அதிகமாக சம்ப ளத்தைக் கேட்கிற நிலையும், இன்னொரு பக்கத்தில் வேலை இல்லையே என்று சொல்லுகிற குடும்பங்கள் ஏராளமாக இருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியாத பெற்றோர்கள் ஒரு பக்கம், வசதிகள் வந்திருக்கிற காரணத்தாலே, பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் பிள்ளைகளை அனுப்பிய பிறகு, அவர்கள் அந்தப் பள்ளிகளில் படிக்காமல் தெருவிலே திரிகிறார்களே என்று வளர்ச்சியடைந்த நாடுகளிலே உள்ள பெற்றோர்கள் கவலைப்படு கிறார்கள். இதற்கிடையில் மாண்புமிகு முதல்வரவர்கள் தைரி யத்துடன் இந்தத் தொழிற் கொள்கையை இந்தச் சபையின் முன் வைத்திருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன், நம்முடைய பிரச்சினைகள் சுதந்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னாலே யிருந்து, பிரிட்டிஷ் ஆட்சியினாலும், பல்வேறு காரணங்களாலும் துவங்கின.

<u>திரு வே. தங்கப்பாண்டியன் :</u> இந்தக் கொள்கையை அறிவிக்க மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு என்ன தைரியம் வேண்டும்? என்ன தைரியத்துடன் இந்தக் கொள்கையை அறி வித்திருக்கிறார்கள்? புதிதாக ஏதாவது தைரியம் இருப்பதாக உறுப்பினரவர்கள் சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. க. அறிவழகன்:</u> உறுப்பினரவர்கள் நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை மாற்றுகிற முயற்சியிலும், இதற்கு முன்னால் இருந்த அரசு செய்த தவறுகளை சரிக்கட்டும் முயற்சியிலும், ஒரு தொழில் கொள்கையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நான் சொன்ன வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு 'என்ன தைரியம்' என்று கேட்கிறார்களென்று நினைக்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> 'தைரியம்' என்ப தற்கு 'உறுதி' என்ற பொருளும் உண்டு.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> அடிக்கடி தலைவரவர்கள் உறுப் பினர் திரு. அறிவழகன் அவர்களுக்கு 'ஆபத்பாந்தவன்' ஆகச் சென்று, சொல்லுவது ஏன் என்று புரியவில்லை.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :-</u> அவசியம் ஏற் பட்டால், தங்களுக்கும் 'ஆபத் பாந்தவன்' ஆக வருவேன். இல்லாவிட்டால் 'போர்' அடிக்கும்.

<u>திரு. க. அறிவழகன் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி நாதன் அவர்கள் பல நேரங்களிலே சிக்கல்களிலே மாட்டிக் கொள்வதை மறந்து விடுகிறார். அவருக்கு மறப்பது சுலபமாக இருக்கிறது. எனக்கு 'ஆபத்பாந்தவன்' ஆக தலைவரவர்கள் வருவதற்குப் பெருமைப்படுகிறேன்.

1978 மார்ச் 27] (திரு. க. அறிவழகன்)

உண்மையிலே இந்த சமுதாயத்தில் ஆபத்தில் பலர் இருக்கி றார்கள். அப்படிப் பட்ட நிலையிலே, இந்த ஆட்சி அமைவ தற்குப் பல கருத்துக்களை சொல்லியிருக்கிறோம். இந்தச் சமுதாய அந்தகைய அபாயகரமான நிலையில் இருக்கிறது; இதை மாற்றியமைக்க நிதி ஆதாரம் அதிகமாக இல்லாத நிலை மையில் ஒரு மாநில அரசின் கையிலே சமுதாயம் சிக்கிக் கொண் டிருப்பதையும், அந்தச் சமுதாயத்தை முழுவதும் மாற்ற வேண்டு மென்ற உறுதி படைத்துள்ள முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோமென்பதையும்தான் நான் எடுத்துச் சொன்னேன். அதற்காகத்தான் சமுதாயத்தின் பிரச்சினைகளை அங்கொன்றும், இங்கொன்றுமாக எடுத்து விளக்கிக் காட்டினேன். உலகில் தொழிற்சாலைகள் வளர்ந்து கொண்டு போகின்றன என்று சொன்னாலும், அந்தத் தொழிற்சாலைகள் மிகச் சிறு அளவில் வளர்கின்ற, வெகுவாக முன்னேற்றம் அடையாத நம்முடைய நாட்டிலேகூட மிகப் பெரிய அளவில் திங்குகள் வர ஆரம்பிக்கின் றன. வாணியம்பாடி போன்ற ஊர்களில் தோல் பதனிடும் தொழிற் சாலைகள் இருப்பதால், நல்ல குடிநீர் பெற முடியாத நி[illegible] இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்கள், அங்கே பல பேர்கள் வசதியற்றவர்களாக [illegible] இருக்கிறார்களென்று சொன்னார்கள். வசதியுடையவர்கள் அத[illegible] மாற்றங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும்[illegible] அங்குள்ள பல தொழிலாளர் குடும்பங்களைச் சந்திக்[illegible] அவர்கள்கூட கழிவு நீரைச் சுத்தமாக்கும் கருவிகளை[illegible] இல்லை என்று தெரிகிறது. பிற நாடுகளில் பல[illegible] னைக்கான ரூபாய் செலவழித்து, தொழிற்சாலைகளிலிரு[illegible] 'பொல்யூஷன்' இல்லாத நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். துணைத் தலைவரவர்களே, இந்த உலகத்தில் நாம் எவ்வளவு ஆண்டுகள் இருப்போம் என்பது கேள்வி. இந்த உலகமே எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்பது மற்றொரு கேள்வியாகும். ஏனென்றால் விஞ்ஞான வளர்ச்சி வந்த பிறகு, உலகத்தில்....,

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> 'எவ்வளவு நாட்கள் உயிரோடு இருப்போம்' என்று தலைவரவர்களைப் பார்த்து என் உறுப்பினர் கேட்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. க. அறிவழகன் :</u> துணைத் தலைவரவர்களின் மூலமாக நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களைக் கேட்கிறேன். இந்த உலகம் எவ்வளவு ஆண்டுகளுக்கு இருக்குமென்ற சந்தேகம் எனக்கு எப்படி ஏற்பட்டதென்றால், விஞ்ஞான வளர்ச்சி காரணமாகத்தான். விஞ்ஞான வளர்ச்சி காரணமாக சந்திர மண்டலம், செவ்வாய் மண்டலம் ஆகியவற்றிற்கு 'செட்டிலைட்' அனுப்பி ஆராய்ந்த பிறகு ஒன்று தெரிந்து விட்டது. மனிதன் வாழக்கூடிய ஒரு கிரகம் பூமிதான். வேறு எந்த கிரகத்திலும் மனிதன் வாழ முடியாதென்று தெரிந்து விட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இதுவரையிலே ;

திரு. க. அறிவழகன் : தலைவரவர்கள் நீண்ட காலம் வாழ வேண்டுமென்று விரும்புகிறார்களென்று கருதுகிறேன். நம்முடைய முதலமைச்சரவர்கள் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் சொன்னது என்னைச் சுட்டிக் காட்ட அல்ல. தலைவரவர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள் என்று சொன்னேன்.

திரு ஜார்ஜ் கோமகன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் பேசியதிலிருந்து, அவர்கள் நீண்ட நாட்கள் வாழ விரும்பவில்லை என்று நான் கருதுகிறேன். அவர் அப்படி ஆசைப்படுகிறாரா ?

திரு. க. அறிவழகன் : அதற்குத்தான் பதில் சொல்ல வந்தேன். இந்த உலகம், தூய்மை கெடுவதால் அழிந்து வருகிறது என்பதற்கு நான் நூற்றுக்கணக்கான உதாரணங்களைச் சொல்ல முடியும். நம்முடைய நாட்டு மகளிர் சிகரெட்டு குடிப்பதில்லை. ஆனால் பஸ் ஸ்டாண்டிலே நிற்கிற ஒரு மகள் பேருந்துகளிலிருந்து அல்லது லாரிகளிலிருந்து வருகிற புகையை 3 நிமிட நேரம் அல்லது 5 நிமிட நேரங்கள் சுவாசித்தால் 100 சிகரெட்டுகள் புகைப்பதால் ஏற்படும் தீங்கு அவர்களுக்கு வருகிறது. அவர்களுக்கு 'கேன்சர்' வரும்போது, 'ஏன் வருகிறதென்று தெரியவில்லையே, எந்தத் தீய பழக்கமும் இல்லையே, அது வருகிறதே, என்று அதை நினைத்து வருந்துகிறார்கள். ஆக 'பொல்யூஷன்' எவ்வளவு ஆபத்தானது என்பது மாத்திரமல்லாமல் உலகத்திற்குள்ள ஆபத்தையும் சொல்லி விட்டார்கள். பொல்யூஷனால் வாயுமண்டலத்தின் தூய்மை கெட்டுப் போகிறது. வளர்ந்துள்ள நாடுகளிலுள்ள தெர்மல் பவர் ஸ்டேஷன்கள் வழி மண்டலத்தில் சூட்டை ஏற்படுத்துவதால், வட துருவத்திலும் தென் துருவத்திலும் இன்று ஐசாக உறைந்திருப்பவை உருகி உலகத்தையே மூழ்கடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. 1972-ல் நடைபெற்ற ஸ்டாக்ஹோம் மாநாட்டில் உலகத் தூய்மைப் படுத்தும் மாநாட்டில் "There is only one worlo and there is only one life to l've" என்று சொன்னார்கள். ஒரே ஒரு உலகம்தான் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இன்றைய தினம், மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் தொழில் துறையைப் பற்றிப் பேசுகிறார்களா, சுகாதாரத்தைப் பற்றிப் பேசுகிறார்களா

என்பதை அறிய விரும்புகிறேன். "பொல்யூஷன்" என்பது சுகாதாரத் துறையில் முக்கியமான பகுதி. இன்றைக்குத் தொழில் துறை கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன் : தொழில்களை வளர்த்து, அதனால் தூய்மை கெடுவது பற்றிப் பேச ஆரம்பித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கருதுவதுபோல், நல்வாழ்விற்கு ஏற்படுகிற தீமை என்பதால், மக்கள் நல்வாழ்வோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், தூய்மை கெடுவதற்கான ஆரம்ப இடம் தொழில் துறை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்கள் தூய்மை கெடுவதற்குக் காரணமாக அமைந்துவிடப் போகிறார்களோ என்ற பயம் இருக்கிறது. காரணம் இன்னும், அனல் மின் நிலையங்களை அதிகப்படுத்தினால், அதனால் தூய்மை கெடுகிற நிலைமையும் அதிகமாகும். தூய்மை கெடுவதை இப்போதே தடுக்கவில்லை என்றால், நம்முடைய எதிர்கால சந்ததியினர் நல்வாழ்வு வாழ முடியாது. அதற்காக எல்லாத் தொழிற் சாலைகளையும்....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'மூடிவிட வேண்டும்' என்கிறீர்களா ?

திரு. க. அறிவழகன் : தூய்மை கெடாத வகையிலே தொழில்கள் நடக்கத் தக்க வகையிலே சட்ட திட்டங்களைக் கடுமைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. சுவாமிநாதன் அவர்கள் 'ஆபத்பாந்தவன்' என்று சொன்னார். அதனால் ஒரு முறை ஆபத்தை உண்டாக்கலாம் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. க. அறிவழகன் : நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், 100 கோடி ரூபாய் அளவில் ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைக்கப் போகிறோம் என்று பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி போன்றவர்கள் நடத்துகிற பத்திரிகைத் தொழில்களுக்கு,—அவர் பத்திரிகைத் தொழிலை நடத்துகிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை— நல்ல தாள்கள் கிடைக்கும். குழந்தைகளுக்கு நல்ல புத்தகங்கள் கிடைக்கும். மேலும் வேலைவாய்ப்பும் கிடைக்கும். காகிதத் தொழிற்சாலைதான் அதிகமாகத் தூய்மையைக் கெடுக்கிறது. அரசாங்கமே தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதால், அதைத் தடுப்பதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற வகையில் காகிதத் தொழிற்சாலையை அரசாங்கமே ஆரம்பிப்பதை நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை
நகரில், எழும்பூரில் ஒரு மாதில பெண்கள் பள்ளி இருக்கிறது.
அதற்குப் பக்கத்திலே ஒரு தார் தொழிற்சாலையை நம்முடைய
மாநகராட்சி வைத்திருக்கிறது. அதிலிருந்து வருகிற புகை.....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் ; ஒரு தொழிற்சாலை
யையும் விடமாட்டீர்கள் போல் இருக்கிறது.

திரு. க. அறிவழகன் : அத்தொழிற்சாலையிலிருந்து வரும்
புகையினால் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதன்
பக்கத்திலுள்ள உலக யூனிவர்சிட்டி சென்டரில் உள்ளவர்களும்
பாதிக்கப்படுகிறார்கள்.

சிறு தொழில்கள் வளருவதற்கு நாம் போதிய முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி
உறுப்பினர்கள், சோப்புக்கு வரி விதித்ததைப் பற்றி வருந்தப்
பட்டுப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர்.
தாமோதரன் அவர்கள்கூட, "நம்முடைய நிதியமைச்சர்
திரு. மனோகரன் அவர்கள் பார்ப்பதற்கு நல்ல முறையிலே ஆடை
அணிந்து வருகிறார்கள். ஆனால் சோப்புக்கு ஏன் வரி விதிக்
கிறார் என்று தெரியவில்லை'' என்று நகைச்சுவையாகச் சொன்
னார்கள். நான் சொல்லுவேன், கைத்தொழில்கள் வளர வேண்டு
மானால், நிச்சயமாக மல்டி நேஷனல் கம்பெனிகளால் தயாரிக்கப்
படும் சோப்புக்கு வரி விதித்தேயாக வேண்டும். 200 கோடி
ரூபாய் அளவுக்கு முதல் போட்டு இந்த சோப்பைத் தயாரிக்கும்
முதலாளிகள் யார் என்பது தெரியாது. அவர்கள் எங்கும்
நிறைந்திருப்பவர்கள்.

திரு. ஜார்ஜ் கோமகன் : துணைத் தலைவர் அவர்களே,
மத்தியத் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்திற்கு
நோட்டீஸ் அனுப்பியிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன் : துணைத் தலைவர் அவர்களே, மத்திய
அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பிய
தாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அதை
நான் வரவேற்கிறேன். கைத்தொழிலின் மூலம் சோப்பைத்
தயாரிக்கலாம். ஆனால் ரூ. 150 கோடி முதலீடு செய்திருக்கிறார்
கள் ஒரே ஒரு தேசிய நிறுவனம். மாண்புமிகு தலைவர் அவர்கள்
மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன். அது காந்தியடிகள்
கூட பாராட்டிய கல்கத்தா கெமிக்கல்ஸ் நிறுவனம். அவர்கள்
இருநூறு கோடி ரூபாய்க்கு சோப்பு தயாரிக்கிறார்கள். சென்னை
நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கைத்தொழில்
களின் மூலமாக சோப்பு தயாரிக்கிறார்கள். ஏராளமான அளவில்

சோப்பு உற்பத்தியாகின்றது. சோப்புக்குவரிவிதிக்க வேண்டுமென்ற
நிலைமை எப்படி ஏற்படுகிறதென்றால், இந்த நாட்டிலே
ஏகாதிபத்தியம் கொண்டிருக்கிற பெரும் முதலாளிகள் சிறு
தொழில்களை நசுக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதால்தான்.

பட்டை போட்ட வேட்டிகளைத் தயார் செய்வதைக் கைத்
தறிக்கென்று விட்டுவிட வேண்டுமென்றும், அந்தத் துணிகளை
மில்கள் உற்பத்தி செய்யக் கூடாது என்றும் சொல்லப்பட்ட
கருத்து இன்னும் முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. ஒரு
வேளை திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் மத்திய அமைச்சர்
திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களை அணுகி, இதை முழு
அளவில் நிறைவேற்றுவதற்காகப் பாடுபடுவார்கள் என்று நம்பு
கிறேன். இது குறித்து அண்ணா அவர்கள் காலத்திலேகூட
ஒரு தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. பணத் தோட்டம் என்ற
புத்தகத்திலே அண்ணா அவர்கள் இதைப் பற்றிச் சொல்லி
யிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே.
வில்வம் அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆகவே இன்றைய தினம் போடப்பட்டிருக்கிற சோப்பின் மீதான
வரியானாலும், வேறு பொருள்களின் மீது போடப்பட்டிருக்கிற
வரியானாலும், இந்த வரிகள் திட்டவட்டமாக இந்த நாட்டிலே
இருக்கிற சிறு தொழில்கள் வளருவதற்கான முழு வாய்ப்பைத்
தந்திருக்கிறதைச் சொல்லி, தலைவர் அவர்களே, நீங்கள்
அடிக்கடி கண்களைச் சிமிட்டுவது, என்னுடைய நேரத்தைக்
குறிப்பிட்டுக் காட்டுவதால், இத்துடன் முடித்துக் கொண்டு
எனக்குக்கூட பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி
அமைகிறேன்.

* THIRU D. V. D'MONTE : Hon. Deputy Chairman, Sir, a welcome
feature in the Policy Note on Industrial Development is the identity
of approach between the State Government and the Central Govern-
ment in the new revised policy, namely, top priority to be given to
small scale, cottage and rural industries. Sir, a similar approach and
thinking is necessary where industrial policies are concerned and this
could be of crucial importance to the State and the Centre and the
nation benefits as a whole. In the past, even when the same party was
in power in the Centre and in the State, the approach was not always
on the same lines. Very often there used to be conflict of interests in
the policies announced by the Centre and by the State. You are well
aware of the fact that there had been a bitter conflict among the States
themselves as to what type of priority industries they should locate
their own State. Today there is a shift in the emphasis from large
industries to small industries. The unseemly competition between
States no longer exists. Therefore, it is good that the State

ment have adopted the new industrial policy and as far as the Centre is concerned, there can be no mental reservation to accommodate the States to the maximum possible extent.

It is, therefore, in the fitness of things that somthing like 504 products have been specially reserved for cottage, rural and small scale sectors. The development of these sectors is to give overwhelming importance to our State. Let us for a moment forget the large industries and medium scale industries. We should now concentrate on how best we can make the small scale, rural and cottage industries work effectively and take a rightful place in the economy of the States.

[நண்பகல் 12-00]

In Tamil Nadu, there are 40,000 small scale industries. They are providing employment for almost four lakh persons. According to the Policy Statement, the State proposes to start some more industries (10,000 units) within a period of one year. Sir, this appears very good on paper. But, how is this going to be achieved in the most practical and effective manner? Have we really understood the problems of the small scale sector? I have had occasion, since the present Government had come to power in this State, to speak in this very House about the numerous and serious problems of the small scale sector. If the Government are earnest in developing this sector, it should come to grips with the existing difficulties that are faced by this sector.

Sir, it is easy to register small scale units on paper. But the important thing is to make them viable propositions within a reasonable period of time. The chief aim apparently is to generate employment and make use of the abundant manpower that is available in our State. But what really takes place is that by setting up more industries, we create more problems and more number of sick industries. I shall go into some of the reasons which cause this. Many small scale industries are allowed to come up for the manufacture of products in the same line. This results in a large number of small scale units with the same output and machinery being forced to go to the same large industry to secure their orders. What happens is that large industries virtually exploit the small scale industries and they are forced to manufacture items even below cost. A type of auction takes place all round with the large scale manufacturer on the one side and the number of competing small scale manufacturers on the other, in which the only beneficiary is the scale industry. Hence, my plea is that some safeguards should be provided whereby smaller industries are protected from exploitation by big industries.

Sir, let us take the burden of interest. The interest rates were considerably enhanced some years ago. While there might have been need for enhanced rates for all types of factories, big and small, this has had a very adverse effect as far as small-scale industries are concerned. This is due to the fact that the very operation of small scale industries is based on high debt-equity ratio as compared to what prevails in big industries. Thus, the cost of interest in the case of small-scale industries is always on the high side as compared to what obtains in the larger industries. I will quote an example. The interest factor which was approximately 5 per cent of selling price in 1973 is today as high as 9 or 10 per cent of the selling price. In the case of large industries, this percentage has had no material effect at all. Probably, it has affected 1 or 2 per cent to 8½ or 4 per cent as compared to 9 or 10 per cent which the small-scale industries have got to face. Now, it will be seen that the interest burden takes away a big chunk of margin left on the selling price and it adds considerably to the cost and affects the margin of profit. Especially, during the last two or three years, because of the serious recession in the automobile industry and also due to power-cuts, many small-scale industries have suffered very heavy losses which in turn has increased their borrowing so much that the interest percentage on selling prices is prohibitive today. Therefore, in order to make the small-scale industries viable, some concession will have to be shown in regard to interest-rates. Apart from this it must also be considered whether we should impose an interest burden on big industries who utilise the services of small industries and who would take their own time in paying their bills.

Sir, let us consider power-supply. Today, load-shedding has become a regular feature while the restriction imposed on peak-hour loads has become almost the order of the day. There have been so many power-cuts during the last five years and what is going to happen during this year or the next is anybody's guess. So, when sufficient power is not available, the small-scale industries are forced to go in for purchase of generating sets. Despite the lack of power, they cannot lay-off their workers because they are expected to provide work to carry on whether they have generating sets or not. The expenditure on the yearly maintenance of these generating sets comes to about Rs. 5,000 to Rs. 10,000 a year. Where is this money to come from? It cannot come from the capital because their resources are very limited. Unless the Banks and the financial institutions come forward to defray or meet this yearly expenditure on maintenance, the problem of these industries will continue to remain.

[Thiru D. V. D'Monte] [1978 மார்ச் 27

Sir, there are numerous other problems. Perhaps, the most significant disability which the technician and particularly the better qualified one faces today is the inability to adapt to people and the tendency to rub key-persons on the wrong side. To put it bluntly, the world of business and industry needs a thick hide and thin samples and a certain pliability in morals and modes if an entrepreneur is to survive. This is true where at all levels of administration there are sharks who have to be handled circumspectly. To come to the other side of the picture, how much of the official pronouncements and propaganda and pullyhoo about the incentives and aids is the truth. I would say that it is precious little. There appears to be a yawning gap between promise and performance, between intent and content of administrative actions and between the propaganda and practice of financial institutions.

Speaking about banks, they publicise that they give margin free loans and easy credit to industrialist in the small-scale sector. But actually, they hunt around for maximum amount of security, which cannot be ordinarily provided by small scale industries. They will be prepared to lend even 3 umbrellas—until it rains when they will withdraw all of them. It is remarkable how the goodwill and sympathy dries up overnight, the moment one is in trouble and desperately, needs finance to tide over a crisis. It makes no difference whether you are a technical entrepreneur or a tradesman, whether you are making a micro computer or toffees. Banks do not seem to be interested in preferentially promoting industries with high technological content.

I may be pardoned for speaking out, but I speak with first hand knowledge of small-scale industries and with the wealth of information that I have been able to gather in recent years. "Do you know? A technician friend of mine told me : If you go to the S.I.S.I., you are offered project feasibility reports which are not worth the paper on which they are printed and whose data is more than 10 years old." Another said to me: "Most of my time is spent in dealing with 15 and odd Government Departments and agencies and officers whose only objective seems to be the harassment of industrialists." They are a unhelpful auddersome autocratic lot. They take advantage of the fact that no person can sincerely adhere to the jingle of industrial, labour, tax, Social Welfare, Company and other laws, and yet pay adequate attention to the running of the company. Another friend also says: "Most of us technician entrepreneurs are small scale industrialists more interested in developing

1978 மார்ச் 27] [Thiru D. V. D'Monte]

and making our products. But the bureaucrats give us no respite." Yet another technician complained : "Foreign exchange clearance, custom duty drawbacks, export cash incentive capital goods clearance and all other items are regularly delayed and small people like us have to go running from office to office chasing files." Another technician said: "Who said that the State Government had streamlined the procedure for entrepreneurs? Do any of them have a single high power committee to which alone the entrepreneurs need go for all clearances? Do the officials go out of their way, to help the entrepreneurs to get the road blocks cleared?" I have already spoken on the attitude of big industries. The universal complaint I get is that big industries, as I stated already, exploit small industries in delaying payment of their bills. In other words, the giant industries are subsisting on the imposed credits they can manage to get from a number of small scale industries. I would say that the worst offenders are some of our public sector undertakings who, without reason, hold up payment of bills. One of my friends says that he has to grease the palms of the Accounts and Inspection Staff before he gets payment for his bills. If these are some of the numerous and various

(பிற்பகல் 12·10)

problems facing small-scale industries, I would ask whether the existing set up of the Director of Industries and Commerce, even in co-ordination with the SIDCO, can touch even the fringe of these problems. If the new industrial policy of the State has got to work and to work effectively, there is need for setting up a separate Directorate for small-scale, rural and cottage industries. The time has come for concentrated and prompt attention not only to develop but also to promote sick industries and new industries. There is also need for financial institutious to deal separately with the problems of small-scale industries. The time has come for a change lock, stock and barrel. Government must ensure that the 504 items which have been specially reserved for small-scale industries are not given to the big industries to exploit.

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமை)

By the same token, small-scale industries must keep out of producing items which the artisans in the countryside could make in their cottage industries. By the same token, the State Government also should keep out of such industries where small units can

benefit and carry on their work. In this connection, I must make a passing reference to the policy as far as black granite is concerned. Here, the State Government have taken over this industry where a number of small-scale people can do the same work profitably and probably more efficiently.

Government must ensure that big factories confine themselves only to such items which do not touch the products of small-scale industries and that they work exclusively in producing goods they alone can do to the exclusion of small-scale industries. Today, we see that big factories are manufacturing a range of products which the small-scale and cottage industries are well-equipped to do. There is much relevance in the argument of our Union Industries Minister, Thiru George Fernandes, that firms like WIMCO and Hindustan Lever have got to diversify or quit. Rather than selling their products at home, these firms should find foreign markets for their products leaving the small-scale industries thoroughly to exploit their own range of items.

I do not wish to dwell on the serious labour problems that exist in the State. Today, probably, in all the industrial estates—and even in a tiny unit—there is some labour problem or the other. I feel that the labour laws must be simplified and restructured if the entrepreneurs are to devote attention to their work rather than spending their time in Labour Courts.

Sir, there is also the problem of marketing. The entrepreneurs are short of know-how and finesse. Their ignorance is not so much in knowing where the market lies but in such things as organising an outlet networks, pricing, discounting, bargaining and striking while the iron is hot.

Sir, my final plea before closing is that, if the new policy in respect of small-scale industries and cottage industries is to work, these are some hard decisions Government must be prepared to take.

Thank you.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி'மாண்டி அவர்கள் பல முக்கியமான கருத்துக்களைத் தொழிற்துறையின் மீது தெரிவித்துள்ளார்கள்.

அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் அனைத்தும் தொழிற்துறை பற்றிய நேரிடையான கருத்துக்களாகும். அவரே ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் என்ற முறையில் அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதாக அவர் குறிப்பிட்டார். கிட்டத்தட்ட அதே முறையில்தான் நானும் சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்ல இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. டி'மாண்டி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையொட்டியே நானும் என்னுடைய பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கருதுகிறேன். திரு. டி'மாண்டி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மத்தியில் ஆட்சி புரியும் ஜனதா அரசாங்கத்தின் தொழிற் கொள்கையும் நம்முடைய மாநிலத்தில் ஆட்சியில் உள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் தொழிற் கொள்கையும் ஒரே மாதிரியான கொள்கைகள் என்பதால், அவர் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்கள். சில சந்தர்ப்பங்களில் மாநில ஆட்சியில் ஒரு கட்சியும் மத்தியில் உள்ள ஆட்சியில் வேறொரு கட்சியும் இருந்து, வேறுபட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், இங்கே உள்ள அரசின் தொழில் வளர்ச்சிக் கொள்கைக்காக நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை மாநில அரசின் கொள்கை என்பதாலும் பாராட்டுகிறேன். மத்திய அரசின் கொள்கை என்பதாலும் பாராட்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் இதைப்பற்றி என்ன கருதுகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. ஜனதா ஆட்சிக் கொள்கையைப் பாராட்டுகிறீர்களா என்று கேட்கக்கூடும்.

இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தொழில்களை வளர்க்க பெரும் செலவு செய்த பிறகு, இன்றைய தினம் தொழில் துறையைப் பார்த்தால், அது மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறது என்பதை உணர முடியும். இந்த நாட்டில் இருக்கிற மக்கள் பெருக்கம்—பாப்புலேஷன் எக்ஸ்ப்ளோஷன் என்ற அடிப்படையில் பார்க்கிற போது, தொழில் வளர்ச்சி என்பது ·5 சதவிகிதம் என்ற அளவில் தான் இருக்கிறது.

30 ஆண்டுகளாக ஒரே விதமான கோட்பாடுகளைக் கடைப் பிடித்து, அதற்குப் பிறகு வேறு சில யுக்திகளைக் கடைப்பிடித்து, அவைகளும் சரியாக இல்லாத காரணத்தால், 5 ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு, இன்றைய தினம் திட்டம் தீட்டுபவர்களால் என்ன சொல்லப்படுகிறது என்றால், இந்த நாட்டில் ஏழைகள் 20 மடங்கு அதிகரித்து விட்டார்கள் என்பதாகும். அதாவது ஏழ்மை நிலைக்குக் கீழே இந்த நாட்டில் உள்ள 40 முதல் 60 சதவீத மக்கள் போய்விட்டார்கள்; இவ்வளவு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1978 மார்ச் 27

தொழில் வளர்ச்சிக்குப் பிறகு, அதிகமான மக்கள் ஏழ்மை
நிலைக்கும் கீழே போயிருக்கிறார்கள். ஒருமுறை பாராளுமன்றத்தில்
அங்கே இருந்த உறுப்பினர் திரு. பிலுமோடி அவர்கள் ஒரு
கருத்தைச் சொன்னார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்
மூலம் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக,
20 சதவீத மக்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்குக் கீழே
வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இப்போது ஐந்து ஐந்தாண்டுத்
திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றிய பிறகு நாட்டில் உள்ள
மக்களில் 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே
வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆறாவது ஐந்
தாண்டுத் திட்டம் முடிந்தால் 55 முதல் 60 சதவீத மக்கள்
வறுமைக் கோட்டுக்குக் கீழே போய் வாழ்க்கை நடத்துவார்கள்.
எனவே இந்தியாவில் உள்ள அத்தனை பேரும் வறுமை நிலைக்கும்
கீழே போய் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால், எவ்வளவு
திட்டங்களை அரசாங்கம் போட வேண்டும் என்று பாராளுமன்றத்
திலே கேட்டார்கள். அந்த நிலைமைதான் இருந்து வந்தது.

இதன் காரணமாகத்தான் தொழில் துறையில் ஒரு அத்தியா
வசியமான மாறுதல் ஏற்பட்டாக வேண்டும் என்ற கொள்கையை
மத்திய அரசு மேற்கொண்டதற்காக அதை நான் பாராட்டு
கிறேன். இந்த நாட்டுத் தொழிற் துறையில் அபிவிருத்தியை
ஏற்படுத்தியதோடு, குறைந்த அளவு மூலதனத்தைப் போட்டு,
அதிகமான டர்ன்ஓவரை ஏற்படுத்தியது — அதாவது அதிகமான
வியாபாரத்தை உண்டாக்கியது எது என்று பார்த்தால், பெரிய
தொழில்களை விட சிறிய தொழில்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை.
சிறிய தொழில்கள் தான் போடப்பட்ட முதலீட்டைவிட 8
மடங்கு அதிகமான வியாபாரத்தைச் செய்து வருகின்றன. ஒரு
கோடி ரூபாய் சிறிய தொழில்களில் முதலீடாகச் செய்யப்பட்டி
ருந்தால், 8 கோடி ரூபாய் அளவுக்கு அதில் வியாபாரம் செய்ய
முடிந்திருக்கிறது. ஒரு பெரிய தொழிலை எடுத்துக்கொண்டால்,
1 கோடி ரூபாய் மூலதனம் போட்டால், 1 கோடி ரூபாய்
அளவுக்குத் தான் வியாபாரம் செய்ய முடிந்திருக்கிறது. நாட்டில்
உள்ள மூலதனப் பற்றாக்குறை காரணமாக — scarcity of capital
எந்தத் தொழிலை ஆரம்பித்து தொழிற் பெருக்கத்தை ஏற்படுத்து
வது என்றால், சிறிய தொழில்களைத்தான் ஆரம்பித்து ஊக்கு
விக்க வேண்டும். சிறு தொழில்களில் போடப்படும் மூலதனத்தின்
காரணமாக எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்று பார்த்
தால், 3.5 சதவீதம், 4 சதவீதம் பேர்கள் வேலை செய்கிறார்கள்.
அதாவது நாம் போட்ட மூலதனத்திற்கு வேலை செய்கிறவர்களின்
எண்ணிக்கையைப் பார்த்தால், சிறு தொழிலில்தான் அதிகமான
அளவு இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். அந்த அள
வுக்குப் பெரும் தொழில்களில் வேலை பார்க்க முடியாது. எனவே
நாம் இன்னும் அதிகமாக சிறு தொழில்களை அபிவிருத்தி செய்
திட வேண்டும்.

1978 மார்ச் 27] [திரு. ஜி. சுவாமிநாதன்]

சிறு தொழில்கள் இந்தியா முழுவதற்கும் பரவலாக இருக்
கிற தொழில்கள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் தொழில்
களை அமைக்க வேண்டுமென்றால், சிறு தொழில்களைத்தான்
தேர்ந்தெடுத்தாக வேண்டும். தற்போது மினி செக்டார் என்று
ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. அதாவது ரூ. 1 லட்சத்திற்குக்
குறைவாக ஒருவர் மூலதனம் போட்டால், அது மினி செக்டாரில்
வருகிறது. இதற்கு முன்னால் ரூ 5 லட்சம் முதலீடு போட்டால்,
அது சிறிய தொழில். அது அடுத்து 7 லட்சம் ரூபாய் முதலீடு
என்று மாற்றப்பட்டு, பிறகு அதுவே 10 லட்சம் ரூபாய்
முதலீடு என்று மாற்றப்பட்டு, பிறகு மூலதனத்தைப்பற்றிக்
கவலைப்படாமல் அதிலே ஈடுபட்டுள்ள நபர்கள், ஆட்களின்
எண்ணிக்கையைப் பொறுத்து, சில தொழில்கள் சிறு தொழில்
கள் என்று வரையறை செய்யப்பட்டன. இப்போது ரூபாய்
1 லட்சத்திற்கும் குறைவாக ஒருவர் மூலதனம் போட்டு,
ஒரு தொழில் ஆரம்பித்தால், அது மினி செக்டார் என்று
சொல்லப்பட்டு, அதற்கு அதிகப்படியான அளவுக்கு நிதி ஒதுக்
கீடும் செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக அதிகமான
அளவுக்கு மக்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் நிலைமையை
உருவாக்குவோம் என்கிறார்கள். இதுதான் ஜனதா கட்சியின்
தொழில் கொள்கை. அவர்கள் இன்னொன்றையும் சொல்கிறார்
கள். நாட்டில் இருக்கிற ஏழ்மை நிலை அகன்றால்தான், நாட்டில்
பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி உண்டாக முடியும்
என்கிறார்கள்.

தொழில்களை ஆரம்பிப்பது என்பது மிகச் சுலபம். தொழில்
களை நடத்துவதுதான் முக்கியம். அதிலும் தொழில்களை லாப
கரமாக நடத்துவது மிகவும் முக்கியம். அதிலும் முக்கியமானது
தொழில்களைத் தொடர்ந்து நடத்துவது. நான் சென்ற முறை
இங்கே பேசும்போது, எப்படி தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு மூடப்
படுகின்றன என்பதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றேன். 40,000
தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கணக்குக் கொடுக்கப்
பட்டபோது, நான் இங்கே அவையிலே குறிப்பிட்டேன். அதற்கு
ஒரு பாட்டைக்கூடச் சொன்னேன். அது மாண்புமிகு முதல
மைச்சர் அவர்களுக்கு நினைவிலும் இருக்கலாம். "மூன்று முனை
யிலே மூன்று குளம் வெட்டி வைத்தேன். இரண்டு குளம் பாழ்.
ஒன்றில் தண்ணீரே இல்லை" என்று சொல்வது போல் 40,000
தொழிற்சாலைகளை ஆரம்பித்தோம். அதில் 10,000 தொழிற்சாலை
கள் மூடப்பட்டுவிட்டன. 10,000 தொழிற்சாலைகள் நடைபெற
வில்லை என்றெல்லாம் சொன்னேன். இப்படி ஆரம்பிக்கப்படும்
தொழிற்சாலைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அப்படி
ஆரம்பிக்கப்படும் சிறு தொழில்களின் மூலமாக உற்பத்தியாகும்
பொருள்கள் மக்களால் வாங்கப்பட வேண்டும். இந்திய நாட்டைப்
பொறுத்த வரையில் 75 முதல் 80 சதவீத மக்கள் கிராமங்களிலே
இருக்கிறார்கள்.

(பிறபகல் 12-20)

கிராமத்தில் இருக்கிற மக்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தால்தான், அந்தப் பொருள்களை வாங்க முடியும். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வியாபாரம் ஆரம்பித்து, வாங்குவோர் இல்லை என்றால், கடையை மூடவேண்டிய நிலை ஏற்படும். ஆகவே ஜனதா கட்சியின் முக்கியமான கொள்கையை, அதாவது கிராமப் புறப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதன் மூலம் வளப்படுத்துவதன் மூலம் தொழில்கள் வளர்ச்சி அடைய முடியும் என்பதை நான் பரிபூர்வமாக ஆதரிக்கிறேன். அந்த அடிப்படையில் தொழில் வளர்ச்சிக் கொள்கையை மாநில அரசாங்கம் கொண்டு வந்ததற்கு நான் பாராட்டுகிறேன். நான் திரு. டி'பாண்டி கட்சியில் இல்லாவிட்டாலும், வேறு யார் சொன்னாலும், நல்ல கொள்கை பாராட்டப்பட வேண்டுமென்ற அடிப்படையில் சொல்லுகிறேன். மத்திய அரசும் மாநில அரசும் கலந்து கொண்டு, சில தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டியிருக்கின்றன. சில பிரச்சினைகள் மத்திய அரசுக்கும், சில பிரச்சினைகள் மாநில அரசுக்கும் என்று வருகிறது. அவைகள் சேர்ந்து வருவதில்லை. ஒன்று இரண்டு பிரச்சினைகளைத் தொட்டு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒன்று இன்றைய தினம் மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில், 'எக்சம்ஷன் ஆன் இகுவிட்டி' என்ற அளவில் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையில் தொழிலில் முதலீடு செய்வதற்கு யாரும் அக்கறை காட்டவில்லை. எங்களைப் போன்றவர்களுக்கும் தெரியும். அதிலும் லிமிடெட் கம்பெனியை ஆரம்பித்து ஷேர் போட வேண்டுமென்றால், அதில் யாருக்கும் அக்கறை இல்லை. நடத்துகிற மேனேஜிங் டைரக்டர், டைரக்டர் என்ற காரணத்தால் போடப்பட்டிருக்கிற பணத்தில் தானே நிர்வகித்து வரக்கூடிய லாபத்தில் ஊதியம் பெற்றுக் கொள்ளக்கூடிய வளர்ச்சி இருந்தால், அந்த கம்பெனியில் யாரையாவது போய் 'அன்பர்களே, ஷேர் போடுங்கள்' என்று கேட்டால், யாரும் போடுவதில்லை. காரணம் ஷேர் போட்டு 5,6 ஆண்டு காலத்திற்குப் பிறகு, நன்கு நடக்கிற கம்பெனியாக இருந்தால் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய முதலாளியாக அவர் இருந்தால், இகுவிட்டி டிவிடென்டு கிடைக்கும். 20 ஆண்டு காலம் டிவிடென்டு கொடுக்காமல் அவர்களே சௌகரியமாக இருக்கும் கம்பெனிகள் இருக்கின்றன. நல்லவராக இருந்து லாபத்தைப் பெருக்கி, பெருகிய லாபத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மனப்பான்மை முதலாளிக்கு இருந்தால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் போட்ட பணத்திற்கு 8 சதவிதம் வட்டி கிடைக்கும். முதலில் 6 சதவிதம் என்று ஆரம்பிப்பார்கள். இரண்டாவது ஆண்டு 8 சதவிதம் கொடுப்பார்கள். 4,5 ஆண்டுகளுக்குப் பிறகு 12 சதவிதம் என்று கொடுப்பார்கள். பல லட்சக்கணக்கில் லாபம் வந்தாலும், வங்கியில் போட்டால் நல்லது என்று நினைப்பதால், பலர் பணம்

போடுவதில்லை. ஆகவே இன்றைய தினம் ஜனதா அரசு போட்டிருக்கிற பணத்தில் ரூ.10 ஆயிரம் வரையில் 50 சதவிதம் எக்சம்ஷன். பத்தாயிரம் ரூபாய் வரை இன்கம்டாக்ஸ் ரிபேட் கொடுப்பது போல் ஒரு ஏற்பாடு செய்தால், மாநிலத்தில் தொழில்களை ஊக்குவிக்க முன்மாதிரியாக இருக்கிறது என்று வருவார்கள்,

அடுத்து, ஒன்று இரண்டு குறைபாடுகளை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்ல வேண்டும். முக்கிய குறை கண்ணில்படுவது மத்திய கலால் வரி. சென்டிரல் எக்சைஸ் டாக்ஸ். மத்திய அமைச்சர் பைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ரூ.15 லட்சம் வரையில் தொழிலில் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு ரூ.5 லட்சம் வரையில் கலால் வரியில் எக்சம்ஷன் கொடுக்கிறேன் என்றார். பார்மசூட்டிக்கல்லைப் பொறுத்தவரையில், 12 சதவிதம் வரையில் வரி கட்ட வேண்டும். ரூ.15 லட்சம் வரையில் முதல் ரூ.5 லட்சத்திற்கு ரூ.60 ஆயிரத்திற்குக் கட்ட வேண்டாம் என்று இருக்கிறது. அதற்கு மேல் போகும்பொழுது, இந்த ரூ.60 ஆயிரத்திற்கும் சேர்த்துக் கட்ட வேண்டும். ஆகவே அந்தக் கம்பெனியை ஆரம்பித்து, அது வளர வேண்டுமென்ற நோக்கம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்த சமுதாயத்திற்கும் இருக்க வேண்டும், அரசுக்கு அதை ஊக்குவிக்க வேண்டும் என்ற நினைப்பு இருக்க வேண்டும். ரூ.15 லட்சத்திற்கு மேல் ரூ.60 ஆயிரத்தைக் கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. இரண்டாவது ரூ.15 லட்சம் வரையில் ஒரு விலை, அதற்கு மேல் இன்னொரு விலை என்று விற்க முடியாது. ஆகவே மத்திய சர்க்காருக்கு நம் மாநில அரசு எடுத்துச் சொல்லலாம். எந்த வியாபாரம் செய்தாலும், 40, 50 லட்ச ரூபாய் அளவுக்குப் போனாலும், முதல் 5 லட்ச ரூபாய் வியாபாரத்திற்கு அந்தக் கலால் வரியை வசூலிக்க வேண்டாம் என்று கூற வேண்டும். மத்திய அரசு ரூ.50 லட்சம் வியாபாரம் செய்கிறவர்களைச் சிறு தொழில் நடத்துகிறவர்கள் என்று வைத்திருக்கிறார்கள். 'பேசிக் எக்சம்ஷன்' கொடுக்க வேண்டும். இன்கம்டாக்ஸில், அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸில், பேசிக் எக்சம்ஷன் இருப்பது போல் இதுவும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்த வேண்டும்.

இரண்டாவது, அட்வர்டைஸ்மென்ட் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். சிறு தொழில்களைப் பார்க்கிறோம். ரூ.100 கோடி வியாபாரம் செய்கிறவர்கள் ரூ.1 கோடி விளம்பரம் செய்ய முடியும். சிறு தொழில் நடத்துகிறவர்கள் ரூ.10 லட்சம் வியாபாரம். இவருக்கு ரூ.10 ஆயிரம்தான் விளம்பரம் செய்ய முடியும். சிறு தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு அதிக விளம்பரம் தேவை. செய்கின்ற பொருள்களைப் பொறுத்து விளம்பரம் தேவை. சோப்பு விளம்பரத்தைப்பற்றி நண்பர் திரு. அறிவழகன் சொன்

ளுர்கள். சோப்புக்கு டாக்ஸ் போட்டார்கள்- பெரிய கம்பெனி
கள் தான் சோப்பைத் தயார் செய்கிருர்கள் என்ருர். அந்த
அடிப்படையில் சோப்பு, காஸ்மெடிக் போன்றவைகளுக்கு அதிக
விளம்பரம் தேவை. பூ'ாண்டி அவர்கள் குறிப்பிட்டது போல்
சிறு தொழில்கள் உற்பத்தி செய்து பெரிய நிறுவனங்களுக்கு
விற்பனைக்குக் கொடுத்துவிட்டால், விளம்பரம் தேவையில்லை.
பொருள்கள் அடிப்படையில் அந்தப் பொருள் நேரடியாக மக்
கள் வாங்குகிற பொருளாக இருந்தால், அதிக விளம்பரச் செலவு
கொடுக்க வேண்டும். அதுவும் சிறு தொழில்களுக்கு இவ்வளவு
என்று அறுதியிட்டுக் கூற வேண்டும். எண்டெர்டெயின்மென்ட்
செலவுக்கு எந்தத் துறையானாலும் ரூ.5 ஆயிரம் வரை கொடுக்
கிருர்கள். அ வர்டைஸ்மெண்டைப் பொறுத்த வரையில், ரூ.1
லட்சம் வரையில் சலுகை காட்ட வேண்டுமென்று அரசு சொல்
லலாம் என்று கருதுகிறேன்.

இன்னென்று, பப்ளிக் செக்டார். பொதுத் துறையில் பலவித
மான தொழில்களை ஆரம்பித்திருக்கிருேம். பொதுத்துறையைப்
பொறுத்த வரையில், சொல் முடியும். குறிப்பாக மாண்புமிகு
முதலமைச்சர் ஒரு தொழில் லாபகரமாக இருப்பதை அடிப்
படையாக வைத்துக் கொள்ள வேண்டும். நான் சொல்லவில்லை
மத்திய ஆட்சியில் உள்ளவர்கள் சொன்னர்கள். கம்யூனிஸ்ட்
நாடான யு. எஸ். எஸ். ஆர். பொதுத்துறை நிறுவனங்கள் குறைந்த
பட்சம் லாபகரமாக இருக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாக
வைத்திருக்கிறது. கிட்டத்தட்ட போடுகிற பணத்திற்கு 12 சத
வீதம் வரவு வரவேண்டுமென்று சொன்னல், தவறு இல்லை.
இங்கே மின்சார அமைச்சர் அவர்கள் இருக்கிருர்கள். அவர்கள்
திரு. ஆர். வெங்கட்டராமன் கமிட்டியில் 9 சதவிகிதம் வேண்டு
மென்று சொன்னர்கள். நீங்கள் லாபத்திற்குக் கொண்டுவர
வேண்டும். நம் மாநிலத்தில் 6 சதவிகிதம் வருகிறது. மற்ற மாநிலத்
தில் அதிகம் இருக்கலாம். இருந்தாலும் லாபம் ஓரளவுக்கு வர
வேண்டும். அன்றையதினம் டிரான்ஸ்போர்ட் அமைச்சர் பதிலளிக்
கும்பொழுது சொன்னர்கள். பாண்டியன், சோழன் என்ற நிறு
வனங்களை ரூ.12 கோடி மூலதனம் போட்டு ஆரம்பித்தோம்.
க்யுமிலேடிவ் லாஸைப் பார்த்தால், அதற்குப் போட்ட மூல
தனம ரூ.12 கோடி, ஏற்பட்டிருக்கிற நஷ்டம் ரூ.11.75 கோடி.
தனிப்பட்டவர் வியாபாரம் செய்தால் ரூ. 10 லட்சம் போட்டு
தொழில் நடத்திஞல், தான் போட்ட முதல் போய்விட்டால்
அவர் தெருவில் நிற்கவேண்டும். போக்குவரத்து நிறுவனங்களுக்குப்
பணம் வேண்டுமென்ருல் அமைச்சர் அவர்கள் முதலமைச்சர்
அவர்களிடம் கேட்டு வாங்கலாம். நஷ்டத்திற்கு யார் பொறுப்பு,
எப்படி ஈடுகட்டுவது? மக்களிடத்திலிருந்து ஈடுகட்டவேண்டும். லாப
மாக இருந்தால் போடுகிற வரியைக் குறைக்கலாம். போடுகிற
சேல்ஸ் டாக்ஸ் யார் தலையில் விழுகிறது? நாட்டில் இருக்கக்
கூடிய 85 சதவீதம் பாமர மக்கள் தலையில்தான் வரி விழுகிறது.

டைரக்ட் டாக்ஸை நாட்டிலுள்ள 10 லட்சம் பேர் கட்டுகிருர்
கள். எக்ஸைஸ் டூட்டி, சேல்ஸ் டாக்சை, 85 சதவிகிதம் ஏழை
மக்கள்தான் கட்டுகிருர்கள். இவைகளை ஏழைகளிடமிருந்துதான்
வாங்கிக் கொடுக்கிருேம். தொழிலிலுள்ள மூலதனத்தைச் சாப்பிடு
கிருேம். இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லும்பொழுது, பூம்
புகார் பற்றி ஒரு குறிப்பை இங்கே காலையில் வைத்திருக்கிருர்
கள். மிகுந்த வேடிக்கையாக இருக்கிறது. காஸ்ட் ஆப் குட்ஸ்
சோல்டு, ரூ.1.06 கோடி வியாபாரம் செய்திருக்கிருர்கள்.
எவ்வளவு நஷ்டம்? கிட்டத்தட்ட ரூ 8 லட்சம் என்று ஆண்டுக்
கணக்கு. இது ஒரு துறையைப் பொறுத்தவரையில், அதில் எவ்வளவு
செலவு செய்திருக்கிருர்கள்? அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பென்சஸ்
செல்லிங் எக்ஸ்பென்சஸ் ரூ25.69 லட்சம். வியாபாரம் ரூ 1 கோடி.
கிட்டத்தட்ட 25 சதவிகிதம் அவர்களுடைய அலுவலகத்தை நடத்
துவதற்கும், விற்பனை செய்வதற்கும் செலவு செய்திருக்கிருர்
கள். சாதாரணமாக தனியார் தொழில் நடத்திஞல், அட்
மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பென்ஸ் 5 சதவிகிதத்தில் நடத்துவாமா
4 சதவிகிதத்தில் நடத்தலாமா என்று பார்ப்பார்கள். பெரிய
பங்களாவில் இருப்பவர்கள் சிறிய இடத்தைக் கூட தேடுவார்
என்று நினைப்பார்கள். சிங்கப்பூரில் பார்த்தேன். கோடிக்கணக்
கில் முதல் போட்ட வணிகக்காரன் எவ்வளவு வாடகை கொடுப்பான் என்று
சாதாரண கடைத் தகட்டு ஷெட்டில் வாங்கியிருக்கிருன்.
பேஸ்ட். தற்காலிகமான போட்டு வைக்கிருன். இது சிங்கப்பூர்,
மலேசியாவில் பார்த்தேன். பொதுத் துறை என்ருல், மிகப்
பெரிய கட்டடங்களைப் பிடிப்பது. அதற்கான போக்குவரத்
சாலிகள் வாங்குவது, குளு குளு அறை அமைப்பது இவைகளைத்
தவறு என்று சொல்லவில்லை. நம்நாட்டு கைத்தறிப் பொருள்
களை வாங்க வருபவர்களுக்கு சோபா ஓட்டலில் ஒரு டின்னர்
கொடுக்கலாம். நல்லதுதான். தப்பில்லை. எவ்வளவு அளவில்
நிர்வாகச் செலவை நடத்தலாம் என்று பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அதைப் பார்த்துக்கொண்டுதான் செய்ய வேண்டும். எல்லாத்
தொழில்களும் நஷ்டத்தில்தான் நடந்துகொண்டிருக்கின்றன.
அரசாங்கத்திற்கு அதனல் பல கேடுகள் வரும் என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்ன
வென்ருல், பொதுத் துறை நஷ்டத்தில் நடந்துகொண்டு வருகிறது
என்று சொல்கிருேம். இவைகளை நிருவகிப்பவர்கள் யார்? நிருவகிப்ப
வர்கள் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், இரண்டொரு ஆண்டுகளுக்கு
முன்னலே நடந்திருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்
சியில் இருந்தபோது, நான் கேள்விப்பட்டேன். இந்த மாநிலத்
திலே இருக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்கள் என்னென்ன?
அந்தப் பொது நிறுவனங்களில் இருக்கக்கூடிய மானேஜிங் டைரக்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1978 மார்ச் 27

டர்கள். நிர்வாக இயக்குநர்கள் எவ்வளவு ஆண்டுகளாக இருந்து
கொண்டிருக்கிறார்கள்? எவ்வளவு ஆண்டுகளாக அவர்கள் மேனேஜிங்
டைரக்டர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், ஒரு
ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்குத்தான் போட்டிருக்கிறார்
கள். சில நேரங்களில் இரண்டுவிதமான துறைகளுக்குக்கூடப் போட்
டிருக்கிறார்கள். ஒரு தொழிலைப் பற்றி அறிந்துகொண்டு வருவதற்
காக வெளிநாடுகளுக்கு அதிகாரிகளை அனுப்புகிறார்கள். வெளிநாடு
சென்றுவிட்டுத் திரும்ப இங்கே வந்து சேருகின்றபோது, இங்கே
வேறு பதவியில் போட்டுவிடுகிறார்கள். மாவட்டத்தின் கலெக்
டராக இருந்தார்கள். இப்போது இங்கே செயலாளராக இருக்
கிறார். அவரைப் பால் வள நிறுவனம்பற்றி அறியவேண்டும்
என்று ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பினார்கள், 3 அல்லது 4 மாதங்
கள் அங்கு இருந்து கற்றுக்கொண்டு திரும்பி வந்தார்கள். நெய்
வேலியிலே உள்ள அதிகாரி ஒருவர், நிலக்கரி பற்றிக் கற்றுக்
கொள்ளப் போனார்கள். திரும்பி வந்த போது ''இண்டஸ்ட்ரீஸ்''
இலாகாவிலே போட்டிருக்கிறார்கள். அதற்காக என்று படித்து
விட்டு வந்தவரை அரசாங்கத்திலே அதிகாரியாகப் போட்டிருக்
கிறார்கள். இந்தக் காரியங்களுக்காக எவ்வளவு பணச் செலவு ஆகி
யிருக்கும்? அதனால் ஏதாவது பலன் உண்டா என்று கேட்டுக் கொள்
கிறேன். பொதுத் துறை நிறுவனங்களை நடத்துகின்ற ஐ.ஏ.எஸ். அதி
காரிகளுக்கும். தொழில் துறை நிறுவனங்களை நடத்துகின்ற அதி
காரிகளுக்கும் முக்கியமான வேறுபாடுகள் இருக்கின்றன. தொழில்
துறையை நடத்துவது யார் என்று சொன்னால், அந்தத் தொழிலி
லேயே அனுபவம் உள்ளவர்கள், பரம்பரையாக இருந்து அந்தத்
தொழில் செய்பவர்கள்தான் அதை நடத்த முடியும். ஒரு கூட்
டாகவே இருந்துகொண்டு பெரிய பெரிய தொழில்களை நடத்து
கிறார்கள். தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்று
சொல்லிக் கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள்தான் நடத்த
வேண்டும். பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் என்பது வேறு. பிசினஸ்
அட்மினிஸ்ட்ரேஷன் என்பது வேறு. ஐ. ஏ. எஸ் ஆபிஸராக இருப்
பதால், தொழில் துறையை நல்லவிதமாக நடத்துவார்கள் என்று
சொல்ல முடியாது. இதுதான் என்னுடைய அபிப்பிராயம். தொழிலைப்
பற்றிப் புரிந்து கொண்டவர்கள்தான் அந்த மாதிரி நிறுவனங்களை
நடத்த முடியும். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்பற்றி எனக்கு வருத்தம்
இடையாது. நானே ஒரு தொழில் வைத்திருந்தால், அதற்கு ஒரு
மேனேஜிங் டைரக்டரைத் தான் போடுவேனே தவிர, ஒரு ஐ. ஏ.
எஸ். அதிகாரியைப் போட மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அவர்களுக்கு இருக்கக்கூடிய திறமை வேறு. இவர்
களுக்கு இருக்கக்கூடிய திறமை வேறு. அந்தத் தொழில் நிறுவனங்
களை நடத்துவதற்கு உரியவர்களை, திறமை உள்ளவர்களைப் போட
வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் வேறு. இவர்
களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் வேறு. மற்ற நிறுவனங்களில்
கொடுப்பதுபோல, மேனேஜிங் டைரக்டர்களுக்கு ரூ. 4,000,
ரூ. 5,000 என்று சம்பளம் கொடுக்க முடியுமா என்று கேட்கலாம்.

1978 மார்ச் 27] [திரு. ஜி. சுவாமிநாதன்]

நாம் ரூ. 4,000, ரூ. 5,000 என்று சம்பளம் கொடுத்தாலும் கூட அவர்களால் நாளையதினம் வரக்கூடிய லாபத்தைப் பார்க்கும்போது இப்படிப்பட்டவர்களைப் போடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியே ஐ. ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதாக இருந்தாலும் கூட, அவர்கள் 4, 5 ஆண்டுகளுக்காவது அந்தத் துறைகளில் பொறுப்பில் இருக்க வேண்டும். அந்தந்தத் துறைகளில் ஏற்படுகிற லாப நஷ்டங்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்க வேண்டும். எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சமயம் ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பொருள்களை அனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். வெளி நாட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டபோது, பணத்தைக் கூட வாங்காமல் அனுப்புகிறார்கள். ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பொருள்களை மலேசியாவிற்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு அந்தப் பணத்தைக் கேட்டார்கள். அங்கு அந்த வியாபாரியையே காண வில்லை. மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்கு Letter of Credit இல்லாமலே விற்றிருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்ட மானேஜிங் டைரக்டர் இப்போது மாறி விட்டார்கள். அடுத்த மானேஜிங் டைரக்டர் இன்றைக்கு அங்கு வந்திருக்கிறார்கள். அந்த நஷ்டத்துக்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். அதற்கான தண்டனைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அரசாங்கத்திற்கு லாபம் கிடைக்கும் நிலைமைகள் ஏற்படும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இதற்கு யார் மீதும் பொறுப்பு சொல்ல முடியவில்லை. யாருமே பொறுப்பில்லை என்று சொல்கின்ற முறையிலே ஜனநாயக அமைப்பு இருக்கக்கூடாது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது ஜனநாயகத்திலே அதிகாரிகள் மாறுகிறார்கள், செயலாளர்கள் மாறுகிறார்கள். இன்றைக்கு ஒருவர், நாளைக்கு ஒருவர். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவர் வருகின்றார்கள், போகின்றார்கள். அமைச்சர் பெருமக்களும் நிரந்தரமாக இருக்க முடியாது. இப்போது வந்திருக்கிற அமைச்சர் பெருமக்கள் இங்கு நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். மொத்தத்தில் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் 4, 5 ஆண்டுகள் கழிந்த பிறகு, மாறுதல்கள் ஏற்பட்டுச் சென்றுவிடலாம். இந்த நாட்டிலே உள்ள மக்கள், நிர்வாகம் நிரந்தரமானது. சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நாம், சில காலம் உறுப்பினர்களாக இருக்கின்றோம், போய் விடுகின்றோம். ஆக இருக்கின்ற யாரும் நிரந்தரமானவர்கள் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நலிந்த நிறுவனங்கள் சிக் மில்களை எடுத்துக்கொள்வது பற்றியும் சொன்னார்கள். 1969-லிருந்து எடுத்துச் செய்கின்றார்கள். இங்கே புதிதாகச் செய்ய வில்லை. இதிலே கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சிக் மில்கள் என்றால் என்ன? கிட்டத்தட்ட 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் முன்னாலே மில்களை, நிறுவனங்களை வைத்தவர்கள், அதிலே வரக்கூடிய லாபத்தைக் கொண்டு சுவிட்ஜர்லாந்து போன்ற வெளி நாடுகளிலிருந்து, அங்கு இருக்கக்கூடிய மெஷினரிகளை, வேண்டிய இயந்

திரங்களை எல்லாம் புத்தாக வாங்கி உபயோகிப்பதில்லை. காரணம்
20, 25 ஆண்டுகள் ஆகிவிட்ட நிறுவனங்களில் உள்ள தொழி
லாளர்களுக்கு அதிகப்படியான டி.ஏ., போனஸ் போன்றவைகள்
கொடுப்பதால், அவர்களால் நடத்த முடியாமல் நஷ்டமும் ஏற்
படுகின்றது. உ.பி.-யிலே சர்க்கரைக்கு விலை 209 ரூபாய் என்று
கொடுக்கிறார்கள். இங்கு நம் நாட்டிலே 196 ரூபாய் என்று விலை
கொடுக்கிறார்கள். அங்கு உள்ள தொழிற்சாலைகள் 25 ஆண்டு
களாக நடக்கின்றன. இந்த அதிகப்படியான சம்பளம் கொடுக்
கின்ற பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்தச்
சூழ்நிலையில்தான் 25 வருடங்களாக நடந்து கொண்டிருக்கிற
நிறுவனங்கள் நலிந்து போகின்றன. ஒரு நாளைக்கு மூடும்படியான
சூழ்நிலையும் ஏற்படுகின்றது. வேலையில் இருப்பவர்களுக்கு வேலை
கொடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள். தொழிற்
சாலைகளைத் திறக்க வேண்டும் என்று சொல்வார்கள். நான் என்ன
சொல்கிறேன்? ஒரு முக்கியமான பிரச்சினை என்று இங்கு ஒருகால்
அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுப்பேன். 590 தொழிலாளர்கள்
வேலை இல்லாமல் இருக்கின்றார்கள், அதற்கு அரசாங்கம் என்ன
செய்யப்போகிறது என்று கேட்டேன். இதற்காக என்று இங்கே
நாம் காரசாரமாகப் பேச வேண்டியது. அரசாங்கம் ஒரு தூது
கோஷ்டியை அவர்களிடம் அனுப்ப வேண்டியது. அவர்கள் எங்
களால் நடத்த முடியாது என்று சொல்வார்கள். உங்களால்
நடத்த முடியாது என்றால், நாங்களே நடத்துகிறோம் என்று
எந்தெந்த ஆலைகள் மோசமாக இருக்கின்றனவோ அவைகளை
அவர்கள் அரசாங்கத்தின் தலையிலேயே கட்டிவிடுவார்கள். தொழி
லதிபர்கள் 3, 4 மில்கள் வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள்.
10 மில்கள் வைத்திருப்பவர்களும் இருக்கின்றார்கள்.
மில்கள் மிகவும் மோசமான நிலையில் அதில் 3
நடைபெற்றுக்கொண்
டிருக்கின்றன. மீதி 7 மில்கள் நன்றாக நடந்து கொண்டிருக்கும்.
அவர்கள் அந்த மில்களை விட்டுவிட்டு, மீதமுள்ள 7 மில்
களை வைத்துக் கொண்டு அதில் வருகின்ற லாபத்தை அவர்
கள் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே நஷ்டத்தில்
நடந்து கொண்டிருக்கிற மில்களை எடுத்துக்கொள்வது போல, லாபத்
தில் நடந்துகொண்டிருக்கிற மில்களையும் அரசு எடுத்துக்
நடத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தொழிலா
ளர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக எடுத்து
அவைகளை நடத்துவது என்பது அரசுக்குப் பெரிய நஷ்டத்
தைத்தான் தொடர்ந்து உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இதனால் ஏராளமான நஷ்டம் ஏற்படும். இந்த
முறையை மாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எலெக்ட்ரோ மாக்னடிக் செல் என்று இருக்
கிறது. பெரிய மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்துகின்ற
கருவியாகும். லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உபகரணம்
இது. இந்த உபகரணங்களைக்கூட சரியாகக் காத்துக் கொள்வ

இல்லை. லெஜிஸ்லேட்டார் கமிட்டி என்று ஒன்று போட்டுக்
கூட அதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். பெரிய மருத்துவ
மனைகளில் எல்லாம் இதுபோன்ற இயந்திரங்கள் இயங்காமல்
இருக்கிற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிட்டத்
தட்ட 25, 30 சதம் கருவிகள் பல இடங்களிலே இயங்கவில்லை.
தஞ்சைப் பகுதியிலே உள்ள மருத்துவமனைகளில் உள்ள 'டீப்
எக்ஸ்ரே தெராபி' யூனிட் கடந்த 8 வருடங்களாக இயங்கா
மல் இருக்கின்றது. சென்னையிலே உள்ள பெரியமருத்துவ மனையிலே
கூட 2, 3 இயந்திரங்கள் சரியாக இயங்காமல் இருக்கின்றன
என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

திரு. க. அறிவழகன்: நான் பேசும்போது, மாண்புமிகு உறுப்
பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் மருத்துவத் துறை
பற்றிப் பேசுகிறாரா என்று கேட்டார். அவரும் இப்போது
மருத்துவத் துறை பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'எலெக்ட்ரோ மாக்னடிக் செல்
......

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து): ஏற்கனவே
40 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'பொல்யூஷன்' எப்படி சுகாதாரத்
தோடு தொடர்புடையதோ, அதுமாதிரி தொடர்புடையது
தான் இது. அந்த எலெக்ட்ரோ மாக்னடிக் செல் சரியாக
இயங்கவில்லை. அதைத் தொழில் துறையோடு இணைத்திருக்
கிறார்கள். சம்பந்தப்பட்ட 'டீன்' அதை ரிப்பேர் செய்ய
வேண்டுமென்றால், தொழில் துறையோடு சேர்ந்து ஈடுபட
வேண்டும். தனியாக தொழில் துறைக்கு இயக்குநர் இருந்
தால்கூட, அவர்களுக்கு பல வேலைகள் இருக்கின்றன.

This can be connected to the Director of Medical Education.
இந்தத் துறையை டி.எம்.இ.யுடன் இணைத்துவிட்டால், டீன்
இயந்திரங்கள் சரியாக இயங்கவில்லை என்று தெரிவிக்க, அவர்
உடனடியாக அவற்றை ரிப்பேர் செய்ய முடியும். எனவே
அதை டி.எம்.இ.யுடன் இணைக்க வேண்டுமென்ற கருத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன். முடிவாக ஓரிரண்டு பிரச்சினைகளை
மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): இன்னும்
[illegible] உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். [illegible]
[illegible] கொள்ளவும்.

திரு. ஜி. சுவாமிநாதன்:- நான் விளக்காமல் சொல்லி விடுகிறேன். 'டிக்' ஐப் பொறுத்த வரையில், அதிகமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்றும், சிறு தொழில்களை வளர்க்க வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஓராண்டாக 'டிக்' நிறுவனத்தின் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரிகளுக்கு டைரக்டர் கிடையாது. உடனடியாக சிறு தொழில்களுக்கென டைரக்டர் நியமிக்க வேண்டும். அடுத்து, சரியான முறையில் தொழில்களை நடத்த வங்கிகளிலிருந்து பணம் கிடைப்பதில்லை. அவர்கள் செக்யூரிட்டி கேட்கிறார்கள். வங்கிகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, என்ன செய்யலாமென்பதை யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் சிறு தொழில்கள் நடத்த 'ரா மெடிரியல்ஸ்—அலுமினியம், ஸ்டீல், பிக் ஐரன் ஆகியவை கிடைக்கவில்லை. சிறு தொழில்களை நடத்த முடியாமல் இருக்கிறது. அவை கிடைக்க ஆவன செய்ய வேண்டும். சிறு தொழில்களை ஆரம்பிப்பது நல்லதுதான். இருந்தாலும் புதிதாக ஆரம்பிப்பதைவிட, இருப்பதை முழு அளவுக்கு நடத்த வேண்டும். இப்போது ஆரம்பித்திருக்கக்கூடிய சிறு தொழில்களைப் பொறுத்த வரையில், 'நான்-யுடிலைசேஷன் ஆப் கெபாசிடி' 50 சதவிகிதத்திற்குமேல் இருக்கிறது. எனவே இருக்கின்ற தொழில்களை 'ஃபுல் யுடிலைசேஷன் ஆப் கெபாசிடி' அளவுக்கு ஆக்க வேண்டும். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், மாலை நேரத்திலேயும், காலை நேரத்திலேயும் 'ரெக்ஸ்டிரிக்ஷன் ஆப் [illegible] டிரிசிடி' இருக்கிறது. 'நாங்கள் இரண்டு சதம்தான் [illegible] உபயோகப்படுத்துகிறோம்; ஆனால் பெரிய தொழில்களுக்குக் கொடுக்கிறீர்கள்; அதைப் போன்று எங்களுக்கும் கொடுத்தால், இரண்டு ஷிப்டுகள் போட்டு வேலை செய்ய முடியும்' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திற்கு இல்லை. பின் தங்கிய மாவட்டங்களுக்கு 'அட்வைசரி கமிட்டி' போட்டார்களோ என்னவோ. எங்களுடைய மாவட்டத்திற்கும் அத்தகைய கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் தொழில்களை ஆரம்பிக்க பணம் இருக்கிறது. எப்படி ஆரம்பிப்பது என்பது தெரியாமல் தனிப்பட்ட விவசாயிகள் இருக்கிறார்கள். அதற்காக கமிட்டி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யத்தில் மெரைன் கெமிகல் காம்ப்ளக்ஸ் 10கோடி ரூபாயில் ஆரம்பிப்பதாக இருந்தது. 4, 5 ஆண்டுகளாக சிப்காட், டிட்கோ நிறுவனங்கள் ஆராய்ச்சிகள் முடிந்து, ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறார்கள். எனவே வேதாரண்யத்தில் மெரைன் கெமிகல் காம்ப்ளக்ஸை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டீல் ரோலிங் மில்களில் 10,000 பேர்கள் வேலை பார்க்கிறார்கள், 62 மில்களில் 32 மூடப்பட்டிருக்கின்றன. 'ரீ-ரோலிங்' ஐப் பொறுத்தவரையில் சேல்ஸ் டாக்ஸ் எக்செம்ப்ஷன் கொடுக்கப்படுவதில்லை. ஆந்திரா, கர்நாடகாவில் கொடுத்து விட்டார்கள். எனவே அங்கேயிருந்து பொருள்களை வாங்குகிறார்களே தவிர தம்முடைய மாநிலத்திலிருந்து வாங்குவதில்லை. எனவே அண்டை மாநிலங்களிலுள்ள சலுகைகளை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 27

புலவர் புலமைப் பித்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் வளர்ச்சிக் கொள்கைக் குறிப்பின் மீது நானும் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். சுதந்திரம் கிடைத்து, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்த பின்னாலே என்று கருதுகிறேன். பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள், "நாம் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். அதன் மூலமாக மொத்தமாகப் பார்க்கிற 'பெர்-கேபிடா இன்கம்' என்று சொல்கிற தேசிய வருமானம் மிகப்பெரிய அளவிலே வந்திருக்கிறது என்றாலும், வந்த வருமானம் எந்த வழிகளில் போய்ச் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை, அது பரவலாகச் சென்று சேரவில்லை" என்று பாராளுமன்றத்தில் பண்டித நேரு அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார்கள். திட்டங்களைத் தீட்டுவது என்பது, நலிந்து கிடக்கிற நாட்டில் ஒரு சமத்துவமான பொருளாதாரத்தை உருவாக்குவதற்குத்தானே தவிர, பொருளாதாரம் ஓரிடத்தில் குவிய அல்ல என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படித் திட்டங்களைத் தீட்டுகிறபோதுகூட, திட்டங்களைப் பரவலாக்குவதென்ற கொள்கைக்கு வருகிறோமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்கு முன்னாலே தொழில்களை கிராமங்களை நோக்கிக் கொண்டுபோய், இல்லாத ஏழைகளுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்போம்; ஏழைகள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைவதற்கான அடிப்படைத் திட்டங்களை வகுப்போம் என்று சொல்லி, சொல்லிச் செய்யாமல் போகவில்லை. சொன்னதைச் செய்கிற முறையில் இன்றைக்குத் திட்டங்களை, செயல் திட்டங்களை உண்டாக்கி [illegible] நகரங்களை, கிராமங்களை நோக்கிச் செல்வது, ஒரு பொருளாதார சமத்துவத்தினுடைய முதல் அடிப்படை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். [illegible] வகையில் கல்வித் துறையில் கூட புரட்சியை உண்டாக்கியிருக்கிறோமென்பதை மறந்துவிடக்கூடாது. "செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமை தான் நமக்குச் செல்வம்" என்று சொல்லியிருக்கிறோம். செய்யும் தொழில் தெய்வம் என்றாலும், அந்த தெய்வம் கூட நமக்குச் சரியான [illegible] துறையிலே திறமை வளர வேண்டும், [illegible] சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நாம் தொழில் வளர்ச்சியை நம் மாநிலத்தில் உருவாக்க வேண்டுமென்று நினைக்கும் நேரத்தில், தொழில் கல்வி இன்னாள் [illegible] திட்டங்களை [illegible] [illegible] ஒரு பக்கத்தில் தொழிற் [illegible] உருவாக்கு

1978 மார்ச் 27] [புலவர் புலமைப்பித்தன்]

ளும், இன்னொரு பக்கத்தில் தொழிற் பயிற்சிக் கூடங்களையும், தொழிற்பயிற்சி நிலையங்களையும் உருவாக்கும் நல்ல சீரான திட்டம் இந்த அரசின் திட்டமென்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு சுவாமிநாதன் அவர்கள், 'ஜனதா கொண்டு வந்தது, அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகம் தருகிறது' என்று திரு தங்கப்பாண்டியன் சொல்லக் கூடுமென்று சொல்லி, அவரே பதிலும் சொன்னார்.

(பிற்பகல் 12-50)

அருமை நண்பர் திரு தங்கப்பாண்டியன் அவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள் என்று நானும் நம்புகிறேன். அப்படிச் சொல்லவில்லை என்று அவரும் தலையை அசைக்கிறார்கள். யார் கொண்டு வந்த திட்டம் என்று சொன்னாலும், ஒரு பரவலான பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட முற்போக்குக் கொள்கை என்றால், அதை ஆதரிப்பார் என்பதிலே நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இது யாருடைய திட்டம் என்பதல்ல முக்கியம். அந்தத் திட்டத்திலே எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என்பதை எண்ணி மற்றவர்கள் பாராட்டுகிறார்கள்.

தொழிலாளர்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை, அதனால் தான் தொழில் வளர்ச்சி அடைய முடியவில்லை என்பது போல குற்றச்சாட்டை அருமை நண்பர் திரு வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தொழில் துறையில் நாம் அக்கறை செலுத்தாமல் இருக்கிறோம் என்ற மனோபாவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. 1976-77-ல் 156 சிறு தொழில்களுக்காக ரூ. 38.83 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1977-78-ல் [illegible] 53.38 இலட்சம் ரூபாய் தொழில்களுக்காகச் செலவினமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, [illegible] தொழில்களைப் பரவலாக்க வேண்டுமென்றும், சிறு தொழில்கள் வளர்ச்சி பெற வேண்டுமென்றும் அதற்குப் பெருந்துணை யாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதையும் [illegible] விடக் கூடாது.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே [illegible] நம்முடைய நாட்டிலே கனிப்பொருள்கள் [illegible] இன்றன என்று நம்முடைய அருமை [illegible] அவர்கள் சொல்லி, தன்னுடைய [illegible] இந்த [illegible] தைக் கூட காட்டி, [illegible] செய்ய [illegible] [illegible]

[புலவர் புலமைப்பித்தன்] [1978 மார்ச் 27

[illegible] திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மிகத் தெளிவாக [illegible] எழுதியிருக்கிறார்கள். நானே கூட அதைப் பாடமாக [illegible] நிலைமை இருந்தது. அப்போது ஜப்பான் நாட்டுடைய [illegible] எண்ணிப் பார்த்து வியப்படைந்தேன். "ஜப்பான் நாடு பூகோள அமைப்பிலே எந்த வகையிலும் வளமற்ற நாடாக இருக்கிறது. அங்கே 84 எரி மலைகள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அங்கே சமவெளிப் பகுதிகள் கிடையாது. எந்தக் கனிப்பொருளும் கிடையாது. அலுமினியமும் கிடையாது. உப்பும் கிடையாது. இப்படியிருக்கிற நாடு உலகத்திலுள்ள பொருளாதாரத்தில் உச்சகட்டத்தில் இருக்கக் கூடிய மிகப் பெரிய நாடுகளுக்குச் சமமாக இருப்பதற்குக் காரணம் அந்த நாடு தொழில் துறையிலே பெற்றிருக்கிற முன்னேற்றம் தான்" என்று எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். "அவர்கள் தங்களுக்கு வேண்டிய கனிப்பொருள்களை வேறு நாடுகளிலிருந்து தருவித்துக் கொள்கிறார்கள். அந்தக் கனிப்பொருள்களின் மூலம் பெரிய தொழில்களைச் செய்து அதில் உற்பத்தியாகக் கூடிய பொருள்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள்" என்ற நிலைமையும் சுட்டிக்காட்டப்படுகிறது.

[illegible] அதைப் போல அறிவியல் வளர்ந்து போயிருக்கிற நமது நாடு முன்னேறத் [illegible] வேண்டுமென்றால், தொழில் [illegible] மிகப்பெரிய அளவிலே வளர வேண்டும். தொழில் துறை [illegible] பெருமளவும் பரவலாக எல்லோருக்கும் சென்று சேரு[illegible] அடிப்படையிலே அந்தத் திட்டங்கள் அமைய வேண்டுமென்[illegible] நமக்கெல்லாம் நிச்சயமாக நல்லதொரு குறிக்கோள் [illegible] வேண்டும்.

[illegible] கோடி ரூபாய் திட்டத்தில் நம்முடைய நாட்டில் காகிதத் தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்று முனைந்துள்ள [illegible]

[illegible]: [illegible] அவர்களே, ஒரு கோடியல்ல, நூறு கோடி ரூபாய்.

[illegible] [illegible]

1978 மார்ச் 27]

புலவர் புலமைப்பித்தன்: நன்றி. ரூ. 100 கோடியில் ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை உருவாக்க இருக்கின்ற திட்டத்தை உருவாக்கியதற்காக நாம் [illegible] பாராட்ட வேண்டும். அது எங்கே அமைகிறது? [illegible] கோவையிலா என்ற பிரச்சினையைக் காட்டிலும் [illegible] எங்கே அமைந்தாலும், இந்த நாட்டிற்கு பெரிய [illegible] அது பயன்படுமென்று நம்புகிறேன். இந்தக் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலமாக, "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்" என்று மகா கவி பாரதியார் பாடிய பாட்டிற்கேற்ப அவர் கண்ட கனவை நிறைவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அரசுக்கு, பாரதியாரின் சார்பில் ஒரு கவிஞன் என்ற அடிப்படையிலே நான் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் துறையைப்பற்றியும், பொதுத்துறையைப்பற்றியும் அருமை நண்பர்கள் பேசினார்கள். நாடு நலம்பெற வேண்டுமென்றால், தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கு மாற்றப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் என்னவோ தெரியவில்லை. தனியார் துறையில் இருக்கிற தொழில் இலாபம் அடைவதாக இருக்கிறது. அதுவே பொதுத் துறைக்கு வருகிறபோது, நட்டம் அடைவதாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த விந்தை எப்படி நடக்கிறது என்று புரியவில்லை. [illegible]ளுடைய வீட்டிலே ஒரு கடிகாரம் இருக்கிறது. அதை [illegible]ரிப்பேர் செய்பவனிடம் கொடுத்தால், அங்கே போகிறபோது, அந்தக் கடிகாரம் நன்றாக ஓடுகிறது. ஆனால் அதே கடிகாரம் வீட்டுக்கு வந்தால், சுவரில் மாட்டப்பட்ட [illegible]. அதைப் போல தனியார் துறையில் இருக்கும்போது [illegible] சம்பாதிக்கிறார்கள். ஒரு பஸ் வாங்கியிருப்பவர்கள் [illegible]குள் பத்து பஸ்கள் வாங்கும் அளவுக்கு முன்னேறுவதற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் பொதுத் துறைக்கு வரும்போது, அப்படிப்பட்ட நிலை ஏன் இல்லை என்பதைக் கண்டறிய வேண்டும். பொதுத்துறைக்கு [illegible] பொருளாதாரத் துறையிலே புரட்சி என்பது [illegible] அதே நேரத்திலே இப்படி சோம்பிய நிலைமையிலே [illegible] இல்லாமல் முன்னேறுவது என்பதும் [illegible] பார்க்கிறபோது பெண்ணைக் கொடுக்க [illegible]கும் போது, உன் மகனுக்கு பைத்தியம் [illegible] [illegible] தீருமென்று சொல்லுவது போலவும், [illegible] நான்தான் பைத்தியம் தீரும் என்பது போலவும் [illegible] பொதுத் துறைக்கு [illegible] [illegible] முடியாது. [illegible]

[திரு. புலவர் புலமைப்பித்தன்] [1978, மார்ச் 27

[illegible] எண்ணிப் பார்க்கிறபோது, பொதுத் துறையிலே ஏற்படுகிற சீரழிவுகளைப்பற்றி இந்த அரசு வந்த பின்னாலாவது [illegible] நஷ்டமாக இருந்து, கவனிப்பாக இருந்து, [illegible] கண்டறிந்து திட்டம் ஏற்படுவதற்குரிய காரணங்களைக் [illegible] முன்னெச்சரிக்கையாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கும் என்று நம்பி, அரசு அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நலிந்த ஆலைகளுக்கு ஆக்கமளிப்பது, ஊக்கமளிப்பது என்ற திட்டத்தை, நான் கோவையிலே ஒரு காலத்திலே [illegible] தொழிலாளியாக இருந்தேன் என்ற அடிப்படையில், ஒரு வகையிலே பாராட்டுகிறேன். இதை நான் பாராட்டுகிறபோது, அருமை நண்பர்கள் சொல்லக் கூடும், "நாங்கள் சொல்லும் போது இதைக் குறைகுறைவாகச் சொன்னீர்களே, நீங்கள் இதைச் செய்யலாமா?" என்று. மருத்துவராக இருக்கிறவர் ஓரிடத்திலே பெண்ணுக்குச் சிகிச்சை செய்துவிட்டு பிறகு தானே அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டால், அங்கே போகிற நோயாளிகளுக்கெல்லாம் சிகிச்சை செய்துவிட்டுப் பிறகு கல்யாணம் செய்துகொள்வார் என்று அந்த மருத்துவரிடம் சிகிச்சை செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லும்போது அந்த வாதம் இருக்கிறது என்று [illegible] சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நலிந்த ஆலைகளுக்கு ஊக்கமளிப்பது என்பது அந்த ஆலைகளுடைய சொந்தக்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பதல்ல. கோவையிலே பஞ்சாலைத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் என்று கருதுகிறேன். நலிந்த ஆலைகள் நின்று விடாமல் மீண்டும் தொடரச் செய்தால், [illegible] எதிர்காலத்திலே வேலையில்லாமல் இருக்கும் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித் தர [illegible] எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு [illegible] திரு. [illegible] அவர்கள் கூட குறிப்பிட்டார்கள் [illegible] புதிய ஆலைகளை வைத்துக் கொண்டு, அதில் [illegible] இலாபம் [illegible] கொண்டு [illegible] ஏற்படும்போது ஆலைகள் [illegible] என்ற முறை [illegible] என்று சொன்னார்கள். அதிலே கொஞ்சம் [illegible] என்னுடைய [illegible] தொழிலாளர்களைப் பற்றிப் பேசும்போது, இன்றைய [illegible] ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். [illegible] நேரத்தில் குறிப்பிட்டார் என்று கருது[illegible] இருக்கிற தொழிலாளர் [illegible] உருவாக்கி, அதற்குத் தலைமை [illegible] தொழிலாளர்களுடைய கோரிக்கை[illegible] நடத்துகிறார்கள். [illegible] தொழிலாளர்களுக்குச் சங்கங்கள் இல்லையே, [illegible]

1978, மார்ச் 27] [புலவர் புலமைப்பித்தன்]

காரணம்?" என்று கேட்டார்கள். அதனாலே வேலை இல்லாதவர்களுக்கு வேலையை உருவாக்குவது முதற்கட்டம் என்றால், கிராமப்புறங்களில் தொழில்களை உருவாக்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையில் இந்தத் திட்டத்தை உருவாக்கியதற்காக நான் மீண்டும் மனமாரப் பாராட்டுகிறேன். நலிந்து போன ஆலைகளுள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு ஆக்கமளித்து, ஊக்கமளித்து பாதுகாக்கக்கூடிய வகையில் தொழில் திட்டத்தைப் பரவலாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிற இந்த அரசு அந்தத் துறையிலே வெற்றி பெற வேண்டுமென்பது என்னுடைய கருத்து, என்னுடைய எண்ணமாகும். அதே நேரத்தில் தொழில்களை நிம்மதியாக நடத்துவதன் வாயிலாக உற்பத்தியைப் பெருக்க முடியும். போராட்டங்கள், கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது நாட்டினுடைய வளர்ச்சிக்குச் சேதம் ஏற்படுகின்ற வகையில் இருக்கக்கூடாது என்பதை பலமுறை வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், நாட்டில் எத்தனை திட்டங்களை உருவாக்கினாலும், அதனால் வருகிற முன்னேற்றமெல்லாம் தடைபடுகிற வண்ணமாக தேவையில்லாத வகையில் அமைதி கெடும் சூழ்நிலைகளை உருவாக்க முயற்சிக்கக் கூடாது. கோரிக்கைகள் வரலாம். அவற்றைப் பரிசீலிக்கும் போது, தொழில் வளர்ச்சி பாதிக்கும் நிலையில் அமைந்துவிடாமல், எல்லாத் தரப்பினரும் [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை உருவாக்குகிற அரசை வாழ்த்தி [illegible] இந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு [illegible] பேசுகிறபோது, இந்த நாட்டில் [illegible] அவர்களே, நான் [illegible] இருக்கின்றன என்றும், இந்த [illegible] கனி வளங்கள் இருக்கின்றன என்றும் [illegible] அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். அதற்கு உதவியாக நம்முடைய முதலமைச்சர் [illegible] தொழில் [illegible] போகின்றன என்பதையும் [illegible] அவற்றைக் [illegible] உருவாகும் என்பதாகும் [illegible] திட்டங்களெல்லாம் அரசு [illegible]

(உறுப்பினர் அளித்த சிறு முடிக்க மாற்றுத் தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாரதியார் பாடினார். அதற்குப் பிறகு அவர் சொன்னது நடக்கும் தேவை இல்லையாது. குறிப்பாக அதைப்பற்றி நான் கொஞ்சம் பேச நினைக்கிறேன். நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் கடந்த இந்த வேலைக் கூட்டத்திற்கு அதிகமாக வரவில்லை. வரவில்லையே என்று சொல்லி எல்லோரும் அவர் வரவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர் வரவேண்டுமென்பதில் அக்கறை எடுத்துக்கொண்டவர்களில் நானும் முதன்மையாக இருந்தவன். அவர் வரவேண்டுமென்று என் விருப்பமும் ஆசையும். எங்களுடைய தேவைகளை நிறைவு செய்கிறது. கருத்தோடுள்ள எடுத்துக் கொண்டால், அதன் நிலைமை வேறு. நகர்ப்புறத்தின் நிலைமை வேறு. இப்படி ஒவ்வொரு பகுதிக்கும் நிலைமைகள் வேறு வேறாக இருக்கின்றன. கன்னியாகுமரியின் உள்ள நிலைமை தர்மபுரியில் இருக்காது. இந்த நிலைமைகளைப்பற்றி எல்லாம் திரு. கலாநிதி அவர்கள் பேசினார்கள். மரியாதைக்குரிய புலமைப்பித்தன் அவர்கள் பேசினார்கள். அடுத்து இவர் இருக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். அவர்கள் நன்றாக பேசினார். நான் படித்த வரையில், இவர்கள் என்றுதான் பித்தர்கள் கவிஞர்கள்.

புலவர் புலமைப் பித்தன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை சமயவாதியாக எடுத்துக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். அவனுக்குக் கூட பித்தன் என்ற பெயர் உண்டு. பித்தன் என்றால் பைத்தியக்காரன் என்று கருதிக்கொண்டு இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் அரசாங்கம் தனித்த தொழில்களை எடுத்துக் கொள்கிறது என்று சொன்னார்கள். படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம்.

முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக வந்தது மட்டுமல்ல: உண்மையிலேயே சிலர் அவர் பேரில் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உண்மையாகவே ஒரு காரியத்தில் எந்தத் தவறும் இல்லை என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்தால், யாருடைய எதிர் பார்க்காமல் அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்க முன் வருகிறார்கள் என்று மக்கள் எண்ணுகிறார்கள். அந்த மாதிரி அவர்கள் செய்கிற காரியத்தில் தவறும் இல்லை. சூது எதுவும் கிடையாது என்பது என்னுடைய எண்ணம். ஆங்காங்குள்ள சூழ்நிலைக்குத் தகுந்தபடி செய்யாததால், சில காரியங்கள் சில இடங்களில் தவறாகவும் சில இடங்களில் சூழ்நிலையைக் கவனித்துச் செய்வதால் நேர்மையாகவும் இருக்கின்றன.

எங்கள் பகுதியில் உழவைத் தவிர, வேறு தொழில் இல்லை. மேற்கு இராமநாதபுரம் பணப் பயிர்கள் வளரும் பகுதி. கிழக்கு இராமநாதபுரத்தில் நெல்லைவிட்டால், வேறு கதி கிடையாது. மானாவாரி பிரதேசம் அது.

திரு. வே. தங்கபாண்டியன்: மாவட்டத்தை மேற்கு, கிழக்கு என்று பிரிக்காமல் பொதுவாக இராமநாதபுரத்திற்கு என்று கேட்டால், நன்றாக இருக்கும். எல்லாமே மானாவாரி பகுதிகள் தானே.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மேற்கு இராமநாதபுரத்தில் வைத்தியம் விசேஷமாக இல்லை. எங்கள் கிழக்குப் பகுதியில் நெல் மட்டும்தான் விளைகிறது. பணப் பயிர்களுக்கான உபகரணங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்றுதான் சொன்னேன். மழை பெய்து கண்மாய்கள் பெருகினால், அந்த வருஷம் நன்றாக இருக்கும். தவலயாக இருப்போம். அதன் பிறகு மூன்று வருஷங்களுக்குக் கஷ்டத்திற்கு ஆளாகிவிடுகிறோம். தற்போது நல்ல எண்ணம் படைத்தவர்கள் இருக்கிற ஒரு காரணத்தினால், இனிமேல் அந்த மாதிரி ஒரு சூழ்நிலை வர வேண்டாம், வராது என்று நம்புகிறேன்.

[திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்] [1978 மார்ச் 29

ஆங்கிலேயன். அவன் தமிழில் எழுதிவிட்டான். அவர்களுக்கெல்லாம் நல்ல வாழ்வு கொடுக்க வேண்டுமென்றும், அங்கெல்லாம் தொழிற்சாலை உண்டு பண்ண வேண்டும். லட்சரூபாய் போட்டால், கோடிக்கணக்கில் போட்டால், அதற்கான தொழில் வருமென்று சொன்னார்கள். இரண்டாமே கிழக்கு இராமநாதபுரத்தில் இல்லை. பணம் படைத்தவர்களும் அங்கயே இருந்து தொழில் வளர்ப்பதில்லை. இருக்கிற கொஞ்சம் நிலத்தை நம்பி மானாவாரி விவசாயத்தை விட்டுவிட்டு, வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள். அங்கே போய் தொழில் செய்கிறார்கள். பம்பாய், கல்கத்தா என்று பல இடங்களுக்குப் போய் தொழில் செய்கிறார்கள். இவை தவிர, இராமநாதபுரம் ஜில்லாவில் இருந்து செய்வதற்கு மனம் இல்லை. உள்ளூர்காரன் சரியாக நடக்க மாட்டான் என்ற எண்ணத்தில் அப்படிப் போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அரசுதான் அதற்கு வழி தேடிக் கொடுக்க வேண்டும். அங்கே ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலையை அரசாங்கம் வைக்க வேண்டும். இடம் ஏராளமாகக் கிடக்கிறது அங்கே.

திரு. ஜி. சுவாமிநாதன் : அங்கே காகிதத் தொழிற்சாலை வைப்பதற்கான தண்ணீர் வசதி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : வெள்ளைக்காரன் காலத்தில் பாரோ ஒரு இன்ஜினியர் வந்து, அந்தப் பகுதியை சர்வே செய்து பார்த்துவிட்டு, நிலத்தடித் தண்ணீர் இங்கே கிடையாது என்று சொல்லி எழுதிவைத்து விட்டுப் போய்விட்டான். அதற்குப் பின்னும் நாங்கள் எல்லாம் வந்து அமைச்சர்களையும் அதிகாரிகளையும் பார்த்து, சர்வே செய்யுங்கள் என்று சொன்னோம். அவர்கள் உடனே பழைய பைலைக் கொண்டுவரச் சொல்கிறார்கள். அதில் வெள்ளைக்காரன் காலத்தில் நிலத்தடி நீர் இல்லை என்று எழுதியிருப்பதைப் பார்த்துவிட்டு, "நிபுணர்கள் அப்போதே பார்த்துவிட்டு நிலத்தில் ஒன்றுமே இல்லை என்று எழுதிவிட்டார்களே; இப்போது ஏன் மறுபடியும் தோண்டிப் பார்க்கச் சொல்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

இப்போது 3, 4 இடங்களில் டியூப் போடும்படி செய்தோம். அமோகமாக அந்த இடங்களில் மெஷின் இல்லாமலேயே 20 அடி உயரத்திற்குத் தண்ணீர் மேலே வந்து கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் சோதனை செய்யத் தண்ணீர் இருக்கிறது. [illegible] பாலைவனம் [illegible] இராமநாதபுரம் ஜில்லா [illegible]

[தி௫. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்]

தண்ணீர் இல்லை, தண்ணீர் இல்லை என்று சொல்லியே காலம் கழித்துவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்துக்காரர்களுக்கு கூட காவேரியிலிருந்து, மேட்டூரிலிருந்து வந்தால்தான் தண்ணீர். எனவே எங்களை மேலே ஏறவிடாமல் செய்து விட்டார்கள். இப்போது காகிதத் தொழிற்சாலை எங்கள் மாவட்டத்தில் வைக்க வேண்டுமென்றால், உடனே தண்ணீருக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்கிறார்கள். பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. தண்ணீரைச் சரியான முறையில் எடுக்க முடியாமல் இருக்கிறது. எங்கள் பகுதியில் போக்குவரத்து வசதிகள் சரியில்லாமல் இருந்தன. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நல்லெண்ணத்தின் காரணமாக பல இடங்களில் ரோடுகள் போடுகிறார்கள். ரோடுகள் போடுவதில் எஞ்சினியர்கள் தான் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் எப்படிக் குறை சொல்ல முடியும்? எங்களுக்கு என்ன தெரியும்? இருந்தாலும் நாங்கள் குறை சொல்லுகிறமாதிரி அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள்.

இங்கே பீர்க்கைக்கும் கோட்டைக்கும் இடையே ஒரு ரோடு போடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். போடுகிற ரோடு கோட்டைக்கு முன்பே ஒரு 1½ பர்லாங்கு தூரத்தில் நின்றுவிடுகிறது என்றால், அதைப் பற்றி நாம் என்ன நினைப்பது? அனைத்து நானே ரோடு போடுகிறார்கள். எப்படி 1½ பர்லாங் முன்னே நிற்கும்? இதைப் போலத்தான் எங்கள் பக்கத்தில் ஒரு ஊருக்கு ஒரு பர்லாங்குக்குக் குறைவாக, ஒரு 400 அடி அல்லது 500 அடிக்குள் நின்று விட்டது. 3 கிலோ மீட்டருக்கு ஒரு ரோடு போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ரோடு ஊருக்குள் வராமல் ஊருக்கு வெளியே 300 அல்லது 400 அடிக்கு முன்னேயே நின்றுவிட்டது. மீதியையும் போடுவதுதானே என்று அங்கே உள்ள எஞ்சினியர்களைக் கேட்டால், நாங்கள் 3 கிலோ மீட்டருக்குத்தான் எஸ்டிமேட் போட்டோம். அது முடிந்து விட்டது. ஏனய்யா இப்படிச் செய்தீர்கள்? நீங்கள் தானே பிளான், எஸ்டிமேட் எல்லாம் போட்டீர்கள்? நீங்கள் சரியாக அல்லவா போட்டிருக்க வேண்டும். ஊருக்குள் போகாமல் ஏன் ரோடு போட வேண்டும்? இப்படிக் கேட்டால், நாங்கள் மேலே எழுதி, பிறகு சாங்ஷன் வாங்கி, இந்த ரோட்டை ஊருக்குள் கொண்டுவருகிறோம் என்கிறார்கள். ஊருக்குள் போகாத ரோடு எதற்காகப் போட வேண்டும்? [illegible] [illegible]

எண்ணக் கூடாது. "பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்" என்று யாரோ சொல்லிவிட்டுப் போனுன். அதை நாங்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உங்களோடு நாங்களும் நன்றாக வாழ வேண்டும் என்று நீங்கள் எண்ண வேண்டாமா? எங்களுக்கு நீங்கள்தானே வசதி செய்து தர வேண்டும். எதற்காக 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரோடு போட ஒப்பந்தம் போட்டு 300 அடிக்கு 400 அடிக்கு முன்னாலேயே ரோட்டை நிறுத்துவது? இனிமேல் 'பர்தர்' ஆக சாங்க்ஷன் வாங்கப் போகிறோம். ஊருக்குள் ரோட்டைக் கொண்டுவருவோம். இனிமேல் இதற்கு எஸ்டிமேட் போட வேண்டும் என்று சொன்னால், என்ன நியாயம்? இதைச் சொன்னால், நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் அவர் குறிப்பிட்டவாறு சாலைக் குறைபாடு இருக்கிறது என்று எழுதிக் கொடுத்தால், கண்டிப்பாக உடனடியாக இந்த அரசு அது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அதுபற்றிய விவரங்களைக் கொடுக்கத்தான் போகிறோம். நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள். இங்கே இதைப்பற்றி இப்படி ஒன்றைக் குறிப்பிட வருத்தக் காரணம் நிர்வாகக் குறைபாடுகள் இன்னும் இருந்து வருகின்றன. கருங்குடிக்கும் வளமாவூருக்கும் இடையில் 3 கிலோ மீட்டர் நீள ரோடு போட்டு, அது 300, 400 அடிக்கு முன்னாலேயே முடிந்திருக்கிறது. வளமாவூரை எப்படி எழுதியிருக்கிறார்கள் என்றால், வளமாமூர் என்று எழுதியிருக்கிறார்கள். [illegible] வயல், உழுவனூர் ஆகிய ஊர்களின் பெயர்களை எல்லாம் தவறாக எழுதியிருக்கிறார்கள். இன்னும் கருங்குடியைக்கூட சரியாக எழுதியிருக்கிறார்கள். வளமாவூரை வளமாமூர் என்று எழுதியிருக்கிறார்கள். அங்கே அந்த ஊர்க்காரர்களைப் போய்ப் பார்த்து, கேட்டுத்தானே எழுதுகிறார்கள்? அப்படிச் செய்யாமல் [illegible] ஆபிசிலிருந்துகொண்டே, போனில் கேட்டு எழுதுகிறார்களா? எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

கெட்ட நோக்கத்தோடு நான் இதைச் சொல்லவில்லை. இப்படி நிர்வாகக் குறைபாடுகள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டத்தான் சொல்லுகிறேன். இதை [illegible] அரசாங்கத்தில் கவனிக்க வேண்டும்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியார் பாடினார். நாம் உழவுக்குத்தான் வந்தனை செய்து கொண்டிருக்கிறோம். அடுத்துள்ள தொழிலைப்பற்றி யார் கவலைப் பட்டார்கள்? [illegible] வள்ளுவர் சொன்னார் என்று. இப்போது எல்லாம் தின்று தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள். நன்றாக வடை பாயசத்தோடு சாப்பிடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. பிரியாணியும் சேர்த்துச் சாப்பிட்டு விட்டுத் தூங்குகிறோம். அவ்வளவுதான். "வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று பாட்டில்தான் இருக்கிறது. எனவே தொழிலைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தைத் திரும்பத் திரும்ப நான் கேட்டுக் கொள்வது இனிமேல் தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்றால், அதை முதலில் இராமநாதபுரத்திலேதான் ஆரம்பிக்க வேண்டும். நிறைய இடவசதி அங்கே இருக்கிறது. காகிதத்தில் [illegible] அல்லது வருந்திப் பேசுவதில் பயனில்லை. எங்கள் பகுதியில் இருப்பது 'வைக்கோலும் காட்டுக் கருவேல மரமும்தான்' கருவேல மரத்தை அரைத்துக் காகிதம் செய்யலாம் என்பது என்னுடைய எண்ணம். அங்கே ஏராளமாக காட்டுக் கருவேல மரம் இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு அந்த மரங்கள் அங்கேயிருந்து வெட்டப்படுகின்றன. 25 பைசாவுக்கு அங்கே கிடைப்பதை இங்கே கொண்டுவந்து 25 ரூபாய்க்கு விற்கிறார்கள். இதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் பக்கத்தில் டிராக்டர் வைத்திருக்கிற விவசாயிகள் பாடு சொல்லி முடியவில்லை. டிராக்டர் வைத்திருப்பவர்களைவிட, கூட டிரெய்லர் வைத்திருந்தால், அவர்கள் பாடு மிகவும் கஷ்டம். அவர்கள் அதிகப்படியான டாக்ஸ் கட்ட வேண்டும். கட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை. ஊரைவிட்டு அதை வெளியே கொண்டு போகிறவர்கள் 100-க்கு 5 பேர்கள்கூட இருக்கமாட்டார்கள். வியாபார முறையில் செய்கிறவர்கள் இவர்கள். இவர்கள் டாக்ஸ் கட்டுவதற்காக இப்போது இவர்களை டிராக்டரையும் டிரெய்லரையும் எடுத்துக்கொண்டு ஹெட்குவார்ட்டர்ஸ்-க்கு வரச் சொல்கிறார்கள். அந்த டாக்ஸ் வசூல் செய்யும் அதிகாரிகள் ஒவ்வொரு பிளாக்குக்கும் வந்து, அங்கே இந்த டிராக்டர்களைக் கொண்டுவரச் சொல்லி, பிரேக் சர்டிபிகேட் வழங்கலாம். டாக்ஸ் வசூல் செய்யலாம். தாலுகாவுக்கு நான்கு பிளாக்குகள் இருக்கும். நான்கு நாளைக்கு இந்த அதிகாரிகள் [illegible] சர்டிபிகேட் [illegible]. இதை [illegible] விரும்புகிறேன். [illegible]

[திரு. என். இராமகிருஷ்ணத் தேவர்] [1978 மார்ச் 27

[illegible]க்கு அப்பால் இருக்கிற இடத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்கிறார்கள். இதை ஒரு பெரிய செலவாகக்கூடச் சொல்லவில்லை. ஒரு ஏக்கர் உழவு செய்வதற்கு டீசல் செலவு [illegible] ஆகும் என்று சொல்லலாம். ஆனால் ஒன்றைப் பார்க்க வேண்டும். இந்த டிராக்டர்களை வைத்திருப்பவர்கள் எல்லாம் மிகச் சாதாரண ஆட்கள். சில இடங்களில் 3, 4 பேர் சேர்ந்து டிராக்டர் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் மாடு வைத்துக்கொள்ள முடியாதபடி, இந்த சர்க்கார் செய்து விட்டது. ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்காக என்று முன்னெல்லாம் இடம் இருந்தது. அதையெல்லாம் இப்போது எல்லோருக்கும் 'அசைன்' செய்து விட்டார்கள். மேய்ச்சலுக்கு இடமே இல்லை. மேய்ச்சலுக்கு என்று இடம் விட்டிருந்ததைக் கூட உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து எடுத்துவிட்டார்கள், இப்போது மாடுகள் மேய்வதற்கு இடமே இல்லை. இந்த நிலையில் இவர்களையெல்லாம் டிராக்டர்களைக் கொண்டுவந்து பிளாக் ஆபீசில் நிறுத்துங்கள் என்றால், சுலபமாகப் போய் விடும். இந்தமாதிரியான சௌகரியங்களைத்தான் நாங்கள் இந்த அரசாங்கத்திடம் கேட்கிறோம்.

மேலும் ஒன்று முக்கியமானது. டிராக்டர் வைத்திருப்பவர்களிடம் அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள். வியாபாரிகளைப் போல் வைத்திருப்பவர்களிடம் இந்த வசூலைச் செய்யட்டும், பரவாயில்லை. அதற்கு ஆட்சேபனை இல்லை. இவர்களிடம் போய் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்? நீங்கள் இந்த டிராக்டர்களையெல்லாம் வைத்திருக்கிறீர்கள். நாங்கள் இதற்கெல்லாம் ஃப்ரீ 'லைசென்ஸ்' தானே கொடுத்திருக்கிறோம். சர்க்கார் திட்டங்களுக்கு ரூ. 100 அல்லது ரூ. 50/ கேட்டால் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறார்கள். இந்த டிராக்டர்களை வைத்துக்கொண்டு தொழில் செய்பவர்களிடம் கேட்டாவது பரவாயில்லை. மற்றவர்களுக்கு வாடகைக்கு விடுகிறவர்களிடம் கேட்டாலாவது உழவுக்காக 10, 40 ஏக்கர் வைத்துக்கொண்டு உழுபவனிடம் பரவாயில்லை. பரவாயில்லை. 3 வருஷத்திற்கு ரூ. 150/- வரி கேளுங்கள், தோறும் ரூ. 70 கட்டிக் கொண்டிருக்கிற தவிர, வருஷம் களிடம் போய் எதற்காகக் கேட்கிறீர்கள்? சிறு வியாபாரி [illegible]ட்டத்தை எல்லாம் நீக்க வேண்டும் எனவே இந்தக் [illegible]கொள்கிறேன். என்று கேட்டுக்

எங்கள் பக்கத்தில் தொழில் இல்லை. தொழில் என்றாலே, [illegible] மக்களுக்குத் தெரியாது. [illegible] மிகவும் குறைவு. ரெயில் பார்க்க வேண்டுமென்றால் [illegible] போய்த்தான் பார்க்க முடியும். [illegible]

1978 மார்ச் 27] [திரு. இராமகிருஷ்ணத்தேவர்]

(பிற்பகல் 1-20)

கண்ணால் பார்த்தால், இராமநாதபுரம், சிவகெங்கை, காரைக்குடி, பக்கம் 100 மைலுக்குக் கிடையாது. வரும் பொழுது வரட்டும். இப்போது தொழில் ஒன்று இருக்கிறது. இதுதான் தொழில் எங்கள் ஏரியாவில், பறக்கிறதா, நடக்கிறதா தொழில் என்று தெரியாது. கூடையும் மண்வெட்டியும் தான் தெரியும். நல்லபடி செய்து கொடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அடுத்த மாதம் அமெரிக்கா போவதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ராஜசிங்கமங்கலத்தில் ஒரு பெரிய பாலத்தைக் கட்டியிருக்கிறார்கள். இது போன்று இந்த ஸ்டேட்டில் வேறு ஒன்று இருக்காது. எல்லா வேலையும் முடிந்துவிட்டது. நீங்கள் தான் ஆரம்பித்து வைக்க வேண்டும். வேலை முடிந்தும் போக்குவரத்து இல்லாமல் தடுக்கப் பட்டிருக்கிறது. பஞ்சாயத்து அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, ஒரு தேதி கொடுத்து, எந்த டயத்தில் வைக்கலாம் என்று தெரிந்து, முதலமைச்சர் அமெரிக்காவிற்குப் போவதற்கு முன்பு செய்து கொடுத்தால், மிகவும் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய விருப்பம். நீங்கள் தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டு. நீங்கள் அந்தப் பாலத்தை எப்போது திறந்து வைக்கிறீர்கள் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தேவர் அவர்கள் அந்தப் பாலத்தை நான் அமெரிக்கா செல்வதற்கு முன்பே திறந்து வைக்க வேண்டும், அதற்கு ஒரு தேதி சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். நான் பணிவன்புடன் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர்கள் வந்துதான் பாலங்கள், கட்டிடங்கள் திறக்க வேண்டுமென்ற அந்த பந்தாவை, பழைய பழக்க வழக்கத்தை நீக்கிவிட்டு, உடனடியாக அதிகாரிகளைக் கொண்டு, அந்தப் பாலத்தைக் கட்டியவர்களின் பெயர்களைப் பொறித்து, திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணிமுத்து) : அமைச்சரின் பதில் இன்று மாலை இருக்கிறது. 4 மணிக்கு வைத்துக் கொள்ளலாமா அல்லது 4½ மணிக்கு வைத்துக்கொள்ளலாமா என்பதை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

(சிறிது நேரம் கழித்து)

அவையின் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்று, மீண்டும் அவை மாலை 4.30 மணிக்குக்கூடும்.

[பிற்பகல் 1-25] ன்று

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது. மற்ற

அவை மீண்டும் பிற்பகல் 4.30 மணியளவில் கூடியது :

(பிற்பகல் 4-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. இரத்தின பாலகுருசுவாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் காலையிலே தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலேயே பல அங்கத்தினர்கள் பேசி விட்டார்கள். காலையிலேயே முடிந்துவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதல்வர் அவர்கள் வருவதற்குமுன் பேச வேண்டுமென்று கேட்டார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : காலையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 4 மணி என்பதை 4-30 மணிக்கு என்று கூறி மாற்றி அறிவித்திருக்கிறீர்கள். அவர்கள் வந்து பதிலளித்திருக்கலாம். அதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. இரத்தின பாலகுருசுவாமி : தமிழக அரசாங்கம் தொழில் வளர்ச்சி பற்றி அதிக அக்கறை எடுத்துக்கொண்டு கிராமப் புற மக்கள் வாழ்வதற்கான நல்ல பல திட்டங்களை எல்லாம் வகுத்திருக்கின்றது. அதையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள அந்தத் தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நிறைய பேர்கள் விவாதம் செய்தார்கள். அவர்கள் சர்க்கரை ஆலைகளைப்பற்றி எடுத்துப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் யாரும் பேசவில்லை. மாநிலத்தில் 21, 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அந்த ஆலைகள் எந்த எந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை ஒன்று ஆரம்பிக்கப்போவதாகக்கூட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. திருக்கோயிலூர் வட்டாரத்திலே தொடங்க இருக்கிறோம் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதையும் சேர்த்து 5 சர்க்கரை ஆலைகள் தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய இருக்கிறது. அமைந்திருக்கின்ற [illegible]லைகளில் தனியார் ஆலை 1, கூட்டுறவுத் துறை ஆலைகள் 3, [illegible] ஆலைகள் தற்போது இருந்துகொண்டிருக்கின்றன. இந்த

4 ஆலைகளை மையமாக வைத்துப் பார்க்கின்றபோது, தென்னாற் காடு மாவட்டம் சர்க்கரைத் தொழில் வளம் மிக்க மையமாக இருக்கின்றது. இதுவரையில் எந்த அரசும் தென்னாற் காடு மாவட்டத்திற்குப் பெரிய தொழிலை ஏற்படுத்தித் தரவில்லை. தமிழக முதலமைச்சர் அவர்களையும், இங்கே இருக்கின்ற அமைச்சர்களையும் நம்முடைய மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான். 100 கோடி ரூபாய் திட்டத்திலே காகித ஆலை திட்டத்தை நமது அரசு உருவாக்கியிருக்கிறது. அது நிதிநிலை அறிக்கையிலேயும் தரப்பட்டிருக்கிறது. அந்த நூறு கோடி ரூபாய் செலவிலே அமைய இருக்கின்ற தொழிற்சாலை தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால், அங்குள்ள பின் தங்கிய மக்களுக்கு அது வாழ் வளிக்கும் திட்டமாக அமையக்கூடும் என்ற காரணத்தால், பெரிய பொறுப்பிலே இருக்கின்ற இந்த அமைச்சர்கள் உள்ள இந்த அவையிலே அந்தத் திட்டத்தை அங்கே நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கு கரும்பு ஆலைகள் இருக் கின்றன என்பதைக் குறிப்பிட்டதற்குக் காரணம், கரும்பு ஆலை சக்கைகளிலிருந்துதான் அவர்கள் காகிதம் செய்யலாம் என்ற யோசனையை வெளியிட்டார்கள். ஆகவே அந்த மூலப் பொருள் அங்கு அதிகமாகக் கிடைக்கும் என்ற காரணத்தினு லும், அந்தப் பகுதி 5 சர்க்கரை ஆலைகளை உடையது என்ற காரணத்தினாலும், பொதுவாக தென்னாற்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினாலும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது நடு மையமாக வும் அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு வேண்டிய புறம்போக்கு நிலங்களும் எங்கள் பகுதியில் நிறைய இருக்கின்றன. அதற்காகத் தனியாரிடம் போக வேண் டியதில்லை. அதற்கான மூலப்பொருள், கரும்பிலிருந்து பிரிக்கப் படும் சக்கை, அதை போழ்து என்று சொல்வார்கள், அந்த போழ்து அதிகமாக அங்கு கிடைக்கின்றது. இந்தக் காரணங்களுக் காக அந்த இடத்தில் அந்த ஆலையை அமைத்துத் தந்தால், தென் னாற்காடு மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாடு பூராவுக்கும் காகிதத்தைப் பொறுத்தவரையில், நல்ல முறையில் தேவை யைப் பூர்த்தி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். நல்ல சத்துள்ள மூலப்பொருள்கள் அங்கே ஏராளமாக இருக் கின்றன. ஆகவே தென்னாற்காடு மாவட்டத்திற்கு இந்தப் பெரிய ஆலையை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாகவும், பின் தங்கிய மக்கள் உள்ள மாவட்டமாகவும் இருக்கிறது. அங்கு காகிதத் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. மற்ற

[திரு. இரத்தின பாலகுருசுவாமி] [1978 மார்ச் 27

மாவட்டங்களிலேயும் கரும்பு பயிரிடுகிறார்கள். ஆரூரிலே கரும்பு பயிரிடுகிறார்கள். அங்குள்ள கரும்புச் சத்து 6 புள்ளி, 7 புள்ளிக்குக்கூட இருப்பதில்லை என்று சொல்கின்றார்கள். தென்னாற்காட்டில் கரும்புச் சத்து 11 புள்ளிக்கும் அதிகமாக இருப்பதாக நிபுணர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அந்த 11 புள்ளி அளவுக்கு அதிகமாகப் பயிரிட்டுக்காட்டிப் பரிசும் பெற்றவன் நான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே நல்ல கரும்பு வளம் இருக்கிறது. இந்தியா அளவிலே எடுத்துக்கொண்டாலும். பீகாரிலே, பஞ்சாபிலே, உத்திரப் பிரதேசத்திலே என்று எடுத்துக்கொண்டு பார்த்தாலும்கூட, இந்தத் தென்னாற்காடு பக்கத்திலே விளைகின்ற கரும்பு 10 புள்ளி, 11 புள்ளி, 12 புள்ளி என்று இருக்கின்றது என்று புள்ளிவிவரம் இருக்கிறது. அந்த அளவுக்குப் புள்ளி மற்ற மாவட்டங்களிலும் வரவில்லை. 7, 8, 9 புள்ளிகள் தான் வந்திருக்கின்றன என்பதை தான் தெரிவித்துக் கொள்கிறேன். அதையொட்டித் தான் இங்கே 5 ஆலைகள் மட்டும் இருந்தால், போதாது என்று சொல்கிறேன். சேத்தியாத் தோப்பு பகுதியிலே தரிசாக புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு தொழிலை அமைக்க பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களிடம்கூட வாயால் சொல்லிக் கேட்டேன். எழுதிக் கேட்கவில்லை. எழுத்துமூலமாகக் கேட்க வில்லை. அதை எழுத்து மூலமாகக் கேட்டிருந்தால், நிச்சய மாகச் செய்திருப்பார்கள். பக்கத்திலே வீராணம் ஏரி இருக் கின்றது. வீராணம் ஏரியின்மூலம் தண்ணீர் தட்டுப்பாடின்றி அங்கே விளைகின்ற கரும்புக்கு ஏற்ற அங்கே தொழிலை அமைக்க லாம். அது பொருத்தமான இடம். அந்த இடம் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆலைக் கட்டுப் பாட்டுச் சட்டத்திற்கு விரோதம் இல்லாமல் அங்கே அமைக்க வேண்டும். அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலாவது அங்கு புள்ளி அதிகமாக வருவதால், இந்த ஆலையை அங்கே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கரும்புச் சத்து புள்ளிகள் அதிகமான வட்டாரமாக இருப்பதால், அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க அரசுக்கும் அது [illegible] தோதாக இருக்கும். அங்குள்ள மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கும். அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே கரும்பு ஆலைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கு அந்தக் காகித ஆலையை நிறுவ வேண்டும். அதற்கு வேண்டிய கரும்புச் சக்கை, [illegible] அங்கே அதிகமாகக் கிடைக் கின்றது என்ற காரணத்தினாலே, அங்குள்ள மக்கள் பின் தங்கிய மக்கள், மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்ற

1978 மார்ச் 27] [திரு. இரத்தின பாலகுருசுவாமி]

காரணத்தாலே, தம் தமிழக அரசு தென்னாற்காடு மாவட்டத்தில் காகித உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40.)

பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசுகின்ற போது, இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்று சொன்னார்கள். நானும் அதை உணர்கிறேன். என்றாலும் அந்தத் தொழிலுக்கு வேண்டிய பொருட்கள் அங்கே சுலபமாகக் கிடைக்காது. ஆகவே தென் ஆற்காடு மாவட்டத்திலே......

திரு. வே. தங்கபாண்டியன்: எந்த அடிப்படையை வைத்துக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மூலப் பொருள்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள்? இன்ன தொழில் பொருள்கள் இல்லை என்று சொல்லி, அதற்கு மூலப் பொருள்கள் அங்கே இல்லை என்று சொன்னால் புரிந்துகொள்ளலாம்.

திரு. இரத்தின பாலகுருசாமி: பெரியவர் திரு. ராம கிருஷ்ணத் தேவர் அவர்கள் குறிப்பிடுகிறபோது எதுவுமேயில்லை என்று சொன்னதால்தான், நான் அதைச் சொன்னேனே தவிர, காழ்ப்பு உணர்ச்சியாலோ, மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப் பாராட்டியோ, இதைச் சொல்லவில்லை. தென் ஆற்காட்டில் கரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கே அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துங்கள் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். ஒருவரை ஒருவர் மித்திர பேதம் செய்து, எங்களுக்கு வேண்டுமென்று கேட்கிற சுபாவம் உடையவன் அல்ல நான். எங்கள் மாவட்டத்தைப் போன்று மற்ற மாவட்டத்துக்காரர்களும் கேட்க உரிமையுடையவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே கட்டிக் குறைத்துப் பேசுகிற சுபாவம் என்னிடமில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சிக்காக தம்முடைய தமிழக அரசு 1978-79 ஆம் ஆண்டிலே எடுக்க இருக்கும் பெரு முயற்சிக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் காலமெல்லாம் உழைத்து, உழைத்து அலுத்துப் போய், உழைத்து அலுத்த பெருமைக்காக தென் ஆற்காடு மாவட்டத் தின் பின் தங்கிய மக்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையிலே அந்த ஆலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு [illegible] அவர் கள். தொழில் வளர்ச்சி கொள்கை விளக்கக் குறிப்பின்மீது இங்கே எனக்கு முன்னால் பல அரிய ஆலோசனைகளை இந்த அவையிலே கூறினார்கள். தொழில் பரவலாக்கப்பட வேண்டும்,

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 27

தொழில் வளர்ந்தால்தான் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தீரு மென்று எல்லோரும், அனைத்துக் கட்சியினரும் ஒட்டுமொத்த மான கருத்தை உடையவர்களாக இருந்தாலும், ஆளுங் கட்சிக்கு இருக்கக்கூடிய செயலாற்றும் திறன், நடைமுறைப் படுத்தும் திறன் எந்த அளவுக்கு இருக்கிறதென்டதை இது வரை பரிசீலித்தார்கள். இன்றைக்கு அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் கிராமப் புறங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க நிலை என்று நான் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே, சுதந்திரத்திற்குப் பின்னால், இந்த நாட்டிலே ஒரு நாளைக்கு இரண்டு தொழிற்சாலைகள் என்றமுறையில் அமரர் காமராஜர் அவர்களின் தலைமையில் இயக்கப் பட்டது. அதனால் இந்த நாட்டிலே தொழில் வளம் பெருகியது. வேலை வாய்ப்பு கிடைத்தது. அதை நாடு அறியும். அதற்குப் பின்னால் தொழிலாளர்கள் மத்தியில் வேலை இல்லாமையும், தொழில்களை ஆரம்பிக்க முடியாத நிலையும் இந்த நாட்டிலே உரு வாவதற்குக் காரணம் என்ன என்பதை ஓரளவுக்குப் பரிசீலிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். விவசாயிகளுக்கு அனு சரணையாகவுள்ள தொழில்களை நாம் ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதற்காக நமது கொள்கையிலே ஒரு திருப்பம் வேண்டுமென்றும் இன்றைத்துப் பரவலாகக் கூறிக்கொண்டிருக்கிறோம். அது எந்தத் திருப்பமாக இருந்தாலும் சரி, இன்றைக்கு கிராமங்களிலே இருக்கக்கூடிய நிலங்கள் அப்படியே தான் இருக்கின்றன. அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு வேலைவாய்ப்பு, உண்ண உணவு இருக்கிறதா என்றால், இல்லை. அவர்கள் அனைவரும் நகர்ப் புறத்தை நாடி வரக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. படித்த பட்டதாரிகளுக்கு வேலையில்லை. அவர்கள் படித்த கல்வி யால் வேலை இல்லையா அல்லது தொழிற்சாலைகள் இல்லாமையால் வேலை இல்லையா என்ற பிரச்சினைகளெல்லாம் இன்றைக்கு எழுந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்குத் தரக்கூடிய கல்வி தொழிற் கல்வியாக இல்லாததால், அவர்களாகவே வேலையைத் தேடிக்கொள்ளும் நிலையில் இல்லையா என்பதையெல்லாம் பரி சீலிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் படித்தவர்கள். இளைஞர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்து, அதனால் ஊதியம், உண்ண உணவு ஆகியவற்றுக்கும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்பதால், அதைப்பற்றி அரசு தீவிரமாகச் சிந்திக்க இருக்கிறார்கள். இன்றைக்கு என்ன நிலை இருக்கிறதென்றால், அவசர கால நிலைக்குப் பின்னால், சில தொழில்களை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் பொறுப்பி லுள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சாடக்கூடிய நிலையில் மக்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கும், தொழில் லை நடத்தக்கூடிய முதலாளிக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ நல்ல நியாயம் கிடைக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் தலையிட

1978 மார்ச் 27] [திரு. எல். பலராமன்].

வில்லை என்ற நிலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த நிலை அரசாங்கத்திற்கு நல்லதல்ல. அன்றாடம் எழக்கூடிய தொழிலாளர் பிரச்சினைகளில், தொழிலாளர்களுக்கும், நிறு வனத்திற்கும் மத்திமமாக இருந்து, பிரச்சினைகளை எப்படித் தீர்க்க லாம் என்று சிந்தித்து, பிரச்சினைகளைத் தீர்த்தால்தான், தொழில்கள் வளர முடியும். அப்போதுதான் மற்றைய மாநிலங் களிலிருந்து இந்த மாநிலத்திற்கு வந்து தொழில்களை ஆரம் பிக்கும் நிலை ஏற்படும். அந்த நிலை இப்போது இந்த மாநிலத்தில் இருக்கிறதா என்றால், ஓரளவுக்குக் குறைந்திருக்கிறதென் பதை உணர்ந்திருக்கிறோம். அதைப் போக்க அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு உதாரணங்கள் பல இருந்தாலும், அதையெல்லாம் சுட்டிக் காண்பிக்காமல், அந்த நிலையைப் போக்க அமைச் சரவையும், இந்த அரசும் முயல வேண்டுமென்று இந்த நேரத் தில் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். தொழிலாளர்களும், தொழில்களும் 'தொன்னைக்கு நெய் ஆதாரமா, நெய்க்கு தொன்னை ஆதாரமா' என்பது போன்றதாகும். எனவே தொழிலாளர்களுடைய நலனைக் காப்பது பொறுப்பு ; அதைப் போல தொழிற்சாலைகளையும் காப்பது நம்முடைய கடமை என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கிராமப்புறத் தொழில்கள் என்று கிராமப்புற மக்களை வாழ வைக்க வேண்டுமென்பதற்காக அந்தக் கொள்கையைச் சொல்கிறோமா அல்லது அவர்கள் ஆறுதல் அடைவதற்காக அந்தச் சொற்களைக் கூறுகிறோமா என்று தெரியவில்லை. கிராமப்புற மக்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைக்குப் பின்னால், புது ஆண்டிலே தொழிற்சாலைகள் வரு மென்று எண்ணிக் கொண்டிருக்கும் நிலையைத்தான் பார்க்கிறோம். அந்த நிலை வாயளவில்தான் இருக்கிறது. அதைச் செயல்படுத்த என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசங்கள் பார்க்கவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு கோவை மாவட்டத்தில் தொழில் வளம் பெருகியிருக்கிறது. மற்ற மாவட்டத்தில் பெருகவில்லை. அதற்குக் காரணம் என்ன? அதற்கான காரணங் களைக் கண்டுபிடிக்கும் நிலையில் இருக்கிறோம். அதற்காக அரசாங் கத்திலே உள்ளவர்கள், பொறுப்பிலே உள்ளவர்கள், அங்கே சென்று அந்த மாவட்டத்தின் நிலை, அந்த மாவட்டத்திலுள்ள உப பொருள்கள், கிடைக்கும் மூலப்பொருள்கள் எந்தத் தொழிற்சாலை ஆரம்பித்தால் நல்ல முறையில் செயல்படும் என்பதையெல்லாம் ஆராய வேண்டும். அதற்காக அதிகாரப் பற்றற்றவர்களைக் கொண்ட 'செமினார்' நடத்துவது வழக்கமாக

[திரு எல். பலராமன்.] [1978 மார்ச் 27

கடந்த காலத்தில் இருந்தது. ஆனால் நடத்திய செமினார்களின் முடிவுகளின்மீது எடுத்த நடவடிக்கை என்ன என்று பார்த்தால் ஒன்றுமில்லை என்பதைக் காண்கிறோம்.

(பிற்பகல் 4-50.)

தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்றாலே ஒரே பயம், பீதியாக இருக்கிறது முதலாளிகளிடத்தில். தொழிற்சாலையில் முதலைப் போட்டால், அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்குமா, இலாபகரமாக இருக்குமா, போட்ட முதல் வருமா என்று அவர்கள் சந்தேகிக்கக் கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான போதிய அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்குரிய நல்ல நிறுவனம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

படித்த இளைஞர்கள் ஏதாகிலும் தொழில் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. மாவட்ட அளவிலே; கிராமப் புறங்களில் கிடைக்கக் கூடிய உப-பொருள்களை சர்வே செய்து, அந்தந்த மாவட்டங்களில் அதற்கான தொழில்களைத் தொடங்க ஒரு கருத்தரங்கை நடத்தி, பலருடைய ஆலோசனைகளைப் பெற்றுத் தொழில்களை ஆரம்பித்தால் நலமாக இருக்குமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, வட மாநிலங்களான பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்கள் தொழில் வளத்தில் முன்னேறியிருக்கின்றன என்றும் அங்கே இருக்கக் கூடிய மக்கள் செழிப்பாக இருக்கிறார்கள் என்றும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள், அந்த மக்களைப் போன்றவர்கள்தான் தமிழ்நாட்டு மக்களும். தமிழ் நாட்டு மக்கள் உற்சாகம் நிறைந்தவர்கள்தான். ஆனால், ஏன் தொழில் வளம் தமிழ்நாட்டில் பெருகவில்லையென்றால், ஆலோசனைகளை வழங்குவதில் ஒரு நல்ல நிலை இல்லாததுதான். அங்கேயெல்லாம் எங்கே வேண்டுமானாலும் தொழில்களை ஆரம்பிக்க வழிமுறைகள் இருக்கின்றன. நினைத்த நேரத்திலே தொழில்களை ஆரம்பிக்க அங்கே ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஆனால், இங்கே பல சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஆரம்பிப்பதற்கு முன்னால் வழிமுறைகளை அனுசரிப்பதில் பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் தொழில்களை ஆரம்பிக்கும் நிலையில் உள்ள தடைகளைத் தளர்த்த வேண்டுமென்று ஆலோசனைகளைக்கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

1978 மார்ச் 27] [திரு. எல். பலராமன்]

பத்து குதிரை விசையுள்ள ஆலைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் லைசென்சை யார் வழங்க வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். பத்து குதிரை விசைக்கு மேல் இருபது குதிரை விசை வரை உள்ள ஆலைகளுக்கு இன்னார் லைசென்ஸ் வழங்கலாம் என்று நிர்ணயிக்க வேண்டும். அப்படியில்லாமல், இன்றைக்கு ஒரு சிறு கிராமத்தில் லைசென்ஸ் வேண்டுமென்று மனுச் செய்தால், முதலாவதாக பஞ்சாயத்தில் கொடுக்க வேண்டும். அங்கிருந்து அந்த மனு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு, பிறகு டவுன் பிளானிங் ஆபீசர், ஹெல்த் ஆபீசர் ஆகியவர்களுடைய அலுவலகங்களுக்கெல்லாம் வரிசையாகச் சென்று திரும்புவதற்குள் வெகு காலமாகிவிடுகிறது. இந்த நிலை மேலும் நீடிப்பது நியாயம்தானா என்ற கேள்வியை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதை நீக்குவதற்குரிய பரிகாரம் என்ன என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும். அந்த முறையில் இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டும். சிறு தொழில்களை ஆரம்பிக்க நாம் ஊக்கம் அளிக்க வேண்டும். படித்த இளைஞர்கள், வேலையற்ற இளைஞர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். அவர்களுடைய உணர்வுகளையும் நல்ல முறையில் பயன்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

படித்த இளைஞர்கள் மத்தியிலே வேலையில்லாப் போராட்டம் நடக்கிறது. பட்டதாரிகள் மத்தியிலே வேலையில்லாத நிலை இருக்கிறது. பொறியாளர்களுக்குக்கூட இன்றைக்கு வேலையில்லாத நிலை இருக்கிறது. இவையெல்லாம் போக்க வேண்டுமென்றால், இது போன்ற சிறு தொழில்கள் தேவை என்பதை நாம் உணர வேண்டும். நாம் பிற நாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையானாலும், நம் நாட்டிலுள்ள பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களை முன் மாதிரியாகக் கொண்டு, அங்கெல்லாம் தொழில்களை வளர்க்க என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதையெல்லாம் கண்டறிந்து அதற்கேற்ப நாமும் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

ஜப்பானில் 3 ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு சீராகவும், சிறப்பாகவும் நல்ல முறையில் விவசாயம் செய்து வாழ்கிறார்கள். அங்கே, தனி நபர் வருமானம் அதிகமாக இருக்கிறது என்ற பரவலான செய்தியை நம் பத்திரிகையின் வாயிலாகப் பார்க்கிறோம். அங்கே தொழில்கள் செய்பவர்கள்கூட நல்ல முறையில் தொழில்களைச் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள். எலெக்ட்ரானிக் கருவிகள். அங்கே உற்பத்தி செய்யப்பட்டு [illegible] தமிழ் நாட்டிற்கும் [illegible] இந்திய நாட்டுக்கும் அனுப்பி, இங்கே கருவிகள் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. அங்கே

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 27

கூலி அதிகமாக இருக்கிறது என்றும், இங்கே கூலி குறைவாக இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கு அந்த நாடுகளில் எப்படி தொழில் வளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாமும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையில் அணுகினால், தொழில் வளம் நல்ல முறையில் நம் நாட்டிலும் ஏற்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையிலுள்ள சச்சரவுகளை நல்ல முறையில் தீர்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்து அதற்கேற்ப செயலாற்ற வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

சர்க்கரை ஆலைத்தொழில் இன்றைக்கு பெரிய தொழிலாக விவசாயிகளின் மத்தியில் இருக்கிறது. இன்றைக்கு கரும்பு உற்பத்திக்கு அதிக செலவாகிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது, ஆனால் விலையை அதிகமாக்கிக் கொடுக்க முடியவில்லை என்பதை ஒத்துக் கொள்ளுகிறார்கள், கட்டுபடியாகக் கூடிய ஒரு நிலையான விலையை வழங்குவது என்பது நல்ல நிலை. அதை வழங்காததற்குக் காரணம் மத்திய அரசாங்கம் என்று பழியை அவர்கள்மீது போட்டு விடலாம் என்றிருந்தாலும், ரிக்கவரியின் அடிப்படையிலே 8.5 சதவீதம் சர்க்கரை கட்டு மானத்திற்கு ரூ. 125 வழங்கலாம் என்று அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இது போதாது என்று விவசாயிகள் இன்றைக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதை உயர்த்தித் தர வேண்டுமென்பது தமிழ் நாட்டினுடைய நிலையாக இருக்க வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளின் இந்தக் குறையைப் போக்க அரசு மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மூன்று கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்றன. திருவலம் என்ற இடத்தில் வேலூர் சர்க்கரை ஆலை என்று ஒரு ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆலையில் நிர்வாகச் சீர்கேடு என்பது சாதாரணமாக இருக்கிறது. அவர்கள் பத்து மாதத்தில் அறுக்கக் கூடிய அளவுக்கு பல ஏக்கர் கரும்பு நிலத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். நட்டு பத்து மாதம் ஆகிய பின்னால் வெட்டு உத்தரவு வழங்க வேண்டுமென்ற நிலை இருந்தாலும், 12, 13 மாதங்கள் கழித்துக் கூட வெட்டு உத்தரவை வழங்காமல் இருக்கிறார்கள். வெட்டி ஒரு வாரம் ஆகிய பின்னும் கழனியில் தொடர்ந்து காயக் கூடிய நிலைதான் இருக்கிறது. இப்படி யெல்லாம் நடப்பதால், வர வேண்டிய அளவுக்குச் சர்க்கரை [illegible] அளவு இருக்குமா என்று பார்த்தால், இல்லை. [illegible]ரையின் அளவு குறையும். அதற்குக் காரணம் [illegible]

1978 மார்ச் 27] (திரு. எல். பலராமன்)

கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். லாரிகள் கிடைக்கவில்லை என்ற சாதாரண நிலை இருப்பதைப் போக்குவதற்காக என்ன செய்யப் போகிறீர்கள் என்று அதிகாரிகளைக் கேட்டேன். நாங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யப் போகிறோம் என்று கூறினார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இல்லாமல் கிராமத்தில் சர்க்கரை ஆலைகள் நல்ல முறையில் நடக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மத்திய அரசாங்கம் செஸ் என்ற முறையில் அதிகமான வரிகளைப் போட்டிருக்கிறது. கொடுக்கக் கூடிய விலையைக் காட்டிலும் மத்திய அரசாங்கம் போடக் கூடிய சர்சார்ஜ் அதிகமாக இருப்பதைத் தவிர்ப்பதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்தால், அது விவசாயிகளை ஊக்குவிப்பதாகவும், அந்தத் தொழில்கள் நல்ல முறையில் நடக்கவும் உதவும் என்பதைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 5-00)

கடந்த ஆண்டு ஆம்பூர் சர்க்கரை ஆலையில் நூற்றுக்கணக்கான டன் "மொலாசிஸ்" திறந்து விடப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் சொல்கிறார்கள். அப்படி விடுவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள பங்குதாரர்களாக உள்ள விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தத் தொழிற் சாலையினை நல்ல முறையில் நிர்வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமங்களில் நல்ல தொழிற்சாலைகளை ஆரம்பித்து, விவசாயத் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலைகளில் கூடுதலாக பங்கு பெறக் கூடிய [illegible] நேரத்தில் கூறிக் படுவதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன், அத்துடன் எளிமையான முறையில் [illegible] வழங்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரக் கூடிய தொழில்கள் அவை. அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வெளியாகும் கழிவுப் பொருள்கள் வெளியேற்றப்படும் போது, விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. பாலாற்றில் விடப்படுகின்ற அந்தக் கழிவு நீர் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை பாதிக்கும் சூழ்நிலை இருக்கிறதைப் பார்க்கிறோம். அந்தப் பாலாறு படுகையிலுள்ள அனைத்து நிலங்களில் விவசாயம் பாதிக்கப்படுவதோடு, அந்தப் பகுதியில் குடிநீரும் பாதிக்கப்படுவதை இந்த அமைச்சரவை உணர வேண்டுமென்று கூறி அவற்றைச் சீர்திருத்தும் வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அந்நியச் செலாவணியை [illegible] தரும் தொழிலாக இருந்தாலும், அதனால் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படாமல் நடவடிக்கை எடுக்க [illegible]

வேண்டும். விவசாயத்தையே நம்பியிருக்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காட்டு இலாகா மானியத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சிலைகள் செய்யவும் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்யவும் உள்ள அந்தத் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறி இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திருமதி சத்தியவாணி முத்து : துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக் கொள்கை விளக்கக் குறிப்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கான நல்ல வாய்ப்புகள் ஏராளமாக உண்டு என்பதை அனைவரும் அறிவார்கள். இது கனி வளம் நிறைந்த நாடு என்பதும் உழவுத் தொழிலுக்கு அடுத்து இந்தத் தொழில் இருக்கிறது என்றும் உழவு, வாணிபம் எல்லாம் சேர்ந்துதான் இந்த பூமி உள்ளது என்றெல்லாம் பண்டைய நாட்டில் தமிழகத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். நெசவுத் தொழில் மிகவும் முக்கியமான தொழில். திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி வளர்த்து ஆட்சி பீடத்தில் கொண்டுவந்து அமர்த்தினோமே, அன்று தமிழகத் தொழில் மேம்பாடு அடையும் என்று அன்றைக்குப் பேசினோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லி, அனைத்துத் தொழிலும் வடக்கிலே இருக்கிறது, தெற்கே ஒன்றுமே இல்லை என்று பேசி, வடநாட்டுக்காரர்கள் கடையில் போய் மறியல் செய்தோம். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்ததோடு, அந்நிய நாட்டுத் தொழிலையும் பொருள்களையும் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று அன்றைய காங்கிரஸ்காரர்கள் சொன்னதைப் போல, வடநாட்டிலுள்ள தொழிற்சாலைகளைச் சார்ந்தவை பொருள்களை வெறுத்தோம். எதை எடுத்தாலும், ஒரு ஆணிக்கு வேண்டுமென்றால், அதற்கு டாடாவிடம் போக வேண்டும். துணிகளுக்கும் வடநாட்டுக்காரர்கள்தான் இருக்கிறார்கள். அதேபோன்று சாதாரண மிட்டாய் கடைக்குக் கூட ஒரு ஆரியபவன்தான் இருக்கிறது என்று இப்படி வடநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் அந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் வந்து அமர்ந்த பிறகு, தமிழ் நாட்டில் அந்த அளவுக்குத் தொழில் துறை முன்னேறியதா என்று பார்த்தால், நாம் மனம் விட்டுச் சொல்ல வேண்டும், தோல்விதான் கண்டோம். பெரிய பெரிய திட்டங்கள் என்று விளம்பரப்படுத்தினோமே தவிர, அவை [illegible] நிறைவேறவில்லை. காவேரிப் படுகையில் எண்ணெய் [illegible]. சேலத்தில் இரும்பு இருக்கிறது. அன்றைக்கென்ன

எடுப்போம் என்று தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கூறினரை எடுத்து ஆட்சிக்கு வந்தது. அவற்றில் வெற்றி பெற்றோமா என்றால், இல்லை. அதற்குக் காரணம் அவர்கள் யார் யாரை போவா வா என்று வரவேற்றதுதான். எந்த வட நாட்டுக்காரர்களை வேண்டாமென்று அன்றைக்குச் சொன்னோமோ அவர்களை வரவேற்புக் கூறி அழைத்து, இங்கே தொழில் நடத்தச் சொல்லும் அளவுக்கு கொள்கையில் பலவீனப்பட்டு விட்டோம். தனியார் துறையில் உள்ளவர்களைக் கூட்டுத் துறையில் அரசு சேர்த்து பலருக்குக் கடன் உதவி செய்து தொழில்களை மேம்படுத்தப் பல திட்டங்கள் தீட்டப்பட்டனவே தவிர, இன்றைக்கு அவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் தொழில் துறை முன்னேற்றம் அடையவில்லை. தனியார் விரும்பிச் செய்கிற அந்தத் தொழிலில் உள்ள ஒற்றுமையும் கட்டுப்பாடும் லாபமும் அரசாங்கம் கூட்டு சேர்ந்து செய்வதில் ஏற்படாததற்குக் காரணம் முன்னால் இருந்த அரசு அவ்வளவு தவறான தொழில் கொள்கையை வைத்திருந்ததுதான். ஓட்டல் தொழில் என்பது இன்றைக்கு உலக நாடுகளிலே பெரிய தொழிலாக இருப்பதைக் காண்கிறோம். அந்த ஓட்டல் தொழில் நம் நாட்டிலே அந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்ததா என்றால், இல்லை. சிவகாசியில் செய்யப்படுகிற பட்டாசு அமெரிக்க நாட்டுக்கு அனுப்புகிற அளவுக்கு, உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு, பெருகியிருக்கிறது. அமெரிக்கர்கள் சிவகாசி பட்டாசுகளை வெடித்து மகிழ்கிறார்கள். அவர்களுக்கு இதற்கு முன்னால் இருந்த அரசு என்ன உதவி செய்தது என்றால், ஒன்றுமில்லை. தீப்பெட்டிக்காக அவர்களுக்கு வேண்டிய மெழுகு-அவர்களுக்கு 6000 டன்னுக்கு மேல் தேவைப்படுகிறது என்றால் மத்திய அரசு 41% தான் தருகிறது. இந்த மெழுகை அதிக அளவில் மத்திய அரசு கொடுத்தால், இதுபோன்ற தொழில்களுக்கு நாம் இன்னும் உதவி செய்ய முடியும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே பலர் பேசும் போது, படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு நிதி உதவி செய்து தனியார் முயற்சியில் ஈடுபட்டு, தொழில் செய்ய விரும்புகிறவர்களுக்கு ஊக்கமளிப்பது அவசியமாகும். அப்படிச் செய்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் தொழில் அமைதி இருக்கிறது. தொழிலாளர்கள் அதிகமாகப் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை. இதை அண்டைய மாநிலத்தில் உள்ளவர்கள் தெரிந்து, நம் மாநிலத்திற்குத் தொழில் நடத்த முன்வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் இன்றைக்கு உதவி செய்ய வேண்டும்.

கேரளாவில் ஆலப்புழையில் இருப்பதைப் போன்ற கயிறு தொழிற்சாலை ஒன்றை நாகர்கோயில் பக்கத்தில் நிறுவ தமிழ்நாடு அரசு கடன் உதவி செய்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலை

[திருமதி சத்தியவாணிமுத்து] [1978 மார்ச் 27

அமைப்பதன் வாயிலாக பல பொருள்கள், பாய்கள் போன்றவை இயந்திரங்கள் மூலமாக உற்பத்தி செய்து அயல் நாடுகளுக்கு அனுப்புகிற வாய்ப்பு கிடைக்கிறது. ஹாலந்து நாட்டில் ஒப்பந்தம் வைத்துக்கொண்டு, அங்கிருந்து இயந்திரங்களை வாங்கி நாகர்கோயில் பகுதியில் இரண்டாயிரம் பேருக்கு வேலை தருகிற அளவில் நடத்துகிறார்கள். இயந்திர மயமாகி விட்டதால், அந்தத் தொழில் அதிக மேம்பாடு அடைகிறது என்ற நினைப்பில் கேரள மாநிலத்தில் உள்ளவர்கள் இந்தத் தொழிற்சாலை நாகர்கோயிலில் இருக்கக் கூடாது என்று தடுப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆரம்பத்தில் விவசாயத்தில் ஏர் மாடுகளைக் கொண்டு உழுது வந்தார்கள். பிறகு டிராக்டர் போன்ற இயந்திரங்கள் வந்ததும் அவற்றைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண முடிந்தது. வேலை வாய்ப்பு போய்விடும் என்று டிராக்டர் வந்த புதிதில் அதை எதிர்த்தார்கள். இப்போது அது அனுபவத்தில் பழகிவிட்டது.

(பிற்பகல் 5-10)

அதைப்போலவே கைத்தறியில் பவர் லூம் என்று வந்தபோது, கைத்தறியாளர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. அதைப் போலவே விசைப்படகுகள் வந்தபோது, கட்டுமரத்தில் சென்று மீன்பிடித்து வந்தவர்களிடமிருந்து எதிர்ப்பு வரத்தான் செய்தது. எனவே துவக்க காலத்தில் கையால் செய்யும் தொழில்களை இயந்திரத்தின் உதவியோடு செய்கிறபோது, சிறுசிறு எதிர்ப்புகள் எழத்தான் செய்யும். அதைப் போல இந்த காயர் இன்டஸ்ட்ரீஸால் இதுவரையில் கையால் செய்து வந்த தொழில் இயந்திரமயமாக்கப்படுகிறது என்பதைப் பார்த்து, அண்டை மாநிலத்தில் உள்ள கேரள அரசு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகத்தில் இருக்கிற இந்த காயர் இன்டஸ்ட்ரீசால் உற்பத்தி செய்கிற பொருட்களை— லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள உற்பத்திப் பொருட்களை— ஏறக்குறைய ரூ. 3 லட்சம் பெறுமானமுள்ள பொருட்களை-வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியாத அளவுக்கு மத்திய அரசிடம் தடைபோட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசும், அங்குள்ள அமைச்சர்களும் எப்படியாவது இந்தத் தொழில் மேம்பாடு அடைய வேண்டும், இங்கே உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அயல் நாடுகளுக்கு அனுப்ப வேண்டும், அதன்மூலம் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். குறிப்பாக மத்தியத் தொழில் அமைச்சர் அவர்களும் ஏனையோரும் நமக்கு ஆதரவாக ஆறுதலாக இருந்தாலும் கூட, இயந்திர மயமாக்குவதால் பலருக்கு வேலை இருக்காது, கேரளத்தில் இருப்பவர்களுக்கு இனி வேலை இருக்காது என்று தமிழ்நாட்டிலுள்ள இந்தத் தொழிற்சாலையை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அளவுக்கு அங்கே கருத்துக்கள் இருக்கின்றன. எனவே மத்திய அரசு நமக்குச் சாதகமாய் இருக்கும்போதே, நம் மாநில அரசு அந்தத் தொழிற்சாலைக்கு

1978 மார்ச் 27] [திருமதி சத்தியவாணிமுத்து]

அதிகமான ஆதரவைக் கொடுத்து, ஏற்கெனவே உற்பத்தி செய்து வைக்கப்பட்டிருக்கிற சரக்குகளை அந்நிய நாடுகளுக்கு அனுப்புவதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய அந்நியச் செலாவணியைப் பெறுகிற அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னஞ்சிறு தொழில் செய்பவர்களுக்கெல்லாம் அரசாங்கம் கடனுதவி தருகிறது. இந்தக் கடன் உதவி தருவதில் ஏற்படுகிற சிக்கல்களை நாம் நீக்க வேண்டும். சிலபேர் கூட்டாகச் சேர்ந்து தொழில் நடத்த முன்வருகிறபோது, அரசு அவர்களுக்கு உதவ முன்வந்தாலும், அவர்களுக்குக் கடன் உதவி அளிப்பதில் இருக்கிற முறைகளின் காரணமாக ஏற்படுகிற தாமதங்கள் சிலபேருக்குக் கடன் உதவி பெறுவதில் பல தொல்லைகளைத் தருகிற காரணத்தால், அந்தத் தொல்லைகளை நீக்கிக் கடன் உதவிகளை விரைவில் பெறுகிற அளவுக்கு அந்த முறைகளை எளிமைப்படுத்தினால்தான், ஏராளமானவர்கள் அரசு கடன் உதவிகளைப் பெற்று, சிறு சிறு தொழில்களை ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் ஏற்படுத்தி நடத்த முடியும்.

இன்றைய தினம் ஏராளமானவர்கள், படித்தவர்கள் அரசாங்கப் பணியில் சேர வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அரசாங்கத்தில் வேலை வாய்ப்புகளை எதிர்பார்க்கிறார்கள். காரணம் படித்தவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து கூட்டாக வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கிறபோது, அவர்களுக்கு சரியான ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பட்டதாரிகளுக்கு சில வேலை வாய்ப்புக்கள் எல்லாத் துறைகளிலும் தரப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. அந்த வகையில்தான் தாழ்த்தப்பட்ட பட்டதாரிகளுக்கு-படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு பெட்ரோல் பம்பு வைப்பதற்கும், வேறு சில எஞ்சினீயரிங் தொழிற்சாலைகளை வைப்பதற்கும் உதவி அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே தவிர, அவைகளை முறையாகப் பெறுவதற்குள்ள வாய்ப்பு எளிதாக இல்லாத காரணத்தால், அவைகளைப் பெற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தொழிலில் முன்னேற்றம் அடைய முடியவில்லை. எனவே இதற்கும் மாநில அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு கிராமங்களிலெல்லாம் சிறு சிறு தொழில்களை உண்டாக்குவதன் மூலமாக கிராம மக்கள் வேலை வாய்ப்புகளைத் தேடி நகரத்திற்கு வரும் நிலையைப் போக்க முடியும் என்று செயல்படத் தொடங்கியுள்ளது. கிராமங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலை, மெழுகுவத்தித் தொழிற்சாலை போன்ற சிறு தொழிற்சாலைகளை, நார் தொழிற்சாலை போன்றவைகளை வைப்பதன் மூலமாக, கிராமங்களில் கிடைக்கும் மூலப்பொருள்களை வைத்துக்

(திருமதி [illegible])

[illegible] ஒரு தொழிற்சாலையை அமைப்பதன் [illegible] தொழில் வாய்ப்பும், வேலையில்லா [illegible] தனியாகத் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தர வேண்டும். இதன் மூலமாக கிராமத்தில் வேலைவாய்ப்பில்லை என்று நகரத்தைத் தேடி வருகிற நிலைமையை மாற்ற இந்த அரசு எடுத்திருக்கிற முயற்சிகள் ஒரு பெரிய சாதனையாகும். இன்று காலையில் பேசும்போதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். வருஷத்தில் 3 மாதம்தான் விவசாயிகளுக்கு வேலை இருக்கிறது. மீதி இருக்கிற 9 மாதங்களில் அவர்களுக்கு வேலை ஏதுமில்லாமல் போய்விடுகிறது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்குப் பகுதி நேர வேலை செய்யக் கூடியவர்களாக அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த தாய்மார்களுக்கு தொழிற்சாலைகளை அமைக்க இன்றைக்கிருக்கிற இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும். இதன் மூலமாக கிராமங்களிலிருந்து விவசாய மக்கள் நகரங்களை நாடி வரும் நிலைமை இல்லாமல் செய்ய வேண்டும்.

தொழில்களுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் இடம், மின்சாரம் மற்றும் தண்ணீர், போக்குவரத்து ஆகியவை உள்ள இடங்களில் நிறைய தொழிற்சாலைகளை அமைக்க இந்தக் கொள்கைக் குறிப்பில் ஏராளமான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அரசு எடுத்துக்கொண்டுள்ள இந்த முயற்சிகளுக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் குறை ஏதும் சொல்லாமல், அதை ஏற்றுக்கொண்டு ஒத்துழைக்கும் வகையில் செயல்பட்டால், நிச்சயமாக இந்த நாட்டில் தொழில் வளம் பெருகும், கிராம மக்களுக்கும் நகர மக்களைப் போல் சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை உருவாக்க முடியும் என்று எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் தொழிற் கொள்கையைப் பற்றிய விளக்கத்தை, மக்களுக்குத் தொழில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நாங்கள் எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றி, இங்கே இருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வகையில் எங்கள் கொள்கை விளக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கிற நான் முதலில் ஒன்றைக் குறிப்பிட்டு அந்தப் பணியில் ஈடுபடலாம் என்று கருதுகிறேன்.

நான் மேலவைக்கு அடிக்கடி வர முடியவில்லை என்பது [illegible] அறிந்திருக்கிற இந்த மாமன்ற உறுப்பினர்கள் [illegible] இந்த மன்ற உறுப்பினர்களின் [illegible] அவர்களுடைய மனதில் எழுந்து, கருத்தாக வருகிற [illegible] நான் நன்கு புரிந்து கொண்டு அதை [illegible] முன்னர் [illegible] என்ற நல்ல நோக்கத்தோடு [illegible]

1978 மார்ச் 27] [திரு எம். ஜி. இராமச்சந்திரன்]

[illegible] அவர்கள் தங்கள் கருத்தினை வெளியிடும்போது, கேட்கிற வாய்ப்பு அமைச்சரவையில் இருக்கிற எங்களுக்குக் கிடைத்தால் நல்ல கருத்துக்களைப் போற்றி வரவேற்போம், அவைகளைச் செயல்படுத்த முயல்வோம் என்ற நம்பிக்கையோடு இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். நான் இந்த அவைக்கு வர இயலாது இருந்தபோதும் அப்படிப்பட்ட கருத்துக்கள் இங்கே கூறப்பட்டன என்பதையும்,—இன்று காலையில்கூட என்று நான் நினைக்கிறேன்—கேள்வி நேரத்தின்போது இந்த அவைக்கு நான் வரவில்லை என்கிற குறையைக் காட்ட, தங்கள் எதிர்க் கடமையைச் செய்ய வேண்டும் என்கிற நிலையில் தங்களுடைய கட்சியைச் சேர்ந்த சில மாண்புமிகு உறுப்பினர்கள் கண்டனத்தைக் காட்டுகிற வகையில் செயல்பட்டார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன்.

நான் முதலில் ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்த மேலவை நடக்கிற நேரம் எப்போது என்பதைப்பற்றிப் பேசிய ஒரு கட்டத்தில் — மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் இருந்தபோது —

(பிற்பகல் 5-20)

நானும் இருந்து சட்டமன்றத்தைக் காலையிலும் மேலவையை மாலையிலும் வைத்துக் கொள்ளலாமா என்று கேட்டபொழுது, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட அங்கு இருந்தார் என்று நினைக்கிறேன். அவர்கள் சொன்னார்கள், காலையில் நடத்திப் பார்ப்போம், ஒத்து வரவில்லையென்றால், மாற்றிக் கொள்ளலாம் என்ற அளவில் கருத்தைச் சொன்னார்கள். எதிர்பாராத விதமாக சட்டமன்றத்தில் இரண்டு நாள் என்று குறிப்பிடும்பொழுது மூன்று நாட்களாகவும், இரண்டு மணி நேரம் என்பது எட்டு மணி நேரம் அங்கே கருத்துக்கள் பரிமாறிக்கொள்ள வேண்டிய அவசியமும் விவாதத்திற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயமும் ஏற்பட்ட சூழ்நிலையில், எல்லா அமைச்சர்களும் ஒரே நேரத்தில் சட்டமன்றத்திலும் மேலவையிலும் இருக்க என்னைப் பொறுத்தவரையில் முடியாமல் போயிற்று. அதோடு டெல்லியில் நடந்த சில கூட்டங்களில் கலந்து தீரவேண்டுமென்ற கட்டாய சூழ்நிலை உருவாகியது. நான் அங்கே செல்லவேண்டிய [illegible] அந்தப் பொறுப்பினைத் தட்டிக்கழிக்க முடியாமல், இங்கே முன்னவராக இருக்கின்ற [illegible]வரையும் சட்டமன்றத்தில் அமைச்சர்களும் நானும் இல்லாதுபோனால் அந்தப் [illegible] அமைச்சர்கள் [illegible] நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்டவர்கள் என்கிற [illegible] நான் இருந்து என்ன சொல்லுவேனோ [illegible] வெளியிடுகிற நிலையில் இருந்தார்கள். ஒரு [illegible] எடுக்கிற முடிவுகள் குறிப்பிட்ட இலாக்காவை

வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதிகமாகவும் மற்
அமைச்சர்களுக்குக் குறைவாகவும் அதைப்பற்றித் தெரியும்
என்கிற நிலையில் இல்லாமல். இந்த அமைச்சரவை எதைப்
பற்றியும் தன்னுடைய தனிப்பட்ட கருத்தாக வைத்துக்
கொள்ளாமல், அமைச்சருடைய கருத்தாக இல்லாமல்
அமைச்சரவையின் கருத்து என்ற நிலையில் நாங்கள்
ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்து எங்கள் அறிவுக்கு எட்டிய
வகையில் முடிவு செய்து வெளியிடுகிறோம். இந்
நம்பிக்கையில் தான் இங்கே வர இயலாது இருந்தது. வேறு
வழியின்றி நான் அதில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது
இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் எதையும் கூறத்தக்
தகுதி உள்ளவர்கள் அல்லவென்றோ, அல்லது இந்த மன்றத்தில்
உள்ளவர்கள் கூறினால் என்ன, கூறாவிட்டால் என்ன, கேட்டால்
தான் என்ன, கேட்காவிட்டால் என்ன என்ற அலட்சிய
போக்கோடோ, இங்கே என்ன நடந்துவிடப் போகிறது, சட்ட
மன்றத்தில் பார்த்துக்கொள்வோம் என்ற ஒரு மமதை என்று
கூடச் சொல்லலாம், அந்த நிலையில் இந்த அமைச்
சரவையோ நானோ நடந்து கொள்ளவில்லை என்பதை
தலைவர் மூலமாக மன்ற உறுப்பினர்களுக்குப் பணிவன்புடன்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இன்று காலையிலிருந்து இங்கே கருத்துக்கள் கூறிய
போது, நேரில் கேட்டபோது. இதே அவையில் ஒரு சில
ஆண்டுகள் எம்.எல்.சி. ஆக உறுப்பினராக இருந்திருக்கிறேன்
என்பதையும் மறைந்த அமரர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி
முதலியார் போன்றவர்கள் இங்கே இருந்து கருத்துக்களை
வெளியிட்ட நேரத்தில் எப்படிப்பட்ட கருத்துக்களை
சொல்லி ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆதரவு தந்து அவர்கள்
செம்மையாக நடப்பதற்கு வழிவகைகளை எடுத்துக்காட்டி,
நிலைமையை விளக்க முன்வந்திருக்கிறார்கள் என்பதையும்
நினைத்துப் பார்க்கின்றபோது, மேலவையில் உட்கார்ந்து
கூறுகிற கருத்துக்களைக் கேட்பது ஒரு அமைச்சரவைக்கு
தேவையான ஒன்று என்பதைப் புரிந்துகொண்டவன் என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலையில்கூட நான் அமர்ந்து கொண்டிருக்கும்பொழுது,
அவசரமாக எழுந்து சென்றதை மாண்புமிகு உறுப்பினர்கள்
கவனித்திருப்பார்கள். அதிலும் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்
பொழுது போகவேண்டியிருந்தது என்றாலும், இங்கும் அங்கும்
ஒரே நேரத்தில் அவைகள் நடக்கும்பொழுது காலையில் அங்கே
பேசிய பேச்சில் உரத்த குரலில் வெளியிட்ட கருத்துக்கள் என்ன
என்பது தெரியாவிட்டாலும், அந்த ஒலி சிக்கல்களைத்
தோற்றுவித்திருக்கிறது என்பதைப் போல் இருந்த
காரணத்தால், நான் சென்று பார்த்து உண்மையை அறிந்து.

பேசிய நண்பர்கள் அக்கறையோடு தங்கள் உணர்ச்சிகளை ஒன்று
படுத்தி கருத்துக்களை வெளியிட்டார்கள் என்று தெரிந்தபிறகு,
நிம்மதியோடு இங்கே வந்து உட்கார்ந்தேன் என்பதை மாமன்ற
உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இன்னும் சொல்லப்
போனால், அங்கே பல்வேறு பிரச்சினைகள் பேசப்படுகின்றன. அது
சட்டமன்றத்தில் தேவை என்றாலும், அது ஒரு பாணி என்று
அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே மேலவையில் பேசும்பொழுது,
யாரையும் குறைத்து மதிப்பிட்டு அவமானப்படுத்தி குறைகூற
விரும்பவில்லை. இங்கே பேசும்பொழுது, அதிகமான புள்ளி
விவரங்களைத் தரக்கூடிய வகையில் அமைதியோடும் ஆராய்ச்சி
மனப்பக்குவத்தோடும் சட்டமன்றத்தில் பலர் தங்கள்
கருத்துக்களை எப்படி வைக்கிறார்களோ அதற்குக் கொஞ்சம்கூட
குறையாமல், சொல்லப்போனால் இங்கே இன்னும் கொஞ்சம்
ஆழமாகச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால்,
மன்ற உறுப்பினர்கள் வேகத்தைத் தடுத்து அமைதிப்படுத்தி.
மனநிலையை ஒருமைப்படுத்தி, உள்ளத்தைச் செம்மைப்
படுத்துகிற வகையில் வார்த்தைகளை வெளியிடுகிற ஒரு நல்ல
சூழ்நிலையில் நடத்தப்படுகிற அவை என்பதை நான் காண்கிற
நேரத்தில், அமரர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார்
போன்றவர்களால் அவையின் கௌரவம் இங்கே காப்பாற்றப்
பட்டுக்கொண்டிருக்கிறது என்று நினைக்கின்ற வகையில் நாம்
பெருமைப்படுவோம். இங்கே இருக்கிற மன்ற உறுப்பினர்
களுடைய எண்ணங்களுக்கு மதிப்புத் தருவோம், அமைச்சரவையில்
உள்ளவர்கள் நாங்கள் நிச்சயமாக அதற்குப் பொருத்தமான
வகையில் நடந்துகொள்வோம் என்பதை உறுதியாகக்
கூறுகிறேன்.

அதிலும் நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன்
அவர்கள் காலையில் பேசும்பொழுது கூறினார்கள். எங்கோ
இருந்து அது தெரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும், நேரில்
இருக்கும்போது நான் பேசும்போது இருக்க வேண்டுமே
என்று ஆசைப்பட்டேன். டெல்லிக்கு எதற்குப் போகிறார்
என்ற செய்தியைக் கேட்டபோது, வருத்தம் அடைந்தோம்,
அந்த நிலைமை தெரிந்தும் அந்தக் கூட்டத்தில் கலந்து
கொள்ளாமல் இங்கே வந்திருப்பது மனநிறைவாக இருக்கிறது
என்று சொன்னதைக் கேட்டு நான் நெகிழ்ந்து போனேன்
என்பதைச் சொல்லித்தான் தீர வேண்டும். இன்றைய
தினம் நடைபெறுவதாக இருந்த அந்தக் கூட்டம் பஞ்சாயத்து
என்கிற பெயரில் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்திலும்,
யூனியன் பிரதேசத்திலும் எந்த அளவுக்கு விவசாயத் துறையில்
கொஞ்சம் விரைவுபடுத்தி விஞ்ஞானத்தின் உதவியோடு
உற்பத்தியைப் பெருக்க இயலும்; இந்த வழியைக் கடைப்
பிடிப்பது பற்றி [illegible] செய்கிற முறையில்
அமைக்கப்பட்ட குழு கூட்டமாகும். மரியாதைக்குரிய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

திரு. அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் இயங்குகிற குழுவில் தமிழகத்தின் சார்பில் என்னையும் உறுப்பினராக நியமித்திருக்கிற காரணத்தால், தமிழக அரசின் கருத்துக்களை அங்கே வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருந்தும் முதல் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள முடியாமல் இருந்தது. சட்டமன்றக் கூட்டம் தொடர்ந்து நடப்பதால், இன்றைய தினம் அங்கே இருந்திருக்க வேண்டும். இங்கே முக்கிய பிரச்சினையான தொழில் பிரச்சினை, மருத்துவக் கொள்கை பற்றி விளக்கிப் பேசுகிற உறுப்பினர்களின் எண்ணங்களைத் தெரிந்துகொள்வது மிகத் தேவை என்கிற வகையில், நேற்றைய தினம் மருத்துவமனையிலிருந்து கொஞ்சம் நோய் தீர்ந்திருக்கிறது என்று சொல்லுகிற வகையில் வெளி வந்திருக்கிற திரு. அசோக் மேத்தா அவர்களை 1 மணி முதல் 1½ மணி அளவு வரையில், அந்த அளவுக்கு நீண்ட நேரம் பேசி நமது கருத்துக்களில் சிலவற்றைச் சொல்லிவிட்டு, முழுவதையும் சொல்லுவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறி, நிலைமையை விளக்க நான் இங்கே வந்திருக்கிறேன். இவைகளை ஏன் இவ்வளவு தூரம் சொல்லுகிறேன் என்றால், எவ்வளவு கண்ணியத்தோடும் நல்லெண்ணத்தோடும் கருத்துக்கள் இங்கே எடுத்து வைக்கப்படுகின்றனவோ அதற்கு நேர்மாறாக மக்களிடம் தவறான கருத்துக்களை உருவகப்படுத்தி, அதன் மூலம் தங்களை வளர்த்துக் கொள்ள முடியுமா என்ற அளவில், ஒரு சில அரசியல் கட்சிகள் இந்த மாமன்றத்தில் சொல்லுகிற கருத்துக்களை எல்லாம் வேறுவிதமாக முலாம் பூசி வண்ணம் தீட்டி, மெருகு கொடுத்து அவைகளைச் சொல்லி மக்களை குழப்பத்தில் ஆழ்த்த நினைக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். அதனால் இந்த அளவுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்னும் கூடச் சொல்லுவேன். எங்களைக் குறை கூறுவதை, குற்றம் சாட்டுவதை நாங்கள் நிச்சயமாக வரவேற்போம் என்பதை முன்னமே எடுத்துரைத்திருக்கிறேன். அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்றாக வேண்டும். எந்த ஒரு அமைச்சரவையும் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற கருத்தோடு செயல்பட முன்வருமேயானால், குறை சொல்லுகிறவர்களை நண்பர்களாக்கிக் கொள்வது மிக நல்லது என்பதை நான் பல முறை சொல்லியிருப்பவன். அனுபவத்தில் அறிந்திருப்பவன். குறைகளை எடுத்துக் காட்டினால், நிறைகள் அதிகமாக வாய்ப்புக் கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பத்திரிகையிலே வெளிவருகின்ற

(பிற்பகல் 5-30)

செய்தியில் எங்களைக் குறை கூறுவதைப் பெரிதுபடுத்தி [illegible] வெளியிடுகிறார்கள்; அச்சிட்டு வெளியிடுகிறார்கள். அதிலே [illegible] உண்மையான நிலைமைகளையெல்லாம் மாற்றி,

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்து வெளியிடுகிறார்கள். அப்படிச் செய்வதை நாங்கள் காணும்போது, வேதனைப் படாமல் இருக்க முடியாது. அவைகளையெல்லாம் அவர்கள் மாற்றிக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. 'உடன் பிறந்தது உடலுடன்தான்' என்று சொல்வார்கள் பெரியவர்கள். அதுபோலத்தான் இது இருக்கிறது.

நம்முடைய நண்பர்கள், மரியாதைக்குரிய உறுப்பினர்கள், கொள்கை விளக்கத்தின் மீது சொல்கின்ற கருத்துக்களை நாங்கள் மதிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவைகளைப் பற்றிப் பேசுவதால், இந்த நேரத்தில் கொள்கை பற்றி அதிகமாகச் சொல்வதற்கு கிடைத்திருக்கக் கூடிய நேரம் குறைந்து விடுகிறது. இருந்தாலும் எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளிப்பது என்னுடைய கடமை என்ற அளவில் என்னுடைய கருத்துக்களையும் இந்த அவையில் எடுத்து வைக்கிறேன்.

ஒவ்வொரு அரசுக்கும், அவர்கள் மக்களிடம் வாக்குகள் வாங்கும்போது என்ன கூறுகிறார்களோ அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் இருக்கவேண்டும் என்பது கட்டாய மாகும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியது அவரவர்களுடைய கடமையுமாகும். அந்த வகையில் சில கொள்கைகளை எங்களைப் போன்றவர்கள் வெளியிட்டு, மக்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வந்து பணியாற்றும் போது, ஆராய்ச்சிப் பக்குவத்தோடு வெளியிடுகின்ற கருத்துக்களுக்குச் சொந்தக்காரர்களாகவும், தகுதி பெற்றவர் களாகவும் இருக்கின்ற உறுப்பினர்கள் தங்களுடைய விளக்கங்களை, திருத்தங்களைத் தர விரும்புகிறார்கள் என்றால், அது எவ்வளவு பெரிய நல்ல வாய்ப்பு என்பதை உணருகிறோம். அது எந்த அளவுக்குத் துணையாக இருக்கின்றது என்பதையும் உணருகிறோம். அது மட்டுமல்ல. எங்களுடைய கொள்கைக்கு இந்தக் கருத்துக்கள் ஒத்ததாக இருக்கின்றனவா என்றும் சிந்தித்துப் பார்க்கிறோம். அப்படிச் சிந்தித்துப்பார்த்து, இந்தக் காரணத்திற்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்று விளக்கம் கூறுகிறோம். அப்படிச் சொல்லும்போது இந்தக் கருத்துக்கள் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அல்லாமல், எங்களுக்கு வாக்கு அளித்த மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்கள் எல்லாம் மக்களைப் போய் சேரும் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது. இப்படிப்பட்ட வாய்ப்புக்களை நாங்கள் விட்டுவிடமாட்டோம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். நான் திரும்பத் திரும்ப என்ன சொல்கிறேன்? அந்தக் கொள்கைகளுக்கும் அங்கே வெளியிட்டிருக்கின்ற திட்டங்களுக்கும் சம்பந்தம் உண்டா என்ற கேள்வியைக்

கேட்கின்றவர்களுக்கு என்ன சொல்லப் போகின்றோம்?
இன்றுள்ள சூழ்நிலைகளில்தான், சுற்று சார்பிலிருந்துதான்
இந்தக் கோணத்திலிருந்துதான், இந்த அடிப்படையில்தான்
இந்த எண்ணங்களுடைய எதிரொலியாகத்தான், இந்தத்
திட்டங்களை நாங்கள் நிறைவேற்ற முயற்சி செய்கிறோம் என்று
சொல்லிக்கொள்கிறேன். எங்களுக்கு என்று ஒரு கொள்கையை
வகுத்துக்கொண்டு விளம்பரம் செய்திருக்கிறோம். அந்தக்
கொள்கையைப் பரப்பியிருக்கிறோம். அந்த விளம்பரம் சுய
நலத்திற்காக மட்டுமல்லாமல், அவை மக்களுடைய
நல்வாழ்வுக்காக எடுத்து வைக்கப்பட்ட திட்டங்கள் என்று
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் ஒவ்வொரு கோணத்திலிருந்தும்
ஒவ்வொரு கருத்தை வெளியிடுகிறார்கள். ஒட்டுமொத்தமாகச்
சொல்லப்போனால், தொழில் துறையில் நாங்கள் ஒரு
அடிப்படையான கொள்கையை நிறைவேற்றிக் கொள்வதற்குக்
கிடைக்கின்ற எந்த ஒரு வாய்ப்பையும், எந்த ஒரு சிறு
வாய்ப்பையும் நாங்கள் பயன்படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறோம்.
தொழில் என்று சொல்லும்போது எத்தனை பேருக்கு
அதனால் வேலை கிடைக்கும் என்பது ஒரு கேள்வி.
எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பது ஒரு கேள்வி. அவர்களுக்கு
தொழிலிலிருந்து கிடைக்கின்ற லாபம் யாருக்குப் போய்ச்
சேருகிறது என்பது அடுத்த கேள்வி. அந்தத்
இந்த நாட்டிற்குப் பயன்படுகிறதா என்பது ஒரு கேள்வி.
நாங்கள் செயல்பட முன்வரும்போது, அந்த மாதிரிக்
கேள்விகள் பிறக்கின்றன. அது நம் மாநிலத்திற்குப் பயன்
படுகிறதா, உள்நாட்டிலேயே பயன்படுகிறதா என்ற கேள்வி
பிறக்கிறது. அது மட்டுமல்ல, அரசுக்கு அதனால் என்ன பலன்?
மக்களுக்கு என்ன பலன்? அந்தப் பலன்கள் தொடருமா,
தொடராதா? அது தொடர்ந்து நீடிக்குமா என்ற கேள்வியும்
வருகிறது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய
அளவிலேதான் எங்கள் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம்.
முதலிலேயே ரூ. 25 கோடி ரூ. 35 கோடி என்று திட்டமிட்டு
ஒரு தொழிலைத் தொடங்கும்போது, எத்தனை பேர்களுக்கு
வேலை கிடைக்கும் என்று கேட்கும்போது, சுமார் 200, 250
பேர்களுக்குக் கிடைக்கும் என்று சொல்வதைத் தவிர, வேறு
ஒன்றுமில்லை. அங்கு உற்பத்தியாகின்ற பொருள்கள் வெளி
நாடுகளுக்குச் சென்றால், வெளிநாட்டுச் செலாவணி வரும்
என்பதற்காக மட்டும் தொழில்களை அமைத்துவிட முடியாது.
இதை விவரம் தெரிந்த, அனுபவம் பெற்ற, ஆராய்ச்சிப்
பக்குவம் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து
கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. மக்களுக்காகப்
போடப்பட்ட இந்தத் திட்டங்கள் இந்த அடிப்படையிலே
போடப்பட்டனவா என்பதிலே சில ஐயப்பாடுகள் ஏற்படுகின்ற

நேரத்தில், அந்தத் தொழில் நிலைமைகளில் தொல்லைகள்
ஏற்படும்போது, அதை மூடிவிடலாமா என்ற கேள்வி
எழுந்து நாம் ஆமாம் என்று பதில் சொல்கின்ற நிலைமை
ஏற்படும்போது, எவ்வளவு வேதனைப்பட வேண்டியிருக்கும்
என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு தனி மனிதன் உணவு இன்றி இருந்தாலே, இந்த
உலகத்தினை அழித்துவிடுவோம் என்று பாரதி அவர்கள் பாடி
யிருக்கிறார்கள். 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த
ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியிருக்கின்றார்கள்.
அழிக்கப்படுகிறதா என்பதல்ல முக்கியம். அளிக்கப்படுகிறதா
என்ற கேள்விக்குத்தான் நாம் விடை காண முயலுகிறோம்.
அதற்கு நம் சுற்றுச் சார்பு தருகின்ற பதில் ஏமாற்றமாகத்தான்
அமைந்து விடுகிறது. நான் இப்போது திட்டவட்டமாகச்
சொல்ல விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த
வரையில், தனியார் துறை, கூட்டுறவுத் துறை, பொதுத்
துறை என்று மூன்றாகப் பேசப்பட்டிருந்தாலும், பொதுத் துறை
அதிகமாக வேண்டும் என்பதிலே எனக்கு அக்கறை உண்டு.
அதைப் பூரணமாக்க வேண்டுமென்பதிலே எனக்கு நிச்சயமான,
உறுதியாக கொள்கை உண்டு. சட்டமன்றத்திலே கூறிய
ஒரு கருத்தை இங்கே நான் வைத்தாக வேண்டும். ஒரு அரசு
மக்களுடைய வரிப் பணத்தை வாங்கி, அதை மக்களுக்குப்
பயன்படும்படியாகச் செலவழிப்பதற்கு நாம் திட்டமிடும்போது,
நல்ல யோசனையோடு செய்ய வேண்டும். நமது கடமையைச்
செய்கின்ற ஆர்வத்தோடு நாம் செய்ய வேண்டும். நாம்
நிச்சயமாகச் செய்ய வேண்டும். மக்களிடத்திலே நாம் நல்ல
சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமானால், எப்படி இருந்தாலும்
இந்தக் கொள்கையிலிருந்து நாம் மாற முடியாது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுக்கு நல்ல வாய்ப்புகளை
ஏற்படுத்தும்போது, சுற்று சார்புகளை உருவாக்கும்போது,
அவர் எவ்வளவு நல்லவராக இருந்தாலும், வேகமாக
உழைப்பவராக இருந்தாலும், செயல்படுபவராக இருந்தாலும்,
அவர்கள் எல்லாம் இந்தத் திட்டங்களுக்கு நல்ல ஒத்துழைப்பைத்
தருகிறார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஒரு சிலர்
அப்படி இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே
அவர்களில் சிலர் மிகப் பெரிய தவறுகளைச் செய்கிறார்கள்.
தங்களையும் அறியாமல் அவர்கள் தீமைகளை உருவாக்கிக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-40)

திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிடும்போது, தெளிவாகச்
சொன்னார்கள். எந்த ஒரு தொழிலை எடுத்துக்கொண்டாலும்,
லாபத்தில் நடக்கிறதா என்று பார்ப்பதோடு, அது எந்த

[திரு எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

அளவுக்குக் காப்பாற்றப்பட வேண்டுமென்பதுபற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இன்னும் சில உறுப்பினர்கள், தொழிலைத் தொடங்கிவிட்டால் போதாது, தொடர்ந்து நடக்குமா என்பதைப்பற்றியும் சிந்திக்க வேண்டுமென்று கூறினார்கள். இதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன், எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும்; அந்தத் தொழில் தொடர்ந்து நடைபெற வேண்டும்; தொடர்ந்து நடைபெறுவதோடு லாபத்தோடு நடைபெற வேண்டும்; லாபத்தோடு நடைபெறும்போது, அந்த லாபம் தனி மனிதனுக்குச் சொந்தமாகி அவர்கள் மேலும் மேலும் கோடீஸ்வரனாகாமல், அது ஏழைகளுக்குத் திரும்பி வந்து, அவர்களும் வாழ்க்கை வசதிகளைப் பெற்று நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்ற கருத்தினை, வேறு வார்த்தைகளைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறினார்கள். என்னுடைய 7, 8 மாத அனுபவத்தில் நான் தெரிந்துகொண்டவை, முன்னாலே இருந்த அரசையோ, அமைச்சர்களையோ, அந்த அமைச்சர்கள் எந்தக் கட்சியிலிருந்து வந்தார்களோ அந்தக் கட்சியைக் குறை கூறுவதற்கோ இந்த மாமன்றத்தின் நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை, என்றாலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொஞ்சம் அவசரப்பட்டு இவ்வளவையெல்லாம் செய்துவிட்டார்கள் [illegible] மக்கள் தெரிந்துகொள்ளும் [illegible] நிலைமையையும், அடிக்கடி [illegible]. இந்த அரசுக்குத் தவறான வழியை, [illegible] சொல்லித் தந்து விடுகிறார்கள் அதிகாரிகள் என்று—நாங்கள் சிந்திப்பதும் இல்லை; அதைப்பற்றி எண்ணிப் பார்ப்பதும் இல்லை; கவனிப்பதும் இல்லை; யாரோ அதிகாரிகள் சொல்கிறார்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்கிற அளவிலே எங்கள்மீது அனுதாபப்பட்டுச் சொல்லும் விதத்தில் [illegible] காட்டி, விவரம் தெரியாத, ஒன்றுமே புரியாத, அதிகாரி சொல்வதைக் கேட்கும் அமைச்சர்கள் என்று தம் [illegible] வெளியிடுபவர்களைப் பார்க்கிறேன். ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, இந்த அரசு சில காரியங்களில் [illegible] நடை போடப் பார்க்கிறது. சில [illegible] இருந்தாலும் விரைவும் தேவையென்று [illegible] நடவடிக்கை என்றால் நல்ல காரியத்தை [illegible] நடவடிக்கைகளை; நல்ல காரியத்தைச் செய்பவர்கள்மீது எடுக்கின்ற செயலும் நடவடிக்கைதான். [illegible] பொறுத்தவரையில், முதலிலே தயார் நிலையில் இருந்த, தொடங்கப்பட்ட ஆலைகள், தொழிற்சாலைகள், இவை [illegible] எந்த நிலையில் இருக்கின்றன என்று [illegible] அந்த அளவில் பார்க்கும்போது, [illegible] குறைகள் இருந்தன. சில குறைகள்

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இல்லாமல் இல்லை. ஆனால் குறைகள் அதிகமாக இருந்ததன் விளைவாகத்தான் 'ஊழல்கள்' என்று நாங்கள் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி போன்றவர்கள் தெரிந்து கொள்வார்களென்று நான் கருதுகிறேன். 'ஊழல்கள்' என்று சொல்லும்போது, ஒரு அமைச்சர் நேரடியாகச் சென்று செய்வதும் ஊழல்தான். அமைச்சரவையின் அனுமதியோடு அதிகாரிகள் செய்வதும் ஊழலாக இருக்கலாம்; அதிகாரிகள் செய்த ஊழலைத் தெரிந்து கொண்டு, அதை விட்டுவைத்தால் அதுவும் ஊழல்தான். ஊழல், ஊழல் என்று பேசும்போது, எந்த நோக்கத்தோடு சொல்கிறோம் என்றால் 25 கோடி, 30 கோடி என்று செலவழித்து விட்டு, மூன்று [illegible] நிலையில் அன்று தொடங்கிய தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று பார்க்கும்போது, தொடர வேண்டாம், கைவிட்டால் போதும் என்ற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கூறியபோது, கோடிக்கணக்கான ரூபாய்களைப் பார்த்ததுகூட இல்லையென்று சொன்னார்கள். அதுபோல எண்ணிப் பார்க்கக்கூடிய அளவுக்குக் கூட இல்லாத எண்ணிக்கையுள்ள எண்களைப்போட்டு வெளிக் காட்டுவதுபோல் கணக்கிட்டுப் பார்த்தால், எத்தனை கோடி ரூபாய்கள் வீணாகி இருக்கின்றன என்பதை வேதனையோடு சொல்லியாகவேண்டும். இங்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். சில சில நிறுவனங்களை, சிக் மில்களை எடுத்துக்கொள்கிறீர்கள் சில மில்களை விட்டு விடுகிறீர்கள்; இதற்கெல்லாம் என்ன காரணம்; நீங்கள் செய்தால், 'நாங்கள் நாங்கள் செய்தால் அது ஊழல்; பாராட்டுகிறோம் என்று ஊழல் என்று சொல்லவில்லை'. அவர்கள் செய்தார்கள். சொன்னார்கள். செய்ய வேண்டியதை அவர்கள் செய்யும் நாங்கள் குறை கூறினோம். ஆனால் அதையே நாங்கள் செய்யும் போது அவர்கள் பாராட்டுகிறார்கள் என்கிற பெருந்தன்மையால் அவர்கள் சொல்கிறார்கள் என்று நான் நம்பமாட்டேன் என்று அவர்களுக்கே தெரியும். ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மில்லை எடுத்துக்கொள்வது என்பது சாதாரண விஷயமல்ல. புள்ளி விவரத்தைப் பார்த்து, இது தேறுமா, தேறாதா; இதற்கு மேற்கொண்டு இந்த அரசு போட வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்கள்; கோடிக்கணக்கான ரூபாய்கள், போடும்போது அதுவும் சேர்ந்து போய்விடுமா அல்லது திரும்ப வருமா என்ற கணக்கைப் பார்த்து, அந்த அளவில் சில சிக் மில்களை எடுத்துக்கொண்டோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. சில மில்களை விட்டுவிட்டதற்குக் காரணம் இவை அவை தேறாது. அவ்வளவுதான் அதன் விதி என்று [illegible] விட்டுவிட்டு, எடுத்த மில்கள் நஷ்டமின்றி இப்போது ஓடிக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்று பேசுகிற நிலையில் எங்கள் கருத்துக்களை நாங்கள் வைத்துக்கொள்ள மாட்டோம். இதைத் தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். திரு. வீராசாமி போன்றவர்களுக்குப் புதிய நண்பர்கள் கிடைத்திருக்கலாம்; அவர்கள் வசதியுடையவர்களாக இருக்கலாம். அவர்களோடு நானும் சில காலம், கட்சியில் இருந்தபோது இருந்திருக்கிறேன். அவரைப்பற்றி எனக்குத் தெரியும். என்னைப்பற்றி அவருக்குத் தெரியும். அப்போது எப்படிப் பட்டவர்கள் அவரோடு இருந்தார்கள் என்பதும், அவர் எப்படி இருந்தார் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். நான் எப்படிப்பட்டவர்களோடு இருந்தேன் என்பதும் அவருக்குத் தெரியும். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், ஏதோ எனக்கு அவரைத் தெரியாது போலவும், என்னைப்பற்றி அவர் தெரிந்துகொள்ள முடியாமல் போனது போலவும், எங்களுடைய கருத்துக்களை வெவ்வேறு பாதைகளில் செல்லும்படியாக அமைத்துக் கொண்டிருக்கிறோமென்றும் வேண்டுமென்றே யார் மீதோ பழி சுமத்தி, இந்த அமைச்சரவையை தள்ளிக்கொண்டு போக வேண்டிய நிலையில் இந்த ஆட்சியில்லை. அவர் நினைத்துக் கொண்டால் போதாது, அவர் நம்ப வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். தொழில் என்பது வெறும் இயந்திரங்களோடு நின்றுவிடுவதல்ல. இயந்திரங்களை அங்கே கொண்டுவந்து சேர்த்து உருவாக்கி, அதை இயக்கும்போது மனிதன் அதை இயக்கவேண்டியவனாகும்போது, பிரச்சினைகள் எழுகின்றன. இயந்திரம் தன்னைத்தானே இயக்கிக்கொண்டு, பணியைச் செய்து கொண்டு போகிறபோது, எங்கேயாவது தேய்மானம் உடையது போல் இருந்தால், இன்னொரு இயந்திரத்தைப் புகுத்தி, தேவையினை நிறைவேற்றிக் கொள்ளலாம். இது அப்படியல்ல. தொழில் என்று சொல்லும்போது, மனிதனுடைய பிரச்சினைகள் அதிலே உருவாகின்றன. மனிதனுடைய பிரச்சினைகளை எண்ணிப் பார்க்காமலிருந்தால், நிச்சயமாக தொழில் துறை என்று கவனம் செலுத்தும்போது, முதல் அடியே தவறான அடியாக எடுத்து வைத்துவிட்டோமென்று நம்ப வேண்டியிருக்கும். இந்த அரசைப் பொறுத்தவரையில், அப்படி நடைபோட விரும்பவில்லை. ஒரு அடி எடுத்து வைக்க நம்மால் முடிகிறதென்றால், அந்த அடி சறுக்காமல், வழுக்காமல், பின்னால் வருகிறவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருக்கிற அடியாக வைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் முன்னால் இருந்தவர்கள் அப்படிச்

(பிற்பகல் 5-50)

[illegible] என்பதிலே சந்தேகத்திற்குரிய அளவில் நிறைய [illegible] என்னிடம் இருக்கின்றன.

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தொழிற்சாலைகளுக்கு உதவி செய்யும்போது எல்லா மில்களையும் ஏன் நீங்கள் எடுத்துக்கொள்ளவில்லை, ஒரு சிலவற்றை மட்டும் ஏன் எடுத்துக்கொள்ளுகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, ''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்'' என்பதிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. பக்கத்து வீட்டிலே உள்ள மலர் அவர்களுடையதுதானே, ஏதோ நசித்துப் போகட்டும் என்பதல்ல எங்களுடைய நோக்கம். தமிழக மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவழிக்கப்பட்டு, அதன் மூலம் நிர்வாகத்தைச் சீர் செய்யக்கூடிய சூழ்நிலை இருந்தால், அதன் மூலம் காப்பாற்ற முடிந்தால், நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைச் சொல்லுவதற்காகத்தான் நான் இதை வற்புறுத்திக் கூறுகிறேன். யார் செய்தாலும், யார் நடத்தினாலும், அதன் பயன் மக்களுக்குக் கிடைக்கும், ஒருவர் இருவருக்குப் பயன் அளிக்குமென்றாலும், இந்த அரசு அதைப் பற்றிச் சிந்தித்துத் தீரும். அதிலே கவனம் செலுத்தித் தீரும் என்ற ஒரு உண்மையை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

என்பீல்ட் இந்தியா தொழிற்சாலை மூடப்பட்டிருந்து இப்போது திறக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எவ்வளவு நாட்களாக மூடப்பட்டிருந்தது என்பதும் எல்லோருக்கும் தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த இராணுவ வீரர்கள் நடத்திக் காட்டிய சாகசங்கள் அந்தத் தொழிற்சாலையில் உருவான வண்டியில்தான் நடத்திக் காட்டப்பட்டது. இதை அவர்கள் அங்கே விளம்பரமாக மக்களுக்குத் தெரியும்படி செய்யாவிட்டாலும், அதைப் பார்க்கும் போது, நம்முடைய உள்ளம் பூரிக்காமல் இருக்காது. எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் [illegible] வீர விளையாட்டுகளைச் செய்து காண்பிக்கக் கூடிய அளவுக்குள்ள அந்த வண்டிகள் தமிழகத்திலே உற்பத்தியாகின்றன என்று எண்ணிப் பார்க்கும்போது, அதை உற்பத்தி செய்த அந்தத் தொழிற்சாலை மூடப்படுவதை எப்படி அனுமதிக்க முடியும் என்று உங்களைக் கேள்வி கேட்க விரும்புகிறேன். நான் இப்படிக் கேள்வி கேட்பது, நீங்கள் இந்தக் கருத்துக்கு மாறுபட்டிருப்பீர்கள் என்ற சந்தேகத்தால் அல்ல. நாம் இதைச் செய்கிறோம் என்று சொல்லும்போது, ஏன் செய்கிறோம் என்பதை உலகம் புரிந்துகொள்ளுவதற்காகத்தான் நான் உங்கள் முன் இதைச் சொல்லுகிறேன். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. அந்தத் தொழிற்சாலையில் ஏறத்தாழ இரண்டாயிரம் பேர் வேலை செய்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு அவர்களுடைய தொழிற் சங்கத் தலைவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். ''எப்படியாவது அரசு அதற்குப் பணம் கொடுக்க வேண்டும். அந்நிறுவனம் [illegible] ஒரு [illegible] மூன்று நான்கு கோடி, இரண்டு கோடி ரூபாய் [illegible].

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27]

ஆண்டுகளில் நாங்கள் நிச்சயமாக கடன் தீர்க்கிற அளவுக்கு உழைத்து அதை வெற்றி பெறச் செய்வோம்'' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதைச் சிந்தித்துப் பார்த்த பிறகுதான் அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொஞ்ச காலம், ஓராண்டுக் காலமோ, சில மாதங்களோ கழித்து கொஞ்சம் கொஞ்சமாகத் தரட்டும் என்றும், அதற்கு [illegible] வேறு நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குப் பணம் கிடைக்குமாறும், வங்கிகளின் மூலம் பணம் கிடைக்குமாறும், மத்திய அரசிலிருந்து வசதிகள் ஏற்படுமாறும் நாங்கள் சில ஏற்பாட்டைச் செய்தோம். ஆகவேதான் இன்றைக்கு மகிழ்ச்சிகரமான முறையில் அந்தத் தொழிற்சாலை செயல்பட முடிந்திருக்கிறது. இதை நான் மீண்டும் குறிப்பிடுவது இன்னொரு ஆதாரத்திற்காக. எங்களுக்கு யார் சொந்தக்காரர்கள் என்பது கவலையில்லை. அதை நாங்கள் கவனிக்கப் போவதுமில்லை. யாருக்கு இது சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதிலே எங்களுக்கு அக்கறை. தொழிற்சாலை எது என்பதல்ல. அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகின்ற பொருள்கள், அதில் வருகின்ற இலாபம் யாருக்குக் கிடைக்கப்போகிறது, எங்கே கிடைக்கப் போகிறது என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், ''இங்கேயிருக்கிற தொழிற்சாலைகளையெல்லாம் கருநாடகத்துக்கோ அல்லது வேறு எங்கோ கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நிலைமை இருப்பது நல்லது இல்லை'' என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அப்படி இருந்தால் அது நல்லதல்ல. அப்படி இருக்கிறதா? இருந்தது எப்போது? எந்த நேரத்தில் அப்படி இருந்தது என்பதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். மில்லைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை. வேலூரில் இருக்கிற [illegible] மிஷன் என்ற ''மருத்துவமனை'' போராட்டம் நடந்தபோது நான் பங்களூரில் இருந்தேன். இங்கேயிருந்து பல நண்பர்கள் அங்கே வந்தார்கள். வெளியிடுவதில் தவறில்லை என்ற காரணத்தால் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கருநாடக மாநிலத்தின் இன்றைய முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் எனது நண்பர். அண்ணன் தம்பியைப் போல் நாங்கள் இருவரும் பழகி அன்புள்ளம் கொண்டவர்களாக இணைந்திருக்கிறோம். அவரிடம்தான் அன்று இங்கிருந்து வந்த நண்பர்கள் கேட்டார்கள். ''இங்கே தமிழகத்தில் வேலூரில் அந்த மருத்துவமனையை நடத்த இயலாமல் [illegible]. நீங்கள் இடம் கொடுங்கள். கட்டிடம் கட்ட ஏதாவது இடம் கொடுங்கள். நாங்கள் [illegible] இங்கே கொண்டு வந்து வைத்து, நல்ல [illegible] இங்கே கொண்டு வந்து பணியாற்றச் செய்து

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கர்நாடக மாநிலத்தில் மருத்துவப் பணியைச் செய்கிறோம். ஏனென்றால் எங்களால் அங்கே வெற்றிகரமாக பணியைச் செய்ய முடியவில்லை. அங்கே மக்களுக்குச் சேவை செய்ய இயலாவிட்டாலும், நோய்வாய்ப்பட்டிருக்கிற மக்கள் எங்கே இருந்தாலும், அவர்களுக்கு நாங்கள் பணியைத் தொடர விரும்புகிறோம். அதற்கு வாய்ப்புக் கொடுங்கள்'' என்று கேட்டார்கள். நானும் இப்போது முதலமைச்சராக இருக்கிற திரு. தேவராஜ் அர்ஸ் அவர்களும் இதுபற்றிப் பேசினோம். அப்போது நான் குறிப்பிட்டேன். ''மாநிலங்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டுமென்றால், மக்களிடையே நல்ல தொடர்பு இருந்தாக வேண்டும். மக்களிடத்திலே வேறுபாடு உணர்வு இல்லாமல், அந்த மாநிலம், இந்த மாநிலம், அந்த ஊர் இந்த ஊர் என்ற வேறுபாடு இல்லாமல், உன் மொழியென்ன, என் மொழியென்ன என்று வியாபாரமாகப் பேசி இலாபம் பெற ஆசைப்பட்டால், நாட்டின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. எத்தனையோ கன்னடக்காரர்கள் தமிழகத்திலே வாழ்கிறார்கள். நீங்கள் இப்படியொரு காரியத்தை அனுமதித்தால், தமிழகத்திலே இருக்கிற மக்கள் நமது நாட்டிலிருந்து கர்நாடக மாநிலத்தில் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டார்கள். நமக்கிருந்த ஒரு நல்ல வாய்ப்பை இழக்கச் செய்துவிட்டார்கள் என்று வருத்தப்படுவார்கள். ஏன், கோபப்படக்கூட நியாயமுண்டு. அதை உருவாக்கக் கூடாது'' என்று கேட்டுக்கொண்டேன். அதற்குப் பிறகு அவர், ''கொஞ்சம் பொறுமையாக இருங்கள். உங்களுடைய குறைகள் விரைவிலே சரியாகிவிடும். அதற்குப் பிறகு வேண்டிய வாய்ப்புக் கிடைக்கும். அதுவரையிலே பொறுத்திருங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டார். நான் அப்போது முதலமைச்சராக இல்லை. ஏதாவது ஊருக்குப் போய் பேசிவிட்டு திரும்ப வருவேனா என்ற சந்தேகத்தில் வாழ்ந்துகொண்டிருந்த நேரம். அந்த நிலைமையிலேயே அப்படிச் சொன்னேன் என்றால், இங்கிருந்து ஒரு தொழிலை இன்னொரு மாநிலத்திற்கு மாற்ற விரும்புவேனா, அதற்கு இடம் கொடுப்பேனா, இந்தச் சூழ்நிலையை உருவாக்குவேனா என்பதை இந்தக் கருத்தை வெளியிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தொழிற்சாலைகளைப் பெருக்க விரும்புகிறோம் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்காது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இங்கே முன்பு சொல்லியது போலவும், சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டது போலவும், பெரிய தொழிற்சாலைகளை அழித்துவிட்டு அங்கேயிருக்கிற தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் செய்துவிட்டு, புதிய ஒரு தொழிற்சாலை உருவாக்கி, அதன் மூலம் நாங்கள் [illegible]

செய்யப் போவதாக யாரும் தயவு செய்து கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த அளவிலேதான் 100 கோடி ரூபாயைப் போட்டு ஒரு தொழிற்சாலையைத் துவங்குகிறோம் என்று சொன்னால், 100 கோடி ரூபாயை ஒரே ஆண்டில் செலவழித்து ஒரே ஆண்டில் நிறுவி, அந்த ஆண்டு முடிவதற்குள் 12 மாதங்களுக்குள் செயல்பட்டு, பலன் கொடுக்க ஆரம்பிக்குமா என்று உண்மையிலேயே தொழில்களைப்பற்றித் தெரிந்தவர்கள் கேட்கமாட்டார்கள். தொழில்களைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல எனக்கு அருகதையில்லை. யாராவது அப்படிச் சொன்னால், உள்நோக்கத்தோடுதான் சொல்ல முடியுமே தவிர, உண்மையாகவே அவர்கள் சொன்னதாக இருக்க முடியாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[பிற்பகல் 6-00]

இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். ''அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்களே. இவைகளை எப்போது நிறைவேற்றப் போகிறீர்கள்? இந்த ஆண்டிலா? 1978-79-லா, எப்போது நடக்கும்''? என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து 7, 8 மாதங்கள்தான் ஆகிறது கணக்குப்பார்த்தால். இன்னும் 15 மாதங்கள் ஆகிவிடவில்லை. ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினால், அதை நிறுவி பயன்தரத்தக்க அளவுக்கு உருவாக்க வேண்டுமென்றால், குறைந்தது இரண்டு, மூன்று ஆண்டுகளாவது ஆகுமென்பது எல்லோருக்கும் தெரியாததல்ல. ஆனால் சில உறுப்பினர்கள் தெரியும். ''அந்தத் தொழிற்சாலை என்னவாயிற்று? பேசும்போது, கொடுத்தார்களே அது என்னவாயிற்று?'' அதற்குப் பணம் திரும்பக் கேட்டார்கள். என்று திரும்பத் நாகராஜனுக்கு எப்படிப் பணம் திரும்ப நான் கேட்க மாட்டேன் கொடுக்கப்பட்டது என்று. ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளுக்குள் 30 கோடி ரூபாய் கொடுக்கப் பட்டது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, இப்போது என்னவாயிற்று என்று எங்களைக் கேட்பதைவிட, அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்லியிருக்க வேண்டாமா? இங்கே சொன்னார்கள் ஏதோ ஒரு தொழிற்சாலை வரும்போல் இருந்தது, அருமை மூடிவிடப்படுவது போல இருக்கிறதே என்று. உடனே நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஒரு தனியாருடைய லாபத்திற்காக அவர் பணத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அரசு கோடிக்கணக்கான மூலதனத்தைப் போட்டு, அதைச் செலவு செய்யக்கூடாது என்று சொன்னார்கள். நல்ல யோசனை. அதை அவர்கள் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏமல் என்று அதைத்தான் [illegible] நாங்கள் சொன்னோம். மூன்று கோடி ரூபாய்

கொடுக்கிறேன் என்று சொன்ன நண்பர் அந்த மூன்று கோடியில் எத்தனை லட்சம் போட்டார்? மற்ற பணத்தை எங்கே கொண்டு வந்தார்கள்? கொண்டுவரவில்லை. இருந்தாலும் அரசிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அதற்காகப் பணத்தைச் செலவழித்தார்கள். ஏன் அனுமதித்தார்கள்? இத்தனை ரூபாய்க்கு அனுமதி அளிப்பதாகக் கூறிவிட்டு, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தனி நபர் லாபத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் மூல தனத்தைப் போட்டு, பலன் இல்லாமல் வீணாக்கப் போகிறார்களா? மக்களுக்குத் துரோகம் செய்கிறார்களா? துரோகம் என்ற வார்த்தையை வேண்டுமானால் பயன்படுத்தாமல் இருந்திருக்கலாம். இதை கண்ணியமான வார்த்தையில் நாங்கள் கேட்டோம். அவரால் பாக்கிப் பணத்தைக் கொண்டுவர முடிந்ததா என்றால், இல்லை, நாங்கள் வந்த பிறகு அவர் பணம் கொண்டுவந்தாலன்றி அதை ஏற்றுக் கொள்ள முடியாது; மேற்கொண்டு அரசு பணத்தைச் செலவழிக்காது. நாட்டு மக்களுடைய பணத்தை வீணாக்கத் தயாராக இல்லை என்று சொன்னோம். எங்கிருந்தோ தகவல் வந்ததாக நண்பர் கூறினார். யார் அவருக்குத் தகவல் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி என்று கேட்கிறார்கள். என்னிடம் கேட்கக் கூடாதா? மற்ற அமைச்சர்களிடம் கேட்கக் கூடாதா? மன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா அப்படிக் கேட்க? வேறு வேறு தொகுதிகளிலிருந்து வந்திருந்தாலும், நியமிக்கப் பட்டிருந்தாலும், இந்த அரசை நடத்துவதற்குத் துணை நிற்கிற அத்தனை பேரும் அரசின் பங்குதாரர்கள் அல்லவா? ஒரு தொலை பேசியில் கூப்பிட்டு, ''என்ன எம்.ஜி.ஆர்., இப்படிச் செய்து விட்டீர்களாமே? அப்படிச் செய்யலாமா?'' என்று கேட்கக் கூடாதா? கேட்டால், அந்த அதிகாரி என்ன சொல்லியிருப்பார் என்று சொல்லியிருப்பேன். என்ன தடை? நாங்கள் எண்ணிப் பார்த்து என்ன முடிவெடுத்திருக்கிறோம் என்றால், என்ன கட்டளையிட்டிருக்கிறோம் என்றால், அவர்களை நம்பி யாரும் பணம் போட முன்வராததால், இனிமேல் பணம் போட முடியாது என்று முடிவு செய்துவிட்டோம். நாங்கள் பணத்தைச் செலவிட்டுவிட்டதாகத் தனக்குத் தகவல் வந்ததாக நண்பர் சொல்கிறார். 30 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமா? அப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்று சொல்லித்தான் இந்தப் பதவிக்கு வந்திருக்கிறோம். உண்மையாகவே நினைத்தது மட்டுமல்ல. அங்குள்ள கட்டிடங்களை, பொருள்களை அவர் விற்க ஆரம்பிக்கிறார் என்று செய்தி வந்தது. உடனே அதிகாரிகள் மூலமாக அவற்றிற்குத் தடை போட்டோம். விற்கக் கூடாது, விற்க அனுமதிக்க மாட்டோம் என்று அதிகாரிகளுக்குச் சொன்னோம். அதைவிட என்ன செய்ய முடியும்? கோப்புகள் இருக்கின்றன. நான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறேன். வேண்டுமானால் பார்க்கலாம். ஆனால் நண்பருக்குத் தவறான [illegible] யாரோ சொல்கிறார்கள். இதை நம்பி அவருடைய

பேசுகிறார் என்றால் உண்மையில் வேதனைப்பட வேண்டியிருக்கிறது. கருங்கல் எடுக்கிறார்கள். அதற்கு எப்படிப்பட்ட உதவி செய்ய வேண்டும்? பத்து ஏக்கர், நான்கு ஏக்கர் என்று வைத்திருக்கிறவர்களுக்கு நாங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்கிறார். நாற்பது, ஐம்பது ஏக்கராக உள்ளவற்றை மட்டும் அரசில் எடுத்துக்கொள்ளுங்கள் என்றும் சொன்னார். திரும்பவும் சொல்கிறேன், பத்து ஏக்கர், ஐந்து ஏக்கர் என்ற அளவிற்குப் போதுமென்று யாருக்கும் யோசனை சொல்ல வேண்டியதில்லை, அப்படி அரசு எடுத்துக் கொள்ளாது என்றால், இன்றைய தினம் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் என்னால் பெற முடியும். அப்படி இருக்கிறார்கள் அவர்கள். இதில் என்ன சாமர்த்தியம் இருக்கிறது? சாமர்த்தியம் அவர்கள் வார்த்தையில்தான் இருந்தது. அந்த சாமர்த்தியத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்பதுதான் உண்மை. அவர்கள் இரண்டு ஏக்கர், பத்து ஏக்கர் வைப்பதற்கு அனுமதியுங்கள், அது சிறு தொழில்தானே என்றும் சொன்னார். நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். அது சிறு தொழிலா? இங்கே அரசிற்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான பணம் தனி மனிதனுக்குச் சொந்தமாகக் கூடிய நிலைமை தேவையா? பத்து ஏக்கர் அனுமதி என்றால், பதினைந்து ஏக்கர்களில் கனி வெட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வளம் அப்படிப் போய்க்கொண்டிருந்தது. ஊழல் என்று சொல்லும்போது, இவற்றைச் சொன்னோம். அந்தத் தலைவருடைய சொந்தக்காரர்களுக்குப் பணத்தைப் பயன்படுத்துவதாக அன்றைய நிலைமை இருந்தது. நண்பர் பேசும்போது, "எங்கள் கட்சிக்காரர்கள் யாராவது இருந்தால் கொடுக்க வேண்டாம்" என்று சொன்னார். மற்றவர்களுக்குக் கொடுங்கள், ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றும் சொன்னார். மற்றவர்கள் என்கிறார்களே, அவர்கள் யார்? என்னுடைய மனைவி என்று நான் சொல்ல வேண்டாம். மற்றவன் என்று நான் சொல்லக் கூடாதா? மைத்துனனின் குழந்தைகளை மற்றவர்கள் என்று சொல்லக் கூடாதா? தம்பியின் மச்சானாக, மாமனை அவர்களுக்குத் தூர பந்துக்களாக உள்ளவர்களின் பெயரில் விண்ணப்பங்களை அனுப்பிப்பெறுவதற்கு எவ்வளவு நேரமாகும்? அப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெற இல்லையா? எத்தனை பேர் எத்தனை டாக்சிகளை வேறு வேறு பெயர்களில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? சென்னையில், மற்ற இடங்களில் அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பது தெரியாதா? எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் என் பெயரில் ஒன்றுமே இல்லை என்று சொல்கிறார்கள். பேசுகிறார்கள். உண்மையைப் பேசி உண்மையில் செயல்பட வேண்டுமென்ற ஆசையில் இவற்றை வெளியிடுகிறேன். [illegible]கள் திருத்தப்பட வேண்டும். இனிமேல் நடந்த [illegible] உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட [illegible] சொல்கிறார்கள். இது சிறு தொழில் என்று. திரும்பத் [illegible]

[illegible]லாளர்கள் ஆயிரக்கணக்கில் வேலை இழக்கிறார்கள் என்று பேசுகிறார்கள். இருக்கலாம். சில நேரங்களில் பிரசவத்தில் அறுவை சிகிச்சை செய்யும் நிலைமை வந்தால், அந்த நேரத்தில் தாயையும், குழந்தையையும் காப்பாற்றும் மருத்துவர்தான் நமக்குத் தேவை, அப்படிப்பட்ட நிலைமையில் நடவடிக்கை எடுக்கிறோம். தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும். அதே சமயம் அரசுக்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான பணம் வந்து சேர்ந்தாக வேண்டும். சந்தன மரங்களைக்கூட இன்னொரு மாநிலத்திற்கு அனுப்பி அவர்கள் அவற்றைப் பயன்படுத்தி சித்தர வடிவங்களோடு, சிலைகளாகச் செய்து, கைவினைப் பொருள்களாக நமது மாநிலத்திற்கு அனுப்பி வருகிறார்கள். சுதந்திரம் வாங்குவதற்கு முன்பு சொன்னோம், நாம் பஞ்சை அனுப்பி வெள்ளைக்காரன் அதைத் துணியாக்கி நம்மிடமே விற்கிறான் என்று. அந்த நிலைமைதான் அப்போது இருந்தது. சந்தன மரங்களை ஏலம் விட்டார்கள். யார் ஏலம் எடுப்பார்கள்? அதைப்பற்றி விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. போட்டி போட ஆள் இருந்தால்தானே? இரண்டு லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் போக வேண்டிய மரங்கள் பத்தாயிரத்திற்குப் போகும். கேட்க ஆள் இருக்காது. கேட்டால் அவன் வெளியே இருக்க முடியாது. அவன் மீது வழக்குப் போடப்படும். அப்படிப்பட்ட நிலையில் எத்தனையோ பேர்கள் சம்பாதிக்கிறார்கள். அதை விட இதைத் தடை செய்து, நாமே நடத்தி, நாமே தொழிற்சாலைகளை உருவாக்கி, நமது மாநிலத்திற்குப் பயன்படும்படி செய்ய வேண்டுமென்றால், அது குற்றமா? அது எப்படி சிறு தொழிலை நசுக்குவதாகும்? சிறு தொழில் அது என்று சொல்கிறார்கள், லட்சக்கணக்கான பணத்திற்கு அதை நடத்தியவர்கள் சொந்தக்காரர்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது. எந்தக் கட்சிக்காரர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள், எந்தெந்தக் குடும்பங்களுக்கு, யார் யார் பெயரில் வாங்கப்பட்டு யார் எடுத்தார்கள் என்ற விவரம் எங்களிடம் இருக்கிறது. முன்பு வெளிநாட்டிலிருந்து வருகிற சரக்கை விற்பதற்கு மொத்தமாக விற்பனை செய்யும் உரிமை தனி நபர்களிடம் கொடுக்கப்பட்டது. முதல் போடாமல் வாயாலேயே இத்தனை லட்சம் முதல் போடுகிறோம் என்று சொல்வார்கள், அதை எழுதிக்கொண்டு உத்தரவு வரும், அட்வான்சும் கிடைக்கும். முதல் போடாமல் அப்படி சம்பாதித்து லட்சாதிபதியானவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடை செய்ய வேண்டுமென்கிறோம். அத்தனை பணமும் அரசின் மூலமாக மக்களுக்குக்குப் பயன்பட வேண்டும். மூலப்பொருள்களாக இருந்தாலும், பணமாக இருந்தாலும், வெளிநாட்டுப் பணமாக இருந்தாலும், மக்களுக்கு அவை வர வேண்டுமென்று சொல்கிறோம். தொழில் வளரவேண்டுமென்றுதான் அவற்றைத் தடை செய்கிறோம். இல்லை என்று மறுக்கவில்லை. பல கோப்புகளில் எழுதியிருக்கிறேன். நான்தான் முதலில் கட்டளை போட்டேன். புள்ளிவிவரத்தைப்

பார்த்து, யார் யார் சொந்தக்காரர்கள் என்று தெரிந்து, யார் யார் அதை வைத்துக்கொண்டிருந்தார்கள், அவர்கள் சொத்து எவ்வளவு, ஆரம்பிக்கும்போது செ த்து வந்திருக்கிறது எனபதையெல்லாம் பார்த்து, அதற்குப் பிறகு எவ்வளவு அதை அனுமதிக்கக் கூடாது, இது தமிழகத்திற்குத் துரோகம் இனிமேல் என்றுதான் தடை விதித்தேன். அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். முதலமைச்சர் என்ற வகையில்தான் தடை செய்தேன். அவற்றைத் தடை செய்துவிட்டு அதிகாரிகள்தான் நடத்த வேண்டுமென்று கையெழுத்துப் போட்டேன். போட்டவன் நான்தான். முதலமைச்சர் பதவியிலிருந்து இதைச் சொல்கிறேன். இதில் என்ன தவறு ?

(பிற்பகல் 6-10)

சிறு தொழில் என்பது என்ன? அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே பேசும்போது, சிறு தொழில் என்று சொல்லி, பெரிய தொழில்களை நீங்கள் மூடிவிடக் கூடாது என்று சொன்னார்கள். நாங்கள் எங்கே மூடுகிறோம்? திறப்பு விழாக்களைத் தானே நடத்துகிறோம். அதுவும் திறப்பு விழாக்களில் எங்கள் பெயரைப் போடாதே, இங்கே உழைத்தவனின் பெயரைப் போடுங்கள் என்றுதானே சொல்லுகிறோம். திறப்பு விழாக்கள் இன்றும் நடக்காமல் இல்லை. இன்றுகூட இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். நான் வந்துதான் அங்கே யுள்ள பாலத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் கள். நான் அப்போதே சொன்னேன். நான் வர முடியாது, அங்கே உள்ள அதிகாரிகளை அழைத்து, அங்கே பணியாற்றியவர்களைக் கொண்டு திறந்து, அந்தப் பணியாளர் ஒருவரின் பெயரை வையுங் கள் என்றுதான் சொன்னேன். இப்படித்தான் நடக்கவேண்டும்; அப்படித்தான் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமே தவிர, அடிக்கல் நாட்டுவதற்கு முதலமைச்சரான திரு. எம். ஜி. ராமச் சந்திரன் தான் வர வேண்டும்; திறந்து வைக்கவும் முதலமைச்ச ரான திரு. எம். ஜி. இராமச்சந்திரன்தான் வரவேண்டும், என்ற அளவுக்குக் கூறி, என்னுடைய தரத்தைத் தாழ்த்திக் கொள்ளநான் தயாராக இல்லை. நான் இதய தெய்வமாக போற்றி வணங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இதன் மூலம் கெட்ட பெயர் உண்டாக்க விரும்பவில்லை. இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் எந்தத் தொழிலையும் அழித்துவிடும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. இதைத்தான் இந்த அரசின் தொழிற் கொள்கை என்ற அளவில் விளக்கமாக எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். புதிய தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்படுவதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அந்தத் தொழிற்சாலை களுக்குக் கொடுக்கப்படுகிற மூலதனம், சேர்க்கப்படுகிற தொகைகள் ஆகிய இவையனைத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், எத்தனை பேருக்கு இதனால் வேலை கிடைக்கும், உற்பத்தி செய்யப்படும்

பொருள்களுக்கு மார்க்கெட் எங்கே என்று இரண்டு அடிப்படை யின் மீது தான் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்பு கிறோம். இவ்வளவு கோடி செலவு செய்துவிட்டோம். இதை யார் தலையில் கட்டுவது என்று 5 ஆண்டுகளுக்குப் பிறகு தேட வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது என்றுதான் இந்த அரசு எண்ணுகிறது.

எந்தத் தொழிலை யார் ஆரம்பிப்பது என்றாலும், நாங்கள் அதை வரவேற்கிறோம். சட்டமன்றப் பேரவையில் பேசும்போது கூட நான் இதைக் குறிப்பிட்டேன். சிமெண்ட் தொழிற்சாலைகளைத் துவக்க இருக்கிறோம். சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க இருக்கிறோம். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் தோல் பதனிடும் தொழில் அதிபர்கள் கோரிக்கைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்களுக்கு ஒன்றைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் தண்ணீர் காரணமாக எத்தனை வளம் மிகுந்த நிலமாக இருந்து பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்கு வாய்ப்பு வசதி பெற்ற ஆயிரக்கணக்கான நிலங்கள் பாழாக்கப்பட்டிருக்கின்றன என்பதும், மக்களுடைய குடிதண்ணீரில்கூட அது கலந்து விடு வதால் எவ்வளவு நோய்கள் பொதுமக்களுக்கு வருகின்றன என் பதும் நமக்குத் தெரியாததல்ல. எனவேதான் அதைப் பற்றி நன்கு எண்ணிப்பார்த்து, இந்தக் கழிவு நீரை வெளியே விடாமல் பாதுகாக்கப்பட்ட இடத்தில் தேக்கி வைக்க வேண்டும். வெளியே விடக்கூடாது என்று உத்தரவிட்டோம். இதற்கு அரசே பணம் கொடுத்து இந்த வேலையை முடிக்க வேண்டும். பிறகு அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடமிருந்து—தோல் பதனிடும் தொழிலதிபர்களிடமிருந்து—பணத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சொன்னார்கள். யோசனை நல்ல யோசனை தான். நான் குறைகூறவில்லை. வரவேற்கிறேன். ஆனால் எத்தனையாண்டுகளாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? நமக்குத் தெரியும், கடந்த 5, 6 ஆண்டுகளாக இவைகளைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றது. மக்கள் அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார்கள். விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. நேரம் குறித்து, நாள் குறித்து என்று சொல்லு வார்களே, அதைப்போல் இத்தனையாம் தேதிக்குள் இதைச் செய்யவில்லை என்றால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியும் அந்தத் தொழில் அதிபர்கள் அரசாங்கத்தை அணுகி, திரும்பத் திரும்ப வந்து தவணை கேட்பார்கள். திரும்பத் திரும்ப அவர்களுக்குத் தவணை தரப்படும். இப்படியே நாட்கள் ஒத்தி வைக்கப்பட்டன. இதற்கு முடிவில்லாமல் போய்விட்டது. நாங்கள் ஆட்சிப்

பொறுப்பை மேற்கொண்ட பிறகும் ஒருமுறை தவணை கொடுத்
தோம். இத்தனை நாட்களுக்குள் இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டைச்
செய்து நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும், இதன் மூலம்
மக்களுக்கு நல்வாழ்வு ஏற்பட உதவி செய்ய வேண்டும் என்று
இந்தத் தொழில் அதிபர்களைக் கேட்டுக்கொண்டோம். மீண்டும்
நேரம் கேட்டார்கள். மீண்டும் தவணை தந்தோம். இன்னும்
செய்யவில்லை. இன்றைக்குக் கடைசியாகச் சொல்லி விட்டோம்.
"மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் தோல்பதனிடும் தொழிலதி
பர்கள் இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்யாவிட்டால்
அதனால் ஏற்படுகிற விபரீதத்திற்கு, தொல்லைக்கு, நட்டத்திற்கு
அதனதன் சொந்தக்காரர்கள்தான் பொறுப்பே தவிர, இந்த அரசு
பொறுப்பு அல்ல." இதை நாங்கள் சொல்வதற்குக் காரணம்
இந்தத் தொழில் வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வரு
கிறது. இந்திய நாட்டிலேயே இந்த மாநிலத்தில்தான் 70
முதல் 80 சதவீதம் தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே
அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத் தரவேண்டும் என்று
சொன்னார்கள். உண்மைதான். நல்ல அறுவை சிகிச்சை தெரிந்த
ஒரு மருத்துவர் தம்மிடம் உள்ள கத்தியை பிறரைக் கொல்ல
பயன்படுத்துகிறார் என்று தெரிந்த பிறகும், யாரோ ஒருவருக்கு
அவர் அறுவை சிச்கிச்சை செய்ய இந்தக் கத்தியைத்தான் உப
யோகப்படுத்துகிறார் என்பதற்காக நூற்றுக் கணக்கானவர்களை
கொலை செய்வதற்கு இந்தக் கத்தியை அவர் உபயோகப்படுத்த
நாம் அனுமதிக்கலாமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.
அப்படிப்பட்ட ஒரு மருத்துவர் நமக்கு எதற்குத் தேவை என்று
தான் நாம் கேட்போம். அந்த வகையில்தான் பல்லாயிரக்
கணக்கான மக்களுக்கு நோய்களை உண்டாக்குகிற பல்லாயிரக்
கணக்கான மக்களுக்கு தொல்லை அளிக்கிற இந்தப் பிரச்சினை
யில், மக்கள் உண்ணும் குடிதண்ணீரில் தீமையைப் புகுத்தும்
இந்தப் பிரச்சினையில், விபரீதமான இந்தப் பிரச்சினையில், இன்னும்
எத்தனை நாளைக்குத்தான் யோசனை சொல்லிக் கொண்டிருப்பது?
இத்தனை யாண்டுகளாக ஏன் அவர்கள் வற்புறுத்தவில்லை? உங்களை
அணுகி இப்படி யோசனை சொல்லுங்கள் என்று சொல்லுகிறவர்கள்
மக்கள் பிரச்சினையில்கூட இப்படித் தாமதம் காட்டுவது ஏன்?
நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து 7, 8 மாதங்களாக நாங்களும்
நேரம் கொடுத்தோம்; தவணை கொடுத்தோம். இதற்குள்
முடித்துவிட வேண்டும் என்று சொன்னாலும், ஏன் அதற்காக எந்த
முயற்சிகளையும் அவர்கள் எடுக்கவில்லை? இப்படியே சொல்லி
நாளைக் கழித்துவிடலாம் என்று பணத்தை மட்டும் எண்ணுகிற
நினைவு சரியில்லை. எனவே பணத்தை மட்டும் எண்ணிப்
பார்க்காமல், மனிதனின் மனதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்
இந்தப் பிரச்சினையில் எத்தனை மக்களின் வாழ்வு பிணைக்கப்பட்
டிருக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்த்து நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

இப்படி நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இந்த நாட்டுக்குக்
கிடைக்கக் கூடிய அந்நியச் செலாவணி போய்விடும், என்ன செய்
வீர்கள் என்று கேட்கிறார்கள். கஷ்டம்தான். கடந்த 5 ஆண்டு
களில் எத்தனையோ ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள அந்நியச்
செலாவணியை அரசாங்கம் ஏற்கெனவே சேமித்து வைத்திருக்கிற
காரணத்தால், ஓரிரு ஆண்டுகளுக்கு அந்நியச் செலாவணி இல்லை
யென்றாலும், ஒன்றும் குறைந்துவிடாது. அதனால் பெரிய நஷ்டம்
வந்துவிடாது. அதையும் நாங்கள் சிறு சிறு தொழில்களை
கிராமங்களில் அமைக்கவும் தோல் பதனிடும் தொழில்களை அங்
கெல்லாம் ஏற்படுத்தவும் திட்டமிட்டிருக்கிறோம். இவைகள்
மூலமாக இந்த அந்நியச் செலாவணியைப் பெற முடியும்.
வருகிற ஆண்டுகளில் எங்கெங்கே தோல் பதனிடும் தொழிலுக்கு
வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் சிறு தொழில்கள் என்ற
வகையில் தோல் பதனிடும் தொழிலை அமைத்து, அதிகமான நபர்
களுக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்த இருக்கிறோம். இந்தத்
தொழில் மூலம் தனிப்பட்ட மனிதர்களுக்குக் கோடிக் கணக்கான
ரூபாய் லாபம் போவதைத் தடுத்து எல்லோருக்கும் பகிர்ந்து
கொடுக்கும் நிலையை உருவாக்க விரும்புகிறோம். கிராமப் புறங்
களில் உள்ள மக்களுடைய வாழ்வில் இந்தத் தொழிலில் வரும்
கழிவுத் தண்ணீர் மூலமாக தீமை வராத அளவுக்கு பாதுகாப்போடு
இந்தத் தொழிலை நிறுவுவது என்று திட்டமிட்டிருக்கிறோம். இது
தவறா?

இப்போது சொல்லுகிறேன். 31 ஆம் தேதியன்று நாங்கள்
எல்லைக் கோட்டை வகுத்தாலும்கூட, கடைசியாக, இறுதியாக
ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு திரு. வகாப்
அவர்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் கேட்கிறார்கள் என்ற அளவில்
சொல்ல விரும்புகிறேன். இன்னும் இரண்டு மாதங்கள் தவணை
கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்தப் பாதுகாப்பு ஏற்
பாடுகளைச் செய்து முடிக்க வேண்டும் என்று சொல்லுகிற உத்
தரவை இன்னும் இரண்டு மாதங்களுக்குத் தள்ளி வைக்கத்
தயாராக இருக்கிறோம். இதற்கிடையில் அந்தத் தொழிலதிபர்
கள் எப்படியாவது பணத்தைச் சேர்த்து, மக்களுக்கு நன்மை
செய்யும் வகையில், இந்தக் கழிவு நீர் வெளியேறுவதை எப்படி
மாற்றியமைக்க முடியுமோ அதைச் செய்து, பாதுகாப்பை ஏற்
படுத்த வேண்டும். அப்படி அதைச் செய்யாவிட்டால்— இப்போதே
நீங்கள் அனைவரும் என்னுடைய கருத்துக்கு ஆதரவாக நிச்சயமாக
இருக்கிறீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை என்றாலும்—
நிச்சயமாக இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்
கொள்ளும். எனவே ஓரளவுக்கு இறுதித் தவணையாகக் கொடுப்
போம் என்ற முறையில் உங்கள் சம்மதத்தோடு இந்தச்
செய்தியை இங்கே வெளியிடுகிறேன்.

இதற்கும் அவர்கள் தவறுவார்களானால், அதற்குப் பிறகு
இந்த அரசு பேசாது. நிச்சயமாக அதிகாரிகள் நடவடிக்கை
எடுப்பார்கள். அதற்கு முன்பாக வேலை இழப்பவர்களுக்கு எப்படி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

வேலை கொடுப்பது என்பதைப்பற்றியும் நாங்கள் சிந்திப்போம். அதையும் இன்றே சொல்லிவிடுகிறேன். கிராமப்புற கைத் தொழில் என்று சொல்லுகிறபோது, கிராமத்தில் என்ன கைத் தொழிலை ஆரம்பிக்கப் போகிறீர்கள், எங்கே ஆரம்பிக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் திட்டம் தீட்டுகிறோம். திட்டம் தீட்டும்போது, நாங்கள் அந்த வரைபடத்தை எழுதி இது தான் வரைபடம், இதைப்போல் செய்துவிடுங்கள் என்று சொல்வதில்லை. நாங்கள் தீர்மானித்து முடிவு எடுத்து அதிகாரிகளைக் கூப்பிட்டு, ''இனி உனக்கு உன்னுடைய துறையில் வேலை இல்லை; இந்த வேலையைப் பார்; உங்களுடைய இலாக்கா இதற்கு ஒப்புக் கொள்கிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்; நீ இந்த வேலையைப்பார்; நேரடியாக என்னை வந்து பார்'' என்று சொல்லுகிற அளவுக்குப் பணியாற்ற நான் தயாராக இல்லை. முன்பு இருந்தவர்கள் சாமர்த்தியத்திற்கு இந்த முறை ஒரு அடையாளமாக இருந்திருக்கலாம். மறுக்கவில்லை. அந்தச் சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, ஒன்றுமட்டும் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு திட்டம் ரூ. 5 லட்சத்தில் ஆரம்பித்து, இறுதியில் ஒரு கோடிக்குப் போகிற நிலையை இனி இந்த மாமன்றம் காணாது. முன்பிருந்த நிலைமைகளைப்பற்றி நான் இங்கே நினைவுபடுத்த விரும்பவில்லை. தொழில்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில் நிபுணர்களை அழைத்து, அதற்கான பயிற்சி பெற்றவர்களை அழைத்து அவர்களைப் பயன்படுத்தி அவர்களிடம் கருத்தைக் கேட்டு, ஆரம்பிக்கும்போதே எத்தனை கோடி ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டால் அல்லது இத்தனை லட்சம் ரூபாயில் இந்தத் திட்டம் போடப்பட்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு விலைவாசி உயர்வின் காரணமாக, பொருள்களின் விலை உயர்வு காரணமாக அது எங்கே போய் நிற்கும் என்பதையும் இப்போதே குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்வோம், இப்போது தொடங்கும்போது 20 கோடி ரூபாயாகும் என்றால், இறுதியில் 2 ஆண்டுகளுக்குப் பிறகு 30 கோடி ரூபாயில் முடியும் என்றால், அதையும் இப்போதே குறிப்பிட்டுக் காட்டும் வகையில்தான் எங்கள் திட்டம் இருக்கும். எப்படியோ ஒவ்வொரு ஆண்டு முடிந்ததும் எங்களுடைய சாதனைகளைப் பார்த்தீர்களா என்று ஆங்காங்கே நிலைமைகளை உருவாக்கி, கல்நாட்டு விழாக்களைத் தொடங்கி வைத்துவிட்டு, பின்னால் எப்படியோ ஆகட்டும் என்று நாங்கள் செயல்படத் தயாராக இல்லை.

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(பிற்பால் 6-20)

ஒன்றை உறுதியாகச் சொல்லுகிறேன். பெரிய தொழிற் சாலைகளைத் தொடங்குவதற்கு யார் முன் வந்தாலும், இந்த அரசு அவர்களுக்குத் துணை நிற்கும். அதில் சந்தேகம் வேண்டாம். கூட்டுறவுத் துறை என்றாலும், பொதுத் துறை என்றாலும், உதவி செய்ய அறிவாற்றலை அதற்குக் காணிக்கையாக்குங்கள் என்று சொல்லவில்லை. அவர்கள் தங்களுடைய சக்தியின் துணிவின் நுண்ணறிவின் ஆற்றலுக்குத் தகுந்த பதவியைப் பெற்று பணி செய்ய விரும்பினால் நாங்கள் மறுக்கமாட்டோம். ஆனால் அதைப் போலவே கூட்டுறவுத் துறையில் தான் இயங்கவேண்டும். அதுதான் பாதுகாப்பு என்றால், அதில் நீங்கள் எந்த அளவுக்குப் பயன் பெறுவீர்கள் என்று தெரிந்துகொண்டு அதை ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இங்கே கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நண்பர் அனந்தசாமி வழக்கு மன்றத்திற்குப் போய் ஜாமீனில் வந்திருக்கிறார். அவர் மீது இன்னொரு வழக்கையும் போடவிருக்கிறோம். அது மிகப் பெரிய மோசடி வழக்கு. அதை இங்கே சொல்லக்கூடாது என்பதில்லை. இன்னொரு வழக்கு போடப்போகிறோம் என்பதிலிருந்து அவர் எப்படிப்பட்டவர் என்பதை இந்த நாடு புரிந்துகொள்ளும் என்பதற்காகச் சொல்ல விழைகிறேன். பணமே போடவில்லை. அவருடைய கணக்கில் பணம் வருகிறது. எவ்வளவு சாமார்த்தியசாலி! யாரும் கண்டிருக்க முடியாது. அவர் எல்லாக் கட்சியிலும் இருந்து எல்லோருடனும் நண்பராக இருந்திருக்கிறார். என்னைப் பார்க்கும் பொழுது, உற்ற துணைவர்போல் பழகுகிறார். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் தவறுகளைச் செய்தால் இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது. கோப்புகளைப் பார்த்தோம் என்று சொல்லுகிறபோது அது கேலியாகக்கூட இருந்தது. கொண்டு வந்து காட்டுங்கள் என்று கேட்டு, ஒரு கோப்பைத் தான் சட்ட மன்றத்தில் காண்பித்தேன். அவர்களுக்குத் தங்கள் பத்திரிகையில் போடத் துணிவு இல்லை. தங்களுக்குச் சொந்தமாக இருக்கிற பாதுகாப்போடு இருக்கிற பத்திரிகைகளில் வெளியிடவில்லை. ''ஆனால் அரசு கடன் கொடுக்க வேண்டும். திரும்ப கேட்கக் கூடாது. அரசாங்கம் தவணைகளில் வாங்க வேண்டும். வட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்கொள்ள வேண்டும். அரசு வெளியிடுகிற உண்மையைப் பத்திரிகைகளில் போடமாட்டோம்''. இதுதான் அவர்கள் கொள்கை. நல்ல தர்மம், நல்ல எண்ணம், பத்திரிகை தர்மம் அவர்களிடம் ஒழுங்காக நடைபெறுகிறது. அதற்காக யார் மீதும் ஆத்திரப்படப் போவதில்லை. பழி வாங்கப் போவதில்லை. ஆனால் மக்கள் பணம் இப்படிப் பாழாவதை அனுமதிக்கமாட்டோம். மால்கோ என்ன ஆயிற்று ? யாரை மாற்றினீர்கள் என்று மறுபடியும் அந்த விவகாரத்தை இழுக்கிறார்கள்: அதில் உள்ளவர்கள் டைரக்டராக இருக்கிறார்கள் என்று கேட்கின்றனர். அது அவர்களுடைய சக்தியையும் வசதியையும் பொறுத்தது. அதில் குறுக்கிடத்

[திரு: எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

தயாராக இல்லை. ஆனால் டைரக்டரான பிறகு, அவர்கள்
பேரில் குற்றம் ருசுவாகி, அவர்கள் தண்டிக்கப்படுகிற நிலை
வர வேண்டும். எந்த ஆதாரத்தை வைத்துத் தொடங்கினார்
களோ அதுவரையில் டைரக்டராக இருப்பதை நீக்குவதற்கு
அரசுக்கு அதிகாரம் இல்லை. அது ஒரு தனி 'பாடி'. இங்கி
ருப்பவர்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். இப்படிச் செய்,
அப்படி செய் என்று வற்புறுத்துவதற்கு அரசுக்கு அதிகாரம்
இல்லை. யாரிடமோ பணம் வாங்குகிறார்கள். யாருக்கு பணம்
கொடுக்க வேண்டுமோ, அதாவது மின்சார போர்டு, வழக்குப்
போடுகிறது. இவைகளை வற்புறுத்திச் சொல்வதற்குக் காரணம்,
தொழிலை நசுக்கிவிட நடவடிக்கை எடுக்க இன்றைக்கு ஆட்சிக்கு
வரவில்லை. மீண்டும் சொல்கிறேன். பெரிய தொழிற்சாலை யார்
தொடங்க விரும்பினாலும், தனியார் துறையானாலும், ஆரம்
பிக்கலாம். தடை செய்யப் போவதில்லை. ஆரம்பியுங்கள்.
இத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்
னால், மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். அவ்வாறு வேலை
வாய்ப்பு கொடுக்கிறபோது, அவர்களுக்குக் கடன் வாங்கு
வதற்குத் துணைசெய்ய அரசு தயாராக இருக்கிறது. கொள்கை
விளக்கம் என்பதால், இப்படிப் பேசுகிறார்கள். அதனால் புள்ளி
விவரங்களைச் சொல்லாமல் எங்களது கொள்கையை விளக்கு
கிறோம்.

சிறு தொழில் என்ன என்று கேட்கிறார்கள். செருப்புத்
தைப்பது என்பது சிறு தொழில்தான். பெரிய தொழிலும்தான்.
இதை எப்படிப் பயன்படுத்துகிறோமோ, அதற்கேற்ப அது அமை
யும். தெருவில் உட்கார்ந்து தைத்துக் கொண்டிருக்கிறானே
ஒரு தொழிலாளி, அந்தத் தொழிலாளியும் இன்னும் நான்கு
பேரும் அதே செருப்புக் கடையை இயக்குகிற இயந்திரங்களை
அமைத்துச் செய்தால், சிறு தொழில். மிகப் பெரிய அளவில்
பாட்டா மாதிரி செய்ய ஆரம்பித்தால், அது பெரிய தொழில்.
எண்ணுகிற எண்ணம், செயல்படுகிற விதம் இவைகளைப்
பொறுத்து எதையும் சிறு தொழிலாக்கலாம், சிலவற்றைப்
பெரும் தொழிலாக மாற்றி அமைக்கலாம். அந்த நிலைமையில்
சில தொழில்களை ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதற்கு விளக்கம்
கொடுத்திருக்கிறோம். சிறு தொழில் என்று சொல்லும்போது,
சிலருக்கு சந்தேகம் வருகிறது. குறிப்பில் கூறியிருக்கிறோம்,
அதை நினைவுபடுத்துகிறோம். ஏறத்தாழ 50 ஆயிரத்திற்கு அதிக
மாக இருக்கிற இடங்களில் ஒரு தொழில் ஆரம்பிக்க விரும்
பினால், ஒரு லட்ச ரூபாய்க்கு குறையாமல் உதவி செய்யத்
தயாராய் இருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறோம். முன்னர்
ஒரு நிபந்தனை இருந்தது, அதைத் தளர்த்த வேண்டுமென்று
ஒருவர் குறிப்பிட்டார். பெயரைச் சொல்ல விரும்பவில்லை.
அவர், "அங்கே ஜன்னல் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கக்
கூடாது; பஞ்சாப்பிலும் ஹரியானாவிலும் அதை அனுமதிக்

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கிறார்கள் என்றார். சட்டம் என்பதே ஒரு வரையறைதான்.
அதுதான் சட்டம். கண்ணாடிக்குக்கூட சட்டம் போடுகிறோம்.
12'' நீளம் 6'' அகலம் அதற்குமேல் போடக்கூடாது, இந்தப்
பக்கம் 12 அடி அந்தப் பக்கம் 8 அடி என்றால், அது
ஒழுங்காக இருக்காது. சட்டம் சில சமயங்களில் கஷ்டத்தைத்
தரும், ஆனால் நஷ்டத்தைத் தராது. நஷ்டத்தை யாருக்குத்
தரும்? கட்டுப்பாட்டை, சட்டத்தை மீறுகிறவர்களுக்கு,
கடமை தவறுகிறவர்களுக்கு இழப்பாகும். இதைத் தான்
சொல்ல விரும்புகிறார்கள். சட்டத்தைப் போட்டாக வேண்டும்.
சட்டத்தின்படி நாகரிக பழக்க வழக்கங்களை உருவாக்க வேண்டும்,
இந்தத் தொழிற்சாலை இப்படி இயங்க வேண்டுமென்றால்,
அப்படி அமைக்க வேண்டும். பள்ளியைச் கட்டுகிறபோது, பல
வாசற்படிகளை வைக்கிறோம். ஏன்? எந்த நேரத்தில் எந்த
விபத்து ஏற்படுமோ தெரியாது. குழந்தைகள் 2, 3 நிமிடங்
களில் கொட்டகையிலிருந்து வெளியே வர வேண்டுமென்று
நிறைய கதவுகள் வைக்கிறோம். இதையெல்லாம் கேட்கக்கூடாது;
ஒரு கதவுதான் வைப்போம்; நெருப்புப் பிடித்தால், குழந்தை
கள் மெல்ல வெளியே வந்து சேரட்டும் என்றால், ஒத்துக்
கொள்ளுவோமா? சட்டத்தை மதிக்க வேண்டும். பெரிய
தொழில் செய்ய வாய்ப்பு இல்லையென்றால், இந்த அரசைப்
பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லது இருக்கின்ற அறி
வாற்றலை வைத்துக் கொண்டு சிறு தொழிலை ஆரம்பிக்க முன்
வர வேண்டும். இதைச் சொல்லுவதற்குக் காரணம், சிறு
தொழில் என்பது வேடிக்கைக்காகவோ அல்லது யாராவது புகழ
வேண்டும், மக்களிடம் சொல்லி வாக்குகளை வாங்கி விட்டோமே,
பட்டியலில் இருக்கட்டும் என்று கணக்கைக் காட்டுவதற்காகவோ
அல்ல. ஆறு மாதம் கழித்து, எங்களுடைய அரசு எத்தனை
தொழில்கள் ஆரம்பித்திருக்கின்றன என்று தயவு செய்து கவ
னித்தால், எடுத்துக்கொள்ளுகிற முயற்சி எப்படிப்பட்ட சீரிய
முயற்சி என்பதும், எத்தனை ஆயிரம் பேர்களை வாழ வைக்கப்
போகிறது என்பதும் தெரியும். உதாரணத்திற்கு ஒன்று
சொல்லுவேன். ஒரு நிறுவனம். பணம் செலவழித்திருக்கிறார்கள்.
80 கோடி ரூபாய் வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.
அந்த வட்டியைக் கொடுக்காமல் இருந்திருந்தால், எவ்வளவோ
திட்டங்களைத் தீட்டியிருக்க முடியும். கடன் வாங்குவது பெரி
தல்ல. அதைத் திருப்பிக் கொடுக்கிற அளவில் பொருளா
தாரத்தை அதிகமாக்க வேண்டும். மக்களுக்கு அந்தப் பலனைத்
தந்தாக வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
திரு சுவாமிநாதன் அவர்களும் வேறு சிலரும் ஒரு கருத்தைச்
சொன்னார்கள். வாங்குகிற சக்தியை மக்களுக்கு அதிகப்படுத்த
வேண்டும் என்று சொன்னார்கள். எப்படி வரும்? தொழில்
கிடைக்க வேண்டும். தொழில் எப்படி வரும்? பெரிய
தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதனால் இரண்டா
யிரம், பத்தாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். இப்போது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்

வேலையில்லாத் திண்டாட்டத்தின் கணக்கு என்ன? அது வரு
வருஷம் உயருகிறது. 'பாவர்ட்டி லைன்' என்று சொல்லுகி
களே, அது ஆண்டுக்கு ஒரு விதமாக நான்கு ஆண்டுகளா
பெருகி வந்திருக்கிறது. இவைகளை இப்படிச் செய்து கொண்
போனால், பொருளாதார அடிப்படையில் மக்களைச் சந்தித்
உங்களுக்குத் தொழில் தந்திருக்கிறோம் என்று எப்படிச் சொல்
முடியும்? எப்படி வாங்குவார்கள்? வாங்கும் சக்தியை எப்ப
உருவாக்க முடியும்? உற்பத்தியைப் பெருக்கினால் போதாது
பொருள்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்
கிறார்கள். நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம், சட்ட மன்றத்திலு
சொல்லியிருக்கிறேன். இந்த அரசு, அரசைச் சேர்ந்த அமைப்புக
எவ்வளவோ பொருள்களை வாங்க வேண்டியிருக்கிறது. கடுதா
யிலிருந்து, பிளாட்டிங் பேப்பர், துணி உருண்டையிலிருந்
எல்லாவற்றையும் வாங்க வேண்டும். என்ன செய்வது, கா
டிராக்ட் கொடுத்து வாங்குகிறோம். பணம் எங்கே போகிறது
உதாரணத்திற்குச் சொல்லுவேன். பஸ்களை எடுத்துக்கொள்ளு
கள். கணக்குப் போட்டு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3¼ கோடி பெறுமா
டயர் வாங்க வேண்டியிருக்கிறது. காண்டிராக்டுக்குப் போனால்
ஊழல் வந்துவிடுகிறது. நாங்கள் பொறுப்பா?

[பிற்பகல் 6.30]

அதில் எல்லாம் லஞ்சம் வாங்கிவிட்டார்கள் என்று குறை
களைச் சொல்கின்றார்கள். அந்தக் குறைகளை நாங்கள் எடுத்து
சொல்கின்றோம். மனதிலே இருக்கின்றதை அப்படியே எடுத்து
சொல்கிறேன். அப்படி இந்த அரசு செய்யுமானால், இங்கே
இருக்கின்றவர்களில் யார் வேண்டுமானாலும், தைரியமாக எடுத்து
சொல்லலாம். அவர்கள் மீது இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை
எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்குள்ள
அமைச்சர் செய்தாலும், நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்தாலும்
மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள். இனிமேலும் மக்கள் பேசாமல்
இருக்கமாட்டார்கள். அவர்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது
நிச்சயமாக இனிமேல் அப்படிச் செய்ய முடியாது என்பதை
அவைகளைச் செய்பவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனையைச்
சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். மாண்புமிகு
உறுப்பினர் திரு. ராமகிருஷ்ண தேவர் அவர்கள் சொன்னார்கள்
அவர்கள் பெரியவர்கள். அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டாம்
என்று நினைக்கிறேன். மாண்புமிகு தேவர் அவர்கள் கிழக்கு
இராமநாதபுரம் பற்றிக் கேட்டார்கள். அப்போது பின்
லிருந்து குரல் வந்தது. மேற்கு இராமநாதபுரத்தைப் பி
கிறார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன்,
பிரிவினை வேண்டாம். ஒருமைதான் வேண்டும்.

1978 மார்ச் 2"]

<u>திரு வே. தங்கப்பாண்டியன்</u>: மேற்கு இராமநாதபுரம் என்று பிரித்துப் பேசுவது அந்தப் பகுதி மக்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்</u>: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை இவ்வளவு வேகமாக எழுந்து சொல்ல வேண்டாம். கொஞ்சம் நிதானமாகவே சொல்லியிருக்கலாம். அதிலே ஆட்சேபனை இல்லை. அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். மேற்கு மாம்பலம், கிழக்கு மாம்பலம் என்றெல்லாம் சொல்கிறார்கள். கிழக்கு ராமநாதபுரம், மேற்கு ராமநாதபுரம் என்று எல்லாம் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை. எந்தப் பகுதியில் சாலைகள் சரியாக அமைக்கப்படவில்லை என்றாலும் நாங்கள் வருத்தப்படுவோம், இதை நான் சட்ட மன்றத்திலேயும் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கடற்கரையிலே போடுகின்ற சாலை எதுவரையில் போகிறது என்று அவர்கள் கேட்டார்கள். அப்போது நான் சட்ட மன்றத்திலே சொன்னேன். வெளியிலே காரிலே போகின்றவர்களுக்கு வசதியாகச் சாலைகள் போடப்படுவதாகச் சொன்னார்கள். கிராமப் பகுதியிலுள்ள மக்கள் வசதியாக வாழ வேண்டுமென்பதற்காகத் திட்டம் போடவேண்டும் என்று நான் அப்போது குறிப்பிட்டேன். பிறரைக் குற்றம் சொல்ல மட்டும் இந்தக் கட்சி தொடங்கப்படவில்லை. நியாயத்தைப் பாராட்டுவோம். தீமை செய்பவர்களைக் கண்டிப்போம். குற்றங்களைக் கண்டால், அந்தக் குற்றங்களை எடுத்துச் சொல்வது எங்கள் கடமை. குற்றங்களை குற்றங்கள் என்று எடுத்துச் சொல்வது நமது கடமை என்று அண்ணா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவைகளை எடுத்துச் சொல்ல நாங்கள் தயங்குவதில்லை. தாமே முதுகைப் பார்க்க முடியாது, பிறர் சொல்லித்தான் பார்க்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் கண்ணாடி வைத்துக்கொண்டு பார்த்தால் தெரியும் என்றுதான் நான் சொன்னேன். அதைப் பத்திரிகையிலே போடவில்லை. அதையே வேறு விதமாக வெளியிலே பேசியிருக்கிறார்கள். நான் பேசி அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று சொல்லவில்லை. தன் முதுகு தனக்கே தெரியாது என்பது பாடமான ஒரு பழமொழிதான். அதுதான் கருத்து. அதிலே எதிர்ப்பு ஒன்றுமில்லை. நாங்கள் எந்த வகையிலே செய்தாலும் குறையிருந்தால் எங்களைக் குறை கூறிக்கொண்டு, வேறு வழியில்லை, இதனால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது, இப்படிச் செய்கிறோம் என்று சொல்கிறோம். பணம் ... நிதி இல்லை என்று சொல்கிறோம். "ரூ. 100 கோடி ...டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்றீர்களே: ...கள் பக்கத்தில் ரெயில்வே இல்லாவிட்டாலும் ஒரு தொழிற்...யைத்து ஆரம்பித்துத் தரவேண்டும். எங்கள் பகுதி...க்கு தொழிற்சாலை என்றால் என்ன என்பதையாவது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

இந்த மாவட்டத்திற்குச் சொல்லித்தாருங்கள்'' என்று அவர்கள்
சொல்கிறார்கள். அவர்கள் சொல்லும்போது நாம் சிரித்தாலும்,
அவர்களுடைய உள்ளத்திலே எவ்வளவு வேதனை இருக்கிறது
என்பதை நாம் கவனித்துப்பார்க்கவேண்டும். எல்லையில்லாத
வேதனை இருப்பதால்தான், அந்தக் குமுறல் அவரிடமிருந்து வரு
கிறது. அதை நாம் உணர வேண்டும். அதை மதிக்க வேண்டும்.
நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் அதை மதிக்கிறேன்.
ஒருவர் தண்ணீர் எங்கே என்று கேட்டார். அவருக்குக் கொஞ்சம்
ஆத்திரம் வந்திருக்கிறது. அதனால் கேட்கிறார். இங்கே சொல்
கின்றோம். அவர்கள் செய்வார்கள் என்று நம்பியிருக்கும்போது,
தடைசெய்யக் கூடியவகையில் இங்கே பேசுகிறார்களே என்ற
அளவில் அவர்கள் கேட்கிறார்கள். ''20 அடி, 50 அடிக்குக் கீழே
யிருந்து இயந்திரங்கள் மூலம் இழுத்தால், தண்ணீர் வெளியே
வருகிறது. கிடைக்கிறது. இதற்கு முன்னாலே இருந்தவர்கள்
பார்த்தபோது தண்ணீரே இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.
ஆனால் இப்போது வருகிறது. எப்படி வருகிறது?'' என்று
கேட்டார்கள். சில இடங்களிலே வறட்சியாக இருக்கும். சில
இடங்களிலே நீர் இருக்கும். குறிப்பாக இந்த ஆண்டில் அளவுக்கு
மீறிய மழை பெய்ததால், தண்ணீர் ஊறியிருக்கும். அந்தக்
காரணத்தினால் தண்ணீர் ஊற்றெடுத்து வருகிறது. இந்தத்
தண்ணீரைப்பற்றிச் சிலர் சொல்வார்கள். நாம் எடுக்க எடுக்க,
இறைக்க இறைக்க தண்ணீர் ஊறும் என்று சொல்வார்கள். அது
எப்படிப்பட்ட காலம் என்றால் மாதம் மும்மாரி பெய்தது என்று
சொல்வார்களே அந்தக் காலம். அந்த மாதிரியான நிலைமைகள்
இருக்க வேண்டும். அந்த நிலைமை 3, 4 ஆண்டுகளுக்கு இல்லா
மல் போனதால், வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பிறகு தண்ணீர்
ஊறி, இன்றைக்கு தண்ணீர் வருகின்ற நிலைமைகள்
இருக்கின்றது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கின்றேன். இராமநாதபுர
மாவட்டத்தில் ஒரு பகுதியில் ஒரு கிணறு இருக்கிறது. அந்த
ஊரிலே இருக்கின்ற மக்கள் அதிலிருந்து தண்ணீர் எடுத்து பாசனத்
திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்திக்கொள்கிறார்கள், அதற்குப்
பக்கத்திலே 5 அல்லது 6 மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்
திலே தண்ணீரே இல்லை. கிணற்றிலே தண்ணீர் கிடைக்கவில்லை.
அந்தப் பகுதியிலே உள்ள எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்கச்
செய்ய வேண்டும் என்பதற்காக பெரிய கிணறாக வெட்டி,
தண்ணீர் இறைத்து, அந்தப் பகுதி கிராம மக்களுக்குக் குழாய்
மூலம் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான
முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். அப்போது அந்த
ஊரிலேயிருந்து வந்தார்கள். எங்கள் ஊரிலே இதன் காரணமாகத்
தண்ணீர் இல்லாமல் போய்விடும். கிணறு வெட்டுவதை நிறுத்த
வேண்டும் என்று தடுத்தார்கள். அதற்கான ஒரு விண்ணப்பம்
... நாங்கள் போராடுவோம் என்றும் சொன்னார்கள்.

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நாங்கள் உங்களுக்கு அந்த நிலைமைகள் ஏற்படுகின்ற அளவுக்குச்
செய்யமாட்டோம் என்று சொன்னோம். அந்த மாதிரியான
நிலைமை உங்களுக்கு ஏற்படாது என்று சொன்னோம். அந்தப்
பகுதி மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் குடிப்பதற்குக் கொடுக்க
வேண்டும் என்று சொன்னோம். அவர்களுக்குக் குளிப்பதற்குக்
கிடைக்கவில்லை என்றாலும் குடிப்பதற்காவது கொடுக்க வேண்டும்
என்று சொன்னோம். அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பியிருக்
கிறோம். அந்த மக்களுக்குப் புரியவில்லை. தனி மனிதனுக்கு சுயநலம்
வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நான் மட்டும் வாழ
வேண்டும் என்று சொல்லாமல், நாம் அனைவரும் வாழ வேண்டும்
என்று சொல்ல வேண்டும். சுயநல மனப்பான்மை நமக்கு வரக்
கூடாது. எனக்கு மட்டும் தண்ணீர் வேண்டும் என்ற உணர்வு
களை எல்லாம் நாம் மாற்றியமைக்க வேண்டும். பெரியவர்களைப்
போன்றவர்கள், அவர்களுக்கெல்லாம் புத்தி சொல்ல வேண்டும்.
இப்படிச் சொல்கின்ற கடமை அரசுக்கும் உண்டு. நம் எல்லோ
ருக்கும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும். அதை இந்த அரசு தந்தாக
வேண்டும். இதைச் சொல்லும்போது அதற்கான திட்டங்களைத்
தீட்டும்போது, இப்படி 100 கோடி ரூபாய் போட்டு காகிதத்
தொழிற்சாலை ஆரம்பிக்கும்போது, அதை எப்படிக் கொண்டு
வருவது என்பதையும் பார்க்க வேண்டும். அதை அங்கே நிறை
வேற்ற முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அதற்குத்
தேவையான மூலப் பொருள்கள் எல்லாம் கிடைக்குமா என்று
பார்க்க வேண்டும். வேறு மாநிலத்திலிருந்து அங்கு அந்த
மூலப் பொருள்களைக் கொண்டு வரவேண்டியிருக்குமா, அப்படிக்
கொண்டு வரமுடியும் என்றால் எவ்வளவு தூரம் என்பதைப்
பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் செய்ய வேண்டும்
நான் பெரியவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். இந்த அரசு வேறுபாடு பார்க்காது. இந்த மாவட்டத்
திற்குச் சலுகை, இந்த மாவட்டத்திற்கு அலட்சியம் என்று
நிச்சயமாக கணக்கிட்டுச் செய்யாது என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். உதாரணத்திற்கு இங்கே ஒன்றைச் சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏழு மாவட்டங்களை
அமைத்துப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று திட்டம்
தீட்டப்பட்டது. அப்படி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில்
சொன்னபோது, தங்கள் மாவட்டத்தைச் சேர்க்கவில்லை என்று
நமது ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்
டார்கள். நான் உடனே அதை ஏற்றுக்கொண்டு சேர்த்துக்
கொண்டேன்.

ஆகவே எந்த மாவட்டத்தின் மூலப் பொருள்கள் கிடைக்
கின்றனவோ அதற்கேற்ப தொழில்களை அமைக்க வேண்டும்,
அவர்கள், ''எங்கள் ஊரில் வைக்கோல் நிறைய கிடைக்கிறது''
என்று சொன்னார்கள். வைக்கோலை மூலப் பொருளாக வைத்து
ஏதாவது தொழில் செய்ய முடியும் என்றால், அதையும்செய்யலாம்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

லட்சக் கணக்கான பனை மரங்கள் பயன்படுத்தப்
படாமல் இருக்கின்றன என்று சொல்கின்றார்கள். வெளி
நாடுகளுக்கு அதிலிருந்து தேவையான பொருள்களைச் செய்து
அனுப்பலாம். தென்னையிலிருந்து குச்சிகளைப் பிரித்தெடுத்து
அவைகளைத் துடைப்பங்களாகச் செய்து அனுப்பலாம். அந்நிய
நாடுகளுக்குத் துடைப்பத்தை அனுப்பினால், அவர்கள் என்ன
நினைப்பார்கள் என்று சொல்கிறார்கள். அதுகூட அவர்களுக்குக்
கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்களே என்று நாம்
பெருமைப்படுத்திக்கொள்ளக்கூடாதா என்று நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

நுங்குகளை எடுத்து, கெட்டுப் போகாமல் பதம் செய்து,
பக்குவப் படுத்தி, டின்களிலே அடைத்து, அதை மக்களுக்கும்
ஆங்காங்கே வரும் வெளிநாட்டுக்காரர்களுக்கும் கொடுத்து,
விளம்பரம் செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதிலே என்
னென்ன சத்துக்கள் இருக்கின்றன, எவ்வளவு குளிர்ச்சி
நிறைந்தது, எவ்வளவு உஷ்ணத்தைத் தடுக்கும், உடலுக்கு
எவ்வளவு உறுதியைக் கொடுக்கும், எந்தக் கெடுதலையும் செய்
யாது, என்பதையெல்லாம் விளக்கிச் செய்ய முடியாதா? இது
போன்ற எத்தனையோ காரியங்களைச் செய்ய முடியும். அதைச்
செய்யவில்லை. சரியாகப் பயன்படுத்தவில்லை. இதுவரை பயன்
படுத்தத் தயாராக இல்லை. காதி போர்டில் சிலர் தங்களுக்குத்
தெரிந்த அளவில் சர்க்கார் பணத்தை வைத்துக்கொண்டு,
உழைப்பவர்கள் உழைத்து, சில காரியங்களைச் செய்திருக்
கிறார்கள். ஆனால், பெருத்த அளவுக்குத் திட்டமிட்டு, இவை
இவை இவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள்; இவற்றை
யெல்லாம் சேர்த்துச் செய்யும் பெரிய தொழிற்சாலை இது; சிறு
சிறு பொருள்களையெல்லாம் ஒன்றாக இணைக்கும் பெரிய தொழிற்
சாலை இது என்று திட்டம் போட்டுச் செய்தால், வெற்றிகரமாக
இருக்கும். இந்த நேரத்தில் ஒரு கொள்கையைச் சொல்ல வேண்டி
யவனாக இருக்கிறேன். எங்களுடைய கொள்கை கூடுமான
வரையில் பெரிய தொழில்களையெல்லாம் பொதுத் துறை ஆக்கு
வதுதான். ஆனால் அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்
கொண்டோம் என்பதற்காக அதைப் பயனில்லாமல் செய்யும்
போது, அதைப் பரிசீலனை செய்யாமல் இருந்தால், நாங்கள்
அமைச்சர்களாக இருப்பதற்கோ, ஒரு பொறுப்பை நிறைவேற்றி
மக்களுக்கு நன்மை செய்கிறோமென்று சொல்வதற்கோ, நாங்கள்
தகுதியுடையவர்களாகமாட்டோம். அந்த முறையில் சட்ட
மன்றத்தில் சொன்னதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்பு
கிறேன். வேண்டுமென்றே தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு
தமிழக அரசுக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற ஒரே
[illegible] மக்களுடைய நன்மைகளைப் புறக்கணித்து மக்களைத்
[illegible] ஆளாக்கி, அவர்கள் வேதனையோடு [illegible]

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் மக்களால் கொடுக்கப்படும் வரிப்
பணத்திலிருந்து உருவாக்கப்பட்ட பஸ்களையோ, வாகனங்களையோ
அது போன்ற அமைப்புக்களையோ, நிறுவனங்களையோ தாக்கி,
பாழாக்கி, பயமுறுத்தி, நாங்கள் வேலை நிறுத்தம் செய்வோ
மென்று சொல்லி, எங்களை அச்சுறுத்தி, இந்தத் தகராறில்
மாட்டிக் கொண்டால் அரசு நடக்காமல் போய், எங்கள் பதவி
போய்விடுமென்று பயந்து, அவர்களுக்கு இதைச் செய்வோம்,
அதைச் செய்வோம் என்று நாங்கள் எதை எடுத்தாலும் ஒப்புக்
கொள்வோமென்று யாராவது கற்பனை செய்து கொண்டு, தூண்டி
விட்டால், கடைசியில் தூண்டி விட்டவர்கள் அந்தத் தொழி
லாளர்களாலேயே தாக்கப்படும் நிலைக்கு காரணமாகி விடுவார்
களென்ற பரிதாபத்தை, அந்த உணர்வினை அவர்கள் உள்ளத்திலே
பதிய வைப்பதற்காக நான் இங்கே சொல்கிறேன், தமிழக அரசு
நியாயமான கோரிக்கைகளைத் தவிர, வேறு எதையும் ஏற்காது.
தமிழக அரசை பயமுறுத்தியோ, அச்சுறுத்தியோ, எங்களிடம்
சலுகைகள் பெறுவது மட்டுமல்ல, எங்களைப் பொம்மைகள்போல்
ஆட்டி வைக்க முடியுமென்று யாராவது கருதினால், அரசு அவர்
களைச் சட்டத்தின் மூலமாக, சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க
சந்திக்க கிஞ்சித்தும் தயங்காது என்பதை நான் எங்களுடைய
கொள்கையாக இங்கே அறிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறோம் மக்களுக்கு.
சிறுபான்மையினர் பெருபான்மையினரை அடக்கிவிடக்கூடாது;
அச்சுறுத்தி கீழ்படியச் செய்யக் கூடாது.
அதுபோன்ற பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைப் பாது
காத்து, அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்க
வேண்டும். இந்த இரண்டையும் நாங்கள் செய்வோம் என்று
சொல்லியிருக்கிறோம். அதிலே, அதைச் செய்வதைத் தடுப்
போம், இதை ஆதரிப்போம். சிறுபான்மையினர் பெரும்பான்மை
யினரை அச்சுறுத்தி, பயமுறுத்தி, நாங்கள் இப்படியெல்லாம்
செய்து விடுவோம், அப்படியெல்லாம் செய்துவிடுவோமென்று
சொல்லி பொதுமக்களுடைய வாழ்க்கையை முன்னால் வைத்து,
அவர்களுக்குச் சிக்கல் வந்து விடுமோ, தொல்லை வந்து விடுமோ
என்ற அச்சத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாகத் தங்களை வாழ
வைத்துக்கொள்ளலாமென்றும் வளர்த்துக்கொள்ளலாமென்றும்
நினைத்தார்களானால் தமிழக அரசு ஒருபோதும் விட்டுக்
கொடுக்காது. அதிலே நாங்கள் அண்ணா வழியிலே நின்று, அற
வழியிலே சந்திப்போமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிலர் சில சமயங்களிலே நான் பேசுவதையெல்லாம் புரிந்து
கொண்டு, புரியாததுபோல் பேசுகிறார்களா அல்லது உண்மை
யிலேயே அவர்களுக்குப் புரியவில்லையா என்பது தெரியவில்லை.
நான் முன்பு சொன்னேன். அதாவது போராட்டத்தின் மூலம்
இந்த அரசு செய்கின்ற காரியங்களைத் தடுப்பது என்று இருந்தால்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 27

மக்களே பார்த்துக் கொள்வார்கள், மக்களே பதில் சொல்வார்கள்
என்று சொன்னேன். உடனே எங்கள் தொண்டர்கள் அடித்தது
போலவும். 'இவர்கள்தானு' மக்கள் என்று கேட்டதாகவும்
பத்திரிகையில் படித்தேன். நான் திரும்பவும் சொல்கிறேன்.
என்றாவது ஒரு நாள் பஸ்ஸிலே போகின்ற மக்கள் கல்லெறி
பட்டு, துன்பப்படுகிருர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சில
சமயங்களில் இளைஞர்கள், வாலிபர்கள் அதிலே போகிருர்கள்
என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் இறங்கி திரும்பி
ஞல், அவர்கள் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அதையும் விவாதித்து, புள்ளி விவரத்தை
எடுத்து வைத்து, நாட்டின் வளத்தைப் புரிந்து, வருமானத்தை
அறிந்து, இதற்கெல்லாம் செலவிடுகிருர்கள், இதைச் செய்ய
முடியுமா?; இதைச் செய்ய வேண்டுமென்று கேட்பவர்கள் நமது
ஆட்கள்தானே, இங்கே வந்து நம்மையும் கேட்கச் சொல்லு
கிருர்களே, இது நியாயமா; இதை ஏன் முன்பே நம்மிடம்
சொல்லிக் கேட்டிருக்கக்கூடாது; நமக்கு வாங்கித் தந்திருக்கக்
கூடாதா—இதையெல்லாம் சிந்திக்க வேண்டிய அவசியத்தில்
இருக்கிறவர்கள் வன்முறையில் இறங்குவதன் மூலம் இந்த ஆட்சி
யையோ அல்லது சட்டத்தையோ அல்லது ஒழுங்கையோ குலைக்க
முடியும், நிலைகுலைக்கச் செய்ய முடியுமென்று நம்பினுல், நான்
பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். ஆட்சியில் இருக்கிறேன்
என்ற மமதையில் அல்ல, கடமையாற்ற துணிந்து வந்திருக்கிறேன்
என்ற உரிமையோடு, பொறுப்போடு சொல்ல விரும்புகிறேன்,
வன்முறையை எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசு
அனுமதிக்காது. வன்முறை செய்பவர்கள் எங்கள் வீட்டுப்
பிள்ளைகளாக இருந்தாலும், அவர்கள் சட்டம் என்ன தீர்ப்பு
வழங்குகிறதோ அதற்கு ஆளாக வேண்டியவர்களாவார்கள் என்
பதை மாத்திரம் இங்கே கொள்கை என்ற அடிப்படையிலே
வெளியிட விரும்புகிறேன். இவைகளைத் திருத்திப் போடாமல்—
இங்கே எழுதியிருப்பார்கள், அதை வாங்கி பத்திரிகை நண்பர்கள்
அப்படியே வெளியிட வேண்டுமென்று பணிவன்போடு தலைவரவர்
கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். சிவப்புக் கல்லைக்
காண்பித்து, 9 நிறம் இதிலே தெரிகிறது, இப்படிப்பட்ட கற்கள்
இருக்கின்றன, இவைகளையெல்லாம் நாம் வெட்டி எடுத்து வெளி
நாட்டிற்கு அனுப்பினுல், வரிபோடாமலேயே இந்த நாட்டை நடத்
தும் அளவுக்குப் பணம் வருமென்று சொன்னுர்கள். அந்த மாண்பு
மிகு உறுப்பினர் தங்கள்கட்சி ஆட்சியில்இருந்தபோது ஏன் இதைச்
சொல்லவில்லை என்பது புரியவில்லை. இப்போதுதான் யாரராவது
அவருக்கு அதைப்பற்றிச் சொல்லியிருப்பார்கள்; அல்லது அந்தக்
கல்லை அன்பளிப்பாகத் தந்திருப்பார்கள்; அதை நண்பர் சொல்லி
யிருக்கலாம். அதைப் பிறகு தெரிந்து சொன்னதற்கு நான் சந்
தோஷப்படுகிறேன். இந்த வாய்ப்பை அவர் கட்சிக்குச் சொல்வு

1978 மார்ச் 27] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

முடியாத நிலைமை இருந்ததை எண்ணி வேதனைப்படுகிறேன். இவை
யெல்லாம் நல்ல யோசனைகள். இதைச் செய்வதில் கஷ்டமில்லை.
வெட்டி எடுத்து நல்ல கற்களை வெளியில் விற்று, அதனுல் வரு
மானம் வந்து, தமிழகத்திற்கு 500 கோடி ரூபாய் வருகிறதென்ருல்
சாதாரணமானதல்ல. 5 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு, 50
கோடி ரூபாய் கடன் வாங்கி நாம் வளத்தைக் கிராமங்களில் உண்
டாக்க முடியுமென்று நம்ப முடியுமாஞல், 500 கோடி ரூபாய்க்கு
அப்படிப்பட்ட கற்கள் நிச்சயமாகக் கிடைக்குமென்ருல், 500 கோடி
யோடு அது நிற்காது. எந்த அளவுக்கு தொழிலை விருத்தி செய்
கிருேமோ அதற்கேற்ப ஆயிரம் கோடிக் கணக்கில் கிடைக்கும் அள
வுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனுல் என்னுடைய துரதிருஷ்டம்
என்று சொல்லுவேன். நான் அந்தக் கட்சியிலே இருக்கும்போது,
இப்படிக் கொடுக்கக் கூடிய நண்பர்கள் அவருக்கும் கிடைக்கவில்லை,
எனக்கும் கிடைக்கவில்லை. இப்போது அவருக்கு நல்ல நண்பர்
கள் கிடைத்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட நண்பர்கள் கிடைத்த
பிறகு, அவர்கள் சொல்வதாலே ஆட்சேபணையில்லை, தலைவருக்
குக் கொடுக்கலாமா என்று கேட்டார்கள். கேட்டால் கொடுப்
பேன் என்று சொன்னுர்கள். எல்லோரும் வாய்ப்பும், வசதியும்
பெற்று, இந்த நாட்டிலே மக்கள் வாழ வேண்டுமென்பதுதான்
என்னுடைய ஆசை. பிறருக்கு கொடுக்கும் அளவுக்கு வாழ்க்கை
வசதிகளைப் பெற்ருல், அதைவிட வேறு வளம் நாட்டிலே இருக்க
முடியாது என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட வாழ்க்கை எல்
லோருக்கும் அமைய வேண்டும்.

(பிற்பகல் 6-50)

தொழிற் கொள்கையில், பெரிய தொழில்களை உருவாக்கவே
கூடாது என்பது எங்களுடைய கொள்கையல்ல. தனியார்
தொழில்கள் என்ற வகையில் பல தொழில்களை ஏற்படுத்த
யார் முன் வந்தாலும், அவர்களுக்கு வேண்டிய உதவியை
நாங்கள் செய்வோம். ஆனுல் அனந்தசாமி போன்றவர்கள்
வருவார்களேயானுல், இந்த அரசு சிந்தித்துத்தான் முடிவு
செய்யும். அவசரப்பட்டு அவருக்குப் பணம் கொடுத்துவிட்டு,
அவரைக் கூண்டிலே ஏற்றி, கைதியாக்கி சிறையிலே தள்ள
வேண்டிய அளவுக்கு நாங்கள் நிச்சயமாக ஆளாகமாட்டோம்
என்டதை உறுதியாக இந்த நேர்த்திலே பணிவன்போடு
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அத்தோடு, இந்தப் பொதுத்துறையைப்பற்றி ஓரே ஒரு
சிறு விளக்கம் மட்டும் சொல்லி, நேரம் இல்லாத காரணத்
தால், என்னுடைய பேச்சை முடிக்கலாம் என்று கருதுகிறேன்:
சிறு தொழில்கள் என்று சொல்லும்போது, தனியார் துறை
யினுடைய அறிவாற்றல், அவர்களது அனுபவம் ஆகியவைகள்
தமிழகத்திற்குக் கிடைத்தாக வேண்டும். எந்தத் துறையிலும்
அனுபவம் பெற்று நல்ல திறமைசாலிகள் எங்கெங்கு இருக்
கிருர்களோ அவர்களையெல்லாம் நாம் பயன்படுத்திக்கொள்ள

வேண்டுமென்று விரும்புகிறோம். அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுடைய யோசனைகளைச் சொல்லலாம். தாங்கள் நிச்சயமாக மதிப்புக் கொடுத்து அவர்களை வரவேற்போம். அதே நேரத்தில் பொதுத் துறையினால் நிச்சயமாக சர்க்காருக்கோ, மற்றவர்களுக்கோ பயன் இல்லையென்று கருதினால், தனியார் துறையைப்பற்றி இந்த அரசு சிந்திக்காமல் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுத் துறையை மாற்றியமைத்தால்தான், அல்லது தனியார் துறையை உருவாக்கினால்தான் தமிழக மக்கள் நிம்மதியாக வாழ முடியுமென்ற நிலைமையை உருவாக்குவார்களேயானால், இந்த அரசு அந்த எல்லைக் கோட்டையும் சந்திக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மக்களுக்காகத்தான் அரசே தவிர, மக்கள் வாழ்வதற்காகத்தான் கொள்கையைச் சொல்லுகிறோமே தவிர, கொள்கையை வகுத்துவிட்டு, மக்கள் செத்தாலும் பரவாயில்லை, அந்தக் கொள்கையின்படிதான் நடப்போம் என்று சொல்வது சரியா என்று சிந்திக்க வேண்டும். சுதந்திரத்திற்காகச் செத்தாலும் பரவாயில்லை. இந்த நாடு விடுதலை அடைவதற்காக குடும்பமே அழிந்தாலும் பரவாயில்லை. ஒரு சமுதாயம் அமுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தச் சமுதாயம் விடுதலை பெறுவதற்காகச் செத்தாலும் பரவாயில்லை என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்கும். நான் செத்தாலும் பரவாயில்லை என்பதற்குப் பதிலாக, மக்கள் செத்தாலும் பரவாயில்லை, என் கொள்கையை விடமாட்டேன் என்று சொல்லி பதவியிலேயே இருந்து, தனி மரமாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொன்னால், அதை இந்த அரசு ஏற்காது. மக்களுடைய நல்வாழ்வைப் பிரதிபலிப்பதாகத்தான் அரசினுடைய கொள்கை அமைய வேண்டும். மக்கள் என்று சொல்லும்போது, சிறு தொழில்களைச் செய்கின்றவர்கள், தொழிலாளர்கள், வேறு பணியைச் செய்துகொண்டிருக்கிறவர்கள், அலுவலகத்திலே இருப்பவர்களை மட்டும் கணக்கிலே எடுத்துக்கொள்ள முடியாது. இங்கே பணிவன்போடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் கூட அதைச் சொன்னார்கள். சங்கங்கள் இல்லாதவர்களுக்கும் நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்ற குறிக்கோள்களைச் சொல்லி பொறுப்பேற்றுப் யிருக்கிறோம். உதாரணமாக, மூட்டை சுமக்கும் தொழிலாளர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்காக சங்கத்தை உருவாக்க இரண்டாண்டுகளாக முயன்று அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சங்கமே இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் கூட சொன்னார்கள். 3 மாதங்கள் வேலையைச் செய்துவிட்டு, பிறகு 9 மாதங்களுக்கு மண் வெட்டி, கூடை ஆகியவைகளை வைத்துக்கொண்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று

வேதனையோடு சொன்னார் அவர். அவர்களுடைய சங்கம் என்று ஒன்று தோன்றிவிட்டால், அந்தச் சங்கத்தில் அவர்கள் உறுப்பினராக ஆகிவிட்டு, அவர்களும் தங்களுக்கு இவைகள் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துக் கேள்விகளை எழுப்பினால், இந்தச் சமுதாயமும், இந்த அரசும் பதில் சொல்ல வேண்டுமென்று, போராட்டம், போராட்டம் என்று சங்கங்களை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் சொல்லுவதைப் போல, அந்தக் கோடிக்கணக்கான மக்களும், அந்த உழைக்கும் தொழிலாளர்களும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் அவர்களும் போராட்டத்தை ஆரம்பித்தால், நாமெல்லாம் நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு இவ்வளவு நேரம் பேசுவதற்கு விடவேமாட்டார்கள். அப்படி விட்டாலும் வெளியே நாம் வரமுடியுமா என்பது சந்தேகம். முன்பெல்லாம்கூட சுதந்திரப் போராட்டக் காலத்திலே வ.உ.சி. போராடும் போது நாவிதர்கள் ஒத்துழைக்கவில்லை. சலவைத் தொழிலாளர்கள் ஒத்துழைக்கவில்லை. ஆகவே இப்படிப் பட்ட உழைக்கும் கரங்கள் போராட்டம் என்று நடத்த முன்வந்தால், இந்த நாடு நிச்சயமாக அதைத் தாங்காது. அந்த நிலைமை ஏற்படுவதற்கு முன் அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்தாக வேண்டும் என்பதற்காக எடுக்கப் படும் முன்முயற்சிதான் இந்தக் கொள்கை விளக்கம், இந்தத் திட்டம் என்று சொல்லி, நிறைய புள்ளிவிவரங்களைச் சொல்ல வேண்டுமென்று கொண்டு வந்திருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தாலும், அவைகள் எல்லோருக்கும் தெரியும் என்ற நம்பிக்கையிருப்பதாலும், அதைப்பற்றிச் சொல்லாமல், பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் எதையோ கேட்க விரும்புகிறார் என்பதால், நிச்சயமாக ஏதாவது ஒரு தொழிற்சாலையை அவருடைய மாவட்டத்தில் ஏற்படுத்த ஒத்துழைப்போம் என்பதையும் சொல்லி, அதே போல் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த உத்திரவாதத்தைத் தந்து இந்த அளவுக்கு என் பேச்சைப் பொறுமையோடு கேட்டவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களை வேண்டி, தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத்தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு சில தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் கொள்கைகளை அறிவித்தபோது, குறுக்கிட்டுப் பேசவேண்டாமென்று இருந்தேன். தவறு செய்தவர்கள் மீது வழக்குப் போடப் போவதாகத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். தவறு செய்தவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பதை நாங்கள் எதிர்க்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராண்ட்டைப் பற்றிச் சொல்லும்போது, சிறுதொழில் செய்யலாமா என்று நான் கேட்டதைப்போல் நினைத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். தானே கையெழுத்துப் போட்டதாகவும் சொன்னார்கள். அவர் கையெழுத்துப் போடலாமா என்று நான் கேட்கவில்லை. நான் குறிப்பிட்டதெல்லாம், அதிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளித்தாலே போதுமானது. அதை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

நூறு கோடி ரூபாய் செலவில் ஆலை எப்போது வருமென்று கேட்டதற்கு, முதலமைச்சர் இந்த ஆண்டிலே வந்துவிடுமா என்று நான் கேட்டதாக நினைத்துக்கொண்டு, பதில் சொன்னார்கள். நூறு கோடி ரூபாய் செலவில் காகித ஆலையை ஏற்படுத்த ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஏதாவது இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இந்த ஆண்டு திட்டத்தை அறிவித்துவிட்டு, 12 மாதங்களில் பொருள்களைக் கொடுக்க முடியுமா என்று கேட்க நாங்கள் நிச்சயமாக விவரம் தெரியாதவர்கள் அல்ல. ரூபாய் 100 கோடித் திட்டம் என்று சொல்லும்போது, அந்தத் திட்டத்திற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காவது இந்த ஆண்டு பணம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று கேட்டேன்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: சுருக்கமாக விளக்கம் கேட்டால் பதில் சொல்வதற்குச் சுலபமாக இருக்கும்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u>: நான் மோதிரக் கல்லைக் கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிட்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டு, அதற்குரிய பதிலையும் அவரே சொன்னார்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: முடிந்த விவாதத்தைப்பற்றி என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u>: துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன் தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன் என்று.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: இது தன்னிலை விளக்கமேயில்லை.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி</u>: அந்தக் கல்லைக் கொடுத்தவர்கள் சமீப காலத்திலே கொடுத்த, காரணத்தினால்தான் இப்போது [illegible]. இது என்னோடு நின்றுவிடக் கூடாது

என்ற எண்ணத்தில்தான் உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் கொடுக்காதது என்னுடைய குற்றமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u>: மேலவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் என்னால் சொல்ல முடியவில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் அவர்கள் இவ்வளவு தூரம் பேசினார்கள் என்று நினைக்கிறேன். ஒரு தொழிலை ஆரம்பிப்பது என்றால், ஆரம்பித்த ஆண்டிலிருந்து ஒரு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகும் அது முடிய. அவர் சொன்னது குறிப்பேட்டில் இருக்கும். சிறு தொழில்கள் என்ற வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொன்னார் என்பதைக் குறிப்பேட்டில் பார்த்தால் தெரியும்.

என்னிடம் லைசென்ஸ் வேண்டுமென்று வந்தார்கள். நான் விட்டுக்கொடுப்பேன் என்ற எண்ணத்தில் அவர் வந்தார். வந்தவர் யாரென்று சொல்லக் கூடாது. நியாயமில்லை. யாரோடு வந்தார் என்றும் சொல்ல விரும்பவில்லை. வந்தவரிடம் வெளிப்படையாகவே "உங்களுக்கு இதில் என்னய்யா கிடைக்கப் போகிறது" என்று கேட்டேன். கோடிக் கணக்கான ரூபாய் கிடைக்குமென்று சொன்னார். "எப்படிக் கிடைக்கும்" என்று கேட்டேன். "வெட்டுவது கொஞ்சம்தானே, ஆனால் அதை விற்பதன் மூலம் அதிகமான தொகை கிடைக்கும். ஒரு இலட்சம் செலவு செய்தால், அதன் விளைவாக ஒரு கோடி கிடைக்கும்" என்று சொன்னார்கள். அதனால்தான் உடனே இலாக்கா அதிகாரிகளை அழைத்து இதை அனுமதிப்பதற்கில்லை என்று நான் சொன்னேன். இந்தச் சலுகையைக் காட்டாததால், அவர்களுக்கு என்மீது கோபம் இருக்கலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. புரியாதவர்கள் என்று நான் யாரையும் சொல்லவில்லை. அப்படி நினைக்கவுமில்லை. அதைத்தான் 15 நிமிடங்களுக்கு மேல் விளக்கிச் சொன்னேன்.

மேலவையில் உள்ளவர்கள் எப்படிப்பட்ட யோசனையைச் சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்திருக்கிறேன். அமரர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டு அதை விளக்கினேன். இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கருப்புக் கற்களை எங்கே அனுப்புகிறார்கள் என்று அவர் சொல்லவில்லை என்றாலும், நான் சொல்ல வேண்டும். ஜப்பானிலிருந்து [illegible] இதை வாங்குகிறார்கள். அவர்கள் அதை ஒழுங்கு

படுத்தி பல நாடுகளுக்கு விற்கிறார்கள். அவர்கள் அதில் கோடிக்கணக்கான டாலர்கள் சம்பாதிக்கிறார்கள். இங்கே எடுக்கப்படுகிற கற்கள் ....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இறுதித் துணை மதிப்பீடுகளின் பேரில் நடைபெறும் விவாதம் முடிவடைகிற வரையில் அவைக் கூட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அந்த அளவில் அவர்கள் அதை ரா-மெட்டீரியல் என்பதாக வாங்க விரும்புகிறார்கள். நாமே அதைப் பக்குவப்படுத்திக் கொடுத்தால், அவர்களுக்கு வேலை போய்விடும். அவர்களே அவற்றை ஒழுங்கு படுத்த விரும்புகிறார்கள். நாம் அந்தத் தொழிலை இங்கேயே செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். அதைப் பேராசை என்று சொன்னாலும் சொல்லலாம். அந்தத் தொழிலை இங்கே ஆரம்பிக்க எண்ணி நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து, இங்கேயே தயாரித்து விற்றால், அவற்றில் நான்கு அல்லது ஐந்து மடங்கு விலைக்குப் போகும். காலையில் உறுப்பினர் அவர்கள் சில கற்களை என்னிடம் கொடுத்தார்கள், அதற்கு நன்றி சொல்ல மறந்துவிட்டேன், அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கற்களை இலாக்காவிடம் கொடுத்து பரிசிலனை செய்து என்ன செய்யலாம் என்று யோசித்து முடிவு எடுக்கப்படும். இப்போது எந்த எண்ணத்தோடு சொல்கிறேன் என்று புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பி அமைகிறேன்.

(பிற்பகல் 7—00)

5. 1977-78 ஆம் ஆண்டு இறுதித் துணை விவர அறிக்கை, 1970-71 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை மீதான விவாதம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது மணி ஏழு. உறுப்பினர்களெல்லாம் சுருக்கமாகத் தங்களது கருத்துக்களைச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இல்லை, நாங்கள் நீண்ட நேரம் பேசுவோம் என்று ஒவ்வொருவரும் சொல்வார்களானால், நெடு நள்ளிரவு வரையில் தங்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Deputy Chairman, though I would like to speak in detail, since we have been already requested to curtail our speeches, I would like to be brief. The point I want to mention is that I find under the budget for Education,

there is no mention of grant to orphanages. There is a column where 'Welfare of Harijans' is mentioned. There is another item mentioned as "Welfare of Women and Children". But the orphans have always been receiving step-motherly treatment, because the Orphanages come under the Education Department. I hope you would agree with me that the grant to the Orphanages was extended by the then British Government who thought that orphans belonged to the days of Oliver Twsit who needed very little food and no subsistence. The orphanages were given a grant at Rs. 3 per orphan in 1930's and it was very slowly at snail's speed increased to Rs. 6, then to Rs. 8 then to Rs. 10 and then to Rs. 12. Now we get Rs. 14. Just for the sake of economics, I would like to bring to the notice of our Hon. Finance Minister that there are about a dozen private Certified Schools catering to 3,000 children. Nearly Rs. 12 lakhs is given to 3,000 children belonging to a dozen certified schools for which the Home Department makes the provision. But the 390 institutions which look after 60,000 children get hardly a grant of Rs. 10 lakhs. In India all concerned are thinking of celebrating the International Children's Year in 1979 and the provision and planning for that is going to take place during 1978. I would like to state that there should not be any differentiation between one child and another. As prevention is better than cure, I hope that under our dynamic Finance Minister, a provision would be made where all children would be treated alike.

Thank you.

THIRU G. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, since you have reminded me regarding the time-factor, I want to finish as early as possible. Since I feel that I will be brief in English, I want to speak in English for a few minutes.

Sir, the first point which I want to mention is that the Excess Expenditure for 1970-71 is being ratified in 1978-79. The Excess Expenditure was incurred in 1970-71, the Public Accounts Committee took up the matter in 1974-75 and the Legislature is being asked to ratify it in 1978-79. Some items of expenditure may be routine ones, some items may not have been routine ones and the Public Accounts Committee might have found fault with some items of expenditure. Whatever it is, I do not understand why such a long time of nearly 7 or 8 years should be taken for this ratification. I would only suggest to the Hon. the Finance Minister that any kind of excess expenditure should be taken up by the Public Accounts Committee and also ratified by the Legis-

lature as quickly as possible, instead of 7 or 8 years being taken, because the findings of the Public Accounts Committee may not be very relevant after a period of time.

Secondly, I strongly oppose the Central levy on the State Electricity Board. Here, I wish to say that the Central levy has been imposed on the State Electricity Board because the Government of India have felt that the State Electricity Board is not getting enough amount, especially from the consumers. They wanted the State Governments to see that the State Electricity Boards were run on viable lines and also to have a tariff commensurate with the administration of the State Electricity Boards. The object of levy was that the money should be collected from the agriculturists. But from the speech of the Hon. the Minister for Electricity, I find that the Government have found it fit not to impose any levy on the agriculturists, for which I am thankful. But, the Government have to make the State Electricity Board somewhat viable because otherwise, the Government's money will get locked up. The State Electricity Board has become a white elephant. I would only wish to state that some measures of economy should be taken in respect of the State Electricity Board. Because the Hon. the Minister for Electricity is here, I wish to bring this to his knowledge. If the Electricity Board does not find itself in a profitable position, then it will have to levy excess tariff on the consumers. The very fact that the Government of India have imposed the levy shows that they want more tariff to be levied mainly on agriculturists.

Whatever it is, there is a lot of scope, according to me, to see that the State Electricity Board is run economically. Four or five years ago, when our former Chief Secretary Thiru P. Sabhanayagam was the Chairman of the Electricity Board, he submitted a paper to the Government stating that there were about 15,000 employees in the Electricity Board over and above the requirements. I would only request the Hon. Minister to see that economy measures are taken by the Board so that the tariff levied on the people may be as low as possible.

The third point is regarding the recent National Development Council meeting held this month at Delhi and which was attended by the Hon. the Chief Minister and by the Hon. the Finance Minister. Sir, I fully concur with the points expressed by the

Hon. the Chief Minister in the National Development Council meeting. Discussion is very much necessary before the National Development Council decides about plan requirements. It is a very important matter in which our State is also involved. There is no point in thrusting a particular Plan on the States. It has been happening in the past when the Chief Ministers in the States agreed to whatever was stated in the National Development Council. Now the Chief Ministers of the States have started to make their viewpoints known at the N.D.C. meeting just as we, Members in this House, have started to speak and clamour for various things. The Chief Ministers of West Bengal, Maharashtra and Kerala have been vocal in their protest. Our Hon. Chief Minister was sober and he has welcomed the rolling plan. I only wish to state that the rolling plan is very good and such a rolling plan is observed in industries. The rolling plan would mean that we take stock of the situation and then we formulate a plan for a concern for a period of 12 months. Formerly what they were doing was that though it was also an annual plan, the achievements were analysed after the end of the year and by the time they were tallied about, there would be no possibility to rectify the mistake found. Only to avoid such a contingency, rolling plan is observed in industries. According to me, the Hon. the Chief Minister has rightly welcomed the rolling plan and I also welcome the rolling plan of the Government of India.

Another point stressed by the Hon. the Chief Minister is regarding the achievement of the financial commitment. It is not sufficient to achieve financial commitment but it is necessary that it should be for the good of the people and larger financial allocations have been requested by the Hon. the Chief Minister for doing good to the people.

I only wish to point out one thing. Our Hon. Chief Minister has made many important points on behalf of this State regarding this matter. What has transpired at the N.D.C. meeting may be placed as a White Paper on the table of this House so that we may be able to know the points of view and the line of thinking of the Government on this matter. Previously when the then Hon. Chief Minister Dr. Karunanidhi returned after attending the N.D.C. meeting, my hon. Friend Thiru Damodaran and I requested him to place the facts before the Council and to place White Paper on the table of the House. Of course, he did not place any White Paper.

[Thiru G. Swaminathan] /1978 மார்ச் 27

but the Hon. the then Chief Minister gave us a brief summary of what had happened at the N.D.C. meeting. Our Hon. Chief Minister and Hon. Finance Minister have gone there to Delhi to attend the N.D.C. meeting, when the Legislature is in session. I hope the Hon. the Finance Minister will take the opportunity of giving us in formation about the N.D.C. meeting when he will be replying to the discussion on the Supplementary Budget so that we may know the view points of the Government.

Another point I wish to mention is in regard to plan policy. The N.D.C. has talked about various matters. But my only feeling is that the policy frame of the Sixth Plan is not being properly considered. The States are not very clear about the policy framework of the whole planning and every State has got its own view. Even in the matter of agricultural land reform, urban land ceiling, increase of income and its distribution, fiscal and monetary policies, every State Government has got its own view. Unless the State Governments and the Central Government have got an all-India policy frame, as it has been stressed by Thiru Gadgil then, merely having an objective and merely trying to achieve a target, will not serve any purpose.

(முற்பகல் 7.10)

Another point I wish to mention here is that the plan funds, as it has been advocated in the N.D.C. meeting, should be allotted not by the Planning Forum but by the Finance Commission. The Finance Commission has already started its work. There is no point in a part of the funds being given by the Planning Commission and a part of the funds being given by the Finance Commission. We do not know where we stand till the Seventh Finance Commission gives its report. I will recommend to the Government and request the Hon. the Chief Minister and the Hon. the Finance Minister to impress at the next meeting of the National Development Council—I do not know when it will be held; perhaps it may be at the end of the year—on the Government of India that the total funds that will devolve to the State should be given through a statutory body. I feel that the allocation of Plan funds should also be taken up by the Finance Commission.

Sir, much has been talked about the various powers of the State. Naturally, in such a meeting, the powers of the State have to be talked about. The Hon. the Chief Minister was supposed to [illegible] [illegible] which was conducted mainly by the Chief Minister of West

1978 மார்ச் 27/ [Thiru G. Swaminathan]

Bengal who is very vociferous on this point. I only wish that the Government should stress two points. The first point is about the fiscal powers that are very necessary for the State. I think that even the Centre-State Relations Committee which was set up by the Government has considered this. I feel that the Hanumanthaiya Committee also has spent a lot of its energy on the subject of fiscal powers. I hope that the Government will take it up appropriately both at the meeting of the National Development Council and at the meeting of Chief Ministers. Secondly, regarding State Plans, we have got a State Planning Commission here and there is no point in the Government of India giving various Plans to our State making the whole concept of our Planning Commission infructuous. Therefore, the total allotment of funds to the State may be done in a complete manner, so that through our State Planning Commission, we may be able to do whatever we may feel necessary, within the funds that may be available. Of course, they are not going to oblige us; but a point can be made by our Hon. the Chief Minister on this.

Sir, finally, I want to mention one more point regarding the Steel Rolling Mills in Tamil Nadu. I have made mention about this in the morning also during the discussion on the Policy Note on Industries, when the Hon. the Chief Minister was present here. I wish to point out that out of the 62 Steel Rolling Mills in Tamil Nadu, 32 Mills have already been closed down. It is said that there is sales tax here on the re-rolled products, that the Governments of Karnataka and Andhra Pradesh have waived it and that because of that the products are coming to Tamil Nadu from there. I would only request the Hon. the Finance Minister to look into this point because this is an industry where 10,000 people are employed and capital of about Rs. 10 crores has been employed.

Thank you.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு [illegible] மாண்புமிகு நிதியமைச்சர் [illegible] அவர்கள், மாண்புமிகு [illegible] இந்த விவாதத்தைத் [illegible] வேண்டும். [illegible] மாண்புமிகு [illegible] என்று [illegible]

[1978 மார்ச் 27

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த மேலவையில் போதுமான இடமில்லை. மேலவையில் அதிகாரிகள் உட்கார்ந்து கொண்டு பல்வேறு விவாதத்தின்போது எங்கள் பேச்சுக்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக்கொள்வதற்குக்கூட வசதி இல்லை.

(பிற்பகல் 7-20)

ஆகவே மேலவைக்கு இடவசதி செய்து கொடுக்க வேண்டும். என்ன காரணம் இருந்தாலும், உறுப்பினர்களுக்குச் சில பாதுகாப்புகள், உரிமைகள், வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். வசதிதான், சலுகை அல்ல. இந்தச் சட்டமன்றத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். அங்கே எல்லாம் உறுப்பினர்கள் ஜனநாயக கடமைகளை ஆற்றுவதற்கு அவர்கள் சில வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அவைகள் கிடைக்கிற பொழுது, தவறுகளுக்கு, குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாமல், உண்மையாக மக்களுக்குக் கடமையாற்ற வாய்ப்புக் கிடைக்கிறது. இவைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் செய்து தரப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை இங்கே உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு பகுதிகளுக்குப் போய் வந்த காரணத்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமைகள் எல்லாம் தெரியும். அதையெல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் கேட்கிறார்கள் என்று பாராமல் நிரந்தரமாக உறுப்பினர்களுக்குச் செய்து தரவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை அரசு மருத்துவமனைக்கு திடீரென்று விஜயம் செய்தார்கள். அங்கே முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. கக்கன் அவர்கள் தரையில் போடப்பட்டிருந்ததைக் கண்டார்கள். நாளைய தினம் அது சம்பந்தமான கொள்கைக் குறிப்பில் பேசலாம் என்று இருக்கிறேன். அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் என்ற முறையில் சில சலுகைகள் இருக்க வேண்டும். பதவியில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு என்ன வசதிகள் உள்ளதோ பதவி முடிந்த பிறகும் அவைகளை அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

என். ஜி. ஓ. வினர் போராட்டத்தையொட்டி முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். செக்ரட்டேரியட்டில் ஒன்பது அண்டர் செக்கரட்டரி பதவிகள் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த ஒன்பது பதவிகளும் வேறு பல துறைகளில் உள்ளவர்களுக்குத்தான் கிடைத்திருக்கின்றன. நம் சட்டப்பேரவையில் பணி புரிபவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. இன்று [illegible]

1978 மார்ச் 27] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

அது ஒரு ஆட்டானமஸ்பாடியாக இருக்கிறது. அதற்கும் நிதித் துறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவர்கள் எந்த போஸ்ட் வேண்டுமானாலும் கிரியேட் பண்ணிக் கொள்ளலாம். இங்கே கன்கரன்ஸ், கன்சன்ட், உங்களிடம் பெற வேண்டியிருக்கிறது. அவ்வளவு சுயேச்சையாக இயங்க முடியவில்லை.

அடுத்து, சில அமைச்சர்கள் வெளிநாடு சென்று வந்த குறிப்பைப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் அமைச்சர்கள் வெளிநாடு சென்று வருவதை இப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் மிகப் பெருங்குறையாக எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திரு. எட்மண்டு அவர்களும் வெளிநாடு சென்று வந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வெளிநாடு செல்லவிருக்கிறார்கள். மேல்நாடு செல்வது என்றால், அறிவை விருத்தி செய்துகொள்ள, புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காகத் தான். ஆனாலும் அன்றைய தினம் அதைப் பெரும் குறையாக எதிர்க் கட்சியாக இருந்தபோது சொன்னார்கள். இன்றைக்கு அதற்கான கூடுதல் செலவுக்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். நல்ல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, ஏர் பிரான்ஸ் சங்கத்திலிருந்து சிலர் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்தோம்பலுக்காக ரூ. 2.51 லட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை அவசியம் தானா, சிக்கனம் செய்திருக்கக் கூடாதா, டூரிஸ்ட் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் என்ன பணியாற்றியது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மற்றவைகளை அப்ரோபிரியேஷன் பில்லில் பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவர்களுக்குச் சலுகை என்பதல்ல. வசதிகள் செய்து தரப்பட வேண்டும். பதவிக் காலம் முடிந்த பிறகும், முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் சில வசதிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மேலவை புறக்கணிக்கப்படுகிற நிலைமை உருவாகக் கூடாது. இந்தத் துறைக்கு அமைச்சர் அவர்கள் பொறுப்புள்ள காரணத்தால், இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு கோரிக்கைகளுக்கு கேட்கிற செலவினங்கள் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிற சூழ்நிலையில் என்னுடைய கருத்தைச் சொல்லி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. இ. [illegible] : மேலவைத் [illegible] [illegible] அவர்கள், வேண்டுகோளை ஏற்று [illegible] தெளிவான கருத்துக்களை [illegible] முறையில் எடுத்துச்

சொல்லி உறுப்பினர்கள் எல்லாம் அமர்ந்துவிட்ட பிறகு, இந்த அவையின் நேரத்தை நான் அதிகமாக எடுத்துக் கொண்டால், அது ஒருவேளை உரிமை மீறல் ஆகுமோ என்ற அச்சத்தின் காரணமாக எனது பேச்சையும் சுருக்கமாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அமைச்சர் அவர்கள் அதிகமாகப் பேச வேண்டும் என்பதற்காக சுருக்கமாகப் பேசினேம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு இன்றைக்கு மாலை அதிகம் வேலை இல்லை என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், கொஞ்சம் கட்சி வேலை காத்திருப்பதால், அதற்கும் செல்ல வேண்டியிருக்கிறது என்பதால், நான் அப்ரோபிரியேஷன் பில்லில் பேசுகிறபொழுது, மிக விளக்கமாகக் கருத்துகளைத் தெரிவிப்பேன் என்ற உறுதியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே முதன் முதலில் இந்த 1977 - 78ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளைப் பற்றிய குறிப்பின் மீது நமது உறுப்பினர் திருமதி கிருஷ்ணமூர்த்தி பேசும்போது, அனாதைகளைப்பற்றி சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டில் எதுவுமே குறிப்பிடப்பட வில்லை என்று தெரிவித்தார். அனாதைகளைப்பற்றி அந்த அம்மையாருக்கு இருக்கின்ற அக்கறை எனக்குத் தெரியும். அவர்கள் எந்த அளவுக்கு சமூகப் பணியாற்றுகிறார்கள் என்பதையும் நான் அறியாதவன் அல்ல. அதற்குப் போதுமான அளவிற்கு நிதி வசதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வசதிகளைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் அம்மையாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார். அதில் ஒன்று, 1970-71 ஆம் ஆண்டு மிகைச் செலவு மானிய கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டார். 1970-71-ம் ஆண்டில் உள்ளதாயிற்றே, இப்போது 1978-ம் ஆண்டிலே கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறார்களே இவ்வளவு இடைவெளி எதற்காக, ஏன் ஏற்பட்டது, தேவை தானு என்று கேட்டார். நான் அதற்கு அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிற பதில், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பித்த ஆண்டு 1974 - 75. அதற்குப் பிறகு சட்டமன்றம் கூடவில்லை. 1976 முதல் 1—7—77 வரை [illegible] தெரியும், குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தது. ஆகவே புதிய சர்க்கார் பொறுப்பேற்ற பிறகு இந்த மிகைச் செலவு மானியக் கோரிக்கையை

வைக்க முடியுமே தவிர, மற்றபடி இடைப்பட்ட காலத்தில் வைக்க முடியவில்லை என்ற காரணத்தை நான் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு திரு. சுவாமிநாதன் அவர்கள் ரோலிங் மில்லைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 62 இயங்குகின்றன என்றும், 62ல் 32 ரோலிங்கில் இருக்கின்றன, மீதி ரோல் ஆகாமல் அமைதியாக இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக இதைப்பற்றி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று இந்த அரசு ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்கும். ரோலிங் மில் ஒன்றை தெரிவித்துக்கொண்டு, அப்படி திரு. சுவாமிநாதனுக்கு இருக்குமானால், ஆரம்பிக்க உத்தேசம் இருக்கும் என்பதையும் அதற்கு இந்த ஆட்சி உதவியாக இருக்கும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு திரு. சுவாமிநாதன் ஒன்றைச் சொன்னார்கள். நேற்றுப் டெவலப்மெண்டு கவுன்சிலில் என்ன நடந்தது, அதைப்பற்றி வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று சொல்லி, நமது இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படி [illegible] வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்று கேட்ட தாகவும், அதற்கு அன்றைய முதல்வர் அறிக்கை தாக்கல் செய்யாவிட்டாலும் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையே தொடர்ந்து நானும் செய்வேன் என்ற உறுதியை திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 27

கேட்டார். நான் பணிவன்புடன் திரு. சுவாமிநாதன் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டெல்லியில் போய்
அமைச்சர்களைச் சந்தித்துவிட்டு, ஹல்லோ, ஹல்லோ, என்று
சொல்லிவிட்டு வருகிற வேலை எனக்கோ முதலமைச்சருக்கோ
இல்லை என்பதையும், அழுத்தமாகப் பேசிப் பழக்கப்பட்ட
காரணத்தால், அழுத்தமாகப் பேச வேண்டியதைச் சொல்லி,
அதே நேரத்தில் உள்ளத்தில் பதிய வைக்கும் அளவுக்குச்
சொல்லி, இதைச் செய்யாவிட்டால் நிதி நிலை மிக நெருக்கடி
யாக மாறும் என்று சுட்டிக்காட்டி லெவியை ரீகன்சிடர்
செய்யக் கேட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 7-30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட
எடுத்துச் சொன்னார்கள். பெரும்பாலும் பல மாநிலங்களைச்
சேர்ந்தவர்களே இதை எதிர்க்கிறார்கள். கேரள மாநிலத்தைச்
சேர்ந்தவர்கள் எதிர்க்கின்றார்கள். எல்லா மாநிலத்தவர்களும்
எதிர்க்கின்றார்கள். இது கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்
பட்ட முறையிலே இருந்தது என்பதை என்.டி.சி. கூட்டத்
தில் கூட பார்த்தேன். நம் மின் துறை மத்திய அமைச்சர்
மாண்புமிகு திரு. ப. இராமச்சந்திரன் அவர்கள்கூட இதைப்
பற்றி மறுபரிசீலனை செய்வதாக இருக்கிறார்கள் என்று
சொல்லியிருக்கிறார்கள். நம் உரிமையை நாம் விட்டுக்கொடுக்க
மாட்டோம் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். தம்பி
தங்கப்பாண்டியன் அவர்கள் அங்கத்தினர்களைக் கொஞ்சம்
மரியாதையாக நடத்த வேண்டும் என்றும், எங்களுக்குப்
போதுமான அளவுக்கு உரிமைகள் வேண்டும் என்றும்
சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். நாம் ஒருவரையொருவர் பரஸ்பரம் உணர்ந்தவர்
களாகவும், ஒருவரையொருவர் புரிந்தவர்களாகவும்,
மனப்பான்மையைப் பெற்றவர்களாகவும் இருக்கிறோமே தவிர,
வேறு. அல்ல. இது இரண்டாவது சேம்பர், இதற்கு
மரியாதையே இல்லை, பேரவைதான் மதிக்கப்படுகிறது,
அங்குள்ள அங்கத்தினர்கள்தான் மரியாதைக்குரியவர்களாக
கருதப்படுகிறார்கள் என்ற கருத்துச் சொல்லப்படுகிறது.
அந்த மாதிரியான கருத்து இந்த அரசுக்கு இல்லை என்பதை
நிச்சயமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில்கூட
அங்கத்தினர்களாகி அமைச்சர்களாகியவர்கள் 4 பேர்கள்
இருக்கிறோம் என்பதையும் நான் தம்பி தங்கப்பாண்டியன்
அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட
நிலைமைகள் இருக்கும்போது, எப்படி நாங்கள் உங்களை
அவமரியாதையாக நடத்த முடியும் என்பதை எண்ணிப்

1978 மார்ச் 27] [திரு. கி. மனோகரன்]

பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு
ஒரு நிகழ்ச்சியைப் பற்றி திரு. தங்கப்பாண்டியன் அவர்கள்
எடுத்துச் சொன்னார்கள். முன்னாள் அமைச்சர் திரு. சுக்கின்
அவர்கள் நடத்தப்பட்ட விதம் பற்றிச் சொன்னார்கள்.
அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்திருந்தால், அதைப்பற்றி நமது
முதலமைச்சர் அவர்கள் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்கள்
மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்களும் வேதனைப்படாமல் இருக்க
முடியாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்
சரி, மனிதாபிமான உணர்ச்சியோடுதான் இருக்க வேண்டும்.
இந்த அரசு அப்படித்தான் இயங்கும், காழ்ப்புணர்ச்சியோடு
அல்ல என்பதை நெஞ்சத்திலே கொண்டுதான் நாங்கள் பணியாற்று
கிறோம் என்பதைத் தம்பி தங்கப்பாண்டியன் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்
னார்கள், பசிபிக் ஏர் பிரான்ஸ் சங்கத்தைச் சேர்ந்த
இரண்டாயிரம் அங்கத்தினர்கள் இங்கே வந்தார்கள். அவர்
களுக்கு என்று செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 2,51,000
என்று குறிப்பிட்டுச் சொல்லி, இவ்வளவு செலவு தேவை
தானா என்றும் கேட்டார்கள். சாப்பாட்டிற்காகவும், ஓட்டலிலே
தங்குவதற்காகவும் மட்டும் ஆன தொகையல்ல இது என்பதை
யும், அவர்களுக்கு என்று சமர்ப்பிக்கப்பட்ட மெட்டிரியல்ஸ்
களுக்காகவும் செலவழிக்கப்பட்ட தொகை என்பதை நினை
விலே கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
ஒரு சிறிய மகாநாடு நடத்துகிறபோதுகூட பல லட்சக்
கணக்கான ரூபாய்களைச் செலவழித்துப் பழக்கப்பட்டவர்களுக்கு
இது ஒரு பெரும் தொகையாக எப்படிப்பட்டது என்பதை நான்
நினைத்துப் பார்க்க முடியவில்லை. வந்தவர்கள் அனைவரும் வெளி
நாட்டிலேயிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு ஓரளவுக்கு நல்ல
விருந்து வழங்கியிருந்தால், அது நம்முடைய பெருமையைக் கூட்டு
வதற்கும் வளர்ப்பதற்கும் பயன்படுமே தவிர வேறு அல்ல.
இவ்வளவு தொகையை ஒதுக்கி, இதற்குச் செலவழிக்கலாமா
என்று அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து கருதக்கூடாது என்று
கேட்டுக்கொள்கின்றேன். இது அவ்வளவு பெரிய தொகையல்ல
என்பதையும், சராசரியாக ஒருவருக்கு ரூ. 100 என்ற அளவுக்குத்
தான் செலவுக் கணக்கு வருகிறது என்றும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இரண்டாயிரம் பேர்கள்
பசிபிக் ஏர் பிரான்ஸ் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்
கள் என்ற அந்த எண்ணிக்கை தெரிந்திருந்தால், நான் அந்தக்
கேள்வியை எழுப்பியிருக்க மாட்டேன் என்று சொல்லிக்கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : விளக்கம் சொன்ன பிறகு அதை ஏற்றுக்கொள்கின்ற மனதைப் படைத்தவர்கள் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் என்பது எனக்குத் தெரியும். இது புதியதல்ல. ஏற்கெனவே அந்த மனதைப் படைத்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்குத் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுக்கு நன்றி. இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்ன அங்கத்தினர்களுக்கும் என் நன்றியைக் கூறி முடித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 7-35)

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

280 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தொழில்துறை கொள்கை விளக்கக் குறிப்பு

தொழில் வளர்ச்சிக் கொள்கை

கடந்த இருபது ஆண்டுகளாக இந்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்த கொள்கை, 1956-ம் ஆண்டு தொழில் கொள்கைத் தீர்மானத்தை ஒட்டி அமைந்துள்ளது. இந்தக் கொள்கைத் தீர்மானத்தில் பல கூறுகள் இன்றுகூட செல் திறன் உள்ளவையாக இருந்தபோதிலும், இக்கொள்கை, சமூகநீதி, பொருளாதார வளம் மக்களிடையே பரவலாக்கு தல் போன்ற நோக்கங்களை முழுவதும் எய்தவில்லை என்று உணரப்பட்டது. தொழிற்சாலைகளை பெருமளவில் சிற்றூர் களிலும், சிறு நகரங்களில் பரவலாக அமைப்பதற்கும் பெரு வாரியான மக்களின் கையில் செல்வம் போய்ச் சேருவதற்கும் வழிகோலும் நோக்கத்தோடு அண்மையில் மத்திய அரசு புதிய தொழில் கொள்கையை அறிவித்தது. குடிசைத் தொழில், சிறுதொழில், கிராமத் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதே இப்புதிய கொள்கையின் தலையாய நோக்கமாகும். மாநில அரசின் தொழிற்கொள்கையும் மத் திய அரசின் கருத்துக்களோடு பொதுவாக ஒத்திருக்கின்றது. முன்னிலும் அதிகமான பொருட்களை உற்பத்தி செய்வதை சிறுதொழில், குடிசைத் தொழில், கிராமத் தொழில் துறைக்கு ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரி வுரை செய்யப்பட்டது. மத்திய அரசு, அண்மையில் மொத்தம் 504 உற்பத்திப் பொருட்களை சிறு தொழில், கிராமத் தொழில், குடிசைத் தொழில் துறைக்கு ஒதுக்கும் தனது கொள்கையை அறிவித்தபோது, தமிழ்நாடு அரசின் பரிவுரைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறு தொழில், கிராமத் தொழில் துறைகள் வளர்ச்சி மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகையில், பெரிய தொழில்கள் வளர்ச்சியைப் புறக்கணித்துவிடக்கூடாது. பெரிய தொழில்கள் சிறிய தொழில்களுக்கு ஆதரவு துணைத் தொழில்கள் (ancillaries) என்ற முறையில் ... களாக இயங்கமுடியும்; மேலும் அவை அடிப்படைப் பொருட்கள், தொழிற்சாலை கச்சாப் பொருட்கள், மூலப் பொருட்கள் இயந்திர உயர் தொழில் நுட்பம் வாய்ந்த பொருட்கள் முதலியவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்து சிறு தொழில்கள் அவற்றைப் பயன்படுத்தவும் உதவுகின்றன.

[1978 மார்ச் 27

பெரும் நகர்களில் மேலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் படுவதை தடுப்பதற்கும், தொழிற்சாலைகளை மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாக ஏற்படுத்த இயலுவதற்கும் வழிவகுக்கும் பொருட்டு, 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள பெருநகர்களில் தொழிற்சாலைகளைப் புதிதாக ஏற்படுத்துவதற்கு உரிமங்கள்வழங்கலாகாது என்றும் மத்திய அரசு தீர்மானித்துள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகளையும் கடுமையான நடைமுறைகளையும் தளர்த்தும் நோக்கோடு, தற்போதுள்ள நடைமுறைகளை எளிதாக்குவதற்கும், உரிமங்கள் வழங்குவதிலுள்ள இடர்பாடுகளை நீக்குவதற்கும், ஏற்றுமதி, இறக்குமதி, கம்பெனி விவகாரங்கள் ஆகியவை குறித்தும் கருத்துரை வழங்க பல குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. உரிமம் வழங்கும் துறைகளையும், நிதி வழங்கும் நிறுவனங்களையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்தல், குறிப்பிட்ட காலக் கடன்களை வழங்க அரசு நிதிவழங்கு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரங்களை அளித்தல், உரிமங்களையும், அனுமதிக் கடிதங்களையும் தொடர்ந்து ஆய்வு செய்தல், உரிமம் வழங்கப்படவிருக்கும் நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதில் வங்கிகளும், நிதிவழங்கு நிறுவனங்களும் இணைந்து செயல்படுதல், சிறுதொழில்களுக்கு விற்பனை வசதி உதவியைச் செய்து கொடுக்கும் மாநில அரசின் கழகங்களை சப்ளைஸ்-டிஸ்போஸல்ஸ் தலைமை இயக்குநர் அலுவலகம் தாமாகவே பதிவு செய்து கொள்ளுதல் ஆகியவை குறித்து இந்த அரசு கருத்துரை வழங்கியுள்ளது. ஏற்றுமதி-இறக்குமதி பற்றிய விதிமுறைகள் தளர்த்தப்பட்டு சிறுதொழில்கள் மாவட்ட அளவிலும், பெரிய தொழில்கள் மாநில அளவிலும் வேண்டிய அனுமதிகள் பெற ஏற்ற முறையில் விதிமுறைகளைத் திருத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கருத்துரை வழங்கியுள்ளது. பெருவாரியான மக்களுக்குச் சுய வேலை வாய்ப்புக்கான ஆதாயந்தரத்தக்க வழிகளுக்கு வகை செய்யும் சிறுதொழில்களும், கிராமத் தொழில்களும் மாநிலத்தின் பொரு[illegible]தாரத்தில் [illegible]க்கிய பங்கு வகிக்கின்றன. 6,400-க் [illegible] தொழில்களும், 8,600-க்கு மேற்பட் [illegible] த்துவோரும் ஜூலை 77 முதல் டி[illegible] [illegible]ாத காலத்தில் வணிக வங்கிகளின் [illegible] மொத்தம் 27 கோடி ரூபாய்க்கு [illegible] வியினால் 40,000 பேர்களுக்கு மேல் வேலை [illegible] ள் என்று நம்பப்படுகின்றது.

1978 மார்ச் 27]

சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படுவதற்காக ஒதுக்கப் பட்டுள்ள பட்டியலில் முன்பு உள்ள சுமார் 180 இனங்களின் எண்ணிக்கையை 504 ஆக இந்திய அரசு உயர்த்தியுள்ளது. ஒதுக்கப்பட்டுள்ள கூடுதல் இனங்களை உற்பத்தி செய்யக்கூடிய முறைகள் குறித்து ஆய்வு செய்யவும், அத் தொழில்களைத் தொடங்குவதில் அக்கறை காட்டும் தொழில் முனைவர்களுக்கு உதவி புரிவதற்காக திட்ட விவரங்களைத் தயாரிக்கவும், தொழில் வணிகத் துறையும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வர். சிறு தொழில் தொடங்குவோருக்கு தக்க ஆலோசனைகள் கூறி அவர்கள் வாங்கவேண்டிய இயந்திரங்கள், விற்பனை வசதி பற்றிய விவரங்கள் ஆகியவற்றை எடுத்துரைத்து, நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்றுத்தருவது போன்ற எல்லா வசதிகளையும் ஒருங்கிணைத்து செயல்படும் நோக்கத்துடன் மாவட்டங்கள் தோறும் மாவட்ட தொழில் மையங்களை அமைக்க எண்ணியுள்ளோம். வரும் ஆண்டில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி சேலம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இவை அமைக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத்துறை, கதர் கிராமத் தொழில் வாரியம் போன்ற அமைப்புகளின் அலுவலர்களை ஒரே இடத்தில்கொண்டதாக இந்தமையங்கள் உருவாக்கப்படும்.

தொழில் துறையில், தொழிற்சாலையை உருவாக்குவது, மேம்படுத்துவது, அதற்கு வேண்டிய நிதிக்கு வகை செய்வது, அடிப்படைத்தேவைகளை மேம்படுத்துவது ஆகியவையே அரசின் முக்கியமான பணிகளாகும். இத்தகைய நோக்கங்களை எய்துவதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில் மேம்பாட்டு அமைப்புகள் பல அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகளில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மிகவும் முக்கியமான ஒன்றாகும். சிறு தொழில் வளர்ச்சிக்கான எல்லா உதவிகளையும் இது அளிக்கிறது. மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டி.ஐ.ஐ.சி.) சிறு தொழில் திட்டங்களுக்கும், நடுத்தரத் தொழில் திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்கும் நிறுவனமாகும். தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) நடுத்தர, பெருந்தொழில் திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு அடிப்படைத் தேவைகளை உருவாக்கி திட்டங்களை நிறைவேற்றுவதில் எல்லா உதவியையும் அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறை நிறுவனங்களை நிர்வகிப்பதுடன் கூட்டுத்துறை நிறுவனங்களையும் ஊக்குவிக்கிறது.

1975ஆம் ஆண்டு தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (அடிப்படை ஆண்டு 1970-100) 137·66 ஆக இருந்தது. இது 1977 செப்டம்பரில் 142·9 ஆக (தற்காலிகமானது) இருந்தது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும், அத்தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் கீழே உள்ள விவர அட்டவணை காட்டும்:—

ஆண்டு.	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.	தொழிலாளர்களின் எண்ணிக்கை.
1973	6,816	4,53,000
1974	6,985	4,98,804
1975	7,408	4,99,672
1976	8,196	5,04,899
1977	8,508	5,23,233

தொழில்களின் வளர்ச்சி பெரும்பாலும் மின் உற்பத்தி வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் தொழிற்சாலைகள் பயன்படுத்திய மின் சக்தியின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளது:—

ஆண்டு.	மில்லியன் யூனிட்டுகள்.
1972-73	2,463.469
1973-74	2,338.625
1974-75	2,402.284
1975-76	3,059.252
1976-77 — — — —	3,051.354

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் பதிவு செய்யப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையிலிருந்து தெரிய வரலாம் :—

ஆண்டு.	நிறுவனங்களின் எண்ணிக்கை.		அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம். (ரூபாய் இலட்சத்தில்.)	
	அரசுத் துறை.	தனியார் துறை.	அரசுத் துறை.	தனியார் துறை.
1972-73	20	166	1,381	11,616
1973-74	37	210	3,342	1,926
1974-75	32	268	3,599	3,706
1975-76	29	184	2,748	1,808
1976-77	13	173	691	1,578
1977-78	12	145	533	1,152

தொழில் முதலீடுகளுக்கு உதவித் தொகை வழங்கும்
திட்டம் மூலம் நடப்பாண்டில் சிறு தொழில்கள் பெருமளவில்
பயனடைந்தன. 1976-77-ல் 156 சிறு தொழில்களே
பயனடைந்து ரூ. 38·83 இலட்சம் பெற்றன. ஆனால்
1977-78—ல் 233 சிறு தொழில்களுக்கு ரூ. 57·34 இலட்சம்
மானியமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் செயலாக
விவரங்கள் இணைப்பு9-ல் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல்
1977-78 ல் ரூ. 99·08 இலட்சம் விற்பனை வரிக்கடனாக 18
தொழில்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் முந்தைய ஆண்டில்
ரூ. 79.44 இலட்சம்தான் விற்பனைவரிக் கடனாக 15 தொழில்
களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய தொழில் வளர்ச்சி
1978-79-லும் தொடரும் என்று கருதப்படுகிறது. விற்பனை
வரிக்கடன் திட்டத்தினை விரிவுபடுத்த சில மாற்றங்களை
செய்யவும் அரசு பரிசீலித்து வருகிறது.

[1978 மார்ச் 27

தொழில்-வணிக இயக்குநரகப் பணிகள்

பொதுவாக தொழில்களையும் குறிப்பாக, சிறு தொழில்களையும் வளர்ப்பதற்கான அரசுத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு-தொழில் வணிக மாநில இயக்குநர் அலுவலகம் முகவரமைப்பாகச் செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாநில அரசு, வங்கிகள், ஏனைய முகவரமைப்புகள் ஆகியவற்றிலிருந்து நிதி உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றை சிறு தொழில்கள் பெருவதற்கேற்ப, அவற்றைப் பதிவு செய்தல், தொழில் நுட்பத் தகவல் அளித்தல், நிதி உதவி, பயிற்சி, பழுதுபார்க்கும் வசதிகள் ஆகியவற்றை தனது பல்வேறு பிரிவுகள் மூலம் அளித்தல், தொழில்களைத் தொடங்குவதற்கான திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், அத்தகைய தொழிற் கூட்டுறவுகளுக்கு நிதிஉதவி, அங்காடி வசதி, ஏனைய வசதிகள் ஆகியவற்றை அளித்தல், வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்ய ‘‘இன்றியமையாமை சான்றிதழ்’’ வழங்குதல் மாநிலத்தின் கனிவளத்தை ஆய்வு செய்தல், மாநிலத்தில், பெரிய உப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காக உப்பு—அதனைச் சார்ந்த பொருட்களுக்கான தொடக்க ஆய்வுகளை நடத்தல், கிராமப் பகுதிகளில் சிறு தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராம தொழில் திட்டத்தைச் செயல்படுத்துதல் முதலியவற்றை தொழில்—வணிக மாநில இயக்குநர் அலுவலகம் கவனித்து வருகிறது.

தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பணி

2. தொழிலதிபர்களுக்கும், தொழில் முனைவர்களுக்கும் தொழில் நுட்ப நூலகங்கள் மூலம் தகவல் வழங்குவதற்காக, நூலகத்துடன் கூடிய தொழில் நுட்பப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவில், தேவையான புத்தகங்கள் அடங்கிய நூலகம் ஒன்றும், நூல் வெளியீடு பிரிவு ஒன்றும், மொழி பெயர்ப்புப் பிரிவு ஒன்றும், தொழில் நுட்பத் திரைப்படங்களைத் திரையிடுவதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் அரங்கு ஒன்றும் உள்ளன. கிண்டி, தொழில் நுட்பத் தகவல் வழங்கும் பிரிவின் துணைப்பிரிவாக செய்திச் கருள் பிரிவு ஒன்றும் நிலையான பொருட்காட்சி

1978 மார்ச் 27]

ஒன்றும் இயங்கி வருகின்றன. மதுரை, பேட்டை, அம்பத்
தூர், காட்பாடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம்
ஆகிய ஊர்களிலுள்ள தொழில் நுட்பத் தகவல் வழங்கும்
பிரிவுகள், அவற்றோடு இணைந்துள்ள நூலகங்கள் மூலம்,
தொழிற்பேட்டைகளிலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள
தொழிலதிபர்கள், தொழில் முனைவர்கள் ஆகியோருக்கு மேற்
சொன்ன அதே வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. இப்
பிரிவுகள் அனைத்திலும், நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும்
தொழில் நுட்பம் குறித்து வெளியிடப்பட்ட வெளியீடுகள்
உள்ளன. மேலும் இந் நூலகங்களில் ‘சிப்காட்’ ‘சிட்கோ’
போன்ற அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்த
பத்திரிக்கைகளும் சிறு வெளியீடுகளும், தொழில் முனைவர்களுக்
கான திட்ட அமைப்பு, செய்தி அறிவிப்பு ஆகியவைகளும்
உள்ளன.

தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி

3. பொறியியலில் பட்டமும், தகுதிப்பட்டயமும் பெற்றவர்
கணுக்கும், தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்
களுக்கும் சிறப்புப் பயிற்சியை இந் நிலையம் அளிக்கிறது.
வார்ப்புரு வடிவமைப்பு, அச்சுவார்ப்பு, கருவிகள் செய்தல்
உலைக்களத்தில் உருக்கைக் காய்ச்சி அடித்தல், இயந்திரங்களை
இயக்குதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது பட்ட
தாரிகளுக்கும், தகுதிப் பட்டயதாரர்களுக்கும் முறையே
திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயும் 75 ரூபாயும் பயிற்சி உதவித்
தொகை அளிக்கப்படுகிறது: பட்டதாரிகளுக்கும், தகுதிப் பட்
டயதாரர்களுக்கும் இப்பயிற்சிக் கால அளவு ஒவ்வொரு
தொகுதியினருக்கும் 12 மாதங்களாகும்; தொழில் பயிற்சிநிலைய
சான்றிதழ்தாரர்களுக்கு 18 மாதங்களாகும். புதிதாக குளிர்
பதனம், சீர்வெப்பொறியியல் பாட முறை 15 மாணவர்களைக்
கொண்டு 1976ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் தொடங்
கப்பட்டது மின் அணுவியல் கருவிகள் தயாரிப்பு பாடமுறை
1977ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தொடங்கப்பட்டது.
1977–78 ஆம் ஆண்டில் பல்வேறு தொழில்களில் மொத்தம்
90 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

கருவிகள் வார்ப்புரு தயாரிப்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல்

4. பல்வேறு பொறியியல் பிரிவுகளுக்குத் தேவைப்படும்
கருவிகள், வார்ப்புக்களை, குறிப்பாக, பூட்டுக்களை வடிவமைத்
துத் தயாரிப்பதில், ஒவ்வோர் ஆண்டும் மூன்று

தொகுதியினருக்கு தொகுதி ஒன்றில் 22 மாணவர்களுக்கு புத்தகக் கல்வி, செய்முறைப் பயிற்சி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சியை இந்நிலையம் அளித்து வருகிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். இப்பயிற்சி நிலையத்தில் சேருவதற்குத் தேவையான குறைந்த அளவு கல்வித் தகுதி பள்ளியிறுதித் தேர்ச்சியாகும். இதுவரையில் 189 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கருமார், தச்சர் தொழிற்பிரிவு, அரக்கோணம்

5. இத் தொழிற் பிரிவு அரக்கோணத்திலும், அதனைச் சுற்றி யுள்ள பகுதிகளிலும் கருமார், தச்சுத் தொழிலில் பயிற்சி அளிப்பதோடு பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வசதி களையும் அளிக்கிறது.

மின்சார—மின் அணுவியல் பிரிவு

6. மின்சார, மின் அணுவியல் தொழில்களின் வளர்ச்சியோடு தொடர்புடைய நடவடிக்கைகள் அனைத்தும் இப்பிரிவில் கவனிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவு, 1972 ஆம் ஆண்டி லிருந்து செயல்பட்டு வருகிறது. மிகு நேர்த்தியான பொருட்களைத் தயாரிக்க சிறந்த தகுதி பெற்ற விஞ்ஞானி களும், பொறியாளர்களும் சிறிய தொழிற்பிரிவுகளில் தயாரிக்க இப்பிரிவு தக்க ஆலோசனை வழங்கி உதவி வருகின்றது.

7. **சோதனையிடுவதற்கான வசதிகள்.** (அ) காக்கலூரில் அமைக்கப்பட்டுள்ள மத்திய மின்சார ஆய்வுக்கூடம், மின் சாரப் பொருட்கள், இணைபொருட்கள், துணைப் பொருட்கள். துணை முறைகள் ஆகியவற்றை ''தயாரித்தபிறகு'' சோதனையிடு வசதிகளைச் செய்துகொடுக்கிறது. சோதனைச்சான்றிதழ்களை வழங்குவதற்காக இந்த ஆய்வுக்கூடம் இந்திய தர நிர்ணய நிறுவனத்தாலும். ரயில்வேயாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மின் விசிறிகளைச் சோதனையிடும் அறைகளைக் கொண்ட இது இந்நாட்டிலுள்ள சோதனையிடு ஆய்வுக்கூடங் களில் சிறந்த ஒன்றாகும். 1977–78ஆம் ஆண்டில் 30-11-1977 ஆம் நாள் வரையில் 318 மாதிரிகள் முழுவதும் சோதனை யிடப்பட்டு தேவையான சோதனையிடு சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. இவற்றின்மூலம் சோதனையிடு கட்டணமாக ரூபாய் 32,488 வருவாய் கிடைத்தது.

(இ) மின்அணுவியல் தொழிற்பிரிவுகளுக்கான சோதனையிடு சான்றிதழ்—உற்பத்தி வசதிகளுடன் கூடிய சோதனைச் சான்றிதழ்—உற்பத்தி வளர்ச்சி மத்திய ஆய்வுக்கூடம் ஒன்று அடையாறு மின் அணுவியல் கருவிகள் தொழிற்பேட்டையில் உள்ளது. சோதனையிடு சிறப்புக் கருவிகளை வாங்குவதற்காக 15·91 இலட்சம் ரூபாயை மத்திய அரசைச் சேர்ந்த மின் அணுவியல் துறை வழங்கியுள்ளது.

மின்சார மின்னணுவியல் தொழில் குறித்த புள்ளி விவரங்கள் தொகுப்பு நிலையம்.

8. இம் மாநிலத்திலுள்ள மின்சார, மின்னணுவியல், கருவிகள் தயாரிப்புத் தொழில்கள் குறித்த தகவலைச் சேகரிப்பதற்கான புள்ளி விவரத்தொகுப்பு நிலையம் ஒன்று அடையாறு, மின்னணுவியல் கருவிகள் தயாரிப்புத் தொழிற்பேட்டையில் (Instrument) அமைக்கப்பட்டுள்ளது. இது இத்துறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், இன்றி யமையாத அடிப்படை வசதிகள், பொதுவான வசதிகள் ஆகியவை குறித்துத் திட்டமிடுவதற்கான தகவலை அளிக்கும் நிலையமாகச் செயல்படுகிறது. எல்லாத் துறைகளையும் சேர்ந்த 1,800-க்கும் அதிகமான தொழிற் பிரிவுகளிலிருந்து ஏற்கனவே தகவல் சேகரிக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற் காகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மின்சார—மருத்துவக் கருவிகளுக்கான பணி நிலையங்கள்.

9. மின்சார—மருத்துவக் கருவிகளைச் செப்பனிடுவதற்கான பணி நிலையம் ஒன்று கிண்டியிலும், தஞ்சாவூர், மதுரை ஆகிய ஊர்களில் துணை நிலையங்கள் இரண்டும் மொத்தம் சுமார் 16·00 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. தஞ்சாவூரிலுள்ள துணை நிலையம், 1976–77 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டத்தின்கீழ் மேலும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது. இப்பணி நிலையங்கள், இம் மாநிலத்திலுள்ள மருத்துவ, கால்நடை மருத்துவ ஏனைய நிலையங்களின் 20,000-க்கு மேற்பட்ட கருவிகளை இதுவரையில் பழுதுபார்த் துள்ளன. இந்த வகையில் 23·98 இலட்சம் ரூபாய் மொத்த மதிப்புள்ள பழுதுபார்க்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டன. கோயம்புத்தூரிலுள்ள பிறிதொரு நிலையம் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள நிலை யங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதோடு, இதேபோல் ஒரு நிலையத்தைத் திருநெல்வேலியில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்னணுவியல் கருவிகளைச் சோதனையிடுதல், சான்றளித்தல் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்கான நிலையம், மதுரை

நடைமுறையில் உள்ள தரங்களுக்கு இணங்க " உற்பத்திக்குப் பிறகு " சோதனையிடுதல், சான்றளித்தல், உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றிற்காக, மதுரை, தொழிற்பேட்டையில் மின்னணுவியலுக்கான ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனை கப்பலூர் தொழிற்பேட்டைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந் நிலையம் இதுவரையில் 31-12-77 முடிய 50 மாதிரிகளைச் சோதனை செய்துசான்றளித்துள்ளது.

தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம்.

10. இம் மாநிலத்தில் மின் அணுவியல் தொழில்கள் வளர்ச்சியடைவதை விரைவுபடுத்தும் நோக்கோடு தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய பணிகள் பற்றி, மின்னணுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கலந்து பேசப்பட்டது. அரசுத்துறைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள பொருட்களை உற்பத்திசெய்வதை இந்நிறுவனம்மேற்கொள்வது நலம் பயக்கும் என்று கூறப்பட்டது. தொழில் கல்வி அறிஞர்கள் இந்நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் மற்ற தொழில் அறிஞர்களுடன் கலந்துபேசி, ஒரு சில சிறப்புப் பொருட்களை உற்பத்தி செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். வரும் ஆண்டில் இதற்கான நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும்.

மின் அணுவியல் சிறு தொழிற்பிரிவுகள்.

11. இந்த நிதியாண்டில் தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, அல்லது விரிவுபடுத்தப்பட்ட மின் அணுவியல் சிறுதொழில்கள் எண்ணிக்கை 46 ஆகும். 1978-79ஆம் ஆண்டு முடிவில் மின்அணுவியல் சிறுதொழில்களின் உற்பத்தி ரூ. 8 கோடியளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டிற்குள் மேற்கண்ட மின்னணுவியல் சிறுதொழில்கள் 1,585 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். மேலே குறிப்பிட்டவைகளைத் தவிர, 35 நுண்திறம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள் ஏற்கெனவே பரிசீலிக்கப்பட்டு, அவைகளுக்கான தொழிற் பிரிவுகள் அமைக்கும் தருவாயில் உள்ளது. இதனால் 1978-79 ஆம் ஆண்டுமுடிவில் 500 பேர்களுக்கும்1979-80ல் மேலும் 500 பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இரசாயன சோதனை பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

இடங்களிலுள்ள
12. கிண்டி, கோவை, மதுரை ஆகிய அறிவியல் ஆய்வுக்
இரசாயன சோதனை—பகுப்பாய்வு மூலப்பொருட்கள்,
கூடங்கள், பல்வேறு வகை
ஆகியவற்றைச் சோதனை
உற்பத்தியான பொருட்கள் பொறியியல் தொழில்
யிட்டு இரசாயன, உலோக, செய்து வருகின்றன.
களின் தேவையைப் பூர்த்தி கட்டணங்களில் 50
சிறுதொழில் பிரிவுகளுக்குச் சோதனைக் இந்திய தர நிர்ணய
சதவீதம் சலுகையளிக்கப்படுகிறது. சான்றிதழ்
சான்றிதழ் அடையாளக் குறியீடு திட்டத்தின்கீழ் சதவீதம் சலுகை அளிக்
பெறும் தொழிற்சாலைகளுக்கு 33.1/3 1977–78ஆம் ஆண்டில்
கப்படுகிறது. இந்த ஆய்வுக் கூடங்கள் மாதிரிகளைச் சோதனையிட்டு
31–12–1977 வரையில் 4,173 இதன் மூலம் கட்டணமாக
பகுப்பாய்வு செய்துள்ளன. சேலத்தில் உள்ள சவ்வரிசி
1,46,400 ரூபாய் பெற்றுள்ளன. சவ்வரிசிஸ்டார்ச்பொருட்களை
ஆராய்ச்சிஆய்வுக்கூடம்தரமானசவ்வரிசிஸ்டார்ச்பொருட்களை இந்திய தர
உற்பத்தி செய்வதற்கு உதவி புரிகிறது. படி, ஸ்டார்ச்,
நிர்ணய நிலையத்தின் வரையறைகளின் செய்வதற்கான சோதனை
சவ்வரிசிஆகியவற்றைப் பகுப்பாய்வுசெய்வதற்கான பல்வேறு மாதிரிகளைச்
யிடு வசதிகளையும் அளிப்பதோடு, இந்த ஆய்வுக்
சோதனையிடும் பணியையும் மேற்கொள்கிறது. நாள்வரையில்
கூடம்1977–78ஆம் ஆண்டில் 31–12–1977ஆம் அவற்றின்மூலம்
370 மாதிரிகளை பகுப்பாய்வு செய்து ஈட்டியுள்ளது.
சோதனைக் கட்டணமாக 3,490 ரூபாயை

இரசாயனப்
தூத்துக்குடியிலுள்ள உப்பு—கடல்படு உப்பு உற்பத்தியை
பொருட்கள் ஆராய்ச்சி நிலையம், உப்புத்தொழிற்சாலைக்கு
அளவிலும்தரத்திலும் உயர்த்துவதில் உப்பு—கடல்படு இரசா
உதவுகிறது. பவநகர், மத்திய நெருங்கிய உடனுழைப்
யனப் பொருட்கள் தொழிற்சாலையில் இரசாயனக்பொருட்கள்
புடன்தூத்துக்குடி, உப்பு—கடல்படு நடத்தக் கருதப்பட்
மாநில ஆராய்ச்சி நிலையத்தை
டுள்ளது.

புள்ளி விவரங்களையும்
13. இரசாயனத் தொழில்கள் குறித்த சேகரிப்பதற்காக கிண்டியில்
தொழில்நுட்பத் தகவல்களையும் நிலையம் ஒன்று செயல்பட்டு
புள்ளி விவரத்தகவல் தொகுப்பு வரையில், இந்நிலையம் 484
வருகிறது. 1977, டிசம்பர் அமைப்புகள குறித்தும்
இனங்கள் குறித்தும் 33 திட்ட வழங்கியுள்ளது.
தொழில்நுட்ப ஆலோசனை

14. இரசாயனப் பிரிவு, பராபின் மெழுகு, தீக்குச்சி மெழுகு
பொருட்களைக் கொள்முதல் செய்வதில் சிறு தொழில்களுக்கு
அவசியமான உதவி செய்கிறது. இப்பிரிவு, இரசாயனத்
தொழில்களைத்தொடங்குவதற்குத் தொழில் முனைவர்களுக்குத்
தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது. மேலும், தொழிற்
சாலைகள் குறிப்பாகக் கேட்டுக் கொள்வதன் பேரில் இப்
பிரிவு இரசாயன தொழிற்சாலை முன்னோடி ஆய்வுகளையும்
மேற்கொள்கிறது. சிறு தொழில் பிரிவுகள், தங்களது
உரிமங்களையும், உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து
மூலப்பொருள் ஒதுக்கீட்டையும் பெறவியலும் வகையில்
இந்த இரசாயன பிரிவு பூச்சிக் கொல்லிமருந்து உற்பத்தித்
திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

மட்பாண்டப் பயிற்சி நிலையம்.

15. விருத்தாசலம், மட்பாண்டத் தொழிற் பயிற்சி நிறுவனம்,
மட்பாண்டத் தொழில் நுட்ப நிறுவனம் என்று மாற்றி
பெயரிடப்பட்டது. இந்நிறுவனம் 15 மாணவர்களுக்கு
நான்காண்டுக் காலப் பயிற்சி வகுப்பு நடத்துகிறது. வணிகத்
தொழில் பிரிவுகளில் அளிக்கப்படும் ஓராண்டு பயிற்சியும்
இப்பயிற்சிக் காலத்தில் அடங்கும். முதல், இரண்டாம் ஆண்டு
மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 75-ம், மூன்றும்,
நான்காம் ஆண்டு மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு
ரூ. 100-ம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பிற
மாநிலஅரசுகள், மட்பாண்டத் தொழிற்சாலைகள், மட்பாண்டத்
தொழிலில் ஈடுபட்டு வரும் பிற நிறுவனங்கள்
ஆகியவற்றோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து இடங்கள் உட்பட,
பயிற்சி உதவித்தொகை இல்லாமல் பயிற்சி பெறுவதற்காக
மேலும் பத்து மாணவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.
மூலப்பொருட்களையும் வேலை நிறைவுபெற்றபொருட்களையும்
சோதித்துப் பார்ப்பதற்காக எல்லா வசதிகளுடன்
கூடிய ஆய்வுக்கூடம் ஒன்று இந்நிறுவனத்துடன் இணைக்கப்
பட்டுள்ளது.

கண்ணாடித் தொழிற் பயிற்சி நிலையம்.

16. கிண்டியிலுள்ள அரசு ஆய்வுக்கூட கண்ணாடித் தயாரிப்புப்
பயிற்சி நிலையத்தில் ஆய்வுக்கூட கண்ணாடி சாதனம் தயா
ரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரையில்
26 தொகுதியினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
கோயம்புத்தூரிலுள்ளகண்ணாடிக் கருவிகள். தயாரிப்புககான
பயிற்சி — உற்பத்தி நிலையம், கோயம்புத்தூரிலும்

அதனைச் சுற்றிலுமுள்ள கல்வி நிறுவனங்களின் தேவைகளைப்
பூர்த்தி செய்கிறது. இந்நிலையத்திலும் ஆய்வுக்கூட கண்
ணாடி சாதனம் தயாரிக்கப்படும் பணி மேற்கொள்ளப்படு
கிறது. இத்தொழிற் பிரிவில் தயாரிக்கப்படும் கண்ணாடி
பொருட்களுக்கு நல்ல விற்பனை உள்ளது.

சிறு தொழில்களைப் பதிவு செய்தல்.

17. இயந்திரங்கள் தளவாடச் சாமான்கள் இவற்றில் மொத்த
முதலீடு பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவை
சிறு தொழில்களாகக் கருதப்படும். பெரிய தொழிற்
சாலைகளுக்குத் துணைத் தொழில்களாக அமையும்போது இத்
தகைய முதலீடு 15 இலட்சம் ரூபாய்வரை இருப்பினும்
சிறு தொழிலாகக் கருதப்படுகின்றன. தற்போதுள்ள பதிவு
நடைமுறையின்கீழ், முதலில் புதிய தொழில்களுக்குத் தற்
காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. தற்காலிகச் சிறு
தொழில் சான்றிதழ் 6 திங்களுக்குத்தான் செயல் திறனுடைய
தாகும். இது முதலில் 6 திங்களுக்கு மேலும் புதுப்பிக்கப்
படலாம். ஆய்வுக்குப் பின்னர், மேலும் 2 அரையாண்டுக்
காலத்திற்கும் புதுப்பிக்கப்படலாம். சிறு தொழில் அமைக்
கப்பட்டதைக் கண்டறிந்தபின், நிலையான சான்றிதழ்கள்
வழங்கப்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள தொழில்
வணிக துணை இயக்குநர்கள் இந்தச் சான்றிதழ் வழங்கும்
அதிகாரம் பெற்றவர்கள்.

சிறு தொழில்கள், குறிப்பாக, படித்துவிட்டு வேலையில்லா
மல் இருப்போருக்குப் பெருமளவு சுய வேலைவாய்ப்பை
அளிக்கின்றன. மாநிலம் முழுவதும் கிராமப் பகுதிகளிலும்
ஓரளவு நகர்ப்புற பகுதிகளிலும் தொழில் வளம் பெருகு
வதற்கு வகை செய்வதும் சிறுதொழில், குடிசைத் தொழில்,
வணிகம் மற்றப் பணிகள் ஆகியவற்றில் சொந்தத் தொழில்
வாய்ப்புகளுக்கும் வழி வகுப்பதே மாநில அரசின் உறுதியான
கொள்கையாகும்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்
அன்றுள்ளபடி மாநிலத்தில் சுமார் 40,000 பதிவு செய்யப்
பட்ட சிறு தொழில்கள் இருந்தன. இவை சுமார் 4
இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு நல்கின. சிறுதொழில்
குறித்து மாவட்டவாரியான விவரங்கள் இத்துடன் இணைக்கப்
பட்டுள்ள இணைப்பு V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. 50,000
பேர்களுக்கு வேலை அளிப்பதற்காக ஓராண்டுக்குள் 10,000
சிறுதொழில் பிரிவுகளைத் தொடங்குவதற்கு, தொழில் வணிக

இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிட்கோ) ஒத்துழைப்புடன் அவசியமான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இம் மாநிலத்தில் பல்வேறு சிறு தொழில்களைத் தொடங்கு வது சம்பந்தப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான வளர்ச்சிப் பணி அமைப்புகளாக தொழில்-வணிகத் துறை இயக்குநரையும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழ கத்தையும் (சிட்கோ) அரசு குறிப்பிட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பகுதியிலும் பொறியியல், இரசாயனம், உணவு, செய்முறைப் படுத்தல், தோல், மட்பாண்டத் தொழில், மின்னணுவியல், கைவினைப் பொருட்கள் முதலிய வற்றில் ஒவ்வொரு துறை குறித்தும் ஆய்வு செய்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சாதகமாயுள்ள தொழில் குறித்து கண்டறியப் படும். குறிப்பிட்ட இடங்களில் தொழில் முனைவோரைத் தெரிந்தெடுப்பதற்கு கூட்டங்களும் நடத்தப்படும்.

புள்ளி விவரத் தகவல் சேகரிப்பு :

18. பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சிறுதொழில் பிரிவும் ஒவ்வொராண்டின் இறுதியிலும் உற்பத்தி குறித்த விவர அறிக்கையை வரையறுக்கப்பட்ட படிவத்தில் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பக் கடமைப் பட்டுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் 'கார்டெக்ஸ்' முறைப்படி வகைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றன. 31—12—1977 அன்றைய நிலையின்படி சிறு தொழில்கள் பற்றிய ஆண்டுக் குறிப்பேடு ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை தொழில்-வணிக இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

சிறு தொழில் பற்றிய தேசியப் புள்ளி விவரம் :

19. அனைத்திந்திய அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சிறு தொழில் பற்றிய தேசியப் புள்ளி விவரம் தொடர்பாக தொழில்—வணிக இயக்குநர் அலுவலகம், பதிவுபெற்ற சிறு தொழிற்சாலைகள் பற்றி, தயாரிப்பு வகை, வேலைக்கமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை, முதலீடு செய்யப் பட்ட மூலதனம், எந்திரங்களின் மதிப்பு, பயன்படுத்தப் படும் மூலப்பொருட்களின் மதிப்பு, தரம், உற்பத்தியின் மதிப்பு, ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களை உற்பத்தி வாரியாகச் சேகரிக்கிறது.

மையப் பிரிவு :

20. சிறு தொழில் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின் தொடர் நடவடிக்கையாக ''மையப்பிரிவு'' ஒன்று இயக்குநர் அலுவ லகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் பணிகளா வன:—

(1) சிறுதொழில் துறையில் உற்பத்திக் குறியெண்ணைத் தயாரிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்களைத் தயாரிக்கும் சிறுதொழில் பிரிவுகளிலிருந்து மாதாந்திர உற்பத்தி அறிக்கைகளைச் சேகரித்தல்.

(2) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது 20 சத விகித உற்பத்தித் திறனுக்குக் குறைவாக செயல்படுவ தாகக் கண்டறியப்பட்ட சுமார் 1,300 சிறு தொழில்கள் குறித்த பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவை நன்முறையில் செயல்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல்.

(3) புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்போது மூடப்பட்ட தாகக் கண்டறியப் பட்ட அல்லது எங்கு உள்ளன என்று கண்டுபிடிக்க இயலாத சுமார் 10,000 சிறுதொழிற் பிரிவுகள் குறித்து பரிசீலனை செய்தல்.

சிறு தொழில்களுக்கு மின்சக்தி, குடிநீர், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சாலை வசதிகள் முதலிய வசதிகளுடன் நன்கு திட்டமிட்ட இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் மாநில முழுவதும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட தொழிலுக்குரிய தொழிற்பேட்டைகள், தோல், மின்சாரம், மின்னணுவியல் போன்ற சிறப்புவகை தொழில்களின் தேவைகளை மட்டுமே நிறைவு செய்கின்றன. நவீன சிறந்த வகைத் தொழில் களின் வளர்ச்சிக்காக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய கீழ்க் காணும் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அரசு அனுமதி யளித்துள்ளது.

(1) மின் தொழிற் பேட்டை, காக்கலூர்.

(2) டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட், அடையாறு.

(3) மின்னணுவியல் தொழிற் பேட்டை, திருச்சிராப் பள்ளி.

(4) மின்னணுவியல் தொழிற் பேட்டை, ஓசூர்.

(5) மின்னணுவியல் தொழிற் பேட்டை, சேலம்.

மின் அழுத்த மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்), ஸ்விட்ச் கியர்கள், கண்ட்ரோல்கள் (controls) ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக அடையாறு மின் அணுவியல் துணைத் தொழிற் பேட்டை சென்னையிலுள்ள 'இன்ஸ்ட்ரானிக்ஸ்' வளாகத்திற்கு மிக அருகில் அமைக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, சிவகாசி, வியாசர்பாடி, சேலம் ஆகிய இடங்களில் தனியார் கூட்டுறவு தொழிற்பேட்டைகள் உள்ளன.

மேம்படுத்தப்பட்ட மனைகள்:

21. சென்னைக்கருகில் மின்சார மின்னணுவியல் கருவித் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்காக மேம்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 100 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. 23 தொழில் முனைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு. அரை ஏக்கர் முதல் இரண்டு ஏக்கர் வரை அவர்களுக்கு மனைகள் ஓதுக்கப்பட்டுள்ளன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

22. பல்வேறு சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைத்திறன் பணியாளர்கள் ஆகியோரின் நன்மைக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை தொழில்-வணிகத் துறை தொடங்கியுள்ளது. பாய்முடைதல், பிரம்பு, மூங்கில் தொழில்கள், ஏனைய குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள் போன்ற வற்றில் ஈடுபட்டுள்ள குமார் 100 சங்கங்கள் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. 31–12–1977 அன்றையபடி ரூ. 255 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையுடைய 294 சங்கங்கள். சுமார் 23,000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பை அளித்து வந்தன. 1–4–1977–லிருந்து 31—12—1977 வரையிலான கால அளவில் இச்சங்கங்கள் ரூ. 1,053 இலட்சம் மதிப்புள்ள பொருட்களைத் தயாரித்து ரூ. 1,297·48 இலட்சத்திற்கு விற்பனை செய்தன.

தொழிற்சாலைகளுக்கு அரசு உதவியளிக்கும் சட்டத்தின் கீழ்க் கொடுக்கப்படும் உதவி. —தமிழ்நாடு 1922 ஆம் ஆண்டு தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1923) கீழ் புதிய தொழில்கள் அமைத்தல் அல்லது தற்போதுள்ள தொழில்களை விரிவு படுத்துதல்,

தொழிற்சாலைகளுக்காக நிலம் வாங்குதல், புதிய தொழிற் சாலைக் கட்டிடங்கள் கட்டுதல் அல்லது தொழிற்சாலையின் தற்போதைய கட்டிடத்தை மாற்றியமைத்தல், தொழிற் சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்குதல் ஆகிய வற்றுக்காகவும், நடைமுறை மூலதனத்திற்காகவும், சிறு தொழில், குடிசைத் தொழில் செய்பவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படலாம். இச்சட்டத்தின்கீழ் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படக்கூடிய உயரளவு தொகை ரூ. 2 இலட்சம் ஆகும். இச் சட்டத்தின்கீழ், கடன் வழங்குவதற்காக, 1977–78 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சம் ஓதுக்கப்பட்டுள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு தொழில்—வணிக இயக்குநர் பங்கு மூலதனக் கடன் வழங்கும் பொருட்டு இத்தொகை ஒதுக்கப் பட்டுள்ளது. 31–12–1977 வரையில் ரூ. 8,54,000 பங்கு மூலதனக் கடனுகக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூ. 1,46,000 31–3–1978-க்கு முன்னதாக வழங்கப்படும்.

கீழ்க் கண்டவகைக் கடன் உதவிகளை தொழில்—வணிகத் துறை தொடர்ந்து அளித்து வருகிறது :—

(1) பங்கு மூலதனம் செலுத்துவதற்காகத் தொழில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் ;

(2) தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனக் கடன்;

(3) கிராமத் தொழில்கள் திட்டப்பணித்திட்டத்தின கீழ் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களுக்கும் ஏனையோருக்கும் கடன்கள் ;

(4) தென்னை நாரிலிருந்து இயந்திரத்தால் கயிறு உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகள் உட்பட தென்னை நார்த் தொழில்களின் வளர்ச்சிக்குக் கடன்கள்.

கடந்த ஒன்பதாண்டுகளில் தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள், உதவி பெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் இணைப்பு XX-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தோல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

23. வேலை நிறைவு செய்யப்பட்ட தோல் பொருட்களை உற்பத்தி செய்வதில் தேவையான இன்றியமையாத அடிப் படை வசதிகளை வழங்குவதன் மூலம், தோல் தொழிலுக்கும் குறிப்பாக சிறு அளவில் தோல் பதனிடுபவர்களுக்கு உதவி புரிவதற்கென்று வாணியம்பாடியில் தோல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. தோல் பதனிடுபவர்கள் பெருவாரியாக இருக்கும் பகுதிகளில் கூட் டுறவுத்துறையில் மேலும் சில பணி நிலையங்களை அமைக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டு வருகிறது. அரசு வணிக நிறுவனம் அளித்துள்ள ரூ. 25 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்களுக்குச் சமமான ரொக்கத் தொகையைத் தொடக்க மூலதன தேவையாகக்கொண்டு மேலும் நான்கு பணி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. தோல் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் முழு அளவில் வளர்ச்சி பெற்று பெருக வேண்டும் என்பதே இவ்வரசின் குறிக்கோளாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1976–77, 1977–78-ம் (ஜனவரி 1978 வரை) ஆண்டில் தோல் வளர்ச்சிக்கு வழங்கிய நிதியுதவியைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

விவரங்கள்.	1976–77. (ஏப்ரல்–மார்ச்சு.)	1977–78. (ஏப்ரல்–ஜனவரி.)
1. தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை.	25	19
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
2. வழங்கிய தொகை	2,24.31	1,69.55
3. அவற்றில்—		
(அ) தொழில் வளர்ச்சி நிறுவனம்-உலக வங்கிகளின் கீழ் அன்னிய நாணயமாகக் கடன் வழங்கப்பட்ட தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை	11	8
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.
(ஆ) அன்னியச் செலாவணிக்கடன்கள்	61.77	2.44

விவரங்கள்.	1976-77. (ஏப்ரல்-மார்ச்சு.)	1977-78. (ஏப்ரல்-ஜனவரி
	(ரூ. இலட்சத்தில்.)	(ரூ. இலட்சத்தில்.)
4. திட்டங்களின் மொத்த மதிப்பீடு	4,90.55	3,56.47
5. எதிர் பார்க்கும் வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை	1,190	840
6. எதிர்பார்க்கும் வருட உற்பத்தியின் மதிப்பீடு ..	1,744.74 இலட்சம்.	1,564.44 இலட்சம்

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்.

24. தமிழ்நாட்டில் பதினொன்று தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் எல்லாம் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளன. நட்டத்தில் செயல்பட்டுவந்த ஒரே தொழிற்சாலையான கைகாட்டி தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை, முந்திய ஆண்டு களின் நட்டத்தை ஈடு செய்துவருகிறது. இந்தத் தொழிற் சாலைகள் ரூ. 18.27 இலட்சத்துக்கு மேம்பாட்டு ஒதுக்க நிதி, தேய்மான ஒதுக்கநிதி ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளன. 1976–77-ல் தயாரிக்கப்பட்ட தேயிலை ரூ. 440.00 இலட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தத் தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் 5,099 சிறு தேயிலைச் சாகுபடியாளர்கள் பயனடைகின்றனர். இவர்கள் சுமார் 11,400 ஏக்கர் தேயிலைத் தோட்டங்களைச் சொந்தத்தில் உடையவர்களாவர்.

அரசு அளிக்கும் பங்கு மூலதன உதவி, தேயிலை வாரியம் அளிக்கும் கடனுதவி தவிர, தொடக்க நிலையில் நிர்வாகப் பணியாளர்களின் இலவசப் பணிகள், தவணை கொள்முதல் முறையின்கீழ் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு உத்திரவாதம் ஆகியவையும் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, இந்தத் தொழிற்சாலைகளின் நடைமுதல் மூலதனத் தேவைகளுக்கு வகைசெய்கிறது. தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற் சாலைகள் அனைத்திற்குமான மத்தியப் பணிச்சங்கம், தொழிற் சாலைகள் அனைத்தின் அலுவல்களை ஒருங்கிணைக்கிறது.

சிறு தேயிலைச் சாகுபடியாளர்களுக்கு தேவைப்படும் எருவை மொத்தமாகக் கொள்முதல் செய்கிறது. தேயிலைக் கிடங்கு நடத்துகிறது. தேயிலை விற்பனையில் உதவுகிறது. ஏனைய பணி வசதிகளைச் செய்து தருகிறது. இச்சங்கம் ஆதாயத்தில் செயல் பட்டு வருகிறது.

25. கூட்டுறவுத் தீப்பெட்டிச் சங்கங்கள்.

25. தமிழ்நாட்டில், 13 சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தி செய்வோர் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்தல், உற்பத்தியான தீப்பெட்டிகளை விற்பனைசெய்தல் ஆகியவற்றில் தயாரிப்பாளர்களுக்கு உதவிபுரிந்து வருகின்றது. இவற்றில் ஐந்து சங்கங்கள் 1975-ம் ஆண்டுக்கு முன்பே தொடங்கப்பட்டன. 1975 ஆம் ஆண்டுக்கு பிறகு பதிவு செய்த 6 சங்கங்கள் இன்னும் நல்ல விற்பனையை எட்டிப்பிடிக்கவில்லை. எஞ்சிய இரு புதிய சங்கங்கள் இன்னும் விற்பனையைத் தொடங்கவில்லை. 1976–77-ல் இச்சங்கங்களின் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை 354.00 இலட்ச ரூபாயாகும். 1977–78 ஆம் ஆண்டில் (31–1–78 முடிய) தீப்பெட்டி விற்பனை ரூ. 344 இலட்சமாகும் மேற்படி சங்கங்கள் அனைத்தும் சேர்ந்து தமிழ் மாநிலத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு சங்கக் கூட்டமைப்பை அமைத்துள்ளன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம் ஆகியவற்றின்கீழ், வேலையற்ற பொறியியலாளர்கள், பட்டயதாரர்கள் தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ்ப் பெற்றவர்கள், ஏனைய தகுதிபெற்றவர்கள், ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு, மூன்றுவகை தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்றவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டன. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 115 பொறியியல் பட்டதாரிகள், 39 பட்டயதாரர்கள், 169 தொழிற்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்றவர்கள், ஏனைய தகுதி பெற்ற 303 பேர் ஆகியவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கான 14 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மாநில அரசு பங்கு மூலதன முதலீடு செய்வதற்காக 25.77 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புப் பெருக்கத்திட்டம்,

சுய வேலை வாய்ப்புத்திட்டம் ஆகியவற்றின் கீழ் 22 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, 561 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற பின்னர், 137 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். 396 பேர்கள், வெவ்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி.

26. தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிப் பதற்கென்றே 1961 ஆம் ஆண்டில் ஒரு தலைமை வங்கி னியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த வங்கியில் செலுத்தப் பட்ட பங்கு மூலதனம் ரூ. 64.03 இலட்சம். இதில் ரூ. 38.30 இலட்சம் அரசினால் வழங்கப்பட்டது. 31–12–77 ஆம் நாள் லவரப்படி 357 சங்கங்களுக்கு இவ்வங்கி நிதி உதவி அளித்தது. இந்த வங்கியினால் வழங்கப்படும் கடன் அளவும் படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட அட்டவணை யிலிருந்து அறியலாம் :—

ஆண்டு.			வழங்கப்பட்ட கடன் (ரூபாய் இலட்சத்தில்.)
			24.61
1967–68	..	..	16.83
1968–69	..	..	18.85
1969–70	..	..	41.81
1970–71	..	..	39.00
1971–72	..	..	97.95
1972–73	..	..	130.84
1973–74	..	..	153.06
1974–75	..	..	155.56
1975–76	..	..	173.13
1976–77	..	..	129.90
1977–78 (31–12–77 வரை).			

இவ்வங்கியின் நிதி உதவியைப் பெற்றுவரும் தொழிற்
கூட்டுறவுச் சங்கங்களில் மிக முக்கியமானவை நீலகிரி
மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை
களாகும். இக்கூட்டுறவு வங்கியை ஒரு தலைமை வங்கியாக
ரிசர்வ் வங்கி அங்கீகரிக்கவில்லை. அதனால் ரிசர்வ் வங்கியினால்
கொடுக்கப்படும் மறுநிதி உதவி வசதிகளையும் மற்ற கடன்
உத்தரவாத வசதிகளையும் இந்த வங்கி பெற முடியவில்லை.

கைத்திறத் தொழில்கள்.

27. தென்காசியில் உள்ள நார் தயாரிப்பு நிலையம்,
கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும்
நிலையம் ஆக இரண்டு உற்பத்தி நிலையங்கள் தற்போது
தொழில் வாணிகத் துறையில் உள்ளன. நார் தயாரிப்புப்
பிரிவானது கலப்பு நார் மூலம் மெத்தைகள்
தயாரித்து, மருத்துவ மனைகளுக்கும், தனியார்
நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. இப்பிரிவு
1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை 58
டன் கலப்பு இழையைத் தயாரித்துள்ளது. 65 டன்
கலப்பு நார் இழையை விற்பனை செய்துள்ளது.
கிருஷ்ணகிரியில் உள்ள கருங்கல் மெருகேற்றும் நிலை
யத்தை தருமபுரி மாவட்ட வளர்ச்சி நிறுவனத்
திற்கு மாற்றி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
பல்வேறு கைத்திறப் பொருள்கள் உற்பத்தியில் ஈடு
பட்டுள்ள கைத்திறப் பணியாளர்கள் குறித்த புள்ளி விவரங்
களைத் திரட்டுவதற்காகவும் கைத்திறத் தொழிலை
மேம்படுத்துவதற்காகவும் விவரங்களைத்திரட்ட கைத்திறத்
தொழில் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்
கள் கைத்திறத் தொழிற்பிரிவுகளை பதிவு செய்கின்றனர்.
மூன்று ஆண்டுகள் கால அளவுவரை இவற்றிற்கு பதிவுச்
சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு
டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை 17,705
விண்ணப்பங்கள் வரப்பெற்றன. 16,794 தொழிற் பிரிவு
கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு, பதிவு ஆகியவை
குறித்த பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தென்னை நார்த் தொழில்.

28. தமிழ்நாட்டில் தற்போது பத்து தென்னை நார்த்
தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில்
இரண்டு மத்திய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

ஆகும். ஒன்று மாநில நார் விற்பனை மையத் தொழிற்
கூட்டுறவுச் சங்கம் ஆகும். தென்னை நார் கூட்டுறவுத்
தொடக்கச் சங்கங்களும் சங்க உறுப்பினர்களும் உற்பத்தி
செய்யும் நார்ப் பொருள்களை தென்னை நார் விற்பனை மத்திய
தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன.

ஈத்த மொழியில் செய்யப்பட்ட தென்னை நார்ப்பள்ளி
யின் சொத்து உடைமைகளை மேற்கொண்டு, நாகர்
கோயில் மாவட்ட தென்னை நார் விற்பனை மத்திய தொழிற்
கூட்டுறவுச் சங்கம் பெரிய அளவில் தென்னை நார்
எடுக்கவும், நார் விரிப்புகள், தேயிலைக் கோணிகள், தூசு
மிதியடிகள் ஆகியவற்றைத் தயாரிக்க வகை செய்யும்
திட்டமொன்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்
திட்டத்திற்கு வேண்டிய பணியாளர்கள் தந்துள்ளதோடு
1976 ஜனவரித் திங்களில் 45,000 ரூபாய் அரசின்
பங்கு மூலதனமாக இச்சங்கத்திற்கு வழங்கப்
பட்டது. இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து
தாயகத்திற்கு திரும்பியவர்களுக்கு இச்சங்கம் பயிற்சி
அளிக்கும். பயிற்சிக்குப் பின்னர், இச்சங்கத்தின் உற்பத்திப்
பிரிவில் அவர்களைப் பணியில் அமர்த்தும். அகதிகள் கூட்டுறவு
நிதி வளர்ச்சி வங்கி, இத்திட்டத்திற்கென 3·35 இலட்சம்
ரூபாய்க்கு உதவி செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இது
வரையில் இவ்வங்கி 77,500 ரூபாய் தந்துள்ளது. ஐம்பது
அகதிகள், இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றனர்.
மாநில அரசின் 0·10 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம்
உட்பட, 1.46 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்ட பங்கு
மூலதனம் கொண்ட தமிழ்நாடு மத்திய தென்னை நார்
விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கம், 36 உறுப்பினர்
களுடன் தஞ்சையைத் தலைமையிடமாகக்கொண்டு செயல்
பட்டு வருகின்றது. உறுப்பினர்கள்' அனைவரும், இயந்திர
முறையில் நாரெடுக்கும் தொழிற் பிரிவுகளின் உரிமையாளர்
களாவர். தமிழ்நாட்டில் இயந்திர முறையில் நாரெடுக்கும்
தொழிற் பிரிவுகள் 110 உள்ளன. இத்தொழிற் பிரிவுகளின்
உரிமையாளர்கள் அனைவரையும் இச்சங்கத்தின் உறுப்பினர்
களாக பதிவு செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு
வருகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம்
நாள் நிலவரப்படி மேற்படி தமிழ்நாடு மத்திய தென்னை
நார் விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி
விற்பனையின் அளவு ரூ. 1·38 இலட்சத்தை எட்டியது.
இதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும், அதிக அளவில்
பழுப்பு நிற கயிறு நார்களைப் பெறவும் ரூ. 6.65,
இலட்சம் செலவில் இச்சங்கத்தில் கருட்டப்பட்ட நார்

உற்பத்திப் பிரிவு ஒன்றை தொடங்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு புதுக் கோட்டையிலுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா நிதி உதவி செய்யும். மேற்சொன்ன பிரிவைத் தொடங்க இச்சங்கத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டுப்புழு வளர்த்தல்.

29. மேம்பட்ட முசுக்கட்டை இனங்களின் ஒட்டுப் பதியன்களை வழங்கும் பொருட்டு, இம்மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளில் பத்து முசுக்கட்டை நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1976–77ஆம் ஆண்டில் வடஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் புதிதாக இரண்டு முசுக்கட்டை பண்ணைகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முசுக்கட்டை பண்ணைகள் புதிய ரக முசுக்கட்டை மர இனங்களைப் பெருக்கியும் பட்டுப்புழு வளர்ப்போர் பாசன முறையில் பயிரிட விதைப் பொருள்களை வழங்கியும் வருகிறது. மேலும் சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தீவிர பட்டுப்பூச்சி வளர்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரண்டு மாவட்டங்களில் முசுக்கட்டை மரம் வளர்க்கப்படும் பகுதிகள் 825 ஏக்கருக்கு மேல் உள்ளன. தளி, பேரிகை, வாணியம்பாடி, கோயம்புத்தூர், பழனி ஆகிய 5 இடங்களில் அமைந்துள்ள பட்டுப்புழுக்கூடு விற்பனை நிலையங்கள், பட்டுப்புழு வளர்ப்போர் தாங்கள் உற்பத்தி செய்த பட்டுப் புழுக்கூடுகளை விற்பனை செய்து உடனடியாக பணம் பெற உதவிபுரிந்து வருகின்றன. இந்த ஐந்து பட்டுப்புழுக் கூடு விற்பனை நிலையங்கள் ரூ. 15·00 இலட்சம் மதிப்புள்ள சுமார் 1,00,000 கிலோ கிராம் பட்டுப் புழுக் கூடுகளை விற்பனை செய்துள்ளது.

ஒசூர், கொலட்டி, .சேலம், வாணியம்பாடி, சத்யமங்கலம், மதஹள்ளி ஆகிய இடங்களிலுள்ள ஆறு துணை நிலையங்கள் புதிய இனங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைகின்றன என்பதை நேரடியாகக் கண்டறிந்து குறிப்புகளை எடுத்து குன்னூரிலுள்ள ஆராய்ச்சி விஸ்தரிப்பு நிலையத்திற்குக் கொடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் தீவிர அபிவிருத்தி திட்டமொன்று, மத்திய பட்டுவாரிய உதவியுடன் 1977–78 மற்றும் 1978–79 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் ரூ. 52.63 இலட்சம் செலவில் செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் விவரமாவது :—

1. முசுக்கட்டை பயிர் நிலப்பரப்பை விரிவாக்குதல்.

2. பட்டுப்புழு வளர்ப்பு, விற்பனை மற்றும் விற்பனை பயன்களை ஏற்படுத்துதல்.

3. மற்றும் நிர்வாகம்.

1977–78-ம் ஆண்டிற்கு ரூ. 3 இலட்சங்களை நிர்வாகம் மற்றும் அலுவலர்கள் செலவினங்களுக்காக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும்பொழுது ஏற்கனவே உள்ள 12,000 ஏக்கரா தவிர சுமார் 12,000 ஏக்கரா அதிகப்படியாக விரிவடைவதுடன் அதிகப்படியாக ஆண்டுக்கு 25 லட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி அதிகரிக்கும்.

பட்டு நூற்பு ஆலைகள் திட்டமிட்டப்படி ஆரம்பிக்கப் படின் கூடுதல் $2\frac{1}{4}$ இலட்சம் கிலோ பட்டு உற்பத்தி ஆவதுடன் இம்மாநில பட்டுத் தேவையினை 35 சதவிகிதம் பூர்த்தி செய்யும். சுமார் 48,000 கிராமவாசிகளுக்கு இத் தொழிலில் வேலைவாய்ப்பு ஏற்படும். தமிழ்நாடு மாநிலத்தில் தற்போது முசுக்கட்டை மரங்கள் பயிரிடப்படும் பகுதி சுமார் 13,000 ஏக்கர்கள் ஆகும். இது 1978–79 ஆம் ஆண்டுக்குள் 15,000 ஆக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1978–79ஆம் ஆண்டில் வட ஆற்காடு, சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 20 பட்டிழை கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் இவைகளைத் தொடங்க, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இதன் தொடர்பாக, தொழில்—வணிக இயக்குநர் இடங்களைத் தெரிந்தெடுத்து அரசுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் மொத்தப் பட்டுப் புழுக்கூடு உற்பத்தி 1,200 மெட்ரிக் டன்களாகும். ஆனால் தமிழ்நாட்டிலேயே பட்டிழை எடுப்பது 231 மெட்ரிக் டன் மட்டுமே. எனவே பட்டிழை எடுப்பதற்கான வசதிகளைப் பெருக்கி வருகிறோம்.

[1978 மார்ச் 27

கிராமத் தொழில் திட்டம்.

30. பொதுவசதி நிலையங்கள், துறை உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், உள்ளூரிலுள்ள பரம்பரைக் கைத்திறப் பணியாளர்களுக்கு கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவை கிராமத்தொழிலில் திட்டப் பகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தில் அடங்கும். கிராமத் தொழில் திட்டத்தின் ஏனைய நடவடிக்கைகளில் அடங்கியவை—

1. பல்வேறு கிராமத் திட்டங்களில் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

2. சிறுதொழில் பணிநிலையம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிதி உதவி நிறுவனங்கள் ஆகிய முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

3. தேவைப்படும் நேரத்தில் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கைகளை நிதி உதவி நிறுவனங்களுக்கு அளித்தல்.

4. புதிய தொழில்களை அமைக்க தொழிலதிபர்களுக்கு உதவுதல்.

5. விரிவாக்கப் பணிகள் செய்தல்.

6. தொழில் துவங்க, தொழில் முனைவர்களைத் தெரிந்தெடுத்தல்.

7. திட்ட அளவிலான குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், தொழிலதிபர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

8. தனிப்பட்ட தொழில் துவங்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்.

9. பிற நடவடிக்கைகள்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ், கிராமத் தொழில் திட்ட மைய நிதியிலிருந்து, ஆண்டொன்றுக்கு 7½ சதவீதம் என்ற குறைந்த அளவு வட்டிக்கு தனியார் தொழில் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

1978 மார்ச் 27]

தமிழ் நாட்டில் கனிவளம்.

31 பெரும்பாலான தொழில்களுக்குக் கனிப்பொருள்கள்
அடிப்படையாக அமைந்து இருப்பதால், கனிவளங்களை ஆய்வு
செய்வதற்கான நவீன, சிறந்த முறைகளைப் பயன்படுத்தி,
புதிய கனிவளப் படிவங்களைக் கண்டுபிடிப்பதில் தமிழக அரசு
தன் கவனத்தைச் செலுத்தியுள்ளது. அரசு, புதிய கனிவளத்
தொழில்களைத் தொடங்குவதற்கான பகுதிகளையும்,
ஏற்கெனவே செயல்பட்டுவரும் கனிவளத் தொழில்களை விரிவு
படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் கண்டறிந்து வருகிறது.
தமிழ்நாட்டில், பூமியின் மேற்பரப்பில் காணப்பட்ட கனிப்
பொருட்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டு எடுக்கப்பட்டு விட்
டன. எனவே, பூமிக்கடியிலுள்ள கனிவளப் படிவங்களைக் குறிப்
பாக மூலக்கனிப் பொருள்கள், கதிர் இயக்கக் கனிப் பொருள்கள்.
ஏனைய தொழில் கனிப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டெறிய
புதிய முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. சேலம், தரும
புரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும், தீவிர
ஆய்வுகள் செய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன. திருச்சி மாவட்டம், அரியலூர், நகரத்தில் கிழக்குப்
பகுதியில் சுண்ணும்புக்கல் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டதன்
விளைவாக, அரியலூரில் அரசு தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம்
மூலம் ஒரு சிமிட்டி தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.
கல்லாற்றின் தெற்குப் பகுதிகளிலும், மேற்கொண்டு ஆய்வுகள்
தொடர்ந்து நடத்தப்பட்டன. அப்பகுதியில் சிமிட்டிக்கேற்ற
50 மில்லியன் டன் சுண்ணும்புக் கற்கள் (75 சதவீதம் முதல்
95 சதவீதம் வரை சுத்தமான) இருப்பதும் கண்டுபிடிக்கப்
பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் திருகாமலை, சிற்றேரி
மலைப்பகுதிகளில் மின்னணுத் தொழில்களுக்கான உயர்ரக
மாக்னசைட் ஆய்வு செய்யும் ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன. கண்ணடி தொழிலுக்குப் பொருத்தமான சிலிகா
மணல் கிடைப்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்
ஞர்க்காடு மாவட்டம் மரக்காணம் அருகே 10 மில்லியன் டன்
சிலிகா மணல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்
கொண்டும் பணிகள் நிறைவேறி வருகின்றன. புதுக்கோட்டை
மாவட்டத்தில் தொடங்கப்பட்ட ஆய்வுகள், செங்கீரைசெட்டிப்
பட்டி, எருச்சி முதலிய பகுதிகளுக்கருகில் சுடு செங்கலுக்குரிய
களிமண் கிடைப்பதை வெளிப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விமானம் மூலம்
நில அமைப்பினை ஆய்வு செய்ததன் அடிப்படையில் நில அமைப்பு
முரண்பாடு பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்தகைய ஒரு ஆய்வு, பவானி அருகே மாரப்பன்பாளையம்
கிராமத்தில் செம்பு கிடைப்பதை வெளிப்படுத்தியது. அது
போலவே தர்மபுரி மாவட்டம், சாமல்பட்டி அருகே மோட்டு

[1978 மார்ச் 27

கிராமத் தொழில் திட்டம்.

30. பொதுவசதி நிலையங்கள், துறை உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், உள்ளூரிலுள்ள பரம்பரைக் கைத்திறப் பணியாளர்களுக்கு கிராமத் தொழில்களில் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆகியவை கிராமத்தொழிலில் திட்டப் பகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தில் அடங்கும். கிராமத் தொழில் திட்டத்தின் ஏனைய நடவடிக்கைகளில் அடங்கியவை—

1. பல்வேறு கிராமத் திட்டங்களில் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

2. சிறுதொழில் பணிநிலையம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் போன்ற நிதி உதவி நிறுவனங்கள் ஆகிய முகவரமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

3. தேவைப்படும் நேரத்தில் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் பற்றிய அறிக்கைகளை நிதி உதவி நிறுவனங்களுக்கு அளித்தல்.

4. புதிய தொழில்களை அமைக்க தொழிலதிபர்களுக்கு உதவுதல்.

5. விரிவாக்கப் பணிகள் செய்தல்.

6. தொழில் துவங்க, தொழில் முனைவர்களைத் தெரிந்தெடுத்தல்.

7. திட்ட அளவிலான குழுக் கூட்டங்களைக் கூட்டுதல், தொழிலதிபர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்.

8. தனிப்பட்ட தொழில் துவங்குபவர்களுக்குக் கடன் வழங்குதல்.

9. பிற நடவடிக்கைகள்.

தொழில்களுக்கு அரசு உதவிச் சட்டத்தின்கீழ், கிராமத் தொழில் திட்ட மைய நிதியிலிருந்து, ஆண்டொன்றுக்கு 7½ சதவீதம் என்ற குறைந்த அளவு வட்டிக்கு தனியார் தொழில் பிரிவுகளுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

1978 மார்ச் 27]

தமிழ் நாட்டில் கனிவளம்.

31 பெரும்பாலான தொழில்களுக்குக் கனிப்பொருள்கள்
அடிப்படையாக அமைந்து இருப்பதால், கனிவளங்களை ஆய்வு
செய்வதற்கான நவீன, சிறந்த முறைகளைப் பயன்படுத்தி,
புதிய கனிவளப் படிவங்களைக் கண்டுபிடிப்பதில் தமிழக அரசு
தன் கவனத்தைச் செலுத்தியுள்ளது. அரசு, புதிய கனிவளத்
தொழில்களைத் தொடங்குவதற்கான பகுதிகளையும்,
ஏற்கெனவே செயல்பட்டுவரும் கனிவளத் தொழில்களை விரிவு
படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் கண்டறிந்து வருகிறது.
தமிழ்நாட்டில், பூமியின் மேற்பரப்பில் காணப்பட்ட கனிப்
பொருட்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டு எடுக்கப்பட்டு விட்
டன. எனவே, பூமிக்கடியிலுள்ள கனிவளப் படிவங்களைக் குறிப்
பாக மூலக்கனிப் பொருள்கள், கதிர்-இயக்கக் கனிப் பொருள்கள்.
ஏனைய தொழில் கனிப்பொருள்கள் ஆகியவற்றைக் கண்டறிய
புதிய முறைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. சேலம், தரும
புரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும், தீவிர
ஆய்வுகள் செய்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன. திருச்சி மாவட்டம், அரியலூர், நகரத்தில் கிழக்குப்
பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டதன்
விளைவாக, அரியலூரில் அரசு தமிழ்நாடு சிமிட்டி நிறுவனம்
மூலம் ஒரு சிமிட்டி தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.
கல்லாற்றின் தெற்குப் பகுதிகளிலும், மேற்கொண்டு ஆய்வுகள்
தொடர்ந்து நடத்தப்பட்டன. அப்பகுதியில் சிமிட்டிக்கேற்ற
50 மில்லியன் டன் சுண்ணாம்புக் கற்கள் (75 சதவீதம் முதல்
95 சதவீதம் வரை சுத்தமான) இருப்பதும் கண்டுபிடிக்கப்
பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் திருகாமலை, சிற்றேரி
மலைப்பகுதிகளில் மின்னணுத் தொழில்களுக்கான உயர்ரக
மாக்னசைட் ஆய்வு செய்யும் ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன. கண்ணாடி தொழிலுக்குப் பொருத்தமான சிலிகா
மணல் கிடைப்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தென்
னார்க்காடு மாவட்டம் மரக்காணம் அருகே 10 மில்லியன் டன்
சிலிகா மணல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்
கொண்டும் பணிகள் நிறைவேறி வருகின்றன. புதுக்கோட்டை
மாவட்டத்தில் தொடங்கப்பட்ட ஆய்வுகள், செங்கீரைசெட்டிப்
பட்டி, எருச்சி முதலிய பகுதிகளுக்கருகில் சுடு செங்கலுக்குரிய
களிமண் கிடைப்பதை வெளிப்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விமானம் மூலம்
நில அமைப்பினை ஆய்வு செய்ததன் அடிப்படையில் நில அமைப்பு
முரண்பாடு பகுதிகளில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அத்தகைய ஒரு ஆய்வு, பவானி அருகே மாரப்பன்பாளையம்
கிராமத்தில் செம்பு கிடைப்பதை வெளிப்படுத்தியது. அது
போலவே தர்மபுரி மாவட்டம், சாமல்பட்டி அருகே மோட்டூ

சூலக்கரையில், ஏற்கனவே இரசாயன ஆய்வில் தெரிவிக்கப்
பட்டுள்ளபடி, செம்பு இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய
துளையிடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அம்பத்தூரில் முன்
னோடித் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட வெர்மிகுலைட்
சிம்பு தயாரிக்கும் தொழிற்சாலை சிம்புப்பொருட்களை வெற்றி
கரமாக தயாரித்து வருகிறது. சேலத்தில் கனிவளச் சோதனைக்
கூடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

கனிவளத்தை முறையாக மதிப்பீடு செய்யும் நோக்கத்
தோடு திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்
களில் மூன்று கனிவள வட்டார சிறு குழுக்கள் அமைக்கப்
பட்டுள்ளன. இத்தகைய குழுக்கள் மிகவும் பயனுள்ளனவாய்
இருக்கின்ற காரணத்தால் மேலும் மூன்று வட்டார குழுக்களை
அமைப்பதற்கு 1978–79ஆம் ஆண்டு புதிய திட்டத்தில் தேவை
யான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புவியியல் அமைப்புக் குறித்து முக்கிய கூறுகளைக் கண்டறியும்
பொருட்டு, அகமதபாத் இந்தியா விண்வெளிஆராய்ச்சி நிறுவனத்
தின் ஒத்துழைப்புடன் வட்டார அளவில் ஆராய்ச்சி நடத்துவதற்
கான திட்டம் ஒன்றை மேற் கொண்டுள்ளது. புவியியல் அமைப்பு
நில உருவாக இயல் கூறுகள், கனிவளப் படிவங்கள், நில நீர்
ஆகியவற்றை எடுப்பது குறித்து தகவல் அளிக்கக்கூடிய பயனுள்ள
புள்ளி விவரங்கள் ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுப்பணி
சேலம், தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்
களில் 10,000 சதுர கிலோ மீட்டர் பரப்பில் மேற்கொள்ளப்
பட்டுள்ளது.

கருங்கல் ஒரு சிறு கனிப்பொருளாகும். இது தற்போது
மாநில சுரங்க விதிகளின்கீழ் தனிப்பட்ட தொழில் முனைவோருக்கு
குத்தகைக்கு விடப்படுகிறது. பெருமளவு ஆதாயத்துடன் ஜப்
பான் நாட்டுக்கு இதனை குத்தகை எடுப்பவர்கள் ஏற்றுமதி செய்
கின்றனர். தனிப்பட்ட தொழில் முனைவோருக்குக் குத்தகை
கைக்கு விடுவதை நிறுத்தி விடுவதற்கும், இக்கனிப்பொருளையும்,
ஏனைய கனிப்பொருட்களையும், வெட்டியெடுக்கும், பணியை அரசு
முகவரமைப்பு ஒன்றிடம் ஒப்படைப்பதற்கும், அரசு எடுத்துள்ள
கொள்கை முடிவைத் தொடர்ந்து அரசு ''தமிழ்நாடு கனிவள
நிறுவனம்'' என்ற பெயரில் கனிவள மேம்பாட்டு நிறுவனத்தை
அமைத்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்
டத்தில் இந்நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக ரூபாய் 20·00
இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின்
செலவை ஏற்பதற்காக 1977–78-ல் ரூ. 7·5 இலட்சம் (பங்கு
மூலதனமாக) அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசின் முடிவை
எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தனிப்பட்டவர் தொடுத்த வழக்கு
ஒன்று நடந்து வருகின்றது.

தமிழக அரசு நிறுவனமான டான்சிக்கு கடந்த ஆண்டு தென்
ஆற்காடு மாவட்டத்திலுள்ள குன்னம் கிராமத்தில் 81·52 ஏக்கர்
நிலப்பரப்பில் கருப்புக் கல் வெட்டி எடுக்கும் குத்தகை உரிமம்
வழங்கப்பட்டது. இந்நிறுவனம், கருப்புக்கல் வெட்டி
எடுக்கும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. டோக்கி
யோவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு, 1,000 கன மீட்டர்
அளவுள்ள கருப்புக் கல் தேவை ஆணையை 1978 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் நிறைவு செய்யும் தீவிர
முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

32. தொழில் வணிக இயக்குநரது பொறுப்பின்கீழ் 1978–79
ஆம் ஆண்டில் மேற்கொள்ள இருக்கும் சில முக்கிய புதிய
திட்டங்கள் வருமாறு:—

1. விசையேற்றங்கள் (pumpsets) சோதனை செய்வ
தற்கான வசதிகளைச் செய்து தருவதற்கு கோயம்புத்தூர் வட்டார
சோதனை ஆய்வுக்கூடத்தை விரிவு படுத்துதல்.

2. திருச்சிராப்பள்ளி வட்டார அறிவியல்-தொழில் ஆய்வுக்
கூடம் ஒன்றை அமைத்தல்.

3. தற்போதுள்ள வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களை
விரிவுபடுத்தல், வட்டார சுரங்கப் பிரிவு அலுவலகங்களைப் புதிதாக
அமைத்தல்.

4. தமிழ்நாடு கனிவளங்கள் நிறுவனத்திற்கு பங்கு மூலதன
உதவி.

5. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்
களில் சிறு தீப்பெட்டித் தயாரிப்பாளர்கள் பணி-தொழிற் கூட்டு
றவுச் சங்கங்கள் இரண்டு அமைத்தல்.

6. இருபது பட்டிழை சுற்றும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்
களை நிறுவுதல்.

7. விரிவுப் பணித் திட்டத்திற்காக நீலகிரி மாவட்டத்
தில் ஆறு தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின்
பங்கு மூலதனம் அளித்தல்.

8. இராமநாதபுரத்திலும் திருநெல்வேலியிலும் 50 தீப்
பெட்டித் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை
அமைத்தல்.

[1978 மார்ச் 27

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

இந்த நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(1) தொழில் முனைவர்களுக்குத் தவணைக் கொள்முதல் அடிப்படையில் கொட்டகைகளைக் கட்டித் தருதல்.

(2) சிட்கோ-டிஐஐசி கூட்டுத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்களை தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குதல்.

(3) சிறுதொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும், இன்றியமையாத மூலப் பொருட்களை கொள்முதல் செய்து வழங்குதல்.

(4) சிறுதொழில் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களது விற்பனைக்கு உதவுதல்.

(5) "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்/ வேலை வாய்ப்பு" பெருக்கத் திட்டத்தின்கீழ் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

(6) பின் தங்கிய பகுதிகளில் உள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு மத்திய மூலதன உதவித் தொகையை வழங்குதல்.

(7) சிறு தொழில் பிரிவுகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி உதவி.

(8) தொழிற்பேட்டைகள், சீர் செய்த மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நிர்வகித்தல்.

(9) புதிய கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறு தொழில்களுக்குக் கடன்கள் வழங்குதல்.

(10) அகதிகள் கூட்டுறவு நிதி—வளர்ச்சி வங்கியின் ஒத்துழைப்புடன் சிறு தொழில்களுக்கு கடன்கள்.

பணிக் கொட்டகைகள் கட்டுதல்.

2. 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய தவணைக் கொள் முதல் முறையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் ரூ. 319 இலட்சம் மதிப்புள்ள பணிக் கொட்டகைகளை 347 தொழில் முனைவர்கள் பெற்றுள்ளனர். மேலும் 1977–78ஆம் ஆண்டில், அம்பத்தூர், ஹோசூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மார்த்தூர், திருச்செங்கோடு, நாமக்கல், கிருஷ்ண கிரி, வடலூர் ஆகிய இடங்களில் ரூ 205 இலட்சம் மதிப் பீட்டுச் செலவில் மேலும் 200 கொட்டகைகளைக் கட்ட சிறு

1978 மார்ச் 27]

தொழில் வளர்ச்சிக் கழகம் கருதி உள்ளது. இதனால் சுமார் 2,050 பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 1,070 பேர் கிராமப் பகுதிகளிலும், 980 பேர் நகர்ப்பகுதிகளிலும் வேலை வாய்ப்பு பெறுவர். அம்பத்தூர், கிண்டி, சேலம், திண்டுக்கல் போன்ற இடங்களில் உள்ள சின்னஞ்சிறு தொழிற் பிரிவுகள் தேவையை நிறைவு செய்ய கொட்டகை ஒன்றுக்கு 5,900 ரூபாய் செலவில் 14 இலட்சம் மொத்தச் செலவில், மேலும் 200 கொட்டகைகளைக் கட்டவும் கருதப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நகர்ப் புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 1977–78 முதல் 1979–80 வரை ரூ 220 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 120 பணிக்கொட்டகைகள் கட்டவும் கருதப் பட்டுள்ளது.

சிறு தொழில்களுக்கு இயந்திரங்கள் வழ்ங்குதல்.

3. 1970 அக்டோபர் முதல் 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரை 1,201 தொழில் முனைவர்களுக்கு ரூ. 531 இலட்சம் மதிப்பிற்கு "சிட்கோ" உதவியுள்ளது. இதனால் சுமார் 15,600 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் "சிட்கோ" இயந்திரங்களுக்கான கடன் உதவியை நேரடியாக வழங்குவதை நிறுத்தியுள்ளது. தற்போது, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்—சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 1,686 இலட்சம் மதிப்பிற்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக 1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இறுதி வரை 1,050 சிறு தொழில் முனைவர் களுக்கு "சிட்கோ" உதவியுள்ளது.

4. மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்து வழங்குதல்.

இரும்பு, உருக்கு, சுட்ட நிலக்கரி, எரிசோடா, மாமிசக் கொழுப்பு, தீப்பெட்டி, மெழுகு, பொட்டாசியம் குளோரைடு ஆகிய மூலப்பொருள்களை ரூ. 2,910 இலட்சம் மதிப்பிற்கு 1970 அக்டோபர் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய "சிட்கோ" வழங்கியது. மேலும் இதே காலவரையில், அதாவது, 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்களுடன் முடிவடைந்த கால அளவிற்கு ரூ. 321 இலட்சம் மதிப்பிற்கு ஏஜென்சி அடிப்படையில் அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. 1975–76-லிருந்து இரும்பு உருக்குப் பொருள்களின் விற்பனையில் ஏற்பட்ட மந்த

நிலையின் காரணமாக, "சிட்கோ" முன்னெச்சரிக்கையுடன் அதன் செயல் திட்டங்களை மாற்றி அமைத்ததின் மூலம், இதர மூலப்பொருட்களை சிறுதொழில் அமைப்புகட்கு கிடைக்க வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு தேவையான கச்சாப் பொருட்கள் குறிப்பாக வத்தி மெழுகு, தீப்பெட்டி மெழுகு, பொட்டாசியம் குளோரைட், இரும்பு முதலியன தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் மூலம் விநியோகம் செய்யப் படுகின்றன. குறிப்பாக பாரபின் மெழுகு நமது தேவைக்கு சுமார் 10,000 டன்களும், தீப்பெட்டி மெழுகு 6,000 டன்களும் ஆண்டொன்றுக்குத் தேவைப்படுகின்றது. ஆயினும் இந்திய சர்க்காரிடமிருந்து இரண்டும் சேர்ந்து நமக்குக் கிடைப்பது சுமார் 6,600 டன்கள்தான். இது நமது தேவையில் 41 சதவீதமே ஆகும். ஆகவே தேவையான அளவு மெழுகு சிறு தொழில்களுக்கு வழங்க இயலவில்லை. இதை ஒட்டி சுத்திகரிக்கப்படாத மட்ட மெழுகு தனியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளது. இதனை சுத்திகரிப்பதற்கான தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இவை செயல்படத் தொடங்கும் போது, நிலைமை சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் சென்னையிலுள்ள பெட்ரோலியம் எண்ணெய் ஆலையினர் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

5. சிறு தொழில் பிரிவுகளுக்கு விற்பனை வசதியை ஏற்படுத்தி தருதல்.

சிறு தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு விலை முன்னுரிமையை அளிக்கும் அரசின் முடிவையொட்டி, தொழிற்பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை பெரிய அளவில் விற்பனை செய்ய 'சிட்கோ' விரும்பியது. இந்த ஆய்வாண்டில், தொழில் நுட்ப கைவினைப் பொருட்கள் பிரிவு தயாரித்த சீலிங் மின்விசிறியை விற்பனை செய்வதில் 'சிட்கோ' உதவியுள்ளது. பாலிதின் பைகள், தார்வண்ணச் சாயம், ஆட்டோமொபைல் புஷஸ் போன்றவற்றிற்கு ஆணைகளைப் பெற்றுத் தருவதிலும் 'சிட்கோ' உதவியுள்ளது.

6. மத்திய மூலதன உதவித் தொகை வழங்குதல்.

1974-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாள் வரை மத்திய முதலீட்டு உதவித் தொகை திட்டத்தின் கீழ் 639 புதிய பிரிவுகளுக்கு

கீழ்க்கண்டவாறு உதவித் தொகை இந்த நிறுவனம் மூலம் வ[illegible]ங்கப்பட்டுள்ளது:—

	1974–75.	1975–76.	1976–77.	1[illegible]7–78.
	(ரூபாய் இலட்சங்களில்.)			
எண்ணிக்கை ..	105	145	156	2[illegible]3
ஒப்பளிக்கப்பட்டவை.	11·69	40.31	38.86	57.34
கொடுக்கப்பட்டவை.	3.59	22.44	35.22	30.68

7. ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின் கீழும், வேலை வாய்ப்பு பெருக்கத் திட்டத்தின் கீழும் தொடக்க மூலதனத் தொகையை வழங்குதல்.

இத்திட்டத்தின்கீழ், 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய தொழில் நுட்பவினைஞர்கள் உட்பட படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு ரூ. 250 இலட்சம் அளவிற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 1,407 பேர் பயனடைந்தனர்.

8. ஏற்றுமதி அதிக அளவில் இறக்குமதி செய்ய சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி.

ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட மின்னணு பாகங்களையும், ஜிப் பேசனர்கள் (Zp Fa[illegible]ners) இறக்குமதியை செய்ய 'சிட்கோ' சிறு தொழில் பிரிவுகளுக்கு உதவியுள்ளது. மூக்குக் கண்ணாடி பிரேம்கள், சாவி பட்டுக் குஞ்சங்கள், கைக்குட்டைகள், கைவினைப் பொருள்கள், ஆகியவற்றை ரூ. 1,10,252 மதிப்பிற்கு 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய நேரடியாக அது ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்றுமதி விற்பனைமீது ரூ. 3,861 ஊக்கத் தொகையை 1976–77-ல் இந்திய அரசிடமிருந்து இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

9. தமிழக அரசின் சார்பில் தொழிற்பேட்டைகள் மற்றும் சீரமைக்கப்பட்ட மனைகள் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

தமிழகத்தில் உள்ள தொழிற்பேட்டைகளையும், சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளையும் அரசின் சார்பில் நிர்வகிக்கும் பொறுப்பு 'சிட்கோவிற்கு' அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி 33 தொழிற்பேட்டைகளும், 6 சீரமைக்கப்பட்ட மனைப்பேட்டைகளும் 'சிட்கோ' ஏற்று நடத்துகிறது. அரசுத் தொழிற்பேட்டைகளை மேலாண்மை செய்யும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முகமைப் பணிகள் பின்வருமாறு:—

(1) அரசுச் சொத்தை வாங்குதலும் விற்பனை செய்தலும் சம்பந்தப்பட்ட பணிகள்.

(2) புதிய அமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கு முதற்பொருள் செலவு செய்தல் பற்றியவை.

(3) தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

இதன்படி 783 தொழிற் கூடங்களையும், குறைந்த வாடகை தொழில் வீட்டு வசதி திட்டத்தின்படி கட்டப்பட்ட 1,117 தொழிலாளர் குடியிருப்புக்களையும் 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் 'சிட்கோ' நிர்வகித்து வருகிறது. மற்றும் தமிழக அரசின் சீரமைக்கப்பட்ட தொழிற்கூட மனைகளை நிர்வகிக்கும் பொறுப்பும் சிட்கோவிற்கு அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

10. அகதிகள் கூட்டுறவு நிதி வள வங்கியின் உதவியுடன் சிறு தொழில்களுக்கு கடன்கள்.

1978 ஜனவரி முதல் தொடங்கப்பட்ட இத் திட்டம், நிரந்தரமாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அகதி ஒருவருக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில், அகதிகள் கூட்டுறவு நிதிவள வங்கி, அனுப்பிய அகதிகளை வேலைக்கமர்த்திய சிறு தொழில் பிரிவுகளுக்கு கடன்கள் வழங்க வகை செய்கிறது

11. வருங்காலத் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டுக்கான 'சிட்கோவின்' திட்டத்தில், சிறு தொழில்களுக்கான பணிக்கொட்டகை கட்டுதல், தவணைக் கொள்முதல் அடிப்படையில் தொழிற்சாலைக் கொட்டகை கட்டுதல் ஆகியவை அடங்கும். இன்றியமையாத வசதிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கான முதலீடு ரூ. 354 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

	(ரூபாய் இலட்சங்களில்.)
சின்னஞ்சிறு தொழிற் கூடங்கள் கட்டுதல் ..	23.60
தவணை முறைத் திட்டத்தின்கீழ் தொழிற்கூடங்கள்.	250.00
மத்திய மூலதன மானியம்	30.00
சிட்கோ அகதிகள் மறுவாழ்வு மற்றும் கூட்டுறவு நிதி வள வங்கி திட்டத்தின்கீழ் உதவி	50.00
நிர்வாகப் பயிற்சி	0.45
மொத்தம் ...	354.05

இத்துடன் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் சிட்கோ திட்டப் பணிக்காகத் தனியாக ரூ. 40 இலட்சம் கடனாக அரசால் வழங்கப்படும். நிதி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ரூ. 37 இலட்சம் திரட்டப்படும். தொழில் முனைவர்களிடமிருந்து ரூ. 9 இலட்சம் பெறப்படும். இவ்வாறாக, மொத்தச் செலவு ரூ. 86 இலட்சமும் சரிக்கட்டப்படும். இந்த நிறுவனம் ரூ. 1,672 இலட்சம் வியாபாரத் தொகை காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 21,822 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். இதில் 11,661 பேர் கிராமப் பகுதியிலும், 10,161 பேர் நகர்ப்புறப் பகுதியிலும் இருப்பர்.

தொழிற் பேட்டைகளில் உள்ளவையும், சிட்கோ உதவி பெறுவனவுமான சிறு தொழில் அமைப்புகளில் நலி வடைந்த அமைப்புகளை இனங்கண்டு அவற்றிற்கு மறுவாழ்வு வழங்கிட வசதியாக பொது மதிப்பாய்வு நடத்திட 'சிட்கோ' உத்தேசித்துள்ளது. விரிவான முறையில் அமைந்த ஆலோ சனைப் பிரிவும் 'சிட்கோவில்' ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி).

அரசு 1965-ம் ஆண்டு தமிழ்நாடு சிறுதொழில் நிறு வனத்தை (டான்சி) அமைத்தது. தொழில் வணிக இயக்கு நரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 65 தொழிற் பிரிவுகளை வணிக அடிப்படையில் நடத்தும் நோக்கத்துடன் அரசு, இந் நிறுவனத்திற்கு மாற்றியது. 1—12—1965 அன்றையபடி டான்சிக்கு மாற்றப்பட்ட இருப்புக்களின் மதிப்பு ரூ. 989 இலட்சமாகும். இத் தொகையில் ரூ. 400 இலட்சம் பங்கு மூலதனமாகவும் எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப் பட்ட கடனாகவும் கருதப்பட்டது.

2. நிறுவனம் மேற்கொண்ட புதிய திட்டப் பணிகளின் நிலையான மூலதனச் செலவை (இயந்திரங்கள் முதலியன வாங்குவதற்காகும் செலவு ஏற்பதற்காக பங்குத்தொகையாக வும் கடனாகவும் அரசு உதவி அளித்து வருகிறது. ரூ. 150 இலட்சம் கடன் தொகையை பங்கு மூலதனமாக மாற்று வதன் மூலம் நிறுவனத்தின் கடன் பங்குத் தொகை விகிதம் (Debt Equity Ratio) மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. இந்த நிறுவனத்தில் தற்போது 57 உற்பத்திப் பிரிவுகள் உள்ளன. கீழே குறிப்பிட்டுள்ளவாறு அவற்றை ஒன்பது தொகுதிகளாகத் தொகுக்கலாம்:—

1. கட்டுமானப் பட்டறைகள்
2. கருவிப் பட்டறைகள்
3. வார்ப்படச்சாலை
4. பொறியியல் பிரிவுகள்
5. 'பேப்ரிகேஷன்' பிரிவுகள்
6. நச்சுத் தொழில்கள்
7. தோல் தொழில்கள்
8. கண்ணாடிப் பொருள்
9. பல்வகை/சிறப்புவகைப் பிரிவுகள்.

4. இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு கடந்த ஆண்டுகளில் அதிகரித்து வந்துள்ளது. இது 1965— 66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. 1976—77-ல் ரூ.1,062 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1976—77-ல் விற்பனை ரூ. 1,022 இலட்சமாக இருந்தது. 1977—78-ல் (1977 டிசம்பர் முடிய) உற்பத்தி அளவு ரூ. 650 இலட்சமாக உள்ளது. பல்வேறு ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் பிரிவுகள் வேறுபட்ட ஆதாய, விரய விவரங்களைக் காட்டுகின்றன. முன்பு இந்த நிறுவனம் ஆதாயத்தை ஈட்டிய போதிலும் கடும் போட்டி காரணமாக கடந்த சில ஆண்டுகளில் இது இழப்பு அடைந்துள்ளது. போதுமான அளவுக்கு உற்பத்திக்கான கோரிக்கைகளை இந்த நிறுவனம் பெற முடியவில்லை; கிடைத்தவற்றிலும் பெற்ற பண வீதங்கள், நிறுவனம் முன்னர் பெற்ற வீதங்களைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன. வணிக வகையில் தனித்தியங்கும் உற்பத்தி நிலையங்களாக இப்பிரிவுகளை நடத்த இந்த நிறுவனம் முயற்சிகளை எடுத்து வருகிறது.

5. ''டான்சி'' தனது நடவடிக்கைகளை பலதிறப்படுத்தி யுள்ளது. 'தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட்' என்றழைக் கப்படும் புதிய துணை நிறுவனம் மூலம் 'மாயூரம்' என்ற விற்பனைப் பெயரில் மொபெட்ஸ் ஸ்கூட்டர்களை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தின் ஒத்துழைப் புடன் இராணிப்பேட்டையில் இயந்திரக் கருவிகள் தயாரிப்பது மற்றொரு திட்டமாகும். இத்திட்டத்திற்கான கட்டிடங்கள் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. தென்னார்க்காடு மாவட்டம் குன்னம் கிராமத்தில் உள்ள தனது கல் உடைக்கும் தொழிற்சாலையில் வணிக முறையில் வெட்டியெடுப்பதற்காக 'டான்சி' கருங்கல் படிகங்களை வெட்டியெடுக்கத் தொடங்கியுள்ளது. கருங்கற்களை (Hand dressed granites) ஏற்றுமதி செய்வதற்காக ரூ. 36 இலட்சம் அளவிற்கு புகழ்பெற்ற ஜப்பானிய நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் ரூ. 17·4 இலட்சம் மதிப்புள்ள கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன..

பெங்களூர், ஹிந்துஸ்தான் இயந்திரக்கருவிகள் தயாரிப்பு நிறுவனம் வழங்கிய பாகங்களைக் கொண்டு கடிகாரம் செய்வதற்கான திட்டம் ஒன்று டான்சியால் செயல் படுத்தப்படுகிறது. உதகமண்டலத்தில் உள்ள இத்தொழிற்

சாலைக் கட்டிடங்கள் முடிவுற்று 21 பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி முதல் ஆரம்ப கட்ட உற்பத்தி தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்

இம்மாநிலத்தில் உள்ள கைத்திறப் பொருள் விற்பனைக்கு உதவ, அவற்றை உருவாக்கும் திறனை வளர்க்க, அவற்றை உருவாக்குபவர்களுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தர தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 1-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

2. அதற்கு முன்பு தொழில் வணிகத் துறையின் பொறுப்பில் இயங்கி வந்த விற்பனை மற்றும் உற்பத்தி பயிற்சி நிலையங்களின் இருப்புகளையும், பொறுப்புகளையும், சென்னை மாநில கைத்திறப் பொருட்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் வியாபார இருப்புகளையும் நிறுவனம் மேற்கொண்டது.

3. விற்பனை நிலையங்களின் தோற்றத்தை மேம்படுத்தவும், வெளி நாடுகளில் நடைபெறும் பொருட்காட்சிகளில் பங்கு கொள்வதை மேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, அந்நிய நாடுகளில் கைத்திறப் பொருட்களில் வியாபாரம் செய்துவருபவர்கள் நிறுவனங்களிடமிருந்து இந்த நிறுவனம் தற்போது பல தேவை ஆணைகளைப் பெற்று வருகிறது. விரைவில் இந்த நிறுவனம் கணிசமான அளவுக்கு அந்நிய செலவாணியை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. பயிற்சி நிலையங்களை நடத்துவதற்காக, பங்கு மூலதனத்திற்கு தொகை அளித்தல், கடன்கள், உதவித் தொகை கொடுத்தல் ஆகியவை மூலமாக இந்த நிறுவனத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள தனது விற்பனை நிலையங்களை ரூ.4.50 இலட்சம் செலவில் நவீனமாக்கவும், கன்னியாகுமரியில் சுமார் ரூ. 2.00 இலட்சம் செலவில் புதிய விற்பனை நிலையம் ஒன்றை திறக்கவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. கைத்திறப் பணியாளர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்க அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக சென்னையில் இந் நிறுவனத்தின் வடிவமைப்பு நிலையம் ஒன்று உள்ளது. இங்குள்ள கைத்திறப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க கேரளா, ஆந்திரப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய இடங்களிலிருந்து கைத்திறப் பொருள் வல்லுநர்களை அழைத்து வரவும், இப்பொருட்களின் தொழில் நுட்ப உத்திகளையும் உற்பத்தி நடைமுறைகளையும் அவர்கள் அறிந்து கொள்ள இயலும் வகையில் அகில இந்திய கைத்திறப் பொருட்கள் வாரியம், பிற நிறுவனங்கள் நடத்திவரும் பல்வேறு வடிவமைப்பு நிலையங்களுக்கு பணியாளர்களை அனுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் இலாப, நட்ட விவரங்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன :—

	(+) இலாபம்	(—) நட்டம்
	ரூ.	ரூ.
1973–74 ..	(+) 2,748	..
1974–75 ..	..	(—) 33,399
1975–76 ..	..	(—) 8,49,475

இந் நிறுவனத்தின் விற்பனை பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு :—

	[ரூபாய் இலட்சத்தில்]
1973–74	52.63
1974–75	1,33.60
1975–76	1,53.60
1976–77	1,50.85
1977–78	1,51.00
1978–1979 (எதிர்பார்க்கப்படுவது)	1,85.50

[1978 மார்ச் 27

தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனம் (TACEL)

தமிழ்நாட்டில் அரசினரால் நடத்தப்பட்ட பல்வேறு மட்பாண்டம் பொருள் உற்பத்திப் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றின் அலுவல்களை வணிக அடிப்படையிலேயே அமைக்க "தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்" என்ற நிறுவனத்தை அரசு 1973 டிசம்பர் திங்கள் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 2.00 கோடியாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 98.54 இலட்சமாகும். மேலும் அரசு ரூ. 98.56 இலட்சம் கடனுகை வழங்கியுள்ளது. இந்நிறுவனம் தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்திடமிருந்தும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திடமிருந்தும் (TANSI) 8 தொழில் பிரிவுகளை எடுத்துக் கொண்டு 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. இவற்றில் 3 பிரிவுகள் வணிக அடிப்படையிலானவை. ஏனையவை வளர்ச்சி நோக்கமானவை.

வளர்ச்சியும் செயலும்—

தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்டின் மூன்று வணிகப் பிரிவுகள் அதாவது விருத்தாசலம், 'டாசெல்' பீங்கான் தொழிற்சாலை, டாசெல் கற்குழாய் தொழிற்சாலை, விருத்தாசலம், டாசெல் இயந்திரச் தொழிற்சாலை, திருமழிசை ஆகியவை வரும் ஆண்டுகளில் தங்களுடைய செயல் திறனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள பீங்கான் பொருட்களுக்காக குறிப்பிட்ட தொழிற்பேட்டை பொது வசதி பணி நிலையம் ஒன்று உள்ளது. விருத்தாசலத்தில் உள்ள இத்தொழிற் பேட்டையில் 35 தொழிற் கொட்டகைகள் உள்ளன. ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உள்ள ஆதாரத்துடன் கைவினையர்களுக்கும், சிறிய தொழில் முனைவருக்கும் 12 தொழிற் கொட்டகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. ரூ. 25,000-லிருந்து ரூ. 50,000 வரையிலான ஆதாரத்துடன் ஏனைய 23 கொட்டகைகளை சிறு தொழில் அதிபர்கள் எடுத்துக்கொண்டுள்ளனர். தொழிற்பேட்டையில் உள்ள அடிப்படை இன்றியமையாத வசதிகளில், பதப்படுத்தப்பட்ட பொருள்கள் வழங்குதல், பொது உலையில் சுட்டுத்தருதல் ஆகியவை அடங்கும்.

1978 மார்ச் 27]

அடித்தள மக்களுக்கு வேலை வாய்ப்பு

இத் தொழிற்பேட்டையில் உள்ள தொழில் முனைவர்கள் சுமார் 600 பேருக்கு, முக்கியமாக சமூகத்தின் அடித்தள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றனர். அவர்களுடைய உற்பத்தி மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20·00 இலட்சமாகும். சிறிய தொழில் முனைவர்களுக்கு பெரிய அளவில் உதவும் தனது முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த நிறுவனம், பணிநிலையத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1,200 டன் உற்பத்தித் திறனுள்ள இயந்திரச் சூளை ஒன்றை நிறுவி வருகிறது. தொழில் முனைவர்கள் தங்களிடம் உள்ள வேலைவாய்ப்பு வசதியை இரட்டிப்பாக்க உதவுவதுடன், ஆண்டு ஒன்றில் உற்பத்தி மதிப்பை ரூ. 50·00 இலட்சமாக அதிகரிக்கவும் இம்முயற்சி உதவும். 1977–78-ல் இந்த பொதுப்பணி வசதி நிலையம் ரூ. 9.25 இலட்சம் அளவுக்கு பணிவசதி செய்துள்ளது. வரும் நிதியாண்டில் இது ரூ. 14·00 இலட்சமாக கூடுதலாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. விருத்தாசலத்திலுள்ள கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையமும் பெரம்பூரிலுள்ள கலைப் பொருட்கள் நிலையமும் பயிற்சி உற்பத்தி இரண்டும் இணைந்த நிலையங்களாகும். இவற்றில் முறையே ஆண்டொன்றுக்கு 15 பேருக்கும் 10 பேருக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியாளர்களுக்கு மாதமொன்றுக்கு 50 ரூபாய் பயிற்சி உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. பழைய பண்பாடு நவீன பண்பாடுகளுக்கு உகந்த வகையில் பீங்கான் கலைப்பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்த இரு பிரிவுகளும் தனிக் கவனம் செலுத்துகின்றன. சென்னை, பம்பாய், டில்லி முதலிய ஊர்களில் கலையுணர்வுள்ள மக்களிடையே இரு நிலையங்கள் உருவாக்கிய பொருட்கள் நன்கு பிரபலமாயுள்ளன. இப்பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக சென்னை, பெங்களூர், கொச்சி முதலிய இடங்களில் இந்த நிறுவனம் விற்பனைக் காட்சிக் கடைகளை ஏற்படுத்தியுள்ளது. ஹைதராபாத்திலும் இக் கடை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளை மேம்படுத்தும் தனது முயற்சியில் சேலம் மாவட்டம் ஓமலூரில், சிறிய பீங்கான் தொழிற் பிரிவு ஒன்றை 'டாசெல்' நடத்தி வருகிறது. அதனுல் அருகில் உள்ள கிராமப்பகுதிகளைச் சேர்ந்த ஓரளவு படித்த இளைஞர்களை சுமார் 50 பேருக்கு இப்பிரிவு வேலைவாய்ப்பு

அளிக்கின்றது. தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் கீழ்க்கண்ட 3 திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 1978–79 ஆண்டுத் திட்டத்தில் ரூ. 10 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

எதிர்காலத் திட்டம்

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. விருத்தாசலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் கூடுதலாக மூன்று கொட்டகைகள் கட்டுதல்.	6.00
2. விருத்தாசலத்தில் உள்ள பணிநிலையத்தை விரிவுபடுத்துதல்.	2.40
3. ஓமலூரில் கூடுதல் கொட்டகை கட்டுதலும், விரிவுத் திட்டமும்.	2.25
மொத்தம் ..	10.65

இத் திட்டங்களால் கூடுதலாக 100 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்கள்.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு துறைத் திட்டங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

2. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் கீழ்க் காணும் நான்கு பெரும் பிரிவுகள் அடங்கியுள்ளன. அவை யாவன :—(1) பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் (2) அனல் மின் நிலையம் (3) உரத் தொழிற்சாலை (4) நிலக்கரித் தூளைக் கரிக் கட்டிகளாக்கும் தொழிற்சாலை. நிலக்கரிச் சுரங்கத்தின் முதலாவது கட்டத்தில், ஆண்டொன்றுக்கு 3·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்க வேண்டுமென திட்ட மிடப்பட்டது. ரூபாய் 87 கோடி செலவில் ஆண்டு ஒன்றுக்கு

6·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக் கப்படும் வகையில் தற்போதுள்ள பழுப்பு நிலக்கரி சுரங்கத் தின் திறனை உயர்த்துவதற்கான ஒரு திட்டத்திற்கும் உரத் தொழிற்சாலையில் பழுப்பு நிலக்கரியை எரி பொருளாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு அதற்குப்பதிலாக ரூ. 12.57 கோடி செலவில் எரியெண்ணெயைப் பயன்படுத்துவதற் கான ஒரு திட்டத்திற்கும் இந்திய அரசு ஏற்பளித்துள்ளது. 30–9–1977-ல் அன்றுள்ளவாறு இந்த நிறுவனம் 16,735 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

இரயில் பெட்டித் தொழிற்சாலை, சென்னை.

3. இந்திய அரசு, இரயில்வே அமைச்சகத்தின் கீழ் உற் பத்தி தொழிற்சாலையாக இயங்கிவருகிற இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, நடப்பாண்டில் தொடர்ந்து ஏற்றுமதி ஆணைகளை நிறைவேற்றி வந்தது. இத்தொழிற்சாலை, தைவான், பர்மா, ஜாம்பியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளுக்கு இரயில் பெட்டிகளையும், உதிரிப் பாகங்களையும் வழங்கி வந்துள்ளது. 1–4–1977 முதல் 31–12–1977 வரை உள்ள கால அளவில், இது 491 பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இத்தொழிற்சாலை தொடங்கப்பட்ட நாளிலிருந்து 31–12–1977 வரை இது உற்பத்தி செய்துள்ள வண்டிக்கூடுகள் 12,996 ஆகும். இவற் றில் 10,296 வண்டிக் கூடுகள் முழுமையான இரயில் பெட்டிகளாக தயாரிக்கப்பட்டு வெளிவந்தன. இந்த தொழிற்சாலை 13,147 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தொழிற்சாலை.

4. இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 1.4 இலட்சம் டன் மசகெண்ணெய் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. இத்தொழிற்சாலை ரூ. 88.89 இலட்சம் மூலதன முதலீட்டுடன் இயங்கி வருவதுடன், 180 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கிறது. இத்தொழிற்சாலையில் 1977 ஏப்ரல் முதல் 1977 டிசம்பர் வரை 63,056 கிலோ லிட்டர் மசகெண்ணெய் (மதிப்பு ரூ. 19 கோடி) உற்பத்தி செய்யப்பட்டது.

[1978 மார்ச் 27

சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை.

5. இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை இப்பொழுது முழு உற்பத்தித் திறனில் இயங்கி வருகிறது. 1977 ஆம் ஆண்டில், ரூ. 254 கோடி மதிப்புள்ள 2.46 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டது. கீழ்க்கண்ட இனங்களைப் பொறுத்த மட்டில் 1976 ஆம் ஆண்டினை உற்பத்தியின் அளவுடன் ஒப்பிடுகையில், 1977 ஆம் ஆண்டில் உற்பத்தியின் அளவு உயர்ந்துள்ளது.

உற்பத்தி.	1977.	1976.
	('000 டன்களில்)	
விமான எரியெண்ணெய் ..	142	89
உயர்வேக டீசல் எண்ணெய் ..	540	530
தார்	189	180
மசகெண்ணெய் அடிப்படை ..	161	147

ஆண்டொன்றுக்கு சுமார் 20,000 டன் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையை 4.54 கோடி ரூபாய் செலவில் அமைப்பதும், 30,000 டன் லீனியர் அல்கையல் பென்சின் (Linear Alkyl Benzene) தயாரிக்கும் தொழிற்சாலையை 31.6 கோடி ரூபாய் செலவிலும் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சென்னையிலுள்ள எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 593.

சென்னை உரத் தொழிற்சாலை.

6. மணலியில் நிறுவப்பட்டுள்ள உரத் தொழிற்சாலை, 1971 நவம்பரில் உற்பத்தியினைத் தொடங்கியது. இது 1,079 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அமோனியா, யூரியா, போன்றவைகளாகும். இந்நிறுவனம், திருவாளர்கள் அம்கோ இந்தியா இன்கார்ப்பரேட்டட் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒன்றைச் செய்து

1978 மார்ச் 27]

கொண்டுள்ளது. திருவாளர்கள் அம்கோ இன்கார்பரேட்டட் நிறுவனம், சிகாகோவிலுள்ள அம்கோ அனைத்து நாட்டு எண்ணெய்க் கம்பெனியின் துணை நிறுவனமாகும்.

இத்தொழிற்சாலையின் நிறுவப்பட்ட திறனும், 1977 ஆம் ஆண்டின் உற்பத்தியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	நிறுவப்பட்ட திறன். (மெட்ரிக் டன்.)	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி. (மெட்ரிக் டன்.)
அமோனியா	347,500	194,329
யூரியா	292,000	242,928
என்.பி.கே.	544,500	418,725

கனரக வண்டிகள் தொழிற்சாலை, ஆவடி.

7. போர்க் கவசவண்டிகள் மற்றும் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான பிற வண்டிகளை உற்பத்தி செய்வதற்காக, புது டெல்லியிலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின் கீழ் நிறுவப்பட்ட துறையின் தொழிற் பிரிவாகும்.

படைக்கலத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

8. இத்தொழிற்சாலை, பாதுகாப்புக்குத் தேவைப்படுகின்ற சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்கிறது. 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுபடி இத்தொழிற்சாலையில், இந்திய அரசு, ரூபாய் 971.04 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது. இத் தொழிற்சாலையில் தற்போது, 2,344 அதிகாரிகள், தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், சென்னை.

9. இத்தொழிற்சாலை, தொலை அச்சுப் பொறிகள் (Teleprinters) மின் தட்டச்சுப்பொறிகள், முத்திரைத்தாளை இரத்து செய்யும் தானியங்கு இயந்திரம், தொலைபேசி, தொலை தட்டெழுத்து (Telex) தொடர்பகங்களுக்கான மின்விசைப் பொறிகள், தொலை செய்தியை பதிவுசெய்து மீண்டும் வழங்கும் தானியங்கிப் பொறிகள் (regenerative repeaters) ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ரூ. 256.77 இலட்சம் மதிப்புள்ள 3,734 தொலையச்சுப் பொறிகளும், துணைக் கருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலை 1,944 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

இந்துஸ்தான் நிழற்படச்சுருள் தொழிற்சாலை, உதகமண்டலம்

10. இத்தொழிற்சாலையில் திரைப்படச் சுருள்கள், ஊடுகதிர் படச்சுருள்கள், நிழற்படச்சுருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டில் ரூபாய் 3,561·45 இலட்சம் மதிப்புள்ள 9.150 மில்லியன் சதுர மீட்டர் அளவிற்குப் பலவகைப்பட்ட நிழற்படப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந் நிறுவனம் 2,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இந்நிறுவனம் உற்பத்தி செய்த பொருள்களின் விவரங்கள் பின்வருமாறு:—

உற்பத்தி.	1977 ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி. (சதுர மீட்டரில்.)	மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.)
திரைப்படச் சுருள் பாசிட்டிவ்.	21,00,206	495.30
திரைப்படச் சுருள் (கலர்) பாசிட்டிவ்.	20,12,251	906.61
திரைப்பட ஒலி	4,42,245	115.44
நிழற்படம் எடுக்கும் தாள் ..	21,20,724	498.01
மருத்துவ ஊடுகதிர்த்தாள்	18,49,008	1,019.95
நிழற்படச் சுருள் ..	4,79,967	403.47
ஏனையவைகள்	1,45,634	122.67
மொத்தம் ..	91,50,035	3,561.45

வருங்கால வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 'கிராபிக் ஆர்ட்ஸ்', ஊடுகதிர் படச்சுருள்களை மாற்றுவதற்காக, சென்னையில் உள்ள அம்பத்தூரில் மாற்று வசதியை அமைக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூபாய் 2 கோடி முதலீடு செய்யவும், சுமார் 150 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கவும் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து இறுதி ஏற்பளிப்பு எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஏற்பளிப்பு வந்தவுடன் ஒரு வருடத்திற்குள் தொழிற்சாலை உற்பத்தியினைத் தொடங்கும்.

மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, கிண்டி, சென்னை.

11. நடப்பாண்டில், இத் தொழிற்சாலை ரூ. 50·81 இலட்சம் மதிப்புள்ள மருத்துவ அறுவை சிகிச்சைக் கருவிகளை ரூ. 1 கோடி மூலதனத்தில் மருந்துகள் தயாரித்துள்ளது. கலந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை (Formulation Plant) ஒன்றிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத் தொழிற்சாலையின் உற்பத்தி, அடுத்த நிதியாண்டு தொடக்கத்தில் தொடங்கும். சென்னை தொழிற்சாலை பிரிவில் அண்மையில் தொடங்கப்பட்ட கருவிகள் இணைப்புப் பிரிவு (Fabrication Unit) இந்திய மருந்துகள்-இரசாயன மருந்துப் பொருள்கள் தயாரிப்பு (IDPL) நிறுவனத்தின் துணை நிறுவனங்களுக்காக செய்முறைக் கருவிகள், கொள்கலன்கள் இவற்றைத் தயாரித்து வருகிறது

பாரத் கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

12. அனல் மின் நிலையங்கள் முதலியவற்றிற்குத் தேவைப்
படும் கனரக கொதிகலன்கள், ஏனைய சாதனங்கள் ஆகிய
வற்றை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள மத்தியத்
துறையைச் சேர்ந்த ஒரு பெரிய தொழிற்சாலையாகும். இத்
தொழிற்சாலை 2,500 மெகாவாட் அல்லது 87,000 மெட்ரிக்
டன் கொதிகலன் கூட்டுறுப்புகளின் திறன் கொண்டதாகும்.
இத் தொழிற்சாலையில் 37 கோடி ரூபாய் முதலீடு
செய்யப்பட்டுள்ளது. இதில் 11,000 பேர்கள் பணிபுரி
கின்றனர். 1977-78 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலையின்
உற்பத்தி, ரூ. 161·50 கோடி மதிப்புள்ள 81,620 மெட்ரிக்
டன்களாகும். 1976-77 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி
ரூ. 152·6 கோடி மதிப்புள்ள 75,000 மெட்ரிக் டன்களாகும்.

சேலம் உருக்காலை.

13. சேலத்தில் கிழ்க்காணும் கலவைக்கான பொருட்களைக் கொண்டு தனி உருக்காலை ஒன்றை நிறுவுவதற்காக முதலீடு செய்வது பற்றிய முடிவினை 1972 ஆம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு எடுத்தது.

தகடுகளும் துண்டுகளும். (1)	ஓராண்டிற்கு உற்பத்தி அளவு. (2) (டன்களில்.)
வெப்பமூட்டாமல் உருட்டி அடிக்கப்பட்டது ..	65,000
வெப்பமூட்டப்பட்டு உருட்டி அடிக்கப்பட்டது ..	5,000
சிலிகான் உருக்கு—வெப்பமூட்டாமல் அடிக்கப்பட்டது	75,000
ஏனைய சிறப்பு உருக்குகள்-வெப்பமூட்டப்பட்டு உருட்டி அடிக்கப்பட்டது ..	50,000
மொத்தம் ..	1,95,000

இத்திட்டத்தை நிறைவேற்ற, சேலம் உருக்காலை என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை 1972 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இந்திய அரசு நிறுவியது. சேலம் உருக்காலையின் விரிவான திட்ட அறிக்கை 1977 மே திங்களில் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத் தொழிற்சாலை இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்படும். ரூ. 126·81 கோடி முதலீடு செய்து 40,000 டன்கள் வெப்பமூட்டப் பட்டு அடிக்கப்பட்ட சுருள்களைப் பயன்படுத்தி 32,000 டன் கருக்காத உருக்குத் தகடுகளும் துண்டுகளும் உற்பத்தி செய்வதற்கான, வசதிகளை செய்யும் வகையில், முதற்கட்டப்பணி உடனடியாக மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணியுடன் தொடர் புடைய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சேலத்தில் துருப்பிடிக்காத எஃகு தகடுகளை வெப்பமூட் டாமல் உருட்டி அடிக்கப்படுவதற்கான தொழில்நுட்ப பணிகளையும், கலன்களையும் வழங்குவதற்காக பிரான்ஸில் உள்ள திருவாளர்கள் பெகோட் லாயருடன் (M/S. Peugeo

Loire, France) 1978 ஜனவரியில் நிறுவனம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. இத்தொழிற்சாலை 1981 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியினைத் துவங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தொழிற்சாலைக்கும், தொழிற்சாலை யுடன் தொடர்புடைய ஏனைய பல்வேறு திட்டங்களுக்கும் தேவைப்படும் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு உருக்காலை நிறுவனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ஆலங்குளத்தில் சிமிட்டி தொழிற்சாலையை அமைப்பதற் காகவும், அரக்கோணத்தில் ஒரு தொடர் வார்ப்பட உருக்காலையை (இப்பொழுது தமிழ்நாடு உருக்காலை என்றழைக்கப்படுகிறது) அமைப்பதற்காகவும் 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. பின்னர் தனியார் தொழில் முனைவர்களின் உடனுழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதனுடைய செயல் வரம்பு விரிவுபடுத்தப்பட்டது. சிறிது காலத்திற்கு, அதாவது 1969–71-ல் டிட்கோ பல நலிந்த நிறுவனங்களுக்கு அவற்றின் பங்கு மூலதனத்தில் பங்கு ஏற்பதுடன் அவைகளுக்குக் கடனும் வழங்கியது. சுமார் 400 கோடி ரூபாய் மொத்த மூலதனத்துடனும், சுமார் 21,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடனும் 40 திட்டங்களை அமைக்க வேண்டும் என்ற குறிக்கோள் அளவுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தற்போது மாநில அரசின் ஒரு முக்கிய நிறுவனமாகவும், நாட்டிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே முக்கியமான தொரு நிறுவனமாகவும் ஆகிவிட்டது.

2. 1977–78 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் அனுமதி பெற்ற மூலதனம் ரூபாய் 17 கோடியிலிருந்து ரூபாய் 25 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின்

பங்கு மூலதனம், கடன் முதலிய தொகைகளைத் தவிர, இந்நிறுவனம் கடனீட்டுறுதி ஆவணங்களை வெளியிடுவதன் மூலமும்; பொது மக்களிடம் வைப்புத் தொகைகளை பெற்றுக்கொள்வது மூலமும், தன்னுடைய நிதிவாயில்களை பெருக்கியுள்ளது. 31–12–1977 அன்றுள்ளபடி, செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 17·27 கோடி ஆக இருந்தது. அதன் பிறகு மூலதன வாயில்கள் ரூ. 16.91 கோடி; ஆகமொத்தம் ரூ. 34.18 கோடி.

3. 31–3–1977, 31–12–1977 தேதிகளின்படி பல்வேறு பொதுத்துறை, கூட்டுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட பணமுதலீடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள்.	31–3–1977-ன் படி முதலீடுகள்.	31–12–1977ன் படி முதலீடுகள்.
	(ரூபாய் கோடியில்.)	
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.	10·57	12·65
தமிழ்நாடு ஸ்டீல்ஸ்—உருக்கு பாளங்கள் திட்டம், அரக்கோணம்.	9.25	9.31
ஏனைய பொதுத்துறைத் திட்டங்கள்	..	0·16
கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகளுக்கான முதலீடும், கடனும்.	8·83	9·34
	28·65	31·46
இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பும், நடைமுறை மூலதனமும்.	2·62	2·72
மொத்தம் ..	31·27	34·18

4. கூட்டுத்துறை நிறுவனங்கள், நலிந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றில் 31–12–1977-ன் படி முதலீடு விவரங்கள் பிற்சேர்க்கை X-ல் கொடுக்கப்பட்டுள்ளது. 1978–79-ன் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி நிதி ஒதுக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

பொதுத்துறை நிறுவனங்கள் :—		(ரூபாய் கோடியில்.)
அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை ஆலங்குளம் சிமிட்டி தொழிற்சாலை ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தயாரிப்பு தொழிற்சாலை.	..	9.99
தமிழ்நாடு ஸ்டீல் அண்ட் ரோலிங் மில்ஸ் தொழிற்சாலை, அரக்கோணம்.	..	1.25
தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட்	..	2·00
கூட்டுத்துறை நிறுவனங்கள்.		
கூட்டுத் துறை நிறுவனங்களுக்கு முதலீடும் கடனும்.	..	3·88
மொத்தம்	..	17·12

இந்நிறுவனத்தின் தோற்றம் முதல் 31–3–1977 வரையிலான காலத்தில் நிதி வாயில்கள், செலவுகள் ஆகியவற்றைக் காட்டும் அறிக்கை இணைப்பு XI-ல் உள்ளது.

பொதுத்துறை நிறுவனங்கள்.

5. தற்போது பொதுத்துறையில் ஐந்து திட்டப்பணிகளை டிட்கோ மேற்கொண்டுள்ளது. இரண்டு திட்டப் பணிகளில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று திட்டப் பணிகளும் பல்வேறான நிலைகளில் செயல்படுத்தப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும் வருகின்றன. இவை ஒவ்வொன்றிலும் உள்ள முன்னேற்றம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது. அரியலூரில் சிமெட்டித் தொழிற்சாலைத்

திட்டத்தையும், ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டித் தகடுகள் தொழிற்சாலைத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காகவும், ஆலங்குளத்தில் ஏற்கெனவேயுள்ள சிமிட்டித் தொழிற்சாலையை நிர்வகிப்பதற்கும், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயரில் துணை நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை:

6. ஆலங்குளம் சிமெண்டு தொழிற்சாலை ஆண்டுக்கு 4 இலட்சம் டன் சிமெண்டை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. இதில் நாளொன்றுக்கு 1,200 டன் சிமிட்டி உற்பத்தி செய்யும், ஈரத் தயாரிப்பு முறையுடைய சுழற் சூளைகள் இரண்டு உள்ளன. இந்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சிமெண்ட் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் தொடங்கியது. பின் தங்கிய பகுதி ஒன்றில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலை 1,450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

இந்தத் தொழிற் பிரிவில் 1975–76 முதல் 1977–78 ஆண்டு வரையிலான சிமிட்டி உற்பத்தி, விற்பனை விபரம் பின்வருமாறு :—

காலம்.		உற்பத்தி.		சிமிட்டி விற்பனை (டன்களில்).
		அளவு. (டன்களில்.)	நிறுவத் திறனளவு (சத வீதத்தில்.)	
1975–76	..	2,62,729	66	2,58,052
1976–77	..	3,38,445	85	3,33,294
1977–78 (திருத்த மதிப்பீடு)	..	3,30,000	83	3,35,000

7. 1976–77ல் இந்த தொழிற்சாலையின் சாதனை பாராட்டத் தக்கதாக இருந்தது. தற்கால அறிவியல் முறைகளில் சுரங்கங்கள் அடைந்துள்ள வளர்ச்சியாலும், மேலும் நவீன முறைகள் கையாளப்படுவதாலும் தகுந்த முறையில் திட்டம் இயற்றுவதாலும் இத்தொழிற்சாலையானது, மின்வெட்டு இருந்த போதிலும் கூட (இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களாகும்), 3,38,445 டன்

உற்பத்தி செய்து வியத்தகு சாதனை புரிந்துள்ளது.
விற்பனையும் சுமார் 3,33,294 டன் அளவிற்கு எட்டியுள்ளது.
இந்த ஆண்டு 65,320 டன் சிமிட்டி ஈரானுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில்
ரூ. 405.00 இலட்சமாக இருந்த விற்பனை
இந்த ஆண்டு ரூ. 742.02 இலட்சமாக உயர்ந்துள்ளது.
இத்தொழிற்சாலை 1976–77ஆம் ஆண்டில் ரூ. 1.99 இலட்சம்
ஆதாயம் ஈட்டியுள்ளது. சூளை ஒன்றில் பழுது பார்க்கும்
வேலைகள் மேற்கொண்டிருந்ததால் அது சுமார் மூன்று திங்கள்
கால அளவிற்கு பயனற்றதாக இருந்தது ; மேலும் முதல்
மூன்று மாத கால அளவிற்கு மின் வெட்டு இருந்தது. இத்
தடைகள் இருந்த போதிலும் இத்தொழிற்சாலை 1977–78
ஆம் ஆண்டில் 3,30,000 டன் சிமிட்டி உற்பத்தி செய்யத்
திட்டமிட்டுள்ளது. 1978–79ஆம் ஆண்டில் இத்
தொழிற்சாலை அதன் முழு உற்பத்தித் திறனை அடைந்து
விடத் திட்டமிட்டுள்ளது.

அரியலூர் சிமிண்டு ஆலை:

அரியலூரில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன்கள்
8. அரியலூரில் ஆண்டொன்றுக்கு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை
திறனுள்ள சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை
அமைப்பதற்கான தொழில் உரிமம் ஒன்று பெறப்பட்டு
உள்ளது. இந்த தொழிற்சாலை உலர்ந்த முறைப்படி
சிமெண்ட் தயாரிக்கும். இத்திட்டத்திற்கான மூலதனச்
செலவு ரூ. 29.00 கோடி ஆகும். திருவாளர்கள் ஹோல்
டெக் இஞ்சினியர்ஸ் (பி) லிமிடெட் என்ற நிறுவனம் இத்
திட்டத்திற்கான பொறியியல் ஆலோசகர்களாக நியமிக்கப்
பட்டுள்ளனர். பெரிய உற்பத்தியாளர்களிடம் பெருமளவு
இயந்திரங்களையும் சாதனங்களையும் பெறுவதற்குரிய தேவைக்
குறிப்புப் பட்டியல்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன ;
அவற்றில் சில ஏற்கெனவே வந்து விட்டன. கட்டட
திர்மாணப் பணி, 1977ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில்
தொடங்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் நிறுவும் பணி
1977ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டு
உள்ளது. ஆண்டொன்றுக்கு 2.5 இலட்சம் டன் உற்
பத்தி செய்யும் திறனுள்ள முதல் சூளை, 1978ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்களில் தொடங்கப்படும் என எதிர்
பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1977ஆம் ஆண்டு
இறுதி வரை, ரூ. 9.01 கோடி செலவிடப்பட்
டுள்ளது. இரண்டாவது சூளை இயக்கப்பட்ட பின்,
1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களுக்குள், இந்த தொழிற்
சாலை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் என்ற

முழு உற்பத்தித் திறனளவை எட்டிவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இத் திட்டப்பணி முடிவடையும் போது, 1,100 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும்.

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் திட்டம்:

9. ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற்சாலை ஒன்று ரூ. 1.66 கோடி மதிப்பீட்டுச் செலவில் இராமநாதபுரம் மாவட்டத் தில் உள்ள ஆலங்குளத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக் கடிதம் பெறப்பட்டுள்ளது. இத் திட்டம் 1978–79ஆம் ஆண்டில் விரைவில் செயலாக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டப்பணி முடி வடைந்த பின்னர் இது சுமார் 270 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்பரேஷன் லிமிடெட். (TANCEM.)

10. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு துணைக் கம்பெனியாக தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்ப ரேஷன் லிமிடெட் டான்சம்நிறுவப்பட்டது. இரண்டுசிமெண்ட் தொழிற்சாலைகள், அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடு தொழிற் சாலை ஆகியவற்றின் நிர்வாக பொறுப்பினை இது மேற் கொண்டுள்ளது.

இந் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடி ஆகும். 1977ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் நாள் நிலவரப்படி அதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5·87 கோடியாகும். 'டிட்கோ' நிறுவனத்தைச் சேர்ந்த இந்த இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 8·11 கோடியாகும். டிட்கோ 1—4—76-ல் இவற்றை இந் நிறுவனத்திடம் ஒப்படைத் துள்ளது.

தமிழ்நாடு உருக்குத் தொழிற்சாலை, அரக்கோணம்:

11. வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணத்தில் நிறுவப் பட்டுள்ள இந்த தொழிற்சாலை தொடர் வார்ப்பட தொழில் முறையை பயன்படுத்தி உருக்கு பாளங்களைத் தயாரிப்பதற்கு இரும்புத் துகள்களை பயன்படுத்தி வருகிறது. இந்தியாவில் பொதுத் துறையில் முதன் முறையாக நிறுவப்பட்டுள்ள சிறு

உருக்குத் தொழிற்சாலை இதுவேயாகும். ஒரே ஒரு மின் ஒளி உலையும், 100 ச.மி. மீட்டர், 75 ச.மி. மீட்டர் அளவுள்ள உருக்குப் பாளங்கள் தயாரிப்பதற்கான செங் குத்தான தொடர் வார்ப்பு இயந்திரம் ஒன்றும் தற்போது நிறுவப்பட்டுள்ளன. இதனால் கிடைக்கக்கூடிய திறன் ஓர் ஆண்டுக்கு 40,000 டன் ஆகும். இது சுமார் 600 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1977ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம் நாள் வரை இத்திட்டத்திற்கான மூலதனச் செலவு ரூ. 6.78 கோடி ஆகும்.

12. இந்த தொழிற்சாலை 1—7—1972-ல் வணிக உற்பத்தி யைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலையில் 1975-76 முதல் 1977-78 வரை செய்துள்ள உற்பத்தி விற்பனை குறித்த விபரம் பின்வருமாறு :—

காலம்.	உருக்குப் பாளங்கள் உற்பத்தி. அளவு (டன்னில்)	உருக்குப் பாளங்கள் உற்பத்தி. நிறுவத் திறனளவு (சதவீதத் தில்).	கிடைக்கக் கூடிய திறனளவு (சதவீதத் தில்).	விற்பனை (டன்னில்).
(1)	(2)	(3)	(4)	(5)
1975–76	12,272	25	31	10,114
1976–77	28,948	58	72	33,554
1977–78 (திருத்த மதிப்பீடு).	25,100	50	63	28,000

1977–78 முதல் மூன்று திங்கள் கால அளவிற்கு மின் வெட்டு இருந்தும், 9—9—1977 முதல் 9—10—1977 வரை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருந்தும், இத் தொழிற்சாலை இவ்வாண்டில் 25,100 டன் பாளங்களை உற் பத்தி செய்யும் என்றும், ரூ. 6.19 கோடி மதிப்புள்ள 28,000 டன் பாளங்களையும் உருட்டியடிக்கப்பட்ட பொருள் களையும் விற்பனை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1977–78ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படியும் 1978–79ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் படியும் முறையே ரூ. 78 இலட்சம், ரூ. 59 இலட்சம் நிகர இழப்பு இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

உருக்கு உருளை ஆலைத்திட்டம்:

13. தமிழ்நாடு உருக்கு உற்பத்திப் பொருள் ரகங்களை பல தரப்படுத்தவும் அதை மேலும் ஆதாயம் ஈட்டும் வகையில் செயல்படச் செய்யவும் தனி உருக்கு பாளங்களை மீண்டும் உருட்டியடிக்கும் வசதிகளுடன் கூடிய உருளை ஆலை ஒன்றை ரூ. 8 கோடி மூலதனச் செலவில் நிறுவுவது குறித்துத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் 1978–79 ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14. நிதி வசதிகளும் தேவையான தொழில் நுட்ப அறிவும் கொண்டுள்ள தொழில் முனைவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து கூட்டுத் துறையில் திட்டங்களை நிறுவுவதிலும், 'டிட்கோ' நிறுவனம் முனைப்பான பங்கேற்றுள்ளது. இதுவரை பங்கு மூலதனத்தில் 'டிட்கோ' நிறுவனம் 26 சதவீதமும், தனிப் பட்ட தொழில் முனைவர்கள் 25 சதவீதமும், எஞ்சிய 49 சதவீதம் பொதுமக்களிடமிருந்து பெற்றும் கூட்டுத்துறை நிறுவனங்களை 'டிட்கோ' அமைத்து வந்துள்ளது. கங்கப்பா பேப்பர் மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநா திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் நாள் ஒன்றுக்கு 30 டன் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலையை டிட்கோ 15 சதவிகிதம் பங்கு மூலதனம் போட்டு நிறுவுவதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித் துள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் அமைய இருக்கும் இத்தொழிற்சாலையின் மூலம் 300 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பும், 1,000 பேர்களுக்கு மறைமுகமாக வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

15. மாநில அரசு பிறப்பித்துள்ள வழி முறைகளின்படி ரூ. 100 லட்சத்திற்கு மேல் செலவு மதிப்புடைய திட்டங்கள் மட்டுமே டிட்கோவால் மேற்கொள்ளப் படுகின்றன. கூட்டுத் துறையில் 33 திட்டங்கள் பல்வேறு செயலாக்க நிலைகளில் உள்ளன. அவற்றில் 21 கம்பெனிகள் ஏற்கனவே கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள

கம்பெனிகளில் 12 கம்பெனிகள் ஏற்கனவே உற்பத்தியைத் தொடங்கி உள்ளன. 9 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய 12 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. உற்பத்தி செய்து வருகின்ற 12 கூட்டுத் துறை நிறுவனங் களின் மொத்த விற்பனை 1-4-77 முதல் 31-12-77 முடிய ரூ. 67·75 கோடி ஆகும்; மேலும் இவை சுமார் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இதுவன்றி, கூட்டுத் துறையில் மேலும் உருவாக்கப்பட்டு வருகின்ற 9 நிறுவனங்களின் மொத்த மூலதனச் செலவு ரூ. 47·45 கோடி ஆகும்; இறுதியாக அவை சுமார் 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். இந்த 33 திட்டங்கள் குறித்த விபரங்களை பிற்சேர்க்கை XII-ல் காணலாம்.

16. ரேயான் கிரேடுபல்ப் பைபர் திட்டம்.

ரேயான் இழைத் திட்டத்தை ரூ. 40 கோடி செலவில் செயல்படுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம், நாள் ஒன்றுக்கு 50 டன் ரேயான் கிரேடு கூழ்ப் பொருள்களையும் 40 டன் விஸ்கோஸ் பாலிஞசிக் இழைகளையும் உற்பத்தி செய்யும்.

17. தூத்துக்குடி ஆல்கலிகெமிக்கல்ஸ் நிறுவனம்.

தூத்துக்குடி கடற்கரையோரப் பகுதிகளில் கிடைக்கும்
உப்பையும் சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பரேஷன் (ஸ்பிக்) நிறுவனத்திடமிருந்து உபரியாகக்
கிடைக்கும் அமோனியாவையும் கொண்டு சோடியம் கார்ப
னேட் (Na$_2$Co 3), அமோனியம் குளோரைடு தயாரிப்பதற்
காக, இந்நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறுவனம்
தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலைக்கு அருகாமையில்
அமைக்கப்படும். ரூ. 34 கோடி மூலதனச் செலவில் அமைக்
கப்படும் இந்த நிறுவனம், ஆண்டொன்றுக்கு 70,000 டன்
சோடியம் கார்பனேட்டும் 70,000 டன் அமோனியம் குளோ
ரைடும் உற்பத்தி செய்யும். இந்நிறுவனம் சுமார் 480
பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். ஸ்பிக் நிறுவனத்
துடன் கூட்டாகச் சேர்ந்து செயல்படுத்தும் பொருட்டு முதற்
கண் இந்நிறுவனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறு
வனத்திற்கு முதலீடு செய்யப் போதிய அளவு உபரி நிதிக்கு
ஏற்பாடு செய்ய ஸ்பிக் நிறுவனத்திற்கு இயலாமற்போனதன்
காரணமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது தாமத
மடைந்துவருகிறது. எனவே, இந்த நிறுவனத்தை விரைவில்
செயல்படுத்த தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
ஆய்வு செய்து வருகின்றது.

[1978 மார்ச் 27

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)
1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்த
மான வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக,
ரூபாய் 5 கோடி அதிகாரம் பெற்ற மூலதனத்துடன், தனி
யார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறு
வதற்கும், விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில்
பின்தங்கியுள்ள பகுதிகளைத் துரிதமாகத் தொழில் மயமாக்கு
வதற்கும்அமைக்கப்பட்டதாகும். இந்நிறுவனம் 31–12–1977
வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 21.4
கோடி உதவி வழங்க ஒப்புதலளித்ததுடன், இதன் மூலம்
ரூ. 163 கோடி முதலீட்டை ஊக்குவித்து, 24,000 பேருக்கு
மேல் நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறு
வனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகக் கருதக்
கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்
மாநிலத்தில்பின் தங்கிய பகுதிகளிலே உள்ளது என்பதாகும்.
அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய
பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய்
1,971·33 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
இதன்மூலம் ரூ. 151 கோடிக்குமேல் முதலீடு, இம்மாநிலத்
தின் பின்தங்கிய மாவட்டங்களில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது.
22,500 பேருக்குமேல் வேலை வாய்ப்பினை உருவாக்கித்
தந்துள்ளது.

2. சிப்காட் உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு
திட்டங்கள் பின்வருமாறு :—

1. ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்.

(i) சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கு (Feasibility Study)
உதவித் தொகை.

ஆதாயமளிக்கும் தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்
காக சாத்தியக்கூறு பற்றிய ஆய்வுகளை சிப்காட் தொடங்கி
யுள்ளது. இந்த ஆய்வுகளை தொழில் முனைவோர்க்கு
சலுகை விலையில் அளிக்கிறது. 31—12—1977 முடிய 35
சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில்
27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு ஏற்கெனவே
வழங்கப்பட்டன.

1978 மார்ச் 27]

2. வட்டியில்லா விற்பனை வரிக் கடன்

ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டத்தின் முக்கிய பகுதி
யாக வட்டியில்லா விற்பனை வரியினை மாநில அரசின் முகவர
மைப்பாக சிப்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இம்
மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதாவது
ஒன்றிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர்
தொழில் தொகுதியிலும் குன்னத்தூர் வட்டாரத்திலும்
உள்ள நடுத்தர, பெரிய தொழில்களுக்கு இத்திட்டத்தின்கீழ்
கடன்கள் வழங்கப்படுகின்றன. விவரம் இணைப்பு VI-ல்
கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரு பகுதிகளைக்
கொண்டதாகும். முதல் பகுதி, திட்டத்தின்கீழ் தற்போது
செயல்படும் தொழில் நிறுவனம் கணிசமான அளவுக்குத்
தொழிலை விரிவுபடுத்தும் போதோ அல்லது பொருத்தமான
பகுதிகளில் வேறு பிரிவுகளாகப் பெருக்கும் போதோ
இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன்
கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு
முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித்
தொகை அளவுக்கு அமைக்க இருக்கும் தொழிற்சாலையின்
நிலையான இருப்புக்களில் 25 சதவீதம் அல்லது
ரூபாய் 15 இலட்சம் இவற்றில் எந்த தொகை குறைவோ
அந்தத் தொகைக்கு மேற்படாமல் வட்டியில்லா விற்பனை
வரிக்கடன் தொகை அளிக்கப்படுகிறது. கடன் தொகை
வழங்கப்பட்ட தேதியிலிருந்து 12 ஆண்டுகள் முடிவடைந்த
பின்னர் 3 ஆண்டு சம தவணைகளில் வட்டியின்றி இந்தக்
கடன் தொகை திருப்பி செலுத்தப்படத்தக்கதாகும்.
இரண்டாம் பகுதித்திட்டத்தின்கீழ் புதிய
தொழிற்பிரிவு, அந்த ஆண்டில் செலுத்திய விற்பனை
வரிக்கு இணையான ஒரு தொகையை, உற்பத்தி ஆண்டின்
முதல் ஆறு ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் பெறும்,
நிறுவப்பட்ட தொழில் நிறுவனத்தில் நிலையான இருப்புகளில்
8 சதவீத அளவுக்கு மேற்படாமல் இத்தொகை அளிக்கப்
படும். இந்தக் கடன் மூன்று திங்களுக்கு ஒருமுறை வழங்
கப்படும். கடன் வழங்கப்பட்ட 18 ஆண்டுகளுக்குப் பிறகு,
மூன்று ஆண்டு சம தவணைகளில் வட்டி எதுவுமின்றி திருப்பிச்
செலுத்தப்படத்தக்கதாகும். இத் திட்டம், பின்தங்கிய
பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஒரு சக்தி
வாய்ந்த தூண்டுகோலாக அமைந்துள்ளது என்பதை நிரூ
பித்துள்ளது.

[1978 மார்ச் :7

3. நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித்
தொகை வழங்கும் திட்டத்தைத் தமிழ் நாட்டில் செயல்
படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்
காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ்
இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின் தங்கிய
வட்டங்களில் ஏதாவதொன்றில் நிறுவப்படும், தொழிற்
பிரிவு, அதன் நிலையான முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள்,
சாதனங்கள், இயந்திரங்கள் முதலியன உட்பட) 15 சதவீத
நேரடி மானியம் அல்லது உதவித் தொகை பெற தகுதி
உடையதாகும். முன்னேற்றமடைந்த பகுதியிலிருந்து மேற்
குறிப்பிடப்பட்ட பின் தங்கிய வட்டங்களில் ஒன்றிற்குத்
தங்களது சாதனங்களையும் இயந்திரங்களையும் மாற்றக்கூடிய
தொழில் பிரிவுகளும்கூட 15 சதவீத உதவித்தொகை பெற
உரிமையுள்ளவையாகும். அந்த 33 வட்டங்களின் பெயர்கள்
இணைப்பு VII-ல் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு
தொழிற் பிரிவையும் பொறுத்தமட்டில், உயரளவு உதவித்
தொகை ரூபாய் 15 இலட்சம் என வரையறுக்கப்பட்டுள்ளது.
இந்த உதவித் தொகையில் 85 சதவீதம் உற்பத்தி தொடங்கு
வதற்கு முன்பாகவும், எஞ்சிய தொகை உற்பத்தி
தொடங்கிய பின்னரும் வழங்கப்படும்.

4. உயர் அழுத்த விநியோகத்திற்கு சலுகைவீத மின் கட்டணம்.

தமிழகத்தில் நிறுவப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு
முதல் ஐந்தாண்டுகளுக்குச் சலுகை வீதங்களில் மின்
கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆறுவது ஆண்டிலிருந்து
மட்டுமே கீழ்க் கண்டவாறு அத்தொழிற்சாலைகள் முழு
மின்சக்திக் கட்டணத்தை செலுத்த வேண்டும். விவரம்
வருமாறு :—

(1) முதல் 3 ஆண்டுகளுக்கு .. சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 66⅔ சதவீதம்.

(2) நான்காவது ஆண்டுக்கு .. சாதாரண உயர், அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 80 சதவீதம்.

(3) ஐந்தாவது ஆண்டுக்கு .. சாதாரண உயர் அழுத்த மின் சக்திக் கட்டணத்தில் 90 சதவீதம்.

1978 மார்ச் 27]

இவை தவிர, இம்மாநிலத்தில் பின்தங்கிய வட்டங்க
ளெனத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள வட்டம் எதிலும் (செங்
கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர், குன்னத்தூர் வட்
டாரம்) உட்பட நிறுவப்படவிருக்கும் புதிய தொழில்கள்
மின் சக்திக் கட்டணத்தில் மேலும் 15 சதவீதச் சலுகை
பெறத் தகுதியுடையவைகளாகும், இந்தச்' சலுகைபெறத்
தகுதி பெற்ற பின்தங்கிய வட்டங்களின் பெயர்ப்பட்டியல்
இணைப்பு VIII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை.

இம்மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்கள் ஏதாவது
ஒன்றில் நிறுவப்பட்டுள்ள புதிய தொழில்கள், ஆண்டுக்கு
ரூபாய் 300 என்ற வரையறுத்த கட்டணத்தை தண்ணீர்
உரிமைக் கட்டணமாக செலுத்திவிட்டு, பொது நீர்வாயில்
களிலிருந்து எவ்வளவு அளவு வேண்டுமானாலும் தண்ணீர்
எடுத்துக் கொள்ள தொடக்கத்தில் முதல் ஆறு ஆண்டு
களுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சென்னை மாநகரத்திற்கு
அருகில் செங்கற்பட்டு மாவட்டத்தில், மறைமலை நகரிலும்
செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குன்னத்தூர்
வட்டாரத்திலும் அமைக்கப்பட்ட தொழில் பிரிவுகளும்
இச் சலுகையைப் பெறத் தகுதியுடையவைகளாகும்.

11. தொழில் வளர்ச்சி நிலையங்கள்.

இம்மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டங்களில், சிப்காட்
இரண்டு தொழில் வளர்ச்சி நிலையங்களை உருவாக்கியுள்ளது
வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையிலும்,
தருமபுரி மாவட்டம் ஓசூரிலும் இவை அமைந்துள்ளன.

(அ) வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் தொழில் வளர்ச்சி நிலையம்.

வட ஆர்க்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் ...சம் ...ளனர்.
காட் உருவாக்கியுள்ள முதலாவது தொழில் வளநிறுவன
நிலையத்தை தமிழ்நாடு அரசு கையகப்படுத்தி, 'சிப் தொகை
நிறுவனத்திடம் ஒப்படைத்த 712 ஏக்கர் பரப்புள்
அமைக்கப்பட்டிருக்கிறது.

இத்தொழில் தொகுதியில் உள்ள 85 மேம்பாடு செய்யப் பட்ட மனைகளில், 431·4 ஏக்கர் பரப்புள்ள 55 மனைகள், 47 தொழிற் பிரிவுகளுக்கு (31-12-1977 வரை) ஒதுக்கப் பட்டுள்ளன. இவற்றில், 19 தொழிற் பிரிவுகள் உற்பத்தியை தொடங்கிவிட்டன. 12 தொழிற் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கும் நிலையில் உள்ளன. சிறு தொழில்களுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 71 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (SIDCO), ஒதுக்கப்பட்டுள்ளது. 119·8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது.

நாளது தேதிவரை உதவி பெற்று வந்த எல்லா பிரிவுகளுக்குமாக ரூபாய் 40 கோடிவரை பொத்த முதலீடு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 4,600 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு கிட்டும்.

தருமபுரி மாவட்டம் ஓசூரிலுள்ள தொழில்வளர்ச்சி நிலையம்.

1974 ஆம் ஆண்டில், சிப்காட் தருமபுரி மாவட்டத்தில் ஓசூரில் இரண்டாவது பெரிய தொழில் தொகுதியை, மேம் பாடு செய்வதற்காக எடுத்துக்கொண்டது. இத்தொகுதியில், 755·87 ஏக்கர் பரப்புள்ள 131 மனைகள், தொழிற் பிரிவு களுக்கு ஒதுக்கப்படலாம்.

31-12-1977 வரை, 329·80 ஏக்கர் பரப்புள்ள, 54 மனைகள், 45 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 34 தொழிற்பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. தொழிற்பிரிவுகள் கட்டிடங்கள் கட்ட தொடங்கியுள்ளன.

III. நிதி உதவி

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் மறு நிதியுதவி பெறத் தகுதியுடைய இரண்டாவது மாநில
(2) 'ளவு நிதி நிறுவனமாக சிப்காட்டை, இந்திய அரசு ஏற்றுக் 'ாண்டுள்ளது. குறைந்த வட்டி வீதத்திலும், நீண்ட காலத் ''ளகளுடனும் சிப்காட் நிதி உதவுவதற்கு இது வகை ''து. நிதி உதவும் துறையில் தமிழ்நாடு தொழில்
(3) ஊத்தா[illegible] நிறுவனம் (TIIC) இந்திய தொழில் நிதி (IFCI), இந்திய தொழில் கடன் முதலீட்டு (ICICI), இந்திய தொழில் வளர்ச்சி வங்[illegible]

(IDBI), வர்த்தக வங்கிகளுடன் சிப்காட் நெருக்கமாக ஒத்துழைத்து வருகிறது. இம்மாநிலத்தின் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதித் தேவைகள் முழுவதும் இந்த நிறுவனங் களின் கூட்டு முயற்சியின் மூலம் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதே இவ்வாறு செயல்படுவதன் நோக்கம்.

(3) ரூபாய் 90 இலட்சத்திற்கு அதிகமாகக் கடன் தேவைப் படாத தொழில் நிறுவனங்கள், அகில இந்திய அளவில் அமைந்துள்ள நிதி நிறுவனங்களை அணுகாமல், இம் மாநிலத் திலேயே உள்ள, சிப்காட், டி.ஐ.ஐ.சி. வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து நிதியுதவி பெற முடியும்.

(4) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு, சிப்காட், அடியிற் கண்டவகை நிதியுதவிகளை அளிக்கிறது.

(1) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் மறு நிதியுதவியளிக்கும் திட்டத்தின் கீழ் தவணைக் கடன்.

(2) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் ஆரம்ப மூலதன நிதியுதவி.

(3) மூலதன கடன்களுக்கு உத்தரவாதமளித்தல்.

(4) வர்த்தக வங்கிகளிலிருந்து பெறும் கடன்களுக்கு உத்தரவாதம்.

(5) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இதுவரை 69 திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 836·24 இலட்சம் தவணைக் கடனாக வழங்கியுள்ளது. நடப்பாண்டில் 11 தொழிற் பிரிவு களுக்கு ரூ. 241·78 இலட்சம் தவணைக் கடன் வழங்கப் பட்டது.

(6) மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட தொழில்களுக்கு மட்டுமே பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்குகளை வாங்குவது மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தி[illegible] பங்குகளை வாங்குவதற்கு இதுவரை ரூ. 67·20 இலட்சத்திற்கு பங்குகளை வாங் கீழ் இதுவரை ரூ. 67·20 இலட்சத்திற்கு பங்குகளை வாங் அனுமதி வழங்கப்பட்டிருப்பினும் ரூபாய் 61·86 இலட்ச பெறுமானமுள்ள பங்குகளை பொதுமக்களே வாங்கியுள்ளன[illegible] எஞ்சியுள்ள ரூ. 5·34 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் நிறுவ[illegible] த்தால் வாங்கப்பட்டது. அதில் ரூ. 3·84 இலட்சம் தொ[illegible] யாக வழங்கப்பட்டுள்ளது.

14-3-1978 வரை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) அளித்த நிதியுதவி IX இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

(8) 1978-79 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு சிப்காட்டிற்கு கீழே விவரித்துள்ளவாறு ரூ. 225 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

			(ரூபாய் இலட்சத்தில்)
விற்பனை வரிக் கடன்	..	..	150
தவணைக் கடன்	..	..	50
பங்கு மூலதனம்	..	..	25
மொத்தம்		..	225

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

இந்தியாவில் மாநில அளவில் அமைந்துள்ள நிதியுதவும் நிறுவனங்களில் முன்னோடியாகத் திகழ்வது தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகும். இது தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் தலையாய நோக்கத்துடன், இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதனைக்கருத்தில் கொண்டு, இந்நிறுவனம், தொழில்நிறுவனங்களுக்கு முக்கியமாக நிரந்தர சொத்துக்களான நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நீண்ட கால, நடுத்தரக்கால கடன்களை வழங்குகிறது. தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டுப்பத்திரங்கள் இவைகளுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. மேலும், தவணை முறையில் இயந்திரங்கள் வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதம்/எதிர் உத்திரவாதம் அளிக்கிறது. இந்நிறுவனம், கிராமப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும், போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும் ஓட்டல் உரிமையாளர்களுக்கும் உதவி புரிகின்றது. தொழிற்சாலைகளை புதிதாக

ஆரம்பிப்பதற்கு மட்டும் அல்லாமல், ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், நவீன முறையில் மாற்றி அமைக்கவும், தொழில்களை பல்திறப்படுத்துவதற்கும் நிதி உதவி அளிக்கிறது. அண்மையில், இது, தனது பணிகளை விரிவுபடுத்தி, அவற்றை பல்திறப்படுத்தியுள்ளது. இதன்மூலம் சிறுதொழில் நிறுவனங்களுக்கும், பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் தொழிற் பிரிவுகளுக்கும், தொழில் வினைஞர்களுக்கும் தொழில் நுட்ப முனைவோர் திட்டம் என்னும் சிறப்புத் திட்டத்தின்கீழ் அதிக நிதியுதவி அளிக்கிறது. தொழில் நுட்ப உத்திகள், இயந்திரப் பாகங்கள், உதிரிப் பாகங்கள் முதலியவை உட்பட இயந்திரங்களையும் சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், உலக வங்கியின் மூலமாக அந்நியச் செலாவணி கடன் உதவியும் வழங்குகிறது.

2. பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு உயரளவு ரூபாய் முப்பது இலட்சம் வரையிலும், பங்குதாரர்கள் உரிமை நிறுவனம் அல்லது ஒரே உரிமையாளர் நிறுவனத்திற்கு ரூ. 15 இலட்சம் வரையிலும் கடன் உதவி செய்கிறது. மேலும், காலம் தாழ்த்திக் தொகையளிக்கும் அடிப்படையில் உயரளவு முப்பது இலட்சம் ரூபாய் வரை கடன் பெறவும் இத் தொழில் நிறுவனங்களுக்கு உத்தரவாதம் அளிக்க வகையுண்டு. மேலும். இருபத்தைந்து இலட்சம் ரூபாய் அல்லது தொழிலை உருவாக்குவோர் அளிக்கும் தொகைக்குச் சமமான ஒரு தொகை அல்லது பொதுமக்களின் பங்கு மூலதனத்தில் 25 சதவீதம், இவற்றில் எது குறைவான தொகையோ அதை இந்நிறுவனம் கூட்டுப் பங்கு நிறுவனங்களுக்குக் கடன் பத்திரங்களாகவும், நேரடிப் பங்குகளாகவும் வழங்கலாம். பொதுவாக எந்த ஒரு நிறுவனத்திற்கும் ரூ. 60 இலட்சத்திற்கு மேல் நிதி உதவியளிக்கப்படுவதில்லை. இந்நிறுவனத்தால் அளிக்கப்படும் நிதி உதவியின் குறைந்த பட்ச அளவு ரூபாய் 10,000.

3. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலும், மத்திய அரசின் நேரடிப் பொறுப்பிலுள்ள பாண்டிச்சேரியிலும் பெருவாரியான தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. இந்நிறுவனம் ஆரம்ப காலத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொழில் உருவாவதற்குத் தேவைப்படும் மூலதனம் மிகவும் பற்றாக்குறையாக இருந்த காலத்தில் தொழில் நிறுவனங்களின் பங்கு மூலதனத்திற்கு ஏராளமாக

[1978 மார்ச் 27

நிதியுதவி அளித்தது. பின்னர் அண்மைக் காலத்தில் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் இந்நிறுவனம் தனது பணியைப் பலவகையிலும் விரிவுபடுத்தியுள்ளது.

4. தொடங்கியதிலிருந்து 31–12–1977 வரையில், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் அனுமதித்த, வழங்கிய கடன்தொகை பற்றிய விவர அறிக்கை இணைப்பு XIII–ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கடந்த பத்தாண்டுகளில் தொழிற்சாலைகளுக்கு தொழில் வாரியாக அனுமதி அளித்த தொகைகள், வழங்கிய தொகைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு XIV-ல் கொடுக்கப் பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக பங்குகளுக்கு உத்தரவாதமளித்தல், காலம் தாழ்த்தித் தொகை கொடுப் பதற்காக இந்நிறுவனம் அளித்துள்ள உத்தரவாதம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து இந்நிறுவனம் பெற்ற மறுநிதி உதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் முறையே இணைப்பு XV, XVI-ல் கொடுக்கப்பட் டுள்ளன. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில், கடன் மனுக்களை அனுமதித்தல், வழங்குதல் ஆகிய இரு பணிகளிலும் இந்நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

5. 1977–78–ம் ஆண்டில் (ஏப்ரல் 1977-1978 ஜனவரி) இந்நிறுவனம் அனுமதித்த கடனுதவி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

கடன்கள்— (ரூபாய் இலட்சத்தில்)

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
314	10,89·20	282	7,32·27

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது.	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை
171	6,04·32	127	4,80·69

1978 மார்ச் 27]

சிறுதொழில் பிரிவுகளுக்கு உதவி—

ஒப்புதல் அளிக்கப்பட்டது		வழங்கப்பட்டது	
நபர்கள்	தொகை	நபர்கள்	தொகை.
	(ரூபாய் இலட்சத்தில்)		(ரூபாய் இலட்சத்தில்)
266	4,96·24	239	2,91·25

சிறப்புத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உதவி—

	அளிக்கப் பட்ட தொகை.	நபர்கள் எண்ணிக்கை
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. அன்னியச் செலாவணிக் கடன்	2,24·85	17
2. தொழில்நுட்ப வினைஞர்கள்	38·13	32
3. பேருந்து உரிமையாளர்கள்	0·40	1
4. ஜெனரேட்டர் செட்கள்	33·94	18

இந்நிறுவனம், தொழில் நுட்ப வினைஞர்கள் கிராமங்களில் உள்ள மருத்துவர்கள் போக்குவரத்து வாகன உரிமையாளர் கள், உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோருக்குத் தாராளமாக நிதி உதவி அளிக்க பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளில், இச் சிறப்புத் திட்டங்களின்கீழ், இந்நிறுவனம் அனுமதி வழங்கிய தொகை. கொடுத்த தொகைகள் இணைப்பு XVII-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு தனது பங்கு மூலதனமாக அரசு, 1978-79 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது.

தொழில்களுக்கு நிதி உதவி—

7. தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டி, கடந்த இருபதாண்டுகளில் மாநில அரசுத்துறைகளிலும், மத்திய அரசுத் துறையிலும் பல கடனுதவி நிறுவனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந் நிறுவனங்களின் செயல்முறை பற்றிய ஆய்வு கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI)

8. மத்திய நிறுவனமான இவ்வங்கி பங்குத் தொகைகளுக்கு உத்திரவாதமளித்தல், கடனீட்டுறுதிப்பத்திரங்களுக்கு உத்திரவாதமளித்தல், தொழில் பிரிவுகளுக்கு காலக் கடன்களை வழங்குதல், ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது. எனினும் இவ்வங்கியின் முக்கிய நோக்கம் மாநில நிதி உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து அவை கடன் வழங்க மறுநிதி உதவி செய்வதே ஆகும்.

இவ்வங்கி தொடங்கியது முதல் 1977 டிசம்பர் இறுதி வரை தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு நேரடியாக ரூ. 275·23 கோடி நிதி உதவி அளித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு 1976 ஜூலைத் திங்கள் முதல் 1977 ஜூன் வரையில் அனுமதியளிக்கப்பட்ட தொகை ரூ. 72·50 கோடியாகும்.

இந்தியத் தொழில் கடன்-முதலீட்டு நிறுவனம் (ICICI)—

9. இந்நிறுவனம் தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்றுமொரு வளர்ச்சி வங்கியாகும். தொழில்களுக்கு வெளி நாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவது இதன் நோக்கமாகும். தவிர பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற உதவிகளையும் அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு 1977-ல் அளித்த நிதி உதவி ரூபாய் 10,277 இலட்சமாகும். தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு அளித்த நிதி உதவி ரூ. 597 இலட்சமாகும்.

இந்திய தொழில் நிதி உதவி நிறுவனம் (IFCI)—

10. நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் 1948 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்நிறுவனம், பொதுவாகத் தொழில் பிரிவுகளுக்கும், குறிப்பாக நெசவாலைத் தொழிலுக்கும், சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்டகால, நடுத்தரக் காலக்

கடன்களை வழங்குகிறது. வட்டியில்லா பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்குக் காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்திரவாதமளிக்கிறது இந்நிறுவனம்.

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 9 திட்டங்களுக்கு 1—7—77 முதல் 31—12—1977 வரை மொத்தம் ரூ. 8,76·13 இலட்சம் நிதியுதவி (நிகரம்) அளித்தது.

இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் (LIC)

11. தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்களில் பெரும்பான்மையோரின் நீண்டகாலச் சேமிப்புகளை ஒருங்கு திரட்டுவதோடு, கவனமாகவும் திட்டமிட்டும் முதலீடு செய்வதன் மூலம் இந்த நிதி வாயில்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிகிறது.

1976-77-ஆம் ஆண்டில் தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் பிரிமியமாக வசூலித்த வகையில் (மாநில வாரியான) கிடைத்துள்ள வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாநிலம்.	தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
கருநாடகம்	4,243·23
ஆந்திரப் பிரதேசம்	4,343·25
தமிழ்நாடு (பாண்டிச்சேரி உட்பட) ..	5,166·73
கேரளம்	2,289·15
	16,042·36

இந்நிறுவனம் 1976-77-ல் தமிழ்நாட்டில் தொழில்களில் முதலீடு செய்த தொகை ரூ. 539·54 இலட்சமாகும்.

[1978 மார்ச் 27

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி

12. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத் தொழில் துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்வங்கி வழங்கிய காலக் கடன்களையும், திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை குறித்த விவரங்களையும் இணைப்பு XVIII-ல் உள்ள அட்டவணையில் காணலாம். மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனக் கடன்கள் பற்றிய விவரங்களை இணைப்பு XIX-ல் உள்ள அட்டவணையில் காணலாம்.

சர்க்கரைத் தொழில்

சர்க்கரைத் தொழில் வேளாண்மை சார்ந்த ஒரு தொழிலாக இருப்பதால் கிராமப் புறங்களில் வாழும் உழவர்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. முக்கியத்துவம் உடைய இத்தொழில் தமிழ்நாட்டில் கடந்த இருபதாண்டுகளில் நல்ல வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 1950 முதல் 1960 வரையிலான பத்தாண்டு காலத்தில் சர்க்கரை உற்பத்தித் துறையில் கூட்டுறவியக்கம் அடியெடுத்து வைத்தது. அடுத்த பத்தாண்டு காலத்தில் அதைத்தொடர்ந்து வளர்ச்சி பெறலாயிற்று. சர்க்கரை உற்பத்தித் தொழில், குறிப்பாகக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உரிய முறையில் வளர்ந்து செயல்படுவதைத் தொடர்ந்து கவனித்து வரும் பொருட்டு தமிழ்நாடு அரசு, சர்க்கரைத் தொழில் இயக்குநர் அலுவலகத்தை 1969 அக்டோபரில் தோற்றுவித்தது. சர்க்கரைத் தொழில் தொடர்பான அனைத்து பணிகளையும் கவனிப்பது இந்த இயக்குநர் அலுவலகத்தின்பணியாகும். இந்த இயக்குநர் அலுவலகம், குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வது, மேற்பார்வையிடுவது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதற்காக தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்தின் தொடர்பாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருடைய அதிகாரங்கள் அனைத்தும் சர்க்கரைத் தொழில் இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

1978 மார்ச் 27]

2. இந்த ஆய்வில், 1976–77-ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் (1976ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய) சாதனைகள், முந்திய ஆண்டான 1975–76 இல் நிகழ்த்தப் பெற்ற சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. மேலும், 1977–78ஆம் சர்க்கரைத் தொழில் ஆண்டின் திட்டங்கள் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்படுகின்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருந்தன. அவற்றுள் 10 ஆலைகள் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவை ; 9 ஆலைகள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆகும். எஞ்சிய இரண்டும் பொதுத் துறையைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன், நிறுவிய நிலை உற்பத்தித் திறன் ஆகியவை குறித்த விவரங்கள், பின்னால் இணைப்பு XXI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு பயிரிடல்.

3. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் துறைக்குப் புதியதுதான், என்றாலும் இத்துறையில் இம்மாநிலம் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந்தியாவில் பெருமளவில் சர்க்கரை உற்பத்தி செய்கிற மாநிலங்களுடன் ஒப்பிட, தமிழ்நாட்டின் சாதனை ஊக்கமளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப்படும் பரப்பளவைப் பொறுத்தவரை, ஆண்டுதோறும் அதே அளவிற்குக் குறையாமல் பார்த்துக் கொள்வது மட்டுமின்றி, சில ஆண்டுகளில் பரப்பளவில் அதிகமாகவும் பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் சிறந்த சாதனையைப் புரிந்திட உதவிய அம்சங்கள் பின் வருவன : இந்திய அரசு வரையறுத்த சட்டபூர்வ விலைக்குச் சற்றுக்கூடுதலாகவே அமைந்த விலை கரும்புபயிரிடுவோருக்கு உடனுக்குடன் வழங்கப்படுகிறது; சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்புபயிரிடுவோருக்குமிடையே பொதுவாக நல்லுறவு நிலவுகிறது. கரும்பு பயிரிடுவதற்காக ஆலைகள் கணிசமான ஊக்க உதவித் தொகைகள் வழங்குகின்றன. 1974–75 முதல் 1976–77 வரையில் கரும்புக்கு இந்திய அரசு வரையறுத்த விலை, தமிழ்நாடு அரசு பரிந்துரைத்த விலை, இறுதியாக சர்க்கரை ஆலைகள் வழங்கிய விலைகள்ஆகியன இணைப்பு XXII-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில், கரும்பு பயிரிடப்பட்ட பரப்பு, கரும்பு உற்பத்தி, சர்க்கரை ஆலைகள் பிழிந்த கரும்பு ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	கரும்பு பயிரிடப்பட்ட பரப்பு. (1000 ஹெக்டேரில்).	விளைவித்த கரும்பின் அளவு. (1000 டன்களில்).	ஆலைகள் பிழிந்த கரும்பின் அளவு. (1000 டன்களில்.)	மொத்த உற்பத்தியில் ஆலைகள் பிழிந்த அளவு சதவீதம்.	ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல். (டன்களில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1968-69 ..	172	14,024	4,169	30	81·53
1969-70 ..	[illegible]	10,916	3,656	34	78·53
1970-71 ..	114	9,391	3,326	35	82·38
1971-72 ..	[illegible]	10,357	3,236	31	88·52
1972-73 ..	144	12,113	4,008	33	84·12
1973-74 ..	186	18,183	5,287	29	97·76
1974-75 ..	160	14,593	4,556	31	91·21
1975-76 ..	128	11,936	1,969	17	93·25
1976-77 ..	133	13,162	3,791	29	98·96

சர்க்கரை ஆலைகளின் சாதனை.

4. தமிழ்நாட்டில், நான்காவது ஐந்தாண்டுத்திட்டகாலம் முழுவதும், குறிப்பாக 1973-74ஆம் ஆண்டில், சர்க்கரைத் தொழில் குறிப்பிடத்தக்க சிறந்த சாதனையைப் புரிந்திருந்தது. ஆனால், மாநிலம் முழுவதும் முன்னெரு போதும் கண்டிராத அளவு வறட்சி நிலவிய காரணத்தினால் 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் இத்தொழில் பின்னடைவு கண்டது. 1974-75 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பிழிந்த அரவைத் திறன் (Capacity Utilisation) 88·15 சதவீதம் ஆகும் ; இந்த சதவீதம் 1975-76-ல் 44·02 சதவீதமாகக் குறைந்தது. 1976-77-ல் கரும்பு வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட ஒருமித்த முயற்சி காரணமாக அரவைத்திறன் கணிசமான அளவு (70·83 சதவீதம்) முன்னேற்றமடைந்தது. 1974-75 ஆம் ஆண்டு முதல் 1976-77 ஆம் ஆண்டுவரையில் சர்க்கரை ஆலைகளின் சாதனைகளைக்காட்டும் விவரங்கள் இணைப்பு XXIIIஇல் கொடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு விலை.

5. இந்திய அரசு தற்போது கரும்புக்கு வரையறுத்துள்ள குறைந்த அளவு விலையானது இம்மாநிலத்தில் கரும்பு பயிரிடுவோரை ஊக்குவிப்பதாக அமையவில்லை. கரும்பு பயிரிடுவதற்காகவும் செலவு உயர்ந்துள்ளதையொட்டி கரும்பு பயிரிடுவோருக்கு ஆதாயமளிக்கக் கூடியதாக இருக்கும் வகையில், கரும்புக்கு நடப்புக்கொத்த விலைகளை வரையறுக்குமாறு மாநில அரசு, வேளாண்மை விளை பொருள் விலைகள் குழுவிற்கும் இந்திய அரசுக்கும் பரிவுரை செய்துள்ளது. 1976-77-ல் சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் அளவுள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிந்துரைத்திருந்தது. ஆனால், இந்திய அரசு டன் ஒன்றுக்கு விலை ரூ. 85 மட்டுமே என வரையறுத்தது. கரும்புக்குப் போட்டியாகப் பயிரிடப்படுகின்ற வாழைக்கும் நெல்லுக்கும் அளிக்கப்படும் விலையுடன் கரும்பிற்கு அளிக்கப்படும் விலையை ஒப்பிட்டால், கரும்பு பயிரிடுவோருக்குக் கிடைக்கும் ஆதாயம் குறைவு என்பதால் இந்த விலை போதுமானதல்ல என்று கருதப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டிலும், சர்க்கரைச் சத்து 8·5 சதவீதம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு விலை ரூ. 125 அளிக்கலாம் என்று மாநில அரசு பரிவுரை செய்தது. இந்திய அரசு 1977-78 ஆம் ஆண்டுக்கும்

இன்று பன்னிரண்டு பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நேரத்தை கண்டிப்பாகக் கடைப்பிடித்தாலொழிய முடியாது. இன்று காலைக்குள் முடிக்க வேண்டியிருக்கிறது. தயவுசெய்து உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

*** திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கொள்கை பற்றிய குறிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருப்பதைப் படித்தேன். அண்மையில் இதுபற்றி அவர்கள் பேசிய சில கருத்துக்களையும் கவனித்தேன். அரசு மருத்துவ மனைகளைப் பற்றியும் அங்கே பணியாற்றுகிற டாக்டர்களைப் பற்றியும் சென்ற கூட்டத் தொடரில் நான் என்ன சொன்னேனோ அந்தக் கருத்துக்களைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்ட முறையில் அவர்கள் பேசியிருப்பதைக் கண்டு பாராட்டு கிறேன். அரசு மருத்துவமனைகளில் வேலை செய்கிற டாக்டர்கள் தனிப்பட்ட மருத்துவ மனைகளை வைத்துக்கொண்டு பொது மருத்துவ மனையிலும் கவுரவ டாக்டர்களாகப் பணியாற்றுவதால் அந்த வாய்ப்பை அங்குள்ள நல்ல வசதியுள்ள நோயாளிகளை தனியாகக் கவனிப்பதற்கு வாய்ப்பாகவும் சில முக்கியமான மருந்துகளை எடுத்துப்போவதற்கு வாய்ப்பாகவும் பயன்படுத்து கிறார்கள். பொது மருத்துவ மனையில் போதிய கவனம் செலுத்துவதில்லை. அதிகமாக தங்கள் சொந்த மருத்துவ மனையில் சிகிச்சை செய்து நல்ல பெயர் எடுக்கவும் அதன் மூலம் லாபம் சம்பாதிக்கவும் கவனம் செலுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதுபற்றி முதலமைச்சர் அவர்களும் குறிப் பிட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அந்த நிலையைத் தடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் இனி என்ன ஏற்பாடு செய்யப்போகிறார்கள் என்பதைப்பற்றிச் சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை. ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவரை டாக்டருக்குப் படிக்க வைத்து பட்டம் பெறச் செய்வதற்கு அரசாங்கம் ரூ 80 ஆயிரம் செலவு செய்கிறது என்று அண்மையில் இங்கே கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு வேறு அமைச்சர் பதில் அளித்தார்கள் என்று நினைக்கிறேன். அதையே மீண்டும் இப்போது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபோது, ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபாய் செலவாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மருத்துவத் துறையில் பொறுப் பேற்றுள்ள முதலமைச்சர் அவர்கள் சொல்வதுதான் சரியான கணக்காக இருக்குமென்று நம்பி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மக்கள் வரிப் பணத்திலிருந்து 105 ஆயிரம் ரூபாயைச் செலவு செய்து ஒருவரை டாக்டருக்குப் படிக்கவைத்து அவர் படித்தவுடனே தனிப்பட்ட சொந்த மருத்துவ மனையை வைத்துக்கொண்டு சொந்தத் தொழில் நடத்த அனுமதிப்பது மிகப் பெரிய தவறு என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நானும் வரவேற்கிறேன். அரசாங்கப் பணத்தையும் மக்கள் வரிப்பணத்தையும்

எடுத்து அதில் படிக்க வைத்து அதன் மூலம் டாக்டரானதும் தனியாகத் தொழில் செய்ய அனுமதித்தால், நாட்டிலுள்ள வேறு பல தரப்பினரும் அப்படி அரசாங்கப் பணத்தைக் கொண்டு முன்னேறி தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்கிக்கொள்ள உரிமை உண்டு. முதலமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஒன் அவர்கள் ஆயுட்காலம் பூராவும் அரசாங்கத்தில் பணி செய்ய வேண்டு மென்று உறுதி வாங்கக் கூடாது என்று போட்டிருக்கிறார்கள். கருத்து சரிதான். நடைமுறையில் அது சாத்தியமா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. டாக்டருக்குப் படித்துப் பட்டம் பெறுகிறவர்கள் அரசாங்க உதவி யிலிருந்து அந்தத் தகுதியைப் பெறுவதால் குறைந்த பட்சம் ஐந்தாண்டு காலத்திற்கு அரசுப் பணியில்தான் ஈடுபட வேண்டும், தனியாகத் தொழில் செய்யக் கூடாது என்று நிபந்தனை போடலாம். வெளி நாடுகளுக்கு விசேஷப் படிப்புக்கு டாக்டர்களை இங்கேயிருந்து அனுப்புகிறார்கள். அப்படிப்பட்ட வர்களுக்கு அரசாங்கப் பணம் அதிகமாகச் செலவாகிறது. வெளி நாடு சென்று வந்தபிறகு, ஸ்பெஷலிஸ்ட் என்று சொந்த மருத்துவமனை வைத்துக் கொண்டு தொழில் செய்கிறார்கள் என்றால், அவர்கள் இன்னும் கொஞ்சம் அதிக காலம் அதாவது பத்தாண்டுகளாவது அரசுப் பணிதான் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தனி மருத்துவமனை வைக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிப்பது நல்லது.

அரசு மருத்துவ மனையில் உள்ள டாக்டர்கள், செவிலியர்கள் சிறந்த வைத்தியம், உடனடியான கவனிப்பு, அக்கறையோடு கூடிய சிகிச்சை வேண்டு மென்றால், தனியார் மருத்துவ மனைக்குப் போகவேண்டியது தானே என்று சொல்கிறார்கள். அண்மையில் ஒருமுறை என்னுடைய மகனை ஒரு மருத்துவ மனைக்குக் கொண்டு போனபோது, சாதாரணமாகக் கவனித்தார்கள். "என்னம்மா சரியாய் கவனிக்கவில்லையே, டாக்டர் வரும்போது என்னை விரட்டுகிறார்கள். நான் போகும்போது டாக்டர் வரமாட்டார். இப்படி வசதியில்லாமல் இருக்கிறதே?" என்று கேட்டால், அதாவது ஒரு சட்ட மன்ற உறுப்பினராக உள்ள நான் கேட்கும்போதே, அதைச் சொன்னதும், அந்த டாக்டருக்குக் கோபம் வந்துவிட்டதாம். அவ்வளவு அக்கறையோடு கவனிக்க வேண்டுமென்றால், தனியார் மருத்துவ மனைக்குப் போகவேண்டியதுதானே என்று அவர் சொல்லியதாகக் கேள்விப்பட்டேன். அரசாங்க மருத்துவ மனை களில்தான் பிரத்தியேகமான முறையில் பல விஞ்ஞானக் கருவிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர் நடத்தும் மருத்துவ மனைகளில் சற்று அதிகமான அக்கறை காட்டப்படுமே தவிர, வேறு எந்த வகையில் அவர்கள் உயர்ந்த சிகிச்சை அளிக்க முடியும்? தனிப்பட்டவர்கள் சொந்தப் பணத்தில் சாதாரணமான கருவிகளை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி

யிருக்கும்போது அங்கேதான் சரியான மருத்துவம் அளிக்கப்படும் என்று சொல்வது என்ன நியாயம்? இதைக் கட்டாயம் கட்டுப் படுத்த வேண்டும். நோயாளிகளும் அப்படி நினைக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் ... அதிகச் செலவு செய்து வந்தால் தனியார் மருத்துவ மனைக்குப் போகிறார்கள். பொது மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், கவனித்துக் கொள்கிறார்கள். பொது மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், அங்கே என்னென்ன செய்ய வேண்டுமென்று இங்குள்ள உறுப்பினர்கள் எல்லாம் பேசி அதற்கான காரியங்களைச் செய்கிறோம். அப்படி பொது மருத்துவ மனைகள் விளங்கும்போது, ஒரு தனிப்பட்ட டாக்டரின் சொந்த மருத்துவமனையை நம்பிப் போவதற்குத்தான் சிலருக்குத் துணிச்சல் வருகிறது. அரசு மருத்துவ மனையை நம்பி வருவதற்கு மக்களிடம் துணிவு இல்லை. இது அரசுக்குப் பெருத்த அவமானம். அதைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல பேர் பேச இருப்பதால், என் நேரத்தைச் சுருக்கச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு பொது மருத்துவ மனையிலே ரூ 15 ஆயிரம் செலவில் புற நோயாளிகள் தனி அறைகள் கட்டுவதற்கு குறிப்பு தந்திருக்கிறார்கள். அந்தச் செலவில் எத்தனை தனி அறைகள் கட்ட முடியும்? அதனால் எந்தெந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று தெரியவில்லை. கொஞ்சம் தாராளமாக அதில் இருந்திருக்கலாம். பொது மருத்துவ மனைகளில் முக்கியமாக எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையிலே தாய் சேய் நல விடுதியிலே போதுமான படுக்கைகள் இல்லை. டாக்டர்கள் எண்ணிக்கையும் போதுமானதாக இல்லை. என்னுடைய பேத்தியை அங்கே சிகிச்சைக்காகக் கொண்டு போனபோது பார்த்தேன். இரவு முழுவதும் ஒரே டாக்டர் கவனித்து வந்தார். சில டாக்டர்களைப்பற்றிக் குறை சொன்னாலும், வேறு சில டாக்டர்களைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. அந்த டாக்டர் இரவு முழுவதும் இருந்து ஏராளமான குழந்தைகளைக் கவனித்தார். காலையில் ஏழு மணிக்கு வீட்டுக்குப் போய் மறுபடியும் பத்து மணிக்கே வந்து விட்டார். அதைப்பற்றிக் கேட்டதற்கு மாற்று டாக்டர்கள் இல்லை என்று தெரிய வந்தது. அப்படி சில டாக்டர்கள் அக்கறையோடு பாடுபடுகிறார்கள். குழந்தை மருத்துவ மனையில் உள்ள தலைமை டாக்டர் அம்மையார் அவருடைய பெயர் தெரியவில்லை—மிகுந்த அக்கறையோடு பாடுபடுகிறார்கள். பணியாளர்களும் அக்கறையோடு கவனிக்கிறார்கள். ஆனால் அங்கே அதிகமான படுக்கை வசதி யில்லை. கட்டில்கள் அங்கே இல்லை. தொட்டில்கள்தான் இருக்கின்றன. குழந்தைகள் மருத்துவ மனைதானே? அந்தத் தொட்டிலுக்குக் கீழேயும் குழந்தைகளைப் போட்டிருந்தார்கள். இரண்டு டையர் மூன்று டையர் ரயில் வண்டிப் படுக்கைகள்போல கீழே போட்டிருந்தார்கள். இரண்டு தொட்டில்

களுக்கு இடையில் குழந்தைகள், நடுவே பாதையிலும் குழந்தைகள் இப்படி கீரையை அள்ளிப் போடுவது போல போட்டிருக்கிறார்கள். என்னுடைய பேத்தியை அங்கே வைத்திருப்பதற்குக் கூட பயமாக இருந்தது. அந்தக் குழந்தைக்கு வெறும் காய்ச்சல்தான். ஆனால் அங்கேயுள்ள மற்ற குழந்தை களுக்கு என்னென்ன நோய்கள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட குழந்தை கள் மத்தியில் இருக்கும்போது, அந்த நோய் . மற்றக் குழந்தைகளுக்குத் தொத்துமோ என்ற அச்சம் உண்டாகிறது. அதனால் அதிகமான படுக்கை வசதிக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். பொது மருத்துவ மனையில் சென்ற ஆண்டு 1572 ஆக இருந்த படுக்கைகள் 1624 ஆக, 52 படுக்கைகள்தான் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்டான்லி மருத்துவ மனையில் பத்தும் ராயப்பேட்டை மருத்துவ மனையில் 94-ம் அதிகமாகியிருக்கின்றன. அதைத் தவிர மற்ற கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, கண் மருத்துவ மனை, கஸ்தூரிபாய் மகப்பேறு மருத்துவ மனை என்று மொத்தம் 23 மருத்துவமனைப் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் வேறு எதிலும் படுக்கைகளை அதிகப் படுத்தவில்லை.

(முற்பகல் 11-00)

தற்போது 34, 96 என்ற அளவுக்கு இரண்டே மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதுகூட 'யானைப் பசிக்குச் சோளப் பொரி' போல்தான் இருக்கிறது. இன்றையதினம் நோய்கள் அதிக மாக இருக்கின்றன. பிணியாளர்களும் அதிகமாக இருக்கின்றார்கள். மருத்துவ மனைகளுக்குச் சென்று பார்த்தால், அங்கே நம்மைப் போல் வெள்ளையாகச் சட்டை போட்டவர்களுக்குத்தான் படுக்கை கொடுத்து படுக்க வைக்கிறார்கள். மற்ற ஏழை எளிய மக்களுக்கு முக்கியமாகப் படுக்கை வசதி தேவைப்படும் மிக நலிந்த பிணியாளர்களுக்கு, காய்ச்சலாலும், கழிச்சலாலும் கஷ்டப்படு கிறவர்களுக்கு படுக்கை தர வசதியில்லை. அவர்களெல்லாம் கீழே படுக்க வைக்கப்படுகிறார்கள். அவர்களை உரிய முறையில் கவனிப்பதற்கு ஆளே இல்லை. டாக்டர்களையும் செவிலியர்களையும் கண்காணிப்பதற்குக்கூட ஆள் இல்லை. மருத்துவ மனைகளில் கண்காணிப்பாளர் என்று ஒருவர் இருக்கிறார். ஆனால் அது மட்டும் போதாது. டாக்டர்களும், செவிலியர்களும் தங்கள் பணியைச் சரியாகச் செய்கிறார்களா என்று கண்காணிக்க இன்னும் அதிகாரிகளை வைக்க வேண்டும். மண்டையில் அடிபட்டு ஒருவர் இருக்கிறார். அந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டு, கட்டுப்போடுவதற்கு டாக்டர்கள் அங்கே வருவதில்லை. டாக்டர்கள், செவிலியர்கள் எல்லாம் அங்கே இருந்தாலும், அவர்கள் வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தாய் தந்தையர், அக்காள் தங்கை, அண்ணன் தம்பி போன்றவர்கள் அடிபட்டிருந்தால் அந்த

டாக்டர்களும் செவிலியர்களும் எப்படி பதை பதைப்பார்களோ [illegible] அளவுக்கு மற்றவர்கள் அடிபட்டு வரும்போது அக்கறையோடு பார்ப்பதில்லை. தினமும் நோயாளிகளைப் பார்த்துப் பார்த்து மரத்துப் போய்விட்டார்களோ என்றுகூட நான் நினைக்கிறேன். எனவே இரக்க புத்தியோடு டாக்டர்களும், செவிலியர்களும் பணியாற்றும்படி அவர்களைக் கண்காணிக்க இன்னும் தனி அதிகாரிகளை நியமிப்பதுகூட நல்லது என்று நான் நினைக்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி, இந்த மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள், செவிலியர்கள் போன்றவர்களைக் கண்காணிக்க அதிகாரிகள் போடப்பட வேண்டும். அடுத்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுபற்றி சென்ற முறை பேசும்போதுகூட நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் தனியாக மருத்துவ மனைகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கக் கூடாது என்பதுதான் அது. அதையே இப்போது மீண்டும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். தங்களுடைய தனி மருத்துவ மனையில் அக்கறை உள்ள வரையில் அரசாங்க மருத்துவ மனையில் அவர்கள் சரியாக கவனம் செலுத்த மாட்டார்கள். அரசாங்க மருத்துவ மனைக்கு யாராவது வசதி உள்ளவர்கள் நோய்வாய்ப்பட்டு வருகிறார்களா என்று தூண்டில்காரனைப் போல் பார்த்துக் கொண்டிருப்பார்களே தவிர, அரசாங்க மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்கு நல்ல சிகிச்சை செய்வோம், நல்ல வகையில் இங்கே பணியாற்றுவோம் என்ற எண்ணமே அவர்களுக்கு வருவதில்லை. ஆகவே, இந்த அரசு கண்டிப்பாக ஒரு நிபந்தனையைப் போட வேண்டும். அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்கள் சொந்தமாக மருத்துவ மனை வைத்துக்கொள்ளக் கூடாது என்று நிபந்தனை போட வேண்டும். அவ்வளவு பெரிய 'ஸ்பெஷலிஸ்ட்'களாகத் தங்களைக் கருதிக்கொண்டால், அவ்வாறான ஸ்பெஷலிஸ்ட்கள் அரசாங்க மருத்துவ மனைகளுக்கே வேண்டாம். அரசாங்கச் செலவில் நாமே ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர்களைப் படிக்க வைத்து 10 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அவர்களிடம் ஒப்பந்தம்—அக்ரிமெண்ட்— எழுதி வாங்கிக்கொண்டு, அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு அரசாங்க மருத்துவ மனைகளை நடத்த வேண்டும். இந்த முறையை அரசு கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்துவதால், மிகுந்த தொல்லை கூட ஆகிவிடாது. கட்டில்களை 'சீப்' ஆகக் கூட வாங்கிப் போடலாம். [illegible] அரசாங்க மருத்துவ மனைகளில் படுக்கை வசதிகளை அதிகரிக்க

வேண்டும், அங்கே உள்ள டாக்டர்களும், செவிலியர்களும் நோயாளிகளிடம் தகுந்த முறையில் கவனம் செலுத்த, கண்காணிப்பு அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது 10 நிமிடங்களுக்கு அதிகமாகப் போகாமல் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Deputy Chairman, being very closely associated with the Nursing and Midwives Council of Madras and very closely associated with the welfare of women, I would like to make certain suggestions regarding the Auxiliary Midwifery and Nursing Training. We have been talking a lot about welfare schemes for widows and deserted wives. But in practice sometimes, these schemes are not strictly followed. We, as an organisation, have been appealing to the Government from 1962–63 onwards that all these women who come out of the condensed course must be given preference in nursing and midwifery because they are more mature than others and age exemption should be given to them. This was brought into existence and there was a Government Order stating that all these women who come out of the condensed course must be given preference but it has not been followed after 1967. There was another Government Order which said that women coming from Social Welfare Institutions should be given some representation in Midwifery training. This also has not been followed after 1967. As you know, these institutions which cater to the welfare of adult women want to train them and rehabilitate them after giving them some kind of training. One point is that the Auxiliary Nurse Midwifery training course has gone to the districts. I welcome this move. Still girls from Madras and Chingleput very rarely get place in this. There is proposal to have an Auxiliary Nurse Midwife Training—I hope it is true—in Tirunelveli. I have made this appeal again and again that because the City is very crowded, we do need a second line of defence of nursing women to help the patients. Hence I request that the Auxiliary—Nurse Midwifery training could be restarted in Madras City. I would like to say that the Select Committees, when they are appointed, must be given the rules and regulations of selection, because in a selection, it is not merely the qualification and merit that are concerned. When the merit and qualifications of 20 women are equal, if there are five or six deserving candidates, I think preference should be given to those deserving women. It is human approach

Another point which the hon. Member just now said is about the medical profession. I feel that our doctors are very well qualified and they stand much above the Doctors of other countries but they are very over-worked. It is one of the difficulties of our system, because our population is great and our medical facilities are limited. We know we do not have the necessary finances. But I feel that if we have a system called locum system in which our doctors will be given leave for a day and some doctors who are easily available from outside are asked to substitute these doctors who are on leave, it will be useful. If we give one day's leave in a week to the doctor, he will be very happy and he will come afresh for duty. This locum system will also ease the unemployment problem among the doctors. While the Government will be able to get the services of a doctor without much cost, it will also help the unemployed doctors to do some part-time job. It will especially help the women doctors who are married and who, because of the non-availability of domestic servants, have their own responsibility to look after their homes. If we can got lady doctors who could do part-time jobs, I think, we will be able to solve our problem of individual attention to the patients.

[முற்பகல் 11-10]

Sir, I would like to mention another point. It is not that I am a feminist; but I see that there is a Vigilance Committee. I commend this Committee. I find that there are very many qualified men-doctors on that Committee. I would like to know whether the Hon. Minister for Health would think of having one or two qualified women-doctors also on that Committee so that there may be a balance of power. Women would be able to find out small thefts and pilferages as they are used to house management. If we have women on the Vigilance Committee, I feel that the Committee's purpose to check pilferages will be fully served.

Thank you.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தில் இந்த அரசு தனி அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று பழமொழி சொல்லப்பட்டிருக்கிறது. நோயில்லாத வாழ்க்கை இருந்தால்தான், மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். இல்லையென்றால் நாட்டில் நல்ல காரியம் எதுவும் நடக்காது. எந்த

அரசாங்கம் வந்தாலும், மக்கள் நல்வாழ்வில் அக்கறை காட்ட வேண்டும். அது சரியான முறையில் நடைபெறுகிறதா என்று பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மக்கள் மத்தியில் நோய் வராமல், நோய் பரவாமல் தடுக்க வேண்டும் என்பதை ஜனங்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நம் நாட்டு ஜனங்கள் நிலைமை எப்படி இருக்கிறது என்றால், எங்கே போனாலும் அந்த இடத்தை சுத்தமாக, துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது தெரிவதில்லை. குப்பையை எங்கே வேண்டுமானாலும் கொட்டுகிறார்கள். சென்னை போன்ற பெரிய நகரத்திற்கு வந்தால், எச்சிலை எங்கே வேண்டு மானாலும் துப்புகிறார்கள். ‘யூரினை’ எங்கே வேண்டுமானாலும் கழிக்கிறார்கள். மலத்தை எங்கே வேண்டுமானாலும் கழிக்கிறார்கள். யாருக்கும் ஒருவிதமான பொறுப்பும் கிடையாது. இத்தனையும் சர்க்கார் பார்த்துச் சுத்தப்படுத்த வேண்டும். புகையிலை போடுகிறவர்கள் ஒரு அடி அகலத்திற்கு கவலைப் படாமல் துப்பிவிடுகிறார்கள். இப்படியெல்லாம் செய்தால், வியாதி வராமல் என்ன செய்யும்? இதற்கெல்லாம் பரிகாரமாக நாம் பலவித முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. கல்வியின் மூலம் முக்கியமாக ஜனங்களுக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லித் தருகிறோம். இதெல்லாம் மக்களிடத்தில் நன்றாக வேரூன்றாமல் சுத்தத்தை நாம் உண்டாக்க முடியாது. கல்வி முறையில் நாம் பலவற்றை மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். சுகாதாரமாக நடக்க வேண்டும், குப்பைகளைக் கண்ட இடத்தில் போடக் கூடாது, எச்சிலைக் கீழே துப்பக்கூடாது, போன்ற சுகாதாரமான முறைகளை ஜனங்களுக்குக் கற்றுத் தர வேண்டும். மக்கள் எல்லோருமே இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அரசாங்கம் என்ன செய்தாலும், நாட்டில் நல்வாழ்வு இருக்காது. அரசாங்கம் செய்கிற அத்தனையும் நஷ்டமாகத்தான் போகும்.

(முற்பகல் 11-10)

நகரத்தைப் பொறுத்த வரைக்கும், முனிசிபாலிட்டிதான் பொறுப்பாக இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும். நகரைச் சுத்தம் செய்வது, குப்பைகளை அகற்றுவது போன்ற வேலைகள் எல்லாம் நடக்க வேண்டும். அங்கு அதிகாரிகள் எப்படி நடந்துகொள்கின்றார்களோ அதைப் பொறுத்துத்தான் அந்தப்பகுதி சுத்தமாக இருக்கும். கொசுக்கள் இப்போது அதிகமாகப் பெருகிவிட்டன. நகரங்களிலே கொசுக்கள் பெருகியிருப்பதைப் பார்த்தால், கொசு கடிப்பதற்குப் பதிலாக ஆளையே தூக்கிக்கொண்டு போய்விடும் போல இருக்கிறது. அவ்வளவு பெரிதாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை மருந்துகளை அடிக்கிறார்கள். அதிகாரிகளை நான் குறை சொல்வதற்கில்லை, தாலியிலே மருந்து அடிக்கிறார்கள். அப்படி

அவர்கள் மருந்து அடித்தும் கொசுக்கள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவர்களுக்கும் இதைத் தடுப்பது எப்படி, என்ன பண்ணுவது என்பது தெரியவில்லை. சாக்கடைகளைத் திருத்தவில்லை. எந்தத் திட்டம் போட்டாலும், அதைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஸ்ரீரங்கம் கொசுக்கள்தான் அப்படி இருக்கின்றதா? மற்ற முனிசிபாலிட்டியில் உள்ள இடங்களிலும் அப்படி இருக்கின்றதா என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அப்படி இருக்கிறதா?

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டி எவ்வளவோ மேலாக இருக்கிறது. அந்தக் காலத்திலே யானைக்கால் வியாதிகூட இருந்தது. இப்போதெல்லாம் அந்த அளவுக்குப் பெருகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கும்பகோணத்தில்கூட இருக்கிறது என்று சொல்லிக் [illegible] கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டி என்று சொன்னதற்காக கும்பகோணம் முனிசிபாலிட்டியையும் சேர்த்துச் சொல்கிறார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: கும்பகோணம் கொசுவுக்கும் ஸ்ரீரங்கம் யானைக்காலுக்கும் பேர் பெற்றவை என்று சொல்வார்கள். அது தான் வழக்கம். எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இப்போது யானைக்கால், மலேரியா என்று இருந்து கொண்டிருக்கிறது. எல்லா முனிசிபாலிட்டிகளிலும் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. இதற்கென்று முனிசிபாலிட்டியில் ஹெல்த் ஆபிசர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் நன்கு ஒத்துழைப்பதில்லை. ஹெல்த் ஆபிசருக்கும், கமிஷனருக்கும் இடையே சண்டைகள் வந்துகொண்டிருக்கும். ஹெல்த் ஆபிசருக்குச் சம்பளம் ஜாஸ்தி, கமிஷனருக்குச் சம்பளம் குறைவு என்ற அளவில் பேசிக் கொள்வார்கள். இந்த நிலைமைகளில் ஹெல்த் டிப்பார்ட்மெண்டிலே இருப்பவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. கமிஷனர் ஒரு இடம் போய்விடுவார். ஹெல்த் ஆபிசர் இன்னொரு இடம் போய்விடுவார். கமிஷனர் "என்னைக் கேட்காமல் ஏன் செய்தாய்?" என்று சொல்வார். அதனால் பண்ணுவதில்லை. ஹெல்த் இன்ஸ்பெக்டர் நமக்கு என்ன வந்தது என்று இருந்து விடுவார். பணம் செலவாகும் விஷயத்தில் தகராறுகள் வந்துவிடும். இவர்கள் பொறுப்பாக வேலை செய்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். என [illegible] பிராக்டிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கிறது. பேப்பரிலேயிருந்து [illegible] கமிஷனர் அவர்கள் கொண்டு போய்விடுவார்கள். [illegible]

கூட்டுமாறுதான் விட்டுவிட்டுப் போவார்கள். டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அவர்கள் ஹெல்த் அதிகாரிகளை நியமிக்கிறார்கள். முனிசிபாலிட்டி அட்மினிஸ்ட்ரேஷன் அளவுக்கு வருகிறார்கள். 4 சிபாரிசுகளைப் பெற்றுக் கொண்டு, வேலைக்கு வந்துவிடுகிறார்கள். இதனால் தவறு ஏற்பட வழியிருக்கின்றது. சுகாதாரம் இல்லாமல் நாட்டிலே பெருமை இல்லை. வியாதிகள் நாட்டிலே பெருகிக் கொண்டிருக்கின்றன. சுகாதார டிப்பார்ட்மெண்டில், ஆபிசரிலிருந்து, ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் வரை ஒழுங்காக வேலை செய்வதில்லை. அந்தப் பணிகள் எல்லாம் ஒழுங்காக நடக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். எங்களைப் போன்ற அரசியல் வாதிகள் எல்லாம் இதில சிபாரிசு செய்கிறார்கள். அவர்களுக்கு சிபார்சுகள் செய்வதால், இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய முடிவதில்லை. சாதாரணமாக ஓட்டல்களின் போகுல்கூட அங்கே தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பெரிய பெரிய ஓட்டல்களில் கூட சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றது. சாப்பிடும்போது, ஸ்பூனை தொண்டை வரையிலும்கூட வைத்துப் சாப்பிடுகிறார்கள். தொண்டைக் குள்ளேயே விட்டுக் கொள்கிறார்கள். டவுன்களிலே உள்ள ஓட்டல்களிலேதான் இப்படிச் செய்கின்றார்கள். கிராமங்களிலேகூட அந்த நிலைமைகள் வந்து விட்டன. பிளேட்டிலே சாப்பிடுவது, ஸ்பூன் வைத்துச் சாப்பிடுவது என்று வந்துவிட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுகூட சுகாதாரத்திற்கு என்று தானே வைத்திருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தொண்டை வரையில் இருக்கின்ற வியாதிகள் எல்லாம் அந்த ஸ்பூனுக்கு வருகின்றன. பெரிய ஓட்டல்களில் அந்தப் பாத்திரங்களைச் சரியாகக்கூட அலம்புவதில்லை. பொதுமக்கள் பெரிய ஓட்டல்களாக இருப்பதால், அங்கு சுத்தமாக வைத்திருப்பார்கள் என்று எண்ணுகிறார்கள். ஆனால் உண்மையில் அங்கேதான் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களிடம் நிறைய பணம் இருக்கிறது. அதைப்பற்றி அதன் சொந்தக்காரர்களிடம் கேட்க முடியாது. அவர்களுக்குப் பண வசதி இருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அளவுக்குக் காரியங்களைச் செய்து கொள்வார்கள். அந்த மாதிரி ஓட்டல்களில் உள்ள அசுத்தங்களால் வேண்டிய வியாதிகள் பெருகுகின்றன. க்ஷயரோகம் வருகின்றது. க்ஷயரோக ஆஸ்பத்திரி என்று ஒன்றுதான் இருந்தது. தாம்பரத்தில்தான் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பெரிய க்ஷயரோக ஆஸ்பத்திரி அமைக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் சேர்வதற்கு விண்ணப்பம் போடுவார்கள். [illegible] செய்து வைப்பார்கள். [illegible] மாதம், இரண்டு மாதங்கள் [illegible]

வரும். அதற்குள் அந்த நோயாளியே இறந்து விட்டிருப்பார். அவர் போய்ச் சேர்ந்துவிட்டிருப்பார். அவர்கள் மீது குறை சொல்வதற்கில்லை. அந்த அளவுக்குத்தான் இடவசதி இருக்கிறது. அங்கு 100 அல்லது 150 பெட்கள்தான் இருக்கும். அதற்கு மேல் பல அப்ளிகேஷன் வந்து கொண் டிருக்கின்றன. அது எப்படித்தான் வருகிறது என்பது நமக்குத் தெரியவில்லை. நேற்று தொழில்பற்றிப் பேசும்போது, சுகாதாரத்தைப் பற்றிப் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்கள்கூட சுகாதாரத்தைப் பற்றியும் பேசினார்கள். இந்த வியாதிகள் பெருகுவதற்குக் காரணம் என்ன? பெரிய தொழிற்சாலை, சிறிய தொழிற்சாலை, மில்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளிலிருந்து கழிவுப் பொருள்கள் எங்கு பார்த்தாலும் பரவிவிடுகின்றன. அதன் காரணமாக வியாதிகள் ஏற்படுகின்றன. அந்தக் கழிவுப் பொருள்கள் தண்ணீரில் கலந்து விடுகின்றன. 'புரோடெக்டட் வாட்டர் சப்ளை' என்று சொல்கின்றார்கள். அந்த வாட்டர் சாப்பிடுகின்ற அளவுக்கு இருப்பதில்லை.

THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, in protected water supply, water is being protected well with chlorination and other things.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதைப்பற்றி எப்படிச் சொல்வது! 'புரோடெக்டட் வாட்டர் சப்ளை' என்று தான் சொல்கிறார்கள். நானும் 15 வருடங்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த நீரைத்தான் நாங்களும் குடித்துப் பழகிக் கொண்டிருக்கிறோம். வியாதிகள் வந்துகொண் டாகிருக்கின்றன. நாங்கள் வேறு என்ன பண்ண முடியும்? பேப்பர் மில் ஒன்று ஈரோட்டிலே இருக்கிறது. அதன் வட்டாரத்திலே, பக்கத்திலே வருகின்ற கழிவுப் பொருள்கள் வியாதியை உண்டாக்குகின்றன. லட்சக் கணக்கான மீன்கள் செத்துவிடுகின்றன. இதனால் வியாதிகள் எல்லாம் பெருகு கின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மீன்கள் செத்துப் போகின்றன என்றாலும்கூட, பெருத்த நஷ்டம் தான் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்த மாதிரியான கழிவுப் பொருள்கள் எல்லாம் இந்த வாட்டரிலே வந்து கலக்கின்றன. காவேரி பூம்பட்டினம் வரையில் போகிறது என்றுகூட சொல்லலாம். என் காவேரி யிலிருந்து தஞ்சை, கும்பகோணம் வரைகூட போகலாம். ஆரூரான் சர்க்கரை ஆலை நடத்துகிறார்கள். அதன் கழிவுப் பொருள்கள் அந்தப் பகுதியில் ப[illegible] கிருக்கின்றன. அதிலிருந்து வருகின்ற வாசனை கிட்டத்தட்ட 15 மைல்களுக்கு [illegible] அந்தக் கழிவு நீர் வருவதால், விவசாயம்கூட அந்தப் பகு[illegible] [illegible] 4,500 ஏக்கர் ஆயக்கட்டு பா[illegible] [illegible] இந்தப் பகுதியில் [illegible] பா[illegible]

படுகிறது. கரூர் சிமண்ட் பாக்டரி இருக்கிறது. அதன் கழிவுப்பொருள்கள் சுமார் 20 மைல் தூரத்திற்குப் பரவிவிடுகின்றன. அந்தப் பகுதி வெள்ளை அடித்த மாதிரி இருக்கிறது. சுண்ணாம்பு அடித்த மாதிரி இருக்கிறது. சிமெண்டைத் தூவினால், எப்படி இருக்குமோ அப்படி இருக்கும். அரசாங்கம் இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டும். முதலிலேயே பார்க்க வேண்டும். வியாதி வராமலிருப் பதற்கு வழி செய்ய வேண்டும். வியாதிகள் வந்த பிறகு பார்ப்பது என்பது கடினமாகும். நம்மையும் மீறி புயல், வெள்ளம் என்று வந்துவிடுகிறது. வந்த பிறகு நாம் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

மருத்துவ மனைகளைப் போய்ப் பார்க்கின்றபோது, ஒரு விதமான வாடை வீசுகிறது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ளேயேகூட ஒரு அரை பர்லாங்குக்கு அந்த வாடை வீசுகின்றது. அந்த மாதிரியான வாடை எல்லா ஆஸ்பத்திரி களிலும்தான் இருக்கிறது. மெயின்டினன்ஸ் அந்த ஆஸ்பத்திரியில் சரியாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் என்ன பண்ணுவார்கள்? அங்கு வியாதியஸ்தர்கள் பெருகி வந்து கொண்டிருக்கிறார்கள். வியாதிகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் அதை மெயின்டினன்ஸ் பண்ண முடியாத நிலைமைகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. [illegible] பேர்களுக்கு [illegible] புரொவைட் பண்ணுகின்ற இடத்தில் 10 பேர்களுக்குப் பண்ண வேண்டிய

(முற்பகல் 11.20)

நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஜில்லா ஹெட்குவார்ட்டர்சில் பிரைவேட் நர்சிங் ஹோம் எப்படி ஏற்படுகிறது? மருத்துவ மனையிலும் கும்பல். நர்சிங் ஹோமிலும் இடமில்லை. பிரைவேட் பிராக்டிஸ் பண்ணு கிறவர்கள் ஆனரரி சர்ஜன்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்பத்திரி மருந்துகளை எடுத்துச் செல்லுகிறார்கள் என்று சொன்னால், நான் அதை நம்ப மாட்டேன். அங்கே வருகிற மருந்து முதல், இரண்டாவது, மூன்றாவது தர மருந்தாகவும் இருக்கிறது. ஆகவே மருத்துவ மனை டிரிட்மெண்டை நம்பினால், பிரயோசனமில்லை. பிம்பிரியில் பென்சிலின் தயாரித்து அனுப்புகிறார்கள். இந்தப் பென்சிலின் ஊசியைப் போட்டால் பிளட் பிரஷர் வருகிறது. அலர்ஜி வந்துவிடுகிறது. முன்பு வந்த பென்சிலின் மருந்து நன்றாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து வந்தது. ஜனங்களுக்கு நல்ல மருந்து தான் வேண்டும். சென்டரில் ஜனதா கவர்ன்மெண்டு நடக்கிறது. உள்நாட்டில் தயாராகும் மருந்து பிரயோசனமில்லை. இந்த மருந்தைப் போட்டுவிட்டு நோயாளியைப்பற்றி டாக்டர் பயப்படுகிறார். ஆகவே பென்சிலினைப் போடுவதில்லை. திடமான மருந்து இல்லை. மெடிக்கல் கவுன்சில் என்று ஒன்று இருக்கிறது. இது சரியான மருந்தா இல்லையா என்று சொல்வதில்லை. இந்தக் கமிட்டியை

சர்க்கார் தான் நியமிக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், அடுத்த தடவை இந்தக் கமிட்டியில் இடம் கிடைக்குமோ இல்லையோ என்று பயப்படுகிறார்கள். எல்லோரும் 'ஆமாம்' என்று சொல்லிவிடுகிறார்கள் . . . . நான் ஒரு மணி பஸ்சுக்குப் போக வேண்டும், அங்கே கூட்டம் இருக்கிறது. சீக்கிரத்தில் முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒரு மணி பஸ்சுக்கு ரொம்ப நேரம் இருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மக்கள் நல்வாழ்வுத் துறையில் கடைசி வரையில் எல்லோரும் ஒத்துழைத்தால்தான், நல்வாழ்வாக முடியும். எல்லோரும் நல்வாழ்வுடன் இருந்துவிட்டால், மெடிக்கல் காலேஜில் படித்து விட்டு வெளியே வரும், 500, 1,000 டாக்டர்களுக்கு என்ன வேலை? நாம் இப்போது இங்கிலீஷ் மருந்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய எம்.எல்.சி. திரு. மாசிலாமணி அவர்கள் நாட்டு வைத்தியத்தில் கெட்டிக்காரர். அதை விரிவுபடுத்த வேண்டும். ஆராய்ச்சி பண்ண வேண்டும். இப்போது அதற்குக் கொடுக்கிற பணம் போதாது. நாட்டு மருந்துக்கு நிறைய பணம் ஒதுக்க வேண்டும். சித்த வைத்திய முறையும் சிறந்த முறை. இது ஒரு வீட்டுக்குத் தெரிந்தால், மற்றவனுக்குச் சொல்ல மாட்டான். பக்கத்து வீட்டுப் பிள்ளைக்குக் கூட சொல்ல மாட்டான். அவ்வளவு ரகசியமாக வைத்திருப்பான். அது இன்றையதினம் அழிந்து போகிற நிலைமையில் இருக்கிறது. இதற்கு விரிவான பண உதவி செய்ய வேண்டும். அதே மாதிரி ஆயுர்வேத அரிஷ்டங்களுக்குக் கட்டுப்பாடு என்கிறார்கள். ஆனால் இண்டியன் லெவலில் ஆயுர்வேத முறை இருக்கிறது. அதை ஆராயமல் கட்டுப்படுத்துகிறேன் என்று சொல்லுவது சரியல்ல. காரணம் சொல்ல வேண்டும்.

திரு. கு. ரா. பாலசுப்பிரமணியம்: அரிஷ்டங்கள் என்று சொல்லி மது கஷாயங்கள் தயாரிப்பதனால், இதைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஒரு சிலர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். அதற்காக பதவியே வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா? எம்.எல்.ஏ., எம்.எல்.சி., என்பவர்கள் தவறு செய்தால் அந்தப் பதவிகளே வேண்டாம் என்று சொல்லலாமா? எது நல்லதாக இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதை ஜனங்கள் பார்த்துக் கொள்ளட்டுமே. மக்கள் நல்வாழ்வுக்கு 'அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வும் மருத்துவமும் என்பது குறித்துப்பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்த அரசு நகரத்தில் கிடைக்கக்கூடிய மருத்துவ வசதிகள் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்காமல் இருந்ததை நிறைவேற்றுகிற வகையில் நல்ல வழியில் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, மனதிற்குத் தெம்பு ஏற்படுகிறது. அதுவும் கிராமப்புறங்களில் உள்ள கிராமங்களில் 'இண்டீரியர் வில்லேஜஸ்' இது போன்ற மருத்துவ வசதி ஏற்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால் இன்றைக்கு அது எந்த அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும். உதாரணமாக, எங்கள் கொல்லிமலைப் பகுதியில் வாழக்கொந்தி கோம்பை, நடுக் கோம்பை என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ஐயாயிரம் மலைவாழ்மக்கள் வசிக்கின்றனர். அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கூட கிடையாது. குறிப்பில் இருக்கிற மொபைல் யூனிட் வாரத்திற்கு ஒன்று இரண்டு தடவை வந்து மக்கள் நோயை அறிந்து மருந்து கொடுக்கும் வசதியும் இல்லை. அவர்கள் நோய் வாய்ப்பட்டுவிட்டால், வைத்தியம் பார்க்க 10 மைல் தொலைவிலுள்ள சேந்தமங்கலத்திற்கு வரவேண்டும். வாகன வசதி இல்லை. இரட்டை மாட்டு வண்டி அல்லது மாட்டு வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு வரவேண்டும். கல்லோடு. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை அரசு கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசைத் தாக்குவதாக, தாறுமாறாகப் பேசுகிறேன், குற்றம் சொல்லுகிறேன் என்று பொருள் அல்ல. இது போன்ற மருத்துவ வசதி பெற முடியாத மக்கள் இருக்கின்றனர் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நகரப் புறங்களில் குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் ஆனவுடன் 'போலியோ டிராப்ஸ்', டிரிபிள் ஆன்டிஜன் போன்ற வகைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மிகவும் உஷாராக இருக்கிறார்கள். கிராம மக்களுக்கு இதை எப்படிக் கொடுப்பது, எந்த நேரத்தில் கொடுப்பது என்பது தெரியாது. அப்படிப்பட்ட மக்களுக்கு மருத்துவ அறிவை ஏற்படுத்தி, கிராம மக்கள் பயன்பெற வழி வகை செய்ய வேண்டுமென்று இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், பக்கத்தில் 10 மைல் தொலைவிலுள்ள சேந்தமங்கலம் ஒன்றியத்தில் 25 முதல் 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவ விடுதியில் இரண்டு மகப்பேறு நிலையங்கள்தான் இருக்கின்றன. ஆஸ்பத்திரி தோன்றிய காலத்தில் இருந்ததுதான் இப்போதும் இருக்கிறது. அங்கே அதைத் தவிர வேறு தனி மருத்துவமனை இல்லை. சேலம் மாவட்டத்தில் நாமக்கல் தாலுகா தான்

பெரிய தாலுகா. எட்டு பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்டது. அங்கே உள்ள மருந்தகம் மிகச் சிறந்த முறையில் கட்டப்பட்டுள்ளது. அங்கே உள்ள நிலை என்ன? சுற்றுச் சுவர் இல்லாத ஆஸ்பத்திரி. அனஸ்தேஷியா கொடுக்க ஆள் இல்லை. ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை. தண்ணீர் வசதி இல்லை. பிளட் பாங்கில் ஒரு பாட்டில் ரத்தம் கூட இல்லை. தாலுகா தலைமை ஆஸ்பத்திரியின் நிலைமை இப்படி இருக்கிறது. அங்கே சிப் மெடிக்கல் ஆபீசர் ஒருவர் இருக்கிறார். நான் அட்வைசரி போர்டில் இருக்கிறேன் என்பதால், ஏதாவது லெட்டர் கொடுத்தால், அட்மிட் செய்து விடுகிறார்கள். 11 மணிக்குப் பார்க்கப் போனால் தயவு செய்து சேலத்திற்குக் கொண்டு போய் விடுங்கள் அனஸ்தேஷியா கொடுக்க ஆள் இல்லை, ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை, எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இரவு 11 மணிக்கு மேல் கார் வைத்து ஈரோடு அல்லது சேலத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு அந்த தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் ஒரு லேடி டாக்டர்தான் இருக்கிறார். அதிகமாக மகப்பேறு கேஸ்கள் வந்தால், எப்படிப் பார்த்துக் கொள்ள முடியும்? தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் இந்த மாதிரி நிலை இருப்பதால் இதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. ஆஸ்பத்திரியில் மருந்துகள் இல்லை. இரண்டு மருத்துவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. இதை டி.எம்.ஓ. விடம் பல முறை சொன்னேன். நாமக்கல் ஆஸ்பத்திரியை கவனித்தால், சேலம் ஆஸ்பத்திரியைக் கவனிக்க முடியாதே என்கிறார். என்ன சொல்லுகிறேன் என்றால், மருத்துவ வசதி இல்லாத சாதாரண மக்களுக்கு நல்ல ஒரு வசதி ஏற்பட வேண்டுமென்றால், உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்றால், அந்த தாலுகா மையத்தில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள் சிறந்த முறையில் அமைக்கப்பட வேண்டும். சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால் ஆஸ்பத்திரியைப் பொது வழியாக மக்கள் பயன்படுத்துகிறார்கள். ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் பாட்மின்டன் கிரவுண்டில் விளையாடுகின்றனர். கைதட்டி கேளிக்கை விளையாட்டு நடக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.30)

அதோடு மட்டுமல்ல. ரோடிலே நடந்து போகும்போது, துர்வாடை வீசுகிறது. அங்கே போதுமான தண்ணீர் வசதியில்லை. ஆதலால் பராமரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நாமக்கல் பக்கத்தில் மோகனூரில் 'ஐ காம்ப்' நடந்தது. 200, 300 பேர்களுக்கு ஆபரேஷன் நடைபெற்று, அவர்கள் கண்ணொளி பெற்று, கண்ணொளி பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த மருத்துவ மனையில் டாக்டர் இல்லை. இ.என்.டி.க்கு டாக்டர் இல்லை. பெரிய மருத்துவ

மாக அது இருக்கிறது. அங்கே வெறும் கட்டிடம்தான் இருக்கிறது. தாலுகா ஹெட்குவார்டர்ஸ் ஹாஸ்பிடல் என்று போர்டு இருக்கிறது. பிளட் பேங்க் இருக்கிறது, ஆபரேஷன் தியேட்டர் இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் இல்லை. இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தனியார் மருத்துவ மனைகள் எவ்வளவோ பரவாயில்லை. அரசு மருத்துவ மனைகளில் அச்சமே இல்லாமல் போய்விட்டது. அங்கேயுள்ள டாக்டர்கள் தங்களுக்குள்ளாகவே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். ஒரு தடவை நானே பார்த்தேன். ஒரு டாக்டரிடம் வைத்தியம் பார்த்துக்கொண்ட ஒருவர், இன்னொரு டாக்டரிடம் போனார். அதனால் அந்த 'பேஷன்ட்'க்கும் டாக்டருக்கும் அடிதடி சண்டை நடந்தது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. நான்கூட அரசுக்கு ஆலோசனையாக ஒன்றைச் சொல்வேன். சர்க்கார் மருத்துவ மனைகளில் பணி புரிகிறவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுங்கள்; 'பிரைவேட் பிராக்டிஸ்'ஐ நிறுத்திவிடுங்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவ மனைகளிலிருந்து மருந்துகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டும்.

இந்த நேரத்தில் இன்னொன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் பெரிய பல் மருத்துவ மனை இருக்கிறது. சென்ற வாரம் பல்வலி காரணமாக அந்த மருத்துவ மனைக்குச் சென்றேன். அங்கே இருக்கின்ற கருவிகளிலே 80 சதவிகிதம் கருவிகள் உபயோகத்திற்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. 20 சதவிகிதம் கருவிகள் துருப் பிடித்திருக்கின்றன. துருப் பிடித்த கருவியை வாயிலே வைத்து, வைத்தியம் செய்தால் மேலும் நான்கு வியாதிகள் வந்து சேருகின்றன, 10 நாட்கள் வீக்கம் அப்படியே இருந்தது. மருத்துவ மனையிலே இருக்கும் கருவிகளில் 80 சதவிகிதம் வேலை செய்யவில்லை. இருப்பது 20 சதவிகிதம் கருவிகள்தான். நான் போன அன்றைக்கு மருத்துவ மனைப் படிக்கட்டில் பெரிய தகராறு நடந்தது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டார்கள். ஏன் அடித்துக்கொள்கிறார்களென்று கேட்டேன். அங்கே கணவனும், மனைவியும், மனைவியின் பல் வைத்தியத்திற்காகச் செல்லும்போது, மனைவியை மாத்திரம் மேலே போக அனுமதிக்கிறார்கள். அவர்கள் வர 3 மணி நேரம் அல்லது 4 மணி நேரமானாலும், கணவன் கீழேயேதான் இருக்க வேண்டும். குழந்தைகளை அழைத்துச் சென்றால்கூட, ஒருவர்தான் கூடப் போகலாம். மேலே விடுகிறவருக்கும், 'பேஷன்ட்'க்கும் அடிதடி, சண்டை. அதைப்பற்றிக் கேட்டபோது, 'இதெல்லாம் சர்வசாதாரணம், மண்டையெல்லாம் உடைந்திருக்கிறது' என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நல்லவேளை பல் உடையவில்லை, மண்டைதான் உடைந்தது.

திரு. க. அறிவழகன் : பல் உடைந்ததால்தான் அங்கே போகிறார்கள்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அந்த மருத்துவ மனையில் ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய நவீன கருவிகளை இன்னமும் பொருத்தாமல், ஸ்டோர் ரூமிலேயே வைத்திருக்கிறார்கள். மன்றத் தலைவர்களுக்கு [illegible] க்கொள்கிறேன், திடீரென்று பல்வலி என்று அங்கு போனால், [illegible] கிடைக்க அரை மணி நேரமாகும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : என் பெயரை இழுக்காமல் இருந்தால் நல்லது. போன வாரம்தான் நான் போயிருந்தேன். நல்ல முறையில்தான் கவனித்தார்கள். ஒரு பல்லைப் பிடுங்கிக்கொண்டு வந்தேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இருக்கிற நிலைமைகளை நான் சொல்கிறேன். நூதன சாதனங்கள் அங்கே பொருத்தப்படாமல் இருக்கின்றன. மருந்துகள் வாங்கி வாருங்கள் என்று சீட்டு எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கேயுள்ள ஒரு டாக்டரே மருந்துக் கடை வைத்திருக்கிறார். அவர் சீட்டு எழுதிக் கொடுத்தவுடன். 2 ரூபாய் பெருமானமுள்ள மருந்து, 5 ரூபாய் கொடுத்து அந்தக் கடையிலிருந்து வாங்கி வருகிறார்கள். மருத்துவத் துறையிலே பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். கண்காணிப்பு இருக்கிறது. அமைச்சர்கள் இருக்கிறார்கள். சர்ப்ரைஸ் விசிட் செய்கிறார்கள். இருந்தும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி, அந்த மருத்துவ மனையிலுள்ள கருவிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவ மனையில் செயற்கை சிறுநீரகக் கருவி ஒன்று இருக்கிறது. அங்கேயுள்ள நோயாளிகளைப் பராமரிக்க அது இருக்கிறது. ஆனால் திடீரென்று ஒருவருக்கு அந்தக் கருவியைப் பொருத்த வேண்டுமென்றால், போதுமான வசதியில்லை. எனவே இன்னொரு செயற்கை சிறுநீரகக் கருவியைப் பொது மருத்துவ மனையிலே வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே உள்ள பொது மருத்துவ மனைக்கு அதிகமான நோயாளிகள் வருகிறார்கள். ஆனால் அங்கே போதுமான அப்போடஸ் இல்லை. இன்றைக்கு எங்கும் மாடர்ன் சயன்ஸ் என்று பேசப்பட்டு, எல்லா நாடுகளும் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நாம் புதிய சாதனங்களையாவது நம்முடைய மருத்துவ மனையிலே வைக்க வேண்டும். தலைமை மருத்துவ மனையில் [illegible] இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. அதைத் தீர்க்க [illegible] கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு 'எக்ஸ்பர்ட்' என்று சொல்லக்கூடிய பெரிய டாக்டர்கள், ஒரு துறையிலே சிறப்புத் தன்மை பெற்றவர்கள் வெளியிலே இருந்துகொண்டு பணியாற்றும் காட்சியைப் பார்க்கிறோம். அரசாங்கத்திலே பணியாற்றும்போது அவர்களுடைய ஆர்வம் குறைந்து விடுகிறது. ஏனென்றால் அவர்களுடைய பயிற்சியே மறந்து போகுமோ என்று அஞ்சக்கூடிய அளவுக்கு மருத்துவ மனைகளில் போதுமான இன்ஸ்டிருமெண்ட்ஸ் இல்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் அங்கே சிகிச்சைக்காகச் செல்பவர்கள்தான், சாதாரண ஏழை மக்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் அரசு உடனடியாக கவனம் செலுத்தி, அப்போதைக்கப்போது வேண்டிய கருவிகளை வாங்கிக் கொடுத்து, பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

கடைசியாக நான் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மலை அடிவாரங்களில் 5,000 மக்கள் தொகை இருந்தால், அதை ஒரு யூனிட்டாக வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். எந்தப் பகுதியில் அப்படியிருக்கிறதென்று பார்த்து, உடனடியாக அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இருப்பதேயில்லை. அவர்கள் போய்விடுகிறார்கள். இரவில் ஏதாவது ஆபத்தான கேஸ்கள் வந்தால்கூட, டாக்டர்கள் விடிந்துதான் வருகிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை செய்கிறவர்கள், அங்கேயே இருக்க வேண்டுமென்று ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமை மருத்துவராக இருக்கக் கூடியவர்கள் தினந்தோறும் அங்கே இல்லையென்றாலும், வாரத்திற்கு இன்னின்ன நாட்களில் கண்டிப்பாக இருப்பார் என்று அறிவிக்க வேண்டும். நாமக்கல் தலைமை மருத்துவ நிலையத்தில் இருப்பதேயில்லை. கேட்டால் சேலத்தில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடவுளுக்கு அடுத்தபடியாக டாக்டர்களைத்தான் தெய்வமாகக் கருதுகிறார்கள். கடவுள் பிறப்பைக் கொடுக்கிறார். அதற்குப் பின்பு ஏதாவது நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தால், 'மறுபிறப்பு' எடுத்து வந்தேன் என்று சொல்கிறோம். மற்ற துறைகளைவிட இந்தத் துறை மிகவும் பொறுப்போடு இருந்து செயலாற்ற வேண்டும். முதலமைச்சரவர்கள் இருக்கும்போது, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். இன்று முதலமைச்சரவர்கள் இல்லை. என்னுடைய துரதிருஷ்டமென்றுதான் சொல்ல வேண்டும். இந்தத் துறை

சிறப்பான துறை. முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக பரிகாரம் செய்வார் என்று நினைத்தேன். எனது துரதிருஷ்டம் அவர் இங்கு வரவில்லை என்று கூறி, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மக்கள் நல் வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீதும் மருத்துவம் குறித்த கொள்கை விளக்கக்குறிப்பின் மீதும் இங்கே எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு அங்கத்தினர்கள் நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். மேலும் என்னுடைய ஆலோசனைகள் சிலவற்றையும் கூறி, விரைவில் முடித்துக் கொள்கிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று நாம் அனைவரும் பண்டைக்காலம் தொட்டே குழந்தைகளை ஆசீர்வதித்து வந்திருக் கிறோம். இருந்தபோதிலும் இன்று நோய் அதிகமாகப் பரவுகிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். என்னென்ன புதிய நோய்கள் வருகின்றன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். மேலை நாடுகளில், மருத்துவ மனைகளிலே இவ்வளவு படுக்கைகளைக் குறைத்தோமென்று அறிக்கை வருகிறது. அங்கே நோயற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நாம் 'இவ்வளவு படுக்கைகளை விஸ்தரித்தோம்' என்று அறிக்கை வைக்கிறோம். அதற்குக் காரணம் ஏழ்மையான நாட்டிலே, பஞ்சமான நாட்டிலே அதிகமான நோயாளிகளைப் பெற்றிருக்கிறோமென்பதுதான். இன்றைய தினம் உள்ள மருத்துவ வசதி போதுமானதா என்றால், இல்லை. அதிகமான தேவைகளைத் தான் நாம் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறோம். கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு இன்றைய சூழ்நிலையில் மருத்துவ வசதி நிறைவாகப் பெற்றிருக் கிறார்களா என்றால், இல்லை என்று எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். பத்துப்

(முற்பகல் 11.40)

பதினைந்து மைல்களுக்கு அப்பால் சென்றுதான் பிரசவத்திற்கு வைத்தியம் பார்க்கக் கூடிய முறையில் நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அங்கே எடுத்துச் செல்வதற்கு வாகன வசதிகள் இருக் கின்றனவா என்று பார்த்தால், அதுவுமில்லை. கட்டில்களில் வைத்து ஆட்களின் தலைமேல் வைத்து எடுத்துச் செல்ல வேண்டிய நிலைதான் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். அந்த அளவுக்குக் கிராமங்களில் இந்த மருத்துவத் துறையைப் பொறுத்த அளவில் குறைகள் இருப்பதை நாம் உணர்கிறோம். 70 சதவிகிதம் மக்கள் வாழக்கூடிய கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்தாயிரம் மக்கள் தொகை உள்ளவர்களுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்

வைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், நிறைவாக எல்லாப் பகுதி களுக்கும் ஏற்படுத்தப் போகிறோமா என்று பார்த்தால் இல்லை. கிராமப் புறத்து மக்களை அணுகி, அவர்களுக்கான மருத்துவ வசதிகளைச் செய்து தரக்கூடிய அளவுக்கு இன்றைக்கு இல்லையென்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மருந்துகளை வாங்குவதற்காக உள்ள 12 ஆயிரம் ரூபாயை 14 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இரண்டாயிரம் ரூபாய் மட்டும் உயர்த்தி யிருப்பது போதுமா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். நோய்கள் வந்த பின்னால், அதைப் போக்குவதைக் காட்டிலும், நோய்களைத் தடுப்பதற்கு நாம் வழி முறைகளை ஆராய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நோய் பரவுவது என்பது ஒரு சோஷலிசமாக ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் கூட நாகரிகத்தின் பெயரால் இன்றைக்குப் பல வியாதிகள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். ஓட்டலில் சாப்பிடுவதைக் கூட சுட்டிக்காட்டி அப்படி சாப்பிடக்கூடிய பாத்திரங்கள் நல்ல நிலையிலே பாதுகாக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். இதனால்தான் இன்றைக்கு கிராமங் களில் கூட, க்ஷய நோயைப் பெற்றிராத கிராம மக்களுக்குக் கூட இன்றைக்கு க்ஷய நோய் பரவுவதைப் பார்க்கிறோம். கிராமந்தோறும் பத்துப் பதினைந்து டீக்கடைகள் இருக்கின்றன. அங்கே இருக்கக் கூடிய டம்ளர்கள் சுகாதார முறையில் இல்லாததால், அங்கே வியாதிகள் விரைவாகப் பரவுகின்றன. க்ஷய நோய் வந்தவர்கள் ஆரம்ப நிலையில் இதை அறிவதில்லை. வியாதி முற்றி இரத்த வாந்தி எடுக்கும்போதுதான் மக்கள் அதை அறிகிறார்கள். இதை ஆரம்ப நிலையிலே தடுக்க மாவட்ட அளவில் மருத்துவ மனைகள் ஏதாவது இருக்கின்றனவா என்றால், இல்லை. ஆரம்பச் சுகாதார நிலையத்தில் தடுப்பு ஊசியைப் போடக் கூடிய நிலையை உருவாக்கி யிருக்கிறோம் என்றாலும், அந்த வியாதி முற்றிய பின்னால் அவர்களை மருத்துவ மனையில் அனுமதித்தால்தான், அந்த வியாதி தீருமென்ற நிலைதான் இருக்கிறது. க்ஷய நோய் வந்தவர்கள் பலர் அதிலிருந்து குணமடையாமல் இறந்துவிடுவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், க்ஷய நோய் வந்தவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்ற பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து சிபார்சுக் கடிதங்களைப் பெற்று வந்தால்தான், அவர்களை மருத்துவ மனையில் அனுமதிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன். அதிலேகூட ஊழல்கள் இருப்பதாக அரசுக்கு பல புகார்கள்

வந்திருக்கின்றன. அதையும் போக்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.
வட ஆற்காடு மாவட்டத்திலே பெண்ணாத்தூர் பகுதியிலே ஒரு க்ஷய நோய்
மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய படுக்கை
களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதை நான் அறிவேன்.
அங்கே சேர்வதற்காக என்னிடமே பத்துப் பதினைந்து பேர்கள் சிபார்சுக்
கடிதம் பெறுவதற்காக வருவார்கள். நான் சிபார்சு செய்வது சரியா இல்லையா
என்று பார்க்காமல், அவர்களுடைய நிலையைப் பார்த்துக் கடிதம் கொடுப்பது
வழக்கம். அனுபவபூர்வமாகக் கூற வேண்டுமென்றால், ஒரு முறை என்னிடம்
கடிதம் வாங்கிக்கொண்டு ரிக்ஷாவில் ஏறும் போதே இரத்த வாந்தி எடுத்து,
என்னுடைய வீட்டு வாசற்படியிலேயே ஒருவர் இறந்துவிட்டார் என்பதைச்
சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அளவுக்கு க்ஷய நோய் வேகமாகப்
பரவிக் கொண்டிருக்கிறது. ஏதோ பெருமையாக அந்த நோயைத் தடுத்து
விட்டோம் என்று கூறினாலும், அந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களுடைய
எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படு
கிறேன். குழந்தைப் பருவத்திலேயே இந்த நோய் பீடிப்பதைத் தடுக்கக்கூடிய
சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். குழந்தைகள் பலமாக இருந்தால்தான்
எதிர்காலத்தில் சந்ததிகள் நல்ல முறையில் இருக்க முடியும் என்ற முறையில்,
குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிகளைப் போடும் திட்டத்தை ஆரம்பித்திருக்
கிறோம். அதோடு மட்டும் நின்று விடாமல், மேலும் கிராமப்புறங்களில்
இருக்கக் கூடிய குழந்தைகளைப் பராமரிப்பதற்கு வேண்டிய பரிசோதனை
களையும் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன். ஆரம்பத்திலேயே
நோய்களைத் தடுப்பதற்கான அறிவுரைகளைக் கூறுவதற்கும், மருத்துவ
மனைகளில் அவர்களை அழைத்து வந்து மருந்துகளை வழங்குவதற்கும்
அரசாங்கம் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். நன்றாகப் படிக்கக் கூடிய குழந்தைகள் நோயால்
பாதிக்கப்பட்டு, அதனால் குழந்தைகளும் பாதிக்கப்படுகிறார்கள், அவர்
களுடைய குடும்ப வாழ்வும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகளைப் பார்க்கிறோம்.
அவைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

மலேரியா நோய் பரவுவதை நல்ல முறையிலே நாம் கட்டுப்படுத்தி
யிருந்தாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இந்த நோய் பரவக்கூடிய சூழ்நிலை
இருக்கிறது என்று இங்கே கொடுத்துள்ள அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள்.
மலேரியாவைப் போக்குவதற்காகக் கொடுக்கக்கூடிய மருந்துகளை ஜீரணிக்கக்
கூடிய அளவுக்குக் கொசுக்களுடைய தன்மை உயர்ந்திருப்பதை நாம் பார்க்
கிறோம். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் சிறியதாக இருந்த
கொசுக்கள் இன்றைக்கு ஒரு ஈயின் அளவுக்குப் பெரிதாக வளர்ந்திருக்
கின்றன. அது ஏன் என்று புரியவில்லை. அந்த மருந்துகளைப் போட்டாலும்

கொசுக்கள் ஒழியக் கூடிய நிலையில் இல்லை. அதற்காக இருக்கக் கூடிய சுகாதார அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வியாதி வட ஆற்காடு மாவட்டத்திலே அதிகமாக இருப்பதைத் தடுப்பதற்குப் பாடுபட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நோய்கள் வருவதற்கு முன்னால் ஆரம்பத்திலேயே அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறேன். நாம் உண்ணும் பல உணவால் கூட பல வியாதிகள் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். நெல்-அரிசியால் கூட பல வியாதிகள் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். அதிக விளைச்சலை விளைவிக்க வேண்டுமென்று பயிர்களுக்குத் தெளிக்கக் கூடிய டி.டி.டி. போன்ற பூச்சி கொல்லி மருந்துகளால் கூட நோய்கள் வருகின்றன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். விவசாயத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமான விளைச்சலைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கம் ஒரு பக்கம் இருந்தாலும், அதை உண்ணுவதால் மக்களுக்கு வரும் நோயைத் தடுப்பதற்கு என்னென்ன செய்யலாம் என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலப்படத்தினால் ஏற்படக் கூடிய நோய்களைத் தடுத்து விட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். இதிலே 22,700 கேஸ்களில் 4,300 பேர்களுக்கு அபராதம் விதித்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இது வரவேற்கப்பட வேண்டியதுதான் என்றாலும், ஐந்தில் ஒரு பங்கு பேர்களுக்குத்தான் தண்டனை கிடைத்திருக்கிறது. ஐந்தில் நான்கு பங்கு பேர்களுக்குத் தண்டனையில்லை. அவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நல்லவர்களுக்குச் சிரமங்கள் கொடுப்பது நல்லதல்ல. கலப்படம் செய்பவர்கள் யார் என்பதை அறிய இங்கிதமாக அவர்களை அணுகி தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலில் தண்ணீரைக் கலப்பது ஆபத்தான நிலையில்லை. இருந்தாலும் அதற்காக கடுமையான தண்டனையை வழங்கியிருக்கிறோம். மற்ற உணவுப் பொருட்களில் கலப்படம் செய்வதைத் தடுக்க வழிமுறைகள் இருக்க வேண்டும். கிராமங்களிலே ஐந்து பைசா, பத்துப் பைசா என்று ஐஸ் விற்கிறார்கள். அதை குழந்தைகள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அந்த ஐஸில் பலவிதமான கலர்களைக் கலந்து விற்பதால், அதைச் சாப்பிடும் குழந்தைகளுக்கு கேன்சர் போன்ற வியாதிகள் வருகின்றன என்று கூறுகிறார்கள். இதை அரசு உணர்ந்து அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. எல். பலராமன்] [1978 மார்ச் 28

கிராமப் புறங்களில் சித்த மருத்துவத்தைப் பரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சித்த மருத்துவ முறையை எளிமையாக்கி கிராமப்புறங் களில் நடைமுறைப்படுத்தினுல், கிராமப் புற மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும். சித்த மருத்துவ முறை எளிமையானது, செலவினமும் அதிகமாகாது என்ப தால். அதை உணர்ந்து, அதற்கான முக்கியத்துவம் கொடுத்து, சித்த மருத்துவ முறையை கிராமப்புறங்களில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன். கிராமப்புறங்களில் ஊர்திகள் மூலம் சென்று மருத்துவ வசதிகள் செய்து தருவதாகக் கூறியிருக்கிருர்கள். அதை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இறந்த வர்களை எடுத்துச் செல்வதற்கு மருத்துவ மனைகளில் வாகனங்கள் கொடுப்ப தில்லை. தலைமை மாவட்ட மருத்துவ மனைகளில் யாராவது இறந்துவிட்டால், அவரது உடலை எடுத்துச் செல்ல வேண்டுமென்ருல், தனிப்பட்டவர்களிடத்திலே தான் வண்டியைக் கேட்க வேண்டும். பத்து ரூபாய் கேட்க வேண்டியதற்கு நூறு ரூபாய் கேட்கிருர்கள். அதற்கு மேலும் சில நேரங்களில் கேட்கிருர்கள்.

(முற்பகல் 11-50)

அந்த அளவுக்குக் கஷ்டப்படுவதைத் தவிர்க்க தலைமை மருத்துவ மனைகளிலே பிணங்களை எடுத்துச் செல்வதற்கு உதவக் கூடிய வகையில் வாகனங்களை அனுப் புகிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். திடீரென்று ஏற்படுகிற விபத்துக்களைத் தடுப்பதற்கு வாகனங்கள் தேவை. கிராமப்புறங்களி லிருந்து தகவல் அனுப்பினுல் தலைமை மருத்துவ மனையிலிருந்து வாகனங்கள் வருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். வேலூர் மருத்துவ மனை நல்லதொரு நிலையில் இயங்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்றைக்கு செய்துள்ள நன்மைகளைப் பாராட்டி மேலும் நல்ல காரியங்களைச் செய்வதற்கான குறிப்புகளை வைப்பார் கள். அதைச் செயல்படுத்துவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்து, அமை கிறேன். **வணக்கம்.**

திரு. மு. மாசிலாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது பேசுவதற்கு வாய்ப்பை நல்கியமைக்காக இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் மருத்துவத் துறை மனித சமுதாயத்தில் இன்றியமையாத ஒன்று என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். எனக்கு முன்ஞல் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று குறிப்பிட்டுச் சொன்னூர்கள். அதுபோல மனிதன் தன்னுடைய தாய் வயிற்றிலிருந்து பிறந்து வளர்ந்து

1978 மார்ச் 28] [திரு. மு. மாசிலாமணி]

வாழ்ந்து வருகிற நேரத்தில் தன்னுடைய உடல் நலத்தைப் பேணிக் காப்பது முக்கியமானது என்று கருதினுலும் கூட, சிற்சில சமயங்களில் உண்ணும் உணவு செயல்முறையின் காரணமாக உடலைப் பாதுகாக்க முடியாமல் இறந்துபடுகிற காட்சியைப் பார்க்கிருேம். இன்றைய தினம் சென்னையில் பொது மருத்துவ மனை இருக்கிறது. அடுத்து, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை எல்லாம் இருக்கின்றன. அதைப் போன்று தமிழகத்திலே தமிழ் மருத்துவத் துறையிலே பேறிஞர் அண்ணு பெயரில் அண்ணு நகரில் ஒரு மருத்துவ மனை இயங்கிக்கொண்டிருக்கிறது. தமிழ் சித்த வைத்தியத்தினுல் தமிழக மக்கள் பயன் பெற்று வருகிருர்கள். ஆங்கில மருத்துவ மனைகளிலே ஆங்கில மருத்துவத்தினுல் குணப்படுத்த முடியாத நோய்களை எல்லாம் சித்த மருத்துவத்திலே குணப்படுத்தி ஆக்க பூர்வமாக மனித சமுதாயத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பேறிஞர் அண்ணு அவர்கள் கூட அவர்களுடைய வாழ்நாளில் சித்த மருத்துவத்தைப் பயன்படுத்தி அவ்வப் பொழுது வாழ்ந்து வந்திருக்கிருர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை யாகும். மனிதனுக்கு நோய் எப்படி ஏற்படுகிறது என்ருல், வாதம், பித்தம், கபம் இம்மூன்றும் இன்றியமையாதது ; அந்த வாதம், பித்தம், கபம் இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று குறைந்தாலும் மிகுதியாஞலும் நோய் அவனைத் தொத்திக் கொள்கிறது. அந்த முறையிலே இன்றைய தினம் சென்னையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு நாளும் 600-க்கு மேற்பட்ட ஆண்களும், 600-க்கு மேற்பட்ட பெண்களும் குழந்தைகளும் வருகிருர்கள். அங்கே நுழையும்போது பார்த்தால், ஒரு விழா நடப்பது போலக் காட்சியளிக்கிறது. அந்த அளவுக்கு மக்கள் • வெள்ளம் கிட்டத்தட்ட சென்னையில் 33 லட்சம் அளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறது. அந்த நிலைமையில் மருத்துவர்கள் பல பிரிவுகளிலே பணியாற்றுகிருர்கள். வருகிற நோயாளிகளிடம் நோயைக் கேட்டு சிகிச்சை செய்து பம்பரம் போல சுழன்று பணியாற்றுவதை நான் பார்த்திருக்கிறேன். சில வார்டுகளிலே செவிலியர்கள், டாக்டர்கள் அவசர நிமித்தமாகவும் விரையும் போது பொறுமை இழக்கும்படியாகிறது. அவர்களும் மனிதர்கள் தானே ! இவ்வளவு நோயாளிகளையும் பார்க்கிறபோது, ஒரு சில நேரங்களில் காழ்ப்புணர்ச்சியைக் காட்டுகிருர்கள். அது தவிர்க்க முடியாத ஒன்று. இன்றைய தினம் ஜெனரல் ஆஸ்பத்திரியில் நோயாளிகள் எந்த வார்டுக்கு வரவேண்டும், அவசர கேஸ்கள் எங்கே செல்ல வேண்டுமென்று அறிவிக்க சிகப்பு விளக்கு ஒரு பகுதியையும் 'பச்சை விளக்கு ஒரு பகுதியையும் காட்டுகிற வகையில் பார்வையாளர்களுக்கு அறிவிக்கிற தன்மை அங்கே வைத்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். சென்னையில் காச நோய் மருத்துவமனை ஓட்டேரி பகுதியில் இருக்கிறது. நீண்டநாட்களாக அந்தப் பகுதியில் உள்ள

[திரு. மு. மாசிலாமணி] [1978 மார்ச் 28

மக்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். காச நோய் என்பது தொத்து நோய் என்று கருதப்படுகிறது. கிட்டத்தட்ட 40 ஆயிரம் அல்லது 50 ஆயிரம் பேர்கள் வாழ்கிற பகுதி நம்மாழ்வார் பேட்டை, சுப்பையாசெட்டித் தெரு போன்ற நெருக்கடி நிறைந்த பகுதியின் மத்தியில் அந்தக் காசநோய் மருத்துவமனை இருக்கிறது. அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரி வருகிறார்கள். தலைவர் அவர்கள் மூலமாக தமிழக முதல்வர் எங்கள் இயக்கத்தின் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா பெயரைக் கொண்ட சித்த மருத்துவமனை அங்கே துவக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பல நோய்கள் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. நாய்க்கடிக்கும், பெருச்சாளிக்கடிக்கும் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் விஷம் தலைக்கேறி மருத்துவமனைக்கு வருகிறார்கள். நாய் கடித்து எத்தனை நாளாகிறது என்று கேட்டால், மூன்று மாதமாகிறது என்பார்கள். ஏன் சும்மா இருந்தீர்கள் என்று கேட்டுவிட்டு, வயிற்றில் பதினாறு ஊசிகளைப் போடுகிறார்கள். அப்படிப் போட்டும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுகிறது. நம்மாழ்வார் பேட்டையில் ஒரு பெரியவர் 55 வயதுள்ளவர் குடைத் தொழில் செய்கிறவர் இருந்தார். பெருச்சாளி கடித்ததைக் கவனிக்காமல் இருந்ததால், ஒருநாள் திடீரென்று இரவு அந்தப் பெரியவர்க்கு குளிர் வந்து ஜன்னி கண்டு அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அவருக்குப் பன்னிரண்டு பிள்ளைகள். அவர்கள் தெருவில் கூடி அழுததை நான் கண்ணால் பார்த்தேன். அப்படிப்பட்ட பெருச்சாளிக் கடிக்கும், நாய்க்கடிக்கும் சித்த மருத்துவத்திலே நல்ல மருந்துகள் இருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சட்ட மன்றத்தில் பேசுகிறபோது, ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சித்த மருத்துவத்திற்கு ஒரு ஆலோசனைக் குழு அமைத்திருப்பதாகவும் அதற்கு டாக்டர் உத்தமராயன் அவர்களைத் தலைவராக அமைத்திருப்பதாகவும் சொன்னார்கள். அதைப் பார்த்ததும் நீண்ட நாட்களாக இருந்த என் எண்ணம் நிறைவேறியதற்காக நான் இருந்த இடத்திலேயே இருந்து மகிழ்ச்சியும் நன்றியும் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டேன். சித்த மருத்துவத்திலே பெருச்சாளிக் கடிக்கு வேப்பிலை, அருகம்புல், மஞ்சள் இவற்றைக் கூட்டி அறைத்துத் தடவினால் விஷம் இறங்கிவிடும். என்னுடைய தாய்க்கு இதைச் செய்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். பெருங்களத்தூரில் அவர்கள் இருந்தபோது அவர்களைப் பெருச்சாளி கடித்துவிட்டது. ஒரு நாள் இரவு அவர்கள் தூங்கும்போது பெருச்சாளி குரலைப்போன்று கொர் கொர் என்று சத்தம் வந்தது. என்ன என்று கேட்டேன். பெருச்சாளி கடித்துவிட்டது என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரிக்குச் சென்று ஊசி போட வேண்டுமென்று சொன்னால், எங்கள் பாட்டி வேண்டாமென்று மறுத்துவிட்டார்கள்.

1978 மார்ச் 28]

திரு. ஜி. சுவாமிநாதன் : பெருச்சாளி என்று உறுப்பினர் சொல்லும்போது 'ச்'-சை சேர்க்காமல் பேசுகிறார்கள்.

திரு. மு. மாசிலாமணி : அப்போது எங்கள் பாட்டி ஒரு மருந்தைத் தயார் செய்து கொடுத்ததும் அது குணமாகிவிட்டது. அதைப்போல சித்த மருந்து கிராம மக்களுக்கு உதவக் கூடிய மருந்து. மூலிகைகளிலிருந்து செய்யப்படும் அந்த சித்த மருந்துகள் நல்ல பயன் தரக்கூடியனவாக இருக்கின்றன. அந்த மூலிகைகளை வைப்பதற்கு பண்ணை வைக்கப்போவதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சிக்குரியது. சென்னையில் சித்த மருத்துவ மனைகள் இருக்கின்றன. தலைமைச் செயலகத்தில் ஒன்றும், சைதாப்பேட்டையில் ஒன்றும், திருவல்லிக்கேணியில் ஒன்றும், சேப்பாக்கத்தில் ஒன்றும் இருக்கின்றன. வட சென்னைப் பகுதியில் தொழிலாளர் அதிகமாக வசிக்கிறார்கள். அங்கே சித்த மருத்துவ மனை அமைக்கப்பட வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். சித்த வைத்தியராக இருந்தாலும், அலோபதி டாக்டராக இருந்தாலும், நோயாளிகளிடம் மிகவும் வாஞ்சையாக நடந்துகொள்ள வேண்டும். நோயாளிகளைக் கண்டதும் என்ன நோய் என்கிறார்கள். அவர்கள் எதையோ சொல்கிறார்கள். அதைக் கேட்டுக் கொண்டு இவர்கள் எதையோ செய்கிறார்கள். என்ன மருந்தையோ கொடுக்

[நண்பகல் 12-00]

கிறார்கள். நாடியைப் பார்த்து இந்த நோய் எப்படி ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கிறார்கள். நெஞ்சிலே சளி எப்படி கட்டுகிறது என்று பார்க்கிறார்கள். சளிக்கு அடிப்படைக் காரணம் என்ன ? சூடு. சூடும் வெப்பமும் சேர்ந்தால் கபம் கட்டுகிறது என்கிறார்கள். அந்தச் சூட்டைப் போக்க சித்த வைத்தியத்திலே முறை சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் சித்த மருத்துவ முறையில் செய்கிறார்கள். ஆனால் அலோபதிக் முறையில் என்ன நடக்கிறது ? எதற்கெடுத்தாலும் டேப்லெட் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஜுரம் இருந்தாலும் சரி, வயிற்றுப் போக்கு இருந்தாலும் சரி, டேப்லெட் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். ஆனால் இவைகளுக்கெல்லாம் சித்த மருத்துவத்தில் நல்ல மூலிகைகள் இருக்கின்றன. சண்டமாருதம் என்ற ஒரு மூலிகை இருக்கிறது. வாய்வும் சீதளமும் சேர்ந்தால், பாரிச வாய்வு வந்து விடும். அலோபதிக் முறையில் ஒரு வைத்தியமும் சரியாக இல்லை. கடைசியாக ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிடுகிறார்கள். ஒரு நோயாளிக்கு நோய் வந்து அதை டாக்டர் பரிசோதித்து நீண்ட நாட்களாக வைத்தியம் செய்து, மருந்து கொடுத்து ஊசி போட்டு, அதிலே அந்த டாக்டர் வெற்றி பெற்றால், டாக்டருக்கு நல்ல பெயர் கிடைக்கிறது. அது இல்லாமல் நோயாளி போய்

[திரு. மு. மாசிலாமணி] [1978 மார்ச் 28

விட்டால், உடனே “அவன் தலை எழுத்து அவ்வளவுதான்; அவனுக்கு விதி
முடிந்துவிட்டது” என்று சொல்லிவிடுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் சித்த
மருந்துவத்தில் நல்ல மருந்துகள் இருக்கின்றன.

இன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத்துறை மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களின் கீழ் இருப்பதால், மிகவும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்
கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள்கூட டாக்டர்களையோ அதிகாரிகளையோ
அணுகக்கூடாது, அதன் விளைவாக அவர்களுடைய பணியில் தடங்கலோ
அவர்களின் செயல்முறைகளில் தாமதமோ ஏற்படக்கூடாது என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தெரிவித்திருப்பதன்
காரணமாக, சட்ட மன்ற உறுப்பினர்களேகூட இப்போது டாக்டர்களுக்கு
சிபாரிசுக் கடிதம் கொடுப்பதில்லை. சிபாரிசு இல்லாமல் மக்கள் நல்வாழ்வுத்
துறை இன்றையதினம் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டி
ருக்கிறது. மக்கள் இந்தத் துறையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனாலும் ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட வேண்டிய அவசியத்தில்
இருக்கிறேன். மருத்துவ மனைகளில் பணியாற்றும் டாக்டர்களைப் பார்த்து,
ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நொடிந்துபோய் வருகிற
நோயாளி, வசதி ஏதுமற்ற நோயாளி, பஸ்ஸில் ஏறிச் சென்று மருத்துவ
மனைக்கு வரக்கூட முடியாத நோயாளி, 4 அணா கொடுத்து ரசீது வாங்கக்கூட
முடியாத நோயாளி, இந்தச் சமுதாயத்தில் கீழ் நிலையில் உள்ள நோயாளி
டாக்டர்களாகிய உங்களிடம் மருத்துவம் வேண்டி வருகிறான். எனக்கு
முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்ரமணியம்
அவர்கள் குறிப்பிட்டதைப் போல், நோயாளிகளுக்கு ஆண்டவனைப் போல்
இருக்கிற நீங்கள் தயவு செய்து அவர்களைக் கொஞ்சம் சரியான முறையில்
பரிசோதனை செய்து அவர்களின் நோயைப் போக்க வேண்டும். அவர்களிடம்
கொஞ்சம் தன்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் சென்னையைப் பொறுத்தவரையில்
இங்கே உள்ள மருத்துவ மனைகளில் நல்ல மருத்துவம் செய்யப்படுகிறது.
மதுரையில் உள்ள எர்ஸ்கின் மருத்துவ மனையில் நல்ல அறுவை சிகிச்சை
செய்கிறார்கள். அதைப் போலவே ஈரோட்டில் உள்ள மருத்துவ மனையிலும்
சிறந்த முறையில் மருத்துவ சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் செய்யப்படு
கின்றன. இவற்றிற்காகவெல்லாம் நான் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

1978 மார்ச் 28] [திரு. மு. மாசிலாமணி]

அடுத்து, சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் —இந்தியன் மெடிகல் ஸ்டோர்சில் 15 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட சாமான்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. அங்கே இருக்கிற டாக்டர்களைக் கேட்டால், மேல் நாடுகளிலிருந்து மின்சாரத்தால் இயக்கக்கூடிய அறுவை இயந்திரங்களைக் கொண்டு வர வேண்டும், அப்போதுதான் இங்கே உள்ளவைகளையும் பயன்படுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். எனவே அத்தகைய இயந்திரங்களை விரைவில் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவ மனையில் மருந்துப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. அடுத்து, அங்கே தண்ணீர் பஞ்சமும் அதிகமாக இருப்பதால், சென்னை மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு தண்ணீர் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பொது மருத்துவ மனையில் ஒரு பெரிய தண்ணீர் தொட்டி கட்டுவதற்காக பணத்தை ஒதுக்கீடு செய்திருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல செயல்களைப் புரிந்து வருகிற இந்த அரசாங்கத்தை இந்த மாநிலத்தில் உள்ள மக்களும், நாட்டில் உள்ள எல்லா மக்களும் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள், பாராட்டுவதோடு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிற மக்கள், சென்னை கூட தெரியாத மக்கள், இங்கே இருக்கிற மூர் மார்க்கெட் பற்றிகூட அறியாத மக்கள், சென்னையில் உள்ள பொது மருத்துவ மனைகூட இருக்கும் இடம் தெரியாத மக்கள் எல்லாம் இன்றையதினம் இந்த அரசாங்கத்தின் மூலமாக நல்ல பயனை அனுபவித்து வருகிறார்கள். அதை நான் கண்ணாரக் காண்கிறேன், காதாரக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்று சொல்லிக் கொண்டு எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பொறுப்பின் கீழுள்ள மக்கள் நல்வாழ்வுத்துறை குறித்து அளித்துள்ள கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 மார்ச் 28

மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் குடும்பநலத் துறை ஆகியவற்றின்
கொள்கைக் குறிப்பில் முன்னுரையிலேயே இந்த அரசு என்ன செய்ய காத்
திருக்கிறது என்று ஆரம்பித்து, என்னென்ன திட்டங்களுக்கு இந்த
அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது, எப்படியெல்லாம் இந்தப் புதிய
அரசு தன்னுடைய பணிகளைத் தொடங்க இருக்கிறது என்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றை [illegible]
மையமாக வைத்து, ஒன்றை மட்டும் மிகவும் வலியுறுத்தி. இந்தக் கொள்கைக்
குறிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அது என்ன என்றால், இந்த மக்கள்
நல்வாழ்வுத் துறை கிராமத்தை மையமாக வைத்து சிறப்பாக இயங்க முற்பட்
டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதாகும். கிராமப்புற மக்களின்
நல்வாழ்வில் இந்த அரசுக்கு மிக முக்கியமான அக்கறை இருக்கிறது. கிராமப்
புற மக்களின் நல்வாழ்வில் இந்த அரசாங்கம் மிகுந்த பங்கு கொண்டிருக்கிறது
என்ற அடிப்படையில் இந்தப் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன
என்று மக்கள் நல்வாழ்வுத் துறைக்குப் பொறுப்பேற்றி ‍க்கும் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மேலெழுந்தவாரியாக இதைப் பார்க்கிறபோது, மக்கள் இதை உண்மை
யிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அறிவிப்பைத்
தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி
விவரங்களைப் பார்க்கும்போது, இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி
ஒதுக்கீடுகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, இவைகளைக்கொண்டு
முதலமைச்சருடைய எண்ணங்களை நிறைவேற்ற முடியுமா, இந்தத் திட்டங்
களையெல்லாம் கிராமப்புறங்களில் செயல்படுத்த முடியுமா, புதிய பணிகளைத்
தொடங்க முடியுமா என்ற அச்சம்தான் ஏற்படுகிறது. மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லக்கூடும். துணை மதிப்பீட்டில்
இவைகளையெல்லாம் சரிக்கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான்
இவைகளைப் போட்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடும். அப்படிச்
சொல்வாரானால், நான் ஒன்றை மட்டும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். When wealth is lost nothing is lost; when
health is lost, something is lost. மாண்புமிகு உறுப்பினர்
திரு. மாசிலாமணி அவர்கள் இங்கே பேசும்போது, சமுதாயத்தின்
அடித்தளத்தில் வாழ்கிற மக்கள், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட
மக்கள் இந்த மருத்துவ மனைகளுக்குச் செல்கிறார்கள் என்றார்கள்.
தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்று பார்த்து, வியாதிகள்
வருவது இடையாது. இது இந்தத் தமிழகத்தில் வாழும் 4½ கோடி மக்களு
[illegible]தப்பட்ட பிரச்சினை. எந்தப் பகுதி மக்களுக்கு அதிகமாக நோ[illegible]

1978 மார்ச் 28] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

ஏற்பட்டு, நலந்துறையின் மூலமாக அதைத் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பு
கிடைக்கிறது, எந்தப் பகுதி மக்களுக்கு அரசாங்கத்தின் பரிகாரம் கிடைக்
கிறது என்பதுதான் பிரச்சினை.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாலசுப்பிர
மணியம் அவர்களும், திரு. பலராமன் அவர்களும் ஒரு கருத்தைச்
சொன்னார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள்,
அரசாங்கத்தின் கண்காணிப்பில் உள்ள இந்த நிலையங்கள் சரிவர, முறைப்படி
செயல்படுவதில்லை; இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முறைப்படி கண்
காணிக்கப்பட்டு பணியாற்றினால், அங்கே உள்ள டாக்டர்கள் நல்ல முறையில்
பணியாற்றினால், பெரும்பாலான பிரச்சினைகள் தடுக்கப்பட முடியும் என்று
சொன்னார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். 70 சதவீத
மக்கள் உழவர்களாக, உழைப்பாளிகளாக கிராமப்புறத்தில் வாழ்கிறார்கள்.
அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நோய்நொடிகளை இந்த அரசாங்கம் போக்கு
வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அந்த
ஆரம்பச் சுகாதார மருத்துவ நிலையங்களுக்கு ஆண்டுதோறும் மருந்து வாங்கு
வதற்கு என்று வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ. 12,000 இன்றைக்கு
ரூ. 14,000 என்ற அளவில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்
பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உயர்வான ரூ. 2,000 என்பது பெரிய
தொகை அல்ல. வளர்ந்து வருகிற மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு
பார்த்தால், ஒரு ரூ. 2,000 என்பது மிக மிகச் சிறிய தொகையாகும். சின்னஞ்
சிறிய ஊராட்சி ஒன்றியம் என்றாலும்கூட, அங்கே 40 ஊராட்சி மன்றங்கள்
இருக்கின்றன. இந்த 40 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஒரு ஊராட்சி
ஒன்றியத்திற்குள் இரண்டு மருத்துவமனைகள்—ஆரம்ப சுகாதார நிலையங்கள்
என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஒரு
நிலையத்திற்கு மருந்துக்காக மட்டும் ரூ. 2,000 அதிகப்படுத்திவிட்டோம்
என்பது எந்த வகையிலும் ஒரு பெரிய தொகை அல்ல.

மற்றொன்று கிராமப்புறப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளுக்குச்
சென்று பணியாற்ற டாக்டர்கள் அதிகமான அளவுக்கு உற்சாகம் காட்டு
வதில்லை. அங்கு சென்று பணியாற்றவே தயங்குகிறார்கள். இதற்கு அரசாங்கம்
ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

டாக்டர்கள் மீது பொதுவாகக் குற்றம் சாட்டுகிறார்கள். பல டாக்டர்கள்
நல்ல டாக்டர்களாக இருக்கிறார்கள். மிகுந்த கடமை உணர்ச்சியோடு பணி
யாற்றக் கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கொன்றும்
இங்கொன்றுமாக சில டாக்டர்கள் கடமையில் தவறுகிறார்கள். அதைத்தான்
நாம் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 12-10)

கிராமப்புறத்திற்கு முழுமையாக வருவதற்கு முன்னாலே மாவட்ட மருத்துவ மனைகளிலும், தாலுக்கா மருத்துவ மனைகளிலும் நாம் இந்த விசேஷப் பிரிவுகளை, ஸ்பெஷல் பிரிவுகளை எக்ஸ்ரே பிரிவுகள் போன்ற பிரிவுகளையெல்லாம் ஏற்படுத்தவேண்டும். அப்படிப்பட்ட ஸ்பெஷல் பிரிவுகள் எல்லாம் கொண்டு வந்தால், நல்லதாக இருக்கும். அப்படிச் செய்தால், சென்னை, மதுரை போன்ற நகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் மாவட்டம் மாவட்டமாகக் கொண்டுவர வேண்டும். பிறகு தாலுக்கா வாரியாகக் கொண்டு வர வேண்டும். இப்படிச் செய்தால், ஆரம்பச் சுகாதார மருத்துவ மனைகளை நாம் பிரித்துக்கொள்ள முடியும்.

மருத்துவ மனைகளில் உபயோகப்படும் சாதனங்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். கிராமப்புறங்களில் நிபுணர்கள் சென்று பணியாற்ற வேண்டும். அது நல்ல கருத்து. கிராமப்புறங்களுக்கு நல்ல உபகரணங்களைக் கொண்டு செல்ல முடியாது. பல்வேறு தாலுக்கா மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே யூனிட்டுக்கள் கூட கிடையாது. ஆகவே கிராமப்புறங்களுக்கு நிபுணர்களை, வல்லுநர்களை அனுப்பிவிட்டு, அங்கே அவர்களுக்கு வேண்டிய மருந்துகளை அனுப்பாவிட்டால், அதிலே பயன் இல்லை. நாம் எந்த நோக்கத்தை நிறை வேற்ற வேண்டும் என்று நினைக்கின்றோமோ, இந்த அரசு எந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கின்றதோ, கருதுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் போகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களிலே, சுற்றுப்புறங்களிலே உருவாக்குகின்ற திட்டங்களுக்கு என்று நாம் அதிகமான தொகைகளை ஒதுக்கீடு செய்கிறோம். அங்கு நிபுணர்களை, வல்லுநர்களை அனுப்பும்போது, அவர்களுக்கு வேண்டிய மருந்து களும் தாலுக்கா மருத்துவ மனைகளில், மாவட்ட மருத்துவ மனைகளில் கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். மிக முக்கியமான ஒன்றை நமது முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். சென்னையில் இருக்கின்ற பெரிய மருத்துவ மனையில் கண்காணிப்புக் குழு என்று போட்டிருக்கிறார்கள். சிறந்த டாக்டர்கள் அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் கண் காணிப்புக் குழுவையும் போட்டிருக்கிறார்கள். அம்மையார் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருக் கிறார்கள். அதில் பெண்களுக்கும் அதிக இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே உள்ளவர்களாக, ஒழுக்க சீலர்களாக இருப்பவர்களை, நமமால பாராட்டப் பெற்றவர்கள்தான் அந்தக் குழுவில் பணி

யாற்ற வர வேண்டும். அங்கு இருக்கின்ற டீன்கள், மேல் மருத்துவர்கள் இவர்களுக்கு மேல் கண்காணிப்புக்காக இவர்கள் இருக்க வேண்டும். அவர்கள் இந்தத் துறையிலே ஈடுபட்டவர்களாக இருக்க வேண்டும். மிகச் சிறந்தவர் களாக இருக்க வேண்டும். பொதுமக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் களாக இருக்க வேண்டும். இந்த முறை சென்னையோடு நின்றுவிடக்கூடாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தாலுக்காவுக்கும் இந்தக் கண்காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், பொதுமக்களுக்கு அவர்கள் தூய உள்ளத்தோடு பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும் என்று கருது கிறேன். மாவட்ட மருத்துவ மனைகளில் இட நெருக்கடி இருந்து கொண்டிருக் கிறது. மக்கள் தொகை பெருகிப் பெருகி இட நெருக்கடி ஏற்படுகிறது. மாவட்ட மருத்துவ மனைகளுக்கு மக்கள் கூட்டம் பெருகி வந்து கொண்டிருக் கின்றது. ஒரு குறிப்பிட்ட மருத்துவ மனையில் சென்று மருத்துவம் செய் தால்தான், நோய் தீரும், குறிப்பிட்ட டாக்டர் அவர்களிடம் சென்றால்தான் நோய் தீரும் என்று போகின்றார்கள். இன்றைக்கு சென்னைக்கு வந்தால்தான் நோய்தீரும் என்று இருக்கிறார்கள். அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். மதுரை போன்ற பல தலைநகரங்களுக்குப் போவதைக் கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைக்கின்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரைக்கு வந்தபோது, இரண்டு முறை அரசாங்க மருத்துவ மனைக்கு, எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்வை யிட்டார்கள். அவர்கள் மதுரைக்கு வந்ததனாலேதான், அந்தச் சுற்றுப்புறப் பகுதிகளைக் கண்காணித்து வைத்தார்கள். நம்முடைய முன்னாள் அமைச்சர், மிகப் பெரிய தொண்டர், போலீஸ் அமைச்சராக இருந்தவர், திரு. கக்கன் அவர்கள் பொதுப்படையான பெட்டியிலே போடப்பட்டிருந்திருக்கிறார்கள். அது உங்களுடைய கவனத்திற்கு வந்ததால்தான், நல்ல சிகிச்சை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதுபோன்ற விஷயங்கள் நம் கவனத்திற்கும் கருத்துக்கும் வராமலிருந்தால், சரியாக நடப்பதில்லை. அதற்கு என்று ஒரு புது உத்தரவு போட வேண்டும். அரசாங்கத்திலேயிருந்து ஒரு உத்தரவு போட வேண்டும். அந்த உத்தரவின்படி அவர்கள் நடக்கின்றார்களா, அதைக் கடைப்பிடிக் கிறார்களா என்பதையெல்லாம் கண்காணிப்புக் குழுவின் மூலம் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த நல்ல நோக்கம் நிறை வேறாமல் போய்விடக்கூடாது. ஒருவர் கையிலே ஐஸ் கட்டி ஒன்றைக் கொடுத்து அது 4, 5 பேர்கள் கைக்கு வரும்போது கடைசியிலே சொட்டுத் தண்ணீர்தான் இருக்கும் என்று சொல்வார்கள். அது போல அந்த உத்தரவுகள் கடைப்பிடிக்கப்படவில்லை. டாக்டர்கள் சரியாகப் பணியாற்ற வில்லை என்ற நிலைமைகள் இருக்கக் கூடாது. டாக்டர்கள் நன்றாக என்கேஜ் பண்ணிக்கொள்ள வேண்டும். சிறந்த பணி ஆற்றுகின்றவர்களுக்கு என்னென்ன

..க்கங்கள் கொடுக்க வேண்டுமோ அவைகளைக் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் தவறு செய்பவர்களைக் கண்டுபிடிக்கும்போது, அவருக்கு எவ்வளவு பெரிய சிபாரிசாக இருந்தாலும்கூட, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாங்கள் அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னால், அதை நான் பெருமையாகக் கொள்வேன்.

மதுரையில் ரோட்டரி சங்கத்தார் 40,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு இயந்திரம் வாங்கி மருத்துவ மனைக்குக் கொடுத்தார்கள். அந்த இயந்திரம் செயற்கை சிறுநீரகம் பொருத்துகின்ற இயந்திரம். ரோட்டரி சங்கத்தாரால் வாங்கிக் கொடுக்கப்பட்டது. அதையும் இன்றைக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். ஒரு சிறு டெக்னிஷியன் இல்லாத காரணத்தால், ஒரு பொது நிறுவனம் அளித்த அந்தக் கருவியை அரசு பயன்படுத்த முடியவில்லை. ஒரு பெரிய மருத்துவ மனையிலே இருக்கிறது. நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்த இயந்திரத்தைச் செம்மைப் படுத்தி, பயன்படுத்தும் அளவிலே இல்லை. குறிப்பிட்ட ஒரு டெக்னிஷியன் செய் பொறுப்பில் அது இருக்க வேண்டும். டாக்டர்கள் அதிலே ஒன்றும் ..வதில்லை. அந்தக் காரியங்கள் நடப்பதற்கு வேண்டிய ஆணைகளை அரசாங்கம் போட வேண்டும். அந்தக் காரியங்கள் செம்மையாக நடக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல நிறுவனங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மருத்துவத் துறையிலே முதலமைச்சர் அவர்கள் சீர்திருத்தங்களை செய்திருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரி பிரின்ஸ்பால், மருத்துவ மனை இணைக்கப்பட்டதனால், ஒரே இடத்தில் இருக்கிறார். இரண்டு துறைகளையும் அவர்கள் பொறுப்பிலே விட்டிருக்கிறார்கள். இரண்டு து.. களும் ஒன்றாக இருப்பதால், அவைகளைச் சிறப்பாகக் கவனித்துக் கொள்ள முடியும். அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஏற்படுகின்ற சிரமங்களைப்பற்றி, த.. களைப்பற்றி பத்திரிகைகளிலே "Letters to the Editor ..லே கு.. பிட்டு எழுதிவிடுகிறார்கள். அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படு கிறது. ஒரு சின்ன விஷயத்தைக்கூட அவர்கள் அரசின் கவனத்தி.. கொண்டு வந்து விடுகின்றார்கள். ஆனால் கிராமப் புறங்களிலே சிரமங்களை யார் கொண்டுவர முடியும்?

பொதுவாக கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளில் 2 மருத்துவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்று ஜீப் கொடுத்திருக்கின்றார்கள். டாக்டர் களுக்கு மாதத்திற்கு இவ்வளவு பெட்ரோல் உபயோகித்துக் கொ..

என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட மருத்துவ மனையில் 3 மருத்துவர்கள் இருக்கின்றார்கள் என்றால், ஒரு குழுவாகப் போனால் தான் அதை உபயோகித்துக்கொள்ள முடியும். கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார மருத்துவ மனைகளில் உபயோகப்படுத்தப்படும் பெட்ரோல் கட்டுப் படுத்தப்படுகிறது. கொடுக்கப்படுகின்ற பெட்ரோலை முதல் 10 நாட்களுக்குத் தான் பயன்படுத்த முடியும். பெட்ரோல் அளவு மிகக்குறைவாக இருக்கிறது. மீதி இருக்கின்ற 20 நாட்களுக்கு அவர்கள் அந்த ஜீப்பை உபயோகப்படுத்த முடியாத நிலைமைகள்தான் இருக்கின்றன. அந்தப் பெட்ரோலின் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும். பெட்ரோல் இல்லாமல் இருப்பதால், அந்த ஜீப்களை உபயோகப்படுத்த முடிவதில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஜீப் பயன்படாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். கிராமப் புறங்களில் விபத்துக்கு உள்ளானவர்களுக்கு வேண்டிய வாகன வசதிகள் இல்லை. அங்கங்கே உள்ள மருத்துவ மனைகளில் இந்த வாகன வசதியைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே விருதுநகரிலே உள்ள மருத்துவ மனைக்கு ஒரு போலீஸ சி.ஐ.டி. வந்திருக்கிறார்கள். அவர் ஒரு வார காலமாக அங்குள்ள டாக்டர் களிடமும், செவிலியர்களிடமும் மாற்றிவிடுவோம் என்று சொல்லியிருக் கிறார்கள். அங்கு சென்று அவர்களிடம் நீங்கள் ஆஸ்பத்திரியை சரியாக கவனிக்கவில்லை, தவறு செய்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மாற்றிவிடுவார்களோ என்று பயந்திருக்கிறார்கள். மருத்துவ மனை அதிகாரிகளிடமும் அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். அதன் பின்னர் மருத்துவ அதிகாரிகள் அவரைப் பிடித்துவிட்டார்கள். அவரைப் போலீஸ் ஸ்டேஷனிலே பிறகு ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த சி.ஐ.டி. போல வந்தவர்

(பிற்பகல் 12-20)

அங்கிருந்த செவிலியரிடம் பணம்கூட வாங்கியிருக்கிறார்கள். பெண் செவிலியர் பலருக்குக் கொடுமைகளைச் செய்திருக்கிறார். அங்குள்ள மருத்துவ அதிகாரி அவருக்கு உடந்தையாக இருந்திருக்கிறார். காரணம் பெரிய மருத்துவ அதிகாரி திருச்சியைச் சேர்ந்தவராம். போலீஸ் சி.ஐ.டி. என்று சொல்லிக் கொண்டிருப்பவரும் திருச்சியைச் சேர்ந்தவராம். அவருக்கு உதவியாக இருந்த தலைமைச் செவிலியரும் திருச்சியைச் சேர்ந்தவராம். எனவே பாதிக்கப்பட்ட செவிலியர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அரசாங்கம் நடத்துகிற அரசு மருத்துவ மனைகளில் நடைபெறுகிற சம்பவங்கள் உங்கள் பார்வைக்கு வராத காரணத்தால், பெரிய தவறுகள் ஏற்படுகின்றன. இது வேறு இடங்களில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

நீங்கள் பதவிக்கு வந்த பிறகு, டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசஸ் அண்டு பேமிலி பிளானிங் என்ற பதவிக்கு இன்னும் ஆள் போடப்படவில்லை. இன்னொருவர் அடிஷனல் பொறுப்பில் இருக்கிறார். இதற்கு நிரந்தரமான ஒரு ஆளைப் போடவேண்டும். மக்கள் நல்வாழ்வுத் திட்டம் கிராமப்புறங்களுக்கு நகர்ந்து வரவேண்டுமென்ற நிலையில் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய நண்பர்கள் ரொம்ப விவரமாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். சுகாதாரம் மற்றும் மக்களுடைய நல்வாழ்வு இவைகளைப்பற்றி நிறைய எடுத்துச் சொல்லிவிட்டார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் சகிக்க முடியாத வாசனை வந்து கொண்டே இருக்கிறது. இதை ஒருவரும் சொல்லவில்லை என்பது என்னுடைய ஐயப்பாடு.

அடுத்தபடியாக, செங்கற்பட்டு போகிற வழியில் மாமண்டூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. 1½ மைல் நீளத்திற்கு சுகாதாரக் கேடாக உள்ளது. அந்த வழியில் அதிகாரிகள் போகிறார்கள். டாக்டர்கள் போகிறார்கள். அமைச்சர்களும் போகிறார்கள். எங்களைப் போன்ற சாதாரண ஆட்களும் போகிறார்கள். பாதசாரிகளும் போகிறார்கள். சுகாதார நுணுக்கத்தைத் தெரிந்தவர்களுக்கு அது தெரியும். அந்த சுகாதாரக் கேட்டை அகற்ற வேண்டும்.

நம்முடைய மதிப்பிற்குரிய நாமக்கல் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் 20 ஆயிரம் கொண்ட ஜனத்தொகை உள்ள பஞ்சாயத்து யூனியனில் நல்ல காரியங்கள் எல்லாம் நடைபெறவில்லை என்றும் அங்கே இருக்கக்கூடிய உண்மை நிலைமைகளையும் எடுத்துச் சொன்னார்கள். அதே மாதிரி என்னுடைய பஞ்சாயத்து யூனியன், ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் கணக்கு எடுக்கப்பட்டபோது, 60 ஆயிரம் ஜனத்தொகை கொண்டதாக இருந்தது. இப்போது ஒரு லட்சமாகியிருக்கலாம். இந்தப் பஞ்சாயத்து யூனியனில் நான்கு இடங்களில் சித்த வைத்திய ஆஸ்பத்திரி இருந்தது. அதில் ஒன்றை அரசு எடுத்துக் கொண்டது. ஆனத்தூர் பஞ்சாயத்து யூனியனில் அந்த ஆஸ்பத்திரியை அரசு எடுத்ததிலிருந்து அங்கே போவார் யாரும் இல்லை, எந்த வைத்தியமும் கிடையாது. ஆஸ்பத்திரியைச் சுற்றி வைத்து வைக்கோல் படப்பு வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த நிலையில் இருக்கிறது அந்த ஆஸ்பத்திரி.

அடுத்து, திருப்பாலக்குடியில் முஸ்லிம்கள் அதிகம் இருக்கின்றனர். மீன் பிடிக்கின்றவர்கள் இருக்கக்கூடிய இடம். அங்கே சுகாதாரத்தை அதிகமாகப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் விரும்பாவிட்டாலும், மக்களுடைய நல்

வாழ்வைக் கருதி அரசு செய்ய வேண்டும். இதுவரைக்கும் செய்யவில்லை. நல்ல முறையில் ஆஸ்பத்திரி நடைபெறுவதில்லை. எட்டு மாதத்திற்குள் இந்தக் காரியத்தை ஏன் செய்யவில்லை என்று சுட்டிக் காட்டவில்லை. செய்ய வேண்டும். செய்தால்தான் அவர்களுக்கு சுகாதார, வைத்திய வசதிகள் எல்லாம் நல்லமுறையில் கிடைக்கும். நவீன கருவிகள் எல்லாம் ஒவ்வொரு இடத்திலும் ஏராளமாகக் கெட்டுப் போயிருக்கின்றன என்று எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். தேவகோட்டைக்கும் காரைக்குடிக்கும் இடையே ஒரு காசநோய் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே எல்லா இன்ஸ்டுருமெண்ட்ஸும் இருக்கின்றன. விலையுயர்ந்த சாமான்களெல்லாம் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே இருக்கிறது. ஒரு பக்கம் பட்டனைப் போட்டால், இன்னொரு பக்கம் போகும். இந்த மாதிரி சீர்கெட்டுப் போயிருக்கிறது. அது போக ஆஸ்பத்திரி வைக்கின்ற காலத்தில் வைக்கப்பட்ட படுக்கை, தலையணை முதலியவைகளில் மூட்டைப் பூச்சிகள் ஏறி, மனிதர்கள் படுக்கவே லாயக்கற்ற நிலையில் இருக்கின்றன. ஆனால் இதைத் தவிர வேறு ஆஸ்பத்திரி கிடையாது, இந்த வியாதிக்கு. ஓலைப் பாயை விரித்துப் படுக்கப் பிரியப்படுகிறார்கள். உள்ளே படுத்தால் மூட்டைப் பூச்சி உள்ள ரத்தத்தையும் குடித்துவிடும் என்று சொல்லுகிறார்கள். இது மாதிரி நிலைமை ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. ஆஸ்பத்திரிகளில் சில இடங்களில் ஆட்களே இல்லை. அதற்குப் பஞ்சாயத்து யூனியன்கள் பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று கொடுப்பார்கள். அறுபதாயிரம் ஜனத்தொகையுள்ள இடத்திற்கு இது போதுமா? பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மருந்து வாங்கினால் போதுமா? நிறையத் தேவையிருக்கிறது. இதற்கு நல்ல முறையில் அரசு பரிகாரம் தேட வேண்டுமென்று விரும்புகிறோம்.

அது மாதிரி முக்கூர் ஆஸ்பத்திரி 20 வருஷங்களுக்கு முன்னால் ரூ 25 ஆயிரம் செலவில், கண்ட்ரிபியூஷன் வாங்கி கட்டப்பட்டது. அப்போதுள்ள விஞ்ஞான முறை ஒரு சுவர் மூன்றடி அகலம். தார்சு மூன்றடி கனம். அது தார் தாராக ஓடிப்போய்விட்ட நிலையில் யாரும் போகப் பயப்படுகிறார்கள். அதேமாதிரி திருப்பாலக்குடியில் கட்டிடம் கட்டியிருக்கிறது. சரியான மருத்துவர்கள் இல்லை. இன்னொன்றையும் எல்லோரும் சொன்னார்கள். கிளினிக் என்று சொல்லுகிறார்களே, அது இருக்கிறவரைக்கும் நல்லதல்ல. அது இருப்பதால், ஆஸ்பத்திரியிலிருந்து மருந்து அங்கே போவதாகச் சொல்லுகிறார்கள். என்னுடைய ஊரில் ராஜசிங்கமங்கலத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு பெண் டாக்டரும் ஒரு ஆண் டாக்டரும் இருக்கிறார்கள். அவர்கள் நல்லமுறையில் வைத்தியம் பண்ணுகிறார்கள். அதில் குறை இல்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற பெட்ரோல் குறைச்சலாக இருக்கிறது, போதவில்லை. எனவே கிராமங்களுக்குப் போவதில்லை என்கிறார்கள். மக்கள் எங்கள் ஊருக்கு டாக்டர்

வருவதில்லை என்கிறார்கள். டாக்டர்களைக் கேட்டால், இத்தனை லிட்டர் பெட்ரோல் கொடுக்கிறார்கள், அது எத்தனை நாட்களுக்குப் போதும், நீங்கள் கார் கொண்டு வருகிறீர்களா என்று கேட்கின்றனர். அதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும்.

அமராவதி புதூரில் காசநோய் ஆஸ்பத்திரியில் பல லட்ச ரூபாய் பெறுமான சாமான்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் கெட்டுப்போய் உள்ளன. அதற்குத் தகுதி உள்ள டாக்டர்கள் இல்லை. பக்கத்திலுள்ளவர்களைப் பிடித்துப் போடுகிறார்கள். இதை உடனடியாக கவனிக்க வேண்டும். பிரைமரி ஹெல்த் சென்டரில் இன்னும் குடும்பக் கட்டுப்பாடு உள்ள இடத்தில்தான் ஆஸ்பத்திரி நடந்து வருகிறது. ராஜசிங்கமங்கலத்தில் எல்லாம் வயல்களுக்குள்ளே தான் ஊர் இருக்கிறது. ஒரு சென்ட் நிலம் சென்னையைக் காட்டிலும் கூடுதலான விலை. வாங்க முடியவில்லை. இல்லாவிட்டால் அரசு 'அக்குவையர்' பண்ணிக் கொடுக்க வேண்டும். 1½ ஏக்கர் நிலம் வாங்கினார்கள். இவர்கள் ஐந்து ஏக்கர் நிலம் கேட்கிறார்கள். பிரைமரி ஹெல்த் சென்டர் கட்ட ஐந்து ஏக்கர் நிலம் வாங்குவதென்றால், பத்து லட்சம் ரூபாய் வேண்டும். அப்படியானால்தான் வாங்கலாம். தனிப்பட்டவர்கள், தாங்களே முன் வந்து கொடுக்கக்கூடிய பெரிய ஆட்கள் இல்லை. எப்படி இந்த விலை ஏறியது என்றால், ஒரு வீடு கட்டுவதற்கு மூன்று சென்ட் அல்லது நான்கு சென்ட் நிலம் வேண்டும். மலேயா, சிங்கப்பூரிலிருந்து பணம் சம்பாதித்துக்கொண்டு வருபவன் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்குகிறான். ஐந்து ஏக்கர் நிலம் வாங்க வேண்டுமென்றால் அந்த விலையைப் போட்டுக் கேட்கிறான். ஏராளமான ரூபாய் வேண்டியிருக்கிறது. அரசுதான் பார்த்துச் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. என்ன நன்கொடை வாங்கினாலும், பிரயோசனப்படவில்லை. ஆஸ்பத்திரி ஒன்று கட்ட வேண்டும்.

(பிற்பகல் 12-30)

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை)

சுகாதார நடவடிக்கைகள் இன்று எட்டளவில்தான் இருக்கின்றன. மாமண்டூர் பக்கம் போக முடியவில்லை. அந்தப் பக்கம் எத்தனையோ அதிகாரிகள் போகிறார்கள். பஸ்களில் நாம் போகும்போது, பெரிய துண்டை மூக்கில் வைத்துக்கொண்டுதான் போக வேண்டும். அது ஒரு தொழில் க்ஷேத்திரத்திலிருந்துதான் வருகிறது. இதையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

நான் முதலமைச்சரவர்களை வர வேண்டுமென்று அழைத்தது பெரிய ஆடம்பரத்தை உண்டு பண்ண வேண்டுமென்பதற்காக அல்ல. அந்த மாதிரி எண்ணமும் எனக்கு இல்லை. அங்கேயிருக்கும் நிலைமைகளை முதலமைச்சரவர்கள் [illegible] வேண்டும்.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். எனக்கு முன்னால் பேசியவர்கள் சொற்ப நேரம் பேசினார்கள். நீங்கள் வர வேண்டுமென்று விரும்புவது வேறு ஒரு எண்ணத்தின் அடிப்படையில். அந்த இடத்திற்கு நீங்கள் இரவிலே தான் வந்து போயிருக்கிறீர்கள். பகலில் வந்ததாகத் தெரியவில்லை. பகலில் அங்கு வர வேண்டும். அங்குள்ள சீர்கேடுகளை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். சாவகாசமாகப் பேசுவதற்கு இது இடமில்லை. மணி அடித்துக் கொண்டே இருப்பார்கள். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் கூப்பிட்டேன். எனக்குப் பெருமை தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால் அல்லது குபேரன் ஆக வேண்டுமென்ற எண்ணத்தால் கூப்பிடவில்லை. முதலமைச்சரவர்கள் வர வேண்டுமென்றுதான் கூப்பிட்டேன். நீங்கள் மக்களின் நல்லெண்ணத்தில் இருக்கிறீர்கள். எனவே இந்த அரசும், முதலமைச்சரவர்களும் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். நல்ல காரியங்களை எங்கே செய்ய வேண்டுமென்பதைத்தான் சிந்திக்க வேண்டும். முன்னால் பேசிய திரு. மாசிலாமணி அவர்கள், சென்னையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் அவரவர்கள் தொகுதியில் உள்ள நிலைமையைத்தான் எடுத்துச் சொல்ல முடியும். அவர்களால் அதைத்தான் செய்ய முடியும். ஆனால் அரசாங்கத்திற்குப் பொதுவான கண்ணோட்டம் இருக்க வேண்டும். அங்கே ரோட் இப்படி இருக்கிறதே, அங்கே ஆஸ்பத்திரி இப்படி இருக்கிறதே, அங்கே சர்க்கார் கட்டடங்கள் இப்படி இருக்கிறதே என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில்தான் நான் கூப்பிட்டேன். அந்த விருப்பம் நிறைவேறுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்போது 'ஒரு மணி' அடித்ததோடு முடித்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். மக்களுக்கு இந்த அரசு நேரடியாகச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

இரண்டாவது 'மணி' அடித்தாகிவிட்டது. நல்ல எண்ணத்தோடு இந்த அரசு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

* THIRU D.V. D'MONTE : Hon. Vice Chairman, Public Health has been defined by the World Health Organisation as "the science and art of preventing diseases, prolonging life and promoting mental and physical development, and health and efficiency through organised community effort, for the sanitation of the environment for the control of communicable infection, the organisation of rural medical and nursing services, the early diagnosis and effective treatment of

diseases and the development of social machinery to ensure to every individual a standard of living and the maintenance of health and organisation so as to enable every citizen to realise his birthright of health and longevity." The priority, therefore, is given to prevention of disease and the improvement of environmental hygiene to protect people from the attack of diseases. Even considering the very wide interpretation given to Public Health, the situation, as I see it, is not hopeless, if from curative medicines, we turn to preventive aspects. If we turn to prevention of disease, from curing of disease we ought to be able to some extent to solve the problem of rural health.

The Government of India have formulated a plan for the provision of Rural Health Services by means of Community Health workers to be deployed in villages. As against this recommendation, the Tamil Nadu Government have proposed to have mobile medical teams radiating from the Primary Health Centres to every village. It is, therefore, very important to make the scheme work as effectively as possible.

Let us look at the position of Primary Health Centre. Each Centre is allotted Rs. 12,000 per year for medicine and I have noted that it has been increased to Rs. 14,000 for the year 1978-79. I am told that this medicine supply lasts barely for a month and according to the rules, the doctors are unable to make local purchases. I am told that the Primary Health Centres are supplied with slow moving medicines which cannot be put to use. The quality of the medicines cannot be described as good. The Government undertakings from whom the Centres are expected to purchase medicines are unable to supply most of the medicines ordered by them. I am told that even if they purchase the medicines, the prices are very much above the market rates. I would request the State Government to look into this lacuna and set it right and provide some remedial solution.

I feel that the strengthening of Primary Health Centres would prevent over-crowding in our Hospitals. My humble suggestion is that there should be a three tier structure of hospital service. At the first level, there should be a network of dispensaries, each having one doctor, a pharmacist and first-aid helper. At the second level, there should be poly-clinics with diagnostic and laboratory facilities, served by a full competent team of doctors. At the third level, we should have the regular hospitals. It is also necessary that the sub-

centres under the Primary Health Centres should be transferred to the control of the Primary Health Centres so that administratively and technically, they may function well.

Today many distinguished persons including our Hon. Chief Minister appeal to young doctors that soon after they get medical degrees, they should go and practise in villages and bring medical relief to the doors of the villagers. I feel that it is an unfair appeal because young doctors who have been educated in towns are out of touch with village life through their general and professional education given in towns. They have been accustomed to urban life and there are no amenities like decent housing, transport, viable roads, etc. to enable them to do their work in the villages.

I have spoken before and I would say once again that it is not doctors that we need in the villages but we need Sanitary Inspectors not in thousands but in tens of thousands, one or two for each Panchayat Union. They should be charged with the duty of seeing that the provisions of our excellent Public Health Acts, which are very good on paper, are put to proper use.

(பிற்பகல் 12-40)

According to an English authority, malaria and ordinary fever are diseases of dirt and not of poverty. The incidence of hook-worm is due to lack of sanitation, drainage, sewerage and protected water-supply. Malaria affects thousands and causes economic difficulties to hundreds of thousands. Hook-worm and Kala Azar occur due to diet deficiencies which weaken the labour forces of our cultivators. Unprotected wells and tanks, unswept village streets and insanitary conditions in which the villagers live are the causes of diseases or weakness that they suffer from. Who is to blame when there are no latrines, domestic or community, which people may use ? It is for the Government to provide people with water and sanitary facilities and then we can blame people for their habits. One may indeed ask: Which makes the pig dirty—the sty or the pig ? But, men are not pigs and they can be educated about the many insanitary habits. People should be given enough water, wells, latrines, drainage and sewerage facilities. Government could do very well to use the mass media to educate our people in hygienic and sanitary habits.

Recently doctors are not allowed to go abroad to pursue higher studies. The world of medicine has been making stupendous advances and it is only natural that our doctors will try to achieve

expertise by going abroad. To send them abroad will be in the interests of the State. I would urge the Government to relax their stand and to work out some scheme by which the doctors may be able to go abroad at least for brief periods. I appeal to the Hon. the Chief Minister to take a pragmatic and sympathetic view in this matter.

One more matter and I have done. I would refer to my own community, the Anglo-Indian community, a microscopic community, who are suffering a great deal in recent times. Over the past years, the community has distinguished itself by its well-known nurses and doctors. Anglo-Indian women are well-noted for their sense of total dedication to the nursing profession. Similarly, Anglo-Indian doctors have proved to be eminent surgeons. In fact, one of the most eminent and internationally known surgeons in cancer was an Anglo-Indian. As years rolled by, the community has come down in the economic ladder because of lack of economic facilities and patronage. The community has not been getting its due share and representation in medical services. I would appeal to the Government to exploit the special talents of this community in the medical field by extending adequate incentives. I would say that at least 4 or 5 seats may be provided in the Medical Colleges to enable our boys and girls to get admission into the medical profession.

Thank you.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்து மிகப் பெரிய பிரச்சினைகளை உள்ளடக்கி மிக நீண்ட நேரம் பேசக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது இது. இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு டி.வி. டிமாண்டி அவர்கள் மிகவும் குறுகிய காலத்தில் பேசக் கூடியவர் என்று பெயர் வாங்கியவர். அவரே கூட நீண்ட நேரம் பேச வேண்டிய பிரச்சினைகள் இதிலே இருந்தன. குறுகிய காலத்தில் பேசுமாறு எனக்கும் நிர்ப்பந்தம் இருப்பதால், எவ்வளவு தூரம் சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அந்த அளவுக்குச் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): மேலும் 4 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. பிறகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: எவ்வளவு நேரம் என்று சொல்லி நீங்களே மணி அடித்தால் முடித்துக்கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திருமதி சத்தியவாணி முத்து): பத்து நிமிடங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சித்த முறை மருத்துவத்தை வளரச் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாசிலாமணியும், திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களும் பேசினார்கள். அந்தத் துறையைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறி, அவற்றை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சித்த மருத்துவத் துறை தமிழ் நாட்டிற்கே உரிய துறை. மிகச் சிறந்த மருந்துகளை உள்ளடக்கியது சித்த மருத்துவம். திரு. மாசிலாமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அலோபதிக் மருத்துவ முறையில் குணப்படுத்த முடியாத வியாதிகளைக் கூட சித்த மருத்துவத்தின் மூலம் குணப்படுத்த இயலும். இந்தத் துறைக்கு நம்முடைய அரசு ஒரு ஆய்வுக்குழுவைப் போட்டிருந்தது. அதிலே திரு. உத்தமராயன் அவர்களும் மற்றும் டாக்டர் தியாகராஜன் அவர்களும் மற்ற சித்த மருத்துவ வல்லுநர்களையும் போட்டதற்காக நம்முடைய அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசிலே இந்தத் துறைக்காக இந்திய மருத்துவத்துறை, ஹோமியோபதி மற்றும் யோகா கழகம் என்று இருந்தது. சி.சி.ஆர்.ஐ.எம்.எச். என்பது அதனுடைய பெயர். ஆயுர்வேதம், சித்தம், யுனானி, யோகம், ஹோமியோபதி ஆகிய எல்லாவற்றுக்கும் சேர்ந்து இந்தக் கழகம் சென்ற மாதம் முதல் தேதி வரையில் இருந்தது. சென்ற மாதம் 1 ஆம் தேதியோ அல்லது இந்த மாதம் 1 ஆம் தேதியோ என்று நினைக்கிறேன், அதைத் தனியாகப் பிரித்து ஆயுர்வேதத்திற்கென்று தனியாக ஒரு குழுவும், யுனானிக்கென்று தனியாக ஒரு குழுவும், ஹோமியோபதிக்காக தனியாக ஒரு குழுவும் ஏற்படுத்தி சித்த மருத்துவத்தை ஆயுர்வேத மருத்துவத்தோடு இணைத்து "Ayurvedha including Siddha Council" என்ற ஒரு கழகத்தை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறார்கள். மத்திய அரசுச் சட்டத்திலேயே சித்த மருத்துவம் என்பது தனியான மருத்துவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி இருக்கும்போது, ஆயுர்வேதத்தோடு, அதனுடைய வால் போல, 'இன்குளூடிங் சித்தா கவுன்சில்' என்று வைக்கவேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று தெரியவில்லை. சித்தாவுக்கென்று தனியாக ஒரு கவுன்சிலை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். யோகாவுக்குத் தனியாக இருப்பதைப் போலவும், ஹோமியோபதிக்கு என்று தனியாக கவுன்சில் இருப்பதைப் போலவும் சித்தாவுக்கென்றும் தனியாக ஒரு கவுன்சில் இருக்க வேண்டும். அந்தக் கவுன்சிலையும் தமிழ்நாட்டிலேயே, சென்னையில் வைப்பது நலம். ஏனென்றால் இந்திய நாட்டிலே சித்த மருத்துவம் தமிழ்

நாட்டில் ஒன்றில்தான் இருக்கிறது. மற்ற எல்லா இடங்களிலும் ஆயுர்வேதம் இருக்கிறது. இந்த அடிப்படையிலே அந்தக் கவுன்சிலின் கூட்டம் நடக்கிற போது, இங்கிருந்து நிறையபேர் போக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே சித்தாவுக்கென்று தனியாக ஒரு கவுன்சிலை இங்கேயே ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, மத்திய அரசிலே இருக்கக் கூடிய சுகாதார அமைச்சகத்தில் ஆயுர்வேதத்திற்கென்றும், யுனானிக்கென்றும், யோகாவுக்கென்றும், ஹோமியோபதிக்கென்றும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரு டெபுடி அட்வைசர் வைத்திருக்கிறார்கள். ஆனால் சித்தா மருத்துவத்திற்கென்று தனியாக ஒரு டெபுடி அட்வைசர் கிடையாது. ஆகவே சித்த மருத்துவத்திற்கென்று தனியாக ஒரு டெபுடி அட்வைசர் இருக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, சென்னையிலே 'சென்ட்ரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் ஃபார் சித்தா' என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கு ஒரு ஆபிசர்-இன்-சார்ஜ் இருந்தார். அவர் அங்கிருந்து போய் ஒன்றரை வருட காலம் ஆகிவிட்டது. அந்தப் பதவியில் மற்றொருவரை இன்னும் மத்திய அரசாங்கம் போடவில்லை. இதை மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சித்த மருத்துவத் துறையிலே அதிகமான புத்தகங்களை வெளியிட வேண்டும். புத்தகங்களை வெளியிட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சித்த மருத்துவம் முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. அன்பழகன் அவருடைய காலத்திலே மிகச் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்தது என்பதிலே பெருமை கொண்டவர்களில் நானும் ஒருவன். அதைப் போலவே இந்த ஆட்சியிலும் சித்த மருத்துவம் சிறந்த முறையில் வளர்ச்சியடைய வேண்டும். இவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதெல்லாம் முன்பிருந்த அரசாங்கம் செய்ததுதானே தவிர, இந்த அரசாங்கத்தின் காலத்திலோ, ஆளுநர் ஆட்சிக் காலத்திலோ செய்யப்பட்டதல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 41 புத்தகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது எந்தவிதமான புத்தகங்களையும் பிரசுரிக்கவில்லை. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிக் கொடுத்த வரலாறு அச்சகத்திற்குப் போக, கிட்டத்தட்ட 2 ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது. நாட்டிலே ஆளுநர் ஆட்சி இருந்தபோது, அவர்கள் சித்த வைத்தியத்தில் அக்கறை காட்டவில்லை என்பது வேறு விவகாரம். அதற்குப் பின் வந்த இந்த அரசாவது சித்த மருத்துவத்தை நல்ல முறையிலே மேம்பாடு செய்ய வேண்டும். மேம்பாடு செய்யும் என்ற என்னுடைய உறுதியான நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பொதுவான விவகாரங்களைக் குறித்து ஒரு ஐந்து நிமிடங்களுக்குப் பேசிவிட்டு முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். கிராமப் புறங்களில் மருத்துவர்கள் வேண்டுமென்று மாண்புமிகு திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசினார்கள். கிராமங்களில் உள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களில் மூன்றாவது மருத்துவரை நியமிக்க வேண்டும். இரண்டு மருத்துவர்கள் மட்டும் போதாது. கேரள மாநிலத்திலே இன்னொன்றைச் செய்கிறார்கள். கிராம மக்கள் நோய் இல்லாமல் வாழ வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பிளாக் ஏரியாவிலும் அரசாங்கத்தின் சார்பிலே ஒரு டிஸ்பென்சரியை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே கூட அங்கே செய்திருப்பதைப் போல, ஒவ்வொரு பிளாக்கிலும் அரசாங்க டிஸ்பென்சரியை வைக்க வேண்டும். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

சமுதாய நலப் பணியாளர்களைப்பற்றி திரு. டிமாண்டி அவர்கள் சொன்னார்கள். இதிலே மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் கருத்து வேறுபாடு இருப்பதைப் போலத் தோன்றுகிறது. மத்திய அரசிலே இருக்கக் கூடிய திரு. ராஜ்நாராயணன் அவர்கள், "கிராமங்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சமுதாய நலப் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அவர்கள்தான் கிராமங்களில் நல்ல முறையில் பணிபுரிய முடியும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். "நகரத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் டாக்டர்கள், கிராமத்தில் இருப்பவர்களுக்கு சமுதாய நலப் பணியாளர்களா? ஆகவே படித்தவர்களும் கிராமங்களுக்குப் போவதுதான் நல்லது" என்று இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பேசுவதாக நான் அறிகிறேன். இதிலே மத்திய அரசாங்கத்தின் கருத்து நல்ல கருத்து என்று நான் நினைக்கிறேன். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம் 70 சதவீதம் மக்கள் வாழ்கிற கிராமத்திற்கு ஒதுக்கீடு செய்யும் தொகை 30 சதவீதம் மக்கள் வாழ்கிற நகரப் பகுதிகளுக்கு ஒதுக்குவதைவிடக் குறைவாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, இன்னும் அதிகமான முறையிலே செலவு செய்து மருத்துவமனைகளை ஆரம்பித்தால்தான் கிராமங்களுக்கு மருத்துவர்கள் செல்ல முடியும். அங்கே கம்பவுண்டர்கள் வேறு தேவையாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு லட்சம், ஒன்றேகால் லட்சம் ரூபாய் செலவிட்டும் மருந்துகள் போதவில்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். 14 ஆயிரம் ரூபாய் எப்படிப் போதும் என்று கேட்கிறார்கள். அதிகமான மருத்துவமனைகளை ஆரம்பித்துவிட்டு, அங்கே டாக்டர்கள் போக வேண்டுமென்றால், அது சரியாக இருக்கும். டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்ல

வேண்டுமென்றால், யாருடைய ஆதரவில் அங்கே அவர்கள் பிழைப்பார்கள்? அரசாங்கம் அந்த வசதியைச் செய்து கொடுக்க முடியவில்லை. பிரைவேட் பிராக்டிஸ் கூடாது என்று சொல்லும்போது, மற்ற மாநிலங்களில் ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. நோய்க்கு சிகிச்சைக்காக வருகிறவர்களிடம் ஆளுக்கு 25 காசுகள் என்ற முறையில் வாங்கி அதைக் கொண்டு சம்பளம் கொடுக்கலாமா என்று யோசித்தார்கள். அந்த முறையைக் கூட பல இடங்களில் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. இளைஞர்கள் டாக்டர்களாக வருகிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குப் போக வேண்டுமென்றால், போக்குவரத்து வசதி போன்றவை இல்லாமல் இருக்கிறது. இங்கே கூட நண்பர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். டாக்டருக்குப் படித்தவுடன் ஐந்தாண்டு காலம் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்க வேண்டும். கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொல்லி ஒத்துக்கொண்டால்தான், எம்.பி.பி.எஸ். அட்மிஷன் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் பேசினார்கள். அதில் ஆட்சேபணை இல்லை. மலேசியாவில் இப்படி ஒரு முறை இருக்கிறது. அங்கே ஐந்தாண்டு காலம் அரசுத் துறையில் பணியாற்றிய பிறகுதான் பிரைவேட் பிராக்டிஸ் செய்ய முடியும். இப்போதே இங்கு கிட்டத்தட்ட 1,500 பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை அரசாங்கத்தில் வேலை செய்யுங்கள் என்றால், அவர்களுக்கு யார் வேலை கொடுப்பது? ரிடையர் ஆனவர்களுக்கு ஒரு ஊதியத்தைக் கொடுத்து கிராமங்களுக்குப் போங்கள் என்று சொன்னால், அவர்களுக்கும் உதவியாக இருக்கும். டாக்டர்களைப் பொறுத்தவரையில், பார்ட் டைம் ஸ்கீம் என்ற முறையில் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் நியமித்து ரூ. 250 ஸ்டைபண்டு கொடுத்து, போக்குவரத்து வசதியும் செய்து கொடுத்தால், தங்குகிற இடம் வேறாக இருந்தாலும், கிராமங்களுக்குச் சென்றுவர வசதியாக இருக்கும். பார்ட் டைம் டாக்டர்களாக வேறு நாடுகளில் இருக்கிறார்கள். அதைப்பற்றி யோசிக்க வேண்டும். கிராமங்களுக்கு இப்போது மருத்துவ வசதி கொடுத்திருக்கிறார்கள். பாரம்பரையாக ஆயாக்கள் அங்கே இருக்கிறார்கள். பிரசவம் பார்க்கிறார்கள். வைத்திய வசதி செய்து கொடுக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்து மாதாந்தரம் ரூ. 40 அல்லது ரூ. 50 கொடுத்து அவர்களுடைய உதவியைப் பெற்றால், கிராமங்களில் உள்ளவர்களுக்குச் சிறந்த முறையில் உதவியாக இருக்கும்.

மினி ஹெல்த் சென்டர்களைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு தனியார் நிறுவனம், அரசு நிறுவனம், மத்திய அரசு நிறுவனம் இவை சேர்ந்து 1 : 1 என்ற அடிப்படையில் செய்தோம் என்று சொன்னார்கள். நல்லமுறையில் ஆரம்பித்த திட்டம். தஞ்சையில் நானே தலைவராக இருந்து இரண்டு திட்டம் ஆரம்பித்தேன். மூன்று ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆறு

மாதங்களாகின்றன. இன்னும் பணம் வரவில்லை. ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆறு லட்சம் ரூபாயில் திட்டமிட்டு இரண்டு லட்சம் ரூபாய் நாங்கள் கொடுப்பதாகச் சொல்லி மாநிலம் இரண்டு லட்சமும், மத்திய அரசு இரண்டு லட்சமும் கொடுப்பதாகச் சொல்லி ஓராண்டு ஆகிறது. இதுவரையில் அதுபற்றிய தகவலே இல்லை. இங்கே சொல்லிவிட்டு, நடைமுறையில் ஒன்றுமே வரவில்லை என்றால், சரியாக வராது. அதை நடைமுறையில் வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எலக்ட்ரோ மெடிகல் செல் பற்றிச் சொன்னார்கள். இதுபற்றி முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். லட்சக்கணக்கான ரூபாய் போட்டு, இயந்திரங்களை வாங்கி, அவை இயங்காமல் இருப்பது நியாயமல்ல. இயந்திரப் பகுதியைப் பொறுத்தவரையில், ஒருவரைத் தனியாக வைத்திருக்கிறோம். டி.எம்.இ. நேரடிப் பார்வையில் இயங்கும்படி விட்டுவிட்டால், அவ்வப்போது என்னென்ன இல்லை என்ற தகவல் வந்ததும் அவர் மூலமாக அதைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். பெரிய மருத்துவ மனைகளில் மற்றும் சிறிய மருத்துவமனைகளில் கூட பி. டபிள்யு. டிபார்ட்மெண்ட் வேலையாக இருந்தால், இ.இ. இடம் போக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. டீன், பிரின்ஸிபால் இவர்களிடம் அதை இணைத்துவிட்டால், உடனடியாக அந்த வேலைகளைக் கவனித்து வேலை நடப்பதற்கு சௌகரியமாக இருக்கும்.

தஞ்சையைப் பொறுத்தவரையில், அட்வைசரி கமிட்டி இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அந்தக் கமிட்டி இப்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கடந்த ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டு காலமாக தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் ஆலோசனைக் கமிட்டி போடப் படவில்லை என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி டி.டி.சி. கூட்டத்தில் கூட எடுத்துச் சொன்னோம். தஞ்சையில் Professor of Gynaecology and Obstetrics போட்டார்கள். நகரத்தில் உள்ளவர்கள் கிராமத்திற்குப் போக மாட்டார்கள், மாதத்திற்கு இருபதினாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால் இருக்கும் இடத்தைவிட்டுப் போக மாட்டேன் என்றுதான் சொல்வார்கள். மருத்துவத் துறையிலே இரண்டு சர்வீஸ்கள் உண்டு என்று சொல்வார்கள். மெட்ராஸ் மெடிகல் சர்வீஸ், மொஃபிசில் மெடிகல் சர்வீஸ் என்பார்கள். மெட்ராஸ் மெடிகல் சர்வீசில் உள்ளவர்கள் மெட்ராசைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள். மொஃபிசில் மெடிகல் சர்வீசில் உள்ளவர்கள் மொஃபிசிலுக்கு ஓடிக்கொண்டிருப்பார்கள். சென்னையில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வசதிகள் அதிகம். அமைச்சர்களிடம், அதிகாரிகளிடம் நேரடியாக வந்து காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியும்.

டிரான்ஸ்பர் போட்டாலும், அங்கேயே இருந்துகொண்டிருப்பார்கள். இதைப் பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களே பேசிவிட்டார்கள். சிலர் இருபது ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு, அதைப்பற்றி ஒரு கேள்வி இங்கே கொடுத்து, அதற்கு மேல் நண்பர்கள் சொல்லி, நானே அதைத் திருப்பப் பெற்றுக்கொண்டேன். கேள்வியைப் பார்த்தாலே, பயங்கரமாக இருந்தது. நானே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படியாக ஆகிவிட்டது.

தஞ்சை மருத்துவமனையில் Reader in Psychiatry இல்லை. ஒரு அம்மையார் அதில் இருந்தார்கள். போஸ்ட் கிராஜுவேட் போஸ்டாக இருந்தது. அதை ‘டவுன்கிரேடு’ செய்தார்கள். பிறகு அந்த அம்மையார் வேறு கல்லூரிக்கு மாற்றப்பட்டார்கள். மனநோய் பிரிவுக்கு ரீடர் வேண்டுமென்று ஒன்றரை ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். அதைப்பற்றிக் கேள்வி கேட்டபோது, இங்கே அவை முன்னவர் அவர்கள் இதுபற்றித் தீவிரமாக ஆலோசிப்பதாகச் சொன்னார்கள். அதைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையில் பை எக்ஸிரே தெரபி கொடுத்திருக்கிறார்கள். அந்த இயந்திரம் ஒன்றரை ஆண்டு காலமாக ரிப்பேராக இருந்தது. யாரோ வந்து செய்தார்கள். இன்னும் சரியாக இயங்கவில்லை. அங்கேயிருந்து ஒருவர் சென்னைக்கு வந்துவிட்டார். கோபால்ட் யூனிட்டைப் பொறுத்தவரையில், மதுரைக்கும் பாண்டிச்சேரிக்கும் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். சென்னையில் மயிலாப்பூர் கோபால்ட் யூனிட்டைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது இல்லாத இடங்களுக்கு அனுப்ப வேண்டும். தஞ்சையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர்கள் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் பலர் ஓய்வு பெறப் போகிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு கோரிக்கையை என்னிடத்தில் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, மருத்துவ வசதி வேண்டும். இப்போது பெற்று வரும் மருத்துவ வசதியை, ஓய்வு பெற்ற பிறகு, பெற முடியவில்லை. ஐந்து அல்லது பத்து வருஷம் இந்த அவையில் இருந்து ஓய்வு பெற்று வெளியே சென்றதும், மருத்துவ வசதி கிடைக்காமல் போகிறது. ஆகையால் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கும்போது பெறுகின்ற மருத்துவ வசதிகளை அதே முறையில் ஓய்வு பெற்ற பின்பும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. அறிவழகன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓய்வு பெறப்போகிற உறுப்பினர்களுக்காக ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே எதிர்காலத்தில் ஓய்வு பெறுகிற எல்லா உறுப்பினர்க[illegible]ம் அது பயன்படும் என்ற முறையில் அதை வரவேற்கிறேன்.

இந்தத் துறை அடித்தள மக்கள் அதிகமாக சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு துறை. அடித்தள மக்கள் அதிகமாகப் பயன்பெறாமல் சிரமப்படுகிற துறையும் இதுதான். மேல்குடி மக்கள் பணிபுரிகிற மக்கள். அப்படிப்பட்ட மேல் தட்டு மக்கள் அந்தப் பலனை முழுவதும் பெறுகிற துறையும் இதுதான். இதில் பெரிய மாற்றம் நிச்சயமாகத் தேவை. இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்தின் மூலம் ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் அந்தத் துறைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் துறைக்கு வேறு யார் அமைச்சராக வந்தாலும், இந்தக் கருத்துக்களைச் சொல்வதில் மிகுந்த சிரமங்கள் வந்திருக்கும். ஒருவரை மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கொடுத்த கேள்வியையே திரும்பப் பெற வைத்த சூழ்நிலை அது. அந்தத் துறையில் அவ்வளவு வலிமையானவர்கள் இருக்கிறார்கள். புரட்சிகரமான கருத்துக்களைச் சொல்கிறவர்களை எப்படியாவது தங்கள் பக்கம் வளைத்துக்கொள்ள வேண்டுமென்ற பெரு முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள்.

இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற அல்லது சொல்லப்படுகிற நல்ல கருத்துக்கள் வரவேற்கத் தக்கவையாகும். திருமதி மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி அவர்கள் 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக அமைய வேண்டுமென்று உலக நாடுகள் மன்றம் குறிப்பிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியே நாமும் கொண்டாட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்தியக் கணக்கின்படி ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன என்றால் அவற்றில் 131 கிராமங்களிலே பிறக்கின்ற குழந்தைகள் இறந்து விடுகிறார்கள் என்றும் நகர்ப்புறங்களிலே ஆயிரத்திற்கு 81 குழந்தைகள் இறக்கிறார்கள் என்றும் புள்ளிவிவரம் கூறுகிறது. நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதியில் வாழ்கிற மக்கள் மத்தியில் அந்த நிலைமை இருப்பதாகவும் அந்த இந்தியக் கணக்கு எடுத்துச் சொல்கிறது. அப்படி உலகக் குழந்தைகள் ஆண்டாக 1970-ஐ கொண்டாடுவதோடு ‘No child year’ குழந்தைகளே பிறக்காத ஆண்டு என்ற முறையிலும் கொண்டாட வேண்டும். அதைக் கொண்டாடக் காலம் இருக்கிறதா என்றால், பத்து மாதங்கள் அதற்காக விட்டுவிடலாம். அப்படி 1979 ஆம் ஆண்டு குழந்தைகள் பிறக்காத ஆண்டு என்று கூட நாம் கொண்டாட முடியும். ஆனால் இந்தச் செய்தி கிராம

மக்களுக்குப் போய்ச் சேர்ந்து ஜனத்தொகை வளர்ச்சியினால் சமுதாயத்திற்குக் கேடு என்று உணர்த்துவதற்கும் இன்னும் பல காரியங்களைச் செய்வதற்கும் இந்தத் துறை விரைந்து செயல்பட வேண்டும்.

(பிற்பகல் 1[illegible]

நம்முடைய நாட்டில் மருத்துவத் துறை[illegible]ர்ச்சியடையாமல் இருப்பதற்கு, குந்தகமாக இருக்கின்ற காரணங்கள் எவை எவை என்று பார்த்தால், அதில் மிக முக்கியமானது நோய்கள் வாராமல் தடுப்பதற்குரிய மருத்துவம் ஒதுக்குளிக்கப்படாததாகும். அதாவது நோய் வாராமல் தடுப்பதற்குரிய மருந்துவம்பற்றி நமது மருத்துவத் துறையில் உரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆசியா கண்டத்திலிருக்கிற மருத்துவ நிலையங்களைப்பற்றி ஆராய்ந்து சொன்ன டாக்டர் சார்லஸ் எலியட் என்பவர் ஒரு கருத்தைச் சொன்னார். நமது மருத்துவத் துறையில் ஏதேனும் ஒரு துறை மிகவும் அலட்சியப்படுத்தப்பட்டு கவனிக்கப்படாது இருக்கிறது என்றால், அது ‘Preventive Medicine’ பற்றி பயிலுகிற துறையாகும். Preventive Medicine என்கிற நோய் வராது தடுக்கும் துறையில் பணியாற்றுகிறவர்களை, மருத்துவத் துறையின் மற்ற பிரிவுகளைச் சார்ந்தவர்கள் பார்க்கிறபோது கூட மிக அலட்சியமாகப் பார்க்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எவ்வளவு தொகையை நாம் செலவு செய்து, நோய்களைப் போக்க பல்வேறுவிதமான காரியங்களைச் செய்தாலும், அதனால் ஏற்படும் பலன்களை விட சமுதாயத்தில் நோய் வாராமல் தடுப்பதற்குரிய பணிகளை நாம் செய்வதன் மூலம் நல்ல பலனைக் காண முடியும். 3,000 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ‘மொகஞ்சதாரோ’-வை அகழ்ந்தெடுத்துப் பார்க்கிற போது அப்போது வாழ்ந்த மக்கள்கூட நல்ல குடிதண்ணீர் வசதியையும், நல்ல கழிவிடங்களையும், வீட்டிற்குள்ளேயே நல்ல சுகாதாரமான இடங்களையும் பெற்றிருந்தார்கள் என்று அறிகிறோம். 3,000 ஆண்டுகளுக்கு முன்னால் வைத்துக்கொண்டிருந்த சமுதாய சூழலில் வளர்ந்து வந்த இந்தச் சமுதாயம் இன்றைக்கு 20-வது நூற்றாண்டின் 2 ஆம் பகுதியில் வாழ்கிற நமக்கு பள்ளிகளிலும், தெருக்களிலும், வீடுகளிலும் பொதுக் கழிப்பிடங்கள் போன்ற வசதிகள் கூட இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். இப்படிப்பட்ட வசதிகள், சுகாதார வசதிகள் விரைவில் செய்யப்பட்டால்தான், மருத்துவத் துறை என்பது மக்கள் நல்வாழ்வுத் துறையாக மாறுவதற்குரிய வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சமுதாயத்தில் பொருளாதார வளமும் வாய்ப்பும் பெற்றவர்களும், மேல் தளத்தில் உள்ளவர்களும் அதிகமாகப் பணியாற்றுகிற இந்தத் துறையில் பூசல் மிகுந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி 1973-74 ஆம்

ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக இருந்த திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏன் இந்தத் துறையில் மட்டும் இந்த அளவுக்கு வம்பும் வல்லடியும் டாக்டர்களிடையே பூசலும் இருக்கின்றன? நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்[illegible]ல், பல மருத்துவமனைகளில் இருக்கும் சங்கடமான சூழ்நிலைகளுக்கு என்ன காரணம் என்று அவர் தம் அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

“The Committee is pained to note that in the matter of allocation of staff among different units, much discrimination creeps in and even the orders of Government are flouted and at times questioned. From what is happening, the Committee is able to understand that in certain departments, effort is made to see that the new unit proves a failure. The Committee is pained to note that team-spirit and spirit of service are conspicuously absent in many of the departments of the hospital. It strongly recommends that professional rivalries be avoided and team-spirit maintained.”

இந்தத் துறையில் வருகிற பல்வேறு லாபங்கள் காரணமாகவும், மேல் தட்டில் இருப்பவர்கள் கீழ் மட்டத்தில் இருப்பவர்களை அடக்கி ஆளும் சூழ்நிலை காரணமாகவும், ஒரு துறை வளரக்கூடாது, அது வளர்ந்தால் நம் துறை வளராது என்று நினைக்கிற நினைப்பின் காரணமாகவும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்று அவர் தம் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது முதல் ஒரு கருத்தைச் சொல்லி வருகிறார்கள். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கே மருத்துவம் செய்ய வேண்டும், அப்போதுதான் கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். இதுபோன்ற கருத்தைத்தான் சீனத் தலைவர் மாசே-துங் அவர்களும் குறிப்பிட்டார்கள். அப்போதுதான் நாட்டில் மக்கள் நோய் வாய்ப்படுவது மிகக் குறைவாக இருக்கும் என்று மாசே-துங் குறிப்பிட்டார்கள். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், 5 ஆண்டு காலத்திற்குப் படிக்கிற மிகப் பெரிய கல்வி தேவையில்லை. அந்த அளவுக்கு 5 ஆண்டு காலக் கல்வியைப் பெற்றவர்கள், வேண்டுமானால் ஆராய்ச்சியாளர்களாக கல்வி நிலையங்களில் இருக்கட்டும். அவர்கள் கல்வி நிலையங்களில் பணியாற்றலாம். மூன்று ஆண்டு படித்தாலே போதும் என்றார்.

“It is enough to fix three years to graduates from higher primary schools for working in the rural areas”.

இந்த வகையில் 3 ஆண்டுகளுக்குப் பயிற்சி பெற்றவர்கள், படித்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றலாம் என்று மாசேதுங் சொன்னார். அதைக்கூட மொழி பெயர்க்கத் தெரியாமல் மொழிபெயர்த்து 'Bare-foot doctors' என்று சொல்லி தமிழில் அவர்களை கால்நடை மருத்துவர்கள்' என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். நாட்டுப்[illegible]டாக்டர்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கருத்தைச் சொல்லும்[illegible]து, ஒன்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டதைப் போல், இந்தத் துறையில் சம்பந்தப்படாத லட்சக் கணக்கான டாக்டர்கள் அறிவு இயல் பெருமல், ஆற்றல் பெருமல், நாட்டுப்புற டாக்டர்கள் என்ற பெயரில் ஹோமியோபதி டாக்டர்கள் என்ற பெயரில், கிராமங்களில் வாழ்ந்து வருவதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களைப் பிடித்து இழுத்து வந்து அவர்களுக்குத் தர வேண்டிய அடிப்படையான மருத்துவப் பயிற்சிகளைத் தந்து, அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படையான மருத்துவச் செய்திகளைத் தெரிவித்து, அவர்கள் எந்தத் துறையில் மட்டும் மருத்துவம் செய்ய வேண்டும் என்று தெரிவித்து, இந்த அளவுகது மேல் அவர்கள் செல்லக்கூடாது என்று கட்டுப்படுத்தினால்தான், மருத்துவம் என்பது கிராம மக்களுக்கு ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் கிடைக்க வேண்டிய அளவுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது, கிராம மக்களிடம் தற்போது மருத்துவ உதவி செய்து வரும் ஆயாக்களின் பணிக்குக்கூட இந்த அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவர் அவ்வாறு கூறியதை நான் எப்படி எடுத்துக் கொள்கிறேன் என்றால், அவர்கள் மருத்துவ அறிவியல்' பெற்றவர்களாக. அடிப்படைச் சுகாதாரக் கருத்துக்களைத் தெரிந்தவர்களாக, ஆக்கப்பட்டு சமுதாயத்தில் உலவ விட வேண்டும். அவ்வாறு அல்லாமல் அவர்களை முழுச் சுதந்திரம் பெற்றவர்களாக சமுதாயத்தில் மருத்துவம் செய்ய உலவ விடுவதால், தீமைகள் தான் அதிகமாக ஏற்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டில் பல்வேறு விதமான மருத்துவ் நிலையங்கள்—பல் மருத்துவ நிலையம், ஈ.என்.டி. என்று சொல்லப்படுகிற நிலையங்கள்—உருவாக்கப் பட்டிருந்தாலும், பல்லைப் பொறுத்தவரை, 83 இடங்களில் மருத்துவம் நடை பெறுகிறது. இது போதாது என்று நான் சொல்லுவதற்குக் காரணம் பல் மருத்துவத்தில் படித்து வெளியே வந்திருக்கும் நூற்றுக்கணக்கான டாக்டர்கள் இந்தத் துறையில் பணியாற்ற ஆவலாக இருக்கிறார்கள். பல் மருத்துவத் துறை இன்னும் வளர வேண்டிய துறை. அவர்களுக்கெல்லாம்

வேலை கொடுக்கிற முறையிலும் இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழ்தற்கும் டெண்டல் கிளினிக்ஸ்—பல் மருந்துவ மனைகள் இன்னும் அதிகமான அளவுக்குத் துவக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்து, இதைச் சீரமைக்க வேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை நன்கு மாற்றி அமைப்பார்கள் என்ற நல்ல நம்பிக்கை எனக்கு உண்டு. அவர்களுடைய முயற்சிகள் முழுவதும் வெல்க என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

5. மேலவை விதி 82-ன்கீழ் அமைச்சரின் விளக்க உரை.

கவிஅரசு கண்ணதாசன் அவர்கள் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்ட மன்ற மேலவை விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை இந்த அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1949 ஆம் ஆண்டில் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் அரசின் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஆஸ்தான கவிஞர் நியமிக்கும் பழக்கம் கைவிடப்பட்டது. இந்த அரசு மீண்டும் அதனைப் புதுப்பிக்கக் கருதி உள்ளது.

கவிஅரசு கண்ணதாசன் அவர்களை ஆஸ்தான கவிஞராக நியமித்திட அரசு முடிவு செய்துள்ளது. அவருக்குச் சிறப்பு ஊதியமாக மாதம் ரூ. 1,000 வழங்கப்படும். மேலும் உந்து வண்டியும் தொலைபேசி போன்ற வசதிகளும் அளிக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம்—தொடர்ச்சி.

(பிற்பகல் 1-10)

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உறு பசியும் ஓவாப் பிணியும், செரு பகையும்
சேரா தியல்வது நாடு"

என்று ஒரு நாட்டிற்குரிய இலக்கணத்தை வள்ளுவப் பெருந்தகை மிகத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார். அந்த வகையில் பசியை நீக்குவதும் பிணிகளை அகற்றுவதும் ஆகிய பொறுப்பை கடமையாகக் கொண்டிருக்கிற தமிழகத்தில், மருத்துவத் துறையையும் மக்கள் நல்வாழ்வுத் துறையையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். காரணம் இந்த இரண்டு துறையும் மக்களைப் பேணிப் பாதுகாக்கத் தொடங்கியிருக்கிறது என்பது.

அதிலும் குறிப்பாக நடமாடும் மருத்துவ மனைகள் என்ற திட்டத்தின் மூலமாக எங்கெங்கே வந்துற்ற பிணிகளை அகற்றிக் கொள்ள முடியாது போராடிக் கொண்டிருக்கிறார்களோ, அந்தப் பகுதி மக்களை யெல்லாம் சந்தித்து, அவர்களையெல்லாம் தேடிச் சென்று பார்த்து, அவர்களுக்குரிய மருத்துவப் பணிகளைச் செய்வதற்கு முன்வந்திருக்கிற இந்த அரசை எல்லோரும் ஒருமனதாகப் பாராட்டித் தீர வேண்டும். மத்திய அரசின் திட்டம் ஒன்று என்றும், இங்கே மாநிலத்தில் வேறுவிதமான திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது என்றும், இதை எண்ணிப் பார்க்கிறபோது, மத்திய அரசின் திட்டமே பரவாயில்லை போல் தெரிகிறது என்கிற பாணியிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் அவ்வாறு குறிப்பிடும்போது, இந்தத் திட்டத்தில் ஏதோ பழுது இருப்பதாக நான் சந்தேகப்படுவதற்கு இடமிருந்தது. ஆனால் அவர் சொன்னது 70 விழுக்காடு அளவுக்கு கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களுக்கு 30 விழுக்காடு பணத்தைச் செலவழிப்பது என்பது கட்டுப்படியாகாது என்ற அடிப்படையில் சொன்னார்களே தவிர, இந்தத் திட்டம் தவறு என்ற அடிப்படையில் அவர்கள் குறிப்பிடவில்லை என்பதற்காக நான் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டங்களுக்கு அதிக நிதி

(முற்பகல் 1-10)

ஒதுக்கீடு தேவையாக இருக்கிறது. அதற்கு மத்திய அரசு மிகச் சிறந்த முறையிலே கவனிக்க வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுத்திருந்தால், மிக நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் இந்த நேரத்திலே இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்த முடையதாகும் என்று கருதுகிறேன்.

நாட்டிலே தொழு நோய் என்பது ஒரு மிகக் கொடுமையான நோய் என்று உணர்ந்திருக்கிறார்கள். அந்தச் சொல்லேகூட கொஞ்சம் அச்சுறுத்துவது போன்ற ஒன்றாக இருக்கிறது. அப்படிப்பட்ட நோயாக இருப்பதனாலேயோ என்னவோதான் அது தொழு நோய் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தொழு நோய் நாட்டிலே ஆயிரம் பேருக்கு 10-லிருந்து 40 பேர்கள் வரை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது வெளிப்படையாகத் தெரிவதாக ...ர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்தப் பிணிக்குத் தீர்வு காண்பதற்கு,

டேப்சோன் என்ற மருந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த மருந்து இப்போது தடைசெய்யப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள். அது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அது என்ன காரணத்தினாலேயோ தடைசெய்யப்பட்டுவிட்டது. அதைப்பற்றிப் பத்திரிகையிலேகூட எழுதியிருக்கின்றார்கள் என்று எண்ணுகிறேன். தொழு நோயை மிக விரைவிலே தீர்க்க வேண்டும் என்று திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு எந்தக் காரணத்தினால் அதைத் தடைப்படுத்தியிருக்கிறது என்பது புரியவில்லை. அந்தப் பிணியை மிக விரைவிலே அகற்றுவதற்காக இருக்கின்ற மருந்துகளை மீண்டும் தருவித்து, அந்த நோயை முழுமையாக அகற்ற முயற்சிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன். அதற்கு வேண்டிய மருந்துகள் வெளிநாட்டிலேயிருந்து வருவிப்பது தவறு என்றால், அந்த மருந்துகளை உள்நாட்டிலேயே கண்டுபிடித்து அந்தத் தொழு நோயை நீக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் குறிப்பிடுகிற போது,

"When wealth is lost, nothing is lost;
When health is lost, something is lost."

என்று சொன்னார்கள். நான் அதற்கும் மேலே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

"when character is lost, everything is lost".

ஒழுக்கக் குறைபாடுகள்தான் அந்தவிதமான நோய்களுக்கெல்லாம் காரணமாகும். அந்த நோய்களையெல்லாம் அவை உருவாக்குகின்றன என்பதை நாம் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இந்நாட்டிலே இருக்கின்ற இளைஞர்கள் எல்லாம் இந்நாட்டின் எதிர்காலத்தையே உருவாக்குகின்றவர்கள், இந்நாட்டு மன்னர்கள் என்று சொல்வார்கள். அவர்களில் பலர் மயக்க மருந்துகளை உட்கொள்ளும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். 'மேன்டர்ராக்ஸ்' என்று சொல்லப்படுகின்ற மருந்துகளை, போதைப் பொருட்களை எல்லாம் உட்கொள்வதாகச் சொல்கிறார்கள். ஏராளமான பேர்கள் உட்கொள்வதாக நான் அறிகிறேன். மயக்கத்தைத் தெளிவிக்க அறிவு வளர வேண்டும் என்று நாட்டில் துடித்துக்கொண்டிருக்கும்போது, மயக்கத்தையே உருவாக்கிக்கொள்ளத் துடிக்கின்ற பல பேர்களைப் பற்றி எனக்குப் புரியவில்லை. அந்த மயக்க மருந்துகள் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[புலவர் புலமைப்பித்தன்]

மூன்று பிணிகளிலே காமம், வெகுளி, மயக்கம் என்று சொல்லி மயக்கத்தைக் கடைசியிலே வைத்திருக்கிருர்கள். கடைசிவரை அந்த மயக்கம் தொடர்ந்து இருக்கும் என்ற காரணத்தினாலேயோ என்னவோ அப்படிச் சொல்லியிருக்கிருர்கள். இன்னென்று குறிப்பிட விரும்புகிறேன். எலும்புருக்கி நோய் என்று சொல்வார்கள். அது ஒரு கொடுமையான நோய். அது பெரும்பாலும் பஞ்சாலைத் தொழிலாளியாக இருப்பவர்களுக்கு அதிகமாக பிடிக்கிறது. நானும் ஒரு காலத்திலே பஞ்சாலைத் தொழிலாளியாக இருந்தவன். பஞ்சாலைகளிலே வேலை செய்பவர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனைக்கு வழி செய்ய வேண்டும். அப்படி மருத்துவ பரிசோதனை வசதி செய்து தருவது நல்லதாக இருக்கும்.

அடுத்ததாக, சித்த மருத்துவத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சித்த மருத்துவம் தமிழ் நாட்டுப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலேயோ என்னவோ அது புறக்கணிக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். சித்த மருத்துவத்திலிருந்துதான் மேல்நாட்டு மருந்து முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. காது வலி வருகிறது. அது தீராத வலியாக வருகிறபோது, அந்தக் காது வலி நீங்க, வலம்புரிக்காய், இடம்புரிக்காய் என்று சொல்வார்கள், அந்தக் காய்களை எண்ணெயில் இட்டு வாட்டி எடுத்து, அந்த எண்ணெயை காதில் விட்டுக்கொண்டால், அந்தக் காது வலி விரைவிலே தீரும். கள்ளிப் பூண்டு என்று சொல்வார்கள். அவை வேலிக்குப் பக்கத்திலே இருக்கின்ற சின்னச்சின்ன பூண்டுகளாகும். அந்தப் பூண்டுகளை உபயோகித்து காயங்களைச் சுகப்படுத்தலாம். பெரிய மருத்துவர்கள் சொல்வார்கள். இது பெருங்காயம், இந்தப் பெருங்காயத்தை மாற்றுவது என்பது முடியாது என்று சொல்வார்கள். அச்சப்படுகின்ற அளவுக்கு இருக்கின்ற காயங்களை எல்லாம் தீர்ப்பதற்கு, மிகப் பெரிய அளவிலே காயங்கள் இருந்தாலும், அந்தச் சின்னச் சின்ன கள்ளிப் பூண்டுகளை உபயோகித்து மூன்று நாட்களிலே குணமாக்கிவிடுவார்கள். அதை நானும் நேரடியாகக் கண்டவன். நான் கூட வேடிக்கைக்குப் பாடுகிறபோது இந்தப் பாட்டைப் பாடுவேன்.

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை
மங்காத சீரகத்தை தந்திரேயாயின்
தேடேன் பெருங்காயம் ஏலகத்துச் செட்டியாரே

என்று பாடுகிறபோதுகூட, நம்முடைய சித்த மருத்துவ முறையின் சிலேடையாகவே பாடிய நாடு நம் நாடு. சித்த மருத்துவத் துறையிலே கொஞ்சம் தீவிரமான முயற்சிகளை எடுத்துச் செய்தால், நல்ல பலன்

[புலமைப் பித்தன்]

விளையும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு நண்பருக்கு முகவாய் ஜன்னி என்று வந்துவிட்டது. அவருடைய அழகான முகமே மிக விகாரமாக மாறிவிட்டிருந்தது. அவர் பல்வேறு மருத்துவர்களிடத்திலே சென்று பார்த்தார். குணம் காண முடியாத நிலைமையில் சித்த மருத்துவரைப் பார்த்தார். பத்து நாட்களிலே அந்த நோய் குணமாகிவிட்டது. அவருக்கு மீண்டும் அந்தப் பழைய அழகான முகம் வந்துவிட்டது. சித்த மருத்துவத்தால் அவர் அதைப் பெற முடிந்தது. இப்படிப்பட்ட மிக வலிவான அடிப்படையிலே தோன்றிய மருந்துகளை நம் நாட்டினுடைய தலைவிதி போலும், சொன்னால் பலிக்காது என்று அப்போது சொல்லிக் கொண்டிருந்த காரணத்தினாலே, மறைத்துவிட்டுப் போய்விட்டார்கள். விண்டவர் கண்டிலர், கண்டவர் விண்டிலர் என்று சொல்வார்கள். இந்த அளவில் அந்த மருத்துவ முறை அழிந்திருக்கிறது என்ற காரணத்தினாலே, அந்த மருத்துவ முறை பற்றிய அருமையான நூல்களை வெளிக்குக் கொண்டு வந்து, அந்த முறைகளை மீண்டும் செயல்படுத்த வேண்டும். அந்தத் துறை வளம் பெறுவதற்கான நல்ல வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஓய்வு பெற்ற லெஜிஸ்லேட்டர்களுக்கு அவர்கள் பதவியில் இருக்கும்போது கிடைக்கக்கூடிய மருத்துவ உதவிபோல் இலவச மருத்துவ உதவி கொடுக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்தார்கள். என்னிடத்தில் பல ஆண்டுகளாகச் சொன்னதன் காரணமாக, இதே கோரிக்கையை சென்ற ஆண்டு இங்கே நான் பேசியபோது குறிப்பிட்டுச் சொன்னேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்கிருர்கள். நான் அவருக்கு ஆதரவாகப் பேசுகிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு பதில் சொன்னதைப் போன்று சொல்லாமல், இந்த ஆண்டு இதற்குச் சாதகமான பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று மருத்துவத் துறையின் அமைச்சராக பொறுப்பு ஏற்றதன் காரணமாக நீண்ட நெடுங்காலமாக ஊழலில் ஊறிப்போயிருந்த இந்தத் துறை பெரும் அளவுக்கு சுத்தப்படுத்தப் பட்டிருக்கிறது. குறிப்பாக எம்.பி.பி.எஸ். செலக்ஷனில் ஏகப்பட்ட ஊழல் இருந்தது இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய ஊழல் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. பெருவாரியான ஊழல்கள் குறைந்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். குறைந்தது என்று தான் சொல்லுகிறோம். ஊழல் ஒழிந்துவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைவா

வேண்டும். அவர்களுடைய திறமையை, முயற்சியைப் பாராட்ட வேண்டும். மேலும் மேலும் முயற்சி செய்து இந்தத் துறையில் வெற்றி பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மருத்துவ மனைகள் அரசாங்கத்தின் சார்பில் பரவலாக நடத்தப்படுகின்றன. மருத்துவ மனையிலே வியாதியஸ்தர்களுக்கு மட்டமான மருந்துகள் கொடுக்கப் படுவது தவிர்க்கப்படுவதற்கு வழி செய்யப்படுகிறது. டாக்டர்கள் சீட்டு எழுதிக்கொடுத்தால், அந்த சீட்டைக் கொண்டுபோய் கொடுத்தால், அந்த இன்ஜெக்ஷன் மருந்தை வரவழைத்துப் போட்டுக் கொள்கிறார்கள். அந்த நல்ல மருந்துகளைச் சாப்பிடுகின்றார்கள். அதனால் உடனடியாக குணம் அடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையைப்

(பிற்பகல் 1-20)

பாராட்டுகிறேன். டாக்டர் இருப்பதைச் சாப்பிடு என்று சொல்லாமல், நல்ல மருந்தை வரவழைத்து வினியோகிக்கும் முறையைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தேவையான மருந்து இல்லை என்ற குறை எப்படி வருகிறது? இதில் இரண்டு வகை இருக்கின்றது. ஒன்று அரசாங்க சார்பில் உயர்ந்த மருந்து வாங்கிக் கொடுக்கப்படுவதில்லை. அல்லது கொடுக்கப் படக் கூடிய உயர்ந்த மருந்துகள் எல்லாம் திருடு போகின்றன என்பது பரவலாக நீண்ட காலமாக இருக்கக்கூடிய குறை. திருட்டுப் போகிறது என்பது மிகப் பெரிய குற்றம். அதைப் பரிசீலனை செய்து கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைகளில் மருந்துகள் விற்கின்றன. உயர்ந்த மருந்துகளும் உண்டு. விலை குறைவான மருந்துகளும் உண்டு. உயர்ந்த மருந்துகளில் பெருவாரியான மருந்துகளை டூப்ளிகேட்டாக விற்கிறார்கள். என் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். டாக்டர் ஒரு உயர்ந்த மருந்தை வாங்கிக் கொடு என்று எழுதிக் கொடுத்தார். எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கிக் கொடுத்தவுடன் அவர் குணம் அடைந்தார். டாக்டர் அந்த மருந்தைத் தொடர்ந்து கொடுங்கள் என்றார். நாங்கள் கொடுத்துக் கொண்டே வந்தோம். அந்த நோய் திரும்பி வந்துவிட்டது. நோயாளியை டாக்டரிடம் திரும்ப அழைத்துச் சென்றேன். நான் கொடுத்த மருந்தை வாங்கிக் கொடுத்திருந்தால் வியாதி வந்திருக்காது என்று டாக்டர் சொன்னார். "டூப்ளிகேட் மருந்தாக இருந்ததால், திரும்ப வந்துவிட்டது, நீங்கள் வாங்கிய கடையில் மருந்தை வாங்காதீர்கள், இந்தக் கடை என்று குறிப்பிட்டு அந்தக் கடையில் வாங்கி கொடுங்கள், வியாதி தீர்ந்துவிடும்" என்று டாக்டர் சொன்னார். நாங்கள் அவர் சொன்ன கடையில் மருந்தை வாங்கிக் கொடுத்தோம். வியாதியஸ்தர் குணமடைந்து விட்டார். இந்தத் துறையில் கடைகளில் உள்ள மருந்துகளை பரவலாகப் பரிசோதனை செய்யப்பட்டு இவைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் உறுப்பினராக நான் உத்திரப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே ஹரித்துவார் என்ற ஊரில் மத்திய சர்க்கார் ஒரு மருந்துத் தொழிற்சாலையை நடத்துகிறார்கள். சில மருந்துகளைத் தயாரித்து இந்தியா பூராவும் அவர்களே வினியோகிக்கிறார்கள். அந்த மருந்து தரத்தில் இம்மி அளவு கூட வித்தியாசம் இல்லாமல் தரம் உள்ள மருந்தாகத் தயாரிப்பது பாராட்டுக்குரியதாகும். ஆகவே விலை உயர்ந்த மருந்துகளை நம் மாநில அரசாங்கமே மருந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வினியோகித்தால், தரமுள்ள மருந்து கிடைக்கும் என்ற உத்தரவாதத்துடன் அரசாங்கத்திற்கும் கொஞ்சம் நல்ல லாபம் கிடைப்பதற்கு வகை உண்டு. அந்த வகையிலே அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா தலைநகரிலுள்ள ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி என்று சொல்லக் கூடிய மருத்துவ மனையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு படுக்கைகள் போதாமல் ஓரங்களில் படுக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். எனவே எல்லா மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் படுக்கைகளைக் கூடுதலாக்க அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்கு டாக்டர்களைப் போட்டால், அவர்கள் போவதில்லை. தொழு நோய் மருத்துவ இல்லங்களுக்கு டாக்டர்களைப் போட்டால், அங்கே போவதற்குத் தயங்குகிறார்கள். அப்படித் தயங்குவதில் ஒரு நியாயமும் உண்டு. நான் ஒன்றைச் சொல்லுகிறேன். வலுக்கட்டாயப் படுத்தி அவர்களை அனுப்புவதை விட அவர்களாகப் போகக்கூடிய வகையில், அப்படி கிராமங்களுக்குப் போகக்கூடியவர்களுக்கு, தொழு நோய் மருத்துவ இல்லங்களுக்குப் போகக்கூடியவர்களுக்கு ரூ. 200, ரூ. 300 கூடுதல் சம்பளம் என்று அமைத்தால், தாங்களாக விரும்பிப் போகக்கூடியவர்கள் பலர் இருக்க முடியும் என்ற என் கருத்தைச் சொல்லுகிறேன்.

இந்திய மருத்துவத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று நம்முடைய மாநில அரசு முயற்சி செய்து வருகிறதை கொள்கை அளவில் நான் வரவேற்கிறேன். இந்திய மருத்துவம் என்றால் சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யூனானி என்று மூன்று வகை இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இன்றைக்கு யூனானி வைத்தியத்தினுடைய தரம் குறைய ஆரம்பித்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை நகரில் ஒரு சிறு யூனானி கல்லூரி உருவாகியது.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1978 மார்ச் 28

இப்போது அது இல்லை. முன்பு படித்தவர்கள் இப்போது யூனானி டாக்டர்களாகி
இருக்கிறார்கள். 25 யூனானி டிஸ்பென்சரிகள் மாநில அரசின் சார்பில் நடத்தப்
படுகின்றன. ஆனால் டாக்டர்களுக்கு புதிய கல்லூரி இல்லாமல் இருக்கிறது.
பழைய டாக்டர்கள் தீர்ந்துவிட்டால், நம் மாநிலத்தில் டாக்டர்கள் இல்லை
என்று வேறு மாநிலத்திலிருந்து அழைக்கக்கூடிய நிலை வரும். ஆகவே அரசு
இது சம்பந்தமாக ஒரு சிறு கல்லூரியைத் துவக்க முயற்சி எடுத்திருக்கிறது
என்று கேள்விப்பட்டு, அந்த முயற்சியை நான் பாராட்டுகிறேன். விரைவாக
யூனானி வைத்தியக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திக்
கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நேரம் பேச வாய்ப்பு இல்லை. ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துக்
கொள்கிறேன். எம்.பி.பி.எஸ். தேர்வுகளில் முஸ்லீம்களுக்கு கொஞ்சப்
குறைவாக ஸ்தானங்கள் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் குறை
நிவர்த்திக்கப்பட வேண்டும். முஸ்லீம்களுக்கு விதாச்சாரம் குறையாமல்
சீட்டுகள் கோட்டா அடிப்படையில் ஒதுக்கினால் திருப்தி அடைவோம். வேறு
எந்த வகையிலாவது சீட்டுகள் குறையாமலிருக்க அரசு கவனம் செலுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாகச் சொல்ல விரும்புவது
ஊழல் ஊழல் என்பது நேர்முகத் தேர்வில் தான் அதிகமாக நடக்க
வாய்ப்பிருக்கிறது. சென்ற முறை அதைக் கட்டுப்படுத்தியதற்கு ஆரம்பத்
திலேயே பாராட்டினேன். ஆனால் ஊழல்களில் அதிக வகை உண்டு. அவைகளை
கட்டுப்படுத்த வேண்டும். நேர்முகத் தேர்வு எடுபட வேண்டுமென்
கருத்தினைச் சென்ற ஆண்டு இங்கே பேசினேன். அன்பிற்குரிய முதலமைச்
அவர்கள் அந்தக் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால் இன்னறக்
கருத்துக்களைச் சொன்னவர்கள் மைனாரிட்டிகளுக்குக் கிடைக்கக்கூடிய
வாய்ப்பு இல்லாமல் போகும் என்ற கருத்தைச் சொன்னார்கள். மைனாரிட்டி
களுக்கு, அரிசனங்களுக்கு இத்தனை சீட், பிற்படுத்தப்பட்டவர்களுக்
இத்தனை சீட் என்று கோட்டா ஒதுக்கிவிட்டு, நேர்முகத் தேர்வை விலக்கி
விட்டால், யாரும் பாதிக்கக்கூடிய நிலை இருக்காது என்று கூறி, என்னுடைய
கருத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மருத்துவமும், மக்
நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நாளை
தொடரும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய
நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை நாளை காலை 10-30 மணிக்கு மீண்டும்
கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-26)

6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

322. Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Handicrafts Development Corporation Limited, Madras for the period ended 31st March 1975 together with Second Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

323. Notification issued with G.O. Ms. No. 83, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 19th January 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the posts of Senior Instructor, Demonstrator and Baker sanctioned for Diploma Course in Bakery and Confectionery at the Government Polytechnics for Women within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

324. Notification issued with Government Memorandum No. 38447/II/(2)/77-6, Commercial Taxes and Religious Endowments, dated the 15th February 1978 in regard to exemption of tax under the Tamil Nadu General Sales Tax Act, 1959 on the sales of garments produced by Women's Welfare Association. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

325. Notification issued with G.O. Ms. No. 165, Commercial Taxes and Religious Endowments, dated the 10th February 1978 in regard to amendments to the Tamil Nadu Sales Tax (Surcharge) Rules, 1971. [Laid on the table of the House under section 7 (3) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971).]

326. Notifications issued with G.O.P. No. 201, Commercial Taxes and Religious Endowments, dated the 20th February 1978 in regard to amendments to the First and Second Schedules to the Tamil Nadu General Sales Tax Act, 1959 and reduction of tax payable by any dealer under the said act on the sale of kerosene from eight and a half per cent to eight per cent. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

B. Reports, Notifications and Other Papers.

* 113. Policy Note on Co-operation Department for the year 1978-79. (English and Tamil).

* 114. Pamphlets relating to Co-operation.

* 115. Policy Note on Food situation in Tamil Nadu (Tamil).

* 116. Policy Note on Leprosy Beggars Rehabilitation Programme, 1978-79. (English and Tamil).

* 117. Demand No. 19—Supplemental Note on 'Sewerage and Water-Supply, 1978-79. (English and Tamil).

* 118. Policy Note on Fisheries, 1978-79 (English and Tamil).

* 119. Performance Budget on Fisheries for the year 1978-79 (English).

* 120. Performance Budget on Co-operative Department for the year 1978-79 (English and Tamil).

* 121. Policy Note on Medical, 1978-79 (Tamil).

* 122. Performance Budget on Medical Education for the year 1978-79 (English).

* 123. Performance Budget on Medical Services and Family Welfare for the year 1978-79 (English).

* 124. Policy Note on Public Health, 1978-79 (Tamil).

* 125. Performance Budget on Public Health for the year 1978-79 (English).

126. Return of Assets of Thirumathi Subbulakshmi, M.L.A., and Thiru K. M. Abdul Razack, M.L.A., as on 31st March 1977, placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August, 1969.

£ Laid on the Table of the House on 27th March 1978.

* Circulated to all M.L.Cs. on 27th March 1978.

இணைப்பு.

(599ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க)
மருத்துவத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே,

'மருத்துவம்' குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

I. கொள்கை விளக்கம்.

கிராமப் பகுதிகளில் முன்னிலும் சிறந்த சீரான வசதிகளைச்செய்து கொடுப்பதில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்கிற கருத்திற்கிணங்க, மாவட்ட, வட்டத் தலைமையிடத்திலும் பிறயிடங்களிலுமுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் முதலியவற்றில், இந்த நோக்கத்தினை அடைய வசதிகள் படிப்படியாகக் கூடுதலாக்கப்பட்டுள்ளன.

A. மருத்துவக் கல்வி.

II. (i) மருத்துவக் கல்லூரிகள்.

(அ) பட்டப்படிப்பு வகுப்புகள்.

இம் மாநிலத்தில், தமிழ்நாடு அரசு 8 மருத்துவக் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இவற்றில், மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், எஞ்சிய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. இந்த 8 கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மருந்தாக்கியல் பட்டப் படிப்பு வகுப்பு சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது. இதற்கு ஆண்டுதோறும் சென்னை மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 26 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பல் நோய்ச் சிகிச்சை பட்டப்படிப்பு (B.D.S. Course) சென்னை மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் இதில் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் பயிற்சிக் கல்லூரியில், செவிலியர் பட்டப் பாடமுறை நடத்தப்படுகிறது. இது இரண்டரை ஆண்டு காலமாகும். அரசுப் பணியில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி பெற்ற செவிலியரும், தனிப்பட்டவர்களும் இவ்வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆண்டுதோறும் செவிலியர் பணியிலிருந்து 10 பேரும், வெளியிலிருந்து 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) பட்ட மேற்படிப்பு வகுப்புகள்.

பல்வேறு துறைகளில் போதுமான அளவுக்கு வல்லுநர்
களும், ஆசிரியர்களும் இல்லை. இதனைச் சரிசெய்ய வெவ்வேறு
மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளும்,
பட்டயத்தகுதி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மேற்சொன்ன
வாறு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு. பட்டயத்தகுதி
வகுப்புகள் பற்றிய விவரங்கள் I-வது இணைப்பில் கொடுக்கப்
பட்டுள்ளன. I-A இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாட முறைகள்
மருத்துவ மன்றத்தின் இசைவு கிடைக்கப்பெற்ற பின்னர்
ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக்
கல்லூரியிலும் 1978 ஏப்ரல் முதல் தொடங்கப்படும். II-வது
இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பட்ட மேற்படிப்பு வகுப்பு
களையும், பட்டயத்தகுதி வகுப்புகளையும் 1978-79 கல்வியாண்
டில் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) புதிய மருத்துவக் கல்லூரிகளை இந்திய மருத்துவ மன்றம் ஏற்பளித்தல்.

இம் மாநிலத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மட்டும் 1977 ஆம் ஆண்டு வரை ஏற்பளிக்கப்படாமல் இருந்தது. 1977-ல் மருத்துவ மன்றத்தின் ஆய்வுக்கமிஷன் இம்மருத்துவக் கல்லூரியை பார்வையிட்டு இதனை ஏற்பளிப்பதற்கான தனது ஒப்புதலைக் குறிப்பிட்டது. புதுடில்லி, இந்திய மருத்துவ மன்றத்திட மிருந்து முறையான ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள்.

1977-78-ல் கீழ்க்கண்ட கட்டிட திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது:—

1. சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவைச் சிகிச்சை, இதய நோய் சிகிச்சை தொகுதிகளில் உள்ள மின் இணைப்பு தொகுதியுடன் இணைப்பதற்காக ரூ. 2,29,300 செலவில் குறைவழுத்த மின் இணைப்புத் தொகுதிக்கு (L. T. Panel Boards) வகை செய்தல்.
2. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ.70,000 செலவில் நீர்த்தொட்டி கட்டுதல்.
3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விலங்குப் பிரிவு கட்டிடம் ஒன்றை ரூ. 77,000 செலவில் கட்டுதல்.
4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் பின்புற சுற்றுப் புற எல்லையில் ரூ. 2,50,000 செலவில் சுற்றுச் சுவர் கட்டுதல்.

1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடப் பணிகளை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது;—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் நோய் நுண் உயிரியல் துறைக்காக புதிய சமூக நல நோய்த்தடுப்பு மருந்துத் தொகுதிக்கு மேல் ரூ. 5.30 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மாடி கட்டுதல்.
2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ரூ. 98,000 செலவில் மத்திய விலங்குப்பிரிவு கட்டிடம் கட்டுதல்.
3. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ரூ. 3.58 இலட்சம் செலவில் விரிவுரைக் கூடங்கள் இரண்டு கட்டுதல்.

(ii) மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்.

(அ) படுக்கைகளின் எண்ணிக்கை.

இம்மாநிலத்தில் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 19 மருத்துவ மனைகள் உள்ளன. இவை, பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியல் ஒன்று III-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அகநோயாளி சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சில மருத்துவ மனைகளில் கூடுதலாக படுக்கைகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு மருத்துவ மனைகளில் 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை IV-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகள் அனைத்திலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 1976-1977-ல் 13,294 ஆக இருந்தது, 1977-78-ல் 13,471 ஆக உயர்ந்தது என்று மேற்சொன்ன இணைப்பிலிருந்து கண்டறியலாம்.

(ஆ) மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்.

விபத்துக்குள்ளான, அவசர சிகிச்சை தேவைப்படுகிற நோயாளிகளுக்கு விரைவாக மருத்துவ வசதி அளிக்கும் பொருட்டு சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையிலும், சென்னை, அரசு பொது மருத்துவமனையிலும் 24 மணி நேரமும் செயல்படும் இயங்கும் விபத்து சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. விபத்துப் பற்றிய செய்தி கிடைத்தவுடன் மருத்துவ அதிகாரி சார்பு மருத்துவ அலுவலருடன் ஏனைய வசதிகள் கொண்ட தம்முடைய "வேனில்" விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக செல்லுவார். விபத்து நடந்த இடத்திலேயே அவசர சிகிச்சை, தேவைப்படுகிற நோயாளிகளுக்குத் தொடங்கப்பெறும். அதன் பிறகு காயமடைந்தவருக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கும், சிகிச்சையைத் தொடர்வதற்கும் அவர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

(இ) மருத்துவ ஆவணத் துறைகள்.

நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் முழு விவரத்துடன் கூடிய நோயாளியின் நோய் பற்றிய துல்லியமான அடங்கல் ஆவணங்களை வைத்து வருவதே மருத்துவ ஆவணங்கள் துறையின் பணியாகும்.

கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத்துறை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது;—

(1) அரசு பொது மருந்துவமனை, சென்னை.

(2) அரசு எர்ஸ்கின் மருந்துவமனை, மதுரை.

(3) குழந்தைகள் நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(4) இராயப்பேட்டை அரசு மருத்துவமனை சென்னை.

(5) மகளிர்-குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(6) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, செங்கல்பட்டு.

(7) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

1976-77 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள அரசு கண் மருத்துவமனையிலும், தஞ்சாவூரில் உள்ள தஞ்சாவூர் மருத் துவக் கல்லூரி மருத்துவமனையிலும் மருத்துவ ஆவணத் துறையை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்துறை, மேற்சொன்ன இரண்டு மருத்துவமனைகளிலும் 1977 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. மருத்துவக் கல் லூரியுடன் இணைந்த ஏனைய மருத்துவமனைகளிலும் படிப் படியாக மருத்துவ ஆவணத்துறையை அமைக்கவும் கருதப் பட்டுள்ளது.

(ஈ) புறநகர் மருத்துவ மனைகள்.

அனுமதியளிக்கப்பட்ட ஐந்து மருத்துவமனைகளில் கே. கே. நகரில் உள்ள மருத்துவமனை தற்போது வசதியுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. ரூபாய் 32.34 இலட்சம் செலவில் தண்டையார்பேட்டையில் மருத்துவமனை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 28.02 இலட்சம் ரூபாய் செலவில் அறிஞர் அண்ணா நகரில் மருத்துவ மனை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பெரம்பூரிலும், தென் சென்னையிலும் கட்டத் திட்டமிடப்பட்ட ஏனைய இரண்டு மருத்துவ மனை களைப் பொறுத்தவரையில் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(உ) கே. கே. நகரில் உள்ள மறுவாழ்வு செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் நிலையங்கள்.

1974 ஆம் ஆண்டில், முட நோயாளிகளுக்கு மறுவாழ்வு செயற்கை உறுப்பு தயாரிப்பு நிலையம் ஒன்றைத் தொடங் கவும், இயற்கை முறை மருத்துவம், தொழில் ஈடுபாட்டு முறை மருத்துவம், செயற்கை முறை உறுப்பு, உடல் உறுப்புகளை இறுக இணைத்துக் கட்டுதல் (Brace fitting) சமூக-வாழ்க்கைத் தொழில் பயிற்சி மூலம் புதுவாழ்வு ஆகிய பணிகளை ரூ. 23 இலட்சம் செலவில் அளிக்கவும் அரசு அனு மதித்தது. கட்டிடம்கட்டும்பணி முடிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்.

(ஊ) கட்டிடப் பணிகள்

(i) பின்வரும் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி 1977-78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. அவை அரசால் எடுத்துக்கொள் ளப்பட்டு. செயல்படத் தொடங்கியுள்ளன:—

(1) சென்னை, அரசுப் பொது மருந்துவமனையில் சீர் வளி வசதிகளுடன் சீரமைத்த பிணவறைத் தொகுதி.

(2) ரூ. 8.20 இலட்சம் செலவில், சென்னை, இராயப் பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு விபத்து சிகிச்சைத் தொகுதி.

(3) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை யிலும் சென்னை, அரசுப் பொது மருத்துவமனையிலும் (ஒவ் வொன்றும் ரூ. 0.90 இலட்சம் செலவில்) தொழு நோய்ச் சிகிச்சைத் தொகுதி.

(4) செங்கல்பட்டில் உள்ள, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருந்துவமனையில் ரூ. 6.00 இலட்சம் செலவில் ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(ii) பின்வரும் கட்டிடங்கள் கட்டும் பணி 1977-78 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் செயல்படு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன;—

(1) இராயப்பேட்டை, அரசு மருத்துவ மனையில் ரூ. 10.02 இலட்சம் செலவில் புற்று நோய் சிகிச்சைத் தொகுதி.

(2) சென்னை, மகளிர்—குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் ரூ. 10.50 இலட்சம் செலவில் 150 படுக்கைகளுடன் கூடிய மருத்துவப் பிரிவு.

(3) சென்னை, குழந்தைகள் நல நிறுவனம் குழந்தை கள் மருத்துவமனையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் தாய்மார் கைவினைப் பணி நிலையம்.

(4) சென்னை, அரசு கண் மருத்துவமனையில் ரூ.2.33
இலட்சம் செலவில், புதிய புற நிலை நோயாளிகள் தொகுதிக்கு
மேல் இரண்டாவது மாடி.

(5) காஞ்சீபுரத்திலுள்ள காரப்பேட்டையில் ரூ. 50.72
இலட்சம் செலவில் 250 படுக்கை வசதிகளுடன் கூடிய புற்று
நோய் மருத்துவமனை.

(6) திருநெல்வேலியிலுள்ள, திருநெல்வேலி மருத்துவக்
கல்லூரி மருத்துவமனையில், ரூ, 6.40 இலட்சம் செலவில்
ஒரு புதிய மகப்பேறு தொகுதி.

(iii) 1977–78 ஆம் ஆண்டில், பின்வரும் கூடுதல் கட்டி
டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன:—

(1) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் ரூ.
15,000 செலவில் புற நோயாளிகள் தொகுதிக்குத் தனி
யறைகள் கட்டுதல்.

(2) சென்னை, அரசுப் பொது மருத்துவமனை நீராவி
சலவைத் தொகுதியைச் சுற்றியுள்ள சுற்றுச் சுவரை ரூ. 15,350
செலவில் உயர்த்துதல்.

(3) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில்,
மாநகராட்சி வழங்கும் குடிநீரைச் சேமித்து வைக்க ரூ. 1.25
இலட்சம் செலவில் ஒரு கூடுதல் நீர்த்தொட்டி கட்டுதல்.

(4) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில்
ரூ. 3.35 இலட்சம் செலவில், அவசர அறுவைச் சிகிச்சைக்
கூடம் கட்டுதல்.

(5) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை
யில் இதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவிற்கு
Coronary Care Unit) அருகே ரூ. 12,000 செலவில் ஓரளவு
திலையான தங்குமிடக் கொட்டகை கட்டுதல்.

(6) சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை
யில், ரூ. 70,000 செலவில் இதய நோய் தீவிர சிகிச்சை
பிரிவிற்கு (Intensive Cardiac Care Unit) கூடுதல் வசதிகள் செய்து
கொடுத்தல்.

(7) சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில்
ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு (ப்ளாஸ்டிக்
சர்ஜரி) ரூ. 33,600 செலவில் சீர்வளிச் சாதனங்கள் இரண்டை
அமைப்பது.

(8) சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில்
?3,000 ரூபாய் செலவில் பிளட் காஸ் அபரடஸ் (Blood
Gas Apparatus) அறையில் சீர்வளிச் சாதனத்தைப்
பொருத்துதல்.

(9) சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்
மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் 72,000 ரூபாய்
செலவில் ஜெனரேட்டர் ஒன்றைப் பொருத்துவது.

(10) சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்
மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவமனையில் சவக் கிடங்கிற்கு
ரூ. 2.70 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுதல். குளிர்
பதன வசதிகள் செய்தல்.

(11) சென்னை, ஓட்டேரி, அரசினர் டி.டி.பி. மருத்துவ
மனையில் 20,000 ரூபாய் செலவில் உலை எண்ணெயைச்
சேமித்து வைப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட கான்
கிரீட் கற்கலவை மூடியுடன் கூடிய தொட்டியைக் கட்டுதல்.

(12) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி-மருத்துவ
மனையில் 25,000 ரூபாய் செலவில் புதிய மகப்பேறு கட்டி
டத்திற்கும் அகநோயாளிகள் கட்டிடத்திற்குமிடையே கட்டிடத்
தொடர்புத் தாழ்வாரம் கட்டுதல்.

(13) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ
மனையில் 51,000 ரூபாய் செலவில் ஆண்-பெண் அறுவைச்
சிகிச்சை வார்டுக்கு சரிவுப் பாதை கட்டுதல்.

(14) தஞ்சாவூர், அரசினர் ராஜா மிராஸ்தார் மருத்
துவ மனையில் 16,500 ரூபாய் செலவில் அறையை மாற்றி
யமைப்பது, முதல் தளத்தில் தாமஸ் கூடத்திலுள்ள அலுவல
கத்திற்கு மின் வசதி வழங்குவது.

(iv) 1978-79 ஆம் ஆண்டில் கட்டக் கருதப்பட்டுள்ள
கட்டிடத் திட்டங்கள்:—

(1) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் உள
வியல் மருத்துவ சிகிச்சை வார்டின் புறநோயாளிகள் பிரிவுக்கு
இடவசதி அளிப்பதற்காக, தற்போதுள்ள புற நோயா
ளிகள் மருத்துவப் பிரிவிற்கு மேல் 92,000 ரூபாய் செலவில்
முதல் மாடி கட்டுதல்.

(2) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் ஒரு
இலட்சம் ரூபாய் செலவில் மத்திய ஸ்டெரிலைசேஷன் பிரிவு
அமைத்தல்.

(3) சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில்
36,000 ரூபாய் செலவில் உள்நாக்கு அறுவை சிகிச்சை வார்
டுக்கு சீர்வளி வசதி செய்தல்.

(4) சென்னை அரசினர் பொது மருத்துவமனையில்
இரத்த சேமிப்பு வங்கியின் இரத்தம் எடுக்கும் அறைக்கு
50,000 ரூபாய் செலவில் சீர்வளி வசதி அமைத்தல்.

(5) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி-மருத்துவ
மனையில் கைக்காய மருத்துவ சிகிச்சைப் பணிக்கூடத்திற்காக,
கைக்காய மருத்துவச் சிகிச்சை வார்டுக்கு மேல் 1.83 இலட்சம்
ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

(6) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை கூடத்தை அமைப்பதற்காக, தற்போதுள்ள அறுவை சிகிச்சை புதிய கட்டிடத்தின் அடித்தளத்திற்கு மேல் கூடுதலாக மாடிகளை 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

(7) கே. கே. நகர் புறநகர் அரசினர் மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.44 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப்பதன வசதிகளுக்கு வகை செய்தல்.

(8) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி-மருத்துவ மனையில் சவக்கிடங்குக்கு 1.65 இலட்சம் ரூபாய் செலவில் குளிர்ப்பதன பொறியை அமைத்தல்.

(9) தஞ்சாவூர், ராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் 3.00 இலட்சம் ரூபாய் செலவில், நாபஸ் கூடத்தைப் பழுது பார்த்தல், மகப்பேறு புதிய பிரிவைப் பழுது பார்த்தல், முடநீக்கியல் மருத்துவ புறநோயாளிகள் பிரிவைக் கட்டுதல்.

(10) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தற்போதுள்ள புறநோயாளிகள் கட்டிடத்திற்கு மேல் 2.00 இலட்சம் ரூபாய் செலவில் முதல் மாடி கட்டுதல்.

(11) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூபாய் 45,000 செலவில் அறுவை சிகிச்சைக் கூடங்கள் இரண்டைக் கட்டுதல்.

(12) தோப்பூர், அரசினர் காச நோய் மருத்துவ மனையில் ரூபாய் 45,000 செலவில் கூடுதலாக சமையல் கட்டிடத்தைக் கட்டுதல்.

(13) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 1.00 இலட்சம் ரூபாய் செலவில் புறநோயாளிகள் கட்டிடத்திலும், மகப்பேறு கட்டிடத்திலும் சரிவுப்பாதை கட்டுதல்.

(14) காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் 2.90 இலட்சம் ரூபாய் செலவில் உயர் அழுத்த மின் சக்தி வழங்களுக்கு வகை செய்தல்.

(எ) (i) 1977-78-ம் ஆண்டு கீழ்க்கண்ட கருவிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது :-

1. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையிலுள்ள ஐ. எம். சி. பிரிவுக்கு ரூபாய் 39,960 செலவில் சிங்கிள் சேனல் பெட் சைடு மானிட்டர்கள் (Single Channel Bedside Monitors) ஹார்ட் ரேட் மீட்டர் அலாரம் (Heart rate Metre Alram) ஆட்டோ ரிக்கரர்டர் (Auto reccrder டிமாண்ட் பேஸ் மேச்சர் (Demand pace maker ஆகிய கருவிகள்.

2. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். ஐசோடோப் துறையிலும் (Isotope Department B. I. R. and cancer) புற்று நோய்ச் சிகிச்சைப்பிரிவிலும் பயன்படுத்துவதற்காக ரூபாய் 45,600 செலவில் துணைக் கருவிகளுடன் கூடிய காமா-ரே ஸ்பெக்டோ மீட்டர் (Gamma-Ray Spectometer.)

3. சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவில் பயன் படுத்துவதற்காக 3,41,754 ரூபாய் செலவில் ரெக்டிலீனியர் ஸ்கேன்னர் (Rectilinear Scanner)

4. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு பேச முடியாத நிலையிலும் படுத்த படுக்கையாகவும் உள்ள நோயாளிகளின் இருதயத்துடிப்புக்களை தெரிந்து கொள்வதற்கு ரூ. 41,150 செலவில் "சிங்கில் சேனல் டெலிமீட்ரி யூனிட்".

5. சென்னை, அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனையின் நோய்க்குறியியல் துறையின் அறிவியல் ஆய்வுக் கூடப் பயனுக்காக ரூபாய் 8,750 செலவில் அல்ட்ரா சோனிக் கிளீனர் (Ultra sonic clearer)

6. சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் நரம்பு சிகிச்சைத் துறைக்கு தலையில் ஏற்படும் காயங்கள் காரணமாக உறை குருதியை நீக்குவதற்காகவும், மண்டை ஓட்டை மூன்று நிமிடங்களுக்குள் திறப்பதற்காகவும் ரூபாய் 41,500 செலவில் நியுமேடிக் கிரானியோடொமி (Pneumatic Craniotomy) கருவி.

7. ரூபாய் 1,25,000 செலவில் சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனைக்கு மூச்சுத் திணறல் அவசர சிகிச்சைக்காகவும் சிறு நீர்ப்பை செயல்படாது நின்றுவிடும் நிலையிலும் உபயோகிக்க உயிர்க்காக்கும் கருவிகள்-பென்னெட் ரெஸ்பிரேட்டர் ஒன்று (One Bennet Respirator) ஹேமோ டைலைசர் ஒன்று (One Haemodialyser)

8. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் புதியஅறுவை சிகிச்சை அறைக்கு ரூபாய் 1,83,687 செலவில் கூடுதலாக சில கருவிகள்.

(ii) 1978-79 அம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ள சாதனங்கள் :

	(ரூபாய்.)
1 சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பி. ஐ. ஆர். புற்றுநோய் (B. I. R and Cancer) சிகிச்சைப் பிரிவிற்கு ஆட்டோ மாடிக் பிலிம் பிராஸஸர் ஒன்று ..	1,73,000

2	சென்னை, இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் இருதய நோய் மும்முர சிகிச்சைப் பிரிவில் மத்திய அமைப்புடன் நோயாளிக்குப் பக்கத்தில் இருதயத்துடிப்பு அளவிட்டுக் கருவி ..	1,58,000
3	ஸ்டான்லி அரசினர் மருத்துவமனையில் கோபால்ட் பிரிவு	2,000 (அடையாள நிதி ஒதுக்கம்.)
4	சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிறுவனம்—மகளிர், குழந்தைகள் அரசு மருத்துவ மனையில் உயிர் வேதியல் நோய்க்குறியியல் துறைக்கு கருவிகள் ..	2,17,000
5.	மதுரை, அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு 200 எம். ஏ. எக்ஸ்-கதிர் ..	1,60,000

(III) மருத்துவமனைகளில் பல்நலக் கம்மியர் மற்றும் பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவிகள்.—திருநெல்வேலி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் பல்நலக் கம்மியர் பதவி ஒன்றும், பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவி ஒன்றும் அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னையில் உள்ள அரசு மனநோய் மருத்துவ மனையிலும், அரசு கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையிலும் ஒரு பல்நலக் கோட்பாடு மருத்துவர் பதவியும் ஏற்படுத்தியுள்ளது.

(IV) வெள்ள நிவாரண நடவடிக்கைகள்.—1977, நவம்பர் திங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத புயல், வெள்ளம் காரணமாக பெருமளவில் சமுதாயத்தில் பலவகை சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகின. பல்வேறு வகைப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மருந்துகள் வாங்குவதற்காக மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளுக்கு ரூ. 21 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

புயல், வெள்ளத்திற்குப் பின்னர் கொள்ளை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பினைக் கருத்திற் கொண்டு தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலியிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் சிவில் மருத்துவர்கள் பொறுப்பில் மருத்துவப் பணியாளர் குழுக்கள் மருத்துவ உதவி அளிப்பதற்காகவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டன. தஞ்சாவூரிலிருந்து இப்பணியாளர் குழுக்கள் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, நாகூர், மன்னார்குடி, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, சீர்காழி போன்ற பல் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டன. மதுரை மருத்துவக் கல்லூரியிலிருந்து அனுப்பப்பட்ட மருத்துவக் குழுக்கள், மதுரை மாநகரம், திண்டுக்கல், வேடசந்தூர் ஆகிய பகுதிகளைக் கவனித்துக்கொண்டன. அதுபோன்றே திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலிருந்து 3 குழுக்கள் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியிலிருந்தும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலிருந்தும் மருத்துவப் பணியாளர் குழுக்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ உதவியை நல்கின.

இந்த மருத்துவ வல்லுநர் குழுக்களைத்தவிர சென்னை மாநகரத்திலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இம் முகாம்களுக்குச் சென்று மருத்துவப் பணிபுரிவதில் உதவினர்.

மருத்துவ உதவிகள் வழங்குதல் கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளைத் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்குப் பல வைட்டமின் சத்து மாத்திரைகளும், 'பி' காம்ப்ளக்ஸ் மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

(V) பயிற்சி (அ) செவிலிப்பணி.—பொது நோய்களுக்கான சிகிச்சையில் செவிலியர் பயிற்சி பெறுவதற்காக ஆறு பயிற்சி நிலையங்கள் உள்ளன. பயிற்சி பெற்ற செவிலியர்கள் அதிகம் தேவைப்படுவதை நிறைவு செய்யும் பொருட்டு, செவிலி பயிற்சி வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கையை 1977-78 முதல் அரசு 200லிருந்து 250ஆக உயர்த்தியுள்ளது. செவிலிப் பயிற்சிப் பணிக்கான சான்றிதழ் 1977 ஆம் ஆண்டில் 'செவிலிப் பணியில் பட்டயம்' என்று மாற்றி பெயரிடப்பட்டது.

(ஆ) துணைச் செவிலி மகப்பேறு துணைப்பணி.—திருச்சிராப்பள்ளி அரசினர் தலைமையிட மருத்துவமனையில் பயிற்சி உதவித்தொகை அளிக்கப்படாத இடங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 9 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேலூர், திண்டுக்கல், சேலம் ஆகிய மூன்று பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 5 இடங்கள் வீதம் 15 இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(அ) மருத்துவ ஆராய்ச்சி.—இம்மாநிலத்திலுள்ள, மருத்துவ நிலையங்கள் அனைத்திலும் எல்லா நிலைகளிலும், ஆராய்ச்சிப் பணிகளுக்காக வசதிகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

ஆராய்ச்சிக்கு நிதியுதவி வழங்கும் முக்கிய அமைப்புகள் வருமாறு:—

1. மாநில அரசு.
2. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் போன்ற தேசிய அமைப்புகள்.
3. உலகச் சுகாதார நிறுவனம், யுனிசெப் நிறுவனம் போன்ற உலக நாடுகள் அமைப்புகள்.

(ஆ) தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு.—1944-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு, தமிழ்நாட்டில் மருத்துவம் சார்ந்த அறிவியலில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்கமளிக்கிறது.

ஆராய்ச்சிப் பணிக்கு மானியம் கேட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலிப்பதோடு தகுதியுடைய திட்டங்களுக்கு உதவி நல்குகிறது. தற்போது ஆண்டுதோறும் இக்குழுவிடம் மொத்த மானியமாக ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(VII) கிங் நிறுவனம், கிண்டி.—கிங் நிறுவனம், கிண்டி 1899-ல் தொடங்கப்பட்டு, தமிழ்நாடு அரசால் பராமரிக்கப்படுகிறது. இது பல நாடுகளிடையே பிரசித்திப் பெற்ற விலங்கின் குருதி நிணநீர் அம்மைப்பால் ஆகியவற்றைத் தயாரித்து, பெரும் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடமாக வளர்ச்சியடைந்துள்ளது. இது கிழக்கு நாடுகளில் போதனை நிலையமாகவும் ஆராய்ச்சி நிலையமாகவும் விளங்குகிறது.

இந்த கிங் நிறுவனம் பொதுவாக நோயின் தன்மை கண்டறியும் ஆய்வுக் கூடமாகவும் விளங்குகிறது. இது உறைய வைத்து உலரச் செய்த அம்மைப்பால், காலரா, டைபாயிட் ஆட்டோ-க்யுரேட்டிவ் அம்மைப்பால், இசிவு நோய்த் தடுப்பு மருந்து, விலங்குகளின் குருதி நிணநீர் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான நிலையமாகும். இது இரத்தத் தொகுதிக்கேற்ற நிணநீர் தயாரித்தல், பிளாஸ்மாவை பதப்படுத்துதல், மாநிலத்தில் உள்ள இரத்த சேமிப்பிடங்களை நிர்வகித்தல் ஆகியவற்றிற்கான நிலையமாகும். இது நோய்க் கிருமிகளில்லாத உப்பு, ஏனைய பாரன்டெரல் (Parenteral) கரைசல் ஆகியவற்றைத் தயாரிக்கிறது. இது, உயிரியல் சார்ந்தக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடமாக விளங்குகிறது. இது ஆய்வுக்கூட தொழில் நுட்பவியலுக்கான பயிற்சி நிலையமாகும். இது பாக்டீரியா என்னும் கிருமிகள் பற்றிய ஆராய்ச்சி, மருந்துகள், பகுப்பாய்வு, பொதுச் சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த பாடங்கள் ஆகியவற்றில் பட்ட மேற்படிப்புப் பயிற்சி ஆராய்ச்சி நிலையமாகும்,

தொத்து நோய் பற்றிய ஆய்வு, எங்கும் பரவியுள்ளதும் அசாதாரண கூறுகளுடன் கூடியதுமான நோய்களைப் பற்றி விரிவான கள ஆராய்ச்சி ஆகியவற்றிற்காக நடமாடும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுகிறது. மக்கள் திரளாகக் கூடும் இடங்களான வர்த்தகப் பொருட்காட்சி, திருவிழாக்கள் ஆகியவற்றிற்கு குழுப்பிரிவு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டு நோய் பரவுவதைத் தடுப்பதிலும், காலரா போன்ற நோய்கள் மக்களிடையே பரவாமல் தடுக்கும் வண்ணம், அவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதிலும் இக்குழு உதவிபுரிகிறது.

(அ) உறைய வைத்து உலர வைக்கும் அம்மைப்பால் பிரிவு.—உறையவைத்து உலர வைக்கும் அம்மைப்பால் தயாரிப்பு 1977 ஆம் ஆண்டு ஜுன் திங்களிலிருந்து நிறுத்தப்பட்டு வெறி நாய்க் கடியின் நச்சு அகற்றுகிற மருந்தை உற்பத்தி செய்வதற்கான தொடக்கப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

(ஆ) மத்திய இரத்த சேமிப்பிடம்.—இந்த நிலையத்தின் மத்திய இரத்த சேமிப்பிடம், ஒருவருக்கு இரத்தம் ஏற்றுதல், நினைவிழந்தவர்களை மீண்டும் நினைவு பெறச் செய்து முனைப்பாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் பணி ஆகியவற்றில் மருத்துவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கிறது. உலர வைத்த பிளாஸ்மா, ஈரக்கசிவுள்ள பிளாஸ்மா, நிணநீர் ஆகியவை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும், தனியார் நிலையங்களுக்கும், இரயில்வே துறைகளுக்கும், இந்தியாவில் ஏனைய சில மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் அனைத்து இரத்த சேமிப்பிடங்களுக்கும் இன்றியமையாத இரத்த சேமிப்பு சாதனங்கள் வழங்கப்படுகின்றன,

(இ) மூன்று நோய் தடுப்பு ஊசி மற்றும் டெடனஸ் டாக்ஸைட்.— குழந்தைகளுக்கு மூன்று நோய் தடுப்பு ஊசி போடுவதற்கு இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்வதற்காக டி. பி. டி., டி. டி., மருந்துகளை உற்பத்தி செய்வது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

(ஈ) வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புப் பணிகள்.— புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களுக்குப்பின்னர் கொள்ளை நோய் எதுவும் தோன்றிப் பரவாவண்ணம் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படக்கூடிய பெரும் தேவையை சரிகட்டும் பொருட்டு, கிண்டியிலுள்ள, ' கிங் ' நிறுவனத்தில் காலரா தடுப்பு ஊசி மருந்து, டைபாய்டு தடுப்பு ஊசி மருந்து ஆகியவற்றின் உற்பத்தி விரைவுபடுத்தப்பட்டது. உடனடியாக தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு காலரா தடுப்பு ஊசி மருந்து இருபத்தோரு இலட்சம் பேருக்கு செலுத்தப்படக் கூடிய அளவிற்கு அனுப்பப்பட்டது.

மீண்டும் ஒரு வாரத்துக்குள் மேலும் 10 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய காலரா தடுப்பு ஊசி மருந்து 'கிங்' நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு விமானத்தின் மூலம் மதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தவிரவும், ஹைதராபாத்திலிருந்து, 2½ இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு காலரா தடுப்பு ஊசி மருந்தும், பம்பாயில் உள்ள 'ஹாப்கின்ஸ்' நிறுவனத்திலிருந்து 14 இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு மருந்தும், கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து 6½ இலட்சம் பேருக்குப் போடக்கூடிய அளவு

மருந்தும் பெறுவதற்கு இந் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்தது. இந்த அளவு மருந்துகளை உரிய காலத்தில் வழங்கியதன் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொள்ளை நோய் எதுவும் தோன்றி பரவாமல் தவிர்க்க முடிந்தது. இந்த குறுகிய காலத்துக்குள் இந் நிறுவனத்திடமிருந்து மட்டும் ரூ. 6 இலட்சம் பெறுமானமுள்ள தடுப்பு ஊசி மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இதுபோல நாட்டின் வேறு பல நிலையங்களிலிருந்து 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தடுப்பு ஊசி மருந்துகள் பெறப்பட்டன.

B. மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை.

I. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரை கீழே விவரித்துள்ளவாறு 90 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகர்கோவில்.	60
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.	30

கீழே உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் கீழ்க்கண்டவாறு படுக்கைகளின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கக் கருதப்பட்டுள்ளது.

மாவட்ட தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்	105
மாவட்ட தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை	100
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி.	30
மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, உதகமண்டலம்.	40

II. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டங்கள்.

1977-78-ல் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(1) சேலம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்காக ரூ. 1.63 இலட்சம் செலவில் புதிய கட்டிடம்.

(2) ஆம்பூர் கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அளித்த நன்கொடை மூலம் வேலூர் அரசினர் பென்ட்லண்ட் மருத்துவமனையில் இதயநோய் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு ரூபாய் 55,000 செலவில் எட்டு படுக்கைகள் கொண்ட வார்டு.

1978-79-ம் ஆண்டுக்கான திட்டம்

காஞ்சிபுரம், தலைமையிட மருத்துவமனையில் ரூ. 50,000 செலவில் கழிவுநீர் அகற்று ஏற்பாட்டிற்கு வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

III. வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் மொத்தம் 5,653 படுக்கைகள் கொண்ட 108 வட்ட மருத்துவமனைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை கீழே காட்டப்பட்டுள்ளவாறு வட்ட மருத்துவமனைகளில் 96 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1.	அரசு மருத்துவமனை,	குடியாத்தம் ..	16
2.	ஷை	ஏற்காடு ..	2
3.	ஷை	கோவில்பட்டி ..	12
4.	ஷை	ஓசூர் ..	12
5.	ஷை	கிருஷ்ணகிரி ..	12
6.	ஷை	ஆத்தூர் ..	12
7.	ஷை	ஸ்ரீவில்லிப்புத்தூர் ..	12
8.	ஷை	முதுகுளத்தூர் ..	6
9.	ஷை	கரூர் ..	12
		மொத்தம் ..	96

கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மேலும் 122 படுக்கைகளைச் சேர்க்க கருதப்பட்டுள்ளது :—

1.	அரசு மருத்துவமனை,	குளித்தலை ..	16
2.	ஷை	திருவள்ளூர் ..	12
3.	ஷை	சிதம்பரம் ..	4
4.	ஷை	விழுப்புரம் ..	6
5.	ஷை	சங்கரி ..	24

6.	அரசு மருத்துவமனை,	கூடலூர் ..	40
7.	டிை	ஒரத்தநாடு ..	8
8.	டிை	மணப்பாறை ..	12
		மொத்தம் ..	122

IV. வட்ட மருத்துவமனைகளுக்கான கட்டிட திட்டங்கள்.

1977-78 ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு அனுமதியளித்துள்ளது :—

(i) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 33,000 செலவில் நீர் சேமிப்புத் தொட்டியுடன் மேல்நிலை நீர் தொட்டி கட்டுதல்.

(ii) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையில் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 16,800 செலவில் மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(iii) மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் ரூ. 26,000 செலவில் கழிப்பிடம் கட்டுதல்.

(iv) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரூ. 14,800 செலவில் கூடுதல் நச்சுத்தடை மலத் தொட்டி கட்டுதல்.

(v) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் ரூ. 18,000 செலவில் சமையல் அறை ஒன்று கட்டுதல்.

(vi) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை கட்டுதல்.

(vii) சேலம் மாவட்டம், இராசிபுரம் மருத்துவமனையில் ரூ. 70,000 செலவில் நவீன சமையல் அறை கட்டுதல்.

(viii) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி அரசு மருத்துவமனையில் ரூ. 60,000 செலவில் எக்ஸ்-ரே தொகுதி ஒன்று கட்டுதல்.

(ix) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவமனையில் ரூ. 95,000 செலவில் பிண அறுவைக் கொட்டகை கட்டுதல்.

1978–79-ஆம் ஆண்டுக்கான திட்டம்.

1978-79-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது.

1. மதுராந்தகம், நாங்குநேரி, சீர்காழி, விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மொத்தம் ரூ. 2.80 இலட்சம் செலவில் அறுவை சிகிச்சை கூடங்கள் கட்டுதல்.

2. தர்மபுரி மாவட்டம், தென்கனிக்கோட்டையில் ரூ. 3.75 இலட்சம் செலவில் புதிய அரசு மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

V. வட்டத் தலைமையிடங்களில் அல்லாத மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளும், 5 காசநோய் நலம் பேண் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,724 படுக்கைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் வரை கீழே காட்டியுள்ளவாறு 54 படுக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன :—

1.	அரசு மருத்துவமனை, காங்கேயம்	..	10
2.	அரசு மருத்துவமனை, *காட்டுமன்னார்கோயில்	..	8
3.	அரசு மருத்துவமனை, மண்டபம் கேம்ப்	..	20
4.	அரசு மருத்துவமனை, இராமேஸ்வரம்	..	16
	மொத்தம்	..	54

* தற்போதுள்ள அரசு மருந்தகம், மருத்துவமனையாக மாற்றப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழியில் 4 படுக்கைகளுடன் கூடிய அரசு மகப்பேறு மருத்துவமனை 1978 ஜனவரியில் திறக்கப்பட்டது.

பின்வரும் மருத்துவமனைகளில் 92 கூடுதல் படுக்கைகள் சேர்க்கப்படுகின்றன :—

1.	அரசு மருத்துவமனை, முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.	8
2.	அரசு மருத்துவமனை, உடையார் பாளையம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	6
3.	அரசு மருத்துவமனை, கம்பம், மதுரை மாவட்டம்	6
4.	அரசு மருத்துவமனை, கொடுமுடி, கோயம்புத்தூர் மாவட்டம்.	20
5.	அரசு மருத்துவமனை, ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்	8
6.	அரசு மருத்துவமனை, சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை மாவட்டம்	24
7.	அரசு மருத்துவமனை, செய்யூர், செங்கல்பட்டு மாவட்டம்.	20
	மொத்தம் ..	92

[1978 மார்ச் 28

1978-79 ஆம் ஆண்டிற்கான திட்டம்.

1978-79 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. சேலம் மாவட்டம், மல்லூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 27,000 செலவில் 8 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

2. சேலம் மாவட்டம், இடப்பாடியில் உள்ள மருந்தகத்தை ரூ. 45,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

3. மதுரை மாவட்டம், சாப்தூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 26,000 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

4. கன்னியாகுமரி மாவட்டம், கொளச்சல் அரசு மருத்துவமனையில், 10 படுக்கைகளுடன் கூடிய மகப்பேறு மற்றும் அறுவைச் சிகிச்சைக் கூடமும் மருத்துவ அதிகாரி குடியிருப்பும் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டுதல்.

5. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ. 60,000 செலவில் 15 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு கட்டுதல்.

VI. அரசு மருந்தகங்களுக்கு மேம்பாடுகள்.

1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதியில் 157 அரசு மருந்தகங்களில் 236 படுக்கைகள் உள்ளன.

1977-78ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூரில் புதிதாகக் கட்டப்பட்ட மருந்தகம், தேவையான பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கியது.

1978-79-ம் ஆண்டிற்கான திட்டங்கள்.

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் அளிப்பதற்காக 1978-79ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் புதிய மருந்தகங்களைத் திறக்க அரசு கருதியுள்ளது:—

1. பெரியபட்டினம், இராமநாதபுரம் மாவட்டம்.
2. வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்.
3. உச்சிநத்தம், இராமநாதபுரம் மாவட்டம்.
4. கோனாப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. மேற்பனைக்காடு, புதுக்கோட்டை மாவட்டம்.
6. அனுக்கூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
7. கரடிக்குப்பம், வடஆற்காடு மாவட்டம்.

1978 மார்ச் 28]

1978-79ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூர் அரசு மருந்தகத்தில் ரூ. 70,000 செலவில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல்.

(2) பின்வரும் அரசு மருந்தகங்களில் ஆறு படுக்கைகள் கொண்ட பகுதி, மகப்பேறுக்கான பிரசவ மற்றும் அறுவை அரங்கம், ஒரு சிறிய சமையற்கூடம் ரூ. 6.00 இலட்சம் மொத்தச் செலவில் புதியகட்டிடங்கள் கட்டுதல்.

1. அரசு மருந்தகம், பள்ளிகொண்டா, வடஆற்காடு மாவட்டம்.

2. அரசு மருந்தகம், பொங்கலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. அரசு மருந்தகம், ஆர். வெள்ளவேடு, மதுரை மாவட்டம்.

4. அரசு மருந்தகம், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

5. அரசு மருந்தகம், தோகைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6. அரசு மருந்தகம், இராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

VII. எக்ஸ் கதிர் மற்றும் மருத்துவக் கருவிகள்.

கீழ்க்காணும் அரசினர் மருத்துவ நிலையங்கள் பலவற்றிற்கு கருவிகளை வாங்க 1977-78ஆம் ஆண்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

1. தருமபுரி, அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30-எம்.ஏ. இயல் எக்ஸ் கதிர் சாதனம்.

2. ஹரூர், அரசினர் மருத்துவமனைக்கு ரூ. 25,000 செலவில் ஒரு 30 எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம் மேலும் ரேடியோகிராபர் பதவி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. உடுமலைப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு 100 எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

4. கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, சேலம் ஊர்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் பத்தாயிரம் செலவில் ஒரு பல் மருத்துவப் பெரும் பிரிவு வீதம் நான்கு பல் மருத்துவப் பிரிவுகள்.

5. கீழ்க்காணும் அரசினர் மருத்துவமனை ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 செலவில் ஒரு சிறிய பல் மருத்துவப் பிரிவு:—

(1) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர், வடஆற்காடு மாவட்டம்.

(2) அரசினர் மருத்துவமனை, திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

(3) அரசினர் மருத்துவமனை, குன்னூர், நீலகிரி மாவட்டம்.

(4) அரசினர் மருத்துவமனை, பத்மநாபபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.

(5) அரசினர் மருத்துவமனை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(6) அரசினர் மருத்துவமனை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

(7) அரசினர் மருத்துவமனை, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.

(8) அரசினர் மருத்துவமனை, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

(9) அரசினர் மருத்துவமனை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.

(10) அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வடஆற்காடு மாவட்டம்.

(11) அரசினர் மருத்துவமனை, கடையநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.

(12) அரசினர் மருத்துவமனை, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

1978-79-ம் ஆண்டிற்கான திட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கு, 1,05,000 ரூபாய் செலவில் 100 எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவு சாதனம் வாங்குதலும், ரேடியோகிராபர் பதவியை ஏற்படுத்துதலும்.

VIII. தனித்துறைகளை ஏற்படுத்துவது

(1) இரத்தச்சேமிப்பு வங்கி—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவ நிலையங்களில் தற்போது 37 இரத்த சேமிப்பு வங்கிகள் இயங்கி வருகின்றன. கீழ்காணும் மருத்துவமனைகளில் 1977-78-ம் ஆண்டில் 3 இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்க்காணும் இரண்டு மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டில் 2 இரத்தசேமிப்பு வங்கிகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(2) பல் மருத்துவப் பிரிவு—

மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத கீழ்காணும் மூன்று மருத்துவ மனைகளில் பல் மருத்துவப் பிரிவுகளை, 1977-78ம் ஆண்டில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

1. அரசினர் மருத்துவமனை, வாலாஜாபேட்டை, வட ஆற்காடு மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

கீழ்காணும் மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டு ஐந்து பல் மருத்துவப் பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மருத்துவமனை, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

2. அரசினர் மருத்துவமனை, திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

4. அரசினர் மருத்துவமனை, ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

5. அரசினர் மருத்துவமனை, பரமகுடி, இராமநாதபுரம் மாவட்டம்.

பல் மருத்துவத்தில் பயிற்சி பெற்ற பணியாளர்களைப் பெறுவதற்கும், பல்வேறு மருத்துவப்பிரிவுகளை நிர்வகிப்பதற்கும், கீழ்க்காணும் மருத்துவ மனைகளில் பல் நலக் கம்மியர், பல் நல கோட்பாடு மருத்துவர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

தொடர் எண்ணும், மருத்துவமனையின் பெயரும்.	பல் நல கோட்பாடு மருத்துவர்.	பல் நலக் கம்மியர்.
(1)	(2)	(3)
1 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, வேலூர், வட ஆற்காடு மாவட்டம்	1	..
2 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, திருச்சிராப்பள்ளி ..	1	..
3 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, சேலம், சேலம் மாவட்டம்	1	..
4 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, கடலூர், தென்னார்காடு மாவட்டம்	1	..
5 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டம்	1	..
6 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, திண்டுக்கல், மதுரை மாவட்டம்	..	1
7 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தூத்துக்குடி, திருநெல் வேலி மாவட்டம்	..	1
8 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்	..	1
9 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, தருமபுரி..	..	1
10 அரசினர் தலைமையிட மருத்துவ மனை, ஊட்டி, நீலகிரி மாவட்டம்	...	1

(3) முடநீக்கியல் மருத்துவப் பிரிவு—

தற்போது ஒன்பது மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் முடநீக்கியல் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978-79-ம் ஆண்டில் உதகமண்டலம், தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள்—

பதினொரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1978-79-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(5) பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள்:—

தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் பால்வினைநோய் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதல்லாமல் நான்கு வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கிவருகின்றன.

(6) கண் மருத்துவம்—

பதினொரு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் 2 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் கண் மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1978-79-ம் ஆண்டில் புதுக் கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கண் மருத்துவப் பிரிவு ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(7) மனநோய் மருத்துவம்—

பதினான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் 5 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மட்டுமே மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

கீழ்க்காணும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் 1978-79-ம் ஆண்டில் மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.

2. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

3. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சிபுரம்.

4. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.

5. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.

6. அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.

(8) தொழுநோய் மருத்துவம்

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் தற்போது தொழுநோய் மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

IX. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் சாதனைகள் பின் வருமாறு :—

1. கூடலூர் பஜாரில் மருந்தகம் ஒன்று.

2. மசினகுடியில் ஒரு மருந்தகம்.

3. களஹட்டியில் ஒரு மருந்தகம்.

4. மஞ்சூரில் ஒரு மருந்தகம்.

5. தொலைவில் உள்ள இடங்களில் மருத்துவ உதவிகளை அளிக்க உதகமண்டலத்தில் மற்றொரு இயங்கும் மருத்துவப்பிரிவு.

6. கூடலூரில் ஆம்புலன்ஸ் ஊர்தி வசதி.

உதகமண்டலம் அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 40 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கூடலூரில் 40 படுக்கை வசதிகளுடன் கூடிய வார்டு கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

X. பழங்குடி மக்கள் நலத் திட்டம்—பழங்குடி மக்கள் நலத் திட்டத்தின்கீழ் கருமான்துறை (சேலம் மாவட்டம்), செங்காட்டுப்பட்டி (பச்சைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்), ஜவ்வாது மலை (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்கள் ஒவ்வொன்றில் ஒன்றாக மூன்று மருந்தகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவை, அப்பகுதிகளிலுள்ள பழங்குடியினரின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்கின்றன.

1977-78-ல் இன்னும் மூன்று மருந்தகங்களை சித்தேரி (தருமபுரி மாவட்டம்), புதூர்நாடு (வட ஆற்காடு மாவட்டம்), பச்சைமலை (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் தொடங்க அரசு அனுமதித்துள்ளது. புதுக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும் வரையில் இந்த மருந்தகங்கள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படும்.

XI. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.— 1968-69-லிருந்து 1976-77 வரையில் 1[illegible] ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன. 1977-78-ம் ஆண்டில் v, vi நிலைத் தரத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது.

XII. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ நிவாரணப் பணி.—புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரையோர மாவட்டங்களிலும், வெள்ளம் ஏற்பட்ட பல மாவட்டங்களிலும், கிராம மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, மருத்துவமனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் போதுமான அளவு இன்றியமையாத மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த மருத்துவ மனைகள் அனைத்திலுமுள்ள மருத்துவர்களும், துணை மருத்துவப் பணியாளர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துன்புற்ற மக்களுக்குச் சிகிச்சை அளிக்க விரைந்து அனுப்பப்பட்டனர்.

XIII தொற்று நோய்கள்—(அ) தமிழ்நாட்டில் தொழுநோய்க்கட்டுப்பாடு.—தமிழ்நாட்டில் தொழுநோய் மிக அதிகமான அளவில் பரவியுள்ளது. ஆயிரத்தில் 10 முதல் 40 பேரிடம் இந்நோய் காணப்படுகிறது. தொழுநோய்க்கு ஆளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதே தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவப் பணியாளர்கள் இடம் இடமாக ஊர்திகளில் சென்று, கூடுமான அளவுக்கு நோயாளிகளின் வீடுகளுக்கருகிலேயே சிகிச்சை அளிக்கின்றனர். இதனால், நோயாளிகள் தங்களது ஊதியத்தை இழக்காமலேயே முறையாகச் சிகிச்சையைத் தொடர்ந்து பெற முடிகிறது. வேலை தேடியும், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காகவும் கிராமப் பகுதிகளிலிருந்து நகர்ப்புறப் பகுதிகளுக்கு தொழுநோயாளிகள் செல்கின்றனர். இதனால், முக்கியமான நகர்ப்புற பகுதிகள் அனைத்திலும் நகர்ப்புற தொழுநோய்ச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை அளிக்கப்படுகையில் நோய்க்காக இடையில் ஏற்படும் தொற்று நோய்கள், எதிர் விளைவு அல்லது வெப்பத்தால் ஏற்படும் புண் போன்ற சிக்கல் விளையக்கூடிய நோயாளிக்கு மருத்துவ உதவி அளிப்பதற்கான வசதியைச் செய்ய, 20 நோயாளிகளுக்கு தற்காலிக சிகிச்சை அளிக்கக்கூடிய வார்டுகளைக் கட்டுவதன் மூலம் எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 வார்டுகளுக்கு இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் [illegible]0 வார்டுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 3 வார்டுகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. எஞ்சிய வார்டுகள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

தொழு நோய்க்கு ஆளானதாக மதிப்பிடப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 7.45 லட்சம்; அவர்களில் நாளதுவரை 5.72 லட்சம் பேருக்குத் தொழு நோய் பற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 4,55,065 பேர்கள் மருத்துவச் சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டில், பள்ளி செல்லும் மாணவர்களிடையே தொழு நோய் பற்றியுள்ளவர்களைக் கண்டறிய சுகாதார ஆய்வாளர்களின் உதவியோடு பள்ளி மாணவர்கள் மருத்துவ பரிசோதனைத் திட்டத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தச் சுகாதார ஆய்வாளர்களுக்குரிய பயிற்சித் திட்டங்கள் முடிவடைந்துள்ளன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு பிரிவும் செய்து முடித்த பணிகளின் அளவையும் தரத்தையும் மதிப்பிடுவதற்காக கண்காணிப்பு மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றைத் துறைக்குள்ளேயே அமைக்கவும் கருதப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் குறிப்பிடப்பட்டது போல தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்கான ஆர்வத்தை மருத்துவர்களிடம் தூண்டுவதற்காக மருத்துவர்கள் 25 பேர் களப்பணிப் பயிற்சிக்காக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இப்பயிற்சி தொடங்கி நடந்து வருகிறது.

(ஆ) காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்—நோயை கண்டறிதலும் சிகிச்சையளித்தலும்.—மருத்துவ மனைகளில் புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவிற்கு வரும் நோயாளிகள் தங்களுக்கு இந்நோய் கண்டுள்ளதற்கான அறிகுறிகள் உள்ளன எனத் தெரிவிப்பதன் பேரில் இந் நோய் குறித்த விவரங்கள் கண்டறியப்படுகின்றன. மருத்துவ மனையில் சேர்க்கப்படுகின்ற நோயாளிகளுக்கு மூன்று வார காலத்துக்கு மேல் இருமல் தொடர்ந்து இருந்திருந்து எடைக் குறைவோடு விட்டு விட்டுக் காய்ச்சலும் வந்திருந்தால் அவர்களின் சளி சோதனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. சளி சோதனையில் நோய்குறி இல்லை என அறியப்படும் நோயாளிகள் எக்ஸ்-கதிர் படமெடுக்க அனுப்பி வைக்கப்படுகின்றனர். சளியிலும் எக்ஸ்-கதிர்ப் படத்திலும் நோய்க் குறிகள் இருப்பதாகத் தெரிய வந்த நோயாளிகளுக்கு அவர்கள் இல்லங்களின் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நோய்க் கண்டவர்களுடன் தொடர்பு கொள்வோருக்கும் இந்நோய் தொற்றலாம் என்று கருதி அவர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்படுகிறது.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காசநோய் மருத்துவ நிலையம் உள்ளது. மாவட்டக் காச நோய் நலம்பேணும் அதிகாரி இதன் தலைவராவார். மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள், அரசு மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டப் பணிகளை இவர் ஒருங்

கிணைப்பதோடு, காசநோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கும் பணியையும் கவனிக்கிறார். தமிழ்நாட்டில் 937 மருத்துவ நிறுவனங்கள் மூலமாகக் காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையிலும், தமிழ்நாட்டில் 7.7 லட்சம் நோயாளிகள் காச நோய்ச் சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

உமிழும்போது சளியுடன் இரத்தமும் வருவதுபோன்ற Haemoptysis சிக்கலான நிலைமையில் உள்ள நோய் முற்றிய நோயாளிகளும், முதல் நிலை மருந்துகள் கொடுத்தும் நோய்க்கட்டுப்படாத நோயாளிகளும், காசநோய் நலம் பேணும் நிலையங்களிலும் காசநோய் மருத்துவமனைகளிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். இவ்வாறு, நோயாளிகள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்ற மருத்துவ நிலையங்களில் மொத்தம் 3,534 படுக்கைகள் உள்ளன. 1977-78-ம் ஆண்டில், ஈரோட்டிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும், உசிலம்பட்டியில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் 15 படுக்கைகள் கொண்ட காச நோய்த் தனி வார்டு ஒன்றும் நிறுவுவதற்கு அரசு அனுமதி வழங்கியது. மாவட்ட காச நோய் மருத்துவ நிலையங்கள் மட்டுமின்றி மார்புநோய் மருத்துவப் பிரிவுகள் (Chest clinics T. B.) எனப்படுகின்ற காச நோயைக் கண்டறியும் சிறப்பு நிலையங்கள் பூவிருந்தவல்லி, விழுப்புரம், அருப்புக்கோட்டை, திருவண்ணாமலை, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஜி. ஊசி தொடக்க நிலையில் காச நோய் வராமல் தடுத்துக் காக்கின்றது. இருபது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்படுகிறது. பி.சி.ஜி. ஊசி போடும் 23 குழுக்கள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. இந்தக் குழுக்கள் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று தடுப்பு ஊசிகளைப் போடுகின்றன. இதுவரை 1;19 இலட்சம் பேருக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது.

காச நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் பணி புரிவதற்காக ஊக்கத்துடன் ஈடுபாடு கொள்ள பயிற்சி மருத்துவர்கள் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

1978-79-ம் ஆண்டில், கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகியோரிடையே காச நோய் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு ஆய்வுகள் நடத்தக் கருதப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 28

XIV தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி—தனிப்பட்ட மன்றங்கள், கூட்டமைப்புகள், சங்கங்கள், சமயப்பணி (மிஷினரி) மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவ நிறுவனங்களில் தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகின்றது. இம் மாநிலத்தில் வழங்கப்படுகின்ற பலவகைப்பட்ட மானியங்கள் பின்வருமாறு :—

(i) தனியார் தொழுநோய் மருததுவ நிறுவனங்களுக்கு தலைவீத மானியங்கள் (Capitation grants) அளித்தல்—தொழுநோயாளி ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும் தொழு நோயாளியைச் சார்ந்துள்ள உடல் நலமுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 12 வீதமும் தனியார் தொழுநோய் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மயுடைய தொழுநோயுற்ற நோயாளிகளுக்கும், தொழுநோய் குணமாகி உறுப்புகள் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவை சிகிச்சை பெற்றுவரும் தொழு நோயாளிகளுக்கும், சூட்டினால் ஏற்படக் கூடிய புண்ணுக்கு சிகிச்சை பெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள தொழுநோய்த் தோற்றமுடைய ஆனால் தொழு நோய்ச் சார்பில்லாத நோயாளிகளுக்கும் (Non-Lepromatous patients) சிகிச்சையளிக்கும் தனித் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படத்தக்கதாகும். தமிழ் நாடு அரசிடமிருந்து தலைவீத மானியங்கள் பெறும் தொழு நோய் மருத்துவத் தொண்டு நிறுவனங்களின் தற்போதைய எண்ணிக்கை பதினொன்று ஆகும். சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சம் தலைவீத மானியமாக இவற்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 1976-77-ம் ஆண்டில் ரூ. 4.78 இலட்சம் வழங்கப்பட்டது.

(ii) தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு பேணுதல் மானியங்கள்.—மருத்துவப் பணிகள்-குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிவுரையின் பேரில் அரசு இம்மானியங்களுக்கு அனுமதி வழங்குகிறது. தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை அளிப்பதன் பேரிலும், இம்மானியங்கள் வழங்கப்படுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகள் நிறைவு செய்துள்ளதாக ஆய்வு அதிகாரிகள் அறிவித்த பின்னருமே இந்த மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து பேணுதல் மானியங்களை 38 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1976-77-ம் ஆண்டில் மானிய உதவியாக ரூ. 21.88 இலட்சம் வழங்கப்பட்டது.

(iii) கட்டிட மானியங்கள்.—மருத்துவப் பணிகளுக்கென கட்டிடங்கள் கட்டுவதற்காக, ஒவ்வொரு கட்டிடப் பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டுச் செலவில் பாதியளவுக்கு தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன

ஒவ்வொரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில் வழங்கப்படுகின்ற இம்மானியத் தொகை, அரசு வரையறுத்த குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இருக்கும்.

1976—77-ம் ஆண்டில் கீழ்க்காணும் நிறுவனங்களுக்குக் கட்டிட மானியங்கள் வழங்கப் பெற்றன :—

		ரூ. பை.
1	மகளிர் குழந்தைகளுக்கான ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை கோயம்புத்தூர்	4,90,355.00
2	'வாலண்டரி ஹெல்த் சர்விசஸ்' நிறுவனம். அடையாறு, சென்னை ..	42,995.75
3	குழந்தைகள் ஊனம் நீக்கியல் நிலையம். கோயம்புத்தூர்	1,22,500.00

(iv) கருவிகளுக்கான மானியம்.—1976-77-ம் ஆண்டில், கருவிகளுக்கான மானியம் பெறுவதற்கு தனியார் மருததுவ நிறுவனம் எதுவும் முன் வரவில்லை.

XV அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டம்.—பார்வையிழந்து தவிக்கும் ஏழை மக்களுக்குக் கண் பார்வை அளிக்கும் பொருட்டு, அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைக்கும் திட்டம் 1972-ஜூன் மாதததில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் பொருட்டு ஐந்து கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அதாவது சென்னையில் 2 பிரிவுகளும, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 3 பிரிவுகளுமாக மொத்தம் 5 பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மருத்துவப் பணிகள் குடும்ப நலத்துறை இயக்குநர் இந்த இலவசக் கண் சிகிச்சை முகாம்களுக்கு தலைமைப் பொறுப்பு வகிக்கின்றார். சென்னையிலுள்ள மருத்துவக் கல்வி இயக்குநர், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைச் செய்கிறார். ஒவ்வொரு கண் சிகிச்சை ஊர்திப் பிரிவுக்கும் ஒரு அரசு மருத்துவர் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கு உதவி புரிய மூன்று உதவி மருத்துவர்களும் (கண் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள்), பன்னிரண்டு செவிலியர்களும் பிற மருத்துவப் பணியாளர்களும் உள்ளனர்.

2. வருவாய்-வளர்ச்சி வட்டாரப் பணியாளர்களின் உதவியுடன் பிரிவு மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில், மாவட்ட ஆட்சியர் இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துகின்றனர். தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் மருத்துவத்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

3. இக்கண் சிகிச்சை முகாம்களில், விழிவெண்படல அறுவைச் சிகிச்சைகளும் கண்களில் வரும் சிறிய நோய்களுக்கான சிறு அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. இவையன்றி, கண்விழி விறைப்பு நோய், நோய், மாலைக்கண் நோய் ஆகியவற்றிற்கும் கண் இமை அரிப்பு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

4. இந்த முகாம்களில் விழி வெண்படல அறுவை சிகிச்சை பெறும் ஒவ்வொரு நோயாளிக்கும் உணவு முதலியவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் ரூ. 44-ம் மருந்துகள் முதலியவற்றை வழங்குவதற்காக மருத்துவத் துறை பொறுப்பில் ரூ. 21 ஆக ரூ. 65 செலவு செய்ய அரசு அனுமதி வழங்குகிறது. அரசு இலவசக் கண் சிகிச்சை முகாமில் நடத்தப்படும் ஒவ்வொரு விழிவெண்படல அறுவைச் சிகிச்சைக்கும், 5 புறநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன். இக்கண் சிகிச்சை முகாமில் ஒரு புறநோயாளிக்கு சிகிச்சை அளிக்க ஆகும் செலவிற்காக ஐம்பது பைசாவுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

5. கண் சிகிச்சை முகாம் நிதி 1972-ம் ஆண்டு ஜூன் மாதம் சிறப்பாக துவக்கப்பட்டு, இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிதி, 1976-ம் ஆண்டு சிறப்பு நலத் திட்டங்களுக்கான முதலமைச்சர் நிதியுடன் இணைக்கப்பட்டது.

6. அரசு இலவசக் கண்சிகிச்சை முகாம் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக தற்போதுள்ள திட்டத்தில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(1) கண்சிகிச்சை முகாமிற்கு சிகிச்சைக்காக வரும் நபர்களின் எண்ணிக்கைக்கேற்ப கண் சிகிச்சை முகாமினை ஏழு முதல் பத்து நாட்கள் வரை நடத்துவது;

(2) தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஆண்டு முழுவதும் கண் சிகிச்சை முகாமினை நடத்துவது;

(3) ஒரு கண்சிகிச்சை முகாமில் செய்யப்படும் விழிவெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 300-க்கு மேற்படாமலும், ஒரு நாளைக்கு செய்யப்படும் விழி வெண்படல அறுவை சிகிச்சையின் எண்ணிக்கை 150-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஒரு மருத்துவரால் செய்யப்படும் விழி வெண்படல அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 30-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

(4) விழி வெண்படல அறுவை ... வருக்கும் தையல் போட வேண்டும்.

(5) விழி வெண்படல அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் மதிப்புடைய நோய்த்தடுப்பு களிம்பு மருந்தைக் கொடுத்து அதை எப்படி பயன்படுத்துவது என்ற முறையையும் அவர்களுக்குச் சொல்லி கொடுக்க வேண்டும்.

(6) அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், வரையறுக்கப்பட்ட தேவையான மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்வதற்காக ஆறு வாரங்களுக்குப் பிறகு கண் அறுவை சிகிச்சை மருத்துவரால் பரிசோதிக்கப்படுவர்.

(7) தரமான மூக்குக் கண்ணாடிகளை புகழ் பெற்ற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த முறையில் வாங்கும் பணியை சென்னை கண் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் மேற்கொள்வார். விழி வெண்படல அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளுக்குக் கண்ணாடி வழங்குவதற்காக அவைகளை இவர் பிரிவு மருத்துவ அதிகாரிக்கு அனுப்புவார்.

1972-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை அடைந்துள்ள சாதனையின் விவரம் வருமாறு:—

முகாம்களின் எண்ணிக்கை.	விழிவெண்படல அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை.	மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	சிறு அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்கள்.	புற நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை.	செலவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
					ரூபாய்
451	1,52,960	1,52,960	1,279	10,14,789	1,45,39,048

அரசு இலவசக் கண் சிகிச்சை முகாம் திட்டத்தை 1978-79-ம் ஆண்டிலும் செயல்படுத்த ரூபாய் இருபது இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

XVI. ஹோமியோபதி:

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் இம்மாநிலத்தில் 1972-ம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்று சென்னை மாநகரத்தில் 1975-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளிலிருந்து செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில், ஹோமியோபதி மருத்துவ முறை

யிலான முதல் அரசினர் கல்லூரி மருத்துவமனை இதுவேயாகும். தற்போது இங்கு பல்வேறு வகுப்புகளில் 123 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

1977–78-ம் ஆண்டில், அரசு திண்டுக்கல்லில் மாவட்டத் தலைமையிட மருத்துவ பணையுடன் இணைந்த ஹோமியோபதி மருந்தகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது: அது 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது.

1978–79-ம் ஆண்டிற்கான திட்டம்:

1978–79 ஆம் ஆண்டில் மேலும் ஒரு ஹோமியோபதி மருந்தகத்தைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

XVII. குடும்ப நலத் திட்டம்:

குடும்ப நலத் திட்டம் முன்பு எப்போதும் இருந்ததை விட இன்று தனி முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இந்நாட்டில் மக்கள் தொகை அளவு கடந்து பெருகி வருவதைக் கட்டுப்படுத்த மத்திய அரசும், மாநில அரசும் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றன. பொருளாதாரச் சுதந்திரமும், சமூக மறுமலர்ச்சியும் அடையும் வகையில் முன்னேற்றம் காண விழையும் நமது முயற்சிகளுக்கு இன்றியமையாச் சாதனமாக விளங்கக் கூடியது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதேயாகும் என்று நமது குடியரசுத் தலைவரும், தலைமை யமைச்சரும், மத்திய அரசு மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சரும் தத்தம் அறிக்கைகளில் பெரிதும் வற்புறுத்திக் கூறியுள்ளனர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்திய அரசு தேசிய மக்கள் தொகைக் கொள்கையை உருவாக்கியுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாளில் நடைப்பெற்ற அனைத்து மாநிலங்கள், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளின் மக்கள் நல்வாழ்வு அமைச்சர்கள் மாநாட்டில், மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு குடும்ப நல அமைச்சர் கொள்கை அறிக்கையை வெளியிட்டார். அண்மையில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வு குடும்ப நலக் கூட்டுக் குழுக்கள் மாநாட்டிலும் கூட இக்கொள்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் தற்போதைய பிறப்பு விகிதம் 1,000-க்கு 30 ஆக உள்ளது; இதனை, ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 1,000-க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே இக்கொள்கை அறிக்கையின் உத்தேசமாகும். இக் குறிக்கோளை எய்துவதற்காக திருமண வயதை உயர்த்துதல், பெண் கல்வி மேம்பாட்டின் மூலம் மக்கள் தொகையில் படித்த பெண்களின் விகிதத்தை உயர்த்துதல் போன்ற சில அடிப்படை நடவடிக்கைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. இக்கொள்கை அறிவிப்பின் இன்றியமையாப் பகுதியாக விளங்குவது, மக்களிடையே, தொ[illegible]

லாளர் தலைவர்கள், தொழிலதிபர்கள், தனித் தொண்டு நிறுவனங்கள் போன்ற பல்வேறு பிரிவினரையும் ஈடுபடுத்துவதன் மூலம் குடும்ப நலத் திட்டத்தை மும்முரப்படுத்துவதாகும்.

தமிழ்நாட்டில், முந்திய ஆண்டுகளில், குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று மக்களைக் கட்டாயப் படுத்தாமலும், நிர்பந்தப்படுத்தாமலும் நடந்தது போல இந்த ஆண்டிலும் எவ்வித நிர்பந்தமோ, கட்டாயமோ இன்றி குடும்ப நலத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணியாளர்களாக உள்ள பெண்களுக்கு முதல் மூன்று குழந்தைகட்கு மட்டுமே சம்பளத்துடன் பேறுகால விடுப்பு வழங்கப்படும் எனக் கட்டுப்படுத்தியது போல, முன்னர் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊக்க மறுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு ரத்து செய்துள்ளது.

குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அவரவர் விருப்பத்தின்படி நடக்க உரிமையளிக்கின்ற அணுகுமுறை (Cafeteria approach) பின்பற்றப்படுகிறது. தம்பதிகள் இத்திட்டத்தைப் பின்பற்றத் தாம் விரும்பும் முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மக்கள் தாமாகவே திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் நாடகம், கதாகாலட்சேபம், இசையரங்குகள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டுப்புற மக்களைக் கவருகின்ற நிகழ்ச்சிகள் வாயிலாக குடும்ப நலத்திட்டம் பற்றி மக்கட்கு எடுத்துரைக்கப் படுகிறது; பிரச்சாரம் செய்யப்படுகிறது. சிறுபான்மையாயுள்ள பிற சமயத்தவரும் எவ்வித நிபந்தனையுமின்றி குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பது தான் தமிழ்நாட்டில் இத் திட்டத்தின் சிறப்பான அம்சமாகும். இவர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையினர் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு தாமாகவே மனம் ஒப்பிக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள முன் வந்துள்ளனர். கிராமப் பகுதிகளில் குடும்பநலத் திட்டத்தின் இன்றியமையாத நோக்கங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்கின்ற முக்கிய நிலையங்களாக, ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாமாக மனம் ஒப்பி வருவோர்க்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்தல், பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்துதல், தாய்-சேய் நலப் பணிகள் ஆகிய பணிகளைச் செய்கின்றன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 10,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் வீதம் துணை நிலையங்கள் உள்ளன. அத்துணை நிலையங்களின் பணிகளை துணைச்செவிலி மகப்பேறு பணியாளர் கவனிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பகுதியில் தாய்-சேய் நலப் பணி, குடும்ப நலப் பணி ஆகியவற்றை கவனிக்கின்றனர்.

நகரப் பகுதிகளில், குடும்பநலப் பணிகளையும் தாய்-சேய் நலப் பணிகளையும் அங்குள்ள நகர்ப்பகுதி குடும்ப நல நிலையங்கள் கவனிக்கின்றன. இவை, அரசாலும் உள்ளாட்சி மன்றங்களாலும் தன்னார் தொண்டு நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

1977-78 ஆம் ஆண்டிற்கான குடும்பநலத் திட்ட உதவி ஏற்பாட்டின்கீழ் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கு உடன்படுபவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ரொக்க உதவித் தொகையும், உணவுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றையும் இந்திய அரசு குறிப்பிட்டுள்ளது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிற ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 100-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 120-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படும் வகையில் இந்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசு கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 115-ம், ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 145-ம் ரொக்க உதவித் தொகை வழங்கப்படுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் ஆண்டுதோறும் குடும்ப நலத் திட்டம் குறித்த சிறப்பு இயக்கங்கள் நடத்தப்படுவது வழக்கம். 1977-78-லும் இதுபோன்ற சிறப்பு இயக்கங்களை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல் மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல்:—

மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளுதல், கருத்தடை வளையம் பொருத்துதல், மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் கீழ்க்காணும் இலக்குகளை 1977-78ஆம் ஆண்டில் எய்தவேண்டுமென இந்திய அரசு வரையறுத்துள்ளது —

	இம்மாநிலத்துக்கு வரையறுக்கப்பட்ட இலக்கு.	எய்திய இலக்கு. (20-2-78 வரை.)
மக்கள் தாமே முன் வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளுதல்.	3,50,000	69,357
கருத்தடை வளையம் பொருத்துதல்.	35,500	18,040
மரபு முறையிலான கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துதல்.	2,21,800	1,00,749

ஊக்க உதவித்தொகைகள் வழங்குதல் முதலியன குறித்த இந்திய அரசின் ஆணை மிகவும் காலதாமதமாகவே வந்து சேர்ந்தபடியால், குடும்ப நலத் திட்டஇயக்கம் 1977 அக்டோபருக்குப் பின்னரே முனைப்பாக நடத்தப்பட முடிந்தது. இந்தச் சூழல்களில் [illegible] தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து

[illegible]

கொள்வது குறித்த இலக்கினை இவ்வாண்டில் எய்தவியலாது. எனினும், இது தேசிய அளவில் உள்ள நிலைமையாகும். இருந்தபோதிலும் இன்றைய நிலவரப்படி, இந்த நிதியாண்டு இறுதிக்குள், மக்கள் தாமே முன்வந்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காகக் குறித்துள்ள இலக்கில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கும் எனத் தெரிகிறது.

தாய்-சேய் நலத் திட்டங்கள்:

இதற்கு முந்திய ஆண்டுகளிலெல்லாம், தாய்-சேய் நலத் திட்டப் பணிகளில், பெரும்பான்மையானவை ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் நடைபெற்று வந்தன. அவற்றை அங்கு பணிபுரிந்துவந்த மருத்துவ அதிகாரிகள், உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் ஆகியோர் கவனித்து வந்தனர். 1977-78 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பெரும் பகுதியான தடுப்பூசி மருந்துகள், மாவட்ட சுகாதார அதிகாரிகள் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, மாவட்டச் சுகாதார அதிகாரிகள் மூலம் வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், இத்திட்டம் செயல்படும் முறை பற்றி சிறிது காலம் தொடர்ந்து கவனித்து வந்த பின்னர், முன்பு இருந்தது போலவே, இத்திட்டங்களுக்குப் பொறுப்பு வகிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அதிகாரியை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது. அவர் மாவட்டக் குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரி ஆவார். எனவே, இத்துறையில் ஏற்கெனவே பணிபுரிந்து வருகின்ற உடல் நலப் பார்வையாளர்கள், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர் தவிர, உடல் நல ஆய்வாளர்கள், அம்மைப் பால் குத்துபவர்கள் போன்ற தகுதி வாய்ந்த பணியாளர்கள் அனைவரையும் பயன்படுத்தி, தாய்-சேய் நலத் திட்டப்பணியை விரிவுபடுத்துவதற்கான சிறப்பு இயக்கங்களை நடத்துமாறு மாவட்ட குடும்ப நல தாய்-சேய் நல அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வகை நலப் பணியின் கீழும் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் நாள் வரை பயன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையினைக் கீழ்க் குறித்த விவர அறிக்கை காட்டும் :—

முத்தடுப்பு ஊசி குத்தப்பட்டவர்கள்:

(தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய், கக்குவான் நோய்—D.P.T.)

பிரைமரி (Primary)	2,82,295
பூஸ்டர் (Booster)	52,006

தொண்டை அடைப்பான், நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி குத்தப் பெற்றவர்கள் (D.T.)

பள்ளிச்சிறுவர்கள் [illegible] ..	5,50,579

நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி (T.T.) [illegible]

[illegible]இருக்கும் பெண்கள் [illegible]	1,7[illegible]446

தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்படும் ரத்த சோகையைத் தடுப்பதற்கான மருந்து.

(இரும்புச் சத்து நிறைந்த மாத்திரைகள்)

தாய்மார்கள்	2,62,944
குழந்தைகள்	2,63,894

வைட்டமின் 'ஏ' குறைவினால் குழந்தைகளுக்குக் கண் குருடாவதைத் தடுப்பதற்கான மருந்து

(வைட்டமின் 'ஏ' திரவம்)

குழந்தைகள் முதலாவது அளவு (Dose)	6,21,636
இரண்டாம் அளவு (Dose) ..	2,53,187

மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சை (Post Partum Programme).

1969-70 ஆம் ஆண்டில், மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் முதல் கட்டத்தில் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவ மனைகள் மூன்று மத்திய அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1971-72 ஆம் ஆண்டில், திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் போது, இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மேலும் 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் (தனித் தொண்டு நிறுவனமாக) வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் ஒரு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கும் நீட்டிக்கப்பட்டது 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து, இது மேலும் 11 தலைமையிட மருத்துவமனைகளுக்கும் (அதாவது புதிதாக அமைக்கப்பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்துக்குரிய தலைமையிட மருத்துதமனை நீங்கலாக மற்றவை) மேலும் ஒரு தனித் தொண்டு நிறுவனத்திற்கும் அதாவது சென்னையிலுள்ள ஆந்திர மகிள சபா விற்கும், நீடிக்கப்பட்டது. தற்போது, மகப்பேற்றுக்குப் பின்னர் செய்யப்படும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை 24 நிறுவனங்கள் செயற்படுத்தி வருகின்றன.

பிரிட்டிஷ் உதவித் திட்டம்;

1976-77-ல் இத்திட்டத்தின் கீழ் 6 வட்ட மருத்துவமனைகளும், 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இருக்கின்ற மகப்பேறு அறையைப் புதுப்பித்து அதனை அறுவை சிகிச்சைக் கூடமாக மாற்றி அமைத்தல் பொருட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 வரை நிதியுதவியளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறுவை சிகிச்சைச் சாதனங்கள் வாங்குவதற்காக அவற்றிற்கு ரூ. 10,000 அளிக்கப்பட்டுள்ளது. வட்ட நிலையிலான ஆறு மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 13,000 செலவில் 6 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைக்கான வார்டு ஒன்றும், சாதனங் களுக்காகவும், படுக்கைகளுக்காகவும், 12,000 ரூபாயும் [illegible]

வழங்கப்பட்டது. இந்த மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடம் கட்டுவதற்காக 50,000 ரூபாயும், அறுவைச் சிகிச்சைக் கருவிகளுக்காக 10,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய வட்ட நிலையிலான ஆறு மருத்துவமனைகளில் 6 படுக்கைகள் கொண்ட வார்டுகளும், அறுவை சிகிச்சை கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்கெனவே இருந்த மகப்பேறு அறையை அறுவை சிகிச்சைக் கூடமாக மாற்றும் பணியும் முடிவடைந்துள்ளது. இந்த மருத்துவ நிலையங்களுக்கான அறுவைச் சிகிச்சை சாதனங்களும் வாங்கப்பட்டுள்ளன. 1977-78-ல் வட்ட நிலையிலான 9 மருத்துவமனைகளிலும், 12 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துக் கொள்வதற்கான வசதிகளை செய்து கொடுக்க இந்திய அரசு அனுமதியளித்துள்ளது. இந்த 12 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், வட்ட நிலையிலான 9 மருத்துவ மனைகளுக்கும் அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டிடங்களும் கூடிய விரைவில் கட்டி முடிக்கப்படும்.

குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம்:

குடும்ப நலத் திட்டம் பற்றிய விளம்பரங்கள், பெரும் பலகைகள், சுவர் சித்திரங்கள், நாடகங்கள், பாடல்கள், வில்லுப்பாட்டு, கருத்தடை சாதனங்களை விளம்பரப்படுத்தும் உலோகத் தகடுகள், பேருந்துகளில் விளம்பரப் பலகைகள் வைத்திருத்தல், திரைப்படங்கள், அகில இந்திய வானொலியில் ஒலி பரப்புதல், செய்தித்தாள்களிலும், வார மாதப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள், பொருட்காட்சிகள் திரைப்படக் கொட்டகைகளில் சிலைடுகள் போட்டுக் காட்டுதல் முதலியவை வாயிலாக குடும்ப நலத் திட்டம் பற்றி விளம்பரப்படுத்தப்படுகின்றன.

மானிய உதவி:

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றிற்கு நகர்ப்பகுதி குடும்ப நல நிலையங்கள், துணைச் செவிலியர் மகப்பேறு பணியாளர் பயிற்சி நிலையங்கள், மகப்பேறுக்குப் பின் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யும் நிலையங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக அரசு மானிய உதவி அளிக்கிறது. இந்த மானியங்கள் இந்திய அரசு நிர்ணயித்துள்ள முறையில் வழங்கப்படுகின்றன. தற்போது 13 தொண்டு நிறுவனங்களும், 19 உள்ளாட்சி மன்றங்களும் இந்த மானிய உதவி பெறுகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு மானிய உதவி அளிக்கப்பட்டது:—

ஆண்டு.	மானியத் தொகை (ரூபாய் லட்சத்தில்).
1974-75	20·31
1975-76	18·42
1976-77	45·94

1978-79 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு:—

1978-79-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 999·45 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் ஏற்படக்கூடிய செலவினங்களுக்காக இந்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் இந்திய அரசின் பங்கு ரூ. 924·30 லட்சமாகும். மீதமுள்ள 75·15 லட்சத்தை தமிழக அரசு ஏற்கும். இருந்த போதிலும், 1978-79 ஆம் ஆண்டிற்கு இந்திய அரசு உதவித் தொகை அளிக்கும் முறையில் மாறுதல் ஏதும் இருந்தால் செலவினங்களில் மாற்றம் செய்ய வேண்டிவரும்.

C. இந்திய மருத்துவத்துறை :

1. கொள்கை—

இந்திய மருத்துவ முறையை, குறிப்பாக தமிழ்நாட்டின் நாட்டு மருத்துவ முறையான சித்த மருத்துவ முறையை ஊக்குவித்து வளர்ப்பதற்கும், ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கான வாய்ப்புகளுக்கு வகை செய்யவும் அரசு கடமைப்பட்டுள்ளது.

2. மருத்துவ நிவாரணம்—

(1) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை சென்னை.

இந்திய முறை மருத்துவத்திற்கென தனியாக ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு 1968 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அது 1970-ல் அரும்பாக்கத்தில் அமைக்கப்பட்டது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்த இந்திய முறை மருத்துவப் பிரிவு அங்கிருந்து மாற்றப்பட்டு, அரும்பாக்கத்தில் கட்டப்பட்ட புதியகட்டடத்தில் அமைக்கப்பட்டது. இந்த மருத்துவ மனைக்கு "அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை" என்று பெயரிடப்பட்டது. இம்மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடன் 14-4-1970 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங் கியது. ஒரே வளாகத்திற்குள் சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளில் புற நிலை நோயாளிகளுக்கும், அக நிலை நோயாளிகளுக் கும் மருத்துவச் சிகிச்சை வசதிகளை நல்கும் சிறப்புத் தன்மையை இந்த மருத்துவமனை கொண்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் புதிதாகக் கட்டப்பட்ட வார்டில் மேலும் 50 படுக்கைகள் 1976-77 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டன.

அரசு பணியாளர்களுக்கு மேற்சொன்ன மூன்று மருத்துவ முறைகளின்கீழ் புற நிலை நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்க இம் மருத்துவ மனையில் தனியாக ஓர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 2—1—1978 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கி யுள்ளது.

சித்த மருத்துவ முறையின்கீழ் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள், சென்னை மாநகரில் பின்வரும் இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்களில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அம்மருந்தகங்களாவன: —

(i) அரசினர் மருந்தகம், தலைமைச் செயலகம்.

(ii) அரசினர் மருந்தகம், சேப்பாக்கம் அலுவலக வளைவு.

(iii) அரசினர் மருந்தகம், சைதாப்பேட்டை.

(iv) அரசினர் மருந்தகம், திருவல்லிக்கேணி.

இந்த மருந்தகங்கள் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையோடு இணைக்கப்பட்டுள்ளன.

(2) பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு இணைந்துள்ள மருத்துவ மனை.

பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியோடு, மருத்துவமனை ஒன்று இணைக்கப் பட்டுள்ளது. இது 108 படுக்கைகள் கொண்டது. இங்கு சித்த மருத்துவ முறையின் கீழ் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த மருத்துவமனையில் மேலும் 100 படுக்கைகளை அமைக்க ரூபாய் 5·95 இலட்சத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு, அது 1977 செப்டம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

ரூபாய் 1·80 இலட்சம் செலவில் 1976 அக்டோபரில் ஒப்பளிக் கப்பட்ட புதிய புற நிலை நோயாளிகள் பகுதி ஒன்று 1977 டிசம்பரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(3) சித்த மருத்துவப் பிரிவுகள்:

14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 49 வட்ட மருத்துவமனைகளிலும் வட்ட நிலையில் அல்லாத பிற மருத்துவ மனைகளிலும் தற்போது 63 சித்த மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இதில் 1977-78-ல் தொடங்கப்பட்ட 4 சித்த மருத்துவப் பிரிவு களும் அடங்கும், அவை கீழ்க்காணும் வட்ட, வட்ட நிலையில் அல்லாத மருத்துவமனைகளில் உள்ளது :—

(i) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

(ii) அரசினர் மருத்துவமனை, மேலூர், மதுரை மாவட்டம்.

(iii) அரசினர் மருத்துவமனை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

(iv) அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவமனை, வலையப்பட்டி, புதுக்கோட்டை மாவட்டம்.

1978-79ஆம் ஆண்டில் மேலும் 10 சித்த மருத்துவப் பிரிவு களைத் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4) இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள்;

இம் மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் 13 அரசினர் மருந்தகங்கள் செயல்படுகின்றன. அவை வருமாறு:—

சென்னை மாநகரம் ..	சித்த மருத்துவ முறை ..	4
மாவட்டங்கள் ..	சித்த மருத்துவ முறை ..	4
மாவட்டங்கள் ..	ஆயுர்வேத மருத்துவமுறை ..	5

(5) முறையான கிராமப்புற மருந்தகங்கள் :

மேற்சொன்னவற்றைத் தவிர, முறையான கிராமப்புற இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள், நகராட்சிகளாலும் ஊராட்சி ஒன்றியங்களாலும் நடத்தப்படுகின்றன. கிராமப்புற மருந்தகங்கள் பரம்பரை நாட்டு வைத்தியர்களால் அல்லது மரபு வழியில் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் பெரும்பாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. முறையான மருந்தகங்கள் இந்திய மருத்துவ பட்டதாரிகளாலும், பட்டயதாரர்களாலும் நடத்தப்படுகின்றன.

1977-78ஆம் ஆண்டில் ஆறு கிராம மருந்தகங்கள் கீழ்க்காணும் கிராமங்களில் தொடங்கப்பட்டன :—

(i) கிராம சித்த மருத்துவ மருந்தகம், டி. புதுப்பாளையம், தென் ஆற்காடு மாவட்டம்.

(i) கிராம சித்த மருத்துவ மருந்தகம், பெர்மந்தூர், தென் ஆற்காடு மாவட்டம்.

(iii) கிராம சித்த மருத்துவ மருந்தகம், கள்ளிப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(v) கிராம சித்த மருத்துவ மருந்தகம், சிற்றூவு, மதுரை மாவட்டம்.

(v) கிராம சித்த மருத்துவ மருந்தகம், போண்டிநாயக்கன்பட்டி, சேலம் மாவட்டம்.

(V) கிராம ஆயுர்வேத மருந்தகம், கீரநத்தம், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. இந்திய மருத்துவமுறை மருந்துக் கூடங்கள் :

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையுள் மருந்துக் கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது மூன்று இந்திய மருத்துவ முறைகளிலும் சிகிச்சை அளிக்கும் 150 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையின் தேவைகளையும், சென்னை மாநகரிலுள்ள சித்த மருந்தகங்களின் தேவைகளையும் நிறைவு செய்துவருகிறது. இந்த மருந்துக் கூடத்தில் உற்பத்தியாகும் மருந்துகளின் மதிப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 5 இலட்சம் ஆகும். இம் மருந்துக் கூடத்தில் இயந்திரங்களை நிறுவுவதற்காக இவ்வரசின் செயற்குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவ முறை கல்லூரி மருத்துவமனையுடன் மருந்துக்கூடம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துக்கூடம் மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், பாளையங்கோட்டை, இந்திய மருத்துவ முறை அரசினர் கல்லூரி மாணவர்கள் மருந்துகளைத் தயாரிப்பதில் நடைமுறைப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சி வசதிகளை வழங்குவதற்கும், சித்த முறையில் மருந்துகளைத் தயாரிக்கின்றது. இந்த மருந்துக்கூடத்திற்காக ரூ. 3.80 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அக்கட்டிடம் 1977 நவம்பரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

4. மூலிகைச் செடிப் பண்ணைகள் :

அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையோடும் இந்திய முறை அரசு மருத்துவக் கல்லூரியோடும் இணைக்கப் பட்ட மூலிகைச் செடிப் பண்ணைகள், இந்திய முறை மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட மருந்துக் கூடங்களுக்கு மூலிகைகளையும், மருந்துச் செடிகளையும் தொடர்ந்து அளித்து வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் வீரபுலிகாப்புக் காட்டில் உள்ள மூலிகை செடிப்பண்ணை.

1977-78-ல் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்புகளைக் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஜீப் வழங்குதல், அணுகு சாலைகளை அமைத்தல் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

5. மருத்துவக் கல்வி :

மதுரைப் பல்கலைக் கழகத்தின் இந்திய மருத்துவ முறைப் படிப்பியலில் பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத் துவக் கல்லூரியில் சித்த மருத்துவ முறையில் பட்டப் படிப்புப் பாடமுறை நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆண்டொன்றுக்கு 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் (அவர்களில் பயிற்சி உதவித் தொகை பெறுபவர்கள் 30 பேர் ஆவர். பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள் 10 பேர் ஆவர்). புதுடெல்லி, இந்திய மருத்துவ மத்திய மன்றத்தினால் ஏற் பளிக்கப்பட்டு ''பி.எஸ்.எம். அண்டு எஸ்'' பட்டம் பெறுவ தற்கு வழிகோலும் பாடத் திட்டம் 1977-78 கல்வியாண் டிலிருந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாக தேவைப்படுபவற்றை நிறைவு செய்ய கல்லூரியில் உள்ள பல்வேறு துறைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மேற்சொன்ன கல்லூரியில் திறமையான கல்வி கற்பிக்கும் வசதிகளை அளிக்கும் பொருட்டு 1978-79-ல் ரூ. 3.40 இலட்சம் செலவில் எல்லாவகையிலும் நிறைவுபெற்ற உடற்கூற்றியல் தொகுதி (Anatomy Block) ஒன்றைக் கட்டக் கருதப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் 'பி.எஸ்.எம். அண்டு எஸ்.' பாடமுறையில் (சித்த மருத்துவம், அறுவைச் சிகிச்சை பட்டப்படிப்பு) உள்ள 40 இடங்களில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக 4 இடங்களை பரிமாற்ற ஏற்பாட்டு அடிப்படையில் அரசு ஒதுக்கியுள்ளது. அதேபோல, கேரளாவில் உள்ள அரசு ஆயுர்வேத கல்லூரிகள் இரண்டில் உள்ள பி.ஏ.எம். அண்டு எஸ். வகுப்பில் (ஆயுர்வேத மருத்துவம், அறுவைச் சிகிச்சை) தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் கேரள அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ஏற்பாடு 1977-78 கல்வியாண்டிலிருந்து செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவமுறை மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் (மருந்து), சித்த குணபாடம் ஆகிய இரண்டு பட்ட மேற்படிப்பு பயிற்சி வகுப்புகள் இந்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்பில் 20 மாணவர்கள் (மருத்துவத்திற்கு 10 மாணவர்களும் குணபாடத்திற்கு 10 மாணவர்களும்) ஆண்டு தோறும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 200 படிப்புதவித்தொகை கொடுக்கப்படுகிறது. இதுவரை 5 தொகுதிகளில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 16 மாணவர்கள் பட்ட மேற்படிப்பு பட்டம் பெற்றுள்ளனர்.

மருந்து தயாரிப்பு முறையில் பட்டயப்படிப்பு.

ஆயுர்வேத, சித்த யுனானி முறைகளில் மருந்து தயாரிப்பதில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் 1974-75ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்த முறையில் மட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977-78ஆம் ஆண்டில் மேற்கூறிய வகுப்பில் 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு 30 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

6. இந்திய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி :

புதுடெல்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக்குழுவின் ஆதரவுடன் சென்னை மாநகரில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த

ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு மாநில அரசு இட வசதியும், படுக்கை வசதிகளும் கொடுத்துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவுகள் அனைத்தையும், புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவ முறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஏற்கிறது :—

( ) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ஆயுர்வேத, சித்த, யுனானி ஆகிய மருத்துவ முறைகளில் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகள்.

(ii) சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலையம் (சித்த முறை).

(iii) சென்னை. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உள்ள கேப்டன் சீனிவாச மூர்த்தி ஆராய்ச்சி நிலையம்.

(v) புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழுவின்கீழ் உள்ள மூலிகைச் செடிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு, சித்த மருத்துவ நூல்கள் ஆராய்ச்சிப் பிரிவு (சித்த முறை) குறித்த ஆய்வு ஆகிய இரண்டு ஆராய்ச்சிப் பிரிவுகள், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவமுறை மருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றன.

சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிலைய (சித்த முறை) பிரிவுப் பணிகளுக்காக 2,19,500 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 30 கூடுதல் படுக்கைகளைப் போடுவதற்கு இடவசதி அளிக்கக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு 1977-78 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

7 சித்த மருத்துவ முறை அறிவியல் மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவமுறை அறிவியல் மேம்பாட்டுக்குழு, 1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் அமைக்கப்பட்டது. பனை ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சிடப்பெற்ற அரிய நூல்கள் ஆகியவற்றைத் திரட்டுதல், பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படும் பி.ஐ.எம். (B.I.M.) பட்டப்படிப்பு, எம்.டி. (சித்த மருத்துவ முறை) பட்டமேற்படிப்பு ஆகியவற்றுக்காகவும், சித்த வைத்திய பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவை இக்குழுவின் பொறுப்பாகும்.

இக்குழு தொடங்கப்பட்ட நாள் முதல் அது ஆற்றிய
குறிப்பிடத்தக்க பணிகளாவன:—

அரிய நூல்களைத் திரட்டுதல்—

(i) அச்சிடப்பெற்ற அரிய நூல்கள்	..	561
(ii) பனை ஓலைச் சுவடிகள்	..	360
(iii) கையேட்டுப் பிரதிகள்	..	84

அச்சிடப்பெற்ற அரிய 561 நூல்களில், அச்சிடுவதற்காக,
முதற்கண் 84 நூல்கள் தெரிதெடுக்கப்பட்டன. சுமார் 40
நூல்களின் படிகள் எடுக்கப்பட்டு அவற்றிலுள்ள பிழைகள்
முதலியவை முறையே நீக்கப்பட்டன. திரட்டப்பட்ட பனை
ஓலைச் சுவடிகள் கையேட்டுப் பிரதிகள் ஆகியவற்றை பகுத்
தாய்ந்து, மீண்டும் எழுதவேண்டியுள்ளது.

மேற்கூறிய பணிகளைத் தவிர, அச்சிடப்பெற்ற 5 சித்த
வைத்திய நூல்களின் நகல்கள் தனியார் வெளியீட்டார்களிட
மிருந்து வாங்கப்பட்டு, துறைவாரியாக விற்கப்பட்டு வரு
கின்றன.

ஒன்பது சித்த வைத்தியப் பாட நூல்கள் இதுவரை
அச்சிடப்பெற்றுள்ளன. (1) உடல் கூறுகள், (2) தோற்றக்
கிரம ஆராய்ச்சி என்கிற இரண்டு பாட நூல்கள் எழுதி
முடிக்கப்பட்டு அரசினர் அச்சகத்தில் அச்சிடுவதற்காகக் கொடுக்
கப்பட்டன. மேலும் ஐந்து பாட நூல்கள் இன்னும் எழுதப்
பட்டு வருகின்றன.

திரு. டி. வி. சாம்பாசிவம் பிள்ளை அவர்கள் தயாரித்த சித்த
மருத்துவ அகராதியில் எஞ்சியுள்ள 4, 5 ஆம் பகுதிகள் தொகுக்
கப்பட்டு கோயம்புத்தூரில் உள்ள ஜி. டி. நாயுடு அறக்கட்டளை
அச்சகத்தில் இலவசமாக அச்சிடப்பெற்று வருகின்றன. இப்பணி
முடிவடையும் தறுவாயில் உள்ளது.

திரு. கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதியுள்ள ''சித்த
மருத்துவ வரலாறு'' என்கிற ஆங்கில நூல் ஒன்று அச்சிடுவதற்
காக அச்சகத்திற்கு அனுப்பப்பட இருக்கிறது.

8. தொண்டாற்றும் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்

இந்திய மருத்துவ முறையில் இலவச சிகிச்சை அளித்து வரும்
தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானிய உதவி அளிக்கிறது.
மக்களுக்கு தொண்டாற்றுகிற இந்த நிறுவனங்களைப் பேணி வரு
வதற்காகும் செலவில் துண்டு விழும் ஒரு பகுதியை ஈடு செய்
வதற்காக இந்த மானிய உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஆண்டு தோறும்
மானிய உதவி பெற்றுவருகின்றன:—

(i) திரு. வெங்கடரமண ஆயுர்வேத மருந்தகம் மயிலை, சென்னை.	ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5,000
(ii) ருக்மணி நினைவு மருத்துவமனை, பட்டுக்கோட்டை.	ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000
(iii) அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தானம் ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம்.	ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000

9. யோகாசன முறை சிகிச்சை.

யோகாசன முறையை ஒரு சிகிச்சை முறையாக அங்கீகரிக்
கலாமா என்பது பற்றி அரசிற்கு ஆலோசனை கூறுவதற்காக
அமைக்கப்பட்ட முன்னோடிக்குழு இரண்டொரு தடவை கூடி,
யோகாசன முறைக்குத் தொடர்புள்ள நிறுவனங்களிடமிருந்தும்
தனியாரிடமிருந்தும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும்
இப்போது தகவல்களைச் சேகரித்து வருகிறது.

10. யோகாசனம் கற்பிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு
அரசு மான்யம் வழங்குதல்.

திருப்பதியில் உள்ள இந்திய யோகாசனத் தொடர்புள்ள அறி
வியல்கள் ஆராய்ச்சி நிறுவனம் (பதிவு செய்யப்பட்டது) ஆஸ்த்
துமா, மஞ்சள் காமாலை நோய் போன்ற சிலவகை நோய்களை
யோகாசன முறையில் குணப்படுத்துவதுபற்றி ஆராய்ச்சி நடத்தி
வருகிறது. இந்நிறுவனத்தைப் பேணி வருவதற்காகும் செல
வினத்தில் துண்டு விழும் ஒரு பகுதியை பிற மாநில அரசு
களுடன் சரிநிகர் அடிப்படையில் ஆண்டொன்றுக்கு ரூ. 3
இலட்சம் என்கிற உச்ச அளவிற்கு உட்பட்டு ஈடு செய்யலாம்
என்கிற திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்
டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டிற்காக இந்நிறுவனத்திற்கு ரூ. 3
இலட்சம் மானிய உதவி முன் கூட்டியே அளிக்கப்பட்டுள்ளது.

11. இயற்கை முறை மருத்துவம்

தமிழ் நாட்டில் நோய் சிகிச்சை முறைகளில் 'இயற்கை முறை
மருத்துவச் சிகிச்சையும்' ஒன்று என்பதை அரசு ஒப்புக்
கொண்டுள்ளது. 'இயற்கை முறை மருத்துவ சிகிச்சை' குறித்
தும் இந்த வகை சிகிச்சை முறையை மேம்படுத்துவது குறித்
தும் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அது அமைத்துள்ள
ஆலோசனைக்குழு இந்த சிகிச்சை முறையில் பயிற்சி அளிப்பதற்
காக பாடங்கள்—பாடத் திட்டங்கள் குறித்த வரைவு அறிக்கை
ஒன்றை அரசிற்கு அளித்துள்ளது. இதனை அரசு ஆய்வு செய்து
வருகிறது.

இணைப்பு 1,

பட்ட மேற்படிப்பு, பட்டயப் படிப்பு பற்றிய விவரங்கள்;

தொடர் எண்ணும் பட்ட மேற்படிப்பும் மற்றும் பட்டயத் நகுதிகளின் பட்டியல்.	இடங்களின் எண்ணிக்கை: சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை	தஞ்சை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்
(1)	(2)	(3)	(4)	(5)
பட்ட மேற்படிப்பு;				
1 எம்.டி. (பொது மருந்தியல்)	21	20	19	5
2 எம்.டி. (மகப்பேறு மருத்துவ இயல்),	12	8	5	..
3 எம்.டி. (நோய் குறியியல்)	4	..	2	..
4 எம்.டி. (நுண் உயிரியல்)	6	..	2	..
5 எம்.டி. (உடல் அமைப்பியல்)	4	4	4	..
6 எம்.டி. (மருந்தாக்கியல்)	4	..	4	..
7 எம்.டி. (குழந்தை நோய் இயல்)	17	..	3	..
8 எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் அறி இயல்).	4	..	..	..
9 எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் சிகிச்சை இயல்)	4	..	..	..
10 எம்.டி. (மயக்கமருந்து இயல்).	5	3	5	..
11 எம்.டி. (தோல் நோய் இயல்)	4	..	..	..
12 எம்.டி. (மேகநோய் இயல்)	4	..	..	..
13 எம்.டி. (உயிர் வேதியல்)	4	..	..	1

இணைப்பு I—தொடர்ச்சி.

பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)
14 எம்.டி. (சமூக தடுப்பு மருத்துவம்)	1	..	..	..
15 எம்.டி. (சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல்).	2	..	2	..
16 எம்.டி. (உளநோய் இயல்)	2	..	..	..
17 எம்.எஸ். (பொது அறுவைச் சிகிச்சை).	21	20	18	6
18 எம். எஸ். (முடநீக்கியல் அறுவை சிகிச்சை).	4	..	2	..
19 எம். எஸ். (கண் நோய் இயல்)	6	..	6	..
20 எம். எஸ். (காது மூக்கு, தொண்டை இயல்).	6	..	4	..
21 எம். எஸ். (உடற்கூறு ஆய்வு இயல்).	4	..	2	..
22 எம். எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	4	..	..	..
23 எம். சி. எச். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	..	..	2	..
பட்டயத் தகுதி படிப்பு:				
1 டி. ஓ.	8	..	6	..
2 டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3. டி. எல். ஓ. ..	12	..	6	..
4. டி. ஜி. ஓ. ..	18	8	8	..
5 டி. வி.	8	..	..	..
6 டி. டி.	6	..	..	..
7 டி. சி. பி. ..	4	..	..	..
8 டி. எ.	6	6	10	..
9 டி. சி. எச். ..	18	6	6	..
10 டி. எம். ஆர். டி.	4	4	6	..
11 டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..

இணைப்பு I—தொடர்ச்சி.

பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

பட்டயத் தகுதி படிப்பு—தொடர்ச்சி

	(1)	(2)	(3)	(4)	(5)
12	டி. பி. எம். ..	4	..	3	..
13	டி. எம். ஆர். டி. (தெரப்பி)	4	..	..	..
14	டி. டி. சி. டி. (ஆண்டொன்றிற்கு).	12	..	..	..
அக்டோபரில் துவங்குவது:					
1	டி. ஓ.	8	..	6	..
2	டி. ஆர்த்தோ ..	4	2	2	..
3	டி. எல். ஓ. ..	12	..	6	..
4	டி. ஜி. ஓ ..	18	8	8	..
5	டி. வி.	8	..	..	..
6	டி. டி.	6	..	..	..
7	டி. சி. பி. ..	5	..	..	..
8	டி. ஏ.	6	6	10	..
9	டி. சி. எச். ..	18	6	6	..
10	டி. எம். ஆர். டி.	4	4	6	..
11	டிப்ளமோ இன் பிசிகல் மெடிசின்.	2	..	..	..
12	டி. பி. எம். ..	4	..	3	..
13	டி. எம். ஆர். டி. (தெரப்பி)	4	..	..	..
உயர்நிலை சிறப்புத் துறைகள் :					
1	எம். டி. எஸ். (ஓரல் சர்ஜரி)	3	..	..	..
2	பி. எஸ். எஸ். சி. / எல். பி. எச்.	10 1	..	..	..
3	எம். சி. எச். (மார்பு அறுவை சிகிச்சை இயல்).	2	..	..	..
4	எம். சி. எச். (சிசு நோய் அறுவை சிகிச்சை இயல்).	3	..	2	..
5	எம். சி. எச் (சிறுநீரக அறுவை சிகிச்சை இயல்).	4	..	..	..
6	எம். சி. எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்)	3	..	..	..
7	டி. எம். (நரம்பியல்)	4	..	..	..
8	டி. எம். (இருதய நோய் இயல்)	2	..	..	..

	(1)	(2)	(3)	(4)	(5)
9	எம். டி. எஸ். (பல்வலியால் ஏற்பட்டுள்ள வீக்கம்)	3	..	..	.
10	எம். டி. எஸ் (பல் மருத்துவ அறுவை சிகிச்சை இயல்).	2	..	..	.
11	எம். டி. எஸ் (ஆத்தோர் டென்ஷியா)	•			
12	டி. எம். (குடல்நோய் இயல்)	..	1	..	..
13	எம். பார்மஸி ..	..	..	..	
14	பி. எச். டி.		10 இடங்கள்	3	..

இணைப்பு I-A.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்க உள்ள பாடப் பிரிவு கீழ்வருமாறு :—

கல்லூரியின் பெயர். (1)	பாடப் பிரிவின் பெயர். (2)	இடங்களின் எண்ணிக்கை. (3)	
சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம். எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	2	
	டி. டி.	2	
	டி. எல். ஓ.	4	
	எம். டி. (தோல் நோய் இயல்)	1	
	எம். டி. (குழந்தை நோய் இயல்).	2	
சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி.	எம். டி. (பொது மருந்தியல்).	12	ஆண்டு ஒன்றுக்கு
	எம். எஸ். (பொது அறுவை சிகிச்சை).	1	,,
	டி. எல். ஓ.	2	செஷன் ஒன்றுக்கு
	டி. ஆர்த்தோ ..	4	,,
	டி. ஜி. ஓ.	4	,,
	டி. சி. எச்.	4	,,

ஜூன் 1978 முதல் தொடங்கவுள்ள பாடப் பிரிவு:—

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	எம். சி. எச். (உடல் ஒட்டு அறுவை சிகிச்சை இயல்).	2

இணைப்பு II.

கீழே குறிப்பிட்டுள்ள பட்டமேற் படிப்புகள் தகுதி பட்டயங்கள் 1978-79 ஆம் ஆண்டு முதல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

கல்லூரியின் பெயர். (1)	பாடப்பிரிவின் பெயர். (2)
சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை.	டி. எம். (நெப்ராலஜி).
	மருத்துவ உளவியலில் பட்டயத் தகுதி படிப்பு.
	எம். டி. (காசமும் மார்பு நோய்களும்).
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	டி. ஓ.
	டி. எல். ஓ.
	டி. ஜி. ஓ.
	டி. சி. எச்.
	டி. ஏ.
	எம். டி. (உயிர் வேதியியல்).
கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.	எம்.டி. (பொது மருந்தியல்).
	எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை).
	டி. சி. எச்.
	டி. ஜி. ஓ.
	டி.ஏ.

இணைப்பு III.

பயிற்றுவிக்கும் மருத்துவ மனைகளின் பட்டியல்

1 அரசு பொது மருத்துமனை, சென்னை-3.
2 அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை-1.
3 கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10.
4 அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை-14.
5 அரசு கண் மருத்துவமனை, சென்னை-8.
6 பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை-5.
7 மகப்பேறு, மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான அரசு மருத்துமனை, சென்னை-8.

8 இராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.
9 குழந்தை நல நிறுவனம். குழந்தைகள் மருத்துவமனை, சென்னை-8.
10 அரசு திருவொற்றீஸ்வரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.
11 அரசு மார்பு நோய் நிலையம், சேத்துப்பட்டு, சென்னை.
12 அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை-10.
13 அரசு காசநோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.
14 அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.
15 அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
16 தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
17 செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.
18 கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.
19 திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திருநெல்வேலி.

இணைப்பு IV.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் உள்ள மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

	மருத்துவ மனைகளின் பெயர். (1)	1976–77. (2)	1977–78. (3)
1	அரசு பொது மருத்துவமனை, சென்னை.	1,572	1,624
2	அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	1,011	1,021
3	அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, சென்னை.	420	420
4	அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை.	526	620
5	அரசு கண் மருத்துவமனை, சென்னை.	328	328
6	பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை, சென்னை.	675	675
7	மகப்பேறு மகளிர் நோயியல் மகளிர்-குழந்தைகள் நல மருத்துவ நிலையம், சென்னை.	534	534

	மருத்துவமனைகளின் பெயர் (1)	1976-77. (2)	1977-78. (3)
8	ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.	426	426
9	குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.	250	250
10	திருவொற்றீஸ்வரர் காச நோய் அரசு மருத்துவமனை, ஒட்டேரி, சென்னை.	222	222
11	அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.	1,800	1,800
12	அரசு காச நோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.	750	750
13	அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	1,394	1,394
14	அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.	662	612*
15	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.	538	589
16	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.	663	663
17	கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி கோயம்புத்தூர்.	805	805
18	செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.	416	416
19	அரசு பெரியாமோன்னியர் மருத்துவமனை, களக்காடு.	30	30
20	அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை.	32	32
21	அரசு காச நோய் மருத்துவமனை, தோப்பூர்.	162	182
22	அரசு தொற்று நோய் மருத்துவமனை, தோப்பூர்.	50	50
23	அரசு காலரா சேகரிப்பு நிலையம், தோப்பூர்.	28	28
	மொத்தம் ..	13,291	13,471

*தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலிருந்து 50 படுக்கைகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்பட்டது.

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே,

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகின்றேன்.

I. கொள்கை

மக்களின் நல்வாழ்வு ஒரு முக்கியமான வளமாகும். ஆகவே, அது நாட்டின் பொதுச் சொத்தாகக் கருதப்படுகிறது. எனவே, இச்சொத்து எல்லா காலங்களிலும் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க உறுதி கொண்டுள்ள அரசு, மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வைப் பராமரித்து மேம்படச்செய்யும் நடவடிக்கைகளை அரசு நிறுவனங்களோ அல்லது பொது நலத் தொண்டு நிறுவனங்களோ மேற்கொள்ளும்போது அத்தகைய பணிகளை அரசு ஊக்குவிக்கிறது.

இவ்வாறு அளிக்கப்படும் பலவகையான நல்வாழ்வுப் பணிகள் தாய் மற்றும் குழந்தைகளின் உடல் நலனை மேம்படுத்தவும் மக்களின் ஊட்டச் சத்தை மேம்படுத்தவும் தொற்று நோய்கள் பிற நோய்களைத் தடுத்தல், தொற்று நோய்கள் தோன்றுமிடங்களில் அவற்றை அழித்தல், சுற்றுப்புற துப்புரவு மேம்பாடு; உணவுப் பொருள், மருந்துகளில் கலப்படங்களைத் தடுத்தல், மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் வகுக்க பிறப்பு இறப்புப் பதிவு உட்பட சுகாதாரப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தொகுத்தல், மற்றும் மக்கள் நல்வாழ்வு, வழிமுறைகள் பற்றி மக்களுக்குக் கல்வி விளக்கம் அளித்தல் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றன. கிராமப் பகுதிகளில் இப்பணிகள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிளை நிலையங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகின்றன.

II. கிராம நல்வாழ்வுப் பணி.

தமிழ்நாட்டில் 70 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர். கடந்த ஆண்டுகளில் கிராமப்புறப் பகுதிகளை புறக்கணித்து விட்டு நகரப் பகுதிகளிலேயே நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதில் நாட்டம் செலுத்தப்பட்டு வந்தது. சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு கிராம மக்களின் உடல் நல முன்னேற்றம் அத்தியாவசியமானதாகும். ஏனெனில் விவசாயியின் உடல் நலமின்மையினால் உழைக்கும் நேரம் வீணாவதை அவர்கள் உடல் நலத்தை பேணுவதின் மூலம் குறைக்க முடியும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகவும் கிளை நிலையங்கள் மூலமாகவும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மேன்மேலும் அதிக மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணமாகும்.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் முக்கியமான பணிகளில் மருத்துவ வசதி அளிப்பது ஒன்றாகும். ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் சிகிச்சை பெறுவதுடன் உடல் பரிசோதனையோடு மருந்துகளும் தக்க அறிவுரைகளையும் பெறுகிறார்கள். நாளுக்கு நாள் வெளிப்புற நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

130 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்றாவது மருத்துவர் ஒருவர் பணியாற்றுகிறார். வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதை கருத்தில் கொண்டும் நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தவும் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஆண்டிற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை ரூ. 12,000-லிருந்து ரூ. 14,000-மாக அரசு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து அதிகப்படுத்தியுள்ளது.

(i) நடமாடும் மருத்துவப் பணிகள்.

கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த நல்வாழ்வுப் பணிகளை அளிக்கும் குறிக்கோளுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வட்டாரத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் சென்று மருத்துவ வசதி அளிக்க முடிவதில்லை. ஆதலால் 1977 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய திட்டமான நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ நல்வாழ்வுப் பணிகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அதிகாரி காலையிலும், மாலையிலும் நிலையத்திலேயே தங்கி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பார். மற்ற இரு மருத்துவர்கள் கிராமப்புற மக்களுக்கு நோய்த்தடுப்பு, நோய்த்தீர்ப்பு, நோய்த்தீர்ப்புக்குப் பின் நலம் பேணுதல் ஆகிய பணிகளை அளிப்பார்கள். ஒவ்வொரு குழுவும் ஒரு நாளில் 6 முதல் 8 கிராமங்களுக்குச் செல்லும். அக்குழு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் செல்லும். அவ்வாறு ஒரு வாரத்திற்குள் அந்த வட்டாரம் முழுவதும் சென்று வரும். சிக்கலான நோய் கண்டவர்களை அருகிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள். கிராம மக்களுக்கும் வருகை தரும் நடமாடும் மருத்துவக் குழுவிற்கும் இடையே உடல் நல ஆய்வாளர்கள் சிகிச்சை சம்பந்தமான ஆதாரப்பணிகளை செய்கிறார்கள். மருத்துவ அதிகாரியும், மருத்துவக் குழுவும் வருவதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட நாட்களில் தகுந்த பிணியாளர்களை சிகிச்சைக்காக ஒன்று சேர்ப்பார்கள். மற்ற நாட்களில் வேண்டிய மருத்துவப் பணிகளை செய்வார்கள். இவ்வாறாக மக்களுக்கு மருத்துவப் பணிகள் அவர்கள் இருப்பிடங்களிலேயே அளிக்கப்படுகின்றன.

இத்திட்டம் ரூ. 7.16 இலட்சம் செலவில் மூன்றாவது மருத்துவ அதிகாரியுள்ள 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துவக்கப்பட்டது. இந்தப் புதுமையான திட்டம் துவக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இரண்டு வாகனங்கள் உள்ளன. மருத்துவக் குழுவின் நடமாட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு பெட்ரோல் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 14,000 அல்லாமல் மேலும்

ரூ. 10,000 இம்மருத்துவக் குழுக்களின் பணிக்காக அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மருந்து-கலக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மத்திய அரசு நாடு முழுவதற்குமான சமுதாய நல பணியாளர்கள் திட்டம் என்னும் ஓர் புதிய திட்டத்தை, பணியாளர்கள் கிராம மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமப்பணிகளில் ஈடுபடுத்துவதற்காக உருவாக்கியது. இருப்பினும் இவ்வரசு மத்திய அரசுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து இயக்கப்படும் நடமாடும் மருத்துவக்குழு என்னும் ஓர் மாற்று திட்டத்தை தெரிவித்தது. இதன் நோக்கம் தமிழ்நாட்டில் சிறந்த முறையில் இணைப்பு சாலைகளும் மின்சார வசதிகளும் அமைந்து இருப்பதால் நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலமாக சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்க முடியும் என்பதாகும். மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சர் தங்களது திட்டத்தை 1977 அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி முதல் தமிழக அரசு அமுல் படுத்த வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். நடமாடும் மருத்துவக் குழுத் திட்டம் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுவதால், பிரதமருக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வு அமைச்சருக்கும் மத்திய அரசின் திட்டத்திற்கு பதிலாக மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக் குழுவின் மூலம் மருத்துவ வசதி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்த எண்ணியிருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. பிரதமரும், மத்திய நல்வாழ்வு அமைச்சரும் மாற்றுத் திட்டமான நடமாடும் மருத்துவக்குழு திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்த விருப்பத்தோடு அனுமதி அளித்தார்கள்.

மத்திய அரசின் சமுதாய நலப்பணியாளர்கள் திட்டத்தை நமது மாநிலத்தில் அமுல்படுத்தியிருந்தால், இவ்வரசுக்கு 100 சதவீதம் மத்திய அரசின் உதவித் தொகையான ரூ. 17 இலட்சமும், முதல் படி உதவித் தொகையான ரூ. 2.27 இலட்சமும் கிடைத்திருக்கும். 1977-78 ஆம் ஆண்டில் இந்த உதவித் தொகையான ரூ. 17 இலட்சத்தை அளிக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) சிறிய சுகாதார நிலையங்கள்:

கிராம மக்கள் தொகையின் சிறு பகுதிக்குக் கூட்டுறவு அடிப்படையில் சுகாதார பணி புரியும் குறிக்கோளுடன் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப் படுகின்றன. இதில் தொடர்புள்ள முக்கிய அமைப்புகள் மத்திய அரசு மாநில அரசு ஒரு பொதுநல நிறுவனம் ஆகும். இதில் மொத்தச் செலவு 1 : 1 : 1 என்ற விகித அடிப்படையில் பகிர்ந்துக் கொள்ளப்படும். ஒரு சிறு சுகாதார நிலையம் 5,000 மக்கள் தொகைக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட நல்வாழ்வுப் பணிகள் புரிய, பொதுநல நிறுவனங்கள் செயல்படும். ஒரு சிறு சுகாதார நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு மொத்தம் 18,000 ரூபாய் தொடர் செலவாகும்.

சிறு சுகாதார நிலையம் ஒன்றில், பகுதி நேர டாக்டர் ஒருவர், முழு நேர ஆண் மற்றும் பெண் பணியாளர் ஒருவர், முதல் உதவி யாளர்கள் மூவர் அமர்த்தப்படுவார்கள். 1977-78 ஆம் ஆண்டில் அரசு ரூ. 4.86 இலட்சம் செலவில் 5.4 சிறிய சுகாதார நிலையங்களை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயலாக்கப்படுவ தாலும், பொது மக்களாலும், தனியார் நிறுவனங்களாலும் இத் திட்டம் பெரிதும் வரவேற்கப்படுவதாலும், சில தொண்டு நிறு வனங்களிடமிருந்து வரப்பெறும், மனுக்களை பொறுத்து மேலும் 50 சிறு நிலையங்களை அமைக்க உதவி செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(iii) பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம்:

பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம், கிராம மக்களுக்கு ஒருங்கிணைந்த சுகாதாரப் பணிகளை வழங்குவதற்கான மற்றுமொரு திட்டமாகும்.

மலேரியா ஒழிப்பு பராமரிப்புத் திட்டம், பெரியம்மை ஒழிப்புத் திட்டம், தேசீய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம், முதலான பல்வேறு திட்டங்களைத் அரசு நிறை வேற்றி வருகிறது. ஒவ்வொரு திட்டப்பணிக்கென சுகாதாரப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் தமக்கென வரையறுக்கப்பட்ட திட்டப் பணிகளை, பிறதிட்டங்களுடன் ஒருமைப்பாடின்றி, செய்து வருகின்றனர். இவர்கள், திட்டத்தின் தேவையைப் பொறுத்து 10,000 முதல் 20,000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். இத்தகைய தனித் திட்டப்பணியாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு குறிப் பிட்ட மக்கள் தொகைக்கு எல்லா திட்டங்களையும் நிறைவேற்றப் பயன்படுத்தப்படுவார்களேயானால் அவர்கள் ஒரு சிறு பகுதிக்கு, சிறிய மக்கள் தொகைக்கு பணிபுரிய வேண்டி வருவதுடன், அந் தந்தப் பகுதி கிராமங்களில் வாழும் குடும்பங்களின் நோய்த் தடுப்பு முறைகளை இரண்டே சுகாதாரப் பணியாளர்கள் கவனித்துக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆண், மற்றும் ஒரு பெண் சுகாதாரப் பணியாளர் வீதம் அமர்த்தப்படுவார். இப் பணியாளர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள மக்கள் தொகைக்கு சாதாரண நோய்கள் எவையேனும் இருப்பின் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் 5,000 மக்கள் தொகைக்கு மொத்த சுகாதாரப் பணிகளையும் செய்து வருவார்கள். நான்கு ஆண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு ஆண் மேற்பார்வை யாளர் வீதமும் நான்கு பெண் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒரு பெண் மேற்பார்வையாளர் வீதமும் அமர்த்தப்படுவார்கள்.

செங்கற்பட்டு, தென்னார்காடு, மதுரை, சேலம், கன்னியா குமரி மாவட்டங்களில் முதற்கட்டமாக நிறைவேற்றப்படும் பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்படு

கிருக்கும் பல்வேறு திட்டங்களின்கீழ் ஆண் சுகாதாரப் பணியாளர் மற்றும் ஆண் சுகாதார மேற்பார்வையாளர்களாக அமர்த்தப்படு வதற்குத் தேவையானவர்கள், ஏற்கெனவே உள்ள பல்வேறு திட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். பெண் சுகாதாரப் பணி யாளர் மற்றும் பெண் சுகாதார மேற்பார்வையாளரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு விரைவில் பொறுப் பேற்பார்கள்.

இந்திய அரசு 1981 ஆம் ஆண்டிற்குள் இத்திட்டம் தமிழ் நாட்டில் பிற மாவட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது. அதிகமான மருத்துவச் சார்பற்ற பணியாளர் களுக்கும், துணைச் செவிலி மகப்பேறு பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டியிருப்பதால், பயிற்சியளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கையையும் பள்ளிகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க அரசு பரிசீலித்து வருகிறது.

(iv) மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டம்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் கோட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் காந்தி கிராம நிறுவனம் ஆத்தூர் வட்டாரத்தில் பின்பற்றிய புதிய முறைகளின்படி ஒருங்கிணைந்த ஒருமுகப்பட்ட சுகாதாரப் பணிபுரிவதற்கென்று, மாவட்ட வளர்ச்சி செயல் விளக்கத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணியாளர் பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிந்த பின்னர் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

III. தாய்-சேய் நலப் பணிகள்.

(அ) மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள்:

மகப்பேற்றுக்குரிய வயதுடைய மகளிர் (15—45 ஆண்டுகள்) மற்றும் குழந்தைகள் (0—16 ஆண்டுகள்) சுகாதாரக் கேடுகளுக்கு எளிதில் இரையாகிறார்கள். அவர்கள் நமது மக்கள் தொகையில் 60 சதவீதத்தினராக உள்ளனர். அவர்களுடைய சுகாதார மேம் பாட்டுக்காகவும், நோய்த் தடுப்புக்காகவும், அவர்களிடைத் தோன்றும் நோய்களை விரைவில் கண்டறிந்து சிகிச்சையளிக்கவும் எடுத்துக் கொள்ளும் முயற்சி வளமான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் தாய்மார்களிடையே குறைவான இறப்பு என்ற வகை யில் பெரும் பயன் தரவல்லதாகும்,

எனவே, நல்ல தரமுள்ள மகப்பேறு மற்றும் சேய் நலப் பணி களுக்கான ஏற்பாடு எப்போதும் அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக விளங்குகிறது.

கிராமப் பகுதிகளில், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு மகப்பேறு நிலையங்களின் மூலம் மகப்பேறு மற்றும் சேய் நலப் பணிகள் செய்யப்படுகின்றன. இந் நிலையங்களில் மகப்பேறு உதவியாளர்களின் தொழில் நுட்ப வேலைக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையச் சுகாதாரப் பார்வையாளர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் வழி காட்டுகின்றனர்.

சாதாரண பிரசவங்களைக் கவனிக்க ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு படுக்கை வசதி உள்ளது. சிக்கலான பிரசவ வேதனையுள்ள மகளிர் சிறந்த வசதிகள் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் 2,983 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. இவற்றுள் 2,880 நிலையங்கள் அரசு நிதி உதவியுடன் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

நகராட்சிப் பகுதிகளில். மகப்பேறு சேய் நலப் பணிகள் நகராட்சி மன்றங்கள் நடத்தும் மகப்பேறு நிலையங்கள் மற்றும் மகப்பேறு இல்லங்களினால் நிறைவேற்றப்படுகின்றன. இத்திட்டத்துக்காக நகராட்சி மன்றங்கள் 25 சதவீத மானியம் பெறுவதற்கு உரியனவாகும். நமது மாநிலத்தில் 128 நகராட்சி மகப்பேறு இல்லங்களும், 372 நகராட்சி மகப்பேறு நிலையங்களும் உள்ளன. இத்திட்டத்திற்கு 1976-77-ம் ஆண்டுக்கு ரூபாய் 14.93 இலட்சம் உதவி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப்பணிகள்.

பள்ளிக் குழந்தைகளின் நலப்பணிகள் திட்டம் 1965-ல் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் 53 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 5 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஆண்டொன்றுக்கு 6 முதல் 11 வயது வரை உள்ள 2,000 பள்ளிக்குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது; நகரப் பகுதிகளில் ஒரு நகராட்சிக்கு, ஆண்டொன்றுக்கு 10,000 பள்ளிக் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, உடல் நலம் குறைவாகத் தோன்றும் மாணவர்கட்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறப்புச் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்கல்வி நிறுவனங்களில், எல்லா ஆசிரியர்களும், மாணவர்களும் உடல் நலம் மற்றும் நோய்கள் பற்றிய சில பொது உண்மைகளை அறிந்து கொள்ளவும், அவர்களுடைய உடல் நலனைக் காத்துக் கொள்ளும் வழி முறைகளை அறிந்து கொள்ளவும், இப்பள்ளிகளில் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது. 1977 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 72,371 மாணவர்கள் மருத்துவ சோதனை செய்யப்பட்டனர்.

1978-79ல் மேலும் பத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இத்திட்டத்தினை நீடிக்க கருதப்பட்டுள்ளது.

(இ) மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம்.

தமிழ்நாட்டில் மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் 1964-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்படி, கக்குவான், தொண்டை அடைப்பு, இசிவு நோய் ஆகிய நோய்களைத் தடுக்கின்ற முத்தடுப்பு ஊசி 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதார

நிலையங்கள் மூலமாகப் போடப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் 8 முதல் 12 வார இடைவெளியில் இரண்டு ஊசிகள் போடப்பட வேண்டும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிராமப் பகுதிகளில் இத்திட்டத்தை தீவிரமாக நிறைவேற்றுவதற்காக 13 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்ட பொது சுகாதார செவிலி அமர்த்தப்பட்டார். மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்களும் படிப்படியாக அமர்த்தப்பட்டு வருகின்றனர். இதுவரை 85 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்தகைய கூடுதல் சுகாதாரப் பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 1978-79 ஆம் ஆண்டில் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதலாக சுகாதாரப் பார்வையாளர் ஒருவரை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் (0—5 வயது) எண்ணிக்கை வருமாறு:—

ஆண்டு.			தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.
1974-75	..	..	1,18,528
1975-76	..	..	1,86,528
1976-77	..	..	2,62,209
1977-78	..	..	1,59,814 (டிசம்பர் 1977 வரையில்.)

மூன்று நோய்த் தடுப்பு ஊசி மருந்து கௌசாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து மத்திய அரசினரால் வழங்கப்படுகின்றது. 1977-ம் ஆண்டின் பிற்பகுதியில் இம்மருந்து கிடைப்பதில் கடுமையான பற்றுக்குறை ஏற்பட்டது. இதனால் மூன்று நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தை செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டன. எனவே, தமிழ்நாடு மற்றும் தேவையானால் மற்ற மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கிண்டி கிங் நிறுவனத்தில் தடுப்பு ஊசி மருந்தைத் தயாரிக்க இவ்வரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

ஊட்டச் சத்து மேம்பாடு.

நம் நாட்டு மக்களின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்துதல் முக்கியமான சுகாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதற்காக மகப்பேறு மற்றும் சேய் நல நிலையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், பால்வாடிகள் ஆகிய இடங்களில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்து பற்றிய கல்வி விளக்கம் அளிக்கப்படுகிறது.

தாய்மார்கள், குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை மேம்பாட்டுக்கான சில சிறப்புத் திட்டங்கள் வருமாறு:—

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் 'ஏ' உயிரின் சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளிடையே ஏற்படும் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்தலுக்கான மருத்துவ வசதித் திட்டம்.

(4) மலைவாழ் பழங்குடி மக்கள் வளர்ச்சித் திட்டம்.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்.

(6) 'கேர்' நிறுவன உதவியுடன் நடைபெறும் தாய் சேய் நல உணவு வழங்கும் திட்டம்.

(1) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்.—இத்திட்டம் தல்லி வட்டாரம் மற்றும் நிலக்கோட்டை வட்டாரத்திலும், சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் 1976-ல் தொடங்கப் பட்டது. இவ்விரண்டு கிராம வட்டாரங்களிலும் 31,348 பள்ளிக் குழந்தைகள் மற்றும் 20,146 தாய்மார்கள் பரிசோதனை செய்யப் பட்டனர். குழந்தைகளுக்கு காச நோய், பெரியம்மை, தொண்டை அடைப்பு, கக்குவான், இசிவு நோய்களுக்கான தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. சத்துக் குறைபாடுகளை ஈடு செய்வதற்காக உணவுப் பண்டங்களும் கொடுக்கப்பட்டன.

(2) சேய் கவனிப்பு நிலையங்கள்.—சேய் கவனிப்பு முன்னோடித் திட்டம் மதுரை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 கிராமங்களிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புவனம் வட்டாரத்தில் 46 கிராமங்களிலும் திட்டப்பணியில் சேரா திட்டமாக வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகிறது. இத் திட்டத்தின் பரந்த குறிக்கோள்களாவன:—

(i) ஒவ்வொரு கிராமத்திலும் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையம் ஒன்று வீதம் படிப்படியாகத் தொடங்குதல். மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையின் ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையத்தில் குழந்தை ஊட்டச் சத்துத் துறையில் பயிற்சி பெற்ற ஒரு பாலசேவிகாவின் பொறுப்பின்கீழ் ஒவ்வொரு ஊட்டச் சத்து மறுவாழ்வு நிலையமும் இருக்கும். ஊட்டச் சத்தில் தொடர்ந்து ஆர்வம் இருக்கும் வகையில் அவர் தாய்மார்களுக்கு அறிவுறுத்துவார்.

(ii) கிராம மக்களுக்கு உணவு வழங்குதல், மற்றும் நிலையம் அமைப்பதற்குத் தேவைப்படும் பிற வசதிகளைச் செய்தலின் மூலம் ஆர்வமுடன் ஈடுபடச் செய்தல்.

(iii) குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைபாட்டைக் குறைத்தல், மற்றும் 5 வயதுக்கு குறைந்த குழந்தைகளை சராசரி உயரம் மற்றும் எடைக்குக் கொண்டு வருதல்.

(3) ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்துக் குறைபாடு காரணமாக குழந்தைகளிடையே தோன்றும் கண் பார்வை இழப்பைத் தவிர்த்தல் மற்றும் கட்டுப் படுத்துதல்.

செயல்முறை ஊட்டச் சத்து உணவுத் திட்டம் செயல்படாத ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் குழந்தைகளின் கண் பார்வையிழப்பை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை சமூக நலத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதற்கு தமிழ் நாடு அரசு ஒப்பளித்துள்ளது.

இத்திட்டம் கீழ்க்கண்ட வட்டாரங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது:—

வட்டாரங்கள்.		மாவட்டங்கள்.
(1)		(2)
பனைமரத்துப்பட்டி	..	சேலம்
பூதலூர்	.. ..	தஞ்சாவூர்.
நரிக்குடி	.. ..	இராமநாதபுரம்.
அன்னவாசல்	.. ..	புதுக்கோட்டை.
அந்தநல்லூர்	.. ..	திருச்சிராப்பள்ளி.
கணியம்பாடி	.. ..	வட ஆற்காடு.
திருத்தணி	.. ..	செங்கற்பட்டு (வடக்கு)
அச்சரப்பாக்கம்	.. ..	செங்கற்பட்டு (தெற்கு).
பரங்கிப்பேட்டை	.. ..	தென்னாற்காடு.
கொட்டாம்பட்டி	.. ..	மதுரை.
கிள்ளியூர்	.. ..	கன்னியாகுமரி.
உதகமண்டலம்	.. ..	நீலகிரி.

மேற்குறித்த வட்டாரங்களில் கீரைகள், காய்கறிகள், பழங்கள், முட்டை, பால், மீன் முதலிய வைட்டமின் 'ஏ' சத்துமிக்க உள்ளூரில் கிடைக்கத்தக்க உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குகின்ற ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மருத்துவ சார்பற்ற பணியாளர்கள் மற்றும் சமுதாயப் பணியாளர்கள் மேற்கொள்கின்றனர். அவர்கள், சத்துக் குறைப்பாட்டு நோய்களைக் கண்டறிந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' டானிக்குகள் வழங்குகின்றனர்.

(4) மலைவாழ் பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்.—இம்மலைப் பகுதிகளில் வாழ்கின்ற பழங்குடி மக்களின் சுகாதாரப் பணிகளுக்கென்று கல்ராயன் மலைகளில் ஓர் இயங்கு மருத்துவப் பிரிவை அரசு அமைத்துள்ளது. இப்பகுதி மக்களுக்கு சத்துக்குறை ஈடு

செய்யும் உணவுப் பொருட்களும், வைட்டமின் ' ஏ ' மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. இப்பகுதிகளில் கிராமக் கழிவிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

(5) ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்.—1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து, சேலம் நகராட்சியிலும், சேலம் மாவட்டம், கண்ணன் குறிச்சி வட்டாரத்திலும் "கேர்" நிறுவன உதவியுடன் தமிழ்நாடு அரசு, குடும்ப நல முறைகளை ஏற்றுக் கொண்டவர்களுக்காக ஒருங்கிணைந்த ஊட்ட சத்துத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் "கேர்" நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஊட்ட உணவுகளை வழங்குதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல், குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொண்ட குடும்பங்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி செல்லும் வயதடையா சிறுவர், சிறுமியர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலானோருக்கும் உடல் நலப் பரிசோதனை மற்றும் வைட்டமின் மாத்திரைகள் வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படுகிறது.

(6) உணவு வழங்குதல் திட்டம்.—ஏழை மக்களுக்கு குறிப்பாக கிராமப்பகுதிகளிலும் நகரங்களில் குடிசைப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கு உதவுகின்ற வகையில் மகப்பேறு மற்றும் சேய் நல நடவடிக்கைகள், ' பால்வாடி ' நடவடிக்கைகள் இவற்றின் ஒரு பகுதியாக சத்துக் குறை நிரப்பு உணவு வழங்குத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒரு இலட்சத்து பத்தாயிரம் பேர்களுக்கு 3,306 உணவு வழங்கும் நிறுவனங்கள் மூலம் "கேர்" வழங்கும் கூடுதல் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் நிலையிலுள்ள தாய்மார்கள் அல்லது பள்ளிப் பருவம் அடைந்திராத இளஞ்சிறுர்களும் ஆவர்.

உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தல், கடுமையான சமூகத் தீமைகளில் ஒன்றாகும். சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரச் சட்டத்தின் மூலம் இத்தீமையைக் கட்டுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் நம்பத்தக்க தரமுள்ள உணவுப் பண்டங்களை மட்டுமே வாங்குவதன் மூலம் சிறந்த உணவுப் பொருட்கள் விற்பனையை ஊக்குவிப்பதற்கும், உணவுப் பண்டங்கள் தரம் குறைந்துள்ளன மற்றும் கலப்படம் செய்யப்பட்டுள்ளன என்ற சந்தேகம் எழும்போது அறிவிப்பாளர்களாகச் செயல்படுத்துவதற்கும், கிராமம் மற்றும் நகரப்பகுதிகளில் பணிபுரியும் சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்கள், பிற சுகாதாரப் பணியாளர்கள், சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். கலப்பட உணவு தயாரிப்போர், சேமித்து வைப்போர், விற்பனை செய்வோர் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதற்காக 1977 ஆம் ஆண்டு விற்பனைக்கு வைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் 22,700 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவற்றுள் 4,300 மாதிரிகளில் சோதனைமூலம், கலப்படம் செய்யப்பட்டதாக கண்டறியப்பட்டது. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிவரை அபராதமாக விதிக்கப்பட்ட தொகை ரூ. 10.73 இலட்சமாகும். அதிகமாக உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு இப்பொழுதுள்ள ஆய்வுக்கூடங்களில் வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. பாளையங்கோட்டையில் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டு இலாக்காவால் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேலத்தில் ஆய்வுக்கூடம் கட்டுதல் முடியும் தருணத்தில் இருக்கிறது. இத்துடன் நமது மாநிலத்தில் மொத்தம் 7 (ஏழு) உணவு ஆய்வகங்கள் உள்ளன. இவற்றின்மூலம் ஆண்டொன்றுக்கு 50,000 உணவு மாதிரிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கை அனுப்ப முடியும்.

உணவுக் கலப்பட தடுப்புச் சட்ட விதிகளைச் செயல்படுத்துவதற்காக சுகாதார மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு 121 ஆய்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

VI தொற்று நோய்த் தடுப்பு:

(1) வாந்தி பேதி (காலரா).— வட ஆற்காடு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டங்கள் இந்நோய் பரவுதற்குரிய இடங்கள், அரசு போதுமான காலரா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சுகாதார ஆய்வாளர்கள், காலரா பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற சிறப்புப் பணியாளர்கள், நோய்க்குரிய இம்மாவட்டங்களில் காலராத் தடுப்புக்காக அமர்த்தப்பட்டுள்ளனர் மேலும், மாவட்டத் தலைநகரங்களில் 64 தனி கொள்ளை நோய் சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். அவர்கள் வாந்தி பேதி, குடல் இரப்பை நோய்கள் அறிவிக்கப்படும் பகுதிகளுக்கு காலராத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பப்படுகின்றனர்.

(2) பிளேக் நோய்.—தமிழ்நாட்டில் 1965 ஆம் ஆண்டு முதல் பிளேக் நோய் முற்றிலும் இல்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வட ஆற்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் முதலான பிளேக் நோய் பரவும் மாவட்டங்களில் பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

(3) பெரியம்மை:—தமிழ்நாட்டில் 1963 ஆம் ஆண்டிலிருந்து தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர், 1969 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் பெரியம்மை நோய் இல்லை. 1974 ஆம் ஆண்டு வரை வெளி மாநிலங்களிலிருந்து வந்த சிலருக்கு இந்நோய் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. "இந்தியா பெரியம்மையிலிருந்து அறவே விடுபட்டுள்ளது" என்று 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்

23 ஆம் தேதியில் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.
இதுகுறித்து நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் இருக்கக்
கூடாது என சர்வதேச பெரியம்மை பற்றிய நிபுணர் குழுவும்
இந்திய அரசும் எச்சரித்துள்ளன. உலகம் முழுவதும் பெரி
யம்மை நோயிலிருந்து விடுபட்டதாக விளம்புப் வரையில்
கீழ்க்கண்ட நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்பட வேண்டு
மென தெரிவித்துள்ளன.—

(i) புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு முதல்
நிலையில் அம்மைப்பால் குத்துதல்;

(ii) தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் பெரி
யம்மை என ஐயப்படத்தக்க நோய் இருக்கும் பகுதிகளை
கண்டறிந்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை
மேற்கொள்ளுதல், தவிர ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை
செய்வதற்காக மாதிரிகளை சேகரித்தல்.

இந்த நடவடிக்கைகள் நம் மாநிலத்தில் தொடர்ந்து
நடைபெற்று வருகின்றன. தேசீய பெரியம்மை ஒழிப்புத்
திட்ட அலுவலர்கள் மேலே கூறியுள்ள வேலைகளுடன், தடுப்பு
ஊசி போடும் விரிவுத்திட்டத்தை நிறைவேற்ற ஈடுபடுவர்.
தொண்டை அழற்சி நோய், கக்குவான், இசிவு நோய், சின்
னம்மை, இளம்பிள்ளைவாதம், காசநோய் ஆகியவற்றின் கண்
காணிப்புக்கும் தடுப்பு ஊசி குத்துவதற்கும் இத்திட்டம் ஒருங்
கிணைந்து செயல்படும். தற்பொழுது மாநிலத் தலைமை இடத்
திலுள்ள தேசீய பெரியம்மை ஒழிப்புத் திட்டப்பிரிவு, மத்திய
அரசின் கருத்துரைப்படி "கொள்ளை நோயியல் நோய்த் தடுப்பு
ஊசி குத்தும் பிரிவு" என பெயர் மாற்றம் செய்யப்
படும். அலுவலர்கள் உலக சுகாதார நிறுவனத்தின் நிதி
உதவியுடன் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் பணிகளை
மேற்கொள்ள மறு பயிற்சியளிக்கப்படுவர். தடுப்பு ஊசி மருந்து
களும, அவைகளை சேமித்து வைப்பதற்காக குளிர்பதன
இயந்திரம் போன்ற கருவிகளும் இந்திய அரசினரால் வழங்கப்
படும்.

(4) மலேரியா.— தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டிலிருந்து
மத்திய அரசின் தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை
நிறைவேற்றி வந்தது. 1977-ல் இந்திய அரசு
தேசீய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் திருத்தப்பட்ட
செயல் திட்டத்தை எல்லா மலேரியா நோயாளிகளையும்
ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை
அளிப்பதன் மூலமும், மலேரியாவினால் ஏற்படும் நலிவு மற்றும்
இறப்புகளை ஒழித்தல் அல்லது குறைத்தல் மற்றும் மலேரியா
பரவுதலைக் குறைப்பதற்காக தடுப்பு நடவடிக்கைகளை மேற்
கொள்ளும் குறிக்கோளுடன் வகுக்கப்பட்டுள்ளது. இத் திருத்
தப்பட்ட செயல் திட்டம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்
1 ஆம் தேதியிலிருந்து தமிழ் நாட்டில் நிறைவேற்றப்பட்டு வரு
கிறது.

நமது மாநிலத்தில் தற்போது சென்னை, சேலம், ஈரோடு,
திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, வேலூர், தூத்துக்குடி முதலான
சில நகர் பகுதிகளிலும், வட ஆற்காடு, தென்னார்க்காடு,
தர்மபுரி மாவட்டங்களிலும் பெண்ணையாற்றங்கரையோரக் கிரா
மப்பகுதிகளிலும் இராமேசுவரம் தீவு உட்பட இராமநாதபுரம்
மாவட்டத்தில் கடற்கறை கிராமங்களில் மட்டுமே மலேரியா
நோய் உள்ளது. நகர்பகுதிகளில் தீவிர நோய் கண்டறிதல்
மற்றும் மருந்து வழங்குதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்
பட்டுள்ளன. இத்துடன் மலேரியா பரப்பும் கொசு
உற்பத்தியை குறைப்பதற்கான "புழு ஒழிப்பு பணிகளும்"
மேற்கொள்ளப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் மலேரியா காய்ச்சலைக் கண்டறிந்து
அவ்ரவர் வீடுகளிலேயே சிகிச்சை அளிப்பதற்காக 15 நாட்
களுக்கொருமுறை ஒவ்வொரு குடும்பத்தினரையும் அலுவலர்கள்
பார்வையிட்டு வருகின்றனர். மேலும் கிராமங்களில் எல்லா
நேரங்களிலும், மலேரியாத் தடுப்பு மருந்துகள் கிடைக்கும்
வகையில் ஆர்வமுள்ள கிராமத்தினரின் ஒத்துழைப்புடன் கிரா
மங்களில் காய்ச்சல் சிகிச்சை நிலையங்களும், மருந்து வழங்கும்
நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 2,625 கிரா
மங்களில் இத்தகைய மருந்து வழங்கும் நிலையங்கள், காய்ச்சல்
சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மலாதியன் அல்லது டி.டி.டி. பி.எச்.சி. மருந்து தெளித்தல்
போன்ற கொசு ஒழிப்பு நடவடிக்கைகளினால் காய்ச்சலைக்
கண்டறிதலும் சிகிச்சையளித்தலும் வலுப்படுத்தப்படுகின்றன.
இத்தகைய மருத்து தெளிப்பு வேலை இராமேஸ்வரம் தீவிலும்
இராமநாதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தென்னார்க்
காடு, வடாற்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களிலும் பெரிய
அளவில் செய்யப்படுகிறது.

ஏற்கெனவே மத்திய அரசு திட்டமான நகர்புற மலேரியா
திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நகரங்களைத் தவிர,
வேலூர், ஈரோடு நகரங்களுக்கும் நகர்ப்புற மலேரியாத்
திட்டத்தை அரசு விஸ்தரித்துள்ளது. பெருமளவில் நோய்
பரவும் இடங்களான திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி நகரங்
களிலும் இத்திட்டத்தை மேற்கொள்ளும்படி இந்திய அரசிடம்
கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1977-ம் ஆண்டில் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின்
எண்ணிக்கை குறைந்துள்ளது. 1977-ம் ஆண்டில் மொத்தம்
பதிவு செய்யப்பட்ட மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை
79,537. ஆனால் 1976-ம் ஆண்டில் மலேரியா கண்டுள்ளவர்
களின் எண்ணிக்கை 1,03,921 ஆக இருந்தது.

5. யானைக்கால் நோய்.—நமது மாநிலத்தில் க்யூலெக்ஸ் என்ற வகை கொசுக்களினுல். பரப்பப்படும் யானைக்கால் நோய் இருக்கிறது. இந்த நோய் மிகுதியாகப் பரவும் பகுதிகளில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தை 1957-58-லிருந்து நாம் நிறைவேற்றி வருகிரேம். நான்காம் ஐந்தாண்டு திட்ட காலங்களில் இதுவரை பதின்மூன்று கட்டுப்பாட்டு யூனிட்டுகள், ஒரு சர்வேயூனிட்டு, மூன்று யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு கிளினிக்குகள் நிறுவப்பட்டன. மேலும் இரண்டு கட்டுப்பாட்டு யூனிட்டுகளும், பத்து யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுக் கிளினிக்குகளும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளன.

அரசு செயற்படுத்தும் யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்துடன், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை உதவி மானியத் திட்டத்தின் மூலம் 169 உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றி வருகின்றன.

6.. நரம்பு சிலந்திநோய்.—இத்திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(1) நரம்புச் சிலந்தி நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிதலும், அவர்களுக்கு சிகிச்சையளித்தலும்:

(2) இந்நோயைப் பரவச் செய்யும் சைகிலோப் என்னும் ஒரு வகை நத்தையைக் கொல்லுவதற்காக ஆறு வாரங்கட்கு ஒரு முறை நோய்க் கிருமிகள் உள்ள தண்ணீரில் டி.டி.டி. (D. D. T.) 5 பி.பி.எம். (5 P. P. M.) பூச்சிக் கொல்லி மருந்தை தெளித்தல்.

7. யாஸ் (சரும) நோய்.—யாஸ் (சரும) நோய் ஒழிப்புத் திட்டத்தின் ஒரு யூனிட் திட்டப் பணியாக சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த யூனிட் கல்ராயன் மலைகளில் ஆய்வு நடத்தி வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில், இந்த யூனிட் 176 யாஸ் நோயாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்தது.

8. காலா அஜார் (கருங்காய்ச்சல்).—காலா அஜார் கட்டுப்பாட்டுத் திட்டம் இராமநாதபுரத்தில் 1977ஆம் ஆண்டு மே மாதம்வரை செயல்பட்டு வந்தது. அம்மாவட்டத்தில் வேலை முடிந்த பிறகு இப்பிரிவு திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. இப்பிரிவு காலா அஜார் நோயாளிகளைக் கண்டறியவும், மக்களிடையே இந்நோய் பரப்புகின்ற மணல் ஈக்களின் செறிவையும் இம்மாவட்டத்தில் ஆய்வு நடத்துகிறது. இப்பிரிவினுல் 1977-ஆம் ஆண்டில் 48 நோயாளிகள் கண்டறியப்பட்டனர். கண்டறியப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்கென்று அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

VII வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள்.

